Madras
LOCAL BOARDS MANUAL.

A Commentary on Madras Local Boards Act with Case Law, (with the latest Amendments).

Vol. 1.

சென்னை லோகல் போர்ட்ஸ் மான்யூல்.

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டும், அர்த்த விளக்கமும், அதன்கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள கேஸ்-களின் சாராம்ஸமும் இதன் சம்பந்தமான இதர சட்டங்களும், அகராதியும் அடங்கியுள்ளது.

PUBLISHED BY
C. A. SIVABUSHANAM & Co.,
Tiruvallur.
THIRD EDITION.
1931.

All Rights Reserved.

விலை ரூபா 6—0—0] [தபால் சார்ஜ் வேறு.

நூன் முகம்.

சென்னை மாஹாண கவர்ன்மெண்டின் பிரதான மந்திரியாகிய
கனம் திவான்பஹதூர்
B. முனிசாமி நாயுடு பி. எ., பி. எல்., அவர்களால்

கொடுக்கப்பட்ட மதிப்புரை.

மிஸ்டர் எம். எஸ். பார்த்தசாரதி அய்யங்காரால் எழுதப் பட்ட தமிழ் "சென்னை லோகல் போர்ட்ஸ் மான்யூல்" என்ற இப் புத்தகத்தை படித்துப்பார்த்ததில், ஆங்கில பாஷையிலுள்ள ஆக்டை தமிழில் சரியாக மொழி பெயர்க்கப்பட்டும், அதற்குத் தகுந்தபடி சரியாகவும் பூர்த்தியாகவும் உள்ள வியாக்கியானங்களைசேர்த்து எழு தப்பட்டு இருக்கிறது. லோகல் போர்டு நிர்வாகங்களில் ஊக்கமுள்ள தமிழ் தெறிந்தவர்களுக்கு இப்புத்தகம் மிகவும் உபயோகமுள்ள தாயிருக்குமென்று நிச்சயமாய் எண்ணுகிறேன். இப்புத்தகம் திருவல்லூர் மெஸர்ஸ் C. A. சிவபூஷணம் அண்டு கம்பெனியாரால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அச்சுவேலையும், பைண்டின் தோற்றமும் மிக நேர்த்தியாக இருக்கிறது.

கிங்ஸ்டன், கீழ்பாக்கம்,
சென்னை, 6—8—1931.

B. முனிசாமி நாயுடு.

முகவுரை.

நாங்கள் 1924-ம் வருடம், "சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட்" சட்டத்தை தமிழில் முதன் முதலாக பல விதிகளுடனும், அனுசரணை சட்டங்களுடனும் தொகுத்து வெளியிட்டபோது தமிழ்நாட்டு அபிமானிகள் யாவரும் எமது புத்தகத்தை வாங்கி நலமடைந்ததைப் பற்றி நாம் மகிழ்வுறுகிறோம். ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சியில் ஈடுபட்டிருக்கும் யாவரும் முதல் பதிப்பிற்கும், இரண்டாம் பதிப்பிற்கும் எம்மை ஆதரித்ததற்காக மிகவும் நன்றி பாராட்டுகிறோம்.

பழைய சென்னை லோகல் போர்டு சட்டத்தை, 1930-ம் வருடத்தில் சென்னை கவர்ன்மெண்டார் முதல் பத்து வருடங்களில் ஏற்பட்ட அனுபவத்தினால் லோகல் போர்டுகளினுடைய நடவடிக்கைகளையும், பழைய சட்டத்தில் இருந்த கோளாறுகளையும் திருத்தி புதிய உரிமைகளை ஸ்தாபிப்பதற்காக ஒரு திருத்த சட்டத்தை சட்டசபையில் ஏற்படுத்தினர். ஆதலால், லோகல் போர்டு சட்டமானது அதிக பெரிய மாறுதல்களை அடைந்திருப்பதால், மறுபடியும் அச்சட்டத்தை குறிப்புகள் அதாவது அர்த்தவிளக்கங்கள், அதன் கீழ் ஏற்பட்டுள்ள கேஸுகளின் சாராம்ஸங்கள் முதலியவைகளுடன் ஒழுங்காக பதிப்பித்து வெளியிடும்படி எம்மை பல நண்பர்கள் கேட்டுக்கொண்டதினால், நாங்கள் இப்பதிப்பை வக்கீல் ஸ்ரீமான் M. S. பார்த்தசாரதி அய்யங்கார் B. A., B. L., அவர்களைக்கொண்டு மொழிபெயர்த்து எளிய தமிழ் நடையில் வெளியிடலானோம். முன் போல் அன்பர்கள் அனைவரும் எம்மை ஆதரிக்குமாறு வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

1931-ம்வரு ஜூலை 29உ.

C. A. சிவபூஷணம் அண்டு கோ.,
திருவல்லூர்.

அட்டவணை.

		பக்கம்.	
(1)	பொருளடக்கம்	1	30
(2)	ரிப்போர்ட்டுகளின் விவரணம்	31	
(3)	கேஸுகளும் பார்ட்டிகளின் பெயரும் ...	33	40
(4)	விஷய சூசிகை	41	59
(5)	சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் கீழுள்ள செக்ஷன்களுக்கும், சென்னை டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்டி ஆக்டின் கீழுள்ள செக்ஷன்களுக்கும், பொருத்தமாக இருந்து வரும் பிரிவுகளின் அட்டவணை	60	64
(6)	சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட்	65	632
(7)	ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களையும் விநோதமாய்க் காலங்கழிக்கும் இடங்களையும் மேற்பார்வை யிடுவதற்கும் அவைகளுக்கு லைசென்சு கொடுப்பதற்குமான ஆக்ட்	320	433
(8)	அங்கத்தினர் பிரமாணம் செய்வதற்கான ஆக்ட்.	632	635
(9)	வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக்குறித்த ஆக்ட்	635	647
(10)	நேமகச்சீட்டு	648	
(11)	மோட்டார் வெஹிகில்ஸ் டாக்ஸேஷன் ஆக்ட்....	649	656
(12)	அகாராதி	I	XIX

இந்தியா சட்டசபை மெம்பராகிய சென்னை, ஸ்ரீமான்
M. K. ஆசாரியார், B. A., L. T., அவர்கள் எழுதுவதாவது.

இப்புத்தகத்தின் தமிழ், யாவராலும் அறியக்கூடிய எளிய நடையில் சரியாக எழுதியுள்ளது. ஸ்தல சுய ஆட்சியில் ஸ்ரத்தையுள்ளவர்களெல்லோருக்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்பதிப்பை தமிழ்நாட்டிலுள்ள எல்லா கனவான்களுக்கும் நான் சிபார்சு செய்கிறேன். ஆங்கிலத்தில் பழக்கமில்லாத ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டு, யூனியன் போர்டு மெம்பர்களுக்கு இப்புத்தகம் சொல்வதற்கரியதாகும். இப்புத்தகத்தில் எல்லா விதிகளையும், சட்டங்களையும் ஒரே புத்தகமாக தொகுத்திருப்பதால் ஆங்கிலம் தெரிந்த மெம்பர்களுக்கும் இது உபயோகமாயிருக்கும்.

கனம் அட்வகேட் ஜெனரலாயிருந்தவரும்,
அகில இந்தியா காங்கிரஸ் தலைவராயிருந்தவருமான
ஸ்ரீமான் S. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்கள் B. A., B. L.,
எழுதுவதாவது :—

ப-ரா-ரா-ஸ்ரீ சிவபூஷண முதலியார் அவர்களுடைய பிரசுரமானது சகலவித்திலும் பரிபாலிக்கத்தக்கதுமல்லாமல் தாய் பாஷையில் தங்கள் நடவடிக்கைகளை நடத்தும் லோகல் போர்டு அங்கத்தினர்களுக்கும், ஒட்டர்களுக்கும், நகர வாசிகளுக்கும் மிகவும் உபயோகமாயிருக்கு மென்று நான் நம்புகிறேன்.

சென்னை ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள்.
B. A., B. L., F. M. U., M. L. C. எழுதுவதாவது :—

லோகல் போர்டுகளில் நடக்கும் நடவடிக்கைகளெல்லாம் சீக்கிரத்தில் தமிழிலேயே வழங்குவதற்கு நாள் நெருங்கிவிட்டது. அதற்கு அறிகுறியாக வந்திருக்கும் இப்பதிப்பை நான் சிபார்சு செய்கிறேன்.

ஹைக்கோர்ட் வக்கீலும், இந்தியா சட்டசபை அங்கத்தினரும்,
பிராமணரல்லாதவர்களின் தலைவருமான
கனம் A. இராமசாமி முதலியார் B. A., B. L., M. L. C.
எழுதுவதாவது :—

" லோகல் போர்டுகள் வரவரகற்றுணர்ந்தவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. சிலருக்கு இந்த சட்டங்களிலுள்ள சிக்கான ஆங்கில பாஷையை எளிதில் தெரிந்துக்கொள்வதற்கு கொஞ்சம் அசாத்தியம். இச்சட்டங்களின் மொழிபெயர்ப்பு, இவர்கள் தங்கள் வேலையை நடத்த மிக்க உபயோகமாயிருக்கிறது.

சென்னை

லோகல் போர்ட்ஸ் மான்யூவல்.

பொருளடக்கம்.

பொதுவான விஷயங்கள்.

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட் 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் மிகவும் மாற்றப்பட்டுள்ளது. அதன் சாராம்சங்களையும் லோகல் போர்ட்ஸ் ஆக்டின் பொதுவான நோக்கங்களையும் சற்று கவனிப்போம்.

"லோகல் போர்டு" என்னும் பதங்களுக்கு, ஒரு சிறிய விஸ்தீரணத்திற்காக அமைக்கப்பட்ட ஒரு சபை அல்லது கூட்டம் என்று அர்த்தமாகும். அதாவது சென்னை மாகாணத்தில் 26-ஜில்லாக்கள் உள்ளன. ஒவ்வொரு ஜில்லாவும் பல தாலூக்காக்களாக பிரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு தாலூக்காவிலும் பல கிராமங்கள் அடங்கியுள்ளன. மேற்சொல்லப்பட்ட ஜில்லா, தாலூக்கா, கிராமம் இவைகள்தான் சிறிய விஸ்தீரணங்களாக கருதப்பட்டு ஒவ்வொரு விஸ்தீரணத்திற்கும் ஒரு 'போர்டு' அல்லது சபை அல்லது கூட்டமென ஏற்படுத்தப்பட்டுள்ளது. எந்தெந்த விஸ்தீரணத்திற்கு எந்தெந்த சபை அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவைகளினுடைய அலுவல்கள் என்னவென்றும் கடமைகள் என்னவென்றும், அவைகள் நடத்தப்பட வேண்டிய முறைமை யென்ன வென்றும் நோக்கங்கள் என்ன வென்றும், அவைகளினுடைய வருமானமும் செலவும் எவ்வாறு

என்றும் அவைகளினுடைய உத்தியோகஸ்தர்கள் எவரெவர்கள் என்றும், அந்த போர்டுகளின் அதிகாரங்கள் என்னவென்றும் சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டில் விவரமாகக் கண்டுள்ளது. அந்த சட்டத்தின் அமைப்பையும் கோட்பாடுகளையும் சற்று கவனிப்போம்.

கடின மொழிகள்.

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டில் அடிக்கடி பல கடின மொழிகள் உபயோகப்படுத்தப்பட்டு உள்ளன. அம்மொழிகள் சிற்சில சமயங்களில் கடினமாக இராமலிருந்தாலும் அவைகளின் அர்த்தம் தனிப்பட்டதாக இருக்கும். இச்சட்டத்தின் 3-வது பிரிவில் சுமார் 40-பதங்களின் அர்த்தம் இன்னதென்று விளக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆக்டிலும், முதலில், அவ்வாக்டில் பிரயோகப்படுத்தப்பட்டிருக்கும் பதங்களைப் பற்றி அர்த்த விளக்கங்கள் சொல்லப் பட்டிருக்கும். அதே மாதிரி இச்சட்டத்தின் 3-வது பிரிவில் அர்த்த விளக்கங்கள் சொல்லப்பட்டுள்ளன. இவ்வாக்டைப் படிக்கும் போது அவ்வப்பொழுது அந்தந்த இடங்களில் இந்த அர்த்த விளக்கங்களில் உள்ள அர்த்தத்தையே அமைத்துப் படிக்க வேண்டும். இது மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம். உதாரணமாக, அப்பிரிவில் 24-வது உபப்பிரிவில் 'வருஷம்' என்னும் பதமானது அரசிறை வருஷத்தைக் குறிப்பதாகும். அரசிறை வருஷமென்பது (Financial Year) ஒவ்வொரு இங்கிலீஷ் வருஷம் ஏப்ரல்மாதம் 1-ந் தேதி முதல் அதற்கு அடுத்த வருஷம் மார்ச்சு மாதம் 31உ வரையிலுள்ள 12-மாதங்களாகும். இன்னும் இச்சட்டத்தில் சில கடின பதங்கள் உபயோகப்பட்டு வருகின்றன. உதாரணமாக 'செலாவணியாக்கத் தக்க', 'பராமரித்து வரும்', ஒரு வகைப்படுத்தல்', 'யோக்கியதாம்சம்', 'அர்கமின்மை' என்னும் பதங்கள் அர்த்தம் கொள்வதில் சற்று கடினமாகவே தோன்றும். 'செலாவணியாக்கத் தக்க' என்னும் பதங்களுக்கு, 'அமுல் நடத்தி அதனுல் பரிஹாரம்அடைய' என்றும், 'சட்டப்பிரகாரம் அங்கீகரிக்கக்கூடிய' என்றும், சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாப்போல் அர்த்தங்களைக் கொடுக்கும். 'பராமரித்து வரும்' என்னும் பதங்களுக்கு, ஏற்படுத்தப்பட்டும் காப்பாற்றப்பட்டும் வரும் என்றும் 'மேற்பார்வையிட்டு வரும்' என்றும் சமயத்திற்குத் தகுந்தாப்போல் அர்த்தம் உண்டு. 'ஒருவகைப் படுத்தல்' என்னும் பதங்களின் சரியான இங்கிலீஷ் பதம் 'Disposal'

அந்த பதத்திற்கு வேறே சரியான தமிழ் இராமல் 'ஒருவகைப்படுத்தல்' என்று மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது. அதற்கு பொழிப்பார்த்தம் என்னவென்றால், 'ஏதாவது ஒரு விதமாக ஒழித்துவிடுவது அல்லது வெளிப்படுத்தி விடுவது' என்பது. இந்த பதமானது 140-முதல் 146-வரையிலுமுள்ள பிரிவுகளில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. 'யோக்கியதாம்சம்' என்பதற்கு 'Qualifications' என்ற இங்கிலீஷ் பதம் சரியான தமிழ் மொழி. இதன் பொழிப்பார்த்தம் என்ன வென்றால், ஒரு நபர் யாதொரு உரிமையைப் பெறுவதற்கு என்னென்ன அந்தஸ்து அல்லது குணம்சங்கள் பெற்றிருக்க வேண்டுமோ அந்த அம்சங்கள் என்று அர்த்தமாகும். இதற்கும் ஒரு நபருடைய பொது மதிப்பு அல்லது யோக்கியதைக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. 'அர்கத்துவம்' என்பதும் 'யோக்கியதாம்சம்' என்னும் பதத்திற்குள்ள அர்த்தத்தை யுடையது.

இச்சட்டத்தில் அடிக்கடி "லோகல் கவர்ன்மென்டு" என்றும், "பிரதேச கவர்ன்மென்டு" என்றும் பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விரண்டு மொழிகளுக்கும் ஒரே மாதிரியான அர்த்தம்தான். இந்த பதங்கள், சென்னையில் கவர்னருடன் கூடிய நிர்வாக சபை (அதாவது கவர்னர், எக்ஸிக்யூடிவ் மெம்பர்கள், மந்திரிகள் இவர்களடங்கிய சபை)யைக் குறிக்கும். லோகல் போர்டுகளினுடைய விஷயங்களில், ஏற்படும் சகல தகராறுகளைத் தீர்ப்பதற்கும் சந்தேகங்களை நிவர்த்திப்பதற்கும் இச்சட்டப் பிரகாரம் லோகல் கவர்ன்மென்டானது முடிவான அதிகாரியாகும்.

இச்சட்டத்தில் பாதைகள் என்றும், பாட்டைகள் என்றும், ரஸ்தாக்கள் என்றும் உபயோகப்படுத்தப்பட்டு வரும் பதங்களுக்கு ஒரே அர்த்தம்தான். அவைகளின் சரியான இங்கிலீஷ் பதம் "Road" இந்தப் பதங்கள் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாப்போல உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் பிரிவுகளை அர்த்தப்படுத்திக்கொள்வதில் நிதானமாகவும் அன்வயங்களை அனுசரித்தும் அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

லோகல் போர்டுகளின் கடமைகள்.

லோகல் போர்டுகள், ஒவ்வொரு டிஸ்டிரிக்டிலுமுள்ள பொது ஜனங்களுடைய சௌகரியங்களைக் கவனிக்கவும் ஆரோக்கியத்தை

பாதுகாத்து, கல்வி, கைத்தொழில் முதலியவைகளையும் அபிவிருத்தி செய்வதற்கும், பொது ரஸ்தாக்கள், அவைகளிலுள்ள மரங்கள் இவைகளைக் காப்பாற்றவும் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி அவைகளை நடத்தவும், பாவும் வியாதிகளைத் தடுக்கவும் இன்னும் பொதுஜன சௌக்கியத்தை காப்பாற்றும்பொருட்டு தகுந்த நடவடிக்கைகளை ஏடுத்துக்கொள்ளவும் ஏற்பட்டுள்ளன. அவைகளுக்கு வரும்படி எப்படியென்றும் அவ்வரும்படி எவ்வாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இச்சட்டத்தின் V-வது ஷெட்யூலில் காணப்பட்டுள்ளது.

லோகல் போர்டுகளின் வகைகள்.

லோகல் போர்டுகள் மூன்று வகைப்பட்டதாகும். பஞ்சாயத்துகள், தாலூக்கா போர்டுகள், டிஸ்டிரிக்ட போர்டுகள் என்று மூன்று விதமாக லோகல் போர்டுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்துகளுக்கு, ஒரு சாதாரண கிராமம் அல்லது ஒரு "கிராம"மாய் இருக்க வேண்டுமென்று 5-வது பிரிவின்கீழ் லோகல் கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கும் ஒரு விஸ்தீரணத்திற்குள் தமது அதிகாரத்தை செலுத்த உரிமையுண்டு. தாலூக்கா போர்டுகள், ஒரு தாலூக்காவில் பஞ்சாயத்துகள் அதிகாரம் செலுத்திவராத விஸ்தீரணங்களில் அதிகாரம் செலுத்திவர வேண்டும். டிஸ்டிரிக்ட் போர்டுகள் ஒரு டிஸ்டிரிக்ட் அல்லது ஜில்லாவில் உள்ள தங்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் அலுவல்களைக் கவனிக்க வேண்டும். அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு டிஸ்டிரிக்ட் முழுவதிலும் அதிகாரம் உண்டு

லோகல் போர்டுகளின் அமைப்பு.

பஞ்சாயத்துகளில் 8-அங்கத்தினர்களுக்கு குறையாமலும் 16-அங்கத்தினர்களுக்கு மேற்படாமலும், தாலூக்கா போர்டுகளில் 12-அங்கத்தினர்களுக்கு குறையாமலும் 24-அங்கத்தினர்களுக்கு மேற்படாமலும், டிஸ்டிரிக்ட் போர்டுகளில் 24-அங்கத்தினர்களுக்கு குறையாமலும் 52-அங்கத்தினர்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். இவர்கள் யாவரும் முறையே கிராமம், தாலூக்கா, அல்லது டிஸ்டிரிக்ட்டு இவைகளிலிருந்து எலெக்ஷன் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு உத்தியோகம் வகிப்பார்கள். இவர்களுக்கு சம்பளம் என்பது கிடையாது. இவர்கள் லோகல் போர்டு சட்டப் பிகாரம் படிச்செலவு முதலியவை தவிர யாதொரு தொகையையும் சம்பளமாகப் பெறக்

கூடாது. இவர்கள் ஜனப் பிரதிநிதிகளாக கேவலம் கௌரவத்தையே அபேக்ஷித்து ஸ்தானங்களைப் பெற முன் வருபவர்கள்.

ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் ஒரு ஆபீஸ் என்று ஒரு ஸ்தலம் ஸ்திரமான இடத்தில் இருக்க வேண்டும். (11-வது ஷெட்யூல் 1-வது விதி). ஒவ்வொரு லோகல் போர்டும், தங்களுடைய விஷயங்களைக் கவனிப்பதற்காக பஞ்சாயத்துகளாயிருந்தால் ஒரு மாதத்திற்குள் ஒருதரமாவது, தாலூக்கா போர்டு, டிஸ்டிரிக்டு போர்டுகளா யிருந்தால் இரண்டு மாதத்திற்கு ஒருதரமாவது மீட்டிங்கு கூட வேண்டும். (இவைகளைப் பற்றி II-வது ஷெட்யூலில் (பக்கம் 536-ல்) விவரமாக பார்க்க. ஒவ்வொரு லோகல் போர்டினுடைய நிர்வாகத்தை உத்தேசித்து ஒரு ப்ரெஸிடென்டும், ஒரு வைஸ் ப்ரெஸிடென்டும், ஒருவர் இல்லாத காலங்களில் மற்றொருவர் நிர்வாகத்தைக் கவனித்து வருவதற்காக அந்தந்த லோகல் போர்டுகளிலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றுள்ளது. 21-22-23 பிரிவுகளை (103-முதல் 114-பக்கம்) பார்க்க. ஒவ்வொரு லோகல் போர்டு அங்கத்தினருக்கும் லோகல் போர்டினுடைய ஆலோசனைகளில் கலந்து கொண்டு தக்க கேள்விகளைக் கேட்கவும் தஸ்தாவேஜு அல்லது ரிக்கார்டுகளை ஆஜர்ப்படுத்தும்படி கேட்கவும் அதிகாரஸ்தராவார். 26-முதல் 54-வரையிலுமுள்ள பிரிவுகளைப் பார்க்க.

லோகல் போர்டுகளின் அங்கத்தினர்கள்.

லோகல் போர்டுகளின் அங்கத்தினர்கள் யாவரும் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்று முன்னே சொல்லப்பட்டது. அவர்களுடைய யோக்கியதாம்சங்கள் எவ்வாறிருக்க வேண்டும். அவர்களை தெரிந்தெடுப்பவருடைய யோக்கியதாம்சங்கள் எவ்வாறிருக்க வேண்டும், எந்தெந்த சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்களுடைய யோக்கிய தாம்சங்களை பெறுவார்கள் அல்லது இழந்து விடுவார்கள் என்பவைகளைப்பற்றி 47-முதல் 59-வரையிலுமுள்ள பிரிவுகளிலும் (164-முதல் 173-வது பக்கம் வரையிலும்) III-வது ஷெட்யூலிலும் (551-வது பக்கம்) விவரமாய்ச் சொல்லப்பட்டுள்ளது.

லோகல் போர்டுகளின்பேரில் மேல் அதிகாரம்.

லோகல் போர்டுகள் சரிவர தங்கள் காரியங்களை நடத்தா விட்டாலும் அல்லது யாதொரு முக்கியமான காரியத்தை நடத்தத் தவ

றினுலும் லோகல் கவர்ன்மென்டானது கலெக்டர் துவாரா அக்காரிய ங்களில் பிரவேசித்து தகுந்தபடி செய்பவும், அல்லது அம்மாதிரி தவறுதலைச் செய்யும் லோகல் போர்டு ஒரு தாலூக்கா போர்டு அல்லது ஒரு பஞ்சாயத்தாக இருந்தால் முறையே ஜில்லா போர்டுகள் அல்லது தாலூக்கா போர்டுகள், இவைகளில் பிரவேசித்து அக்காரியங் களைச் செய்து செலவுகளை பர்த்தி செய்யவும் தகுந்த ஏற்பாடுகள் உள்ளன. (42-வது பிரிவைப் பார்க்க). ஒரு லோகல் போர்டினு டைய ப்ரெஸிடென்டையும், வைஸ்ப்ரெஸிடென்டையும் நீக்கி விடுவ தற்கு அந்தந்த லோகல் போர்டுக்கே அதிகாரம் உண்டு. 44-வது பிரிவையும் அதன் கீழுள்ள குறிப்புகளையும் பார்க்க. லோகல் போர் டுகளைக் கலைக்கவும் மறுபடியும் கூட்டவும் லோகல் கவர்ன்மென்டுக்கு அதிகாரம் உண்டு. இவை 37-D பிரிவு முதல் 46-வது பிரிவுகள் வரையிலும் உள்ள பிரிவுகளிலும் அவைகளின் (39-முதல் 164-வது பக்கம் வரையில்) கீழுள்ள குறிப்புகளிலும் விவரமாக சொல்லப்பட்டு ள்ளன.

லோகல் போர்டு ஆக்டின் அமைப்பு.

லோகல் போர்ட்ஸ் ஆக்டானது 6-பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ள்ளது: முதல் பாகத்தில் அர்த்த விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. இரண்டாவது பாகத்தில் லோகல் போர்டுகள் ஏற்படுத்தப்பட வேண் டிய வழிகளும் அவைகளின் நிர்வாகமும் நிர்வாக அங்கமும் கவர்ன் மென்டாருடைய மேற்பார்வை அதிகாரமும் விளக்கப்பட்டுள்ளது. இன்னும் இந்த பாகத்தில் லோகல் போர்டுகளினுடைய சொத்துக்க ளைப்பற்றியும் சிப்பந்திகளைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. இந்த பாகம்தான் மிகவும் முக்கியமானதாகும். இந்த பாகத்தில் 4-முதல் 74-A-வது பிரிவு வரையிலும் அடங்கியுள்ளன. மூன்றுவது பாகத் தில், நிரவிய விஷய பாத்தியதைகளைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. அதாவது, வரி யிடுவது, லாண்டு செஸ் என்னும் வரி எம்மாதிரி வசூல் செய்வது, தொழில் வரி யிடுவது, வீட்டு வரி யிடுவது, யாத் திரைக்காரர்களுக்கு வரியிடுவது, இம்மாதிரியான விஷயங்களும் இவைகளை எப்படி செலவிடுவது என்பதைப் பற்றின விஷயங்களும் வரவு செலவு கணக்குகளை தயாரிப்பதும், அவைகளைத் தணிக்கை செய்வதும் அவைகளைப்பற்றி லோகல் கவர்ன்மென்டாருக்கு ரிப் போர்ட்டுகளை அனுப்புவதும் ஆகிய இவைகள் அடங்கியுள்ளன. இந்த

பாகத்தில் 74-B முதல் 121-A வரையிலுமுள்ள பிரிவுகள் அடங்கியுள்ளன. நான்காவது பாகத்தில் பொதுஜன சௌகரியங்களைப் பற்றியும் சேஷமத்தைப்பற்றியும் வசதிகளைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. இப்பாகத்தில் 4-அத்தியாயங்கள் உள்ளன. 122-முதல் 198 வரையிலுமுள்ள பிரிவுகள் அடங்கியுள்ளன. இந்தப் பிரிவுகள் தான் லோகல் போர்டுகளுக்குள்ள பிரதான காரியங்களைத் தெரிவிப்பதாகும். இந்தப் பிரிவுகளிலுள்ள நிபந்தனைகளையாவது அல்லது மற்ற பொது நிபந்தனைகளையாவது மீறி நடப்பவர்களுக்கு XIII-வது அதிகாரத்தின்கீழ்தண்டனையுண்டு. நான்காவது பாகத்தில், பொதுஜன சேஷமத்தையொட்டி, பொதுவாகலோகல்போர்டுப்செலிடென்டுகளும் லோகல் போர்டுகளும் இன்னின்ன விதிகளைச் செய்யலாமென்றும் எப்மாதிரி, தெருக்களையும் பாதைகளையும் ரஸ்தாக்களையும் கஸ்கூகளையும் சுத்தப்படுத்தி வைக்க வேண்டுமென்றும் மார்க்கட்டுகளையும் ஆடு மாடுகளை வெட்டும் இடங்களையும் ஸ்மசானங்களையும் ஏற்படுத்திக் காப்பாற்றி வைக்க வேண்டுமென்றும் சாக்கடை முதலியவைகளை சீர்ப்படுத்தி சரியான நிலைமையில்வைக்கவேண்டுமென்றும் அபாயகரமான கட்டிடங்களை இடிக்கவும் அல்லது சரியாகக் கட்டவும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதைப் பற்றியும் பொது ரஸ்தாக்களில் ஆக்கிரமம் செய்யவொட்டாமல் தடுப்பதையும் பாதுகாப்பதைப் பற்றியும் மார்க்கட்டுகளுக்கு லிசென்ஸ் கொடுப்பதைப் பற்றியும் வண்டி நிற்குமிடங்கள் ஆடு மாடு வெட்டும் தொட்டிகள் வேலி அல்லது தொழிற்சாலைகள் இவைகளுக்கு லிஸென்ஸ் கொடுப்பதைப் பற்றியும் இந்த பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பாகத்தில் 122-முதல் 198-வரையிலுமுள்ள பிரிவுகள் அடங்கியுள்ளன. ஐந்தாவது பாகத்தில் லோகல் கவர்ன்மென்டார் இச்சட்டத்தை யொட்டி சகாயச் சட்டங்களையும் விதிகளையும் செய்யலாம் என்றும் இச்சட்டத்தின் நிபந்தனைகளை மீறி நடந்துகொள்பவருக்கு இன்ன தண்டனை உண்டு என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த பாகத்தில் 199-முதல் 211-வரையிலுமுள்ள பிரிவுகள் அடங்கியுள்ளன. கடைசிபாகமாகிய 6-வது பாகத்தில் ஒரே அத்தியாயத்தில் நடவடிக்கைமுறைகளைப்பற்றியும் இன்னும் இச்சட்டம் பிரயோகப்படுத்தப்படுவதற்கு வேண்டிய அம்சங்களைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. அதாவது லிசென்சுகள் கேட்கப்பட வேண்டும், அவைகளின் கால அளவு என்ன, ஆகிய இவைகளும், பொது இடங்களை எவ்வாறு ஒதுக்கிவைப்பது என்பதும்

லோகல்போர்டுகளுக்குச்சேரவேண்டியதாயிருக்கும்வரி முதலிய கொகைகளை வசூல் செய்யும் விதமும் கோர்ட்டு முன்பாக நடக்க வேண்டிய நடவடிக்கை முறையும், லோகல் போர்டுகளின் பேரில் ஏதாவது தாவா தொடருவதாக இருந்தால் அவைகளை எம்மாதிரி தொடங்குவது அல்லது செய்வது என்றும், லோகல் போர்டு அங்கத்தினர்கள், ப்ரெஸிடெண்டு முதலியவர்களின் பொறுப்பும் ஆகிய இவ்விஷயங்கள் அடங்கியுள்ளன. இந்த பாகத்தில் 212-பிரிவு முதல் 240-வது பிரிவு வரையிலும் உள்ளன.

இவ்வாக்டின் அங்கமாகவும் பாகமாகவும் X-ஷெட்யூல்கள் உள்ளன. II-வது III-வது ஷெட்யூல்களிலும் V-வது ஷெட்யூலிலும் உள்ள விஷயங்களைப் பற்றி முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. I-வது ஷெட்யூலில் ரத்து செய்யப்பட்ட சட்டங்களும், IV-வது ஷெட்யூலில் வரி விதிப்பைப் பற்றின விதிகளும், வசூல் அதிகாரம் முறைமை இவைகளும் அடங்கியுள்ளன. VI-வது ஷெட்யூலில் அபாயகரமான வியாதிகள் என்பது எவை என்று குறிக்கப்பட்டுள்ளது. VII-வது ஷெட்யூலில் லைசென்ஸ் பெறவேண்டிய காரியங்கள் என்னென்ன வென்பதைப்பற்றி கூறப்பட்டுள்ளது. VIII, IX, ஷெட்யூல்களில் அபராதங்களென்னவென்று காணப்பட்டுள்ளது. X-வது ஷெட்யூலில் மாறுதல் காலத்திற்கு அனுசரிக்கப்பட வேண்டிய விதிகளும் நிபந்தனைகளும் உள்ளன. 1930-ம் வருஷத்திய நிருத்த சட்டத்தை பிரயோகிப்பதில் X-வது ஷெட்யூலின் விதிகள் கவனிக்கப்பட வேண்டும்.

லோகல் போர்டுகளுக்கு நடக்கும் எலெக்ஷன்களும் மீட்டிங்குகளும்.

இதுவரையிலும் லோகல் போர்ட்ஸ் ஆக்டின் அமைப்பைப் பற்றியும் அதன் சுருக்கமென்ன என்பதைப் பற்றியும் கூறிவந்தோம், இனி சற்று விவரமாக லோகல் போர்டுகளில் நடக்கும் எலெக்ஷன்களைப் பற்றியும் அவைகளுக்காக அனுசரிக்கப்பட வேண்டிய அம்சங்களைப் பற்றியும் கவனிப்போம்

"எலெக்ஷன்" என்னும் பதமானது ஒரு ஆங்கிலேய பதம். அதற்கு பொறுக்கி எடுப்பது என்று அர்த்தமாகும். அதாவது பல நபர்களிலிருந்து ஒருவரை பொறுக்கி எடுப்பது என்பது தாத்பரியம். பொறுக்கியெடுப்பது என்று வைத்துக்கொள்வோமானால், பொறுக்கி எடுப்பவர், எடுக்கப்பட வேண்டிய நபரின் குணகுணங்களையும் சாமர்த்

நியத்தையும் கவனித்து ஆராய்ந்து பிறகுதான் பொறுக்க வேண்டும். எலெக்ஷனுடைய தாத்பரியம் என்னவென்றால் மிகவும் புத்திசாலித் தனம், சாமர்த்தியம், சுயநலமின்மை இத்தகைய குணங்கள் அமைந்த நபர்களைத்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது.

லோகல் போர்டுகள் மூன்று வகைப்பட்டதென்றும், அவைகளில் மிகவும் சிறியது பஞ்சாயத்துகள் என்றும் சொன்னேனே. பழைய லோகல்போர்டு சட்டத்தின்கீழ் யூனியன்போர்டுகள் என்னும் கூட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. ஒரு யூனியன் போர்டு ஒன்று அல்லது பல கிராமங்களைச் சேர்ந்ததாக இருக்கும். பழைய பஞ்சாயத்து ஆக்டின் பிரகாரம் சில பெரிய கிராமங்களில் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டு அந்த பஞ்சாயத்துகள் கிராம சௌகரியங்களைச் செய்து கொள்வதற்கு வரிகளையிடவும் கிராம பரிபாலனங்களைச் செய்யவும் உரிமையுள்ளனவாயிருந்தன. அந்தப் பஞ்சாயத்துகள் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களால் மேற்பார்வையிடப்பட்டு வந்தன. இப்போது 1920-ம் வருஷத்தில் நடந்தேறின லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் அத்தகைய பஞ்சாயத்துகள் எடுபட்டுவிட்டன. அவைகள் புதியதாக லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் லோகல் போர்டுகளாக கவனிக்கப்பட்டு ஒரு லோகல் போர்டின் அந்தஸ்தானது அவைகளுக்கு சங்கிரமித்துவிட்டது. அவைகளின் பெயர் மாத்திரம் மாறவில்லை. பழைய யூனியன் போர்டுகளின் பெயர் மாறி "பஞ்சாயத்துகள்" என்று அவைகளுக்கு புதிய பெயர் ஏற்பட்டுள்ளது.

ஆகையால், பஞ்சாயத்து என்பது, ஒரு தனி கிராமத்துக்காக, அல்லது லோகல் கவர்ன்மெண்டினால் பல கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு லோகல் போர்ட்ஸ் ஆக்டின் காரியத்துக்காக ஒரு "கிராமம்" என்று பெயரிடப்பட்டிருக்கும் ஒரு விஸ்தீரணத்துக்காக பரிபாலனம் செய்யப்படும்பொருட்டு ஏற்படுத்தப்படும் ஒரு கூட்டமாகும். அந்தக் கூட்டத்தை எவ்வாறு சேகரிப்பது அல்லது அந்தக் கூட்டமானது எவ்வாறு கூடும் என்பது கேள்வி. அதற்குத்தான் எலெக்ஷன் என்று கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கின்றனர். மேலே சொல்லப்பட்ட கிராமமானது அல்லது ஒரு கிராமமென்று சொல்லப்படும் விஸ்தீரணமானது அநேக விடுதிகளாகப் பிரிக்கப்படும். அவைகளுக்கு வார்டு என்று பெயர். ஒவ்வொருவார்டும் அந்தகிராமத்தி

லிருந்து ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதாவது பொறுக்கி எடுக்கவேண்டும். அம்மாதிரி பொறுக்கி எடுப்பவர் அந்த வார்டுக்காக அதன் குறைகளையும், தேவைகளையும் பஞ்சாயத்தின் மூலமாக பூர்த்தி செய்யும்படியான சாமர்த்தியமுள்ளவராக இருக்க வேண்டும். அப்படி பொறுக்கி எடுக்கப்படுபவர் 'ஒரு பஞ்சாயத்தார்' அல்லது 'பஞ்சாயத்து மெம்பர்' எனப்படுவார். இத்தகையமெம்பர்கள் ஒரு பஞ்சாயத்தில் 8-நபர்களுக்குக் குறையாமலும் 16-நபர்களுக்கு அதிகமாகாமலும் இருக்க வேண்டும். இப்பொழுது புதிய சட்டமானது அமுலுக்கு வருவதற்காக பஞ்சாயத்துகளை ஒழுங்குபடுத்தும் வண்ணம் 'பஞ்சாயத்து ஆர்கனைஸர்' என்னும் ஒரு உத்தியோகஸ்தரை கவர்ன்மென்டார் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவர்தான் பஞ்சாயத்துகளின் ஒவ்வொன்றிலும் இத்தனை மெம்பர்கள் இருக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு பஞ்சாயத்தும் இத்தனை வார்டுகளாகப் பிரிக்கப்படவேண்டுமென்றும் ஏற்பாடு செய்வார். இத்தகைய பஞ்சாயத்து ஆர்கனைஸர்கள் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் சுமார் 60-பேர்களுக்கு மேல் உள்ளனர்.

பஞ்சாயத்துகள் வார்டுகளாகப் பிரிக்கப்பட்ட பிறகு ஒவ்வொரு வார்டும் ஒரு பஞ்சாயத்து அங்கத்தினரை தேர்ந்து எடுக்கும். அத்தகைய அங்கத்தினர் ஒன்றுகூடி பஞ்சாயத்தின் பரிபாலன விஷயமாக அவ்வப்பொழுது தக்க ஆலோசனைகளைச் செய்வார்கள்.

பஞ்சாயத்து மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தங்களில் ஒருவரை ப்ரெஸிடென்டாகவும் மற்றொருவரை வைஸ் ப்ரெஸிடென்டாகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். பஞ்சாயத்தானது தமது விஷயங்களைப்பற்றி ஆலோசனைக்காக கூடுவது மீட்டிங்கு என்று பெயர். இத்தகைய மீட்டிங்கில் ப்ரெஸிடென்டானவர் அக்கிராசனம் வகிப்பார். ப்ரெஸிடென்டு இராத காலங்களில் வைஸ் ப்ரெஸிடென்டானவர் அக்கிராசனம் வகிப்பார். பஞ்சாயத்துகள் தங்களுடைய மீட்டிங்குகளை எவ்வாறு நடத்த வேண்டுமென்றும் பஞ்சாயத்து மெம்பர்களின் நடத்தை எவ்வாறு இருக்க வேண்டுமென்றும் இப்புத்தகத்தில் 533-வது பக்கத்திலும் அதன் பின்னர் உள்ள தொடர் பக்கங்களிலும் சொல்லப்பட்டுள்ளதை பார்க்க.

பஞ்சாயத்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பவர் யார்? அவர்களுடைய யோக்கியதைகள் என்ன என்பதைப்பற்றி சற்று கவனிப்போம்.

ஒவ்வொரு கிராமத்திலும், 21-வயதிற்கு மேற்பட்டு, யாதொரு வருஷத்திற்கு முந்தின வருஷத்தில் இந்தியா கவர்ன்மென்டுக்காவது அல்லது ப்ரதேச கவர்ன்மென்டுக்காவது அல்லது சென்னை மாகாணத்தில் யாதொரு ப்ரதேச அதிகாரிக்காவது செலுத்தக்கூடிய வரி இடப்பட்டவரும், அல்லது ஒரு ரயத்வாரி பட்டாதாராராகவாவது அல்லது ஒரு இனம்தாராராகவாவது ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருப்பவரும், அல்லது ஒரு ரயத்வாரி பட்டாதாரிடமாவது அல்லது ஒரு இனம்தாரிடமாவது அல்லது இவர்களின் கீழுள்ள ஒரு பாயக்காரியிடமாவது எழுத்து மூலமாக ஒரு குத்தகை அல்லது பத்திர மூலமாக ஒரு நிலஸ்வாதீனம் இவைகளைப் பெற்றிருப்பவரும், அல்லது மலபார் லாண்டு ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட் 14-வது பிரிவின்கிழ் நிலத்தின் சொந்தக்காரோடு ஜாயிண்டு அனுபோக பாத்தியதையுள்ளவரென்று ரிஜிஸ்தர் செய்திருப்பவரும் அல்லது சென்னை எஸ்டேட்ஸ்லாண்டு ஆக்டின்கீழ் ஒரு பூஸ்வான்தாராராக இருப்பவரும், அல்லது ஒரு பூஸ்வான்தாரின் கீழ் ஒரு ரயத்தாகவோ அல்லது பாயக்காரியாகவோ தன் கைப்பத்தில் நிலம் வைத்துக்கொண்டிருப்பவரும், அல்லது மஹாராஜா சக்ரவர்த்தி அவர்களுடைய ரெகுலர் சேனையிலிருந்து விலகிக்கொண்ட உத்தியோகஸ்தராயிருப்பவரும், அல்லது அவ்வுத்தியோகத்திலிருந்து பென்ஷன் பெறுபவரும், அல்லது சேனைப்படையில் போர் வீரராயிருப்பவருமாக உள்ள நபர்கள் பஞ்சாயத்து அங்கத்தினர்களை தேர்ந்தெடுப்பதற்கு உரிமை யுள்ளவர்களாயிருப்பார்கள். இவர்கள் அனைவரும் ஓட்டர்கள் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவது உண்டு. ஓட்டர் என்பதற்கு ஓட் என்னும் வாக்கை கொடுப்பவரென்று அர்த்தமாகும். ஓட் என்பது வாக்கைக் கொடுக்கும் ஓர் உரிமையாகும். இதைப்பற்றி 167, 168, 169-ம் பக்கங்களில் மிகவும் விஸ்தாரமாக சொல்லப்பட்டிருப்பதைக் காண்க.

ஒரு வார்டுக்காக எலெக்ஷன் நடப்பதற்கு முன் சில நபர்கள் அந்த வார்டுக்காக அபேட்சகர்களாக நிற்பார்கள். அவர்கள் அப்படி நிற்பதற்குமுன் அபேக்ஷகர்களாக இரண்டு ஓட்டர்களால் நியமிக்கப்பட வேண்டும். அம்மாதிரி நியமிக்கப்படவேண்டியதின் நமூனா பாரமானது 648-வது பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது. அபேட்சகர்களில் எவர் அதிகமாக ஓட்டுகளைப் பெறுகின்றனரோ அவர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டவராக ஸ்தாபிக்கப்படுவார். இப்பொழுது 1930-ம்

ஜூன் ஆகஸ்டு மீ முதல் பஞ்சாயத்துகளில் நடக்கும் எலெக்ஷன்களை நடத்துவதற்கு கவர்ன்மென்டினால் உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன்னடி லோகல் போர்டு பிரெஸிடென்டுகளே எலெக்ஷன்களை நடத்தி வந்தனர். இப்பொழுது அவ்வதிகாரமானது அடியோடே எடுபட்டுள்ளது. எலெக்ஷனில் தேர்ந்து எடுக்கப்படுவதற்குமுன் அபேட்சகர்கள் சில யோக்கியதாம்சங்களைப் பெற்றிருக்க வேண்டும். முதல் முதலாவதாக, அவருடைய பெயர் தெரிந்தெடுப்பவர்களுடைய ஜாபிதாவில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவதாக, அவர் ஒரு கவர்ன்மென்டு உத்தியோகஸ்தராக இருக்கக் கூடாது. தவிர 55-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் யோக்கியதை குறைகளில் ஒன்றையேனும் அடைந்திருப்பின் அவர் தேர்ந்து எடுக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்கு அர்கராகமாட்டார்.

யாதொரு மெம்பர், ஒரு மெம்பர்தன்னுடைய ஸ்தானத்தை விகிர்த்து வருவதற்கு அர்கமுள்ளவரா இல்லையா என்பதைப்பற்றி ஏதாவது சந்தேகம் கிளப்பும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட ப்ரெஸிடெண்டு அதைப்பற்றி ஜில்லா ஜட்ஜுக்குத் தெரிவித்து அவரால் சந்தேகத்தை நிவர்த்தி செய்துக் கொள்ளவேண்டும். இதன் விஷயமாக 57-வது பிரிவையும் அதன்கீழுள்ள குறிப்புகளையும் பார்க்க.

நாம் இது வரையிலும் பஞ்சாயத்துகளில் நடக்கும் எலெக்ஷனை பற்றியும், அவைகளின் ஓட்டர்களைப்பற்றியும் கவனித்து வந்தோம். பஞ்சாயத்துகளில் உள்ள ஓட்டர்களேதான் தாலூக்கா போர்டிற்கும், ஜில்லா போர்டிற்கும் நடக்கும் எலெக்ஷன்களில் ஓட்டு கொடுப்பதற்கு உரிமையுள்ளவராவார்கள். ஆனால் அந்த எலெக்ஷன்களில் பஞ்சாயத்து ஓட்டர்களைத் தவிர இதர நபர்களும் ஓட்டர்களாயிருப்பார்கள். ஒவ்வொரு ஜில்லாவும் அநேக சர்க்கில்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சர்க்கிலிலிருந்தும் ஒரு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படுவார். ஜில்லா போர்டுகளில் குறைந்தபட்சம் 24-மெம்பர்களுக்கு குறையாமலும் 54-மெம்பர்களுக்கு அதிகப்படாமலும் இருக்க வேண்டும். ஜில்லா போர்டுகளில் நடக்கும் எலெக்ஷன்களில், முஸல்மீம்களுக்கும், இந்திய கிறிஸ்தவர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும், ஆங்கில இந்தியர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் தனியான சில ஸ்தானங்களை லோகல் கவர்ன்மென்டார் ஒது

க்கி வைக்கலாம். ஆனால் இவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட சில சர்க்கில்களிலிருந்து தேர்தல் மூலமாக வரவேண்டுமே யொழிய, எக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் நியமக மூலமாக (நாமினேஷன் மூலமாக) வருவதற்கு இல்லை. இதேமாதிரியாகவே தாலூக்கா போர்டுகளும் பல சர்க்கில்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சர்க்கிலிலிருந்தும் ஒவ்வொரு அங்கத்தினரை தேர்ந்தெடுக்க வேண்டும். தாலூக்கா போர்டுகளில் உள்ள அங்கத்தினர்கள் குறைந்த பட்சம் 12-அங்கத்தினர்களுக்குக் குறையாமலும், 24-அங்கத்தினர்களுக்கு அதிகப்படாமலுமிருக்க வேண்டும். தாலூக்கா போர்டுகளில் ஐரோப்பியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் இவர்களுக்கு கவிர மேலே சொல்லப்பட்ட மற்ற ஜாதியினர்களுக்காக ஸ்தானங்களை கவர்ன்மெண்டார் ஒதுக்கி வைக்கலாம். அவர்களுக்கென்று சில சர்க்கில்கள் ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கும். ஒவ்வொரு தாலூக்கா போர்டிற்கும் ஜில்லா போர்டிற்கும் இவ்வளவு சங்கியை இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்வதற்கு சென்னை கவர்ன்மெண்டார், ரெஜிஸ்ட்ரார் ஆப் பஞ்சாயத்து அண்டு இன்ஸ்பெக்ட்டர் ஆப் லோகல் போர்ட்ஸ் என்றும் உத்தியோகஸ்தருக்கு 233-வது பிரிவின்கீழ் அதிகாரம் கொடுத்திருக்கின்றனர்.

லோகல் போர்டுகளின் சொத்துக்கள்.

லோகல் போர்டுகள் பொது ஜனங்களால் அமைக்கப்பட்ட கூட்டங்களாக இருந்த போதிலும் ப்ரைவேட்டு நபர்கள் சொத்துக்களையும் உரிமைகளையும் சம்பாதிப்பதுபோல் லோகல் போர்டுகளும், உரிமைகளையும் சொத்துக்களையும் சம்பாதிக்கலாம். சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின்பிரகாரம் எல்லா பொது ரஸ்தாக்களும் ஜில்லா போர்டிலும், தாலூக்கா போர்டிலும் சங்கிரமிக்க வேண்டுமென்று ஏற்பட்டுள்ளது. சென்னை கவர்ன்மெண்டார் 60-வது பிரிவின்கீழ் 21—8—1930-ல் அடியில் கண்டவாறு ஒரு உத்திரவிட்டிருக்கின்றனர். அதாவது; 'ஒரு ஜில்லாவுக்குள் டிஸ்டிரிக்டு போர்டினுடைய பண்டிலிருந்து முழுவதுமாக பராமரிக்கப்பட்டு வரும் எல்லா பாதைகளும் டிஸ்டிரிக்டு பாதைகளென்று வகுப்பிடப்பட வேண்டும். ஒரு ஜில்லாவிலுள்ள கிராம பாதைகள் உள்பட மற்றெல்லா லோகல் பண்டு பொதுவான பாதைகளும் தாலூக்கா பாதைகள் என்று வகுப்பிட வேண்டும்.' ஆகையால் இனி பஞ்சாயத்துகளுக்கு யாதொரு பொது ரஸ்தா அல்லது பாதை என்பது கிடையாது. இதற்முன்

தெருக்களிலும், ரஸ்தாக்களிலும் ஆக்கிரமம் நடந்ததாக தாவா செய்வதற்கு பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கிடையாது என்று ஏற்படும். இதன் விஷயமாக அடியில் 'ப்ராக்லிகியூஷன்கள்' என்னும் தலைமையின்கிழ் சொல்லப்பட்டிருப்பதைக் காண்க. 'பொதுவான யாதொரு ரஸ்தாவைச் சேர்ந்த சகல தளவரிசைகளும் கல் முதலிய சாமான்களும் அப்படிப்பட்ட பாட்டைக்காக ஏற்பட்டிருக்கும் சகல வேலைகளும் சேகரிக்கப் பட்டிருக்கும் சாமான்களும் இதர மான சகல வஸ்துக்களும், லோகல்பண்டின் செலவில் அழைக்கப் பட்டிருந்தாலும் சரி, மற்றப்படியாகிலும் சரி, யாதொரு பொதுவான பாட்டையிலாவது அதன் பக்கமாயாவது கீழாவதிருக்கிற சகல சாக் கடைக்கால்களும் ஜலதாரைகளும் ஜலதாரை சம்பந்தமான கட்டு வேலைகளும், ஜன்னல்களும் (தரைக்கீழ் பாதைகளும்) கல்வர்ட்டு களும், (மூடிய ஜலதாரைகளும்) அவைகளைச் சேர்ந்த சகல கட்டு வேலைகளும் சாமான்களும் வஸ்துக்களும், மெ பொதுவான பாட் டை எந்த லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிக்கிறதோ அவர்க ளிடத்தில் சங்கிரமிக்க வேண்டும்'.

ரஸ்தாக்களைத் தவிர, ரஸ்தாக்களில் சேர்க்கப்படும் சகல குப்பை களும் லோகல் போர்டாருடைய சொத்தாகும். இவை தவிர லோகல்போர்டுகள் ஏதாவது அசையாப் பொருளை பெறும் பட்சத்தில் அதையும் தங்கள் வசமாக்கிக் கொள்ளலாம். 63-வது பிரிவின்கீழ் தர்ம சம்பந்தமான இனாம்களையும், மான்னியங்களையும் மேற்கொண்டு பரிபாலித்து வரலாம். புதிய லோகல் போர்டு சட்டத்தினால் கிராம காடுகளையும் ஜலாசான் விஷயமாகவுள்ள அலுவல்களையும் லோகல் கவர்ன்மென்டார் பஞ்சாயத்துகளுக்கு மாற்றி விடலாம் என்று உள் ளது. லோகல் போர்டுகள் தங்களுடைய அவசியத்தையும், சௌக ரியத்தையும் உத்தேசித்து 'லாண்டு அக்விஸிஷன்' ஆக்டின்கீழ் கட் டாயமாக நிலங்களை பிடுங்கிக் கொள்ளலாம். இவைகளெல்லாம் அசை யாப் பொருளைப்பற்றின உரிமைகளாகும். இவைகளைத் தவிர லோ கல் போர்டுகள் தொழில் வரி, வீட்டு வரி, சாக்கடை வரி, தண்ணீர் வரி, லாண்டு செஸ்வரி, போல்டாக்ஸ் என்னும் வரி, ஆகிய இவைகள் மூலமாக நேராகவும், யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரி யின் மூலமாக நேராக வல்லாமல் வேறு விதமாகவும் பணத்தை சேகரிக்கலாம். இந்தப் பணத்தைக் கொண்டு லோகல் போர்டுகள்

முக்கியமாக சுகாதார விஷயமாகவும், கல்வி, கைத்தொழில் முதலிய வைகளின் அபிவிர்த்தி விஷயமாகவும் செலவிட வேண்டும். V-வது ஷெட்யூலில் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டிற்கும் தாலூக்கா போர்டிற்கும், பஞ்சாயத்திற்கும் இன்னின்ன செலவுகள் உண்டென்று மிகவும் விவரமாக சொல்லப்பட்டுள்ளது. அவைகளைப் பற்றி 591-வது பக்கம் முதல் 598-வது பக்கம் வரையிலுமுள்ளதைக் காண்க. டிஸ்டிரிக்ட்டு போர்டுகள், தாலூக்கா போர்டுகள், பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளுக்கு எந்தெந்த விதமாக வரும்படி உண்டு என்பதைப் பற்றியும் 599-வது பக்கம் முதல் 605-வது பக்கம் வரையில் உள்ளதைக் காண்க.

ஒவ்வொரு போர்டுக்கும் ஒரு பண்டு அல்லது நிதியுண்டு. அந்த நிதியிலிருந்து ஒவ்வொரு போர்டும் ஒவ்வொரு வருஷமும் தமக்கு வேண்டியமட்டில் தொகையை எடுத்து செலவு செய்யலாம். ஒரு போர்டானது செய்யும் செலவுகளுக்கு போதுமான பணம் அந்த போர்டுக்கென்று ஏற்பட்டிருக்கும் பண்டில் இல்லாவிட்டால் அந்த போர்டானது லோகல் கவர்ன்மெண்டினுடைய உத்தரவைக் கொண்டு அதிகபணத்தைசெலவுசெய்யவேண்டும். ஒவ்வொரு லோகல் போர்டும் பிரதி வருஷமும் தமக்குள்ள வரவு செலவு கணக்குகளைப் பற்றி ஒருஜாபிதா தயார் செய்து தனக்கு மேலேயுள்ள அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும். அந்த ஜாபிதாவிற்குத்தான் பட்ஜெட் என்று பெயர். இத்தகைய பட்ஜெட்டானது பிரதி வருஷமும் ஜனவரீ 31-உக்குள் ப்ரெஸிடென்டினல் தயாரிக்கப்பட்டு அவை பஞ்சாயத்துகளாக இருந்தால் தாலூக்கா போர்டிற்கும், தாலூக்கா போர்டுகளாயிருந்தால் டிஸ்டிரிக்ட்டு போர்டிற்கும் டிஸ்டிரிக்ட்டு போர்டுகளாயிருந்தால் லோகல் கவர்ன்மெண்டிற்கும் அனுப்பப்பட வேண்டும். அந்த பட்ஜெட்டுகளை அப்படிப்பட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்து அவைகளில் ஏதாவது விட்டுவிடப்பட்டிருந்தாலும் அல்லது தவறுதல் சேர்க்கப்பட்டிருந்தாலும் அவைகளைத் திருத்தி அனுப்பும்படி பட்ஜெட்டைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். அதன் பேரில் சம்பந்தப்பட்ட ப்ரெஸிடென்டானவர் அதற்குக் கீழ்படிந்து தக்கபடி திருத்தங்களைச் செய்ய வேண்டும். டிஸ்டிரிக்ட் போர்டுகள் தங்களுடைய பட்ஜெட்டைப்பற்றி கவர்ன்மெண்டுக்கு அனுப்பும் போது தமக்கு கீழ்பட்டுள்ள தாலூக்கா போர்டுகள், பஞ்சாயத்து

கள் இவைகளினுடைய பட்ஜெட்டுகளின் சாராம்சத்தையும் குறிக்க வேண்டும்.

லோகல் போர்டுகளின் கணக்குகள் மிகவும் விவரமாகவும் எளிதில் தெரியும்படியாகவும் தனித்தனியான புஸ்தகங்களில் தேதிவாரியாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். லோகல் போர்டுகளின் தொகைகளை, லோகீல் போர்ட்ஸ் ஆக்டின் V-வது ஷெட்யூலில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களைத் தவிர வேறே காரியங்களுக்கு உபயோகப்படுத்தக் கூடாது. ஆகையால் ஒவ்வொரு லோகல்போர்டு அங்கத்தினரும் தம்முடைய லோகல் போர்டுக்கு எவ்வளவு வரையிலும் எந்தெந்த காரியங்களுக்காக பணத்தை செலவு செய்யலாமென்பதைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். லோகல் போர்டுகளின் செலவுக்காக செய்யப்படும் தீர்மானங்கள் லோகல் போர்டுகளின் மீட்டிங்குகளிலேயேதான் நடத்தப் படுமாதலால் யாதொரு குறிப்பிட்ட அயிட்ட விஷயமாக ஒரு லோகல் போர்டானது தங்களுடைய அதிகாரத்தைமீறி தீர்மானம்செய்யுமாகில் அதன் விஷயமாக ஏற்படும் தண்டத் தொகைக்கு அந்த மீட்டிங்கில் உள்ள அங்கத்தினர்கள் எல்லோரும் ஆளாவார்கள். அதாவது ஒரு தொகையானது கிரம விரோதமாக செலவிடப்படுமானால் அதற்காக காரணமாயிருந்த அங்கத்தினர்களே அதை லோகல் பண்டிற்கு தங்கள் சொந்த பணத்திலிருந்து கட்டிக் கொடுக்க வேண்டியதாயிருக்கும். இதற்கு 'ஸர்சார்ஜ்' என்றுசொல்லப்படும். இந்த சர்ஜார்ஜை ஏற்படுத்துபவர் சென்னை லோகல் கவர்ன்மென்டினால் லோகல் போர்டுகளினுடைய கணக்குகளை தணிக்கை செய்வதற்காக நியமிக்கப் படும் ஆடிட்டர்கள். ஒவ்வொரு வருஷமும் 'பட்ஜெட்டுகள்' தயாரான பிறகு லோகல் போர்டுகள் தாங்கள் செலவிட்ட தொகைகளுக்காக சரியான ஆதாரங்களை (Vouchers) வைத்துக் கொண்டிருக்கின்றனவா என்பதை பரிசிலனை செய்வதற்கு லோகல் கவர்ன்மென்டினால் நியமிக்கப்பட்ட ஆடிட்டர்கள் வருவார்கள். இவர்களுக்கு வேண்டியதகவல்களை லோகல் போர்டு ப்ரெஸிடென்டுகள் கொடுத்து தணிக்கையை பூர்த்தி செய்துக்கொள்ள வேண்டும். இத்தகைய ஆடிட்டர்கள் லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 120-வது பிரிவின்கீழ் கவர்ன்மென்டினால் அனுப்பப் பட்டவர்கள். இவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களெனவே கவனிக்கப்படுவார்கள்.

லோகல் போர்டுகள் தங்கள் வரும்படியை பொறுப்பாகவைத்து கவர்ன்மெண்டினிடமிருந்து கடன்களை வாங்கலாம். அந்த கடன்களை வாங்குவதற்கு முன் அவை இன்ன காரியத்திற்காக உபயோகப்படுமென்பதை லோகல் கவர்ன்மெண்டிற்கு சம்பந்தப்பட்ட லோகல் போர்டானது தெரிவிக்க வேண்டும்.

லோகல் போர்டுகளின் அலுவல்கள்.

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டில் முக்கியமாக பஞ்சாயத்துகளுக்குத்தான் மிகவும் முக்கியமானதும் பொறுப்புள்ளதுமான அலுவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 122-முதல் 198-வரையிலுமுள்ள பிரிவுகளை நாம் பார்க்குமிடத்து, அவைகளில் சொல்லப்பட்டிருக்கும் பல விஷயங்களும் பஞ்சாயத்துகளையே பற்றினதாக உள்ளன. இன்னும் பஞ்சாயத்துகளின் ப்ரெஸிடென்டுகளுக்கு சில அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. எந்தெந்த சந்தர்ப்பங்களில் பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் பஞ்சாயத்தினுடைய முன் சம்மதம் அல்லது அனுமதியில்லாமலே தாமாகவே நின்று உத்திரவுகளைச் செய்யலாம் என்பதை கவனிப்போம்.

(1) ஒரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர், ஒருவருக்கே சொந்தமாயுள்ளதும் குடிப்பதற்காக ஆகாரமாயுள்ள ஓடை, வாய்க்கால் கிணறு, குளம் முதலியவற்றை சீரான ஸ்திதியில் வைத்திருக்கும்படி சம்பந்தபட்ட நபருக்கு உத்திரவு செய்யலாம். (122-வது பிரிவைப் பார்க்க. பக்கம் 308).

(2) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் அசங்கியம் அல்லது சங்கடத்தையாவது பொதுஜன சுகத்துக்கு அபாயத்தையாவது உண்டாக்கத்தக்க சிறு குட்டைகள் முதலியவைகளை தூர்த்து விடும்படி உத்திரவு செய்யலாம். (123-வது பிரிவு, 310-வது பக்கம் பார்க்க).

(3) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் ப்ரைவேட் மலஜல பாதை மறைவிடங்கள் (கக்கசுகள்) முதலியவைகளை சுத்தஞ் செய்வதற்காக தகுந்த ஏற்பாடுகளைச்செய்ய உத்திரவிடலாம். (127-வது பிரிவு பக்கம் 315-பார்க்க.)

(4) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் சந்தேகத்துக்கிடமான இடங்களில் பிரவேசித்து அவைகளை சுத்தப்படுத்தி தொத்து வியாதி

சம்பந்தமான அசுத்தங்களை நீக்குவதற்கு அதிகாரம் உண்டு. (131-வது பிரிவு. 318-வது பக்கம் பார்க்க).

(5) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் இன்ன இடங்களில் சுத்தி செய்ய வேண்டுமென்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்க வேண்டுமென்றும் விளம்பரம் பிரசுரம் செய்யலாம். (132-வது பிரிவு. 319-வது பக்கம் பார்க்க).

(6) ஒரு கிராமத்தில் யாதொரு அபாயகரமான வியாதி பரவு வதாக இருக்குமானால் ஜனங்கள் வேடிக்கையாய்க்கூடும் காரியத்திற் காக உபயோகிக்கப்படும் கொட்டகை முதலியவைகளை மூடி வைக் கும்படி உத்தரவிடலாம். (135-வது பிரிவு 322-வது பக்கம் பார்க்க).

(7) யாதொரு கட்டிடம் அல்லது நிலமானது நாகதாளி முத லிய பூண்டுகளால் வளரப்பெற்று அக்கம் பக்கத்திற்கு தொந்தர வாகவும் அபாயமாகவும் இருக்கும் பக்ஷத்தில் அவைகளை எடுத்து அந்த இடங்களை சுத்தம் செய்யும்படிக்கு உத்தரவிடலாம். (153-வது பிரிவு. 336-வது பக்கம் பார்க்க).

(8) யாதொரு சாக்கடை அல்லது ஜலதாரையின்பேரில் யாதொரு கட்டிடம் முதலியவைகளை கட்டுவதற்கு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் உத்தரவுகளை செய்யலாம். (161-வது பிரிவு 362-வது பக்கம் பார்க்க).

(9) பொது மார்க்கட்டுகளில் யாதொரு பிராணி அல்லது சாமானை விற்பதற்கு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் உத்தரவு கொடுக்கலாம். (169-வது பிரிவு 384-வது பக்கம் பார்க்க).

(10) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் விசேஷ உத்ஸவகாலங் களிலும், பண்டிகை காலங்களிலும் பிராணிகளை கொல்வதற்கு அனு மதி கொடுக்கலாம். (191-வது பிரிவு 405-வது பக்கம் பார்க்க).

(11) தொழிற்சாலைகளுக்கும், தொழில்களுக்கும் லைசென்ஸ் கொடுக்க பஞ்சாயத்து ப்ரெஸிடென்டுக்கு அதிகாரம் உண்டு. (193-வது பிரிவு 406-வது பக்கம் பார்க்க).

(12) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் யாதொரு தொழிற் சாலையில் தொழில் நடந்து கொண்டிருக்கும்போது எந்த வேளையிலும் பஞ்சாயத்தினால் விதிக்கப்பட்டிருக்கும் விதிகள் அனுசரிக்கப்பட்டு

வருகின்றனவா, என்பதை பார்ப்பதற்காக, அதில் நுழைந்து பரிசீலனை செய்யலாம். (197-வது பிரிவு 418-வது பக்கம் பார்க்க).

(13) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் தொழில் வரி, வீட்டு வரி முதலியவைகளை விதிக்க வேண்டும். (IV-வது ஷெட்யூல் 10, 11, 11-A, 12-இந்த விதிகள். 561-முதல் 567-பக்கம் வரை பார்க்க).

பஞ்சாயத்து ப்ரெஸிடென்டுகள் சிற் சில சந்தர்ப்பங்களில் பஞ்சாயத்தினுடைய சம்மதத்தைக்கொண்டுதான் தமது நிர்வாக அலுவல்களைச் செய்யவேண்டும் என்றுள்ளது. முக்கியமாக 150-வது பிரிவின் கீழ் யாதொரு குளம், குட்டை, கிணறு, குழி, ஓடை, ஆணை, கரை அல்லது இதர இடமானது மராமத்து செய்யப்படுவதற்காக தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதற்கும், 160-வது பிரிவின்கீழ் பிதுக்கங்களுக்கும் கட்டுக்கோப்புகளுக்கும் உத்திரவு கொடுப்பதற்கும் 162-வது பிரிவின்கீழ் நோட்டீஸ் முதலியவைகளைக் கொடுப்பதற்கும், 183-வது பிரிவின்கீழ் பொதுவான பாதைகளில் வஸ்துக்களை விற்கக்கூடாது என்று தடுப்பதற்கும், 185-வது பிரிவின்கீழ் பொதுவான இடத்தையாவது பொதுவான பாட்டையின் பக்கங்களையாவது பாரவண்டி நிற்கும் இடம் முதலியவைகளாக உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பதற்கும், ப்ரெஸிடென்டானவர் பஞ்சாயத்தினுடைய அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களில் பஞ்சாயத்தே பிரவேசித்து தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். முக்கியமாக ஒரு கிராமத்தில் வீதிகளிலுள்ள குப்பைகளை வாருவதும், சாக்கடை முதலியவைகளிலிருந்து அசுத்தங்களை எடுப்பதும், மார்க்கட்டுகளை திறந்து வைத்து அவைகளை பொது ஜனங்களுக்கு வேண்டிய வஸ்துக்களை விற்கும்படி ஏற்பாடு செய்வதற்கும் பொதுவான தங்குமிடங்கள், இறங்குமிடங்கள், வண்டி நிற்குமிடங்கள் இவைகளை ஏற்படுத்தி அவைகளை பராமரிப்பதும், இராக்காலங்களில் பொதுவான பாட்டைகளில் விளக்குகளை ஏற்றவும், ஆடு மாடுகள் வெட்டப்படும் தொட்டிகளை ஸ்தாபிக்கவும் பொதுவான கிணறுகள், குளங்கள் முதலியவைகள் சரியான ஸ்திதியிலிருக்கும்படி செய்யவும் அவைகளை அசுத்தம் செய்யாமலும் ஆடு மாடு முதலியவைகளை கழுவவொட்டாமலும் இருக்கும்படி செய்யவும் யாத்திரைஸ்தலங்களில்

சுகாதார ஏற்பாடுகளைச் செய்யவும், கிராமங்களில் பிரேதங்களை சுடுவதற்கும், புதைப்பதற்கும் தகுந்த இடங்களை ஏற்பாடு செய்யவும். இயக்கிர சாலைகளை ஏற்படுத்துவதற்கு உத்தரவு முதலியவைகளை கொடுப்பதற்கும், சொறி பிடித்த நாய்கள் பன்றிகள் முதலியவைகளை கொன்று விடுவதற்கும் பஞ்சாயத்தானது கேரில் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும் பஞ்சாயத்துகள் கிராம பள்ளிக்கூடங்களையும், லைப்ரெரி என்று சொல்லப்படும் வாசக சாலைகளையும், சுகாதாரத்தைப் பற்றின போதனசாலைகளையும் ஏற்படுத்த கடமைப் பட்டதாகும். பொதுவாக பஞ்சாயத்துகள் தங்கள் கிராமத்தைப் பற்றின சகல சுகாதார விஷயங்களைப் பற்றியும் பொறுப்புடையதாக ஏற்படும்.

பஞ்சாயத்துகள் அமைக்கப் படாத இடங்களில் தாலூக்கா போர்டுகள், பஞ்சாயத்துகள் செய்ய வேண்டியதும் செய்யக்கூடியதுமான சகல அலுவல்களையும் பார்த்துவரக் கடமைப்பட்டதாகும். இது தவிர, ஒரு ஜில்லாவில் டிஸ்டிரிக்ட்டு பாதைகள் என்று சொல்லப் படாமலிருக்கும் எல்லா பாதைகளையும் பராமரித்துவர கடமைப் பட்டதாகும். சென்னை கவர்ன்மென்டார் லோகல்போர்ட்ஸ் ஆக்டின்கீழ் தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் அதிகாரத்தின்கீழ் 21-8-1930 வருஷத்தில் ஒரு உத்திரவைச் செய்திருக்கின்றனர். அதாவது ஒரு ஜில்லாவிலுள்ள எல்லா பாதைகளையும் இரண்டு விதமாக பிரித்து, டிஸ்டிரிக்ட்டு போர்டினால் பராமரிக்கப்பட்டு வரும் பாதைகள் டிஸ்டிரிக்ட் பாதைகளென்றும், மற்ற எல்லா பாதைகளும் கிராமங்களிலுள்ள பாதைகள் உள்பட தாலூக்கா போர்டைச் சேர்ந்ததென்றும் அவை தாலூக்கா பாதைகள் என்று வகுக்கப்பட வேண்டுமென்றும் உத்திரவிட்டிருக்கின்றனர். இத்தகைய பாதைகளை பாதுகாத்து பராமரித்து வருவது தாலூக்கா போர்டுகளின் கடமையாகும்.

டிஸ்ட்ரிக்டு போர்டினுடைய அலுவல்களைப்பற்றி V-வது ஷெட்யூல் 1-C விதியில் சொல்லப்பட்டுள்ளது. முக்கியமாக டிஸ்ட்ரிக்ட் போர்டானது டிஸ்டிரிக்ட் பாதைகளைப் பாதுகாத்து அவைகளில் இளைப்பாறும் ஸ்தலங்களையும், பிரயாணிகள் தங்குமிடங்களையும் அந்த பாதைகளிலுள்ள வாராவதிகள், மூடிய வாய்க்கால்கள், பாதை அணைகள், ஆற்றுப் பாதைகள் இவைகளைக் கட்டுவதும் காப்பாற்றுவதும், ஜில்லா சத்திரங்களை ஸ்தாபித்து காப்பாற்றுவதும், மத்திய தா

பள்ளிக்கூடங்கள், வேலைகள் அல்லது கைத்தொழில் கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடங்கள், இவைகளை ஸ்தாபிப்பதற்கும் அந்த ஜில்லா முழுவதற்கும் வேண்டிய சௌகரியங்களைச் செய்வதற்கு அவசர சமயங்களுக்காக தனியாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வைத்திய உத்தியோகஸ்தர்களையும், சிகிச்சை செய்யும் ஸ்திரீகளையும், பிரசவ காலத்தில் உதவி செய்யும் ஸ்திரீகளையும் அமர்த்தி வைப்பதற்கும் ஆஸ்பத்திரிகளையும் வைத்தியசாலைகளையும், மிருக ஆஸ்பத்திரிகளையும் வைத்தியசாலைகளையும் ஏற்படுத்துவதற்கும் இன்னும் பரவும் வியாதிகளை தடுப்பதற்காக முன்னெச்சரிக்கையாக எடுத்துகொள்ளப்படும் காரியங்களைச் செய்வதற்கும் கடமைப்பட்டதாகும். டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு ஒரு ஜில்லாவில் ஓடும் மோட்டார் பஸ்களுக்கும், மோட்டார் லாரிகளுக்கும் லைசென்ஸ் கொடுக்க உரிமையுண்டு. அதற்கு டிஸ்ட்ரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டுதான் அதிகாரஸ்தாவர்.

பஞ்சாயத்துகளுக்கும், தாலூக்கா போர்டுகளுக்கும் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கும் இன்னின்ன அலுவல் உண்டென்று V-வது ஷெட்யூலில் விவாமாக சொல்லப்பட்டு உள்ளது.

லைசென்சுகள்.

லைசென்ஸ் என்பது ஓர் அனுமதியாகும். அதாவது ஓர் காரியத்தைச் செய்வதற்காக முன்னுடியாகவே பெற வேண்டிய ஓர் அனுமதியைக் குறிக்கும். சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டில், முக்கியமாக பஞ்சாயத்துகளில் உள்ள கிராம வாசிகள் லைசென்ஸில்லாமல் (அதாவது பஞ்சாயத்து ப்ரெஸிடென்டினிடமிருந்து யாதொரு குறிப்பிட்ட காரியத்தை செய்வதற்காக அனுமதி பெறுமல்) அந்த காரியத்தை செய்யக் கூடாதென்று தடுக்கப்பட்டுள்ளது. அடியில் கண்ட காரியங்களுக்கு அவைகளைச் செய்வதற்கு முன் ஒவ்வொரு நபரும் லைசென்ஸ் பெற வேண்டும்

(1) பிரேதங்களை ஒரு வகை செய்வதற்காக உள்ள இடங்களை ஏற்படுத்துவதற்கு பஞ்சாயத்தினிடமிருந்து லைசென்ஸ் பெற வேண்டும் (141-வது பிரிவு).

(2) ஒரு பொதுவான ரஸ்தாவிலிருந்து இருபது கெஜங்களுக்குள் ஓரிடத்திலிருந்து கற்களை வெட்டுவதாயிருந்தால் அதற்காக சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது லோகல் போர்டினிடமிருந்து லைசென்ஸ்பெற வேண்டும்.

(3) ஒரு டிஸ்ட்ரிக்ட்டுக்குள் உள்ள ரோட்டுகளில் மோட்டார் பஸ் அல்லது மோட்டார் லாரியை ஓட்டுவதாயிருந்தால் அதற்காக டிஸ்ட்ரிக்ட் போர்டினிடமிருந்து லிசென்ஸ் பெறவேண்டும்.

(4) ஒரு நபர் ஒரு பஞ்சாயத்தின் ஹத்துக்குள் ஒரு புதிய ப்ரைவேட் மார்க்கெட்டை நிறுத்து வைப்பதாக இருந்தாலும் அல்லது பழைய ப்ரைவேட் மார்க்கெட்டை நிறுத்து வைத்துக்கொண்டிருந்தாலும் அதற்காக பஞ்சாயத்தினிட மிருந்து லிசென்ஸ் பெறவேண்டும்.

(5) ஒரு நபர் புதியதாக வண்டி நிற்கும் இடங்களை ஏற்படுத்துவதாயிருந்தால் அல்லது பழைய வண்டி நிற்குமிடத்தை வைத்துக் கொண்டிருப்பதாக இருக்கும் பட்சத்தில் அதற்காக பஞ்சாயத்தினிட மிருந்து லிசென்ஸ் பெறவேண்டும்.

(6) ஒரு பஞ்சாயத்தின் ஹத்துக்குள் யாதொரு நபர் லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டின் VII-வது ஷெட்யூலில் கண்டிருக்கப் பட்டிருக்கும் காரியங்களில் ஒன்று அல்லது பலவற்றிற்காக யாதொரு இடம் அல்லது இடங்களை உபயோகப்படுத்தும்பக்ஷத்தில் அதற்காக பஞ்சாயத்தினிடமிருந்து லிசென்ஸ் பெறவேண்டும். VII-வது ஷெட்யூலில் கண்டுள்ள காரியங்கள் அபாயகரமாகவோ அல்லது துர்க்கந்தமாகவோ அல்லது அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்களுக்கு அசௌகரியமாகவோ உள்ள தொழில்களாகும்.

(7) ஜனங்கள் வழக்கமாக கூடும்படியான இடங்கள் அல்லது வேடிக்கைக்காக காலங்கழிக்கும் இடங்கள், உதாரணமாக டிராமா கொட்டகைகள், சினிமாக்கள், சர்க்கஸ் கொட்டகைகள் முதலிய இடங்களுக்காகவும் பஞ்சாயத்து ப்ரெஸிடென்டினிடமிருந்து லிசென்ஸ் பெறவேண்டும்.

பஞ்சாயத்தினிடமிருந்து லிசென்ஸ் பெறவேண்டுமென்று இருக்கும்பக்ஷத்தில் பஞ்சாயத்தும், ப்ரெஸிடென்டினிடமிருந்து லிசென்ஸ் பெறவேண்டுமென்று இருக்கும்பக்ஷத்தில் ப்ரெஸிடென்டும் லிசென்ஸ் கொடுக்கலாம், அல்லது மறுத்துவிடலாம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக அதன் சௌகரியா சௌகரியங்களை கவனித்து, பிறகுதான் லிசென்ஸ் கொடுக்க வேண்டும்.

லைசென்சுகள் ஒவ்வொரு வருஷமும் புதுப்பிக்கப்பட வேண்டும். புதிய வருஷத்திற்காக லைசென்ஸ் வேண்டுமென்று இருக்கும்பக்ஷத்தில் அதற்கு முந்தின வருஷம் முடிவதற்கு ஆறு வாரத்திற்குமுன்பே லைசென்ஸ் புதுப்பிப்பதற்காக மனு செய்ய வேண்டும். ஒருதரம் லைசென்ஸ் கொடுக்கப்பட்டதனால் பிறகு அந்த லைசென்ஸானது புதுப்பிப்பதற்கு ஆக்ஷேபனை சொல்லுவதற்கு இல்லை. ஆனால், ஒரு நபர் லைசென்ஸ் பெற்றபிறகு லைசென்ஸின் நிபந்தனைகளை மீறி நடக்கும் பக்ஷத்தில் ப்ரெஸிடென்டு அல்லது பஞ்சாயத்தானது லைசென்சை ரத்து செய்து விடலாம். ரத்து செய்யப்பட்ட பிறகு மறுபடியும் புதியதாக லைசென்ஸில்லாமல் அந்த தொழிலை நடத்துவதற்கில்லை. அல்லது காரியத்தைச் செய்வதற்கில்லை.

ஒரு லைசென்ஸினுடைய நிபந்தனைகளை சரிவர அனுசரித்து வரும் ஒரு நபருக்கு அகாரணமாக லைசென்ஸ் கொடுக்க மறுத்து விடுவதற்கில்லை. அப்படி மறுத்துவிடும்பக்ஷத்தில் அவர் லைசென்ஸில்லாமலே அந்த தொழிலை நடத்தி வருவதனால் குற்றவாளியாக மாட்டார்.

ஒரு ப்ரெஸிடென்டு லைசென்ஸ் கொடுக்க மறுத்துவிடும் பக்ஷத்தில் அதன்பேரில் பஞ்சாயத்திற்கு அப்பீல் உண்டு. பஞ்சாயத்தானது தமது மீட்டிங்கில் அதைப்பற்றி ஆலோசனை செய்து லைசென்ஸ் கொடுக்கலாம் அல்லது ப்ரெஸிடென்டினுடையதை ஊர்ஜிதப் படுத்தலாம். பஞ்சாயத்தினிடமிருந்தே நேரில் லைசென்ஸ் பெற வேண்டும் என்று இருக்கும் சந்தர்ப்பங்களில் பஞ்சாயத்தானது லைசென்ஸ் கொடுக்க மறுத்துவிடும்பக்ஷத்தில் டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு அப்பீல் உண்டு. (181-வது பிரிவைப்பார்க்க) என்றபடினம் பஞ்சாயத்தானது தமது உத்தரவைத் தெரிவிக்கிறதோ அன்று முதல் மூப்பது தினங்களுக்குள் அப்பீல் செய்யவேண்டும்.

இதின் விஷயமாக இன்னம் அதிகமாகவுள்ள விவரங்களுக்கு 490-வது பக்கம் முதல் 492-வது பக்கம் வரையிலும், 453-வது பக்கம் முதல் 460-வது பக்கம் வரையிலும் உள்ள குறிப்புகளைப் பார்க்க.

மோட்டார் பஸ்களை வாடகைக்காக ஓட்டுவதற்கும் மோட்டார் லாரிகளை ஓட்டுவதற்கும் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டினிடமிருந்து லைசென்ஸ் பெறவேண்டும். டிஸ்டிரிக்ட்டு போர்டு

ப்ரெஸிடென்டு லீவ் சென்ஸ் கொடுக்க மறுத்துவிடும் பக்ஷத்தில் என்றையதினம் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டினுடைய உத்திரவானது கிடைக்கிறதோ அன்று முதல் (15) பதினைந்து நாட்களுக்குள் டிஸ்ட்ரிக்ட் போர்ட்டுக்கு அப்பீல் செய்துக்கொள்ளலாம்.

(13) மேலே சொல்லப்பட்ட காரியங்களுக்காக லீவ் சென்ஸ் இல்லாமல் அவைகளை நடத்துவதானது குற்றமாகும். அதற்கு தண்டனை உண்டு. இதன் விவரம் VIII, IX-ஷெட்யூல்களில் காணப்பட்டு உள்ளது.

பிராக்ஸிகியூஷன்கள்.

லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் செய்யப்படும் குற்றங்கள் பல வகைப்பட்டதாகும். VIII-வது ஷெட்யூலில் பல பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தப் பிரிவுகள் இன்னின்னவை என்று நாம் லோகல் போர்ட்ஸ் ஆக்டிற்குள் பார்க்குமிடத்து அவைகளில் சில நிபந்தனைகள் உள்ளதாக ஏற்படும். நாம் VIII-வது ஷெட்யூலில் சொல்லப்பட்டிருப்பதுதான் குற்றத்தின் விவரணம் என்று அர்த்தம் பண்ணிக் கொள்வதற்கில்லை. VIII-வது ஷெட்யூலில் உள்ள பிரிவுகளை முதலில் பார்க்க வேண்டும். பிறகு அந்தப் பிரிவுகளின் பூரண பதப் பிரயோகம் என்னவென்று இந்த ஆக்டிலேயே நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்தந்தப் பிரிவுகளில் என்னென்ன நிபந்தனைகள் உள்ளனவோ அவைகளை மீறுவது குற்றமாகும். உதாரணமாக VIII-வது ஷெட்யூலில் (613-வது பக்கத்தைப் பார்க்க). 129-வது பிரிவின்கீழ் உள்ள குற்றத்தைக் குறித்து மிகவும் சுருக்கமாக "அசுத்தங்களை பொதுவான பாட்டைகளில் போகும்படி செய்வது முதலியவை" என்றுள்ளது. இதனாலேயே அந்தப்பிரிவில் என்னவென்று தடுக்கப்பட்டுள்ளது என்பது விளங்காது. இந்தப் பிரிவின் பூரண அம்சங்களை அறிவதற்கு நாம் 129-வது பிரிவைப் பார்க்க வேண்டும்.

இரண்டாவதாக, லோகல்போர்ட்ஸ் ஆக்டை அனுசரித்து லோகல் போர்டுகள் சில விதிகளை அல்லது உத்தரவுகளைச் செய்யலாம் இத்தகைய விதிகள் அல்லது உத்தரவுகள் பொதுவானபொழுது லோகல் போர்டுகளால் 'தமுக்கு' முதலியவைகளைக் கொண்டு பஹிரங்கப்படுத்தப்படும். அதனால் தெரியாவிட்டாலும் லோகல் போர்டுகளின் ஆபீசுகளில் இந்த விதிகள் அல்லது பொதுவான

உத்தரவுகள் இன்னவை என்று தெரியும். அவை நோட்டீஸ் போர்டுகளில் காணப்படும். அத்தகைய விதிகளை அல்லது உத்தரவுகளை மீறி நடப்பது ஒரு குற்றமாகும். அத்தகைய விதிகள் ஒவ்வொரு இடத்திற்கும் வெவ்வேறாக இருக்குமாதலால் அவை இந்த புத்தகத்தில் காணப்படாது.

மூன்றாவதாக, லோகல் போர்டுகள் அல்லது அவைகளின் ப்ரெஸிடென்டுகள் யாதொரு குறிப்பிட்ட விஷயமாக ஒரு நபருக்கு ஒரு காரியத்தைச் செய்யும்படி (உதாரணமாக ஆக்கிரமிப்பை எடுத்துவிடும்படிக்கு அல்லது அசுத்தங்களை அப்புறப்படுத்தும்படிக்கு அல்லது கட்டிடம் கிணறு குளம் முதலியவைகளை பந்தோபஸ்தான நிலைமையில் வைத்துக் கொள்ளும்படிக்கு கட்டளை அல்லது உத்தரவு இடலாம். அப்படிப்பட்ட கட்டளைகளை அல்லது உத்தரவுகளை லோகல்போர்டுகள் அல்லது ப்ரெஸிடென்டுகள் தங்களுக்குள்ள அதிகாரத்தை அனுசரித்துத்தான் கொடுப்பார்கள். அத்தகைய கட்டளைகள் அதிகார வரம்பிற்குள் கொடுக்கப்பட்டதானால் நோட்டீஸ் கொடுக்கப்படும் நபர் அவைகளுக்கு கீழ்படிய வேண்டும். அப்படி கீழ்ப்படியாலிருப்பது குற்றமாகும்.

நான்காவதாக, டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு, இந்த ஆக்டிற்காவது அல்லது வேறே யாதொரு சட்டத்திற்காவது முரண்படாதபடி சில விஷயங்களுக்காக சகாய சட்டங்களைச் செய்வதற்கு உரிமை யுண்டு. அவ்விஷயங்கள் என்னென்னவை யென்று 202-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளன. அவ்விஷயங்களுக்காகச் செய்யும் சகாய சட்டங்களை மீறி நடப்பதும் குற்றமாகும். டிஸ்ட்ரிக்ட் போர்டானது செய்யாத சகாயச் சட்டங்களை அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்டினுடைய சகாயச் சட்டங்களுக்கு முரண்படாமலுள்ள சகாயச் சட்டங்களைச் செய்வதற்கு 203-A பிரிவின்கீழ் பஞ்சாயத்துகளுக்கும் தாலூக்கா போர்டுகளுக்கும் அதிகாரம் உண்டு. இம்மாதிரியான சகாயச் சட்டங்கள் அவ்வப்பொழுது டிஸ்ட்ரிக்ட கெஜட்டில் பிரசுரப்படுத்தப்படும். சுதேச பாஷையிலும் அவை பிரசுரிக்கப்படும். இவைகளை மீறி நடப்பதும் குற்றமாகும்.

ஐந்தாவதாக, 199-வது பிரிவின்கீழ் லோகல் கவர்ன்மென்டானது இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளை செய்யலாம். அந்த விதிகளுக்கும் இந்த ஆக்டினுடைய அந்தஸ்

தானது சங்கிரமிக்கு மாதலால் அவைகளை மீறிநடப்பதும் குற்றமாகு. மென்று கவர்ன்மென்டாரே ஏற்படுத்தலாம். இத்தகைய விதிகள் சென்னை போர்ட்டு செயிண்ட் ஜார்ஜி கெஜட்டில் பிரசுரம் செய்யப் படும்.

மேலே கண்டபடி எவ்வாறுயினும் ஒரு நபர் குற்றம் செய்யும் பக்ஷத்தில், குற்றம் நடந்த மூன்று மாதங்களுக்குள் அவர்பேரில் சரியான அதிகாரமுள்ள மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெஸிடென்டாவது அல்லது அந்த லோகல் போர்டு அல்லது அதன் ப்ரெஸிடென்டு இவர்களால் இது விஷயமாய் ஸ்பஷ்டமாக வெளிப்படையாய் அதிகாரம் கொடுக்கப்பட்ட யாதொரு நபராவது தாவா தொடர வேண்டும்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு தாவா தொடருவது செல்லத்தக் கதல்ல. ஒரு ப்ரெஸிடென்டினுல் அல்லாமலும் அல்லது கிரமப்படி அதிகாரம் கொடுக்கப்பட்ட நபரினுல் அல்லாமலும் செய்யப்படும் தாவாவை மாஜிஸ்ட்ரேட்டுகள் பிடித்து விசாரிப்பதற்கில்லை.

ஆனால் இப்படி சொல்வதற்கு சில விலக்குகள் உண்டு. போலீ சார் யாதொரு அதிகாரப்படுத்தலும் இல்லாமலே லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் ஒரு குற்றத்தின் விஷயமாக தாவாவைத் தொடர லாம். மாஜிஸ்ட்ரேட்டுகள் கிரிமினல் புரோஸீஜர் கோடில் தமக் குள்ள அதிகாரத்தை முன்னிட்டு லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டின்கீழ் ஏதாவது குற்றம் நடந்துவருவதாக அனுமானிக்கும்பக்ஷத்தில் அவர் கள் யாதொரு பிராதும் இல்லாமலே குற்றத்தைக் கண்டுபிடித்து விசாரணை செய்யலாம்.

மேலே சொல்லப்பட்ட மூன்றுமாத கால அளவானது லீசென் சுகளின் விஷயமாக பிரயோகிப்பதற்கில்லை. இந்த ஆக்டின்படி லீசென்ஸ் வாங்கிக் கொள்ளவோ அனுமதி பெறவோ தவறுவது, எந்த கால அளவுக்கு லீசென்ஸ் அல்லது அனுமதி வேண்டி யிருக் கிறதோ அப்படிப்பட்ட கால அளவு எதுவாகிலுமிருந்தால் அது கடந்துபோகிற வரையிலே இந்தப் பிரிவின் காரியங்களுக்காக நடந்து கொண்டே இருக்கும் குற்றமாயிருப்பதாக எண்ணப்படும்; மேலும் எந்த கால அளவும் குறிப்பிடப்பட்டிராவிட்டால் குற்றம் நடக்க ஆர ம்பமானதிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் எப்போதாகிலும் தாவா செய்யலாம். ஆகையால் ஒரு நபர் லீசென்ஸ் வாங்காத விஷயமாக தப்பித்துக்கொள்வதற்கு இல்லை.

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டின்கீழ் செய்யப்படும் காவாக்கள் சில சிக்குடையவைகளாயிருப்பதால் அவைகளை சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் தாக்கல் செய்வது நலமாகும்.

லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டின்கீழ் நடக்கும் பிராஸிகியூஷன்களில், எதிரி தாம் வாஸ்தவத்தில் யாதொரு குற்றம் செய்யவில்லை என்று வாதிக்கலாம். அவர் ஏதாவது நோட்டீசை நிராகரித்ததாக சொல்லப்படும்பக்ஷத்தில் அந்த நோட்டீஸானது கொடுத்திருக்கக் கூடாதென்றும் அந்த நோட்டீஸானது அதிகார வரம்புமீறி செய்யப்பட்டதினால் அதை தாம் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை யென்றும் எதிர்வாதம் செய்யலாம். அத்தகைய எதிர்வாதங்களை மாஜிஸ்ட்ரேட்டுகள் கட்டாயம் கவனித்துச் செய்ய வேண்டும்.

லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டின்கீழ் யாதொரு லிசென்ஸ் தொகை செலுத்தாமலிருப்பதற்காக அல்லது யாதொரு கட்டணத்தைக் கொடுக்காமல் ஒரு காரியத்தைச் செய்ததற்காக தாவா செய்யப்படுமானால் எதிரி குற்றவாளி யென்று தீர்மானிக்கப்படுவதின்பேரில் அபராதத் தொகை மாத்திரம் அல்லாமல் அவர் செலுத்தத் தவறின லிஸென்ஸ் கட்டணத்தையும் மாஜிஸ்ட்ரேட்டுகள் வசூலிக்கலாம்.

லோகல் போர்டுகள் அல்லது லோகல் போர்டுகளின் சார்பாக தனி நபர்கள் பிராஸிகியூஷன்களைச் செய்வதில், முதன் முதலில் தங்களுக்கு அப்படிச் செய்வதற்கு அதிகாரம் உண்டா இல்லையாவென்பதை முன்னடியாகவே தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு லோகல் போர்டினிடத்தில் சங்கிரமித்திருக்கும் சொத்து விஷயமாக அல்லது உரிமை விஷயமாகவோ மற்றொரு லோகல் போர்டானது தாவா செய்வதற்கில்லை. அப்படிச் செய்வதினால் பார்ட்டிகளுக்கும் கோர்ட்டுகளுக்கும் வீண் கஷ்டம் சம்பவிப்பதாகும். ஒரு லோகல் போர்டு செய்ய வேண்டிய பிராஸிகியூஷன் மற்றொரு லோகல் போர்டானது மேற்கொண்டு செய்வதற்கில்லை. இதன் விஷயமாக சமீபத்தில் சென்னை ஹைக்கோர்ட்டில் ஒரு தீர்மானம் ஏற்பட்டுள்ளது. அது சேந்தியப்ப நாடார் vs. மதுரை டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரொஸிடென்டு என்னும் கேஸ் (II-1930) அஸில இந்தியா லா ஜர்னல் ரிப்போர்ட்டுகள் 372-வது பக்கத்தைப் பார்க்க. இது மிகவும் முக்கியமான கேஸாகும்.

இப்புத்தகத்தில் 631-வது பக்கத்தில் சென்னை லோகல் கவர்ன்மெண்டார் 21—S—1930-ல் G. O. No. 3361-ல் ஒரு உத்திரவு-

செய்திருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. இப்பொழுது கவர்ன்மெண்டார் 24—3—1931-ல் அந்த உத்தரவை G. O. No. 990 L. & M. of 1931 என்னும் உத்தரவினால் ரத்து செய்திருக்கின்றனர். அவ்வுத்தரவானது பின்வருமாறு:—

G. O. No. 990 L. & M. 24—8—1931.

1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்ட்ஸ் நிருத்த சட்டத்தின் ஷெட்யூலின் II (i) விதியினாலும் 1891-ம் வருஷத்திய ஜெனரல் கிளாஸஸ் ஆக்டின் 15-வது பிரிவினாலும் தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை முன்னிட்டு லோகல் கவர்ன்மெண்டானது 21—8—1930 தேதியுள்ள G. O. No. 336 L. & M. என்னும் உத்தரவை ரத்துசெய்து விடுகிறார்கள். இதனால் எல்லா பொதுவான பாதைகளும் சத்திரங்களும் மார்க்கெட்டுகளும் 26-8-30-க்கு முன் அவை டிஸ்டிரிக்டு போர்டு-தாலூக்கா போர்டு இவைகளால் பராமரிக்கப்பட்டு வந்த பிரகாரம் முறையே டிஸ்டிரிக்ட் பாதைகள், தாலூக்கா பாதைகள், டிஸ்ட்ரிக்ட் சத்திரங்கள், தாலூக்கா சத்திரங்கள், டிஸ்ட்ரிக்ட் மார்க்கெட்டுகள், தாலூக்கா மார்க்கெட்டுகள் என்று வகுப்பிடப்படும்படி உத்தரவிடுகிறார்கள். மற்ற எல்லா பாதைகளும், சத்திரங்களும், மார்க்கெட்டுகளும் கிராம பஞ்சாயத்துகளால் பராமரிக்கப்பட்டு வரவேண்டும்.

(இவ்வுத்தரவானது மேலே 631-வது பக்கத்திலுள்ள விஷயம் அச்சடித்தான பிறகு வந்திருப்பதால் இவ்விடத்தில் எழுதப்பட்டது.)

லோகல் போர்டுகளின் மெம்பர்களினுடையவும், ப்ரெஸிடெண்டு களினுடையவும் பொறுப்பு.

யாதொரு நபர் ஒரு லோகல் போர்டில் மெம்பராகவோ அல்லது ப்ரெஸிடெண்டாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர்களுக்கு யாதொரு பொறுப்பும் (Responsibility) கிடையாது என்று சொல்வதற்கில்லை. அவர்கள் தங்கள் உத்தியோகஸ்தானத்தை அனுசரித்து செய்யும் செய்கைகளுக்கு ஒரு வகையான பாதுகாப்பு இருந்தபோதிலும் அவர்கள் தங்களுடைய அஜாக்கிரதையினால் அல்லது துர் செய்கையினால் லோகல் போர்டுகளுக்கு சம்பவிக்கும் நஷ்டங்களுக்கு கட்டிக் கொடுக்க வேண்டி வரும். (227—வது பிரிவைப் பார்க்க. பக்கம் 615). லோகல் போர்டு ப்ரெஸிடெண்டுகள் தங்களுடைய அதிகார பதவியை ஆதாரமாகக் கொண்டு தங்கள் வரம்பு கடந்த செய்கைகளைச் செய்வதற்கு துணியலாம். இம்மாதிரி செய்யும்பக்ஷ

த்தில் ஒவ்வோர் சமயங்களில் 227-A-வது பிரிவில் உள்ள பாதுகாப் பினும் தடைபடாமல் பிராக்ஸிகியூஷனுக்கு உள்ளாகும்படி நேரிடும். ஆகையால் அவர்கள் மிகவும் ஜாக்கிறதையாகவே இருக்கவேண்டும்.

முக்கியமாக, லோகல் போர்டுகள் தங்கள் தொகைகளை செலவிடு வதில் கவனமாயும் தங்கள் அதிகார வரம்புகளை அறிந்து கொண்டும் செலவு செய்ய வேண்டும். யாதொரு செலவானது தங்கள் அதிகா ரத்திற்கு உட்பட்டதா இல்லையா வென்பதின் விஷயமாக சந்தேகம் கிளம்பும்பக்ஷத்தில் லோகல் போர்டுகள் கவர்ன்மென்டினிடம் கலந்து கொண்டு பிறகு செலவு செய்வது நலம். அதிகார வரம்பு கடந்து செய்யப்பட்ட செலவுகளுக்கு லோகல் போர்டுகளின் மெம்பர்கள் ஜவாப்தாரிகளாவார்கள்.

ப்ரெஸிடென்டுகளும் வைஸ் ப்ரெஸிடென்டுகளும் தங்கள் போர் டின் அங்கத்தினர்களை விரோதப்படுத்திக் கொள்ளாமலும் கக்ஷிகளை கிளப்ப வொட்டாமலும் சமரஸமாக நடந்து கொள்ளவேண்டும். அவர்களுடைய ஆதிபத்தியமானது யாவராலும் மெச்சத் தகுந்ததா யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த சட்டத்தின் 44-வது பிரி வானது அவர்களுடைய எதிரில் வந்து நிற்கும்.

லோகல்போர்டுகளின்பேரில் தாவாக்களும், லோகல் போர்டுகளால் செய்யப்படும் தாவாக்களும்.

இதன் விஷயமாக இந்த சட்டத்தில் 225-வது பிரிவில் விஸ்தார மாகச் சொல்லப்பட்டு உள்ளது. யாதொரு நபர் ஒரு லோகல்போர் டின்மீது தாவா செய்வதாக உத்தேசிக்கும்பக்ஷத்தில் 225-வது பிரிவையும் அதன்கீழுள்ள குறிப்புகளையும் 503-வது பக்கம் முதல் 514-வது பக்கம் வரையிலுமுள்ளதை மிகவும் நன்றாகப் படித்து தெரிந்து கொள்ள வேண்டும்.

லோகல் போர்டுகள் சாதாரணமாக ஒரு பிரைவேட் நபரைப் போல் கவனிக்கப்படுவதற்கில்லை. அவைகள் பொதுஜன நன்மை க்காகவே ஏற்பட்டுள்ளன வாதலால், அவைகளின்மீது தாவா செய் யும்போது சில நிபந்தனைகளை அனுசரிக்க வேண்டும். எந்த விஷயமாக தாவா செய்யப்படுகிறதோ அதற்குக் காரணமாயிருந்தவர் பேரில் தனியாக தாவா செய்வதற்கில்லை. அந்த லோகல் போர்டின் பேரில்தான் செய்ய வேண்டும். லோகல் போர்டுகளின் செய்கையி னல் நேர்ந்திருக்கும் நஷ்டத்தை வரப்பெறுவதற்குச் செய்யும் தாவா க்களுக்காக நோட்டீஸ் கொடுக்க வேண்டும். எந்தெந்த தாவாக்-

களுக்காக நோட்டீஸ் வேண்டும் என்றும், எவைகளுக்காக நோட்டீஸ் வேண்டியதில்லை என்றும் மேலே குறிப்பிட்டுள்ள பக்கங்களில் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளது.

லோகல் போர்டுகள் தங்களுடைய உரிமைகளை முன்னிட்டு பிரைவேட் நபர்களின்பேரில் யாதொரு நோட்டீசும் இல்லாமலே தாக்கல் செய்யலாம். லோகல் போர்டுகளின் சார்பாக அவைகளின் ப்ரெஸிடென்டுகளும் லோகல் போர்டுகளால் அதிகாரப்படுத்தப்பட்ட நபர்களும் முதன்மையாக நின்று தாவா செய்யலாம்.

லோகல் போர்டினுடைய சாங்கிஷன் இல்லாமல் ப்ரெஸிடென்டுகள் தங்கள் சுயேச்சையாக தாவாக்களைச் செய்யக் கூடாது.

பொது விஷயங்கள்.

லோகல் போர்டுகள், நமது சுய ஆட்சி உரிமையை எவ்வாறு நடத்துகிறோம் என்பதை பரீக்ஷிப்பதற்காகவே முக்கியமாக ஏற்பட்டுள்ளன. 1884-ம் வருஷம் முதல் லோகல் போர்டுகள் ஸ்தாபிக்கப்பட்டு வரவர உரிமைகளைப் பொறுப்புகளையும் அடைந்து தங்கள் செல்வாக்கில் அதிகரித்தே வருகின்றன. பொது ஜனங்கள் லோகல் போர்டுகளினுடைய நிர்வாகத்தில் ஊக்கமுள்ளவர்களாக இருந்து ஏதேனும் குறைவுகளைக் கண்டு பிடிக்கும்பக்ஷத்தில் அதை அவ்வப்பொழுது தெரிவித்து வருவது நலமாகும். பொது ஜனங்கள் லோகல் போர்டுகளினுடைய நிர்வாகமானது சஞ்சலமில்லாமல் நடைபெறுவதற்கு வேண்டிய செள்கரியங்களைச் செய்யவேண்டும். லோகல் போர்டு மீட்டிங்குகளில் மெம்பர் எவ்வாறு தங்களுடைய பொறுப்புகளைச் செலுத்தி லோகல் போர்டுகளின் துவாரா பொது ஜனங்களுடைய முன்னேற்றத்தையும் செளகரியங்களையும் தேடி வருகின்றனர். என்பதை கவனிக்க வேண்டும். லோகல் போர்டுகள் கைபிசகாகவோ அல்லது கவனப்பிசகாகவோ செய்யும் காரியங்களை அதிகமாக பாராட்டாமல் அவைகளை அவ்வப்பொழுது சீர்திருத்தம் செய்வது பொது ஜனங்களுடைய கடமையாகும்.

முடிவாக, "ஊர் ஆட்சி அறிந்தவர்க்கு உலகாட்சி எம்மட்டும்" என்பதற்கிணங்க ஒவ்வொரு வாசியும் தங்களுடைய க்ஷேமத்திற்கும் செளகரியத்திற்கும் ஏற்பட்டிருக்கும் லோகல் போர்டுகள் நடப்பதற்கு உதவியாக இருப்பின், இனிமேல் லோகல் போர்டுகள் தமது வருமான ஆதாரங்களில் வளர்ச்சிற்று இன்னும் அதிகமாக நமது பண்டைகால குடிவளம், நாடு வளம் முதலியவைகளை பெருக்கச் செய்தவருக்குக் காரணமாயிருப்பார் என்பதில் ஐயமில்லையென சொல்லத் துணிபுண்டாகும்.

ரிப்போர்ட்டுகளின் விவரணம்.

Mad.	....	மதராஸ் லா ரிப்போர்ட்ஸ்.
M. L. J.	....	மதராஸ் லா ஜர்னல்.
M. W. N.	....	மதராஸ் வீக்லி நோட்ஸ்.
L. W.	....	லா வீக்லி. (மதராஸ்).
M. L. T.	....	மதராஸ் லா டைம்ஸ்.
All.	....	அலஹாபாத் லா ரிப்போர்ட்ஸ்.
W. R.	....	வீக்லி ரிப்போர்ட்டர்.
M. I. A.	....	மூர்ஸ் இந்தியன் அப்பீல்ஸ்.
A. W. N.	....	அலஹாபாத் வீக்லி நோட்ஸ்.
Cal.	....	கல்கத்தா லா ரிப்போர்ட்ஸ்.
C. W. N.	....	கல்கத்தா வீக்லி நோட்ஸ்.
I. C.	....	இந்தியன் கேஸஸ்.
Patna.	....	பாட்னா லா ரிப்போர்ட்ஸ்.
B. L. R	....	பாம்பே லா ரிப்போர்ட்டர்.
Bom.	....	பாம்பே லா ரிப்போர்ட்ஸ்.
A. I. R.	....	ஆல் இந்தியா ரிப்போர்ட்டர்.
P. C.	....	பிரிவிகௌன்சில்.
B. H. C. R.	....	பாம்பே ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்ஸ்.
M. H. C. R.	....	மதராஸ் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்ஸ்
Rang.	....	ரங்கோன் லா ரிப்போர்ட்ஸ்.
Weir.	....	வீயர்ஸ் கிரிமினல் ரூலிங்ஸ்.

அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை, திருவல்லூர்.

இப்புத்தகத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் கேஸுகளும் பார்ட்டிகளின் பெயரும்.

பார்ட்டிகளின் பெயர்.		பக்கம்.
அருணாசலம் செட்டியார் vs. நாமக்கல் யூனியன் போர்டு ப்ரெஸிடெண்டு	....	270
அச்சய்யா vs. ஏலூர் முனிஸிபல் கௌன்ஸில்	....	348
அண்ணாஜி vs. சுப்ரமணியன்	....	509
அரசர் vs. லாங்ஹாரன்	....	538
அய்பாதுரை முதலியார் vs. மங்கள கௌண்டர்	....	129, 438
அம்பிகசாரன் மஜும்தார் vs சடேஷ்சந்திரசேன்	...	242, 510
ஆண்டியப்பன் vs. முத்துவீர செட்டி	...	343
ஆறுமுக செட்டியார் vs. சென்னை கார்பொரேஷன் ப்ரெஸிடெண்டு	...	611
இந்தியா செக்ரெடரி ஆப் ஸ்டேட் vs. முருகேசமுதலியார்	...	141
இந்தியா செக்ரெடரி ஆப் ஸ்டேட் vs. வெங்கடேசலுநாயுடு	..	182
இந்தியா மந்திரி அவர்கள் தஞ்சாவூர் கலெக்டர் துவாரா vs. C. R. சுப்ரமண்ய அய்யர்	....	224
இந்தியா செக்ரெடரி ஆப் ஸ்டேட் vs. அக்பர் ஆலி	....	225
இந்தியா மஹாராணி vs. குஜ்ரியா	....	346
இந்தியா மஹாராணி vs. எல்லம்மாள்	....	390
இந்தியா மஹாராணி vs. வீரம்மாள்	....	460
இந்தியா சக்ரவர்த்தி vs. மாயாண்டி கோனன்	....	410
ஏகாம்பர நாய்க்கர் vs. சென்னைகார்பொரேஷன் கமிஷனர்	....	93, 177,191
கடலூர் முனிஸிபல் கௌன்ஸில் vs. கிருஷ்ண நம்பியார்	....	522
கடலூர் முனிஸிபல் கௌன்ஸில் vs. சுப்பிரமணிய அய்யர்	....	539
கண்ணனூர் முனிஸிபல் கௌன்ஸில் vs. புத்தியவலப்பில் குனியல் ஆனந்தன்	....	611

பார்ட்டிகளின் பெயர்.		பக்கம்
K.J & C. கம்பெனி vs. விஜயநகரம் முனிஸிபல்கௌன்சில்		242
கர்னூல் முனிஸிபல் கௌன்ஸில் vs. சுப்பண்ண செட்டி	....	510
கருப்பண்ண நாடான் vs. மதுரை முனிஸிபாலிடி	....	349
கள்ளபெருமாள் நாயுடு விஷயமாக	....	502
கல்கத்தா கார்ப்பொரேஷன் vs. இமாம் துல்ஹக்	....	349
கன்னையா கம்பெனி, C. vs. கள்ளப்பெருமாள் நாயுடு	....	380
காக்கினடா முனிஸிபல் கௌன்ஸில் vs. கிளான் லயன் ஸ்டீமர்ஸ்	....	269
காளிதாஸ் vs. தக்கோர் டவுன் முனிஸிபாலிடி	....	536
கிருஷ்ணமூர்த்தி அய்யர், vs. மாயவரம் தாலூக்கா போர்டு	..	512
குண்டாரெட்டி மல்லா நாயுடு vs. குண்டா செட்டி குருவய்யநாயுடு	....	261
குந்தபூர் தாலூக்கா போர்டு vs. லக்ஷ்மி நாராயணன்	....	383
கும்பகோணம் முனிஸிபல்கௌன்ஸில் vs. தென்னிந்தியா ரெயில்வே கம்பெனி	....	574
கேசவலு நாய்க்கர் vs. சென்னை கார்ப்பொரேஷன்	....	611
கொச்சி முனிஸிபல் கௌன்ஸில் vs. பாபுதேவுஸ்ஸி	....	510
கோபால் நாராயணன் குல்கார்னி vs. ஷண்முகப்ப	....	127, 129,538
கோபாலசாமி நாதய்யன் விஷயமாக	....	228
கோவிந்த செட்டி vs. இந்தியா சக்ரவர்த்தி	....	313
கோவிந்தப்பிள்ளை vs. கும்பகோணம் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு	....	509
சகாராம் vs. கலியான் முனிஸிபல் சேர்மென்	....	481
சடகோபாச்சாரியார் vs. ராமராவ்	....	343
சத்திய நாராயண விஷயமாக	....	415
சிதம்பரம் முனிஸிபல்கௌன்ஸில் vs. சுப்பிரமண்ய அய்யர்	...	82, 409
சிதம்பரம் முனிஸிபல் கௌன்ஸில் vs. திருநாராயண அய்யங்கார்	...	459,476, 477,492
சிவராம முதலியார் vs. முத்தண்ண அய்யங்கார்	....	380, 481

பார்ட்டிகளின் பெயர்.	பக்கம்
சிவகெங்கை தாலூக்கா போர்டு vs. நாராயணன்	 509
சிவசங்கரம் பிள்ளை T., vs. இந்தியா சக்ரவர்த்தி	.... 82, 96, 99, 335, 536
சுப்பிரமணியசெட்டி vs. குடியாத்தம் முனிஸிபல்கௌன்சில்	176
சுப்ரமண்யம் vs. சென்னை முனிஸிபல் கார்ப்பொரேஷன்	 270
சுப்பிரமணியம் vs. சோமசுந்தரம்	 257
சுப்பா நாயுடு vs. ஸ்ரீனிவாசாச்சாரியலு	 537
சுப்பராய கவுண்டன் vs. முத்துகுமாரசாமி கவுண்டன்	197,205
சுந்தரேஸ்வர ஸ்ரௌத்திகள் விஷயமாக	 344
சுன்னிலால் vs. ராமகிருஷ்ணன்	 345
செக்ரிடெரி ஆப் ஸ்டேட் vs. முருகேச முதலியார்	 118
செக்ரிடெரி ஆப்ஸ்டேட் vs. தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்போர்டு	 83
சேஷய்யப்ப நாடார் vs. மதுரை டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டு	 495
சேவுக பாண்டிய தேவர் vs. ஸ்ரீராம தேசிகம் அப்பங்கார்	..192,193
சென்னை கார்ப்பரேஷன் vs. அப்பாசாமிப் பிள்ளை	 493
சென்னை கார்ப்பரேஷன் vs. மஸ்தான் சாயபு	 403
சேஷாசலம் செட்டி vs இந்தியா சக்ரவர்த்தி	 610
சோமுப் பிள்ளை vs. மாயவரம் முனிசிபல் கௌன்சில்	383,476
தணிகாசலம் செட்டியார் விஷயமாக	 537
தர்பயில் ஆமெத் vs. மகாராஜா சக்ரவர்த்தி	 350
தாகூர்லால் vs. கண்டுவா முனிஸிபாலிடி	 350
திண்டுக்கல் முனிஸிபல் கௌன்சில் vs. பம்பாய் கம்பெனி	 242
திரவியம் பிள்ளை vs. க்ரூஸ் பெர்ணாண்டஸ்	 554
திருக்குரங்குடி பூனியன் போர்டு ப்ரெஸிடென்டு vs. நாராயண நாடார்	 276
திருப்பதி மகந்து vs. ரிலிஜஸ் எண்டௌமெண்டு போர்டு	 510
தும்பட்டி கோடய்யா vs. நரசாவு பேட்டை தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு	185,193
தூவாரகாசாரியலு vs. கோட்டபல்லி ஸ்ரீகிருஷ்ணன்	 545
தூத்துக்குடி முனிஸிபல் கௌன்சில் vs. ஷண்முக மூப்பனார்	611
தென்கனரா டிஸ்டிரிக்ட் போர்டு vs. கோபாலகிருஷ்ணை	... 117

பார்ட்டிகளின் பெயர்.		பக்கம்.
தேவசிகாமணி vs. சேதுரத்தினம் அய்யர்	....	133, 201, 206
தேவகோட்டை யூனியன் போர்டு ப்ரெஸிடென்டு vs. A. L. A. R. R. M. அருணாசலம் செட்டியார்	...	212
நடேச முதலி P., விஷயமாக	....	415
நரசிம்மாசாரியலு vs. லாட் கோவிந்ததாஸ்	....	260
நாராயண கிருஷ்ணசேன் vs. கல்கத்தா கார்ப்பரேஷன்	....	349
நாராயண அய்யர் vs. சுப்பிரமணியம் செட்டி	....	356
நெல்லூர் முனிஸிபல் கௌன்ஸில் சேர்மென் vs. சுப்பைய்ய		479
நைனா மகம்மத் லாய்டு விஷயமாக	....	411
பம்பாய் முனிஸிபல் கார்ப்பரேஷன் vs. ரஞ்சோடாஸ்	....	225
பந்தர் காலுங்கா போர்டு vs. மல்லிகார்ச்சுன நாயுடு	....	309, 330
பழனிசாமிப் பிள்ளை vs. ஸ்ரீனிவாஸ ரங்காச்சாரி	....	177
பழனியப்ப செட்டியார் vs. கிருஷ்ணசாமி செட்டியார்		117, 228, 465
பாண்டிய மகர் விஷயமாக	....	315
பார்த்தசாரதி நாயுடு vs. கலேஸ்வரராவ்	....	206
பப்ளிக் ப்ராஸிக்யூடர் vs. பழனியாண்டி நாயகன்	....	350
பப்ளிக் ப்ராஸிக்யூடர் vs. காளிய பெருமாள் நாய்க்கர்	....	383
பப்ளிக் ப்ராஸிக்யூடர் vs. வரதராஜலு நாயுடு	....	457, 502
பப்ளிக் ப்ராஸிக்யூடர் vs. கோவிந்தப் பிள்ளை	....	479, 610
பப்ளிக் ப்ராஸிக்யூடர் vs. ஸையத் ஆதி குட்டி	...	610
பப்ளிக் ப்ராஸிக்யூடர் vs. பார்த்தாமியான் சாயபு	...	610
பஞ்சேரி vs. பெங்கால் பெயின்ட் வார்னிஷ் கம்பெனி	....	410
பரமக்குடி யூனியன் போர்டு ப்ரெஸிடென்டு vs. செல்லசாமி தேவர்	....	460
பனுசந்து vs. அஹமதாபாத் முனிஸிபாலிடி	...	509
பம்பாய் கம்பெனி vs. திண்டுக்கல் முனிஸிபல் கௌன்ஸில்		523
பனர்ஸிதாஸ் vs அமரோஹா முனிஸிபாலிடி	....	349
பழனி தச்சன் விஷயமாக	...	351

பார்ட்டிகளின் பெயர்.		பக்கம்.
பான் குமாரசந்து vs. ஆரா முனிஸிபாலிடி	....	349
பாஸ்ஸையய்ய கருடையய்ய தண்டுவதி vs. முருகையய்ய சோமையய்ய தங்கின்	....	127
பிரதிவிசிங் vs. கோர்ட் ஆப் வார்ட்ஸ்	....	548
பிள்ள ராமசாமி vs. தடே பள்ளிக்கூடம் காலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு	....	353, 458, 498
பிஷர் vs. ட்விக்	....	577
பீபின்சந்திராபிஸ்வாஸ் vs. கல்கத்தா கார்ப்பரேஷன்	...	523
புச்சையா vs. இந்தியா செக்ரிடெரி ஆப் ஸ்டேட்	....	509
பெனரிஸ் முனிஸிபல் கௌன்சில் vs. நரசிங்கதத்பாண்டே		523
பேட்ஸ், C. E., vs. பெல்லாரி முனிஸிபல் கமிஷனர்கள்	...	248
மதார் சாயபு விஷயமாக	....	484, 583
மரீது கோபய்யா விஷயமாக	....	480, 497
மங்களூர் முனிஸிபல் கௌன்சில் vs. கோடியல்பெயில் பிரஸ்	....	270
மங்கள கவுண்டர் vs. அய்யாதுரை முதலியார்	...	193
மதராஸ் ரெயில்வே கம்பெனி விஷயமாக	...	493
மதுரை தேவஸ்தானம் vs. சுந்தர அண்ணவி	....	236
மரியப்பிள்ளை vs. முத்துவேலு பண்டாரம்	....	201
மஹாராஜா சக்கிரவர்த்தி vs. கண்ணு	....	360
மஹாராணி vs. திருவேங்கிட முதலி	...	228
மஹாராணி vs. ராமசாமி	...	228
மஹாராணி vs. ராஜய்யா	...	390
மஹாராணி vs. அய்யாகண்ணு முதலி	...	399
மாயவரம் லோகல் பண்டு ஓவர்ஸியர் vs. பக்கிரிசாமி தேவன்		374, 377
மாய்கிருஷ்ணகோன் vs. குலசேகர முதலியார்	...	191
முத்து வீரப்ப பிள்ளை K. T., vs. மேலூர் ரெஜினியூ டிவிஷனல் ஆபீஸர்	...	224
முத்துராமலிங்கசேதுபதி vs. மஹாலிங்கராஜு	...	261

பார்ட்டிகளின் பெயர்.	பக்கம்.
முத்துபாலுசெட்டி vs. மதுரை முனிஸிபாலிட்டி	410, 414, 479
முருகப்ப ஆச்சாரி விஷயமாக	350
மேர்வஞ்சி மேஸ்திரி vs. இந்தியா சக்ரவர்த்தி	459
மொஹையப்ப கௌண்டன் விஷயமாக	363, 457
யமுனாதேவி vs. ஸ்ரீ காகுளம் காலாக்கா போர்டு	523, 576
ரஹீம் சாயபு விஷயமாக	458, 497
ரஜாக், M. A. விஷயமாக	415
ரங்காச்சாரியார் vs. கும்பகோணம் முனிஸிபாலிட்டி	509
ரங்கோன் முனிஸிபாலிட்டி vs. சூரட்டி பாராபஜார் கம்பெனி	118, 482
ராகவாசாரியார் vs. திருவள்ளூர் யூனியன் போர்டு	355, 494
ராமசந்திரய்யா vs. இந்தியா சக்ரவர்த்தி	228
ராமநாராயணன் vs. ஏகாதசி	344
ராமச்சந்திர செட்டி விஷயமாக	501
ராமச்சந்திரன் சேர்வை vs. காரைக்குடி யூனியன் போர்டு	369, 352
ராமராவ் vs. மார்த்தா செக்வாரி	510
ராமய்யா vs. ராமய்யா	457
ராம்சாரன் vs. லக்னோ இம்புரூவ்மெண்டு டிரஸ்டு	494
ராம்பிரதாப்லால் vs. பாரா முனிஸிபாலிட்டி	494
ராஜமஹேந்திரவரம் முனிஸிபல் கௌன்சில் vs. பிரசாதராயடு	241, 249, 523
ராஜாராவ் vs. ராமசாமி	511
ராஜாபாதர் முதலியார் vs. விஸ்வநாத செட்டியார், அர்க்கோணம்	537
ரோடக் முனிஸிபல் கமிட்டி vs. நூர்மஹம்மது	351
லக்ஷ்மி நரசம்ம vs. மசூலிப்பட்டணம் முனிஸிபல் கௌன்சில்	355

பார்ட்டிகளின் பெயர்.	பக்கம்.
லால்சிங் vs. ஆரா முனிஸிபாலிட்டி ...	485
வடுகு குமார நாடார் விஷயமாக	355
வாசுதேவாச்சாரியா vs. ஷோலாப்பூர் முனிஸிபல் சேர்மென்	482
விபூதப் பிரியா vs. ஈஸப் சாயபு	343
வாமன் தத்யாஜி vs. ஷோலாப்பூர் முனிஸிபாலிடி ...	296
விருதுபட்டி முனிஸிபல் சேர்மென் vs. சரவணப் பிள்ளை ...	523
வீரப்ப செட்டியார் vs. பழனி முனிஸிபல் கௌன்ஸில் ...	181
வீராகவாச்சாரியார் vs. இந்தியா செக்ரெடரி ஆப் ஸ்டேட்	225, 299
வீராகவலு விஷயமாக ...	577
வெங்கட சுப்பாவ் vs. ரேப்பல்லி தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு ...	106
வெங்கட்ராமையர் vs. அமீத் சுல்தான் மரக்காயர் ...	135
வெங்கடப்பா vs. ராமிசெட்டி ...	261
வேலன் vs. சுப்பையன்	343
ஜெகன்னாதா vs. அப்பாசாமி	261
ஜெகன்னயகலு vs. நந்தி கிராமம், மானேஜர்	261
ஜென்னிங்ஸ் vs. சென்னை முனிஸிபல் கார்ப்பரேஷன் ...	269, 270
ஷம்சுதீன் அலீம் சாயபு vs. திருவாலூர் முனிஸிபல் கௌன்ஸில் ...	574
ஷாரப் வீரப்ப vs. நவாப் ஷியவுல் முல்க்	375
ஷெப்பர்டு vs. பம்பாய் போர்ட் டிரஸ்டு	242, 296
ஸ்மித் விஷயமாக A. F.	415
ஹரிச்சந்திரதேவு vs. கஞ்சம் டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டு	260
ஹனுமாணையா vs. அனந்தபுரம் முனிஸிபல் சேர்மென்	355
ஹாஜி இஸ்மால் சேட் vs. பம்பாய் முனிஸிபல் கமிஷனர்	481
ஹோஸ்பேட் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு vs. சந்திரப்பா	191
ஸ்ரீரங்கம் முனிஸிபல் கௌன்ஸில் vs. அனந்த சுப்பிரமண்ய ஐயர்	176, 185

அகில இந்தியா லா ஜர்னலில் உள்ள கேஸிகளின் பக்கங்கள், பக்கம்.

1. (1929) அகில இந்தியா லா ஜர்னல் 202 ... 192
1. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகளின் பக்கம் 1 223
1. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 94 513
1. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 60 513
1. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 46 520
1. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 84 521
1. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 85 ... 521
1. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 197 ... 398
2. (1930) அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகளின் பக்கம் 119 ... 241
2. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 1 ... 223
2. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகளின் பக்கம்-28 351
2. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகளின் பக்கம்-124.... 354
2. அகில இந்தியா லா ஜர்னல் ரிப்போர்ட்டுகள்-87 ... 356
2. அகில இந்தியா லா ஜர்னல் ரிப்போர்ட்டுகள் பக்கம்-237 369
2. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 124 456
2. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 119 477
2. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 15 ... 514
2. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 68 514
2. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 119 522
2. அகில இந்தியா லா ஜர்னல் ரிப்போர்ட்டுகள் பக்கம்-33 522
2. அகில இந்தியா லர் ஜர்னல் குறிப்புகள் பக்கம் 33 522
2. அகில இந்தியா லா ஜர்னல் குறிப்புகள் பக்கம் 148 ... 629
59. M. L. J. Notes of Recent cases page 34 118
51 .M. L. J. 265 = 1926 M.W. N. 628 = 24 L. W.606 194
51. M. L. J. 1265 = A. I. R. 928 Madras 1001 207
(1881)-1 Weir 1929 228
53. M. L. J. Short Notes page 70 249
G. O. Mis. No. 4257 L. & M. No. 1325 21-11-1925 Page 249
G. O. No. 3719 L & M. 25th August 1926 Gazette Page 33 dated 31—8—1926 .... } 494
57 M. L. J. 71 477
17 All. 293 548
51 M. L. J. Short Notes page 7 548
54 M. L. J. Short Notes page 96 611

விஷய சூசிகை.

1-ம் பாகம்.

1-ம் அத்தியாயம்.

பிடிகா விதிகள்.

சேக்.	விஷய சூசிகை.	பக்கம்.
1	பெயர்	... 65
2	சட்ட திட்டங்களின் ரத்து	... 65
3	அர்த்தம்	... 66
(1)	'ஆதித்திராவிடர்'	... 66
(1-A)	'ஆங்கில இந்தியன்'	... 66
(1-B)	'நியமிக்க'	... 66
(2)	'நேமகம்'	... 66
(3)	'கட்டிடம்'	... 66
(4)	'வண்டி'	... 67
(5)	'பார வண்டி'	... 67
(5-A)	'தற்செயலான காலி, தற்செயலான எலெக்ஷன்'	... 67
(6)	'கம்பெனி'	... 67
(7)	'டிஸ்டிரிக்ட்டு'	... 68
(7-A)	'டிஸ்டிரிக்ட்டு போர்டு'	... 68
(7-B)	'ஐரோப்பியன்'	... 68
(7-C)	'காடு'	... 69
(8)	'வீடு'	... 69
(8-A)	'இந்தியன், கிரிஸ்டியன்'	... 69
(9)	'நில சுவான்தாரர்'	... 69
(10)	'மலஜலபாதை மறைவிடம்'	... 70
(10-A)	'லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்'	... 70
(10-B)	'பிரதேச அதிகாரி'	... 70
(11)	'லோகல் போர்டு'	... 70
(12)	'லோகல் பண்ட்'	... 70

செக்.	விஷய சூசிகை.	பக்கம்.
(13)	'அசங்கியம் அல்லது சங்கடம்'	... 70
(13-A)	'சாதாரண காலி, சாதாரண எலெக்ஷன்'	... 71
(14)	'சொந்தக்காரர்'	... 71
(15)	'பல்லக்கு'	... 71
(15-A)	'பஞ்சாயத்து'	... 71
(15-B)	'பஞ்சாயத்தார்'	... 71
(16)	'நிர்ணயிக்கப்பட்ட'	... 71
(17)	'சொந்தமான பாட்டை'	... 72
(18)	'பொதுவான பாட்டை'	... 72
(19)	'வாசல்தலம் —'வசிக்க'	... 72
(19-A)	'ரெவினியூ தாலூக்கா'	... 73
(19-B)	'ரெவினியூ கிராமம்'	... 73
(20)	'சம்பளம்'	... 73
(21)	'உபநிலசுவான்தார்'	... 73
(21-A)	'தாலூக்கா'	... 74
(21-B)	'தாலூக்கா போர்டு'	... 74
(22)	'பாயக்காரி'	... 75
(23)	'கிராமம்'	... 75
(24)	'வருஷம்'	... 75

2-ம் பாகம்.

2-ம் அத்தியாயம்.

தாலூக்காக்களும், கிராமங்களும்.

4 'தாலூக்காக்கள்' ... 75
5 'கிராமங்கள்' ... 77

3-ம் அத்தியாயம்.

லோகல் போர்டுகளை அமைப்பதும் மேல்விசாரணை செய்வதும்.

6 லோகல் போர்டுகளை அமைப்பதும் அவைகள் சட்டப்படி சேர்ந்தவைகளாவதும் ... 79
7 லோகல் போர்டுகளிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியை ... 84
8 லோகல் போர்டுகளின் எல்லா அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவது ... 84

செக்.	விஷய சூசிகை.	பக்கம்.
9	லோகல் போர்டுகளில் சில ஜாதிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கப்படுதல் ...	85
10	லோகல் போர்டுகளின் அங்கத்தினரின் சங்கியை இவ்வளவென்று நிச்சயிப்பது ...	89
11	லோகல் போர்டுகளின் அங்கத்தினர்களுடைய எலெக்ஷனும், அவர்கள் இருக்கவேண்டிய கால அளவும் ...	90
11-A	ஒரு எலெக்ஷனில் யாதொரு அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அதற்கு இன்னது செய்வதென்பது ...	94
12	லோகல் போர்டுகளினுடைய ப்ரெஸிடென்டுகளும், வைஸ் ப்ரெஸிடென்டுகளும் ...	95
12-A	ஒரு எலெக்ஷனில் ப்ரெஸிடென்டாவது வைஸ் ப்ரெஸிடென்டாவது தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் இன்னது செய்ய வேண்டுமென்பது ...	96
13	[இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]	97
14	[இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]	97
15	ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு ஆகிய இவர்களுடைய உத்தியோகத்தில் காலி ...	97
16	அங்கத்தினர்களும் வைஸ்ப்ரெஸிடென்டும், ப்ரெஸிடென்டும் ராஜிநாமா செய்வது ...	98
17	காலி ஸ்தானங்களை பூர்த்தி செய்வது ...	100
18	(இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.) ...	101
19	எலெக்ஷன்களும் நியமனங்களும் பிரசித்தப்படுத்தப்பட வேண்டுமென்பது ...	101
20	எந்த அங்கத்தினரும் பிரதி பலன் பெற்றுக்கொள்ளக் கூடாதென்பது ...	102
21	நிர்வாக அதிகாரம் ப்ரெஸிடென்டினிடத்தில் இருக்குமென்பது	103
22	அவசரமான சந்தர்ப்பங்களில் ப்ரெஸிடென்டுக்குள்ள அதிகாரங்கள் ...	104
22-A	ப்ரெஸிடென்டினுடைய ஸ்தானமானது காலியாக இருக்கும் போது அதன் அலுவல்களை யார் நடத்துவது ...	106
23	ப்ரெஸிடென்டு தமது அலுவல்களை நடத்தும்படி மற்றொருவரை அதிகாரப்படுத்துவது அல்லது அவருக்கு அதிகாரங்கள் சேருவது ...	110
24	[இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]	114
25	பிரித்துக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை ப்ரெஸிடென்டின் மேல்விசாரணைக்கும் புனராலோசனைக்கும் உட்பட்டுச்செலுத்த வேண்டுமென்பது ...	114
26	தனித்தனி அங்கத்தினர்களின் பாத்தியதைகள் ...	115

செக்	விஷய சூசிகை.	பக்கம்.
27	ரெகார்டுகளை ஹாஜர்படுத்தும்படி கேட்க லோகல் போர்டாருக்குள்ள அதிகாரம்	... 118
28	லோகல் போர்டு கமிட்டிகளை ஏற்படுத்துவது	... 119
29	[இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]	... 121
30	ஜாயண்டு கமிட்டிகளை நியமிப்பது	... 121
31	லோகல் போர்டின் நடவடிக்கைகளைப்பற்றிய விதிகளும் ரெகுலேஷன்களும்	... 124
32	லோகல் போர்டு மீட்டிங்குகளில் இன்னர் சபைத்தலைமை வகிக்க வேண்டுமென்பது	... 125
33	[இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]	129
34	அங்கத்தினர் எப்போது தர்க்கத்தில் கலந்துகொள்ளக் கூடாதென்பதும் ஓட் கொடுக்கக் கூடாதென்பதும்	... 129
35	லோகல் போர்டுகளுடைய நடவடிக்கைகளில் ஒழுங்கு தப்பு இருப்பதினாலே அவை செல்லாமற் போகமாட்டாதென்பது	... 132
36	ஒவ்வொரு வருஷமும் ரிப்போர்ட்டுகளை தெரிவிப்பது	... 135
37	லோகல் போர்டுகளை, பரிசிலனையும் மேல் விசாரணையும் செய்யும் உத்தியோகஸ்தர்கள்	... 136
37-A	பரிசிலனை செய்யும் உத்தியோகஸ்தர்கள் கட்டிடங்களில் நுழையும் அதிகாரம்	... 137
37-B	லோகல் போர்டு சொத்து முதலியவற்றில் பரிசிலனை செய்யும் உத்தியோகஸ்தர்கள் பிரவேசிப்பது	... 138
37-C	லோகல் போர்டுகளிலிருந்து ரிபோர்டுகள் வரவேண்டுமென்று கேட்க அதிகாரம்	... 138
37-D	டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டுகளுக்கும், தாலூக்கா போர்டு ப்ரெஸிடெண்டுகளுக்கும் முறையே தாலூக்காபோர்டுகள் பஞ்சாயத்துகள் இவைகளின்மேலுள்ள அதிகாரம்	... 139
38	இந்த சட்டத்தின்கீழ் செய்யப்படும் யாதொரு தீர்மானத்தை நிறுத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ அதிகாரம்	... 139
39	டிஸ்டிரிக்ட் கலெக்டருக்குள்ள விசேஷ அதிகாரங்கள்	... 142
40	[இந்தப் பிரிவு எடுத்து விடப்பட்டது.]	... 143
41	லோகல் போர்டாராவது அதன் ப்ரெஸிடென்டாவது தவறிப்போகிற விஷயங்களில் நடவடிக்கை நடத்த பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்	... 143
42	தாலூக்கா போர்டுகளும் பஞ்சாயத்துகளும், அவைகளினுடைய ப்ரெஸிடென்டுகளும் தவறிப்போகும் விஷயங்களில் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டுகளும் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டுகளும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அதிகாரங்கள்	... 145

செக்.	விஷய சூசிகை.	பக்கம்.
43	லோகல் போர்டின் ப்ரெஷிடென்டு அல்லது வைஸ் ப்ரெஷிடென்டை நீக்கி விடுவதற்கு பிரதேச கவர்ன்மென்டாருக்கு உள்ள அதிகாரம்	... 146
44	லோகல் போர்டு ப்ரெஷிடென்டு அல்லது வைஸ் பிரெஷிடென்டு இவர்களிடத்தில் நம்பிக்கையில்லை என்று ப்ரேரேபணை செய்வது	... 147
45	லோகல் போர்டுகளை கலைத்து விடுவதும் மறுபடி அமைப்பதும்	... 156
45-A	பஞ்சாயத்துகளை நீக்கி வைப்பது	... 159
45-B	கலைத்துவிடப்பட்ட லோகல் போர்டினுடைய ஆஸ்திகளும், பொறுப்புகளும் இன்னொருக்குச் சேரவேண்டுமென்பது	... 162
46	லோகல் போர்டுக்காவது அது தவறுவதன் மேலாவது பிரவர்த்திக்கிற உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்களும் லோகல் பண்டின் பொறுப்பும்	... 162

4-ம் அத்தியாயம்.

லோகல் போர்டு அங்கத்தினர்களை தெரிந்தெடுப்பது.

47	டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கு அங்கத்தினர்களின் எலெக்ஷன்	... 164
48	தாலூக்கா போர்டு அங்கத்தினர்களின் எலெக்ஷன்	... 170
49	பஞ்சாயத்து அங்கத்தினர்களின் எலெக்ஷன்	... 171
50	[இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]	... 173
51	தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவை பிரசுரிப்பது	... 174
52	ரெஜிஸ்தர் செய்துக்கொள்வதற்குப் பொதுவான யோக்கியதாம்சங்கள்	... 179
53	ஓட்டர்களின் யோக்கியதாம்சக் குறைவுகள்	... 181
54	எலெக்ஷனுக்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள்	... 183
55	தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்கு அபேக்ஷகர்களின் யோக்கியதைக்குறைவுகள்	... 186
56	அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவுகள்	... 194
57	அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவைப் பற்றிய பிரச்னைகளைக் குறித்து டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் தீர்மானிப்பது	... 202
58	எலெக்ஷன் சம்பந்தமான ரகசியத்தை வெளியிடுவது	... 207
59	எலெக்ஷன் சம்பந்தமான குற்றங்களுக்காக குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்ட நபர்கள் வோட் கொடுப்பதற்கும் தெரிந்தெடுக்கப்படுவதற்கும் தகுதியற்றவர்களாவார்களென்பது	... 208

செக். விஷய சூசிகை பக்கம்.

5-ம் அத்தியாயம்.

சொந்த விஷயமாயும் சிப்பந்தி விஷயமாயும் லோகல் போர்டுகளுக்குள்ள அதிகாரங்கள்.

60 பொதுவான பாட்டைகளும் அவைகளைச் சேர்ந்தவைகளும் லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிப்பது ... 209
61 சேர்க்கப்பட்ட சாக்கடைத் தண்ணீர் முதலியது லோகல் போர்டாருடையதாவது ... 213
62 அசையாப்பொருளை ஒரு லோகல் போர்டாரிடமிருந்து மற்றொரு லோகல் போர்டாருக்கு ட்ரான்ஸ்பர் செய்வது ... 214
63 சென்னப்பட்டணத்து 1817-ம் வருஷத்திய 7-வது ரெகுலேஷன் படி தர்ம சம்பந்தமான மானியங்களையும் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட தர்ம சம்பந்தமான இனங்களையும் லோகல் போர்டுகளுக்கு மாற்ற அதிகாரம் ... 214
64 சொத்தை டிரஸ்டில் வைத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளும் அதிகாரத்தைப் பற்றிய வரையறை ... 216
65 பஞ்சாயத்துக்கு ஸ்தாபனங்களையும் வேலைகள் முதலியவைகளையும் மாற்றிவிடுதல் ... 217
65-A கிராம காடுகளை பஞ்சாயத்துக்கு மாற்றிவிடுவது ... 218
65-B பஞ்சாயத்துகளுக்கு ஜலாலான் விஷயமாகவுள்ள அலுவல்களை மாற்றிவிடுவது ... 219
65-C லோகல் போர்டுகளினுடைய அலுவல்களை அதிகரிக்கச் செய்வதற்கு கவர்ன்மென்டாருடைய அதிகாரம் ... 219
66 லோகல் போர்டுகளுக்கு வேண்டியிருக்கும் அசையாப்பொருளை நிலமெடுத்துக் கொள்வதற்கான 1894-ம் ஷுத்திய ஆக்டின்படி எடுத்துக்கொள்ளலாமென்பது ... 220
67 லோகல் போர்டினுடைய உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் ... 226
68 டிஸ்டிரிக்ட்டு என்ஜினீயர், சுகாதார ஆபீசர், பஞ்சாயத்து ஆபீசர். 228
69 ஷை மூன்று உத்தியோகங்களையும் பூர்த்திசெய்வது ... 230
70 டிஸ்டிரிக்ட்டு இன்ஜினீயர், ஹெல்த் ஆபீஸர், பஞ்சாயத்து ஆபீஸர் இவர்களைத்தவிர மற்ற உத்தியோகங்கள் பூர்த்தி செய்யப்படுவது ... 231
71 ஊழிய சம்பந்தமான ரெகுலேஷன்களை ஏற்படுத்த டிஸ்டிரிக்ட்டு போர்டாருக்குள்ள அதிகாரம் ... 233
72 லோகல் போர்டு உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களை கண்டிக்க அதிகாரம் ... 234
73 லோகல் போர்டுகளினுடைய உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் ராஜா கொடுக்கும் அதிகாரம் ... 237

செக். விஷய சூசிகை. பக்கம்.

74. லோகல் போர்டாரால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர்கள் ... 237

74-A லோகல் போர்டுகளினுடைய ஊழியத்திலுள்ள உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர்களே பிரதேச ஊழியத்தில் சேர்ப்பது ... 238

3-பாகம்.

6-ம் அத்தியாயம்.

தீரவிய விஷயம்.

வரி விதிப்பது.

74-B லாண்டுலெவ்ஸ் வரி ... 243

75 வரிகளும், சுங்கங்களும் ... 243

76 யாத்திரைக்காரர்களுக்கு வரி ... 246

77 வரிகளேயும், சுங்கங்களேயும் விதிக்கும் விஷயமாக நிர்மானமும், அதிக்கையும் ... 247

78 லாண்டுசெஸ் என்னும் வரி ... 249

79 நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பை இன்னபடி நிர்ணயிப்பது ... 250

80 சில நில சுவான்தாரர்களும் அவர்களின்கீழ் நிலத்தை பெற்றிருப்பவர்களும் தங்களுடைய நிலங்களின் ஜாபிதாவை டிஸ்டிரிக்ட்டு கலெக்டருக்கு கொடுக்கவேண்டுமென்பது ... 252

81 நில சுவான்தாரர் ஜாபிதாப்படி டிஸ்டிரிக்ட்டு கலெக்டர் வரி போடுவது ... 254

82 அப்படிப்பட்ட ஜாப்தாக்களே கொடுக்கத் தவறுவதினுல் ஏற்படும் அபராதம் ... 255

83 வருஷவாரி வாடகை மதிப்பை டிஸ்டிரிக்ட் கலெக்டர் நிச்சயிக்க லாமென்பது ... 256

84 நபர்களே சம்மனனுப்பி வரவழைக்க டிஸ்டிரிக்ட் கலெக்டருக்குள்ள அதிகாரம் ... 256

85 ஜாபிதா திருப்திகரமாயில்லாவிட்டால் அதை டிஸ்டிரிக்ட் கலெக்டர் திருத்துவது ... 257

86 ரெவினியூ போர்டாருக்கு அப்பீல் ... 258

87 ரயத்வாரி நிலங்களின் பட்டாக்களிலே லாண்ட் லெஸ்லை பதிவு செய்வது ... 258

88 நிலசுவான்தாரர்களாலும், உபநில சுவான்தாரர்களாலும் லாண்டு லெவ் கொடுப்பது ... 258

89 நிலத்துக்குடையவர்களுக்குள்ள அதிகாரங்கள் ... 261

செக் விஷய சூசிகை. பக்கம்.

90 கவர்ன்மென்டாருக்குச் செலுத்தத்தக்க நிலையாய் பைசலாதி, யாகிய தீர்வைத் தொகை விஷயத்தில் லாண்ட்லெஸ் என்னும் வரியை வஜா செய்வது ... 262
91 செஸ் என்னும் வரி பாக்கியை வசூலிப்பது ... 263
92 [இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.] ... 264

தொழில் வரி.

93 தொழில் வரி ... 264
94 பரம்கள் (firms) கூட்டங்கள், ஹிந்து ஏக குடும்பங்கள் இவை களின் அங்கத்தினர்கள் தொழில்வரிக் குள்ளாவது ... 272
94-A ஊழியர்கள் அல்லது ஏஜெண்டுகள்தொழில்வரிக்கு உள்படுவது 272
95 தொழில்வரி கிராமத்திற்கு சேரவேண்டுமென்பது ... 273
96 தொழில்வரி செலுத்தத் தவறினால் நோட்டீஸ் கொடுக்கப்படுவது. 274
96-A ஸ்டேட்மென்டுகளும், தவணை கணக்குகளும் அந்தரங்கமாக இருக்கவேண்டுமென்பது ... 274
97 வரிக்குள்ளானவர்களைக் குறித்து ஜாபிதா அனுப்பும்படி சொந் தக்காரருக்காவது அனுபோகதாரருக்காவது நோட்டீஸ் கொ டுப்பது ... 275
98 வீட்டுவரி ... 275
99 பொது நிவாரணைகள் ... 277
100 வீட்டுவரி எப்பொழுது செலுத்தப்படுவது ... 278
101 காலியாயிருக்கும் வீடுகளுக்காக வரிவஜா ... 279
101-A வீடுகளை பராதீனம் செய்பவரும் செய்துகொள்பவரும், பரா தீன விஷயமாய் நோட்டீஸ் கொடுக்கவேண்டிய கடமை ... 280
102 கட்டிடம் கட்டப்படுவதைப்பற்றியும் புதுப்பிக்கப்படுவதைப்பற்றி யும் அல்லது இடித்து விடுவதைப்பற்றியும் சொந்தக்காரர் நோட்டீஸ் கொடுக்கவேண்டிய கடமை ... 282
102-A ஒரு அரைவருஷத்தின் நடுவில் சேர்க்கப்பட்ட அல்லது விலக் கப்பட்ட விஸ்தீரணங்களில் வரி கழித்துக்கொடுப்பது ... 284
103 வருமை காரணமாக வரி நிவாரணை ... 286
104-முதல் 109-வரை 1931-ம் ஜூ மார்ச்சுமீ 4உ கூடிய சென்னை சட்ட நிரூபண சபையாரால் எடுத்து விடப்பட்டது.
110 யாத்திரைக்காரர்களுக்கு வரி விதிப்பது ... 292

வரிகளை அல்லது சுங்கங்களை கொடுப்பதிலிருந்து நிவாரணை செய்வதும், விட்டுவிடுவதும்.

111 வரிகள் அல்லது சுங்கங்கள் செலுத்துவதினின்றும், நிவாரணை செய்ய அதிகாரம் ... 295
111-A வகைப்பெறப்பட முடியாத வரிகளையும், சுங்கங்களையும் விட்டு விடுவதற்கு அதிகாரம் ... 295

செக்.	விஷய சூசிகை.	பக்கம்

7-ம் அத்தியாயம்.

திரவிய விஷயத்திற்கு சம்பந்தப்பட்ட பொதுவான நிபந்தனைகள்.

112 லோகல் பண்டுகளை இன்ன காரியங்களுக்கு உபயோகிக்கலா மென்பது ... 296
113 ரெயில்வேக்கள், டிராம்வேக்கள் முதலியவைகளை ஏற்படுத்தி பரா மரித்து வருவது ... 299
114 டிஸ்டிரிக்ட்டு, தாலூக்கா, பஞ்சாயத்து பண்டுகளை ஏற்படுத்துவது. 301
114-A கிராம அபிவிருத்தி நிதி ... 301
115 வெவ்வேறு வகுப்புகளைச்சேர்ந்த லோகல் பண்டுகளின் வரவுகளும் செலவுகளும் ... 303
116 பட்ஜெட்டுகளை தயார்செய்வதும், ஜாரி செய்வதும் ... 304
117 ஒன்றுய்ச் சேர்க்கப்பட்ட பட்ஜெட்டை கவர்ன்மென்டாருக்கு அனுப்புவதும், அவர்களுடைய மேல்விசாரணை அதிகாரமும் ... 305
118 பட்ஜெட்டுகளுக்கு தேதிகளை நிஷ்கரிஷை செய்வது ... 306
119 திருத்தப்பட்ட அல்லது உடன்சேர்க்கையான பட்ஜட்டு ... 306
120 கணக்குகளுக்காக ஆடிட்டர்களை தணிக்கை உத்தியோகஸ்தர்களை) நியமிப்பது ... 306
121 இதர பிரதேச அதிகார சபையார் செய்யும் செலவுக்காக தொகை கள் செலுத்துவது ... 306
121-A லோகல் கவர்ன்மென்டால் கொடுக்கப்பட்டிருக்கும் கடன் தொகைகளையும் அட்வான்ஸ்களையும் வசூலிப்பது ... 307

4-ம் பாகம்.

பொதுஜன தேகாரோக்கியமும் க்ஷேமமும் வாதிப்பும்.

8-ம் அத்தியாயம்.

பொதுஜன தேகாரோக்கியம்.

ஒருவருக்கே சொந்தமானதும், பொதுவானதுமான குளங்கள் அல்லது கிணறுகள்.

122 கிணறு முதலியவற்றை மூடிவிடுவதும், சுத்திபண்ணுவதும் ... 308
123 அசங்கியம் அல்லது சங்கடத்தையாவது பொதுஜன சுகத்திற்கு அபாயத்தையாவது உண்டாகத்தக்க சிறு குட்டைகள் முதலிய வைகளை தூர்த்துவிடுவது ... 310

செக். விஷய சூசிகை. பக்கம்.

124 பொதுவான குளங்கள் முதலியவைகளை சிலகாரியங்களுக்கென்று பிரத்தியேகப்படுத்தி வைக்கலாமென்பது ... 312
125 அந்தப்படி பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கிற இடங்களை பிரசித்தஞ் செய்யப்பட்ட காரியங்களல்லாத வேறே காரியங்களுக்கு உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பது ... 313
126 பஞ்சாயத்துகளால், கிணறுகளும் குளங்கள் வகையருக்களும், பாதுகாக்கப்படுவது ... 315

குப்பை - கூளம் முதலியவை வாருவது.

127 சொந்த மலஜலபாதை மறைவிடங்கள் முதலியவைகளை சுத்தி செய்வது ... 315
128 யாத்திரை ஸ்தலங்களின்மேல் அதிகாரமுள்ள நபர்களிடமிருந்து உபகாரத் தொகைகளைப் பெறுவது ... 316
129 அசுத்தங்கள் வெளியில்வந்து விழுவொட்டாமல் தடுப்பது ... 317

பிரைவேட் சாக்கடைகள்.

129-A பிரைவேட் சாக்கடைகளைக் கட்டும்படிக்கும், எடுத்துவிடும்படிக்கும் கேட்பதற்கு அதிகாரம் ... 317

அபாயகரமான வியாதிகள்.

130 "அபாயகரமான வியாதி" என்பதன் அர்த்தம் ... 318
131 சந்தேகத்துக்கிடமான இடங்களில் பிரவேசிக்க அதிகாரமும், கட்டிடங்களினின்றும், வஸ்துக்களினின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவது ... 318
132 இன்ன இடங்களில் சுத்தி செய்யவேண்டுமென்றும், தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கவேண்டுமென்றும் ப்ரெஸிடென்டு விளம்பரம் பிரசுரிக்கவேண்டுமென்பது ... 319
133 தொத்துவியாதி சம்பந்தத்துக்கு உட்பட்ட நபர் தொழில் நடத்தக் கூடாதென்று தடுப்பது ... 320
134 அபாயகரமான வியாதிகள் கண்டிருக்கிறவர்களும், பொதுவான வண்டி முதலியவைகளும் .. 320
135 பொதுஜனங்கள் வேடிக்கைக்காக கூடும் இடங்களை மூடிவிடும்படி உத்தரவு செய்ய அதிகாரம் ... 322
136 அபாயகரமான வியாதி கண்டிருக்கும் மைனர் (வயது வராதவர்) பாடசாலைக்கு போகக்கூடாதென்பது ... 322

வைசூரி.

137 அம்மை குத்திக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திப்பது ... 323
138 வைசூரியைக் குறித்து சங்கதி தெரிவிக்க கடமைப்பட்டிருப்பது.. 323
139 வைசூரிக்காக மருந்துகுத்திக்கொள்ளக் கூடாதென்றுதடுப்பது... 324

செக். விஷய சூசிகை. பக்கம்.

பிரேதங்களை ஒருவகை செய்வது.

140 புதைப்பதற்கும், தகனஞ் செல்வதற்குமான இடங்களை ரிஜிஸ்தர் செய்வது ... 324
141 பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான இடங்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது ... 325
142 புதைப்பதற்கும், தகனம் செய்வதற்குமான இடங்களையும், பிரேதங்களை தகிப்பதற்கான உலைக்கூடங்களையும் ஏற்படுத்துவது ... 326
143 அந்தப்படி ரெஜிஸ்தர் செய்யப்பட்டாவது, லைசென்ஸ் கொடுக்கப்பட்டாவது, ஏற்படுத்தப்பட்டாவது இருக்கிற இடங்களைக்குறித்து ஒரு புஸ்தகம் வைக்கவேண்டுமென்பது ... 326
144 அனுமதி கொடுக்கப்பட்டிராத இடங்களில் (பிரேதத்தைப்) புதைக்கக் கூடாதென்றுவது, தகனம் செய்யக்கூடாதென்றுவது தடுப்பது ... 327
145 பிரேதங்களை புதைப்பது முதலியவைகளைப்பற்றி லோகல் போர்டாருக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்பது ... 327
146 தேகாரோக்கியத்துக்கு அபாயகரமான அல்லது அமிதமாய் பிரேதக் குழிகள் நிறைந்துள்ள புதைக்குமிடங்களையும், தகனம் செய்யும் இடங்களையும் உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பது ... 328

9-வது அத்தியாயம்.

அபாயகரமான கட்டுக் கோப்புகளும், மரங்களும், இடங்களும்.

147 அபாயகரமான கட்டுக்கோப்புகளின் விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் ... 329
148 அபாயகரமான மரங்கள் விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் ... 331
149 கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு அடைப்பு அடைத்து வைப்பதும், வேலிகளையும், மரங்களையும், தரிப்பதும் ... 332
150 அபாயகரமான குளங்கள், கிணறுகள், குழிகள் முதலியவை விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் ... 333
151 பொதுவான பாட்டைக்குச் சமீபமாய் கல்வெட்டி எடுப்பது முதலியவைகளுக்காக லைசென்ஸ் பெறவேண்டு மென்பது ... 334
152 [இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.] ... 336
153 யூனியன் வில்தீரணங்களிலுள்ள நிலங்களிலிருந்தும், கட்டிடங்களிலிருந்தும் அசுத்தங்களை அல்லது தீங்கு உண்டாக்கத்தக்க புல் பூண்டுகளை அப்புறப்படுத்துவது ... 336
154 திரிந்துக்கொண்டிருக்கும் பன்றிகளையும், நாய்களையும் கொன்று விடுவதற்கு அதிகாரம் ... 338

செக். விஷய சூசிகை. பக்கம்.

155 அழித்துவிடப்பட்ட அபாயகரமான கட்டுக்கோப்பு முதலியவை களின் சாமான்களை உபயோகிக்க அல்லது விற்க ப்ரெஸிடென் டுக்குள்ள அதிகாரம் ... 339
156 ப்ரதிபலன் விஷயமான வரையறை ... 340

10-ம் அத்தியாயம்.

பொதுவான பாதைகள்.

157 பொதுவான பாட்டைகளிலாவது பாட்டைகளின் மேலாகவாவது தடங்கல்கள் உண்டாகக்கூடாதென்று தடுப்பது ... 341
157-A பொதுவான பாட்டைகள் வழியாய் எல்லோரும் போகலா மென்பது ... 342
158 கதவுகள், அடித்தரை ஜன்னல்கள், கிராதிக்கதவுகள் முதலியவை கள் வெளிப்புரமாய் திறக்கக்கூடாதென்று தடுப்பதும், அவை களைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதும் ... 345
159 ஆக்ரமிப்புகளை எடுத்துவிடுவது ... 346
160 சில பிதுக்கங்களுக்கும் கட்டு கோப்புகளுக்கும் உத்தரவு கொடுக்க அதிகாரம் ... 357
161 ஜலதாரை, சாக்கடைக்கால் முதலியவைகளின்மேல் அனுமதியில் லாமல் கட்டடம் கட்டக்கூடாதென்று தடுப்பது ... 362
162 தீங்கு உண்டாக்கத்தக்க புல் பூண்டு முதலியவைகளை அப்புறப் படுத்துவது சம்பந்தமாய் நோட்டீஸ் கொடுப்பது ... 363
163 பொதுவான பாட்டைகளில் குழி தோண்டுவதும், தடங்கல் ஏற் படுத்துவதும் கூடாதென்று தடுப்பது ... 364
163-A உத்தரவில்லாமல் பொது ரஸ்தாக்களிலுள்ள மரங்களை நடுவது அல்லது வெட்டுவதைத் தடுப்பீது ... 366
164 நிலத்தை அனுமதியில்லாமல் அனுபவித்துவரும் விஷயத்திலே தண்டத்தொகை விதிப்பதும், நஷ்டஈடு வசூலிப்பதும் ... 367
165 விசேஷ போக்குவரத்தினால் விளையும் செலவுகளை வசூலிக்க லோகல் போர்டாருக்குள்ள அதிகாரம் ... 369
166 வாடகைக்கு ஓடும் மோட்டார் வண்டிகளுக்கும் மோட்டார் லாரி களுக்கும் லைசென்ஸ் கொடுப்பது ... 370

11-வது அத்தியாயம்.

மார்க்கெட்டுகளும், ஆடு - மாடுகளை அடிக்கும் தொட்டிகள் முதலியவைகளும்.

பொது மார்க்கெட்டுகள்.

167 பொது மார்க்கெட்டுகள் ... 381
168 பொது மார்க்கெட்டுகள் விஷயமாயுள்ள அதிகாரம் ... 381

செக். விஷய சூசிகை. பக்கம்.

169 பொது மார்க்கெட்டுகளின்மேல் ப்ரெஹிடென்டுக்குள்ள விசாரணை அதிகாரம் ... 384

பிரைவேட் மார்க்கெட்டுகள்.

170 [இந்த பிரிவு எடுத்துவிடப்பட்டது.] ... 385
171 பிரைவேட்டு மார்க்கெட்டுகளுக்கு லைசென்ஸ் கொடுப்பது ... 385
172 1884-ம் வருஷத்திற்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட சொந்த மார்க்கெட்டுகளில் கட்டணங்கள் விதித்து வாங்க சுதந்தரம் கொண்டாடும் விஷயத்தில் அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறை ... 388
173 கட்டணங்கள் விதித்து வசூல் செய்வதற்கான சுதந்தரத்தை ஸ்தாபித்துக் கொள்ளுவதற்காக வியாஜ்ஜியங் கொண்டுவர பாத்தியதை ... 389
174 லைசென்சுக்குக் கட்டணம் ... 389
175 லைசென்ஸ் கொடுக்கப்பெறாத சொந்த மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யக்கூடாதென்று தடுப்பது ... 390
176 சொந்த மார்க்கெட்டுகளைப் பற்றி பஞ்சாயத்துக்குள்ள அதிகாரங்கள் ... 390
177 176-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட நோட்டீஸின் பிரகாரம் நடந்துகொள்ளத் தவறினால் லைசென்சை சிறிது காலத்திற்கு நிறுத்திவைப்பது அல்லது கொடுப்பதில்லையென்று நிராகரிப்பது ... 392
178 சொந்த மார்க்கெட்டுகளில் அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்கக் கூடாதென்று தடுப்பது ... 392
179 சொந்த மார்க்கெட்டுகளை மூடிவிட அதிகாரம் ... 393
180 சொந்த மார்க்கெட்டுகள் வைத்துக்கொள்ள சர்க்காரைச் சேராத தனி நபர்களுக்குள்ள பாத்தியதைகளை எடுத்துக்கொள்வது ... 394
181 171-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்திரவுகளின்மேல் அப்பீல் 395
182 குஷ்டரோகிகள் முதலியவர்களை மார்க்கெட்டுகளிலிருந்து தூரத்திவிட கடமைப்பட்டிருப்பதும், சச்சரவு உண்டாக்குகிறவர்களை தூரத்திவிட அதிகாரமும் ... 395
183 பொதுவான பாதைகளில் வஸ்துக்களை விற்கக் கூடாதென்று தடுப்பது ... 396
183-A தாலூக்கா மார்க்கெட்டுகள் விஷயமாக அதிகாரத்தைச் செலுத்துவது ... 396
183-B யாதொரு இடமானது மார்க்கெட்டா அல்லவா என்பதைப் பற்றின தகராறுகளை தீர்மானிப்பது ... 397

பாரவண்டி நிற்கும் இடங்கள்.

184 பொதுவான பாரவண்டி நிற்கும் இடங்களை ஏற்படுத்துவது ... 398

செக். விஷய சூசிகை. பக்கம்

185 பொதுவான இடத்தையாவது, பொதுவான பாட்டையின் பக்கங்களையாவது பார வண்டி நிற்கும் இடம் முதலியவைகளாக உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பது ... 399

186 பார வண்டிகள் நிற்கும் இடத்திற்குள்ள கட்டணத்தைகைப்பற்றுவது ... 400

187 ப்ரைவேட் பாரவண்டி நிற்கும் இடத்திற்கு லைசென்ஸ் கொடுப்பது ... 400

188 [இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.] ... 402

ஆடு-மாடு முதலியவைகளை அடிக்கும் தொட்டிகள்.

189 ஆடு-மாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளை ஏற்படுத்துவது ... 403

190 ஆடு-மாடு முதலியவைகளை அடிக்கும் பொதுவான தொட்டிகள் அல்லாத வேறே இடங்களில் கால் நடைகளைக் கொல்வது முதலியது கூடாதென்று லோகல் போர்டார் தடுக்கலாமென்பது ... 403

191 உத்சவ காலங்களிலும், பண்டிகை காலங்களிலும் பிராணிகளைக் கொல்வது ... 405

192 கவர்ன்மென்டாரால் உபயோகிக்கப்படும் இடங்கள் நிவாரணையாவது ... 406

தொழில்களும், தொழிற் சாலைகளும்.

193 இன்ன காரியங்களுக்கு லைசென்ஸில்லாமல் இடங்களை உபயோகிக்கக் கூடாதென்பது ... 406

194 நீராவி அல்லது இதர சக்தியை உபயோகிக்கப்போகிற தொழிற்சாலை வேலைச்சாலை அல்லது வேலை செய்யும் இடத்தை கட்டுவதற்காவது, ஸ்தாபிப்பதற்காவது அதில் இயந்திர உபகரணங்களை ஏற்படுத்துவதற்காவது செய்துகொள்ளப்பட வேண்டிய விண்ணப்பம் ... 411

195 நீராவி அல்லது இதர சக்தியினால் ஏற்படும் அசங்கியங்கள் அல்லது சங்கடங்களைக் குறைக்கும்படி லோகல் போர்டார் உத்திரவு பிறப்பிக்கலாமென்பது ... 415

196 லோகல் போர்டாருக்கு உத்திரவு பிறப்பிக்கவோ கட்டளையிடவோ லோகல் கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம் ... 418

197 யாதொரு தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலை செய்யும் இடத்திற்குள்ளே ப்ரெவிடென்டு பிரவேசிக்கலாமென்பது ... 418

ஜனங்கள் வழக்கமாய்க்கூடும் இடங்களைக்குறித்து ஆக்ட்டு பிரயோகப்படுவது.

198 ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக்குறித்த 1888-ம் வருஷத்திய ஆக்ட்டை பிரதேச வில்தீரணங்களில் பிரயோகப்படும்படிச் செய்வது ... 419

செக்.	விஷய சூசிகை.	பக்கம்.

சென்னப்பட்டணம் 1888-வது வருஷத்து 2-வது ஆக்ட்டு.

ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களையும் விளை தமாய்க்காலங்களிக்கும் இடங்களையும் மேற்பார் வை யிடுவதற்கும் அவைகளுக்குலைசென்ஸ் கொடுப்பதற்குமான ஆக்டு.

	பீடிகை	420
1	சுருக்கமான பெயர்	421
	(2) வழங்கத் தொடங்குவது	421
	(3) வியாபிக்கும் இடம்	421
	(4) நிவாரணை	421
2	அர்த்தம்	421
3	500-சதுர அடிகொண்ட யாதொரு அடைப்பிடத்தையாவது கட்டிடத்தையாவது லைசென்ஸ் இல்லாமல் ஜனங்கள் வழக்கமாய் கூடுவதற்கு உபயோகிக்கக் கூடாதென்பது...	422
4	லைசென்ஸுக்காக செய்துக்கொள்ளவேண்டிய மனு : அதில் என்ன அடங்கி யிருக்கவேண்டியதென்பது ...	422
5	இன்ன காரியத்துக்கு மனு செய்துக்கொள்ள வேண்டுமென் பது ...	423
6	இடம் அல்லது கட்டிடத்தை அதிகாரி பார்வையிடவேண்டும், முன்னிருந்ததோடு சேர்த்து கட்டவேண்டியதென்றுவது அதில் மாறுதல் செய்யவேண்டியதென்றுவது உத்திரவு செய்யலாம் ...	423
7	இன்னபடிக்காஞல் அதிகாரி லைசென்ஸ் கொடுக்கலாமென் பது. ...	424
8	லைசென்ஸ் இத்தனை நாள் செலாவணியாக வேண்டியதென்று அதில் காணவேண்டியது ...	424
9	லைசென்ஸை ரத்து செய்வது அல்லது கொஞ்சகாலம் செலா வணியாகவொட்டாமல் பண்ணுவது ...	424
10	6-வது 7-வது அல்லது 9-வது பிரிவின்படி செய்யப்படுகிற உத்திரவின்பேரில் அப்பீல் ...	425
11	ஜனங்கள் வழக்கமாய்க்கூடும் இடத்தில் பிரவேசிக்கவும் லைசென்ஸைப் பார்வையிடவும் இனி உபயோகிக்கவொட் டாமல் தடுக்கவும் அதிகாரம் ...	426
12	இந்த ஆக்டின்படி நடத்தப்படும் எவ்வித நடவடிக்கைகளையும் பற்றி டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட் புனராலோசனை செய் யலாம் ...	426
13	தண்டனைகள் ...	426
14	விதிகள் செய்ய அதிகாரம் ...	427

செக். விஷய சூசிகை. பக்கம்.

மெடி சட்டத்தின்கீழ் சென்னை கவர்ன்மென்டார் செய்திருக்கும் விதிகள் 1—10—1909 முதல் அடியில் கண்ட விதிகள் அமுலுக்கு வந்திருக்கின்றன.

I. வருஷாந்திர லெசென்ஸ்களும் தாத்காலிகமான லெசென்ஸ்களும் ... 427
II கட்டணங்களின் தொகை ... 428
III அந்த இடம் அல்லது கட்டிடத்தின் அமைப்பு ... 430
IV வெளியேபோகும் வாயில்களின் சங்கியையும், பரிமாணமும் இதர விவரங்களும் ... 430
V தீப்பற்றவொட்டாமல் தடுப்பதும், தீயை அணைப்பதும் ... 431
VI நமூனாக்களும் லெசென்ஸ்களின் நிபந்தனைகளும் ... 432
VII சுலபமாக தீப்பற்றக்கூடிய சாமான்களினால் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களுக்கும், கூடாரங்களுக்கும், பின்னும் அதிகமான நிபந்தனைகள் ... 433
VIII லெசென்ஸ் ரத்து செய்யப்படுவதும் நிறுத்திவைக்கப்படுவதும் ... 433

5-பாகம்.

சகாயகரமான சட்ட நிபந்தனைகளும், தண்டனைகளும்.

12-ம் அத்தியாயம்.

சகாயகரமான சட்ட நிபந்தனைகளும் விதிகளும்—ஷெட்யூல்களும்.

199 விதிகளை செய்ய லோகல் கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம் ... 434
200 விதிகளைச் செய்வதற்கான நடவடிக்கை முறைகள் ... 439
201 ஷெட்யூல்களைத் திருத்தவும், அவைகளுடன் யாதொன்றைச் சேர்க்கவும், அவைகளை ரத்து செய்யவும், பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரமும், அதற்கு நடவடிக்கைமுறையும்... 440
201-A 74-வது A-பிரிவின் 2-வது உபப்பிரிவின்கீழும், 201-வது பிரிவின்கீழும் விதிகளைச் செய்வதற்காக நடவடிக்கை முறை ... 440

சகாயச் சட்டங்கள்.

202 சகாயசசட்டங்கள் செய்ய டிஸ்டிரிக்ட்டு போர்டாருக்கு அதிகாரம். 441
203 சகாயச்சட்டங்களை மீறினால் தண்டனை ... 446
203-A தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்துக்கு உபச் சட்டங்களை செய்ய அதிகாரம் ... 447

செக். விஷய சூசிகை. பக்கம்.

204 சகாயச்சட்டங்கள் செய்வதற்கான நடவடிக்கை ... 447
205 சகாயச்சட்டங்களே லோகல் கவர்ன்மென்டார் ஊர்ஜிதப் படுத்துவது 449
205-A சகாயச் சட்டங்களைச் செய்வதற்கும் விளம்பரப்படுத்துவதற்கும் நடவடிக்கை முறை ... 449
டில்டிரிக்ட்டு மியுனிஷிபாலிடி ஆக்ட்டுகளே பிரயோகிக்கும்படி செய்வது.
206 டில்டிரிக்ட்டு முனிஷிபாலிடிகளாக்டையும் அந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளையும் கிராமங்களுக்காவது லோகல் போர்டின் விசாரணை அதிகாரத்துக்குட்பட்ட இதர விஸ்தீரணங்களுக்காவது பிரயோகப்படும்படி செய்வது ... 451

13-வது அத்தியாயம்.

தண்டனைகள்.

207 வெட்யூல்களில் குறிப்பிட்ட தண்டனைகளைக் குறித்த பொதுவான நிபந்தனைகள். 453
208 யோக்கியதையற்றிருக்கும்போது ஒரு லோகல் போர்டின் அங்கத்தினராகவாவது அல்லது வைல் ப்ரெஷிடென்டாகவாவது பிரவர்த்திப்பதற்குத் தண்டனை 461
209 ஒப்பந்தம் அல்லது வேலையில் யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காராராவது சுயப்பிரயோஜனம் அடைந்தால் தண்டனை 464
210 ப்ரெஷிடென்டையாவது அவரால் அதிகாரம் கொடுக்கப் பெற்ற வரையாவது அக்கிரமமாய்த் தடுப்பது 466
211 சங்கதி தெரிவிக்காவிட்டாலும் பொய்யான சங்கதி தெரிவித்தாலும் அதற்குத் தண்டனை 468

6-ம் பாகம்.

14-ம் அத்தியாயம்.

நடவடிக்கை முறையும் பலவகைப்பட்டவைகளும், லஸென்ஸுகளும் அனுமதிகளும்.

212 லஸென்ஸுகளையும் அனுமதிகளையும் குறித்த பொதுவான நிபந்தனைகள் 470
213 அப்பீலுக்கு கால நிர்ணயம் 482
214 லஸென்ஸுகள், நோட்டீசுகள், அனுமதிகள் ஆகிய இவைகளின் நமூனு 483

செக். விஷய சூசிகை. பக்கம்.

215 இந்த ஆக்டின்படிக்கான விளம்பரங்களைப் பிரசித்தஞ்செய்வது ... 484
215-A தடுக்கப்பட்டவைகளைப் பற்றியும் அல்லது ஒதுக்கிவைக்கப் பட்ட இடங்களைப் பற்றியும் நோட்டீஸ் ... 485
216 தஸ்தாவேஜுகளைச் சேர்ப்பிக்கும் விதம் ... 486
பிரவேசிக்கவும் பார்வையிடவும் ப்ரெஸிடெண்டுக்கு உள்ள அதிகாரம்.
217 வேலையைப் பார்வையிடவோ லர்வே செய்பவோ அல்லது செய்து முடிக்கவோ பிரவேசிக்க அதிகாரம் 487
218 எடுத்தலளவைக் கருவிகளையும் முகத்தலளவைக் கருவிகளையும் பார்வையிடுவதும் அவைகளுக்கு முத்திரை போடுவதும் ... 489
லைசென்ஸ் கொடுப்பதற்கான நிபந்தனைகள், உத்தரவு முதலியவைகளை அமுலுக்குக் கொண்டு வருதற்கான அதிகாரம்.
219 லைசென்ஸ் முதலானவைகளைப் பெற்றுக்கொள்ளத் தவறினாலும் அவைகளுக்கு விரோதமாக நடந்தாலும் இன்னது விளையுமென்பது 490
220 நோட்டீஸ் உத்தரவு முதலியவைகளின்படி நடப்பதற்கு வாயிதாவும், அந்தப்படி நடந்துக்கொள்ளாவிட்டால் அவைகளை அமுலுக்குக் கொண்டுவர அதிகாரமும் ... 492
221 வரிகளாக பாக்கியாயிருக்கும் தொகைகளை கைப்பற்றுவது ... 495
222 சேரவேண்டிய தொகைகளை வசூலிப்பதற்குக் காலநிர்ணயம் ... 499
223 பிராது தொடர அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கும் நபர்கள் ... 500
224 அபராதத் தொகைகள் செலவுத் தொகைகள் முதலியவைகளை கைப்பற்றுவது 503
225 லோகல் போர்டின்மேல் வியாஜ்ஜியம் கொண்டுவருவதற்கு நோட்டீஸ் 503
226 குற்றங்களின் விஷயமாய் ராஜிசெய்துக் கொள்வது ... 514
227 அங்கத்தினர்கள் சொத்தை இழந்துவிட்டாலும் பாழ்பண்ணினாலும் துர்வினியோகம் செய்தாலும் அவர்கள் உத்திரவாதிகளாவது 515
227-A ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடெண்டு அல்லது அங்கத்தினரை ப்ராஸிக்யூஷன் செய்வதற்காக உத்திரவு ... 516
228 வரி விதிப்பு முதலானவைகளைக் குறித்து தோஷம் சொல்லக் கூடாது 517
229 லோகல் போர்டுகளின் ஊழியக்காரர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் தடுப்பது கூடாதென்பது ... 524
230 நோட்டீஸை எடுத்துவிடுவது அல்லது கலைத்துவிடுவதைத் தடுப்பது 524

செக். விஷய சூசிகை. பக்கம்.

231 ஸ்டேட்டுமெண்டுகள் அல்லது விவரக் கணக்குகள் சமதரிக்க வேண்டுமென்று கர்னங்களையும் பெரியதனக்காரர்களையும் கேட்க ப்ரெஸிடென்டுக்குள்ள அதிகாரம் ... 525

232 கலெக்டர்களுக்கு சம்மன் அனுப்ப அதிகாரம் ... 525

தங்களுடைய அதிகாரங்களை வேறொருவருக்குக் கொடுக்கவும் மத்தியஸ்தம் செய்யவும் லோகல் கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரங்கள்.

233 லோகல் கவர்ன்மெண்டார் தங்கள் அதிகாரங்களை வேறொருவருக்குக் கொடுப்பது 526

234 ப்ரதேச அதிகார சபைகளுக்குள் ஏற்படும் விவாதங்களைத் தீர்மானிப்பது 527

235 புதியதாய் அமைக்கப்பட்ட லோகல் போர்டுக்கு சொத்தும் உரிமைகளும் மாறுவது 527

236 ரயில்வே செஸ் என்னும் வரியிலிருந்து சேமிக்கப்பட்ட தொகைகளை உபயோகப்படுத்திக்கொள்வது ... 528

237 இந்த ஆக்டின் வியாபிப்பும் இது வழங்கத் தொடங்குவதும் ... 529

238 [இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.] ... 529

239 [இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.] ... 529

240 புதியதாக ஏற்படுத்தப்படும் லோகல் போர்டுகளைப் பற்றியும், மறுபடியும் கூட்டப்படும் லோகல் போர்டுகளைப் பற்றியும் தனிமையான ஏற்பாடுகள் ... 530

ஷெட்யூல்கள்.

1-வது ஷெட்யூல் 532
2-வது ஷெட்யூல் 533
3-வது ஷெட்யூல் 551
4-வது ஷெட்யூல் 555
5-வது ஷெட்யூல் 591
6-வது ஷெட்யூல் 608
7-வது ஷெட்யூல் 608
8-வது ஷெட்யூல் 612
9-வது ஷெட்யூல் 618
10-வது ஷெட்யூல் 621
ராஜபக்தி பிரமாண சட்டம் 632
வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைப்பற்றிய ஆக்டு... 635
நேமகச் சீட்டு 648
மோட்டார் வண்டிகளுக்கு வரியிடுவதற்கான சட்டம் ... 649

1931–ம் வருஷத்தில் திருத்தி அமைக்கப்பட்ட

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் கீழுள்ள

சென்னை டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி ஆக்டின் கீழுள்ள செக்ஷன்களுக்கு

பொருத்தமாக இருந்துவரும் பிரிவுகளின்

அட்டவணை.

லோகல் போர்டு செக்ஷன்.	முனிஸிபல் செக்ஷன்.	லோகல் போர்டு செக்ஷன்.	முனிஸிபல் செக்ஷன்.
3-(1)	3-(1)	6-(3)	6-(2), 68, 69
3-(1-A)	3-1-A)	7	7
3-(2)	3-(2)	9-(1)	7-(3)
3-(3)	3-(3)	9-(1) (iv)	7-(4)
3-(4)	3-(5)	9-(2)	7-(2)
3-(5)	3-(6)	91-(1)	8
3-(5-A)	3-(7)	11-A	9
3-6	3-(8)	12	12
3-(7-B)	3-(8-B)	12-A	12-A
3-8-A)	3-(11-A)	16	31
3-(10)	3-(12)	19	27
3-(10-A)	3-(12-A)	20	11
3-(10-B)	3-(12-B)	21	13, 22
3-(13)	3-(14)	22	15
3-(13-A)	3-(16)	23	18
3-(14)	3-(17)	26	20
3-(15)	3-(18)	27	21
3-(16)	3-19)	28(1)	23
3-(17)	3-20)175-மு179	28(2)	14
3-(18)	3-(21)	28(3)	24
3-19)	3-(25)	30	26
3-(20)	3-(27)	31	25
3-(24)	3-(31)	32	28
4	4	34	30
6-(1)	6-(1)	35	32
6 (2)	19	36	33

லோகல் போர்டு செக்ஷன்.	முனிஷிபல் செக்ஷன்.	லோகல் போர்டு செக்ஷன்.	முனிஷிபல் செக்ஷன்.
37	38	94-A	94-A
37-A	34-(1)	96	95
37-C	34-(2)	97	96,97
38	36	99	83
39	37	100	86
41	5, 39	101	87
43	40	101-A	88
44	40-A	102	89,90
45	41	103	117
45-A	41	110	116
46	42	111	117
47	43	111-A	118
51	44	112-(1)	162
52	45	114	119
53	47	116	120
54	48	119	121
55	49	120	122
56	50	121	123
57	51	122	226,293
58	56	123	224
59	60	124	228
60	61	125-(a)	127,228,231
61	62	125 (c)	230
63	63	125-(d)	229
64	65	126	125,227
65-C	66	127	149
66	67,165	128	156
67	70	129	159
68	71	129-A	138
70	73	130	287
71	74	131.(1)	289
72	75	131-(2)	290
73	76	132	291
74	77	133	295
74-A	77-A	134	296
75	78	135	298
77	80	136	299
93	93	137	300
94	94	138	301

லோகல் போர்டு செக்ஷன்.	முனிஷிபல் செக்ஷன்.	லோகல் போர்டு செக்ஷன்.	முனிஷிபல் செக்ஷன்.
139	302	183-B	270-A
140	278	184	270 B
141	279	185	270-C
142	280	186	270 D
143	281	187	270 E
144	284	189	254
145	282	190	257
146	283	191	256
147	218	192	244
148	219	193	249
149	234	194	250
150	220	195	251
151	221	196	252
153 (1)	233	197	253
153-(2)	235	199	303
154	241	201	304
155	242	200-(a)	305
156	243	202	306
157	180	203	308
158	181,196	204	310
159	182	205	309
160	183	205-A	329
161	142	207	313
163	186	208	314
165	174	209	315
166	174-A	210	319
167	259	211	320
168	260	212	321
169	261	213	322
171	262	214-(1)	326
174	262-A	214-(3)	327
175	263	215	328
176	264	215-A	330
177	265	216-(1)	331
178	266	217	91,335.
179	267	218	337
180	267 A	219	338
181	322	220	339
182	268	221	344

லோகல் போர்டு செக்ஷன்.	முனிஷிபல் செக்ஷன்.	லோகல் போர்டு செக்ஷன்.	முனிஷிபல் செக்ஷன்.
222	345	230	361
223	347	231	325
224	348-(2)	232	325
225	350	233	363
226	351	234	369
227-A	353-A	235	364
228	354	240	368
229	359		

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட் 2-வது ஷெடியூலின் கீழுள்ள விதிகளுக்கும், சென்னை டில்டிரிக்ட் முனிஷிபாலிட்டீஸ் ஆக்ட் 3-வது ஷெடியூலின் கீழுள்ள விதிகளுக்கும் உள்ள ஒற்றுமையான விதிகள்.

லோகல் போர்டு விதிகள்.	டில்டிரிக்ட் முனிசிபாலிடி விதிகள்.	லோகல் போர்டு விதிகள்.	டில்டிரிக்ட் முனிசிபாலிடி விதிகள்.
1	1	8	7
3	2	9	8
3	3	10	9
5	4	11	10
6	5	12	11
7	6	13	12

4-வது ஷெடியூல்.

லோகல் போர்ட்ஸ் விதிகள்.	முனிசிபாலிடி விதிகள்.	லோகல் போர்ட்ஸ் விதிகள்	முனிசிபாலிடி விதிகள்.
5	3	9	17
7	5	10	18

லோகல் போர்ட்ஸ் விதிகள்.	முனிசிபாலிடி விதிகள்.	லோகல் போர்ட்ஸ் விதிகள்.	முனிசிபாலிடி விதிகள்.
11-A	19	31	28
12	செக்-81 (2)	32	29
23	9	33	30
24	8 (2)	34	31
24-A	11	35	32
25	8-(1)	36	33
27	23	37	34
28	26	38	35
29	24	39	36
30	27	39-A	36-A

1920-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டுக்கு
1930-ம் வருஷத்தில் திருத்தி அமைக்கப்பட்ட செக்ஷன்களில்
எடுத்துவிடப்பட்ட செக்ஷன்கள்.

செக்ஷன்கள்.	செக்ஷன்கள்.	செக்ஷன்கள்.
	33	
13	40	170
14	50	188
18	69	238
29	152	239

புதியதாக சேர்க்கப்பட்ட செக்ஷன்கள்.

	8-B	94-A
3-(1-A)	11-A	101-A
3-(5-A)	12-A	102-A
3-(5-B)	22-A	106-A
3-(7-A)	37-A	111-A
3-(7-B)	37-B	121-A
3-(8-A)	37-C	129 A
3-(10-A)	45-A	157-A
3-(10-B)	45-B	163-A
3-(13-A)	65-A	183-A
3 (15-A)	65-B	203-A
3-(19-A)	65-C	205-A
3-(23-A)	74-A	215-A
8-A	93-A	227-A

விதிகள்.

4-வது ஷெட்யூல் விதிகள்.

11-A 24-A 39-A

சென்னை லோகல் போர்டு மான்யூவல்.

சென்னை லோகல் போர்டு ஆக்டு XIV of 1920. 1930-ம் வருஷத்திய XI-வது ஆக்டின் பிரகாரம் கூடிய திருத்தங்களுடனும் இதர சட்டங்கள் விதிகள் இவைகளுடனும் கூடியது.

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட்.

லோகல் போர்டுகளைக் குறித்த சட்ட திட்டங்களைத் திருத்தி ஒன்றுபடச் சேர்ப்பதற்காக ஒரு சட்டம்.

பீடிகை. சென்னைப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள லோகல் போர்டுகளைக் குறித்த சட்டதிட்டங்களைத் திருத்தி ஒன்றுபடச் சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்கு, 1915-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மென்டு ஆக்ட்டின் 79-வது பிரிவின்படி கவர்னர் ஜெனரலுடைய அனுமதியை முன்னதாகவே பெற்றிருக்கிறபடியாலும் இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

1-ம் பாகம்.

1-ம் அத்தியாயம்—பீடிகாவிதிகள்.

பெயர். **1.** இந்த ஆக்டை "1920-ம் வுருத்திய சென்னை லோகல் போர்டுகள் ஆக்டு" என்று சொல்லலாம்.

சட்டதிட்டங்களின் ரத்து. **2.** 1-வது ஷெட்யூலில்கண்ட சட்டதிட்டங்கள் அதன் நான்காவது கலத்தில் குறித்திருக்கிற அளவு வரையிலும் ரத்து செய்யப்படுகின்றன,

3. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதம் ஒன்றும் இராவிட்டால்—

அர்த்தம்.

(1) "ஆதிதிராவிடன்" என்பதற்கு ஹிந்துமதத்தை கழுவிக்கொண்டும், பறையர்கள், பள்ளர்கள், வள்ளுவர்கள், மாலர்கள், மாதிகர்கள், சக்கிலியர்கள், தோட்டியர்கள், செருமர்கள், ஹோலியர்கள் இந்த வகுப்பினர்களையும் இன்னும் இனி நிர்ணயிக்கப்படும் யாதொரு வகுப்பினர்களையும் குறிக்கும்:

"ஆதிதிராவிடன்".

(1–A.) "ஆங்கில இந்தியன்" என்னும்பதமானது ஐரோப்பியனாக இல்லாமலிருந்தும், ஆனால்.

"ஆங்கில இந்தியன்.

(i) ஆண் சந்ததி வழியில் ஐரோப்பிய வம்சத்தில் பிறந்தவராயாவது, அல்லது

(ii) ஆசியாவிலும் ஆசியாவுக்கு இதர தேசத்திலும் கலப்பிடமாக ஜனனம் எற்பட்டு ஆண்வழியில் தம்முடைய சகப்பனர், பாட்டனர், அல்லது வேறே ஒரு முன்னோராவது ஐரோப்பாகண்டம், கனடா, நியூவஹ்லாந்து, ஆஸ்திரேலியா, நியூஜீலண்ட், தென் ஆப்பிரிக்கா யூனியன் அல்லது யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா இந்த தேசங்களில் பிறந்திருந்தவராக இருக்கும்பக்ஷத்தில் அந்த நபரையாவது குறிப்பதாகும்:

(1–B.) "நியமிக்க" என்பதில் அங்காமியாகவோ அல்லது இன்னொருவருக்கு பதிலாய் வேலைப்பார்க்கும் ஹோதாவிலோ நியமிக்கவென்பதும் அடங்கும்:

"நியமிக்க".

(2) "நேமகம்" என்பதில் அங்காமியாகவும் இன்னொருவருக்கு பதிலாய் வேலை பார்க்கும்படியாகவும் செய்யப்படும் நேமகங்கள் என்பதும் அடங்கும்:

"நேமகம்".

(3) "கட்டிடம்" என்பதில், யாதொருவீடு, வெளிப்புறத்து வீடு, லாயம், மஹஜலபாதை மறைவிடம், கொட்டகை, குடிசை, (எட்டடி உயரத்திற்கு மேற்படாத எல்லைச் சுவரைத்தவிற வேறே) சுவர் என்பவைகளும், கல் கட்டிடமாகவாவது, செங்கல், மரம், சேறு,

"கட்டிடம்".

உலோகம் அல்லது வேறே எந்த வகையாகிலும் சேர்ந்த சாமானைக் கொண்டு கட்டப்பட்டாவது இருக்கும் அப்படிப்பட்ட வேறே யாதொரு கட்டுக்கோப்பு என்பதும் அடங்கும்:

"வண்டி".

(4) "வண்டி" என்பதில், வில்லியாகிலும் வில்லைப்போல் உபயோகப்படும்படியான வேறே உபகரணங் களையாகிலும் உடையதாய் சக்கரங்களுள்ள யாதொரு வாகனம் என்பதும் அடங்கும். மேலும் அதில், சகலவகைகளையும் சேர்ந்த மோட்டார்கார் என்னும் வண்டிகள், மோட்டார் லாரி என்னும் சாமான் ஏற்றும் மோட்டார் வண்டிகள், மோட்டார் ஆம்னி பஸ் என்னும் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு போவதற்கான பெரிய மோட்டார் வண்டிகள், மோட்டார் ஸைகில்வண்டிகள், பைஸிகல் என்னும் மூன்று சக்கர வண்டிகள், ட்ரை ஸிகல் என்னும் மூன்று சக்கர வண்டிகள், ரிக்ஷா வண்டிகள் என்ப வைகளும் அடங்கும்:

"பார வண்டி".

(5) "பாரவண்டி" என்பதில், "வண்டி" யாயிராமல் சக்கரங்களுள்ள யாதொருவாகனம் என்பதும் அடங்கும்:

"தற்செயலான காலி".

(5-A) "தற்செயலான காலி" என்பதற்கு கிரமமான காலமுடிவிலல்லாமல் வேறுவிதமாக நிகழும் காலி என்றர்த்தமாகும்:

"தற்செயலான ஸ்லெக்ஷன்".

"தற்செயலான எலெக்ஷன்" என்பதற்கு ஒரு தற்செயலான காலி நிகழ்ந்ததினால் நடத் தப்படும் எலெக்ஷன் என்றர்த்தமாகும்:

"கம்பெனி".

(6) "கம்பெனி" என்பதற்கு 1913-ம்வரு இந்திய கம்பெனிகளின் சட்டத்தில் (Indian Companies Act) எம்மாதிரி விவரிக்கப்பட்டிருக் கிறதோ அம்மாதிரியான ஒரு கம்பெனியாவது அல்லது பார்லிமென்டாரால் செய்யப்படும் ஒரு ஆக்டு (Act) அல் லது ராயல் சார்ட்டர் (Royal Charter) அல்லது லெட்டர்ஸ் பே டென்டு (Letters Patent) என்னும் அதிகாரப் பத்திரம் இவைகளை யொட்டி கூட்டப்படும் ஒரு கம்பெனியாவது, அல்லது பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் ஆளப்படும் ஒருநாட்டில் உள்ள சட்ட நிர்வாக

சபையாரால் செய்யப்படும் ஒரு ஆக்டை யொட்டி கூட்டப்படும் ஒரு கம்பெனியாவது இவைகளைக் குறிக்கும். இன்னும் அந்தப் பதமானது சென்னை மாகாணத்தில் வியாபாரம் நடத்திவரும் யாதொரு அசோசியேஷன் அல்லது பர்ம் (Firm) இவைகளின் முக்கிய வியாபார ஸ்தலமானது சென்னை மாகாணத்திற்குள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவைகளையும் குறிக்கும் :

"டிஸ்டிரிக்டு".

(7) "டிஸ்டிரிக்டு" என்பதற்கு செவின்யூ நிர்வாகத்திற் காக ஒரு டிஸ்டிரிக்ட் கலெக்டரினுடையீ பாதுகாப்பின்கீழ் அமைக்கப்பட்டிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீரணம் என்று அர்த்தமாகும். ஆனால் அந்த விஸ்தீரணத்திலிருந்து—

(a) 1920-ம் ஹுத்திய சென்னை டிஸ்டிரிக்டு முனிசிபாலிட்டிகளின் (Madras District Municipalities Act) சட்டத்தின்கீழ் அமைக்கப்படும் முனிசிபாலிட்டிகளையும் ;

(b) 1924-ம் ஹுத்திய கன்டோன்மென்டு (Cantonments Act) ஆக்டு என்னும் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டிருக்கும் கன்டோன்மென்டுகளையும் ;

(c) 1874-ம் ஹுத்திய ஷெட்யூல்டு டிஸ்டிரிக்ட்டுகள் ஆக்டு (Scheduled Districts Act) என்னும் சட்டத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் ஷெடியூல்டு டிஸ்டிரிக்ட்டுகளையும் (Scheduled Districts)

நீக்கப்படவேண்டும்.

"டில்ரிடிக்ட் போர்டு".

(7-A) "டிஸ்டிரிக்ட் போர்டு" என்பதற்கு இச்சட்டத்தின் 6-வது பிரிவு (1-வது) உபப்பிரிவின் கீழ் ஒரு டிஸ்டிரிக்டினுடைய பிரதேச நிர்வாகத்திற் காக ஏற்படுத்தப்படும் ஒரு கூட்டமென்று அர்த்தமாகும் :

"ஐரோப்பியன்".

(7-B) "ஐரோப்பியன்" என்னும் பதத்திற்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு குடும்பத்தில் பிறந்தவராயிருந்து யூனைட்டெட்கிங்டம் அல்லது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உள்ள யாதொரு தேசம் அல்லது யாதொரு இந்தியா சுதேச சமஸ்தானம் இவைகளில் பிறந்தவராவது அல்லது இவைகளில் வாசமுள்ளவராவது இருக்கும் ஒரு நபரை

யாவது அல்லது எந்த நபரின் தகப்பனுர் அம்மாதிரி பிறந்திருந்தாரோ அல்லது அந்த நபர் பிறக்கும் காலம் வரையிலும் அம்மாதிரி வாசம் செய்து வந்திருந்தால் அந்த நபரையாவது குறிக்கும் ;

"காடு".

(7-C) "காடு" என்னும் பதமானது கவர்ன்மென்டின் அதிகாரத்தின் கீழ் இருக்கும் ஒதுக்கி வைக்கப் படாத நிலங்களையும் 1882-ம் வருஷத்திய சென்னை பாரஸ்ட் ஆக்ட்டு (Madras Forest Act)-ன் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் காடுகளையும் அணைக்கும் :

"வீடு".

(8) "வீடு" என்பது வாசஸ்தலமாகவோ மற்றப்படியோ மனிதர்கள் இருப்பதற்குத் தகுதியானதாய், பொது பாதையிலிருந்து முக்கியமான பிரவேச வாயிலைப் பிரத்தியேகமாக உடையதாயிருக்கும் யாதொரு கட்டிடம் என்று அர்த்தமாவது மல்லாமல், அதில் யாதொரு (கடை) ஷாப், வேலைச்சாலை அல்லது கிடங்கு என்பதும் அடங்கும் :

"இந்தியன் கிரிஸ்டியன்".

(8-A) "இந்தியன் கிரிஸ்டியன்" என்னும் பதங்களுக்கு இந்தியாவில் பிறந்து கலப்படமில்லாத ஆசியா கண்டத்தின் ஒரு வம்சத்தில் பிறந்தவராய்ச்சொ ல்லிக்கொண்டிருந்து எந்தவிதமாகிலும் கிறிஸ் தவ மதத்தை தழுவிக்கொண்டுவரும் ஒரு நபர் என்று அர்த்தமாகும் ;

"நில சுவான்தார்."

9. "நில சுவான்தார்" என்பதில் மில்கியத் இஸ்திமிராரன்னத்தின்மேல் நிலத்தைக் கைப்பற்றில்வைத் திருக்கிற சகலமானவர்களும், மற்ற சகல ஜமீன் தார்களும், பாளையக்காரர்களும், சுரோத்தி ரியதார்களும், ஜாகீர்தார்களும், இனம்தார்களும், வரையருக்கப் பட்ட பாத்தியதையுள்ள பூஸ்திதிக்குடையவர்களைப்பற்றிய 1911-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து ஆக்ட்டு 5-வது பிரிவின்படி பூஸ் திதிக்குடையவர்களாக ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கும் சகலமா னவர்களும், கவர்ன்மென்டாரிடத்திலே நிலவருமானம் குத்தகை செய்துக்கொள்ளுகிற சகலமானவர்களும், எந்த ஷரத்தின் மேலாவது மலையாள ஜில்லாவிலே நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருக்கிற சகலமா னவர்களும், ரயத்வாரி பைசலேற்பாட்டின்படியாவது கவர்ன்மென் டாருக்கு நேராய் நிலத்தீர்வை செலுத்த எவ்விதத்திலாகிலும் உட்பட்

டாவது நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருக்கிற சகலமானவர்களும் உரிமைச்சுதந்தரத்தில் அனுபவிக்கும்படி ரிஜிஸ்தராயிருக்கிற நிலத்துக் குடைய சகலமானவர்களும் அடங்குவார்கள் :

"மலஜலபாதை மறைவிடம்".

(10) "மலஜலபாதை மறைவிடம்" என்பதிலேகக்குசு என் பதும், வாடர்க்ளாஸெட் என்னும் தண்ணீர் வேகம்ாய் விழுவதனல் மலம் அடித்துக்கொண் டு போகும் கக்குசு என்பதும், மூத்திரம் பெய் வதற்கான இடம் என்பதும் அடங்கும் :

"லெஜிஸ்லேடிவ் கௌன்சில்".

(10-A) "லெஜிஸ்லேடிவ் கௌன்சில்" என்பதற்கு சென்னை கவர்னருடைய லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் என்று அர்த்தமாகும்:

"பிரதேச அதிகாரி".

(10-B) "பிரதேச அதிகாரி" என்பது ஒரு கண்டோன் மெண்டு அதிகாரியையும் அணைக்கும் :

"லோகல் போர்டு".

(11) "லோகல் போர்டு" என்பது யாதொரு டிஸ்டிரிக்ட்டு போர்டு என்றும், தாலூகா போர்டு என்றும் அல்லது பஞ்சாயத்து என்றும் அர்த்தமாவது மல்லாமல், அந்த சொற்றொடரில் இம்மூன்று சொற்றொடர்களும் அடங்கும் :

"லோகல் பண்ட்".

(12) "லோகல் பண்ட்" (பிரதேச நிதி) "என்பது-டிஸ்ட்ரிக்ட் பண்ட் என்றும் தாலூகா பண்ட் என்றும் அல்லது பஞ்சாயத்து பண்ட் என்றும் அர்த்த மாவது மல்லாமல், அந்த சொற்றொடரில் இம் மூன்று சொற்றொடர்களும் அடங்கும் :

"அசங்கியம் அல்லது சங்கடம்".

(13) "அசங்கியம் அல்லது சங்கடம்" என்பதில்-கட்புலன், நாசிப்புலன் அல்லது செவிப் புலனுக்கு, தீங்கா வது அபாயமாவது இடைஞ்சலாவது தோஷ மாவது உண்டுபண்ணுகிறதாகவோ அல்லது வெகுசாய் உண்டு பண்ணக் கூடியதாகவோ இருக்கும் அல்லது பிரா ணனுக்கு அபாயகரமாகவோ தேகாரோக்கியத்துக்கு அல்லது சொத் துக்குத் தீங்கு செய்வதாகவோ இருக்கும் அல்லது இருக்கக் கூடிய யாதொரு செய்கை அல்லது செய்யாதொழிகை அல்லது இடம் அல் லது பொருள் என்பதும் அடங்கும் :

(13-A) "சாதாரணகாலி" என்பதற்கு நிரமமான காலமுடிவி
"சாதாரண காலி". னால் நேரும் ஒருகாலி என்றும் :

"சாதாரண எலெக்ஷன்" என்பதற்கு ஒரு சாதாரணகாலி
"சாதாரண எலெக்ஷன்". ஏற்பட்டதினால் நடக்கும் ஒரு எலெக்ஷன் என்றும் அர்த்தமாகும் :

(14) "சொந்தக்காரர்" என்பதிலே (a) அந்தந்த காலத்தில்
"சொந்தக்காரர்". சொந்தத்துக்காகவாவது, வேறொருவருக்காக ஏஜெண்ட், ட்ரஸ்டி. கார்டியன் (சம்ரட்சகர்), மானேஜர் (நிர்வாக கர்த்தர்) அல்லது நிசிவராக வாவது, மதசம்மந்தமான அல்லது தர்ம சம்மந்தமான யாதொரு காரியத்துக்காகவாவது எந்த சொத்தின் விஷயமாக ஷெ பதம் உபயோகிக்கப் படுகிறதோ அந்த சொத்தின் வாடகையை யாகிலும் வரும்படியையாகிலும் பெற்றுக்கொள்ளுகிற அல்லது பெற்றுக் கொள்ளுவதற்கு அர்ஹராயிருக்கிற நபரென்பதும், (b) எந்த பிராணி அல்லது வாகனத்து விஷயமாக ஷெ பதம் உபயோகிக்கப்படுகிறதோ அந்தப் பிராணி அல்லது வாகனத்தை அந்தந்தக் காலத்தில் தம் விசாரணையில் வைத்திருக்கிற நபரென்பதும் அடங்கும் :

(15) "பல்லக்கு" என்பதிலே, கழிகளைக் கொண்டு ஆட்களால்
"பல்லக்கு". சுமக்கப்படும் டான்ஜன், மாஞ்சில், நாற்காலி என்பவைகளும் அடங்கும்; ஆனால் குழந்தைகள் அல்லது வயதானவர்கள் அல்லது வியாதியஸ்தர்களைக் கொண்டு போவதற்காக உபயோகிக்கப்படும் தொட்டில்கள் அல்லது கட்டில்கள் அதில் அடங்கமாட்டா :

(15-A) "பஞ்சாயத்து" என்பதற்கு இந்த சட்டத்தின் 6-வது
"பஞ்சாயத்து". பிரிவு 1-வது உபப்பிரிவின் கீழ் ஒரு கிராமத்தின் பிரதேச நிர்வாகத்திற்காக ஏற்படுத்தப்படும் ஒரு கூட்டம் என்று அர்த்தமாகும் :

(15-B) "பஞ்சாயத்தார்" என்பது ஒரு பஞ்சாயத்தினுடைய
"பஞ்சாயத்தார்". அங்கத்தினர்களைக் குறிக்கும் :

(16) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது இந்த ஆக்டின்படி செய்
"நிர்ணயிக்கப்பட்ட" யப்பட்ட விதிகளினால் பிரதேச கவர்ன்மென்டாரால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும் :

(17) "சொந்தமான (ப்ரைவேட்)பாட்டை" என்பது-"பொதுவான பாட்டை" யாயிராத யாதொரு தெரு-பாட்டை-சதுக்கம்-வெளியிடம்-முடுக்குச்சந்து-வழி அல்லது குதிரை யேறிச் செல்லும் பாதை என்று அர்த்தமாகும்; ஆனால் அதில், ஒரு வளவின் சொந்தக்காரர் அந்தவளவுக்குப் போவதற்காவது அதன் சௌகரியமான உபயோகத்திற்காவது தம்முடைய சொந்த நிலத்தில் ஏற்படுத்திக்கொண்ட வழி என்பது அடங்காது;

"சொந்தமான பாட்டை".

(18) "பொதுவான பாட்டை" என்பது-ஜனங்கள் போக்குவரத்தாயிருந்தாலும் இராவிட்டாலும், அவர்களுக்கு வழிநடை பாத்தியதை உண்டாயிருக்கிற யாதொரு தெரு-பாட்டை-சதுக்கம்-வெளியிடம்-முடுக்குச்சந்து - வழி அல்லது குதிரை யேறிச் செல்லும் பாதை என்று அர்த்தமாகும்; மேலும் அதில்—

"பொதுவான பாட்டை".

(a) பொதுஜன உபயோகத்திற்காகக் கட்டியிருக்கிற யாதொரு வாராவதியின்மேல் போகிற வழி அல்லது மேடான பாதை என்பதும்;

(b) அப்படிப்பட்ட யாதொரு பாட்டை பொதுஜன உபயோகத்திற்காகக் கட்டியிருக்கிற வாராவதி அல்லது மேடான பாதையோடு சேர்ந்த ஒற்றடிப் பாதை என்பதும்;

(c) அப்படிப்பட்ட யாதொரு பாட்டை, பொதுஜன உபயோகத்திற்காகக் கட்டியிருக்கிற வாராவதி அல்லது மேடான பாதையோடு சேர்ந்திருக்கிற சாக்கடைக் கால்கள் என்பதும், வழிக்குப் பக்கத்திலிருக்கிற சொத்தானது ஒருவருக்கே உரிய சொத்தாயிருந்தாலுஞ் சரி, கவர்ன்மென்டாருக்குச் சொந்தமான சொத்தாயிருந்தாலுஞ் சரி, அதன் எல்லைகள் வரையிலே வழியின் இருபக்கத்திலும் யாதொரு தளவரிசை, தாழ்வாரம் அல்லது வேறே கட்டுக் கோப்பு கவிந்தாகிலும் கவியாமலாகிலும் இருக்கிற நிலமென்பதும் அடங்கும்:

(19) யாதொரு நபர் யாதொரு வீட்டின் எந்த பாகத்தையாகிலும் தூங்குவதற்கான அறையாக சில காலங்களில் உபயோகித்தால், அவர் - அப்படிப்பட்ட வீட்டில் தம்முடைய "வாசஸ்தலத்தை" உடையவராக அல்லது அப்படிப்பட்ட வீட்டில் "வசிப்பவ" ராக எண்ணப்படுவார்; மேலும்:

"வாசஸ்தலம்"—"வசிக்க".

யாதொரு நபர் எப்போதாகிலும் அப்படிப்பட்ட யாதொரு வீட்டுக்கு இஷ்டப்பட்டால் திரும்பிவரக் கூடியவராயிருந்து அப்படி திரும்பிவரும் உத்தேசத்தை விட்டுவிடாதிருந்தால், அவர் அந்த வீட்டில் இராத காரணத்தினாலேயேயாவது வேறே இடத்திலுள்ள இன்னொரு குடியிருப்பு வீட்டில் அவர் வசிப்பதினாலேயேயாவது அவர் முதலில் சொன்ன வீட்டில் வாசஞ்செய்வது நின்றுபோய் விட்டதாக எண்ணக்கூடாது :

"ரெவினியூ தாலூகா".

(19-A) "ரெவினியூ தாலூகா" என்பதற்கு ரெவினியூ நிர்வாகத்திற்காக ஒரு தாசில்தார் அல்லது பிரத்தியேக அதிகாரமுள்ள ஒரு டிப்டி தாசில்தார் இவர்களின் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீரணத்தில் மேற்சொல்லிய 7-வது வாக்கியம் (a) முதல் (c) வரையிலுமுள்ள உபவாக்கியங்களில் காணப்பட்டிருக்கும் விஸ்தீரணங்கள் ஏதாவது இருப்பின் அவைகள் நீங்கலாக மற்ற விஸ்தீரணம் என்று அர்த்தமாகும் :

"ரெவினியூ கிராமம்".

(19-B) "ரெவினியூ கிராமம்" என்பதற்கு கவர்ன்மென்டு ரெவினியூ கணக்குகளில் ஒரு கிராமமென்று அங்கீகரிக்கப்பட்ட யாதொரு பிரதேச விஸ்தீரணத்தில் மேலே 7-வது வாக்கியத்தின் (a) முதல் (c) வரையிலுமுள்ள உப வாக்கியத்தில் குறிக்கப்பட்டிருக்கும் யாதொரு விஸ்தீரணமிருந்தால் அவைகள் நீங்கலாக மற்ற விஸ்தீரணம் என்று அர்த்தமாகும்.

"சம்பளம்".

(20) "சம்பளம்" என்பது சம்பளமும் பதில் உத்தியோக சம்பளமுமென்றாவது, கமிஷனாகக் கொடுக்கப்படும் தொகை யென்றாவது அர்த்தமாகும் : மேலும், அதில் (எக்ஸ்சேஞ் காம்பென்சேஷன்) பரிவர்த்தன பிரதிபலன்-வர்த்தனை என்பது அடங்குமேயல்லாமல், வீட்டுக் குடிக்கூலி, வண்டி வாடகை அல்லது பிரயாணச் சிலவுக்காகக் கொடுக்கப்படும் வர்த்தனை யென்பது அடங்காது :

"உபநில சுவான்தார்".

(21) "உபநில சுவான்தார்" என்னும் பதமானது ஒரு நபர் நில சுவான்தாராக இல்லாமலிருந்து ஆனால்,—

(a) (i) ஒன்று அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கை யுள்ள ரெவினியூ கிராமங்களையுடைய ஒரு ஸ்டேட் அல்லது ஆஸ்தி யில் எந்த ஒரு பாகத்தையாவது அந்த ஆஸ்தியின் நில சுவான்தார ரால் ஏற்படுத்தப்பட்ட அல்லது நடத்திவரப்பட்ட அல்லது அங்கீக ரிக்கப்பட்ட யாதொரு கீழ் குத்தகை பெற்றிருக்கும் ஒரு நபரையா வது, அல்லது

(ii) அப்படிப்பட்ட கிராமம் அல்லது கிராமங்களுடைய சென்டு பாக்கியை நிலசுவான்தாருடைய ஏஜெண்டு அல்லது சேவ கன் (Servant) இந்த ஹோதாக்களில்லாமல் வேறு விதமாக வசூல் செய்வதற்கு உரிமையுள்ள ஒரு நபரையாவது குறிக்கும்; இன்னும்

(b) அந்த நபர் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதிகளின் கீழ் கலெக்டருடைய ஆபீஸில் ஒரு உபநிலசுவான்தாராக ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

விவரணம் :—இந்த வாக்கியத்தில் "ஆஸ்தி" என்னும் பதத் திற்கு 1894-ம் வருஷத்திய சென்னை ப்ரொப்ரைட்டரி எஸ்டேட்ஸ் வில் லேஜ் சர்விஸ் ஆக்டு (Madras Proprietory Estates Village Service Act) ல் "ஆஸ்தி" என்னும் பதத்தின் அர்த்த விளக்கத் தின் (a), (b), (c) இந்த உபவாக்கியங்களில்-எந்த உபவாக்கியங்களின் கீழாவது ஏற்படும் ஒரு ஆஸ்தியைக் குறிக்கும். "சொந்தக்காரர்" என்னும் பதத்திற்கு மேற்சொல்லிய சட்டத்தில் எம்மாதிரி விவரிக்கப் பட்டிருக்கிறதோ அதே அர்த்தமாகும்;

(21-A) "தாலூக்கா" என்பதற்கு நான்காவது பிரிவின் 1-வது உபப்பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் ரெவி னியூ தாலூக்கா அல்லது அந்தப் பிரிவின் (2), (3) இந்த உப பிரிவுகளின் கீழ் ஏற்படுத்தப்படும் ரெவினியூ தாலூக்கா அல்லது விஸ்தீரணம் இவைகளை சந்தர்ப்பத் துக்குத் தகுந்தாப்போல் குறிப்பதாகும் :

"தாலூக்கா".

(21-B) "தாலூக்கா போர்டு" என்பதற்கு 6-வது பிரிவு 1-வது உபப்பிரிவின் கீழ் ஒரு தாலூக்காவின் பிரதேச நிர்வாகத்திற்காக அமைக்கப்படும் யாதொரு கூட்டம் என்று அர்த்தமாகும் :

"தாலூக்கா போர்டு."

(22) "பாயக்காரி" என்பதிலே - சந்தர்ப்பத்துக் கேற்றபடி நிலத்துக் குடையவருக்காவது இடையிலுள்ள நிலத்துக் குடையவருக்காவது குத்தகைத் தொகை செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும் நேராகவாகிலும் ஏஜென்ட் மூலமாகவாகிலும் அப்படிப்பட்ட நிலத்துக்குடையவர் அல்லது இடையிலுள்ள நிலத்துக்குடையவரின் கீழ் பூமியை அனுபவிக்கிற சகலமானவர்களும் என்பதும் அடங்கும்:

"பாயக்காரி".

(23) "கிராமம்" என்பது 5-வது பிரிவின்கீழ் ஒரு கிராமமென்று பிரசுரப்படுத்தப்படுகிற ஒரு பிரதேச விஸ்தீரணம் என்று அர்த்தமாகும்:

"கிராமம்".

(24) "வருஷம்" என்பது-பைனான்ஷியல் (அரசிறை) வருஷமென்று அர்த்தமாகும்.

"வருஷம்"

2-ம் பாகம்—லோகல் போர்டுகளை ஸ்தாபிப்பதும் அமைப்பதும் பரிபாலனஞ்செய்வதும்.

2-ம் அத்தியாயம்.

தாலூக்காக்களும், கிராமங்களும்.

4. (1) இந்தப் பிரிவில் (2) (3) உபப் பிரிவுகளில் வேறே விதமாக சொல்லப்பட்டிருந்தாலொழிய ஒவ்வொரு ரெவினியூ தாலூக்காவும் இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஒரு தாலூக்கா வென்று கருதப்படவேண்டும்.

"தாலூக்காக்கள்"

(2) (a) பிரதேச கவர்ன்மெண்டார் (Local Government) ஒரு அறிக்கையினால் ஒரே ஜில்லாவில் அடுத்தடுத்துள்ள இரண்டு அல்லது அதற்கு அதிகப்பட்ட ரெவின்யூ தாலூக்காக்களை இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஒரு தாலூக்காவாக ஏற்படுத்தி அதற்கு ஒரு பெயர் கொடுக்கலாம்.

(b) பிரதேச கவர்ன்மெண்டார் (Local Government) ஒரு அறிக்கையினால்—

(i) (a) என்னும் உபவாக்கியத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டு அதில் அடங்கியிருக்கும் யாதொரு தாலூக்காவை அதிலிருந்து நீக்கிவிடலாம், அல்லது

(ii) அப்படிப்பட்ட ஒரு தாலூக்காவில் அதன் அருகாமையி லுள்ள யாதொரு செவின்யூ தாலூக்காவைச் சேர்க்கலாம், அல்லது

(iii) (a) என்னும் உப வாக்கியத்தின்கீழ் செய்யப்பட் டிருக்கும் யாதொரு அறிக்கையை ரத்து செய்யலாம், அல்லது

(iv) (a) என்னும் உப வாக்கியத்தின்கீழ் பெயரிடப்பட் டிருக்கும் ஒரு தாலூக்காவின் பெயரை மாற்றலாம்.

(c) (a) அல்லது (b) இந்த உபவாக்கியங்களின்கீழ், ஒரு அறிக்கையை வெளியிடுவதற்குமுன், ப்ரதேச கவர்ன்மென்டார் அப்படிப்பட்ட பிரசுரமானது வெளிப்படுவதினால் பாதிக்கப்படும் தாலூக்காபோர்டு அல்லது தாலூக்காபோர்டுகளுக்கு அப்படி செய் யாதிருப்பதற்கு ஏதாவது காரணங்கள் இருந்தால் அதை தெரிவிக் கும்படி தகுந்த வசதி கொடுக்கவேண்டும். பிறகு அப்படிப்பட்ட தாலூக்கா போர்டு அல்லது தாலூக்கா போர்டுகள் ஏதாவது ஆக்ஷே பணைகளை அல்லது சமாதானங்களைத் தெரிவிக்கும்பக்ஷத்தில் அவை களைக் கவனிக்கவேண்டும்.

(3) (a) மேலே (1), (2) உபப் பிரிவுகளில் என்ன சொல்லப் பட்டிருந்தபோதிலும் லோகல் கவர்ன்மென்டார் சில தனிமையான சந்தர்ப்பங்களில் ஒரு அறிக்கையினால் ஒரு டிஸ்டிரிக்டின் எந்த பாகத்தையாவது இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஒரு தாலூக்கா வாக ஏற்படுத்தி அந்த தாலூக்காவுக்கு ஒரு பெயரைக் கொடுக்க லாம்.

(b) லோகல் கவர்ன்மென்டார் ஒரு பிரசுரத்தினால்,

(i) (a) என்னும் உபவாக்கியத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட தாலூக்காவிலிருந்து அதில் அடங்கியிருக்கும் யாதொரு குறிப்பிட்ட விஸ்தீரணத்தை நீக்கிவிடலாம், அல்லது

(ii) அப்படிப்பட்ட தாலூக்காவில் அதன் அருகாமையி லுள்ள யாதொரு விஸ்தீரணத்தைச் சேர்க்கலாம், அல்லது

(iii) (a) என்னும் உபவாக்கியத்தின்கீழ் வெளியிடப்பட் டிருக்கும் யாதொரு பிரசுரத்தை ரத்துசெய்துவிடலாம், அல்லது

(iv) (a) என்னும் உபவாக்கியத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு தாலூக்காவின் பெயரை மாற்றலாம்.

(c) மேலேசொல்லிய (a) அல்லது (b) உபப்பிரிவுகளின்கீழ் ஒரு அறிக்கையை வெளியிடுவதற்குமுன் (2) வது உபப்பிரிவின் (c) என்னும் உப வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கும் நடவடிக்கை முறையானது கவனிக்கப்பட வேண்டும். இன்னும் அந்த பிரசுரமானது வெளியிடப்படுவதில் சம்பந்தப்பட்ட டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலூக்கா போர்டு இவைகளினுடைய சம்மதமும் பெறப்பட வேண்டும்.

(4) (2) வது உபப்பிரிவின் (a) என்னும் வாக்கியத்தின்கீழாவது அல்லது (b) என்னும் வாக்கியத்தின் (ii) வது உபவாக்கியத்தின்கீழாவது அல்லது (3)வது உபப்பிரிவின் (a) என்னும் வாக்கியத்தின் கீழாவது அல்லது (b) என்னும் வாக்கியத்தின் (ii) உபவாக்கியத்தின்கீழாவது வெளியிடப்படும் ஒவ்வொரு அறிக்கையும் அதற்காக இருந்த ஒரு காரண அறிவிப்புடன் இருக்கவேண்டும். இன்னும் அந்த அறிக்கையானது லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் பதிரங்கப் படுத்தப்படவேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவு இந்த சட்டத்தில் புதியதாக சேர்க்கப்பட்ட பிரிவு. இனி ஒவ்வொரு தாலூக்காவிலும் சாதாரணமாக ஒவ்வொரு தாலூக்கா போர்டு அமைக்கப்படவேண்டும். ஆனால் கவர்ன்மென்டாருக்கு யுக்தமாகத் தோன்றும் பக்ஷத்தில் அந்த தாலூக்காவின் விஸ்தீர்ணத்தை எந்தந்த விதமாக மாற்றிவிடலாமோ அந்தந்த விதமாக மாற்றிவிடும்படி இப்பிரிவினால் அவர்களுக்கு அதிகாரப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு தாலூக்கா போர்டின் விஸ்தீரண விஷயமாக ஏதாவது மாறுதல் ஏற்படவேண்டுமென்று கவர்ன்மென்டார் அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் அதின் விஷயமாக அந்த தாலூக்கா போர்டுக்கு தெரிவித்து அதின் ஆக்ஷேபனைகளை கவனித்த பிறகுதான் மேமாறுதல்களைச் செய்யவேண்டும். இவைகளின் விஷயமாக கவர்ன்மென்டார் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் (Legislative Council) முன்பாக தெரிவிக்கவேண்டும். கௌன்ஸிலிலும் பிரசுரம் செய்யவேண்டும். இப்படிச் செய்யாமல் இருக்கும் பக்ஷத்தில் கவர்ன்மென்டாருடைய செய்கையானது சட்ட விரோதமாகும்.

"கிராமங்கள்."

5. (1) பிரதேச கவர்ன்மெண்டார் விதிகளில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் ஒரு அறிக்கையை விளம்பரம் செய்து அதனால் ஒரு ரெவின்யூ தாலூக்காவின் யாதொரு பாகத்தை இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஒரு கிராமமாயிருக்க வேண்டுமென்று ஸ்தாபிதம் செய்து அந்த கிராமத்திற்கு ஒரு பெயரையும் குறிப்பிடலாம்.

(2) பிரதேச கவர்ன்மென்டார் விதிகளில் குறிப்பிட்டிருக்கிற பிரகாரம் ஒரு அறிக்கையை விளம்பரம் செய்து அதனால்—

(a) ஒரு கிராமத்திலிருந்து அதில் அடங்கிய யாதொரு குறிப்பிட்ட விஸ்தீரணத்தை ஒதுக்கி வைக்கலாம், அல்லது

(b) ஒரு கிராமத்தில் அதன் அருகாமையி லுள்ளதும், அதே செவின்யூ தாலுக்காவில் உள்ளதுமான யாதொரு விஸ்தீரணத்தைச் சேர்க்கலாம், அல்லது

(c) (1) வது உபப்பிரிவின் கீழ் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு பிரசுரத்தை ரத்து செய்யலாம், அல்லது

(d) (1) வது உபப்பிரிவின்கீழ் குறிக்கப்பட்டிருக்கும் ஒரு கிராமத்தின் பெயரை மாற்றலாம்.

(3) (2) வது உப பிரிவின்கீழ் யாதொரு அறிக்கையை வெளியிடுவதற்குமுன் பிரதேச கவர்ன்மென்டார் அப்படிப்பட்ட பிரசுரத்தினால் பாதிக்கப்படும் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துகள் இவைகளுக்கு அந்தப் பிரேரேபனைக்கு விரோதமாக தகுந்தக் காரணங்களைத் தெரிவிக்க நியாயமான வசதிகளை கொடுக்கவேண்டும். இன்னும் அந்தபஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துகள் ஏதாவது சமாதானங்களை அல்லது ஆக்ஷேபனைகளை தெரிவித்துக்கொள்ளும்பக்ஷத்தில் அவைகளை கவனிக்க வேண்டும்.

குறிப்புகள்.

மேலே (4)-வது பிரிவில் அனுசரிக்கப்படும்படி குறிப்பிட்டிருக்கும் முறைகளையே கிராமங்கள் விஷயமாகவும் கவர்ன்மென்டார் நடத்திக்கொள்ள வேண்டுமென்று இப்பிரிவில் கண்டுள்ளது.

1930–ம் வருஷத்தில் அமுலுக்கு வந்திருக்கும் லோகல் போர்டு ஆக்டின் பிரகாரம் யூனியன் போர்டுகள் என்னும் பெயரானது நீக்கப்பட்டு அவைகளுக்குப்பதிலாக பஞ்சாயத்துகள் என்னும் பெயர்கொடுக்கப்பட்டிருக்கிறது. 1930–ம் ஜூத்திய திருத்த சட்டத்தின் 2-வது பிரிவின் பிரகாரம் பழைய பஞ்சாயத்துகள் அடியோடே எடுத்துவிடப்பட்டு அவைகளின் ஸ்தானத்தில் இந்த சட்டத்தின் கீழ் ஏற்படும் புதிய பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டுள்ளன. 1920–ம் ஜூத்திய ரொம பஞ்சாயத்து சட்டப்பிரகாரம் கிராம பஞ்சாயத்துகள் செவினியூ அதிகாரிகளின் மேற்பார்வைக்கு உட்பட்டு வந்தன. இப்பொழுது அந்த சட்டமானது அடியோடே எடுத்துவிடப்பட்டதால் கிராம பஞ்சாயத்துகளும் "லோகல் போர்டு" என்னும் மகிமையுடன் லோகல்

போர்டு சட்டத்தின் கீழ் பல அதிகாரங்களையும் பெற்றதாய் ஏற்பட்டு விட்டன.

3-ம் அத்தியாயம்.

லோகல் போர்டுகளை அமைப்பதும் மேல்விசாரணை செய்வதும்.

லோகல் போர்டுகளை அமைப்பதும், அவைகள் சட்டப்படி சேர்ந்தவைகளாவதும்.

6. (1) ஒவ்வொரு டிஸ்ட்ரிக்டுக்காக ஒரு டிஸ்ட்ரிக்ட் போர்டும், ஒவ்வொரு தாலூக்காவுக்காகவும் ஒரு தாலூக்கா போர்டும், ஒவ்வொரு கிராமத்துக்காக ஒரு பஞ்சாயத்தும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(2) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, எந்தப் பிரதேச விஸ்தீரணத்துக்காக லோகல் போர்டு ஏற்படுத்தப்படுகிறதோ அந்தப் பிரதேச விஸ்தீரணத்தின் பரிபாலனமானது அந்த லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிக்கும்; ஆனால் அந்த லோகல் போர்டார் இந்த ஆக்டினாலாவது வேறே யாதொரு சட்டத்தினாலாவது அதன்படியாவது அதன் ப்ரெஸிடென்டுக்காகிலும் இதர லோகல் போர்டுகளுக்காகிலும் இதர அதிகாரசபைகளுக்காகிலும் வெளிப்படையாய் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட அலுவல்களைச் செய்ய அர்ஹராகமாட்டார்கள்:

ஆனால் ஒரு டிஸ்டிரிக்டின் யாதொரு பாகத்தில் தாலூக்கா போர்டு இல்லாமலிருக்குமானால் அந்த டிஸ்டிரிக்ட் போர்டானது, அந்த தாலூக்கா போர்டினுடைய அதிகாரங்களைச் செலுத்தி கடமைகளை நடத்தி காரியங்களைச் செய்து தாலூக்காபோர்டின் வரவுகளை அடைந்து அந்த தாலூக்கா போர்டு செலவழிக்கவேண்டிய தொகைகளை செலவழித்து வரவேண்டும். டிஸ்டிரிக்ட் போர்டினுடைய ப்ரெஸிடென்டு அந்த டிஸ்டிரிக்டின் அப்படிப்பட்ட யாதொரு பாகத்தில் அந்த தாலூக்காபோர்டினுடைய அதிகாரங்களைச் செலுத்தி கடமைகளைத் தீர்த்து ஒரு தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து வரவேண்டும்;

ஆனல் இன்னும் ஒரு தாலூக்காவின் எந்த ஒரு பாகத்திலாவது யாதொரு பஞ்சாயத்து இல்லாமல் இருக்கும் பக்ஷத்தில் அந்த தாலூக்காவிலுள்ள தாலூக்கா போர்டானது அந்த பஞ்சாயத்துக்கு சம்மந்தப்பட்ட அதிகாரங்களை செலுத்திச் கடமைகளைத் தீர்த்து காரியங்களைச்செய்து பஞ்சாயத்திற்குச் சேரவேண்டிய தொகைகளைப் பெற்று பஞ்சாயத்து செலவிடவேண்டிய தொகைகளை செலவிட்டு வரவேண்டும். இன்னும் அந்த தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டு அந்த தாலூக்காவில் அப்படிப்பட்ட ஒருபாகத்தில் பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டினுடைய அதிகாரங்களைச் செலுத்தி கடமைகளைத் தீர்த்து அலுவல்களைச் செய்யவேண்டும்.

(3) ஒவ்வொரு லோகல் போர்டும் மேற்சொல்லிய 4 அல்லது 5-வது பிரிவின் கீழ் செய்யப்பட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிட்ட மாதிரி சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாப்போல் அந்தந்த ஜில்லா, ரிவின்யூ தாலூக்கா, அல்லது தாலூக்காக்களின் பெயர் அல்லது கிராமம் இவைகளின் பெயரைப்பெற்று சட்டப்படிக்குண்டான ஒருகூட்டமாயிருக்க வேண்டும்; மேலும், அந்த தாலூக்கா போர்டு இடைவிடாமல் ஒன்றன்பின் ஒன்றாய் வந்துகொண்டு பொதுவான முத்திரை யுடைய தாயுமிருக்கவேண்டும்; அல்லாமலும் இந்த சட்டத்தின்படியாவது வேறே யாதொரு சட்டத்தின்படியாவது அல்லது இவைகளின் கீழாவது ஏற்படுத்தப்பட்ட யாதொரு நிர்பந்தம் அல்லது வரையறைக்குட்பட்டு அவர்கள் சட்டப்படிக்கான தங்களுடைய பெயரால் வியாஜ்ஜியம் தொடரவும், அல்லது பிறரால் வியஜ்ஜியம் தொடரப்படவும் அசையும் அல்லது அசையாப்பொருளை அடையவும், வைத்திருக்கவும், மாற்றவும், ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்துக் கொள்ளவும், தாங்கள் என்னகாரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்களோ அந்தக்காரியங்களுக்கு அவசியமாகவாகிலும் தகுதியாகவாகிலும் யுக்தமாகவாகிலும் இருக்கும் சகல விஷயங்களையும் செய்யவும் யோக்கியதை யுடையவர்களாவார்கள்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவில் பழய சட்டத்தின் கீழுள்ள யூனியன் போர்டு என்னும் லோகல் போர்டுகளுடைய ஸ்தானத்தில் பஞ்சாயத்தென்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் போர்டும், தாலூகா போர்டும் இனி "கிராமம்" என்று சொல்லப்படும் விஸ்தீரணத்திற்கு ஒரு பஞ்சாயத்து

என்னுமொரு கூட்டமும், தங்களாதினத்திலுள்ள வில்லிரணங்களை இந்த சட்டத்திலுள்ள கோட்பாடுகளுக் குட்பட்டு பரிபாலித்து வரவேண்டுமென்றுள்ளது. இந்த சட்டத்தின்கீழ் சில அலுவல்களை ப்ரெஸிடென்ட் மாத்திரம் நடத்தி வரவேண்டுமென்றும், சில அலுவல்களை லோகல் போர்டு முழுமையும் சேர்ந்து நடத்திவரவேண்டுமென்று முள்ளது. ஆனால், ப்ரெஸிடென்ட் மாத்திரம் நடத்தி வரவேண்டுமென்று காணப்பட்ட அலுவல்களை தணிக்கை செய்யவோ அல்லது மேற்பார்வை பார்க்கவோ அந்த லோகல் போர்டுக்கும், கவர்ன்மென்டுக்கும் 43-முதல் 46-வரையிலுமுள்ள பிரிவுகளில் பூரண அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் ஒரு ப்ரெஸிடென்டானவர் தாம் நடத்தவேண்டிய அலுவல்களை எதேச்சையாக நடத்துவதற்கில்லை.

இந்த பிரிவில் 1930-ம் வருஷத்திய லோகல் போர்டு திருத்தச் சட்டத்தினால் மிகவும் ஸ்பஷ்டமாக தாலூக்கா போர்டும் அதன் ப்ரெஸிடென்டும், இல்லாத ஸ்தலங்களில் ஒரு டிஸ்டிரிக்ட் போர்டும் அதன் ப்ரெஸிடென்டும், ஒரு பஞ்சாயத்து அல்லது அதன் ப்ரெஸிடென்டில்லாத ஸ்தலங்களில் ஒரு தாலூக்கா போர்டும் அதன் ப்ரெஸிடென்டும் முறையே அவரவர்களுடைய அதிகாரங்களைச் செலுத்தி கடமைகளை தீர்த்து அலுவல்களைச் செய்யவும் வேண்டுமென்றுள்ளது. ஆகையால் தென்னிந்தியாவில் இனி யாதொரு ஸ்தலமும் ஒரு லோகல் போர்டினுடைய ஆதீனத்தின்கீழ் வராம லிருக்க முடியாது.

(3) வது உபப் பிரிவு மிகவும் முக்கியமானதாகும். இப்பிரிவினால் ஒவ்வொரு லோகல் போர்டினுடைய அந்தஸ்தும் நிலமையும் என்னவென்று ஸ்பஷ்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு லோகல் போர்டு என்பது சட்டப் பிரகாரம் தனிமையானதாயும், உயிருள்ள ஒரு நபரைப்போல் சொத்துக்களை பெறவும், மற்ற இதர காரியங்களைச் செய்யவும், ஒரு அந்தஸ்துள்ளதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதாவது ஒரு லோகல் போர்டு என்பது அதன் ப்ரெஸிடென்டும், அங்கத்தினர்கள் இவர்களை மாத்திரம் குறிக்காமல் இவர்களையும்விட, இவர்களுக்கும் மேலான ஒரு நிலைமையையுடையதாயிருக்கும். ஆகையால் ஒரு லோகல்போர்டில் சில அங்கத்தினர்கள் குறைந்து விட்டாலும் அல்லது நின்று விட்டாலும், அதனுடைய நிலைமையாவது, அந்தஸ்தாவது போய்விடாது. ஒரு லோகல் போர்டு தாமாக நேரில் தமது உரிமைகளை செலாவணி யாக்குவதற்கு தாவா செய்யலாம்; அல்லது தாவா செய்யப்படலாம். இன்னும் ஒரு லோகல் போர்டானது தமக்கென்று தனியாக சொத்துக்களை சம்பாதிக்கவும், அவைகளை பராதீனம் செய்யவும், காண்டிராக்டுகளைச் செய்யவும், இன்னும் தமது அதிகாரமானது நடத்தப்படுவதற்கு வேண்டிய சகல செய்கைகளைச் செய்யவும் அதிகார முடையதாகும். ஒரு லோகல் போர்டின் உரிமைகளென்னவென்றும், எவ்வளவு தூரம் வரையிலும் அது தமது அதிகாரத்தைச் செய்யலாமென்றும், இச்

சட்டத்திலேயே ஏற்பட்டுள்ளது. ஒரு லோகல் போர்டானது தமக்குள்ள அதிகாரத்தை மீறி நடந்து கொள்ளும் பக்ஷத்தில் அதனால் மற்றொருவருக்கு அல்லது மற்றொரு லோகல் போர்டுக்கு யாதொரு நஷ்டம் அல்லது கெடுதி நேரிடும் பக்ஷத்தில், அதற்காக நஷ்டம் முதலியவைகளைப் பெறுவதற்கும், ஒரு லோகல் போர்டானது கான்டிராக்ட் விஷயமாகவோ அல்லது வேறு விஷயமாகவோ ஒரு நபருக்கு பாக்கியாயிருக்கும் பக்ஷத்தில் அதற்காக தாவா செய்யப்படவும் கடமைப்பட்டதாகும். ஒரு லோகல் போர்டானது தங்களுக்குள்ள அதிகாரத்தைச் செலுத்துவதில் சிவில் தாவாக்களுக்கு உட்படலாமே யொழிய கிரிமினல் அதிகாரத்திற்கு உட்படுவதற்கில்லை.

இனி ஒவ்வொரு டிஸ்டிரிக்டுக்கும் ஒரு டிஸ்டிரிக்ட் போர்டும், ஒவ்வொரு ரெவின்யூ தாலூக்காவிற்கும் ஒரு தாலூக்கா போர்டும், 4-அல்லது 5-வது பிரிவின் கீழ் கவர்ன்மென்டாரால் செய்யப்படும் ஒரு அறிக்கையினால் விளம் பரப்படுத்தப்படும் "கிராமம்" என்னும் ஒருவிஸ்தீரணத்திற்கு ஒருபஞ்சாயத்தும் இருக்கவேண்டுமென்று இப்பிரிவில் ஏற்பட்டுள்ளது. கிராம பஞ்சாயத்துகள் ரீகிவிடப்பட்டிருப்பதால் இனி அந்த பஞ்சாயத்துகளுக்குப் பதிலாக இந்த சட்டத்தின் கீழ் ஒரு பஞ்சாயத்தானது ஏற்படும். ஆகையால் இது வரையிலுமுள்ள யூனியன் போர்டுகளும் பஞ்சாயத்துகளென்று சொல்லப் படுமாகையால் இந்த சட்டத்தின் கீழுள்ள பஞ்சாயத்துகள் மிகவும் அதிகரிக்கப்பட்டிருக்கும். பழைய யூனியன் போர்டுகளுக்குள்ள அதிகாரங்களும் உரிமைகளுமன்னியில் பஞ்சாயத்துகளுக்கு இன்னுமதிகமான உரிமைகளும் அதிகாரங்களும் ஏற்பட்டுள்ளது.

ஒரு லோகல் போர்டானது அதன் அங்கத்தினர்கள் யாவரும் ஒன்று கூடி தமது காரியங்களை கவனிக்கும்போதுதான் தமது அலுவல்களை செலுத்துவதாக ஏற்படும். அதாவது ஒவ்வொரு அங்கத்தினரும் தமது வீட்டிற்குள்ளிருந்துகொண்டு எழுத்து மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ லோகல் போர்டினுடைய காரியங்களைச் செய்வதற்கில்லை (a). ஒவ்வொரு லோகல் போர்டும் ஜனங்களுக்கு சௌகரியமாக இருக்கும்படியாகத் தான் தமது செல்வாக்கை நடத்திவர வேண்டுமேயொழிய அதற்கு விரோதமாக செய்வதற்கில்லை (b). ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடெண்டு அந்த லோகல் போர்டிலிருந்து ராஜிநாமா செய்வதாயிருந்தால் லோகல் போர்டின் மீட்டிங்கு முன்பாக அந்த ராஜிநாமாவானது வந்தால் தான் அது அமுலுக்கு வருவதாக ஏற்படும் (a). 16-வது பிரிவைப் பார்க்க.)

ஒரு லோகல் போர்டு என்பது தன்னுடைய அங்கத்தினர் ப்ரெஸிடெண்டு எல்லாரைக்காட்டிலும் தனிமையானதோர் சங்கமாகும். அதற்கு

(a) T. சிவசங்கரம் பிள்ளை vs. இந்தியா சர்வர்த்தி. 56. M. L. J. 157 =1929 A. I. R. Mad. 8=1 அகில இந்தியா லா ஜர்னல் 6.

(b) சிதம்பரம் முனிசிபல் கௌன்சில் vs. சுப்பிரமணிய அய்யர்=55. M. L. J. 495=A. I. R. 1928. மதுரை 1157.

அழிவென்பதே கிடையாது. அங்கத்தினர்கள் யாராவது நின்றுவிட்டதனலும் அல்லது அடியோடே இறந்துவிட்டதனலும் அதற்கு யாதொரு பங்கும் கிடையாது. எனென்றால் அவருடைய ஸ்தானத்தில் உடனே மற்றொருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். ஒரு ப்ரெஸிடென்டு ஒரு லோகல் போர்டினுடைய ஏஜெண்டு அல்ல. ஆகையால், ஒரு ப்ரெஸிடென்டு அல்லாமல் வேறொருவர் மூலமாகவும் ப்ரெஸிடென்டினுடைய முயற்சியல்லாமல் தாமாகவே ஒரு காரியத்தைச் செய்யலாம். (a)

ஒரு லோகல் போர்டுக்கு தனியாக சொத்துக்களை பெறவும் அவைகளைக்காப்பாற்றவும் இதரர்களுக்கு மாற்றவும் அவைகளின் விஷயமாக கான்டிராக்டுகளைசெய்யவும்உரிமையுண்டு. லோகல்போர்டு சட்டத்திலேயேஇனி பின்னல் தெரிவிக்கப்படும் பலவித சொத்துக்களும் லோகல்போர்டினுடைய ஸ்வாதீனத்திலிருக்க வேண்டுமென்றுள்ளது. ஆனால் என்னென்ன சொத்துக்கள் லோகல்போர்டினுடைய ஸ்வாதீனத்திலோ அல்லதுசொத்தத்திலோ இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறதோ அவை விஷயமாக அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தனியாக சொந்த உரிமை பாராட்டுவதற்கில்லை. அவை கடைசியாக ஜனங்களுடையதேயாகும். ஆனல், பொதுஜன சௌக்கிய பரிபாலனத்துக்காக அவைகளைக் காப்பாற்றும் சொந்த உரிமையானது லோகல் போர்டினுடைய ஸ்வாதீனத்தில் இருக்கும்படியாக இந்த சட்டமானது ஏற்படுத்தியுள்ளது.

இப்பொழுது, சாதாரணமாக, வீதிகளும், ரஸ்தாக்களும், கிராமங்களிலுள்ள தெருக்களும் லோகல் போர்டினுடைய பரிபாலனத்திற்கு அடங்கினதாகு மென்றுள்ளது. அவைகளில், எவரொருவராவது ஆக்கிரமித்து யாதொரு பாகத்தை தம்முடைய ஸ்வாதீனத்தில் வைத்துக் கொள்ளும்பக்ஷத்தில் அவைகளினுடைய உபயோகமும் அழகும் போய்விடுமென்று அதற்காக அவைகளை ஆக்கிரமிக்கக் கூடாதென்றும், அப்படி ஆக்கிரமிக்கும்பக்ஷத்தில் அவர்கள் தண்டனைக்குள்ளாவார்களென்றும் ஏற்பட்டுள்ளது. இதற்காக இந்த சட்டத்தின் 159-வது பிரிவும், 207-வது பிரிவும் வெகுசாதாரண பிரயோகப்படுத்தப்பட்டு வருகிறது. எந்தெந்த சந்தர்ப்பங்களில் ஒருவர் தண்டிக்கப்படலாமென்றும், லோகல் போர்டுகளினுடைய உரிமைகளும் கடமைகளும் என்னவென்றும் விரிவாக மேற்சொன்ன இரண்டு பிரிவுகளின் கீழ் குறிப்புகளில் சொல்லப்பட்டிருப்பதைக் காண்க.

"தாவா செய்யவும் செய்யப்படவும்" என்பதனல் சிவில் கோர்ட்டில் நடக்கும் தாவா என்று அர்த்தமாகும். சாதாரணமாக ஒரு லோகல் போர்டு விஷயமாக இந்த சட்டத்திற்குட்பட்டு ஒருவர் தமக்கு நேரிட்டிருக்கும் யாதொரு நஷ்டம் அல்லது உரிமை பங்கம் இவைகளுக்காக மற்றப்படி சட்டத்

(a) செக்ரட்டரி ஆப் ஸ்டேட் vs. தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு போர்டு 31. L. W. 508—1930. M. W. N. 328.

திஞல் தடுக்கப்பட்டாலொழிய தாவா செய்ய நியாயமுண்டு. உதாரணமாக ஒரு லோகல் போர்டானது ஒருவருடைய உரிமையை பங்கம் செய்யும்பக்கத்தில் அதை பெறுவதற்கு அந்த லோகல் போர்டை பார்ட்டியாக சேர்த்து தாவா செய்யலாம். ஆனல், தாவா செய்வதாக இருக்கும்பக்கத்தில் ஒருவருக்கு சட்ட ரூபமான ஒரு உரிமை பங்கம் நடந்ததாக ருசு ஏற்பட வேண்டும். லோகல் போர்டுகளின்மீது தாவா செய்வதைப் பற்றி விவரமாக 225-வது பிரிவிலும், அதன் கீழுள்ள குறிப்புகளிலும் விவரிக்கப்பட்டுள்ளது.

7. யாதொரு லோகல் போர்டிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையானது - அடியிற் கண்ட வரையறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்:—

லோகல் போர்டுகளிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியை.

	மெம்பர்களின் உச்ச சங்கியை.	மெம்பர்களின் அதம சங்கியை.
டிஸ்ட்ரிக்ட் போர்டுகள்..	52	24
தாலூக்கா போர்டுகள்...	24	12
பஞ்சாயத்துகள் ...	16	8

குறிப்புகள்.

பழைய பிரிவில் யூனியன் போர்டுகளுடைய அங்கத்தினர்களில் உச்ச சங்கியையானது 15–ஆகவும், அதம சங்கியையானது 7–ஆகவும் இருந்தது. இப்பொழுது இந்த புதிய பிரிவில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் (யூனியன் போர்டுகள் என்ற பெயர் மாறி பஞ்சாயத்தென்று ஏற்படுத்தப்பட்டது) 16–உச்ச சங்கியையாகவும், 8–அதம சங்கியையாகவும் ஏற்படுத்தப்பட்டது.

8. ஒவ்வொரு லோகல் போர்டின் எல்லா அங்கத்தினர்களும் இந்த ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

லோகல் போர்டுகளின் எல்லா அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவது.

குறிப்புகள்.

பழைய 8, 9-பிரிவுகளின் பிரகாரம் லோகல்போர்டுகளிலுள்ள அங்கத்தினர்கள் சிலர் எலெக்ஷன் மூலமாகவும், சிலர் நியமகங்கள் (Nomination) மூலமாகவும் தமது ஸ்தானங்களை அடைந்து வந்தனர். இப்பொழுது அவையெல்லாம் மாறிப்போய் புதிய 8, 9-பிரிவுகளில் எல்லா லோகல் போர்டு ஸ்தானங்களுக்கும் அங்கத்தினர்கள் யாவரும் தேர்தல் (Election) மூலமாகவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றுள்ளது.

இனி எல்லா லோகல் போர்டுகளும் ஜனப் பிரதிநிதிகள் நிறைந்த சங்கங்களாக இருக்குமே யல்லாது அங்கத்தினர்களே நியமகம் செய்துவந்த டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டினுடையவும், தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டினுடையவும், ஆகிய இவர்களுடைய ஆக்ஞைக் கடங்கி யிருக்க வேண்டாம் இனி யூனியன் போர்டு ப்ரெஸிடென்டுகளும் தாலூக்கா போர்டு பிரஸிடென்டுகளும் தங்களுடைய இச்சைபோல் பொதுஜனசௌகரியத்தை, உத்தேசித்து வேண்டிய செய்கைகளேச் செய்யலாம்.

லோகல் போர்டுகளில் சில ஜாதிகளுக்கும், ஸ்திரிகளுக்கும் ஸ்தானங்களே ஒதுக்கி வைக்கப்படுதல்.

9. (1) யாதொரு டிஸ்டிரிக்ட்டு போர்டிலாவது லோகல் கவர்ன்மெண்டார் தங்களுடைய சுயேச்சையில் ஒரு அறிக்கை மூலமாக அடிக்கடி—

(a) முஸ்லீம்கள்.
(b) இந்திய கிருஸ்தவர்கள்.
(c) ஆதித்திராவிடர்கள்.
(d) ஐரோப்பியர்கள்.
(e) ஆங்கில இந்தியர்கள், அல்லது
(f) ஸ்திரீகள்.

ஆகிய இவர்களுக்கு ஸ்தானங்களே ஒதுக்கிவைத்து அப்படிப்பட்ட ஸ்தானங்கள் எத்தனே இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கலாம்.

(2) யாதொரு தாலூக்கா போர்டில் லோகல் கவர்ன்மெண்டார் தங்களுடைய சுயேச்சையில் அடிக்கடி ஒரு அறிக்கை மூலமாக,

(a) முஸ்லீம்கள்.
(b) இந்திய கிருஸ்தவர்கள்.
(c) ஆதித்திராவிடர்கள் அல்லது
(d) ஸ்திரீகள்.

ஆகிய இவர்களுக்காக ஸ்தானங்களே ஒதுக்கி வைத்து அப்படிப்பட்ட ஸ்தானங்கள் எத்தனே இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கலாம்.

(3) யாதொரு பஞ்சாயத்தில் லோகல் கவர்ன்மெண்டார் தங்களுடைய சுயேச்சையில் விதிகளின் பிரகாரம் விளம்பரப்படுத்தப்பட்ட ஒரு அறிக்கை மூலமாக அடிக்கடி ஆதித்திராவிடர்

களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைத்து அப்படிப்பட்ட ஸ்தானங்கள் எத்தனை இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கலாம்.

(4) யாதொரு லோகல் போர்டிலும் மேலே (1) (2) அல்லது (3) உபப்பிரிவுகளில் கண்டிருக்கிற பிரகாரம் ஒதுக்கி வைக்கப்பட்ட ஸ்தானங்களின் சங்கியையானது 10-வது பிரிவின் கீழ் அந்த லோகல் போர்டுக்கு ஏற்படுத்தப்பட்ட மொத்த அங்கத்தினரின் சங்கியைக்கு கால்பங்குக்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும்.

(5) மேலே (1)-வது உபப்பிரிவில் (a) முதல் (e) வரையிலுமுள்ள வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கும் எந்த ஜாதியினருக்காவது யாதொரு டிஸ்டிரிக்ட்டு போர்டிலும், மேலே (2)-வது உபப்பிரிவில் (a) முதல் (c) வரையிலுமுள்ள வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கும் ஜாதியினர்களுக்காகவாவது யாதொரு தாலூக்கா போர்டிலும், அந்தந்த ஜாதியினர்கள் கடைசியாக நடந்த (census) ஜனஸங்கியையின் எண்ணிக்கையில் முறையே அந்த டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காவின் மொத்த ஜனத்தொகையில் பாதிக்கு மேலாக இருந்திருக்கும் பக்ஷத்தில் அவர்களுக்காக யாதொரு ஸ்தானமும் ஒதுக்கி வைக்கக்கூடாது.

(6) யாதொரு லோகல் போர்டில் எந்த ஜாதியினருக்காக ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதில் லோகல் கவர்ன்மென்டார் அந்த ஜாதியினரின் ஜனத்தொகையையும் அவர்களுடைய முக்கியத்தையும் சரியாக கவனிக்க வேண்டும்.

(7) மேலே (1) முதல் (3) வரையிலுமுள்ள உபப்பிரிவுகளில் கண்டிருக்கப்பட்டிருக்கும் யாதொன்றும், யாதொரு லோகல் போர்டில் ஒதுக்கி வைக்கப்பட்டிராதிருக்கும் ஸ்தானங்களுக்காக நடத்தப்படும் தேர்தல்களில் எந்த ஜாதியினராவது அல்லது ஸ்திரிகளாவது நிற்பதை தடுப்பதாக பாவிக்கப்படாது.

குறிப்புகள்.

இப்பிரிவானது புதியதாகச் சேர்க்கப்பட்ட பிரிவு. 1930-ம் வருத்திய திருத்தச் சட்டத்தினால் இப்பிரிவு ஏற்பட்டுள்ளது. பழைய சட்டத்தின் கீழ் டிஸ்டிரிக்ட்டு போர்டு பரொவிடென்டுகளும், தாலூக்கா போர்டு ப்ரொவிடென்டுகளும் தாழ்ந்த வகுப்பினருக்காக தங்களுடைய லோகல் போர்டுகளில் 4-ல் ஒரு பாகத்தை ஒதுக்கி வைத்து அவைகளுக்குத் தங்களிஷ்டம்

போல் அங்கத்தினர்களை (Nomination மூலமாக) நியமித்து வந்தனர். இனி இப்பிரிவின்கீழ் அத்தகையதோர் அதிகாரமானது அடியோடே எடுபட்டு லோகல் கவர்ன்மெண்டாரே ஒவ்வொரு போர்டிலும் இத்தனை ஸ்தானங்கள் இப்பிரிவில் காணப்பட்டிருக்கும் வகுப்பினர்களுக்காக ஒதுக்கி வைக்க வேண்டுமென்றுள்ளது. முஸ்லீம்கள், இந்திய கிறிஸ்தவர்கள், ஆதித் திராவிடர்கள், ஸ்திரீகள் இவர்களுக்கு முக்கியமாக சில ஸ்தானங்களை ஒதுக்கி வைக்க வேண்டுமென்றுள்ளது. ஆனால் இவர்கள் யாவரும் தேர்தல் (Electi n) மூலமாகவேத் தான் அங்கத்தினராக வரவேண்டுமே யொழிய வேறு விதமாக வருவதற்கில்லை. ஆனால் இவர்களுக்கு எந்தெந்த சந்தர்ப்பங்களில் எந்தெந்த விதமாக தேர்தலுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கவேண்டுமென்று இந்த பிரிவிலேயே கண்டுள்ளது. ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காவில் 1-வது பிரிவின் (a) முதல் (e) வரையிலுமுள்ள வாக்கியங்களிலுள்ள வகுப்பினர்கள் முறையே அந்த டிஸ்டிரிக்டில் அல்லது தாலூக்காவிலுள்ள ஜன சங்கியையில் பாதிக்கு மேற்பட்டிருக்கும் பக்ஷத்தில் எக்காரணத்தைக் கொண்டும் அவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படக் கூடாதென்றுள்ளது. எக்காரணத்தைக் கொண்டும் ஒதுக்கி வைக்கப்படும் ஸ்தானங்கள் ஒவ்வொரு லோகல் போர்டுக்குரிய மொத்த சங்கியையில் நான்கில் ஒரு பாகத்திற்கு அதிகப்படக் கூடாது.

மேற்சொல்லிய வகுப்பினர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய காரணமும் அவசியமுமென்னவென்றால், அந்த வகுப்பினர்கள் முறையே டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காக்களில் தங்களுடைய வியாபார பெருமையினாலோ அல்லது வணிக நிறமையினாலோ அல்லது வேறுவிதமாக அவர்களுடைய முன்னேற்றத்தை கருத்தாகக்கொண்டு இவ்வம்சமானது சேர்க்கப்பட்டுள்ளது. இவைகளை கவனித்துத்தான் கவர்ன்மெண்டாரும் தகுந்தபடி ஸ்தானங்களை ஒதுக்கிவைக்க வேண்டும்.

ஸ்திரீகள் விஷயமாகவும் சில ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென்பதற்குக் காரணமென்னவென்றால் தற்காலத்து மேல்நாட்டு நாகரீகச் சேர்க்கையினால் ஸ்திரீகள் ஆங்கில பயிற்சியிலும், ஆங்கில கல்வி முறைமையிலும் ஈடுபட்டு வருவதாலும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளும், தாலூக்கா போர்டுகளும் பெண் பள்ளிக்கூடங்களையும், பிரசவ ஆஸ்பத்திரிகளையும் இன்னும் ஸ்திரீகளுக்கென்று ஏற்படுத்தப்படும் தொழில்சாலைகளையும் தமது ஆதிக்கியத்தின்கீழ் பெற்று பரிபாலித்து வருவதாலும், சுகாதார இலாக்காவையும் தங்களுடைய பரிபாலனத்தில் சேர்த்து நடத்துவதாலும் இவற்றின் நடத்தை ஒழுக்கங்களை நன்றாகவும், கவனமாகவும் பார்த்து வருவதற்காக ஸ்திரீ அங்கத்தினர்களும் முக்கியமென்று தோற்றப்பட்டது.

இம்மாதிரி மேலே சொல்லப்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டஸ்தானங்களுக்காக நடக்கும் தேர்தல்களில் அந்தந்த வகுப்பினரேதான்

ஓட்டு கொடுக்க வேண்டுமே யொழிய வேறே வகுப்பினர்கள் அந்த தேர்தல்களில் கலப்பதற்கில்லை. உதாரணமாக ஒருஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானத்தில் ஒரு முஸ்லீம் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றால், ஒருடிஸ்டிரிக்ட் அல்லது தாலூகாவிலுள்ள முஸ்லீம்கள் அனைவரும்சேர்ந்து அந்த ஸ்தானத்திற்கு ஒருவரை தேர்ந்தெடுக்கவேண்டும். அதேமாதிரியாக இந்தியகிறிஸ்தவர்களுக்கும், ஆதித்திராவிடர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும், ஆங்கில இந்தியர்களுக்கும் தேர்தல்கள் நடக்க வேண்டும். இம்மாதிரி நடக்கும் தேர்தல்களுக்கும் மற்றப்படி பொதுவாக வுள்ள ஸ்தானங்களுக்கு நடக்கும் தேர்தல்களுக்கும் யாதொரு சம்மந்தமுமில்லை. ஆகையால், பொதுவாக நடக்கும் தேர்தல்களிலும் எந்த வகுப்பினர்களுக்காக சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்களும் அபேக்ஷகராக நிற்கலாமென்று 7-வது உபப் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், ஒரு வகுப்பினருக்காக யாதொரு ஸ்தானமானது ஒதுக்கி வைக்கப்படும் பக்ஷத்தில் பிறகு அதே வகுப்பினர் பொது ஸ்தானங்களுக்காக நடக்கும் தேர்தல்களில் அபேக்ஷகராக நிற்கும் பக்ஷத்தில், அவருக்கு, தம்முடைய ஜாதியினரே ஏற்கனவே தங்களில் ஒதுக்கிவைக்கப்பட்டஸ்தானத்தில் ஒருவரை தேர்ந்தெடுத்து விட்டு மறுபடியும் இவருக்கு ஓட்டு கொடுக்கலாமா என்பது கேள்வி. சாதாரணமாக ஒவ்வொருவரும் ஒருகரத்திற்குமேல் தம்முடைய ஓட்டுரிமையை செலுத்துவதற்கு அதிகாரமுள்ளதாக கருதப்பட மாட்டாராகையால் அத்தகைய பொதுத் தேர்தல்களில் அவருக்கு ஓட்டு கொடுக்க உரிமை யில்லை என்று எளிதில் ஏற்படும்.

பஞ்சாயத்துகளைச் சேர்ந்த வரையிலும் ஆதித் திராவிடர்களைத் தவிர ஸ்திரீகள் உள்பட வேறே யாதொரு வகுப்பினருக்கும் யாதொரு ஸ்தானமும் ஒதுக்கி வைக்கப்படுவதற்கில்லை. (3-வது உபப் பிரிவு). இதன் காரணமென்னவென்றால் மிகவும் குறைந்த சங்கியையுள்ள ஒரு பஞ்சாயத்தில் பலவித வகுப்பினர்களும் கட்டாயமாக அங்கத்தினர்களாக வரும்படி ஸ்தானங்கள் ஏற்படும் பக்ஷத்தில் அந்த பஞ்சாயத்தினுடைய க்ஷேமத்திற்கும், சௌகரியத்திற்கும் பங்கம் நேரிடலாமென்று சட்ட சபையானது நினைத்தது போலும். இன்னும் ஒரு பஞ்சாயத்துக்கு அதிகாரமுள்ள ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள ஜன சங்கியையானது மிகவும் பலவிதப்பட்டதாகயிருக்க முடியாது. ஆனால், ஒவ்வொரு கிராமத்திலும் ஆதித்திராவிடர்கள் கட்டாயம் இருப்பார்களானதாலும் அவர்களுடைய சௌகரியங்களும் க்ஷேமமும் சரிவர கவனிக்கப்படுவது அவசியமென்று தோன்றினபடியால் ஆதித்திராவிடர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படலாமென்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவில் குறிக்கப்பட்ட வகுப்பினர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படுவதானது லோகல் கவர்ன்மெண்டினுடைய இஷ்டத்தைப் பொருந்தினதாகும்.

இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற மாதிரி யாதொரு ஒதுக்கி வைக்கப் பட்ட ஸ்தானத்திற்காகவாவது அல்லது பொதுஸ்தானத்திற்காகவாவது இரண்டு தரம் தேர்தல் நடந்தும் யாதொரு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால் மூன்றுவது தடவையில் அந்தந்த லோகல் போர்டாரே ஒரு புதிய அங்கத்தினரை தேர்ந்தெடுக்கலாம் (11-A. பிரிவைப் பார்க்க.)

லோகல் போர்டுகளின் அங்கத்தினரின் சங்கியை இவ்வளவென்று நிச்சயிப்பது.

10. (1) லோகல் கவர்ன்மெண்டு ஒரு அறிக்கை மூலமாக ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் இருக்க வேண்டிய அங்கத்தினரின் சங்கியை இவ்வளவென்று ஸ்தாபிக்கவேண்டும்.

(2) லோகல் கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்துக்கு அடங்கி, யாதொரு லோகல் போர்டானது அதற்காக தனிமையாகக்கூட்டப்பட்ட ஒரு மீட்டிங்கில் அந்த மீட்டிங்கில் பிரசன்னமாயிருக்கும் அங்கத்தினரில் நான்கில் மூன்று பங்குக்கு குறையாத அங்கத்தினரால் நடந்தேறப்பட்ட ஒரு தீர்மானத்தினால் மேலே (1)-வது உபப்பிரிவின் கீழ் விளம்பரப் படுத்தப்பட்டிருக்கும் தம்முடைய மொத்த அங்கத்தினரின் சங்கியையை மாற்றிவிடலாம்.

(3) (1)-வது உபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அறிக்கையும் (2)-வது உபப்பிரிவில் காணப்பட்டிருக்கும் தீர்மானமும், விதிகளில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் விளம்பரப் படுத்தப்பட வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவு 1930 ம் வருஷத்திய லோகல் போர்டு திருத்த சட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

பழைய சட்டத்தின் 10-வது பிரிவானது அடியோடே மாற்றப்பட்டு இப்பிரிவானது மிகவும் சுருக்கமாக செய்யப்பட்டுள்ளது. பழைய பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு தாலூக்கா போர்டுக்கும் இத்தனை அங்கத்தினர்கள் இருக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு யூனியன் போர்டுக்கும் இத்தனை அங்கத்தினர்கள் இருக்க வேண்டுமென்றும் நிர்ணயிக்க முறையே டில்டிரிக்ட் போர்டுக்கும், தாலூக்கா போர்டுக்கும்தான் அதிகாரமுண்டென்று இருந்தது. இப்பொழுது அந்த அதிகாரமானது அடியோடே எடுபட்டு விட்டது. லோகல் கவர்ன்மெண்டாரே நேராக ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் இத்தனை அங்கத்தினர்கள் இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஆனால் ஒவ்வொரு லோகல் போர்டும் தம்முடைய சங்கியையானது அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று இஷ்டப்படும்பக்ஷத்தில் அந்த லோகல் போர்டானது இந்த விஷயத்தை கவனிப்பதற்காக தனியாக ஒரு மீட்டிங்கை கூட்டி அந்த மீட்டிங்கிலுள்ள நபர்களில் மூக்கால் பங்குள்ளவர்கள் தம்முடைய சங்கியையானது அதிகப்படுத்தப்பட வேண்டுமென்று கோரும்பக்ஷத்தில் கவர்ன்மெண்டார் ஒரு அறிக்கைமூலமாக அந்தசங்கியையை அதிகப்படுத்தலாம்.

லோகல் போர்டுகளின் அங்கத்தினர்களுடைய எலெக்ஷனும், அவர்கள் இருக்க வேண்டிய கால அளவும்.

11. (1) இந்த ஆக்டில் வேறே விதமாக ஸ்பஷ்டமாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலொழிய, ஒரு லோகல் போர்டின் அங்கத்தினருடைய அலுவலின் கால அளவானது நவம்பர்மீ 1-ந்தேதி பகல் 12-மணி முதல் ஆரம்பித்து அதே காலத்தில் முடியும்படியாக மூன்று வருஷங்கள் வரையிலும் நீடிப்பதாகும்.

(2) ஒரு லோகல்போர்டின் ஒரு அங்கத்தினருடைய உத்தியோகத்தில் நேரிடும் சாதாரண காலிகள் சாதாரண எலெக்ஷன்களினால் அடைவுபடவேண்டும். அத்தகைய எலெக்ஷன்கள் அதற்காக குறிக்கப்பட்ட அதிகாரியால் அந்தக் காலிகள் நேரும் மாதத்திற்கு முந்தின ஆகஸ்டு அல்லது செப்டம்பர் இந்த மாதங்களில் அவருக்கு தோன்றும் யுக்தப்படி ஒரு தினம் அல்லது பலதினங்களில் நடக்கும்படி நிர்ணயிக்கப்படலாம்.

ஆனால் லோகல் கவர்ன்மென்டானது யாதொரு சரியான காரணத்திற்காக யாதொரு சாதாரண எலெக்ஷனை செப்டம்பர் மாதக் கடைசிக்குப் பின்பு நடத்தப்படும்படி உத்திரவு அல்லது அனுமதி கொடுக்கலாம்.

(3) ஒரு ஸ்தானம் காலியான பிறகு நடத்தப்பட்ட ஒரு சாதாரண எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருலோகல்போர்டு அங்கத்தினர் உடனே தமது உத்தியோகத்தை விக்கவேண்டும். ஆனால் அவர் மேற்சொல்லிய ஸ்தானம் காலியாவதற்குமுன் தேர்ந்தெடுக்கப்பட்டால் எவ்வளவு காலம் உத்தியோகத்தை வகிக்க உரிமை பெற்றிருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலுந்தான் அந்த உத்தியோகத்தை வகிக்கவேண்டும்.

(4) ஒரு லோகல்போர்டு அங்கத்தினருடைய உத்தியோகத்தில் நேரும் ஒரு தற்செயலான காலியானது, ஒரு தற்செயலான

எலெக்ஷனில் அடைவுபடவேண்டும். அந்த எலெக்ஷனனது ஒரு குறிப்பிட்ட அதிகாரியால் அந்தக்காலி நேர்ந்தபிறகு கூடியசீக்கிரத்தில் நடக்கும்படி நிர்ணயிக்கப்படவேண்டும்.

ஆனல் யாதொரு தற்செயலாக நிகழும் எலெக்ஷனும், கிரமவழியில் ஒருவர் தம் ஸ்தானத்திலிருந்து நீங்கும் தேதிக்குமுன் மூன்று மாதங்களுக்குள் நேரும் ஒரு காலி ஸ்தானத்தை அடைப்பூதற்காக நடத்தப்படக்கூடாது. அந்த காலியானது அடுத்த சாதாரண எலெக்ஷனில் அடைவுபடவேண்டும்.

(5) ஒரு தற்செயலாக நேரிடும் காலி ஸ்தானத்தை அடைப்பதற்காக நடந்த எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு லோகல்போர்டு அங்கத்தினர் அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே தமது உத்தியோகத்தை வகிக்கவேண்டும். ஆனல் அவர் எந்த அங்கத்தினருக்கு பதிலாக அந்த ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அந்த அங்கத்தினர் அந்த காலி நேராமல் இருந்திருக்கும் பக்ஷத்தில் எவ்வளவுகாலம் வரையிலும் உத்தியோகத்தை வகிக்க உரிமை உள்ளவராக இருந்திருப்பாரோ அவ்வளவுகாலம் வரையிலுந்தான் அந்த உத்தியோகத்தை வகிக்கவேண்டும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினுலே அடியோடே மாற்றப்பட்டு புதிய அம்சங்களுடன் கூடியதாக உள்ளது. இனி ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் யாதொரு குறிப்பிட்ட வருஷத்தின் நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் மூன்று வருஷங்கள் வரையிலும் ஒரு சபையுடன் உள்ளதாக ஏற்படும். அதாவது மூன்று வருஷங்களுக் கொருதரம் ஒவ்வொரு லோகல் போர்டும் ஒரே காலத்தில் புதிய அங்கத்தினர்களே உடையதாக இருக்க வேண்டுமென்று அர்த்தமாகும்.

இப்பிரிவின் (2)-வது உபப்பிரிவில் சாதாரண காலிகளைப் பற்றியும் (4)-வது உபப்பிரிவில் தற்செயலான காலிகளைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது "சாதாரண காலி" என்பது 3-வது பிரிவின் (13-A) உபப் பிரிவில், கிரமமான கால முடிவினுல் நேரும் ஒரு காலி என்றும், "தற்செயலான காலி" என்பதற்கு கிரமமான காலமுடிவினுலல்லாமல் வேறு விதமாக நிகழும் காலி என்றும் விளக்கப்பட்டுள்ளது. சாதாரண காலிஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதில் அந்த காலிகள் நிகழும் மாதமாகிய நவம்பர் மாதத்திற்கு முன்னடியாகவே ஜூலை மாதம் அல்லது செப்டம்பர் மாதங்களில் எலெக்ஷன் நடக்க வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதாவது சாதாரண காலிகள் இன்னின்ன காலத்தில் நேருமென்று ஸ்பஷ்டமாக ஏற்பட்டிருப்பதால்

அவைகளுக்காக நடக்க வேண்டிய எலெக்ஷன்கள் இன்னின்ன காலத்தில் நடத்தப்பட வேண்டுமென்று சட்டத்திலேயே விவரிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவின் 3-வது உபப் பிரிவில் ஒரு "சாதாரண காலி" யானது நேரிட்ட பிறகு அதைப் பூர்த்தி செய்வதற்காக நடத்தப்படும் எலெக்ஷனைப் பற்றியும் அம்மாதிரியான ஒரு எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்படுபவர் எவ்வளவு காலம் வரையிலும் தமது ஸ்தானத்தை வகிக்க வேண்டுமென்பதைப் பற்றி கூறப்பட்டுள்ளது. உதாரணமாக:— ஒரு சாதாரண காலி ஸ்தானத்திற்காக அந்தக் காலி நிகழுமுன் அதைப் பூர்த்தி செய்வதற்கு நடத்தப்படும் ஒரு எலெக்ஷனில் யாதொரு அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்றுவது அல்லது அம்மாதிரியான ஒரு எலெக்ஷன் அந்த ஸ்தானமானது காலியாவதற்குமுன் நடத்தப்படவில்லையென்றுவது வைத்துக் கொள்வோம். அப்படியானால் அந்த காலி நேர்ந்த பிறகு நடக்கும் மற்றொரு எலெக்ஷனில் அல்லது சாதாரண எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்படும் நபர் மூன்று வருஷங்களுக்குக் குறைவாகவே தம்முடைய ஸ்தானத்தை வகிக்கும்படியாக நேரிடும். ஆனால் அவர் இப்பிரிவின் (1) வது உபப் பிரிவில் காணப்பட்டிருக்கும் அம்சங்களை ஆதாரமாகக்கொண்டு தாம் மூன்று பூரண வருஷங்கள் வரையிலும் ஒரு அங்கத்தினராக யிருக்க வேண்டுமென்று சொல்லுவதற்கில்லை.

ஒரு "தற்செயலான காலி" என்பதற்கு திடீரென்று ஒரு அங்கத்தினர் யோக்கியதைக் குறைவினாலோ அல்லது மரணத்தினாலோ அல்லது ராஜிநாமாவினாலோ, அல்லது வேறே விதமாக தமது ஸ்தானத்திலிருந்து நீங்கிப்போவதினால் அல்லது நீக்கப்படுவதினால் நேரும் ஒரு காலியைக் குறிக்கும். இத்தகைய ஒரு காலிஸ்தானத்திற்கு உடனே ஒரு அங்கத்தினரை தேர்ந்தெடுக்கும்படி ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படி அந்த ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் நபரும் மேலே 3-வது உபப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் அந்த ஸ்தானத்திற்கு முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் எவ்வளவு காலம் வரையிலும் தாம் அந்த ஸ்தானத்திலிருந்து நீங்காவிட்டால் அதில் இருந்திருப்பாரோ அவ்வளவு காலம் வரையிலும்தான் வகித்திருக்கலாமென்றுள்ளது.

ஒரு ஸ்தானமானது தற்செயலாக காலியான பிறகு அதே ஸ்தானத்திற்காக நடத்தப்படும் சாதாரண எலெக்ஷனானது அந்த காலி நடந்த பிறகு மூன்று மாதங்களுக்குள் வருவதாயிருக்கும்பக்ஷத்தில் அதைப் பூர்த்தி செய்வதற்கு யாதொரு எலெக்ஷனும் நடத்தப்படுவது அனுவசியமானதென்று தோன்றினபடியால் அதற்காக யாதொரு எலெக்ஷன் நடத்தப்பட வேண்டியதில்லையென்று-நான்காவது உபப் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவில் மிகவும் முக்கியமானதோர் அம்சம் என்னவென்றால் இனி இந்த சட்டத்தின்கீழ் லோகல் போர்டு அங்கத்தினர்களுடைய ஸ்தா

னங்களை பூர்த்திசெய்வதற்காக நடத்தப்படும் எலெக்ஷன்கள் கவர்ன்மெண்டாரால் நேமிக்கப்படும் அதிகாரிகளால் நடத்தப்பட வேண்டுமென்பது. 1930-ம் வருஷத்திய லோகல் போர்டு திருத்தச் சட்ட மசோதாவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "எலெக்ஷன்களைச் சேர்ந்த நடவடிக்கைகளை நடத்துவதற்காக கட்சி பேதம் இல்லாத பொதுவாயுள்ள அதிகாரிகளிடம் ஒப்புவிப்பது அவசியமென தோற்றுகிறது. ஆகையால் இந்த மசோதாவினால் ஓட்டர்களின் ஜாப்தாவை தயார் செய்வதும் எலெக்ஷன்களை நடத்தும் தேதிகளை நியமிப்பதுமான சகல காரியங்களும் லோகல் கவர்ன்மெண்டார் செய்யும் விதிகளின் பிரகாரம் தனிமையான அதிகாரிகளுக்கு ஒப்புவிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது." ஆகையால் இதுவரையிலும் லோகல் போர்டு ப்ரெஸிடென்டுகளுக்கு எலெக்ஷன்களை நடத்தும் விஷயமாகவுள்ள சகல அதிகாரங்களும் எடுப்பட்டு போய்விட்டன.

ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதங்களில் எலெக்ஷன்கள் நடக்கவேண்டியது என்பதினால் அந்த மாதங்களில் எலெக்ஷன்கள் கட்டாயம் நடந்தே தீரவேண்டுமென்றும், அப்படி நடவாமற் போகும்பக்ஷத்தில் அந்த எலெக்ஷன்கள் செல்லத்தக்கனவையல்ல வென்றும் சொல்லுவதற்கில்லை. இந்தப் பிரிவினால் அவ்வித எலெக்ஷன்கள் நடக்க வேண்டிய சாதாரண முறைமைதான் காட்டப்பட்டிருப்பதாக ஏற்படும். எகாம்பர நாய்க்கர் vs. சென்னை கார்ப்பரேஷன் கமிஷனர் (a) என்னும் கேஸில் சென்னை கார்ப்பரேஷன் கமிஷனர்-ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடத்த வேண்டிய ஒரு எலெக்ஷனை அக்டோபர் மாதத்தில் வைத்தார். அப்படி வைக்கப்பட்ட எலெக்ஷனானது அடியோடே செல்லாதென்று ஒரு ஆக்ஷபனை வந்ததில், ஹைகோர்ட்டாரவர்கள் சென்னைநகர முனிசிபாலிடி ஆக்டில் இதே மாதிரியான ஒரு பிரிவின் அம்சத்தைக் கவனிக்குமிடத்து அப்படி மாதம் மாறிநடத்தப்பட்ட எலெக்ஷனானது சட்ட விரோதமானதல்ல வென்று தீர்மானித்திருக்கின்றனர்.

இத்தப் பிரிவானது சென்னை நகர முனிசிபாலிட்டியிலும் சென்னை சட்ட சபையிலுமுள்ள தேர்தல்களையொட்டி இம்மாதிரி செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின் அம்சங்களானது ஒவ்வொரு லோகல் போர்டும் கூடிய வரையிலும் ஒரேவிதமான நோக்கமுள்ள அங்கத்தினர்கள் ஒரே காலத்தில் லோகல் போர்டுகளைச் சேரவேண்டும் என்னும் ஒரு ஐதீகத்தைக்கொண்டு செய்யப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல்கள் நடக்கும் காலத்தில் சாதாரணமாக அபேக்ஷகர்கள் அந்தந்த காலங்களில் ஜனங்களுக்கு அத்தியாவசியமாக வேண்டிய காரி

(a) A. I. R. 1927. M. 22=49. M. 815=99 I. C. 41=1926 M. W. N. 812.

யங்களை செய்யவேண்டுமென்றுவது இன்னும் பொது ஜனங்களுக்கு ஏற்பட வேண்டிய சில சௌகரியங்களைக் குறித்தாவது எலெக்ஷன்கள் நடக்குமாதலால் அந்த பொதுத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள், ஜனங்களுடைய அபீஷ்டத்தை வெகுசாக தெரிவிக்கக்கூடிய நபர்களென்று கவனிக்கப்படுவார்கள். ஆகையால் அவர்களில் ஒருவருக்கொருவர் அதிகமாக அபிப்பிராயபேதமில்லாமல் லோகல் போர்டினுடைய காரியங்களை நடத்திவர வேண்டுமென்று இப்பிரிவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு எலெக்ஷனில் யாதொரு அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அதற்கு இன்னது செய்வதென்பது.

11-A. (1) ஒரு லோகல்போர்டுக்காக மேலே 11-வது பிரிவின்கீழ் நடத்தப்படும் ஒரு சாதாரண அல்லது தற்செயலாக நிகழும் எலெக்ஷனில் யாதொரு அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், குறிக்கப்படும் அதிகாரி எந்த தினத்தில் நடக்கவேணுமென்று நிச்சயம் செய்கிறாரோ அந்த தினத்தில் ஒரு புதிய எலெக்ஷன் நடத்தப்படவேண்டும்.

(2) அப்படி நடத்தப்படும் ஒரு புதிய எலெக்ஷனிலும் யாதொரு அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அந்த லோகல் போர்டானது நிர்ணயிக்கப்பட்டிருக்கிற பிரகாரம் ஒரு யோக்கியதாம்சமுள்ள நபரை அந்த காலியான ஸ்தானத்தை அடைப்பதற்காக தேர்ந்தெடுக்கவேண்டும்.

(3) இந்தப்பிரிவின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு லோகல் போர்டு அங்கத்தினருடைய உத்தியோகத்தின் கால அளவானது, அந்த நபர் சந்தர்ப்பத்துக்கு தக்கபடி ஒரு சாதாரண அல்லது தற்செயலாக நிகழும் எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் எப்பொழுது முடிவுபெறுமோ அதேகாலத்தில் முடிவு பெறுவதாகும்.

தற்பொழுள். 11-A

இந்தப் பிரிவானது 1930-ம் வருத்திய திருத்த சட்டத்தினுல் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளது. ஒருதரம் ஒரு சாதாரண காலி அல்லது தற்செயலான காலிக்காக ஒரு எலெக்ஷன் நடத்தப்பட்டபோது அந்த எலெக்ஷனில் யாதொரு அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் மறுபடியும் ஒரு எலெக்ஷன் அதே மாதிரியாக நடத்தப்பட வேண்டுமென்றுள்ளது. அப்படியும் ஒரு எலெக்ஷனுக்காக யாதொரு தேதி குறிக்கப்பட்டிருந்து அந்த தேதியிலும் யாதொரு நபரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் ஒரு லோகல் போர்டே அந்த ஸ்தானத்தை பூர்த்தி செய்வதற்காக அதை வகிக்க யோக்கியதை யுள்ளவர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்

என்றுள்ளது. யாதொரு லோகல் போர்டும் நிரந்தரமாக தனக்கிருக்கவேண்டிய சங்கியையிலுள்ள அங்கத்தினர்களுக்குக் குறையாமல் இருப்பதற்கும் லோகல் போர்டினுடைய காரியங்கள் சரிவர நடப்பதற்கும் இந்தப்பிரிவானது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்காலத்தில் ராஜீய நிலர்ச்சியினால் பஹிஷ்காரம் என்னும் நூதன முறைமையானது கையாளப்பட்டு வருவதை கவனித்து இந்தப் பிரிவானது ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. ஒவ்வோர் சமயங்களில் லெஜில்லேடிவ் கௌன்வில்(Legislative Council)லெஜில்லேடிவ் அஸெம்பிளி (Legislative Assembly) இவைகளில் நேர்ந்திருக்கும் காலி ஸ்தானங்களை பூர்த்தி செய்வதற்காக நடந்திருக்கும் தேர்தல்களில் யாதொரு நபரும் தேர்ந்தெடுக்கப்படாமல் இருந்தது சமீபத்திலேயே தெரிந்த விஷயம். ஆகையால் ஒவ்வொரு லோகல் போர்டு அங்கத்தினரும் எப்படியிருந்த போதிலும் ஜனங்களாலேயேதான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று யிருக்கும் பக்ஷத்தில் அதினால் நேரும் சங்கட சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக இப்பிரிவில் தகுந்த அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

லோகல் போர்டுகளினுடைய ப்ரெஸிடென்டுகளும், வைஸ் ப்ரெஸிடெண்டுகளும்.

12. ஒவ்வொரு லோகல் போர்டும் தங்களுடைய அங்கத்தினர்களில் ஒருவரை தம்முடைய ப்ரெஸிடென்டாகவும், மற்றொருவரை தம்முடைய வைஸ் ப்ரெஸிடெண்டாகவும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது, பழைய சட்டத்தின் 2-வதுபிரிவு எடுத்து விடப்பட்டு அதற்குப் பதிலாக 1930–ம் வருத்திய லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டது. பழைய சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு தாலூக்கா போர்டிலும், ஒவ்வொரு யூனியன் போர்டிலுமுள்ள ப்ரெஸிடென்டுகள் அந்த போர்டினுடைய அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தபோதிலும் எல்லா டிஸ்டிரிக்ட்டு போர்டுகளிலும் ஒரே மாதிரியாக ப்ரெஸிடென்டுகள் அந்த போர்டினாலேயே தேர்ந்தெடுக்கப்படாமல் சில இடங்களில் கவர்ன்மெண்டாரால் நேமிக்கப்பட்டு வந்தனர். சிற்சில டிஸ்டிரிக்ட்டு போர்டுகளில் மாத்திரம் ப்ரெஸிடென்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர்.

பழைய லோகல் போர்டு சட்டத்தில், யூனியன் போர்டுகளில் ஒரு வைஸ் ப்ரெஸிடென்டு இருக்க வேணுமென்று யாதொரு நிர்ப்பந்தமும் இல்லை. ஆனால் இப்பொழுது இப்பிரிவின் பிரகாரம் பஞ்சாயத்துகள் உள்பட ஒவ்வொரு லோகல் போர்டிலும் அதன் ப்ரெஸிடென்டும், வைஸ் ப்ரெஸிடென்டும் சட்டாயமாக அதின் அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இப்பிரிவின் அம்சங்களினுல் நேரும் நன்மை யென்னவென்றூல் இனி ஒவ்வொரு லோகல் போர்டிலும் அதின் ப்ரெஸிடென்டும், வைஸ் ப்ரெஸிடென்டும் லோகல் போர்டினுடைய அங்கத்தினர்களுக்கு ஜவாப் பாக இருக்க வேண்டியதாக யிருக்கும்.

ஒவ்வொரு லோகல் போர்டும் ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு இல்லாமல் தம்முடைய நிர்வாகத்தை நடத்த முடியாதாதலால் கட்டாயம் ஒரு ப்ரெஸிடென்டையும், ஒரு வைஸ் ப்ரெஸிடென்டையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு இந்தியன் பீனல்கோட் சட்டத்தின் கீழ் ஒரு பொதுஜன உத்தியோகஸ்தரென்று கவனிக்கப்படுவாராகையால் அவர்பேரில் யாதொரு கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமானுல் கிரிமினல் புரோசீஜர் கோட் 195–பிரிவின் கீழும் லோகல் போர்டு சட்டம் 227–A-வது பிரிவின் கீழும் லோகல் கவர்ன்மென்டினுடைய மூன் உத்திரவில்லாமல் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாது. (a)

ஒவ்வொரு லோகல் போர்டிலும் ப்ரெஸிடென்டும், வைஸ் ப்ரெஸிடென்டும் அந்த லோகல் போர்டினுடைய சரியானபடிக்கு கூட்டப்பட்ட ஒரு மீட்டிங்கில் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமே யொழிய வேறு விதமாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கில்லை. 22–A. பிரிவைப் பார்க்க.

12-A. 12-வது பிரிவின்கீழ் நடத்தப்பட்ட ஒரு எலெக்ஷனில் ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் மறுபடியும் ஒரு புதிய எலெக்ஷன் நடத்தப்படவேண்டும்.

ஒரு எலெக்ஷனில் ப்ரெஸிடென்டாவது வைஸ் ப்ரெஸிடென்டாவது தேர்ந்தெடுக்கப் படாவிட்டால் இன்னது செய்யவேண்டுமென்பது.

குறிப்புகள்.

ஒரு லோகல் போர்டினுடைய மீட்டிங்கில் யாதொரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தேர்ந்தெடுக்கப்படாமலிருக்கும்பக்ஷத்தில் மறுபடியும் அதற்காக இன்னொரு மீட்டிங்கு கூட்டப்பட்டு அதில் மேற் சொன்னபடி தேர்தல்கள் நடக்க வேண்டும்.

(a) சிவசங்கரம் பின்னை விஷயமாக. 52-M. 448=56 M. L J. 157 1929 A. I. R Madras 8=1 அகில இந்தியா லா ஜர்னல் பக்கம் 6.

ஆனால், இப்பிரிவில் சேர்த்தாப்போல் பல மீட்டிங்குகளிலும் ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தேர்ந்தெடுக்கப்படாமலே இருக்கும்பக்ஷத்தில் அதற்காக என்ன செய்வதென்று ஏற்படுத்தப்படவில்லை. ஒரு லோகல் போர்டானது சேர்த்தாப்போல் ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டைத் தேர்ந்தெடுப்பதற்கு திறமை அல்லது பொறுப்பில்லாமலிருக்கும்பக்ஷத்தில் 45-வது பிரிவின்கீழ் அந்த லோகல் போர்டானது தன்னுடைய அலுவல்களை கவனிக்கச் சக்தியற்றதென்று லோகல் கவர்ன்மென்டார் அதைக் கலைத்துவிடலாம்.

13. [இந்தப்பிரிவு எடுத்துவிடப்பட்டது.]

14. [இந்தப்பிரிவு எடுத்துவிடப்பட்டது.]

15. (1) ஒரு லோகல்போர்டினுடைய ப்ரெஸிடென்டு—

ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு ஆகிய இவர்களுடைய உத்தியோகத்தில் காலி.

(a) தாம் அந்த லோகல்போர்டு அங்கத்தினராக இருக்கும் உத்தியோகத்தின் காலமானது முடிவுபெற்ற வுடனேயாவது அல்லது அவர் வேறேவிதமாக ஒரு அங்கத்தினராக இருப்பதிலிருந்து நின்றுவிட்டவுடனேயாவது, அல்லது

(b) அந்த ஜில்லாவில் வேறே ஒரு லோகல்போர்டில் ப்ரெஸிடென்டாகவோ அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட வுடனேயாவது,

தம்முடைய உத்தியோகத்திலிருந்து அகன்றுவிட்டதாக கருதப்படுவார்.

(2) ஒரு லோகல் போர்டினுடைய வைஸ் ப்ரெஸிடென்டு—

(a) அந்த போர்டினுடைய ஒரு அங்கத்தினராக இருக்கும் உத்தியோகத்தினுடைய காலமானது முடிவுபெற்றவுடனேயாவது அல்லது, அவர் வேறேவிதமாக ஒரு அங்கத்தினராக இருப்பதிலிருந்து நின்றுவிட்ட வுடனேயாவது, அல்லது

(b) அந்த போர்டில் அவர் ப்ரெஸிடென்டாக தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயாவது அல்லது, அந்த ஜில்லாவில் வேறே

ஒரு லோகல்போர்டில் ப்ரெஸிடென்டாகவோ அல்லது வைஸ் ப்ரெஸிடெண்டாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயாவது,

தமது உத்தியோகத்திலிருந்து அகன்றுவிட்டதாகக் கருதப்படுவார்.

(3) யாதொரு லோகல்போர்டிலே ப்ரெஸிடென்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடென்ட் உத்தியோகத்தைவிட்டு நீங்குபவர், அவர் மற்றப்படி யோக்கியதை யுள்ளவராயிருக்கிறபட்சத்தில், மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படத்தக்கவராவர்.

குறிப்புகள்.

இந்தப்பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்தச் சட்டத்தினால் முற்றிலும் மாற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு ப்ரெஸிடென்டும், வைஸ் ப்ரெஸிடென்டும் தம்முடைய அங்கத்தினர் ஹோதாவின் உத்தியோக கால அளவானது கடந்துவிட்டப் பிறகாவது அல்லது வேறே லோகல் போர்டில் ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகாவது தம்முடைய ஸ்தானத்தை காலிசெய்ய வேண்டும். அதாவது அவர் ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாக இருப்பதிலிருந்து நீங்க வேண்டும். இதன் கொள்கை என்னவென்றால் ஒரே நபர் இரண்டு லோகல் போர்டுகளிலும் ப்ரெஸிடென்டாகவாவது அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகவாவதிருக்கக் கூடாதென்பது. அப்படியிருக்கும்பக்ஷத்தில் அவர் தம்முடைய நிர்வாக அலுவல்களை சரிவர பார்த்து வருவதற்கு ஒரு தடங்கல் ஏற்படுமல்லாமல் ஒவ்வோர் சமயங்களில் தமது செய்கையையே நிராகரிக்கும்படியான சந்தர்ப்பங்களும் ஏற்படலாமென்பது.

16. *அங்கத்தினர்களும் வைஸ் ப்ரெஸிடென்டும் ப்ரெஸிடென்டும் ராஜிநாமா செய்வது.*

ப்ரெஸிடென்டைத்தவிர யாதொருவைஸ் ப்ரெஸிடென்டும் லோகல் போர்டைச்சேர்ந்த வேறே எந்த அங்கத்தினரும் ப்ரெஸிடென்டுக்கு நோட்டீஸ் கொடுத்து தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யலாம்; ப்ரெஸிடென்டானவர் லோகல் போர்டுக்கு நோட்டிஸ் கொடுத்து ராஜிநாமா செய்யலாம். அம்மாதிரியான ஒரு ராஜிநாமா, ராஜினமா செய்தவர் ஒருவர் அங்கத்தினர் அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாக இருக்கும் பக்ஷத்தில், எந்த தினத்தில் அது ப்ரெஸிடென்டால் பெறப்படுகிறதோ அன்று முதற்கொண்டும், அந்தநபர் ஒரு ப்ரெஸிடென்டாக இருக்கும்பக்ஷத்தில் என்றையதினம் அந்த ராஜினமா அந்த லோகல் போர்

டின் ஒரு மீட்டிங்கில் வைக்கப்படுகிறதோ அன்று முதற்கொண்டும் அமுலுக்குவரும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவின் 3-வது வாக்கியமானது அதாவது "அம்மாதிரியான" என்னும் பதம் முதல், கடைசி வரையிலுமுள்ள பதங்கள் 1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு சீர்திருத்தச் சட்டத்திஞல் நுழைக்கப் பட்டுள்ளது. இந்த வாக்கியமானது இருமலிருந்ததிஞல் பழைய சட்டத் தின் பிரகாரம் இதன்கீழ் செய்யப்பட்டுள்ள ஒரு ராஜிஞமாவானது எப் பொழுது முதல் அமுலுக்கு வரும் என்னும் விஷயமானது நிச்சயப்படா மலே இருந்தது. இப்பொழுது ஸ்பஷ்டமாக இந்தப் பிரிவிஞல் ஒரு நபர் ஒரு லோகல் போர்டினுடைய அங்கத்தினராகவாவது அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகவாவது திருக்கும்பகூத்தில் அவர் கொடுத்த நோட்டீஸானது என்றையதினம் ப்ரெஸிடென்டினிடம் சேருகிறதோ அன்று முதற்கொண் டும் அவர் ப்ரெஸிடென்டாக யிருக்கும்பகூத்தில் அவருடைய ராஜிஞமா வானது என்றையதினம் அந்த லோகல் போர்டினுடைய மீட்டிங்கில் வைக் கப்படுகிறதோ அன்று முதலும் அமுலுக்கு வருவதாகும் என்றுள்ளது. இவ் வம்சமானது சமீபத்தில் சென்னை ஹைக்கோர்ட்டில் நடந்த தீர்மானமான சிவசங்கரம் பிள்ளை vs இந்தியா சக்கிரவர்த்தி (a) என்னும் கேவில் நடந்த தீர்மானத்தையொட்டித்தான் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்று தோன் றுகிறது.

இந்தப் பிரிவின் கடைசியில், "அந்த நபர் ஒரு ப்ரெஸிடென்டாக யிருக் கும்பகூத்தில் என்றையதினம் அந்த ராஜிஞமா அந்த லோகல் போர்டின் ஒருமீட்டிங்கில் வைக்கப்படுகிறதோ அன்றுமுதற்கொண்டும்" என்றுள்ளது. அதஞல் ஒரு ப்ரெஸிடென்டு செய்யும் ராஜிஞமாவானது அந்த ராஜிஞமா வுக்கடுத்தாப்போல் நடக்கும் ஒரு மீட்டிங்கில் கட்டாயம் வைக்கப்பட வேண்டுமென்று ஒரு நிர்ப்பந்தம் உள்ளதாய் ஏற்படவில்லை. ஆகையால் ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டானவர் தான் ராஜிஞமாசெய்த பிறகும் இரண்டொரு மீட்டிங்குகள் வரையிலும் தன்னுடைய ராஜிஞமாவை அந்த மீட்டிங்குக்கு முன்பாக கொண்டு வராமலே இருக்கலாமென்றும் ஏற்படும். இன்னும் அப்படி செய்வதும் இச்சட்டத்தின்கீழ் ஒரு பெரிய தவறென்று கருதப்படுமென்றும் ஏற்படவில்லை. ஆகையால் லோகல் கவர்ன்மென்டார் இதின் விஷயமாக தகுந்த விதிகளை ஏற்படுத்துவார்களென்று எதிர்ப்பார்க் கப்படுகிறது.

(a) 52 M. 445—A. I. R. 1929. Mad. 8—56. M. L. J. 157.

17. யாதொரு லோகல்போர்டிலுள்ள ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் அல்லது அங்கத்தினருடைய உத்தியோகம் காலியானல் அல்லது காலியாகப் போவதாயிருந்தால், இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி உத்திரவு பிறப்பிக்க அதிகாரமுள்ள அதிகாரிகளால் இதற்கு விரோதமாக யாதொரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிராத பட்சத்திலே, புதிதாய் ஒரு ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் அல்லது அங்கத்தினரை இந்த ஆக்டில் சொல்லியிருக்கிரபிரகாரம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

காலிஸ்தானங்களை பூர்த்தி செய்வது.

குறிப்புகள்.

மேலே 11-வது பிரிவின்கீழ் உள்ள பிரகாரம் இனி ஒவ்வொரு லோகல் போர்டிலும் நடக்கும் எலெக்ஷன்களை லோகல் போர்டு அதிகாரியில்லாமல் கவர்ன்மென்டாரால் நியமிக்கப்படும் ஒரு பொதுவான அதிகாரியால் நடத்தப்பட வேண்டுமென்றுள்ளது. அவ்வதிகாரி சாதாரண எலெக்ஷன்களிலும், தற்செயலான எலெக்ஷன்களிலும் தாம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும் நடவடிக்கைகளை இப்பிரிவின் கீழும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றுள்ளது. ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தம்முடைய ஸ்தானத்திலிருந்து நீங்கும் பக்ஷத்தில் அவருடைய ஸ்தானத்திற்கு புதிய அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இந்தப் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரிவானது பொது தேர்தலில்லாமல் சாதாரண சமயத்தில் பொது தேர்தல்கள் நடந்தபிறகு ஏற்படக்கூடிய காலிஸ்தானங்களைப்பற்றி சொல்லுவதாகும்.

"காலியாகப் போவதாயிருந்தால்" என்பதினால் ஒரு அங்கத்தினரால்லது ப்ரெஸிடென்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடென்டினுடைய உத்தியோகமானது அது முடிவிற்கு வருவதற்கு முன் காலியாய் விடுவதை யுத்தேசித்ததாகும். உதாரணமாக ஒரு அங்கத்தினர் ஒரு லோகல் போர்டில் யாதொரு உத்தியோகத்தை வகித்துக் கொண்டதாலும் அல்லது அவர் தம்முடைய உத்தியோகத்துக்கு விரோதமான ஒரு உத்தியோகத்தை மேற்கொண்டாலும் (உதாரணமாக அவர் ஒரு ஹானரரி மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப்பட்டாலும்) அல்லது ஒரு லோகல் போர்டில் யாதொரு காண்டிராக்ட்டு எடுத்துக்கொண்டு அதை நடத்தி வரும் பக்ஷத்திலும் அல்லது யாதொரு அங்கத்தினரின் கீழ் உத்தியோக முறைமையில் அவருக்குக் கீழ்ப்படிந்த ஒரு உத்தியோகஸ்தராக வந்தாலும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர் லோகல் போர்டு அங்கத்தினருடைய ஸ்தானத்திலிருந்து நீங்கிப் போவதை உத்தேசித்து ஒரு தேர்தல் நடக்கலாம். ஆனால், புதிதாக தேர்தலில் வந்த அங்கத்தினராணவர் என்றைய தினம் அந்த ஸ்தா

னம் காலியாகுமோ அன்று முதலல்லாமல் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட காலம் முதல் அந்த உத்தியோகத்தை வகிக்க அருகராக மாட்டார்.

18. [இந்தப்பிரிவு எடுத்துவிடப்பட்டது.]

எலெக்ஷன்களும் நியமகங்களும் பிரசித்தப்படுத்தப்பட வேண்டுமென்பது.

19. யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டையாகிலும் வைஸ் ப்ரெஸிடென்டை யாகிலும் அங்காமியான ப்ரெஸிடென்டை யாகிலும், அங்கத்தினரையாகிலும், தெரிந்தெடுப்பதையாவது நியமிப்பதையாவது நிர்ணயிக்கப்பட்ட விதமாய்ப் பிரசித்தம் செய்யவேண்டும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவில் ஒரு ப்ரெஸிடென்டு, வைஸ் ப்ரஸிடென்டு, டெம்பரரி ப்ரெஸிடென்டு (Temporary President) அல்லது அங்கத்தினர் இவர்களுடைய எலெக்ஷன் அல்லது நியமகங்கள் இவை நடந்தவுட்னே ஜில்லா கெஜட்டுகளில் விளம்பரப்படுத்த வேண்டுமென்று உள்ளது. ஒரு நபர் இம்மாதிரியாக எலெக்ஷனுக்கு பிறகு அவருடைய எலெக்ஷனைப்பற்றி அல்லது நியமகத்தைப்பற்றி டில்டிரிக்ட்டு கெஜட்டில் விளம்பரப் படுத்தப் படும்வரையிலும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவோ அல்லது நியமிக்கப் பட்டதாகவோ கருதப்பட்டு தமது உரிமைகளை செலுத்துவதற்கு அர்ஹமுள்ளவரா இல்லையா? என்பது கேள்வி. அவர் ஒரு எலெக்ஷன் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவதானது சட்டமூலமாகவே ஏற்பட்டதோர் உரிமை யாதலால் வேறே விதமாக சட்ட மூலமாகவோ அல்லது ஒரு கோர்டின் தீர்ப்பு மூலமாகவோ அவ்வுரிமையானது எடுபட்டாலொழிய போய்விடாது. ஆகையால் டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில் பிரசுரப்படுத்தப்படும் வரையிலும் அவர் தமது ஸ்தானத்தை வகிக்கக் கூடாதென்றுவது அல்லது தன்னுடைய உரிமைகளை செலுத்தக் கூடாதென்றுவது சொல்லுவதற்கில்லை. இந்தப் பிரிவிலும் ப்ரஸிடென்டு, வைஸ் ப்ரஸிடென்டு முதலியவர்களுடைய எலெக்ஷன் அல்லது நியமகமானது நிர்ணயிக்கப்பட்டவிதமாய் (அதாவது டில்டிரிக்ட்டு கெஜட்டில்) பிரசித்தம் செய்யப்படும் வரையிலும் அவர்கள் தமது உத்தியோகத்தை வகிப்பதற்கில்லையென்று சொல்லப்படவில்லை.

இன்னும், ஒரு நபர் ஒரு லோகல் போர்டில் ப்ரெஸிடென்டாகவோ அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகவோ இருப்பதிலிருந்து ராஜினாமா செய்வதாயிருந்தால் அவ்வித ராஜினாமா என்று முதல் அமலுக்கு வரவேண்டும் என்பதைப் பற்றி இச்சட்டத்தின் 16-வது பிரிவில் சொல்லியிருப்பதை நாம் கவனிப்போமாகில், என்றையதினம் அவருடைய ராஜினாமாவானது அவர் அந்த லோகல் போர்டினுடைய ப்ரெஸிடென்டாயிருந்தால் அந்த லோகல் போர்டு மீட்டிங்கில் அவருடைய ராஜினாமா வைக்கப்பட்ட தேதி

முதற்கொண்டும் அவர் ஒரு வைஸ் ப்ரெஸிடென்டு அல்லது அங்கத்தினராக இருக்கும்பக்ஷத்தில் அவருடைய ராஜினாமாவானது என்றையதினம் ப்ரெஸிடென்டினால் பெறப்படுகிறதோ அன்று முதற்கொண்டும் அமுலுக்கு வரும் என்றிருக்கிறதேயொழிய அவைகளைப் பற்றி கெஜட்டுகளில் விளம்பரப்படுத்தப்படும் வரையிலும் ராஜினாமா செய்த அங்கத்தினர்கள் அந்த லோகல்போர்டில் தமது ஸ்தானத்தை வகித்திருப்பவராகவே கவனிக்கப்படுவாரென்று சொல்லப்பட வில்லை. ஆகையால் இச்சட்டத்தில் வேறேவிதமாக அவருடைய உரிமைகளைப்பற்றி அவை ஒரு குறிப்பிட்டதினம் முதற்கொண்டுதான் அமுலுக்கு வரலாமென்று இராத வரையிலும் அவ்வுரிமையானது மற்றப்படி சட்டப்பிரகாரம் சங்கிரமிக்கும் தேதி முதற்கொண்டே அமுலுக்கு வருவதாகவே கவனிக்கப்பட வேண்டும்.

இச்சட்டத்தின் 22-A. பிரிவில் ஒரு ப்ரெஸிடென்டு இல்லாத காலங்களில் ஒரு லோகல் போர்டின் நிர்வாகம் எப்படி நடத்தப்பட வேண்டுமென்பதைப்பற்றி கூறப்பட்டுள்ளது. ஒரு ப்ரெஸிடென்டின் ஸ்தானம் காலியாயிருந்து வைஸ் ப்ரெஸிடென்டு சேர்ந்தாப்போல் 15–நாட்களுக்கு குறையாமல் தன்னுடைய போர்டின் எல்லைக்கு வெளியே போயிருந்த காலத்திலாவது அல்லது அசக்தராக இருக்கும்பக்ஷத்திலாவது ஒரு ப்ரெஸிடென்டை தேர்ந்தெடுப்பதற்காக ஒருமீட்டிங்கு கூட்டப்பட்டு எலெக்ஷன் நடத்தப்பட வேண்டுமென்றுள்ளது. அம்மாதிரி நடந்த ஒரு மீட்டிங்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ப்ரஸிடென்டு உடனே தன் உத்தியோகத்தை வகிக்க வேண்டுமென்று அப்பிரிவின் விவரணத்திலுள்ளது. இதனலும், ஒரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டாகவோ அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகவோ அல்லது டெம்பரரி ப்ரெஸிடென்டாகவோ அல்லது அங்கத்தினராகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நபர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயே தம்முடைய ஸ்தானத்தை வகிக்க உரிமையுள்ளவராக யேற்படும்.

எந்த அங்கத்தினரும் பிரதி பலன் பெற்றுக்கொள்ளக் கூடாதென்பது.

20. லோகல் போர்டிலுள்ள எந்த மெம்பரும் அப்படிப்பட்ட போர்டாருடைய அதிகாரத்திலாவது விசாரணைக்குள்ளாவதிருக்கிற நிறுவனத்திலிருந்து தாம் எந்த ஹோதாவிலாவது செய்திருந்த ஊழியம் அல்லது சிரமத்திற்காக எவ்வித சம்பளம் அல்லது வேறே பிரதி பலனைப் பெற்றுக்கொள்ளவும் கூடாது அல்லது கொடுக்கப்படவும் கூடாது.

குறிப்புகள்.

ஒவ்வொரு லோகல்போர்டிலு முள்ள அங்கத்தினர்கள் லோகல்போர்டிலுள்ள காரியங்களை ஜனப்பிரதிநிதியின் ஹோதாவில் இலவசமாக தம்மாலியன்ற உபகாரங்களைச் செய்து வரவேண்டுமென்று இச்சட்டத்தின்

கொள்கை. ஆகையால் அவர் ஒரு லோகல்போர்டினுடைய் அங்கத்தினர் ஹோதாவில் அதன் யாதொரு கமிட்டியிலோ இருந்தாவது அல்லது அதற் காக வெளியேபோயாவது அலுவலைப் பார்க்கும் பகூத்தில் அந்த ஸ்ரமத்திற் காக யாதொரு தொகையும் பெறக்கூடாது. ஒரு வேளை அவரேநேரில் கேட் காவிட்டாலும் ஒரு லோகல்போர்டானது அவருக்கு கொடுக்கும்படியாக செய் யக் கூடாதென்று இந்தப் பிரிவில் மிகவும் ஜாக்கிரதையாக பெற்றுக் கொள்ளவுங் கூடாது, அல்லது கொடுக்கப்படவும் கூடாது'' என்று இரு விதமாகவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனல் இசசட்டத்தின்கீழுள்ள விதிக ளின் பிரகாரம் யாதொரு லோகல் போர்டு அங்கத்தினர் தமக்குள்ளபடிச் சிலவுகளை பெறக் கூடாதென்று இப்பிரிவில் யாதொன்றும் சொல்லப்பட வில்லை.

நிர்வாக அதிகாரம் ப்ரெஸி டென்டினிடத்தில் இருக்கு மென்பது.

21. (1) லோகல் போர்டினுடைய நிர்மானங்களை ப்ரெஸி டென்டு நிறைவேற்றவேண்டும்; அந்தபோர்டி னுடைய நிர்வாக அதிகாரம் முழுவதும் அந்த ப்ரெஸிடென்டுக்கிருக்கவேண்டும்.

(2) இந்த ஆக்டு லோகல் போர்டு செலுத்த வேண்டு மென்று வெளிப்படையாகத் தெரிவிக்கும் யாதொரு அதிகாரத்தை ப்ரெஸிடென்டு தனியாக செலுத்துவது சட்ட சம்மதமாக மாட்டாது.

குறிப்புகள்.

இப்பிரிவானது இரண்டு பாகமாக உள்ளது. முதல் பாகமானது ஒவ் வொரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டும், அந்த லோகல் போர்டினுடைய நிர்வாகத்தை செலுத்தி வரவேண்டுமென்று கூறுகிறது. இரண்டாவது பாகமானது ஒரு லோகல் போர்டு ப்ரஸிடென்டு லோகல் போர்டாரால் ஸ்பஷ்டமாக செலுத்தப்பட வேண்டுமென்றுள்ள யாதொரு அதிகாரத்தைச் செலுத்தக் கூடாதென்று கூறுகிறது.

ஒவ்வொரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டும் அந்த லோகல் போர்டு செய்யும் நிர்மானங்களை நிறைவேற்றுவதற்காக தகுந்த நடவடிக்கை களை எடுத்துக்கொள்ள வேண்டும். தவிர, அவர் இந்த சட்டப் பிர காரம் எந்தெந்த காரியங்களை தாம் செய்யவேண்டுமென்றுள்ளதோ அவை களையும் நிர்வகித்து வரவேண்டும். ஆனல் இச்சட்டத்தில் சிற்சில காரியங் களை ஒரு லோகல் போர்டுதான் செலுத்திவர வேண்டுமென்றுள்ளது. உதா ரணமாக, 75-வது பிரிவின்கீழ் வரி விதிப்பதும், 76-வது பிரிவின்கீழ் யாத்திரை வாகனங்களுக்கு வரிகளை விதிப்பதும், 93-வது பிரிவின்கீழ் தொழில் வரியை விதிப்பதும், 98-வது பிரிவின்கீழ் வீட்டு வரியை விதிப்பதும், 103-வது பிரிவின்கீழ் வரியை தள்ளிக் கொடுப்பதும், 104-வது பிரிவின் கீழ்

சுங்கங்களை ஏற்படுத்துவதும், 105-106-வது பிரிவுகளின்கீழ் சுங்க ஸ்தலங்களை ஏற்படுத்துவதும், 111-வது பிரிவின்கீழ் சுங்கங்களை தள்ளிக் கொடுப்பதும்,111-A பிரிவின்கீழ் சுங்கம்முதலிய வரிகளை விட்டுவிடுவதும்,113–வது பிரிவின்கீழ் ரயில் பாதைகள் முதலியவைகளைக் காப்பாற்றுவதும், 114-A பிரிவின்கீழ் கிராம அபிவிருத்தி பண்டுகளை ஏற்படுத்துவதும், 118-வது பிரிவின்கீழ் பட்ஜெட்டுகளை தயார் செய்வதும், 123-வது பிரிவின்கீழ் குளம் கிணர், பீள்ளம், சாக்கடை, நீர்க்கால் முதலியவைகளை ஜன ஆரோக்கியத்தை உத்தேசித்து அடைத்துவிடுவதும், 124-126-வது பிரிவுகளின்கீழ் குளம், கிணர் முதலியவைகளை சுத்த ஜலத்திற்காக ஒதுக்கி வைப்பதும், 135-வது பிரிவின்கீழ் அபாய காலங்களில் பொதுஜனங்கள் வேடிக்கைக்காக உபயோகப்படுத்தும் இடங்களை, (உதாரணமாக:—டிராமா, சர்க்கஸ், பையாஸ்கோப் முதலியவைகளை) தடுப்பதும், 168-வது பிரிவின்கீழ் பப்ளிக் மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதும், 171-வது பிரிவின்கீழ் பிரைவேட் மார்க்கெட்டுகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதும், 176-வது பிரிவின்கீழ் பிரைவேட் மார்க்கெட்டுகள் விஷயமாக அவை செய்துவைக்க வேண்டிய சௌகர்யங்களைச் செய்யும்படி சொல்லுவதும், 184–வது பிரிவின்கீழ் வண்டி நிற்குமிடங்களை ஏற்படுத்துவதும், அவைகளுக்கு 187–வது பிரிவின்கீழ் லைசென்ஸ் கொடுப்பதும், 189–வது பிரிவின்கீழ் ஆடு மாடுகளை வெட்டு மிடங்களுக்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்வதும், 193-வது பிரிவின்கீழ் தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதும், 195-வது பிரிவின்கீழ் நியூசன்சுகளைத் தடுப்பதும், ஆகிய இவைகளைச் செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய அதிகாரங்களை ஒரு ப்ரெஸிடென்டு தாமாகவேயாவது அல்லது தம்முடைய லோகல் போர்டின் அங்கீகாரத்தை உத்தேசித்தாவது நடத்துவதற்கில்லை. இவைகள் விஷயமாக ஒரு லோகல் போர்டானது தகுந்தபடி செய்யும் தீர்மானங்களைத்தான் ப்ரெஸிடென்டு நிறைவேற்ற வேண்டும்.

இந்த சட்டத்தில் சிற்சில சந்தர்ப்பங்களில் ஒரு ப்ரெஸிடென்டு தாமாகவும், சிற்சில சந்தர்ப்பங்களில் லோகல் போர்டினுடைய அனுமதியைக் கொண்டும், சில நிர்வாகக் காரியங்களைச் செய்யலாமென்றுள்ளது. இவற்றைக்குறித்து இப்புத்தகத்தின் முதலில் இந்த சட்டத்தின் சுருக்க விளக்கத்தில் நன்றாக சொல்லப்பட்டிருப்பதைக் காண்க.

அவசரமான சந்தர்ப்பங்களில் ப்ரெஸிடென்டுக்குள்ள அதிகாரங்கள்.

22. எந்த வேலையை நிறைவேற்றுவதற்கு அல்லது எந்த காரியத்தைச் செய்வதற்கு லோகல் போர்டினுடைய அனுமதி வேண்டியிருக்கிறதோ அப்படிப்பட்ட வேலையை உடனே நிறைவேற்றுவது அல்லது அப்படிப்பட்ட காரியத்தை உடனே செய்வது பொதுஜனங்களுடைய நன்மைக்கோ

அல்லது பந்தோபஸ்துக்கோ அவசியமென்று லோகல் போர்டின் ப்ரெஸிடென்ட் அபிப்பிராயப்பட்டால், அவசரமான விஷயங்களில் அவர் அந்தப்படி நிறைவேற்ற அல்லது செய்ய உத்தரவு கொடுக்கலாம்: மேலும், அவர் - அப்படிப்பட்ட வேலையை நிறைவேற்றுவதற்காக அல்லது காரியத்தைச் செய்வதற்காகப் பிடிக்கும் செலவை லோகல் பண்டிலிருந்து கொடுக்கும்படி உத்தரவு செய்யலாம்.

ஆனால்,—

(a) அவர் - குறித்த யாதொரு வேலையை நிறைவேற்றக் கூடாதென்றோ அல்லது குறித்த யாதொரு காரியத்தைச் செய்யக் கூடாதென்றோ தடுத்து லோகல் போர்டினால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் எந்த உத்தரவுக்கும் விரோதமாய் இந்த பிரிவின்படி நடவடிக்கை நடத்தக்கூடாது; மேலும்

(b) அவர் - இந்தப் பிரிவின்படி தாம் நடத்தியிருக்கும் நடவடிக்கையைக் குறித்தும் அதற்குள்ள நியாயங்களைக் குறித்தும் லோகல் போர்டினுடைய அடுத்து வருகிற மீட்டிங்கிலே அவர்களுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டினுடைய அவசர நிர்வாக அதிகாரத்தைப்பற்றி சொல்லுகிறது. இந்தப் பிரிவானது மிகவும் ஜாக்கிரதையாக கவனித்து அனுசரிக்கப்பட வேண்டும். இந்தப் பிரிவில் "அவசரமான விஷயங்களில் அவர் அந்தப்படி நிறைவேற்ற அல்லது செய்ய உத்தரவு கொடுக்கலாம்" என்பதினால் ஒரு ப்ரெஸிடென்டு ஒரு வேலையை நிறைவேற்றுவதில் அல்லது காரியத்தைச் செய்வதில் அதன் விஷயமாக லோகல் போர்டுடன் கலந்து செய்வதற்கு அவகாசம் இராமலுள்ள சந்தர்ப்பங்களைக் குறிக்கும். அவர், தம் லோகல் போர்டினுடைய உத்தரவு அல்லது அனுமதியானது தமக்குக் கிடைக்கும் வரையிலும் கார்த்துக் கொண்டிருக்கும் பக்ஷத்தில் ஒருவேளை ஜனங்களுடைய நன்மைக்கும் பந்தோபஸ்துக்கும் ஹானி வரக்கூடும். அப்படிப்பட்ட என்றுள்ள சந்தர்ப்பங்களில்தான் அவர் இம்மாதிரி செய்யக்கூடும். உதாரணமாக, வெள்ளத்தினால் ஒருவாராவதி இடிந்து போய்விடுதல், அல்லது பொதுரஸ்தாக்களில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக மரங்கள் சாய்ந்து விழுந்திருத்தல் அல்லது ஜனங்களுடைய சுகத்திற்காக யாதொரு குளத்தை தூர்த்து செய்தல் ஆகிய லோகல் போர்டினால் செய்யப்படும் அனுமதியின்பேரில் நடக்க வேண்டிய

சகல காரியங்களுக்கும் அதினுடைய அனுமதி யில்லாமலே, அதின் அனுமதியை உத்தேசித்து அவைகளைச் செய்யலாம்.

இந்தப் பிரிவில் கண்ட வேலைகளை அல்லது காரியத்தைச் செய்வதில், ப்ரெஸிடென்டானவர் அந்த வேலை அல்லது காரியமானது பொதுஜன நன்மைக்கும், பந்தோபஸ்துக்கும் மிகவும் அவசியமானதென்று அபிப்பிராயப் பட்ட பிறகு தான் அவைகளைச் செய்யவேண்டும்.

ஆனால் எந்த காரியத்தை அல்லது வேலையை செய்யக் கூடாதென்று லோகல் போர்டு முன்னமே உத்திரவு செய்திருக்கிறதோ அந்த காரியத்தை எக்காரணத்தைக் கொண்டும் அதின் ப்ரஸிடென்டு செய்வதற்கில்லை. இந்தப் பிரிவின்கீழ் தாம் செய்த காரியங்களைப்பற்றி அந்த ப்ரெஸிடென்டு உடனே அடுத்த மீட்டிங்கில் லோகல் போர்டுக்கு தெரிவிக்க வேண்டும்.

ஒரு கேஸில் ஒரு லோகல் போர்டின்மீது ஒரு தாவா கொண்டு வரப்பட்டது. அந்த தாவாவை எதிர்ப்பதற்காக ஒரு தாலூக்கா போர்டு ப்ரஸிடென்டு தாலூக்கா போர்டின் உத்திரவில்லாமல் வக்கீலை நியமித்து கேஸை நடத்தினர். அந்த வக்கீலுக்குக் கொடுக்க வேண்டிய பீசுக்காக அந்த வக்கீல் தாவா செய்ததில் அந்த தாலூக்கா போர்டினுடைய உத்திரவில்லாமல் அந்த வக்கீல் நியமிக்கப்பட்டதால் தாலூக்கா போர்டு யாதொரு பணத்தையும் செலுத்த மறுத்து விட்டது. இந்தக் கேஸானது சென்னை ஹைக்கோர்ட்டுக்கு வந்ததில், ஹைக்கோர்ட்டாரவர்கள், ஒரு தாலூக்கா போர்டு ப்ரஸிடென்டு, தாலூக்கா போர்டுமீது கொண்டுவரப்படும் தாவாக்களை தாலூக்கா போர்டினுடைய முன்னுத்திரவைப் பெறுமலே அதை எதிர்ப்பதற்காக ஒரு வக்கீலை நியமிக்கலாமென்றும், ஆனால் ஒரு தாலூக்கா போர்டே பிரதிவாதியாக இல்லாமல் வாதியாக இருந்து ஒரு தாவா செய்வதாயிருந்தால் ப்ரெஸிடென்டானவர் தாலூக்கா போர்டினுடைய முன்னுத்திரவைப் பெறவேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர்.(a)

22-A. (1) ஒருலோகல்போர்டின் ப்ரெஸிடென்டினுடைய ஸ்தானமானது காலியாகி விட்டால் அதன் வைஸ் ப்ரெஸிடென்டானவர், ஒரு புதிய ப்ரெஸிடென்டு உத்தியோகம் வகிக்கும் வரையிலும் ப்ரெஸிடென்டினுடைய அலுவல்களை நடத்தி வரவேண்டும்.

ப்ரெஸிடென்டினுடைய ஸ்தானமானது காலியாக இருக்கும்போது அதன் அலுவல்களை யார் நடத்துவது.

(2) (a) ஒரு டிஸ்ட்ரிக்ட்டு போர்டினுடைய ப்ரெஸிடென்டின் ஸ்தானமானது காலியாய் விட்டிருந்து, வைஸ் ப்ரெஸிடென்டின் ஸ்தானமும் காலியாய் விட்டிருந்தாவது அல்லது வைஸ் ப்ரெஸி

(a) வெங்கிட சுப்பராவ் vs. ரேப்பள்ளி தாலூக்கா போர்டு ப்ரஸிடென்டு A. I. R. 1928. Mad. 981=56 M. L. J. 110.

டென்டு சேர்ந்தாப்போல் 15-தினங்களுக்குமேல் லோகல் போர்டினுடைய அதிகார எல்லைக்கு வெளியே இருந்துவிட்டிருந்தாலாவது அல்லது அவர் அசக்தராக ஆகிவிட்டாலாவது இருக்கும்பக்ஷத்தில் டிஸ்டிரிக்ட்டு கலெக்டரானவர் ஒரு ப்ரெஸிடென்டை தேர்ந்தெடுப்பதற்காக ஒரு மீட்டிங்கைக் கூட்டவேண்டும். இன்னும் ஒரு புதிய ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களில் யாராவது உத்தியோகத்தை வகிக்கும் வரையிலும், அல்லது வெளியிலிருக்கும் வைஸ் ப்ரெஸிடெண்டானவர் அந்த லோகல் போர்டின் அதிகார எல்லைக்குள் வரும் வரையிலும் அல்லது அவருடைய அசக்தி தீர்ந்து சொஸ்தப்படும் வரையிலும், சந்தர்ப்பத்திற்குத்தகுந்தாப்போல் டிஸ்டிரிக்ட்டு கலெக்டரானவர் இந்த ஆக்டிலாவது அல்லது இதன்கீழ்வெளியிடப்படும் விதிகளிலாவது அல்லது அறிக்கைகளிலாவது என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும் அந்த டிஸ்டிரிக்ட்டு போர்டில் ஒரு எக்ஸ் அபிஷியோ (Ex-officio) அங்கத்தினராக இருந்து டிஸ்டிரிக்ட்டு போர்டின் ப்ரெஸிடென்டாக இருக்க வேண்டும்.

(b) ஒருதாலூக்கா போர்டு அல்லதுபஞ்சாயத்து இவைகளினுடைய ப்ரெஸிடென்டின் ஸ்தானமானது காலியாயிருந்து வைஸ் ப்ரெஸிடென்டினுடைய ஸ்தானமும் காலியாயிருந்தாவது அல்லது வைஸ் ப்ரெஸிடென்டி சேர்ந்தாப்போல் 15-நாட்களுக்குமேல் லோகல் போர்டினுடைய அதிகார எல்லைக்கு வெளியே இருந்து வந்தாலாவது அல்லது அசக்தராக இருந்தாலாவது இருக்கும்பக்ஷத்தில் தாலூக்கா போர்டாயிருந்தால் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டால் நியமகம் செய்யப்படும் ஒரு அங்கத்தினராவது, பஞ்சாயத்தாக இருந்தால் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டால் நியமிக்கப்படும் ஒரு பஞ்சாயத்தின் அங்கத்தினராவது, இவர்கள் ஒரு ப்ரெஸிடென்டை தேர்ந்தெடுப்பதற்காக ஒரு மீட்டிங்கை கூட்டவேண்டும். இன்னும் புதிய ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தேர்ந்தெடுக்கப்பட்டுஅவர் உத்தியோகம் வகிக்கும்வரையிலும் அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு அந்த லோகல் போர்டின் எல்லைக்குள் வரும் வரையிலும் அல்லது அவருடைய அசக்தி தீரும் வரையிலும் சந்தர்ப்பங்களைக் கவனித்து அப்படி நேமிக்கப்பட்ட அங்கத்தினர் அந்த தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தினுடைய ப்ரெஸிடென்டின் அலுவல்களை நடத்தி வரவேண்டும்.

(3) மேலே (2) வது உபப் பிரிவில் கண்டிருக்கிற பிறகாரம் ஒரு ப்ரெஸிடென்டை தேர்ந்தெடுப்பதற்காக கூட்டப்படும் மீட்டிங்கானது டிஸ்டிரிக்ட்டு போர்டு அல்லது தாலூக்கா போர்டுகளாயிருந்தால் ஸ்பஷ்டமாக 15-நாட்கள் குறையாமலும், பஞ்சாயத்துகளாயிருந்தால் ஸ்பஷ்டமாக 5-நாட்களுக்குக் குறையாமலும் முன்னதாகவே அங்கத்தினர்களுக்கு நோட்டீஸ் தெரிவிக்கப்பட்ட பிறகுத்தான் கூட்டப்பட வேண்டும்.

(4) மேலே (2) வது உபப் பிரிவின் (b) வாக்கியத்தின்கீழ் ஒரு தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தினுடைய ப்ரெஸிடென்டுவின் அலுவல்களை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஒரு நபர் அவர் அந்த அலுவல்களை நடத்திவரும் காலம் வரையிலும் அந்த தாலூக்கா போர்டின் அல்லது பஞ்சாயத்தினுடைய டெம்பரெரி ப்ரெஸிடென்டு (Temporary President) என்று பெயரிடப்படுவார்.

விவரணம்:—ஒரு புதிய ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தாம் அந்த ஸ்தானத்தை வகிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டாரென்று வெளியானவுடன் தங்களுடைய ஸ்தானங்களை வகித்துவிட்டதாகக் கருதப்படுவார்.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு சீர்திருத்தச் சட்டத்தினால் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. லோகல் போர்டுகளிலுள்ள ப்ரெஸிடென்டுகளும், வைஸ் ப்ரெஸிடென்டுகளும் அடிக்கடி மாதக் கணக்குகளாக தங்கள் போர்டினுடைய எல்லைக்கு வெளியே தன் வியாபார விஷயமாகவோ அல்லது தன் சொந்த விஷயமாகவோ போகவேண்டி தம்முடைய போர்டின் நிர்வாகத்தை ஹெட் குமாஸ்த்தாக்களிடம் ஒப்புவித்துவிட்டு போவதாக பல புகார்கள் கிளம்பி உள்ளன. இனி இவ்வித புகார்கள் கிளம்பவொட்டாமலிருக்க ஒரு லோகல் போர்டில் ப்ரெஸிடென்டாவது அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாவது இல்லாத சந்தர்ப்பங்களில் டிஸ்டிரிக்ட்டு கலெக்டர் அல்லது டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டு ஒரு மீட்டிங்கைக் கூட்டி ஷை ஸ்தானத்தை எலெக்ஷன் மூலமாக பூர்த்தி செய்விக்கவேண்டுமென்றுள்ளது.

இந்தப்பிரிவில் காலியாயிருக்கிற ஒரு ப்ரெஸிடென்டின் ஸ்தானத்தை பூர்த்தி செய்வதற்காக உள்ள நடவடிக்கைகள் இரண்டுவிதமாக நடத்தப்பட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. அதாவது டிஸ்டிரிகட்டு போர்டுகளில் ஒருவிதமாகவும் தாலுக்காபோர்டு அல்லது பஞ்சாயத்துகளில் மற்றொருவிதமாகவும் அந்த லோகல்போர்டின் ப்ரெஸிடென்டு எலெக்ஷன் நடத்திவரப்பட வேண்டுமென்றுள்ளது.

(2) (a) உபப்பிரிவில் ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டில் ப்ரெஸிடென்டின் ஸ்தானம் காலியாயிருந்து வைஸ் ப்ரெஸிடென்டும் இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் நிர்வாக அலுவல்களைப் பார்த்துவராமலிருக்கும் பக்ஷத்தில் டிஸ்டிரிக்ட்டு கலெக்டரானவர் உடனே ஒரு மீட்டிங்கூட்டி ஒரு ப்ரெஸிடென்டை தேர்ந்தெடுக்கும்படிச் செய்யவேண்டுமென்றும், அப்படி ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு உத்தியோகம் வகிக்கும் வரையிலும் அல்லது ஒரு வைஸ் ப்ரெஸிடென்டு தன் போர்டின் ஏல்லைக்கு வெளியே போயிருந்தால் அவர் திரும்பிவரும்வரையிலும் அல்லது அந்த வைஸ் ப்ரெஸிடென்டு உத்தியோகம்வகிக்க சக்தியுள்ளவராக ஏற்படும் பக்ஷத்தில் அதுவரையிலும் தாமே அந்தபோர்டின் ஒரு அங்கதினராகவும், ப்ரெஸிடென்டாகவுமிருந்து அதன் நிர்வாகத்தைப் பார்த்துவரவேண்டுமென்றுள்ளது. டிஸ்டிரிக்ட்டு கலெக்டரானவர் டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கு ப்ரெஸிடென்டை தேர்ந்தெடுப்பதற்காக கூட்டப்படும் ஒரு மீட்டிங்குக்காக 15-நாட்களுக்குக் குறையாமல் ஒரு நோட்டீஸ்கொடுத்தப் பிறகுதான் அந்த மீட்டிங்கைக் கூட்டவேண்டும்.

தாலூக்கா போர்டுகளிலும், பஞ்சாயத்துகளிலும் ப்ரெஸிடென்டின் ஸ்தானமானது காலியாயிருந்து - வைஸ் ப்ரெஸிடென்டின் ஸ்தானமும் காலியாக இருக்கும்பக்ஷத்தில் அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு சேர்ந்தாப் போல் 15-நாட்களுக்குமேல் அந்த லோகல் போர்டினுடைய எல்லைக்கு வெளியே போயிருந்தாவது அல்லது சக்தியற்றவராகவாவது இருக்கும் பக்ஷத்தில் டிஸ்டிரிக்ட்டுபோர்டு ப்ரெஸிடென்டு ஒரு தாலூக்கா போர்டு மெம்பரை அழைத்து ப்ரெஸிடென்டை தேர்ந்தெடுப்பதற்கான ஒரு மிட்டிங்கை கூட்டவேண்டுமென்று அவருக்கு உத்திரவு கொடுக்கலாம். அதே மாதிரியாக ஒரு பஞ்சாயத்தின் அங்கத்தினரை அழைத்து அவருக்கு பஞ்சாயத்துக்கு ஒரு ப்ரெஸிடென்டை தேர்ந்தெடுப்பதற்காக ஒரு மீட்டிங்கை கூட்டவேண்டுமென்றும் உத்திரவு செய்யலாம். தாலூக்கா அல்லது பஞ்சாயத்துகளில் புதிய ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு உத்தியோகம் வகிக்கும்வரையிலும் அதன் நிர்வாகத்தை கவனித்துவரும் ப்ரெஸிடென்டுக்கு டெம்பரரி ப்ரெஸிடென்டு என்று பெயர். இப்பிரிவில் சொல்லியிருக்கிறபிரகாரம் ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டின் எலெக்ஷன் நடந்தவுடனேயே அந்த ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தமது உத்தியோகத்தை வகிக்கவேண்டும்.

ப்ரெஸிடென்டுகளும், வைஸ் ப்ரெஸிடென்டுகளும் லோகல் போர்டுகளினுடைய நிர்வாகத்தை சரிவர கவனியாமல் அசட்டை செய்துவிட்டு வெளியே போயிருப்பதை இப்பிரிவு கண்டிப்பதாகும். ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு தாம் அந்த லோகல்போர்டினுடைய எல்லையைவிட்டு வெளியே போவதாகயிருந்தால் தம்முடைய நிர்வாக அதிகாரத்தை எவ

ரெவர்களுக்கு ஒப்புவிக்க வேண்டுமென்று 23-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

23. (1) ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு எழுத்து மூலமாக ஒரு உத்திரவு செய்து அதனுல் தன்னுடைய அலுவல்களில் எதையாவது நடத்தும்படி வைஸ் ப்ரெஸிடென்டுக்கு உத்திரவிடலாம்:

ப்ரெஸிடென்டு தமது அலுவல்களை நடத்தும்படி மற்றொருவரை அதிகாரப்படுத்துவது அல்லது அவருக்கு அதிகாரங்கள் சேருவது.

ஆனல் அந்த போர்டானது எந்த அலுவல்களை அவர் மற்றொருவர் நடத்தும்படி விடக்கூடாதென்று வெளிப்படையாக தடுத்திருக்கிறதோ அந்த அலுவல்களை மற்றொருவர் செய்யும்படி அதிகாரப்படுத்தக்கூடாது.

(2) ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு சேர்ந்தாப்போல் 15–நாட்களுக்குமேல் லோகல் போர்டினுடைய அதிகார எல்லேக்கு வெளியே போயிருக்கும் பக்ஷத்தில், அல்லது அவர் சக்தியற்றவராக இருக்கும் பக்ஷத்தில், அந்த போர்டினுடைய யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியன் இவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுப்பதோ அல்லது உத்தியோக உயர்வை தடுப்பதோ அல்லது உத்தியோக ஸ்தானத்தைக் குறைப்பதோ அல்லது உத்தியோகத்திலிருந்து நீக்கி விடுவதோ அல்லது தள்ளி விடுவதோ இவைகளைத் தவிர அவருடைய மற்ற எல்லா அலுவல்களும், அவர் அம்மாதிரி வெளியே போயிருக்கும் காலமளவும் அல்லது அவர் சக்தியற்றவராகயிருக்கு மளவும் வைஸ் ப்ரெஸிடென்டு நடத்தும்படி நேரவேண்டும்:

ஆனல் ப்ரெஸிடென்டானவர் லோகல்போர்டினுடைய அதிகார எல்லேக்கு வெளியே போயிருந்தபோதிலும் அவர் சென்னே மாஹாணத்துக்குள்ளிருந்து அப்படி வெளியே போனதானது அந்த போர்டினுடைய அலுவல் சம்மந்தமாகவென்றிரு நமானல், ப்ரெஸிடென்டினுடைய அலுவல்கள், மேலே (1) வது உபப்பிரிவில் கண்டிருக்கிற பிரகாரம் அவர் வைஸ் ப்ரெஸிடென்டுக்கு எவ்வளவு வரையிலும் அதிகாரம் கொடுத்திருந்தாரோ அவைத்தவிர மற்றப்படி வைஸ் ப்ரெஸிடென்டு அவைகளை நடத்தும்படி ஏற்படக் கூடாது.

(3) வைஸ் ப்ரெஸிடென்டும் சேர்ந்தாப்போல்15-தினங்களுக்குமேல் லோகல் போர்டினுடைய அதிகார எல்லைக்கு வெளியே போயிருக்கும் பக்ஷத்தில், அல்லது சக்தியற்றவராக இருக்கும் பக்ஷத்தில், அல்லது வைஸ் ப்ரெஸிடென்டினுடைய ஸ்தானமானது காலியாயிருக்கும் பக்ஷத்தில், ப்ரெஸிடென்டு எழுத்துமூலமாக செய்யும் உத்தரவினல் தன்னுடைய அதிகாரங்களை நடத்தும்படி அந்த போர்டின் ஒரு அங்கத்தினருக்கு அதிகாரம் கொடுக்கலாம். அவர் அம்மாதிரி அதிகாரமுள்ள காலமளவும் அதிகாரப்படுத்தப்பட்ட ப்ரெஸிடென்டு (President-Delegate) என்று சொல்லப்படுவார்;

ஆனல்,

(i) இந்த உபப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு அதிகாரப்படுத்துவதான ஒரு உத்தரவானது அமுலில் இருக்கையில், எந்த அங்கத்தினர் சார்பாக அமுலில் இருக்கும் உத்தரவு செய்யப்பட்டதோ அவரைத் தவிர வேறே எவர் சார்பாகவாவது மறுபடியும் ஒரு அதிகாரப்படுத்துவதான உத்தரவு செய்யப்படக் கூடாது;

(ii) இந்த உபப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு அதிகாரப்படுத்துவதானது யாதொரு வருஷத்தில் அந்த லோகல் போர்டினுடைய தனிமையாக அன்றி மொத்தத்தில் 90-தினங்களுக்குமேல் எந்த ஒரு கால அளவிற்கும் செய்யப்படக் கூடாது;

(iii) இந்த உபப்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு உத்தரவும் அதற்கடுத்தாப்போல் நடக்கும் போர்டின் மீட்டிங்கில் போர்டுக்கு தெரியப்படுத்த வேண்டும். இன்னும் அம்மாதிரியான ஒரு உத்தரவானது ஒரு தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டால் செய்யப்படும் பக்ஷத்தில் அவ்வுத்தரவு உடனே முறையே டிஸ்டிரிக்ட்டு போர்டு அல்லது தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

(4) அந்த லோகல் போர்டானது விதிக்கும் யாதொரு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு எழுத்து மூலமாக செய்யப்பட்ட ஒரு உத்தரவினல் தம்முடைய நிர்வாக அலுவல்களை அந்த போர்டினுடைய ஒரு அங்கத்தினர், ஒரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியன் அல்லது ஒரு கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர் இவர்கள் நடத்தும்படி அதிகாரப்படுத்தலாம். ஒரு தாலூக்கா

போர்டு அல்லது பஞ்சாயத்துயூனியனுடைய ப்ரெஸிடென்டு அதிகாரப் படுத்துவதாயிருந்தால் அவர் டிஸ்டிரிக்டு போர்டினுடைய ப்ரெஸி டென்டின் உத்தரவையும் பெற்றுக்கொண்டு அதற்கடங்கி டிஸ்டிரி க்ட்டு போர்டினுடைய ஒரு உத்தியோகஸ்தர், அல்லது ஊழியன் இவர்களை அதிகாரப்படுத்தலாம்.

குறிப்புகள்.

இந்தப்பிரிவானது 1930–ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு சீர் திருத்தச் சட்டத்தினால் பழைய 23, 24 பிரிவுகள் ஒன்று சேர்க்கப்பட் டுள்ளது. இந்தப்பிரிவில் ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு ஒரு வைஸ் ப்ரெஸிடென்டுக்கு அந்த போர்டானது ஸ்பஷ்டமாக தடுக்கப்பட்டிராத அலுவல்களை மாற்றி வைக்கலாமென்று கூறுகிறது. ஆனால், ஒரு ப்ரெ ஸிடென்டானவர் சேர்ந்தாப்போல் 15-நாட்களுக்கு மேல் தம் லோகல் போர்டினுடைய அதிகார எல்லைக்கு வெளியே யிருக்கும்பக்ஷத்தில் அல்லது அசக்தராக இருக்கும்பக்ஷத்தில் அவருடைய அதிகாரமானது இப்பிரிவின் (2)-வது உபப்பிரிவில் காணப்பட்டிருக்கும் வரையறைக்குட்பட்டு ப்ரெஸி டென்டினுடைய நிமித்தியமில்லாமலே வைஸ் ப்ரெஸிடென்டுக்குச் சேருவ தாகும். ஆனால், ஒரு ப்ரெஸிடென்டானவர் சென்னை மாகாணத்திற்குள் னேயே அந்த லோகல்போர்டு விஷயமாகவே அதன் எல்லைக்குவெளியே போயிருக்கும்பக்ஷத்தில் அவர் வைஸ் ப்ரெஸிடென்டுக்கு ஒப்புவித்திருக்கும் அதிகாரங்களைத்தவிர வேறே யாதொரு அதிகாரமும் வைஸ் ப்ரெஸிடென் டால் செலுத்தப்படுவதற்கில்லை. வைஸ் ப்ரெஸிடென்டும் சேர்ந்தாப்போல் 15-தினங்களுக்குமேல் ஒரு லோகல் போர்டினுடைய அதிகார எல்லைக்கு வெளியே போயிருக்கும்பக்ஷத்தில் அல்லது அசக்தராயிருக்கும்பக்ஷத்தில் ப்ரெஸிடென்டானவர் யாதொரு அங்கத்தினருக்கு தம்முடைய அதிகா ரத்தை மாற்றிவைக்கலாம். ஒரு ப்ரெஸிடென்டானவர் ஒரு வைஸ் ப்ரெஸி டென்டுக்கல்லாமல் வேறே ஒரு அங்கத்தினருக்கு தம்முடைய அதிகாரங் களை ஒப்புவிப்பதில் மூன்று அம்சங்களை கவனிக்கப்படவேண்டும். அதா வது,

(i) ஒருதரம் ஒருவர்பேரில் ஒரு ப்ரெஸிடென்டு தம்முடைய அதிகாரத்தை மாற்றிவைத்திருக்கும்காலத்தில் மற்றொருவருக்கு அம்மாதிரி யான அதிகாரம் கொடுப்பதற்கில்லை.

(ii) ஒரு போர்டினுடைய ஸ்பெஷல் சாங்க்ஷனில்லாமல் யாதொரு வருஷத்தில் 90-நாட்களுக்குமேல் ஒரு ப்ரெஸிடென்டு தமது அலுவல்களை பார்க்கும்படி யாதொரு அங்கத்தினருக்கு அதிகாரம் கொடுப்ப தற்கில்லை.

(3)-வது (iii) உபப்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு அதிகாரப்படுத்தும் உத்திரவும் தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தாகவிருந்தால் முறையே டில்டிரிக்ட்டுபோர்டு ப்ரெஸிடென்டுக்கும், தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டுக்கும் தெரியப்படுத்தப்படவேண்டும்.

ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு தம்முடைய நிர்வாக அலுவல்களை தம்முடைய போர்டினது உத்திரவையும் சம்மதத்தையும்கொண்டு யாதொரு அங்கத்தினர் அல்லது அந்த போர்டினுடைய உத்தியோகஸ்தர் அல்லது ஊழியருக்காவது அல்லது யாதொரு கவர்ன்மென்டு உத்தியோகஸ்தருக்காவது ஒப்புவித்துவிடலாம். அந்த ப்ரெஸிடென்டு ஒரு தாலூக்காபோர்டு அல்லது பஞ்சாயத்து ப்ரெஸிடென்டாயிருந்தால் டில்டிரிக்ட்டுபோர்டினுடைய சம்மதத்தைக்கொண்டு ஒரு டில்டிரிக்ட்டுபோர்டு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியருக்கு தமது நிர்வாக அலுவல்களை ஒப்புவித்து வைக்கலாம்.

ஒரு ப்ரெஸிடென்டு தன்னுடைய லோகல்போர்டு வஸ்தீரணத்திலிருந்து எப்பொழுதும் வெளியே யிருப்பாராஞல் அவருடைய உத்தியோகத்திற்கு ஏதாவது ஹானம் வருமென்று இப்பிரிவில் இம்மாதிரி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏனென்றால் ப்ரெஸிடென்டு இல்லாத காலங்களில் வைஸ் ப்ரெஸிடென்டுக்கு, சிற்சில சந்தர்ப்பங்களைத்தவிர மற்ற எல்லா சந்தப்பங்களிலும், ப்ரெஸிடென்டினுடைய அலுவல்களைப் பார்ப்பதற்குள்ள உரிமையானது சங்கிரமித்ததாகும். வைஸ் ப்ரெஸிடென்டால் செய்யத்தகாத காரியங்களென்னவென்றால், ஒரு லோகல்போர்டினுடைய உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் இவர்களுக்கு உத்தியோகஉயர்வைக் கொடுப்பது அல்லது தடுப்பது அல்லது அவருடைய உத்தியோக ஸ்தானத்தைக் குறைப்பது அல்லது அவரை உத்தியோகத்திலிருந்து நீக்கிவிடுவது அல்லது தள்ளிவிடுவது இவைகளேயாகும்.

ஒரு வைஸ் ப்ரெஸிடென்டு இல்லாதகாலத்தில் ப்ரெஸிடென்டினிடமிருந்து நிர்வாக அதிகாரங்களை மாற்றப்பெற்ற ஒருவர் வைஸ் ப்ரெஸிடென்டு வரும் காலத்தில் உடனே தம்முடைய ஸ்தானத்தைவிட்டு நீங்கி அவருக்கு ஒப்புவிக்க வேண்டுமா என்பது கேள்வி.

இக்கேள்விக்கு இப்பிரிவில் சரியான யாதொரு பதிலும் காணவில்லை.

ஆனல், (3)-வது உபப்பிரிவின் (i) வாக்கியத்தில் "இந்த உபப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒரு அதிகாரப்படுத்துவதான உத்திரவானது அழலில் இருக்கையில்" என்றிருப்பதினல், ஒருவேளை ஒரு ப்ரெஸிடென்டு எவ்வளவு காலம் வரையிலும் யாதொரு அங்கத்தினருக்கு அதிகாரப்படுத்திவைக்கிறாரோ அந்தக்காலம் வரையிலும் அம்மாதிரி அதிகாரப்படுத்தப்பட்டதானது சட்ட பூர்வமாகவே கிடைத்த உரிமையாதலால் அதை யாதொரு வைஸ் ப்ரெஸிடென்டும் பங்கப்படுத்துவதற்கில்லை என்று ஒருவேளை ஏற்படலாம்.

இப்பிரிவின் (3)-(ii), உபப்பிரிவில், யாதொருவருஷத்தில் மொத்தத்தில் 90-தினங்களுக்கு மேலாக யாதொரு ப்ரெஸிடென்டு ஒரு அங்கத்தினரை நிர்வாகக் காரியங்களைச் செய்யும்படிய அதிகாரப்படுத்துவதற்கில்லையென்றுள்ளது. இச்சட்டத்தின் 3-வது பிரிவின் (24)-வது உபப்பிரிவில் "வருஷம்" என்பதற்கு அரசிறை வருஷமென்று அர்த்தமாகுமென்று விளக்கப்பட்டிருக்கிறது. அரசிறை வருஷமென்பது ஒவ்வொரு கிறிஸ்தவ வருஷம் ஏப்ரல் மாதம் முதல் அதற்கடுத்தவருஷம் மார்ச்சுமாதம் முடியவுள்ள மாதங்களாகும். ஆகையால், இப்பிரிவில் "வருஷம்" என்னும் பதத்திற்கும் அதே அர்த்தம் இருக்கவேண்டுமாகையால் ஒரு ப்ரெஸிடென்டு ஒரு குறிப்பிட்ட வருஷம் பிப்ரவரி மாதம் முதல் நான்கு மாதம் வரையிலும் அதாவது பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே இந்த மாதங்களுக்கு ஒரு அங்கத்தினரைச் சேர்த்தாப்போல் அதிகாரப்படுத்தினபோதிலும் அவர் இப்பிரிவுக்கு மீறி நடந்ததாகக் கவனிக்கப்படமாட்டார். ஏனென்றால் அவர் ஒரு அரசிறை வருஷத்தில் இரண்டுமாதமும், மற்றொரு அரசிறைவருஷத்தில் இரண்டு மாதமும் மாத்திரம்தான் அதிகாரப்படுத்தினதாகவும், இந்தப் பிரிவின் நிபந்தனைகளுக்கு மீறவில்லை யென்றும் சமாதான மேற்படலாம்.

யாதொரு நபர் ப்ரெஸிடென்டால் அதிகாரப் படுத்தப்பட்டபிறகு 90-தினங்கள் கழித்தபிறகும், ப்ரெஸிடென்டு அந்த லோகல்போர்டினுடைய நிர்வாகத்தை வகிக்காமல் இருக்கும்பக்ஷத்தில் (2)-வது உபப்பிரிவின்கீழ் வைஸ் ப்ரெஸிடென்டு இதற்கென்று அதிகாரப்படுத்தப்படாமலே நிர்வாகத்தை மேற்கொண்டு செய்துவரலாம்.

24. இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.

25. 23-வது பிரிவின்படி ஒப்புவிக்கப்படும் அலுவல்களை, ப்ரெஸிடென்டால் ஏற்படுத்தப்படக் கூடிய நிர்ப்பந்தங்களுக்கும் வரையறைகளுக்கும் நிட்டங்களுக்கும் உட்பட்டு நடத்தவேண்டும் அல்லது நிறைவேற்ற வேண்டும்; மேலும் டிடி அதிகாரங்களை ப்ரெஸிடென்டின் மேல்விசாரணைக்கும் புனராலோசனைக்கும் உட்பட்டு நடத்த வேண்டும் அல்லது நிறைவேற்ற வேண்டும். இன்னும் மேலே 23-வது பிரிவின் (2)-வது உபப் பிரிவின்கீழ் வைஸ் ப்ரெஸிடென்டினிடம் அவரால் நடத்தப்படுவதற்காக பொறுப்பேற்றப்படும் அலுவல்களை நடத்துவதையும் அல்லது நிறைவேற்றுவதையும் அடக்கி மேல்விசாரணை செய்ய ப்ரெஸிடென்டுக்கு அதிகாரமுண்டு.

பிரித்துக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை ப்ரெஸிடென்டின் மேல் விசாரணைக்கும் புனராலோசனைக்கும் உட்பட்டுச் செலுத்தவேண்டுமென்பது.

குறிப்புகள்.

இப்பிரிவில் கடைசி வாக்கியமானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு சீர்திருத்த சட்டத்தினுல் சேர்க்கப்பட்டது. ஒரு ப்ரெஸிடென்டு தாம் மற்றொருவருக்கு தம் அதிகாரத்தை செலுத்தும்படி ஒப்புவிக்கும்பக்ஷத்தில் அவர் எந்தெந்த நிபந்தனைகளை ஏற்படுத்துகிறாரோ அவைகளுக்கு அடங்கிதான் அதிகாரப்படுத்தப்பட்ட ப்ரெஸிடென்டானவர் (Delegate President) அவ்வதிகாரங்களை செலுத்தவேண்டும். ப்ரெஸிடென்டானவர் இப்பிரிவின்கீழ் ஒரு வைஸ் ப்ரெஸிடென்டு அல்லது அதிகாரப்படுத்தப்பட்ட ப்ரெஸிடென்டு (Delegate President) செய்யும் வேலைகளை மேற்பார்வை பார்க்க உரிமையுள்ளவராவர்.

தனித்தனி அங்கத்தினர்களின் பாத்தியதைகள்.

26. (1) யாதொரு லோகல் போர்டைச் சேர்ந்த எந்த அங்கத்தினராகிலும் - லோகல் போர்டு வேலையை நிறைவேற்றுகையில் உண்டாகும் யாதொரு அஜாக்கிரதையைக் குறித்தாவது, லோகல் போர்டு சொத்துக்குண்டாகும் யாதொரு சேதத்தைக் குறித்தாவது, லோகல் போர்டு விஸ்தீரணத்துக்குள் இருக்கும் யாதொரு இடத்துக்கு வேண்டியிருப்பவைகளைக் குறித்தாவது ப்ரெஸிடென்டை கவனிக்கும்படிச் சொல்லலாம்; மேலும், அவர் - யுக்தமாகத் தோற்றக்கூடிய எந்த சீர்திருத்தங்களையாகிலும் எடுத்துக்காட்டலாம்.

(2) ஒவ்வொரு அங்கத்தினரும் - டிஸ்டிரிக்ட் போர்டால் ஏற்படுத்தப்படக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு, லோகல் போர்டின் பரிபாலனத்துக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் குறித்துத் தீர்மானங்கள் கொண்டுவாவும் ப்ரெஸிடென்டைக் கேள்விகேட்கவும் பாத்தியதையுடையவராவார்.

(3) ஒவ்வொரு அங்கத்தினரும் - ப்ரெஸிடென்டுக்குச் சரியானபடி நோடீஸ் கொடுத்த பிறகு, ஆபீஸ் நிறைந்திருக்கும் மணி நேரங்களிலே, லோகல் போர்டைச் சேர்ந்த ரெகார்டுகளைப் பார்வையிடலாகும்; ஆனல், ப்ரெஸிடென்டானவர் - காரணங்களை எழுதிவைத்து அந்தப்படி பார்வையிடுவதைத் தடுக்கலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவானது இச்சட்டத்தில் மிகவும் முக்கியமானதோர் பிரிவாகும். இப்பிரிவினுல் ஒவ்வொரு லோகல் போர்டு அங்கத்தினரும் தமது கட

மைகளை செலுத்துவதற்கும், தமது பொறுப்பை காட்டி லோகல் போர்டினுடைய க்ஷேமத்தின் விஷயமாக வேண்டிய சீர்த் திருத்தங்களை செய்யும் படி கேட்பதற்கும் லோகல் போர்டு நிர்வாகத்தில் ஏதாவது தவறு அல்லது பிசகு இருக்கும் பக்ஷத்தில் அதை திருத்துவதற்காகவேண்டிய கேள்விகளைக் கேட்கவும் உரிமை ஏற்பட்டுள்ளது. ஒரு லோகல் போர்ட்டினுடைய வேலை நடத்தப்படுவதில் யாதொரு சிரத்தைக் குறைவு இருந்தாலும் அல்லது லோகல் போர்ட்டினுடைய சொத்துக்கள் அழிக்கப்பட்டாலும் அல்லது யாதொரு இடத்தில் சௌகரியக் குறைவுகள் இருந்தாலும் இவைகளைப் பற்றி ஒரு லோகல் போர்டு அங்கத்தினர் ப்ரஸிடென்டுக்குத் தெரிவித்து அவை சரிவர நடக்க வேண்டிய அல்லது இருக்கவேண்டியதற்காக சீர்திருத்தங்களை எடுத்துக் காட்டலாம். இப்படிச் செய்வதில் ஒரு அங்கத்தினர் ஒரு கடித மூலமாகவே ப்ரெஸிடென்டுக்கு தெரிவித்தால் போதுமானது. ப்ரெஸிடென்டானவர் கூடியவரையிலும் கவனித்து தம்மால் இயன்றளவு அக்குறைகளை தீர்க்கவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட பிரகாரம் ஒரு அங்கத்தினர் தெரிவித்தும் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாத பக்ஷத்தில் அல்லது அப்படி யாதொரு நடவடிக்கை எடுத்துக்கொண்டும் அது திருப்திகரமாக இல்லாத பக்ஷத்தில் அந்த அங்கத்தினர் போர்ட்டின் மீட்டிங்கில் விளக்கப்படும்படியாக கேள்விகளைக் கேட்டு அனுப்பலாம். இவை தவிர ஒரு லோகல் போர்ட்டின் நிர்வாக சம்பந்தமாய் உள்ள எந்தவிஷயமாகவாவது தீர்மானங்களை கொண்டு வரவும் கேள்விகளைக் கேட்கவும் உரிமையுண்டு. ஆனால் அவை விஷயமாக அனுசரிக்கப்பட வேண்டிய விதிகளும் முறைகளும் டிஸ்டிரிக்ட் போர்டால் செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொரு லோகல் போர்ட்டின் அங்கத்தினரும் அதன் ப்ரெஸிடென்டுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு அதன் ரிக்கார்ட்டுகளை அதன் ஆபீஸ் நடக்குங் காலங்களில் போய் ப்ரெஸிடென்டினுடைய அனுமதி பெற்று பரிசோதிக்க உரிமையுண்டு. ஆனால் ப்ரெஸிடென்டானவர் தகுந்த காரணங்களைக் கொண்டு அவருக்கு அப்படிச் செய்ய அனுமதி கொடுக்க மறுத்து விடலாம்.

ஒவ்வொரு லோகல் போர்ட்டினுடைய அங்கத்தினரும் தம்முடைய விடுதியின் சௌகரியங்களையும் க்ஷேமத்தையும் கவனிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்படுகிற ராகையால் அவர் மூலமாக கேட்கப்படும் கேள்விகளுக்கு மரியாதையுடனும், பொறுப்புடனும் ப்ரெஸிடென்டால் ஜவாப்பு சொல்லப்பட வேண்டும். இன்னும் ஒரு லோகல் ப்ரெஸிடென்டுக்கு அதினுடைய நிர்வாக விஷயமாகவுள்ள குறைகளை அவராகவே அறிந்து கொள்வது கஷ்ட சாத்தியமாதலால் ஒவ்வொரு போர்ட்டிலுமுள்ள அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் விடுதிக்கு பொறுப்பாளி யாதலாலும் அவர்களுக்கு இத்தகைய உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

லோகல் போர்ட்டில் தீர்மானங்களை கொண்டு வருவதாக யிருந்தால் அல்லது கேள்விகளை கேட்பதாக விருந்தால் ஒரு மீட்டிங் நடப்பதற்கு முன்னமேயே ஒரு அங்கத்தினர் நோட்டீஸ் கொடுப்பது உத்தமமாகும். ஒவ்வொரு லோகல் போர்டு மீட்டிங்கும் எம்மாதிரி நடத்தப்பட வேண்டுமென்றும், மீட்டிங்குகளில் என்னென்ன செய்யப்பட வேண்டுமென்றும் இச்சட்டத்தில் 2-வது ஷெடியூலில் விவரமாக சொல்லப்பட்டுள்ளது.

இப்பிரிவில் 2-வது உபப் பிரிவில் "பாத்தியதை யுடையவரோவர்" என்று சொல்லப்பட்டதினால் ஒரு அங்கத்தினர் யாதொரு கேள்வி கேட்பதையாகிது அல்லது தீர்மானத்தை கொண்டுவருவதையாவது ப்ரெவிடென் டாவது அல்லது அந்த லோகல் போர்டாவது தடுப்பதற்கில்லை என்று அர்த்தமாகும். ஆனால் ஒரு அங்கத்தினரால் கொண்டு வரப்படும் தீர்மானமானது ஒரு போர்டினுடைய அதிகார வரம்புக்கு மீறினதாக இருக்கும் பக்ஷத்தில் அதை அவர் கொண்டுவருவதற்கில்லை. ஒரு அங்கத்தினரால் கொண்டு வரப்படும் ஒவ்வொரு தீர்மானமும் அதை ஆமோதிப்பவர் இராமலிருக்கும்பக்ஷத்தில் அதை அவர் செய்வதற்கில்லை.

ஒரு லோகல்போர்டு அங்கத்தினர் ஒரு பொதுஜன உத்தியோகஸ்தர் (Public Servent) என்று கவனிக்கப்படமாட்டார். (a) அவர் அந்த லோகல் போர்டினுடைய ஒரு உத்தியோகஸ்தரென்றும் சொல்லப்படமாட்டார். (b) ஒரு அங்கத்தினர் தம்முடைய உத்தியோகத்தின் ஹோதாவில்செய்யும் யாதொரு செய்கை விஷயமாக ஒரு கிரிமினல் தாவா கொண்டுவரப்பட வேண்டுமானால் 227-A பிரிவின் பிரகாரம் தாவா செய்பவர் லோகல் கவர்ன்மென்டின் முன்உத்திரவை (Sanction) பெறவேண்டும். ஆனால் ஒரு அங்கத்தினர்மீது செய்யப்படும் ஒரு கிரிமினல் தாவாவில் எந்த செய்கை விஷயமாக அந்த தாவா செய்யப்பட்டதோ அதை அந்த நபர் தமது உத்தியோக அலுவலை நடத்துவதில்தான் செய்ததாக ஏற்பட்டாலொழிய லோகல் கவர்ன்மென்டினுடைய சாங்கிஷன் வேண்டியதில்லை.

இச்சட்டத்தில் 227-A பிரிவு ஏற்படுமுன் லோகல்போர்டு அங்கத்தினர்களுக்கு யாதொரு பாதுகாப்பும் இராமல் இருந்தது. இப்பொழுது லோகல் போர்டு அங்கத்தினர்கள் தைரியமாகவும், ஒடுக்கமில்லாமலும் தங்களைத் தேர்ந்தெடுத்த ஜனங்களின் சார்பாகவேண்டிய கேள்விகளைக் கேட்கலாம்.

சென்னை எலிமென்டரி எஜுகேஷனல் ஆக்ட்டு (Elementary Educational Act) சென்னை டவுன் பிளானிங் ஆக்ட்டு (Town Planing Act) சென்னை யூனிவர்ஸிடி ஆக்ட்டு (Madras University Act) அண்ணு

(a) தென்கனரா டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டு vs. கோபால கிருஷ்ணு 46 Mad. 803—A. I. R. 1923. Mad. 689.

(b) பழனியப்பசெட்டியார் vs கிருஷ்ணசாமி செட்டியார் 48M. L. J. 693=1925. A. I. R. Mad. 877.

மலை யூனிவர்ஸிடி ஆக்ட்டு (Annamalai University Act) இவைகளின்கீழ் அமைக்கப்படும் ஒரு கமிட்டி, கௌன்ஸில் முதலியவைகளுக்கு லோகல் போர்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம்.

லோகல் போர்டுகளினுடைய தீர்மானங்கள் சட்ட சம்மதமில்லாத தாகவோ அல்லது நியாயமற்றதாகவோ அல்லது ஒரு நபருக்கு வரம்புகடந்த பாரத்தை அல்லது சுமையை கொடுப்பதாகவோ இருக்கு மானால் அவைகளை ரத்து செய்யவோ அல்லது மாற்றவோ சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு (a) ஒரு லோகல்போர்டானது ஒரு லைசென்சை மிகவும் வரம்புகடந்து விதிக்கும்பக்ஷத்தில் அதை ஒதுக்கிவைக்க சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. (b) (c).

ஒரு அங்கத்தினர் யாதொரு லோகல்போர்டு ரிகார்டுகளை பார்வையிட வேண்டுமென்று கேட்டும் ஒரு ப்ரெஸிடென்டு அகாரணமாக தடுத்துவிட்டால் அதைப்பற்றி அந்த அங்கத்தினர் லோகல்போர்டின் மீட்டிங்கில் கேள்வி கேட்கலாம். அல்லது ஒரு தீர்மானத்தை பிரேரேபிக்கலாம் அப்படி அம்மாதிரி தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு லோகல்போர்டினால் அங்கீகரிக்கப் பட்டபிறகும், ப்ரெஸிடென்டு அந்த அங்கத்தினருக்கு லோகல்போர்டு ரிகார்ட்டுகளை பார்வை யிடுவதற்கு உத்திரவு கொடுக்காவிட்டால் இச்சட்டத்தின் 43-வது பிரிவின்கீழ் லோகல் கவர்ன்மென்டார் அவரை பதவியினின்றும் நீக்கிவிடலாம்.

ரெகார்டுகளை ஹாஜர்படுத்தும்படி கேட்க லோகல் போர்டாருக்குள்ள அதிகாரம்.

27. (1) யாதொரு லோகல் போர்டு - ப்ரெஸிடென்டின், வசத்திலிருக்கிற யாதொரு ரெகார்டையாவது, கடிதங்களையாவது, (ப்ளான்) நக்ஷாவையாவது, வேறே தஸ்தாவேஜையாவது ஹாஜர் படுத்தும்படி அவரைக் கேட்கலாம்.

(2) ப்ரெஸிடென்டானவர் மேலே கண்ட பிரகாரம் கேட்கப்படுகிறபடி உடனே நடந்து கொண்டால் போர்டின் அல்லது பொது ஜனங்களின் நன்மைக்குப் பிரதிகூலமா யிருக்குமென்று அபிப்பிராயப்பட்டாலன்றி மற்றப்படி, அவர் - அந்தப்படி கேட்கப்படுகிற ஒவ்வொன்றிற்கும் தக்கபடி நடந்துகொள்ள வேண்டும்; மேலே கண்டபடி பிரதிகூலமா யிருக்குமென்று அபிப்பிராயப்படுகிற விஷயத்திலே, அவர் - அந்தப்படி எழுத்து மூலமாய்த் தெரிவிக்க

(a) ரங்கோன் முனிசிபாலிட்டி vs. சூரட்டி பாராபஜார் கம்பெனி 5 Ran. 212

(b) செக்ரிடெரி ஆப் ஸ்டேட் vs. முருகேச முதலியார், A. I. R. 1929. Mad. 443.

(c) 59. M. L. J. Notes of Recent Cases page 34.

வேண்டியதுமல்லாமல், போர்டார் அப்படிச் செய்யச் சொல்லுகிற பக்ஷத்தில் பிரஸ்தாப விஷயத்தை,

(a) டிஸ்டிரிக்ட் போர்டுக்கும் அதன் ப்ரெஸிடென்டுக்குமாக ஏற்பட்ட விவாதமாயிருந்தால், பிரதேச கவர்ன்மென்டாரின் ஆலோசனைக்கும்,

(b) யாதொரு தாலூகா அல்லது பஞ்சாயத்துக்கும் அதன் ப்ரெஸிடென்டுக்குமாக ஏற்பட்ட விவாதங்களாயிருந்தால், டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்டின் ஆலோசனைக்கும், அனுப்ப வேண்டும்;

அதன்மேல், சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிரதேச கவர்ன்மென்டார் அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்டு பிரஸிடென்ட் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

குறிப்புகள்.

26-வது பிரிவில் ஒரு அங்கத்தினருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரமானது இப்பிரிவில் ஒரு லோகல் போர்டுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. "யாதொரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு வசத்திலிருக்கிற ரிக்கார்டு முதலியவைகளை ஆஜர்ப்படுத்தும்படி அவரைக் கேட்கலாம்" என்பதினால் ஒரு லோகல் போர்டானது தாம் கூடின ஒரு மீட்டிங்கில்தான் இம்மாதிரி கேட்கலாம் என்று அர்த்தமாகும். அங்கத்தினர்கள் தனித்தனியாக யிருந்து லோகல் போர்டு ரிக்கார்ட்டுகளை ஆஜர்ப்படுத்தும்படி ஒரு மனு மூலமாக கேட்பதற்கில்லை. ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டுக்கும் அந்த போர்டுக்கும் அபிப்பிராய பேதம் இருக்கும்பக்ஷத்தில் அந்த லோகல் போர்டு டிஸ்டிரிக்ட்டு போர்டாயிருந்தால்-லோகல் கவர்ன்மென்டினாலும், அந்த போர்டு ஒரு தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தாக இருந்தால் - டிஸ்டிரிக்ட்டு போர்ட்டின் ப்ரெஸிடென்டினாலும் தீர்மானிக்கப்பட வேண்டும். மற்றப்படி ஒவ்வொரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டும் தம்முடைய போர்ட்டின் அபிப்பிராயத்திற்கும் அபேக்ஷைக்கும் தீர்மானங்களுக்கும் அடங்கியேநடத்தி கொள்ள வேண்டும்.

28. (1) (a) ஒரு லோகல் போர்டு கமிட்டிகளை ஏற்படுத்தி அவைகளுக்கு என்னென்ன அதிகாரங்களைக் கொடுக்கிறார்களோ அவைகளைச் செலுத்தவும், என்னென்ன கடமைகளை இடுகிறார்களோ அவைகளைப் பூர்த்தி செய்யவும், என்னென்ன அலுவல்களைச் செய்யும்படி சொல்லுகிறார்களோ அவைகளை நடத்தவும், அந்த கமிட்டிகளுக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

லோகல் போர்டு கமிட்டிகளை ஏற்படுத்துவது.

(b) ஒரு லோகல்போர்டு-இன்னும் தனியான அங்கத்தினர் களை அல்லது கமிட்டிகளை நியமித்து-அவர்களுக்குச் சாட்டப்பட்ட யாதொரு விஷயமாக விசாரணைச்செய்து ரிப்போர்ட்டு செய்யவோ அல்லது யோசனை சொல்லவோ-இவைகளைச் செய்ய உத்தரவு செய்ய லாம்.

(2) இந்த ஆக்டில் வெளிப்படையாக வேறே விதமாக சொல்லப்பட்டிருந்தாலொழிய ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு தன்னுடைய உத்தியோகத்தின் அந்தஸ்தினால், மேல் 1-வது உபப்பிரி வின்கீழ் அமைக்கப்படும் கமிட்டியில் அங்கத்தினரும் அக்ராசனரு மாக இருக்க வேண்டும்.

(3) ஒரு லோகல் போர்டு தன்னுடைய மொத்த சங்கியை யில் பாதிக்குக் குறையாமலுள்ள அங்கத்தினர்களால் ஆதரிக்கப் பட்ட ஒரு தீர்மானத்தைக்கொண்டு மேலே (1)-வது உபப் பிரிவின் கீழ் அமைக்கப்படும் கமிட்டியில் அங்கத்தினர்களாக - அந்த லோகல் போர்டில் அங்கத்தினர்களாயில்லாத சில நபர்களை, அந்த நபர்களுக்கு அந்த போர்டின் அபிப்பிராயத்தில்-அந்த நபர்கள் எந்த கமிட்டியில் சேர்க்கப்படுகிறார்களோ அந்தக்கமிட்டியில் உத்தியோகம் வகிப்ப தற்கு தனிமையான யோக்கியதைகளை பெற்றிருப்பாரென்றே அல் லது அப்படியிருப்பதில் அவருக்குத் தனிமையாக ஒரு ஊக்கம் உண்டு என்றே இருக்கும்பக்ஷத்தில் அவர்களை அந்த கமிட்டியின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால், அப்படி தேர்ந்தெடுக் கப்பட்ட நபர்களின் சங்கியையானது அப்படிப்பட்ட கமிட்டியின் மொத்த சங்கியைக்கு மூன்றில் ஒருபங்குக்கு அதிகப்படக்கூடாது.

(4) இந்த ஆக்டில்-லோகல்போர்டின் அங்கத்தினர்களின் கடமைகள், அதிகாரங்கள், பொறுப்புகள், யோக்கியதைக் குறைவு கள், அர்ஹமின்மை இவைகளைப்பற்றின எல்லா அம்சங்களும் அவை பிரயோகப்படுத்தப்படக் கூடியவரையிலும், யாதொரு கமிட்டியில் லோகல் போர்டின் அங்கத்தினராகயில்லாமல் ஒரு அங்கத்தினராக பிருக்கும் நபர்களுக்கும் பிரயோகப்படுத்தப்படும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது ஒரு லோகல் போர்டின் நிர்வாக அதிகாரங்களை செலுத் துவதற்காக அந்த போர்டு சில கமிட்டிகளை ஏற்படுத்தி அவைகளின் மூல மாக நடத்தலாம் என்று கூறியுள்ளது. 23-வது பிரிவின் கீழ் ஒரு ப்ரெஸி

டென்டுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரமானது இப்பிரிவின்கீழ் இன்னும் விரிவாகவும் அதிகமாகவும் லோகல் போர்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு லோகல் போர்டானது கமிட்டிகளே இவ்வளவு காலம் வரையிலுந் தான் ஏற்படுத்தலாமென்று குறிப்பாக இல்லாம லிருப்பதால் ஒரு லோகல் போர்டானது அதன் அங்கத்தினர்கள் உள்ள காலம் வரையிலும் நிர்வாகம் செய்வதற்காக கமிட்டிகளே ஏற்படுத்தலாம். ஒவ்வொரு கமிட்டியிலும் அந்த லோகல் போர்டு ப்ரெஸிடென்டு தான் அக்ராசனராயிருக்கவேண்டும். அம்மாதிரியான கமிட்டிகளில் லோகல் போர்டு அங்கத்தினர்களல்லாமல் வேறே யோக்கியதையும் அனுபவமும்வாய்ந்த நபர்களும் சேர்த்துக்கொள்ளப்படலாம். ஆனல், அம்மாதிரியான கமிட்டி மெம்பர்கள் மொத்த கமிட்டியின் சங்கியைக்கு மூன்றில் ஒரு பங்குக்கு அதிகப்படக் கூடாது.

ஒரு ப்ரெஸிடென்டு தனியாக இருந்து லோகல் போர்ட்டினுடைய நிர்வாகத்தைப் பூராவாகவும் கவனிப்பது கஷ்டசாத்தியமாதலால் ஒரு லோகல் போர்டு கமிட்டிகளே ஏற்படுத்தி அவைகளுக்கு சிற்சில அதிகாரங்களைக் கொடுக்கலாம் என்றுள்ளது. இம்மாதிரி ஏற்படுத்தப்பட்ட கமிட்டியில் உள்ள அங்கத்தினர்கள் யாவரும் தாம் அந்த கமிட்டியில்இருந்து வேலைசெய்வதற்கு பிரதிபலனாக யாதொரு பிரதிபலத்தையும் பெறக்கூடாது. (20-வது பிரிவைப் பார்க்க.)

கமிட்டிகளின் ஆலோசனைகளில் ப்ரெஸிடென்டுக்கு சம்பந்தமான யாதொரு விஷயம் வரும்பக்ஷத்தில் ப்ரெஸிடென்டு அந்த கமிட்டியினின்றும் நீங்கவேண்டும்.

(3)-வது உபப் பிரிவில் "தன்னுடைய மொத்த சங்கியைக்கு பாதிக்குக் குறையாமல்" என்திருப்பதினுல் லோகல் போர்டு கமிட்டிகளில் அயலார்கள் சேர்க்கப்படும் பக்ஷத்தில்-இச்சட்டத்தின் 10-வது பிரிவின்கீழ் லோகல் கவர்ன்மெண்டார் அந்த போர்டுகளாக ஏற்படுத்தப்பட்ட சங்கியை என்று அர்த்தமாகும்.

லோகல் போர்டு கமிட்டிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அயல் நபர்கள் இந்த ஆக்டில் லோகல் போர்டு அங்கத்தினர்கள் விஷயமாக காணப்பட்டிருக்கும் எல்லா யோக்கியதாம்சங்களும் பொருந்தினதாக இருக்கவேண்டும்.

29. [இந்தப்பிரிவு எடுத்துவிடப்பட்டது.]

30. (1) ஒரு லோகல் போர்டு-யாதொரு காரியத்தில் அவர்களும் இன்னும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேச அதிகாரிகளும் ஒன்றுக ஒருமனப்பட்டிருக்கும்பக்ஷத்திலாவது அல்லது, யாதொரு விஷயத்தில் அவர்களும் வேறே ஒன்று அல்லது

ஜாயண்டு கமிட்டிகளே நியமிப்பது.

அதற்கு அதிகப்பட்ட பிரதேச அதிகாரிகளும் ஒன்றுக பொறுப் புடையவர்களாக இருக்கும் பக்ஷத்தில் அதற்காக மேற்சொன்ன அதிகாரி அல்லது அதிகாரிகளுடன் ஜாயிண்டு கமிட்டிகளை ஏற்படுத்து வதில் ஒன்று சேரலாம்; அம்மாதிரி ஒன்று சேரவேண்டுமென்று லோகல் கவர்ன்மென்டு சொல்லும் பக்ஷத்தில் கட்டாயம் ஒன்று சேர வேண்டும்.

(2) ஒரு ஜாயிண்டு கமிட்டியில் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரிகளின் அங்கத்தினர்களாயிராமலிருந்து - ஆனல் அவ்வதிகாரி களினுடைய அபிப்பிராயத்தில் தனிமையான நிலயோக்கியதைகளை அல்லது, தனிமையான ஊக்கத்தை பெற்றிருந்து அந்தக்கமிட்டியில் உத்தியோகம் வகிக்க யோக்கியதை யுள்ளவர்களென்றிருக்கும் நபர்க ளும் அந்த கமிடடியில் சேர்க்கப்படலாம்.

ஆனல், அம்மாதிரியான நபர்களின் சங்கியையானது, அந்த ஜாயிண்டு கமிட்டியின் மொத்த சங்கியை என்னவோ அதற்கு மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படக்கூடாது.

(3) ஜாயிண்டு கமிட்டிகளின் அமைப்பானது, அவை களுக்காகச் செய்யப்படும் விதிகளை யொட்டித்தான் ஏற்படவேண்டும்; அவ்விதிகளும்-கீழே (6), (7) உபப்பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் தவிற, சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரிகளில் எவ ரெவர்கள் கலக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுடைய சம்மதியிரு ந்தாலொழிய அமுலுக்கு வரக்கூடாது.

(4) அந்த விதிகள் :—

(a) அந்த ஜாயண்டு கமிட்டியின் மொத்த சங்கியையும்,

(b) சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரிகளின் அங்கத்தினர் களின் சங்கியையும் அயலாரின் சங்கியையும்;

(c) அந்த ஜாயண்டு கமிட்டியில்-எவரெவர்கள் அங்கதினர்க ளாகயிருக்கவேண்டும் - அல்லது, அந்த கமிட்டியின் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதின் அல்லது நியமிக்கப்படுவதின் விதம்;

(d) அந்த ஜாயிண்டு கமிட்டியில் எவர்-அக்ராசனராயிருப்பது அல்லது, அவர் தேர்ந்தெடுக்கப்படுவதாயிருந்தால் அல்லது நியமிக்கப் படுவதாயிருந்தால் எப்படி அதைச்செய்வது;

(e) அங்கத்தினர்களுடையவும், அக்ராசனர்களுடையவும், உத்தியோகத்தின் கால அளவு ;

(f) ஜாயிண்டு கமிட்டியில் சம்பந்தப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ப்ரதேச அதிகாரிகளால் செலுத்தப்படும் அதிகாரங்களில் எவற்றை ஜாயிண்டுக்கமிட்டி செலுத்துவது.

(g) ஜாயிண்டு கமிட்டியின் நடவடிக்கைகளின் முறை ;

ஆகிய இவைகளை நிர்ணயிக்கவேண்டும்.

(5) மேலே (3),(4)-உபப்பிரிவுகளின்கீழ் செய்யப்பட்டிருக்கும் விதிகள் மாற்றப்படலாம் - அல்லது எடுத்து விடப்படலாம் - ஆனால் ஜாயிண்டு கமிட்டிகளுக்கு சம்பந்தப்பட்ட எல்லா ப்ரதேச அதிகாரிகளும் அம்மாதிரி மாற்றப்படுவதற்கு அல்லது எடுத்து விடப்படுவதற்கு சம்மதிக்கவேண்டும்.

(6) லோகல் கவர்ன்மெண்டு (1)-வது உபப்பிரிவின் கீழ் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில், மேலே (3), (4) உபப்பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் எந்த விஷயமாகவோ அல்லது எல்லா விஷயமாகவோ தங்களுக்கு எப்படி அவசியமென்றுவது அல்லது நல்லதென்றுவது தோன்றுகிறதோ - அதற்குத் தகுந்தாப் போல் உத்திரவுகளை செய்யலாம்.

(7) இந்தப்பிரிவில் மேலே சொல்லப்பட்ட எந்த அம்சத்தின் கீழாவது - ப்ரதேச அதிகாரிகளுக்குள் ஏதாவது அபிப்பிராயபேத மேற்படும் பக்ஷத்தில் -அவ்விஷயமானது லோகல் கவர்ன்மெண்டினுடைய தீர்மானத்திற்கு சாட்டப்படவேண்டும்; இதின் விஷயமாய் அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு சீர்திருத்தச் சட்டத்தினால் மிகவும் மாற்றப்பட்டுள்ளது. இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட லோகல்போர்டுகள் தங்களுக்குள் ஒன்றுசேர்ந்து ஜாயிண்டு கமிட்டிகளை ஏற்படுத்தி அதன் மூலமாகத் தங்களுடைய பொது உரிமை அல்லது கடமைகளை செலுத்திவரலாமென்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. 28-வது பிரிவில் ஒரு லோகல்போர்டானது தனக்குள்ளேயே கமிட்டிகளை நியமிக்கலாமென்று கூறுகிறது. 30-வது பிரிவானது பல லோகல்போர்டுகள் ஒன்றுக்கொன்று சேர்ந்து கமிட்டிகளை ஏற்படுத்திக்

கொள்ளலாமென்று உள்ளது. இந்த கமிட்டிகளிலும் அயலார்கள் அங்கத்தினர்களாக சேர்க்கப்படலாம் என்றுள்ளது.

இந்தப்பிரிவில் (4)-வது உபப்பிரிவில் ஜாயிண்டு கமிட்டிகளின் அமைப்பானது சில ரெகுலேஷன்களினால் அமைக்கப்படவேண்டும் என்றுஉள்ளது. ஆனால் அந்த ரெகுலேஷன்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரதேச அதிகாரியாலும் சம்மதிக்கப்பட வேண்டுமென்றுள்ளபோதிலும் அந்த ரெகுலேஷன்களை எவர்கள் செய்வதென்று நன்கு விளக்கப்படவில்லை (5)-வது உபப்பிரிவை கவனிக்குமிடத்து அந்த ரெகுலேஷன்கள் ஜாயிண்டு கமிட்டிகளாலேயே செய்யப்பட வேண்டுமென்று தோன்றும்.

லோகல்போர்டின் நடவடிக்கைகளைப் பற்றிய விதிகளும்ரெகுலேஷன்களும்.

31. லோகல்போர்டானது 2-வது ஷெட்யூலில்கண்ட விதிகளை அனுசரிக்கவேண்டும்; மேலும், அவர்கள்-அந்த விதிகளுக்காவது இந்த ஆக்டின் இதர நிபந்தனைகளுக்காவது பிரதேச கவர்ன்மென்டாரால் செய்யப்பட்ட எவையேனும்-விதிகளுக்காவது முரண்படாமலிருக்கும்படி அடியிற் கண்ட விஷயங்களைக்குறித்து உடன்சேர்க்கையான ரெகுலேஷன்களைச் செய்யலாம்:—

(a) இன்னகாலத்தில் இன்ன இடத்திலே தங்களுடைய சபைகள் கூடவேண்டுமென்பது;

(b) அதைக்குறித்து இன்னவிதமாய் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்பது;

(c) மீட்டிங்குகளில் நடவடிக்கைகள் சரியாக நடத்துவதையும், அமைதியைக் காப்பாற்றுவதையும் ப்ரெஸிடெண்டு ஆக்ஷேப குறிப்புகளின் விஷயமாகத் தம்முடைய தீர்மானத்தை செலாவணியாக்குவதற்கு வேண்டுமான அதிகாரம் இன்னவென்பது;

(d) போர்டின் அங்கத்தினர்களுக்குள் அலுவல்களைப் பிரித்துக் கொள்வது;

(e) கமிட்டிகளின் அமைப்பும், அவைஅனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையும்;

(f) அந்த போர்டினுடைய அதிகாரங்கள், கடமைகள், அலுவல்கள், இவற்றை—

(i) ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடெண்டு, அங்கத்தினர், போர்டினுடைய ஒரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர், அல்லது ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர், அல்லது;

(ii) (e)—வாக்கியத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஒரு கமிட்டி அல்லது அதனுடைய அக்கிராசனர் அல்லது ஒன்று அல்லது அதற்கு அதிகமான கமிட்டியின் அங்கத்தினர்கள்;

இவர்களுக்கு ஒப்புவிப்பது.

(g) போர்டுக்குச் செலுத்தப்பட்ட பணத்திற்கு இன்ன நபர்கள் ரசீது கொடுக்கலாமென்பது;

(h) இதேமாதிரியான மற்ற விஷயங்கள்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய லோகல்போர்டு சீர்திருத்த சட்டத்தினால் மிகவும் மாற்றப்பட்டு புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவானது ஒவ்வொரு லோகல்போர்டும் தாம் நடத்தவேண்டிய மீட்டிங்குகள் விஷயமாகவும் இன்னும் லோகல்போர்டு அங்கத்தினர்களுக்கும், கமிட்டிகளுக்கும் கொடுக்கப்படவேண்டிய அறிவல்கள் விஷயமாகவும் இன்னும் மற்ற நிர்வாக ஏற்பாடுகள் விஷயமாகவும், இச்சட்டத்தில் 2-வது ஷெடியூலில் உள்ள அம்சங்களையும் அதையொட்டி அந்த லோகல்போர்டானது செய்திருக்கும் ரெகுலேஷன்களையும் லோகல் கவர்ன்மென்டார் செய்திருக்கும் விதிகளையும் பொட்டி நடந்துகொள்ளவேணுமென்று கூறுகிறது.

ஒவ்வொரு லோகல்போர்டுக்கும் - தன்னுடைய நிர்வாக விஷயமாக வேண்டிய சகல விதிகளையும் செய்ய அதிகாரமுண்டு. ஆனால், அவ்விதிகள் இச்சட்டத்திலாவது அல்லது லோகல் கவர்ன்மென்டாராலாவது ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளுக்கு விரோதமாக இல்லாமலிருக்கவேண்டும்.

ஒவ்வொரு லோகல்போர்டும் தம்முடைய அதிகாரத்துக்கு மீறின விதிகளைச் செய்வதற்கில்லை. அல்லது தங்களுடைய அதிகாரத்திற்கு மீறின விஷயங்களைப்பற்றி அதன் ப்ரெஸிடென்டுக்கும் அதிகாரம் கொடுப்பதற்கில்லை.

கமிட்டிகளிலும், மீட்டிங்குகளிலும் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையானது ஒன்றேயாகும்.

லோகல் போர்டு மீட்டிங்குகளில் இன்னார் சபைத்தலைமை வகிக்கவேண்டுமென்பது.

32. (1) யாதொரு லோகல் போர்டு கூடுகிற பிரதி மீட்டிங்கிலும் ப்ரெஸிடென்டாவது அவரில்லாவிட்டால் வைஸ் ப்ரெஸிடென்டு ஒருவர் இருந்தால் அவராவது அக்கிராசனம் வகிக்கவேண்டும்: வைஸ் ப்ரெஸிடென்ட் இராவிட்டாலும், ப்ரெஸிடென்ட், வைஸ் ப்ரெஸிடென்ட் ஆகிய இருவரும் வராவிட்டாலும், அந்த சமயத்தில் சபைத்

தலைவராயிருக்கும்படி அந்த சபைக்கு வந்திருக்கிறவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு அங்கத்தினர் அக்கிராசனம் வகிக்கவேண்டும்.

(2) ப்ரெஸிடென்டானவர் - (சபையில்) ஒழுங்கு தவறுதபடி பார்த்துக்கொள்ள வேண்டியதுமல்லாமல், மீட்டிங்குகளிலாகிலும், மீட்டிங் சம்பந்தமாகவாகிலும் ஏற்படும் ஒழுக்கைப்பற்றிய சகல விஷயங்களையும் தீர்மானிக்கவும் வேண்டும். ஒழுங்கைப்பற்றிய யாதொரு விஷயத்தைக்குறித்து தர்க்கம் எதுவும் கடத்தக்கூடாது; மேலும், ஒழுங்கைப்பற்றிய யாதொருவிஷயமாய் ப்ரெஸிடென்ட் செய்யும் தீர்மானமானது - இந்த ஆக்டில் வேறேவிதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி முடிவானதாகும்.

(3) அந்தந்த சமயத்தில் அக்கிராசனம் வகிக்கும் வைஸ் ப்ரெஸிடென்டாவது - அங்கத்தினராவது அந்த மீட்டிங்கை நடத்துவதற்காகவும் அப்படி அக்கிராசனம் வகிக்கும் காலம்வரையிலும் ப்ரெஸிடென்டுக்குள்ள சகல அதிகாரங்களையும் உடையவராயிருப்பார்.

குறிப்புகள்.

ஒவ்வொரு லோகல்போர்டு மீட்டிங்கில் அக்ராசனரில்லாமல் மீட்டிங் நடப்பதற்கில்லை யாதலால் இந்த பிரிவானது லோகல் போர்டு மீட்டிங்குகளில் எவர் அக்ராசனம் வகிப்பதென்பதைப் பற்றி கூறுகிறது.

ஒவ்வொரு மீட்டிங்கிலும், லோகல் போர்டு ப்ரெஸிடென்டு வந்திருந்தால் அவரும் - அவரில்லாவிட்டால் வைஸ் ப்ரெஸிடென்டும் ஆகிய இவ்விருவரும் இல்லாவிட்டால் அந்த மீட்டிங்குக்கு வந்திருக்கும் ஒரு அங்கத்தினரும் சபைத் தலைமை வகிக்க வேண்டும்.

ப்ரெஸிடென்டினுடைய முக்கியமான கடமை என்னவென்றால், மீட்டிங்கில் யாதொரு கலவரமும் கடவாமலிருக்கும்படிச் செய்ய வேண்டும். மீட்டிங்கில் யாதொரு தீர்மான விஷயமாகவோ அல்லது செய்கை விஷயமாகவோ ஒரு அம்சத்தை மீட்டிங்கில் பேசுபவரை 'பேசுவதற்கில்லை' என்று ஆக்ஷேபிக்கும் பக்ஷத்தில்-அந்த அம்சமானது கினப்பப்படுவதற்கு உரியதா? அல்லவா? என்பதைப்பற்றி ப்ரெஸிடென்டு உடனே தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும். அந்த அபிப்ராயத் தீர்மானமே முடிவான தென்றும், அதைப்பற்றி யாதொரு அங்கத்தினரும் 'ரோதமாகப் பேசுவதற்கில்லை' என்று இப்பிரிவு சொல்லுகிறது.

லோகல்போர்டு ப்ரெஸிடென்டுகளுக்கும், வைஸ் ப்ரெஸிடென்டுகளுக்கும் இவர்களில் ஒருவரில்லாத சமயத்தில் மற்றொருவர் மீட்டிங்குகளில்

அக்ராசனம் வகிக்க உரிமையுள்ளவராவர். அவ்வுரிமையானது-இந்த சட்டத்திலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்விருவர்களும்இராதபக்ஷத்தில் மீட்டிங்கில் வந்திருக்கும் அங்கத்தினர்களுள் ஒருவர் பொறுக்கி எடுக்கப்பட்டு அவர் அக்ராசனம் வகிக்கவேண்டும். அவருக்கு ஏற்படும் உரிமையானது இப்பிரிவினால் ஏற்பட்டதாகும். இந்த பிரிவில் (1)-வது உபப்பிரிவில் "அவரில்லாவிட்டால்" என்றும் "இருவரும் வராவிட்டாலும்" மென்றுள்ளதால் ஒரு ப்ரெவிடென்டு அல்லது வைஸ்ப்ரெஸிடென்டு மீட்டிங்குக்கு வராதிருக்கும்வரையில்தான் ஒரு அங்கத்தினர் அக்ராசனம் வகிக்க அர்காராவர். அவ்விருவர்களில் எவராவது அல்லது இருவருமாவது மீட்டிங்கு நடந்து கொண்டிருக்கும் காலத்தில் வரும்பக்ஷத்தில் தங்கள் உரிமைப் பிரகாரம் அக்ராசனம் வகிக்கலாம். ஆனால், ஒரு அங்கத்தினர் அக்ராசனம் வகித்துக் கொண்டிருக்கையில் ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு வந்த பிறகும் - அவர் அக்ராசனத்தை வகித்துக் கொண்டிருந்து தீர்மானங்களை நிறைவேற்றும் பக்ஷத்தில் அந்த தீர்மானங்கள் செல்லத் தகுந்ததா ? அல்லவா ? என்பதின் விஷயமாக ஒரு ப்ரஸ்னை கிளம்பியதில், அப்படி அக்ராசனம் வகிக்கப்பட்டதினாலேயே தீர்மானங்கள் செல்லத் தகாததாய் போய்விடுமென்று சொல்லுவதற்கில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது. (a) இச்சட்டத்தின் 35-வது பிரிவிலும் இம்மாதிரியாகவே சொல்லப்பட்டுள்ளது.

ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு மீட்டிங்குக்கு வந்திருந்தும் - அக்கிராசனம் வகித்திராவிட்டால் என்ன செய்வது ? ப்ரஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டுக்கு அக்கிராசனம் வகிக்க இஷ்டமிராமற் போனால் - அந்த மீட்டிங்கிலுள்ள நபர்கள் அவரை அந்த மீட்டிங்குக்கு வராததுபோல் பாவித்துதான் ஒரு அக்ராசனரை ஏற்படுத்திக்கொண்டு மீட்டிங்கை நடத்தவேண்டும்.

ஒரு மீட்டிங்கின் ஒழுங்கையும், அமரிக்கையையும் மாத்திரம் ப்ரெஸிடென்டு அல்லது அக்ராசனம் வகிப்பவரானவர் கவனித்து வரவேண்டுமேயொழிய அங்கத்தினர்கள் பேசுவதையாவது அல்லது அபிப்பிராயத்தை தெரிவிப்பதையாவது தடுப்பதற்கில்லை. தாமாகவே அந்த மீட்டிங்கினுடைய அனுமதியிராமல் அந்த மீட்டிங்கை ஒத்திவைப்பதற்கில்லை. (b)

ஒவ்வொரு ப்ரெஸிடென்டிற்கும் மீட்டிங்கை நடத்துவதில் சில தனிமையான உரிமைகளுண்டு. யாதொரு குறிப்பிட்ட தீர்மான விஷயமாக அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவுநேரம் பேசலாமென்றும், எவரெவர்கள் எந்தெந்த வரிசை பிரகாரம் பேசவேண்டுமென்றும், உத்திரவுசெய்ய

(a) பால்சைய்ய நருடய்ய தண்டுவதி vs. முருகய்ய சோமய்ய தங்கின் A. I. R. 1926 Bombay 576=98. I. C. 454.

(b) கோபால் நாராயணன் குல்கார்னி vs. ஷண்முகப்ப, A. I. R. 1927. Bom. 603=106 I. C. 265.

ப்ரெஸிடென்டுக்கு அதிகாரமுண்டு. ஆனல், ப்ரெஸிடென்டானவர் பக்ஷபாதமில்லாமல் - ஒரே அளவாக தமது அதிகாரத்தைச் செலுத்தவேண்டும். இப்பிரிவில் (2)-வது உபப்பிரிவிலுள்ள "ஒழுங்கைப்பற்றிய விஷயம்" என்பதற்கு அர்த்த மென்னவென்றால் யாதொரு தீர்மானமானது அல்லது கேள்வியானது சம்வாதத்திலிருந்துகொண்டிருக்கையில் ஒரு அங்கத்தினர் பேசுவதில் சிலஅம்சங்கள் அந்தத்தீர்மானம் அல்லது விஷயத்திற்குச் சம்மந்தப்படலில்லே யென்று யாதொரு நபர் கிளப்பும் ஆக்ஷேபனையைக் குறிக்கும். ஒருவர் பேசிக்கொண்டிருக்கையில் அவர் உதாசீனமாகக் கண்டிப்பது-அல்லது, சம்பந்தப்பட்ட ப்ரல்னைக்குஅன்னியதாகவுள்ள வீண்கலவரங்களே நுழைப்பது இவைஅங்கத்தினர்களால் ஆக்ஷேபிக்கத்தக்கதாகும். அம்மாதிரியாதொரு ஆக்ஷேபனே தெரிவிக்கப்படும் பக்ஷத்தில் அந்த ஆக்ஷேபனே கிளப்பதகுந்தா அல்லவா? என்பதைப்பற்றி ப்ரெஸிடென்டானவர் உடனே தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்து ஒரு கட்டளே (Ruling) செய்யவேண்டும். அந்தக் கட்டளேப்பற்றியாவது அல்லது கிளப்பப்படும் யாதொரு ஆக்ஷேபத்தைப் பற்றியாவது யாதொரு தர்க்கம் நடக்கக் கூடாதென்றுள்ளது. அம்மாதிரியாக தர்க்கங்கள் நடக்கும்பக்ஷத்தில்லோகல் போர்டு மீட்டிங்குகளின் முடிவிற்கு கங்குகறையில்லாமல் போய்விடுமென்று, ஒழுங்கைப்பற்றிய ஆக்ஷேப குறிப்புகளின் விஷயமாக ப்ரெஸிடென்டினுடைய தீர்மானமானது முடிவானதாகுமென்று எற்படுத்தப்பட்டுள்ளது.

ப்ரெஸிடென்டுகள் செய்யும் தீர்மானங்களே அங்கத்தினர்கள் எதிர்ப்பதற்கில்லே. ஆனல், மினிட்ஸ் புஸ்தகங்களில் அவர்கள் - அவ்வப்போது எழுதிவைக்கலாம். ப்ரெஸிடென்டு அதற்கு வசதி கொடுக்காவிட்டால் மீட்டிங்கு நடந்த 48-மணி நேரத்திற்குள் தங்கள் ஆக்ஷேபனைகளே அந்த ப்ரெஸிடென்டுக்கு எழுதி அனுப்பலாம். ப்ரெஸிடென்டுகள் தங்கள் கடமைப் பிரகாரம் அனுசரிக்கத் தவரும்பக்ஷத்தில் 43-வது பிரிவின்கீழ் லோகல் கவர்ன்மென்டுக்கு அவரை நீக்கவும்; 44-வது பிரிவின்கீழ் லோகல்போர்டுகளுக்கே அவர்களே நீக்கவும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

ப்ரெஸிடென்டுகள் மீட்டிங்குகளே நடத்துவதில் பொறுமை வாய்ந்து பக்ஷபாதமில்லாமல் மிகவும் சாமர்த்தியத்துடனும், மரியாதையுடனும் நடந்துக்கொள்ளவேண்டும். மீட்டிங்குகளில் எவ்விதமாக குரோதத்தையும் காட்டக்கூடாது.

லோகல்போர்டு ப்ரெஸிடென்டுகள் மீட்டிங்கின் ஒழுங்கைப்பற்றின ஆக்ஷேபனைக் குறிப்புகளே நிராகரிக்கும்பக்ஷத்தில்-அந்த மீட்டிங்கைச் சேர்ந்த வரைக்கும், அவருடைய தீர்மானமானது முடிவானதாகுமேயொழிய அவருடைய தீர்மானமானது நியாயவிரோதமானதென்றுவது-பக்ஷபாதமானதென்றுவது சிவில் கோர்ட்டார் தகுந்தபடி தீர்மானம்செய்ய அதிகாரமுள்ளவ

ராவர். (a), (b) அய்யாதுரை முதலியார் vs. மங்களகவுண்டர் என்னும் கேஸில் எலெக்ஷன் விதிகளே அர்த்தம் கொள்வதின் விஷயமாக ப்ரெஸி டென்ஷல் அல்லது வைஸ் ப்ரெஸிடென்டுகள் தவறு செய்யும்பக்ஷத்தில் சிவில்கோர்ட்டாருக்குத்தான் அவைமாற்றுவதற்கு அதிகாரமுண்டேயொழிய லோகல் கவர்ன்மென்டுக்கு அதிகாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

33. [இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]

34. (1) யாதொரு லோகல் போர்டின் மீட்டிங்கிலாவது அல்லது கமிட்டியின் மீட்டிங்கிலாவது ஆலோசனைக்குவரும் எந்த விஷயமாகிலும் பொது ஜனங்களுக்குப் பொதுவாய்ப் பிரயோகப்படக்கூடியதைத் தவிர அதில் அந்த போர்டிலுள்ள அல்லது அதின்கமிட்டியிலுள்ள யாதொரு அங்கத்தினருக்கு அல்லது பாகஸ்தருக்கு நேராகவாவது நேராகவல்லாமல் மற்றப்படியாவது நிரவிய சம்பந்தமாய் எவ்விதபாத்தியதையேனும் இருக்கிறபக்ஷத்திலே, அப்படிப்பட்ட விஷயத்தைப்பற்றி தர்க்கம் நடக்கும்போது அவர் ஓட் கொடுக்கவுங் கூடாது ; அந்தத்தர்க்கத்தில் கலந்துகொள்ளவுங்கூடாது.

அங்கத்தினர் எப்போது தர்க்கத்தில் கலந்து கொள்ளக்கூடாதென்பதும் ஓட் கொடுக்கக் கூடாதென்பதும்.

(2) ப்ரெஸிடென்டு அல்லது அக்கிராசனர்-எந்த விஷயத்தில் யாதொரு அங்கத்தினருக்கு அப்படிப்பட்ட பாத்தியதை இருப்பதாக தாம் நம்புகிறாரோ அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தைப் பற்றி தர்க்கம்நடக்கும்போது, அந்தஅங்கத்தினரை வோட்கொடுக்கக் கூடாதென்றே அல்லது அதைப்பற்றி நடக்கும் தர்க்கத்தில் கலந்து கொள்ளக்கூடாதென்றே தடுக்கலாம்; அல்லது, இந்த தர்க்கம் நடந்துகொண்டிருக்கும்பொழுது மீட்டிங்கில் இருக்கக் கூடாதென்று அவர் அந்த அங்கத்தினருக்கு உத்தரவு செய்யலாம்.

(3) அந்த மெம்பர் ப்ரெஸிடென்ட் அல்லது அக்கிராசனர்செய்த தீர்மானத்தை ஆக்ஷேபிக்கலாம்; அதன்பேரில் ப்ரெஸிடென்ட் அவ்விஷயத்தை மீட்டிங்குக்கு தெரிவிக்கவேண்டும். அந்த மீட்டிங்கு செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

(a) கோபால் நாராயணன் vs. கண்முகப்பா, A. I. R. 1927 Bom. 603=106. I. C. 265.

(b) அய்யாதுரை முதலி vs. மங்களகவுண்டர், 53 M. L. J. 735= A. I. R. 1927 Madras. 971.

(4) தர்க்கம் நடந்துகொண்டிருக்கும் யாதொரு விஷயத்தில் ப்ரெஸிடென்டுக்கு அல்லது அங்கிராசனருக்கு அப்படிப்பட்ட நிரவியசம்பந்தமான பாத்தியதை எதுவாகிலும் இருப்பதாக அந்த மீட்டிங்கு வந்திருக்கும் யாதொரு அங்கத்தினர் நப்புறபட்சத்திலே, அந்தப்படி கண்ட ஒரு பிரேரேபணை (சபையாரால்) அங்கீகரிக்கப்பட்டால், மேற்படி தர்க்கம் நடந்துக்கொண்டிருக்கும்பொழுது அந்த சபையில் இருந்தக்கூடாதென்று ப்ரெஸிடென்டுக்கு அல்லது அக்கிராசனருக்குச் சொல்லலாம்.

(5) (3)-வது உபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் பிரஸ்தாவ விஷயமாக அம்மாதிரி சம்பந்தப்பட்ட அங்கத்தினர் ஓட் செய்வதற்கு உரிமை உள்ளவராகமாட்டார். அதேமாதிரி (4)-வது உபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் பிரேரேபணை விஷயமாக ப்ரெஸிடென்டு அல்லது அக்ராசனர் ஓட் செய்வதற்கு உரிமையுள்ளவராக மாட்டார்.

விவரணம் :—இந்தப்பிரிவில் 'ப்ரெஸிடென்டு' என்னும் பதமானது வைஸ் ப்ரெஸிடென்டு அல்லது ஒரு லோகல்போர்டின் மீட்டிங்கு காலத்தில் அக்ராசனம் வகிக்கும் அங்கத்தினர் என்பவைகளையும் அணைக்கும் 'அக்கிராசனர்' என்னும் பதமானது ஒரு கமிட்டியின்மீட்டிங்கு காலத்தில் அக்ராசனம் வகிக்கும் ஒரு அங்கத்தினரையும் குறிக்கும்.

குறிப்புகள்.

இந்தப்பிரிவில் ஒரு லோகல்போர்டு அங்கத்தினருடைய அல்லது ப்ரெஸிடென்டினுடைய நிரவிய சம்மந்தமாக யாதொரு தர்க்கம் நடக்கையில் அவர் அந்த தர்க்கத்தில் கலந்துக்கொள்ளக் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. லோகல்போர்டின் மீட்டிங்கிலும், அதன் கமிட்டி மீட்டிங்கிலும் இந்தப்பிரிவின் அம்சங்களானது பிரயோகிக்கப்படத்தக்கதாகும்.

யாதொரு அங்கத்தினர் அல்லது ப்ரெஸிடென்டு தமக்குச் சம்பந்தப்பட்ட விஷயமாக நடக்கும் ஒரு தர்க்கத்தில் கலந்துகொள்வதினால் பக்ஷபாத மேற்படுமென்றும், அந்த நபர் தனக்கு விரோதமாகச் செய்யப்படும் யாதொரு தீர்மானத்தை எதிர்த்து அதினால் அதற்கு ஒரு பங்கமேற்படுமென்று இப்பிரிவில் இம்மாதிரி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு சாதாரண அங்கத்தினருக்கு அல்லது அவருடைய பாகஸ்தருக்கு யாதொரு விஷயத்தில் பாத்தியதையுண்டு அல்லது இல்லை என்பதைப் பற்றி ப்ரெஸிடென்டு அல்லது அக்ராசனம் வகிப்போர்தான் தீர்மானிக்க

வேண்டும். அவர் அந்த அங்கத்தினருக்கு விரோதமாகச் செய்யும் யாதொரு தீர்மானத்தை ஆக்ஷேபிக்க அவருக்கு உரிமையுண்டு. அப்படி அவர் ஆக்ஷேபித்த பிறகு ப்ரெஸிடென்டு மீட்டிங்கைக் கேட்க வேண்டும். அதற்குப் பிறகு அந்த மீட்டிங்கிலுள்ள அங்கத்தினர்களாவரும் செய்யும் உத்தரவானது முடிவானதாகும்

ஒரு ப்ரெஸிடென்டு அல்லது சேர்மென் விஷயமாக அப்படிப்பட்ட யாதொரு சந்தேகம் கிளம்பும்பக்ஷத்தில் அதைப்பற்றி ஒரு அங்கத்தினர் ஒரு ப்ரேரேபணையைச்செய்து,அந்த ப்ரரேபணையானது அந்த மீட்டிங்கிலுல் அங்கீகரிக்கப்படும்பக்ஷத்தில் உடனே அந்த ப்ரெஸிடென்டு அந்த விஷயம் முடியும் வரையிலும் மீட்டிங்கைவிட்டு அகன்றிருக்க வேண்டும். இந்தப் பிரிவின் ஒரு ப்ரரேபணையில் அல்லது விஷயத்தில் பாத்தியதையுள்ள ஒரு அங்கத்தினர் கட்டாயம் நீக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படவில்லை. ப்ரெஸிடென்டானவர் அப்படி இஷ்டப்பட்டாலொழிய அவர் அந்த மீட்டிங்கிலேயேயிருந்து அந்த ப்ரரேபணையின் கடத்தையைக் கவனித்து வரலாம். ஆனால், அவர் அதைப்பற்றி பேசவும்கூடாது. அல்லது ஓட்டு கொடுக்கவும் கூடாது. சேர்மெனைச் சேர்ந்தவரையிலும், அவர் கட்டாயமாக மீட்டிங்கைவிட்டு அகன்றே தீரவேண்டும். ஒரு லோகல்போர்டு மீட்டிங்கானது தங்கள் அங்கத்தினர்களைப்பற்றியாவது அல்லது ப்ரெஸிடென்டைப்பற்றியாவது அவர்கள் சம்வாதங்களில் கலந்துகொள்வதற்கில்லை என்று செய்யும் யாதொரு தீர்மானம் ஓட்டுக்கு விடப்படும்பக்ஷத்தில் முறையே அங்கத்தினர் அல்லது ப்ரெஸிடென்டு அதில் ஓட்டு கொடுப்பதற்கில்லை.

இந்தப்பிரிவில் ஒரு அங்கத்தினர் விஷயமாக அவருக்கு ஒரு மீட்டிங்கில் நடக்கும் யாதொரு சம்வாதம் அல்லது தர்க்கவிஷயமாக பாத்தியதை யிருந்தும் இல்லையென்று ப்ரெஸிடென்டு அல்லது அக்ராசனர் உத்தரவு செய்யும் சந்தர்ப்பங்களில் அவரை எப்படி அந்த சம்வாதத்தில்கலந்துகொள்ளாமலிருக்கும்படி செய்வது-அல்லது அவரை எப்படி மீட்டிங்கைவிட்டு அப்புறப்படுத்துவதுஎன்பதின்விஷயமாக யாதொன்றும்சொல்லப்படவில்லை.இந்தப் பிரிவை கவனிக்குமிடத்து,அவ்விஷயமாக ஒரு ப்ரெஸிடென்டு அல்லதுசேர்மெனுக்கு பூரணமான அதிகாரமிருப்பதாகவும் தோற்றவில்லை.ஆகையால்,இந்தபிரிவின் (3)-வது உபப்பிரிவிலும்,(4)-வது உபப்பிரிவிலும் கண்டிருக்கப்படும் அம்சங்களின் பூரண கொள்கைகளை கவனிக்குமிடத்து ஒவ்வொரு மீட்டிங்கும் அதில் நடக்கும் யாதொரு தர்க்கம் அல்லது சம்வாதத்தில் நிரவிய சம்பந்தம் பெற்றிருக்கும் நபர்களை அப்புறப்படுத்தவும் அல்லது ஓட்டு கொடுக்காமலிருக்கும்படிச் செய்யவும் உரிமையுண்டு என்றுதான் ஏற்படும். ஆனால், அந்த அங்கத்தினருக்கு அந்த சம்வாதத்தில் நிரவிய சம்பந்தமான ஒரு பாத்தியதையுள்ளதாக முதலில் யாதொரு அங்கத்தினர் ப்ரெஸிடென்டுக்குத் தெரிவிக்கவேண்டும். (2(-வது பிரிவைப்பார்க்க). பிறகு அந்த ப்ரெஸி

டென்டு அதைப்பற்றி மீட்டிங்கிற்குத் தெரிவித்து மீட்டிங்கினுடைய உத்திரவைப் பெறவேண்டும்.

இந்தப்பிரிவில் "திரவிய சம்மந்தமாய் எவ்வித பாத்தியதையேனும்" என்றிருப்பதினால், திரவியமில்லாமல் வேறேவிதமாக உரிமையல்லது அந்தஸ்த்தைப்பற்றிய அல்லது நடத்தையைப்பற்றிய யாதொருதர்க்கம் நடக்கும்பக்ஷத்தில் அதைப்பற்றி யாதொரு ஆக்ஷேபமும் கிளப்பப்படுவதற்கில்லை என்று ஏற்படும்.

உதாரணங்கள் :—ஒரு அங்கத்தினருக்கு ஒரு கம்பெனியில் சில ஷேர்கள் உள்ளன. அந்த கம்பெனிக்கு வரியிடுவதைப்பற்றின ஒரு ப்ரச்னை ஒரு மீட்டிங்கில் கிளம்பியிருக்கிறது. அந்த அங்கத்தினர் அந்த ப்ரச்னை விஷயமாக செய்யப்படும் தர்க்கத்தில் கலந்துகொள்வதற்கில்லை.

ஒரு அங்கத்தினர் அந்த லோகல் போர்டுக்குச் சேர்ந்த நிலத்தில் ஆக்கிரமித்ததாக அதைப்பற்றி ஒரு தீர்மானம் நடந்துகொண்டிருக்கிறது. அந்த அங்கத்தினர் அந்த தர்க்கத்தில் கலந்துக் கொள்வதற்கில்லை.

"திரவிய சம்மந்தம்" என்பதினாலும் "யாதொரு அங்கத்தினருக்கு அல்லது பாத்தியஸ்தருக்கு" என்பதினாலும் அப்படிப்பட்ட சம்பந்தமானது அந்த அங்கத்தினருக்கு அல்லது அந்த பாகஸ்தருக்கு சொந்தமாக சம்பந்தப்பட்டதாக இருக்கவேண்டுமேயொழிய அவர் வேறு ஹோதாவில், உதாரணமாக, ஒரு டிரஸ்ட்டி அல்லது ரிசீவர் ஹோதாவில் அத்தகைய பாத்தியதையை பெற்றிருப்பாராகில் அதனால் அவர் அந்தத் தர்க்கத்தில் கலந்துகொள்வதற்கு பாத்தியதை யில்லையென்று சொல்லமுடியாது. ஏனென்றால், ஒரு டிரஸ்ட்டி அல்லது ரிசீவரானவர் மற்றப்படி பொதுஜனத்திற்காக ஒரு பிரதிநிதியாக செய்யவேண்டிய கடமையையும்மீறி தமது டிரஸ்ட்டு அல்லது தாம் பரிபாலிக்கும் ஆஸ்திக்கு அனுகூலம் செய்யவேண்டுமென்று யாதொரு சட்டமும் கூறவில்லை.

35. லோகல் போர்டுகளுடைய கடவடிக்கைகளில் ஒழுங்குதப்பு இருப்பதினால் அவை செல்லாமற் போகமாட்டாதென்பது.

யாதொரு லோகல் போர்டாவது அல்லது அதனுடைய ஒரு கமிட்டியாவது அல்லது அந்த லோகல் போர்டின் அல்லது கமிட்டியின் பிரஸிடென்டாகவோ, வைஸ் பிரஸிடென்டாகவோ, சேர்மெனாகவோ, அல்லது அங்கத்தினராகவோ இருந்து வந்த யாதொரு நபராவது செய்யும் யாதொரு காரியமானது அந்த லோகல் போர்டு அல்லது கமிட்டி, ஏற்பாட்டில் யாதொரு குறைவு இருந்ததென்கிற காரணத்தினால் மாத்திரமாகிலும் அல்லது அந்த போர்டின் அல்லது கமிட்டியின்

ப்ரெஸிடென்டு, வைஸ் ப்ரஸிடென்டு, சேர்மென் அல்லது யாதொரு அங்கத்தினர் இவர்களில் எவராவது அந்த உத்தியோகத்தை வகிக்கவோ அல்லது அவ்வுத்தியோகத்தில் இருந்து வரவோ யாதொரு யோக்கியதை குறைவிருந்ததென்னும் காரணத்தினாலாகிலும், அல்லது அவருடைய எலெக்ஷன் அல்லது நியமனத்தில் யாதொரு ஒழுங்கு குறைவு அல்லது சட்ட விரோதம் இருந்தது என்னும் காரணத்தினாலாகிலும் அல்லது அந்த காரியமானது அந்த போர்டின் அல்லது கமிட்டியின் ப்ரெஸிடென்டு, வைஸ் ப்ரஸிடென்டு, சேர்மென், அல்லது அங்கத்தினருடைய உத்தியோகத்தில் எதாவது காலியிருந்த காலத்தில் நடந்தேறப்பட்டது என்னும் காரணத்தினாலாவது செல்லத்தக்கதல்ல என்று கருதப்படமாட்டாது.

குறிப்புகள்.

இப்பிரிவில் ஒரு லோகல்போர்டின் அல்லது அதன் கமிட்டியின் செய்கையானது சிற்சில குறைவுகள் இருந்தினாலேயே செல்லத்தக்கதல்லவென்றும் சொல்லப்படாதென்றும், சாதாரணமாக லோகல் போர்டின் செய்கைகளானது செல்லத்தக்கனதாகவே கவனிக்கப்படுமென்றும் ஏற்பட்டுள்ளது. இப்பிரிவானது பழைய சட்டத்தின் 35-வது பிரிவைக்காட்டிலும் மிகவும் விரிவாகவும், விஸ்தாரமாகவும் செய்யப்பட்டுள்ளது.

இப்பிரிவில் (1) ஒரு லோகல்போர்டு அல்லது கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருப்பதில் யாதொரு ஒழுங்கு குறைவு அல்லது சட்ட விரோதம் இருக்கிறது என்னும் காரணத்தினாலாவது அல்லது, (2) அப்படிப்பட்ட போர்டின் ப்ரெஸிடென்டு வைஸ் ப்ரெஸிடென்டு அல்லது அங்கத்தினர் யாதொரு யோக்கியதை குறைவினாலாவது அல்லது அவர்களுடைய தேர்தலிலுள்ள யாதொரு ஒழுங்கீனத்தினாலாவது அந்த லோகல்போர்டின் அங்கத்தினராக இருந்து நடத்துவதற்கு அர்ஹமின்மை இருந்ததினாலாவது அல்லது (3) யாதொரு செய்கையானது ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு அங்கத்தினர் அல்லது கமிட்டியின் ஸ்தானமானது காலியாக இருந்த காரணத்தினாலாவது செல்லத்தக்கதல்லவென்று சொல்வதற்கில்லையென்றும் கூறப்பட்டுள்ளது.

ஏனென்றால் சாதாரணமாக ஒரு சிறிய பிசகு இருந்ததினாலேயே ஒரு லோகல் போர்டின் அல்லது கமிட்டியின் மொத்த நடவடிக்கைகளும் செல்லாது என்று சொல்லப்படுமானால், லோகல் போர்டின் நிர்வாகமே சரிவர நடப்பதற்கு பெரிய தடைகள் ஏற்படலாம். பழைய சட்டத்தின்கீழ் தீர்மானிக்கப்பட்ட ஒரு கேஸில் (a) ஒரு டிஸ்டிரிக்டு போர்டில் ஒரு வைஸ்

(a) தேவசிகாமணி vs. சேது ரத்னமையர் 87. I. C 336=A. I. R. 1925 Mad. 1034.

சேர்மென் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்தில் சட்ட பிரகாரம் அங்கத்தின ரென்றிராத ஒரு அங்கத்தினர் வைஸ் சேர்மெனின் எலெக்ஷனில் ஓட் கொடுத்தார். அவர் சட்டப்பிரகாரம் ஒரு அங்கத்தினரென்று தருதப் பட முடியாதாகையால், அவருடைய உதவியினால் நடந்த எலெக்ஷனது செல்லாதென்று தீர்மானிக்கப்பட்டது. இப்போது இந்தப் புதிய பிரிவின் பிரகாரம் ஒரு "ப்ரெஸிடெண்டு வைஸ் பிரஸிடெண்டு சேர்மென் அல்லது அங்கத்தினர்கள் இவர்களில் எவராவது அந்த உத்தியோகத்தை வகிக்கவோ அல்லது அவ்வுத்தியோகத்தில் இருந்து வரவோ யாதொரு யோக்கியதைக் குறைவு இருந்ததென்னும் காரணத்தினாலும் அல்லது அவருடைய எலெக்ஷன் அல்லது நியமகத்தில் யாதொரு ஒழுங்கு குறைவு அல்லது சட்டவிரோதம் இருந்ததென்னும் காரணத்தினாலும், என்றிருப்பதினால் ஒரு அங்கத்தினர் தவருக எலெக்ஷன் மூலமாக வந்திருந்து அவரைக் கொண்டு யாதொரு நடவடிக்கை நடந்தாலும் பின்னர் அவர்மீது யாதொரு தாவா தொடரப்பட்டு அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து நீக்கப்பட்டாலும், அந்த காரணத்தினாலேயே அவருடைய சகாயத்தினால் நடந்தேறப்பட்ட யாதொரு செய்கையானது சட்ட விரோதமானதென்று சொல்வதற்கில்லை என்றர்த்தமாகும்.

இந்தப் பிரிவானது லோகல் போர்டுகளுக்கு மிகவும் உயர்ந்ததோர் அந்தஸ்தையும் நிலைமையும் கொடுப்பதாகும். இனி அடிக்கடி லோகல் போர்டுகளில் நடக்கும் செய்கைகளைப்பற்றியும் தீர்மானங்களைப் பற்றியும் தாவா தொடரப்பட்டு அவைகளை நீக்குவதற்கில்லை. ஆனால் ஒவ்வொரு லோகல் போர்டும் தம்முடைய அதிகாரத்திற்குட்பட்ட செய்கைகளையும் தீர்மானங்களையும்தான் செய்யவேண்டுமே யொழிய அவைகளுக்கு மீறி செய்யும்பக்ஷத்தில் அதனால் பாதிக்கப்பட்ட நபர் அல்லது நபர்கள் தாவா செய்து தகுந்த பரிகாரத்தை யடையலாம்.

ஆனால் இப்பிரிவினால் ஒவ்வொரு லோகல்போர்டிலும் யோக்கியதையற்ற ப்ரெஸிடெண்டும் வைஸ் ப்ரெஸிடெண்டும் அங்கத்தினர்களும் இருக்கலாமென்றும்-அவர்கள் செய்யும் யாதொரு தீர்மானமும் கட்டாயம் செலாவணியாக்கத்தக்க தென்றும் அவைகளைப்பற்றி எவரொருவரும் ஆக்ஷேபிக்க முடியாதென்றும் சொல்லலாகாது. ஏனென்றால் இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குறைவுகளனைத்தும் கூடிய சீக்கிரத்தில் நீக்கிவிடப்படவோ அல்லது பூர்த்தி செய்யப்படவோ இசசட்டத்திலேயே பல அம்சங்கள் உள்ளன. உதாரணமாக, 203-வது பிரிவில், யாதொரு நபர் ஒரு லோகல் போர்டின் அங்கத்தினராகவாவது ப்ரெஸிடெண்டாகவாவது அந்த ஸ்தானங்களை வகிப்பதற்கு தமக்கு யோக்கியதை குறைவு உண்டென்று தெரிந்திருந்தும் அந்த ஸ்தானத்தை வகித்துவரும் பக்ஷத்தில் தண்டனைக்குள்ளாவாரென்று சொல்லப்பட்டுள்ளது. இன்னும் தனித்தனியான அங்கத்தினர்களும்

அருகத்வமில்லாத இதர அங்கத்தினர்களை நீக்குவதற்கும்-இச்சட்டத்தின் 57-வது பிரிவில் வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆகையால் இவ்வளவு வரையிலும் தொடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளுக்கும்மீறி ஒரு லோகல் போர்டில் அல்லது கமிட்டியில் பிசகு நடக்கும்பக்ஷத்தில் அதனுலேயே அந்த மொத்த நடவடிக்கைகளும் செல்லாதென்று சொல்லக்கூடாது. ஒரு கேவில் (a) ஒரு தாலூக்காபோர்டில் இருக்கவேண்டிய அங்கத்தினர்களில் ஒரு ஸ்தானமானது காலியாயிருந்தபடியே மீதி ஸ்தானங்களிலுள்ள நபர்களால் ப்ரெஸிடென்டின் எலெக்ஷன் நடத்தப்பட்டது. இந்த சந்தர்ப்பங்களில் அந்த எலெக்ஷன் செலவத்தக்கதாக ஏற்படுமா என்னும் ப்ரச்னை ஏற்பட்டவளவில் செல்லத்தக்கதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு வருஷ மும்மிப்போர்ட்டுகளை தெரிவிப்பது.

36. (1) ஒவ்வொரு பஞ்சாயத்தும் தங்களுடைய பரிபாலனத்தைக் குறித்து தாலூக்கா போர்டுக்கு ஒரு ரிப்போர்ட்டு தெரிவிக்க வேண்டும்.

(2) ஒவ்வொரு தாலூக்கா போர்டும், டிஸ்டிரிக்டு போர்டுக்கு தங்களுடைய பரிபாலனத்தைப் பற்றியும், அந்த தாலூக்காவிலுள்ள எல்லா பஞ்சாயத்துகளின் பரிபாலனத்தைக் குறித்தும் மொத்தமாய்ச் சேர்த்து ஒரு ரிப்போர்ட்டு தெரிவிக்க வேண்டும்.

(3) ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டும் பிரதேச கவர்ன்மெண்டுக்கு தன்னுடைய பரிபாலனத்தைப் பற்றியும், அந்த ஜில்லாவிலுள்ள எல்லா தாலூக்கா போர்டுகள், பஞ்சாயத்துகள் இவைகளினுடைய பரிபாலனத்தைப் பற்றியும் ஒரு மொத்தமாய்ச் சேர்த்து ரிப்போர்ட்டுத் தெரிவிக்கவேண்டும்.

(4) மேற்படி ரிப்போர்ட்டுகள் அரசிறை (Financial) வருஷத்திற்கு சம்பந்தப்பட்டவைகளாயிருக்கவேண்டும். இன்னும் அந்த ரிப்போர்ட்டுகளானது அவ்வருஷத்திற்கு அடுத்த ஏப்ரல்மாதம் முதல் தேதிக்குப் பிறகு கூடுமான சீக்கிரத்தில் பிரதேச கவர்ன்மெண்டாரால் குறிக்கப்படும் தேதிக்கு மேற்படாமல் ஒரு தேதிக்குள் தெரிவிக்கப்படவேண்டும். இன்னும் அவைகளில் லோகல் கவர்ன்மெண்டானது உத்தரவு செய்யும் பிரகாரம் என்னென்ன விவரங்கள் வேண்டுமோ அவைகள் அடங்கியிருக்க வேண்டியதல்லாமல் எந்த நமூனாவின்படியிருக்க வேண்டுமோ அந்த நமூனாவின் பிரகாரம் இருக்க வேண்டும்.

(a) வெங்கட்ரமய்யர் vs. ஹமித் சுல்தான் மரக்காயர், 44 M. L. J. 161=A. I. R. 1923 Mad. 360.

(5) ஒவ்வொரு லோகல் போர்டும் தெரிவிக்க வேண்டிய ரிப்போர்ட்டானது அதின் பிரஸிடென்டினால் தயாரிக்கப்பட வேண்டும். அந்த லோகல் போர்டு அந்த ரிப்போர்ட்டை கவனித்து அதன்பேரில் ஏதாவது தீர்மானங்களை செய்தால் அவைகள் சகிதம் அதைத் தெரிவிக்க வேண்டிய அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

(6) அந்த ரிப்போர்ட்டுகளும் அவைகளைக் குறித்துள்ள தீர்மானங்களும் லோகல் கவர்ன்மெண்டு எம்மாநிரி உத்திரவு செய்கிறதோ அம்மாதிரி விளம்பரம் செய்யப்பட வேண்டும்.

குறிப்புகள்.

இந்த சட்டத்தின் 117-வது பிரிவில் ஒவ்வொரு லோகல்போர்டும், பட்ஜட்டு ரிப்போர்ட்டு அனுப்பவேண்டுமென்று கூறுகிறது இப்பிரிவானது ஒவ்வொரு லோகல் போர்டும் நடந்த ஒவ்வொரு வருஷத்தினுடைய நிர்வாக விவரங்களைப்பற்றி ஒரு ரிப்போர்ட்டு செய்யவேண்டுமென்று உள்ளது.

பஞ்சாயத்துகள்-தாலூக்கா போர்டுக்கு ஒரு ரிப்போர்ட்டு செய்யவேண்டும். தாலூக்காபோர்டு தங்களுடைய வில்தீரணத்திலுள்ள பஞ்சாயத்துகளைப் பற்றியும், தங்களுடைய நிர்வாகத்தைப்பற்றியும் ரிப்போர்ட்டு செய்யவேண்டும். அதே மாதிரி டிஸ்டிரிக்டு போர்டுகள் தங்கள் டிஸ்டிரிக்ட்டிலுள்ள தாலூக்கா போர்டுகள், பஞ்சாயத்துகள் இவைகளுடைய நிர்வாகத்தைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும்.

நிர்வாக ரிப்போர்ட்டுகள் முதல்முதலில் ஒவ்வொரு போர்டிலும் நன்முக பரிசோதனை செய்யப்பட்டு பிழைகள் திருத்தப்பட்டு-பிறகுதான் மேல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட வேண்டும். நிர்வாக ரிப்போர்ட்டுகள், லோகல் கவர்ன்மெண்டால் நிர்ணயிக்கப்படும் ஒரு நமூனாவின் பிரகாரம் இருக்க வேண்டும்.

37. (1) லோகல் கவர்ன்மெண்டானது இந்த ஆக்டின் கீழ் ஏற்படுத்தப்படும் சகல் லோகல் போர்டுகளாவது அல்லது எந்த லோகல் போர்டாவது செய்யும் நடத்தைகளை பரிசீலனைசெய்யவோ, அல்லது மேல்விசாரணை நடத்தவோ, இவைகளுக்காக வேண்டிய உத்தியோகஸ்தர்களை நியமிக்கலாம்.

லோகல் போர்டுகளை, பரிசீலனையும் மேல் விசாரணையும் செய்யும் உத்தியோகஸ்தர்கள்.

(2) லோகல் கவர்ன்மெண்டானது தங்களுக்கு எப்படியுக்தமென்று தோன்றுகிறதோ அதன் பிரகாரம் 1-வது உப்ப்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களுக்கு யாதொரு சம்பளத்தையும் மற்ற உத்யோக அங்கங்களையும் நிஷ்கரிஷை செய்யலாம்.

அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்காகவும் அவர்களுடைய உத்தியோக அங்கங்களுக்காகவும் நேரும் செலவுகள் லோகல் கவர்ன்மெண்டுடைய வருமானத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது பழைய 40-வது பிரிவு பிளக்கப்பட்டு ஒரு தனி பிரிவாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் 37-A, 37-B, 37-C இப்பிரிவுகளின் கீழ் லோகல் போர்டுகளில் நுழைந்து ரிக்கார்டுகளை பரிசோதனை செய்யவும், இன்னும் மேற்சொன்ன பிரிவுகளில் கண்ட காரியங்களைச் செய்யவும் உரிமையுள்ளவராவார்கள்.

37—A. லோகல் கவர்ன்மெண்டு இதற்கென்று அதிகாரப் பரிசீலனை செய்யும் உத்தியோகஸ்தர் அல்லது உத்தியோகஸ்தர்கள் கட்டிடங்களில் நுழையும் அதிகாரம்.

படுத்தும் யாதொரு நபர்,

(a) யாதொரு லோகல் போர்டு அல்லது ப்ளிடெண்டிங்குடைய அதிகாரத்துக்குள்ளடங்கிய யாதொரு அசையாப்பொருளாவது அல்லது நடந்துகொண்டிருக்கும் யாதொரு வேலையிலாவது ;

(b) யாதொரு லோகல் போர்டினால் நடத்தப்பட்டு வரும் அல்லது அதன் அதிகாரத்துக்குட்பட்டுவரும் யாதொரு பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, வைத்தியசாலை, அல்லது அம்மை குத்தப்படும் ஸ்தலம், சத்திரம் அல்லது வேறே ஒரு சங்கஸ்தலத்திலும் அவ்விதக் கட்டடங்களில் வைக்கப்பட்டிருக்கும் ரிக்கார்ட்டுகள், ரிஜிஸ்தர்கள் இன்னும் மற்ற தஸ்தாவேஜுகளையாவது ;

(c) யாதொரு லோகல் போர்டினுடைய ஆபீஸிலும் அதில் வைக்கப்பட்டிருக்கும் ரிக்கார்டுகள், ரிஜிஸ்தர்கள் அல்லது வேறே தஸ்தாவேஜுகளையாவது ;

இவ்விதமான சட்டங்களில் நுழைந்து ரிகார்டு முதலியவைகளை பரிசீலனை செய்யலாம். அல்லது இவைகளில் நுழையும்படி செய்து ரிக்கார்டுகளை பரிசீலனை செய்யலாம் - பரிசீலனை செய்விக்கலாம்.

37—B. "லோகல் போர்டுகளும், அவைகளின் ப்ரெஸிடென்டுகளும், உத்தியோகஸ்தர்களும், மேலே 37, 37-A, இந்தப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், நபர்களுக்கும் எல்லா நியாயமான சந்தர்ப்பங்களிலும், லோகல் போர்டு சொத்நிலாவது அல்லது கட்டடத்நிலாவதுபிரவேசிப்பதற்கும், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் அல்லது நபர்களின் அபிப்பிராயத்தில், இனி நிர்ணயிக்கப்படும் விதிகளுக்கிணங்கி அவர்கள் மேலே சொன்ன பிரிவுகளின்கீழ் தங்களுடைய கடமைகளைத் தீர்க்கும்பொருட்டு எந்தெந்த தஸ்தாவேஜுகளை அவர்கள் பார்வையிட வேண்டுமென்று அவசியமேற்படுகிறதோ அந்த தஸ்தாவேஜுகளைப் பார்ப்பதற்கும், தகுந்த வசதி கொடுக்க கடமைப்பட்டிருப்பவராவார்கள்.

லோகல் போர்டு சொத்து முதலியவற்றில் பரிசீலனை செய்யும் உத்தியோகஸ்தர்கள் பிரவேசிப்பது.

37—C. லோகல் கவர்ன்மெண்டானது அல்லது இதற்காக லோகல் கவர்ன்மெண்டாரால் அதிகாரப்படுத்தப்படும் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது யாதொரு நபர் பின் சொல்லப்பட்டவைகளைச் செய்யலாம்.

லோகல் போர்டுகளிலிருந்து ரிப்போர்ட்டுகள் வரவேண்டுமென்று கேட்க அதிகாரம்.

அதாவது:—

(a) யாதொரு லோகல் போர்டு அல்லது அதன் ப்ரெஸிடென்டினுடைய ஸ்வாதீனத்நிலாவது அல்லது அதிகாரத்நிற்குள்ளாவது இருக்கும் யாதொரு ரிக்கார்டு ரிஜிஸ்தர் அல்லது வேறே தஸ்தாவேஜை ஆஜர்ப்படுத்தும்படிச் சொல்லலாம்;

(b) யாதொரு லோகல் போர்டு அல்லது ப்ரெஸிடென்டை யாதொரு கணக்கு, பிளான் அல்லது செலவின் மதிப்பு அல்லது விவரப் பத்நிரிகை (ஸ்டேட்மெண்டு) வரவு செலவு கணக்கு அல்லது விவரப்பட்டி இவைகளை ஆஜர்புதுத்தும்படிச் செய்யலாம்.

(c) யாதொரு லோகல் போர்டு அல்லது ப்ரெஸிடென்டு அந்த போர்டுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விஷயமாக யாதொரு சமாச்சாரத்தையாவது அல்லது ரிப்போர்ட்டையாவது தெரியப்படுத்தும்படியாவது கேட்கலாம்.

(d) யாதொரு லோகல் போர்டு அல்லது ப்ரெஸிடென்டினுடைய கவனத்நிற்காக அவர்கள் அல்லது (ஒருவராயிருந்தால்)

அவர் அப்படிப்பட்ட போர்டின் அல்லது ப்ரெஸிடென்டின் நடவடிக்கைகள் அல்லது கடமைகளின் விஷயமாக தங்களுக்கு அல்லது தனக்கு யுக்தமென்று தோன்றும் யாதொரு அபிப்பிராயங்களை எழுதிவைக்கலாம்.

டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டுகளுக்கும், தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டுகளுக்கும், முறையே தாலூக்கா போர்டுகள், பஞ்சாயத்துகள் இவைகளின்மேலுள்ள அதிகாரம்.

37—**D**. மேலே 37-A, 37-(c), இந்தப் பிரிவுகளின் கீழ் லோகல் கவர்ன்மெண்டு யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது நபருக்கு கொடுக்கப்படும் எல்லா அதிகாரங்களும் 37—B-ல் குறிக்கப்பட்டிருக்கும் சொத்து அல்லது கட்டடம், பத்திரங்கள் முதலியவைகளில் பிரவேசிக்கும் உரிமைகளுடன்,

(a) தாலூக்கா போர்டுகளும், பஞ்சாயத்துகளும், இவைகளினுடைய ப்ரெஸிடென்டுகளும் ஆகிய இவை விஷயமாக டிஸ்டிரிக்டு போர்டு ப்ரெஸிடென்டானும்,

(b) பஞ்சாயத்துகளும் அவைகளின் ப்ரெஸிடென்டுகளும் இவை விஷயமாய் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டானும்,

வஹிக்கப்பட்டு வரலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவுகள், பழைய 37(1)-வது உபப்பிரிவேயாகும். அப்பிரிவானது நான்கு பிரிவுகளாக உடைக்கப்பட்டு 37-A, 37-B, 37-C, 37-D என்று தனி தனி அங்கங்களின் கீழ் செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின் கீழ் செய்யப்படும் யாதொரு தீர்மானத்தை நிறுத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ அதிகாரம்.

38. (1) லோகல் கவர்ன்மெண்டானது எழுத்துமூலமாக ஒரு உத்திரவினால்,

(i) யாதொரு தீர்மானம் செய்யப்பட்டதையாவது அல்லது ஆர்டர் செய்யப்பட்டதையாவது அல்லது லிசென்ஸ் அல்லது உத்திரவு கொடுக்கப்பட்டதையாவது நிறுத்திவைக்கலாம் அல்லது ரத்து செய்து விடலாம் - அல்லது,

(ii) அவர்களுடைய அபிப்பிராயத்தில்,

(a) அப்படிப்பட்ட தீர்மானம் அல்லது ஆர்டர் அல்லது லைசென்ஸ் உத்தரவு அல்லது செய்கையானது சட்டப்பிரகாரம் நடந்தேராவிட்டாலும் அல்லது செய்யப்படாவிட்டாலும் கொடுக்கப்படாவிட்டாலும் அல்லது அதிகாரப்படுத்தப்படாவிட்டாலும், அல்லது ;

(b) அப்படிப்பட்டத் தீர்மானம், ஆர்டர், லைஸென்ஸ், உத்தரவு அல்லது செய்கை - இந்த ஆக்டினாலாவது அல்லது வேறே ஒரு சட்டத்தினாலாவது கொடுக்கப்பட்ட அதிகாரத்திற்கு அதிகமானதாக இருந்தாலும், அல்லது

(c) அப்படிப்பட்டத் தீர்மானத்தையாவது அல்லது உத்தரவையாவது அமுலுக்குக் கொண்டு வருவதிலாவது அல்லது அப்படிப்பட்ட லைசென்ஸ் அல்லது உத்தரவு அமுலில் இருந்ததினாலாவது அல்லது அப்படிப்பட்ட செய்கை நடந்தேருவதிலாவது மனிதர்களுடைய உயிர், ஆரோக்கியம் அல்லது பந்தோபஸ்து இவைகளுக்கு அபாயம் நேரிடும் போலிருக்கிறதென்றாவது அல்லது அதனால் ஒரு அமளி அல்லது சச்சரவு நேரிடும் போலிருக்கிறதென்றாவது, இருந்தாலும் ; இந்தச்சட்டத்தையொட்டியாவது அல்லது இந்த சட்டத்தின் கீழ்செய்வதுபோல் செய்யப்படும் யாதொரு காரியத்தை அந்த காரியமானது இனி செய்யப்படுவதற்கு இருந்தாலும் அல்லது செய்யப்பட்டுக் கொண்டிருந்தாலும் அதைத் தடுத்துவிடலாம்.

ஆனால் இந்த உபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் யாதொன்றும், நடந்தேறப்பட்டிருக்கும் யாதொரு எலெக்ஷனை நீக்கிவைக்க-லோகல் கவர்ன்மெண்டை அதிகாரப்படுத்தாது.

(2) லோகல் கவர்ன்மெண்டு (1)-வது உபப்பிரிவில் (a), (b) வாக்கியங்களில் குறிக்கப்பட்டிருக்கும் யாதொரு காரணத்தைக்கொண்டும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவதற்கு முன் இதில் சம்பந்தப்பட்ட அதிகாரி அல்லது நபர் இவர்களுக்குத் தங்களுடைய சமாதானத்தைத் தெரிவிக்க வசதி கொடுக்கவேண்டும்.

(3) அந்த ஜில்லாவின் கலெக்டரவர்களின் அபிப்பிராயத்தில் மேலே (1)-வது உபப்பிரிவின் (c) வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கும் யாதொரு காரணங்களைக்கொண்டு அவசரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று தோன்றும் பக்ஷத்தில், அவர் அந்தத் தீர்மானம் ஆர்டர், லைசென்ஸ், உத்தரவு அல்

லது செய்கை இவைகளை நிறுத்திவைக்கலாம். அப்படி நிறுத்திவைத்தப் பிறகு - லோகல் கவர்ன்மென்டுக்கு ரிப்போர்ட்டு செய்யவேண்டும். அவர்கள் அதற்குமேல் கலெக்டரினுடைய உத்திரவை ரத்துசெய்தாலும் செய்யலாம், அல்லது அதன் சம்பந்தப்பட்ட அதிகாரி அல்லது நபருக்கு சமாதானத்தைத் தெரிவிக்கத்தகுந்த வசதி கொடுத்துவிட்டு பிறகு-கலெக்டரின் உத்திரவானது அது பிறந்தபடியேயாவது அல்லது திருத்தங்களுடனாவது சாஸ்வதமாகவோ அல்லது அவர்கள் எவ்வளவுகாலம் வரையிலும் அவ்வுத்திரவு அமுலில் இருக்கவேண்டுமென்று நினைக்கிறார்களோ அவ்வளவு காலம் வரையிலுமாவது அமுலிலிருக்கும்படி உத்திரவிடலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவில், (1)-வது உபப்பிரிவில் உள்ள விலக்குபந்தனையும் (2)-வது உபப்பிரிவும் 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்த சட்டத்தினால் ஏற்பட்டது. இந்தியா செக்ரிடரி ஆப்ஸ்டேட் vs. முருகேச முதலியார் (a) என்னும் கேஸில், இந்த சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட்ட யாதொரு தீர்மானம் ஆர்டர் அல்லது லேசென்ஸ் அல்லது உத்திரவு இவைகளை நிறுத்திவைக்கலாம் அல்லது ரத்துசெய்துவிடலாம் என்று சொல்லப்பட்டதில் 'தீர்மானம்' என்பதானது ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு அல்லது அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டதையும் அணைக்கும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனால் கவர்ன்மென்டுக்கு ஒரு எலெக்ஷனையும் நீக்கி ரத்துசெய்வதற்கு அதிகாரம் இருப்பதுபோல் தீர்மானம் ஏற்பட்டதனால் புதிய திருத்தசட்டத்தில் ஸ்பஷ்டமாக எலெக்ஷன் விஷயமாக கவர்ன்மென்டார் பிரஸேசித்து எலெக்ஷன்களை ரத்து செய்வதற்கில்லையென்று சட்டம் ஏற்பட்டுவிட்டது.

'லோகல் கவர்ன்மென்டு' என்பது, சென்னை ராஜதானியில் உள்ள கவர்னர் கூடிய நிர்வாக சபையைக் குறிப்பதாகும். (1), (2)-வது உபப்பிரிவுகளில் உள்ள அதிகாரமானது (3)-வது உபப்பிரிவின்கீழ் சுருக்கப்படுத்தப்பட்டு டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டிலும் டிஸ்டிரிக்ட் கலெக்டர்தான் லோகல் கவர்ன்மென்டினுடைய ப்ரதிநிதியாவர். ஆகையால் லோகல் கவர்ன்மென்டார் அவசர சந்தர்ப்பங்களில் வேண்டிய நடவடிக்கைகளை கூடிய சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளாமல் போனாலும் டிஸ்டிரிக்ட் கலெக்டர் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம்.

இப்படி யாதொரு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் விஷயமாக பாதிக்கப்பட்ட எந்த நபரும் கலெக்டருக்கு மனு செய்துகொள்ளலாம்.

(a) 1929 M. W. N. 67 A. I. R. 1929 Mad. 8=56 M. L. J. 157.

39. (1) அவசரமான விஷயங்களிலே டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - யாதொரு லோகல் போர்டாராவது ப்ரெஸிடென்டாவது நிறைவேற்ற அல்லது செய்ய அதிகார முடையவர்களாயிருக்கிற எந்த வேலையை அல்லது காரியத்தை உடனே நிறைவேற்றுவதாகிலும் செய்வதாகிலும் ஜனங்களுடைய பத்திரத்துக்கு அவசியமானதென்று தாம் அபிப்பிராயப்படுகிறாரோ அந்த வேலையை நிறைவேற்றும்படியாகிலும் அந்தக் காரியத்தைச் செய்யும்படியாகிலும் கட்டளையிடலாம், அல்லது அதற்காக ஏற்பாடுபண்ணலாம் ; மேலும், அந்த வேலையை நிறைவேற்றுவதற்காவது காரியத்தைச் செய்வதற்காவது உண்டான செலவை லோகல் போர்டார் செலுத்தவேண்டுமென்று உத்திரவுபண்ணலாம்.

டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்குள்ள விசேஷ அதிகாரங்கள்.

(2) அப்படி அந்த செலவைச் செலுத்தாதபட்சத்தில் அவர் - லோகல் பண்டின் மேல் ஏற்பட்டிருக்கிற கடன் முதலிய வேறே எந்த பொறுப்புக்கும் முன்னதாய் அப்படிப்பட்ட செலவைச் செலுத்தும்படி, மேற்படி பண்ட் (Fund) பணம் யார்வசத்திலிருக்கிறதோ அந்த நபருக்கு உத்திரவு பண்ணலாம். அந்த நபர் - லோகல் போர்டுக்கு வரவாக வைத்திருக்கிற பணத்திலிருந்து கொடுக்கக் கூடிய மட்டில், அந்த உத்திரவின்படி நடந்துக் கொள்ள வேண்டியவரா வார்.

(3) டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - இந்தப் பிரிவினல் (தமக்கு) கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைத் (தாம்) செலுத்துகிற ஒவ்வொரு விஷயத்தையும், அப்படிப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்கான காரணங்களைப் பூரணமாக கண்டெழுதி, பிரதேச கவர்ன்மென்டாருக்கு உடனே ரிப்போர்ட்டு பண்ணவேண்டும். மேலும், லோகல் போர்டுக்கும் சங்கதி தெரியும்பொருட்டு அதேகால த்தில் அந்த ரிபோர்ட்டின் ஒரு நகலை அனுப்பவேண்டும். அதன் மேல், லோகல் போர்டார்-டிஸ்ட்ரிக்ட் கலெக்டருடைய ரிபோர்ட்டில் கண்ட விஷயங்களைக்குறித்துப் ப்ரதேச கவர்ன்மென்டாருக்கு எழுத அர்ஹராவார்கள்.

குறிப்புகள்.

இந்தப்பிரிவானது ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கும் அவசர அதிகாரங்களைக் கொடுப்பதாகும். 38-வது பிரிவானது லோகல் போர்டுகளி

னுடைய தீர்மானங்களைப்பற்றியும் அவை கொடுத்திருக்கும் லிசென்ஸ், உத்தரவு இவைகளைப்பற்றியும் அவைகளை ரத்துசெய்வதைப்பற்றியும் லோகல் கவர்ன்மென்டாருக்கும், டில்டிரிக்ட் கலெக்டருக்கும் உள்ள அதிகாரங்களைப் பற்றி கூறுகிறது. இந்த பிரிவானது லோகல்போர்டுகள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமலிருப்பதினால் நேரும் அபாயம் – பந்தோபஸ்துக் குறைவு இவைகளை உத்தேசித்து கலெக்டரே தம்முடைய பொறுப்பின் பேரில் அந்த வேலையைச் செய்வித்து பிறகு அதற்கு வேண்டிய தொகையை எந்த பரிடம் லோகல்பண்டு தொகை இருக்கிறதோ அவரிடமிருந்து வசூல் செய்வதற்குள்ள பாத்தியதையைப்பற்றி கூறுகிறது. ஆனால் ஒரு கலெக்டரானவர் தன் சுயேச்சையாக யாதொரு வேலையையும் நடத்துவதற்கில்லை. எந்தவேலையை ஒரு லோகல் போர்டாவது அல்லது அதன்கீழ் உத்தரவு பெற்றவர்களாவது செய்யவேண்டியிருந்து ஆனால் அதை தாமே மேற்கொண்டு செய்கிறாரோ அந்த வேலையானது, பொது ஜனங்களுடையபந்தோபஸ்தை உத்தேசித்து உடனே யாதொரு தாமதமுமில்லாமல் செய்வது அவசியம் என்று அபிப்பிராயப்பட்டபிறகுதான் செய்யவேண்டும். அப்படிச் செய்தபிறகு லோகல் கவர்ன்மென்டாருக்கு அவர் தாம் செய்திருக்கும் வேலைகளைப்பற்றி ஒரு பூரண ரிப்போர்ட்டு செய்யவேண்டும். ஆனால், அவர் செய்த வேலைகளைப்பற்றி சம்பந்தப்பட்ட லோகல் போர்டாரும் தம்முடைய ஆக்ஷேபத்தைத் தெரிவிக்கலாம்.

இந்தப்பிரிவில் குறிக்கப்பட்ட "வேலை" என்பது ரோட், வாராவதி, கட்டடம், பள்ளிக்கூடம் முதலிய வேலைகளுக்குறிக்கும்.

40. [இந்தப்பிரிவு எடுத்துவிடப்பட்டது.]

41. (1) இந்த ஆக்டினாலாவது வேறே யாதொரு ஆக்டினாலாவது இந்த ஆக்டின்படியாவது வேறே யாதொரு ஆக்டின்படியாவது ஏற்படுத்தப்பட்ட யாதொரு அலுவலை யாதொரு லோகல் போர்டாராகிலும் அதன் ப்ரெஸிடென்டாகிலும் நிறைவேற்றத் தவறிப்போயிருக்கிறார்களென்று பிரதேச கவர்ன்மென்டாருக்கு எப்போதாவது தோற்றினால், அவர்கள் - அந்த அலுவலை நிறைவேற்றுவதற்காக எழுதிய உத்திரவு மூலமாய் ஒரு கால அளவை நிச்சயிக்கலாம்.

லோகல் போர்டாராவது அதன் ப்ரெஸிடென்டாவது தவறிப்போகிற விஷயங்களில் நடவடிக்கை நடத்த பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

(2) அப்படி நிச்சயிக்கப்பட்ட கால அளவுக்குள் அந்த அலுவல் நிறைவேற்றப்படாவிட்டால், அதை நிறைவேற்றும்படி பிர

தேச கவர்ன்மென்டார் ஒருவரை நியமித்து, அதை நிறைவேற்று வதற்குண்டான செலவைத் தாங்கள் நிச்சயிக்கக்கூடிய காலத்திற்குள் லோகல்போர்டார் லோகல் பண்டிலிருந்து (நிதி) அப்படிப்பட்டவ ருக்குச் செலுத்தவேண்டுமென்று உத்திரவு பண்ணலாம்.

(3) லோகல்பண்டிலிருந்து கொடுக்கும்படி (2) குறிப் பிட்ட உட்பிரிவின் பிரகாரம் பிரதேச கவர்ன்மென்டார் உத்திரவு பண்ணியிருக்கும் செலவுத்தொகை அந்தப்படி செலுத்தப்படாத பக்ஷத்தில், பிரதேச கவர்ன்மென்டாருடைய அனுமதியை முன்ன தாய்ப் பெற்றுக்கொண்டு டிஸ்ட்ரிக்ட் கலெக்டரானவர் - வாங்கும்படி அதிகாரம் கொடுத்திருக்கும் கட்டளை வாங்கி உபயோகிப்பதற்காகப் பிடிக்கும் செலவுகள் தவிர லோகல் பண்டின்மேல் ஏற்பட்டிருக்கிற கடன் முதலிய வேறே எந்த பொறுப்புக்கும் முன்னதாய் அப்படிப் பட்டசெலவைச் செலுத்தும்படி மேற்படி பண்டு பணம் யார் வசத்தி லிருக்கிறதோ அந்த நபருக்கு உத்திரவு பண்ணலாம்.

(4) அந்த நபர் - டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு வரவாக வைத் திருக்கிற பணத்திலிருந்து கொடுக்கக்கூடியமட்டில், அந்த உத்திர வின்படி நடந்துக்கொள்ள கடமைப்பட்டவராவார்.

குறிப்புகள்.

39-வது பிரிவானது ஒரு லோகல்போர்டு செய்யவேண்டிய அல்லது முடித்து வைக்கவேண்டிய கட்டடம், ரோட்டு அல்லது வாராவதி முதலிய ஜனசௌகரியத்துக்கு வேண்டிய வேலைகளைப்பற்றி கூறியுள்ளது. அந்தப் பிரிவானது ஒரு அசர அதிகாரத்தைத் தருவதாகும். இந்தப்பிரிவில் பொது வாக லோகல் போர்டுகள் செய்யவேண்டிய வேலைகளையும், கடமைகளை யும் செய்யத் தவறும் போது அவைகளை இன்னவென்று குறிப்பிட்டு ஒரு கால அளவை நிர்ணயித்து அதற்குள் அவைகளை செய்யும்படி உத்தர விடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப்பிரிவையும் 42-வது பிரிவையும் ஒன்று சேர்த்து படிக்கவேண்டும். 41-வது பிரிவின்கீழ் கவர்ன் மென்டார் செய்ய வேண்டிய உத்தரவை ஒரு டிஸ்டிரிக்ட் போர்டு அல்லது தாலுக்காபோர்டானது அப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செலுத்தலாம். இப்பிரிவானது ஒரு குறிப்பிட்ட காரியத்தின் விஷயமாக உள்ள தவறுதலைக் குறிப்பதாகும்.

42. மேலே 41-வது பிரிவின்படி பிரதேச கவர்ன்மென்டாருக்கும், டிஸ்ட்ரிக்ட்டு கலெக்டருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரமானது அந்தப்பிரிவில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து,—

தாலூக்கா போர்டுகளும் பஞ்சாயத்துகளும், அவைகளினுடைய ப்ரெஸிடென்டுகளும் தவிர்ப்போகும் விஷயங்களில் டிஸ்டிரிக்டு போர்டு ப்ரெஸிடென்டுகளுக்கும் தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டுகளுக்கும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அதிகாரங்கள்.

(a) தாலூக்கா போர்டுகளின் அல்லது அவைகளினுடைய ப்ரெஸிடென்டுகளின் விஷயத்தில் டிஸ்ட்ரிக்டு போர்டு ப்ரெஸிடென்டாலும்,

(b) பஞ்சாயத்துகள் அல்லது அவைகளினுடைய ப்ரெஸிடென்டுகளின் விஷயத்தில் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டாலும், செலுத்தப்படலாம் :

ஆனால், லோகல் கவர்ன்மென்டாருக்கும், டிஸ்ட்ரிக்ட்டு அல்லது தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டுக்கும் அபிப்பிராயபேதம் இருக்கும் பக்ஷத்தில் லோகல் கவர்ன்மென்டாருடைய அபிப்பிராயமேதான் அனுசரிக்கப்படவேண்டும்.

குறிப்புகள்.

41-வது பிரிவின் கீழ் லோகல் கவர்ன்மெண்டுக்கும் கலெக்டருக்கும் ஏற்பட பார்வை அதிகாரமானது இப்பிரிவின்கீழ் டிஸ்டிரிக்ட் போர்டு தாலூக்கா போர்டுகளின் விஷயமாகவும் தாலூக்கா போர்டுகள் பஞ்சாயத்துகளின் விஷயமாகவும் செலுத்தப்படலாம் என்று இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு டிஸ்டிரிக்ட் போர்டுக்கும் ஒரு தாலூக்கா போர்டுக்கும் அல்லது ஒரு பஞ்சாயத்துக்கும் இம்மாதிரியான அதிகாரத்தைச் செலுத்தும் விஷயமாய் யாதொரு அபிப்பிராய பேதம் அல்லது தகராறு நேரும் பக்ஷத்தில் அது விஷயமாய் லோகல் கவர்ன்மெண்டார் என்ன உத்தரவு செய்கிறார்களோ அவ்வுத்தரவே முடிவானதோர் உத்தரவாகும்.

ஒரு குறித்த விஷயமாய் இப்பிரிவின்கீழ் லோகல் போர்டுகளுக்குள் யாதொரு தகராறு ஏற்படும் பக்ஷத்தில் உபய தரப்பினர்களுக்குள் எவராவது

லோகல் கவர்ன்மெண்டினுடைய அபிப்பிராயத்திற்காக தங்களுக்குள்ள அபிப்பிராய பேதத்தின் விவரங்களைத் தெரிவிக்கலாம் இப்பிரிவில் இன்னார் தான் அப்படித் தெரிவிக்க வேண்டுமென்று குறிக்கப்படாததினால் இருவர்களில் எவராவது லோகல் கவர்ன்மெண்டினுடைய அபிப்பிராயத்தை நாடிக் கொள்ளலாம் என்று ஏற்படும்.

லோகல் போர்ட்டின் ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டை நீக்கி விடுவதற்கு பிரதேச கவர்ன்மெண்டாருக்கு உள்ள அதிகாரம்.

43. (1) லோகல் கவர்ன்மெண்டு யாதொரு லோகல் போர்டினுடைய ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தங்களுடைய அபிப்பிராயத்தில் வேண்டுமென்று இந்த ஆக்டின் நிபந்தனைகளையாவது அல்லது இவைகளை யொட்டி செய்யப்படும் விதிகளையாவது உப சட்டங்களையாவது மெகுலேஷன்களையாவது அல்லது சட்டப்படிக்குள்ள உத்திரவுகளையாவது நடத்தி வைக்காமல் தவறி விடுகிறார் என்றாவது அல்லது இவைகளை நடத்தி வைக்க மறுத்து விடுகிறதென்றாவது அல்லது தம்முடைய சுவாதீனத்திலுள்ள அதிகாரங்களை துற்பிரயோகம் செய்து விடுகிறதென்றாவது தோற்றும் பக்ஷத்தில் அவர்களை அறிக்கை மூலமாக நீக்கிவிடலாம்.

(2) லோகல்கவர்ன்மெண்டார் மேலேசொன்ன (1) வது உபப்பிரிவின்கீழ் ஒரு நடவடிக்கையை எடுத்துக்கொள்வதாக பிரேரேபிக்கும் பக்ஷத்தில், அதற்கு சம்பந்தப்பட்ட ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டுக்கு தங்களுடைய சமாதானங்களைத் தெரிவிக்கும்படி வசதி கொடுக்க வேண்டும். இன்னும் அந்த பிரிவின்கீழ் வெளியிடப்படும் அறிக்கையில் லோகல் கவர்ன்மெண்டார் தாங்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்கு உள்ள காரணங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது மிகவும் முக்கியமானதோர் பிரிவாகும். 33, 39, 40, 41, 42-வது இத்தப் பிரிவுகளில் லோகல்போர்டுகள் செய்யும் தவறுவது அல்லது செய்யவேண்டிய கடமையை செய்யாமலிருப்பது அல்லது தாங்கள் செய்யவேண்டியகாரியங்களைச் செய்யும்படி உத்தரவுசெய்யப்பட்டும் செய்யத் தவறுவது ஆகிய இவைகளைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. மேற்சொல்லிய பிரிவுகளில் உள்ளபடி வேண்டிய வசதிகளைக் கொடுத்தும் லோகல் போர்டுகள் சரிவர காரியங்களை செய்யாமலிருக்கும்பக்ஷத்தில் அந்த லோகல் போர்டின் ப்ரெஸிடென்டினிடமாவது அல்லது வைஸ் ப்ரெஸிடென்டி

னிடமாவது அல்லது அந்த போர்டிலேயாவது பிசகு இருக்கவேண்டும். ஆகையால் லோகல் கவர்ன்மென்டார், ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டின்மீது அவருடைய நடத்தை சரியாயில்லை என்று அபிப்பிராயப் படும்பக்ஷத்தில் அவரை அந்த உத்தியோகத்திலிருந்து நீக்கிவிடலாம் என்று இப்பிரிவு கூறுகிறது. ஆனல் அதற்குமுன் அவரிடமிருந்து தகுந்த சமாதானங்களேப்பெற்றும் திருப்தி யடையாவிட்டால் தான் இப்பிரிவின் கீழ் தகுந்த நடவடிக்கைகளே எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படி நீக்கிவிடுவதாக இருந்தால் அதற்குள்ள காரணங்களேயும் கெஜட்டில் தெரிவிக்க வேண்டும்.

ஆனல் ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தம் முடைய ஸ்தானத்திலிருந்து நீக்கிவிடப்பட்டால் அவர் அந்த லோகல்போர்டில் அங்கத்தினராக இருக்கும்படியான உரிமையை இழந்துவிடமாட்டார். அவர் தம்முடைய உத்தியோக கால அளவு தீரும்வரையிலும் அந்த லோகல் போர்டில் அங்கத்தினராகவே இருக்கலாம்.

இந்தப்பிரிவின்கீழ் ஒருதரம் நீக்கப்பட்ட ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரஸிடென்டு மறுபடியும் அந்த லோகல்போர்டின் அங்கத்தினர்களாலேயே ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாக தேர்ந்தெடுக்கப்படக்கூடாதென்று இப்பிரிவில் யாதொன்றும் காணவில்லே. ஆகையால் லோகல்போர்டு அங்கத்தினர்கள் அப்படி இவ்விடப்படும் பக்ஷத்தில் மறுபடியும் அந்த அங்கத்தினரை ஒரு ப்ரெஸிடென்டாகவோ அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகவோ தேர்ந்தெடுக்கலாம்.

லோகல்போர்டு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ்ப்ரெஸிடென்டு இவர்களிடத்தில் நம்பிக்கை இல்லேயென்று ப்ரேரேபணே செய்வது.

44. (1) அடியில் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்கடங்கி யாதொரு லோகல் போர்டு அங்கத்தினரால் அந்த போர்டின் ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு இவர்களிடத்தில் அந்த போர்டுக்கு நம்பிக்கையில்லேயென்று தெரிவிக்கும்படியாக ஒரு ப்ரேரேபணே கொண்டுவரப்படலாம். அந்த நிபந்தனைகளாவன:—

(a) எந்த தினத்தில் லோகல் போர்டு கூடுகிறதோ அந்த தினத்தில் விஷயப் பட்டியில் (Agenda)வில் அடங்கியிருக்கும் காரியமானது ஆலோசனேக்கு எடுத்துக்கொள்ளப்படுமுன் - அந்த ப்ரேரேபணேயைச் செய்வதற்கு போர்டினுடைய அனுமதியைக் கேட்கவேண்டும்.

(b) அப்படி போர்டினுடைய அனுமதியைக் கேட்கும் அங்கத்தினர் அப்படிக் கேழ்க்கும் காலத்தில் அந்த மீட்டிங்கில் அக்கிராச

னம் வகித்திருக்கும் நபருக்கு எழுத்து மூலமாக--தாம் செய்யப்போ கிற ப்ரேரேபணையைப் பற்றிய ஒரு நோட்டீசைக் கொடுக்கவேண்டும்.

(2) பிறகு அக்கிராசனம் வகித்திருக்கும் நபர் அந்தப் ப்ரேரேபணையை போர்டுக்கும் படித்துக் காட்டி அந்தப் ப்ரேரேபணை செய்வதற்கு அனுமதி கொடுக்க எத்தெந்த அங்கத்தினர்கள் சம்ம திக்கிறார்களோ அவர்கள் தங்கள் ஸ்தானங்களில் எழுந்து நிற்கும்படி வேண்டிக்கொள்ளவேண்டும். அந்த போர்டுக்கு (கவர்ன்மென்டினால் உத்தரவிடப்பட்டு) இருக்கவேண்டிய சங்கியையில் மூன்றில் ஒரு பங்குக்கு குறைந்த அங்கத்தினர்கள் மாத்திரம் எழுந்து நிற்கும்பக்ஷத்தில் அக்கிராசனம் வகிக்கும் நபர் அந்த அங்கத்தினருக்கு போர்டினுடைய அனுமதி கிடைக்கவில்லை யென்று தெரிவிக்க வேண்டும். அந்த போர்டுக்குஇருக்கவேண்டிய மொத்தசங்கியையில் மூன்றில் ஒரு பங்குக்குக்குறையாத அங்கத்தினர்கள் எழுந்து நிற்கும்பக்ஷத்தில் அக்கிரா சனம் வகித்திருக்கும் நபர்(அந்த ப்ரேரேபணையைச் செய்ய) போர்டின் அனுமதி கொடுக்கப்பட்டதென்றும் - இனி நியமிக்கும் தினத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அந்தப் ப்ரேரேபணையானது ஆலோச னைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் தெரிவிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்பட்ட தினமானது, எந்த தினத்தில் அனுமதி கேட்கப்பட்டதோ அந்த தினத்திலிருந்து,—

(a) டிஸ்ட்ரிக்ட்டு அல்லது தாலுக்கா போர்டுகளாயிருந்தால் பூர்ணமாக 10-நாட்களுக்குக் குறையாமலும், 15 பூர்ணதினங்களுக்கு அதிகப்படாமலும்,

(b) ஒரு பஞ்சாயத்தாக யிருந்தால் 6-பூர்ணதினங்களுக்குக் குறையாமலும், 15-பூர்ணதினங்களுக்கு அதிகப்படாமலும்,

இருக்கவேண்டும்.

(3) இத்தப்பிரிவின் கீழ் செய்யப்படும் யாதொரு ப்ரே ரேபணை விஷயமாக நடத்தப்படும் யாதொரு சம்வாதமும் மற்றொரு தினத்திற்கு ஒதுக்கி வைக்கப்படக்கூடாது. அந்த சம்வாதமானது எந்த மணிமுதல் ஆரம்பிக்கப்படுகிறதோ அதற்குப் பிறகு மூன்று மணிநேரம் கழிந்தவுடன் - அதற்கு முந்தியே முடிந்தாவிட்டால் அப்பொழுது கட்டாயம் முடிந்ததாக பாவிக்கப்படும். அம்மாதிரி சம்வாதம் முடிந்த பிறகு அல்லது சமவாதம் முடியாவிட்டால்

மூன்றுமணி நேரங்கழிந்தபிறகு அந்த ப்ரேரேபனேயானது அந்த போர்டினுடைய வோட்டுக்கு விட்டுவிடப்படவேண்டும்.

(4) (a) அந்த போர்டுக்கு இருக்கவேண்டிய மொத்தசங்கியையில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாமலுள்ள அங்கத்தினர்களுடைய உதவியைக்கொண்டு அந்த ப்ரேரேபனேயானது அங்கீகரிக்கப்படுமானால் ஒரு ப்ரெஸிடென்டின்பேரில் அந்த தீர்மானமானது செய்யப்படும் பக்ஷத்தில் அந்த ப்ரெஸிடென்டு, அல்லது ஒரு வைஸ் ப்ரெஸிடென்டின்பேரில் அந்தத்தீர்மானமானது செய்யப்படும்பக்ஷத்தில் அந்த வைஸ் ப்ரெஸிடென்டு, தம்முடைய உத்தியோகத்திலிருந்து உடனே அகன்றுவிட்டதாகக் கருதப்படுவார்.

(b) அந்த ப்ரேரேபனேயானது மேற்சொல்லியபடி அத்தனை அங்கத்தினர்களாலல்லாமல் சாதாரணமாக அங்கீகரிக்கப்பட்டிருந்து-பிறகு ஒரு மாதத்திற்கு குறையாமல் காலம் கழிந்து அதற்கு பிறகு அதே ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டின் பேரில் மேலே (1)-வது உபப்பிரிவின்கீழ் நம்பிக்கையில்லை என்பதாகச் செய்யப்பட்ட மற்றொரு ப்ரேரேபனே போர்டாரால் அங்கீகரிக்கப்படும்பக்ஷத்தில் அவர் உடனே தன்னுடைய உத்தியோகத்திலிருந்து நீங்கிவிட்டதாகக் கருதப்படுவார்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய 11-வது சட்டமாகிய சென்னை லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் புதியதாக தழைக்கப்பட்டது. பழைய சட்டத்தின் 44-வது பிரிவில் ஒரு டில்டிரிக்ட்போர்டு ப்ரெஸிடென்டுக்கு மாத்திரம், ஒரு யூனியன்போர்டு ப்ரெஸிடென்டை நீக்குவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இந்த புதிய பிரிவினால் பஞ்சாயத்தென்று சொல்லப்படும் யூனியன்போர்டிலும் தாலுக்காபோர்டிலும் டில்டிரிக்ட்டு போர்டிலும் ஆகிய இவைகளிலுள்ள ப்ரெஸிடென்டு வைஸ் ப்ரெஸிடென்டு இவர்களை நீக்குவதற்காக முறையே பஞ்சாயத்திற்கும் தாலுக்காபோர்டுக்கும் டில்டிரிக்ட்டு போர்டுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பழைய லோகல்போர்டு சட்டப்பிரகாரம் டில்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டுகள் சிற்சில சமயங்களில் கவர்ன்மென்டால் நியமிக்கப்பட்டும் சிற்சில சமயங்களில் டில்டிரிக்ட்டு போர்டினால் தேர்ந்தெடுக்கப்பட்டும் இருந்தனர். இப்பொழுது ஒவ்வொரு ப்ரெஸிடென்டும் டில்டிரிக்ட்டு போர்டினாலேயே கட்டாயம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதேமாதிரியாக

தாலுக்காபோர்டுகளிலும் பஞ்சாயத்தென்று இனி சொல்லப்படும் யூனியன் போர்டுகளிலும் ஒவ்வொரு ப்ரெஸிடென்டும் முறையே தாலுக்காபோர்டு, பஞ்சாயத்து, இவைகளாலேயேதேர்ந்தெடுக்கப்படவேண்டும் புதிய லோகல் போர்டு சட்டத்தின் 12-வது பிரிவில் ஒவ்வொரு லோகல்போர்டிலும் அதன் ப்ரெஸிடென்டும் வைஸ் ப்ரெஸிடென்டும் அந்த லோகல்போர்டின் அங்கத்தினர்களாலேயே எலெக்ஷன் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றுள்ளது. 1930-ம் வருஷத்திய திருத்த சட்டமானது அமுலுக்கு வருமுன் ஒவ்வொரு யூனியன் போர்டிலும் வைஸ் ப்ரெஸிடென்டு என்பது கிடையாது. இப்பொழுது ஒவ்வொரு யூனியன்போர்டிலும் ஒரு வைஸ் ப்ரெஸிடென்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ப்ரெஸிடென்டு ஊரிலில்லாத காலங்களில் வைஸ் ப்ரெஸிடென்டு அந்த லோகல் போர்டினுடைய மீட்டிங்குகளையும் மற்ற நிர்வாக விஷயங்களையும் நடத்தவேண்டும்.

லோகல்போர்டு ஆக்டின் 47-வது பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டினுமுள்ள அங்கத்தினர்கள் பொதுவாக சிற்சில வகுப்பினருக்கு ஒதுக்கிவைக்கப்படும் ஸ்தானங்கள் தவிர மற்ற எல்லா ஸ்தானங்களுக்கும் பொதுதேர்தல் மூலமாகவே வரவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இதுகாறும் டிஸ்டிரிக்ட்டுபோர்டு அங்கத்தினர்கள் தாலுக்காபோர்டுகளிலிருந்து நியமிக்கப்பட்டும் கவர்ன்மென்டால் நியமனமூலமாக நியமிக்கப்பட்டும் வந்தனர். இனி அவர்கள் யாவரும் தாலுக்காபோர்டு யூனியன். போர்டு, இவைகளில் நடக்கும் தேர்தலைப்போலவே நேராக தேர்தல் (e`ection) மூலமாகவே வரவேண்டுமென்று ஏற்பட்டுள்ளது.

ஆகையால் இப்பொழுது அமுலிலிருக்கும் சட்டப் பிரகாரம் பிரதானமாக ஒவ்வொரு லோகல்போர்டிலும் (லோகல்போர்டு என்பது டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலுக்காபோர்டு, பஞ்சாயத்து இவைகளைக் குறிக்கும்) முக்கால் பங்குக்குக் குறையாமல் அங்கத்தினர்கள் யாவரும் எலெக்ஷன் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாதலால் அவர்களை ஜனப் பிரதிநிதிகளென்றே சொல்லவேண்டும். லோகல் போர்டினுடைய ப்ரெஸிடென்டானவர் லோகல் போர்டின் நிர்வாகத்தை லோகல் போர்டுக்காகவும் லோகல் போர்டினுடைய அங்கத்தினர்களை தேர்ந்தெடுத்தவர்களான பொது ஜனத்திறகாகவும் அவர்கள் சார்பாக லோகல்போர்டு நிர்வாகத்தை நடத்தி வரவேண்டியிருப்பதால் ஜனங்களுடைய மதிப்பும் நம்பிக்கையும் இல்லாமலும் ஜனங்களுடைய இஷ்டத்திற்கும் க்ஷேமத்திற்கும் சௌகரியமான செய்கைகளை செய்யாமலும் இருக்கும் ஒருப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தமது ஸ்தானத்தினின்றும் நீக்கப்படுவதற்காக இப்பிரிவு புதியதாக கோர்க்கப்பட்டிருக்கிறது. இப்பிரிவே பொது ஜனங்களுக்கு பெரியதோர் உரிமையை கொடுப்பதாகும். இனி ஜனங்களுடைய இஷ்டத்திற்கும், க்ஷேமத்திற்கும் விரோதமாக யாதொரு ப்ரெஸிடென்டு நடந்து கொள்ளும் பக்ஷத்தில் அவர் சுலபமாக ஜனங்களுடைய பிரதிநிதிகளாலேயே நீக்கப்படலாம்.

இதுவரையிலும் அமுலில் இருந்த லோகல் போர்டு சட்டத்தில் இம்மாதிரியான யாதொரு உரிமைகளும் ஏற்படுத்தப்படவில்லை. மேல் நாடுகளில் ராஜீய விஷயங்களில் ஜனப் பிரதிநிதித்வத்தினால் அரசாளப்பட்டு வரும் தேசங்களிலுள்ள சட்ட சபைகள், சட்ட நிர்வாக ஸ்தானங்களிலுள்ளவர்களை நீக்குவதற்கும், நமது இந்தியாவிலேயே கவர்ன்மெண்டு ஆப் இந்தியா சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டிருக்கும் சட்ட சபைகள் நிர்வாக ஸ்தானத்திலிருக்கும் ஜனப் பிரதிநிதிகளாகிய மந்திரிகளை நீக்குவதற்கும், ஏற்பட்டுள்ள சட்ட விதிகளை ஒட்டி நமது மாகாணத்தில் ஸ்தல ஸ்தாபன சுய ஆக்ஷியிலும் இம்மாதிரியான அம்சங்கள் இருக்கவேண்டுமென்று இப்பிரிவினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது, ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சியில் முதல் முதலாக இப்பிரிவினால் நிர்வாக அங்கமானது நிரூபண அங்கத்திற்கு உட்படுவது (Responsibility) என்பது நுழைக்கப்பட்டுள்ளது.

ஒரு பஞ்சாயத்து அல்லது டிஸ்டிரிக்ட் போர்ட்டு அல்லது தாலூக்கா இவைகளிலுள்ள ஜனங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய பொது அபீஷ்டத்தை தெரிவிப்பதென்பது கஷ்ட சாத்தியமாதலால் ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு ஒருலோகல்போர்டிலிருந்து நீக்கப்படவேண்டுமென்றால், அந்த லோகல்போர்டின் ஜனப் பிரதிநிதிகளாகிய அங்கத்தினர்கள் யாவரும், இப்பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிற பிரகாரம் தமது இஷ்டத்தை ஒரு தீர்மானமூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ தெரிவிக்கும்பக்ஷத்தில் அந்த ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரஸிடென்டானவர் உடனே தம்முடைய பதவியினின்று நீங்க வேண்டுமென்றுள்ளது. ஆனால், ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் பிரெஸிடென்டு தம்முடைய பதவியிலிருந்து நீங்கினதினாலேயே அவருடைய அங்கத்தினரின் அந்தஸ்தானது போய்விடாது. அவர் பழையபடி அங்கத்தினராகவே இருக்கலாம்.

ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரஸிடென்டு தமது பதவியினின்றும் நீங்கின பிறகு அந்த ஸ்தானத்திற்கு மற்றொருவர் 17-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு பதவியினின்று நீக்கப்படுவதற்காக அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறையானது இப்பிரிவிலேயே சொல்லப்பட்டுள்ளது. முதல் முதலில், 1-வது உபப்பிரிவில், ஒரு லோகல்போர்டின் அங்கத்தினர்களில் எவரொருவராவது லோகல் போர்டின் மற்ற அங்கத்தினர்களின் சார்பாக அந்த லோகல் போர்டின் ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டினிடம் நம்பிக்கையில்லை (அதாவது அவருடைய நிர்வாகமானது ஜனங்களுக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளான மற்ற அங்கத்தினர்களுக்கும் திருப்திகரமாகயில்லை) என்று ஒரு ப்ரேரேபனையை கொண்டு வரலாமென்றுள்ளது. அப்படி கொண்டுவருவதில், அன்றையதினம் எஜெண்டாவில் (Agenda) பதிவிடப்பட்டிருக்கும் காரியங்கள்

அல்லது ஆலோசனைக்கு வரவேண்டிய விஷயங்கள் கவனிக்கப்படுவதற்காக அக்கிராசனம் வகிப்பவர் தொடங்குவதற்கு முன், அந்த ப்ரேரேபனை செய்வதற்கு அந்த போர்டினுடைய உத்திரவை பெறவேண்டும். அப்படி பெறுவதற்கு முன் அவர் தம்முடைய ப்ரேரேபனையைப்பற்றி எழுத்து மூலமாக அந்த மீட்டிங்கில் எவர் அக்கிராசனம் வகித்திருக்கிறாரோ அவரிடம் அதை கொடுக்க வேண்டும். பிறகு, அந்த ப்ரெரேபனையைச் செய்யும் அங்கத்தினருக்கு அந்த ப்ரெரேபனையைச் செய்வதற்கு அந்த லோகல் போர்டார் உத்திரவு கொடுக்கிறார்களா இல்லையா என்பதைப் பற்றி அந்த மீட்டிங்கில் அக்கிராசனம் வகிக்கும் நபரானவர் உடனே தெரிவிக்க வேண்டும். அவர் அந்த மீட்டிங்கினுடைய அபீஷ்டத்தை அறிவதற்காக அந்த ப்ரெரேபனையை உடனே அந்த லோகல் போர்டுக்குப் பிரங்கமாக படித்துக் காண்பித்து அந்த மீட்டிங்கிலுள்ள அங்கத்தினர்கள் உத்திரவு கொடுக்கிறார்களா இல்லையா என்பதை விளக்குவதற்காக, எவரெவர்கள் அந்த ப்ரேரேபனை ஆலோசிக்கப்படுவதற்கு உத்திரவு கொடுக்கப்பட வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்களோ அவர்கள் தங்களுடைய ஸ்தானத்தில் எழுந்து நிற்கும்படி வேண்டிக் கொள்ள வேண்டும். பிறகு அந்த போர்டில் மொத்தம் இருக்கவேண்டிய நபர்களில் மூன்றில் ஒரு பங்குக்கு குறைந்த நபர்கள் எழுந்து நிற்கும்பக்ஷத்தில் அந்த மீட்டிங்கில் அக்கிராசனம் வகிக்கும் நபரானவர் அந்த ப்ரேரேபனையை செய்யும் நபருக்கு போர்டார் உத்திரவு கொடுக்கவில்லையென்று தெரிவிக்க வேண்டும். ஆனால், அந்த போர்டில் மொத்தம் இருக்க வேண்டிய நபர்களில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான நபர்கள் எழுந்து நிற்கும்பக்ஷத்தில், அக்கிராசனம் வகிக்கும் நபரானவர் அந்த ப்ரேரேபனையை செய்யும் நபருக்கு போர்டார் உத்தரவு கொடுத்திருக்கிறார்களென்றும் அந்த ப்ரேரேபனையானது ஆலோசிக்கப்படுவதற்காக ஒரு குறிப்பிட்ட தினத்தில் எடுத்து விசாரிக்கப்படுமென்றும் தெரிவிக்க வேண்டும். அப்படி அவர் நிர்ணயிக்கும் தினமானது, அந்த போர்டு ஒரு டில்டிரிக்ட் போர்டு அல்லது தாலூக்கா போர்டாக இருக்கும்பக்ஷத்தில், என்றையதினம் உத்திரவு கேட்கப்படுகிறதோ அன்று முதல் (அந்த தினமானது கணக்கிடப்படாமல்) 10–முழுநாட்களுக்குக் குறையாமலும் 15–முழுநாட்களுக்கு அதிகப்படாமலுமிருக்க வேண்டும். அந்த போர்டானது ஒரு பஞ்சாயத்தாக இருக்கும்பக்ஷத்தில் என்றையதினம் அந்த ப்ரேரேபனைக்காக உத்திரவு கேட்கப்படுகிறதோ அன்று முதல் (அந்த தினமானது கணக்கிடப்படாமல்) 6–முழுதினங்களுக்குக் குறையாமலும் 15–முழுதினங்களுக்கு அதிகப்படாமலும் இருக்கவேண்டும்.

இந்த பிரிவின்கீழ் செய்யப்படும் ஒரு ப்ரெரேபனையைப்பற்றி சம்வாதம் செய்யப்பட வேண்டிய தேதியில் அந்த சம்வாதமானது கட்டாயம் நடந்தேறவேண்டும். எந்த காரணத்தைக் கொண்டும் அந்த சம்வாதமானது அன்

றையுதினம் எந்த காலம் முதல் சம்வாதம் செய்யப்படுவதற்காக தொடங்கப் படுகிறதோ அது முதல் 3–மணி நேரத்திற்கு அதிகப்படக்கூடாது. அப்படி குறிக்கப்பட்டிருக்கும் கால அளவிற்குள் அந்த சம்வாதமானது முடிந்த பிற காவது அல்லது 3-மணி நேரத்திற்குப் பிறகாவது அந்தப் ப்ரேரேபனேயா னது உடனே தாமசமில்லாமல் அந்த போர்டினுடைய ஓட்டுக்கு விடப்பட வேண்டும்.

அப்படி விடப்பட்ட பிறகு அந்த போர்டுக்கு இருக்க வேண்டிய மொத்த அங்கத்தினர்களில் 3-ல் 2-பாகத்திற்கு குறையாமலுள்ள அங்கத்தினர்களால் அந்த ப்ரேரேபனேயானது அங்கீகரிக்கப்படும்பக்ஷத்தில் அதனால் பாதிக்கப் பட்ட ப்ரேஷிடென்டு அல்லது வைஸ் ப்ரெஷிடென்டானவர் உடனேதம்மு டைய பதவியினின்றும் நீங்க வேண்டும். ஆனால் அந்த ப்ரெரேபனேயானது அவ்வளவு நபர்களாலல்லாமல் அந்த மீட்டிங்கில் பிரசன்னமாயிருக்கும் அங் கத்தினர்களில் பெரியதோர் இலக்கமுள்ள (Majority) அங்கத்தினர்களால் மாத்திரம் நடந்தேறப்படுமாகில், அந்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பிறகு அதே ப்ரஷிடென்டு அல்லது வைஸ் ப்ரஷிடென்டினிடத்தில் அந்த போர்டின் அங்கத்தினர்களுக்கு நம்பிக்கை இல்லையென்று மற்றொரு ப்ரெரே பனேயானது மற்றொரு தாம் 1-வது உபப் பிரிவில் கண்டிருக்கிற பிரகாரம் அந்த போர்டாரால் நடந்தேறப்படும்பக்ஷத்தில் அந்த ப்ரஷிடென்டு அல்லது வைஸ் ப்ரஷிடென்டு உடனே தமது பதவியினின்றும் நீங்க வேண்டும். இம் மாதிரி ஒரு லோகல் போர்டானது தமது ப்ரெஷிடென்டு அல்லது வைஸ் ப்ரெஷிடென்டு இவர்களின்மீது நம்பிக்கை இல்லை என்று ஒரு தீர்மானத் தை செய்தும் அந்த ப்ரஷிடென்டு அல்லது வைஸ் ப்ரஷிடென்டு தமது ஸ்தானத்தினின்றும் நீங்காவிட்டால் அல்லது ராஜிநாமா செய்யாவிட்டால் லோகல் கவர்ன்மெண்டார் 43-வது பிரிவின்கீழ் அவரை நீக்கிவிடலாம். அதற்கும் கீழ்படாமலும் அல்லது தாமாகவே அந்தப் பதவியை ராஜீநாமா செய்யாமலும் இருக்கும்பக்ஷத்தில் அவர் 208-வது பிரிவின்கீழ் ரூபா 1,000-ம் வரையிலும் விதிக்கப்படும் ஒரு அபராதத்திற்கு உள்ளாவார்.

லோகல் போர்டு ஆக்டின் 7-வது பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு டிஸ்டி ரிக்ட் போர்டிலும் 52-அங்கத்தினர்களுக்கு மேற்படாமலும், 24-அங்கத்தினர் களுக்கு குறையாமலும், ஒவ்வொரு தாலுக்கா போர்டிலும் 24-அங்கத்தினர்க ளுக்கு மேற்படாமலும் 12-அங்கத்தினர்களுக்கு குறையாமலும், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் 16-அங்கத்தினர்களுக்கு மேற்படாமலும் 8–அங்கத்தினர்க ளுக்கு குறையாமலும் இருக்கவேண்டுமென்றுள்ளது. இதே சட்டத்தில், 10-வது பிரிவில், லோகல் கவர்ன்மெண்டானது ஒரு அறிக்கையினால் கெஜட்டுகளில் ஒவ்வொரு லோகல் போர்டிலும் இத்தனை அங்கத்தினர்கள் தான் இருக்க வேண்டுமென்று விளம்பரம் செய்ய வேண்டு மென்றுள்ளது. ஆனால் லோகல் கவர்ன்மெண்டினுடைய சம்மதத்திற்கு உட்பட்டு ஒரு லோகல் போர்டானது தம்முடைய அங்கத்தினர்களில் தான்

கில் மூன்றுபாகத்திற்கு குறையாத எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்களால் தமக்கு இருக்கவேண்டிய மொத்த சங்கியை அதிகப்படுத்தலாமென்றும் உள்ளது. ஆகையால், இப்பிரிவில் "இருக்கவேண்டிய" என்னும் பதங்களினால், மேலே 10-வது பிரிவில் சொல்லியிருக்கிறபிரகாரம் லோகல் கவர்ன்மென்டார் அந்த லோகல்போர்டுக்கு மேலே 7-வது பிரிவில் உள்ள அம்சங்களுக்கு உட்பட்டு எத்தனை அங்கத்தினர்கள் இருக்கவேண்டுமென்று விளம்பரம் செய்கிறார்களோ அதை குறிப்பதாகும். உதாரணமாக, ஒரு டிஸ்டிரிக்டு போர்டின் சங்கியையானது 52-க்கு அதிகப்படாமல் இருக்கவேண்டுமென்றிருக்கையில், கவர்ன்மென்டார் அந்த டிஸ்டிரிக்டு போர்டுக்கு 40-பேர்கள் இருந்தாலே போதுமானதென்று உத்திரவிடலாம். இந்த சங்கியையானது அந்த டிஸ்டிரிக்டு போர்டினால் அதிகப்படுத்தப்படாமலிருக்கும் வரையிலும் இதேதான் இப்பிரிவின்கீழ் கணக்கிடவேண்டிய காரியங்களுக்காக சங்கியையாகக் கொள்ளப்படவேண்டும். ஆகையால், இப்பிரிவின்கீழ் ஒரு பிரரேபணையானது ஆலோசிக்கப்படுவதற்காக உத்திரவு கேட்கப்படும் காலத்தில் அந்த போர்டுக்கு லோகல் கவர்ன்மென்டினால் ஏற்பட்டிருக்கும் மொத்த சங்கியையில் 3-ல் ஒரு பங்காவது சம்மதித்தால்தான் அதன் விஷயமாக பிறகு விஸ்தாரமாக கவனிப்பதற்கு சரியான காரணம் இருப்பதாக கொள்ளப்படலாம். ஒரு போர்டில் ஒரு ப்ரெஸிடென்டுக்கு வேண்டாத சொற்ப அங்கத்தினர்கள் மாத்திரம் தங்களுடைய குரோதத்தை காட்டுவதற்காக இம்மாதிரியான ஒரு பிரரேபணையை செய்யக்கூடாதென்று சட்ட சபையின் திண்ணமாகும். குறைந்தபக்ஷம் ஒரு போர்டிலிருக்கவேண்டிய நபர்களில் மூன்றில் ஒருபாகத்திற்குக் குறையாமலுள்ள நபர்களால் உத்திரவு கொடுக்கப்பட்டு மூன்றில் இரண்டு பாகத்திற்கு குறையாமலுள்ள நபர்களால் அந்த பிரரேபணை அங்கீகரிக்கப்படுமானால் ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டினுடைய நடத்தையானது அடியோடே போர்டின் அங்கத்தினர்களுக்கு சம்மதப்படவில்லை என்று ஸ்பஷ்டமாக எடுபடும்.

ஒரு மீட்டிங் நடப்பதற்கு அல்லது ஆரம்பமாவதற்கு முன்னேயே நம்பிக்கை குறைவு பிரரேபணையானது அந்த மீட்டிங்கினுடைய அக்கிராசனருடைய பதியினிடத்தில் கொடுக்கப்படவேண்டும். இதனால், ஒரு மீட்டிங்கு பாதி நடந்துகொண்டிருக்கையில் ஒரு நம்பிக்கைக் குறைவு பிரரேபணையை செய்வதினால் உண்டாகக்கூடிய கலவரங்களை தடுப்பதற்காக இவ்வம்சமானது ஏற்படுத்தப்பட்டதாக விளங்கும். ஒவ்வொரு மீட்டிங்கினுடைய ஒழுங்கு அல்லது நடவடிக்கைமுறையை அனுசரித்து இந்த அம்சமானது கோர்க்கப்பட்டுள்ளது. ஆனால், ஒரு நம்பிக்கை குறைவு பிரரேபணையை செய்யும் ஒவ்வொரு நபரும் கூடியவரையிலும் ஜாக்கிரதையாக இருந்து மீட்டிங்கு தொடங்குவதற்குமுன்தம்முடைய பிரரேபணையைப்பற்றிதெரிவிக்கவேண்டுவது அவசியமென்றிருந்தபோதிலும் அந்த மீட்டிங்கின் அக்கிராசனருடைய

யானவர் திடீரென்று அந்த அங்கத்தினருக்கு வசதி கொடுக்கவொட்டா மல் இருக்கவேண்டுமென்று மீட்டிங்கினுடைய விஷயங்களை உடனே ஆலோ சிக்க தொடங்கிவிட்டு அந்த அங்கத்தினர் இனி அந்த பிரரேபணையை செய்வதற்கில்லை என்று வாய்ப்பூட்டு போட்டாற்போல் செய்வதற்கில்லை. இருவர்களும் ஒருவர்க் கொருவருடைய சந்தர்ப்பங்களை மதித்து தைரிய மாகவும் நேராகவும் செய்யப்படும் பிரரேபணையை செய்தும் எதிர்க்கவும் வேண்டும்.

ஒரு நம்பிக்கை குறைவு பிரரேபணை செய்யப்படுவதற்கு ஒரு லோகல் போர்டானது உத்திரவு கொடுக்குமானால் அந்த பிரரேபணையின்பேரில் சம்வாதம் செய்யப்படுவதற்கு ஒரு தினத்தை, அக்கிராசனம் வகிக்கும் நப ரானவர் அன்றைய தினமே நிர்ணயிக்கவேண்டும். இந்த பிரிவின்கீழ் அவ ருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சுயேச்சையானது அவர் நியமிக்கும் தினத் தை மாத்திரம் பற்றினதேயொழிய அவர் அதை நியமிப்பதற்குள்ள கடமை யைப்பற்றினதாகாது. அவர் டில்டிரிக்டு அல்லது தாலுக்கா போர்டா யிருந்தால் குறைந்தபக்ஷம் 10-நாட்களும் பஞ்சாயத்தாயிருந்தால் குறைந்த பக்ஷம் 6-நாட்களும் கொடுக்கவேண்டுமென்பதின் காரணம் என்னவென் றால், அந்த லோகல்போர்டின் அங்கத்தினர்கள் அந்த பிரரேபணையைப் பற்றித் தீர்மானமாக விசாரித்து ஆலோசணைசெய்து பிறகுதான் தங்களுடைய தீர்மானத்தை அறிவிக்கவேண்டுமென்பது. கிரமமாக நியமிக்கப்பட்டிருக் கும் ஒரு ப்ரெஸிடெண்டானவர், அங்கத்தினர்களுடைய அசட்டையினா லாவது அல்லது அலக்ஷியத்தினாலாவது திடீரென்று தமது பதவியினின்றும் நீக்கப்படுவதற்கில்லையென்பதாம்.

ஒரு நம்பிக்கை குறைவு பிரரேபணையைப்பற்றிய சம்வாதமானது, அனு வசியமாகவும் வியர்த்தமாகவும் நீடிக்கக்கூடாது என்பதற்காக 3-மணி நேர காலவகாசமே ஒரு அளவாக குறிப்பிட்டுள்ளது. ஒரு சம்வாதமானது 3-மணி நேரத்திற்குள் முடியாவிட்டால் அதற்குபிறகு உடனே ஓட்டுகள் எடுக்கப் படவேண்டும். ஓட்டுகள் எடுக்கப்படாமலும் சம்வாதமானது முடியாமலும் ஒரு மீட்டிங்கை ஒதுக்கிவைப்பதற்கில்லை. ஆகையால், சம்வாதத்தில் ஒவ் வொரு அங்கத்தினரும் அளவிட்டே பேசவேண்டும். அக்ராசனரும் அந்த சம்வாதத்திற்கு அனுகூலமானவர்களுக்கும் பிரதிகூலமானவர்களுக்கும் பக்ஷபாதமில்லாமல் தங்களுடைய மனோபீஷ்டத்தை தெரிவிக்கும்படி மாற்றி மாற்றி வசதி கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால் அதைப் பற்றி ஒரு அங்கத்தினர் தம்முடைய ஆக்ஷேபணையை எழுத்துமூலமாக தெரி விக்கலாம்.

முதல் சம்வாதத்திலேயே ஒரு போர்டுக்கு இருக்கவேண்டிய சங்கியை யில் 3-ல் 2-பாகமுள்ள நபர்களால் ஒரு தீர்மானமானது நடந்தேறுபக்ஷத் தில் ப்ரெஸிடெண்டு அல்லது வைஸ் ப்ரெஸிடெண்டு உடனே நீக்கப்படுவது

உசிதமன்றென்று தோன்றினபடியால் இப்பிரிவின்கீழ் ஒருமாதம் கழித்து இதேமாதிரியான ஒரு பிரரேபணை அதே ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டின்பேரில் நடத்தேறினால்தான் அந்த ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தமது பதவியிலிருந்து நீக்கப்படவேண்டுமென்று ஜாக்கிரதைக்காக ஏற்படுத்தப்பட்டது.

லோகல் போர்டுகளை கலைத்து விடுவதும் மறுபடி அமைப்பதும்.

45. (1) லோகல் கவர்ன்மென்டினுடைய அபிப்பிராயத்தில் ஒரு லோகல்போர்டானது சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள கடமைகளை செய்ய தகுதியற்றதாக இருக்கிறதென்றாவது அல்லது அந்தக் கடமைகளைச் செய்வதில் அடிக்கடி பிடிவாதமாகத் தவறிக்கொண்டிருக்கிறதென்றாவது அல்லது தங்களுடைய அதிகாரங்களை மீறிப்போகிறதென்றாவது அல்லது துற்பிரயோகம் செய்கிறதாகவாவது இருக்கும்பட்சத்தில், அவர்கள் விதிகளினால் ஏற்பட்டிருக்கிற பிறகாரம் ஒரு அறிக்கையை பிரசுரம் செய்து அதனால் அந்தபோர்டு கலைவுபட்டு மறுபடியும் உடனே ஏற்படுத்தப்படும்படி உத்திரவிடலாம். அந்த அறிக்கையானது எந்தக் காலத்திற்குள் அந்த போர்டு மறுபடியும் ஏற்படுத்தப்பட வேண்டுமோ அந்தக்காலத்தைக் குறிப்பிடவேண்டும்.

ஆனால் கலைவுபட்ட ஒரு லோகல்போர்டுக்கு நடக்கவேண்டிய எலெக்ஷன்கள் முடிவுபெறுவதற்காக லோகல் கவர்ன்மென்டு தங்களுடைய யுக்தானுசாரம் அடிக்கடி அந்த போர்டு மறுபடியும் அமைக்கப்படுவதற்காக இந்த உபப் பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட கால அளவை அதிகப்படுத்தலாம்.

(1-A) (1) வது உபப்பிரிவின்கீழ் ஒரு அறிக்கையை பிரசுரப்படுத்துவதற்குமுன் லோகல் கவர்ன்மென்டு சம்பந்தப்பட்ட லோகல்போர்டுக்கும், அந்த லோகல்போர்டு ஒரு தாலூக்காபோர்டாயிருந்தால் - டிஸ்ட்ரிக்டு போர்டுக்கும், அந்த லோகல்போர்டு ஒரு பஞ்சாயத்தாயிருந்தால் - டிஸ்ட்ரிக்டுபோர்டு தாலூக்காபோர்டு ஆகிய இவை இரண்டிற்கும், எந்தக் காரணங்களைக் கொண்டு தாங்கள் அம்மாதிரி செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து அந்த போர்டு அல்லது போர்டுகளுக்கு அந்த பிரேரேபணைக்கு விரோதமாகத் தங்களுக்குள்ள சமாதானங்களைத் தெரிவிக்க ஒரு நியாயமான தவணைக்கொடுத்து அந்த போர்டு அல்லது போர்டுகள் ஏதாவது சமாதா

னங்கள் ஆக்ஷேபனைகள் இவைகளைத் தெரிவிக்கும்பக்ஷத்தில் அவைகளைக் கவனிக்கவும் வேண்டும்.

(2) இப்படிப்பட்ட யாதொரு அறிக்கை பிரசுரிக்கப்படுவதன்மேல் மேடி ப்ரெஸிடென்டு, வைஸ் ப்ரெஸிடென்டு இவர்கள் உள்பட லோகல்போர்டைச்சேர்ந்த அங்கத்தினர்கள் எல்லோரும் அப்படிப்பட்ட தங்களுடைய ஸ்தானங்களை உடனே காலிசெய்துவிட்டதாகக் கருதப்படவேண்டும்; மேலும், இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி புதியதாய் எலெக்ஷன்கள் நடத்தப்படவேண்டும்.

(2-A.) அப்படி திரும்பவும் அமைக்கப்பட்ட லோகல் போர்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுடைய உத்தியோகத்தின் கால அளவானது, அல்லது தற்செயலாக நேரும் காலி ஸ்தானங்களை அடைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுடைய உத்தியோகத்தின் கால அளவானது—அந்த போர்டு எதாவது ஒரு வருஷத்தில் நவம்பர்மீ முதல்தேதியில் ஏற்படுத்தப்பட்டதானால் அதுமுதல் மூன்று வருஷங்கள் ஆனபிறகும், அல்லது மற்ற சந்தர்ப்பங்களில் எந்த தேதியில் அந்த போர்டு மறுபடியும் ஏற்படுத்தப்பட்டதோ, அதற்கடுத்தாப்போல் முந்தின நவம்பர் மாதத்திய முதல்தேதி முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகும் முடிவதாகும்.

(3) (1)-வது உபப்பிரிவின் பிரகாரம் உத்திரவு செய்யப்பட்டபடி யாதொரு லோகல் போர்டைக் கலைத்துவிடுவதற்கும் மறுபடியும் அமைப்பதற்கும் இடையிலுள்ளதோர் காலத்தில், லோகல் போர்டுக்கும், அதன் ப்ரெஸிடென்டுக்கும் உள்ள அதிகாரங்கள் அலுவல்கள் ஆகிய இவைகள் எல்லாவற்றையுமாவது அல்லது இவைகளில் எதையாவது கூடுமானமட்டிலும் லோகல் கவர்ன்மென்டாரால் நிச்சயிக்கப்படக்கூடிய அளவுவரையிலும் இதுவிஷயத்தில் லோகல் கவர்ன்மென்டால் நியமிக்கப்படும் நபர் அல்லது நபர்கள் செலுத்தலாம். அல்லது செய்து முடிக்கலாம்; மேலும் டிஸ்ட்ரிக்ட் கலெக்டராகவோ செஷனஸ் டிவிஷனல் ஆபீஸராகவோ இராத அப்படிப்பட்ட யாதொரு நபர் - பிரதேச கவர்ன்மென்டார் கட்டளையிடுகிற பட்சத்திலே, தாம் செய்யும் வேலைக்காக லோகல் பண்டிலிருந்து சம்பளத்தொகை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது லோகல் கவர்ன்மெண்டார்—லோகல் போர்டுகளை கலைப்பதைப்பற்றியும்மறுபடியும்அமைப்பதைப்பற்றியும் கூறுகிறது லோகல் கவர்ன்மென்டார் மேலே 38-முதல் 44-வரையிலுமுள்ள பிரிவுகளில் உள்ள பிரகாரம் செய்யவேண்டிய நடவடிக்கைகள் யாவையும் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகும் ஒரு லோகல் போர்டானது தன்னுடைய கடமைகளைச் சரிவரசெய்யாமலும் அல்லது தமது அதிகாரத்தை துர்ப்பிரயோகம் செய்துகொண்டும்இருக்கும் பக்ஷத்தில் அந்த போர்டை அடியோடே கலைத்து விடலாமென்றுள்ளது. ஆனால், அந்த போர்டானது திரும்பவும் அமைக்கப்படுவதற்கு வேண்டிய உத்திரவுகளை உடனே செய்யவேண்டும். ஆனால், அப்படி கலைக்குமுன் லோகல் கவர்ன்மென்டார், அந்த லோகல் போர்டு, ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டாக இருந்தால் அதற்கும் அந்த போர்டு ஒரு தாலூக்கா போர்டு, அல்லது பஞ்சாயத்தாக இருந்தால் இவை விஷயமாக முறையே அந்த தாலூக்கா போர்டுக்கும் பஞ்சாயத்துக்கும் தவிர டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கும் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்து அவை ஏதாவது சமாதானம் தெரிவிப்பதாக இருந்தால் அதையும் கவனிக்க வேண்டும். அந்த லோகல் போர்டானது திரும்பவும் அமைக்கப்படுவதில், அதன் எல்லா வ்தானங்களுக்கும் அங்கத்தினர்கள் எலெக்ஷன் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

புதிதாக அமைக்கப்பட்ட லோகல் போர்டு அங்கத்தினர்களின் உத்தியோக கால அளவானது, அவர்கள் யாதொரு வருஷத்தில் நவம்பர்மீ முதல் தேதியில் உத்தியோகம் வகிப்பார்களாயின் அந்த தேதி முதல் மூன்று வருஷங்கள் வரையிலும், இல்லாவிட்டால் எந்த மாதம் அந்த போர்டானது திரும்பவும் அமைக்கப்படுகிறதோ அதற்கு முந்தின நவம்பர் மீ முதல் தேதி முதல் மூன்று வருஷங்கள் வரையிலும் நீடிப்பதாகும்.

ஒரு லோகல் போர்டானது கலைக்கப்பட்ட பிறகு மறுபடியும் அமைக்கப்படும் வரையிலுமுள்ள நாட்களில் அந்த லோகல் போர்டினுடைய நிர்வாக காரியங்களை செய்யும்படி லோகல் கவர்ன்மென்டார் ஒரு நபரை நியமிக்கலாம். அந்த நபர் ஒரு டிஸ்டிரிக்டு கலெக்டர் அல்லது ரெவின்யூ டிவிஷனல் ஆபீசராக இருக்கும் பக்ஷத்தில் அவர்கள் அதற்காக தனிமையாக சம்பளம் பெறுவதற்கில்லை. ஆனால், லோகல் கவர்ன்மென்டார் வேறு ஒருவரை நியமிக்கும் பக்ஷத்தில் அவருக்கு லோகல் பண்டிலிருந்து சம்பளம் சேரும்படி உத்திரவிடலாம்.

இந்தப் பிரிவின் கீழ் யாதொரு நடவடிக்கையை எடுத்துக் கொள்வதற்கு முன் லோகல் கவர்ன்மென்டார் கூடிய வரையிலும் ஒரு லோகல் போர்டை கலைக்காமலிருக்கும் வண்ணம் அவ்வப்பொழுது 38,41,43, இந்த பிரிவுகளின்கீழ் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்ட பிறகு அவைகளால் அடியோடே பயன் ஏற்பட வில்லை என்று நிரமாக தெரிந்து கொள்ளவேண்

டும். ஒரு லோகல் போர்டு கலைக்கப்பட்டு மறுபடியும் அமைக்கப்படவேண்டுமென்றால், அந்த லோகல் போர்டுக்கும், லோகல்பண்டு நிதிக்கும், லோகல் போர்டு அங்கத்தினர்களுக்கும் வீண் செலவு ஏற்படுமாதலால் லோகல் கவர்ன்மெண்டார் இவ்வதிகாரத்தை நிதானமாகவும் கடைசி பக்ஷமாகவுந் தான் செய்ய வேண்டும்.

மூன்று காரணங்களைக் கொண்டுதான் ஒரு லோகல் போர்டு கலைக்கப்படலாம். (1) ஒரு லோகல் போர்டானது தங்களுடைய கடமைகளைச் செலுத்த சாமர்த்தியமற்றதாக யிருத்தல். (2) ஒரு லோகல் போர்டானது தங்களுடைய கடமைகளை பூர்த்தி செய்வதில் வேண்டுமென்று தடைசெய்தல். (3) தங்களுடைய அதிகாரங்களை துர்விநியோகப்படுத்துதல். இவைகளைத் தவிர வேறு யாதொரு காரணத்தைக் கொண்டும் லோகல் கவர்ன்மெண்டானது ஒரு லோகல் போர்டை கலைப்பதற்கில்லை. ஒரு லோகல் போர்டானது இச்சட்டத்திலுள்ள வரையறைகளுக்குள் செய்யும் யாதொரு செய்கையானது லோகல் கவர்ன்மெண்டினுடைய அபிப்பிராயத்திற்கு அல்லது கொள்கைகளுக்கு மாறுக இருந்த போதிலும் அதற்காக அந்த ஒரு லோகல் போர்டானது கலைக்கப்படக் கூடாது.

ஒரு லோகல் போர்டு கலைக்கப்பட்ட பிறகு மறுபடியும் 6-மாதங்களுக்குள் அமைக்கப்பட வேண்டும். (240-வது பிரிவைப் பார்க்க.)

பஞ்சாயத்துகளை நீக்கிவைப்பது.

45-A. (1) மேலே 45-வது பிரிவு (1)-வது உபப்பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா காரணங்களைக் கொண்டாவது அல்லது அவைகளில் யாதொரு காரணத்தைக்கொண்டாவது - லோகல் கவர்ன்மெண்டு விதிகளினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பிரகாரம் ஒரு அறிக்கையை பிரசுரம் செய்து அதனால் ஒரு பஞ்சாயத்தை கலைத்துவிட்டு மறுபடியும் அதைக் கூட்டுவதற்குப்பதிலாக ஒரு வருஷத்திற்கு மேற்படாமல் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் அதை நீக்கிவைக்கலாம்,

ஆனால் லோகல் கவர்ன்மெண்டு அந்த பஞ்சாயத்தினுடைய ஒரு பாகத்தைமாத்திரம் நீக்கிவைக்கக்கூடாது.

(2) (1)-வது உபப்பிரிவின்கீழ் ஒரு அறிக்கையை பிரசுரப்படுத்துவதற்குமுன் லோகல் கவர்ன்மெண்டு 45-வது பிரிவு (1-A)-வது உபப்பிரிவில் சொல்லியிருக்கும் நடவடிக்கை முறையை அனுசரிக்க வேண்டும்.

(3) ஒரு பஞ்சாயத்து நீக்கிவைக்கப்பட்ட விஷயமாக அந்த அறிக்கையில் யாதொரு வேறே தேதி அல்லது காலம்குறிக்கப்

பட்டிராவிட்டால் - அது அந்த அறிக்கை என்றையதினம் பிரசுரப் படுத்தப்படுகிறதோ அன்று பகல் 12-மணி முதல் அமுலுக்கு வர வேண்டும். அதன் மேல் அதன் ப்ரெஸிடென்டு வைஸ் ப்ரெஸிடென்டு இவர்கள் உள்பட எல்லா பஞ்சாயத்து அங்கத்தினர்களும் தங்கள் உத்தியோகத்திலிருந்து நீங்கிவிட்டதாக கருதப்படுவார்கள்.

(4) (1)-வது உபப்பிரிவின்கீழ் அறிக்கையாகும், நீக்கிவைக்கப்படும் கால அளவானது முடியும்போதாவது அல்லது அதற்கு முன்பாகவாவது லோகல் கவர்ன்மெண்டு விதிகளினுல் நிர்ணயிக்கப் பட்டிருக்கிற பிரகாரம்-ஒரு அறிக்கையை பிரசுரம் செய்து அதில் கண் டிருக்கும் காரணங்களுக்காக அந்தப் பஞ்சாயத்து மறுபடியும் கூட் டப்படுவதை இன்னும் 6-மாத காலம் வரையிலும் ஒதுக்கிவைக்கலாம். அல்லது இந்த ஆக்டில் என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும், அவை களுக்கு நிமித்தியமில்லாமல் இந்த ஆக்டினுடைய பிரயோகத்தின் கீழ் அந்த பஞ்சாயத்தினுடைய விஸ்தீரணமானது வரவொட்டாமல் அதை நீக்கிவைக்கலாம். அல்லது 5-வது பிரிவின்கீழ் அந்த விஸ்தீரண மானது ஒரு கிராமமென்று ஸ்தாபிக்கப்பட்டதான அறிக்கையை ரத்து செய்துவிடலாம்.

(5) இந்தப்பிரிவின் (1) அல்லது (4)-வது உபப்பிரிவுக ளின் கீழ் ஒரு பஞ்சாயத்து நீக்கிவைக்கப்பட்டிருக்கும் காலத்தில் அந்த பஞ்சாயத்துக்கும் அதனுடைய ப்ரெஸிடென்டுக்கு முள்ள எல்லா அதி காரங்களையும், கடமைகளையும் அல்லது அவைகளில் யாதொன்றையும் நடத்தவோ அல்லது முடித்துவைக்கவோ ஆகிய இவைகளைப்பற்றின வரையிலும் 45-வது பிரிவு 3-வது உபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் கூடுமானவரையிலும் பிரயோகிக்கப்பட வேண்டும்.

(6) மேலே (1) அல்லது (4)-வது உபப் பிரிவுகளின் கீழ் அறிவிக்கப்பட்டிருக்கும் கால அளவிற்கு முன்பாகவே லோகல் கவர்ன்மெண்டு மறுபடியும் அந்த பஞ்சாயத்தைக் கூட்டிவைக்கலாம்.

(7) அப்படி திரும்பவும் ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுடைய கால அளவானது, அல் லது தற்செயலாக நிகழும் காலிஸ்தானங்களை பூர்த்தி செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுடையகால அளவானது-அந்த பஞ்சாயத்து யாதொரு வருஷத்தில் நவம்பர் மாதம் முதல் தேதியில் திரும்பவும் அமைக்கப்பட்டதானுல், அது முதல் மூன்று வருஷங்க

ளான பிறகும், மற்ற சந்தர்ப்பங்களில் அந்த பஞ்சாயத்து எந்தத்தேதியில் திரும்பவும் அமைக்கப் பட்டதோ - அதற்கு அடுத்தாப்போல் முந்தின நவம்பர்மாதம் முதல் மூன்று வருஷங்களான பிறகும் முடிவதாகும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரிவானது பஞ்சாயத்துக்களே மாத்திரம் பற்றினதாகும். 45-வது பிரிவின்கீழ் ஒரு லோகல் போர்டானது கலைக்கப்படுமானால் உடனே அந்த போர்டானது அமைக்கப் படுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆனால், இந்தப் பிரிவின்கீழ் பஞ்சாயத்துகள் விஷயமாக லோகல் கவர்ன்மெண்டார் 45-வது பிரிவிலுள்ள முறைகளைவிட அதிக வீரியமுள்ள முறைகளை எடுத்துக்கொள்ளுவதற்கு அதிகாரம் ஏற்பட்டிருக்கிறது. லோகல் கவர்ன்மெண்டார் ஒரு பஞ்சாயத்தை அடியோடே எடுத்துவிட்டு ஒரு உத்தியோகஸ்தரை நியமித்து அவரால் அப்பஞ்சாயத்தினுடைய நிர்வாகமானது பார்த்து வரப்படலாமென்று கூறப்பட்டுள்ள. ஒரு பஞ்சாயத்தை நீக்குவதற்குமுன் லோகல் கவர்ன்மெண்டார் அந்த பஞ்சாயத்தினிடமிருந்து சமாதானங்களை பெற்று அவைகளைக் கவனிக்க வேண்டும். லோகல் கவர்ன்மெண்டார் ஒன்றரை வருஷங்கள் வரையிலும் ஒரு பஞ்சாயத்தானது தன்னுடைய விஸ்தீரணத்தில் அதிகாரம் செலுத்தவொட்டாமல் செய்யலாம். அதன் பிறகு அவர்கள் அந்த பஞ்சாயத்தை அடியோடே எடுத்துவிடவாவது வேண்டும்; அல்லது மறுபடியும் கூட்டவாவது வேண்டும்; அல்லது, மறுபடியும் அமைக்கவாவது வேண்டும். ஒன்றரை வருஷங்களுக்கு மேலாக லோகல் கவர்ன்மெண்டார் பஞ்சாயத்தை ஒதுக்கி வைப்பதற்கில்லை.

45-வது பிரிவில், மற்ற லோகல் போர்டுகளைக் கலைப்பதைப்பற்றி என்னென்ன அம்சங்கள் சொல்லப்பட்டுள்ளனவோ அதே அம்சங்கள் பஞ்சாயத்துகளின் விஷயமாகவும் பிரயோகிக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துகளைக் கலைப்பதிலும், மற்ற லோகல் போர்டுகளைக் கலைப்பதிலும், வித்தியாசமென்னவென்றால், பஞ்சாயத்துகளை வெகு நாட்களுக்குப் பிறகு கூட்டும் படிக்குச் செய்யலாம். மற்ற லோகல் போர்டுகள் கலைக்கப்பட்டவுடனேயே கூட்டப்பட வேண்டும். பஞ்சாயத்துகள் இம்மாதிரியாக ஒதுக்கிவைக்கப்பட வேண்டிய காரணங்கள் எப்படி ஏற்படலாமென்றால், யாதொரு கிராமத்தில் கஷ்டிபேதத்தினால், பஞ்சாயத்தானது இரண்டுபட்டு அல்லது பல விதமாகப் பிரிவடைந்து கிராமத்திற்காக யாதொரு நன்மை செய்யாமலும், கிராம முன்னேற்றத்திற்கு இடைஞ்சலாக வீண் சச்சரவுகள் ஏற்பட்டு இருக்கும் சந்தர்ப்பங்களே யொட்டினவாகும். ஆகையால், இனி கிராம

பஞ்சாயத்துகள் கூடியவரையிலும் சண்டை சச்சரவுகள் இல்லாமலும் கசடில்லாமலும் ஏகமனதாக தம்முடைய கிராமத்தை யாவர்க்கும் பயன் படும்படியாக பரிபாலித்து வருவது கடமையாகும். இப்பிரிவு விஷயமாக 240-வது பிரிவானது பிரயோகப்படுத்துவதறில்லை.

45-B. 45-வது பிரிவின் கீழ் ஒரு லோகல் போர்டானது கலைக்கப்பட்டபோது, அல்லது 45-A பிரிவின் கீழ் ஒரு பஞ்சாயத்தானது நீக்கிவைக்கப்பட்ட போது, லோகல் கவர்ன்மென்டானது அந்த போர்டு அல்லது பஞ்சாயத்து மறுபடியும் அமைக்கப்படும் வரையிலும் அவைகலைக்கப் பட்ட அல்லது நீக்கிவைக்கப்பட்ட காலத்தில் அவைகளுக்குச்சேர்ந்திருந்த எல்லா சொத்துக் களையும் பெற்று அந்த போர்டு அல்லது பஞ்சாயத்துக்குள்ள எல்லா கடமைகளுக்கும் உட்படவேண்டும். அந்த போர்டு அல்லது பஞ்சா யத்தானது திரும்பவும் அமைக்கப்பட்ட பிறகு தாம் அப்படி அமைக் கப்பட்ட தேதியில் அந்த போர்டு அல்லது பஞ்சாயத்து அடைய வேண்டியதாகவுள்ள எல்லா சொத்துக்களையுமடைந்து தாம் உட்பட வேண்டிய எல்லா கடமைகளுக்கும் உட்பட்டிருக்கவேண்டும்.

கலைத்துவிடப்பட்ட லோகல் போர்டினுடையஆஸ்திகளும், பொறுப்புகளும் இன்னொருக்கு சேரவேண்டுமென்பது.

குறிப்புகள்.

இந்த பிரிவானது 1920–ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவானது 45, 45-A, இப்பிரிவுகளின்கீழ் கலைக்கப்படும் லோகல் போர்டுகளினுடைய சொத்துக்கள் அந்த போர்டுகள் மறுபடியும் அமைக்கப்படும் வரையிலும், லோகல் கவர்ன்மெண்டாருடைய பாதுகாப்பில் இருக்கவேண்டுமென்றுள் ளது.

46. (1) டிஸ்ட்ரிக்ட் கலெக்டராவது லோகல் கவர்ன்மென் டாரால் நியமிக்கப்பட்ட நபராவது இந்த ஆக்டின்படி யாதொரு லோகல் போர்டின் சார் பிலாகிலும் அது கவறுவதன் மேலாகிலும் சட்டப்பிரகாரம் நடவடிக்கை நடத்தும்பொழுது, அந்தக் காரியத்துக்கு அவசியமாயிருக்கும் ஒப் பந்தங்கள் செய்ய அவருக்கு எல்லா அதிகாரங் களும் உண்டு ; மேலும், எந்த லோகல் போர் டாரின் அல்லது அதன் உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களின் அதிகாரங்களை அவர் செலுத்துகிறபோ-

லோகல் போர்டுக்காகவாவது அது தவறுவதன் மேலாவது பிரவர்த்திக்கிற உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்களும் லோகல் பண்டின் பொறுப்பும்.

அந்த லோகல் போர்டாருக்காவது அல்லது உத்தியோகஸ்தர்களுக்காவது அல்லது ஊழியக்காரர்களுக்காவது இந்த ஆக்டின்படி என்ன பாதுகாப்பு உண்டோ - அதே பாதுகாப்பைப் பெற அவரும் பாத்தியதையுடையவராவர்; அல்லாமலும், அப்படிப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதனால் சேதம் அடையும் யாதொரு நபர் - மெலோகல் போர்டாராலாவது அல்லது அதன் உத்தியோகஸ்தர்களாலாவது, ஊழியக்காரர்களாலாவது அந்த நடவடிக்கை நடத்தப்பட்டிருந்தால் எவ்வளவு பிரதிபலன் பெறக்கூடுமோ-அவ்வளவுவரையிலும் லோகல் பண்டிலிருந்து வசூலிக்கதக்கவராவர்.

(2) 42-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்துகிற யாதொரு டிஸ்ட்ரிக்ட் அல்லது தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டாவது அல்லது அவரால் நியமிக்கப்படும் யாதொரு நபராவது - (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட அதிகாரங்களை செலுத்தவும் அதிற்கண்ட பாதுகாப்பு பெறவேண்டுமென்று கேட்கவும் அர்ஹராவார்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, 39-வது பிரிவின்கீழ் ஒரு டிஸ்டிரிக்ட்டு கலெக்டரானவர் அல்லது 45-வது பிரிவின்கீழ் நியமிக்கப்படும் யாதொரு நபரானவர் தம்முடைய கடமை அல்லது உத்தியோகத்தின் முறைமையில் செய்யும் செய்கைகள் விஷயமாக லோகல் போர்டுகளுக்குள்ள அதிகாரமும், பாதுகாப்பும் பெறத் தக்கவராவார்கள் என்று கூறுகிறது.

4-வது அத்தியாயம்.

லோகல் போர்டு அங்கத்தினர்களை தெரிந்தெடுப்பது.

இந்த அத்தியாயத்தில், லோகல் போர்டுகளுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதைப்பற்றியும், அவர்களுடைய யோக்கியதாம்சங்களைப்பற்றியும், லோகல் போர்டுகளின் அங்கத்தினர்கள் யோக்கியதைக்குறைவினால் தம்முடைய ஸ்தானங்களிலிருந்து நீங்குவதைப்பற்றியும் கூறப்பட்டுள்ளது. இவ்வத்தியாயத்தில் 47-வது பிரிவு முதல் 59-வது பிரிவுவரையிலும் உள்ளன. இவ்வத்தியாயத்தில் லோகல்போர்டு அங்கத்தினர்கள், லோகல்போர்டில் நடக்கும் எலெக்ஷன்களில் ஓட்டுக்கொடுப்பவர்கள், இவர்களின் உரிமைகள், பாத்தியதைகள் இவைகளைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதால் இவ்வத்தியாயமானது மிகவும் முக்கியமானதோர் அத்தியாயமாகும் "எலெக்ஷன்" என்பது நம் இந்தியாவில் முதற்சங்க காலத்திற்கு முன்னமேயும், (அதாவது சுமார் 2500-வருஷங்களுக்குமுன்) வழங்கிவந்திருந்தபோதிலும் இடையில்

பல மாறுதல்களினால் கிராமாந்தரங்களில் சுய ஆட்சி முறைமையானது சீர் அழிந்து போயிருந்தது 1884-ம் வருஷத்தில் முதல் முதலாக லோகல் போர்டுகள் ஏற்படுத்தப்பட்டன. பிறகு 1890, 1900, 1920, 1922, 1925-இவ் வருஷங்களில் செய்யப்பட்ட அநேக திருத்தங்களும், மாறுதல்களும் ஏற்பட்டு கடைசியாக 1930-ம் வருஷத்திய திருத்தச்சட்டத்தினால் ஸ்தலஸ்தாபன சுய ஆட்சி நடத்தப்பட்டுவந்த அனுபோகத்தைக்கொண்டும், கோர்ட்டின் தீர் மானங்களைக்கொண்டும் லோகல் போர்டு சட்டமானது மிகவும் பூரணமாக திருத்தப்பட்டுள்ளது. 1930-ம் வருஷத்திய திருத்தச் சட்டப்பிரகாரம் டிஸ்டி ரிக்டு போர்டுகளிலும், தாலுக்கா போர்டுகளிலும் பஞ்சாயத்துகளிலும் நேரா கவே தேறுதல்கள் நடத்தப்பட வேண்டுமென்று ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு டிஸ்டிரிக்டிலுமுள்ள டிஸ்டிரிக்டு போர்டில் உள்ள அங்கத்தினர்கள் இதுவரை யிலும் நேராக தேர்ந்தெடுக்கப்படாமல் தாலுக்கா போர்டுகளிலிருந்து பொறு க்கி எடுத்தனுப்பப்பட்டும், சிற்சில சமயங்களில் கவர்ன்மென்டினால் நிய மிக்கப்பட்டும் வந்தனர். அதனால் டிஸ்டிரிக்டுபோர்டு அங்கத்தினர்கள் பொது ஜனங்களுடைய அபேக்ஷையில்லாமலும் அவர்களுக்கு நேராக பொறுப்பாளிகளாகயிராமலும் இருந்துவந்தனர். இனி ஒவ்வொரு டிஸ்டி ரிக்டு போர்டு அங்கத்தினரும் யாதொரு டெர்சு அல்லது தாக்ஷண்யம் முதலியவைகளுக்கு உட்படாமல் பொது ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப் படுவாரவர். எலெக்ஷன்களைப்பற்றி ஏற்படும் தகராறுகள் விஷயமாக கவர்ன் மென்டார் செய்திருக்கும் விதிகள் அனுசரிக்கப்பட வேண்டும்.

இனி தாலுக்கா போர்டுகளிலும், பஞ்சாயத்துகளிலும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளைப்போலவே நியமனங்கள் (Nomination) என்பதுகிடையாது.

இனி லோகல்போர்டு எலெக்ஷன்கள், லோகல் கவர்ன்மென்டால் நிய மிக்கப்படும் உத்தியோகஸ்தர்களாலேயே தான் நடத்தப்பட வேண்டும். லோகல்போர்டு ப்ரெஸிடென்டுகள் அவ்விஷயமாக யாதொரு நடவடிக்கை யும் எடுத்துக் கொள்ளுவதற்கில்லை.

டிஸ்ட்ரிக்ட்டு போர்டுக்கு அங்கத்தினர்களின் எலெக்ஷன்.

47. (1) ஒரு டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக லோகல் கவர்ன்மென்டு அந்த டிஸ்ட்ரிக்ட் போர்டுடன் ஆலோசனை செய்துக்கொண்ட பிறகு ஒரு அறிவிப்பினால்—

(a) அந்த ஜில்லாவை சர்க்கில்களாக பிரிக்கவேண்டும்;

(b) 9-வது பிரிவு (1)-வது உபப்பிரிவின் கீழ் ஏதாவது ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தால் அந்த ஸ்தானங்களுக்காக தனியாக ஒதுக்கி வைக்கவேண்டிய சர்க்கில்களை நிச்சயிக்க வேண்டும்; இன்னும்,

(c) அந்த ஸ்தானங்கள் எவரெவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன வென்று தெரிவிக்கவேண்டும்.

(2) (1)-வது உபப்பிரிவின் (b) வாக்கியத்தில் குறிக்கப்பட்டிருக்கும் சர்க்கில்கள் அப்படி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களுக்காக அங்கத்தினர்களே அனுப்புவதல்லாமல் ஒன்று அல்லது அதற்கு அதிகப்பட்ட அங்கத்தினர்களையும் ஒதுக்கி வைக்கப்படாமலிருக்கும் ஸ்தானங்களுக்காக தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும். அப்படிப்பட்ட அங்கத்தினர்களின் சங்கியை எவ்வளவு என்பதைப் பற்றி லோகல் கவர்ன்மெண்டு ஒரு அறிக்கையின் மூலமாக தெரியப்படுத்த வேண்டும். மற்ற எல்லா சர்க்கில்களும் ஒவ்வொன்றும் ஒரே ஒரு அங்கத்தினரைமாத்திரம் தேர்ந்தெடுக்க உரிமையுள்ளனவாகும்.

(3) ஒரு சர்க்கிலிலுள்ள எல்லா தேர்ந்தெடுப்போர்களும் ஜாதி, அல்லது பால் (Sex) பேதமில்லாமல் அந்த சர்க்கிலில் எந்த ஸ்தானம் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்ததாக இருந்தாலும் அல்லது இராவிட்டாலும் அதற்காக நேரும் ஒரு எலெக்ஷனில் ஓட்டு கொடுப்பதற்கு அருகராவார்கள்.

(4) (1)-வது உபப்பிரிவின் கீழ் ஒரு டிஸ்டிரிக்டு சர்க்கிலாக ஏற்கனவே பிரிக்கப்பட்டிருப்பதை மிகவும் மாற்றிவிடுவதாக ஒரு அறிக்கையை தெரிவிக்கும் காலத்தில், லோகல் கவர்ன்மெண்டு அப்படி மாற்றப்பட்டிருப்பதானது அடுத்த சாதாரண எலெக்ஷன்களின் தேதிமுதல் அமுலுக்கு வரவேண்டுமென்று உத்திரவிடவேண்டும்.

(5) ஒரு சர்க்கிலால் தேர்ந்தெடுத்தனுப்பப்படும் அங்கத்தினர்களுடைய சங்கியையானது மாற்றப்படுமானால் அல்லது ஒரு புதிய ஸர்க்கில் ஏற்படுத்தப்படுமானால் அல்லது ஏற்கனவே இருந்து வரும் ஒரு சர்க்கிலானது எடுத்துவிடப் படுமானால் இவைகளுக்கென்று ஏற்படுத்தப்படும் அதிகாரி லோகல் கவர்ன்மெண்டினுடைய சம்மதத்தைக் கொண்டு—

(a) அப்பொழுது டிஸ்டிரிக்டு போர்டிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் எந்த சர்க்கிலுக்குப் பிரதிநிதியாக கவனிக்கப் படுவாரோ அதை நிச்சயப்படுத்த வேண்டும்;

(b) இன்னும் டிஸ்டிரிக்ட்டு போர்டில் ஏதாவது காலிகளிருக்கும் பக்ஷத்தில் அவைகளை பூர்த்திசெய்வதற்கு எந்த சர்க்கில்

அல்லது சர்க்கில்களில் எலெக்ஷன்கள் நடத்தப்படுமென்று நிச்சயிக்க வேண்டும்.

குறிப்புகள்,

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய லோகல் போர்டு திருத்தச் சட்டத்தினுல் முற்றிலும் மாற்றி எழுதப்பட்டுள்ளது பழைய 47-வது பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டிலும் உள்ள அங்கத்தினர்கள் எக்ஸ்பிஅஷியோ (Ex-officio) (அதாவது தன்னுடைய உத்தியோக ஸ்தானத்தினுல் யாதொரு பதவியை அடையும் உரிமையுள்ள) அங்கத்தினர்களைத் தவிர தாலூக்கா போர்டுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவரா யிருக்கவேண்டும். இப்பொழுது புதிய 47-வது பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டின் விஸ்தீரணமானது சர்க்கில்களாக பிரிக்கப்பட்டு அந்த சர்க்கல்கள் ஒவ்வொன்றும் எத்தனை அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், எந்தெந்த சர்க்கல்கள் சில குறிப்பிட்ட வகுப்பினர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்றும், லோகல் கவர்ன்மென்டார் டிஸ்டிரிக்ட்டு போர்டாருடன் கலந்து கொண்டு தீர்மானிக்க வேண்டுமென்றுள்ளது.

இச்சட்டத்தின் 7-வது பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டிலும் 24-அங்கத்தினர்களுக்குக் குறையாமலும், 52-அங்கத்தினர்களுக்கு அதிகப்படாமலு மிருக்க வேண்டும் என்றுள்ளது. ஆகையால் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்ட்டிலும் குறைந்த பக்ஷம் 24-சர்க்கல்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். இப்பிரிவின் (2)-வது உபப் பிரிவின் பிரகாரம், சாதாரணமாக ஒவ்வொரு சர்க்கலும் ஒரே அங்கத்தினரைத் தான் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும் என்றுள்ளது. ஆனுல் லோகல் கவர்ன்மென்டார் சில சர்க்கல்களைத் தனியாக ஒதுக்கி வைத்து, அவைகளிலிருந்து குறிப்பிட்டதோர் சில வகுப்பினர்கள் தனியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று உத்திரவு செய்யலாம். ஆனுல், அந்த சர்க்கல்கள் ஒதுக்கி வைக்கப்படாத ஸ்தானங்களுக்கும் ஒன்று அல்லது அதற்கதிகப்பட்ட அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுத்து அனுப்பும்படி உத்திரவிடவேண்டும் என்றுள்ளது.

ஒவ்வொரு லர்க்கிலிலும் ஓட்டுரிமையுள்ள எல்லா அங்கத்தினர்களும் ஒவ்வொரு லோகல் போர்டிலும் யாதொரு ஸ்தானத்திற்காக நடக்கும் எலெக்ஷனில் ஓட்டு கொடுக்க உரிமையுள்ளவர்கள் என்று (2) உபப் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

(4), (5) உபப்பிரிவுகள் (1)-வது உபப் பிரிவின்கீழ் லர்க்கில்கள் பிரிவு படுவதைப் பற்றியும் அவைகளுக்காக பிரதிநிதியாக ஏற்படக்கூடிய அங்கத்தினர்களைப் பற்றி கூறுகின்றன.

இப்பிரிவின் (2)-வது உபப் பிரிவில் உள்ள அம்சங்கள் மிகவும் விவரமாக உள்ளதாக காணப்படவில்லை. அந்த உபப் பிரிவில் இச்சட்டத்தின் 9-வது பிரிவின் (1)-வது உபப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் வகுப்பினர்களுக்காக சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டு மென்றும் அந்த ஸ்தானங்களுக்காக சில குறிப்பிட்ட வர்க்கில்கள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்றும், அதே வர்க்கில்களிலிருந்து ஒதுக்கிவைக்கப்படாத ஸ்தானங்களுக்காக சில நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் உள்ளது. (3)-வது உபப் பிரிவின்கீழ் ஒரு வர்க்கிலுக்காக நடக்கும் ஒவ்வொரு எலெக்ஷனிலும் ஓட்டுரிமையுள்ள ஒவ்வொரு வரும் ஓட்டு கொடுப்பதற்கு அர்ஹமுள்ளவர் என்று இருப்பதினால் ஒரு வர்க்கிலில் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் ஸ்தானத்திற்கும் ஒதுக்கி வைக்கப்படாமலிருக்கும் ஸ்தானத்திற்கும் ஆகஇரண்டு எலெக்ஷன்கள் நடக்கும்பக்ஷத்தில் அவ்விரண்டுஎலெக்ஷன்களிலும் ஒதுக்கி வைக்கப்பட்ட வகுப்பினருக்காக ஜாதி, மதம், பால் பேதமில்லாமல் ஓட்டு கொடுப்பதனால் ஒவ்வொருவரும் இரண்டு தரம் ஓட்டுகொடுக்க உரிமையுள்ளவராக ஏற்படும். ஆனால் இதர சர்க்கில்களிலுள்ள ஓட்டர்கள் (Voters) தமது சர்க்கிலில் நடக்கும் யாதொரு எலெக்ஷனில் ஒரே ஒருதரம்தான் ஓட்டு கொடுக்கலாம். அவர்கள்மேற்சொன்னபடி சில வகுப்பினர்களுக்காக ஒதுக்கி வைக்கப்படும் ஸ்தானங்களுக்காக நடக்கும் எலெக்ஷனில் யாதொரு ஓட்டு (Vote) கொடுப்பதற்கில்லை. இம்மாதிரி ஒரே டிஸ்டிரிக்ட்டில் சிலருக்கு ஒரு எலெக்ஷனில் மாத்திரம் ஓட்டு கொடுக்கவும் சிலருக்குபல எலெக்ஷன்களில் ஓட்டுகொடுக்கும்படியாகவும் இருப்பது சற்று விபரீதமாகத் தோன்றும்.

ஓட்டு என்பது யாது?

"ஓட்டு" என்பது ஒருவருடைய அபிப்பிராய குறிப்பாகும். பாலெட் பேப்பர் (Ballot Paper) என்பதற்கு அபிப்பிராயச் சீட்டு என்று சொல்லுகிற வழக்கம் ஒரு எலெக்ஷனில் யாதொரு நபர் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமானால் அதற்காக ஒன்று அல்லது பல அபேக்ஷகர்கள் நிற்பதுண்டு. ஒரே அபேக்ஷகர் நிற்கும்பக்ஷத்தில் அவர் யாதொரு தடங்கல் இல்லாமலே தேர்ந்தெடுக்கப்பட்டதாக கவனிக்கப்படுவார். ஆனால் இரண்டு அல்லது மூன்று அபேக்ஷகர்கள் நிற்கும்பக்ஷத்தில் அவர்களில் இன்னார் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்க ஒரு எலெக்ஷன் நடக்கும். அந்த எலெக்ஷனில் எவர் ஜாஸ்தியான ஓட்டுகளை பெறுகிறாரோ அவர்தான்தேர்ந்தெடுக்கப்பட்டவராக கவனிக்கப்படுவார். ஒருவர் எலெக்ஷனில் அதிக ஓட்டுகளைப் பெற்றவராக இருக்க வேண்டுமானால் தேர்ந்தெடுப்பவர்களில் பலர் அவர் பக்ஷமாக அபிப்பிராயப்பட்டிருக்க வேண்டும். அதாவது மற்ற அபேக்ஷகர்கள்சார்பாக எவரெவர்கள் ஓட்டு கொடுத்தனரோ அவர்களைவிட அதிகமான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவருடைய சார்பில் இருக்க வேண்டுமென்று அர்த்தமா

கும். ஒரு நபர் பொது ஜனங்களுடைய பிரதிநிதியாக இருக்கவேண்டு மென்று தேர்ந்தெடுக்கப்படும்பக்ஷத்தில் அந்த நபர் தம்மை தேர்ந்தெடுத்தவர் களுடைய பூரண நம்பிக்கையையும் பெற்று அவர்களுக்கு வுள்ள குறைகளை கவனிக்க வேண்டும். அதற்காகத்தான் பிரதிநிதிகள் சபைகள் அல்லது போர்டுகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

ஆகையால் ஓட்டு கொடுப்பவர்கள் தாம் அனுப்பும் அல்லது ஓட்டு கொடுக்கும் நபர்களுக்கு போதுமான யோக்கியதை இருக்கிறதாவென்றும் அவர்கள், லோகல் போர்டில் சென்று வாதம் செய்து தமக்காக வேண்டிய சௌகரியங்களைசெய்ய சாமர்த்தியம் பெற்றவராயென்பதையும் கவனிக்க வேண்டும். ஆனதால் ஓட்டு கொடுக்குங்காலத்தில் அவ்வுரிமையை மிகவும் ஜாக்கிரதையாகவும் யோசனையுடனும் செலவழிக்கவேண்டும். ஓட்டு என்பது மிகவும் அரியதோர் உரிமையாகும். அவ்வுரிமையானது எவ்வளவுக் கெவ் வளவு அதிகப்படுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஒவ்வொரு ஓட் டருக்கும் கௌரவமும், செல்வாக்கும் அதிகரிக்கும். இப்பிரிவில் ஒரே டிஸ் டிரிக்ட்டில் சில லர்க்கில்களில் உள்ள ஓட்டர்களுக்கு இரண்டுவகையான ஓட்டுகளும், சில லர்க்கில்களில் உள்ள ஓட்டர்களுக்கு ஒரேவகையான ஓட் டும் கொடுக்கப்பட்டிருப்பதை கவனிக்குமிடத்து ஒரே டிஸ்டிரிக்ட்டில் யாதொரு சரியான காரணமில்லாமல் சில ஓட்டர்களுக்கு அதிகமான உரி மைகளும், சில ஓட்டர்களுக்கு குறைவான உரிமைகளும் சம்பவிப்பதாக ஏற் படுகிறது.

இன்னும், இப்பிரிவில்,யாதொரு லர்க்கிலில் உள்ள எல்லாதேர்ந்தெடுப் போர் (Voters)களும் ஜாதிமத பேதமில்லாமல் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களுக்கும், ஒதுக்கிவைக்கப்படாமலிருக்கும் ஸ்தானங்களுக்கும் யாதொரு பேதமில்லாமல் ஓட்டு கொடுக்கலாம் என்றிருப்பதினால்,உதாரண மாக ஒரு டிஸ்டிரிக்ட்டில், ஒரு லர்க்கிலில் மஹம்மதியர்களுக்காக ஒரு ஸ்தா னம் ஒதுக்கிவைக்கப்பட்டு அதற்காக ஒரு எலெக்ஷன் நடக்கும்பக்ஷத்தில் அதில் நிற்கும் மகம்மதிய அபேக்ஷகர் சார்பாக அந்த லர்க்கிலில் உள்ள மகம் மதியர் மாத்திரமல்லாமல் ஹிந்துக்கள், கிரிஸ்தவர்கள் முதலிய எல்லா ஓட் டர்களும் ஓட்டு கொடுக்கலாம் என்று ஏற்படுகிறது. ஆனால் அதே அபேக்ஷ கரின் சார்பாக ஒதுக்கிவைக்கப்படாத ஒரு லர்க்கிலில் உள்ள ஓட்டர் கள் அவர்கள் எவ்வித வகுப்பினராயிருந்தபோதிலும் ஓட்டு கொடுப்பதற் கில்லை என்று இப்பிரிவினாலேயே விளங்கும் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் (Legislative Council) எலெக்ஷன்களில் ஒதுக்கிவைக்கப்படும் ஸ்தானங் களுக்காக நிற்கும் அபேக்ஷகர்கள் எந்த வகுப்பினரோ அவ்வகுப்பினருக்கு மாத்திரந்தான் அந்த ஸ்தானத்திற்காக நடக்கும் எலெக்ஷனில் ஓட்டுகொடு க்க உரிமையுள்ளவராவர்.

இச்சட்டத்தின் 9-வது பிரிவின் கீழ் யாதொரு வகுப்பினருக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படும் பக்ஷத்தில் அந்த ஸ்தானங்கள் யாவும் ஒரு லோகல் போர்டுக்கு இருக்கவேண்டிய மொத்த ஸ்தானங்களில் நான்கில் ஒரு பங்குக்கு அதிகப்படக் கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது.

1920-ம்வருஷத்திய இச்சட்டத்தை திருத்துவதற்காககொண்டு வரப்பட்ட மசோதாவில் டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காபோர்டு அல்லது பஞ்சாயத்து இவைகளிலுள்ள எல்லா ஓட்டர்களாலும் ஒதுக்கி வைக்கப்படும் ஸ்தானங்களுக்காக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று காணப்பட்டிருந்தது. ஆனால்அந்த மசோதாவை பரிசோதனை செய்த செலக்ட் கமிட்டி (Select Committee) யார்கள் அதை மாற்றிவிட்டு சில லர்க்கில்களில் அல்லது வார்டுகளில் ஒதுக்கி வைக்கப்படும் ஸ்தானத்திற்காக ஒரு அங்கத்தினரையும்,ஒதுக்கி வைக்கப்படாமலிருக்கும் ஸ்தானத்திற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தினரையும தேர்ந்தெடுக்கும்படி அதிகாரம்கொடுப்பது உசிதமென்று நினைத்து இம்மாதிரி செய்திருக்கின்றனர்.ஆனால் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலு(Legislative Council)க்கு நடக்கும் தேர்தல்களைப்போலவே ஒதுக்கி வைக்கப்படும் ஸ்தானங்களுக்காக ஒரு குறிப்பிட்ட வகுப்பினரே தங்களில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று செய்யப்பட்டிருப்பின் உசிதமாக இருக்கும்

இப்பிரிவின் (3)-வது உபப்பிரிவில்,ஒரு லர்க்கிலில் உள்ள ஓட்டர்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டிய அங்கத்தினர்கள் அதிகப்படுத்தப்படும் பக்ஷத்தில் அல்லது ஒரு புதிய லர்க்கில் ஏற்படுத்தப்படும் பக்ஷத்தில், ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் எந்தெந்த லர்க்கிலின் பிரதிநிதியாக கவனிக்கப்படுவர் என்றும் ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டில் காலியாயிருக்கும் ஸ்தானங்களுக்கு எந்தெந்த லர்க்கில்களால்பூர்த்திசெய்யவேண்டும்என்பதைப் பற்றியும் விதிகளினால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரியானவர் லோகல் கவர்ன்மென்டினுடைய முன் சம்மதத்தை (Previous Sanction) பெற்றுக்கொண்டு நிச்சயிக்கலாமென்று சொல்லப்பட்டுள்ளது. (4)-வது உபப் பிரிவில், லர்க்கில்களை பிரிக்கப்படும் அல்லது புதியதாக ஏற்படுத்தப்படும் விஷயமாக செய்யப்படும் ஒரு உத்திரவானது அடுத்த பொது தேர்தல்கள் முதற்கொண்டு அமுலுக்கு வரவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் ஒரு லர்க்கிலால் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்களின் சங்கியையானது அதிகப்படுத்தப்படும் பக்ஷத்தில் அதற்காக ஏற்பட்ட உத்திரவானது எந்தக்காலம் முதற்கொண்டு அமுலுக்குவரவேண்டும் என்பதைப்பற்றியாதொன்றும் இப்பிரிவில் சொல்லப்படவில்லை. ஆகையால் என்று முதல் புதியதாக ஏற்படுத்தப்பட்ட அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப் படுகிறாரோ அன்று முதற்கொண்டே அவர் தமது ஸ்தானத்தை வகிக்கலாமென்று ஏற்படும்.

ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்ட்டிலும் கட்டாயமாக சில வகுப்பினர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டவில்லை. (இதன் விஷயமாக 9-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குறிப்புகளைப் பார்க்க.)

தாலூக்கா போர்டு அங்கத்தினர்களின் எலெக்ஷன்.

48. (1) ஒரு தாலூக்காபோர்டுக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக லோகல் கவர்ன்மென்டு அந்த தாலூக்கா போர்டுடன் ஆலோசனை செய்துக் கொண்ட பிறகு ஒரு அறிக்கையினால்—

(a) அந்த தாலூக்காவை சர்க்கில்களாகப் பிரிக்கவேண்டும்;

(b) 9-வது பிரிவு (1)-வது உபப்பிரிவின் கீழ் எதாவது ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப் பட்டிருந்தால் அந்த ஸ்தானங்களுக்காக தனியாக ஒதுக்கிவைக்க வேண்டிய சர்க்கில்களை நிச்சயிக்க வேண்டும்;

இன்னும்—

(c) அந்த ஸ்தானங்கள் எவரெவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன வென்று தெரிவிக்க வேண்டும்.

(2) (1)-வது உபப்பிரிவின் (b)-வாக்கியத்தில் குறிக்கப்பட்டிருக்கும் சர்க்கில்கள் அப்படி ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களுக்காக அங்கத்தினர்களை அனுப்புவதல்லாமல் ஒன்று அல்லது அதற்கு அதிகப்பட்ட அங்கத்தினர்களையும் ஒதுக்கி வைக்கப்படாமலிருக்கும் ஸ்தானங்களுக்காக தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும். அப்படிப்பட்ட அங்கத்தினர்களின் சங்கியை எவ்வளவு என்பதைப் பற்றி லோகல் கவர்ன்மென்டு ஒரு அறிக்கையின் மூலமாக தெரியப்படுத்தவேண்டும். மற்ற எல்லா சர்க்கில்களும் ஒவ்வொன்றும் ஒரே ஒரு அங்கத்தினரை மாத்திரம் தேர்ந்தெடுக்க உரிமையுள்ளனவாகும்.

(3) ஒரு சர்க்கிலிலுள்ள எல்லா தேர்ந்தெடுப்போர்களும் ஜாதி அல்லது பால் (sex) பேதமில்லாமல் அந்த சர்க்கிலில் ஒரு ஸ்தானம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக இருந்தாலும் அல்லது இரா விட்டாலும் அதற்காக நேரும் ஒரு எலெக்ஷனில் ஓட்டு கொடுப்பதற்கு அர்ஹராவார்கள்.

(4) (1)-வது உபப்பிரிவின் கீழ் ஒரு தாலூக்கா சர்க்கிலாக ஏற்கனவே பிரிக்கப்பட்டிருப்பதை மிகவும் மாற்றிவிடுவதாக ஒரு

அறிக்கையை தெரிவிக்கும் காலத்தில், லோகல் கவர்ன்மென்டு அப்படி மாற்றப்பட்டிருப்பதானது அடுத்த சாதாரண எலெக்ஷன்களின் தேதி முதல் அமலுக்கு வரவேண்டுமென்று உத்தரவிடவேண்டும்.

(5) ஒரு சர்க்கிலால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் அங்கத்தினர்களுடைய சங்கியையானது மாற்றப்படுமானால் அல்லது ஒரு புதிய சர்க்கில் ஏற்படுத்தப்படுமானால் அல்லது ஏற்கெனவே இருந்து வரும் ஒரு சர்க்கிலானது எடுத்துவிடப்படுமானால் இவைகளுக்கென்று ஏற்படுத்தப்படும் அதிகாரி லோகல் கவர்ன்மெண்டினுடைய சம்மதத்தைக்கொண்டு—

(a) அப்பொழுது அந்த தாலூக்கா போர்டிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் எந்த சர்க்கிலுக்கு பிரதி நிதியாக கவனிக்கப்படுவாரோ அதை நிச்சயப்படுத்தவேண்டும் ;

(b) இன்னும் தாலூக்கா போர்டில் ஏதாவது காலிகள் இருக்கும் பக்ஷத்தில் அவைகளை பூர்த்தி செய்வதற்கு எந்த சர்க்கில் அல்லது சர்க்கில்களில் எலெக்ஷன்கள் நடத்தப்படும் என்று நிச்சயிக்கவேண்டும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்த சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவையும் 47-வது பிரிவையும் ஒத்திட்டு பார்க்குமளவில் ஒவ்வொரு டில்டிரிக்ட் டு போர்டு எலெக்ஷன்களில் நடத்தப்படவேண்டிய முறையானது தாலூக்கா போர்டு எலெக்ஷன்களிலும் அனுசரிக்கப்படவேண்டுமென்று ஏற்படும். ஆகையால் 47-வது பிரிவுக்காக சொல்லப்பட்டிருக்கும் வியாக்யான அம்சங்கள் யாவும் இப்பிரிவை அர்த்தங் கொள்ளுமிடத்து கவனிக்கப்படவேண்டும்.

பஞ்சாயத்து அங்கத்தினர்களின் எலெக்ஷன்.

49. (1) ஒரு பஞ்சாயத்துக்கு அங்கத்தினர்களை தேர்ந்தெடுப்பதற்காக லோகல் கவர்ன்மென்டு அந்த பஞ்சாயத்துடன் ஆலோசனை செய்துக் கொண்ட பிறகு விதிகளினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பிரகாரம் ஒரு அறிக்கையை பிரசுரம் செய்து அதனால்—

(a) அந்த கிராமத்தை வார்டுகளாக பிரிக்கலாம். இன்னும்,

(b) 9-வது பிரிவின் (3)-வது உபப்பிரிவின் கீழ் ஆதிரா விடர்களுக்காக ஏதாவது ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தால், அந்த ஸ்தானங்களுக்காக தனியாக ஒதுக்கி வைக்கவேண்டிய வார்டு களை நிச்சயிக்க வேண்டும்.

(2) மேலே (1)-வது உபப்பிரிவின் (b) வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வார்டுகள், அப்படி ஒதுக்கி வைக்கப்பட்டிருக் கும் ஸ்தானங்களுக்காக அங்கத்தினர்களை அனுப்புவதல்லாமல் ஒன்று அல்லது அதிகப்பட்ட அங்கத்தினர்களையும் ஒதுக்கி வைக்கப் படாமலிருக்கும் ஸ்தானங்களுக்காக தேர்ந்தெடுத்து அனுப்பவேண் டும். அப்படிப்பட்ட அங்கத்தினர்களின் சங்கியை எவ்வளவு என் பதைப்பற்றி லோகல் கவர்ன்மென்டு விதிகளால் ஏற்படுத்தப்பட்டிருக் கிற பிரகாரம் ஒரு அறிக்கையின் மூலமாக தெரியப்படுத்தவேண்டும். மற்ற எல்லா வார்டுகளும் ஒவ்வொன்றும் ஒரே அங்கத்தினரை மாத் திரம் தேர்ந்தெடுக்க உரிமையுள்ளனவாகும்.

(3) ஒரு வார்டிலுள்ள எல்லா தேர்ந்தெடுப்பவர்களும் ஜாதி, அல்லது பால் (Sex) பேதமில்லாமல் அந்த வார்டில் அந்த ஸ்தானம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக இருந்தாலும் அல்லது இரா விட்டாலும் அதற்காக நேரும் ஒரு எலெக்ஷனில் ஓட்டுகொடுப்பதற்கு அருஹராவார்கள்.

(4) மேலே 1-வது உபப்பிரிவின்கீழ் ஒரு கிராமம் வார்டுக ளாக ஏற்கெனவே பிரிக்கப்பட்டிருப்பதை மிகவும் மாற்றி விடுவதாக ஒரு அறிக்கையை தெரிவிக்கும் காலத்தில் லோகல் கவர்ன்மென்டு அப் படி மாற்றப்பட்டிருப்பதானது அடுத்த சாதாரண எலெக்ஷன்களின் தேதி முதல் அமுலுக்கு வரவேண்டுமென்று உத்திரவிடவேண்டும்.

(5) ஒரு வார்டினால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் அங் கத்தினர்களுடைய சங்கியையானது மாற்றப்படுமானால் அல்லது ஒரு புதியவார்டு ஏற்படுத்தப்படுமானால் அல்லது ஏற்கெனவே இருந்துவரும் ஒரு வார்டு எடுத்துவிடப்படுமானால் இவைகளுக்கென்று ஏற்படுத்தப் படும் அதிகாரி லோகல் கவர்ன்மென்டினுடைய சம்மதத்தைக் கொண்டு—

(a) அப்பொழுது, பஞ்சாயத்திலுள்ள ஒவ்வொரு அங்கத் தினரும் எந்த வார்டுக்கு பிரதிநிதியாக கவனிக்கப்படுவாரோ அதை யும், இன்னும்,

(b) பஞ்சாயத்தில் ஏதாவது காலிகள் இருக்கும் பக்ஷத்தில் அவைகளை பூர்த்திசெய்வதற்கு எந்த வார்டு அல்லது வார்டுகளில் எலெக்ஷன்கள் நடத்தப்படும் என்றும்,

நிச்சயிக்க வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய லோகல்போர்டு திருத்தச்சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டது. டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலுக்கா போர்டு இவைகளுக்கு நடக்கும் தேர்தல்கள் முறைகளே பஞ்சாயத்துகளுக்கு நடக்கும் பொது தேர்தல்களில் அனுசரிக்கப்படவேண்டும் என்று இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு டிஸ்டிரிக்ட்டுபோர்டு அல்லது தாலுக்கா போர்டானது பல விஸ்தீரணங்களாக பிரிக்கப்பட்டபோது ஒவ்வொரு விஸ்தீரணமும் வார்டில் என்று சொல்லப்படுகையில் ஒரு கிராமமானது பிரிக்கப்படும்பக்ஷத்தில் ஒவ்வொரு பிரிவும் வார்டு என்று சொல்லப்பட வேண்டும் என்றுள்ளது.

டிஸ்டிரிக்ட்டு போர்டில் முஸ்லீம்களுக்கும், இந்திய கிறிஸ்தவர்களுக்கும், ஆதித்திராவிடர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும், ஆங்கில இந்தியர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படலாம் என்றும், தாலுக்காபோர்டில் முஸ்லிம்களுக்கும் இந்திய கிறிஸ்தவர்களுக்கும், ஆதித்திராவிடர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படலாம் என்றும் இருக்கையில், ஒரு பஞ்சாயத்தில் ஆதித்திராவிடர்களுக்குத் தவிர வேறே யாதொரு வகுப்பினருக்கும் யாதொரு ஸ்தானமும் ஒதுக்கிவைக்கப்படக்கூடாது என்றுள்ளது ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்படுவதில் நிர்ப்பந்தம் யாதொன்றும் கிடையாது. லோகல் கவர்ன்மெண்டார் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துடன் கலந்துகொண்டபிறகுதான் ஸ்தானங்களைஒதுக்கிவைக்க வேண்டுமேயொழிய தாமாகவே சில ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படுமென்று உத்திரவு செய்வதற்கில்லை.

இந்தப்பிரிவிலும் தாலுக்காபோர்டு, டிஸ்டிரிக்ட்டு போர்டு முதலியவைகளில் நடக்கும் தேர்தல்களைப்போலவே பஞ்சாயத்துகளிலும் தேர்தல்கள் நடக்க வேண்டும் என்றுள்ளதால் அவைகளின் முறைமைகளைப்பற்றி 47-வது பிரிவிற்குள்ள குறிப்புகளைப்பார்க்க.

50. [இந்த பிரிவு விட்டுவிடப்பட்டது.]

தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவை பிரசுரிப்பது.

51. (1) ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் அந்த லோகல் போர்டில் ஓட்டு கொடுக்க யோக்கியதை பெற்றிருக்கும் நபர்களின் பெயர்களை கண்டுள்ள ஒரு தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா ஒன்று நிர்ணயிக்கப்பட்ட விதமாய் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியால் எந்த வருஷத்தில் சாதாரண காலிகள் நேரவேண்டுமோ அவ்வருஷத்தில் ஜூன்மாதக் கடைசிக்குள் தயார் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட வேண்டும்.

(2) அம்மாதிரி தயார் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்ட ஜாபிதாக்கள், ஒவ்வொரு வருஷத்தின் ஜூன்மாதக் கடைசிக்கு முன்னமே பரிசீலனை செய்யப்பட்டு மாற்றுதல்களும், திருத்தங்களும் அடங்கிய ஒரு ஜாபிதாவும் அதே மாதிரியாக நிர்ணயிக்கப்படும் அதிகாரியால் தயார் செய்யப்பட்டு பிரசுரிக்கப்படவேண்டும்.

(3) ஒரு டிஸ்ட்ரிக்ட்டு அல்லது தாலூக்கா போர்டினுடைய தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது ஒவ்வொரு சர்க்கிலுக்கும் தனித்தனி பாகமாக பிரிக்கப்படவேண்டும்; இன்னும், ஒரு கிராமமானது வார்டுகளாக பிரிக்கப்பட்டிருக்குமாஞல் அதன் பஞ்சாயத்துக்கு உள்ள தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனியான பாகமாக பிரிக்கப்படவேண்டும்.

(4) யாதொரு வருஷத்தில் பிரசித்தம் செய்யப்பட்ட தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது ஏதாவது மாறுதல்களும் திருத்தங்களும் நடந்திருக்கும் பக்ஷத்தில், அவைகளுடனும், தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா புதிதாய்ப் பிரசுரிக்கப்படுகிற வரையில் செலாவணியாய்க் கொண்டிருக்கவேண்டும்.

(5) மேலே சொல்லப்பட்ட பிரகாரமுள்ள தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் யாருடைய பெயர் வருகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் அந்த ஜாபிதா செலாவணியாய்க் கொண்டிருக்கிற வரையில், எலெக்ஷன் நடக்கும்போது ஓட்டு கொடுக்க அருஹராவார்; மேலும், ஷெடி ஜாபிதாவில் யாதொரு பெயர் வரவில்லையோ அந்த நபர் எலெக்ஷன் நடக்கும் போது ஓட்டு கொடுக்கக் கூடாது.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் மாற்றப்பட்டுள்ளது. புதிய 51-வது பிரிவிற்கும், பழைய 51-வது பிரிவிற்கும் உள்ள வித்தியாசமானது இரண்டு வகைப்பட்டது. அவையாவன :—

(1) பழைய பிரிவில், தேர்ந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது இன்னாரால் தயாரிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படவில்லை. தேர்ந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது எவரால் தயாரிக்கப்பட வேண்டுமென்று கவர்ன்மெண்டார் செய்யும் விதிகளினால்தான் ஏற்படுத்தும்படியாக இருந்தது. யூனியன் போர்டுகள் தங்கள் வில்லிரணங்களுக்குள்ள ஜாபிதாக்களை தாங்களே ப்ரெஸிடென்டு மூலமாக தயாரித்து வந்திருந்தனர் இப்பொழுது இப்பிரிவில் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் ஒரு அதிகாரியானவர் அந்த ஜாபிதாக்களை தயாரிக்க வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

(2) பழையபிரிவில் ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பவர்களின் ஜாபிதாவும், மற்றொரு ஜாபிதாவானது தயாரிக்கப்படும் வரையிலும் அமுலில் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்ததேயொழிய புதிய ஜாபிதாக்கள் எவ்வப்பொழுது தயாரிக்கப்பட வேண்டுமென்று ஸ்பஷ்டமாகசொல்லப்படவில்லை. புதிய பிரிவில் ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் நடக்கும் பொது தேர்தலுக்கு முந்தின ஜூன் மாதக் கடைசியில் ஒரு புதிய தேர்ந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது தயாரிக்கப்பட வேண்டுமென்றும், பிரதி வருஷமும் ஜூன் மாதக் கடைசிக்குள் முதலில் பிரசுரிக்கப்பட்ட ஜாபிதாவானது சரிவர பார்வையிடப்பட்டு திருத்தப்பட வேண்டுமென்றும் உள்ளது.

அமுலில் இருக்கும் தேர்ந்தெடுப்பவர்களுடைய ஜாபிதாவில் யாதொரு நபருடையபெயர் இருந்தால்தான் அவர் எலெக்ஷனில் ஓட்டு கொடுக்கலாம் என்றும் இல்லாவிட்டால்ஓட்டு கொடுப்பதற்கில்லையென்றும்5-வது உப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளதால் ஓட்டுரிமையுள்ள ஒவ்வொருவரும் தம்முடைய பெயர் அந்த ஜாபிதாவில் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி கவனித்து வரவேண்டும். இன்னும் 54-வது பிரிவின்கீழ் ஒரு எலெக்ஷனில் நிற்கும் அபேக்ஷகர்களின் பெயர் ஓட்டு கொடுப்பவர்களுடைய ஜாபிதாவில் காணப்படாவிட்டால் அவர்கள் அபேக்ஷகர்களாக நிற்பதற்கில்லையென்று சொல்லப்பட்டிருப்பதால் அபேக்ஷகர்களாக நிற்பதற்கு எண்ணமுள்ளவர்கள் தமது பெயரானது ஓட்டர் ஜாபிதாவில் இருக்கிறதா இல்லையா என்பதைக் கட்டாயம் கவனிக்க வேண்டும்.

ஓட்டர் ஜாபிதாக்கள் 52, 53-பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் தயாரிக்கப்பட வேண்டும்.

இனி ஓட்டர் ஜாபிதாக்கள் லோகல் கவர்ன்மென்டாரால் நியமிக்கப் படும் அதிகாரி அல்லது அதிகாரிகளால் தயாரிக்கப்படும். அவர்களுக்கும் லோகல் போர்டு அதிகாரிகளுக்கும் யாதொரு லிதமான சம்மந்தமும் கிடை யாது.

2-வது உபப் பிரிவில் "பரிசீலனை செய்யப்பட்டு மாற்றுதல்களுடனும், திருத்தங்களுடனும் அடங்கிய ஒரு ஜாபிதா" என்றிருப்பதினால், யாதொரு நபருடைய பெயர் அல்லது தகப்பனர் பெயர் தவராக எழுதப்பட்டிருந்தா லும் அல்லது சுருக்கமாகவோ அல்லது வித்தியாசமாகவோ எழுதப்பட்டிருந் தாலும் அதை திருத்திக்கொள்வதற்காக வசதி கொடுக்கப்பட்டதாக விளங் கும்.

தென்னிந்தியாவில் பல ஜாதிக்களும், வகுப்புகளும் இருப்பதினாலும் ஒரேவிதமான பெயர்களை பல ஜாதியார்களும் பூண்டிருப்பதால் தேர்ந்தெடுப் பவர்களின் ஜாபிதாவில் பல பிழைகள் ஏற்படலாம். உதாரணமாக:— "வெங்கடாசல" என்னும் பெயரைப் பூண்டு செட்டி என்றும், அய்யரென் றும். பிள்ளையென்றும், முதலி என்றும், படையாச்சி என்றும், கோனார் என் றும், நாயகர் என்றும் பலவிதமாக வகுப்பு பெயர்களை பெற்றிருக்கின்றனர். ஓட்டர் ஜாபிதாவில் ஒன்றுக்கொன்று தவறான வகுப்புப் பெயர் குறிக்கப் பட்டிருக்கும்பக்ஷத்தில் எலெக்ஷன் நடக்கும் காலத்தில் பலவித ஆக்ஷேபனை கள் கிளப்பப்பட்டு நியாயமாக ஓட்டு கொடுக்க வேண்டிய நபர் அடியோடே ஓட்டு கொடுக்க முடியாமல் போய்விடும்படி நேரிடும். ஆகையால் ஒவ்வொரு வரும், பிரதி வருஷத்திலும் ஜூன் மாதத்திற்கு முன்னமே பிரசுரிக்கப்பட் டும். ஓட்டர் ஜாபிதாவில் தம்முடைய பெயராவது அல்லது தம்முடைய நண் பர்களின் பெயராவது சரியாக கண்டிருக்கிறதாவென்பதைக் கவனிக்க வேண்டும்.

ஓட்டு உரிமையானது மிகவும் முக்கியமானதோர் உரிமையானதால் அதை பெறுவதற்காக யாதொரு நபர் தாவா செய்யலாம். அதாவது, ஓட் டர்களுடைய ஜாபிதாவை தயாரிக்கும் அதிகாரி யாதொரு நபருடைய பெய ரைச் சேர்க்காமல் விட்டுவிடும்பக்ஷத்தில் பிறகு ஆக்ஷேபிக்கப்பட்டும் அவரு டைய பெயர் சேர்க்கப்படாமல் இருக்குமானால் அப்படி அந்த ஜாபிதாவில் தன்னுடைய பெயரை சேர்க்கப்பட வேண்டுமென்று அவர் தாவா செய்ய லாம். (a) அப்படி அவருடைய பெயர் சேர்க்கப்படும் வரையிலும் அந்த ஓட்டர் ஜாபிதாவைக் கொண்டு யாதொரு எலெக்ஷனும் நடப்பதற்கில்லை யென்று ஒரு ஸ்தாபிதம்பெற சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். (b).

(a) சுப்பிரமணிய செட்டி vs. குடியாத்தம் முனிசிபல் கௌன்சில் 22 L. W. 719=A. I. R. 1926 Mad. 204.

(b) ஸ்ரீரங்கம் முனிசிபல் கௌன்சில் vs. அனந்த சுப்பிரமணிய அய் யர் 30. L. W. 851=A I. R. 1930 Mad 258.

இப்பிரிவின்கீழ் ஓட்டர் ஜாபிதாக்களை தயாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட அதிகாரியானவர் செய்யும் விசாரணையில் அந்த ஜாபிதாவில், அடங்கிய யாதொரு நபர் அல்லது நபர்கள் விஷயமாக அவர்களுக்கு 52, 53-பிரிவுகளின் கீழ் ஓட்டுரிமை இருப்பதற்கில்லையென்று எவராவது ஆக்ஷேபிக்கலாம். அந்த ஆக்ஷேபணையைப் பற்றி அவ்வதிகாரி கட்டாயம் விசாரிக்க வேண்டும். யாதொரு நபருக்கு ஓட்டு கொடுக்க உரிமை இல்லையென்று அவர் அறியும் பக்ஷத்தில் அவருடைய பெயரை அந்த ஜாபிதாவிலிருந்து எடுத்துவிடலாம். ஆனால் யாதொரு நபருடைய பெயர் விட்டுவிடப்பட்டதானால் அல்லது சேர்க்க மறுத்துவிடப்பட்டதானால் அந்த நபர் தாம் நேரிலேயே ஆக்ஷேபனை அல்லது தாவா செய்ய வேண்டுமேயொழிய அவருக்காக மற்றொரு நபர் செய்வதற்கில்லை.

எலெக்ஷன் விஷயமாக செய்யப்படும் தாவாக்களில் ஓட்டர் ஜாபிதாவைப்பற்றி அந்த ஜாபிதா சரியானதல்லவென்றாவது அல்லது தவறான பெயர்களை அடங்கியுள்ளதென்றாவது அதனால் எலெக்ஷனே செல்லத்தக்கதல்லவென்று யாதொரு ப்ரச்னையும் கிளப்பப்படுவதற்கில்லை. (a)

ஆகையால் எலெக்ஷன் நடப்பதற்கு முன்னமேயே ஒவ்வொருவரும் ஓட்டர் ஜாபிதாக்களின் விஷயமாக ஆக்ஷேப மூலமாகவோ அல்லது கோர்ட்டில் தாவா மூலமாகவோ தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்பிரிவில், ஒவ்வொரு வருஷமும் ஜூன் மாதம் கடைசிக்கு முன்பாக ஒவ்வொரு அதிகாரியும் ஓட்டர் ஜாபிதாவை தயாரிக்கவேண்டுமென்றுள்ளது. ஜூன் மாதத்துக்கு பிறகு அவர் அந்த ஜாபிதாவை தயாரிக்கும் பக்ஷத்தில் அது செல்லத்தகுந்ததா அல்லவா என்பது கேள்வி. இதைப் பற்றி இப்பிரிவிலாவது அல்லது இச்சட்டத்தில் வேறே பிரிவிலாவது யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் இம்மாதிரியான ஒரு அம்ச விஷயமாக தீர்மானிக்கப்பட்டிருக்கும் கேஸுகளையும் (b) மற்றப்பொதுஅம்சங்களையும் கவனிக்குமிடத்து அப்படி தாமதப்படுத்தி செய்யும் ஒரு ஜாபிதாவானது செல்லத்தக்கதல்லவென்று சொல்ல முடியாதென்றே விளங்கும். ஆனால் ஜூன் மாதத்திற்குப் பிறகு யாதொரு ஜாப்தாவானது பிரசுரிக்கப்படும்பக்ஷத்தில், அதில், அந்த ஜாபிதாவானது ஜூன் மாதத்திற்குள்ளே பிரசுரிக்கப்பட்டிருப்பின் அதில் எந்தெந்த நபர்களின் பெயர் அடங்கியிருக்க வேண்டுமோ அவர்களின் பெயர்களும் கட்டாயம் இருக்கவேண்டும். உதாரணமாக, ஒரு நபர் ஜூன் மாதத்திற்குள் ஓட்டுரிமை செலுத்த அருஹரா

(a) பழனிசாமி பிள்ளை vs. ஸ்ரீனிவாஸ ராகாசாரி 47 M. L. J. 795=A. I. R. 1926 Mad 160=20. L. W. 861.

(b) ஏகாம்பர நாய்க்கர் vs சென்னை கார்ப்பரேஷன் கமிஷனர் A.I.R. 1927 Mad. 22=99, I. C. 78.

யிருந்து அதற்குபிறகு அவருடைய உரிமையானது போய்விட்டாலும் ஜூன் மாதத்திற்கு பிறகு பிரசுரிக்கப்படும் ஜாபிதாவிலும் அவருடைய பெயர் கட்டாயம் இருக்கவேண்டும். ஏனென்றால் அந்த ஜாபிதாவானது ஜூன்மாதத்துக்குள்ளேயே பிரசுரிக்கப்பட்டிருக்கும்பக்ஷத்தில் அவருடைய பெயர் அந்த ஜாபிதாவில் கட்டாயம் இருந்திருக்கவேண்டும். ஒவ்வொரு நபரும், இப்பிரிவின் 5-வது உபப்பிரிவின்கீழ் தம்முடைய பெயரானது அந்த ஜாபிதாவில் இருக்கும்பக்ஷத்தில் அதைக்கொண்டே ஓட்டு கொடுக்கலாம் என்திருப்பதால், ஜாப்தாவில் அவருடைய பெயர் காணப்படுவதே பிரதானமாகும். அதேமாதிரியாக ஜூன்மாதம் தவறி ஜூலை அல்லது ஆகஸ்டு மாதங்களில் பிரசுரிக்கப்படும் ஜாபிதாக்களில் ஜூன்மாதக் கடைசிக்குள் அந்த ஜாபிதாக்களில் தன்னுடைய பெயரை ஒரு ஓட்டராக பதிவு செய்துக்கொள்வதற்கு பாத்தியதை யில்லாத யாதொரு நபருடைய பெயரும் காணப்படக்கூடாது. ஏனென்றால் அந்த ஜாபிதாவானது கிரமமாக ஜூன் மாதக் கடைசிக்குள் பிரசுரிக்கப்பட்டிருக்கும்பக்ஷத்தில் அவருடைய பெயர் அதில் இருந்திருக்காது.

யாதொரு குறிப்பிட்டகரலத்தில் ஒரு சர்க்கில் அல்லது வார்டில் உள்ள ஓட்டர்களின் சங்கியையானது இத்தனையென்றிருப்பது முக்கியமாதலால், இப்பிரிவில் ஓட்டர்களின் பூரண ஜாபிதாவானது பிரசுரிக்கப்படுவதற்காக ஒரு காலமானது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவின் (3)-வது உபப்பிரிவில் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கும் தாலுக்கா போர்டுக்கும் உள்ள தேர்ந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது ஒவ்வொரு வார்க்கிலுக்கும் ஒவ்வொன்றாக பிரிக்கப்பட வேண்டுமென்றும் பஞ்சாயத்துகளில் ஒவ்வொரு வார்டுக்கும் ஒவ்வொன்றாக பிரிக்கப்பட வேண்டுமென்றும் உள்ளது. ஒரு டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காவில் பல சர்க்கில்களில் ஒரு நபர் ஓட்டுரிமைக்கு வேண்டிய யோக்கியதைகளை பெற்றிருப்பதாக வைத்துக் கொள்வோம். இச்சட்டத்தின் 52-வது பிரிவில் யாதொரு நபர் ஒரு டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காவில் அல்லது கிராமத்தில் ஒரு வருஷத்தில் 120-நாட்கள் வாசம் செய்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும் III-வது ஷெடியூலில் கண்டிருக்கப்படும் யோக்கியதாம்சங்களில் ஒன்றையாவது அல்லது சிலவற்றையாவது பெற்றிருக்க வேண்டுமென்றும் அவருக்கு 21-வயது முடிந்திருக்க வேண்டுமென்றும் அப்படி யிருந்தால் தான் அவர் ஓட்டர் ஜாப்தாவில் சேர்க்கப்படலாமென்றும் கண்டுள்ளது. ஆகையால் ஒரு டிஸ்டிரிக்ட்டில் அல்லது தாலூக்காவில் உள்ள பல சர்க்கில்களில் அல்லது ஒரு கிராமமா யிருந்தால் அதன் பல வார்டுகளில் ஒவ்வொன்றிலும் ஓட்டு கொடுக்க யோக்கியதை பெற்றிருப்பவர் ஒவ்வொரு வார்டுக்குமுள்ள ஜாப்தாவில் தம்முடைய பெயரை பதிவு செய்து கொள்ளலாமா என்பது கேள்வி. 52-வது பிரி

வில், "ஒவ்வொரு சர்க்கில் அல்லது வார்டில் வாசம் செய்திருக்கவேண்டும்" என்று சொல்லப்படாமல் "அந்த டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா அல்லது கிராமத்தில் வாசம் செய்திருக்கவேண்டும்" என்று சொல்லப்படுவதை கவனிக்குமிடத்து பொதுவாக அவைகளில் எக்கேயாவது வாசம்செய்து வந்தாலே ஓட்டு கொடுப்பதற்கு போதுமான உரிமை ஏற்படுமென்று விளங்கும் ஒவ்வொருசர்க்கில் அல்லது வார்டில் ஒரு நபருக்கு யோக்கியதை இருக்கும் பக்ஷத்தில் அவைகள் ஒவ்வொன்றிலும் நடக்கும் எலெக்ஷனில் அவருக்கு ஓட்டு கொடுக்கஉரிமையுள்ளதாக தோன்றும். ஆனல் சென்னை கவர்ன்மென்டார் 2-8-1921 ல் G. O. No. 823 L. and M. உத்திரவில் செய்திருக்கும் விதிகளில் (4) வது விதியில் யாதொரு நபரும் தன் சொந்த ஹோதாவிலாவது அல்லது பிரதிநிதித்துவ ஹோதாவிலாவது ஒரு சர்க்கிலுக்கு மேல் யாதொரு சர்க்கிலிலும் ஓட்டு கொடுப்பதற்கு உரிமையுள்ளவராக பதிவு செய்யப்படக் கூடாது என்றுள்ளது. புதிய சட்டப் பிரகாரம் எம்மாதிரியான விதிகள் ஏற்படுத்தப்படு மென்பதை இனி கவனிக்க வேண்டும்

52. யாதொரு நபர் அடியிற்கண்டபடி யிருந்தாலன்றி மற்றப்படி, ஓட்டு கொடுப்பதற்கு யோக்கியதை பெற்றிருந்ததாக ஒரு லோகல் போர்டு இடைய தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் அவருடைய பெயரைச் சேர்க்கக்கூடாது :—

ரெஜிஸ்தர் செய்துக் கொள்வதற்குப் பொதுவான யோக்கியதாம்சங்கள்.

(a) அவர் ஒரு ப்ரிட்டிஷ் குடியாகவாவது அல்லது இந்தியாவிலுள்ள ஒரு சமஸ்தானத்தின் குடியாகவாவது இருக்கவேண்டும்.

ஆனல் லோகல் கவர்ன்மென்டார் - எந்த அன்னியருக்காவது அல்லது எந்த வகுப்பைச்சேர்ந்த அன்னியர்களுக்காவது இந்த நிர்ப்பந்தம் பிரயோகப்படாதபடி அவர்களை விலக்கலாம் ;

(b) தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா பிரசுரிக்கப்பட்ட வருஷத்திற்கு முந்திய வருஷத்தில் அவர் இருபத்தொன்று வயதானவராயிருக்கவேண்டும் ;

(c) அவர் (III)-வது ஷெடியூலில் விவரிக்கப்பட்டிருக்கும் யோக்கிய தாம்சங்களில் ஒன்று அல்லது பல அம்சங்களை பெற்றிருக்க வேண்டும்.

(d) ஒரு டிஸ்ட்ரிக்ட்டு அல்லது தாலூக்கா போர்டாக யிருக்கும் பக்ஷத்தில், அவர் அப்படிப்பட்ட வருஷத்திற்கு முந்திய வருஷத்தில் மொத்தத்தில் அந்த டிஸ்ட்ரிக்ட்டு அல்லது தாலூக்காவில் அல்லது (சென்னை நகரம் உள்பட) அந்த டிஸ்ட்ரிக்ட்டு அல்லது தாலூக்கா

விற்கு 3 மையில்களுக்குள்ளிருக்கும் ஒரு முனிசிபாலிட்டி அல்லது கன்டோன்மெண்டில் 120 தினங்கள் வாசம் செய்திருக்கவேண்டும்:

ஆனால் அப்படிப்பட்ட முனிஸிபாலிட்டி அல்லது கண்டோன்மெண்டில் இருக்கும் நபர்களுக்கு அவைகளில் வசித்துக் கொண்டிருப்பதனால் ஏற்படும் யோக்கியதாம்சமானது அவர்கள் ஒரு முனிசிபல் அல்லது கன்டோன்மெண்டு அதிகாரிக்கு செலுத்தப்படும் படியான ஒருவரியிடப்பட்டிக்கிறார்கள் என்று மாத்திரம் இருக்கும் பக்ஷத்தில் அது ஒன்றே இந்த வாக்கியத்தின் கீழ் ஒரு யோக்கிய தாம்சமாக கருதப்படக்கூடாது.

(e) ஒரு பஞ்சாயத்தினுடைய விஷயத்தில், அப்படிப்பட்ட முந்தின வருஷத்தில் அவர் அந்த கிராமத்தில் மொத்தத்தில் நூற்றிருபது நாட்கள் வாசம் செய்திருக்கவேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் உள்ள விலக்கு நிபந்தனையும் (e) உப வாக்கியமும் 1930–ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் ஏற்பட்டுள்ளன. இப்பிரிவில், ஒரு லோகல் போர்டு ஓட்டர்களின் ஜாபிதாவில் எவரெவர்களை ஓட்டர்களாக சேர்க்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இப்பிரிவானது 11–வது ஷெடியூலில் உள்ள விதிகளுடன் சேர்த்து படிக்கப்பட வேண்டும். 111–வது ஷெடியூலில் எழுவித யோக்கியதாம்சங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவ்விதயோக்கியதாம்சங்களில் ஒன்றாவது இருக்கவேண்டியதல்லாமல், ஒவ்வொரு ஓட்டரும், (1) ஒரு பிரிட்டிஷ் குடியாகவாவது அல்லது இந்தியாவிலுள்ள ஒரு சமஸ்தானக் குடியாகவாவது இருக்கவேண்டும். (2) எந்த வருஷத்தில் ஒரு ஜாபிதா பிரசுரிக்கப்படுகிறதோ அவ்வருஷத்தில் மார்ச்சு மாதம் 31உக்கு முன்பாகவே 21 வயது நிறைந்தவராக இருக்கவேண்டும். (3)ஒரு டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காபோர்டாயிருந்தால் எந்த வருஷத்தில் ஓட்டர் ஜாபிதாவானது பிரசுரிக்கப்படுகிறதோ அந்த வருஷத்திற்கு முந்தின வருஷம் எப்ரல்மீ 1உ முதல் அவ்வருஷம் மார்ச்சுமீ 31உ வரையிலும் முறையே அந்த டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காவிலாவது அல்லது டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காவிற்கு 3–மைல்களுக்குள் இருக்கும் ஒரு முனிசிபாலிட்டி அல்லது கன்டோன்மெண்டிலாவது 120-தினங்கள் வாசஞ் செய்தும், ஒரு பஞ்சாயத்தாக இருந்தால் அந்த கிராமத்தில் 120-நாட்கள் வாசஞ் செய்து இருக்க வேண்டும்.

"வாசஞ்செய்வது" என்பதானது இச்சட்டத்தின் 3-19)-வது உபப்பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் ஒவ்வொருதினமும் 24-மணி நேரமும் தன் வாசல்தலத்திலேயே இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை.

அவர் தன் வீட்டில் அல்லது குடியிருப்பு வீட்டில் யாதொரு பாகத்தை தூங்குவதற்கு உபயோகப்படுத்திவந்தாலே போதுமானது. யாதொரு நபர் தன் வீட்டிலிருந்து சிலகாலம் சேர்ந்தாப்போல் வெளியே போயிருப்பதினாலேயே அவர்வாசஞ்செய்வதிலிருந்து நீங்கிவிட்டதாக சொல்லமுடியாது.

ஒரு நபர், ஒரு முனிசிபாலிட்டியின் ஹத்துக்குள் வாடகைகளை வசூல் செய்வதற்காக ஒரு ஆபீஸை வைத்துக்கொண்டிருந்தார் அவராவது அவருடைய குடும்பமாவது அந்த முனிசிபல் ஹத்துக்குள் வாசஞ்செய்யவில்லை. இந்த சந்தர்ப்பங்களில் அவருக்கு ஓட்டுரிமை உண்டா இல்லையா என்னும் கேள்வி வந்ததில், அவருக்கு அந்த முனிசிபாலிட்டிக்காக நடக்கும் யாதொரு எலெக்ஷனில் ஓட்டுரிமை செலுத்த பாத்தியதை யில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. (a)

120-நாட்கள் வாசஞ் செய்திருக்க வேண்டும் என்பதினால், ஒருவருஷத்தில் ஒருவர் வசித்துவந்த மொத்த கணக்கை காட்டுமேயல்லாது சேர்ந்தாப் போல் 120-நாட்கள் என்று அர்த்தமாகாது. ஆகையால் ஒரு நபர் ஒரு வருஷத்தில் சேர்ந்தாப்போல 6-மாதங்கள் வெளியே போயிருந்தாலும் மிகுதியுள்ள 6-மாத காலத்திற்குள் 120-நாட்கள் வசித்துவந்தாலே போதுமானதாகும். இப்பிரிவின்கீழ் 120-நாட்கள் என்பதை கணக்கிடுவதில் தோராயமாகவேதான் கணக்கிடப்படுமேயொழிய மிகவும் குருகலாக கணக்கிடுவதற்கில்லை. 'வருஷம்' என்று அரசிறை வருஷத்தைக் குறிக்கும் (அதாவது எப்ரல்மீ 1-தேதி முதல் அடுத்த மார்ச்சுமீ 31உ வரையில்).

இப்பிரிவிலுள்ள விலக்கு நிபந்தனையின் தாத்பரியம் என்னவென்றால் ஒரு நபர் ஒரு டிஸ்டிரிக்ட்டுபோர்டு, தாலுக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தின் ஹத்துக்குள் வாசஞ் செய்யாமலும் அவைகளில் யாதொரு சொத்துக்களை பெற்றிராமலும் முறையே டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலுக்கா இவைகளுக்கு மூன்று மைல்களுக்குள் இருக்கும் யாதொரு முனிசிபாலிட்டி அல்லது கன்டோன்மென்டில் வசித்துக்கொண்டும், வரி செலுத்திக்கொண்டும் மாத்திரம் இருக்கும்பக்ஷத்தில் அவர் அந்த டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலுக்கா போர்டுக்காக நடக்கும் எலெக்ஷனில் ஓட்டுக் கொடுக்கக்கூடாதென்பது.

ஓட்டர்களின் யோக்கிய தாம்சக்குறைவுகள்.

53. 51-வது பிரிவு (5) உபப்பிரிவில் என்ன கண்டிருக்கப்பட்டிருந்தபோதிலும் அதற்கு நிமித்தியமில்லாமல், புத்தி சுவாதீனமில்லாத ஒரு நபரும் செவிட்டு ஊமையாயிருக்கும் ஒரு நபரும், குஷ்டரோகியாகவிருக்கும் ஒரு நபரும் ஒரு லோகல் போர்டில் நடக்கும் எந்த எலெக்ஷனிலும் ஓட்டு கொடுக்க அர்ஹராக மாட்டார்.

(a) வீரப்ப செட்டியார் vs. பழனி முனிசிபல் கௌன்சில் 48. Mad. 476=48. M. L. J. 428=A. I. R. 1925 Mad. 607.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்த சட்டத்தினுல் திருத்தப்பட்டுள்ளது. இப்பிரிவிலுள்ள முக்கிய திருத்தங்களாவன :—

(1) ஒரு குஷ்டரோகி ஒரு ஓட்டராக இருப்பதற்கில்லையென்று ஏற்படுத்தப்பட்டது.

(2) இப்பிரிவில் பழையபிரிவைக்காட்டிலும் ஸ்பஷ்டமாக ஒரு லோகல் போர்டுக்கு நடக்கும் எந்த எலெக்ஷனிலும் ஒருபுத்தி ஸ்வாதீனமில்லாதவர், செவிட்டு ஊமை அல்லது குஷ்டரோகி ஓட்டு கொடுப்பதற்கில்லை யென்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

55-வது பிரிவு (2) (a) உபப் பிரிவில் காணப்பட்டிருக்கும் யோக்கியதைக் குறைவுகளில் குஷ்டரோகியா யிருப்பது என்னும் குறைவானது இதுவரையிலும் ஒரு எலெக்ஷனில் நிற்கும் அபேக்ஷகர்களுக்கு மாத்திரம் பிரயோகப்படுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது அக்குறைவானது ஓட்டர்களையும் பாதிப்பதாக உள்ளது.

" 51-வது பிரிவு (5) வது உபப் பிரிவில் என்ன கண்டிருக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு நிமித்திய மில்லாமல் ' என்பதினுல், 51-வது பிரிவின் (5) வது உபப் பிரிவின்கீழ் ஒரு வேளை கைபிசகாகவோ அல்லது தவறுகவோ புத்தி ஸ்வாதீனமில்லாத அல்லது செவிட்டு ஊமையான அல்லது குஷ்டரோகியான ஒரு நபரின் பெயர் ஒரு முடிவான தேர்ந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் கண்டிருக்கப்பட்டிருந்த போதிலும் அதனுலேயே அப்படிப்பட்ட நபர்களுக்கு ஓட்டுரிமையைச் செலுத்த பாத்தியதை ஏற்படாது என்று அர்த்தமாகும்.

இப்பிரிவின்கீழ் ஓட்டர்கள் அல்லது நபர்கள் இதில் கண்டிருக்கும் யோக்கியதாம்சக் குறைவுகளினுல் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுமானுல் அவர்களுடைய ஓட்டுகளை பதிவு செய்யும் உத்தியோகஸ்தர் விசாரணை செய்த பிறகு தான் அவர்களுடைய அர்ஹமின்மையைப்பற்றி தீர்மானிக்க வேண்டும். அப்படி செய்யாமல் தீர்மானிப்பது சட்ட சம்மதமாகாது (a)

யாதொரு நபர் ஒரு செவிடாகவோ அல்லது ஊமையாகவோ இருந்தால் மாத்திரம் போதாது. அவர் இரண்டு விதத்திலும் பாதிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். செவிட்டு ஊமை யென்பதானது யாதொரு நபர் தமது பிறவி முதற்கொண்டு அடைந்திருக்கும் ஒரு அங்கக் குறைவைக் குறிக்கும். ஆகையால் ஒரு நபர் திடீரென்று நடு வயதில் செவிடாகவோ அல்லது ஊமையாகவோ மாத்திரம் ஏற்பட்டு விட்டதினுலேயே அவருக்குள்ள ஓட்டுரிமை போய்விடாது.

(a) இந்தியா செஷிடெரி ஆப்ஸ்டேட் Vs. வெங்கடேசலு நாயுடு 30. Mad. 113.

ஒரு நபர், ஓட்டர்களுடைய ஜாபிதாவில் ஒரு ஓட்டராக பதிவு செய்யப் பட்ட பிறகு யாதொரு காரணத்தினால் அவர் ஒரு எலெக்ஷனில் ஓட்டு செய் யுங் காலத்தில் குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டிருப்பாராஞல் அவர் ஓட்டு கொடுக்கலாமா? முடியாதா? என்பது கேள்வி. இந்தப் பிரிவில் புதிய திருத்த சட்டத்தினால் ஸ்பஷ்டமாக "எந்த எலெக்ஷனிலும் ஓட்டு கொடுக்க அர்ஹராகமாட்டார்" என்றிருப்பதினால், ஓட்டு கொடுக்கும் காலத்தி லும் அவர் தமது ஓட்டுரிமையை செலுத்துவதை ஆக்ஷேபிக்கலா மென்று அர்த்தமாகும். அவ்வாக்ஷேபனையை ஒரு போலிங் உத்தியோகஸ்தர் தான் விசாரித்து தீர்மானிக்க வேண்டும்

எலெக்ஷனுக்கு வேண்டிய யோக்கிய தாம்சங்கள்.

54. (1) யாதொரு நபரின் பெயர் ஒரு லோகல் போர்டி னுடைய தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் இருந்தாலன்றி அவர் அந்த போர்டில் எந்த ஸ்தானத்திற்கும் தெரிந்தெடுப்பதற்கு யோக்கி யதை யுள்ளவராகமாட்டார்.

(2) ஒரு கிராமகர்ணம் (பெரியதனகாரர்) (Village Head-man) தவிர வேறே யாதொரு கவர்ன்மென்டு உத்தியோகஸ் தரும் ஒரு லோகல் போர்டின் அங்கத்தினராக எலெக்ஷன் செய்யப் படுவதற்காகவாவது அல்லது உத்தியோகம் பெறுவதற்காகவாவது யோக்கியதையுள்ளவராகமாட்டார்.

ஆனால் இந்த கடையானது அடியில்கண்ட இரண்டு அம் சங்களையும் பெற்றிராத ஒரு உத்தியோகத்தை வகித்துக்கொண்டிருக் கும் யாதொரு நபர் விஷயமாகவும் பிரயோகிக்கப்படமாட்டாது: அதாவது,

(a) அவர் கவர்ன்மென்டுக்கு இடைவிடாமல் தன் அலு வல்காலம் முழுவதிலும் ஊழியம் செய்பவராகயிருக்கவேண்டும்; இன்னும்,

(b) அவர் கவர்ன்மென்டினிடமிருந்து மாதச்சம்பளத்தினா லாவது அல்லது வேறே தொகையினாலாவது பணம் பெற்றிருப்பதாக யிருக்கவேண்டும்:

ஆனால், இன்னும், ஒரு எலெக்ஷனுக்கு முன்பாவது அல் லது பிறகாவது யாதொரு நபர் இந்த உபப்பிரிவின்கீழ் யோக்கிய தாம் சக்குறைவுபட்டிருக்கிறரென்றாவது அல்லது யோக்கியதாம்சக்குறைவு படவில்லையென்றாவது யாதொரு பிரச்னைகிளம்புமானால் அந்த பிரச்னை

யானது லோகல் கவர்ன்மென்டுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அதன் விஷயமாக லோகல் கவர்ன்மென்டினுடைய தீர்மானமே முடிவானதாகும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவில் உள்ள இரண்டு விலக்கு நிபந்தனைகளும் 1930-ம் வருஷத்திய லோகல் போர்ட்டு திருத்த சட்டத்தினுல் புதியதாக ஏற்படுத்தப் பட்டன. இப்பிரிவில் பொதுவாக யாதொரு ஸ்தானத்திற்காக நடக்கும் ஒரு எலெக்ஷனில் அபேக்ஷகராக நிற்பவருக்கு இருக்க வேண்டிய யோக்கிய தாம்சங்களைப்பற்றி கூறப்பட்டுள்ளது. முதன் முதலாக, எந்த லோகல் போர்டில் ஒரு ஸ்தானத்திற்கு ஒரு அபேக்ஷகர் நிற்கிறாரோ அவருடைய பெயரானது அந்த போர்டின் தேர்ந்தெடுப்பவர்களுடைய ஜாபிதாவில் பதிவு செய்யப்பட வேண்டும். இரண்டாவதாக, அவர் கவர்ன்மென்டு உத்தியோகஸ்தராக இருக்கக் கூடாது. "கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர்" என்று கவனிக்கப்படுவதற்கு இரண்டு அம்சங்கள் இருக்க வேண்டுமென்றுள்ளது. அதாவது (1) அவர் தன்னுடைய அலுவல் காலம் முழுவதையும் கவர்ன்மென்டு ஊழியத்திற்கே செலுத்துபவராக இருக்க வேண்டும். (2) அவருக்கு யாதொரு சம்பளம் அல்லது ஊழியத் தொகை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விரண்டு அம்சங்களும் இராத பக்ஷத்தில் யாதொரு நபர் கவர்ன்மென்டு உத்தியோகஸ்தரென்று சொல்லப்படுவதற்கில்லை.

(2) வது உபப் பிரிவில் "அல்லது உத்தியோகம் பெறுவதற்காகவாவது" என்பதனுல் யாதொரு நபர் முதல் முதலில் யாதொரு யோக்கியதை பங்கம் இல்லாமல் ஒரு அங்கத்தினராக எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தராக நியமிக்கப்படுவாராஞல் அவர் லோகல் போர்டினின்றும் நீங்க வேண்டுமென்று அர்த்தமாகும்.

சிற்சில சந்தர்ப்பங்களில் சில நபர்கள் கவர்ன்மென்டாரால் சம்பளத் தொகை அல்லது ஊழியத் தொகை என்றிராமல் உபகாரத் தொகைகள் கொடுக்கப்பட்டு, தமது ஓய்வில் பெரியதோர் பாகத்தை கவர்ன்மென்டின் காரியங்களுக்காக செலுத்தி வரலாம். அப்படிப்பட்ட சந்தேக சந்தர்ப்பங்களில் அதைப்பற்றி லோகல் கவர்ன்மென்டாருக்கு தெரிவிக்க வேண்டும். அவர்களுடைய தீர்மானந்தான் முடிவானதாகும்.

1-வது உபப்பிரிவின்கீழ் யாதொரு நபர் யோக்கியதை பெற்றவரா இல்லையாயென்றுயாதொரு சந்தேகம் ஏற்படும்பக்ஷத்தில் 57-வதுபிரிவின்கீழ் அதைப்பற்றின ஒரு ப்ரச்னையானது யாதொரு அங்கத்தினராலாவது அல்லது அந்த லோகல்போர்டினுடைய கட்டளையின்பேரில் அதன் ப்ரெஸிடெண்டாலாவது டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜுக்கு தெரிவிக்கப்பட்டு, அவரால்

தீர்மானிக்கப்படலாம். ஆனால், அப்படிப்பட்ட யாதொரு ப்ரச்னை தெரிவிக்கப்படுமுன் எந்த நபர் விஷயமாக யாதொரு சந்தேகம் கிளம்பினதோ அந்த நபர் ஒரு அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவேண்டும். அதற்கு முன்னடி அப்பிரிவின்கீழ் யாதொரு ப்ரச்னையும் தெரிவிக்கப்படுவதற்கில்லை. ஒரு நபர் ஒரு எலெக்ஷனுக்காக நியமகம் (Nomination) செய்யப்படுங்காலத்தில், அவர் நியமகத்தில் சேரவொட்டாமல் இருக்கும்படி எலெக்ஷன் நடத்தும் அதிகாரியானவர் நியமகச்சீட்டை தள்ளிவிடும்பக்ஷத்தில் அந்த நபர் ஒரு தாவா செய்து தம்முடைய பெயர் ஓட்டர் ஜாபிதாவில் பதிவு செய்யாமல் எலெக்ஷன் நடத்தப்படுவதற்கில்லையென்று ஒரு தீர்மானம் பெறலாம். (a) ஆனால் ஒரு நபர் தவருகவோ அல்லது சரியாகவோ நியமகம் செய்யப்பட்டு அதையொட்டி யாதொரு எலெக்ஷன் நடக்கும்பக்ஷத்தில் அந்த எலெக்ஷன் முடியும்வரையிலும் அவரை அபேக்ஷகராக நிற்கவொட்டாமல் தடுப்பதற்கு யாதொரு அம்சமாவது பிரமாணமானது இல்லை. அப்படி ஒரு நபருடைய நியமகமானது ஆக்ஷேபிக்கப்பட்டும் யாதொரு எலெக்ஷன் நடந்து அந்த எலெக்ஷனில் அவர் ஜெயிக்கும்பக்ஷத்தில், அதன் விஷயமாக 57-வது பிரிவின்கீழ் யாதொரு மனுவாவது அல்லது ஒரு எலெக்ஷன் மனுவாவது மாத்திரம் தாக்கல் செய்யப்படலாமே யொழிய வேறேவிதமாக அவருடைய எலெக்ஷனானது ரத்து செய்யப்படுவதற்கில்லை. இப்பிரிவில் (2)-வது உபப்பிரிவின்கீழ் ஏற்படும் சந்தேகங்களை தீர்ப்பதற்கு லோகல் கவர்ன்மென்டார்தான் அதிகாரமுள்ளவராவார்கள். ஆனால் இந்த உபப்பிரிவின்கீழ் கிளம்பும் சந்தேகமானது யாதொரு எலெக்ஷனுக்கு முன்னடியாவது அல்லது பின்னடியாவது லோகல் கவர்ன்மென்டாருக்கு தெரிவிக்கப்படலாம்.

இப்பிரிவின் கடைசி நிபந்தனையில் "முடிவானதாகும்" என்றிருப்பதனால் (2)-வது உபப்பிரிவின்கீழ் கிளம்பும் யாதொரு சந்தேகத்தைப்பற்றின வரையிலும், லோகல் கவர்ன்மென்டைத்தவிர வேறே யாதொரு நியாயஸ்தல அதிகாரியும் தீர்மானிப்பதற்கில்லை என்று ஏற்படும். அதனால் கவர்ன்மென்டு உத்தியோகத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் தாம் ஒரு லோகல் போர்டின் அங்கத்தினராயிருக்கும் விஷயமாக வேறே யாதொரு நடவடிக்கைகளையும் கோர்ட்டுகளில் தொடரக்கூடாதென்றும், கவர்ன்மென்டாருடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று அர்த்தமாகும். ஆனால், இந்த விலக்கு நிபந்தனையில் யாதொரு ப்ரச்னையைத் தெரிவிப்பதைப்பற்றி எவர், எவ்விதமாக லோகல்கவர்ன்மென்டாருக்கு தெரிவிக்கவேண்டுமென்று யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஆகையால், இதுவிஷயமாக சம்பந்தப்

(a) ஸ்ரீரங்கம் முனிசிபல் கௌன்ஸில் v. அனந்த சுப்பிரமணிய அய்யர், A. I. R. 130 Mad. 258. 258=30 L. W. 851.

(a) துப்பட்டி கோடய்யா vs. நாசராவ்பேட்டை தாலூக்கா போர்டு பிரஸிடென்டு 57. M. L. J. 40—192. A. I. R. Mad. 607—1. அகில இந்தியா லா ஜர்னல் பக்கம். 186.

பட்ட யாதொரு நபராவது அல்லது எலெக்ஷன் அதிகாரியாவது லோகல் கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்கலாம். இதற்குமேல் லோகல் கவர்ன்மென்டார் யாதொரு தீர்மானமும் தெரிவிக்காமலிருக்கும்பக்ஷத்தில் அப்படி ஒரு தீர்மானத்தை தெரிவிக்கும்படி லோகல் கவர்ன்மென்டாரைக் கட்டாயப்படுத்துவதற்காக, அவர்கள் பேரில் சாதாரண சட்டப் பிரகாரம் டிஸ்டிரிக்ட்டு முன்சீப் கோர்ட்டுகளில் தாவா செய்யலாம்.

"கிராமத் தலைவர்" அல்லது "பெரியதனக்காரர்" என்பவையான து கிராம முன்சீப், கிராம மணியக்காரர் முதலியவர்களையும் குறிக்கும்.

தெரிந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்கு அபேட்சகர்களின் யோக்கியதை குறைவுகள்.

55. (1) யாதொரு நபர் ஒரு கிரிமினல் கோர்ட்டாரால் ராஜீய விஷயமான குற்றம் அல்லது நிகிருஷ்டமில்லாத தவறு இவை தவிற மற்ற குற்றங்களுக்காக, தீவாந்தர சிட்சைக்காகிலும் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்கு காவல் தண்டனைக்காகிலும் விதிக்கப்பட்டிருந்து (அந்த தண்டனை மாற்றப்படாமலிருந்தாலும், அல்லது குற்றம் மன்னிக்கப்படாமலிருந்தாலும்), அவர் அந்த தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்குப்போதும் அந்த தண்டனை முடிவாகும் தேதிமுதல் ஐந்து வருஷகாலம் வரையிலும் ஒரு லோகல் போர்டு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு யோக்கியதையற்றவராவார்.

(2) யாதொரு நபர் நியமகம் செய்யப்படும் அல்லது தெரிந்தெடுக்கப்படும் தினத்திலே—

(a) புத்தி ஸ்வாதீனமில்லாதவராயிருந்தாலும், செவிட்டு ஊமையாகவாவது, குஷ்டரோகியாகவாவது இருந்தாலும்,

(b) கடன் தீர்க்க வகையில்லாதவராயிருந்து அதற்காக மனு செய்திருந்தாலும் அப்படி வகையில்லாதவரென்பதற்கு லெர்ட்டிபிகேட்பெறுமலிருந்தாலும், அல்லது கடனிறுக்கச் சக்தியற்றவராயிருந்து அப்படிச்சக்தியற்றவரென்று விடுதலை பெறுமலிருந்தாலும்,

(c) ஒரு கம்பெனியில் (டைரெக்டரைத்தவிர வேறே) யாதொரு பங்குக்காரராகவல்லாமல் மற்றப்படி, லோகல் போர்டாரோடு செய்யப்பட்டு இன்னும் அமுலிலிருக்கிற யாதொரு ஒப்பந்தத்திலாகிலும் அவர்களுக்காகச் செய்யப்பட்டு வரும் யாதொரு வேலையிலாகிலும் பற்றுள்ளவராயிருந்தாலும்:

ஆனல் யாதொரு நபருக்கு—

(i) அசையாப்பொருளை குத்தகைக்குவிடும், விற்பனை செய்யும் அல்லது கிரயத்துக்கு வாங்கும் யாதொரு விஷயத்திலாவது அப்படி செய்வதற்கான யாதொரு உடன்படிக்கையிலாவது,

(ii) பணம் கடன் வாங்கும் விஷயமாய்ச் செய்து கொள்ளப்படும் யாதொரு உடன்படிக்கையிலாவது பணம் செலுத்துவதற்காக மாத்திரம் கொடுக்கப்படும் யாதொரு ஜாமீனிலாவது,

(iii) லோகல் போர்டின் விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விளம்பரம் பிரகரிக்கப்படும் எந்த சமாசார பத்திரிகையிலாவது,

(iv) ஒப்பந்தம் அல்லது வேலையின் கால அளவுக்குள் யாதொரு வருஷத்திலே அடியிற்கண்ட இரண்டு விஷயங்களிலும் மொத்தத்தில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் மதிப்புள்ளவையாய் அவர் கிரமமாய் வியாபாரம் செய்கிற எவையேனும் சாமான்களை லோகல் போர்டுக்கு விற்பனை செய்வதிலாவது லோகல் போர்டினிடமிருந்து எவையேனும் சாமான்களை கிரயத்துக்கு வாங்குவதிலாவது,

பங்கு அல்லது பற்று இருக்கிறதென்னும் காரணத்தினலேயே அப்படிப்பட்ட ஒப்பந்தம் அல்லது வேலையில் மேலேகண்டபடி அவருக்கு யாதொரு பற்று இருப்பதாக எண்ணக்கூடாது.

(cc) அந்த லோகல் போர்டின் சார்பாக சம்பளம் கொடுக்கப்பட்ட ஒருவக்கிலாக அமர்த்தப்பட்டிருந்தாலும், அல்லது அந்த லோகல் போர்டுக்கு விரோதமாக ஒருவக்கிலாக அமர்த்தப்பட்டிருந்தாலும்;

(d) இந்த ஆக்டின்படி உத்தியோகம் வகிக்கும் உத்தியோகஸ்தராகவாவது ஊழியக்காரராகவாவது இருந்தாலும் அந்த லோகல் போர்டினுடைய விஸ்தீரண எல்லையில் எந்த பாகத்தின் மேலாவது அதிகாரமுள்ள ஒரு கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தாலும்,

(e) ஏற்கெனவே லோகல் போர்டு அங்கத்தினராகவிருந்து அவருடைய உத்தியோக காலமானது அல்லது அவர் புதியதாக தெரிந்

தெடுக்கப்பட்டதானது அமுலுக்கு வருவதற்கு முன்னே முடிவாகாமலிருந்தாலும், அல்லது அவர் ஏற்கெனவே ஒரு லோகல் போர்டு அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்து ஆனால் இன்னும் தமது உத்தியோக காலமானது ஆரம்பிக்காமலிருந்தாலும்,

(f) மேற்சொன்ன தேதியில் உத்தியோகம் வகித்து கொண்டிருக்கும் ஒரு அங்கத்தினருடைய வேலைக்காராகவோ அல்லது அவரை வேலைக்கு வைத்துக்கொண்டிருப்பவராகவோ அல்லது உத்தியோக முறைமையில் அவருடைய மேல் அதிகாரியாகவோ அல்லது அவருக்கு கீழ்ப்பட்டவராகவோ இருந்தாலும்;

அவர் லோகல்போர்டு மெம்பராக தெரிந்தெடுக்கப்படுவதற்கு யோக்கியதை அற்றவராவர்.

(3) (1)-வது உபப்பிரிவில் என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும் அதற்கு நிமித்தியமில்லாமல் லோகல் கவர்ன்மெண்டார் அப்படிப்பட்ட தண்டனையினால் ஒருவர் அபேக்ஷகராயிருப்பதற்கு யோக்கியதையற்றவராகாரென்று கட்டளையிடலாம்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவில் அபேக்ஷகர்களின் யோக்கியதைக் குறைவுகள் இன்னின்னவையென்று விவரமாகச் சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக லோகல் போர்டுகளில் அங்கத்தினர்களாக இருக்க வேண்டுமென்று அபேட்சிக்கிறவர்கள் கௌரவமாயும், அந்தஸ்துடனும், நிஷ்கபடிகளாயும், சுயநலமில்லாதவர்களாயும், பக்ஷபாதமில்லாதவர்களாயும் அல்லது யாதொரு செல்வாக்கு அல்லது கௌரவமுள்ள சர்க்கார் உத்தியோகம் வகிக்காதவர்களாயும் இருக்க வேண்டியவர்களாதலால், இப்பிரிவில் அபேக்ஷகர்களின் யோக்கியதைக் குறைவுகள் இன்னின்னவைகளென்று சொல்லப்பட்டுள்ளது. இப்பிரிவானது மற்றப்படி சாதாரண ரீதியில் சங்கிரமித்திருக்கும் யாதொரு ஓட்டு உரிமையை குறைப்பதாக இருப்பதால் மிகவும் ஜாக்கிரதையாகவும், குறுகலாகவும் அர்த்தம் கொள்ளப்பட வேண்டும். இப்பிரிவில் 1930-ம் வருஷத்திய திருத்தச் சட்டத்தினால் சில புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதாவது:

(1) ராஜீய சம்பந்தமானதும், நிகிருஷ்டமானதுமான குற்றங்களுக்கு எவ்வளவு காலம் வரையிலும் யாதொரு நபர் தண்டிக்கப்பட்டிருந்தபோதிலும், அதனால் அவருக்கு அபேக்ஷகராக இருக்கும் உரிமை போய்விடாதென்பது.

(2) யாதொரு நபர் கடனிறுக்க (கடன் தீர்க்க) சக்தியற்றவர் அல்லது இன்ஸால்வென்ட்டு என்று தீர்மானிக்கப்படுவதற்கு ஒரு மனு செய்திருந்த

போதிலும் அதுவே ஒரு அபேக்ஷகருடைய யோக்கியதையைக் குறைப்பதாகும்.

(3) யாதொரு நபர் ஒரு லோகல் போர்டின் சார்பாகவாவது அல்லது அதற்கு விரோதமாகவாவது ஒரு வக்கீலாக நியமிக்கப்பட்டால், அதனால் அவருக்கு அபேக்ஷகராக நிற்கும் பாத்தியதையானது போய்விடுமென்பது.

(4) யாதொரு நபர் ஒரு லோகல் போர்டில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கையில்-அவருடைய உத்தியோக காலமானது ஆரம்பிக்காததற்கு முன் அதே லோகல் போர்டில் மற்றொரு ஸ்தானத்திற்காக நிற்கக் கூடாதென்பது.

(5) ஒரு லோகல் போர்டு அங்கத்தினரின் உத்தியோக முறைமையில் அவருடைய மேல் அதிகாரியாகவோ அல்லது அவருக்குக் கீழ்ப்பட்டவராகவோ யிருக்கும் யாதொரு நபரும் லோகல் போர்டு எலெக்ஷனில் அபேக்ஷகராக நிற்கக் கூடாதென்பது.

இப்பொழுது இந்தியாவில் எங்கு பார்த்தாலும் நிறைந்து கிடக்கும் ராஜீய கிளர்ச்சியினால் பலர் வருஷக்கணக்காக சிறைவாச தண்டனை இடப்பட்டும் இருக்கின்றனர். அத்தகைய நபர்கள் ராஜீய கிளர்ச்சியில்லாமலிருக்கும்பக்ஷத்தில் சிறைக்கு போகும்படியான நபர்களேயல்ல. அவர்களில் பெரும்பாலானோர் மிகவும் உயர்ந்த அந்தஸ்திலிருந்து, முதிர்ந்த கல்வி ஞானமும் பெற்றவர்கள். இவர்கள் சிறையிலிருக்கும்போதும், சிறையிலிருந்து வெளியே வந்த உடனேயும், லோகல் போர்டுகளில் அங்கத்தினர்களாக இருந்து ஊழியம் செய்வதற்கு இந்தப் பிரிவினால் வசதி கொடுக்கப்பட்டுள்ளது.

நிகிருஷ்டமான குற்றம் என்பதானது மோசமும், நம்பிக்கைத் துரோகமுமுள்ள செய்கைகளையும், பொய் சாட்சியம் முதலிய பொதுஜன க்ஷேமத்திற்கும், வாழ்க்கைக்கும் மிக விரோதமாயுள்ள செய்கைகளையும் குறிப்பதாகும். அப்படிப்பட்ட குற்றங்களுக்குத்தான் சாதாரணமாக ஆறு மாதங்களுக்கு மேலாக ஒரு சிக்ஷை கிடைக்கக் கூடியதாயிருக்கும்.

(1)-வது உபப்பிரிவின் பிரகாரம், இராஜீய குற்றங்கள் அல்லது நிகிருஷ்டமான குற்றங்களைத் தவிர மற்ற குற்றங்களைச் செய்த நபர்கள் மன்னிக்கப்படும்பக்ஷத்தில் அல்லது அவர்களுடைய தண்டனையானது நீக்கிவிடப்படும்பக்ஷத்தில் அவர்களுக்கு யாதொரு யோக்கியதைக் குறைவு இருப்பதாகக் கவனிக்கப்படாது. இன்னும் ஆறு மாதங்களுக்குக் குறைவான ஒரு தண்டனையை அடைந்தவர்-ஒரு எலெக்ஷனில் வேறே யாதொரு தடையிராமலிருக்கும் பக்ஷத்தில் அபேக்ஷகராக நிற்கலாம்.

இப்பிரிவின் (2) (c) உபப் பிரிவானது முக்கியமானதேர் ஒரு பிரிவாகும். யாதொரு லோகல் போர்டுடன் அமுலில் இருக்கிற யாதொரு ஒப்பந்தத்தில் பற்றுள்ள ஒருவர் அதன் ஸ்தானங்களில் ஒன்றுக்கு அபேக்ஷகராக

நிற்பதற்கில்லை. ஆனால், யாதொரு கம்பெனியானது ஒரு லோகல் போர்டுடன் ஒரு காண்டிராக்டு அல்லது வேலையை ஏற்றுக்கொள்ளும் பக்ஷத்தில் அந்த கம்பெனியில் ஒரு ஷேர்தார் (பங்குக்கார்)ராக இருக்கும் பக்ஷத்தில் அதனாலேயே ஒரு நபர் அந்த போர்டுக்கு நடக்கும் ஒரு எலெக்ஷனில் அபேக்ஷகராக நிற்பதற்கில்லை யென்று சொல்ல முடியாது. அந்த கம்பெனியில் யாதொரு நபர் ஒரு டைரெக்டராக இருக்கும் பக்ஷத்தில் அவர் அபேக்ஷகராக நிற்பதற்கில்லை இன்னும், யாதொரு நபர்,

(1) ஒரு லோகல்போர்டினுடன் யாதொரு அசையாப் பொருளைப்பற்றி குத்தகை முதலிய விஷயங்களில் பற்றுள்ளவராக இருந்தாலும் அல்லது,

(2) ஒரு லோகல் போர்டுக்கு கடன் கொடுக்கும் விஷயமாகவோ, அல்லது யாதொரு ஜாமீன்தொகை விஷயமாகவோ பற்று இருந்தாலும் அல்லது,

(3) லோகல் போர்டினுடைய விளம்பரங்கள் பிரசுரிக்கப்படும் யாதொரு சமாசாரப் பத்திரிகையில் பற்று இருந்தாலும் அல்லது,

(4) அந்த லோகல் போர்டுக்கு ஒரு வருஷத்திற்கு ஆயிரத்தி ஐந்நூறு ரூபாய்க்கு (1500) அதிகப்படாமல் வியாபாரமாக சாமான்களைக் கொடுப்பதினால் பற்று இருந்தாலும் - அப்படிப்பட்ட நபர்கள் லோகல் போர்டு எலெக்ஷன்களில் அபேட்சகர்களாக நிற்கலாம்.

ஹானரரி மாஜிஸ்டிரேட்டு (Honorary Magistrates) கள் லோகல் போர்டில் அங்கத்தினர்களாக இருப்பதற்கில்லையென்றுள்ளது. காரணம் என்னவென்றால் ஒவ்வொரு சமயங்களில் லோகல் போர்டு சம்பந்தமான கேசுகள் ஹானரரி மாஜிஸ்டிரேட்டு (Honorary Magistrates)களிடம் விசாரணைக்கு வருவதால் அவர்கள் பட்சபாதமின்றி கேசுகளை தீர்மானிப்பதற்காக இந்த நிபந்தனையானது ஏற்பட்டுள்ளது. ஆனால் ஒரு அபேட்சகர் எந்த விஸ்தீரணத்தில் ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலுக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தினுடைய அதிகாரமானது வியாபிக்கிறதோ அந்த விஸ்தீரணத்துக்குள் ஒரு ஹானரரி மாஜிஸ்டிரேட்டாக (Honorary Magistrate) இருக்கக் கூடாதேயொழிய, அதற்கு வெளியே அவ்வுத்தியோகம் விகிப்பதை இந்தப் பிரிவானது தடுக்கவில்லை. சாதாரணமாக, ஹானரரி மாஜிஸ்டிரேட்டுகளுக்கு (Honorary Magistrates) யாதொரு பஞ்சாயத்து அல்லது முனிசிபாலிட்டி இவைகளின் அதிகாரத்துக்குள்ளிருக்கும் விஸ்தீரணத்தில் மாத்திரம் அதிகாரமிருக்குமாதலால் அவர்கள் தாலுக்கா போர்டுகளிலும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளிலும் நடக்கும் எலெக்ஷனில் அபேட்சகராக நிற்கலாம்.

ஒரு ஹானரரி மாஜிஸ்டிரேட் (Honorary Magistrate) தமது பதவியை ராஜினாமா செய்தபோதிலும் அந்த ராஜினாமாவானது அங்கீகரிக்கப்பட்ட பிறகுதான் யாதொரு லோகல் போர்டு எலெக்ஷனுக்கு நிற்க யோக்கியதையுள்ளவராவர். அது வரையிலும் அவர் யாதொரு எலெக்ஷனுக்கு அபேட்சகராக நிற்பதாவது அல்லது நியமிக்கப்படுவதாவது செல்லத்தகுந்த

தல்ல. (a) கிராம பஞ்சாயத்து கோர்ட்டு அங்கத்தினர்கள் இப்பிரிவின்கீழ் ஹானரரி மாஜிஸ்டிரேட்டுகள் (Honorary Magistrate) என்று கருதப்பட மாட்டார்கள். ஆகையால் அவர்கள் லோகல் போர்டு எலெக்ஷன்களில் அபேட்சகர்களாக நிற்கலாம். (b)

லோகல் போர்டுகளில் நடக்கும் எலெக்ஷன்களின் விஷயமாக எற்படும் தகராறுகளை விசாரிப்பதற்காக அவைகளின் நடவடிக்கை முறைகளையும் அதிகார முறைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக லோகல் கவர்ன்மெண்டார் சில விதிகளை ஏற்படுத்தியிருக்கின்றனர் அவைகளில் (1)-வது விதி பின் வருமாறு; —

"(1) 1920-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 57-வது பிரிவில் எவ்விதமாக சொல்லப்பட்டுள்ளதோ அது நீங்கலாக, சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் நடந்த யாதொரு எலெக்ஷனும், அந்த எலெக்ஷன் ஒரு டிஸ்டிரிக்ட் போர்டு, தாலூக்கா போர்டு அல்லது யூனியன் போர்டு இவைகளின் அங்கத்தினர் அல்லது பிரஸிடென்டைப் பற்றினதாயிருந்தாலும் சரி, அல்லது ஒரு டிஸ்டிரிக்ட் போர்டு, அல்லது தாலூக்கா போர்டினுடைய வைஸ் பிரஸிடென்டைப் பற்றினதாயிருந்தாலும் சரி, இந்த விதிகளின் பிரகாரம் அதிகாரமுள்ள டிஸ்டிரிக்ட் அல்லது சபார்டினேட் ஜட்ஜுக்கு யாதொரு அபேக்ஷகர் அல்லது தேர்ந்தெடுப்பவர் ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு எந்த அபேக்ஷகர் கிரமப் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்டதாக பிரகித்தம் செய்கிறாரோ அப்படிப்பட்ட (இனி தேர்ந்தெடுத்தனுப்பப்பட்ட அபேக்ஷகர் என்று சொல்லப்படும்) அபேக்ஷகர் மீது ஒரு எலெக்ஷன் மனு செய்தாலொழிய வேறு விதமாக கிராகரிக்கக் கூடாது."

சென்னை ஹைக்கோர்ட்டில், லோகல் போர்டு அங்கத்தினர்களுடைய யோக்கியதாம்ச விஷயமாக பல கேஸுகள் நடந்துள்ளன. அந்த கேஸுகளில் முக்கியமாக அடியில் கண்ட பிரச்னை கிளம்பினது. அதாவது மேற் சொன்ன 1-வது விதியின் கீழ் செய்யப்படும் யாதொரு எலெக்ஷன் மனுவில் ஒரு எலெக்ஷனில் நடக்கும் சட்ட விரோதமான அல்லது மோசமான நடத்தைகளல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் 54-பிரிவின் 1-வது உபப் பிரிவின்கீழ் போக்கியதை யற்றவராக இருந்திருப்பின் (அதாவது)

(a) எகாம்பர நாயகர், v. சென்னை கார்ப்பரேஷன் A. I. R. 1927 Mad 22.

(a) ஹோஸ்பேட் தாலூக்கா போர்டு பிரஸிடென்டு vs. சங்கிரப்பா. 45 Mad. 309=A. I. R. 1928 Mad 173=47. M. L. J. 771.

(b) மாயகிருஷ்ண கோன், vs. குலசேகர முதலியார் 48 Mad. 392—48 M. L. J. 116—A. I. R. 1925 Mad. 465.

ஒரு எலெக்ஷனில் அபேக்ஷகராக இருக்க யோக்கியதையற்றவராக இருப்பின் அவ்வம்சமானது நியமக காலத்தில் கவனிக்கப்படாமற் போனலும், அதைஒரு காரணமாகத்தெரிவித்து அக்காரணத்தைக்கொண்டும் அவருடைய எலெக்ஷன் செல்லத்தக்கினதல்ல வென்று வற்புறுத்தலாமா? என்பது. இப் பிரச்னை விஷயமாக பல கேஸ்-களில் இரண்டு விதமாக தீர்மானிக்கப்பட்டு வந்தன. ஆனல் கடைசியாக செல்வராங்க ராஜு vs. துரைசாமி முதலியார் (a) என்னும் ஒரு பூரண பெஞ்சு கேஸில் அப்படிப்பட்ட ஒரு அம்சமும் ஒரு எலெக்ஷன் மனுவில் இளப்பப்படலாமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே கேஸில், 57-வது பிரிவின் கீழ் தான் இத்தகைய சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்ட ஒரு வாதத்தை கோர்ட்டார் அங்கீகாரம் செய்யவில்லை இந்த கேஸ் மிகவும் முக்கியமானதோர் கேஸாகும்.

ஆனல் இந்தக் கேஸானது நேராக லோகல் போர்டு ஆக்டின்கீழ் தீர்மானிக்கப்பட வில்லை. சென்னை டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடிகளின் ஆக்டின்கீழ் 49-முதல் 51-வரையிலுமுள்ள பிரிவுகளின்கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளது சென்னை டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகளின் ஆக்டின் 49-முதல் 51-வரையிலு முள்ள பிரிவுகளும் இச்சட்டத்தின் 55-முதல் 57-வரையிலு முள்ள பிரிவுகளும் ஒரே மாதிரியானதினல் அந்த சட்டத்தில் 49-முதல் 51-வரையிலு முள்ள பிரிவுகளின் அம்சங்கள் இந்த சட்டத்தின் 55-முதல் 57-வரையிலு முள்ள பிரிவுகளின் கீழ் இளம்பும் பிரச்னைகளுக்கும் உபயோகப்படுத்தப்படலாம்.

ஒரு நபருடைய நியமகமானது எலெக்ஷன் உத்தியோகஸ்தரால் தள்ளி விடப்படும் பக்ஷத்தில் அவர் தம்முடைய நியமகம் சரியானதாகும் என்றும் நியமகச்சீட்டில் தம்முடையபெயரையும் சேர்த்துஎலெக்ஷன் நடக்கவேண்டு மென்றும், அதுவரையிலும் எலெக்ஷன் நடக்கக் கூடாதென்றும் அவர் தாவா செய்யலாம் (a) அப்படி அவர் தாவா செய்வதில் அவர் ஜெயம் பெற்று யாதொரு டிக்ரி ஏற்படும்பக்ஷத்தில் (அதாவது அவருடைய நியமகமானது சரியானதுதான் என்றும் அவருடைய பெயர் அபிப்பிராயச் சீட்டில் காணப்படாமல் யாதொரு எலெக்ஷனும் நடக்கக் கூடாதென்று கோர்ட்டார் தீர்மானிக்கும் பட்சத்தில் அந்த தீர்மானமானது எந்த தேதியில் எலெக்ஷன் அதிகாரியானவர் சரியாக நியமிக்கப்பட்ட அபேட்சகர்களுடைய பெயரை (எலெக்ஷன்) தேதிக்கு முன்பாக பிரசுரம் செய்கிறாரோ

(a) 57 M. L. J. 241—1 அகில இந்தியா லா ஜர்னல் 202.
= 52 Mad. 732—A. I. R. 1929. Mad. 727—30 L. W. 207.

(a) சேவுக பாண்டிய தேவர் vs. ஸ்ரீராமதேசிகம் அய்யங்கார் 101-I. C. 100—A. I. R. 1927 Mad. 546—52. M. L. J. 309. 25. L. W. 453.

அன்று முதற்கொண்டே அமுலுக்கு வருவதாக கவனிக்கப்படும். டிக்ரி ஏற் பட்ட உடனேயே 10-நாட்கள் அவகாசமில்லாமல் யாதொரு எலெக்ஷன் நடந்தபோதிலும் அந்த எலெக்ஷன் சரியான எலெக்ஷனல்ல வென்று சொல்ல முடியாது. ஆனல் அப்படி அவகாசமின்றி யாதொரு எலெக்ஷன் நடந்து அந்த எலெக்ஷனில் அதன் காரணமாக யாதொரு அபேட்சகர் தோற்றுவிட்டதாக ருசு ஏற்படும்பட்சத்தில் அந்த எலெக்ஷனை கோர்ட்டார் ரத்து செய்யலாம். (a)

இப்பிரிவின் (2)-வது உபப் பிரிவின் (f) என்னும் வாக்கியத்தில் "மேற் சொன்ன தேதியில் உத்தியோகம் வகித்துக் கொண்டிருக்கும் ஒரு அங்கத்தி னருடைய வேலைக்காரராகவோ அல்லது அவரை வேலைக்குவைத்துக்கொண் டிருப்பவராகவோ" என்பதானது ஒரு எஜமானனையும் அவர் கீழ் ஊழி யம் செய்பவரையும் குறிக்கும். அதாவது எஜமானனும் ஊழியனும் ஒரே காலத்தில் யாதொரு லோகல் போர்டில் உத்தியோகம் செய்யக் கூடாதென் பது. யாதொரு நபர் மற்றொருவருடைய எஜமானனு அல்லது ஊழியனு என்னும் விஷயமானது ஒவ்வொரு கேஸிலும் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாப் போல் கண்டறிய வேண்டும். ஒரு கேஸில் ஒரு ஹிந்து கோவிலில் ஒரு அர்ச்சகர் அந்த கோவிலின் டிரஸ்டியினுடைய ஊழிய ரல்ல என்று தீர்மா னிக்கப்பட்டது. (a) அந்த தீர்மானமானது சென்னை டிஸ்டிரிக்ட்டு முனிசி பாலிட்டிகள் சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டது. இந்த சட்டத்தில் மேலே சொல்லப்பட்ட வாக்கியத்தில் வேலைக்காரராகவோ அல்லது அவரை வேலைக்கு வைத்துக் கொண்டிருப்பவராகவோ" என்னும் பதங்கள் டிஸ்டி ரிக்ட்டு முனிசிபாலிட்டிகள் சட்டம் 49 (2) பிரிவில் உபயோகப் படுத்தப் பட்டு வந்தன. அத்தப் பிரிவின் கீழ்தான் மேற்சொல்லிய தீர்மானம் நடந் தது. இப்பொழுது இந்தப் பிரிவில் 1930-ம் வருஷத்திய திருத்தச் சட்டத் தினல் "அல்லது உத்தியோக முறைமையில் அவருடைய மேல் அதிகாரியா கவோ அல்லது அவருக்குக் கீழ்ப்பட்டவராகவோ இருந்தாலும்" என்னும் பதங்கள் சேர்க்கப்பட்டிருப்பதால் ஒருவேளை ஒரு அர்ச்சகர் ஒரு டிரஸ்டிக்கு கீழ்ப்பட்டவரென்று அர்த்தம் கொள்ளப்படலாம்.

இவ்வாக்கியத்தில், லோகல் போர்டு அங்கத்தினராக இருப்பவர்கள் அல் லது அபேட்சகர்கள் எவ்விதத்திலும் ஒருவருக்கொருவர் கீழ்ப்பட்டவராக யிருக்கக் கூடாது என்றும், ஒவ்வொருவரும் மற்றொருவருக்கு அடங்காமலே

(a) சேவுகபாண்டிய தேவர் vs. ஸ்ரீராம தேசிகம் அய்யங்கார் 101. I. C. 100=A. I. R. 1927. Mad. 546=25. L. W. L 53= 25 M. L. J. 309.

(a) துப்பட்டி கோடய்யா vs. நரசராவ் பேட்டை தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு 57. M. L. J. 40=1929. A. I. R. Mad. 607= 1. அகில இந்தியா லா ஜர்னல் பக்கம் 186.

(a) மங்களகௌண்டர் vs. அய்யாதுரை முதலியார், 55. M. L. J. 632= A. I. R. 1928. Mad. 641.

சமமாக யிருந்து தம்முடைய உரிமைகளை செலுத்தி வரவேண்டுமென்று தாத்பரியமாகும்.

56. (1) 57-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, அங்கத்தினர்களின் யாதொரு லோகல் போர்டு அங்கத்தினர்— யோக்கிதைக்குறைவு

(a) 55-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் விவரிக்கப்பட்டிருக்கிற குற்றத்திற்கும் தண்டனைக்கும் யாதொரு கிரிமினல் கோர்ட்டாரால் விதிக்கப்பெற்றாலும் ;

(b) புத்தி ஸ்வாதீனமற்றவராகவாவது செவிட்டு ஊமை அல்லது குஷ்டரோகியாவாவது ஆய்விட்டாலும் ;

(c) கடன் தீர்க்க வகையில்லாதவரென்றாவது கடனிறுக்கச் சக்தியற்றவரென்றாவது தீர்மானிக்கும்படி விண்ணப்பஞ் செய்து கொண்டாலும், அந்தப்படி தீர்மானிக்கப்பட்டாலும்,

(d) 55-வது பிரிவின் (2)-வது உபப்பிரிவின் (c) உபவாக்கியத்தில் குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட விலக்கு நிபந்தனைக்குட்பட்டு, சட்டப்படி சேர்ந்த ஒரு கம்பெனியில் (டைரெக்டரைத் தவிர வேறே) யாதொரு பாகஸ்தராகவல்லாமல் மற்றபடி லோகல்போர்டாரோடுசெய்யப்பட்டு இன்னும் அழுலிலிருக்கிற யாதொரு ஒப்பந்தத்திலாகிலும் அவர்களுக்காகச் செய்யப்பட்டு வருகிற யாதொரு வேலையிலாகிலும் எவ்விதப் பற்று உள்ளவராயிருந்தாலும்,

(dd) அந்த லோகல் போர்டின் சார்பாக சம்பளம் கொடுக்கப்பட்ட ஒரு வக்கீலாக நியமிக்கப்பட்டிருந்தாலும், அல்லது அந்த லோகல் போர்டுக்கு விரோதமாக ஒரு வக்கீலாக நியமிக்கப்பட்டிருந்தாலும் ;

(e) இந்த ஆக்டின் கீழ் ஒரு ஆபீஸர் அல்லது ஊழியர் அல்லது உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டாலும் அல்லது எந்த விஸ்தீரணத்தில் அந்த லோகல் போர்டுக்கு அதிகாரம் உள்ளதோ அந்த விஸ்தீரணத்துக்குள் அதிகாரம் உள்ளவராக ஒரு கௌரவ மாஜிஸ்டிரேட்டாக நியமிக்கப்பட்டாலும் ;

(f) வேறே யாதொரு அங்கத்தினரிடத்தில் வேலை ஏற்றுக் கொண்டாலும் அல்லது அவருக்கு கீழ்ப்படிந்த ஒரு உத்தியோகஸ்தராக ஏற்பட்டாலும் ;

(g) அவர்,—

(i) ஒரு டிஸ்டிரிக்டு அல்லது தாலூக்கா போர்டு அங்கத்தினராக இருந்தால் அந்த டிஸ்ட்ரிக்ட்டு அல்லது தாலூக்காவிலாவது அல்லது (சென்னைநகரம் உள்பட) அந்த டிஸ்ட்ரிக்ட்டு அல்லது தாலூக்காவிற்கு மூன்று மைல்களுக்குள் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு முனிசிபாலிட்டி அல்லது கன்டோன்மெண்டு (ராணுவஸ்தலம்) இவ்விடங்களிலாவது வாசஞ் செய்யாமற் போய்விட்டாலும்,

(ii) ஒரு பஞ்சாயத்து அங்கத்தினராக இருந்தால் அந்த கிராமத்தில் வாசஞ் செய்யாமல் போய்விட்டாலும்,

அல்லது,

(h) அவர், கடைசியாக அந்த லோகல்போர்டின் எந்த மீட்டிங்கில் பிரசன்னமாக இருந்தாரோ அந்த தேதிமுதல் சேர்ந்தாப் போல் மூன்று மாதங்கள் வரையிலும் அந்த போர்டின் சாதாரண மீட்டிங்குகளுக்கு வராமல் இருந்தாலும் அல்லது அந்த கால அளவுக்குள் அம்மாதிரியான மீட்டிங்கு-ஒரே ஒரு மீட்டிங் நடந்திருக்குமாகில் அவர் கடைசியாக பிரசன்னமாயிருந்த மீட்டிங்குக்குப் பிறகு நடந்த அம்மாதிரியான இரண்டு மீட்டிங்குகளுக்கு வராமல் இருந்தாலும்,

அவர் தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவர்.

ஆனால் யாதொரு சாதாரண மீட்டிங்கு விஷயமாக அந்த அங்கத்தினருக்கு சரியான நோட்டீஸ் தெரிவிக்கப்படாமல் இருந்த பக்ஷத்தில் அந்த மீட்டிங்குக்கு அவர் வராமற் போனால் இந்த உபவாக்கியத்தின் கீழ் கணக்கிடப்படுங்காலத்தில் அந்த மீட்டிங்கு சேர்க்கப்பட்டக்கூடாது.

விவரணம்:—இந்த உபவாக்கியத்தில் "சாதாரண மீட்டிங்கு" என்னும் பதச்சேர்க்கையானது II-வது ஷெடியூல் 3-வது விதியின் 2-வது உபவிதியின் கீழாவது 4-வது விதியின் கீழாவது நடத்தப்படும் யாதொரு மீட்டிங்கை அணைக்காது.

(2) (1)-வது குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (a) என்னும் வாக்கியத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் அவை நிமித்திய

மில்லாமலே, லோகல் கவர்ன்மென்டார் டெபு. கண்டனையினால் ஒருவர் (அங்கத்தினராயிருப்பதற்கு) யோக்கியதையற்றவராகாரென்று கட்டளையிடலாம்.

(3) (1)-வது உட்பிரிவைச் சேர்ந்த (a) என்னும் வாக்கியத்தின்படியாவது அல்லது 52-வது பிரிவின் கீழாவது யாதொரு நபர் மெம்பராயிருப்பதனின்றும் நீங்கினவராகும்பட்சத்திலே, அந்த தண்டனை அப்பீலிலாகிலும் புனர்விசாரணையிலாகிலும் ரத்துசெய்யப்பட்டாலும்; அந்த தண்டனையினால் ஏற்பட்ட யோக்கியதைக் குறைவானது லோகல் கவர்ன்மென்டாருடைய உத்தரவினால் நீக்கப்பட்டாலும் அந்தப்படி ரத்துசெய்யப்படுகிறபோதும் அல்லது நீக்கப்படுகிற போதும், அவரை மருபடியும் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அவர் எவ்வளவு காலத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்டாரோ அந்த காலத்திலே மேலே சொன்னபடி மருபடியும் சேர்த்துக்கொண்ட தேதியன்று கழிவாகாமலிருக்கும் பாகத்துக்கு அவரை அந்தப்படி சேர்த்துக்கொள்ள வேண்டும். மேலும், மத்தியகாலத்திலே அந்த காலிஸ்தானத்தைப் பூர்த்திசெய்வதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் யாதொரு நபர் - மேலே கண்டபடி. (நீங்கின நபர்) மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்படுவதன் பேரில் உத்தியோகத்தை காலிசெய்யவேண்டும்.

(4) ஒரு நபர் (1)-வது உபப்பிரிவின் (h)-என்னும் உபவாக்கியத்தின்கீழ் ஒரு அங்கத்தினராக இருப்பதிலிருந்து நீங்கிவிடும்பக்ஷத்தில் ப்ரெஸிடென்டு உடனே அவ்விஷயத்தைப்பற்றி அந்த நபருக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்து அந்த லோகல்போர்டின் அடுத்த மீட்டிங்கில் அவ்விஷயத்தைப்பற்றி தெரிவிக்கவும் வேண்டும். அந்த நபர் தாமாகவே மறுபடியும் தம்மை அந்த போர்டில் சேர்த்துக் கொள்ளும்படி அந்த போர்டுக்கு அதன் அடுத்த மீட்டிங்குக்கு முன்பாகவாவது அல்லது அந்த தினமாவது அல்லது அந்த செய்தி தமக்குக்கிடைத்த பதினைந்து தினத்திற்குள்ளாகவாவது ஒரு மனு செய்யும்பட்சத்தில் அந்த மனு கிடைத்தப்பிறகு நடக்கும் முதல் மீட்டிங்கில் அந்த போர்டானது அவரை ஒரு அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளலாம்.

ஆனால், ஒரு அங்கத்தினர் தன் உத்தியோக காலத்திற்குள் இரண்டு தடவைகளுக்கு மேல் அம்மாதிரி சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்புகள்.

இப்பிரிவானது யாதொரு நபர் ஒரு லோகல் போர்டு அங்கத்தினராக உத்தியோகம் வகித்த பிறகு அவருக்கு நேரிடும் உத்தியோகக் குறைவுகளைப்பற்றி சொல்லுவதாகும். (1)-வது உபப் பிரிவில் (a) முதல் (f) வரையிலுமுள்ள வாக்கியங்கள் 55-வது பிரிவில் காணப்பட்டிருக்கும் யோக்கியதைக் குறைவு அம்சங்களைப்பற்றியே ஒட்டினதாக இருக்கின்றன. யாதொரு நபர் தாம் தேர்ந்தெடுக்கப்படும் சமயத்தில் யாதொரு யோக்கியத்தை குறைவையும் அடைந்திராமலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இப்பிரிவில் (a) முதல் (h) வரையிலும் உள்ள வாக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள காரணங்களினால் யோக்கியதைக் குறைவை அடையும் பட்சத்தில் அவர் உடனே லோகல் போர்டினின்றும் நீங்கவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. (2), (3), (4) உபப் பிரிவுகளில் விலக்கு நிபந்தனைகள் காணப்பட்டுள்ளன. இப்பிரிவானது 55-வது பிரிவிலுள்ள சகல அம்சங்களையும் ஒட்டியே கவனிக்கப்பட வேண்டும்.

இப்பிரிவின் (1) வது உபப் பிரிவில் "57-வது பிரிவின் நிபந்தனைகளுக்குட்பட்டு" என்றுள்ள பதங்கள் சுப்பராய கௌண்டன் vs. முத்து குமாரசாமி கௌண்டன் (a) என்னும் கேவில், 57 வது பிரிவின் கீழ் ஏதாவது மனு செய்யப்படும் பட்சத்தில், 56-வது பிரிவின் பிரயோகமானது முடிவானதல்ல வென்றும், 57-வது பிரிவின் கீழ் டிஸ்டிரிக்ட் ஜட்ஜானவர் செய்யும் யாதொரு தீர்மானத்திற்கு உட்பட்டதாகும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த தீர்மானமானது மிகவும் சரியான தீர்மானமா என்றும், இப்பொழுது திருத்தப்பட்ட சட்டப் பிரகாரம் ஷெ தீர்மானத்திற்கு ஏதாவது வீரியம் உண்டா? என்று சற்று கவனிப்போம். ஷெ தீர்மானத்தில் உள்ள கேவின் சாராம்சமானது பின் வருமாறு :—

ஒரு தாலூக்கா போர்டு ப்ரெஸிடெண்டு, தம்மூடைய போர்டு மீட்டிங்குகளுக்கு மூன்று மாதங்களுக்குச் சேர்ந்தாப்போல் வரவில்லை. அந்ததாலூக்கா போர்டில் ப்ரெஸிடெண்டினுடைய அலுவல்களைப் பார்த்து வந்தவர் இந்த விஷயத்தைப்பற்றி லோகல் போர்டுக்குத் தெரிவிக்கவில்லை. ஆகையால், அதைப்பற்றி லோகல் போர்ட்டல் ஆக்டின் 56 - (4) பிரிவின்கீழ் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால், அவர் ஒரு அங்கத்தினராக இருப்பதிலிருந்து நின்று விட்ட பிறகு 56-வது பிரிவில் (1) - (h) உபப் பிரிவின்கீழ் ப்ரெஸிடெண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் விஷயமாக 57-வது பிரிவின்கீழ் டிஸ்டிரிக்ட் ஜட்ஜுக்கு மனு செய்யப்பட்டபொழுது, டிஸ்டிரிக்ட் ஜட்ஜானவர் அந்த நபர் அங்கத்தினராக இருப்பதிலிருந்தும் நின்றுவிட்டதாக தீர்மானித்தார். பிறகு இதன் விஷயமாக ப்ரெஸிடெண்டானவர், டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் - தம்மை ஒரு அங்கத்தினராக இருப்பதி

(a) 51 M. L. J. 265—1926. M. W. N. 628—24. L. W. 606.

லிருந்து நின்றுவிட்டா ரென்று சொல்லியிருப்பது பீசுகு என்றும், 57-வது பிரிவின் (3)-வது உபப் பிரிவைப் பார்க்குமிடத்து டில்டிரிக்ட் ஜட்ஜ் தமது தீர்மானத்தை தெரிவிக்கும் வரையிலும்-ஒரு அங்கத்தினராகவே எண்ணப் படுவார் என்றிருப்பதினாலும், தாலூக்கா போர்டாரே தம்மை மறுபடியும் ப்ரெஸிடென்டாக தேர்ந்தெடுத்திருப்பதினாலும் சட்டப் பிரகாரம் உள்ள ப்ரெஸிடென்டின் அந்தஸ்தானது தமக்கு ஏற்பட்டு விட்டதென்றும் வாதித்து ரிவிஷன் மனு செய்ததில், ஜஸ்டிஸ் வாலஸ் அவர்கள் பின் வருமாறு தீர்மானித்தனர் : (1). அந்த லோகல் போர்டானது 56-வது பிரிவு (4)-வது உபப் பிரிவின்கீழல்லாமல் வேறேவிதமாக ஒரு அங்கத்தினரை திரும்பவும் சேர்த்துக்கொள்வதற்கில்லை யாதலால், மனுதார் நின்றுவிட்டதைப்பற்றி அடுத்த மீட்டிங்கில் ப்ரெஸிடென்டு ரிப்போர்ட்டு செய்தாலொழிய-அவரை திரும்பவும் சேர்த்துக் கொள்ளக் கூடாதாகையாலும், அப்படிச் செய்யப்படாமல் இருந்ததினால் அதற்குப் பிறகு நடந்த ஒரு மீட்டிங்கில் அவரை ஒரு ப்ரெஸிடென்டாக தேர்ந்தெடுத்ததினாலேயே அவரை அந்த போர்டில் சேர்த்துக் கொண்டதாக ஏற்படாது; (2). 57-பிரிவின் (3)-வது உபப் பிரிவானது, யாதொரு அங்கத்தினர் சேர்ந்தாப்போல் மூன்றுமாதங்களில் யாதொரு மீட்டிங்குக்கும் வராமலிருந்த போதிலும், அப்பிரிவின்கீழ் தம்முடைய பேரில் விரோதமான ஒரு தீர்மானம் ஏற்படும் பரியந்தம் ஒரு அங்கத்தினராக இருக்க வேண்டுமென்றும் அர்த்தப்படும்படி ஏற்படவில்லை. அந்த உபப் பிரிவின் நோக்கம் என்னவென்றால் : எந்த நபர் பேரில் 57-வது பிரிவின் கீழ் ஒரு விசாரணை நடக்கிறதோ அவர் ஒரு அங்கத்தின ரல்லவென்று தீர்மானம் ஏற்படும் பட்சத்தில், அவர் அதுவரையிலும் நடக்கும் மீட்டிங்குகளில் பிரசன்னமாயிருந்து அவைகளில் கலந்து கொண்டிருந்ததினாலேயே அந்த மீட்டிங்குகள் செல்லத்தக்கதல்லவென்று சொல்லப்படாமலிருக்கவேண்டுமென்பது.

இந்த தீர்மானத்தில், இன்னொரு அம்சம் சொல்லப்பட்டுள்ளது. அதாவது ; 57-வது பிரிவின் (3)-வது உபப்பிரிவில், "அந்தப்படி தீர்மானம் செய்யப்படுகிறவரையிலே அந்த அங்கத்தினர் யோக்கியதையுள்ளவராகவே எண்ணப்படுவார்" என்றுள்ளதினால், அவர் வாஸ்தலத்தில் லோகல் போர்டின் அங்கத்தினராக இராமலிருந்தபோதிலும்-சில காரியங்களுக்காக (அதாவது அவர் அப்படிப்பட்ட தீர்மானம் ஏற்படும் வரையிலும் அங்கத்தினராக இருந்தகாலத்தில் லோகல் போர்டானது செய்திருக்கும் செய்கைகள் வீணாகப்போகாமலிருக்கும்படிக்காக) ஒரு அங்கத்தினராக எண்ணப்படுவார் என்றுள்ளதாக தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானத்தின் சாராம்சம் என்னவென்றால்: யாதொரு அங்கத்தினர் இப்பிரிவின்பிரகாரம் யோக்கியதைக் குறைவு அடையும்பக்ஷத்தில், உடனே அவர் தம்முடைய ஸ்தானத்தை இழந்து விடுபவராவார். ஆனால், அவருடைய அந்தஸ்தின் விஷயமாக டில்டிரிக்ட் ஜட்ஜ் அவர்கள் முன்பாக ஏதாவது ஒரு பிரச்னை கிளப்பப்படும்பட்

சத்தில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜானவர் தீர்மானம் செய்யும் வரையிலும். அவர் ஒரு அங்கத்தினராகவே கருதப்படுவார் என்பது.

இந்த தீர்மானமானது சரியானதல்லவென்று அடியில் கண்டிருக்கும் அம்சங்களினால் விளங்கும் :

1. யாதொரு அங்கத்தினர் அல்லது சில அங்கத்தினர்கள் யோக்கியதைக் குறைவு அடைந்திருந்தும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் முன்பாக யாதொரு மனுவும் செய்யப்படாமலிருக்கும்பக்ஷத்தில் அத்தகைய அங்கத்தினர்களைக் கொண்டு ஒரு லோகல்போர்டானது செய்யும் செய்கைகள் செல்லத்தக்கினதாக கருதப்படுமா ?

2. யாதொரு லோகல்போர்டு அங்கத்தினர் யோக்கியதை அற்றவராய் விட்டாரா ? இல்லையா என்பதைப்பற்றி டிஸ்டிரிக்ட் ஜட்ஜைத் தவிர வேறே எவராவது தீர்மானிக்க யாதொரு அம்சம் இந்த சட்டத்திலுள்ளதா ?

3. இப்பிரிவில் (1)-வது உபப்பிரிவின் (a) முதல் (h) வரையிலுமுள்ள யோக்கியதைக்குறைவுகள் நேர்ந்திருந்தும், அவைகளை ஒப்புக்கொள்ளாமல் லோகல்போர்டு மீட்டிங்குகளில் கலந்துகொண்டும், அங்கத்தினரை அப்புறப்படுத்துவதற்கு 57-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் மார்க்கத்தைத்தவிர வேறு உண்டா ?

4. இந்த சட்டத்தில் 35-வது பிரிவில் உள்ள அம்சங்களைக் கவனிக்குமிடத்து, 57-வது பிரிவின் (3)-வது உபப்பிரிவானது மேற்சொன்ன பிரகாரம் அர்த்தம் கொள்ளப்படும்பக்ஷத்தில், அது அனுவசியமானதன்றோ ?

இந்த கேள்விகளுக்கு இத்தீர்மானமானது சரியான உத்தரம் சொல்லுவதாக ஏற்படவில்லை. ஆனால், இந்த தீர்மானமானது பழைய லோகல் போர்டு சட்டத்தின்கீழ் தீர்மானிக்கப்பட்டதென்று நாம் அறியவேண்டும். புதிய சட்டத்தின் 56-வது பிரிவின் (g), (h) வாக்கியங்களும் 4-வது உபப்பிரிவும் மிகவும் மாற்றப்பட்டுள்ளன. 57-வது பிரிவின் (3)-வது உபப்பிரிவில் "எண்ணப்படுவார்" என்பதற்கு பதிலாக "யோக்கியதை அற்றவர் போலல்லாமல் எல்லா செய்கைகளையும் நடத்துவதற்கு உரிமையுள்ளவராவர்" என்றுள்ளது. ஆகையால், இதுகாறும் யாதொரு அங்கத்தினரின் யோக்கியதாம்சக் குறைவுகளைப் பெற்றிருப்பதாக யாதொரு சந்தேகமிளம் பினபோதிலும்-அந்த சந்தேகமானது ஒரு டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜினால் தீரும் வரையிலும், அவர் அங்கத்தினராகவே இருக்க உரிமையுள்ளவராவர். தவிர, 1-வது உபப்பிரிவின் (a) முதல் (h) வரையிலுமுள்ள வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கும் யோக்கியதாம்சக் குறைவின் விஷயமாய் எப்பொழுதும் இரண்டுவிதமாக அபிப்பிராயபேதம் இருக்க வசதியுண்டு. ஒவ்வொரு லோகல் போர்டு அங்கத்தினரும் அந்த லோகல்போர்டிலேயே இருந்து வர இஷ்டப்படுவாரேயொழிய, தாமாகவே சந்தேகத்தினால் நீங்கிப்போவது அரிதாகும். அப்படி நீங்காமலிருக்கும்பக்ஷத்தில், அந்த லோகல்போர்டில் உள்ள யாதொரு அங்கத்தினராவது அல்லது லோகல் போர்டாவது தமது ப்ரெஸிடெண்டு

மூலமாக டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜுக்கு மனு செய்தாலொழிய, வேறுவிதமாக அவரை நீக்குவதற்கு யாதொரு அம்சமும் கிடையாது.

(g) என்னும் வாக்கியமானது மேலே 52-வது பிரிவின்கீழ் புதியதாக ஏற்பட்டுள்ள நிருத்தங்களுக்கு இணங்கி அமைக்கப்பட்டுள்ளது. யாதொரு ஓட்டர், ஒரு தாலூக்கா அல்லது டிஸ்டிரிக்ட் போர்டின் எல்லைக்குள் வாசம் செய்யாவிட்டாலும்-அதற்கருகில் 30 மைல்களுக்குட்பட்ட ஒரு கண்டோன்மென்டு அல்லது முனிஷிபாலிடியில் வாசம் செய்தபோதிலும், அவருக்கு மற்றப்படி யோக்கியதாம்சங்கள் இருக்கும்பட்சத்தில் அவரை ஒரு ஓட்டராக பதிவு செய்துக் கொள்ளலாமென்று அப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. அத்தகைய நபரும் ஒரு லோகல் போர்டில் அங்கத்தினராக இருக்கலாம். அவர், லோகல் போர்டின் விஸ்தீரணத்திலாவது அல்லது அதற்கருகாமையில் 3-மைல்களுக்குள்ள ஒரு முனிஷிபாலிடியினின்றாவது கண்டோன்மெண்டினின்றாவது வெளியே வாசம் செய்யும் பட்சத்தில் அவர் தமது ஸ்தானத்தை இழந்துவிடுபவராவர். அதே மாதிரியாக யாதொரு பஞ்சாயத்து அங்கத்தினர்-தம்முடைய கிராமத்தைவிட்டு வெளியேவாசம்செய்யும் பட்சத்தில் அவரும் தம் ஸ்தானத்தை இழந்துவிட வேண்டும்.

(h) என்னும் வாக்கியமானது, அதன் தாத்பரியம் நன்றாக விளங்கும்படி திருத்தப்பட்டுள்ளது. இந்த வாக்கியத்தில் "சாதாரண மீட்டிங்கு" என்பதானது இன்னதென்று விளக்கப்படாமற் போனாலும், 11-வது ஷெட்யூலில் 3, 4-விதிகளின்கீழ் கூட்டப்படும் அவசர மீட்டிங்குகளும், ஸ்பெஷல் மீட்டிங்குகளும் வர்ஜிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மீட்டிங் கூடும்போது ப்ரெஸிடென்டானவர் அந்த மீட்டிங்-இன்ன மீட்டிங் என்று குறிப்பிட்டுத்தான் அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அப்படிக் குறிக்கப்படும் மீட்டிங்குகளில், சாதாரண மீட்டிங்குகளுக்கு அங்கத்தினர் கட்டாயமாய் பிரசன்னமாயிருக்க வேண்டும். மற்ற மீட்டிங்குகளுக்கு வந்தாலும் வராவிட்டாலும் பாதகமில்லை. உதாரணமாக ஒரு லோகல் போர்டில் 3 மாதங்களுக்குள் ஒரு சாதாரணமீட்டிங்கும், 2 அவசர மீட்டிங்குகளும், 3-ஸ்பெஷல் மீட்டிங்குகளும் நடந்ததாக வைத்துக் கொள்வோம்; இந்த மீட்டிங்குகளில் எந்த மீட்டிங்கிலாவது யாதொரு அங்கத்தினர் வராமற் போனாலும் அவர் அதற்கு முந்தி நடந்த ஒரு சாதாரண மீட்டிங்கில் பிரசன்னமாயிருந்து அதற்குப் பிறகு 2-மாதம் கழித்துநடக்கும் யாதொரு மீட்டிங்கில் பிரசன்னமாயிருந்தால் அவர் தம்முடைய ஸ்தானத்தை இழந்து விட்டதாக கருதப்பட மாட்டார். ஆகையால், அவர் கடைசியாக பிரசன்னமாயிருந்த மீட்டிங்கிற்கும், முதலில் பிரசன்னமாயிருந்த மீட்டிங்கிற்கும் இடையில் 5-மாத காலம் இருந்தபோதிலும், அவர் தமது பதவியை இழந்துவிடமாட்டார். இன்னும் யாதொரு மீட்டிங்கிற்காக அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய நோட்டீஸானது 11-வது ஷெடியூல் 3-வது விதியில் கண்ட பிரகாரம் பஞ்சாயத்துகளாக இருந்தால் 3-பூரண

நாட்கள் முன்பாவது, டிஸ்டிரிக்ட் போர்டு அல்லது தாலூக்கா போர்டாக இருக்கும் பட்சத்தில் 10 - பூரண நாட்கள் முன்பாவது கொடுக்கப்பட வேண்டுமென்றிருப்பதினால், அந்தப் பிரகாரம் நோட்டீஸ் கொடுக்கப்படாமலிருக்கும் பக்ஷத்தில் அதனால் ஒரு அங்கத்தினர் யாதொரு மீட்டிங்குக்கு வராமற் போனாலும், அதை ஒரு மீட்டிங்காக கணக்கிடப்படக் கூடாது என்று ஒரு நிபந்தனை ஏற்பட்டுள்ளது.

(4)-வது உபப் பிரிவில், மேலே (h) உபப்பிரிவின்கீழ் ஒரு அங்கத்தினர் தமது ஸ்தானத்தை இழந்து விடும் பட்சத்தில், அவரை எவ்வாறு மறுபடியும் சேர்த்துக் கொள்ளப் படலாம் என்பதானது சொல்லப்பட்டுள்ளது. யாதொரு மெம்பர், தமது ஸ்தானத்தை இழந்து விட்டதாக ப்ரெஸிடென்டானவர் உடனே அந்த அங்கத்தினருக்கு தெரிவிக்க வேண்டும் என்று ஒரு கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனென்றால், ப்ரெஸிடென்டானவர்-யாதொரு அங்கத்தினர் தமது ஸ்தானத்தை இழந்து விட்டதாக அபிப்பிராயப்பட்ட போதிலும், அந்த அங்கத்தினர் தாம் அப்படி இழந்துபோக வில்லையென்று தகுந்த காரணங்களைத் தெரிவிக்க வசதியுண்டாகும். அதற்குப் பிறகு மொத்த வர்த்தமானங்களையும் போர்டார் தமது மீட்டிங்கில் கவனித்து அவரை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டாலாவது, அல்லது அப்படிச் சேர்க்காமலே அவர் தமது ஸ்தானத்தில் இருக்க உரிமையுள்ளவராவர் என்று அபிப்பிராயப்பட்டாலாவது உசிதப்படி தீர்மானங்களைச்செய்யலாம். இந்த சந்தர்ப்பங்களில் ப்ரெஸிடென்டானவர், லோகல் போர்டின் நிர்வாகத்தை வகிக்காமலிருக்கும் பட்சத்தில் வைஸ் பிரஸிடென்டு அல்லது டெம்பரெரி ப்ரெஸிடென்டு அவருடைய கடமைகளைச் செய்யவேண்டும்.

யாதொரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு இந்தப்பிரிவின்கீழ் - தாம் அங்கத்தினராயிருக்கும் பதவியை இழந்துவிட்டு, பிறகு திரும்ப சேர்த்துக் கொள்ளப்படும் பட்சத்தில் - அதனாலேயே அவர் தம் ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு பதவியை பெற்றுவிட்டதாக கவனிக்கப்படமாட்டார். அவர் மறுபடியும் ஒரு ப்ரெசிடென்டாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்(a). யாதொரு அங்கத்தினர் (b)-வாக்கியத்தின்கீழ் மீட்டிங்குகளுக்கு வராத காரணத்தைக் கொண்டு தமது ஸ்தானத்தை இழந்து விடுவாராலும், மறுபடியும் அந்த போர்டானது அவரை ஒரு தீர்மானத்தின் மூலமாக சேர்த்துக் கொள்ள வேண்டுமே யொழிய அவர் தமது ஸ்தானத்தை இழந்து விடவில்லை யென்று ப்ரெஸிடென்டு தீர்மானம் செய்து அதை அந்த போர்டானது ஆமோதித்ததாக செய்வது சட்ட சம்மத மாகாது (b).

(a) தேவசகாமணி vs. சேது ரத்தினம் அய்யர். A. I. R. 1925. Mad. 1034.

(b) மரியப்பிள்ளை vs. முத்துவேலு பண்டாரம். 49. Mad. 563. A. I. R. 1926. Mad. 877.

அங்கத்தினர்களின் யோக்கியதைக்குறைவைபற்றிய பிரச்னைகளைக் குறித்து டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் தீர்மானிப்பது.

57. (1) யாதொரு லோகல்போர்டு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் எந்த நபராகிலும் 54-வது பிரிவின் (1)-வது உபப்பிரிவின் கீழாவது 55-வது பிரிவின்படியாவது 56-வது பிரிவின்படியாவது அல்லது 59-வது பிரிவின்படியாவது யோக்கியதை யற்றவரா யிருக்கிறரென்று சொல்லப்பட்டு, அந்தப்படிச் சொல்லப்பட்டதை அவர் ஒப்புக்கொள்ளா விட்டாலும், அல்லது யாதொரு அங்கத்தினருக்கே தாம் 56 அல்லது 59-வது பிரிவின்கீழ் அந்த வேலைக்கு யோக்கியதை யற்றவராய் விட்டாரா இல்லையா என்பது விஷயமாய் சந்தேகம் உண்டானாலும், அந்த அங்கத்தினராவது வேறேயாதொரு அங்கத்தினராவது எந்த டிஸ்டிரிக்ட்டில் அந்தலோகல்போர்டு விஸ்தீரணம் இருக்கிறதோ அந்த டிஸ்டிரிக்டின் டிஸ்டிரிக்டு ஜட்ஜுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; லோகல் போர்டார் கேட்டுக்கொண்டால் ப்ரெஸிடென்டானவர் அந்தப்படியே விண்ணப்பம் செய்ய வேண்டும்.

(2) மேற்படி ஜட்ஜானவர்—தமக்கு அவசியமாகத் தோற்றுகிறபடி விசாரணை செய்த பிறகு, அந்த நபர் 54-வது பிரிவின் (1)-வது உபப்பிரிவின் கீழாவது அல்லது 55-வது பிரிவின்படியாவது அல்லது 56-வது பிரிவின்படியாவது அல்லது 59-வது பிரிவின்கீழாவது யோக்கியதையற்றவரா யிருக்கிறரா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்; அவருடைய தீர்மானமானது முடிவானதாகும்.

(3) அந்தப்படி தீர்மானம் செய்யப்படுகிற வரையிலே அந்த அங்கத்தினர் யோக்கியதையற்றவர்போலல்லாமல் எல்லா செய்கைகளையும் நடத்துவதற்கு உரிமையுள்ளவராவர்.

குறிப்புகள்.

இப்பிரிவானது யாதொரு நபர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு யாதொரு யோக்கியதைக் குறைவு அடைந்திருப்பதாக புகார் சொல்லப்படும் பட்சத்தில், அதன் விஷயமாக டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் அவர்களுக்கு தெரிவிக்கப்படும் முறைமைகளைப்பற்றி கூறுகிறது. ஒரு அங்கத்தினர் 54, 55, 56, 59 இப்பிரிவுகளின் கீழ் காணப்படும் எவ்விதமான யோக்கியதாம்சக் குறைவுகளை பெற்றிருந்த போதிலும் அவைகளை ஆதாரமாகக்கொண்டு இப்பிரிவின் கீழ்

ஒரு மனு செய்யலாம். யாதொரு அங்கத்தினர், யோக்கியதைக் குறைவு களைப் பெற்றிருந்தும் - லோகல் போர்டை லக்ஷியம் செய்யாமல் அதன் மீட்டிங்குகளில் கலந்துக்கொண்டு இருக்கும் பட்சத்தில், அத்தகைய ஒரு நபரை நீக்குவதற்காக இப்பிரிவின் கீழ் மனு செய்யவேண்டுமே யல்லாமல், யாதொரு அங்கத்தினர் தம்முடைய யோக்கியதைக் குறைவுகளை ஒப்புக் கொண்டு தாமாகவே விலகி விடும் சந்தர்ப்பங்களுக்கு இப்பிரிவானது பிர யோகப்படுத்த மாட்டாது. இப்பிரிவானது இரண்டு அம்சங்களாக உள் ளது :—

(1) யாதொரு அங்கத்தினர் 54(1), 55, 56, 59 இப்பிரிவுகளின் கீழ் யோக்கியதாம்சக் குறைவுக்கு அடைந்ததாக சொல்லப்பட்டும்-அவர் தம் முடைய பதவியை ராஜினாமா செய்யாமல் இருக்கும் பட்சத்தில் அவரை நீக்குவதற்காக - அந்த போர்ட்டின் அங்கத்தினர்களில் ஒரு நபர் டிஸ்டி ரிக்ட் ஜட்ஜ்-க்கு மனு செய்து அவருடைய யோக்கியதாம்சத்தைப் பற்றி தீர்மானிக்கும்படி கேட்கலாம் ; ஒரு லோகல் போர்டானது, இதன் விஷயமாக டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்-க்கு மனு செய்ய வேண்டுமென்று தீர்மா னிக்கும்பட்சத்தில் அதன் ப்ரெஸிடென்டு கட்டாயம் மனு செய்தே தீர வேண்டும்.

(2) யாதொரு அங்கத்தினர்-தாமாகவே தமக்கு யோக்கியதைக் குறை வானது சம்பவித்துவிட்டதென்று சந்தேகப்படும் பட்சத்தில், அதைப்பற்றி ஸ்பஷ்டமாக ஒரு தீர்மானம் பெறுவதற்காக மனு செய்யலாம்.

இந்தப் பிரிவுக்கும், ஒரு எலெக்ஷன் மனுவுக்கும், யாதொரு சம்பந் தமும் கிடையாது. எலெக்ஷன் மனு என்பதானது, யாதொரு நபர் - ஒரு லோகல் போர்டு எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர் தேர்ந் தெடுக்கப்பட்ட காலத்தில் (அதாவது எலெக்ஷன் காலத்தில்) அவராவது அல்லது அவருடைய ஏஜெண்டாவது அல்லது அவருடைய தூண்டுதலின் பேரில் வேறே ஒரு நபராவது சென்னை லோகல் போர்டு ஆக்ட் 53-வது பிரிவின் கீழாவது அல்லது இந்தியன் பீனல்கோட் IX—A அதிகாரத் தில் சொல்லப்பட்டிருக்கும் பிரிவுகளின் கீழாவது யாதொரு குற்றத்தைச் செய்தாலும், அல்லது அவருடைய எலெக்ஷனானது மேலே சொல்லப்பட்ட சட்டப் பிரிவுகளின்கீழ் குற்றமென கருதப்படும் செய்கையினால் ஏற்பட்டா லும், அல்லது யாதொரு ஓட்டருக்கு அவர் போலிங் ஸ்டேஷனுக்கு வருவ தற்கும், பேசுவதற்கும் வண்டி சார்ஜ் கொடுத்தாகவோ அல்லது கொடுக்கும் படி சொன்னதாகவோ இருந்தாலும், அல்லது எலெக்ஷனுக்காக அவர் அல்லது அவருடைய ஏஜெண்டு சாதாரணமாக வாடகைக்காகவாவது அல் லது கூலிக்காகவாவது ஏற்பட்டிருக்கும் யாதொரு படகு, வண்டி, அல்லது பிராணியை வாடகைக்கு ஏற்படுத்திக்கொண்டு - அவைகளை உபயோகப்படு த்தினாலும், அல்லது மதுபானம் விற்குமிடம் அல்லது பொது ஜனங்கள்

நிற்கும்படியான யாதொரு ஸ்தலம் இவைகளே ஒரு மீட்டிங்குக்காகவோ அல்லது ஒரு கமிட்டி அறையாகவோ வாடகைக்காக ஏற்பாடு செய்துக் கொண்டாலும், அல்லது நியமகச் சீட்டுகளில் யாதொரு ஒழுங்கீனமிருந்தாலும், அல்லது ஓட்டுகளைப் பதிவு செய்துக் கொள்ளமறுத்துவிடுவதில் யாதொரு ஒழுங்கீன மிருந்தாலும், அல்லது அந்த எலெக்ஷனுனது லோகல் போர்டு ஆக்டின் நிபந்தனைகளையாவது அல்லது அவைகளின் கீழ் செய்யப்பட்டிருக்கும் விதிகளையாவது அனுசரியாமல் நடந்திருந்தாலும், இவைகளே ஆதாரமாகக் கொண்டு ஒரு எலெக்ஷனே ரத்து செய்வதற்கு செய்யப்பட்ட ஒரு மனுவாகும். ஒரு எலெக்ஷன் மனுவுக்கும், இப்பிரிவின் கீழ் செய்யப்படும் ஒரு மனுவிற்கும் வித்தியாசங்களானது பின் வருமாறு :—

(1) ஒரு எலெக்ஷன் மனுவானது சபார்டினேட் ஜட்ஜினிடத்திலும் தாக்கல் செய்யப்படலாம். இப்பிரிவின் கீழ் செய்யப்படும் யாதொரு மனுவானது டிஸ்டிரிக்ட் ஜட்ஜினிடமேதான் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

(2) ஒரு எலெக்ஷன் மனுவை யாதொரு ஓட்டரும் தாக்கல் செய்யலாம். இந்தப் பிரிவின் கீழ்செய்யப்படும் மனுவானது ஒரு - லோகல்போர்டு அங்கத்தினர் அல்லது ப்ரெஸிடென்டால் மாத்திரந்தான் தாக்கல் செய்யப்படலாம்.

(3) ஒவ்வொரு எலெக்ஷன் மனுவிலும் - மனுவை தாக்கல் செய்பவர் ஜாமீனை ஒரு தொகை டிபாஸிட் செய்ய வேண்டும். ஆனால், இப்பிரிவின் கீழ் செய்யப்படும் மனுவில் யாதொரு ஜாமீன் தொகையும் செலுத்தப்பட வேண்டிய அவசியமில்லை.

(4) ஒரு எலெக்ஷன் மனுவில், ஒரு தேர்ந்தெடுக்கப்பட்டவருடைய யோக்கியதாம்சக் குறைவுகளன்னியில் - ஒரு எலெக்ஷனில் நடந்திருக்கும் எல்லா ஒழுங்கீனங்களும் வற்புறுத்தப்படலாம். ஆனால், இப்பிரிவின்கீழ் செய்யப்படும் யாதொரு மனுவில் ஒரு அங்கத்தினருடைய யோக்கியதாம்சக் குறைவுகளே மாத்திரம் வற்புறுத்தலாமே யொழிய-வேறே எந்த அம்சத்தைப் பற்றியும் எடுத்துப் பேசுவதற்கில்லை.

(5) ஒரு எலெக்ஷன் மனுவானது, யாதொரு நபர் தேர்ந்தெடுக்கப்பட்டவரென்று பிரசுரப்படுத்தப்பட்ட 14-நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட்டாலொழிய வேறே விதமாக அங்கீகரிக்கப்படாது. ஆனால், இப்பிரிவின் கீழ் செய்யப்படும் யாதொரு மனுவானது எந்த நபர் பேரில் மனு செய்யப்படுகிறதோ அவருடைய உத்தியோக காலத்திற்குள் எப்பொழுதாவது செய்யப்படலாம்.

இப்பிரிவில் 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினுல் இரண்டு அம்சங்கள் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளது. முதலாவதாக, யாதொரு நபர் 54-வது பிரிவின் (1)-வது உபப்பிரிவின் கீழாவது அல்லது 59-வது பிரிவின் கீழாவது யோக்கியதை யற்றவராக இருந்தினுல் அவர் அங்கத்தினராக

இருப்பதற்கில்லை யென்று - இனி இப்பிரிவின் கீழ் செய்யப்படும் மனுவில் வற்புறுத்தப்படலாம் என்றுள்ளது. இரண்டாவதாக யாதொரு அங்கத்தினர் - இப்பிரிவின் கீழ் செய்யப்பட்டிருக்கும் யாதொரு மனுவினால் நீக்கப்படும் வரையிலும் - தாம் அந்த லோகல் போர்டில் இருந்து வருவதற்கு உரிமையுள்ளவராவர் என்று திருத்தப்பட்டுள்ளது. பழைய பிரிவில் "எண்ணப்படுவார்" என்றிருந்ததினால் அவருடைய அந்தஸ்தைப்பற்றி சந்தேகங்கள் கிளம்பி யிருந்தன(a). இனி இப்பிரிவின்கீழ் அவருடைய அந்தஸ்தைப்பற்றி யாதொரு சந்தேகமும் கிளப்பப்படுவதற்கில்லை.

இந்த சட்டத்தின் 55-வது பிரிவு முதல் 57-வது பிரிவு வரையிலுமுள்ள பிரிவுகள் சென்னை டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிடிகளின் சட்டத்தின் 49-முதல் 51-வரையிலுமுள்ள பிரிவுகளுக்குச்சரியான பிரிவுகளாகும். ஆகையால், சென்னை டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிடிகளின் சட்டத்தின் 49-முதல் 51-வது பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டிருக்கும் கேஸுகள் இந்த சட்டத்தின் 55-முதல் 57-வரையிலுமுள்ள பிரிவுகளின்கீழ் எற்படும் கேசுகளுக்கு பிரயோகிக்கப்படத் தக்கதாகும். யாதொரு எலெக்ஷன் மனுவில், ஒரு அபேக்ஷகருடைய அர்கமின்மை (யோக்கியதைக் குறைவு)யை ஒரு காரணமாகத் தெரிவித்து அக்காரணமானது எலெக்ஷன் கோர்ட்டில் வற்புறுத்தப்படலாமா? என்றும், கேள்வியானது-பல கேசுகளில் பலவிதமாக தீர்மானிக்கப்பட்டு கடைசியாக சென்னை ஹைக்கோர்ட்டில் செல்வராங்கராஜு vs. துரைசாமி முதலியார்(a) என்னும் பூரண பெஞ்சு கேவில், ஒரு எலெக்ஷன் மனுவிலும் அம்மாதிரியான அர்கமின்மையானது கிளப்பப்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. இன்னும் அந்தக் கேவில் ஒரு அங்கத்தினரின் அர்கமின்மையைப் பற்றின. ஒரு மனுவானது 51-வது பிரிவு (அதாவது லோகல் போர்ட்ஸ் ஆக்ட் 51-வது பிரிவு)-ன் கீழ் தான் ஒரு லோகல் போர்டு அங்கத்தினரால் செய்யப்பட வேண்டுமா, அல்லது ஒரு எலெக்ஷன் மனுவிலேயே செய்யப்படலாமா என்னும் பிரச்னை கிளம்பினதில், ஒரு எலெக்ஷன் மனுவிலும் அம்மாதிரியான பிரச்னைகளைக் கிளப்பலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. 1924-ம் வருஷத்தில் ஒரு பூரண பெஞ்சு கேவில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஒரு நபர் தாலுக்கா போர்டு அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். பிறகு அவர் அந்த தாலுக்கா போர்டு ப்ரெஸிடென்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு அவருடைய எலெக்ஷனானது சரியானதும் செல்லத்தக்கதுமல்லவென்று ஒரு ஸ்தாபிதம் பெறவும், அவருடைய எதிரியானவர் தேர்ந்தெடுக்கப்பட்ட ப்ரெஸிடென்டாக தீர்மானிக்கப்பட வேண்டுமென்றும் டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் முன்பாக மனு செய்யப்பட்டது. டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜானவர், தமது விசாரணையில், தேர்ந்தெடுக்கப்பட்ட

(a) சுப்பராய கௌண்டன் vs. முத்துகுமாரசாமி கௌண்டன்.
51 M. L. J. 265. A. I. R. 1926 Mad. 1001.

ப்ரெஸிடென்டு சரியாக (அதாவது விதிகளின் பிரகாரம்) நியமிக்கப்படாததினால், அவர் ப்ரெஸிடென்டினுடைய ஸ்தானத்திற்கு அபேக்ஷகராக நிற்பதற்கே அருகரல்லவென்று கண்டறிந்து - அவருடைய எலெக்ஷனை ரத்து செய்து அவரை ப்ரெஸிடென்டு ஸ்தானத்திலிருந்து நீக்கிவிட்டார். பிறகு, அந்த ப்ரெஸிடென்டு ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில், ஹைக்கோர்ட்டார் அவர்கள், லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 55, 56 - பிரிவுகளின்கீழ் யாதொரு யோக்கியதைக் குறைவுள்ளதாக ருசு இல்லாதபக்ஷத்தில், அவரை தாலுக்கா போர்டில் ஒரு அங்கத்தினராக நியமிக்கப்பட்டதானது செல்லாதென்று டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் முன்பாக மனுசெய்ய முடியாதென்றும், இன்னும், ஒரு டிஸ்டிரிக்ட் ஜட்ஜானவர் 57-வது பிரிவின்கீழ் ஒரு ப்ரெஸிடென்டினுடைய எலெக்ஷனைப் பற்றி யாதொரு மனுவை விசாரிப்பதில் அந்த நபர் முதலில் அந்த லோகல் போர்டுக்கு சரியாக நியமிக்கப்பட்டாரா இல்லையா? அல்லது சரியாக தேர்ந்தெடுக்கப்பட்டாரா இல்லையா? என்னும் பிரச்னையைக் கவனிக்கக் கூடாதென்றும் தீர்மானித்தனர் (a). இப்போது 57-வது பிரிவின் கீழ் செய்யப்படும் யாதொரு மனுவில் 54(1) பிரிவின் கீழ் ஏற்படக்கூடிய ஒரு அங்கத்தினருடைய அர்கமின்மையைப் பற்றியும் விசாரிக்கலாம் என்று 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டது. ஆகையால், மேலே சொல்லப்பட்ட கேஸானது வீரிய மற்றதாக போய்விட்டது ஆனால், அந்த கேஸில் மற்றொரு முக்கியமான தீர்மானம் ஏற்பட்டுள்ளது. அதாவது 57-வது பிரிவிலுள்ள டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜானவர் "ஒரு தனியான அதிகாரி" என்று கவனிக்கப்படமாட்டார். அவர் ஒரு கோர்ட்டு என்றுதான் கவனிக்கப்படுவாராகையால், இப்பிரிவில் "அவருடைய தீர்மானமானது முடிவானதாகும்" என்றிருந்தபோதிலும், அவருடைய தீர்மானத்தை தகுந்த காரணத்தைக் கொண்டு ஒரு ரிவிஷன் மனுவில் ஹைக்கோர்ட்டார் மாற்றலாமென்று தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அம்சத்தைச் சேர்ந்த வரையிலும் இந்த தீர்மானம் முக்கியமானதாகும். தவிர, யாதொரு லோகல் போர்டில் நடந்த ப்ரெஸிடென்டின் எலெக்ஷனில் ஓட்டு கொடுத்த ஒரு நபருடைய ஓட்டு செல்லத்தகுந்ததா இல்லையா ? என்னும் விஷயமானது 57-வது பிரிவின்கீழ் ஒரு அங்கத்தினரால் தாக்கல் செய்யப்படும் மனுவில் விசாரிக்கப்படலாம் (b) என்றும் ஒரு கேஸில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவின் கடைசி உபப்பிரிவானது மிகவும் முக்கியமானதாகும் யாதொரு லோகல் போர்டு அங்கத்தினர் யோக்கியதையற்றவரா இல்லையா? என்று சந்தேகம் கிளம்பும் பக்ஷத்தில் அல்லது புகார் சொல்லப்படும் பக்ஷத்

(a) பார்த்தசாரதி நாயுடு vs. கலேல்வராவ் 47. Mad. 369. A. I. R. 1924. Mad. 561—46. M. L. J. 20.

(b) தேவிகாமணி vs சேதுரத்தினம் அய்யர் 87 I. C. 363 = A I. R. 1925 Mad. 1034.

தில், அவர் இப்பிரிவின்படி டிஸ்டிரிக்ட் ஜட்ஜால் நீக்கப்படும்வரையிலும் அவருடைய அந்தஸ்து என்னவாகும் என்னும் விஷயமாக இதுவரையிலும் சந்தேகம் கிளம்பி சுப்பராயகவுண்டன் vs. முத்துகுமாரசாமி கௌண்டன் (a) என்னும் கேஸில் அவர் தன்னுடைய உரிமையை இழந்தவராவர் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் ஒரு அங்கத்தினர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அவர்களால் நீக்கப்படும் வரையிலும் தாம் உத்தியோகம் வகித்திருக்க உரிமையுள்ளவராவர் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

எலெக்ஷன் சம்பந்தமான ரகசியத்தை வெளிவிடுவது.

58. ஓட்டு எடுக்கும் அறையில் ஹாஜரா யிருக்கும் - ஓட்டு எடுக்கும் யாதொரு உத்தியோகஸ்தராவது, யாதொரு குமஸ்தாவாவது, வேறே நபராவது, சட்டப்படி அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு விஷயத்துக்காகவல்லாமல் மற்றப்படி ஓட்டு கொடுத்த யாதொரு நபர் எந்த அபேட்சகருக்காக ஓட்டு கொடுத்திருக்கிறாரென்று நேராகவாகிலும் நேராகவல்லாமல் மற்றப்படியாகிலும் காட்டும் எந்த சமாசாரத்தையேனும் யாதொரு நபருக்குத் தெரிவித்தால், அப்படிப்பட்ட ஒவ்வொரு உத்தியோகஸ்தருக்கும் குமஸ்தாவுக்கும் நபருக்கும், அக்கிரமமான யாதொரு முகாந்தரமாய் அப்படிப்பட்ட யாதொரு சமாசாரத்தைத் தெரிந்துகொள்ளும் ஒவ்வொரு நபருக்கும் ஆறுமாதத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு இருவகைக் காவல் தண்டனைகளில் எதுவாகிலும் அபராதமாகிலும், அவ்விரண்டுமாகிலும் விதிக்கப்படும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, ஒரு எலெக்ஷனில் நடக்கும் ரகசிய செய்கைகளைப் பற்றி அவைகள் வெளிப்படுத்தப்படக் கூடாதென்று கூறுகிறது. அதாவது, யாதொரு ஓட்டர் எந்த அபேக்ஷகருடைய சார்பாக ஓட்டு கொடுத்தார் என்பதைப்பற்றி யாதொரு போலிஸ் ஆபீஸராவது - அல்லது குமஸ்தாவாவது அல்லது வேறே ஒரு ஊழியராவது தெரிவிக்கக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு செய்தியைப்பற்றி யாதொரு நபரும் அறிவதற்கு அக்கிரமமான யாதொரு முகாந்தரமாய் பிரயத்தனப்படக் கூடாது.

ஆனால், நியாயமாகவும் சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையொட்டி ஒரு நபர், ஒரு ஓட்டர் எவருக்கு ஓட்டு கொடுத்தார் என்பதை அறியலாம். உதாரணமாக, எழுதப் படிக்கத்தெரியாத ஒரு ஓட்டர், ஓட்டுகொடுக்

(a) 51 M. L. J. 265 = A. I. R 1928 Mad. 1001.

கும் காலத்தில் – போலிங் ஆபீஸரானவர் அவரை எவர் சார்பாக ஓட்டு கொடுக்கப் போகிறார் என்று கேட்பதற்காக வேண்டிய விதிகளை அனுசரிக்குமிடத்து, அந்த ஓட்டர் சற்று மெதுவாகவோ அல்லது நடுக்கமாகவோ சொல்லும் பக்ஷத்தில் - போலிங் உத்தியோகஸ்தராவது அல்லது அபேக்ஷகராவது அல்லது அவருடைய ஏஜெண்டாவது அவ்வோட்டர் சொல்லுவதை ஸ்பஷ்டமாக தெரிவிக்கும்படி கேட்கலாம். இப்படிக் கேட்பதினால் யாதொரு சட்ட விரோதமும் ஏற்படாது. அப்படி கேட்பதும் அக்கிரமமான முகாந்தரமென பாவிக்கப்படாது.

இப்பிரிவானது பொதுவாக எலெக்ஷன் நடக்கும் காலத்தில் எந்தெந்த விஷயங்கள் ரகசியமாய் காப்பாற்றப்பட வேண்டுமோ அவைகளை காப்பாற்றுவதற்காகவும், வரம்பு மீறி நடப்பவர்களை தண்டிப்பதற்காகவும் ஏற்பட்டுள்ளது.

எலெக்ஷன் சம்பந்தமான குற்றங்களுக்காக குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்ட நபர்கள் வோட் கொடுப்பதற்கும் தெரிந்தெடுக்கப்படுவதற்கும் தகுதியற்றவர்களாவார்களென்பது.

59. 58-வது பிரிவின்படியாவது, இந்தியன் பீனல் கோட் IX-A அதிகாரத்தின்படியாவது தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றத்தைச் செய்து, குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரும் - அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் தேதிமுதல் ஐந்து வருஷங்கள் வரையிலுமாவது அல்லது கோர்டார் குறிப்பிடும் யாதொரு குறைந்தகால அளவு வரையிலுமாவது இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற யாதொரு எலெக்ஷனில் - ஓட்டு கொடுப்பதற்கோ தெரிந்தெடுக்கப்படுவற்கோ அல்லது லோகல் போர்டு அங்கத்தினர் உத்தியோகத்தை வகிப்பதற்கோ தகுதியற்றவராவார்.

குறிப்புகள்.

இப்பிரிவைப்பற்றி 57–வது பிரிவிலேயே சொல்லப்பட்டுள்ளது. யாதொரு நபர்-ஒரு எலெக்ஷன் குற்றத்திற்காக தண்டிக்கப்படும் பக்ஷத்தில் (அதாவது அந்த தண்டனையானது அப்பீலில் தீர்க்கப்படாமல் இருக்கவேண்டும். கீழ்கோர்ட்டார் தண்டனை செய்த பிறகு அப்பீல் கோர்ட்டார் தண்டனையை நீக்கிவிடும்படி உத்தரவு செய்யும் பக்ஷத்தில் கீழ்கோர்ட்டார் செய்திருக்கும் தண்டனை - ஒரு தண்டனை யென்க் கருதப்படாது) அவர் யாதொரு எலெக்ஷனில் ஓட்டு கொடுப்பதற்கும், அபேக்ஷகராக நிற்பதற்கும் அர்கமில்லாதவராவார். அவர் என்றையதினம், தண்டிக்கப்படுகிறாரோ-அன்று முதல் 5 வருஷம் வரையிலும் தன் ஓட்டு உரிமையைச் செலுத்துவதற்கில்லை.

கோர்ட்டார் அவரை தண்டிக்கும் காலத்தில் மேற்படி காலத்தைக் குறைக்கலாம். குறைக்கலாம் என்றிருக்குமானால் கோர்ட்டார் அடியோடே அம்மாதிரியாதொரு பாதகம் இருக்கக் கூடாதென்றே தீர்மானிக்கவும் கூடலாம்.

இந்தியன் பீனல்கோட் 1X-A பிரிவானது எலெக்ஷன் குற்றங்களைப் பற்றின அத்தியாயம். அவ்வத்தியாயத்தில், எலெக்ஷன்களில் ஓட்டு செய்வதற்காக லஞ்சம் கொடுப்பது, அல்லது லஞ்சம் வாங்குவது, அல்லது லஞ்சம் வாங்குவதற்கு யத்தனிப்பது அல்லது ஒரு ஓட்டரை எவ்விதமாகவாவது பயமுறுத்துவது அல்லது ஒரு எலெக்ஷனில் ஆள் மாறாட்டமாக ஓட்டு கொடுப்பது அல்லது ஒரு அபேக்ஷகருடைய எழுத்து மூலமான அனுமதியில்லாமல் ஒரு பொது மீட்டிங் கூட்டி அதற்காக பணம் செலவழிப்பது அல்லது எலெக்ஷன்களில் நடக்கும் சிலவுகளுக்கு கணக்கு வைக்காமலிருப்பது இப்படிப்பட்ட குற்றங்களைப்பற்றியும் அவைகளுக்குண்டான தண்டனைகளைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

5-ம் அத்தியாயம்.

சொத்து விஷயமாயும் சிப்பந்தி விஷயமாயும் லோகல் போர்டுகளுக்குள்ள அதிகாரங்கள்.

இவ்வத்தியாயத்தில் லோகல் போர்டுகளுடைய சொத்துக்களும் சிப்பந்தி சிலவுகளும் இன்னின்னவை என்றும் அவைகளை எம்மாதிரி செலுத்த வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இவ்வத்தியாயத்தில் 60-முதல் 74-A-வது பிரிவு வரையிலும் அடங்கியுள்ளன. இவ்வத்தியாயத்திலுள்ள பிரிவுகளில் பலவும் 1930-ம் வருஷத்திய லோகல் போர்டுதிருத்த சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவின் கீழும் தக்கபடி அப்பிரிவு அடைந்திருக்கும் மாறுதல்கள் காட்டப்பட்டிருக்கிறது.

சொத்து.

60. (1) யாதொரு டிஸ்டிரிக்ட்டிலுள்ள எல்லா பொது ரஸ்தாக்களும்—

பொதுவான பாட்டைகளும் அவைகளோச்சேர்ந்தவைகளும் லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிப்பது.

(a) அவை டிஸ்டிரிக்ட்டு ரஸ்தாக்களென்று வகுக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில் அந்த டிஸ்டிரிக்ட்டு போர்டிலும்,

(b) அவை தாலூக்கா ரஸ்தாக்கள் என்று வகுக்கப்படும் பக்ஷத்தில் அது சம்மந்தப்பட்ட தாலூக்கா போர்டிலும்,

(c) அவை டிஸ்டிரிக்ட்டு ரஸ்தாக்கள் அல்லது தீர்மானிக்கா ரஸ்தாக்கள் என்று பிரிக்கப்படாமலிருக்கும் பக்ஷத்தில் அவை சம்மந்தப்பட்ட பஞ்சாயத்திலும்,

சங்கிரமிக்கவேண்டும்.

(2) பொதுவான யாதொரு ரஸ்தாவைச் சேர்ந்த சகல தளவரிசைகளும் கல் முதலிய சாமான்களும், அப்படிப்பட்ட பாட்டைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சகல வேலைகளும் சேகரிக்கப்பட்டிருக்கும் சாமான்களும் இதரமான சகல வஸ்துக்களும், லோகல் பண்டின் செலவில் அமைக்கப்பட்டிருந்தாலுஞ்சரி, மற்றப்படியாகிலும்சரி, யாதொரு பொதுவான பாட்டையிலாவது அதன் பக்கமாயாவது கீழாவது இருக்கிற சகல சாக்கடைக்கால்களும் ஜலதாரைகளும் ஜலதாரை சம்பந்தமான கட்டுவேலைகளும் டன்னல்களும் (தரைகீழ்ப் பாதைகளும்) கல்வர்ட்டுகளும் (மூடிய ஜலதாரைகளும்), அவைகளைச் சேர்ந்த சகல கட்டுவேலைகளும் சாமான்களும் வஸ்துக்களும் - மேற்படி பொதுவான பாட்டை எந்த லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிக்கிறதோ அவர்களிடத்தில் சங்கிரமிக்கவேண்டும்.

(3) அப்படிப்பட்ட யாதொரு பொதுவான பாட்டை - சாக்கடைக்கால் - ஜலதாரை, ஜலதாரை சம்பந்தமான கட்டுவேலை - டன்னல் அல்லது கல்வர்ட்டுக்கு இந்த ஆக்ட் பிரயோகப்படாதபடி லோகல் கவர்ன்மென்டார் அறிக்கை மூலமாய் நிவர்த்தி செய்வதுடன் அந்த அறிக்கையை திருத்தலாம் அல்லது ரத்தும் பண்ணலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவில் பொது ரஸ்தாக்களும் பாட்டைகளும் இன்னாருடைய சுவாதீனத்திலிருக்க வேண்டுமென்றும் இன்னாருடைய அதிகாரத்திற்குட்பட்டிருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. பொதுவான பாட்டை அல்லது ரஸ்தா என்பது என்னவென்றும், அதன் விஸ்தீரண அளவும் வியாபிக்கும் அளவும் இச்சட்டத்தில் 3 (18)-பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரிவிலுள்ள அர்த்த விளக்கத்தின் பிரகாரம் ஒரு ரஸ்தா அல்லது பாட்டையானது (Public Road) அதன் இரு பக்கத்திலுமுள்ள சொத்துக்களின் எல்லைகள்வரையிலும் வியாபிப்பதாகுமென்று சொல்லப்பட்டுள்ளது.

பொது ரஸ்தாக்கள் அல்லது பாட்டைகள் மூன்று விதமாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அதாவது டில்டிரிக்ட்டு ரஸ்தாக்க ளென்றும், தாலூக்கா ரஸ்தாக்க ளென்றும், மற்ற இதர ரஸ்தாக்க ளென்றும் ஆக மூன்று விதங்களாக ரஸ்தாக்கள் இருக்க வேண்டுமென்று இந்தப் பிரிவினல் விளங்குகிறது. டில்டிரிக்ட்டு ரஸ்தாக்கள்-டில்டிரிக்ட்டு போர்டினிடத்தில் சங்கிரமித்ததாக இருக்க வேண்டும். அதே மாதிரியாக தாலூக்கா ரஸ்தாக்களும், இதர ரஸ்தாக்களும் முறையே தாலூக்கா போர்டு, பஞ்சாயத்து ஆகிய இவைகளிடத்தில் சங்கிரமித்ததாக இருக்க வேண்டும். பொது ரஸ்தாக்களில் ஏதாவது ரிப்பேர் முதலிய சீர்திருத்தங்களை செய்வதாக இருந்தால் அவைகள் எந்தெந்த லோகல் போர்டில் சங்கிரமித்துள்ளனவோ அந்தந்த லோகல்போர்டினல்தான் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். யாதொரு லோகல் போர்டானது தன்னுடைய சுவாதீனத்திலுள்ள பொது ரஸ்தா அல்லது பாட்டைகளை சரிவர கவனித்து ரிப்பேர் செய்யாமற்போனல் அல்லது அந்த பாட்டைகளிலுள்ள யாதொரு ஜலதாரை, சாக்கடை, மூடு ஜலதாரை முதலியவைகளை சரியான ஸ்திதியில் வைத்துக் கொண்டிராமலிருக்கும் பக்ஷத்தில், டில்டிரிக்ட்டு கலெக்டரானவர் 39-வது பிரிவின் கீழ் உடனே அந்த வேலைகளை செய்துவிட்டு லோகல் பண்டிலிருந்துசெலவழிந்த தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். 41-வது பிரிவின் கீழ், ஒரு லோகல் போர்டு விஷயமாக அந்த போர்டானது தாம் செய்யவேண்டிய காரியங்களை செய்யும்படிக்கும், தவறினல் அதற்காக ஒரு நபரை நியமித்து அவரால் அந்த வேலை பூர்த்தி செய்யும்படி உத்தரவிட லோகல் கவர்ன்மென்டாருக்கு அதிகாரம் உண்டு. இன்னும், 42-வது பிரிவின்கீழ் ஒரு லோகல் போர்டானது தமக்குக் கீழுள்ள மற்றொரு லோகல் போர்டுக்கு அந்த போர்டு பூர்த்திசெய்ய வேண்டிய காரியங்களைச் செய்யும்படி உத்தரவிடலாம். (39, 41, 42-இந்த பிரிவுகளையும், அவைகளின் கீழுள்ள குறிப்புகளையும் பார்க்க.)

இப்பிரிவின் (2)-வது உபப்பிரிவில், பொது ரஸ்தா அல்லது பாட்டை (Public Roads) பாட்டைகளில் உள்ள எல்லா கட்டிடங்களும், கற்களும்-அந்த பாட்டைக்காக ஏற்படுத்தப்பட்ட மற்ற எல்லா கட்டிட வேலைகள், சாமான்கள் இன்னுமுள்ள இதர வஸ்துக்கள் இவைகளும் அந்த பாட்டைகளின் ஓரங்களிலாகிலும், அல்லது நடுவில் அல்லது அடியிலுள்ள எல்லா சாக்கடைகள், ஜல தாரைகள், தள வரிசைகள், ஜலதாரை சம்பந்தமாக கட்டு வேலைகள், மூடிய ஜலதாரைகள் ஆகிய இவைகளும் அந்தந்த லோகல்போர்டில் சங்கிரமித்ததாகும்.

(3)-வது உபப் பிரிவில் யாதொரு பொது ரஸ்தாவைப்பற்றியாவது அல்லது சாக்கடை முதலியவைகளைப்பற்றியாவது தங்களிஷ்டப்படி அறிக்கைகளைச் செய்வதற்கு லோகல் கவர்ன்மென்டாருக்கு அதிகாரமுள்ளதென்று சொல்லப்பட்டுள்ளது. இப்பிரிவில் எந்தெந்த ரஸ்தாக்கள் அல்

ல்து - பாட்டைகள் - எந்தெந்த லோகல் போர்டுகளைச் சேர்ந்ததாகு மென்பதைப்பற்றி எவர் தீர்மானிப்பதென்று யாதொன்றும் சொல்லப்பட வில்லை. ஆனல், (3)-வது உபப் பிரிவை கவனிக்குமிடத்து லோகல் கவர்ன் மென்டாரேதான் பொதுவான ரஸ்தாக்களை பிரித்துக் கொடுக்க வேண்டு மென்று விளங்கும்.

இந்தப்பிரிவில் "சங்கிரமிக்கவேண்டும்" என்திருப்பதினல், யாதொரு லோகல்போர்டு அமைக்கப்பட்டபிறகுதான் இந்த உரிமையானது அடையப் பெறலாமேயொழிய யாதொரு லோகல்போர்டான்து அமைக்கப்படாததற்கு முன்னமே, அதற்கு யாதொரு பாத்தியதையும் ஏற்பட்டுவிட்டதாக கவனிக் கப்படாது ஒரு கிராமமானது சர்வே செய்யப்படும்காலத்தில் சர்வே ஆபீசர் அவர்கள், ஒரு சொத்தானது ஒரு அருணுசலம் செட்டியார் என்பவருக்கு சொந்தமானதென்றும், பொதுவான ரஸ்தாவைச் சேர்ந்ததல்லவென்றும் தீர்மானித்தார். அந்தகாலத்தில் அந்த கிராமமானது ஒரு தாலுக்காபோர்டி னுடைய விஸ்தீரணத்தில் சேர்க்கப்பட்டிருந்தினுல், தாலுக்காபோர்டார் தான் சர்வே ஆபீசர் முன்பாக தமது ஆக்ஷேபனைகளைத் தெரிவித்து வந்த னர். சர்வே ஆபீசருடைய தீர்மானமானது 12—5—1920-ல் செய்யப்பட்டது. பிறகு அந்தக் கிராமத்திற்காக ஒரு யூனியன்போர்டு ஏற் பட்டு தேவக்கோட்டை யூனியன்போர்டென்று பெயரிடப்பட்டு 1-4-1922-ல் அமைக்கப்பட்டது. பிறகு தேவகோட்டை யூனியன்போர்டு ப்ரெஸிடென்டு ஷ. அருணுசலம் செட்டியார் என்பவர்மீது வியாஜ்ஜியம் தொடங்கி அவர் பக்ஷமாக சர்வே ஆபீசரானவர் செய்திருக்கும் தீர்மானமானது தப்பான தென்று ஸ்தாபிதம்பெறவும், அவர் கைப்பற்றியுள்ள நிலத்தை வரப்படுத்த வும் தாவா செய்தார். இந்த சந்தர்ப்பத்தில் தேவக்கோட்டை யூனியன்போர் டானது தாலுக்கா போர்டினுடைய கடமைகளையும், உரிமைகளையும் பெற் றிருந்த ஒரு கூட்டமென்று கவனிக்கப்படுமா? என்றும், யூனியன்போர்டா னது தாலுக்கா போர்டினுடைய பிரதிநிதியாக இருந்து தாவா செய்ய உரி மையுண்டா என்றும் கேள்விகள் வந்ததில் ஹைக்கோர்ட்டாரவர்கள், தேவக் கோட்டை யூனியன் போர்டானது, புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்ட மானதாதலாலும், தாலுக்கா போர்டினுடைய அலுவல்களுக்கும் யூனியன் போர்டுகளினுடைய அலுவல்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையாதலா லும், அந்த யூனியன் போர்டானது தாவா செய்வதற்கில்லையென்று தீர்மா னிக்கின்றனர். (a)

இனி இச்சட்டத்தின்கீழ் பஞ்சாயத்துகள் மிகவும் அதிகமாக அமைக் கப்படப்போவதால் அவர்களும் இந்த தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் தங்கள் உரிமைகளை கவனித்துவரவேண்டும். ஏதாவது தாவாக்கள்

(a) தேவகோட்டை யூனியன் போர்டு ப்ரெஸிடென்டு vs. A. L. A. R. R. M. அருணுசலம் செட்டியார், 58. M. L. J. 107=1930 A. I. R. Mad. 302.

செய்யவேண்டுமானால், அந்த தாவாவானது எவ்வளவுவரையிலும் செல்லத் தக்கின்தாகுமென்றும், அந்த தாவா ஜெயிப்பதற்கு எம்மாதிரியாகப் பிராது கோர்க்கப்படவேண்டுமென்றும் மிகவும் ஆழ்ந்து கவனித்தப்பிறகே செய்ய வேண்டும்.

சேர்க்கப்பட்ட சாக்கடைத் தண்ணீர் முதலியது லோகல் போர்டாருடைய தாவது.

61. இந்த ஆக்டின்படி யாதொரு லோகல் போர்டாரால் சேர்க்கப்பட்ட சகல குப்பையும் சாக்கடைத் தண்ணீரும் அசுத்தங்களும் இதர வஸ்துக்களும் அந்த லோகல் போர்டாருக்குச் சொந்தமானவையாகும்.

குறிப்புகள்.

இந்தப்பிரிவானது 60-வது பிரிவை ஒட்டினதாகும். ஒரு பொது ரஸ்தா அல்லது பாட்டையில் குப்பை முதலியவைகள் சேரும்பக்ஷத்தில் அவைகளை எடுத்துக்கொண்டு போவதற்கு அதன்லோகல்போர்டுக்கு உரிமையுள்ளதாகும் என்று இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது அப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட குப்பை முதலியவைகளை அந்த லோகல்போர்டானதுவிற்று தங்களுடைய நிதியில் சேர்த்துக்கொள்ளலாம்.

பஞ்சாயத்துக்களின் ஹத்துக்குள் இருக்கும் டில்டிரிக்ட்டு அல்லது தாலுக்காபோர்டுகளின் ரஸ்தாக்களில் சேரும் குப்பை முதலியவைகள் எவர்களுக்கு சொந்தமாகும் என்னும் கேள்வியானது அடிக்கடி ஏற்பட்டு லோகல்போர்டுகளுக்குள் வீண் சச்சரவுகளை கிளப்புவதாக இருக்கிறது. இந்தப்பிரிவில், இந்த ஆக்டின்படி "யாதொரு லோகல்போர்டாரால் சேர்க்கப்பட்ட சகல குப்பையும்" என்திருக்கிறதேயொழிய, யாதொரு லோகல் போர்டு ரஸ்தா அல்லது பாட்டையிலுள்ள சகல குப்பைகள் என்று சொல்லப்படவில்லை யாதலால்-ஒரு லோகல்போர்டானது தங்களுடைய விஸ்தீரணத்திற்குள் உள்ளதும் தங்களுக்கென்று சங்கிரமித்திருக்கும் ரஸ்தாக்களைத் தவிர வேறு ரஸ்தாக்களிலுமுள்ள குப்பைகளையும் எடுக்கலாமென்று ஏற்படும். ஒரு லோகல் போர்டானது, எடுத்துவரும் அல்லது சேமித்துவரும் குப்பை விஷயமாக மற்றொரு லோகல் போர்டானது அதிகாரம் கொண்டாடுவதற்கில்லை. அப்படி ஏதாவது அதிகாரம் கொண்டாடும்பக்ஷத்தில் அவர்கள் தங்களுக்குள் சமாதானமாக ஒரு முடிவுக்கு வராதபக்ஷத்தில் 234-வது பிரிவின்கீழ் தங்களுடைய தகராறுகளைப்பற்றி லோகல் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்து-லோகல் கவர்ன்மெண்டாருடைய தீர்மானத்திற்கு உட்பட வேண்டும். வேண்டுமானால் லோகல் கவர்ன்மெண்டார் 60-வது பிரிவின் (3)-வது உபப்பிரிவில் கண்டிருக்கிற பிரகாரம் தங்கள் அதிகாரத்தைச்

செலுத்தி லோகல் போர்டுகளில் உள்ள தகராறுகளைத் தீர்க்கும்படியாக ஒரு ரஸ்தா அல்லது பாட்டையின் இன்னின்ன பாகமானது இன்னின்ன ருடைய ஸ்வாதீனத்திலிருக்க வேண்டுமென்று அறிக்கைகளைச் செய்யலாம்.

62. டிஸ்ட்ரிக்ட் போர்டார் - நிர்ணயிக்கப்படக்கூடிய மேல் விசாரணைக்குட்பட்டு, யாதொரு லோகல் போர்டாரிடம் சங்கிரமித்துள்ள எந்த அசையாப் பொருளாவது அதே டிஸ்ட்ரிக்டிலுள்ள வேறே யாதொரு லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிக்க வேண்டுமென்று அறிக்கை மூலமாய் நிர்ணயிக்கலாம்; அதன்மேல், அப்படிப்பட்ட பொருளானது - மேடி விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து அதேமாதிரியாய்ச் சங்கிரமிக்க வேண்டும்.

அசையாப்பொருளை ஒரு லோகல் போர்டாரிடமிருந்து மற்றொரு லோகல் போர்டாருக்கு ட்ரான்ஸ்பர் செய்வது.

63. (1) லோகல் கவர்ன்மென்டாரின் மேல்விசாரணைக்குட்பட்டு செனியூ போர்டார் - அறிக்கை மூலமாக, யாதொரு லோகல் போர்டாரின், சம்மதத்துடன், தர்மசம்பந்தமான எந்த மானியத்தின் விஷயமாய் சென்னப்பட்டணம் தர்ம சம்பந்தமான மானியங்களையும் அவைகள் ஸர்க்கார் பரமரவதையும் குறித்த 1817-ம் ஹுபத்து 7-வது ரெகுலேஷனில் கண்டநிபந்தனைகளின்படி செனியூ போர்டாருக்கு அதிகாரங்களும் அலுவல்களும்ஏற்பட்டிருக்கிறனவோ அப்படிப்பட்ட தர்ம சம்பந்தமான யாதொரு மானியத்தின் நிர்வாகத்தையும் மேல் விசாரணையையும் அந்த லோகல் போர்டாருக்கு மாற்றலாம்: அதன் மேல், அந்த விஷயத்தில் செனியூ போர்டாருக்குள்ள சகல அதிகாரங்களும் அலுவல்களும்-மேடி ரெகுலேஷனில் அந்த போர்டைப் பற்றி பிரத்தியேகமாகச் சொல்லியிருந்தால் எப்படியோ அப்படியே அதற்கு ஏற்படுவதுமன்றி, மேடி லோகல் போர்டு அந்த மானியத்தை நிர்வகிக்கவும் மேற்பார்வை பார்க்கவும் வேண்டும்.

சென்னப்பட்டணத்து 1817 ம்ஹுபத்திய 7-வது ரெகுலேஷன்படி தர்மசம்பந்தமான மானியங்களையும் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட தர்ம சம்பந்தமான இனாம்களையும் லோகல் போர்டுகளுக்கு மாற்ற அதிகாரம்.

(2) லோகல் கவர்ன்மென்டாராவது இது விஷயமாய் அவர்கள் அதிகாரம் கொடுக்கக்கூடிய வேறே அதிகாரியாவது—

யாதொரு லோகல் போர்டாரின் சம்மதத்துடன், அங்களாலாகிலும் வேறே எந்த அதிகாரியாலாகிலும் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட தர்ம சம்பந்தமான இனமை மேடி லோகல் போர்டாருக்கு கொடுக்க லாம்; ஆனால், அப்படிப்பட்ட இனமிலிருந்து கிடைக்கும் நிகர வரும் படியானது - மேடி லோகல் போர்டின் நிதி உபயோகிக்கப்படக்கூடிய யாதொரு காரியத்துக்கு மாத்திரமே உபயோகிக்கப்படக்கூடும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது மிகவும் முக்கியமானதோர் பிரிவாகும். இப்பிரி வில் கண்டிருக்கும் சென்னை தர்ம ஸ்தாபனமான மானியங்களையும், அவை கள் சர்க்காரர் பரமாவதையும் குறித்த 1817-ம் வருஷத்திய ரெகுலேஷனின் சாராம்சம் பின்வருமாறு :—

சுவர்ன்மென்டினுலாவது அல்லது பிரைவேட் நபர்களினுலாவது, பொது தர்மங்களுக்கும்-பொதுஜன சௌகரியத்திற்கும்,சேவைக்கும்கட்டப் பட்டிருக்கும் மஸூதிகள், ஹிந்து கோவில்கள், பாடசாலைகள், சத்திரங்கள் இவைகளும், இவைகளின் பரிபாலனத்திற்காகத் தனியாக ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கும் மானியங்களும், இதர சொத்துக்களும் சரிவர கவனிக்கப்படா மலும், எந்த தர்ம காரியங்களுக்கு அவை ஏற்பட்டனவோ அதற்கு விரோத மாக அவைகளை பரிபாலிப்பவர்கள் சுயப்பிரயோஜனம் செய்துக்கொண்டு தர்மத்தை அடியோடே கைவிட்டு வருவதாக சுவர்ன்மென்டாருக்கு தோற் றினபடியால்-அந்த மஸூதி, கோவில், பாடசாலை, சத்திரம் முதலியவைகளை சரிவரப் பார்ப்பதற்கும், அவைகளின் வரும்படிகளை தர்மகாரியத்திற்காகவும் தர்ம சொத்துக்களை பழுதுபார்த்து ரிப்பேர் முதலியவைகள் செய்வதற்காக வும் அவைகளை பதிமுதல்செய்து, சரியான அதிகாரிகளிடம் ஒப்புவிக்கவேண் டியதற்காக 1817-ம் வருஷத்திலேயே மேற்படி ரெகுலேஷன் ஏற்படுத்தப் பட்டது. அந்த ரெகுலேஷனின் பிரகாரம் சென்னை ரெவினியூ போர்டா னது எல்லா தர்மஸ்தாபனங்களையும் பொதுவாக மேற்பார்வைப் பார்த்து வரவேண்டுமென்றும், அந்த ஸ்தாபனங்களின் வரும்படியானது அந்த ஸ்தாபனங்களுக்கு வேண்டிய தர்மத்திற்காகவே சரிவர உபயோகப்படுத்தப் பட்டு வருகிறதா வென்றும், அந்த ஸ்தாபனங்களின் கட்டடங்கள் சரி யான ஸ்திதியில் காப்பாற்றப்பட்டு வருகிறதாவென்று பார்த்துவரவேண்டு மென்றும், ரெவினியூ போர்டார்-சுவர்ன்மென்டார் பதிமுதல் செய்திருக் கும் சொத்துக்களை தாங்களே ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு மற்ற தர்ம ஸ்தாபனங்களைப்போல் அவைகளை பரிபாலித்து வரவேண்டுமென்றும் அவ் வப்பொழுது அந்த ஸ்தாபனங்களை பாதுகாத்து வருவதற்கு உரிமையுள்ள நபர்களை நியமிப்பதும், தள்ளி விடுவதும், இன்னும் பொதுவாக அந்த தர்ம ஸ்தாபனமானது எந்த நோக்கத்துடன் ஏற்பட்டதோ அதைப் பூர்த்திசெய்

விப்பதற்காகவும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இப்பிரிவில், மேலே சொல்லப்பட்ட ரெகுலேஷனின்கீழ் ரெவினியூ போர்டார் மேற்பார்வை பார்த்து வரும் சொத்துக்களையும், பரிபாலனம் செய்து வரும் தர்ம சொத்துக்களையும், ஒரு லோகல் போர்டானது ஒப்பு வித்துக்கொண்டு ரெவினியூ போர்டுக்குள்ள சகல அதிகாரங்களையும் பெற்று தர்ம பரிபாலனம் செய்து வரலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. தென் னிந்தியாவில் தர்ம சிந்தனையுள்ள பல மஹான்கள் தர்மத்திற்காக ஏராள மான சொத்துக்களையும், கட்டிடங்களையும் ஏற்பாடு செய்துவிட்டிருக்கை யில் - அவைகளை பரிபாலிப்பவர்களில் சிலர் மேற்படி மஹான்களுடைய தர்ம சிந்தனையை கைப்பற்றுமல் தர்ம வரும்படிகளை தங்கள் சுய நலத்திற் காக உபயோகப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். முக்கியமாக, பிரார்த் தனை ஸ்தலங்களிலுள்ள சத்திரங்களும், பொது கட்டிடங்களும் கவனிக் கத் தக்கதாகும் இப்பிரிவின் கீழ், ரெவினியூ போர்டானது லோகல் கவர்ன் மென்டினுடைய மேற்பார்வைக்குட்பட்டு ஒரு லோகல்போர்டுக்கு தர்மஸ்தா பனங்களின் பரிபாலனத்தை ஒப்புவித்து விடலா மென்றிருந்த போதிலும், லோகல் போர்டுகளும் இப்பிரிவிலுள்ள அம்சங்களை யுத்தேசித்து ரெவினியூ போர்டுக்கு தங்கள் வில்லீரணத்திலுள்ள பொது சத்திரங்கள் முதலியவை சீரழிந்து போயிருக்கும் பக்ஷத்தில் அவைகளை சர்க்கார் பரமாக்கித் தங்க ளுக்கு ஒப்புவிப்பதற்காகக் கேட்கலாம்.

இப்பிரிவின் இரண்டாவது உபப் பிரிவில் லோகல் கவர்ன்மென்டாரே நேராக தாங்கள் மீண்டும் எடுத்துக்கொண்ட இனம்களை லோகல் போர்டுக ளுக்கு ஒப்புவித்து விடலாமென்றும், ஆனால் அந்த இனம்களின் வருமா னத்தை அந்த லோகல் போர்டானது தாங்கள் எந்தெந்தகாரியங்களை நடத்த லாமோ அந்தக் காரியங்களைத் தவிர வேறே யாதொரு காரியத்திற்கும் உபயோகப்படுத்துவதற்கில்லை யென்றும் சொல்லப்பட்டுள்ளது.

சொத்தை டிரஸ்டில் வைத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளும் அதிகாரத்தைப் பற்றிய வரையறை.

64. எந்தக் காரியங்களுக்கு லோகல் போர்டின் நிதியை உபயோகிக்கலாமோ அந்தக் காரியங்களை அபிவிருத்தி செய்வதற்கு மாத்திரமே அவைகளுக்கு சம்பந்தப்பட்ட டிரஸ்டுகளை லோகல் போர்டு ஒப்புக்கொள்ளலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவின்கீழ் ஒரு லோகல் போர்டானது மேலே 63-வது பிரிவின் கீழ் சொல்லப்பட்டிருக்கும் தர்ம விஷயங்களைத் தவிர வேறே யாதொரு டிரஸ்ட்டை ஒப்புவித்துக் கொள்ளலாம்; ஆனால் - அந்த போர்டின்

பணமானது எந்த காரியங்களுக்காக உபயோகப்பட்டு வருமோ அந்தக் காரியங்களுக்குத்தான் அந்த டிரஸ்ட்டுத் தொகையை உபயோகப்படுத்தி வரலாம்.

65 லோகல் கவர்ன்மென்டாரால் செய்யப்படும் விதிகளுக்குட்பட்டு, ஒரு டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா போர்டாவது அல்லது ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டு அல்லது தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு இவர்களாவது அல்லது ஒரு கலெக்டராவது அல்லது யாதொரு பிரைவேட் நபர் அல்லது கூட்டமாவது, ஒரு பஞ்சாயத்தினுடைய சம்மதத்துடன் தங்களுக்குள் ஏற்படும் நிபந்தனைகளுக்கிணங்கி ஒரு ஸ்தாபனத்தினுடைய நிர்வாகத்தையாவது அல்லது யாதொரு வேலையை நடத்துவதையாவது அல்லது காப்பாற்றுவதையாவது அல்லது அந்த பஞ்சாயத்து அதிகாரம் கொண்டிருக்கும் விஸ்தீரணத்திற்குள்ளாவது அல்லது வெளியேயாவது யாதொரு அதிகாரத்தை செலுத்தும் உரிமையையாவது அல்லது யாதொரு கடமையை நடத்துவிப்பதையாவது கொடுத்துவிடலாம்.

பஞ்சாயத்துக்கு ஸ்தாபனங்களையும் வேலைகள் முதலியவைகளையும் மாற்றி விடுதல்.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்த சட்டத்தினால் மிகவும் மாற்றப்பட்டு புதியதாகவே கோர்க்கப்பட்டுள்ளது. பழைய பிரிவில் லோகல் கவர்ன்மென்டார் ஒரு லோகல்போர்டுக்கு யாதொரு தர்ம ஸ்தாபனத்தின் பரிபாலனத்தை நடத்தி வரும்படி உத்திரவிடலாமென்று சொல்லப்பட்டிருந்தது இப்பொழுது ஒரு டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா போர்டாவது, அல்லது ஒரு கலெக்டர் அல்லது பிரைவேட் நபர் அல்லது நபர்களாவது ஒரு ஸ்தாபனத்தினுடைய நிர்வாகத்தையாவது அல்லது யாதொரு வேலையை நடத்துவதையாவது அல்லது காப்பாற்றுவதையாவது யாதொரு பஞ்சாயத்துக்கு கொடுத்துவிடலாம் என்றுள்ளது. இன்னும், அப்படிப்பட்ட ஸ்தாபனம் அல்லது வேலையானது ஒரு பஞ்சாயத்தினுடைய எல்லைக்கு வெளியேயிருந்தபோதிலும் பஞ்சாயத்துகள் அவைகளில் தமது அதிகாரத்தைச்செலுத்த உரிமையுள்ளனவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

65-A. லோகல் கவர்ன்மென்டார், அவர்கள் நிர்ணயிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஒரு பஞ்சாயத்து ஏதாவது உபகாரத்தொகை செலுத்தவேண்டுமென்று இருந்தால் அதற்கும் உட்பட்டு, அந்த பஞ்சாயத்துக்கு, விரகுக்காகவோ அல்லது மேய்ப்புக்காகவோ அல்லது வேறே எந்த காரியங்களுக்காகவோ ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கிராம காடுகளை நிர்வாகம் செய்யும் உரிமையையும், காப்பாற்றும் கடமையையும், நடத்தும் கடமையையும் மாற்றிவிடலாம்.

கிராம காடுகளை பஞ்சாயத்துக்கு மாற்றிவிடுவது.

குறிப்புகள்.

இப்பிரிவானது, 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்தச் சட்டத்தினால் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிராமங்களுக்கு அடுத்தாப்போலுள்ள காடுகளை பாதுகாப்பதற்கும், காப்பாற்றுவதற்குமுள்ள அதிகாரத்தை, லோகல் கவர்ன்மென்டார் யாதொரு பஞ்சாயத்திற்குகொடுத்து விடலாம். இப்பொழுது சென்னை பாரஸ்ட்டு ஆக்டின்கீழ் பாரஸ்டு பஞ்சாயத்துகள் செய்துக் கொண்டு வரும் வேலைகளை பஞ்சாயத்துகளுக்கும் ஒப்புவிக்கும்படியாக இருப்பதற்கு இப்பிரிவானது ஏற்படுத்தப்பட்டது. பாரஸ்டு ஆக்டின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் காட்டு பஞ்சாயத்துகள் இப்பொழுது நேராக கவர்ன்மென்டினால் மேற்பார்வை யிடப்பட்டு வருகின்றன. காட்டு பஞ்சாயத்துகள் - கவர்ன்மென்டுக்கு ஒரு கட்டணத்தைச் செலுத்திவிட்டு மேய்ப்பு முதலியவைகளுக்காக கிராமகாடுகளை அனுபவித்து வரலாமென்று விதிகள் ஏற்பட்டு உள்ளன. இப்பொழுது ஷே கிராமகாடுகளை இப்பிரிவின்கீழ் பஞ்சாயத்துகளினுடைய ஸ்வாதீனத்தில் ஒப்புவிப்பதினால் லோகல் கவர்ன்மென்டுக்கு சற்று பொறுப்பு குறைவதாகும். இனி கொஞ்சம் கொஞ்சமாக பாரஸ்ட்டு பஞ்சாயத்துகள் சரிவரநடத்தப்படாமலிருக்கும் விஷ்தீரணங்களில், பஞ்சாயத்துகளே இச்சட்டத்தின்கீழ் அவைகளின் பரிபாலனத்தை மேற்கொள்வதற்கு வசதி ஏற்பட்டுள்ளது. கிராமகாடுகளை பரிபாலனத்திற்காக மேற்கொள்ளும்பக்ஷத்தில், அவைகளுக்காக ஏதாவது கட்டணம் கட்டவேண்டுமென்றிருந்தால் அதை லோகல் கவர்ன்மென்டாருக்கு கட்டின பிறகுதான் பஞ்சாயத்துகள் - கிராம காடுகளை தங்கள் வசமாக்கிக் கொள்ள உரிமையுண்டு. பாரஸ்ட்டு ஆக்டின்கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாரஸ்டு பஞ்சாயத்து அங்கத்தினர்கள், கவர்ன்மென்டால் நியமிக்கப்பட்டவர்கள். இனி லோகல்போர்ட்டில் ஆக்டின்கீழ் உள்ள பஞ்சாயத்துகளில் உள்ள அங்கத்தினர்கள் யாவரும் பொதுஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுபவராதலால், அவர்களின் நிர்வாகமானது பொது ஜனங்களினுடைய இஷ்டத்திற்கும், சௌகரியத்திற்கும் தகுந்தாப்போல் இருக்கவசதி யேற்படும்.

65-B. லோகல் கவர்ன்மென்டார், அவர்கள் நிர்ணயிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு பஞ்சாயத்துக்கு, யாதொரு கிராம ஜலாஸான் வேலைகளை காப்பாற்றி நடத்திவைப்பதையும், நீர்ப்பாய்ச்சல் முறைகளை நிர்வாகம் செய்வதையும், குடிமாராமத்து வேலைகளை செலவணி யாக்குவதையும், யாதொரு ஜலாஸான் ஆதாரத்திலிருந்து அதன் கீழுள்ள நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சிக்கொள்ளும் உரிமைகளை பங்கிடுவதைப்பற்றி முறைகளை அனுசரிப்பதையும் மாற்றிவிடலாம்.

பஞ்சாயத்துகளுக்கு ஜலாஸான் விஷயமாகவுள்ள அதிகாரங்களை மாற்றிவிடுவது.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது, 1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு திருத்தச்சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவானது, மிகவும் முக்கியமானதாகும். 65-A, 65-B, 65-C இந்தப்பிரிவுகள், 1920-ம் வருஷத்திய கிராம பஞ்சாயத்து சட்டமானது ரத்து செய்யப்பட்டு அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள பஞ்சாயத்துகளும் லோகல் போர்டுகளாக அமைக்கப்பட்டிருப்பதை உத்தேசித்தும், பழைய லோகல்போர்டு சட்டத்தின் கீழ் லோகல்போர்டுகளுக்கு முக்கியமாக யூனியன் போர்டுகளுக்கு குடிமராமத்து வேலைகளும், நீர்ப்பாய்ச்சும் முறைசம்பந்தமான வேலைகளும் ஒப்புவிக்கப்படாமலிருந்ததால் பழைய யூனியன் போர்டுகளுக்கு நீர் பாய்ச்சுவதற்காக உள்ள முறைமைகளை ஒழுங்குபடுத்தும் உரிமையானது சங்கிரமிக்காமலே இருந்தது. இப்பொழுது முதல் முதலாக சட்ட ரூபமாக பஞ்சாயத்துகள் கிராமஜலாசான் வேலைகளையும் நீர்ப்பாய்ச்சல் முறைகளையும், குடிமராமத்து வேலைகளையும் நடத்திவரலாமென்று ஏற்படுத்தப்பட்டது. கிராமாந்தரங்களில் நீர்பாய்ச்சும் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு யாதொரு சரியான ஏற்பாடு மிராமல், ரயத்துகளுக்குள் அடிக்கடி சண்டை சச்சரவுகள் நேர்ந்து கோர்ட்டுகளுக்கு போவதுண்டு. இனி பஞ்சாயத்துகள் அப்படிப்பட்ட யாதொரு சச்சரவும் வெளிக்கிளம்ப வொட்டாமலிருக்கும்படி தகுந்த ஏற்பாடுகளைச் செய்யலாம்.

65-C. லோகல் கவர்ன்மென்டார், ஒரு லோகல் போர்டினுடைய சம்மதத்தைக்கொண்டு, இவர்கள் இருவருக்கும் ஏற்படும் நிபந்தனைகளுக்கிணங்கி அந்த லோகல் போர்டுக்கு இந்த ஆக்டில் குறிக்கப்பட்டிராத யாதொரு ஸ்காபனத்தினுடைய நிர்வாகத்தையும் அல்லது யாதொரு வேலையை நடத்திவருவதையும் அல்லது யாதொரு அதிகாரத்தை செலுத்துவதையும் அல்லது யாதொரு கடமையை பூர்த்தி செய்வதையும் கொடுத்துவிடலாம்.

லோகல்போர்டுகளினுடைய அனுவல்களை அதிகரிக்கச் செய்வதற்கு கவர்ன்மென்டாருடைய அதிகாரம்.

குறிப்புகள்.

இப்பிரிவும் முன் இரண்டு பிரிவுகளைப்போல் 1930-ம் வருஷத்திய திருத்தச்சட்டத்தினால் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. பொதுவாக லோகல் கவர்ன்மென்டார் இந்த ஆக்டில் ஸ்பஷ்டமாகவோ அல்லது வேறே விதமாகவோ இல்லாத அதிகாரங்களை நடத்தும்படி பஞ்சாயத்துக்கே அதிகாரம் கொடுக்கலாமென்றுள்ளது.

லோகல் போர்டுகளுக்கு வேண்டியிருக்கும் அசையாப்பொருளை நிலைமெடுத்துக் கொள்வதற்கான 1894-ம்ஞ்சுத்திய ஆக்டின்படி எடுத்துக் கொள்ளலாமென்பது.

66. எந்த அசையாப்பொருளை எடுத்துக்கொள்ள யாதொரு லோகல் போர்டாருக்கு இந்த ஆக்டின்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ - அப்படிப்பட்ட யாதொரு அசையாப்பொருளை நிலைமெடுத்துக் கொள்வதற்கான 1894-ம் ஞுத்து ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி எடுத்துக்கொள்ளலாம்; அப்படிப்பட்ட சொத்தின் விஷயமாய் அந்த ஆக்டின் பிரகாரம் தீர்மானிக்கப்படும் பிரதிபலனும் அதை எடுத்துக்கொள்வதற்காகப் பிடித்த வேறே எவையேனும் செலவுகளும் செலுத்தப்படுவதன்மேல், அந்த சொத்தானது - டி. லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிக்கவேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் ஒரு லோகல்போர்டுக்குத் தேவையான அசையாப்பொருள்களை, அந்த லோகல் போர்டானது 1894-ம் வருஷத்திய லாண்ட் அக்விஷிஷன் ஆக்டு (நிலபரிக்கிரம சட்டம். Land Acquisition Act) என்னும் சட்டத்தை யொட்டி நிலபரிக்கிரமிக்கலாம் என்றும், அப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட சொத்தானது அந்த லோகல்போர்டினுடைய சுவாதீனத்தில் உள்ளதாக ஏற்படுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. 1894-ம் வருஷத்திய லாண்ட் அக்விஷிஷன் ஆக்டின் (Land Acquisition Act) சாராம்சமானது பின்வருமாறு:—யாதொரு நிலமானது, ஒரு பொது காரியத்திற்காக வேண்டியதாயிருக்கும் என்று லோகல் கவர்ன்மென்டுக்குத் தோன்றும்பக்ஷத்தில், கலெக்டரானவர் அதைப்பற்றி கெஜட்டில் பிரசுரம் செய்து அந்த இடத்தினுடைய அருகாமையில் அவ்வதிகாரியின் நாராம்சத்தை வெளியிடவேண்டும். அதற்குப்பிறகு, யாதொரு கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர் அந்த நிலத்தில் பிரவேசித்து அதை அளக்கவும் குழிகள் தோண்டவும், இன்னும் அந்த நிலமானது மேற்சொன்ன பொதுக்காரியத்திற்காக உபயோகப்பட்டதா அல்லவா என்பதை அறிவதற்காக மற்ற காரியங்களைச் செய்யவும் செக்குபந்திகளை குறிப்பிடவும் இன்னும் அதற்கு இணங்கின மற்ற காரியங்

களைச் செய்யவும் அதிகாரம் உள்ளவராவர் (4-வது பிரிவு). பிறகு அந்த நிலமானது ஒரு பொதுகாரியத்திற்காகத் தேவையென்று கெஜட்டில் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவித்தது முதல் அந்த நிலமானது ஒரு பொது காரியத்திற்கு தேவையென்று சொல்லப்பட்டதானது முடிவானதாகும். அதாவது, லோகல் கவர்ன்மென்டார் அப்படி ஒரு நிலமானது ஒரு பொதுக்காரியத்திற்காக தேவையென்று சொல்லியிருப்பதை, எந்த சிவில் கோர்ட்டும் ரத்து செய்வதற்கில்லை (6-வது பிரிவு). அதற்குப் பிறகு கலெக்டரானவர், அந்த சொத்தின் விஷயமாக எவெரெவர்களுக்கு பாத்தியதை இருக்கிறதோ அவர்கள் தாம்கொடுத்த நோடீசின் தினம்முதல் 15-நாட்களுக்குள் தங்களுடைய பாத்தியதைகளைப்பற்றியும், தங்களுக்கு எவ்வளவு நஷ்ட ஈடுத்தொகை சேரவேண்டுமென்பதைப்பற்றியும், அந்த நிலங்களின் அளவு தவருக யிருக்கும்பக்ஷத்தில் அவைகளைக் குறித்த ஆக்ஷேபனைகளைப் பற்றியும், தமது முன்பாகத் தெரிவிக்கும்படி செய்யவேண்டும் (9-வது பிரிவு). வேண்டுமளவு கலெக்டர் யாதொரு நபருக்கு நோட்டீஸ் தெரிவித்து அவரை, அவருடைய சுவாதீனத்திலிருக்கும் நிலத்தின் விஷயமாக மற்றொருவருக்கு எவ்விதமாகவாவது ஏதாவது பாத்தியதை உண்டா இல்லையா என்பதை தெரிவிக்கும்படி கட்டாயப்படுத்தலாம். (10-வது பிரிவு). பிறகு கலெக்டர் தாம் கொடுத்திருக்கும் நோடீசின்கீழ் செய்யப்பட்டிருக்கும் சகல விவரப்பத்திரிகைகளையும் (Written statement) மதிப்பு அல்லது விஸ்தீரணம் இவைகளைப்பற்றின சகல ஆக்ஷேபனைகளையும் விசாரித்து ஒரு மத்தியஸ்ததீர்மானம் (Award) செய்யவேண்டும் (11-வது பிரிவு). கலெக்டரானவர் விசாரணை செய்வதில் (1) தாம் 9-வது பிரிவின்கீழ் பிரசுரம் செய்யுங்காலத்தில் அந்த நிலமானது எவ்வளவுக்கு வீலேபோகும் என்பதையும், (2) அவர் அந்த நிலத்தை சுவாதீனம் பெறுங்காலத்தில் அதில் ஏதாவது மாரூல் அல்லது மரங்கள் இருந்திருக்கும்பக்ஷத்தில் அவை எடுத்துக்கொள்ளப்பட்டதினால் நேரிடும் நஷ்டத்தையும் (3), அப்படி பரிக்கிரமிக்கப்பட்ட நிலமானது எடுத்துக்கொள்ளப்பட்டதனால் அதே நபருக்குச் சேர்ந்த மற்றொரு நிலத்துக்கு ஏதாவது கெடுதி நேரிட்டிருக்கும்பக்ஷத்தில் அதையும், (4) எவருடைய நிலமானது பரிக்கிரமிக்கப்பட்டதோ அவருக்குள்ள மற்ற இதர ஸ்தாவர ஜங்கம சொத்துக்களுக்கு பரிக்கிரமத்தினால் ஏதாவது கெடுதி நேரிட்டிருக்கும் பக்ஷத்தில் அதையும் அல்லது அவருடைய சம்பாத்தியத்தில் ஏதாவது குறைவு நேரிட்டிருக்கும் பக்ஷத்தில் அதையும், (5) அவர் அப்படி நிலத்தை பரிக்கிரமித்ததினால் பாதிக்கப்பட்ட நபர் தன்னுடைய வாசஸ்தலத்தை அல்லது வியாபார ஸ்தலத்தை மாற்றும்படி நேரிட்டால் அதற்குள்ள செலவுகளையும், (6) அவர் 6-வது பிரிவின்கீழ் செய்திருக்கும் பிரசுரத்தின் காலத்திற்கும், அவர் அந்த நிலத்தை சுவாதீனம் செய்துக்கொள்ளும் காலத்திற்கும் இடையிலே சம்பவித்திருக்கும் மதிப்பு குறைவையும், கவனிக்க வேண்டும். இன்னும் அந்த சொத்தானது, எவ்வளவு தொகைக்கு வீலே

போகும் என்று ஏற்படுகிறதோ அதற்கு மேலாக ரூ 100-க்கு ரூபா 15-வீதம் நிலத்தின் சொந்தக்காரருக்கு கொடுக்கவேண்டும் (23-வதுபிரிவு). கலெக்டரானவர் நஷ்டஈடுத்தொகையை நிர்ணயிப்பதில், (1) நில பரிக்கிரமத்தின் அவசர ஆவசிகத்தைப்பற்றியாவது அல்லது, (2) அந்த நிலத்தின் சொந்தக்காரருடைய மனக்கஷ்டத்தைப்பற்றியாவது, (3) அதே சொத்தின்விஷயமாக யாதொரு பிரைவேட் நபர் ஏதாவது கெடுதி செய்தாலுங்கூட அவர்பேரில் தாவா செய்வதற்கு முடியாதிருக்கும் சந்தர்ப்பங்களில் சேரிட்டிருக்கும் நஷ்டத்தையாவது, (4) மேலே 6-வது பிரிவின்கீழ் அந்த நிலமானது ஒரு பொதுக் காரியத்திற்குத் தேவையென்று பிரசுரம் செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு அதனால் சேரிட்ட நஷ்டத்தைப்பற்றியாவது அல்லது இனி அந்த நிலமானது எந்த காரியத்திற்காக உபயோகப்படுத்தப்படுமோ அதனால், அதின் மதிப்பு உயர்ந்துப் போய்விடும் என்பதையாவது (6) அப்படி அந்த நிலமானது பரிக்கிரமிக்கப்பட்டதால் மற்றொரு நிலத்திற்கு உள்ள மதிப்பானது ஏறிவிடும் என்பதையாவது, (7) மேலே 6-வது பிரிவின் பிரகாரம் செய்யப்பட்டிருக்கும் பிரசாரத்திற்குப்பிறகு இந்த நிலத்தில் அவர் கலெக்டரினுடைய உத்தரவில்லாமல் செய்திருக்கும் செய்கேர்த்திகள் முதலியவைகளை யாவது கவனிக்கக்கூடாது (24-வது பிரிவு). இம்மாதிரியாக தீர்மானம் செய்தபிறகு, கலெக்டரானவர் அந்த நிலத்தில் பிரவேசித்து சுவாதீனம் கொள்ளலாம் (16-வது பிரிவு). சில அவசர சந்தர்ப்பங்களில் யாதொரு தீர்மானம் செய்யாமலேயும், யாதொரு கம்பு நிலத்தில் பிரவேசித்து அதை ஒரு கம்பெனிக்காக வேண்டியிருக்கும்பக்ஷத்தில் அந்த கம்பெனிக்குக் கொடுக்கலாம் (17-வது பிரிவு). கலெக்டர் செய்யும் தீர்மானமானது சரியான தல்லவென்றுவது அல்லது அவரால் போடப்பட்டிருக்கும் மதிப்பானது குறைவானதென்றுவது, யாதொரு நபர் கலெக்டரிடம் தெரிவித்து அவரை தம்முடைய கேசைப்பற்றி கோர்ட்டுக்கு சாட்டும்படி கேட்டுக்கொள்ளும்பக்ஷத்தில், கலெக்டரானவர் டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜுக்கு தெரிவித்து அவருடைய தீர்மானத்தைப் பெறவேண்டும். அவர், கலெக்டர் முன்பாக ஏதாவது ஆக்ஷேபனை செய்திருக்கும்பக்ஷத்தில் கலெக்டரினுடைய உத்தரவின் தேதி முதல் ஆறு வாரங்களுக்குள்ளும் அல்லது 12-வது பிரிவின்கீழ் கலெக்டரி டமிருந்து என்றையதினம் நோட்டீஸ் சேருகிறதோ அன்றுமுதல் ஆறுவாரங்களுக்குள்ளும் அல்லது என்றையதினம் கலெக்டரினுடைய உத்தரவானது செய்யப்பட்டதோ அன்றுமுதல் ஆறுமாதங்களுக்குள்ளும் இவை இரண்டில் எது முந்தி நடந்ததோ அதுமுதல் கணக்கிடும்படியாக டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜுக்கு தெரிவிக்கும்படி மனு செய்துக்கொள்ளவேண்டும் (18-வது பிரிவு). பிறகு டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜுமுன்பாக எல்லா விவரங்களையும் தெரிவிக்கும்படியாக ஒரு ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்யவேண்டும் (19-வது பிரிவு). டிஸ்டிரிக்ட்டு கலெக்டர் முன்பாக ஏற்படும் தீர்மானத்தில் கொடுக்கப்படும் தொகையானது எவரெவர்களுக்கு எந்தந்தமாதிரியாக சேரவேண்டு

மென்பதைப்பற்றி ஏதாவது தகராறு கிளம்பும்பக்ஷத்தில், அதைப்பற்றி தீர்மானிக்கப்படுவதற்காக டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜுக்கு கலெக்டரானவர் தெரிவிக்க வேண்டும். அதன்பிறகு, டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் செய்யும் தீர்மானமானது முடிவானதாகும். (30-வது பிரிவு). லாண்ட் அக்விஸிஷன் ஆக்டின்கீழ் செய்யப்படும் மத்தியஸ்த தீர்மானங்கள் விஷயமாக யாதொரு ஸ்டாம்பு டியூடியும் கிடையாது (51-வது பிரிவு). டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜினுடைய தீர்மானத்தின்பேரில் ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் உண்டு (54-வது பிரிவு).

லாண்ட் அக்விஸிஷன் ஆக்டின்கீழ் கவர்ன்மெண்டார் பொதுகாரியங்களுக்கு வேண்டியதற்காக, ஒருவருக்குச் சொந்தமான நிலங்களை பரிக்கிரமித்தனர்; பிறகு அந்த சட்டத்தின் 9-வது பிரிவின்கீழ் நிலத்தினுடைய சொந்தக்காரருக்கு ஒரு நோடீஸ் தெரிவித்து அவர் 15-தினங்களுக்குள்ளாக தமக்குச் சேரவேண்டிய தொகை இன்னதென்று கேட்க்கும்படி தெரிவிக்கப்பட்டது. ஷை நோடீஸின் தவணைக்குள்ளாக ஷை நிலத்தின் சொந்தக்காரர் தன்னுடைய நிலத்திற்காக ஈடுதொகை கேட்கத்தவறிவிட்டார். பிறகு, நிலங்களை பரிக்கிரமிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர் எவ்வளவு விஸ்தீரணமுள்ள நிலங்கள் பரிக்கிரமிக்கப்பட்டனவோ, அவைகளுக்கு தம்முடைய யுக்தப்படி சில தொகை ஈடாகச் சேரும்படி உத்தரவிட்டனர். ஆனால், நிலத்தின் சொந்தக்காரர் அவர் காட்டிய தொகையைவிட அதிகமான தொகை தனக்குச் சேரவேண்டுமென்று சிவில் கோர்ட்டில் ஒரு தாவா தொடர்ந்தார். ஷை நிலத்தின் சொந்தக்காரர் தமக்கு கொடுத்த நோட்டீசுக்கு யாதொரு ஆக்ஷேபனையையும் தெரிவிக்காமல் தமக்கு அதிக தொகை சேரவேண்டுமென்று சிவில்கோர்ட்டில் தாவாசெய்யலாமா என்னும் கேள்வி வந்ததில், லாண்ட் அக்விஸிஷன் ஆக்டு (Land Acquisition Act) 25 (2) பிரிவின்கீழ், சிவில்கோர்ட்டானது இம்மாதிரியான தாவாவை அங்கீகரிப்பதற்கில்லை என்று தீர்மானம் செய்தனர். (a)

லாண்ட் அக்விஸிஷன் ஆக்டு (Land Acquisition Act) 18-வது பிரிவின்கீழ், ஒரு குறிப்பிட்ட கேஸின் விஷயமாக நிலத்தின் சொந்தக்காரர் தமது நிலத்தினுடைய மதிப்புவிஷயமாய் கலெக்டர் செய்யும் உத்தரவை ஒரு சிவில் கோர்ட்டுக்கு தெரிவித்து அந்த கோர்ட்டிலிருந்து ஒரு தீர்மானம் பெறும்படி கேட்டு, அப்பிரிவின்கீழ் சிவில்கோர்ட்டுக்கு ஒரு ரெபரன்ஸ் (Reference) செய்யப்படுவதானது - கலெக்டருடைய மத்தியஸ்தத்துக்கு விரோதமாக ஒரு ஆக்ஷேபனை செய்யப்பட்டதாகமாத்திரம் கவனிக்கப்படுமேயொழிய, அதனால் ஒரு புதிய நியாயஸ்தல விசாரணை தொடங்குவதாக கவனிக்கப்படாது. ஆகையால், அப்படி 18-வது பிரிவின்கீழ் சிவில்கோர்ட்டுக்கு ஒரு ரெபரன்ஸ் (Reference) தெரிவிக்கப்பட்டதானால், நிலத்தின்

(a) 1930 II தமிழ் அகில இந்தியா லா ஜர்னல் கேஸுகளின் குறிப்புகள் பக்கம் 1=58. M. L. J Notes of Recent Cases Page 5.

அல்லது பரிமுதல் செய்யப்படும் சொத்தின் சொந்தக்காரர் கலெக்டர் முன்பாக தாம் என்னென்ன ஆக்ஷேபனைகளை தெரிவித்தாரோ அவைகளைத் தவிர புதியதாக தன் இஷ்டப்படி காம்பன்சேஷன் (Compensation) தொகை இன்னும் அதிகமாக வேண்டுமென்றுவது, அல்லது வேறே புதியதாக சில சொத்திற்கு நிரயம் வேண்டுமென்றுவது வற்புறுத்துவதற்கில்லை (a)

ஒரு லாண்ட் அக்விஷிஷன் கேஸில் (நிலங்களை பொது விஷயங்களுக்காக கட்டாயமாய் பரிக்ரஹிக்கும்படிக்கான சட்டத்தின்கீழ் நடக்கும் கேஸில்) கோர்ட்டாருக்கு (டிஸ்டிரிக்ட்டு அல்லது சப்கோர்ட்டாருக்கு) அவர்கள் தீர்மானம் செய்யும்படி யாதொரு பிரச்னை அனுப்பப்படும்பக்ஷத்தில் அதன் விஷயமாக கோர்ட்டார் செய்யும் உத்தரவானது ஒரு மத்தியஸ்த தீர்மானமாகும். ஜட்ஜானவர், அதிகமான தொகை கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் நிலத்தை பரிக்ரஹிக்கும் உத்தியோகஸ்தருடைய மத்தியஸ்தமானது, வேறே காரணத்தினால் அங்கீகரிக்கப்படாமல் போய்விட்டாலும், கோர்ட்டு சிலவு விஷயமாக கட்டாயம் ஒரு உத்தரவு இருக்க வேண்டும். கோர்ட்டினுடைய தீர்மானத்திற்காக ஒரு ப்ரச்னை தெரிவிக்கப்பட்டப் பிறகு கவர்ன்மென்டு நில பரிக்ரஹ நடவடிக்கைகளிலிருந்து பின் வாங்கிவிட்டதனால், கலெக்டரினுடைய மத்தியஸ்த தீர்மானமானது கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்படாமலிருந்தபோதிலும், நில விஷயமாக ஆக்ஷேபனை செய்யும் நபருக்கு கோர்ட்டுசெலவு சேரும்படி கட்டாயம் ஒரு உத்தரவு இருக்கவேண்டும்.(b)

லாண்ட் அக்விஷிஷன் ஆக்டின் 6-வது பிரிவின் (3)-வது உபப்பிரிவில் பின்வருமாறு கண்டுள்ளது. அதாவது :—

"அப்படிப்பட்ட விளம்பர அறிக்கையானது அந்த நிலமானது ஒரு பொதுக்காரியத்திற்காகவோ அல்லது ஒரு கம்பெனிக்காகவோ தேவையான தென்பதின் விஷயமாக முடிவானதோர் சாக்ஷியமாகும்; அப்படிப்பட்ட ஒரு விளம்பர அறிக்கையைத்தெரிவித்தபிறகு லோகல் கவர்ன்மென்டு இனி சொல்லப்படும்விதமாக அந்த நிலத்தை பரிக்ரஹிக்கலாம்."

ஆகையால் யாதொரு நிலத்தின் அல்லது ஜாகையின் விஷயமாக லோகல் கவர்ன்மென்டானது தகுந்தபடி விசாரணை செய்தபிறகும் ஒரு பொது காரியத்திற்காக தேவையென்று தீர்மானிக்கும்பக்ஷத்தில் அந்த தீர்மானத்தை எவரும் எதிர்ப்பதற்கில்லை. சிவில் கோர்ட்டுகள் யாதொரு

(a) இந்தியாமந்திரி அவர்கள் தஞ்சாவூர் கலெக்டர் துவாரா vs. C. R. சுப்பிரமணிய அய்யர், 11 - தமிழ் அகில இந்தியா லா ஜர்னல் பக்கம் 204=59. M. L. J. 30.

(b) K. T. முத்து வீரப்ப பிள்ளை vs மேலூர் ரெவினியூ டிவிஷனல் ஆபீசர். 11 - தமிழ் அகில இந்தியா லா ஜர்னல் பக்கம் 270=58. M. L. J. 682.

நிலமானது ஒரு பொதுவான காரியத்திற்காக பரிக்கிரமிக்கப்பட்டதா அல்லவா என்பதைப்பற்றி அடியோடே விசாரணை செய்வதற்கில்லை. (a).

பொது காரியங்கள் என்பதற்கு, ஒரு முனிசிபாலிட்டியின் வேலைக்காரர்களுக்கு குடியிருப்புவீடு கட்டுவதற்காக பரிக்கிரமிப்பதும் ஒரு பொது காரியமென்றே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (b). பஞ்சமர்(ஆதித்திராவிடர்கள்) களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்காக நிலங்களை கட்டாயமாக பரிக்கிரமிப்பதானது ஒரு பொதுகாரியமாகும். (c). இந்த கேசுகளிலேயே கவர்ன்மென்டார்தான் ஒரு நிலமானது பொதுக்காரியத்திற்கு வேண்டியதா, இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டுமென்றும், அதைப்பற்றி சிவில் கோர்ட்டுகள் எவ்விதமாகவும் விசாரணை செய்வதற்கில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு லோகல்போர்டுக்கு பொதுகாரியத்திற்காக ஏதாவது நிலம்வேண்டியிருக்கும்பக்ஷத்தில் அவர்கள் லோகல் கவர்ன்மென்டுக்கு தெரிவித்து அந்த நிலத்தை பரிக்கிரமிக்கும்படி செய்யவேண்டும். லோகல் கவர்ன்மென்டுக்காக கலெக்டரானவர் முதலில் ஒரு பிரதம பிரசுரம் செய்து பிறகு தக்கபடி விசாரித்து அதன் பிறகு அந்த நிலமானது வாஸ்தவத்தில் ஒரு பொது காரியத்திற்காக வேண்டியிருக்கும்பட்சத்தில் அதை கட்டாயமாய் லாண்டு அக்விஸிஷன் ஆக்டின்கீழ் பரிக்கிரமிக்கலாம். ஒரு நிலமானது பொது காரியத்திற்கு தேவையானதா இல்லையா என்பதைப்பற்றி யாதொரு விசாரணை நடக்கையில் லோகல் கவர்ன்மென்டின் முன்பாக அந்த நிலத்தில் சம்பந்தமுள்ள ஒவ்வொருவரும் தக்கபடி தங்களுடைய ஆக்ஷேபனைகளை தெரிவிக்கலாம்.

"பொது காரியம்" என்பது இந்தப்பிரிவில் சொல்லப்படவில்லையெனினும் லாண்ட் அக்விஸிஷன் ஆக்டில் அந்த வாக்கியமானது வருவதால், ரஸ்தாக்களை போடுவதும், பாட்டைகளை ஏற்படுத்துவதும், பள்ளிக்கூடங்களை கட்டுவதும் சத்திரங்கள், தண்ணீர்பந்தல்கள் முதலியவைகளைக் கட்டுவதும் இன்னும் ஜன சௌகரியத்திற்கு வேண்டிய சகல காரியங்களும் அதில் அடங்குவதாகும்.

(a) இந்தியா செக்ரிடெரி ஆப் ஸ்டேட் vs. அக்பர் ஆலி 45 All. 443= 1923. A. I. R. All. 523.

(b) பம்பாய் முனிஸிபல் கார்ப்பரேஷன் vs ரஞ்சொடால் 60 I.C. 695= A.I.R. 1925 Bom. 538.

(c) வீராராகவாச்சாரியார் vs இந்தியா செக்ரடரி ஆப் ஸ்டேட் A.I.R.1925 Mad. 837=48 M.L.J. 204. இந்தியா செக்ரடரி ஆப் ஸ்டேட் vs. முருகப்பிள்ளை 1929 M. W. N. 779.

67. (1) ஒரு லோகல் போர்டில் உள்ள உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள், இவர்களின் சங்கியை ஏற்படுத்தவோ, மாற்றவோ அல்லது அவர்களுடைய கூப்பிடு பெயர்களையும் அந்தஸ்துகளையும் ஏற்படுத்தவோ அல்லது மாற்றவோ இவைகளைக் குறித்த எல்லா ப்ரேரேபணைகளுக்கும், இவர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய சம்பளங்கள், படிச்சிலவுகள் இவைகளை ஏற்படுத்தவோ அல்லது மாற்றவோ உள்ள எல்லா ப்ரேரேபணைகளுக்கும் அந்த லோகல் போர்டினுடைய முன் உத்திரவு பெறப்படவேண்டும்.

லோகல்போர்டினுடைய உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும்.

(2) அப்படிப்பட்ட ப்ரேரேபணைகள் அந்த போர்டினுடைய ப்ரெஸிடென்டால் தெரிவிக்கப்பட்டபிறகுதான் அந்த லோகல் போர்டு அவைகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு அந்த லோகல்போர்டானது அவைகளை அப்படியேயாவது அல்லது மாறுதல்களுடனாவது அங்கீகாரம் செய்யலாம்.

ஆனால், ஒருலோகல்போர்டில் ஐந்து வருஷங்களுக்குமேல் நிரந்தரமாக உத்தியோகம் பெற்றிருந்து, ஐம்பது ரூபாய்களுக்கு குறையாமல் மாதச்சம்பளம் பெற்றுவரும் ஒரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரை விரோதமாக பாதிக்கும் யாதொரு ப்ரேரேபணையும் அதற்காகவென்று தனியாகக் கூட்டப்பட்ட ஒரு ஸ்பெஷல் மீட்டிங்கில் அன்றி வேறொரு மீட்டிங்கில் கவனிக்கப்படக்கூடாது. இன்னும் அப்படிப்பட்ட ப்ரேரேபணையானது அந்த போர்டிலுள்ள மொத்த அங்கத்தினர்களில் பாதி சங்கியைக்கு குறையாமலுள்ள அங்கத்தினர்களால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய அதை அமுலுக்கு கொண்டுவரக்கூடாது.

குறிப்புகள்.

இந்தப்பிரிவானது 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் முற்றிலும் மாற்றப்பட்டுள்ளது. இந்தப் பிரிவானது ஒவ்வொரு லோகல்போர்டினுடைய சிப்பந்திகளைப்பற்றியும், அவர்களின் சம்பளப்பட்டிச் செலவுகள் முதலியவைகளைப்பற்றியும் ஒரு லோகல்போர்டானது ஏற்பாடு செய்யவேண்டுமென்றுள்ளது. ஆனால், இவைகளை குறித்த ஒவ்வொரு பிரேரேபணையும், அந்த லோகல்போர்டின் ப்ரெஸிடென்டினால் கொண்டுவரப்பட வேண்டுமேயொழிய அந்த லோகல்போர்டின் வேறே ஒரு அங்கத்தினர் கொண்டுவருவதற்கில்லை. லோகல்போர்டு சிப்பந்திகளைப்பற்றின ஒவ்வொரு பிரேரேபணையும், அந்த லோகல்போர்டினால் ஒரு மீட்டிங்கில் வைத்துத்தான் கவனிக்கப்

படவேண்டுமேயொழிய வேறெவ்விதமாக கவனிக்கப்படுவதற்கில்லை. ஆனல், முதல் முதலாக ஒரு லோகல்போர்டின் ப்ரெஸிடென்டானவர் சிப்பந்திகளைப்பற்றின எல்லா பிரேரேபணைகளையும் முதலில் தயார்செய்தபிறகு லோகல்போர்டு மீட்டிங்கில் வைக்கவேண்டும். அந்த மீட்டிங்கில் எல்லா அங்கத்தினர்களும் சேர்ந்து அந்த பிரேரேபணைகளை அப்படியேயாவது அங்கீகரிக்கலாம்; அல்லது தங்கள் யுக்தப்பிரகாரம் மாற்றலாம்.

இப்பிரிவின் விலக்கு நிபந்தனேயானது புதியதாக சேர்க்கப்பட்டுள்ளது. ஒரு லோகல்போர்டில் ஐந்துவருஷங்களுக்கு மேலாக நிரந்தரமாக உத்தியோகம் வகித்து அல்லது ஊழியம்நடத்தியும் 50 ரூபாய்க்கு குறையாமல் சம்பளம் பெற்றும் வரும் யாதொரு நபர்விஷயமாக எந்தவிதமான பிரேரேபணையை செய்வதாக இருந்தாலும், அந்த பிரேரேபணையானது, அதை யோசிப்பதற்கென்றே தனியாக (ஸ்பெஷலாக) கூட்டப்பட்ட ஒரு மீட்டிங்கில்தான் கவனிக்கப்படவேண்டும். அந்த மீட்டிங்கிலும் அந்தலோகல்போர்டில் மொத்தத்திலுள்ள சங்கியையில் பாதிக்குக் குறையாமலுள்ள நபர்களால் அங்கீகரிக்கப்படவேண்டும். அதாவது ஒரு லோகல்போர்டிலுள்ள பொறுப்புவாய்ந்த ஒரு உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் யாதொரு நபரையும் பாதிக்கும்படியாக அந்த லோகல்போர்டானது நிதானமில்லாமலும், யோசனேயில்லாமலும் பிரேரேபணைகளைச் செய்யக்கூடாதென்பது.

இவ்விலக்கு நிபந்தனேயில் "நிரந்தரமாக" என்று சொல்லப்பட்டிருப்பதினல் எந்த நபர் விஷயமாக பிரேரேபணைகள் செய்யப்படுகிறதோ அவர் லோகல்போர்டு ரிக்கார்டுகளில் ஒரு நிரந்தர உத்தியோகஸ்தர் என்று பதிவுசெய்யப்பட்டு பிறகு ஐந்து வருஷங்கள் பூர்த்தியாக மூடிந்திருக்க வேண்டுமென்று யேற்படும். சாதாரணமாக ஒரு உத்தியோகத்தில் ஒரு நபர் அமைக்கப்படுவாராகில் அவரை உடனே நிரந்தரமாக அமைத்துக் கொள்வது வழக்கமில்லே. சிலகாலம் அவர் தாத்காலிகமாக (டெம்பராரியாக) உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டு பிறகு நிரந்தரமாக ஏற்றுக்கொள்ளப்படுவதுண்டு. அந்த நபர் தாத்காலிகமாக இருந்துவந்த ஊழியகாலமானது இந்த விலக்கு நிபந்தனேயின்கீழ் கணக்கிடப்படும் கால அளவில் சேர்க்கப்படமாட்டாது. ஆகையால், யாதொரு நபர் (அதாவது உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர்) இந்த விலக்குநிபந்தனேயின்கீழ் உரிமைகொண்டாடவேண்டுமானல் அவர் லோகல்போர்டினல் ஒரு நிரந்தர உத்தியோகஸ்தரென்று பதிவு செய்துகொள்ளப்பட்டப்பிறகு ஐந்து பூரண வருஷங்கள் முடிந்திருக்கவேண்டும். டெம்பரரி (Temporary) சர்விஸ் என்பது கணக்கிடப்படக்கூடாது. ஸ்பெஷல்மீட்டிங்கென்பதானது II-வது ஷெடியூல் 4-வது விதியில்விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு ஸ்பெஷல் மீட்டிங் கூடவேண்டுமானல், ஒரு லோகல் போர்டிலுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் ஒருபங்குக்கு குறையாமலுள்ள அங்கத்தினர்களால் ப்ரெஸிடென்டுக்கு ஒரு வேண்டுகோள் அனுப்படவேண்

டும். இன்னும், அந்த வேண்டுகோளில் இன்ன காரியத்திற்காக அந்த மீட்டிங்கானது கூடவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படிப்பட்ட மீட்டிங்குக்கு, பஞ்சாயத்தாயிருந்தால் 10-பூரண நாட்களுக்குக் குறையாமலும், தாலூக்காபோர்டு, டிஸ்டிரிக்ட்டு போர்டாயிருந்தால் 15-பூரண நாட்களுக்குக் குறையாமலும், மூன்றினை நோட்டீஸ் இருக்கவேண்டும். ஆனால், அப்படிப்பட்ட மீட்டிங்கில் ஒரு பிரேரேபணையைக் கொண்டு வருபவர் ப்ரெஸிடென்டாகவே யிருக்கவேண்டுமேயொழிய வேறே யாதொரு நபராக யிருக்கக்கூடாது. கடைசியாக, அந்த பிரேரேபணையானது அந்த போர்டிலுள்ள அங்கத்தினர்களில் பாதிக்குக் குறையாமலுள்ள நபர்களால் சம்மதிக்கப்படவேண்டும். லோகல்போர்டு அங்கத்தினர்கள் பொதுஜன உத்தியோகஸ்தர்களல்ல. ஆனால், லோகல்போர்டு உத்தியோகஸ்தர்களும், ஊழியர்களும் பொதுஜன உத்தியோகஸ்தராவார்கள். ஆகையால் ஒரு லோகல்போர்டு லானிடரி இன்ஸ்பெக்டர் ஒரு பொதுஜன உத்தியோகஸ்தர் (Public servant) எனப்படுவார். (a)

ஒரு அம்மைகுத்தும் உத்தியோகஸ்தர் (b) ஒரு யூனியன் கர்ணம் (c) ஒரு முனிஸிபாலிட்டி இன்ஸ்பெக்டர் (d) ஒரு முனிஸிபாலிட்டியின் மானேஜர் (e) இவர்கள் பொதுஜன உத்தியோகஸ்தர்களென்று கருதப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு அந்த லோகல்போர்டின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரென்று கருதப்படமாட்டார். ஆகையால் அந்த லோகல்போர்டின் யாதொரு அங்கத்தினர் அதன் உத்தியோகஸ்தராக அடியோடே கவனிக்கப்படுவதற்கில்லை. (f)

68. ஒவ்வொரு டிஸ்டிரிக்டு போர்டும், அப்படிச்செய்யும்படி கவர்ன்மென்டாரால் உத்திரவிடப்படும் பக்ஷத்தில், ஒரு டிஸ்டிரிக்ட்டு என்ஜினீயருடைய உத்தியோகத்தையும், ஒரு டிஸ்டிரிக்ட்டு சுகாதார ஆபீஸருடைய உத்தியோகத்தையும், ஒரு டிஸ்டிரிக்ட்டு பஞ்சாயத்து ஆபீஸருடைய உத்தியோகத்தையும் ஏற்படுத்தவேண்டும்.

டிஸ்டிரிக்ட்டு என்ஜினீயர், சுகாதார ஆபீலர், பஞ்சாயத்து ஆபீலர்.

(a) மஹாராணி vs. திருவேங்கிட முதலி 21. Mad. 428.

(b) 1881. 1 Weir. 1929.

(c) கோபாலசாமிகாதய்யன் விஷயமாக 1. Weir. 128.

(d) மஹாராணி vs. ராமசாமி 13. Mad. 131.

(e) ராமச்சந்திரய்யா vs. இந்தியா சக்ரவர்த்தி 51. Mad. 85=53. M. L. J. 723.

(f) பழனியப்ப செட்டியார் vs. கிருஷ்ணசாமி செட்டியார் 48. M.L.J. 696=A. I. R. 1925. Mad 877.

(2) இந்த உத்தியோகஸ்தர்களின் சம்பளங்கள் லோகல் கவர்ன்மென்டாருடைய அனுமதிக்குட்பட்டு டிஸ்டிரிக்ட்டு போர்டால் ஏற்படுத்தப்படவேண்டும்.

(3) அப்படிப்பட்ட ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் தன்னுடைய முழுகாலத்தையும் கவனத்தையும் தம்முடைய உத்தியோக அலுவல்களை செய்வதிலேயே செலவிடவேண்டும். அவர் வேறே எவ்விதமான தொழில், வர்த்தகம் அல்லது வியாபாரத்தில் அமர்ந்து கொள்ளக்கூடாது.

(4) அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தரும் லோகல் கவர்ன்மென்டினுடைய சம்மதமில்லாமல் தமது உத்தியோகத்தினின்று நீக்கப்படக்கூடாது. அப்படிப்பட்ட சம்மதமானது, இதற்கென்று அந்த போர்டில் கூட்டப்பட்ட யாதொரு மீட்டிங்கில் ஜாரி செய்யப்பட்டு அந்த டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கு இருக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கும் அங்கத்தினர்களின் சங்கையையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதவர்களின் ஓட்டுகளால் ஆதரிக்கப்பட்ட ஒரு தீர்மான மூலமாய் மேலே கண்டபடி நீக்கிவிட வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டால், கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவில் 1930-ம் வருஷத்திய லோகல்போர்டு திருத்த சட்டத்தினால் பஞ்சாயத்து உத்தியோகஸ்தரென்று ஒரு புதிய உத்தியோகமானது ஏற்பட்டுள்ளது. பஞ்சாயத்து உத்தியோகஸ்தரானவர் ஏற்படவேண்டிய அவசிய மென்னவென்றால் இனி ஆயிரம் ஜனசங்கியைக்கு அதிகப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும், பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவது கவர்ன்மென்டினுடைய கடமையாதலால் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு உத்தியோகஸ்தர் தேவையிருக்குமென்றே இந்த உத்தியோகமானது ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு என்ஜினீயர், டிஸ்டிரிக்ட்டு சுகாதார ஆபீசர், டிஸ்டிரிக்ட்டு பஞ்சாயத்து ஆபீசர் இவர்கள் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டினாலும் நியமிக்கப்படவேண்டுமென்பதும் அவர்களுடைய சம்பளமானது லோகல் கவர்ன்மென்டினால் அங்கீகரிக்கப்பட்ட பிறகு டிஸ்டிரிக்ட்டு போர்டினால் நிர்ணயிக்கப்படவேண்டுமென்றுமுள்ளது. இந்த உத்தியோகஸ்தர்கள் நீக்கப்பட வேண்டுமானால் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டிலுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாமலுள்ள மெம்பர்களால் ஒரு ஸ்பெஷல் மீட்டிங்கில் கவனிக்கப்பட்டு

அவர்களால் ஒரு தீர்மானம் நடந்தேறப்படவேண்டும்பிறகு அதற்குலோகல் கவர்ன்மென்டினுல் அனுமதி கொடுக்கப்பட வேண்டும். ஒரு போர்டில் இருக்கவேண்டிய அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டுபாகத்திலுள்ள நபர்களால் ஒரு தீர்மானம் நடந்தேறப்படுமானுல் லோகல் கவர்ன்மென்டார் கட்டாயம் சம்மதி கொடுக்கப்படவேண்டும்.

ஷே மூன்று உத்தியோகங்களையும் பூர்த்தி செய்வது.

69. டிஸ்டிரிக்ட் என்ஜினீயர் அல்லது டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீஸர் அல்லது டிஸ்டிரிக்ட்டு பஞ்சாயத்து ஆபீஸரின் உத்தியோகத்தில் காலி நேரிடுவதன் மேலாவது அந்த உத்தியோகம் உண்டாக்கப்பட்ட பிறகாவது எந்த தேதியில் அந்த காலி நேரிட்டதோ அல்லது அந்த உத்தியோகம் உண்டாக்கப்பட்டதோ அந்ததேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள்ளாகிலும், டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டால் அப்படி செய்யப்பட்ட யாதொரு நியமகமானது லோகல் கவர்ன்மென்டாரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டாவிட்டால் லோகல் கவர்ன்மென்டாரின் உத்தரவுகளை டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடெண்ட் வரப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள்ளாகிலும், டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டானவர் லோகல் கவர்ன்மென்டாருடைய அங்கீகாரத்திற்குட்பட்டு அதற்கு யாதொரு நியமகம் செய்யவேண்டும்.

(2) மேலே கண்டபடி டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டு யாதொரு நியமகம் செய்யத் தவறும்பட்சத்தில், லோகல் கவர்ன்மென்டார் - அந்த உத்தியோகத்தை வகிக்கும்படி யாதொரு நபரை நியமிக்கலாம். அதன்மேல், அப்படிப்பட்ட நியமகமானது - சகல காரியங்களுக்காகவும் டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டால் செய்யப்பட்டதாகவே எண்ணப்படும்.

(3) (1)-வது உபப்பிரிவின்படியாவது (2)-வது உபப்பிரிவின்படியாவது யாதொரு நியமக விஷயம் முடிவு செய்யப்படுகிற வரையில், டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டானவர் - அந்த உத்தியோகத்தை அங்காமியாய் வகிக்கும்படி யாதொரு நபரை நியமித்து, அப்படி நியமிக்கப்பட்ட நபருக்கு அந்த உத்தியோகத்துக்காக ஜாரி செய்யப்பட்ட சம்பளத்துக்கு மேற்படாமல் தமக்குத் தகுதியாகத் தோற்றும் சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்று கட்டளையிடலாம்.

70. டிஸ்டிரிக்ட்டு என்ஜினீயர், டிஸ்ரிக்ட்டு ஹெல்த் ஆபீஸர், டிஸ்டிரிக்ட்டு பஞ்சாயத்து ஆபீஸர் இவர்களைத்தவிர ஒரு லோகல் போர்டினுடைய மற்றெல்லா உத்தியோகஸ்தர்களும், ஊழியர்களும் அந்த லோகல் போர்டினுடைய ப்ரெஸிடென்டால் இது விஷயமாக லோகல் கவர்ன்மென்டார் ஏதாவது விதிகளை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த விதிகளின் பிரகாரம் நியமிக்கப்பட வேண்டும்.

டிஸ்டிரிக்ட்டு இன்ஜினீயர், ஹெல்த்ஆபீஸர், பஞ்சாயத்துஆபீஸர் இவர்களைத்தவிர மற்ற உத்தியோகஸ்தர்கள் நியமனம் செய்யப்படுவது.

ஆனல் அவசரசமயங்களில்—

(a). அந்த ப்ரெஸிடென்டுஇந்த ஆக்டின் காரியங்களுக்காக ஏந்தந்த உத்தியோகஸ்தர்களை அல்லது ஊழியர்களை நியமிக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறாரோ அவர்களை, அவர்கள் யாதொரு குறிப்பிட்ட வேலைக்கு நியமிக்கப்படுவதானது அந்த லோகல் போர்டினுடைய யாதொரு தீர்மானத்தால் தடுக்கப்பட்டிராதிருக்கும் பக்ஷத்தில் தாத்காலிகமாக நியமிக்கலாம்.

(b). (a) உபவாக்கியத்தின் கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு நியமனமும் அந்த ப்ரெஸிடென்டால் அந்த லோகல் போர்டுக்கு அதன் அடுத்த மீட்டிங்கில் தெரியப்படுத்தப்படவேண்டும்.

குறிப்புகள்.

68,69-பிரிவுகளின் பிரகாரம், டிஸ்டிரிக்ட்டுஹெல்த்ஆபீசர், டிஸ்டிரிக்ட்டு என்ஜினீயர் முதலியவர்களை நியமிக்கும் விஷயமாகவும், அவருடைய சம்பளம் முதலியவை விஷயமாகவும் லோகல் கவர்ன்மென்டினுடைய சம்மதத்தைக்கொண்டுதான் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டு நியமித்ததை பூர்த்திசெய்ய வேண்டுமென்றுள்ளது. இந்தப் பிரிவில் மற்ற சிப்பந்திகளை பற்றி சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டும் தமது லோகல்போர்டினுடைய நிர்வாகத்திற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களை லோகல் கவர்ன்மென்டார் ஏதாவது விதிகளை செய்திருக்கும்பக்ஷத்தில் அந்த விதிகளை ஆதாரமாகக்கொண்டு நியமிக்கவேண்டும். ஒரு லோகல் போர்டின் சாதாரண உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் இவர்களை நியமிப்பதிலும், அவர்களை கண்டிப்பதிலும், அவர்களுக்கு அபராதம்போடுவதிலும் இன்னும் 72-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளுவதிலும் ஒவ்வொரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டுக்கும் யதேச்சையான அதிகாரமுள்ளதாக ஏற்படும். ஆனல், பொதுவாக அவர்

தம்முடைய அதிகாரத்தைச் செலுத்துவதில் தமது லோகல்போர்டினுடைய அங்கத்தினர்களின் பூரண நம்பிக்கைகளைக்கொண்டே செய்யவேண்டும். ஒரு ப்ரெஸிடென்டின் நிச்கையானது அல்லது அதிகாரமானது சரியாக நடத்தப்படாவிட்டால் இச்சட்டத்திலேயே பல மார்க்கங்களினால் அந்த லோகல் போர்டானது பரிகாரங்களைத் தேடுவதற்கு அதிகாரம் ஏற்பட்டிருக்கிறது. 26-வது பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு அங்கத்தினரும் தக்ககேள்விகளை கேட்கலாம். (26-வது பிரிவின்கீழுள்ள குறிப்புகளை பார்க்க) 27-வது பிரிவின்கீழ் ஒவ்வொரு லோகல்போர்டுக்கும் தமது ப்ரெஸிடென்டினிடம் உள்ள ரிக்கார்டுகளை தாம் பார்வையிடும்படி கேட்பதற்கு அதிகாரமுண்டு. ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு வேணுமென்றே தவறி செய்யும்பக்ஷத்தில் 43-வது பிரிவின்கீழ் அவரை நீக்குவதற்கு லோகல் கவர்ன்மென்டிற்கு அதிகாரமுண்டு. ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டின் நிர்வாகமானது சரியாக அல்லது திருப்திகரமாக இராமற்போனால் அவரை நீக்குவதற்கு 44-வது பிரிவின்கீழ் அந்த லோகல்போர்டுக்கே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டினுடைய நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக இவ்வளவு ஜாக்கிரதைகள் ஏற்பட்டுள்ளதால் ஒரு ப்ரெஸிடென்டு தம் லோகல்போர்டினுடைய இஷ்டத்திற்கு மீறியாதொன்றும் செய்வதற்கில்லை. பொதுவாக 26-வது பிரிவின்கீழ் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கு உரிமையுள்ளவராதலால் ப்ரெஸிடென்டினுடைய நிர்வாகத்திலுள்ள குறைகளைத் தீர்ப்பதற்காகதீர்மானங்களின்மூலமாகவே அவைகளை தீர்த்துகொள்ளலாம். இப்பிரிவின்கீழாவது அல்லது 72-வது பிரிவின்கீழாவது ஒரு ப்ரெஸிடென்டானவர் தமது அதிகாரத்தைச் செலுத்துவதில் ஏதாவது தவறு இருக்கும் பக்ஷத்தில் யாதொரு அங்கத்தினர் ஒரு கேள்வி (இன்ட்டர்பிலேஷன்)மூலமாயாவது அல்லது ஒரு தீர்மானத்தின் (ரிசல்யூஷன்) மூலமாயாவது அவைகளை நீக்கிக்கொள்ளலாம்.

சில அவசர சந்தர்ப்பங்களில் ப்ரெஸிடென்டானவர் தாத்காலிகமாக சில உத்தியோகஸ்தர்களை அல்லது ஊழியர்களை நியமிக்கலாமென்று இப்பிரிவிலுள்ளது. ஆனால், அப்படி நியமித்தப்பிறகு அடுத்த மீட்டிங்கிலேயே அவர் போர்டுக்கு அதைப்பற்றித் தெரிவிக்கவேண்டும். இதன் தாத்பரியம் என்னவென்றால் அந்த போர்டானது ப்ரெஸிடென்டினுடைய நியமனத்தை அங்கீகாரமாவது செய்யலாம், அல்லதுஒப்புக்கொள்ளாமலிருக்கலாம்என்பது. அப்படி ஒப்புக்கொள்ளாவிட்டால் ப்ரெஸிடென்டானவர் அந்த உத்தியோகத்தை அல்லது அந்த ஊழியத்தை எடுத்துவிடவேண்டும். ஆனால், ஒரு ப்ரெஸிடென்டுக்கு சட்டப்பிரகாரம் அவரை தம் லோகல்போர்டானது ஒரு மீட்டிங்கில் கூடும்வரையிலும் தாத்காலிகமாக நியமிப்பதற்கு உரிமையுண்டாதலால் அப்படிப்பட்ட நபர்களினுடைய சம்பளமானது அந்தலோகல் போர்டாலேயே கொடுக்கப்படவேண்டும்.

71. (1) இந்த சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்கும் இது விஷயமாய் லோகல் கவர்ன்மென்டாரால் செய்யப்படும் எவையேனும் விதிகளுக்கும் உட்பட்டு, டிஸ்டிரிக்ட் போர்டார் - தங்களுடைய சிப்பந்தியைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களின் விஷயமாயும் ஊழியக்காரர்களின் விஷயமாயும் அந்த டிஸ்டிரிக்ட்டி-லுள்ள எல்லா தாலூக்கா போர்டுகள் பஞ்சாயத்துகள் இவைகளின் சிப்பந்தியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களின் விஷயமாயும், ஊழியர்களின் விஷயமாயும்,

ஊழிய சம்பந்தமான ரெகுலேஷன்களை ஏற்படுத்த டிஸ்டிரிக்ட் போர்டாருக்குள்ள அதிகாரம்.

(a) சம்பளங்கள், உபகாரங்கள், அல்லது உபகாரச்சம்பளங்கள் இவைகளின் வரிசை, அளவு, இவைகளை நிர்ணயிக்கவும்,

(b) சவதரிக்கப்படவேண்டிய ஜாமீன் தொகையையும் ஜாமீன் இன்னபடி- இருக்கவேண்டு மென்பதையும் நிச்சயிப்பதற்காகவும்,

(c) வித்தியா சம்பந்தமான யோக்கியதாம்சங்களையாவது இதர யோக்கியதாம்சங்களையாவது நிர்ணயிப்பதற்காகவும்,

(d) ரஜா கொடுப்பதைக்குறித்தும், ரஜாவர்த்தனை கொடுப்பதைக்குறித்தும், பதிலாய் வேலைபார்த்து வருகிறவருக்குச் சேரவேண்டிய வர்த்தனை கொடுப்பதைக்குறித்தும் பிரயாணப்படிச் சிலவுகளைக் குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(e) பென்ஷன் கொடுப்பதைக்குறித்தும் க்ராட்யூட்டி (நன்கொடை) கொடுப்பதைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(f) இன்ன விதங்களின்படியும் இன்ன திட்டங்களுக்குட்பட்டும் பென்ஷனை கொடுக்கப்படவேண்டிய சகாயத்தொகைகள் கொடுக்கப்படவேண்டுமென்பதை நிச்சயிப்பதற்காகவும்,

(g) ப்ரவிடென்டு (எதிர்கால சகாய) நிதியை ஏற்படுத்தி அதை ஆதரித்து வருவதற்காகவும், அதற்குத் தொகை செலுத்தும்படி கட்டாயப்படுத்துவதற்காகவும்,

(h) நடத்தையைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(i) பொதுவாய் ஊழியசம்பந்தமான திட்டங்களை நிர்ணயிப்பதற்காகவும்,

ரெகுலேஷன்களை ஏற்படுத்தலாம்.

ஆனல்,—

(i) அப்படிப்பட்ட ரெகுலேஷன்களினல் கொடுக்கப்படும் யாதொரு வகையான ரஜாவின் கால அளவும், ரஜாவர்த்தனையும், க்ராட்யூட்டியும் (நன்கொடை) பிரயாணபடிச்சிலவும் அல்லது பென் ஷனும் - எந்த விஷயத்திலும் லோகல் கவர்ன்மென்டாரின் பிரத்தி யேக அனுமதியில்லாமல், அதேமாதிரியான அந்தஸ்திலும் நிலைமை யிலுமுள்ள கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப் படக்கூடிய அளவுக்கு மேற்படக்கூடாது ; மேலும்,

(ii) என்ன திட்டங்களின்படி அப்படிப்பட்ட வர்த்தனை கொடுக்கப்படுகிறதோ அல்லது யாதொரு ரஜாவுக்காகிலும், வயது அல்லது வியாதி காரணமாக வேலையிலிருக்கச் சக்தியற்றவனென்று நிர்ணயிப்பதற்காகிலும், வேலையிலிருந்து விலகிக்கொள்வதற்காகிலும் அனுமதி கொடுக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட திட்டங்களானவை - அதே மாதிரியான அனுமதியில்லாமல், அப்படிப்பட்ட கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர்களின் விஷயத்தில் அந்தந்த காலத்தில் செலாவணி யாய்க்கொண்டிருக்கும் திட்டங்களுக்காட்டிலும் அதிக அனுகூல மானவைகளாயிருக்கக்கூடாது.

(2) அப்படிப்பட்ட ரெகுலேஷன்கள் டிஸ்டிரிக்டிலுள்ள சகல லோகல் போர்டுகளையும் கட்டுப்படுத்தக்கூடியவைகளாகும்.

லோகல் போர்ட் உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக் காரர்களை கண்டிக்க அதிகாரம்.

72. 74-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கும் நிர்ணயிக்கப்படக்கூடிய மேற்பார்வைக்கும் உட்பட்டு, யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர் - இலாக்கா சம்பந்தமான விதிகளை யாவது ஒழுங்கையாவது மீறி நடந்ததற்காக வாகிலும் அஜாக்கிரதையாயிருந்ததற்காக வாகிலும் தகுதியற்றவராயிருந்ததற்காகவாகிலும் கடமையைச் செய்ய அசட்டை செய்ததற்காகவாகிலும் இதர துர் நடத்தைக்காகவாகிலும் டிஸ்டிரிக்ட்டு என்ஜினீயர் அல்லது டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீஸர் அல்லது டிஸ்டிரிக்ட்டு பஞ்சாயத்து ஆபீஸர் இவர் களைத் தவிர அந்த லோகல் போர்டினுடைய சேவகத்திலுள்ள வேறே யாதொரு லோகல் போர்டு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக் காரரை தப்பு செய்ததாக கண்டிக்கலாம் அல்லது அவருக்கு அப ராதம் விதிக்கலாம், அவருடைய உத்தியோக உயர்வை நிறுத்தலாம்,

அவரை வேலையில் காழ்த்தலாம், சிறிது காலத்திற்கு வேலையினின்று நீக்கிவைக்கலாம், எடுத்துவிடலாம் அல்லது தள்ளிவிடலாம்.

குறிப்புகள்.

இந்தப்பிரிவில் லோகல்போர்டு உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியர்களை கண்டிப்பதைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. அவர்களை கண்டிப்பதில் ப்ரெஸிடென்டானவர் 74–வது பிரிவில் சொல்லப்பட்டுள்ள அம்சங்களையும், லோகல் கவர்ன்மென்டார் அல்லது தாலூக்கா அல்லது பஞ்சாயத்தாக இருந்தால் டிஸ்டிரிக்ட்டு போர்டார் 71-வது பிரிவின்கீழ் செய்யும் விதிகளை அனுசரித்தே செய்யவேண்டும். 1920-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு ஆக்டின்கீழ் 31–8–1923-ல் சென்னை கவர்ன்மென்டார் லோகல் போர்டு உத்தியோகஸ்தர்களையும், ஊழியர்களையும் நியமிப்பதைப்பற்றியும், கண்டிப்பதைப்பற்றியும் விதிகளைக் செய்திருக்கின்றனர். அந்த விதிகளின் பிரகாரம் ஒரு ப்ரெஸிடென்டு ஒரு உத்தியோகஸ்தருக்கு அல்லது ஊழியருக்கு அபராதம் மாத்திரம் விதித்திருந்தால் அதற்குமேல் அப்பீல் என்பதே கிடையாது. ஆனல், அந்த நபர் ஒரு யூனியன் போர்டு உத்தியோகஸ்தராயிருந்தால் தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டிற்கும், ஒரு தாலூக்காபோர்டு உத்தியோகஸ்தராயிருந்தால் டிஸ்டிரிக்ட்டுபோர்டு ப்ரெஸிடென்டிற்கும் ரிவிஷன் மனு செய்துக்கொள்ளலாமென்றுள்ளது. அம்மனுவில் முறையே தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டும், டிஸ்டிரிக்ட்டுபோர்டு ப்ரெஸிடென்டும் எப்படி செய்வது யுக்தமென்று தோன்றுகிறதோ அம்மாதிரியாக உத்தரவு செய்யலாம். ஆனல், அபராதமல்லாமல் வேறே யாதொரு தண்டனையை இட்டிருக்கும்பக்ஷத்தில் அந்த தண்டனையானது ஒருயூனியன்போர்டு ப்ரெஸிடென்டினுல் விதிக்கப்பட்டிருந்தால், தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டிற்கும், ஒரு தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டினுல் இடப்பட்டிருந்தால் டிஸ்டிரிக்ட்டுபோர்டு ப்ரெஸிடென்டிற்கும், ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டினுல் அந்த டிஸ்டிரிக்ட்டுபோர்டில் 250-ரூபாய்க்கு குறைந்துள்ள மாதச்சம்பளம் பெற்றுவரும் யாதொரு உத்தியோகஸ்தருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அந்த டிஸ்டிரிக்ட்டுபோர்டின் ஸ்டாண்டிங் கமிட்டிக்கும் 250-ரூபாயிக்கு மேலாக மாதச்சம்பளம் பெற்றுவரும் யாதொரு நபருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் நேராக கவர்ன்மென்டிற்கும் அப்பீல் உண்டு. ஆனல், அந்த தண்டனை விதிக்கப்பட்ட நபர் ஒரு லோகல் போர்டுக்கு இரவலாகக் கொடுக்கப்பட்ட கவர்ன்மென்டு உத்தியோகஸ்தராக இருப்பின் அவர்களுக்கு நேராக கவர்ன்மென்டிற்கு அப்பீல்செய்து கொள்வதற்கு அதிகாரமுண்டென்று 13, 14-வது விதிகளில் சொல்லப்பட்டுள்ளது. யூனியன்போர்டு உத்தியோகஸ்தராயிருந்து அவருக்கு மூப்பது ரூபாய்க்குக் குறையாமல் மாதச்சம்பளமிருப்பின் டிஸ்டிரிக்டு போர்டு ப்ரெஸிடென்டுக்கு இரண்டாவது அப்பீல் செய்துகொள்வதற்கு உரிமையுண்டு. (இரண்

டாவது அப்பீல் என்பது, முதலில் செய்யப்பட்ட அப்பீலானது தெட்டுப் போனபிறகு அதன்பேரில் செய்யும் ஒரு அப்பீலைக் குறிக்கும்.) அதே மாதரியாக ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் மாதச்சம்பளம் பெற்றுவரும் தாலூக்கா போர்டு உத்தியோகஸ்தர்களுக்கும், நூற்றுஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் மாதச்சம்பளம் பெற்றுவரும் டிஸ்டிரிக்ட்டு போர்டு உத்தியோகஸ்தர்களுக்கும் முறையே டிஸ்டிரிக்ட்டு போர்டு ஸ்டாண்டிங் கமிட்டிக்கும் கவர்ன்மெண்டிற்கும் இரண்டாவது அப்பீல் செய்ய உரிமையுண்டு. இந்த அம்லமானது 15-வது விதியில் காணப்பட்டுள்ளது.

1930-ம் வருஷத்திய லோகல்போர்டு திருத்தசட்டமானது அமுலுக்கு வந்த பின்னர் வேறே புதிய விதிகள் செய்யப்படாததினுல் பழைய விதிகளே அனுசரிக்கப்பட வேண்டும். ஆனல், இனி புதிய லோகல்போர்டு சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் புதிய லோகல்போர்டுகளிலுமுள்ள அங்கத்தினர்கள் ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப் படுபவர்களாதலால் புதிய லோகல்போர்டுகளுக்கு தனிமையானதோர் அந்தஸ்து உண்டு. டிஸ்டிரிக்ட்டு முனிஷிபாலிட்டி சட்டத்தின் கீழ் முனிஷிபாலிட்டி சேர்மென்கள் செய்யும் உத்திரவுகளுக்கு மேலாக முனிஷிபாலிட்டி ஸ்டாண்டிங் அப்பீல் கமிட்டிக்கு ஒரு அப்பீல் உண்டு என்றிருப்பதுபோல், இச்சட்டத்தின் கீழும் இனி செய்யப்படும் விதிகளில் ஒவ்வொரு லோகல்போர்டுக்கும் ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி ஏற்படுத்தப்பட்டு - அந்தக் கமிட்டிக்கு ப்ரெஷிடெண்டினுடைய உத்திரவுகளின்பேரில் செய்யப்படும் அப்பீல்களை விசாரிப்பதற்கு அதிகாரம் இருக்கும்படியாக செய்வது யுக்தமாக இருக்கும்.

கவர்ன்மெண்டினல், இரவலாக கொடுக்கப்படும் உத்தியோகஸ்தர்களைச்சேர்ந்த வரையிலும் ஒவ்வொரு லோகல் போர்டு ப்ரெஷிடெண்டும், 74-வது பிரிவின்கீழுள்ள அம்சங்களை கவனிக்க வேண்டும்.

ஒரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் தவறு செய்யும்பக்ஷத்தில் அதை மன்னித்துவிட்ட பிறகு அதே தவறை ஒரு ஆதாரமாகக் கொண்டு ஒரு ப்ரெஷிடென்டு மறுபடியும் தண்டிப்பதற்கு இல்லை (a). ஒரு லோகல் போர்டு ப்ரெஷிடென்டுஇப்பிரிவின்கீழ் யாதொருதண்டனையை செய்யும்பக்ஷத்தில் அதன் விஷயமாக ஏதாவது நஷ்டதாவா செய்வதாக யிருந்தால் அந்த ப்ரெஷிடென்டுக்கு நோட்டீஸ் கொடுத்த பிறகுதான் தாவா செய்ய வேண்டும். அந்த தாவாவானது வியாஜ்ஜியமூலம் நடந்த ஆறு மாதங்களுக்குள்ளாகத்தான் தொடரப்படவேண்டும். இதைப்பற்றி 225-வது பிரிவின் கீழ் உள்ள குறிப்புகளில் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதை பார்க்கவும்.

(a) மதுரை தேவஸ்தானம் vs சுந்த அண்ணுவி A. I. R. 1926 Mad. 57=49 M. L. J. 516.

73. (1) லோகல் கவர்ன்மென்டார், டிஸ்டிரிக்டு என்ஜினீயர், டிஸ்டிரிக்டு சுகாதார ஆபீஸர், டிஸ்டிரிக்டு பஞ்சாயத்து ஆபீஸர், இவர்களுக்கு ராஜா கொடுக்கலாம். டிஸ்டிரிக்டு போர்டு ப்ரெஸிடென்டு டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய மற்ற எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் ராஜா கொடுக்கலாம்.

லோகல்போர்டுகளினுடைய உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் ராஜா கொடுக்கும் அதிகாரம்.

(2) ஒரு தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டு அல்லது பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு முறையே தாலுக்காபோர்டு அல்லது பஞ்சாயத்தினுடைய உத்தியோகஸ்தர்களுக்கு அல்லது ஊழியர்களுக்கு ராஜா கொடுக்கலாம்.

74. (1) லோகல் கவர்ன்மென்டார் - யாதொரு லோகல் போர்டார் விண்ணப்பம் செய்துக்கொள்வதன் மேல், இந்த ஆக்டினுள்ள காரியங்களின் பொருட்டு அந்த போர்டினுல் வேலையில் அமர்த்திக்கொள்ளும்படி யாதொரு கவர்ன்மென்டு உத்தியோகஸ்தரை, லோகல் போர்டினிடத்தில் விட்டுவைக்கலாம். அப்படி வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட யாதொரு கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர் கவர்ன்மென்டு அலுவலில் எந்தப் பிரிவைச் சேர்ந்திருக்கிறாரோ அந்த பிரிவுக்குரிய விதிகளின்படி பெற்றுக்கொள்ள அவர் அர்ஹராயிருக்கும் சம்பளத்தை லோகல்போர்டார் அவருக்குக் கொடுக்கவேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருடைய பென்ஷன் விஷயமாயும் ராஜா விஷயமாயும் கொடுக்கும் வர்த்தனைகளுக்காக அந்தந்த காலத்தில் அதைக்குறித்து செலாவணியாய்க் கொண்டிருக்கிற விதிகளின்படி செலுத்தத்தக்கதான தொகையைப் பிரதேச கவர்ன்மென்டாருக்குச் செலுத்தவும்வேண்டும்.

லோகல் போர்டாரால்வேலையில்அமர்த்திக்கொள்ளப்பட்ட கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர்கள்.

(2) லோகல்போர்டாரால் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கையில் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தராகிலும் லோகல்போர்டாருடைய வேறே யாதொரு உத்தியோகஸ்தராகிலும் கவர்ன்மென்டாருக்காவது யாதொரு பப்ளிக் அல்லது ப்ரைவேட் கூட்டத்தாருக்காவது யாதொரு வேலை செய்வாராகில், சந்தர்ப்பத்திற்கேற்றபடி லோகல் கவர்ன்மென்டாராவது சம்பந்தப்பட்ட பப்ளிக் அல்லது ப்ரைவேட் கூட்டத்தாராவது - அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருடைய சம்

பளத்தில் எவ்வளவு கொடுப்பது அந்த வேலைக்குச்சரியாயிருக்கு மென்று லோகல் கவர்ன்மென்டார் அபிப்பிராயப்படக்கூடுமோ அவ் வளவு தொகையை லோகல் போர்டாருக்குக் கொடுக்கவேண்டும்.

(3) லோகல் போர்டாரால் அமர்த்திக்கொள்ளப்பட்ட யாதொரு கவர்ன்மென்டு உத்தியோகஸ்தரை அப்படிப்பட்ட உத்தி யோகத்திலிருந்து தள்ளிவிடுவதானலும் நீக்கிவிடுவதானலும் பிரதேச கவர்ன்மென்டாரின் சம்மதியில்லாமலாவது கவர்ன்மென்டு அலுவலில் அந்த உத்தியோகஸ்தர் சேர்ந்திருக்கிற பிரிவின் பிரதான மேல் விசா ரணை அதிகாரிக்கு அதைக்குறித்து மூன்று மாதத்திற்கு முன்னதாய் எழுத்துமூலமான நோட்டீஸ் கொடாமலாவது அப்படித் தள்ளிவிட வாகிலும் நீக்கிவிடவாகிலும் கூடாது.

(4) லோகல் போர்டாரால் அமர்த்திக்கொள்ளப்பட்ட யாதொரு கவர்ன்மென்டு உத்தியோகஸ்தரை லோகல் போர்டா ருடைய வேலையிலிருந்து வரவழைத்துக் கொள்ளுகிறதானலும், மிக வும் அவசரமாயிருக்கிறவிஷயங்களில்தவிர மற்றப்படி லோகல் கவர்ன் மென்டார் அதைக்குறித்து லோகல் போர்டாருக்கு எழுத்துமூல மாய் மூன்று மாதத்திய நோடீஸ் கொடுத்திருந்தாலொழிய அல்லது கொடுக்கிறவரையில், அல்லது வரவழைத்துக்கொள்ளப்பட்ட உத்தி யோகஸ்தருக்கு பதிலாக வேறே கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர் அனுப்பப்பட்டிருந்தாலொழிய, லோகல்போர்டாருடைய சம்மதி யில்லாமல் அப்படி வரவழைத்துக்கொள்ளக்கூடாது.

(5) லோகல்போர்டுகளால் வேலையில் அமர்த்திக்கொள் ளப்பட்ட கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர்கள்-தாங்கள் எந்த இலாக் காவைச் சேர்ந்தவர்களோ அந்த இலாக்காவுக்குப் பிரயோகமாகத் தகுந்த ரெகுலேஷன்களின் பிரகாரம் ரஜாவுக்கும் மற்றுமுள்ள சுதந்த ரங்களுக்கும் பாத்தியதை யுடையவராவார்கள்.

74-A. (1) இந்த ஆக்டில் என்ன கண்டிருந்த போதிலும் அவைகளுக்கு நிமித்தியமல்லாமல் லோகல் கவர்ன்மென்டார் ஒரு அறிக்கையினல் லோகல் போர்டுகளினுடைய யாதொரு வகுப்பு உத்தி யோகஸ்தர்களை அல்லது ஊழியர்களை சென்னை மாகாணத்திற்காக லோகல் பண்டு ஊழியம் என்று ஒரு ஊழியத்தின் கிழ் அமர்த்தலாம்.

லோகல் போர்டு களினுடைய ஊழிய த்திலுள்ள உத்தியோ கஸ்தர் அல்லது ஊழி யர்களை பிரதேச ஊழி யத்தில் சேர்ப்பது.

ஆனல் இந்த உபப்பிரிவின் கீழ்—

(i) இதில் சம்மந்தப்பட்ட எல்லா லோகல் போர்டுகளும் இதன் விஷயமாக ஆலோசிக்கப்பட்டாலொழியவும்,

(ii) அப்படி ஆலோசிக்கப்பட்ட லோகல் போர்டுகளில் அதிகமான ஒரு சங்கியையிலடங்கிய லோகல் போர்டுகள், அந்த ப்ரேரேபணையை ஆமோதிப்பதாக ஒரு தீர்மானம் செய்தாலொழியவும்,

யாதொரு அறிக்கையும் செய்யப்படக்கூடாது.

(2) (1)-வது உபப்பிரிவின் கீழ் ஒரு அறிக்கையை வெளியிட்ட பிறகு, லோகல் கவர்ன்மென்டார் 201-A பிரிவிலுள்ள அம்சங்களுக்குட்பட்டு, அப்படி வகுக்கப்படுவதை முறைப்படுத்துவதற்காக வேண்டிய விதிகளைச்செய்யவும், அவர்களை பொறுக்கி எடுப்பதில் கவனிக்கவேண்டிய முறைகளை அனுசரிப்பதற்கு விதிகளை ஏற்படுத்தவும் அவர்களின் ஊழிய நிபந்தனைகள் சம்பளங்கள், வர்த்தனைகள், கட்டுப்பாடு இவைகளை முறைப்படுத்தி விதிகளைச்செய்யவும், அப்படி ஏற்படுத்தப்படும் பண்டு ஊழியத்தின் நடத்தையைப்பற்றி விதிகளை ஏற்படுத்தவும் அதிகாரமுள்ளவராவார்கள்; இன்னும் அந்த விதிகள் அந்த ஊழியத்திற்கு சம்பந்தப்பட்டவரையில் உள்ள அதிகாரத்தை லோகல் கவர்ன்மென்டிலாவது அல்லது அவைகளில் குறிக்கப்பட்டிருக்கும் வேறே அதிகாரி அல்லது அதிகாரிகளிலாவது சங்கிரமிக்கும்படி செய்யலாம்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்தச் சட்டத்தினுல் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் தாத்பரியம் என்னவென்றால், லோகல்போர்டு உத்தியோகஸ்தர்கள் இதுவரையிலும் ஒவ்வொரு லோகல்போர்டினுலும் தனித்தனியாக அமர்த்தப்பட்டு வருவதினுல் ஒரு லோகல்போர்டு உத்தியோகஸ்தருக்கும், மற்றொரு லோகல் போர்டு உத்தியோகஸ்தருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல் இருந்து வருவதை நீக்கி சென்னை மாகாணத்திலுள்ள எல்லா லோகல் போர்டுகளுடைய உத்தியோகங்கள் ஒரே மாதிரியாக அமைக்கப்படவேண்டுமென்பது இப்பிரிவை புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்ட லோகல் போர்டு சட்ட திருத்தமசோதாவின் காரண அறிக்கைகளில் அடியில் கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

"இப்பொழுதுள்ள ஆக்டின்பிரகாரம் ஒவ்வொரு லோகல்போர்டுக்கும் அதன் ப்ரெஸிடெண்டுக்கும் போர்டின் உத்தியோகஸ்தர்கள் விஷயமாகவும், சேவகர்கள் விஷயமாகவும் பூரண அதிகாரம் உண்டு. ஆனால், லோகல் போர்டினுடைய உயர்ந்த உத்தியோகஸ்தர்களாகிய, டிஸ்டிரிக்ட்டு போர்டு என்ஜினீயர்கள், டிஸ்டிரிக்ட்டு ஹெல்த் (சுகாதார) ஆபீஸர்கள், இவர்கள் விஷயமாக இவர்களுக்கு தங்கள் பதவிகளில் ஸ்திரம் ஏற்படுத்தி சம்பள உயர்வும் ஏற்படுத்துவது அவசியமாயிருக்கிறது. தவிர லோகல் கவர்ன்மென்டு அல்லது வேறே ஒரு அதிகாரி இவர்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கும் அதிகார முடையவர்களாயிருக்க வேண்டும். சென்னை மாஹாணத்திலுள்ள எல்லா டிஸ்டிரிக்ட்டு போர்டுகளின் சம்மதத்தின்பேரில் டிஸ்டிரிக்ட்டு போர்டு என்ஜினீயர்களும், டிஸ்டிரிக்ட்டு ஹெல்த்தாபீலர்களும், ஒரு தனி ஊழியமாக ஏற்படுத்தப்படுவது இப்பொழுதுள்ள சட்டப்பிரகாரம் கவர்ன்மென்டிற்கு அதிகாரம் தருகிறதாயிருக்கிறதா என்பதைப்பற்றி சந்தேகங்கள் கிளப்பப்பட்டிருக்கின்றன. ஆகையால், இவ்வித ஆசாரம் சட்டத்தினுல் ஸ்பஷ்டமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் இக்கொள்கையை மற்ற இதர லோகல் போர்டு உத்தியோகஸ்தர்களுக்கும் அனுசரிக்கப் படும்படி செய்யவேண்டு மென்றும் அவசியமாயிருக்கிறது. ஆகையால், லோகல்போர்டுகளின் சம்மதத்தைக் கொண்டு லோகல்போர்டு உத்தியோகஸ்தர்களையும், சேவகர்களையும் ஒரு தனி ஊழியமாக ஏற்படுத்தும்படி வேண்டிய அதிகாரங்கள் இம்மசோதாவில் நுழைக்கப்பட்டு இருக்கின்றன."

இனி இந்தப்பிரிவின் கீழ் சேர்க்கப்படும் லோகல்போர்டு உத்தியோகஸ்தர்கள் ஒரு போர்டிலிருந்து மற்றொரு போர்டுக்கு மாற்றப்படவும், அப்படி மாற்றப்பட்டபோதிலும் தன் ஊழியமானது கெட்டுப் போகாமலிருக்கவும் சௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாகும். இன்னும் லோகல்போர்டினுடைய உத்தியோகஸ்தர்களும், சேவகர்களும் ஒரு போர்டிலிருந்து மற்றொரு போர்டுக்கு மாற்றப்படுவதினுல் சென்னை மாஹாணத்திலுள்ள எல்லா லோகல் போர்டுகளினுடைய நிர்வாகங்களானது ஒரே மாதிரியாக இருப்பதற்கு வசதிகள் ஏற்படலாம். இனி லோகல்போர்டு குமாஸ்தாக்களுக்கும் சேவகர்களுக்கும் தங்களுடைய ஊழியத்தில் அமைதியும், பத்திரமும் ஏற்படலாம்.

3-ம் பாகம்.

இப்பாகத்தில் லோகல்போர்டுகள் எம்மாதிரிவரிகளைவிதித்துவசூல் செய்யவேண்டுமென்றும் எந்தெந்த காரியங்களுக்குலோகல்பண்டு, தொகைகளை செலவிட வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. இப்பாகத்தில் இரண்டு அத்தியாயங்கள் உள்ளன. VI-வது அத்தியாயத்தில் லாண்டு செஸ் என்னும் வரியைப்பற்றியும் தொழில் வரி, வீட்டுவரி, சுங்கவரி, யாத்திரைக் காரர்களுக்கு வரி ஆகிய இவைகளைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. VII-வது அத்தியாயத்தில் லோகல் போர்டுகளின் வருமானங்கள் எவ்வாறு செலவிடப்படவேண்டும் என்றும் அவைகளுடைய வரவு செலவு கணக்குகள் எப்படி தயாரிக்கப்பட்டு மேல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. V-வது ஷெட்யூலில் உள்ள விதிகளில், லோகல் போர்டுகளினுடைய வரும்படி, ஆதாரங்கள் இவைகளைப்பற்றியும் செலவுகளைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. IV-வது ஷெட்யூலில் வரி வசூ கப்படும் விதம் இன்னதென்று குறிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக, வரி விதிப்பு விஷயமாக, லோகல் போர்டுகள் செய்யும் உத்திரவானது தீர்மானமானதாகும். வரிவிதிப்பானது சட்டத்தை அனுசரித்துசெய்யப்பட்டிருப்பின் அதன் விஷயமாக சிவில் கோர்ட்டார் யாதொரு பரிஹாரமும் கொடுப்பதற்கில்லை. 228-வது பிரிவைப்பார்க்க. ஆனால் வரி விதிப்பு விஷயமாக லோகல் போர்டு சட்டமானது சரிவர அனுசரிக்கப் படாவிட்டால் அதைப்பற்றி சிவில் கோர்ட்டில் பரிஹாரம் தேடவும் சிவில் கோர்ட்டார் பரிஹாரம் கொடுக்கவும் நியாயம் உண்டு. ராஜமஹேந்திரவரம் முனிசிபல் கௌன்சில் vs. பிரசாதராயுடு (a) என்னும் கேஸைப்பார்க்க. ஒரு முனிசிபல் கௌன்சில் ஒரு நபருக்கு கடலேக்காய் சேர்த்து வைப்பதற்காக லைசென்ஸ்தொகை விதிக்கையில், லைசென்ஸை விதிப்பதற்கும் லைசென்ஸ் இடத்தை மேற் பார்வையிடுவதற்கும் எவ்வளவு தேவையோ அதைவிட மிகவும் அதிகமானதோர் வரியை விதித்தது. கோர்ட்டார் அவர்கள் அந்த முனிஸிபல் கௌன்சில் சட்டத்தை அனுசரித்து நடக்கவில்லை யென்றும் முனிஸிபல் கௌன்சில் தன் அதிகார வரம்பிற்கு மீறி நடந்திஞல், கோர்ட்டார் வரி விதிப்பை நீக்கி சரியான தொகையை விதிக்கும் படி உத்தரவிடலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (b) ஒரு முனிஸிபாலிடி அல்லது லோகல் போர்டு ஒரு நபரிடமிருந்து தவருக வசூலித்த வரியை வரப்படுத்துவதற்கு அந்த நபர் தாவா செய்யலாம். அதற்கு பொதுவான லிமிடேஷன் சட்டம்தான் பிரயோக

(a) 50 M. L. J. 556.

(b) 59 M. L. J. Notes of Recent Cases 34—11 அகில இந்தியா லா ஜர்னல், கேஸ்களின் குறிப்புகள் பக்கம் 119.

மாகும். ஆகையால் அப்படி தவறுக வருலான தேதியிலிருந்து 6-மாதத்திற்குள் தான் தாவாவைத்தொடரவேண்டும் என்று சொல்வதற்கில்லை அப்படிப்பட்ட தாவாவுக்கு மூன்று வருஷ தவணேயுண்டு. அப்படிப்பட்ட தாவா செய்வதற்கு முன் யாதொரு நோட்டீஸ்-ம் கொடுக்கப்படவேண்டிய நியாயமில்லை (a). 225-வது பிரிவையும் பார்க்க. ஒரு நபர் சட்டப்பிரகாரம் தாம் எவ்விதத்திலும் வரி செலுத்தக்கடமைப்பட்டவரல்ல என்று ஒரு ஸ்தாபி தம்பெற தாவா செய்யலாம். அவ்விதத் தாவா செய்வதற்கு முன் 225-வது பிரிவின் கீழ் யாதொரு நோட்டீஸ்-ம் கொடுக்கப்படவேண்டிய அவசியமில்லை. 225 வது பிரிவின் கீழ் நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டிய சந்தர்ப்பங்கள் என்னவென்றால் ஒரு லோகல் போர்டு ஏதாவது பிசகு செய்திருந்தால் அதன் விஷயமாக தாவா செய்வதற்கு முன்னுடியாகவே அந்த லோகல் போர்டுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட வேண்டுமென்பது. (b) ஒரு கம்பெனி தாம் எவ்விதத்திலும் வரிக்குட்படுவதற்கில்லை யென்று ஒரு டிக்ரி பெற்றிருந்தது. அந்த டிக்ரியை லக்ஷியம் செய்யாமல் முனிசிபாலிடி அந்தக் கம்பெனிக்குவரி விதித்தது. அந்த கம்பெனி வரியைச்செலுத்திவிட்டு நோட்டீஸ்-ம் செய்துவிட்டு அதை வரப்படுத்த முனிஸிபாலிடியின் பேரில் தாவா செய்தது. அந்த தாவா கோர்ட்டாரால் அங்கீகரிக்கப்படலாமா என்னும்கேள்வி வந்ததில் அங்கீகரிக்கப்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டது (c).

பொதுவாக ஒரு லோகல் போர்டு அல்லது முனிசிபல் கௌன்சில் தன்னுடைய தொகைகளை செலவிடுவதில் துர்விநியோகப் படுத்துவதாக ஏற்படுமானால் அதை தடுப்பதற்காக ஒவ்வொரு வரி செலுத்துவோருக்கும் கோர்ட்டு முன்பாக தாவாசெய்யஉரிமை உண்டென்று பல கேஸ்-களில்தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (d).

(a) திண்டுக்கல் முனிஸிபல் கௌன்சில் vs. பம்பாய் கம்பெனி 56 M. L. J.=525 52 Mad. 207.

(b) அம்பிக சாரன் மஜும்தார் vs. சயத் சந்திரசேன் 2 C. W. N. 639.

(c) K. J. & C. கம்பெனி vs. விஜயநகரம் முனிஸிபல் கௌன்சில் 49 M. L. J. 542=A. I. R. 1929 Mad. 152.

(d) ஷெப்பர்டு vs. பம்பாய் போர்ட் டிரஸ்டு 1 Bom. 132, வாமன் தத்யாஜி vs ஷோலாப்பூர் முனிஸிபாலிடி 22 Bom. 646.

6 - ம் அத்தியாயம்—திரவிய விஷயம்.

வரி விதிப்பது.

74-B. ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டிலும் இந்த ஆக்டில் இனி கண்டிருக்கப்பட்டிருக்கும் அம்சங்களின் பிர காரம் நிலங்களின் வருஷாந்திர மொண்டு (Rent) மதிப்பையொட்டின வரியாக ஒரு கில் ஸெஸ் வரி இடப்படவேண்டும்.

லாண்டு செஸ் (Land cess) வரி.

குறிப்புகள்.

இப்பிரிவு 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் புதியதாக சேர்க்கப்பட்டது. இப்பிரிவானது டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கு லாண்டுசெஸ் என்னும் வரியைவசூலிக்க ஒரு உரிமையை ஸ்தாபிப்பதாகும். இவ்வத்தியாயத்தில் மேலே 79-வதுபிரிவில் லாண்டு செஸ்ஸின் வீதம்என்னவென்றும் மற்ற பிரிவுகளில் லாண்டு செஸ் கலெக்டரால் எம்மாதிரி வசூலிக்கப்பட வேண்டும்என்றுசொல்லப்பட்டுள்ளது. கலெக்டரானவர் நிலவரியின் பேரில் ஒரு ரூபாய்க்கு 1½ அணா வீதம் லெவி வரியிட்டு வசூலித்து கஜானாவில் செலுத்த வேண்டும். டிஸ்டிரிக்ட் போர்டுகளுக்கு ஒரு டிஸ்டிரிக்ட்டில் வசூலிக்கப்படும் செஸ்ஸில் மூன்றில் ஒரு பங்கு உண்டு. தாலூக்காபோர்டு களுக்கு ஒரு தாலூக்காவில் வசூலிக்கப்படும் செஸ்ஸில் மூன்றில் ஒருபங்கு உண்டு. பஞ்சாயத்துகளுக்கு தங்கள் கிராமத்தில் விதிக்கப்படும் லெவியில் 6-ல் ஒரு பங்கு உண்டு.

75. (1) அடியிற்கண்ட வரிகள்-சுங்கங்கள் ஆகிய இவை களில் எதையாவது விதிக்க வேண்டுமென்று டிஸ்டிரிக்ட் போர்டு தம்முடைய தீர்மானத்தினால் நிர்ணயிக்கலாம்.

வரிகளும் சுங்கங்களும்.

(i) தொழில் வரி ;

(ii) வீட்டுவரி ;

(iii) பொதுவான பாட்டைகளின் வழியாய்ப்போகும் சவாரி வண்டிகள், பாரவண்டிகள், பல்லக்குகள், ஜந்துக்கள் ஆகிய இவைகளுக்காவது, பொதுவான வாராவதிகளின்மேல் போகும் நபர் களுக்காவது சுங்கம்.

ஆனால் இந்த உபப்பிரிவில் யாதொன்றும், 1—4—1920க்கு முன்பாக இந்த உபப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒரு டிஸ்டிரிக்ட்

போர்டினுடைய தீர்மானத்தையொட்டி வீட்டுவரி இடப்படாத யாதொரு விஸ்தீரணத்தில் வீட்டுவரி இடுவதற்கு டிஸ்டிரிக்ட் போர்டுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதாக ஏற்படக்கூடாது.

(2) (a) ஒரு பஞ்சாயத்து, லோகல் கவர்ன்மெண்டுக்கு, இந்தப் பிரிவின் (1)—வது உபப்பிரிவின் கீழாவது அல்லது 76-வது பிரிவின் கீழாவது ஒரு டிஸ்டிரிக்ட் போர்டானது அந்த கிராமத்தில் விதிக்கத்தகுந்த ஓர் நில செஸ்வரி, அல்லது ஒருவரி இவை யல்லாத வேறே யாதொரு வரியை விதிப்பது அந்த கிராமத்திற்கு சௌகரிய மாயும் தகுந்ததாயும் இருக்குமென்று சிபார்சு செய்யலாம். அந்த சிபார்சின் பேரில் லோகல் கவர்ன்மெண்டு ஒரு அறிக்கையினுல் அந்த கிராமத்தில் அவ்வரி விதிக்கப்படுமென்று உத்தரவு செய்யலாம்.

(b) (a) என்னும் உபவாக்கியத்தின் கீழ் யாதொரு வரி இடப்படவேண்டுமென்று செய்யப்படும் யாதொரு சிபார்சும் அந்த பஞ்சாயத்தினுல் இதற்காக தனியாக கூட்டப்பட்ட ஒரு மீட்டிங்கில் அந்த பஞ்சாயத்திற்குண்டான மொத்த அங்கத்தினரின் சங்கியையில் பாதிக்கு குறையாமல் உள்ள நபர்களால் அம்மாதிரி வரி இடப்படலாமென்று ஒரு தீர்மானத்தினுல் உத்தரவிடப்பட்டா லொழிய கவர்ன்மெண்டாருடைய பார்வைக்கு கொண்டுவரப்படக்கூடாது.

(3) இந்த ஆக்டில் வேறே விதமாய் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி,

(a) வரிகளும் சுங்கங்களும் யாதொரு டிஸ்டிரிக்டின் வெவ் வேறு பாகங்களில் வேவ்வேறு வீதங்களின்படி விதிக்கப்படலாம்;

(b) தற்காலத்தில் விதிக்கப்பட்டு வரும் யாதொரு வரியை யாவது சுங்கத்தையாவது எடுத்துவிடுவதற்காக, அல்லது எந்த வீதத்தின்படி யாதொரு வரி அல்லது சுங்கம் விதிக்கப்படுகிறதோ அந்த வீதத்தைக் குறைப்பதற்காக டிஸ்டிரிக்ட்டு போர்டு செய்யும் யாதொரு தீர்மானத்தை உடனே லோகல் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கவேண்டும்; மேலும், கடன் வாங்கியிருந்து அந்தக் கடனை இன்னும் செலுத்தாமலிருக்கும் லோகல் போர்டுகளின் விஷயத்தில், மேலே கண்டபடி வரி அல்லது சுங்கத்தை எடுத்து விடுவதாயிருந்தாலும் வீதத்தைக் குறைப்பதாயிருந்தாலும் அந்த தீர்மானம் லோகல் கவர்ன்மெண்டாரின் அனுமதியின்றி அமுலுக்கு கொண்டுவரக்கூடாது.

(4) (1)-வது உபப்பிரிவின் கீழ் உள்ள ஒரு தீர்மான மானது அல்லது (2)-வது உபப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஒரு அறிக்கையானது ஒரு குறிப்பிட்ட வருஷத்திற்கு அமுலுக்கு வந்த பிறகு, அப்படிப்பட்ட தீர்மானத்தில் அல்லது அறிக்கையில் கண் டிருக்கும் விதிதங்கள் அல்லது தேதி இவைகளை மாற்றிவைக்க யாதொரு ப்ரேரேபணையும் அந்த வருஷத்தைச் சேர்ந்தவரைக்கும் லோகல் கவர்ன்மென்டினுடைய அனுமதி இல்லாமல் அல்லது அவர்க ளிடமிருந்து ஒரு கட்டளையில்லாமல் அந்த டிஸ்டிரிக்ட் போர்டு அல் லது பஞ்சாயத்து இவைகளால் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப் படக்கூடாது.

குறிப்புகள்

இந்தப்பிரிவானது 1930-ம் ஜூத்திய திருத்தசட்டத்தினால் முற்றிலும் மாற்றப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப்பிரிவானது, டிஸ்டிரிக்ட்டு போர்டினாலும், பஞ்சாயத்துகளினாலும், வரிகளும், சுங்கங்களும் விதிக்கப் படும் முறைகளைப்பற்றியும் நிபந்தனைகளைப்பற்றியும் கூறுவதாகும். புதிய சட்டத்தில், பழைய பஞ்சாயத்துகள் லோகல் போர்டுகளாக மாற்றப்பட்டு வருவதால் அவைகளுடைய நிர்வாகங்களை உத்தேசித்து பஞ்சாயத்துகள் தங்கள் கிராமங்களுக்கு ஏற்றபடி புதியவரிகளை விதிப்பதற்கு கவர்ன் மென்டாருக்கு சிபார்சு செய்யலாம் என்று ஒரு அம்சம் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. வரிகளையாவது, சுங்கங்களையாவது குறைப்பதற்காக டில் டிரிக்ட்டு போர்டானது யாதொரு தீர்மானம் செய்யும் பக்ஷத்தில் அந்த தீர்மானமானது உடனே கவர்ன்மென்டாருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டானது லோகல் கவர்ன்மென்டினிட மிருந்து ஏதாவது கடன் வாங்கியிருக்கும் பக்ஷத்தில் கவர்ன்மென்டா ருடைய அனுமதியில்லாமல் அத்தீர்மானம் அமுலுக்கு வரக்கூடாது என்றுள் ளது.

இப்பொழுது சுங்கங்களை எடுத்து விடுவதற்காக ஒரு சட்ட மசோதா வானது சென்னை சட்டசபையில் ஆலோசனைக்கு வருவதற்காக இருந்து வருகிறது. அந்த மசோதாவின் பிரகாரம் இப்பிரிவின் 1-வது உபப்பிரிவின் (iii) வாக்கியமானது அடியோடே எடுபட்டுப் போய் விடும்படியாக பிரே ரேபிக்கப்பட்டிருக்கிறது. ஷை மசோதாவானது நடந்தேறும் பக்ஷத்தில் சுங்கங்களானது அடியோடே எடுபட்டுப்போய் அதற்குப்பதிலாக மோட் டார் வண்டிகளின் மீது வருஷவாரிவரி இடப்படும். பஞ்சாயத்துகள் இப் பிரிவின் (2)-வது உபப்பிரிவின் கீழ் யாதொரு வரியை விதிக்கும்படி சிபார்சு செய்யலாமாகையால் தங்கள் விஸ்தீரணத்திற்குள்ளிருக்கும் இதர வண்டிகளுக்கும் வரி விதிக்கும்படி பிரேரேபிக்கலாம்.

76. யாத்திரைக்காரர்களுக்கு வரி.

லோகல் கவர்ன்மென்டாரின் அனுமதியையும் இந்தியா கவர்ன்மென்டாரின் அனுமதியையும் முன்னதாகப் பெற்றுக்கொண்டு யாதொரு டிஸ்டிரிக்ட் போர்டு ஒரு தீர்மானத்தினால் அந்த டிஸ்டிரிக்டிலுள்ள யாதொருயாத்திரை ஸ்தலத்திற்குள்ளிருந்து அல்லது அதற்கு அருகாமையில் 110-வது பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் யாதொரு ஸ்டேஷனிலிருந்து போகும் நபர்களுக்கு வரிவிதிக்க தீர்மானிக்கலாம்;

ஆனால் அப்படிப்பட்ட வரியிலிருந்து கிடைக்கும் தொகையில் எந்த பாகத்தையும் அப்படிப்பட்ட யாத்திரை ஸ்தலத்திற்கு வரும் யாத்திரைக்காரர்களுடைய ஆரோக்கியத்திற்கும், சௌகரியத்திற்கும் வேண்டிய ஏற்பாடுகளே செய்வது அல்லது அந்த ஸ்தலத்தை சீர்ப்படுத்துவது அல்லது விருத்தி செய்வது இக்காரியங்களைத் தவிர வேறே காரியங்களுக்கு செலவிடக்கூடாது.

குறிப்புகள்.

இப்பிரிவிற்கும் பழைய 76-வது பிரிவிற்கும் வித்தியாசம் உள்ளது. இப்பிரிவின் இரண்டாவது பாராவில், யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரியானது அவர்களுடைய ஆரோக்கியத்திற்கும் சௌகரியத்திற்கும்வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக செலவிடப்படும் என்றுபுதிய சட்டத்தினால் ஓர் அம்சம் காணப்பட்டுள்ளது. ஆகையால் இனி யாத்திரை ஸ்தலங்களில் உள்ள லோகல் போர்டுகள் முக்கியமாக பஞ்சாயத்துகள் யாத்திரைக்காரர்களுக்கு தங்குவதற்கு இடத்தை கட்டிவைப்பதும் அவர்களுடைய ஸ்னான போஜனாதிகளுக்கு தகுந்த ஏற்பாடுகளைச்செய்வதும் கடமைபட்டவராவார்கள்.

யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரியானது இப்பிரிவில் காணப்பட்டிருக்கும் காரியங்களுக்குத்தவிர வேறே யாதொரு காரியத்திற்கு உபயோகப்படுத்தப்படும்பக்ஷத்தில் அது அங்கீகரிக்கத்தக்கதல்ல. அப்படி அந்த தொகையானது வேறே விதமாக செலவிடப்படும் பக்ஷத்தில் அதைத் தடுப்பதற்கு ஒவ்வொரு வரிசெலுத்துவோருக்கும் லோகல் போர்டு அங்கத்தினருக்கும் உரிமையுண்டு. யாத்திரைக்காரர்களால் செலுத்தப்படும் வரியானது (1) அவர்களுடைய ஆரோக்கியம், சௌகரியம் இவைகளுக்கு தகுந்த ஏற்பாடு செய்யவும் (2) அந்த லோகல் போர்டு விஸ்தீரணத்தை சீர்படுத்துவதும் அல்லது விருத்திசெய்வதும் ஆகிய இவைகளுக்கு உபயோகப்படுத்தப்படவேண்டும். சத்திரங்களே கட்டுவதும், குழாய்களேக்கட்டுவதும், வியாதி வரவொட்டாமல் தடுப்பதும், மலஜலபாதைகளுக்கு தகுந்த வசதிகளே ஏற்படுத்துவதும் உத்ஸவகாலங்களில் வைத்திய சிகிச்சைக்குத்தகுந்த

ஏற்பாடுகளைச் செய்வதும் தெருக்களை சுத்தப்படுத்துவதும் யாத்திரைக்காரர் களுடைய சௌகரியத்தைகவனிப்பதாகும். சாக்கடைகளைக்கட்டுவதும்குளங் களை வெட்டுவதும் பாதைகளை நேர்த்தியான நிலைமையில் வைத்திருப்பதும் இவைகளைப்போன்ற சால்வதமான காரியங்களைச்செய்வது இப்பிரிவின் கொள்கைகளுக்கு ஒத்தாப்போல் செய்வதாகும்.

வரிகளையும்சுங்கங் களையும் விதிக்கும் விஷயமாக தீர்மான மும் அறிக்கையும்

77. (1) (a) ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டு 75-வது பிரிவின் (1)-வது உபப் பிரிவின் கீழாவது அல்லது 76-வது பிரிவின் கீழாவது யாதொரு வரி அல்லது சுங்கம் இடப்பட வேண்டுமென்று செய்யும் யாதொரு தீர்மானமானது, எந்த பிரதேச விஸ்தீரணத்திற்குள் அந்த வரி அல்லது சுங்கமானது அமுலுக்கு வரவேண்டுமென்றும், அவைகளின் விகிதம் அல்லது ஏதாவது கால அளவு இருக்கும்பக்ஷத்தில் அந்த கால அளவு என்னவென்று குறிப்பிட வேண்டும்.

(b) அப்படிப்பட்ட யாதொரு தீர்மானத்தினால் ஒரு டிஸ்டிரிக்டு போர்டானது யாதொரு வரி அல்லது சுங்கத்தை முதல் முதலாக விதிக்கவேண்டுமென்று அல்லது ஒரு புதிய விகிதமாக விதிக்க வேண்டுமென்று ஏற்படுத்திக்கொள்ளும் பக்ஷத்தில், அந்த டிஸ்டிரிக்டு போர்டு ப்ரெஸிடென்டு,உடனே எந்தவிதமாக செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அந்த விதமாக, (a) என்னும் உபவாக்கியத்தில் சொல்லப்பட்ட எல்லா விவரங்களையும் தெரிவித்து அப்படிப் பட்ட தீர்மானத்தில் அடங்கிய விவரங்களையும் ஒரு அறிக்கை மூல மாக உடனே பிரசுரிக்கவேண்டும்.

(2) 75-வது பிரிவின் (2)-வது உபப் பிரிவின்கீழ் ஒரு கிராமத்தில் யாதொரு வரி இடப்படுவதை லோகல் கவர்ன்மென்டார் உத்தரவிடுவதான யாதொரு அறிக்கையானது (1)-வது உபப் பிரிவு (a) உப வாக்கியத்தில் கண்டுள்ள விவரங்களை குறிப்பிட வேண்டும். இன்னும் அந்த பிரசுரமானது எம்மாதிரி பிரசுரப்படுத்த வேண்டுமோ அம்மாதிரி பிரசுரப்படுத்த வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் முற்றி லும் மாற்றி எழுதப்பட்டது. இப்பிரிவின் சாராம்சம் என்னவென்றால் டிஸ்டிரிக்டு போர்டுகள் வரி விஷயமாக செய்யும் தீர்மானங்கள் மிகவும் ஸ்பஷ்டமாக இருக்கவேண்டும் என்றும் எந்த தேதி முதற்கொண்டு எந்த

விதிக்கப்பிரகாரம் எந்த வில்தீர்ணம் வரையிலும் அத்தகைய வரி விதிக்கப் படவேண்டுமென்றும் அந்த தீர்மானங்களிலேயே குறிப்பிட்டிருக்கவேண்டு மென்பது. அம்மாதிரி இருக்கவேண்டிய விவரங்கள் இல்லாவிடில் அந்த தீர் மானங்கள் செல்லத்தக்கனதல்ல. புதியதாக ஒரு வரி விதிக்கப்பட வேண்டு மென்றிருந்தால் டிஸ்டிரிக்ட் போர்டானது அதைப்பற்றி லோகல் கவர்ன் மென்டார் விதிக்கும் நிர்ணயங்களின் பிரகாரம் பைரங்கப்படுத்தவேண்டும். சென்னை டிஸ்டிரிக்ட் முனிஷிபாலிடிகளாக்டின் கீழ் தீர்மானிக்கப்பட்ட ஒரு கேஸில் ஒரு முனிஷிபாலிடியானது யாதொரு விவரமும் காணுமல் சும்மா தாங்கள் ஒரு வரியைவிதிக்கப்போவதாக செய்த ஒரு தீர்மானம் செல்லாதென்றும் அந்த தீர்மானத்தை யொட்டி வரி வசூலிக்கப்படுவதற் கில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (a)

இச்சட்டத்தின் 228வதுபிரிவில் பொதுவாக வரிவிதிப்புமுதலானவை களைப்பற்றி தோஷம் சொல்வதற்கில்லை என்றும் வரி முதலிய வைகளை விதிப்பதானது முறைமை விஷயத்தில் யாதொரு குறைவு இருந்த தினுலேயே ரீதி செலுத்தும் யாதொரு கோர்ட்டாரால் ரத்து செய்யப்பட மாட்டாதென்றும் தள்ளிவிடப்பட மாட்டாதென்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆனல் அதே பிரிவில் இவ்வாக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள் ளது. பின் குறிக்கப்பட்டிருக்கும் கேஸ-களில் இவ்வாக்டைப்போன்ற மற் றொரு ஆக்டின் கீழ் வரிவிதிக்கப்பட்டிருப்பதில், இதே விஷயமாக உள்ள அம்சங்கள் சரியாக அனுசரிக்கப்படவில்லை யென்று தீர்மானிக்கப்பட் டுள்ளது.

ஒரு கேஸில் யாதொரு நோட்டீஸ் பிறப்பிக்கப்படுமுன் வரி விதிக்கப் பட்டது. பிறகு அந்த வரியை விதிக்கப்படுவதற்கு சட்டப்பிரகாரம் கவர்ன மெண்டுடைய அனுமதி கேட்டு பெறப்பட்டது. அந்த சட்டத்தில் அனுமதி கேட்ட பின்னர் தான் வரி விதிக்கப்படவேண்டுமென்று உள்ளது இவ்விஷயமாக கோர்ட்டில் விசாரணைக்கு வந்ததில் கோர்ட்டார் அம்மாதிரி வரி விதிக்கப் பட்டதானது செல்லத்தக்கனதல்ல வென்று தீர்மானித்திருக்கின்றனர் (a) மற்றொரு கேஸில் ஒரு முனிஷிபாலிடியானது ஏற்கெனவே விதிக்கப்பட் டிருக்கும் ஒரு வரியை உயர்த்தியதில் சென்னை டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி களின் ஆக்டின் IV-வது ஷெடியூலில் உள்ள உச்சவிதித பிரகாரம் வரி யிடப்படும் என்று தீர்மானித்தது. ஆனல் வரிஇவ்வளவு விதிதமாக விதிக்கப் படும் என்று ஸ்பஷ்டமாக குறிக்கவில்லை. இந்த சந்தர்ப்பங்களில் வரி விதிக் கப்பட்டதானது செல்லத்தகுந்ததா என்னும் கேள்விவந்ததில், செல்லத்தகு ந்ததல்லவென்றும் டிஸ்டிரிக்ட் முனிஷிபாலிடிகளின் சட்டமானதுசரியாக

(a) C. E. பேட்ஸ் vs. பெல்லாரி முனிஷிபல் கமிஷனர்கள் 7. Mad. High Court Case 249.

அனுசரிக்கப்படவில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது(a). மற்றொரு கேஸில் ஒரு முனிஸிபாலிடி ஒருவரி இன்ன விதமென்றும் இன்ன தேதியிலிருந்து அமுலுக்கு வரவேண்டுமென்றும் குறிப்பிடாமல் ஒரு தீர்மானத்தை செய்து விட்டது. மூன்று வருஷங்கள் கழிந்த பிறகு அந்த தீர்மானம் எந்த தேதியில் செய்யப்பட்டதோ அது முதல் அமுலுக்கு வருமென்று ஒரு அறிக்கையை தெரிவித்தது. ஒரு நபர் தமக்கு இடப்பட்ட வரியைச் செலுத்திவிட்டு தீர்மானம் செல்லாதென்றும் முனிஸிபல் கௌன்ஸில் சட்டப்பிரகாரம் நடந்து கொள்ளவில்லை யென்றும் ஒரு அறிக்கையினால் ஒரு தீர்மானமானது முன்னேக்கமான பிரயோகம் உடையதென்று சொல்வதற்கில்லை யென்றும், வாதித்ததில் அப்படி செலுத்தப்பட்ட வரியை திருப்பி வரப்படுத்த தாவாசெய்ய உரிமையுண்டு என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (b)

சென்னை கவர்ன்மெண்டாரும் ஒரு உத்திரவினால் யாதொரு லோகல் போர்டு அல்லது முனிஸிபாலிடியானது தீர்மானங்களைச் செய்துவிட்டு அவைகளுக்கு முன்னேக்கமாக பிரயோகம் உண்டென்று (அதாவது அவை செய்யப்பட்ட தேதிக்கு முந்தின ஒரு காலம் முதல் அமுலுக்கு வரவேண்டுமென்று) அறிக்கையிடக்கூடாதென்று கட்டளையிட்டிருக்கின்றனர் (c).

78. லாண்டு செஸ் என்னும் வரியானது எல்லா சாகுபடி நிலங்களுடைய (அவை எவ்விக எற்பாட்டின் பேரில் அனுபவிக்கப்பட்டிருந்தபோதிலும்) வருஷாந்திர வரி தொகையின்பேரில் இடப்பட வேண்டும். அந்த வரியானது அந்த ஜில்லாவில் அப்படிப்பட்ட எல்லா நிலங்களின் வருஷாந்திர வரித் தொகையில் ஒரு ரூபாய்க்கு 0—1—6 விகிதம் இடப்பட வேண்டும்.

லாண்ட்செஸ் என்னும் வரி.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது. இப்பொழுது எல்லா சாகுபடி நிலங்களின் பேரிலும் உள்ள கிஸ்தியின் பேரில் ரூபாய்க்கு 0-1-6 விகிதம் லாண்டு செஸ்வரியுண்டு. பழைய சட்டப் பிரகாரம் ரூபாய்க்கு 0-1-0 விகிதமும் டிஸ்டிரிக்ட் போர்டுகள் தங்கள் இஷ்ட பிரகாரம் ஒரு ரூபாய்க்கு இன்னும் 0-0-6 விகிதம் உயர்த்தவும் வசதி ஏற்பட்டிருந்தது இப்பொழுது அந்த சுயேச்சையானது எடுபட்டுவிட்டு, எல்லா நிலங்களுக்கும் ஒரே மாதிரியாக லெவல் விதிக்கப்படவேண்டுமென்று

(a) ராஜமகேந்திரவரம் முனிஸிபல் கௌன்ஸில் vs. பிரசாதராவு 50 M. L. J. 556.

(b) 53 M. L. J. கேஸுகளின் குறிப்புகள் பக்கம் 70.

(c) G. O. Mis. No. 4257 L. and M. No.1325—21-11-1925.

ஸ்தாபிக்கப்பட்டது. 79 முதல் 91 பிரிவுகள் வரையிலும் லாண்டு செஸ் இம்மாதிரி விதிக்கப்படவேண்டுமென்றும் இம்மாதிரி வசூலிக்கப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது.

நிலங்களின் வருஷ வாரி வாடகை மதிப்பை இன்னபடி நிர்ணயிப்பது.

79. 78-வது பிரிவின் காரியங்களுக்காக நிலத்தின் வருஷவாரி வாடகை பின் வருமாறு விதிக்கப்படி கணக்கிடப்படவேண்டும்:—

(i) ரயத்வாரி காணியாட்சியின்படியாவது, குத்தகையாகவாவது, ஜெமென்லின்பேரிலாவது நேராய் கவர்ன்மெண்டாரிடத்தில் பெற்று கைப்பற்றிலிருந்து வரும் நிலங்கள் விஷயத்திலும், எந்த ஷரத்தின்மேல் கைப்பற்றிலிருப்பதாயிருந்தாலும், மலபார் டிஸ்ட்ரிக்டிலிருக்கிற நிலங்களின் விஷயத்திலுங்கூட, அந்த நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காகச் செலுத்தத்தக்க யாதொரு தண்ணீர் வரியையும் நிலத்திற்காகக் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தத்தக்க தீர்வை, குத்தகைத் தொகை, கப்பம் அல்லது வேறே தொகையையும் சேர்த்து, அந்த நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பாகக் கொள்ளவேண்டும்.

(ii) இனம் நிலங்கள் விஷயத்திலாவது, முழுவதுமாகிலும், கொஞ்சமட்டிலாகிலும், தீர்வையில்லாமல் கைப்பற்றிலிருந்து வரும் நிலங்கள் விஷயத்திலாவது, அந்த நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காகச் செலுத்தத்தக்க யாதொரு தண்ணீர் வரியையும் அந்த நிலங்கள் இனமல்லாவிட்டால் அவைகளுக்குப் பூர்வ தீர்வை என்ன உண்டோ அந்தத் தீர்வையையும் சேர்த்து வருஷவாரி வாடகை மதிப்பாக கொள்ளவேண்டும்; அப்படிப்பட்ட பூர்வ தீர்வையையும் தண்ணீர் வரியையும் செவினியூ போர்டாருடைய பொதுவான உத்தரவின்படி டிஸ்டிரிக்ட் கலெக்டர் நிர்ணயிக்கவேண்டும்.

(iii) வேறே யாதொரு காணியாட்சியின்படி கைப்பற்றிலிருக்கும் நிலங்கள் விஷயத்தில், அந்த நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக செலுத்தத்தக்க யாதொரு தண்ணீர் வரியையும் சந்தர்ப்பத்திற்கேற்றபடி நிலத்துக்குடையவருக்கு அல்லது நிலத்துக்குடையவரால் உண்டாக்கப்பட்டாவது, முன்னிருந்ததை

அப்படியே வைத்துக்கொள்ளப்பட்டாவது, ஒப்புக்கொள்ளப்பட்டாவதிருக்கிற கீழ்க்குத்தகையின்மேல் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருக்கிற மத்திய நிலத்துக்குடையவருக்கு அல்லது அவருக்குக் கீழ் நிலத்தைப்பெற்றிருப்பவருக்கு அவருடைய பாயக்காரிகள் செலுத்தத்தக்க வருஷவாரி குத்தகைத்தொகையையும் சேர்த்து அந்த பாயக்காரிகளின் கைப்பற்றிலிருக்கும் நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பாகக் கொள்ளவேண்டும் ; அப்படிப்பட்ட நிலங்கள் சொந்தக் காராலேயாவது, குத்தகையில்லாமல் ஜாரியாகவாகிலும் அனுகூலமான குத்தகைக்காகவாகிலும் அவரிடத்தில் நிலம்பெற்றுக் கொண்ட எவராலாவது அனுபவிக்கப்படுகிற விஷயத்தில் வருஷவாரி வாடகை மதிப்பானது - அந்த நிலங்களுக்குத் தண்ணீர்வரியும் பாய்ச்சுவதற்காக செலுத்தத்தக்க யாதொரு தண்ணீர் வரியும் சேர்க்கப்பட்டு அக்கம் பக்கத்தில் அதேமாதிரியான சௌகரியங்களுடனுள்ள ரயத்து நிலங்களின் ரயத்துகள் எவ்விதமான வரித்தொகை கட்டிவருகிறார்களோ அவைகளின் பிரகாரம் கணக்கிடப்படவேண்டும்.

(iv) தீர்வையையாகிலும், குத்தகையையாகிலும் தானியமாகச் செலுத்தும் நிலங்களின் விஷயத்தில், அக்கம்பக்கத்திலுள்ள அவ்விதமான அந்த தரவாரி நிலங்களுக்காக ஏற்படுத்தப்பட்டாவது செலுத்தப்பட்டாவதிருக்கிற குத்தகைத்தொகை வீதங்களின் பிரகாரம் வருஷவாரி வாடகைமதிப்பைக் கணக்கிடவேண்டும் ; இன்னும் முதலில் சொல்லப்பட்ட நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காகச் செலுத்தத்தக்க தண்ணீர் வரியும் மேற்படி வீதங்களுடன் சேர்க்கப்படும் ; அல்லது, குறித்த யாதொரு விஷயத்தில், அந்தப்படி கணக்கிடும் முறையானது சரத்தியமானதல்ல வென்று செஷனியூ போர்டார் அபிப்பிராயப்பட்டால் அந்த விஷயத்துக்கு செஷனியூ போர்டார் அங்கீகரிக்கக்கூடிய யாதொரு முறைப்படி கணக்கிடவேண்டும்.

ஆனால், யாதொரு நிலத்துக்குடையவர் அல்லது அவருக்குக் கீழ் நிலம் பெற்றிருக்கிறவர் தண்ணீர் வரிமூலமாக இன்னும் அதிகமாய்த் தாம் கவர்ன்மென்டாருக்கு வரி செலுத்துவதனாலே தம்முடைய குத்தகைத் தொகையை அதிகப்படுத்திக்கொள்ள அதிகாரம் கொடுக்கும் ஒரு டிக்ரியை, அவர் பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றி சென்னப்பட்டணம் 1908-ம் வரும்படி ஆக்ட் 30-வது பிரிவைச் சேர்ந்த (iii) குறிப்பிட்ட பகுதியிலும் 33-வது பிரிவிலும் கண்டிருக்

கும் நிபந்தனைகளின்படி பெற்றிருக்கிற விஷயத்திலே, மேலே சொல்லியபடி நிர்ணயிக்கப்பட்ட தொகையிலிருந்து தண்ணீர் வரி அளவுக்கு அந்தப்படி அதிகமாக்கப்பட்ட குத்தகைத்தொகையைக் கழித்த பின் மீதியாயிருக்கும் தொகை வருஷவாரி வாடகை மதிப்பாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் ஹுத்திய திருத்த சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ளது. இப்பிரிவில் சாகுபடி நிலங்களுடைய வருஷாந்திர வாடகை மதிப்பு அல்லது கிஸ்தி எம்மாதிரி நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதைப் பற்றி கூறப்பட்டுள்ளது. இப்பிரிவில் நான்குவித நிலங்களுடைய வாடகை மதிப்பைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது (1) தரவாரி கிராமங்களில் கவர்ன்மென்டுக்கும் மலையாள ஜில்லாவிலும் வரி செலுத்தும்படியான நிலங்கள் இவைகளின் வாடகை மதிப்பானது, இவைகளுக்குள்ளவரி, நீர்வரி முதலியவைசேர்ந்ததாகும். (2) இனம் நிலங்கள். இவைகளின் வாடகை மதிப்பானது அவை இனமாக இல்லாவிட்டால் அவைகளுக்கு என்னவரி ஏற்படுமோ அதுவும் எவ்வளவு நீர்வரி ஏற்படலாமோ அதுவும் சேர்ந்ததாகும். இதை கலெக்டர் நிர்ணயம்செய்யவேண்டும். (3) ஜமீன் அல்லது சுரோத்திரியம் இவைகளில் உள்ள நிலங்கள். இவைகளின் வாடகை மதிப்பானது நிலஸ்வான்தாரருக்கு கொடுக்கப்படும்வருஷாந்திர ரெண்டு தொகையும்அவைகளுடன் நீர்வரிக்காக செலுத்தப்படும் தொகையும் சேர்ந்த தொகையாகும். (4) ரொக்கமாய் ரெண்டு என்பதில்லாமல் தான்யமாக கொடுக்கப்படும் கிஸ்தியுள்ள நிலங்கள். இவைகளின் வாடகைமதிப்பானது அக்கம் பக்கத்தில் உள்ள நிலங்களின் ரெண்டுமுதலியனவையாகும். அப்படி அதை நிச்சயிக்க முடியாவிட்டால் ரெவினியூ போர்டார் நிஷ்காரிஷை செய்யும் விதிமாகும்.

80. (1) டிஸ்டிரிக்ட் கலெக்டரானவர் ஒரு அறிக்கையின் மூலமாயாவது அல்லது வேறேவிதமாகவாவது சென்னை 1894-ம் ஹுத்திய ஒருவருக்கே யுரிய பூஸ்திதிகளின் கிராம ஜோடிய சட்டத்தில் "ஆஸ்தி" என்னும் பதத்தின் அர்த்த விளக்கத்தின் (a), (b) அல்லது (c) உப வாக்கியத்தின் கீழ் உள்ள ஒரு ஆஸ்தியின் சொந்தக்காரராக இருக்கும் ஒவ்வொரு நிலஸ்வான்தாரையும் அந்த ஜில்லாவில் உள்ள ஒவ்வொரு நிலஸ்வான்தாரத்தின் கீழ் நிலங்களை பெற்றிருக்கும் ஒவ்வொருவனையும் அவருடைய கைப்பற்றிலிருக்கும் நிலங்களுடைய சரியான தோர் ஜாப்

நில நிலஸ்வான்தார்களும் அவர்களின் கீழ் நிலத்தை பெற்றிருப்பவர்களும் தங்களுடைய நிலங்களின் ஜாப்தாவை டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கு கொடுக்க வேண்டுமென்பது.

தாவை அந்த ஜாப்தாவில் கண்ட நிலங்கள் பாயக்காரிகளால் அனுப விக்கப்பட்டு வந்தபோதிலும் அல்லது தம்மால் அனுபவிக்கப்பட்டு வந்தபோதிலும் அதில் (2)-வது உபப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் விவரங்களைக் காட்டி, கொடுக்கும்படி கேட்கலாம்.

(2) (a). (1)-வது உபப்பிரிவின்கீழ் ஒரு நிலஸ்வான்தாரர் கொடுக்கும் ஜாப்தாவானது,

(i) அவருக்குக்கீழ் ஒரு உபநிலஸ்வான்தாரரால், நிலங் கள் கைப்பத்திலிருக்கும் பஹூத்தில் கட்டுபடி, ஜோடி, பொறுப்பு, குயிட்ரெண்ட், இவை அப்படிப்பட்ட உப நில சுவான்தாரரால் கொடுக்கப்படும்படி இருக்கும் பஹூத்தில் அவைகளையும்,

(ii) அந்த நில ஸ்வான்தாரரால் அனுபவிக்கப்பட்டு வரும் வேறே இதர நிலங்களின் விஷயத்தில், நீர்க்கூலி தவிர அந்த நிலங்களின் வருஷாந்தர ரென்ட் தொகையாக கவர்ன்மென்டாருக்கு நேராக அவருடைய பாயக்காரிகள் எவ்வளவு கொடுக்கவேண்டுமோ அதையும்,

(b) (1)-வது உபப்பிரிவின்கீழ் உப நிலஸ்வான்தாரரால் கொடுக் கப்படும் ஜாபிதாவானது அவரால் அனுபவிக்கப்பட்டுவரும் நிலங் களின் நீர்க்கூலி தவிர அவருடைய பாயக்காரிகளால் கவர்ன்மென் டாருக்கு நேராக கொடுக்கப்பட வேண்டிய வருஷாந்தர வரித் தொகையை காட்ட வேண்டும்.

(3) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரு ரெவினியூ கிராமம் அல்லது கிராமங்களை ஒன்றாக கைப்பத்தில் வைத்துக்கொண்டிருக்கும் பஹூத்தில் (1), (2) உப்பிரிவுகளின் காரி யங்களுக்காக, நிலஸ்வான்தாரர், அல்லது உப - நிலஸ்வான்தாரர், எந்த நபர் மற்ற ஜாயிண்டு மத்நியஸ்தர்களால் முதன்மையான நில ஸ்வான்தாரரென்று அங்கீகரிக்கப்படுகிறாரோ அவராகவாவது அல் லது யாதொரு தகராரர் ஏற்படும் பஹூத்தில் டிஸ்டிரிக்ட் கலெக்டர் எவரை முதன்மையான நிலஸ்வான்தாரரென்று அங்கீகரிக்கிறாரோ அவராவது இருக்க வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் ஒவ்வொரு டிஸ்டிரிக்டிலுள்ள கலெக்டரானவர் தமது டிஸ்டிரிக்ட்டிலுள்ள ஒவ்வொரு நிலஸ்வான்தாரரும் தம்முடைய கைப்பத்தி லிருக்கிற நிலங்களைபற்றி ஒரு ஜாபிதா கொடுக்கும்படிகேட்கவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் என்னவென்றால், அந்த நிலம்

களின் தீர்வை அல்லது ரென்டு இன்னதென்று நிச்சயித்து அதன் பேரில் லாண்டுலெஸ் என்னும் வரியை இடவேண்டுமென்பது.

இப்பிரிவில் ஆஸ்தி என்னும் பதமானது சென்னை 1894-ம் ஷுத்திய ஒருவருக்கேயுரிய பூஸ்திதிகளின்கிராம ஜுடிய சட்டத்தில் "ஆஸ்தி" என்னும் பதமானது எவ்விதமாக விளக்கப்பட்டிருக்கிறதோ அதே அர்த்தத்தை உடைய தாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு ஆஸ்தியை யுடைய நிலஸ்வான்தாரர் அல்லது உபநிலசுவான்தாரர் இவர்களே தங்கள் கைப்பத்திலிருக்கும் நிலங்களுடைய விவரங்களைப்பற்றி ஜாபிதாவைக் கேட்கலாம் என்றுள்ளது. மேலே சொல்லப்பட்ட சட்டத்தில் "ஆஸ்தி" என்னும் பதத்திற்கு பின்வருமாறு அர்த்தம் விளக்கப்பட்டிருக்கிறது.

"4. இந்த ஆக்டின் விஷயத்திலாவது அல்லது அன்வயத்திலாவது வேறே மாதிரியாக அர்த்தபட்டாலொழிய—

ஆஸ்தி என்பது,

(a) ஒரு ஜமீன்தாரியாலுலும் ஜாகீராக இருந்தாலும் மிட்டாவாக இருந்தாலும் பாளையமாக இருந்தாலும் அப்படிப்பட்ட ஒரு சாஸ்வதமாக ஏற்படுத்தப்பட்ட பூஸ்திதி.

(b) அப்படிப்பட்ட ஆஸ்தியில் கலெக்டருடைய ஆபீஸில் தனியாக ரிஜிஸ்தராயிருக்கும் ஒரு பாகம்.

(c) சாஸ்வதமாக ஏற்பட்டிராத ஒரு பாளையம் அல்லது ஜாகீர்"

இவைகளைக் குறிக்கும்.

சென்னை எஸ்டேட்ஸ் லான்டு ஆக்டின் 3 வது பிரிவின் 5-வது உபப் பிரிவில் ஒரு ஆஸ்தியின் நிலஸ்வான்தாரர்களுக்குள் யாதொரு தகராரர் இளம்பும் பக்ஷத்தில் கலெக்டரானவர் அவர்களுக்குள் எவர் முதன்மையான நிலஸ்வான்தாரராக இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கிறாரோ அவர் அந்த சட்டத்தின் கீழ் ஒரு நிலஸ்வான்தாரராக கவனிக்கப்படுவார் என்றுள்ளது. இப்பிரிவின் 3-வது உபப்பிரிவில் மேற்படி எஸ்டேட்ஸ் லான்டு ஆக்டின் 3 (5) பிரிவில் உள்ள பிரகாரம் நிலஸ்வான்தாரராக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நபரை இப்பிரிவின் காரியங்களுக்காக நிலஸ்வான்தாரராக பாவிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நிலஸ்வான்தாரர் ஜாபிதாப்படி டிஸ்டிரிக்ட் கலெக்டர் வரி போடுவது.

81. 80-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தர்வின் பிரகாரம் ஒரு நிலஸ்வான்தாரர் அல்லது அவருக்குக் கீழ் நிலத்தைப்பெற்றிருப்பவர் கொடுத்த ஜாபிதாடிஸ்டிரிக்ட் கலெக்டருக்குத் திருப்திகாமாயிருந்தால், அவர் மேற்சொல்லியபடி நிலஸ்வான்தாரர் அல்லது அவருக்குக் கீழ் நிலத்தைப் பெற்றிருப்பவர் கொடுக்கும் ஜாபிதாவை அனுசரித்து அவருக்குத் தீர்வை விதிக்க வேண்டும்.

குறிப்புகள்.

லாண்டு செஸ் என்னும் வரியானது, பாஷயம், ஜாகிர், ஜமீன், முதலிய ஆஸ்திகளைச்சேர்ந்த வரையிலும் அவைகளின் சொந்தக்காரரான நிலஸ்வான்தாரர்களுக்கு அவர்களுடைய ஆஸ்தியில் உள்ள நிலங்களின்மீது விதிக்கப்பட்டு அவர்களிடமிருந்தே வசூலிக்கப்படவேண்டுமென்று இந்த பிரிவின் தாத்பரியம். மேலே சொல்லப்பட்ட ஆஸ்திகளில் லாண்டு செஸ் வரியை வசூலிப்பதற்கு சவர்ன்மெண்டுக்கு யாதொரு ஏஜெண்டும் இராததால் அவைகளின் நிலஸ்வான்தாரர் மூலமாக வசூலிக்கப்பட்டு அவர்களுக்கே விதித்து வாங்கப்பட்டு வருகிறது. தன்னிடமிருந்து வசூலிக்கப்பட்ட லாண்டு செஸ் வரியில் ஒரு பாகத்தை ஒரு நிலஸ்வான்தாரரானவர் ரயத்துகளிடமிருந்து வசூல் செய்துக்கொள்ளவேண்டும்.

அப்படிப்பட்ட ஜாப்தாக்களை கொடுக்கத் தவறுவதினால் ஏற்படும் அபராதம்.

82. ஒரு நிலஸ்வான்தாரர் அல்லது உபநிலஸ்வான்தாரர் 80-வது பிரிவின்கீழ் செய்யப்படும் கட்டளைக்கு, அந்த கட்டளையைப் பெற்ற தேதி முதல் 6-மாதங்களுக்குள் கீழ்ப்படியாவிட்டால், அவர் அந்த ஆறு மாதங்கள் கழிந்த பிறகு அந்த ஜாப்தா கொடுக்கப்படும் வரையிலும் அல்லது டிஸ்டிரிக்ட் கலெக்டரால் 83-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் அவருடைய நிலங்களின் வருஷாந்தர வரித்தொகையானது இவ்வளவென்று நிர்ணயிக்கப்படும் வரையிலும் ஏற்படும் ஒவ்வொரு தினத்தினுடைய தாமதத்திற்கும் 50-ரூபாய்க்கு மேற்படாமல் ஒரு அபராதத்திற்கு உள்ளாக வேண்டும். அப்படி செலுத்தப்பட வேண்டிய அபராதத் தொகை இவ்வளவென்று டிஸ்டிரிக்ட் கலெக்டரால் நிர்ணயிக்கப்பட்டு அந்தத் தொகை ஒரு லாண்டு செஸ் பாக்கிபோல் வசூலிக்கப்படவேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது நிலஸ்வான்தாரர்கள் ஜாபிதாக்களைக்கொடுக்க தவறுமிடத்து அதற்காக கலெக்டர் அவர்களுக்கு அபராதம் விதிப்பதைப்பற்றி கூறுகிறது ஒரு நிலஸ்வான்தாரருக்கு 80-வது பிரிவின் கீழ் தாம் கலெக்டரிடமிருந்து ஒரு வேண்டுகோள்பெற்ற பிறகு ஜாபிதாக்களை அனுப்ப 6-மாதம் தவணையுண்டு. அதற்குள் அவர் ஜாபிதாவை அனுப்பாவிட்டால் கலெக்டர் தம்முடைய இஷ்டப்பிரகாரம் அவருக்கு அபராதம் விதித்த பிறகும் 1-மாதம் கழித்து ரெண்டு தொகை இவ்வளவென்று நிர்ணயிக்கலாம்.

83. 82-வது பிரிவில் சொல்லப்பட்ட ஆறு மாத அளவு கழிந்த முதற்கொண்டு ஒரு மாதத்திற்குள் யாதொரு நில சுவான்தார் அல்லது அவர்கீழ் நிலம் பெற்றிருப்பவர் அப்படிப்பட்ட ஜாப்தா வைக்கொடாவிட்டால் டிஸ்டிரிக்ட் கலெக்டரான வர் - மேற்சொல்லியபடி அந்த நிலஸ்வான்தார ரின் அல்லது அவருக்குக் கீழே நிலத்தை பெற்றிருப்பவரின் கைப் பற்றியிருக்கிற நிலங்களின் வருஷவாரி வாடகை மதிப்பைக் காமே நிச்சயிக்கவேண்டும்.

வருஷவாரி வாடகை மதிப்பை டிஸ்டிரிக்ட் கலெக்டர் நிச்சயிக்கலா மென்பது.

தறிப்புகள்.

இப்பிரிவில், கலெக்டானவர், யாதொரு ஜாப்தாவும் கொடுக்கப்படாவிட்டால் தாமே ஒரு நிலஸ்வான்தாருடைய சுவாதீனத்திலுள்ள நிலங்களின் ரெண்டை நிர்ணயம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

84. 80-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவின் பிரகாரம் அனுப்பப்பட்ட யாதொரு ஜாபிதா சரியானதென்று நிச்சயிப்பதற்காகவாவது, அப்படிப்பட்ட ஜாபிதாக்கள் அனுப்பப்பட்டிராவிட்டால் 83-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி வருஷவாரி வாடகை மதிப்பை நிர்ணயிப்பதற்காக்வாவது, டிஸ்டிரிக்ட் கலெக்டரானவர் - கர்ணங்களைக் குறித்த சென்னப்பட்டணம் 1802-ம் ஹுபத்து ரெகுலேஷனிலுள்ள யாதொரு நிபந்தனைக்கு விரோதமாயிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, 1869-ம் ஹுபத்திய சென்னப்பட்டணத்து ரெவின்யூ ஸம்மன்களாக்டில் சொல்லியிருக்கிற விதமாய் நடவடிக்கைகள் நடத்தலாம் ; மேலும், அவர்-அவசியமாயிருக்கும்படியான விசாரணைகளைச் செய்வதற்கு தம் முடைய உத்தியோகஸ்தர்களில் எவரையாவது நியமிக்கலாம்.

நபர்களை லம்மனனுப்பி வரவழைக்க டிஸ்டிரிக்ட் கலெக்டருக்குள்ள அதிகாரம்.

தறிப்புகள்.

இப்பிரிவில் கலெக்டருக்குள்ள விசேஷ அதிகாரங்கள் இன்னவென்று சொல்லப்பட்டுள்ளது. ரெவின்யூ சம்மன்ஸ் ஆக்டின் பிரகாரம் கலெக்டர் டிப்டி கலெக்டர், தாஸில்தார், டிப்டி தாஸில்தார் முதலியவர்கள், பார்ட்டிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் சம்மன் அனுப்பித்து வரவழைத்து தங்களுக்கு வேண்டிய சாக்ஷியத்தைச் சொல்லும்படிக்கும் தஸ்தாவேஜுகளை ஆஜர்ப்படுத்தும்படிக்கும் உத்தரவிடலாம் என்றுள்ளது. அந்த

ஆக்டின்படிக்கு இப்பிரிவின் காரியங்களுக்காகவும் சம்மன் அனுப்பி கலெக்டர் தமக்கு வேண்டியவைகளை விசாரிக்கலாம் என்று இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது. 1802-ம் வருஷத்திய சர்ணம் ரெகுலேஷன் என்னும் சட்டத்தில் சர்ணங்கள் ஒரு கிராமத்திலுள்ள நிலங்களின் ஜாபிதாவை வைத்திருக்கவேண்டுமென்றும் அவைகளுடைய விவரங்களும் அந்த ஜாபிதாவில் காணப்பட்டிருக்க வேண்டுமென்றும், வேண்டும்போது அவர்கள் கலெக்டர் முன்பாக கணக்குகளை ஆஜர்ப்படுத்தவேண்டுமென்றும், இன்னும் சர்ணக்கள் தங்கள் கணக்குகளை வரியிடும் காரணத்திற்குத்தவிர மற்ற காரணங்களுக்காக ஆஜர்ப்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்படக் கூடாதென்றும் இன்னும் இவைகளுக்கு அனுகுணமாக மற்ற அம்சங்களும் அடங்கியுள்ளது. இந்த ரெகுலேஷனில் என்னகண்டிருந்தபோதிலும் அதற்கு நிமித்தியமில்லாமலே கலெக்டர்கள் தங்கள் உத்தியோகஸ்தர்களின் மூலமாக தங்களுக்கு வேண்டிய தகவல்களை அறிந்துகொள்ளலாம் என்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு கிராம சர்ணம் ஒரு பொதுஜன உத்தியோகஸ்தர் (Public servant) என்று கருதப்படுவார். (a)

ஜாபிதா திருப்திகரமாயில்லாவிட்டால் அதை டிஸ்டிரிக்ட் கலெக்டர் திருத்துவது.

85. ஒரு நிலசுவான்தாரால் அல்லது உபநிலசுவான்தாரால் அனுப்பப்பட்ட யாதொரு ஜாபிதாவைப் பற்றி டிஸ்டிரிக்ட் கலெக்டர் சமமாய் விசாரணை செய்தபின்பு அவருக்குத் திருப்திகரமாயிராவிட்டால், அவர்-அதைத் திருத்தி அப்படி-திருத்தப்பட்ட ஜாபிதாவின் நகலை அப்படிப்பட்ட நிலசுவான்தாருக்கு அல்லது உபநிலஸ்வான்தாருக்கு கொடுக்கவேண்டும்; அந்த ஜாபிதாவானது அப்படிப்பட்ட நிலஸ்வான்தாருடைய அல்லது உபநிலஸ்வான்தாருடைய நிலங்களின் வருஷவாரி வரித்தொகை நிர்ணயம் அடங்கினதாக கொள்ளப்படும்.

குறிப்புகள்.

84-வது பிரிவின் கீழ் கலெக்டரானவர் செய்யும் விசாரணையில் தமக்கு கொடுக்கப்பட்ட ஜாபிதா சரியானதல்லவென்று ஏற்படும் பக்ஷத்தில் அவர் அந்த ஜாபிதாவை தாமே திருத்தி, அதன் நகல் ஒன்றை நிலஸ்வான்தாருக்குக் கொடுக்கவேண்டும் என்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. அப்படி திருத்தப்பட்ட ஜாபிதாவே இந்த சட்டத்தின் காரியங்களுக்காக முடிவானதோர் ஜாபிதாவாகும்.

(a) சுப்ரமணியம். vs. சோமசுந்தரம் 15. Mad. 127.

86. (1) 85-வது பிரிவின்படி டிஸ்டிரிக்ட்டு கலெக்டரால் செய்யப்பட்ட தீர்மானத்தின்மேல் ரெவினியூ போர்டாருக்கு ஒரு அப்பீல் செய்துக்கொள்ளலாகும்.

ரெவினியூ போர்டாருக்கு அப்பீல்.

(2) அப்படிப்பட்ட அப்பீலானது திருத்தப்பட்ட ஜாபிதாவின் நகலானது நிலஸ்வான்தாருக்கு எந்த தேதியில் சவதரிக்கப்பட்டதோ அன்று முதல் ஆறு வாரத்திற்குள் செய்யப்படவேண்டும்.

(3) அப்படிப்பட்ட அப்பீலின்மேல் ரெவினியூபோர்டார் செய்கிற உத்தரவு முடிவானதாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் கலெக்டர்கள் செய்யும் தீர்மானங்களின் பேரில் செய்யப்படும் அப்பீலைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. இதன் விஷயமாக ரிவினியூ போர்டானது செய்யும் தீர்மானம் முடிவானதாகும். அதன்பேரில் யாதொரு தாவா செய்வதற்கில்லை. ஆனால் பொதுவாக எந்த நபருக்கும் பெரியதோர் உரிமை யுண்டு. அதாவது இந்த சட்டத்தின் முக்கியமான அம்சங்கள் அனுசரிக்கப்படாவிட்டால் இந்த சட்டத்தை யொட்டி செய்யப்படாத செய்கைகள் செல்லத்தக்கினதல்ல வென்று சிவில் கோர்ட்டுகளில் தீர்மானம் பெற தாவா செய்யலாம். ஆனால், அது ஒரு பொது உரிமையே யொழிய இந்த சட்டத்தின்கீழ் ஏற்படும் உரிமையல்ல.

87. ரயத்வாரி கர்ணியாட்சியின்படி கைப்பற்றிலிருக்கும் நிலங்களின் விஷயத்தில், நிலஸ்வான்தாரர் செலுத்தத்தக்க லாண்ட் செஸ் என்னும் வரித்தொகை அவருடைய பட்டாவில் பதிவு செய்யப்படும்.

ரயத்வாரி நிலங்களின் பட்டாக்களிலே லாண்ட் செல்லை பதிவு செய்வது.

88. ஒவ்வொரு நிலசுவான்தாரும், உப நிலசுவான்தாரும் டிஸ்டிரிக்ட்டு கலெக்டருக்காவது அல்லது அவரால் அதைப் பெறுவதற்கு அதிகாரப்படுத்தப்பட்ட வேறே ஒரு ஆபீஸருக்காவது சந்தர்ப்பத்திற்குத்தகுந்தாப்போல்உபநிலசுவான்தாரர், அல்லது அந்த நிலசுவான்தாரர், இவர்களாலும்,

நில சுவான்தாரர்களாலும் உபநில சுவான்தாரர் களாலும் லாண்ட்செஸ் கொடுப்பது.

பாயக்காரியாலும் செலுத்தும்படியான அப்படிப்பட்ட செஸ்தொகை நீங்கலாக தம்முடைய கைப்பற்றிலிருக்கிற நிலங்களுக்குச் செலுத்த வேண்டிய லாண்ட் செஸ் (Land cess) என்னும் வரியை எந்தெந்தி களில் எத்தனை வாயிதாக்களாக செலுத்தும்படி செனினியூ போர்டா ருடைய பொதுவான உத்தரவுகளின் பிரகாரம் அறிக்கை மூலமாக கலெக்டர் நிர்ணயிக்கக் கூடுமோ அந்த தேநிகளிலாவது அவைக ளுக்கு முன்னடியாவது அத்தனை வாயிதாக்களாக செலுத்தவேண் டும். இன்னும், அப்படிப்பட்ட நிலங்கள் கவர்ன்மென்டுக்கு நேராக தண்ணீர் வரி செலுத்தும் ஒரு பாயக்காரியினுடைய கைப்பற்றில் இருக்குமானால், அப்படிப்பட்ட பாயக்காரி அந்த தண்ணீர்வரியுடன் கூட சேர்த்து - அந்த தண்ணீர் வரித்தொகையின் பேரில் எவ்வளவு (Land cess) லாண்டு செஸ் கொடுக்கப்பட வேண்டுமோ அதையும் கலெக்டரிடத்தில் செலுத்தவேண்டும்.

ஆனால், ஒரு நிலசுவான்தாரால் அல்லது உபநிலஸ்வான்தார ரால் உண்டாக்கியதாகவாவது முன்னிருந்ததை அப்படியே வைத்துக் கொண்டதாகவாவது ஒப்புக் கொண்டதாகவாவதுள்ள கீழ்க்குத் தகையின்மேல் மத்திய நிலஸ்வான்தாரராக ஒருவர் அனுபோக சுதந்த ரம் பெற்றோ அல்லது பெரும்மோ நிலங்களை கைப்பற்றில் வைத்துக் கொண்டிருக்கிற சகல விஷயங்களிலும், மத்திய நிலசுவான்தார் அல்லது உபநிலஸ்வான்தார் வைத்துக்கொண்டிருக்கும் நிலங்களுக் காக நிலஸ்வான்தார் செலுத்திய ஸெஸ் என்னும் வரியிலிருந்து, நில ஸ்வான்தார் செலுத்தத் தக்க யாதொரு கட்டுபடி, ஜோடி, பொரு ப்பு அல்லது க்விட்ரெண்ட் தொகையின்மேல் விதிக்கக்கூடிய ஸெஸ் என்னும் வரியில் பாதியைக் கழித்த பிறகு எவ்வளவு நிற்கிறதோ அவ்வளவையும் அந்த மத்திய நிலஸ்வான்தாரரிடமிருந்து நிலஸ்வான் தார் அல்லது உபநிலஸ்வான்தார் வசூல் செய்வது சட்ட சம்மத மாகும்.

ஆனால் இன்னும், பாயக்காரிகளால் அனுபவிக்கப்பட்ட நிலங்களின் விஷயத்திலே, அப்படி அனுபவிக்கப்பட்ட நிலத்துக்கு, நிலஸ்வான்தார், உபநிலஸ்வான்தார், மத்திய நிலஸ்வான்தார் இவர் கள் செலுத்தத்தக்க தொகையில் பாதியைத் தம்முடைய பாயக்காரி யிடத்திலிருந்து சந்தர்ப்பத்திற்கேற்றபடி நிலஸ்வான்தாராவது உப நிலஸ்வான்தாராவது அல்லது மத்திய நிலஸ்வான்தாராவது வரப் பற்றுவதும், வசூல் செய்வதும் சட்ட சம்மதமாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது லாண்டு செஸ் வசூலிப்பதைப்பற்றி கூறுகிறது ஒவ்வொரு நிலஸ்வான்தாரரும். உபநிலஸ்வான்தாரரும் ஒருவர் மீற்றொருவருடைய நிமித்தியமில்லாமல் தன்னுடைய கைப்பற்றிலிருக்கிற நிலங்களுக்குள்ள லாண்டு செஸ் தொகையை செலுத்தவேண்டும். மத்திய நிலஸ்வான்தார்கள் நேராக செலுத்தாமல் நிலஸ்வான்தாரிடத்தில் செஸ் தொகைகளைச் செலுத்தவேண்டும். தாங்கள் செலுத்தும் செஸ்தொகையில் பாதி மாத்திரம்தான் நிலஸ்வான்தார்கள் அல்லது உபநிலஸ்வான்தார்கள், மத்திய நிலஸ்வான்தார்களிடமிருந்து அல்லது ரயத்துகளிடமிருந்து வசூல் செய்யலாம். அதாவது 0-1-6-வில் பாதி தொகையைத்தான் வசூல் செய்யமுடியும்.

இப்பிரிவானது புதியதாக 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில், ஒவ்வொரு நிலஸ்வான்தாரரும் இரண்டு விதமாக அல்லது இரண்டு வழியாக செஸ் தொகை செலுத்தப்படும்படி இருக்கலாம் என்று ஏற்படுகிறது. இப்பிரிவானது மிகவும் சரியாக அர்த்தப்படும்படி எழுதப்படவில்லை. எனென்றால்: "இப்பிரிவில் சத்தர்ப்பத்துக்குத் தகுந்தாப்போல் உபநிலஸ்வான்தார், நிலஸ்வான்தார் இவர்களாலும் பாயக்காரியாலும் செலுத்தும்படியான அப்படிப்பட்ட செஸ் தொகை" என்பதினால் ஒரு நிலஸ்வான்தாரரும், உபநிலஸ்வான்தாரரும் பலவிதமாக செஸ் செலுத்தப்படுவதாக கவனிக்கப்படவேண்டும். அப்படியானால் எந்தெந்தவிதமாக அவர்களால் செஸ் செலுத்தப்படவேண்டுமென்று சொல்லப்படவில்லை. ஒருவேளை, இப்பிரிவானது, ரயத்துகளினுடைய சுவாதீனம் அல்லது கைப்பற்றிலல்லாமல் அவர்கள் தாமாகவே நேரில் பயிரிட்டு அல்லாதமாக தம் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருக்கும் நிலங்களைப்பற்றி சொல்வதாகும்என்று கவனிப்போமானால், நிலஸ்வான்தார்கள் தங்களுடைய பூஸ்திதியில் உள்ள நிலங்களின் செஸ்ஸை வசூல் செய்து கலெக்டரிடம் செலுத்த வேண்டுமென்பதாக இந்த சட்டத்தில் யாதொரு பிரிவும்காணோம். இத்தப்பிரிவும் 81-வது பிரிவும், மிகவும் கடினமாகவும், அர்த்தக் கலக்கமாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

லாண்டு செஸ், திட்டத்திற்குமேல் செலுத்தப்பட்டால் அதை கலெக்டரிடமிருந்து தான் வசூலிக்கவேண்டும் (a) லாண்டு செஸ் பாக்கியை வசூலிப்பதற்கு ல்மால்காஸ் கேஸாக கோர்ட்டுகளில் தாக்கல் செய்தாலேபோதுமானது (b). லாண்டு செஸ் தொகையை வரப்படுத்துவதற்கு லிமிடேஷன்

(a) ஹரிச்சந்திரதேவு vs. கஞ்சம் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரொசீடிங்ஸ் 24 Mad. 114.

(b) நரசிம்மாச்சாரியலு vs. லாட் கோவிந்தராஸ் 49. M.L.J. 185.

சட்டப்பிரகாரம் 6-வருஷ தவணை உண்டு. லிமிடேஷன் ஆக்ட்டின் 1-வது ஷெடியூல் 120-வது ஆர்ட்டிகிலைப்பார்க்க ஒரு நிலசுவான்தாரர் ஜோடிக்காகவும் பசுவி ஜாஸ்திக்காகவும் ஒரு இனாம்தாரர் பேரில் செய்யும் தாவா ஒரு ஸ்மால்காஸ் கோர்ட்டில் அங்கீகரிக்கப்படத்தக்கதாகும். ரெவினியூ கோர்ட்டில் தாவா செய்வதற்கில்லை (a). கட்டுபடி என்பதானது அசையாப்பொருள்கள் பேரில் பொறுப்பு பற்றக்கூடியதான ஒரு பாக்கியல்லவாதலால் அதை வாப்படுத்த ஸ்மால்காஸ் கோர்ட்டில் தாவா செய்யலாம். (b).

ஒரு பூஸ்திதியை சுவாதீன அடமானம் பெற்றுக்கொண்டிருப்பவர் ஒரு மத்திய நிலஸ்வான்தாரர் என்று கருதப்படுவார். (c) ஒரு தருமிலா இனாம்தார் ஒரு நிலசுவான்தாராக கருதப்படுவார். (d).

பூஸ்திதிகளில் ரயத்துகள் நேராக கவர்ன்மெண்டுக்கு யாதொரு லாண்டு செஸ்ஸும் செலுத்த வேண்டியதில்லை. அவர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய லாண்டு செஸ் தொகையை தங்களுடைய நிலஸ்வான்தாரர்களுக்குச் செலுத்தவேண்டும். அப்படி செலுத்தாவிட்டால் நிலஸ்வான்தாரர்கள் ரயத்துகளின் பேரில் சிவில் கோர்ட்டில் தாவா செய்து பாக்கியைப் பெற உரிமையுண்டு. தாம் செலுத்தும் லாண்டு செஸ்வில் இச்சட்டப்பிரகாரம் பாதியைத்தான் நிலசுவான்தாரர் ரயத்துகளிடமிருந்து வசூலிக்க முடியும். மொத்த செஸ்ஸையும் ரயத்துகள் செலுத்தவேண்டுமென்று பட்டாவில் யாதொரு ஷரத்தை நுழைக்கும் பக்ஷத்தில் அந்தப்பட்டா சரியான பட்டா அல்ல வென்று ரயத்துகள் அதைப்பெற்றுக்கொள்ள மறுத்து விடலாம் என்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. (e).

ஸ்வான்தாரர்களுக்குள்ள அதிகாரங்கள்.

89. சந்தர்ப்பத்திற்கேற்றபடி நிலஸ்வான்தாராகிய அல்லது உபநிலஸ்வான்தாராகிய அல்லது வேறே ஒரு மத்திய நிலசுவான்தாராகிய ஒவ்வொருவரும்—88-வது பிரிவிலுள்ள விலக்கு நிபந்தனைகளின் படி தமக்குச் சேரவேண்டியதாயிருக்கும் யாதொரு தொகையை வசூல் செய்வதில், இப்போது வழங்கிக்கொண்

(a) மூத்துராமலிங்கசேதுபதி vs மகாலிங்கராஜ— 9 M. L. W. 287.

(b) வெங்கடப்பா vs. ராமி செட்டி 17 I. C. 39, கணபதி ராஜ— vs. சூரிய நாராயண 22 Mad. 11.

(c) ஜகன்னுயகலு vs. நந்திக்கிராமம் மானேஜர் 39 Mad. 269=28 M L J. 154

(d) குண்டா செட்டி மல்லா காயுடு vs குண்டாவிட்டி ருநுவய்ய காயுடு A I. R. 1925 Mad. 1146.

(e) ஜகன்னுதா vs. அப்பலசாமி 28 M. L. J. 75.

டாகிலும், இனி வழங்குவதாகவாகிலும் இருக்கிற யாதொரு ஆக்ட் அல்லது ரெகுலேஷன்படி, குத்தகைத் தொகையை வசூல் செய்வதில் நிலசுவான்தார்களிலெவராவது செலுத்தக்கூடிய அதிகாரங்களைச் செலுத்துவதற்கு பாத்தியதை உடையவரா யிருப்பது மல்லாமல், அப்படிப்பட்ட அதிகாரங்களை அக்கிரமமாய்ச் செலுத்துவதற்காக அதில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் எல்லா தண்டனைகளுக்கும் உட்படுவார்

விவரணம் :—

ஒரு நிலசுவான்தார் அல்லது உபநிலசுவான்தார் 88-வது பிரிவின் முதல் விலக்கு நிபந்தனையில் கண்டிருக்கும் மத்திய நிலசுவான்தாரிடமிருந்து தனக்குச் சேரவேண்டிய தொகையை வசூல் செய்வதில் அந்த மத்திய நிலசுவான்தார் ஒரு ரயத்தாக இருந்து அவருக்கு பட்டா கொடுக்கப்பட்டு முச்சிலிக்கா பெற்றுக்கொள்ளப் பட்டதுபோல் இந்தப் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை செலுத்துவதற்கும் அபராதங்களுக்கு உட்படுவதற்கும் அடங்கினவராக இருக்கவேண்டும். இன்னும் இதன் விஷயத்தில் 1908-ம்வருஷத்திய சென்னை எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டினுடைய அம்சங்கள் எவ்வளவு வரையில் பிரயோகிக்கப்படலாமோ அவ்வளவு வரையிலும் பிரயோகிக்கப்படும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது நிலசுவான்தார் முதலியவர்கள் மத்திய நிலஸ்வான்தாரிடமிருந்து அல்லது மற்ற ரயத்துகளிடமிருந்து லாண்டு செஸ் பாக்கிகளை வசூலிப்பதற்கு உரிமையுள்ளவர்களாவார்கள் என்று கூறுகிறது. இந்தப் பிரிவையும், சென்னை எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டின 51, 77, 112 முதலிய பிரிவுகளையும் ஒன்று சேர்த்துப்படிக்கவேண்டும். ஒரு நிலஸ்வான்தார் தனக்குச் சேரவேண்டிய சக்ல பாக்கிகளுக்காகவும் தாவா செய்யவும் ரயத்தினுடைய சொத்துக்களை ஜப்தி செய்யவும் உரிமையுள்ளவராவர்.

90. 79-வது பிரிவில் (iii) குறிப்பிட்ட பகுதியானது பிரயோகப்படுத்தப்படும் ஒவ்வொரு நிலஸ்வான்தாரும் - அவருடைய நிலத்தின் வருஷவாரி வாடகை மதிப்பில், அப்படிப்பட்ட நிலசம்பந்தமாய் அவர் கவர்ன்மென்டாருக்குச் செலுத்தத்தக்க நிலையாய்ப் பைசலாகியாகிய தீர்வைத் தொகைக்குச் சமமான தொகையின் மேல் அவர் செலுத்தவேண்டிய செஸ்ஸில் பாதி வஜா பெற்றுக் கொள்ள அர்ஹராவார்.

கவர்ன்மென்டாருக்குச் செலுத்தத்தக்க நிலையாய்ப் பைசலாகியாகிய தீர்வைத் தொகை விஷயத்தில் லாண்ட்செஸ் என்னும்வரியை வஜாசெய்வது.

ஆனால், 88-வது பிரிவிலுள்ள இரண்டாவது விலக்கு நிபந்தனையின்படி. அப்படிப்பட்ட நிலஸ்வான்தாரர் தம்முடைய பாயக்காரிகளிடத்திலே வசூல் செய்யத்தக்க தொகையானது - அப்படி வஜா ஒத்துக் கொடுக்கப்படாதிருந்தால் கவர்ன்மென்டாருக்கு எவ்வளவு அவர் செலுத்தும்படியாயிருந்திருக்குமோ அந்த மொத்தத் தொகையின்மேல் கணக்கிடப்படும்.

குறிப்புகள்.

தான்யமாக ரெண்டு பாக்கியை வசூல் செய்யும் நிலஸ்வான்தாரர்களுக்கு நேரிடும் கஷ்டங்களையும் சங்கடங்களையும் உத்தேசித்து அவர்களுக்காக பாதி செல்வரியானது குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு வேளை ரயத்துகள் இதைக் கடைப்பிடித்து தாங்கள் யாதொரு செஸ் பாக்கியும் செலுத்தவேண்டியதில்லை யென்று வற்புறுத்த வொட்டாமல் இப்பிரிவில் விலக்கு நிபந்தனை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செஸ் என்னும்வரி பாக்கியை வசூலிப்பது.

91. ஒரு நிலசுவான்தார் அல்லது உபநிலசுவான்தார் 88-வது பிரிவின்கீழ் டிஸ்டிரிக்டு கலெக்டரால் நிர்ணயிக்கப்பட்ட தேதியில், தம்முடைய நிலங்களின் விஷயமாக தம்மால் கொடுக்கப்பட வேண்டிய செஸ் என்னும் வரியை மொத்தமாகவாவது அல்லது கொஞ்ச பாகமாகவாவது செலுத்த தவறினாலாவது, அல்லது, ஒரு பாயக்காரி தாம் அனுபவிக்கிற நிலங்களுக்காக கவர்ன்மென்டாருக்கு நேரில் செலுத்தவேண்டிய தண்ணீர் வரியின் பேரில் செலுத்தவேண்டிய செஸ் தொகையை வரி முழுவதிலுமாவது அல்லது ஒரு பாகத்தையாவது செலுத்த தவறிப்போய்விட்டாலும், அப்படிப்பட்ட செஸ்ஸாவது அல்லது அதில் எவ்வளவுபாகம் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறதோ அந்த பாகமாவது, சென்னை 1864-ம்வருத்திய **ரென்ட் ரிகவரி** ஆக்ட் (The Madras Rent Recovery Act of 1864)கீழ் அந்த தொகையானது ஒரு செவினியூ பாக்கியைப்போல் வசூலிக்கத்தக்கதாகும். மேற்சொன்ன சட்டத்தின் 42-வது பிரிவிலுள்ள கோட்பாடுகள் செஸ் பாக்கிக்காக ஏலத்திற்கு கொண்டு வரப்பட்ட எல்லா நிலங்களின் விஷயமாகவும் பிரயோகப்படுத்தத்தக்கதாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் நிலசுவான்தார்களாவது ரயத்துகளாவது லாண்டு செஸ் வரியை செலுத்தத்தவறும் பக்ஷத்தில் அதை எப்படி வசூல் செய்வது என்

பதைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. இப்பிரிவானது கலெக்டரால் வசூலிக்கப்படவேண்டிய செல் வரியை செலுத்தாவிட்டால் அல்லது ஒரு ரயத்துவாரி நிலத்தைப்பெற்றிருக்கும் ரயத்தானவர் வாண்டு செல்லை செலுத்தாவிட்டால் அவர்களுடைய நிலங்களை ஜப்தி செய்து ஏலம் போட்டு வசூலிக்கலாம் என்று ரெவின்யூ ரிகவரி ஆக்டில் சொல்லப்பட்டுள்ளது.

சென்னை ரெவின்யூ ரிகவரி ஆக்டின் 42-வது பிரிவின் சுருமாறு:—

"42 ரெவின்யூ பாக்கிக்காக ஏல விற்பனைக்குக் கொண்டுவரப்பட்ட எல்லா நிலங்களும் யாதொரு தகராதுக்களுக்குட்படாமல் விற்பனை செய்யப்படவேண்டும். அந்த பாக்கிகளை வட்டி, ஜப்தி, விற்பனைசெலவு, இன்னும் அவைகளுக்காக மற்ற செலவு இவைகளை தீர்த்து விட்ட பிறகு அந்த தொகைகளில் ஏதாவது மீதி இருக்கும்பக்ஷத்தில், அந்த தொகைகள் சரியான அதிகாரமுள்ள ஒரு கோர்ட்டினுல் கொடுக்கப்படக் கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தாலொழிய பணம் செலுத்தத்தவறின வருக்கு கொடுக்கப்படவேண்டும்"

ஏல விற்பனை யாதொரு தகராதுக்களுமில்லாமல் செய்யப்படுவது. மீதி தொகையை இன்னதுசெய்வதென்பது.

92. [இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]

தொழில் வரி.

93. (1) டிஸ்டிரிக்ட் போர்டு ஒரு தீர்மானத்தினுல் யாதொரு பிரதேச விஸ்தீரணத்தில் தொழில் வரி விதிக்கப்பட வேண்டுமென்று ஏற்படுத்தினுல்—

தொழில் வரி.

77-வது பிரிவு (1)-வது உப்பிரிவின் (b) உப வாக்கியத்தின் கீழ் பிரசுரப்படுத்தப்படும் அறிக்கையில் குறிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணத்தில் யாதொரு அரை வருஷத்தில் மொத்தத்தில் 60-நாட்களுக்கு குறையாமல் வியாபாரம் நடத்திவரும் ஒவ்வொரு கம்பெனியும்,

மேலே சொல்லப்பட்ட தேதிக்குப் பிறகு யாதொரு அரை வருஷத்தில்,

(a) ஒரு தொழில், கைத்தொழில், ஜீவனம் இவைகளை,

(i) அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணத்திற்குள் மொத்தத்தில் 60-நாட்களுக்கு குறையாமல், அல்லது,

(ii) அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணத்திற்கு வெளியே ஒரு தொழில், கைத்தொழில், அல்லது ஜீவனம் செய்து வந்தபோதிலும் அல்லது யாதொரு பஹிரங்கமான அல்லது பிரைவேட்டான உத்தியோகத்தை வகித்து வந்தபோதிலும், மொத்தத்தில் 60-நாட்களுக்கு குறையாமல் அவ்விஸ்தீரணத்திற்குள் வாசம் செய்து நடத்தியும்,

(b) அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணத்தில், மொத்தத்தில் 60-நாட்களுக்கு குறையாமல் வாஸம் செய்து வந்து யாதொரு பென்ஷன் அல்லது வைப்பு தொகையிலிருந்து வருமானம் இவைகளைப் பெற்று,

வரும் ஒவ்வொரு நபரும்,

IV-வது ஷெட்யூலிலுள்ள விதிகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட ஒரு வரியை ஒவ்வொரு அரை வருஷமும் கொடுக்க வேண்டும்.

(2) ஒரு நபர் (1)-வது உபப் பிரிவிலுள்ள வரியிடத்தகுந்த எல்லா ஆதாரங்களின் மூலமாக வரும் மொத்த வருமானத்திற்கும் சேர்ந்து தகுந்தபடி சரியான வகுப்பில் சேர்க்கப்பட்டு வரி இடப்பட வேண்டும்.

(3) ஒரு கம்பெனி அல்லது ஓர் நபர், இந்த சட்டத்தின் கீழ் இடப்பட்ட தொழில் வரிக்காகவாவது அல்லது, 1919-ம் வருஷத்திய சென்னை சிட்டி முனிஸிபல் ஆக்டின் கீழ் இடப்படும் யாதொரு கம்பெனி வரி அல்லது தொழில் வரி இவைகளுக்காகவாவது, அல்லது 1920-ம் வருஷத்திய சென்னை டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்டிகளின் சட்டத்தின்கீழ் இடப்பட்டிருக்கும் யாதொரு கம்பெனி வரி அல்லது தொழில் வரிக்காகவாவது, அல்லது 1924-ம் வருஷத்திய கன்டோன்மெண்ட்ஸ் ஆக்டின் கீழ் தொழில் வரி என்று இடப்படும் யாதொரு வரிக்காவது, அதிக அரை வருஷத்திற்காக சென்னை மாகாணத்திலுள்ள யாதொரு லோகல் போர்டு, முனிஸிபல் கௌன்ஸில் அல்லது கண்டோன்மெண்ட் அதிகாரி, இவர்களிடத்தில் செலுத்த வேண்டிய யாதொரு தொகையை கொடுத்தற்கு ருசு செய்யும் பக்ஷத்தில், அப்படிப்பட்ட கம்பெனியானது அல்லது நபரானவர், கம்முடைய வியாபார ஸ்தலமானது மாற்றப்பட்டதினை

லேயே, அல்லது தொழில், கைத்தொழில், ஜீவனம், உத்தியோகம், அல்லது வாசஸ்தலம் இவைகள் மாறினதினாலேயே வேறே ஒரு லோகல் போர்டுக்கு அல்லது முனிஸிபல் கௌன்ஸிலுக்கு அல்லது கன்டோன்மெண்ட் அதிகாரிக்கு அவர் அப்படி செலுத்தி யிருக்கும் தொகைக்கும் அந்த கம்பெனி அல்லது நபர் மற்றப்படிக்கு தொழில் வரி அல்லது கம்பெனிகளின் வரி இவைகளுக்காக அதே அரை வருஷத்திற்கு இந்த சட்டத்தின் கீழாவது அல்லது மேலே சொன்ன சட்டங்களின் யாதொன்றின் கீழாவது செலுத்த வேண்டியதாக ஏற்படும் தொகைக்கும் உள்ள வித்தியாச தொகைகள் தவிற அவைகளுக்கு அதிகமாக செலுத்துவதற்கு கடமைப்பட்டதாக ஏற்படக் கூடாது.

(4) இந்த பிரிவில் அடங்கியிருக்கும் யாதொன்றும், ஒரு பிரதேச அதிகாரியின் அதிகார ஸ்தலத்திற்குள் வாசம் செய்துக் கொண்டு, மற்றொரு பிரதேச அதிகாரியின் அதிகார ஸ்தலத்திற்குள் தன்னுடைய தொழில், கைத்தொழில், ஜீவனம் இவைகளை நடத்திக் கொண்டு அல்லது வியாபாரம் செய்துக்கொண்டு அல்லது யாதொரு உத்தியோகத்தை வகித்துக்கொண்டு வரும் ஓர் நபர், இவ்விரண்டு பிரதேச அதிகாரிகளுக்குள் எவராலாவது விதிக்கப்படும் அதிக வரியைக் காட்டிலும் அதிகமாக யாதொரு தொழில் வரிக்கு உட்பட்டதாக கவனிக்கப்பட மாட்டார். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் லோகல் கவர்ன்மெண்ட் அந்த வரியை இவ்விரண்டு பிரதேச அதிகாரிகளுக்குள் எம்மாதிரி பங்கிட வேண்டுமென்று தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிறதோ அம்மாதிரி பங்கிடவேண்டும். இதன் விஷயமாக லோகல் கவர்ன்மெண்டாருடைய தீர்மானமானது முடிவான தாகும்.

குறிப்புகள்.

93-வது பிரிவு முதல் 97-வது பிரிவு வரையிலுமுள்ள பிரிவுகளில் தொழில் வரியைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் லோகல் போர்டுகளாலும் பொது ஜனங்களாலும் மிகவும் ஜாக்கிரதையாகவும் நிதானமாகவும் கவனிக்கப்பட்டு அனுசரிக்கப்படவேண்டும். 93-வது பிரிவில் தொழில்வரி என்பது எவரெவர்களுக்கு விதிக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. பழைய லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 93-வது பிரிவிற்கும் புதிய லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 93-வது பிரிவிற்கும் அதிக வித்தியாசமுள்ளது. முதலாவதாக, பழைய லோகல்போர்டு சட்டத்தின் 92-வது பிரிவும் 93-வது

பிரிவும் ஒன்முக சேர்க்கப்பட்டு புதிய லோகல் போர்டு ஆக்டின் 93-வது பிரிவாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, பழைய லோகல்போர்ட்ஸ் ஆக்டின் 93-வது பிரிவில் பென்ஷன் பெறுபவர்களும், கொடுக்கல் வாங்கல் அல்லது வைப்புத்தொகை இவைகளின் வட்டியினால் வருமானம் பெறுபவர்கள் தொழில்வரிக்கு உட்படக்கூடாதென்று கண்டிருந்தது. ஆனால் புதிய சட்டப்பிரகாரம் மேலே சொல்லப்பட்ட ஆதாரங்களின் மூலமாக வருமானங்களை பெறுபவர்களும் தொழில் வரிக்குள்ளாவார்களென்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

93-வது பிரிவின் பிரகாரம் ஐந்து விதமான நபர்கள் வரியிடப்படுவதற்குள்ளாவார்கள். அதாவது:—

(1) ஒரு போர்டினுடைய அதிகார விஸ்தீரணத்திற்குள் ஒரு அரை வருஷத்தில் அறுபது நாட்களுக்குக் குறையாமல் வியாபாரம் செய்துக் கொண்டுவரும் ஒரு கம்பெனி.

(2) ஒரு அரைவருஷத்தில் ஒரு போர்டினுடைய விஸ்தீரணத்திற்குள் அறுபது நாட்களுக்குக்குறையாமல் யாதொரு தொழில், கைத்தொழில் அல்லது ஜீவனம் இவைகளை நடத்திவரும் ஒரு நபர்.

(3) யாதொரு லோகல் போர்டு விஸ்தீரணத்திற்குள் ஒரு அரை வருஷத்திற்குள் அறுபது நாட்களுக்குக் குறையாமல் வியாபாரம் செய்துக் கொண்டுவரும் ஒரு நபர்.

(4) யாதொரு அரை வருஷத்தில் ஒரு லோகல் போர்டு விஸ்தீரணத்திற்குள் அறுபது நாட்களுக்குக் குறையாமல் ஒரு பகிரங்கமான அல்லது ப்ரைவேட்டான உத்தியோகத்தை வகித்துக்கொண்டிருக்கும் ஒரு நபர்.

(5) யாதொரு அரை வருஷத்தில் அறுபது நாட்களுக்குக் குறையாமல் வாசம் செய்துக்கொண்டு யாதொரு பென்ஷன் அல்லது வைப்புத் தொகையிலிருந்து வருமானங்களைப்பெறும் நபர்.

மேலே 2, 3, 4, அங்கங்களின் கீழ் சொல்லப்பட்ட நபர்கள் யாதொரு லோகல் போர்டின் விஸ்தீரணத்திற்குள்ளிருந்து வியாபாரம், கைத்தொழில், ஜீவனம் அல்லது உத்தியோகம் இவைகளை நடத்தி வராவிட்டாலும் அந்த விஸ்தீரணத்திற்குள் ஒரு அரை வருஷத்தில் மொத்தத்தில் அறுபது நாட்களுக்குக் குறையாமல் வாசஞ்செய்துவரும் பக்ஷத்தில் அவர் தொழில் வரிக்கு உள்ளாகவேண்டும் என்றுள்ளது இன்னும் யாதொரு நபர் மேலே சொல்லப்பட்ட ஆதாரங்களில் பல அல்லது எல்லா ஆதாரங்களின் வழியாகவும் வருமானம் பெறும் பக்ஷத்தில் அவைகளெல்லாவற்றிலுமிருந்து வரும் வருமானத்தின் கூட்டுத்தொகை எவ்வளவோ அதற்குத் தகுந்தாப்போல் அவர் வரியிடப்படத்தக்கவராவர் என்றும் உள்ளது. IV—வது ஷெட்யூலில் 9—வது விதியைப் பார்க்க.

இப்பிரிவின் (3)-வது உபப்பிரிவில் உள்ளதின் சாராம்சம் என்ன வென்றால், யாதொரு நபர் அல்லது கம்பெனி ஒரு பிரதேச அதிகாரியின் விஸ்தீரணத்திற்குள் இருந்துகொண்டிருந்து மற்றொரு பிரதேச அதிகாரியின் விஸ்தீரணத்திற்கு மாற்றிக்கொள்ளும்பக்ஷத்தில் முந்தின பிரதேச அதிகாரிக்குத் தொழில்வரி கொடுத்திருந்தால் மறுபடியும் தாம் எந்த பிரதேச அதிகாரியின் விஸ்தீரணத்திற்குள் போய்ச் சேருகிறாரோ அந்த பிரதேச அதிகாரிக்கு அதே அரை வருஷத்திற்காக யாதொரு தொழில்வரியும் செலுத்தவேண்டிய அவசியமில்லை யென்பது. ஆனால், அவர் புதியதாக போய்ச் சேருமிடத்தில் அதே அரைவருஷத்திற்காக அதிகமான தொழில் வரி செலுத்தும்படியாக யிருந்தால் அந்த வரித்தொகைக்கும், முந்தி தாம் செலுத்தியிருந்த வரித்தொகைக்கும் எவ்வளவு வித்தியாசமுள்ளதோ அவ்வித்தியாசத் தொகையை புதிய அதிகாரியானவர், கேட்கும்பக்ஷத்தில் அதைச் செலுத்த கடமைப்பட்டவராவர் என்றுள்ளது. இந்த உபப்பிரிவில் தொழில் வரி வசூல்செய்யும் அதிகாரிகள் எவரெவர்களென்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது, சென்னை வீடி முனிசிபாலிட்டி, டிஸ்டிரிக்ட்டு முனிசிபாலிட்டிகளின் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் டிஸ்டிரிக்ட்டு முனிசிபாலிட்டிகள், கன்டோன்மெண்டு சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கண்டோன்மெண்டுகள், இந்த சட்டத்தின் ஏற்படுத்தப்படும் லோகல்போர்டுகள் ஆகிய இவைகளில் யாதொன்றுக்காவது ஒரு அரைவருஷத்தில் தொழில் வரி செலுத்தினதாக ருசு செய்யப்பட்டால் அதே அரைவருஷத்திற்காக மற்றொருதரம் மற்றொரு அதிகாரிக்கு அதே தொழில் விஷயமாக வரி செலுத்தவேண்டிய அவசியமில்லை என்பது இந்த உபப்பிரிவின் தாத்பரியார்த்தமாகும்.

நான்காவது உபப்பிரிவானது, புதியதாக சேர்த்து அமைக்கப்பட்டது. இந்த உபப்பிரிவானது ஒரு லோகல்போர்டின் அல்லது அதிகாரியின் அதிகார விஸ்தீரண எல்லைக்குள் இருந்துகொண்டு மற்றொரு லோகல்போர்டு அல்லது பிரதேச அதிகாரியின் அதிகார விஸ்தீரணத்திற்குள் தொழில் முதலியவைகளை நடத்திவரும் ஒரு நபருக்கு விதிக்கப்படத்தக்க வரிகளின் வித்தியாசத்தொகையை வரப்படுத்துவதை அதிகாரப்படுத்துவதாகும். உதாரணமாக:—ஒருநபர் ஒரு தாலூக்காவில் வாசஞ் செய்துக்கொண்டு மற்றொரு தாலூக்கா அல்லது பட்டணத்தில் வியாபாரம் நடத்திவருவதாக வைத்துக் கொள்வோம். அவர் ஒரு தாலூக்காவில் வசித்துக்கொண்டு வருவதால் அவருக்கு தொழில்வரி யிடப்படுவதற்கு நியாயமுண்டு. அவர் வியாபாரம் செய்துக்கொண்டுவரும் இடத்திலும் அவருக்கு தொழில்வரி யிடப்படுவதற்கு நியாயமுண்டு. ஆனால் அவருக்கு இவ்விரண்டு இடத்திலும் இரண்டு அதிகாரிகளாலும் தொழில்வரி யிடப்படுவதற்கு நியாயமில்லை. அவர் ஒரு தாலூக்காவின் எல்லைக்குள் வசிப்பதினால் அந்த தாலூக்காவிலுள்ள விதிகளின் பிரகாரம் நூறு ரூபாய் வரி விதிக்கப்படத்தக்கதாயிருந்து பட்ட

ணத்தில் வியாபாரம் செய்துவருவதினால் 150 ரூபாய் தொழில்வரிக்கு உள்ளாவதாக இருக்கும்பக்ஷத்தில் அவர் 100 ரூபாய் மாத்திரம் தாலூக்கா அதிகாரிகளுக்கு செலுத்தியிருக்கும்பக்ஷத்தில் பட்டணத்தில் உள்ள அதிகாரிகளுக்கு இரண்டு தொழில்வரி தொகைகளின் வித்தியாசமான ரூபா 50 ஐ செலுத்தவேண்டியிருக்கும். ஆனால் தாலூக்கா அதிகாரிகளுக்கு யாதொரு தொகையும் செலுத்தவேண்டிய அவசியமில்லை அதே மாதிரியாக பட்டணத்தில் எண்பது ரூபாய் மாத்திரம் தொழில்வரிக்காக செலுத்தவேண்டியிருந்து தாலூக்கா அதிகாரிகளுக்கு நூறு ரூபாம் செலுத்தவேண்டியிருக்கும்பக்ஷத்தில் பட்டண அதிகாரிகளுக்கு எண்பது ரூபாய் செலுத்திவிட்டு மிகுதி வித்தியாசத் தொகையான இருபது ரூபாயை தாலூக்கா அதிகாரிகளுக்கு செலுத்தினாலே போதுமானது. இதுதான் (4)-வது உபப்பிரிவின் தாத்பரியம்.

இனி இப்பிரிவிலுள்ள பதங்களின் அர்த்தம் என்னவென்பதைகவனிப்போம். இப்பிரிவில் வியாபாரம் என்றும் வருமானம் என்றும் தொழில், கைத்தொழில் என்றும், அரைவருஷம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அவைகளைப்பற்றி கோர்ட்டுகள் எம்மாதிரி நிர்மானித்திருக்கின்றனர் என்பதைப் பற்றி கவனிப்போம்.

வியாபாரம் என்பது வணிகம், வர்த்தகம் அல்லது வஸ்துக்களைச் செய்யும் தொழில் அல்லது இவைகளைப்போன்ற யாதொரு பெருமுயற்சி அல்லது வேலை என்பது அடங்கும் என்று இன்கம்டாக்ஸ் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. வியாபாரம் என்பதானது லாபத்திற்காக செய்யும் ஒரு தொழிலைக்குறிக்கும். யாதொரு ஆர்டிகிள் வஸ்துக்களை உற்பத்தி செய்யும் பக்ஷத்தில் அல்லது உருவாக்கும் பக்ஷத்தில் அவை எந்த இடத்தில் செய்யப்பட்டதோ அல்லது உருவாக்கப்பட்டதோ அந்த இடத்திலேயே தான் அவருக்கு வரியிடப்படவேண்டும். (a)

ஒரு கம்பெனி ஒரு லோகல் போர்டின் எல்லைக்குள் பிரத்தியக்ஷமாக வியாபாரம் செய்தால் தான் வரிக்குள்ளாக்கப்படுவதற்கு முடியுமேயொழிய வியாபாரம் செய்யாமலிருந்து தலைமை ஆபீஸை பெற்றிருப்பதினாலேயே வரிக்குள்ளாவதற்கில்லை. ஒரு கம்பெனி தங்களுடைய பணத்தை பல வியாபாரங்களில் அமர்த்தி அதனால் வந்த லாபத்தை சில தர்மஸ்தாபனங்களுக்கு கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்திருந்தது. அந்த கம்பெனியானது கம்பெனி வரிக்கு உள்ளாக வேண்டுமென்று நிர்மானிக்கப்பட்டது (b) ஒரு

(a) காகிநாடா முனிசிபல் கௌன்சில் vs. இளான் லேயன் வ்டீமர்ஸ் 42 Mad. 455.

(b) அஜ்மீர் முனிசிபல் vs. சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் 11 Mad 253.

கம்பெனி ஓரிடத்தில் தனது ஆபீஸை வைத்திருந்தாலே அவ்விடத்தில் வியாபாரம் செய்ததாக அனுமானிக்கப்படுமென்று IV-வது செடியூல் 10-வது விதியில் சொல்லப்பட்டுள்ளது

வருமானம். வருமானம் என்பது, லோகல் போர்டு சட்டப்பிரகாரம் மொத்த வருமானம் அல்லவென்றும் சிலவுபோக மிகுதி லர்பமாக நிற்கும் வருமானமென்று ஒரு கேஸில் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது (a) அந்த கேஸில் ஒரு லாவாதேவி வியாபாரி ஒரு யூனியன் போர்டால் தன்னுடைய மொத்த வருமானத்தின் பேரில் தொழில்வரி யிடப்பட்டார். அவர் யூனியன் போர்டுக்கு அந்த பணத்தை செலுத்திவிட்டு தமக்கு லாபமாக கிடைக்கும் தொகையின் பேரில்தான் வருமான வரி யிடப்பட்டிருக்கவேண்டுமென்றும். யூனியன் போர்டார் செய்தது பிசகென்றும் சொல்லி அதிகத்தொகையை வரப்படுத்த தாவா செய்தார். ஹைக்கோர்ட்டாரவர்கள் யூனியன் போர்டார் லோகல் போர்டு சட்டப்பிரகாரம் அவ்வரியை இடவில்லை யாதலால் அப்படிப் பட்ட ஒரு தாவா ஸ்மால்காஸ்தாவாவாக செய்யப்படலர்ம் என்றும் அதற்கு லோகல் போர்டு சட்டத்தின் 223-வது பிரிவு ஒரு தடையாக யிருக்காதென்றும் தீர்மானித்தனர் இன்னும், அந்த கேஸில், ஒரு கபர் தமக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரியானது பிசகானது என்னும் காரணத்திஞல் அதை நீக்கி வைக்கவேண்டுமென்று சிவில்கோர்ட்டில் தாவாசெய்யலாம் என்றும் அதற்கு 228-வது பிரிவானது ஒரு தடையாக ஏற்படாதென்றும் தீர்மானித்தனர். மொத்த வருமானத்தின் பேரில் அல்லாமல் நிகரலாப வருமானத்தின் பேரில் தான் தொழில் வரியிடப்படவேண்டுமென்று மற்றொரு கேஸில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. b)

தொழில், கைத்தொழில். தொழில் என்பது ஜீவனத்திற்காக பணம் சம்பாதிக்கும் ஒரு அலுவலைக் குறிக்கும். கைத்தொழில் என்பது புத்தி சாமர்த்தியத்திஞலாகிய உதாரணமாக—சித்பி, சங்கீதம், படம் வரைதல், கட்டடம் கட்டுதல் முதலிய சாமர்த்தியமுள்ள, வேலைகளைக்குறிக்கும். பணத்தை வட்டிக்கு விட்டு வட்டி வசூலிப்பதும் ஒரு ஜீவனமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (c) தொழில், கைத்தொழில், ஜீவனம் என்பவைகளானது எவ்விதமாகவும் நடத்தப்படும் ஜீவன உபாயங்களை அணைப்பதாகும்.

(a) R. A. A. அருணாசலம் செட்டியார் vs. காமக்கல் யூனியன் போர்டு 54 M. L. J. 603.

(b) மங்களூர் முனிசிபல் கௌன்சில் vs. கோடியல் பெய்ல் பிரஸ் 27 Mad. 547.

சுப்பிரமண்யம் vs. சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் 1913 M. W. N. 935.

(c) ஜென்னிங்ஸ் vs. சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் 11 Mad. 253.

அரைவருஷம். அரைவருஷம் என்பது அரசிறை வருஷத்தின் அரை வருஷமாகும். அரசிறை வருஷமானது ஒவ்வொரு இங்கிலீஷ் வருஷத்தில் ஏப்பிரல்மீ 1உ முதல் செப்டம்பர்மீ 30உ வரையிலும் ஒரு அரைவருஷ மாகவும் அக்டோபர்மீ 1உ முதல் மார்ச்சுமீ 30உ வரையிலும் ஒரு அரை வருஷமாகவும் இச்சட்டத்தில் பிரிக்கப்பட்டுள்ளது.

யாதொரு நபர் ஒரு வில்தீரணத்திற்குள் ஒரு அரை வருஷத்தில் குறைந்தபக்ஷம் 60-நாட்கள் வியாபாரம் முதலியவைகளை நடத்திவந்தா லொழிய அல்லது வாசஞ் செய்திருந்தாலொழிய தொழில்வரி யிடப்படுவ தற்கில்லை. ஒரு நபர் ஒரு வருஷத்தில் செப்டெம்பர்மீ 1உ முதல் நவம்பர்மீ 30உ வரையிலும் ஒரு தாலூக்காபோர்டு அல்லது பஞ்சாயத்தின்எல்லைக்குள் வியாபாரம் செய்துவரும்பக்ஷத்தில் அவர்தொழில்வரிக்கு உட்படுவதற்கில்லை. எனென்றால் அவர்மொத்தத்தில் 90-நாட்கள் வரையிலும் வியாபாரம்செய்து வந்த போதிலும் அரசிறை வருஷத்தின் முதல் பாகத்தில் 45-நாட்கள் வரை யில் மாத்திரமும் இரண்டாவதுபாகத்தில் 45-நாட்கள் மாத்திரம் வியாபாரம் செய்துவந்திருப்பதால் எந்தஅரைவருஷத்திலாவது இந்தப்பிரிவின் பிரகாரம் அறுபது நாட்கள் வியாபாரம் செய்யவில்லை யாதலால் யாதொரு தொழில் வரிக்கும் உட்படுவதற்கில்லை.

ஒரு நபர் தன்னுடைய பணத்தை யாதொரு ஆஸ்தியை வாங்குவதனாலா வது அல்லது வேறே விதமாகவாவது வளரும்படி செய்தால் அவர் அதனால் வரும் லாபத்திற்கு தொழில்வரி கொடுக்க பத்தப்பட்டவராவர்.

வீடுகளிலிருந்து குடக்கூலியினால் வரும் வருமானமும், தோட்டங்களி லிருந்துவரும் வருமானமும், வட்டிக்கு கொடுத்திருப்பதினால் வரும் வரு மானமும் இம்மாதிரியாக எல்லாவிதமான ஆதாரக்களிலிருந்து வரும் தொகைகள் வரிக்குட்படுவதாகும்.

இன்கம்டாக்ஸ் சட்டப்பிரகாரம் விதிக்கப்படும் வருமானவரிக்கும் இந்த சட்டத்தின் கீழுள்ள தொழில்வரிக்கும் வித்தியாசமுண்டு. இன்கம்டாக்ஸ் சட்டத்தின்கீழ் விவசாயத்தினால்ஏற்படும் வருமானமானது வரிக்கு உட்படத் தக்கதல்லவென்று உள்ளது. ஆனால் இந்த சட்டப்பிரகாரம் எல்லாவித மான ஆதாரங்களிலிருந்தும் வரும் வரும்படியானது தொழில்வரிக்கு உட் படத்தக்கதாக யிருக்கிறது. இந்த சட்டத்தின் நான்காவது ஷெட்யூலில் 9-வது விதியில் ஒரு அரைவருஷத்தில் நூற்று ஐம்பது ரூபாய்க்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு தொழில்வரி யிடப்படுவதற்கில்லையென்று சொல்லப்பட்டுள்ளது. நான்காவது ஷெட்யூலில் 1-முதல் 11-A வரையிலு முள்ள விதிகளில் தொழில்வரியானது எம்மாதிரி விதிக்கப்பட வேண்டு மென்று சொல்லப்பட்டுள்ளது.

இப்பிரிவானது தொழில்வரியைப்பற்றி கூறினபோதிலும் பொதுவாக எல்லாவிதமான வருமானங்களுக்கும் தொழில்வரி யிடப்படவேண்டுமென்று

சொல்லப்பட்டுள்ளதால், வரியிடப்படுவதற்கு யாதொரு தொழில் தான் ஆஸ்பதமாக யிருக்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுவதற்கில்லை.

94. யாதொரு பர்ம் (firm) என்னும் வர்த்தகக் கூட்டம் அல்லது அசோஸியேஷன் என்னும் கூட்டம் அல்லது ஹிந்து ஏக குடும்பம் இவைகளுக்கு இடப்படும் தொழில் வரியானது அந்த பர்ம் (firm) அல்லது அஸோஸியேஷன் அல்லது குடும்பத்தைச் சேர்ந்த யாதொரு வயது வந்த நபரிடத்தி லிருந்தாவது விதித்து வாங்கப்பட லாம்.

பர்ம்கள் (firms) கூட்டங்கள், ஹிந்து ஏக குடும்பங்கள் இவைகளின் அங்கத்தினர்கள் தொழில் வரிக்கு உள்ளாவது.

குறிப்புகள்.

இப்பிரிவானது பர்ம்கள், கூட்டங்கள், ஜாயிண்டு ஹிந்து குடும்பங்கள் இவர்களுக்கு தொழில்வரி விதிக்கும்பகுதியில் முதன்மையாக எவர்பேரில் தொழில்வரி விதிக்கவேண்டும் என்பதைப்பற்றி கூறுகிறது. ஒரு பர்ம் அல்லது கூட்டம் அல்லது ஹிந்து குடும்பம் இவைகளில் உள்ள ஒருவருக்குமாத்திரம் வரி விதிக்கலாமேயொழிய இவைகளிலுள்ள ஒவ்வொரு நபருக்கும் வரி விதிப்பதற்கில்லை

பர்ம் என்பது வியாபாரத்திற்காக அல்லது லாபம் சம்பாதிப்பதற்காக கூட்டுப்பங்காக சேர்ந்திருக்கும் சில நபர்களுக்குறிக்கும். வரி விதிப்பு விஷயமாக ஒவ்வொரு பர்மும் அல்லது கூட்டம் அல்லது ஹிந்து குடும்பமும் ஒரு நபரை நமோதாக காட்டவேண்டும்.

94-A. (1) ஒரு கம்பெனி அல்லது நபர், தாம் யாதொரு பிரதேச விஸ்தீரணத்தில் வியாபாரம் செய்வதற்காக, அந்த ஸ்தலத்தில் ஒரு ஊழியரை அல்லது ஏஜெண்டை தமக்கு பிரதிநிதியாக நியமிக்கும் பக்ஷத்தில், அப்படிப்பட்ட கம்பெனி அல்லது நபரானவர் அந்த பிரதேச விஸ்தீரணத்தில் வியாபாரம் செய்துக்கொண்டு வருவதாக கருதப்படுவார். அப்படிப் பட்ட ஊழியர் அல்லது ஏஜெண்டு அந்த கம்பெனி அல்லது நபரின் சார்பாக அதை அல்லது அவரை கட்டுப்படுத்தும்படியான யாதொரு கான்ட்ராக்டை ஏற்பாடு செய்வதற்கு அதிகார மிருந்த போதிலும் அல்லது இல்லாமலிருந்தபோதிலும் அவர், அப்படிப்பட்ட கம்பெனி அல்லது நபருக்கு அவ்வியாபார விஷயமாக ஏற்படும் தொழில் வரி விதிக்கப்படத் தக்கவராவர்.

ஊழியர்கள் அல்லது ஏஜெண்டுகள் தொழில்வரிக்கு உட்படுவது.

(2) ஒரு கம்பெனி அல்லது நபர் மற்றொரு கம்பெனி அல்லது நபர்களுடைய ஏஜெண்டாக இருக்கும் பக்ஷத்தில் அந்த கம்பெனி அல்லது நபரானவர் தன்னுடைய முதலாளிக்கு ஏற்படும் வருமானத்தின் பேரிலேயே தனியாக யாதொரு தொழில் வரிக்கும் உள்ளாக மாட்டார்.

தறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் ஹுத்திய திருத்த சட்டத்தினால் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. பழைய 92, 93-வது பிரிவுகளின்கீழ் ஒரு கம்பெனியின் ஏஜெண்டு யாதொரு இடத்தில் தன் எஜமானனுக்காக வியாபாரம் செய்துவரும்பக்ஷத்தில் அவர் தொழில்வரிக்கு உட்படுவதற்கில்லை என்றும் எந்த இடத்தில் ஒரு கம்பெனி அல்லது நபரானவர் முக்கியமாக வியாபாரம் நடத்தி வருகிறதோ அல்லது வருகிறாரோ அந்த இடத்தில் தான் அதற்கு அல்லது அவருக்கு கம்பெனி அல்லது தொழில்வரி இடப்படலாம் என்று தீர்மானங்கள் நடந்தேறிவந்தன. அதனால் பல கம்பெனிகள் வரிகொடாமலே தப்பித்துக்கொண்டு வந்திருந்தன. இப்பொழுது ஒரு கம்பெனிக்காக யாதொரு ஏஜெண்டு அல்லது அந்த கம்பெனியின் ஊழியர் ஒருவர் அந்த கம்பெனிக்காக வியாபாரம் செய்யும் பொருட்டு ஒரு விஸ்தீரணத்திற்குள் அமர்த்தப்படும்பக்ஷத்தில், அவர், அந்த கம்பெனியின் சார்பாக ஒப்பந்தங்கள் அல்லது காண்ட்ராக்டுகள் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் தொழில்வரிக்கு உட்பட்டவராவர்.

இப்பிரிவின் (2)-வது உபப்பிரிவில் ஒரே கம்பெனியானது இரண்டு தடவை வரிக்கு உட்படவொட்டாமல் இருக்கும்படியாக ஒரே வருமானத்தின் பேரில் ஒரு கம்பெனியும் அதின் ஏஜெண்டும் தொழில் வரிக்கு உட்படுவதற்கில்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

தொழில்வரி கிராமத்திற்கு சேரவேண்டுமென்பது.

95. யாதொரு கிராமத்தில் விதித்து வாங்கப்படும் தொழில் வரியானது - அந்த கிராமபண்டு நிதிக்கு வரவு வைக்கப்படும். அந்த கிராமத்திலுள்ள பஞ்சாயத்தும் அதன் ப்ரெஸிடெண்டும் IV-வது ஷெடியூலினால், வரி விதிக்கும் விஷயமாகவும் அதை கைப்பற்றும் விஷயமாகவும் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்த வேண்டும்.

தறிப்புகள்

தொழில் வரியை வசூலிப்பதில் IV-வது ஷெடியூலில் சொல்லப்பட்டுள்ள அதிகாரங்களை பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டு செலுத்துவதற்கு

உரிமையுள்ளவராவர் என்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு கிராமத்தில் வசூலிக்கப்படும் தொழில் வரியானது கிராமபண்டுக்குச் சேருவதாகும். அந்த தொகை மொத்தமும் கிராமத்திற்கே சேருவதாகும். V-வது ஷெடியூல் (5)-வது விதி (2)-உபவிதியைப்பார்க்க.

தொழில்வரி செலுத்தத்தவறினால் நோட்டீஸ் கொடுக்கப் படுவது.

96. யாதொரு கம்பெனி அல்லது நபரிடமிருந்து சேர வேண்டிய தொழில் வரியானது செலுத்தப் படாத பக்ஷத்தில் அந்த பஞ்சாயத்தினுடைய ப்ரெஸிடென்ட் அப்படிப்பட்ட கம்பெனி அல்லது நபருக்கு ஓர் நோட்டீசை ஜாரி செய்யப் படும்படி செய்து அந்த நோட்டீஸ் பெற்ற 15-தினங்களுக்குள் அந்த வரியை செலுத்தும்படி கேட்கவேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது ஒரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டின் கடமையை தெரிவிப்பதாகும். குறித்த தவணைக்குள் தொழில் வரியானது செலுத்தப்படாவிட்டால் அதை செலுத்துவதற்காக ஒரு நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும். அந்த நோட்டீஸில்-அந்த நோட்டீஸ் கண்ட 15 தினங்களுக்குள் ப்ரெஸிடென்டானவர் வரியைச்செலுத்தும்படி கேட்கவேண்டும் இப்பிரிவில், ஒரு ப்ரெஸிடென்டு கட்டாயம் நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்றும், நோட்டீஸ் கொடுக்கத்தவறக்கூடாதென்றும் கூறுவதாகும்.

இந்த சட்டத்தின் IV-வது ஷெடியூலில் நோட்டீஸ் கொடுக்கப்பட்ட பிறகும், நோட்டீஸ் பெற்றுக்கொண்ட நபரானவர் வரி செலுத்தாததற்கு சரியான காரணம் தெரிவிக்காவிட்டால் எவ்வாறு மேல் நடவடிக்கைகளை நடத்தவேண்டுமென்று குறிக்கப்பட்டுள்ளது. 33-முதல் 40-வரையிலுமுள்ள விதிகளைப்பார்க்க.

நோட்டீஸ் கொடுக்காமல் ஜப்தி முதலியவைகளைச் செய்வது சட்ட விரோதமாகும். நோட்டீஸ் கொடுக்காமல் யாதொரு அரை வருஷத்திற்கு வரி வசூலிப்பதில்லை யென்று IV-வது ஷெடியூல் 42-வது விதியில் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்டேட் மென்டுகளும், தவணைகளுக்குகளும் அந்தரங்கமாக இருக்கவேண்டுமென்பது.

96-A. தொழில்வரி விதிக்கப்படும் சம்பந்தமாக யாதொரு கம்பெனி அல்லது நபரால் செய்யப்படும் எல்லா விவர அறிக்கைகளும் கொடுக்கப்படும் கணக்குகளும் அல்லது ஆஜர்ப்படுத்தப்படும் கணக்குகளும் பத்திரங்களும் அந்தரங்கமுள்ளதாக கவனிக்கப்பட வேண்டும். அவைகளுடைய நகல்கள் பொது ஜனங்களுக்குக் கொடுக்கப்படக் கூடாது.

97. பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் - யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாருக்கு யாதொரு ஹோட்டல், (போர்டிங் ஹௌஸ்) போஜன விடுதி அல்லது (லாட்ஜிங் ஹௌஸ்) தங்குவதற்கான இடம், க்ளப் அல்லது வாசஞ் செய்வதற்கான அறைகளின் ஒவ்வொரு ஸெக்ரடெரி அல்லது மானேஜருக்கும் நோட்டீஸ் கொடுத்து மேற்படி கட்டிடம் அல்லது நிலம் அல்லது ஹோட்டல், போஜன விடுதி, தங்குவதற்கான இடம் இவை அல்லது வாஸஞ்செய்வதற்கான அறைகள் இவைகளை அனுபவிக்கிற சகலமானவர்களுடைய பெயரையும் அப்படிப்பட்ட ஒவ்வொருவருக்கும் தொழில் - கைத்தொழில் – வேலையையும், அவர் வாடகை ஏதேனும் செலுத்தி யிருந்தால் அந்த வாடகையையும் அவர் அந்தப்படி அனுபவித்து வரும் கால அளவையும் கண்டெழுதியுள்ள ஒரு ஜாபிதாவைக் குறித்த காலத்துக்குள்ளாக அனுப்பும்படி மேலே கண்ட சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரையும் ஸெக்ரடெரி அல்லது மானேஜரையும் கேட்கலாம்.

வரிக்குள்ளானவர்களைக் குறித்து ஜாபிதா அனுப்பும்படி சொந்தக்காரருக்காவது அனுபோகதாரருக்காவது நோடீஸ் கொடுப்பது.

குறிப்புகள்.

யாதொரு கட்டிடத்தில் அல்லது இடத்தில் அல்லது ஹோட்டல் முதலிய இடங்களில் வசித்துக்கொண்டிருக்கும் நபருடைய விவரங்களையும் வரும்படியையும் இன்னதென்று அறிவதற்காக அவருடைய தொழில், ஜீவனம், குடிக்கூலி முதலியவைகளைப்பற்றி ஒரு ஜாபிதா கொடுக்கும்படி கேட்கலாமென்று இந்த பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. யாதொரு நபர் இப்பிரிவின்கீழ் ஒரு கட்டிடத்தின்சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரராயிருந்து அல்லது ஒரு ஹோட்டல், போஜனவிடுதி, க்ளப் முதலியவைகளில் செக்ரிடெரி அல்லது மானேஜராகயிருந்து கேட்கப்பட்ட விவரங்களை தெரிவிக்கும்படி நோடீஸ் கொடுக்கப்பட்டும் ஜாபிதாவை கொடுக்காவிட்டால் அவருக்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

98. ஒரு டிஸ்டிரிக்ட் போர்டு தம்மால் செய்யப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலமாக யாதொரு கிராமத்தில் ஒரு வீட்டு வரி விதிக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தாலும், அல்லது லோகல் கவர்மென்டு யாதொரு கிராமத்தில் ஒரு வீட்டு வரி விதிக்கப்பட வேண்டுமென்று பிரசித்தம் செய்தாலும், அப்படிப்பட்ட வரியானது சந்தர்ப்

வீட்டு வரி.

பத்திற்குத் தருந்தாப்போல் 77-வது பிரிவின் (1)-வது உபப் பிரிவின் (b) உபவாக்கியத்தின் கீழாவது அல்லது அந்தப் பிரிவின் (2)-வது உபப் பிரிவின் கீழாவது பிரசுரம் செய்யப்படும் அறிக்கையில் கண்ட விதிதப்பிரகாரமும் அந்த அறிக்கையின் தேதி முதற்கொண்டும் அந்த கிராமத்திலுள்ள எல்லா வீடுகளுக்கும் IV-வது ஷெட்யூலில் கண்டுள்ள விதிகளிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வரி விதிக்கப்பட வேண்டும்.

குறிப்புகள்.

98-வது பிரிவு முதல் 103-வது பிரிவு வரையிலும் உள்ள பிரிவுகளில் வீட்டுவரியைப்பற்றியும் அவைகள் விதிக்கப்படும் விதத்தைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. வீட்டுவரி விதிக்கப்படும் விஷயமாக இரண்டுவித மான உத்திரவுகளில் ஏதாவது ஒன்று ஏற்படவேண்டும். அதாவது: டில்டிரிக்ட் போர்டானது ஒரு கிராமத்தில் வீட்டுவரி விதிக்கப்பட வேண்டுமென்று தீர்மானம்செய்யவேண்டும்; அல்லது லோகல்கவர்ன்மென்டானது யாதொரு கிராமத்தில் வரி விதிக்கப்படவேண்டுமென்று ஒரு அறிக்கையிட வேண்டும். 1-4-30-க்கு முன் வீட்டுவரியிடப்படாத கிராமங்களில் வீட்டு வரி யிடப்பட வேண்டுமென்று டில்டிரிக்ட் போர்டு தீர்மானம் செய்வதற்கில்லை. (75-வது பிரிவைப் பார்க்க). ஒரு பஞ்சாயத்தில் புதியதாக வரியிடப்பட வேண்டுமானால் அந்த பஞ்சாயத்தானது அம்மாதிரி வரியிடலாமென்று கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்வதின்பேரில், கவர்ன்மெண்டாருக்கு அந்த கிராமத்தில் வீட்டுவரி யிடும்படியாக அறிக்கையிடுவது நியாயமாகும். வீட்டுவரி யிடுவதின் விஷயமாக இந்த சட்டத்தின் IV-வது ஷெடியூலில் 12-முதல் 18-வரையிலுமுள்ள விதிகளில் சொல்லப்பட்டுள்ளது. அவை களைப் பார்க்க.

ஒரு யூனியன் போர்டு அல்லது பஞ்சாயத்துக்கு தன்னுடைய எல்லைக்கு வெளியில் இருக்கும் ஒரு நபருக்கு வீட்டு வரி யிடுவதற்கு உரிமையில்லை. ஆகையால் அத்தகைய நபரை ப்ரெஸிடென்டானவர் 232-வது பிரிவின் கீழ் சம்மன் செய்வதற்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. அப்படிப்பட்ட சம்மனை நிராகரித்ததற்காக அந்த நபரை தண்டிப்பதற்கில்லை (a).

ஒரு கிராம பௌண்டானது, இச்சட்டத்தின் 3-வது பிரிவின் (8)-வது உபப்பிரிவின் பிரகாரம் ஒரு வீடென்று கவனிக்கப்படாது. ஆகையால் ஒரு கிராம பௌண்டு கட்டிடமானது-வீட்டு வரி விதிக்கப்படுவதற்கில்லை.

(a) திருக்குரங்குடி யூனியன் போர்டு ப்ரெஸிடென்டு v. நாராயண நாடார் 55 M. L. J. 718=A. I. R 1928 Mad. 1261.

99. அடியிற் கண்ட கட்டிடங்களுக்கு வீடுகளின்மேல் பொது நிவாரணை விதிக்கப்படும் வரி விதிக்கப்படமாட்டாது:—

கள்.

(a) ஜனங்கள் தேவாராதனை செய்வதற்கென்று ஏற்படுத்தி வாஸ்தவத்தில் அப்படியே உபயோகப்படுத்தப்பட்டாவது அல்லது வேறெந்த காரியத்திற்கும் உபயோகப்படுத்தப்படாமலாவது நிருக்கிற கட்டிடங்களும், சத்திரங்களும், ஹாஸ்டல்கள் உள்பட கல்வி சம்பந்தமான காரியங்களுக்காகவும், பொது ஜனங்கள் போய் வாசிக்கக்கூடிய லைப்ரெரிகள் என்னும் புத்தகசாலைகளுக்காகவும், உபயோகிக்கப்படும் கட்டிடங்களும், நிக்கற்றவர்களுக்கும் மிருகங்களுக்கும் நிழல்கொடுப்பதற்காக தர்ம விஷயங்களுக்கு உபயோகப்பட்டு வருகிற பொது கட்டிடங்களும், 1904-ம் ஞ்ரு த்திய புராதன ஞாபக கட்டிடங்களை காப்பாற்றுவதற்கான சட்டத்தின் கீழ் காப்பாற்றி வைக்கப்படும் கட்டிடங்களும் அல்லது அவைகளின் பொது ஆபீசுகளுக்காவது அல்லது வாசஸ்தலத்திற்கென்றுவது உபயோகப்படுத்தப்படாத பாகங்களும்,

(b) தரும ஆஸ்பத்திரிகள் அல்லது டிஸ்பென்ஸரிகளும், தரும சம்பந்தமான காரியங்களுக்காகவென்றே பிரத்தியேகமாய் உபயோகப்படுகிற இதர கட்டிடங்களும், லோகல் கவர்ன்மென்டால் அவ்வப்பொழுது பிரசுரப்படுத்தப்படும் செயில்வே நிர்வாகங்களினால் பரிபாலிக்கப்பட்டு வரும் ஆஸ்பத்திரிகளும் வைத்திய சாலைகளும் ;

(c) லோகல் போர்டாருக்குச் சொந்தமான கட்டிடங்கள் ;

(d) ஷூட் ஹௌஸ் என்னும் விளக்குக் கூண்டுகள்.

விவரணம்:

இந்தப் பிரிவின் கீழ் கொடுக்கப்படும் நிவாரணைகளானது ஹாஸ்டல்கள் அல்லாமல், பள்ளிக்கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் சேர்க்கப்பட்ட குடி இருப்பு வீடுகளுக்காவது அல்லது ஆஸ்பத்திரிகள், வைத்தியசாலைகள், வாசஸ சாலைகள் இவைகளுக்காக ஏற்பட்டிருக்கும் குடி இருப்பு வீடுகளுக்காவது பிரயோஜனப்படும்படி ஏற்படாது.

குறிப்புகள்.

இப்பிரிவானது எக்தெந்த கட்டிடங்கள் வீட்டுவரி யிடப்படுவதிலிருந்து நிவர்த்திக்கப்படுமென்று கூறுவதாகும். முக்கியமாக சத்திரங்கள், தேவாரா

தனை செய்வதற்கென்று ஏற்படுத்தப்பட்ட இடங்கள், கல்விக்காக ஏற்படுத்தப்பட்ட இடங்கள், பொது ஜனங்களுக்கு உபயோகப்படும்படியான லைப்ரெரிகள் என்று சொல்லப்படும் வாசகசாலைகள், தர்மவிஷயங்களுக்கு உபயோகப்படும் பொது கட்டிடங்கள், புராதன கட்டிடங்கள், ஆஸ்பத்திரிகள், வைத்தியசாலைகள், லோகல் போர்டு கட்டிடங்கள், விளக்குக்கூண்டுகள், (Light House) ஆகிய இவைகள் வீட்டுவரிக்கு உட்படத்தக்கதல்லவென்று சொல்லப்பட்டுள்ளது அதன் காரணம் என்னவென்றால், பொதுகாரியங்களுக்கு அல்லது தர்மகாரியங்களுக்கு உபயோகப்படும்படியான கட்டிடங்களை வரிக்குட்படுத்தக்கூடாதென்பது. அப்படி அவைகள் வரிக்குட்படும் பக்ஷத்தில் பொது காரியங்கள்சரிவர நடந்தேருவதற்கு ஹானி ஏற்படலாம் என்பது.

தேவாரதனைக்கு என்று தனியாக ஒதுக்கி வைக்கப்படாத் மடங்கள் வரிக்குட்படுவதிலிருந்து நிவர்த்திக்கப்படுவதற்கில்லை. யாதொரு கட்டட மானது தேவாரதனைக்கென்று தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டதென்று ருசு செய்யப்பட்டால்தான் அது வீட்டுவரியிலிருந்து நீக்கப்படவேண்டும். கோவில்கள், மசூதிகள், மாதாக்கோவில்கள், தொழுகையிடங்கள் ஆகிய இக்கட்டிடங்கள் தேவாரதனைக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட கட்டிடங்களென்றுகவனிக்கப்படும். சத்திரங்கள் வாஸ்தவத்தில் பொதுஜனங்களுக்காக உபயோகப் படுத்தப்படவேண்டுமே யொழிய ஒன்று அல்லது பல நபர்களுடைய சொந்த சுவாதீன அனுபவத்திற்காக உபயோகப்படுத்தப்படக் கூடாது. அப்படி உபயோகப்படுத்தப்படும் பக்ஷத்தில் அவை வீட்டுவரிக்கு உட்படத்தக்கதாகும்.

பள்ளிக்கூடங்களுக்கு எவ்விதத்திலும் வீட்டு வரியிடப்படக்கூடாது.

இந்தப்பிரிவின் நிபந்தனைகளுக்கு மீறி யாதொரு வீட்டு வரி யிடப்படும் பக்ஷத்தில் IV-வது ஷெடியூல் 27-வது விதியின் கீழ் அப்பீல் உண்டு.

வீட்டுவரி எப்பொழுது செலுத்தப் படுவது.

100. வீட்டு வரியானது ஒவ்வொரு அரை வருஷமும் விதிக்கப்படவேண்டும்; இன்னும் IV-வது ஷெடியூலில் வேறே விதமாக ஸ்பஷ்டமாக சொல்லப் பட்டிருந்தாலொழிய அந்த அரை வருஷமானது ஆரம்பித்தது முதல் 30-நாட்களுக்குள் வீட்டின் சொந்தக்காரரால் செலுத்தப்பட வேண்டும்.

காலியாயிருக்கும் வீடுகளுக்காக வரி வஜா.

101. யாதொரு வீடானது யாதொரு அரை வருஷத்தில் தொடர்ச்சியாய் 60 - தினங்களுக்காவது அல்லது அதற்கு மேற்பட்டாவது காலியாயிருந்த பக்ஷத்தில், அந்தப்பஞ்சாயத்தின்ப்ரெஸிடெண்ட் அந்த அரை வருஷத்தில் அந்த வீடானது எவ் வளவு தினங்களாக காலியாக இருந்ததோ அதற்கு தக்கபடி அந்த வரி தொகையில் பாதிக்கு மேற்படாமல் ஒரு தொகை வஜா செய்ய வேண்டும்.

(2) 1–வது உபப் பிரிவின் கீழ் வஜா பண்ணும்படி செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் எந்த அரை வருஷத்திற்காக வஜா கேட்கப்படுகிறதோ அந்த அரை வருஷத்திலாவது அதற்கடுத்த அரை வருஷத்திலாவது செய்யப்பட வேண்டுமேயன்றி அதற்கு பிறகு செய்யப்படக் கூடாது.

(3) (a) அப்படிப்பட்ட வஜா செய்யப்படவேண்டுமென்று கேட்கப்படும் யாதொரு விண்ணப்பமும், அந்த வீட்டுக்கு சொந்தக்காரராகிலும் அல்லது அவருடைய ஏஜெண்டாகிலும் அந்த வீடு காலியாயிருக்கிறதென்று முன்னடியாகவே ப்ரெஸிடெண்டுக்கு நோட்டீஸ் கொடுத்தாலொழிய அங்கீகரிக்கப்படக் கூடாது எந்த கால அளவு விஷயமாக வஜா கேட்கப்பட்டிருக்கிறதோ அந்தகால அளவானது அப்படிப்பட்ட நோட்டீஸ் ப்ரெஸிடெண்டினிடம் சேர்ந்த தேதி முதற்கொண்டு தான் கணக்கிடப்படும்.

(b) அப்படி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நோட்டீஸும் எந்த அரை வருஷத்தில் கொடுக்கப்பட்டதோ அவ்வரை வருஷத்துடன்முடிவதாகும். அதற்குப் பிறகு அந்த நோட்டீசுக்கு யாதொரு பிரயோகமும் இருக்கப்படாது.

குறிப்புகள்.

இப்பிரிவானது வீடுகள் காலியாயிருக்கும் காலத்தில் வரி குறைக்கப்படுவதைப்பற்றி கூறுவதாகும். எக்காரணத்தைக்கொண்டும் ஒரு வீட்டுக்கு விதிக்கப்படும் வரியிலிருந்து பாதிக்குமேலாக வரியானது குறைக்கப்படக் கூடாது. ஒரு வீடு காலியாவதின் விஷயமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டாலொழிய அதற்கு விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட வேண்டுமென்று யாதொரு நபரும் கேட்பதற்கில்லை. நோட்டீஸ் கொடுத்தபிறகு எந்த அரை வருஷத்தில் யாதொரு வீடு காலியாகிறதோ அந்த அரைவருஷத்திற்குள்ளா

வது அதற்குப்பிந்தின அறை வருஷத்திலாவது வஜா கேட்கப்பட வேண்டுமேயொழிய அதற்கு பிறகு வஜா கேட்கப்படுவதற்கில்லை.

பொதுவாக, வரி விதிப்பதானது, ஒவ்வொரு வருஷத்தின் அரை வருஷத்தைப்பற்றினதாக யிருப்பதால் ஒரு வீடு சேர்ந்தாப்போல் காலியாயிருக்குமானால் அதைப்பற்றி ஒவ்வொரு அரைவருஷமும் அதன் சொந்தக்காரர் அல்லது அவருடைய ஏஜெண்டு நோட்டீஸ் கொடுக்கவேண்டும். ஒரு வீடு காலியாகும் விஷயமாக கொடுக்கப்படும் ஒரு நோட்டீஸானது ஒரு அரைவருஷத்திற்குதான் செல்லத்தக்கினதாகும். வஜா விஷயமாக கணக்கிடுவதில் ஒரு வீட்டின் காலியைப்பற்றி ஒரு அரைவருஷத்தில் எந்த தினம் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதோ அன்றுமுதல் அவ்வரைவருஷம் முடிகிறவரையிலும் கணக்கிடப்படவேண்டும். உதாரணமாக :—ஒரு வீடானது ஒரு வருஷத்தில் ஜூன் மாதம் முதல் தேதியில் காலியாகுமானால் அப்பொழுதே அதன் சொந்தக்காரர் அதைப்பற்றி நோட்டீஸ் கொடுக்கும்பக்ஷத்தில் அவ்வீட்டுக்கு அந்த அரைவருஷத்திற்காக 10 ரூபாய் வீட்டுவரியாக யிருக்குமானால் அதற்கு பாதி தொகையாகிய 5 ரூபாய் முழுமையும் கழித்துக் கொடுக்கப்படும். ஆனால் அவர் காலியைப்பற்றி ஆகஸ்டுமாதம் முதல் தேதியில் நோட்டீஸ் கொடுக்கும்பக்ஷத்தில் அவருக்கு அன்றைய தேதிமுதல் இரண்டு மாதம் வரையிலும் உள்ள வரித்தொகையானது அதாவது ரூபா 3-5-4 கழித்துக் கொடுக்கப்படும். ஆனால் மொத்தத்தில் சேர்ந்தாப்போல் அறுபது நாட்களுக்குக் குறையாமல் காலியாக இல்லாத வீட்டின் விஷயமாக வரி வஜா செய்வதற்கில்லை.

வீடுகளை பராதீனம் செய்பவரும் செய்து கொள்பவரும் பாரதீன விஷயமாய் நோடீஸ் கொடுக்க வேண்டிய கடமை.

101-A. (1) யாதொரு வீட்டின்பேரில் விதிக்கப்பட்டிருக்கும் வீட்டு வரியை முதன்மையாக செலுத்திக் கடமைப்பட்டிருக்கும் யாதொரு நபருக்கு அவ்வீட்டுக்குள்ள அல்லது அதன்பேரிலுள்ள உரிமையானது பராதீனப்படுத்தப்படும் பக்ஷத்தில், எவருடைய உரிமையானது பராதீனப்படுத்தப்பட்டதோ அவரும், எவருக்கு அவ்வுரிமையானது பராதீனப்படுத்தப்பட்டதோ அவரும், பராதீனப்பத்திரம் எழுதப்பட்ட மூன்று மாதத்திற்குள்ளாவது அல்லது அந்த பத்திரம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருந்தால், அது ரிஜிஸ்தரான மூன்று மாதங்களுக்குள்ளாவது அல்லது யாதொரு பத்திரம் எழுதப்படாவிடில் அப்படி பராதீனம் ஏற்பட்ட மூன்று மாதங்களுக்குள் அப்பராதீன விஷயமாய் பஞ்சாயத்தினுடைய ப்ரெஸிடென்டுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

(2) மேலே சொன்னபடி முதன்மையாக கடமைப்பட்ட யாதொரு நபர் இறந்துவிடும் பக்ஷத்தில், இறந்துபோன நபருடைய உரிமைகள் எவருக்கு வார்சு ஹேர்தாவிலோ அல்லது வேறே விதமாகவோ மாற்றப்படுகிறதோ அந்த நபர் அப்படி மாற்றப்பட்ட விஷயமாக ப்ரெஸிடென்டுக்கு மேற்சொன்ன நபர் இறந்து போகும் காலம் முதல் ஒரு வருஷத்திற்குள் எழுத்து மூலமாக நோட்டீஸ் தெரிவிக்க வேண்டும்.

(3) இந்த பிரிவின்கீழ் கொடுக்கப்படும் நோட்டீஸானது ப்ரெஸிடென்ட் எம்மாதிரி உத்திரவிடுகிறாரோ அம்மாதிரியான நமூனாவில் இருக்க வேண்டும். இன்னும், அப்படி பாதீனம் பெற்றவர் அல்லது உரிமைகளை அடைந்தவர் இவர்களில் சந்தர்ப்பத்திற்கு தகுந்தாப்போல் எவராவது அப்படி உத்திரவிடப்படும் பக்ஷத்தில், ப்ரெஸிடென்டு முன்பாக அந்த பாதீனம் அல்லது உரிமை அடைந்ததற்கு அத்தாக்ஷியாக யாதொரு பத்திரத்தையும் ஆஜர்ப்படுத்தவேண்டும்.

(4) மேலே சொல்லப்பட்ட பிரகாரம், பாதீனம் செய்யும் ஒவ்வொரு நபரும் ப்ரெஸிடெண்டுக்கு அப்படிப்பட்ட நோட்டீஸ் கொடுக்காமல் பாதீனம் செய்யும் பக்ஷத்தில், அப்படிப்பட்ட அஜாக்ரதையினால் அடையப்பெறும் வேறே யாதேனும் கடமைகளுக்கு உட்படுவதோடு, பாதீனப்படுத்தப்பட்ட வீட்டின்பேரில் விதிக்கப்பட்டிருக்கும் வீட்டு வரியை அவர் நோட்டீஸ் கொடுக்கும் வரையிலாவது அல்லது அந்த பாதீனமானது கிராம ரிஜிஸ்டர்களில் பதிவு செய்யப்படும் வரையிலுமாவது செலுத்துவதற்கு கடமைப்பட்டவராக இருந்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இந்தப் பிரிவில் யாதொன்றும் பாதீனம் கொண்டவர் மேலே சொல்லப்பட்ட வரியைச் செலுத்தும் கடமையை எவ்விதத்திலும் பாதிக்காது.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்த சட்டத்தினால் புதியதாக அமைக்கப்பட்டது. இந்தப் பிரிவானது வீடுகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பாதீனம் செய்யப்படுங்காலத்தில் அதைப்பற்றின தகவல்கள் பஞ்சாயத்துக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று கூறுகிறது. அப்படி நோட்டீஸ் கொடுக்கப்படும்வரையிலும் அல்லது வீடுகளைப்பற்றி உரிமைகள் மாறுவதாகயிருந்தால் அவைகளைப் பற்றி நோட்டீஸ் கொடுக்கப்படும் வரையிலும் ஒவ்வொரு வீட்டின் சொந்தக்கார

ரும் பழையபடியே வரி செலுத்துவதற்கு உள்ளாகவேண்டும். வீடுகள் முழுவீடாக இல்லாமல் பாதியாக விற்பனை செய்யப்பட்டாலும் அதைப்பற்றியும் நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும்.

கட்டிடம் கட்டப்படுவதைப் பற்றியும் புதுப்பிக்கப்படுவதைப்பற்றியும் அல்லது இடித்து விடுவதைப் பற்றியும் சொந்தக்காரர் நோட்டீஸ் கொடுக்க வேண்டிய கடமை.

102. (1) (a) ஒரு கிராமத்தில் யாதொரு வீடானது புதியதாக கட்டப்படும் பக்ஷத்தில் அல்லது புதுப்பிக்கப்படும் பக்ஷத்தில், அதன் சொந்தக் காரர் பஞ்சாயத்தினுடைய ப்ரெஸிடெண்டுக்கு அந்த வீடு கட்டி முடிந்த 15-நாட்களுக்குள் ளாவது அல்லது வீட்டில் குடித்தனம் புகுந்த 15-நாட்களுக்குள்ளாவது, எது முன்னுடியாக நடந்தாலுர் அதைப்பற்றி நோட்டீஸ்தெரிவிக்க வேண்டும்.

(b) அப்படிப்பட்ட தேதியானது, ஒரு அரை வருஷத்தில் கடைசி இரண்டு மாதங்களுக்குள் இருக்கும் பக்ஷத்தில் அதன் சொந்தக்காரர் (a) உபவாக்கியத்தின்கீழ் கொடுக்கப்பட வேண்டிய நோட்டீஸுக்கு உட்பட்டு சந்தர்ப்பத்திற்கு தகுந்தாப்போல் அந்த வீட்டின் விஷயமாக அந்த அரை வருஷத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மொத்த வரி அல்லது அதிகரிக்கப்பட்ட வரி இவைகளை கழித்து கொடுக்கப்படுவதற்கு உரிமையுள்ளவராவர்.

(c) அப்படிப்பட்ட தேதியானது ஒரு அரை வருஷத்தில்-முதல் நான்கு மாதங்களுக்குள் இருக்கும் பக்ஷத்தில் அந்த சொந்தக்காரர் (a) - என்னும் உபவாக்கியத்தின்கீழ் கொடுக்கப்பட வேண்டிய நோட்டீஸுக்கு உட்பட்டு சந்தர்ப்பத்திற்கு தகுந்தாப்போல் அந்த வீட்டிற்காக அந்த அரைவருஷத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய வரி அல்லது அதிகரிக்கப்பட்ட வரி இவைகளில் பாதிக்கு அதிகப்படாமல், அப்படிப்பட்ட தேதிக்கு முன்பாக அந்த அரை வருஷத்தில் உள்ள தினங்களுக்கு தகுந்தபடி குறைத்து கொடுக்கப்படுவதற்கு உரிமையுள்ளவராவர்.

(2) (a) ஒரு கிராமத்தில் யாதொரு வீடானது இடித்து விடப்படும் பக்ஷத்தில் அல்லது அழிந்து போகும் பக்ஷத்தில் - அதன் சொந்தக்காரர் அதன் விஷயமாக ப்ரெஸிடென்டுக்கு நோட்டீஸ் கொடுக்கும் வரையிலும் ப்ரெஸிடென்டினுடைய யுக்தானுசாரம் அந்த

வீடானது இடிக்குவிடப்படாமலிருக்கும் பக்ஷத்தில் அல்லது அழிக்கப்படாமலிருக்கும் பக்ஷத்தில் கொடுக்கப்பட வேண்டியிருக்கும் வரியைக் கொடுக்க கடமைப்பட்டவராவர்.

(b) அப்படிப்பட்ட நோட்டீஸானது ஒரு அரைவருஷத்தில், முதல் 2-மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டதானால் - அந்த சொந்தக்காரர் அந்த வீட்டின் விஷயமாக அந்த அரை வருஷத்திற்கு செலுத்தவேண்டிய மொத்த வரியையும் கழித்துக் கொடுக்கப்பட உரிமையுள்ளவராவர்.

(c) அப்படிப்பட்ட நோட்டீஸானது ஒரு அரை வருஷத்தின் கடைசி 4-மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டதானால் அந்த சொந்தக்காரர் சந்தர்ப்பத்திற்கு தகுந்தாப்போல் அந்த வீடு இடிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாக அந்த அரை வருஷத்தில் உள்ள தினங்களுக்கு தகுந்தபடி அந்த அரை வருஷத்திற்குச் செலுத்தவேண்டிய வரியில் பாதிக்கு அதிகப்படாமல் எவ்வளவு கழிக்கப்பட வேண்டுமோ அவ்வளவு வரையிலும் கழித்துக் கொடுக்கப்பட உரிமையுள்ளவராவர்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய லோகல்போர்டு திருத்த சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்டது. இப்பிரிவானது ஒரு கிராமத்தில் ஒரு வீடு கட்டப்பட்ட பிறகு பூர்த்தியாவதைப்பற்றியும், வீடுகள் தானமாக பிரித்துக் கட்டப்பட்டபிறகு அவை பூர்த்தியாயினதென்றுசொல்வதைப்பற்றியும்; அவைகளின் விஷயமாக வரி வஜா செய்யப்படுவதைப்பற்றியும் கூறுகிறது.

ஒரு வீடு கட்டி பூர்த்தியானபிறகு அல்லது புதுப்பிக்கப்பட்டபிறகு உடனே 15 நாளுக்குள் அல்லது கட்டி முடிவதற்கு முன்னமே வாசம் செய்வதற்காக உபயோகப்படுத்தப்பட்டாலும் அதுமுதற்கொண்டு 15-நாட்களுக்குள், அதைப்பற்றி வீட்டின் சொந்தக்காரர் பஞ்சாயத்தினுடைய ப்ரெஸிடெண்டுக்கு கட்டாயமாக தெரிவிக்கவேண்டும். அப்படி தெரிவிக்காவிட்டால், அவருக்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

ஒரு அரைவருஷத்திற்குள் கடைசி இரண்டு மாதங்களுக்குள் ஒருதினத்தில் வீடுகட்டி முடிந்திருக்குமானால் அல்லது புதுப்பிக்கப்பட்டிருக்குமானால், அந்த அரைவருஷத்திற்கு அந்த வீட்டிற்காக புதியதாக யாதொரு வரி கிடையாது. ஏற்கெனவே எதாவது வரி விதிக்கப்பட்டிருந்தால் அந்த வரிதான் அவ்வரைவருஷத்திற்கு விதிக்கப்படவேண்டும்.

அந்த தேதியானது ஒரு அரைவருஷத்தில் முதல் நான்கு மாதங்களுக்குள்ளிருக்குமானால் அந்த நான்கு மாதங்களில் எந்த தேதியில் வீடுகட்டி முடிந்ததோ அல்லது புதுப்பிக்கப்பட்டு முடிந்ததோ அதுமுதல் அதற்கு முந்தி அவ்வரைவருஷத்தில் உள்ள நாட்களுக்குள்ள வரி கழிக்கப்பட வேண்டும். ஆனால் எக்காரணத்தைக்கொண்டும் அவ்வீட்டு வரியில் பாதிக்கு மேலாக வஜா செய்யப்படுவதற்கில்லை.

இப்பிரிவின் இரண்டாவது உபப்பிரிவில், வீடுகள் இடிக்கப்படும் சந்தர்ப்பங்களிலும் அகல்மாத்தாக அழிந்துபோகும் சந்தர்ப்பங்களிலும் அவைகளுக்குறித்த வரி எம்மாதிரி வசூலிக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு அரைவருஷத்திற்குள் முதல் இரண்டு மாதங்களுக்குள் அதைப்பற்றி அதன் சொந்தக்காரர் ப்ரெஸிடென்டுக்கு தெரிவிக்கும்பக்ஷத்தில் அவ்வரை வருஷத்திற்குள்ள வரியானது வஜா செய்யப்படும். அதைப்பற்றின நோட்டீலானது அவ்வரைவருஷத்தில் கடைசி நான்கு மாதங்களுக்குள் என்றைய தினம் கொடுக்கப்பட்டதோ அன்று முதல் வஜா செய்யப்படும் வரியானது கணக்கிடப்படும்.

அரைவருஷமென்பது ஒரு இங்கிலீஷ் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதி முதற்கொண்டு செப்டம்பர் மாதம் முடிவு வரையிலுமுள்ள மாதங்கள் அல்லது அக்டோபர் மாதம் முதல்தேதி முதற்கொண்டு மார்ச்சு மாதம் கடைசிவரையிலுமுள்ள மாதங்களாகும். சென்னை லோகல் போர்டுகளின் சட்டத்தின் 3 (24) பிரிவின்பிரகாரம் ஏப்ரல்மாதம் முதல்தேதிமுதல் மார்ச்சு மாதம் 31-ந் தேதி வரையிலுமுள்ள கால அளவானது ஒரு வருஷமாக கருதப்படும் என்று உள்ளது.

ஒரு அரைவருஷத்தின் நடுவில்சேர்க்கப்பட்ட அல்லது விலக்கப்பட்ட விஸ்தீரணங்களில் வரி கழித்துக் கொடுப்பது.

102-A. (1) யாதொரு விஸ்தீரணமானது ஒரு கிராமத்தில் சேர்க்கப்படும் பக்ஷத்தில், அந்த விஸ்தீரணத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரரும்—

(a) அப்படிச் சேர்க்கப்பட்ட தேதியானது - ஒரு அரைவருஷத்தின் கடைசி இரண்டு மாதங்களுக்குள் இருக்கும் பக்ஷத்தில் அந்த வீட்டிற்காக அந்த அரை வருஷத்திற்கு யாதொரு வீட்டு வரி செலுத்த கடமைப்பட்டவராக மாட்டார்; மேலும்,

(b) அப்படிப்பட்ட தேதியானது - ஒரு அரை வருஷத்தின் முதல் நான்கு மாதங்களுக்குள் இருக்கும் பக்ஷத்தில், அவ்வரை வருஷத்திற்கு செலுத்தவேண்டிய வீட்டு வரியில் பாதிக்கு அதிகப்படா

மல் அந்த தேதிக்கு முன்னுடியாக அவ்வரை வருஷத்தில் எவ்வளவு நாட்களில் உள்ளனவோ அதற்குத் தகுந்தாப்போல் வரியைக் குறைத்துச் செலுத்துவதற்கு உரிமையுள்ளவராவர்.

(2) யாதொரு விஸ்தீரணமானது-ஒரு கிராமத்திலிருந்து விலக்கப்படும் பக்ஷத்தில், அந்த விஸ்தீரணத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரரும்—

(a) அப்படி விலக்கப்பட்ட தேதியானது - ஒரு அரை வருஷத்தின் முதலிரண்டு மாதங்களுக்குள் இருக்குமாகில் அந்த அரை வருஷத்திற்காக கொடுக்கவேண்டிய மொத்த வீட்டு வரியையும் கழித்துக் கொடுக்கப்பட உரிமையுள்ளவராவர்; இன்னும்,

(b) அப்படிப்பட்ட தேதியானது - ஒரு அரை வருஷத்தின் கடைசி நான்கு மாதங்களுக்குள் இருக்கும் பக்ஷத்தில் அந்த அரை வருஷத்திற்கு செலுத்தவேண்டிய வீட்டு வரிக்கு பாதிக்கு அதிகப் படாமல் அப்படிப்பட்ட தேதிக்கு முன்னுடியாக அந்த அரைவருஷத்தில் எத்தனை தினங்கள் உள்ளனவோ அவைகளுக்குத் தகுந்தாப் போல் அவ்வரியில் கழித்துக் கொடுப்பதற்கு உரிமையுள்ளவராவர்.

(3) (2)-வது உப பிரிவின்கீழ் கழித்துக் கொடுக்கப்படும் யாதொரு தொகையும், அந்த வீடானது எந்த விஸ்தீரணத்தில் அமைக்கப்பட்டுள்ளதோ அந்த விஸ்தீரணமானது விலக்கப்பட்ட தேதி முதல் மூன்று மாதங்களுக்குள்ளாக ப்ரெஸிடென்டுக்கு அந்த தொகை கழித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று மனு செய்யப்பட்டாலொழிய கழித்துக் கொடுக்கப்படக் கூடாது.

குறிப்புகள்.

இந்த பிரிவானது புதியதாக 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் அமைக்கப்பட்டது. இனி அநேக பஞ்சாயத்துகள் புதியதாக அமைக்கப்படப்போவதால், அவைகளிலிருந்து சில விஸ்தீரணங்கள் நீக்கப்படவும் சில சேர்க்கப்படவும் அவசியம் ஏற்படலாம் அத்தகைய சந்தர்ப்பங்களில், எத்தேதிக்குள் வரியிடப்படுவதிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் எவை வரிக்குள்ளாக வேண்டுமென்றும் இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. 102-வது பிரிவில் உள்ள நடவடிக்கைமுறையே சற்றேறக்குறைய இப்பிரிவின்கீழ் நடக்கும் நடவடிக்கைகளில் அனுசரிக்கப்படவேண்டும். ஆனால் யாதொரு வீடானது ஒரு பஞ்சாயத்தின் விஸ்தீரணத்திலிருந்து நீக்கப்படும் காலம் முதல் மூன்று மாதங்களுக்குள் மனு செய்யவேண்டும்.

103. பஞ்சாயத்தானது கிராமத்திலிருக்கிற யாதொரு வீட்டின் சொந்தக்காரரை வறுமை காரணமாக வரி முழுவதையுமாகிலும், அதில் யாதொரு பாகத்தையாகிலும் செலுத்துவதினின்றும் நிவாரணஞ் செய்யலாம். அந்தப் பிரகாரமே டிஸ்டிரிக்ட் போர்டு ஏதாவதொரு வகுப்பைச் சேர்ந்த வீடுகளின் சொந்தக்காரர் களையும் நிவாரணஞ் செய்யலாம்.

வறுமை காரணமாக வரி நிவாரணம்.

சுங்கம்.

104. (1) யாதொரு பொதுவான பாட்டை மார்க்கமாய்ச் செல்லுகிற சவாரிவண்டிகளுக்கும், பார வண்டிகளுக்கும் பல்லக்குகளுக்கும், ஜெந்துக்களுக்கும், அல்லது பிரதேச கவர்ன்மென்டார் உத்தரவைப் பெற்று, யாதொரு வாராவதி கட்டப்படுவதற்கும் பரிபாலிக்கப்படுவதற்கும் சம்பந்தமாய் இன்னின்னதென்று எழுதி வைக்கப்படும் காரணங்களினாலும், அந்த வாராவதியின்மேல் கால் நடையாய்ப் போகும் பிராணிகளுக்கும் சுங்கம் விதிக்கப்படுமென்று டிஸ்டிரிக்ட் போர்டு ஒரு தீர்மானத்தின் மூலமாக தீர்மானிக்கும்பக்ஷத்தில், 4-வது ஷெட்யூலின்படி டிஸ்டிரிக்ட் போர்டாரால் நிஷ்கரிஷை செய்யப்பட்டும் 77-வது பிரிவு (1)-வது உபப் பிரிவு (a) உப வாக்கியத்தின் கீழ் பிரசுரப்படுத்தப்படும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டும் இருக்கிற விதங்களின்படி அந்த சுங்கம் விதித்து வாங்கப்படும்.

சுங்கம் விதிப்பது.

(2) டிஸ்டிரிக்ட்டுக்குள் பொதுவாய் எல்லா ஸ்தலங்களிலாவது (toll stations) பற்றியுமாவது பிரத்தியேகமாய் குறித்த யாதொரு சுங்க ஸ்தலத்தைப்பற்றியாவது, செலுத்தும்படியான அப்படிப்பட்ட எல்லா சுங்கங்களுக்கும் பதிலாய், வருஷத்துக்கு ஒரு தரம் இவ்வளவு தொகை செலுத்தவேண்டியதென்று இதற்கென்று டிஸ்டிரிக்ட் போர்டாரால் ஏற்படுத்தப்பட்ட ரெகுலேஷன்களின் பிரகாரம் யாதொரு நபரிடத்தில் அந்த போர்டின் ப்ரெஸிடென்ட் ராஜி ஏற்பாடு செய்துக்கொண்டு, சந்தர்ப்பத்திற்குத்தகுந்தாப்போல் அவருடைய சவாரி வண்டிகளுக்காகவும், பார வண்டிகளுக்காகவும், பல்லக்குகளுக்காகவும் ஜந்துக்களுக்காகவும், அல்லது அவைகளுக்காகவும், ஸீசென்ஸுகள் கொடுக்கலாம்.

(3) (a) லோகல் போர்டுகளுக்குச் சொந்தமானவைகளும்,

(b) உத்தியோக கோலமான யூனிபாரம் என்னும் உடை தரித்துக்கொண்டிருக்கும் போலீஸ் ஆபீஸர்களையாவது, அலுவலின்மேல் போகும் லோகல் போர்டு உத்தியோகஸ்தர்களையாவது, அந்த ஆபீஸர்கள் அல்லது உத்தியோகஸ்தர்களுடைய காவலிலிருக்கும் சுபர்களையாவது, சொத்தையாவது எற்றிக்கொண்டு போகின்றவைகளும்,

(c) எவ்வளவு காலத்திற்கு 2-வது உபப் பிரிவின் கீழ் லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவ்வளவு காலத்துக்கு அந்த லைஸென்ஸைப் பெற்றிருப்பவர்களுக்,

(d) 1901-ம் வருஷத்திய இந்து தேசத்து சுங்க (இராணுவ) ஆக்டிலாவது அதன்படியாவது நிவாரணை செய்யப்பட்டவைகளும்,

(e) கவர்ன்மெண்டைச் சேர்ந்த எவையேனும் இராணுவ சாமான்களைக் கொண்டுபோகிறவைகளும்,

(f) இந்தியா ஆக்ஸிலியரி போர்ஸ் என்னும் ராணுவத்தின் அல்லது இந்தியன் டெரிடோரியல் போர்ஸ் என்னும் ராணுவத்தின் யாதொரு அங்கத்தினரை தன் உத்தியோக அலுவல் விஷயமாக உத்தியோக உடுப்புடன் இருக்கும்போதாவது அல்லது தன் உத்தியோக அலுவலிருந்து வரும்போதாவது அல்லது உத்தியோக அலுவலுக்குப் போகும்போதாவது கொண்டு போகிறவைகளுமான,

சவாரி வண்டிகள், பார வண்டிகள், பல்லக்குகள் அல்லது ஜந்துக்கள், போவதற்குச் சுங்கம் வசூல் செய்யக்கூடாது.

மேலும், உத்தியோக கோலமான யூனிபாரம் என்னும் உடை தரித்துக்கொண்டிருக்கும் போலீஸ் ஆபீஸர்களாவது அலுவலின்மேல் போகும் லோகல் போர்டு உத்தியோகஸ்தர்களாவது அல்லது ஊழியர்களாவது அல்லது இந்தியா ஆக்ஸிலியரி போர்ஸ் என்னும் ராணுவத்தின் யாதொரு அங்கத்தினர்களானது தன் உத்தியோக அலுவல் விஷயமாக உத்தியோக உடுப்புடன் இருக்கும் போதாவது, அல்லது உத்தியோக அலுவலுக்குப் போகும்போதாவது, வாராவதிகளின்மேல் கால் நடையாய்ப் பிரயாணஞ் செய்தால் அவர்கள் அந்தப்படி போகிறதற்குச் சுங்கம் வசூல் செய்யக்கூடாது.

(4) யாதொரு சுங்கஸ்தலத்திலாவது சவாரி வண்டிகளுக்காக அல்லது பார வண்டிகளுக்காக அல்லது பல்லக்குகளுக்காக அல்லது ஜந்துகளுக்காக அல்லது கால் நடையாய்ப் போகும் ஜந்துக்களுக்காகச் சுங்கஞ் செலுத்தினால், அந்த சவாரி வண்டிகளுக்காக அல்லது பார வண்டிகளுக்காக அல்லது பல்லக்குகளுக்காக அல்லது ஜந்துக்களுக்காக அல்லது பிராணிகளுக்காக குறிக்கப்பட்ட இதரமான யாதொரு சுங்கஸ்தலத்தில் சுங்கம் செலுத்த வேண்டியதில்லையென்று டிஸ்டிரிக்ட் போர்டார் நிர்ணயிக்கலாம்.

சுங்கம் வசூல் செய்யப்படத்தக்க இடங்களைப் பிரகித்தம்பண்ணுவது

105. டிஸ்டிரிக்ட் போர்டார்-யாதொரு பொதுவான பாட்டையில் இன்ன இடங்களிலே அப்படிப்பட்ட சுங்கம் வாங்கப்படுமென்று விளம்பர மூலமாய் நிர்ணயிக்க வேண்டும்; மேலும் அப்படி நிர்ணயஞ் செய்ததை அப்பிரகாரமே அவர்கள் ரத்து பண்ணலாம் அல்லது மாற்றலாம்.

சுங்க ஸ்தலங்கள் கட்டுவது.

106. (1) டிஸ்டிரிக்ட் போர்டார் - மேற்சொல்லிய இடங்களிலே சுங்கஸ்தலங்களையும் கட்ட வேண்டும்; வேண்டுமானால் சுங்க நிராகரிகளையும் கட்டலாம். மேலும், அவர்கள்-சுங்கம் வசூல் செய்வதைத் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறவர்களுடைய விசாரணையில் ப்ரெஸிடெண்டு விடவேண்டுமென்றாவது, அவர் அதைக் குத்தகைக்கு விடவேண்டுமென்றாவது தீர்மானிக்கலாம்; அன்றியும், சுங்கம் வசூல் செய்கிறவர்கள் நடந்துகொள்ள வேண்டியதைக் குறித்து ரெகுலேஷன்களைச் செய்யலாம்.

ஆனால், லோகல் கவர்ன்மெண்டானது பொதுவாகவாவது அல்லது ஒரு குறித்த சந்தர்ப்பத்திலாவது, எத்தனை சுங்கஸ்தலங்கள் இருக்கவேண்டுமென்பதைப் பற்றியும், அவைகளின் அமைப்பு, ஸ்தானத்தைப் பற்றியும் அடுத்தடுத்துள்ள பிரதேச அதிகாரிகளின் விஷயத்தில் அவ்வதிகாரிகளில் எவர் குறிப்பிட்ட சுங்கஸ்தலங்களை ஒப்புவித்துக்கொண்டு பார்த்துவர வேணுமென்பதைப்பற்றியும், அப்படிப்பட்ட பிரதேச அதிகாரி தம்முடைய ஆதீனத்திலுள்ள சுங்கஸ்தலம் அல்லது ஸ்தலங்களிலிருந்து வசூலிக்கும் வரும்படியில், எவ்வளவு - மற்றொரு அடுத்த பிரதேச அதிகாரிக்கு கொடுக்கவேணுமென்பதைப் பற்றியும் தங்களுக்குத் தோன்றும் யுக்தப்படி ஒழுங்குபடுத்துவதற்குத் தகுந்த உத்தரவுகளைச் செய்யலாம்.

ஆனால், இன்னும், 1930-ம் வருத்திய சென்னை லோகல் போர்டு திருத்தச் சட்டமானது அமுலுக்கு வந்த பிறகு யாதொரு டிஸ்டிரிக்ட்டு போர்டினுல் லோகல் கவர்ன்மென்டினுடைய முன் உத்தரவு (சாங்கிஷன்) இல்லாமல் அதே டிஸ்டிரிக்ட்டிலாவது அல்லது அந்த டிஸ்டிரிக்ட்டுக்கு வெளியிலாவது உள்ள யாதொரு சுங்கஸ்தலத்திற்கு-இருபது மையில்களுக்குள் யாதொரு புதிய சுங்கஸ்தலமானது ஏற்படுத்தப்படக்கூடாது.

(2) வாங்கும்படி உத்தரவு செய்யப்பட்ட சுங்கங்களுக்கு இங்கிலீஷினும், அந்த டிஸ்ட்ரிக்டில் வழங்கும் சுதேச பாஷையினும்-சொற்களாலும் இலக்கங்களாலும் நன்றாகத் தெரியும்படி கையெழுத்தினுலாவது, வர்ணத்தினுலாவது ஒரு ஜாபிதா எழுதி அதை ஒவ்வொரு சுங்கஸ்தலத்தில் கட்டவேண்டும்; யாதொரு சுங்கஸ்தலத்தில் அப்படிப்பட்ட ஜாபிதா கட்டப்படாதிருந்தால், அந்தக் காலத்தில் அவ்விடத்திலே சுங்கம் வாங்கலாகாது.

107. (1) ஒருநாள் சூரியோதயமுதல் மறுநாள் சூரியோதயம் வரையில் எண்ணப்பட்ட இருபத்திநான்கு மணி நேரமாகிய யாதொரு கால அளவில் யாதொரு சவாரி வண்டி - பார வண்டி - பல்லக்கு-ஜந்து அல்லது கால் நடையாய்ப் போகும் பிரயாணிக்காக யாதொரு சுங்க ஸ்தலத்தில் ஒரு தடவைக்கு அதிகமாக சுங்கம் செலுத்தும்படி கேட்கக்கூடாது.

ஒருதரம் சுங்கம் செலுத்தினுல் சுங்கவாயில் வழியாகப் போகவர ஒருநாளுக்கு உதவுமென்பதும், சுங்கம் செலுத்தாத விஷயத்தில் நடவடிக்கை முறையும்.

(2) யாதொரு சுங்கம் செலுத்தப்பட்டால், அது யாருக்குச் செலுத்தப்படுகிறதோ அந்த நபர்-டிஸ்டிரிக்ட் போர்டார் காட்டப்படக் கூடிய ரசீது பிரகாரம் ரசீது கொடுக்க வேண்டும்.

(3) கேட்டவுடனே அப்படிப்பட்ட யாதொரு சுங்கம் செலுத்தப்படாவிட்டால், சுங்கம் வாங்க கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற நபர்-எதற்காக அந்த சுங்கம் வாங்க வேண்டியதோ அந்த சவாரி வண்டி - பார வண்டி - பல்லக்கு அல்லது ஜந்துவையாவது, அதன்மேலிருக்கிற சுமையில் எவ்வளவையாவது கைப்பற்றி அதைக் கும் வசத்தில் மறியல் செய்து வைத்துக்கொள்ளலாம்; அல்லது கால்

கடையாய்ப் போகும் பிரயாணியின் ஷேஷயத்தில் அவரைப் போக வொட்டாமல் தடுக்கலாம்.

(4) யாதொரு சுங்கமானது அப்படி கைப்பற்றி மறியல் செய்வதனால் நேரிடும் செலவுடன்கூட பன்னிரண்டு மணிநேரம் வரையில் செலுத்தப்படாதிருந்தால், மேற்சொல்லியபடி கிராமமாய் அதிகாரங்கொடுக்கப்பெற்ற நபர் - ஜப்தி செய்யப்பட்ட சொத்தை குத்தகைக் தொகை சம்பந்தமாகவும், தீர்வை சம்மந்தமாகவும் நடத்தப்படும் ஏல விற்பனைகளைக் குறித்த 1839-ம் வருஷத்திய சென்னைப் பட்டணத்து ஆக்டின்படி விற்க அதிகாரமுடையவராய், அதி சமீபத்திலுள்ள ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடத்திற்கு மேற்சொல்லிய விதமாய்க் கைப்பற்றப்பட்ட சவாரிவண்டி - பாவண்டி அல்லது வேறே சொத்தை உடனே அனுப்பவேண்டும்.

(5) ஆதிவாரம் தவிர நோடீசைச் சேர்ப்பித்த தேதியினிருந்தாவது நோட்டீஸைப் பிறசுரித்த பிரகாவது இரண்டு நாள் கழிந்த பின்பு நோட்டீஸில் கண்டிருக்கிற இன்ன இடத்திலே தாம் அந்தப் பொருளை ஏலத்தில் விற்று விடுவதாக அந்த உத்தியோகஸ்தர் கைப்பற்றப்பட்ட சொத்தின் சொந்தக்காரருக்காவது, அந்த சொந்தக்காரர் தெரியாவிட்டாலும் சமீபத்தில் குடியிராவிட்டாலும் அந்தசொத்து கைப்பற்றப்பட்டபோது யார் வசத்திலிருந்ததோ அந்த நபருக்காவது, உடனே நோட்டீஸ் கொடுக்க வேண்டும்; அந்த நபர் அகப்படாவிட்டால் கண்டோரா மூலமாய் விளம்பரம் பண்ணவேண்டும்.

(6) ஏலவிற்பனைக்கு முன்னே எப்போதாகிலும், யாருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபராவது கைப்பற்றப்பட்ட சொத்தின் சொந்தக்காரராவது சுங்கத்தின் பொருட்டுப், சேரவேண்டிய தொகையை மேற்சொல்லிய உத்தியோகஸ்தரிடத்தில் செலுத்துவதாகக் காட்டினால், கைப்பற்றப்பட்ட சொத்தை உடனே விடுதலை செய்யவேண்டும்.

(7) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தரிடத்தில் பணம் செலுத்துவதாகக் காட்டாவிட்டால், அவர் - ஷெ சொத்தையாவது அதில் போதுமான பாகத்தையாவது ஏலத்தில் விற்று - விற்று வந்த பணத்தை, சுங்கத்தக்காக பாக்கியாயிருக்கிற தொகையையும் கைப்பற்றி மறியல்செய்து வைப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் பிடித்த

செலவுகளையும் செலுத்துவதற்காக உபயோகித்துக்கொண்டு, மேலே சொல்லியபடி விற்பனை செய்து அதிலிருந்து கிடைத்த தொகையை உபயோகித்துக்கொண்ட பிறகு மிகுதியாயிருக்கக் கூடிய யாதொரு சொத்தையாகிலும் - தொகையாகிலும் கைப்பற்றப்பட்ட பொழுது சொத்து யார்வசத்திலிருந்ததோ அந்த நபருக்குத் திரும்பிக் கொடுத்து விடவேண்டும்.

சுங்கம் வசூல்செய்கிறவர்களுக்குப் போலீசார் உதவி செய்வது.

108. இந்த ஆக்டின்படி நியமிக்கப்பட்ட சுங்க வசூல்காரர்கள் சட்டப்படி தங்களுக்குள்ள அதிகாரத்தைச்செலுத்துகையில் யார் எதிர்த்தாலும், வேண்டியபோது போலீஸ் உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் சுங்கவசூல்காரர்களுக்கு உதவி செய்ய வேண்டும்; அந்தக் காரியத்திற்காக அவர்கள் தங்களுடைய சாதாரணமாக போலீஸ் அலுவல்களை நடத்துகையில் செலுத்துகிற அதிகாரத்தைச் செலுத்தவேண்டும்.

சுங்கம் செலுத்தாமல தப்புவதும், அதை செலுத்த மறுப்பதும்

109. (1) யாதொரு சுங்கம் கொடுப்பதிலிருந்து தப்பவேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு வண்டி-பாரவண்டி - பல்லக்கு அல்லது ஜந்துவை—

(a) ஒரு சுங்கஸ்தலத்தை வேகமாக அல்லது திருட்டுத்தனமாக தாண்டிபோகும்படிக்காவது;

(b) ஒரு சுங்கஸ்தலத்தை பார்த்துக் கொண்டிருப்பவரால் நிற்கும்படி கேட்கப்பட்டால் நிற்காமல் அந்த ஸ்தலத்தை தாண்டிக் கொண்டு போகவாவது; அல்லது,

(c) ஒரு சுங்கஸ்தலம் வைக்கப்பட்டிருக்கிற ஒரு ரோட்டு (அல்லது ரஸ்தாவை) விட்டுவிட்டு அந்த ஸ்தலத்திற்கு கால் மைலுக்குள்ளாக உள்ள யாதொரு நிலத்தின் பேரில் அந்த நிலமானது ஒரு பொது ரஸ்தாவாகவாவது அல்லது அப்படிப்பட்ட நபருக்குச்சொந்தமான அல்லது குடியிருப்பு பாத்தியதையுள்ள நிலமாகவாவது இல்லாதிருக்கையில் அதை தாண்டிக்கொண்டு போகவாவது செய்யக் கூடாது.

(2) யாதொரு நபரும், கேட்கப்பட்டபோது, அவரிட மிருந்து, சட்டப்பிரகாரம் கேட்கப்படக்கூடிய யாதொரு சுங்கத்தை கொடுக்க மறுக்கவாவது, அல்லது 107-வது பிரிவின்கீழ் பறிக்கப்பட்டு நிறுத்தப்படக்கூடிய யாதொரு சொத்தை, அப்படி பறிக்கும் போதா வது நிறுத்திக் கொள்ளும்போதாவது அப்படி செய்வதை எதிர்க்க வாவது அல்லது அப்படி செய்யவொட்டாமல் இருக்கும்படி மறுக்க வாவது கூடாது.

குறிப்புகள்.

104-வது பிரிவு முதல் 109-வது வரையிலுமுள்ள பிரிவுகளில் சுங்க வரிகளை (Toll gates) (டோல்கேட்டு வரிகளைப்பற்றி சொல்லப்பட்டுள் ளது. 1931-ம் வருஷத்தில் டோல் கேட்டுகளை அடியோடு எடுத்துவிட்டு அவைகளால் வரும் வருமானத்திற்குப் பதிலாக மோட்டார் வண்டிகளின் மீது ஒரு வரியிடப்பட வேண்டுமென்று சென்னை சட்ட நிருபண சபை யில் 4—3—31-ல் ஒரு சட்டம் நிறைவேறியது. அந்த சட்டத்தின்படி மோட்டார் வண்டிகளின்மீது ஒவ்வொரு அரை வருஷத்திற்கும் வரியி டப்படவேண்டும் அச்சட்டத்தினால் 104-முதல் 109-வரையிலுமுள்ள பிரிவுகள் எடுபட்டுபோயின. மோட்டார் வண்டிகளின்மீது விதிக்கப்படும். வரியைப் பற்றி இப்புஸ்தகத்தின் கடைசியில் மோட்டார் வெஹிகில்ஸ்டாக் ஸேஷன் ஆக்ட் என்னும் சட்டத்தைப் பார்க்க.

யாத்திரைக்காரர்க ளுக்கு வரிவிதிப்பது.

110. (1) யாதொரு பிரதேச விஸ்தீரணமானது யாத்தி ரைக்காரர்களால் நடமாடப்பட்டிருந்து அப்படி யாத்திரை செய்வதற்குரிய சந்தர்ப்பங்கள் பல வருஷங்களுக்கு ஒருகரமாவது அல்லது ஒரு வருஷத்தில் ஒரே ஒருகரம் அல்லது இரண்டு தரம் மாத்திரம் நேரிடும் பக்ஷத்தில், அந்த விஸ்தீரணத்திலிருந்தாவது, அல்லது அதன் அரு காமையிலுள்ள இடங்களிலிருந்தாவது ரயில் மார்க்கமாகப் போகும் நபர்களுக்கு அப்படிப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் ஒரு குறித்த கால அளவு வரையிலும் மாத்திரம் ஒரு வரியிடப்பட வேண் டும். யாத்திரை செய்யப்படுவதற்குள்ள சந்தர்ப்பங்கள் இன்னும் அடிக்கடி நேருவதாக இருக்கும் பக்ஷத்திலாவது அல்லது ஒரு யாத் திரை ஸ்தலமானது இடைவிடாமல் ஜனங்களால் நடமாடப்படும்படி யாக இருக்கும் பக்ஷத்திலாவது அந்த வரியானது ஒரு வருஷம் முழு வதிலும் விதிக்கப்படலாம்.

(2) ஒரு வரியானது எந்த சந்தர்ப்பத்தில் விதிக்கப்பட வேண்டுமென்பதும், எந்த கால அளவு வரையிலும் விதிக்கப்பட வேண்டுமென்பதும், டிஸ்டிரிக்ட் போர்டால் ரயில்வே நிர்வாகங்களுடன் ஆலோசனை செய்யப்பட்டும், லோகல் கவர்ன்மென்டினுடைய முன் சம்மதத்தைக் கொண்டும் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(3) அந்த டிஸ்டிரிக்ட் போர்டானது இந்த வரி விதிக்கப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானத்தின் மூலமாக நிச்சயிக்கும் பக்ஷத்தில், அப்படிப்பட்ட வரியானது அப்படிப்பட்ட தீர்மானத்தைக்கொண்டு 77-வது பிரிவின் (1)-உபப் பிரிவின் (b)-உபவாக்கியத்தின் கீழ் பிரசுரம் செய்யப்படும் அறிக்கையில் கண்ட தேதி முதற் கொண்டும் அவ்வறிக்கையில் குறிக்கப்பட்ட கால அளவுவரையிலும், அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கும் பிரதேச விஸ்தீரணத்திற்குள் உள்ள ரயில்வே ஸ்டேஷன்களில் எந்த ஸ்டேஷனிலிருந்தாவது அந்த ஸ்டேஷனிலிருந்து ஒரு குறிக்கப்பட்ட தூரத்துக்கப்பால் வேறே யாதொரு ரயில்வே ஸ்டேஷனுக்கு ரயில் மார்க்கமாக பிரயாணம் செய்யும் எல்லா பிரயாணிகளுடைய டிக்கட்டுகளின் பேரில் ஒரு மேல் கட்டணமாக விதிக்கப்பட வேண்டும்.

(4) ஒவ்வொரு வகுப்பு டிக்கட்டுகளின் பேரிலும் விதிக்கப்பட வேண்டிய வரியின் விகிதமானது டிஸ்டிரிக்ட் போர்டால் நிச்சயிக்கப்பட வேண்டும். ஆனால், அடியில் அட்டவணையிலுள்ள விகிதங்களுக்கு அதிகப்படக் கூடாது :—

	வரி					
	சில அளவுள்ள காலங்களுக்கு.			வருஷம் முழுவதிலும்.		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
முதல் வகுப்பு டிக்கட்டுகளுக்கு	0	8	0	0	4	0
இரண்டாவது வகுப்பு டிக்கட்டுகளுக்கு	0	4	0	0	2	0
இண்டர்மீடியேட் வகுப்புடிக்கட்டுகளுக்கு	0	3	0	0	1	6
மூன்றாவது வகுப்பு டிக்கட்டுகளுக்கு	0	2	0	0	1	0

ஆனால், சீஸன் டிக்கட்டுகளுக்கு விதிக்கப்படக் கூடிய ரேட்டுகள் ஏதாவது இருக்கும்பக்ஷத்தில் அவை சம்பந்தப்பட்ட ரயில்வே நிர்வாகங்களுடன் ஆலோசிக்கப்பட்டு டிஸ்டிரிக்ட்டு போர்டால்

நிச்சயிக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு மாத கால அளவிற்காவது அல்லது அதற்கு குறைந்த கால அளவிற்காவது மேலே அட்டவணையில் 2-வது கலத்தில் கண்ட ரேட்டுகளுக்கு 6-தடவைகளுக்கு அதிகப்படக் கூடாது.

(5) லோகல் கவர்ன்மெண்டு, இந்த சட்டத்திற்கு விரோதமாக இல்லாமல்—

(i) இந்த வரியை வசூல் செய்வதற்கும்,

(ii) அதை சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்கு செலுத்துவதற்கும்,

(iii) ரயில்வே நிர்வாகங்களால் இந்த வரியை வசூலிப்பதில் அடைந்த செலவுகளை சுழித்துக் கொடுப்பதற்கும்,

(iv) (a) லோகல் போர்டுகளுக்குள்ளும், லோகல் போர்டுகளுக்கும் இதர பிரதேச அதிகாரிகளுக்குள்ளும்,

(b) இந்தியா கவர்ன்மெண்டினுடைய முன் உத்தரவைக் கொண்டு லோகல் போர்டுகளுக்கும், ரயில்வே நிர்வாகங்களுக்கும் இந்த வரியை விதிப்பதின் விஷயமாகவும், வசூலிப்பதின் விஷயமாகவும். பங்கிடுவதின் விஷயமாகவும்,

நேரும் தகராறுகளை தீர்மானிப்பதற்கும் இவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும்,

விதிகளை செய்யலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய லோகல்போர்டு திருத்த சட்டத்தினால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. 76-வது பிரிவில் யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரியானது இன்னவிதமாக செலவழிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இப்பிரிவில் எந்தெந்த இடங்களில் என்ன விதப்பிரகாரம் யாத்திரைக்காரர்களுக்கு வரி விதிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ரயில் மூலமாக பிரயாணம் செய்யும் நபர்களுக்குத் தவிர மற்ற பிரயாணிகளுக்கு யாத்திரைவரி இடையாது. யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரியானது ரயில்வே டிக்கட்டுகளுடன் வசூலிக்கப்பட்டு எந்த லோகல்போர்டின் சார்பாக அவ்வரி வசூலிக்கப்படுகிறதோ அந்த லோகல்போர்டுக்குச் சேர்ப்பிக்கப்படும்.

வரிகளை அல்லது சுங்கங்களை கொடுப்பதிலிருந்து நிவாரணை செய்வதும் விட்டுவிடுவதும்.

வரிகள் அல்லது சுங்கங்கள் செலுத்துவதனின்றும் நிவாரணை செய்ய அதிகாரம்.

111. 103-வது பிரிவிற் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, டிஸ்டிரிக்ட்டு போர்டார்-யாதொரு வரி அல்லது சுங்கம் செலுத்துவதனின்றும் யாதொரு நபரை அல்லது யாதொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களை, முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது நிவாரணை செய்யலாம். ஆனால் இந்தப் பிரிவில் யாதொன்றும் யாதொரு நபர் ஒரு லோகல் போர்டின் அங்கத்தினராக இருக்கிறார் என்னும் காரணத்தினாலேயே அப்படி நிவாரணை செய்யப்படுவதற்கு அதிகாரப்படுத்தினதாக கருதப்படக் கூடாது.

கைப்பெறப்பட முடியாத வரிகளையும் சுங்கங்களையும் விட்டுவிடுவதற்கு அதிகாரம்.

111-A. இனி விதிக்கப்படும் கோட்பாடுகளுக்கும் மேல் பார்வைக்கும் உட்பட்டு, ஒரு லோகல் போர்டானது தனக்கு ஒரு கான்ட்ராக்டின் கீழாவது அல்லது வேறே விதமாகவாவது அல்லது இவை சம்பந்தமாகச் சேரவேண்டிய யாதொரு வரி-சுங்கம்-கட்டணம்-அல்லது வேறே ஒரு தொகை தனக்கு சேரவேண்டியிருப்பின் அப்படிப்பட்ட வரி-சுங்கம்-கட்டணம் அல்லது தொகையை கைப்பெற முடியாதென்று அபிப்பிராயப்படும்பக்ஷத்தில் அதைத் தன்னுடைய கணக்கிலிருந்து நீக்கி விடலாம்.

குறிப்புகள்.

111, 111-A ஆகிய இவ்விரண்டு பிரிவுகளும் லோகல் போர்டுகளால் வசூலிக்கக்கூடிய வரி அல்லது சுங்கங்களை வசூலிக்காமல் விட்டுவிடுவதைப் பற்றியும், லோகல் போர்டுகளால் வசூலிக்கப்பட முடியாத வரி, சுங்கம் இவைகளை விட்டுவிடுவதைப்பற்றியும் கூறுகின்றன. லோகல் போர்டுகளினுடைய கணக்குகளை தணிக்கை செய்வதில் பல கேள்விகள் வருவதால் லோகல் போர்டுகள் சில தொகை வசூலிக்காமலிருக்கவும் வசூலிக்கப்பட முடியாத தொகைகளை விட்டுவிடவும் இச்சட்டத்திலேயே அதிகாரப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் யாதொரு தொகையை வசூலிக்க முடியாதென்று விட்டுவிடுவதற்கு ஒரு லோகல் போர்டு என்னும் சபைக்குத்தான் உரிமையுண்டேயொழிய ஒரு ப்ரெஸிடெண்டுக்கு மாத்திரம் உரிமையில்லை. இதை ப்ரெஸிடெண்டுகள் நன்குணர வேண்டும்.

111-A பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் 'கோட்பாடுகள்' என்பது லோகல் கவர்ன்மெண்டினால் செய்யப்படும் விதிகள் அல்லது உத்திரவுகளைக் குறிக்கும்.

7-ம் அத்தியாயம்.

திரவிய விஷயத்துக்கு சம்பந்தப்பட்ட பொதுவான நிபந்தனைகள்.

இவ்வத்தியாயத்தில் லோகல் போர்டுகளின் தொகைகள் எவ்வாறு செலவழிக்கப்பட வேண்டுமென்றும், அதன் நிபந்தனைகள் என்னவென்றும், லோகல் போர்டுகளினுடைய கணக்குகள் எவ்வாறு தயாரித்து வைக்கப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது.

ஒரு லோகல் போர்டானது பொதுஜன க்ஷேமத்துக்காக ஏற்பட்டிருப்பதால் அதனுடைய தொகைகளானது ஜாக்கிரதையாகவும் யாவராலும் அங்கீகரிக்கக்கூடிய விதமாகவும் செலவிடப்பட வேண்டும். ஒரு லோகல்போர்டானது யாதொரு தொகையை செலவிடுவதில், இச்சட்டத்தின்கீழ் தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்திற்கு வரம்புகடந்து செலவழிக்கும் பக்ஷத்தில் அது செல்லத்தக்கதல்லவென்று அதைத் தடுப்பதற்கு அந்த லோகல் போர்டு நிர்வாகத்தில் அக்கரையுள்ள ஒவ்வொரு நபருக்கும் உரிமையுண்டு. இவ்விஷயத்தில் ஒரு லோகல்போர்டானது தன்னுடைய இஷ்டப்பிரகாரம் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட தொகைகளை செலவிடுவதற்கில்லை. ஒரு சிவில் கோர்ட்டானது, ஒரு லோகல் போர்டு செய்யப்போகும் யாதொரு செய்கையானது அதன் அதிகாரவரம்புக்கு மீறினதா அல்லவா என்பதைப் பற்றி தீர்மானிக்க அதிகாரமுண்டு. இம்மாதிரி வாமன்தத்யாஜி vs. ஷோலாப்பூர் முனிஸிபாலிடி (a) என்னும் கேஸிலும், ஷெப்பர்டு vs. பம்பாய் போர்ட்டு டிரஸ்டிகள் (b) என்னும் கேஸிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஒரு சிவில் கோர்ட்டில் தாவா செய்வதற்கு ஒவ்வொரு வரி செலுத்துவோருக்கும் உரிமையுண்டு.

லோகல் பண்டுகளை இன்ன காரியங்களுக்கு உபயோகிக்கலாமென்பது.

112. (1) இந்த ஆக்டின்படி வசூல் பெற்றுக் கொள்ளப்படும் பணத்தை உபயோகிக்கக்கூடிய காரியங்கள் எவையென்றால், பொதுவாய் அது சம்பந்தப்பட்ட பிரதேச விஸ்தீரணத்தில் குடியிருப்பவர்களின் க்ஷேமம்-தேகாரோக்கியம்-சௌகரியம்-அல்லது கல்வியின் விஷயமாகவாகிலும் அந்த

(a) 22 Bom. 646.
(b) 1 Bom. 182.

விஸ்தீரணத்தை மனேகரப்படுத்துவதற்காகவாகிலும் அவசியமாயிருக்கிற அல்லது அனுகூணமாயிருக்கிற ஒவ்வொரு காரியமும், பரிபாலனத்துக்குச் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு காரியமுமாகும்; மேலும், அந்தக் காரியங்களில் முக்கியமாய் அடியிற் கண்டவைகளும் அடங்கும்:—

(i) பாட்டைகளையும், வாராவதிகளையும், போக்கு வரவுக்கான இதர வசதிகளையும் உண்டுபண்ணி மராமத்து செய்து பராமரித்து வருவது;

(ii) பொது பாட்டைகளின் பக்கங்களிலும் மற்றப் பொது இடங்களிலும் மாங்களை நடுவதும், லோகல் போர்டால் நடப்பட்ட அல்லது அவர்களுக்குச் சொந்தமாயிருக்கிற மாங்களைக் காப்பாற்றி வருவதும்;

(iii) ஆஸ்பத்திரிகளையும், டிஸ்பென்ஸரிகளையும், எழைகளை ஆகரிப்பதற்கான சாலைகளையும், அனுதை குழந்தைகளுக்கான இடங்களையும், சத்திரங்களையும், மார்க்கெட்டுகளையும், கடைகளையும், இன்பண்டம் விற்கும் இடங்களையும், பந்தல் கடைகளையும், ஆடு மாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளையும், பாரவண்டி நிற்கும் இடங்களையும், ஜலதாரைகளையும், சாக்கடைக் கால்களையும், மல ஜல பாதை மறைவிடங்களையும், ஜல சூத்திரங்களையும், குளங்களையும், கிணறுகளையும் கட்டி பராமரித்து வருவது; அப்படிப்பட்ட கட்டிடங்கள் அல்லது கட்டு வேலைகள் எதற்காகக் கட்டப்பட்டிருக்கின்றனவோ அந்த விஷயங்களைச் சேர்ந்த சகல செலவுகளையும் செலுத்துவது, அம்மை குத்துகிறவர்களைப் பயிற்சி உத்தியோகத்தில் வைத்துக்கொள்வது, பட்டணங்கள் கிராமங்கள் இவற்றின் ஆரோக்கியத்தைக் குறித்து எற்பாடு பண்ணுவது, ஜன நெருக்கத்தை அகற்றுவது, வீடுகள் கட்டிக்கொள்வதற்கான மனைகளை ஏற்படுத்துவது, பாட்டைகளையும், ஜலதாரைகளையும், சாக்கடைக் கால்களையும், மல ஜலபாதை மறைவிடங்களையும், குளங்களையும், கிணறுகளையும், சுத்திபண்ணுவது, அதுபோன்ற மற்ற வேலைகள் செய்வது;

(iv) தேகாரோக்கியம், சேஷமம் இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட சங்கங்களின் அல்லது எழைகளை ஆகரித்து சகாயம் செய்வதற்காகவாவது, வியாதி அல்லது பலஹீனத்துக்குச் சிகிச்சை

செய்வதற்காகவாவது, வியாதியஸ்தர்களையோ, பலஹீனர்களையோ வரவேற்று ஆதரிப்பதற்காகவாவது ஏற்படுத்தப்பட்டுள்ள யாதொரு ஸ்தாபனத்தின் நிதிக்குப் பொருளுதவி செய்வது ;

(v) கல்வியைப் பரவச் செய்வது, இந்த நோக்கத்தோடு பாடசாலைகளைக் கட்டி மராமத்து செய்வது, பாடசாலைகளை ஏற்படுத்தி பராமரித்து வருவது, பாடசாலைகளைப் பார்வை யிடுவது, லைப்ரெரிகளையும் (புஸ்தகசாலைகளையும்) வாசக சாலைகளையும் ஏற்படுத்தி பராமரித்து வருவது ;

(vi) லோகல் போர்டாரால் அமர்த்திக்கொள்ளப்பட்ட ஊழியக்காரர்களுக்குச் சம்பளமும் - ரஜா வர்த்தனையும்-பென்ஷனும்-க்ராட்யூட்டியும் (நன்கொடையும்) தயா விஷயமாய்க் கொடுக்கப்படும் வர்த்தனையும் கொடுப்பது ;

(vii) அந்த லோகல் போர்டாரால் சட்டப்படி வாங்கப்பட்ட எவையேனும் கடன்களின்மேல் பாக்கியாக ஏற்படுகிற தொகைகளைச் செலுத்துவது ;

(viii) கோர்ட்டின் யாதொரு டிக்ரியின்படி செலுத்த வேண்டியதாகிற தொகைகளையும், லோகல் போர்டாரால் ஜாரி செய்யப்பட்ட வஜாதொகைகளையும் கொடுப்பது ;

(xi) ஜனங்களுடைய பத்திரத்தையாவது - சுகத்தையாவது சௌக்கியத்தையாவது, சௌகரியத்தையாவது விருத்தி பண்ணுவதற்கு அனுகூலமான விவசாய கைத்தொழிலான அல்லது வர்த்தக சம்பந்தமான வேலைகள் உள்பட்ட பொதுஜன உபயோகத்துக்கடுத்த மற்றப் பிரதேச வேலைகள் ;

(2) யாதொரு லோகல் போர்டைச்சேர்ந்த பணமானது-அந்த லோகல் போர்டு விஸ்தீரணத்துக்குள் 5-வது ஷெடியூலிற் கண்ட விதிகளுக்கும் நிர்ணயிக்கப்படக்கூடிய பின்னும் எவையேனும் விதிகளுக்கும் உட்பட்டு, (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் காரியங்களுக்கு உபயோகப்படத்தக்கதாகும் ; மேலும், மேலே சொல்லப்பட்ட வைகளுக்குட்பட்டு ஷெடி பணத்தை லோகல் போர்டு விஸ்தீர்ணத்துக்கு வெளியே அப்படிப்பட்ட காரியங்களுக்குச் செலவழிக்க இந்த ஆக்டினால் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலும், பிரத்தியேகமாய் பிரதேச கவர்ன்மென்டாரால் அனுமதி கொடுக்கப்படு

டிருந்தாலும், அது - அந்த காரியங்களுக்கு உபயோகிக்கப்படத்தக்க தாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது பொதுவாக லோகல் போர்டுகள் எந்தெந்த காரியத்திற் காக தமக்குள்ள தொகைகளைச் செலவிடலாம் என்பதைப்பற்றி கூறுகிறது. பஞ்சாயத்துக்கள் தாலூக்கா போர்டுகள் டிஸ்டிரிக்ட் போர்டுகள் இவைகளில் ஒவ்வொன்றும் இன்ன விஷயங்களில் தங்கள் பணத்தை செலவிடலாம் என்று V-வது ஷெட்யூல் முறையே 1-A, 1-B, 1-C வீதிகளில் சொல்லப் பட்டுள்ளது. V-வது ஷெட்யூலில் கண்டிருக்கும் விஷயங்களுக்காக லோகல் போர்டுகள் தங்களுடைய விஸ்தீரணத்திற்குள் கவர்ன்மென்டினுடைய உத் தரவு அல்லது அனுமதி யில்லாமலே தங்கள் தொகைகளைச் செலவிடலாம். தங்கள் விஸ்தீரணத்திற்கு வெளியே யாதொரு காரியத்திற்காக யாதொரு தொகையை செலவிடுவதாயிருந்தால் அதற்காக கவர்ன்மென்டினுடைய முன் உத்தரவைக் கேட்டுதான் செலவு செய்யவேண்டும்.

ஒரு லோகல்போர்டு தன்னுடைய சொத்துக்களை விற்பதனால் ஏற்படும் மூலதன தொகைகளை செலவு செய்வதாயிருந்தால் லோகல் கவர்ன்மென்டி னுடைய முன் உத்தரவில்லாமல் செலவு செய்யக்கூடாது.

லோகல் போர்டுகளின் தொகைகள் நாய் கடிகளுக்காக வைத்திய சிகிச் சை செய்வதற்கு உபயோகப்படுத்தப்படலாம்.

ஆதிதிராவிடர்களுக்காக மனைகளை வாங்கி அவர்களுக்கு குடியிருப்புக் காக விடுவது ஒரு பொது காரியமாகும் என்று ஒரு கேஸில் (a) தீர்மானிக் கம்பட்டிருக்கிறது.

செயில்வேக்கள், ட்ராம்வேக்கள் முதலியவைகளை ஏற்படுத்திப் பராமரித்து வருவது.

113. (1) இந்தியா கவர்ன்மென்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, யாதொரு டிஸ்டிரிக்ட் போர்டு—

(a) ஒரு டிஸ்டிரிக்ட் போர்டுக்குள்ளும், சிறுதுமட்டில் அதற் குள்ளும், சிறுதுமட்டில் அதற்கு வெளியிலுமாவது, செயில்வேக்களை ஏற்படுத்திப் பராமரித்து வருவது சம்பந்தமாய் அந்தந்த காலத்தில் அமுலில் இருக்கும் யாதொரு சட்டத்திற் கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு செயில்வேயை ஏற்படுத்திப் பராமரித்து வரலாம் ;

(a) வீராராகவாச்சாரியார் vs. இந்தியா செக்ரிடெரி ஆப் ஸ்டேட் 49 Mad. 237=A. I. R. 1925 Mad. 837.

(b) டிஸ்டிரிக்ட்டுக்கு வெகுசாய் பிரயோஜனமா யிருக்கு மென்று டிஸ்டிரிக்ட் போர்டார் அபிப்பிராயப்படுகிறபடி யாதொரு செயில்வேயை ஏற்படுத்துவதற்காகவாவது பராமரித்து வருவதற்காக வாவது இந்தியா கவர்ன்மென்டாராகிலும், யாதொரு பிரதேச அதிகார சபையாராலாகிலும், 1913–ம்வருஷத்திய இந்து தேச கம்பெனிகளைக் குறித்த ஆக்டில் விளக்கப்பட்டிருக்கும் யாதொரு கம்பெனியாலாகிலும் வாங்கப்படும் யாதொரு டிபென்சர்லோன் என்னும் கடனுக்குத் தொகை கொடுக்கலாம்;

(c) அப்படிப்பட்ட யாதொரு செயில்வேயிக்குச் செலவு செய்யப்பட்ட மூலதனத்தின்மேல் வட்டியாக, டிஸ்டிரிக்ட் பண்டிலிருந்து தங்களுக்குத் தகுதியென்று தோற்றும் தொகைகளைச் செலுத்துவதாய் உத்தரவாதம் செய்யலாம்.

(2) பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, டிஸ்டிரிக்ட்டு போர்டு, அந்த டிஸ்டிரிக்ட்டுக்குள்ளும், சிறிது மட்டில் அதற்குள்ளும், சிறிது மட்டில் அதற்கு வெளியிலுமாவது, யாதொரு ட்ராம்வே, கனத்த கம்பி முதலியதால் அமைக்கப்பட்ட ரோப்வே என்னும் பாதை, மோட்டார் ஆம்னிபஸ் என்னும் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் மோட்டார்வண்டி அல்லது போக்குவரத்துக்கான இதர சாதனத்தை மேலே சொல்லப்பட்ட சகல உபாயங்களையும் கைக்கொண்டாகிலும் அவைகளில் எதைக் கைக்கொண்டாகிலும் ஏற்படுத்தலாம் அல்லது பராமரித்து வரலாம், அல்லது ஏற்படுத்துவதற்காயினும் பராமரித்து வருவதற்காயினும் உதவி செய்யலாம்; ஆனால், ட்ராம்வேக்களின் விஷயத்தில் ட்ராம்வேக்களை ஏற்படுத்திப் பராமரித்து வருவது சம்பந்தமாய் அந்தந்த காலத்தில் அமுலில் இருக்கும் யாதொரு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அந்தப்படி செய்ய வேண்டும்.

(3) (1), அல்லது (2) அடையாளமிட்ட உட்பிரிவுகளில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களில் எது ஒன்றின் சம்பந்தமாய் உத்தரவு வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொள்வதற்கு, இது விஷயமாய்பிரத்தியேகமாககூட்டப்பட்டயாதொருமீட்டிங்குக்குவந்திருக்கும் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக்குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட டிஸ்ட்ரிக்ட் போர்டார்தின் தீர்மானத்தின் மூலமாய் அனுமதி கொடுக்கப்பட்டிருந்து, மேற் தீர்மானமானது மூன்று

மாத காலத்துக்குப் பிறகு அதே மாதிரியான சபையில் அதே மாதிரி பெரும்பான்மையோரால் ஊர்ஜ்ஜிதப்படுத்தப்பட்டாலன்றி மற்றப்படி அப்படிப்பட்ட விண்ணப்பம் எதையும் செய்துகொள்ளக்கூடாது.

குறிப்புகள்.

இந்தப் பிரிவு டிஸ்டிரிக்ட்டு போர்டுகளினுல் கட்டப்படும் ரயில்பாதை முதலியவைகளைப்பற்றி கூறுவதாகும். ரயில்வேக்கள் இந்தியா கவர்ன்மென்டை (அதாவது வைசிராய் அவர்களால் நடத்தப்பட்டு வரும் நிர்வாகத்தை)ச் சேர்ந்ததால் ரயில்வேக்களைச் சேர்ந்தவரையிலும் இந்தியா கவர்ன்மென்டாருடைய முன் உத்தரவு வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மற்ற டிராம்வே முதலியவைகளைச் சேர்ந்தவரைக்கும் சென்னை கவர்ன்மென்டினுடைய உத்தரவே போதுமானது.

114. ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டுக்கும் டிஸ்டிரிக்ட் பண்டு (நிதி) ஒன்றும், ஒவ்வொரு தாலூக்காவுக்கும் தாலூக்கா பண்ட் ஒன்றும், ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராம பண்ட் ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

டிஸ்ட்ரிக்ட், தாலூக்கா, பஞ்சாயத்துப் பண்டுகளை ஏற்படுத்துவது.

குறிப்புகள்.

இப்பிரிவில் புதியதாக ஒவ்வொரு கிராமத்திற்கும் உள்ள பண்டானது யூனியன் பண்டு என்று சொல்லப்படாமல் கிராம பண்டு என்று சொல்லப்பட வேண்டுமென்று ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளது.

114-A. (1) ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டும் கிராம அபிவிருத்தி நிதியென்று ஒரு நிதியை ஏற்படுத்தி நிர்வகித்து வரவேண்டும். அந்த நிதியானது இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் அமைக்கப்பட்டும், மேற்பார்வை யிடப்பட்டும் நிர்வாகம் செய்யப்பட்டும் வரவேண்டும்.

கிராம அபிவிருத்தி நிதி.

(2) அந்த நிதியானது—

(a) 78-வது பிரிவின்கீழ் அந்த ஜில்லாவில் விதிக்கப்படும் லாண்டு ஸெஸ் (Land-cess) என்னும் வரியில் 6-ல் ஒரு பாகமும்,

(b) லோகல் கவர்ன்மென்டால் இதற்காக உபகாரமாகக் கொடுக்கப்படும் எல்லா தொகைகளும்,

(c) இதன் காரியங்களுக்காக பெறப்படும் மற்ற எல்லா தொகைகளும்,

அடங்கி யிருக்க வேண்டும்.

(3) (2)-வது உபப் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லா ஆதாரங்களிலிருந்தும் வரும் தொகைகளும் டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய கணக்குகளில் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனல் அவை அதன் கிராம அபிவிருத்தி நிதியில் சேர்க்கப்பட வேண்டும்.

(4) அந்த நிதியானது அடியில்கண்ட காரியங்களுக்காக மாத்திரம்தான் உபயோகப்படுத்தப்பட வேண்டும். அதாவது:—

(a) கிராம போக்கு வரவுகளுக்காக ஆதாரங்களை அபிவிருத்தி செய்வது.

(b) ஜல ஆதாரங்களுக்கு ஏற்பாடு செய்வது.

(c) சுகாதாரத்தையும் பொதுஜன சௌக்கியத்தையும் விருத்தி செய்வது.

(5) அந்த நிதியானது அந்தந்த காலத்தில் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டினுடைய வேலைகளை நடத்திவரும் நபரும் அந்த ஜில்லாவில் உள்ள தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டுகளுடைய வேலைகளை நடத்திவரும் நபர்களும் சேர்ந்த ஒரு கமிட்டியால் நிர்வகிக்கப் படவேண்டும். டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டினுடைய வேலைகளைப் பார்த்து வரும் நபர் அந்த கமிட்டியின் ப்ரஸிடென்டாக இருக்க வேண்டும்.

(6) அந்த நிதியின் விஷயமாக எல்லா உத்திரவுகளும், செக்குகளும் (Cheques) அந்த கமிட்டியின் ப்ரஸிடென்டாலாவது அல்லது அவரால் இதற்கென்று அதிகாரப்படுத்தப்பட்ட யாதொரு நபராலாவது கையெழுத்து செய்யப்பட வேண்டும்.

(7) அந்த கமிட்டியானது ஒவ்வொரு வருஷமும், 117-வது பிரிவின் (1)-வது உப பிரிவின்கீழ் டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கு மொத்த வரவு செலவு கணக்குகளை ஒப்புவிப்பதற்காக நிர்ணயிக்கப்படும் தேதிக்குப் பிறகல்லாமல் ஒரு தேதிக்குள், அடுத்த வருஷத்தில் தோராயமாக ஏற்படும் வரவு செலவுகளை தெரிவிப்பதற்கு ஒரு விவரப்பட்டியை லோகல் கவர்ன்மென்டுக்கு அனுப்ப வேண்டும்.

(8) அந்த நிதியின் கணக்குகள் டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய கணக்குகளைப்போலவே அவைகளின் கூடவே கணிக்கைசெய்யப்பட வேண்டும். டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய கணக்குகளைத் தணிக்கை செய்யும் விஷயமாக பிரயோகிக்கப்படக்கூடிய இச்சட்டத்தின் எல்லா கோட்பாடுகளும், அல்லது அவைகளின்கீழ் செய்யப்படும் எல்லா விதிகளும் அதே மாதிரியாகவே சமயத்துக் கேற்றபடி இந்த நிதியின் கணக்குகளை தணிக்கை செய்யப்படுவதிலும் பிரயோகப்படுத்தப்பட வேண்டும்.

(9) லோகல் கவர்ன்மென்டார் இதன் விஷயமாக செய்யும் விதிகளுக்குட்பட்டு அந்த கமிட்டியானது தன்னுடைய வேலைகளை நடத்துவதற்கும் அந்த கமிட்டியானது தாம் எந்த விஷயங்களுக்காக அமைக்கப்பட்டதோ அவைகளை பூர்த்தி செய்வதற்கும் சகாய சட்டங்களைச் செய்யலாம்.

தூறிப்புகள்.

இப்பிரிவு 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் புதியதாக அமைக்கப்பட்ட ஒரு பிரிவு. ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் போர்டும் இனி கிராம அபிவிருத்திக்காக ஒரு கிராம அபிவிருத்தி நிதி என்று ஒரு நிதியை ஏற்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்படுகிறது. அந்த நிதிக்குள்ள ஆதாரங்கள் என்ன வென்றும் அதை எவ்வாறு செலவிடப்பட வேண்டுமென்றும் அது எவரால் செலவிடப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. இனி பழைய பஞ்சாயத்துகளால் நிர்வகிக்கப்பட்டுவந்த கிராமங்கள் லோகல்போர்டுகளாக ஏற்பட்டிருப்பதால் அவைகளை அபிவிருத்திசெய்து எல்லா பஞ்சாயத்துகளும் ஒரே மாதிரியாக தங்களுடைய அலுவல்களை நடத்தும்படி வசதிகளை ஏற்படுத்துவது டிஸ்டிரிக்ட் போர்டினுடைய கடமையாகும்.

115. முறையே கிராமம்-தாலூக்கா அல்லது டிஸ்டிரிக்ட்டு பண்டுகளுக்கு செலவாக எழுதவேண்டிய செலவுத் தொகைகளையும் வரவாக வைத்துக் கொள்ள வேண்டிய வரவுத் தொகைகளையும் குறித்தும், அந்த பண்டுகளின் பரிபாலனத்தைக் குறித்தும் V-வது ஷெட்யூலில் அடங்கியுள்ள விதிகளை இந்த அத்தியாயத்தின் பாகமாயிருப்பதாகக் கொள்ள வேண்டும்.

வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த லோகல் பண்டுகளின் வரவுகளும் செலவுகளும்.

116. (1) ஒவ்வொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டும் - ஒவ்வொரு வருஷத்திலும் அடுத்த வருஷத்தில் வெகுசாயக் கிடைக்கக் கூடிய வரவுகள் இவ்வளவென்றும் பிடிக்கக் கூடிய செலவு இவ்வளவென்றும் கண்டு பட்ஜெட் (வரவு செலவு திட்டக் கணக்கு) ஒன்றைத் தயார் செய்து அந்த போர்டின்முன் வைக்க வேண்டும்.

பட்ஜெட்டுகளைத் தயார் செய்வதும் ஜாரி செய்வதும்.

(2) ஒவ்வொரு லோகல் போர்டும் அந்த பட்ஜெட்டை தமக்கு தோன்றும் யுக்தப்படி மாறுதல் ஏதாவது இருந்தால் அவைகளுடன் அங்கீகாரம் செய்யவேண்டும்.

(3) அப்படி அங்கீகாரம் செய்யப்பட்டபிறகு ஒரு தாலூக்கா போர்டின் பட்ஜெட்டும் ஒரு பஞ்சாயத்தின் பட்ஜெட்டும் முறையே டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கும் தாலூக்கா போர்டுக்கும் அனுப்பப்பட வேண்டும். அப்படிப்பட்ட பட்ஜெட்டானது, வாங்கப்பட்டிருக்கும் கடன்கள் விஷயமாக ஏற்பட்டுள்ள சகல பொறுப்புகளையும் கிரமமாக தீர்ப்பதற்காவது வேலை நடத்திக்கொண்டு போவதற்கு வேண்டிய இருப்பு நிற்பதற்காவது ஏற்பாடு செய்ய தவறிப்போயிருந்தால் சந்தர்ப்பத்துக்கேற்றபடி டிஸ்டிரிக்ட்டு போர்டாகிலும் அல்லது தாலூக்கா போர்டாகிலும் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் நிச்சயமாக செய்யப்படும் பொருட்டு அந்த பட்ஜெட்டின் யாதொரு பாகம் திருத்தப்பட வேண்டுமென்று கட்டளையிடலாம்.

குறிப்புகள்.

பட்ஜெட் என்பது வரவு சிலவு கணக்குகளைக் குறிக்கும் ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் சராசரியாக யாதொரு வருஷத்தில் இவ்வளவு வருமானம் உண்டென்று முன்னடியாகவே அறிய முடியலாமாகையால் அதைப் பற்றி ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டானவர் ஒரு கணக்கைத் தயார் செய்ய வேண்டும். 'வருஷம்' என்பதற்கு இச்சட்டப் பிரகாரம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் மார்ச்சு மாதம் 31-ந் தேதி வரையிலுமுள்ள மாதங்களென்று அர்த்தமாகும். ஒரு வருஷம் முடிவதற்கு முன்னமே அடுத்த வருஷத்திற்குள்ள வரவு சிலவு கணக்குகளைத் தயாரித்து கவர்ன்மென்டுக்கு அனுப்பப்பட வேண்டும் (117-ம் பிரிவைப் பார்க்க) சென்னை கவர்ன்மென்டார் ஒவ்வொரு வருஷமும் ஜனவரி 15-க்கு முன்னமே பட்ஜெட் தயாரிக்கப்பட்டு லோகல் போர்டுகளினுடைய பார்வைக்கு வரவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பட்ஜெட்டுகள் லோகல் போர்டுகளினுல் அனுசரிக்கப்பட்டாலொழிய லோகல் போர்டுகளின் தொகைகள் செலவிடப்படுவதற்கில்லையாதலால், ஒவ்வொரு வருஷமும் பட்ஜெட்டுகள் மார்ச்சுமீ 31ந--க்கு முன்னமே லோகல் போர்டுகளால் நடந்தேறப்பட வேண்டும்.

ப்ரெஸிடென்டுகளால் தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டை மீட்டிங்குகளில் மாற்றுவதற்கு லோகல் போர்டுகளுக்கு அதிகாரம் உண்டு. பஞ்சாயத்தினுடைய பட்ஜெட்டுகள் நடந்தேறப்பட்ட பிறகு தாலூக்கா போர்டுக்கும் தாலூக்கா போர்டுகளினுடைய பட்ஜெட்டுகள் டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கும் மேற்பார்வைக்காக அனுப்பப்பட வேண்டும். அவைகளில், யாதொரு செலவுக்காக சரியான ஏற்பாடுகள் செய்யப்படவில்லையென்று முறையே தாலூக்கா போர்டு அல்லது டிஸ்டிரிக்ட் போர்டுக்குத் தோன்றினுல் அவைகளுக்காக தகுந்த ஏற்பாடுகளைச் செய்யும்படி பட்ஜெட்டுகளை மறுபடியும் கீழுள்ள லோகல் போர்டுகளுக்கு திரும்ப அனுப்பலாம்.

சென்னை லோகல் கவர்ன்மென்டார், லோகல் போர்டுகள், ஒரு காரியத்துக்காக தனியாக ஒதுக்கி வைக்கப்பட்ட சொத்தை மற்றொரு காரியத்திற்காக தங்களுடைய முன் உத்தரவில்லாமல் செலவிடக் கூடாதென்று போர்ட் செயிண்டு ஜார்ஜ் கெஜட்டில் 23—12—1924-ல் 612-ம் நெம்பர் பக்கத்தில் G. O. L & M. 3372-ல் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

117. (1) ஒவ்வொரு வருஷத்தினும் இதற்காக லோகல் கவர்ன்மெண்டு நிச்சயிக்கும் யாதொரு தேதிக்குப் பிறகல்லாமல் டிஸ்டிரிக்ட் போர்டு தமக்காகவும், டிஸ்டிரிக்டினுள்ள சகல தாலூக்கா போர்டுகளுக்காகவும், பஞ்சாயத்துகளுக்காகவும், அடுத்த வருஷத்திற்காக ஒன்றுய்ச் சேர்க்கப்பட்ட பட்ஜெட் ஒன்றைப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்ப வேண்டும்.

ஒன்றுய்ச் சேர்க்கப்பட்ட பட்ஜெட்டை கவர்ன்மெண்டாருக்கு அனுப்புவதும் அவர்களுடைய மேல் விசாரணை அதிகாரமும்.

(2) அந்தப்படி ஒன்றுய்ச் சேர்க்கப்பட்ட பட்ஜெட்டிலே, யாதொரு லோகல் போர்டார் வாங்கியிருக்கும் கடன்கள் விஷயமாக ஏற்பட்டுள்ள சகல பொறுப்புகளும் கிரமப்படி தீர்ப்பதற்காகவாவது வேலை நடத்திக்கொண்டு போவதற்கு வேண்டிய இருப்பு நிற்பதற்காகவாவது ஏற்பாடு செய்யத் தவறிப்போயிருந்தால், லோகல் கவர்ன்மெண்டார் - அந்தப்படி நிச்சயமாய் ஏற்பாடு செய்யப்படும் பொருட்டு அந்த பட்ஜெட்டின் எந்த பாகத்தையாவது திருத்தப்பட வேண்டுமென்று கட்டளையிடலாம்.

118. டிஸ்ட்டிரிக்டிலுள்ள சகல தாலூக்கா போர்டுகள், பஞ்சாயத்துகள் இவைகளின் பட்ஜெட்டுகளை தயார் செய்வதற்கும், ஜாரி செய்வதற்கும் அனுப்புவதற்கும் தேதிகளை டிஸ்டிரிக்ட் போர்டார் நிஷ்கரிஷை செய்யவேண்டும்.

பட்ஜெட்டுகளுக்கு தேதிகளை நிஷ்கரிஷை செய்வது.

119. தங்களுடைய வரவுகள் சம்பந்தமாகவாவது தாங்கள் செய்ய ஏற்றுக்கொள்ளுகிற பற்பல காலங்களுக்காக செலவிட வேண்டியிருக்கும் தொகைகளை பங்கீடு செய்வது சம்பந்தமாகவாவது பட்ஜெட்டில் கண்டுள்ள இலக்கங்களைத் திருத்துவது அவசியமென்று யாதொரு வருஷத்தில் லோகல் போர்டாருக்குத் தோற்றுமாகில் 116-வது பிரிவிலும், 117-வது பிரிவிலும் நிபந்தனை கண்டிருக்கிறபடி உடன் சேர்க்கையான அல்லது திருத்தப்பட்ட பட்ஜெட் தயார்செய்து ஜாரி செய்யப்பட்டு அனுப்பப்படலாம்; ஆனால், கடன் விஷயமாய் உபயோகிப்பதற்காக ஜாரி செய்யப்பட்டிருக்கும் தொகையிலாவது வேலை நடத்திக்கொண்டு போவதற்கு வேண்டியிருக்கும் கையிருப்பிலாவது ஏதேனும் மாறுதல் செய்வதானால், அதைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் சம்மதத்தைப் பெற்றே செய்யவேண்டும்.

திருத்தப்பட்ட அல்லது உடன் சேர்க்கையான பட்ஜெட்.

120. பிரதேச கவர்ன்மெண்டார் ஒவ்வொரு லோகல் பண்டின் வரவு செலவைப்பற்றிய கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக ஆடிட்டர்களை நியமிக்க வேண்டும். அந்த ஆடிட்டர்கள் இந்தியன் பீனல்கோட் 21-வது பிரிவின் தாத்பரியப்படி "சர்க்கார் உத்தியோகஸ்தர்" களாக எண்ணப்படுவார்கள்.

கணக்குகளுக்காக ஆடிட்டர்களை (தணிக்கை உத்தியோகஸ்தர்களை) நியமிப்பது.

121. (1) பிரதேச கவர்ன்மெண்டாராலாவது, இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற வேறே யாதொரு லோகல்போர்டாராலாவது, சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள வேறே யாதொரு பிரதேச அதிகார சபையாராலாவது V-வது ஷெட்யூலாலாகிலும் அல்லது அதன்படியாகிலும் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு காரியத்துக்காகச் செய்யப்பட்ட

இதர பிரதேச அதிகார சபையார் செய்யும் செலவுக்காகத் தொகைகள் செலுத்தவது.

செலவினல் யாதொரு போர்டின் விஸ்தீரணத்திலுள்ள குடிகளுக்குப் பிரயோசனம் உண்டாகக் கூடியதாயிருந்தால், அந்த லோகல் போர்ட்டார் பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியுடன் அப்படிப்பட்ட செலவுக்காக ஒரு தொகை கொடுக்கலாம்.

(2) பிரதேச கவர்ன்மென்டார் - உத்தரவு பிறப்பித்து, (1) குறிப்பிட்ட உபப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் யாதொரு தொகையை ஏன் கொடுக்க வேண்டியதில்லையோ அதற்குக் காரணத்தை அப்படிப்பட்ட உத்தரவு வந்து சேர்ந்த பின்பு ஒரு மாதத்துக்குள் தெரிவிக்க வேண்டுமென்று ஷெடி லோகல் போர்டாருக்குக் கட்டளை யிடலாம்.

(3) பிரதேச கவர்ன்மென்டாருக்குத் திருப்தியாகும் விதமாக மேற்படி கால அளவுக்குள் அந்த லோகல் போர்டார் காரணம் தெரிவிக்காவிட்டால், தாங்கள் குறிப்பிடும் தொகையைச் செலுத்தும்படி பிரதேச கவர்ன்மென்டார் மேற்படி லோகல் போர்டாருக்கு உத்தரவு செய்யலாம்; அந்தத் தொகை அப்பிரகாரமே செலுத்தவேண்டும்.

லோகல்கவர்ன்மென்டால் கொடுக்கப்பட்டிருக்கும் கடன் தொகைகளையும் அட்வான்சுகளையும் வசூலிப்பது.

121-A. 1914-ம் வருஷத்திய லோகல் அதாரிட்டீஸ் லோன்ஸ் ஆக்ட் என்னும் சட்டத்தில், என்ன இருந்த போதிலும், அவை நிமித்தியமில்லாமல் லோகல் கவர்ன்மென்டு இந்த சட்டத்தின் 41-வது பிரிவின் (3) உபப் பிரிவில் கண்டிருக்கிற பிரகாரமாவது அல்லது தாவா செய்தாவது யாதொரு லோகல் போர்டுக்கு இந்தசட்டத்தின் கீழ் அந்த லோகல் போர்டினுடைய நிதிகள் உபயோகப்படுத்தக்கூடிய காரியங்களுக்காக கொடுத்திருந்த யாதொரு கடன் அல்லது அட்வான்சு தொகைகளை வரப்படுத்த உரிமையுள்ளதாகும்.

4-ம் பாகம்.

இந்த பாகத்தில் நான்கு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. VIII-வது அத்தியாயம் தேகாரோக்கியம், சுகாதாரம் இவைகளைப் பற்றின விஷயங்களையும் IX-வது அத்தியாயமானது அபாயகரமான கட்டடங்களையும் X-வது அத்தியாயம் பொதுஜனங்கள் நடமாடும்படியான பாதைகளைப் பற்றியும் XI-வது அத்தியாயமானது மார்க்கெட்டுகள் முதலியவைகளைப் பற்றியும் கூறுகின்றன.

8 - ம் அத்தியாயம்.

பொதுஜன தேகாரோக்கியமும் சுகமும் வசதியும்.

பொதுஜன தேகாரோக்கியம்.

ஒருவருக்கே சொந்தமானதும் பொதுவானதுமான குளங்கள் அல்லது கிணறுகள்.

கிணறு முதலியவற்றை மூடிவிடுவதும், சுத்தி பண்ணுவதும்.

122. பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு - ஒருவருக்கே சொந்தமாய், குடிப்பதற்காக எதிலிருந்து தண்ணீர் உபயோகித்துக்கொள்ளப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு ஓடை, வாய்க்கால், குளம், கிணறு அல்லது வேறே இடத்தைச் சுத்தி பண்ணி சீரான ஸ்திதியில் வைத்திருப்பதோடு அவைகளுக்கு கைப்பிடிச் சுவர்களைக்கட்டி அப்படிப்பட்ட யாதொரு கிணற்று ஜலமானது பூமியின் மேற்புறத்திலிருந்து விழுகிற ஜலத்தினால் கெட்டுப்போகாதபடி அதை எவ்விதத்தில் காப்பாற்றுவது தமக்கு யுக்தமாகத் தோற்றுமோ அவ்விதத்தில் காப்பாற்றும்படியாகவாவது, அந்த தண்ணீர் குடிக்கத் தகுதியற்றதென்று அந்த ப்ரெஸிடென்டுக்குத் திருப்திகரமாய் ருஜுவானால், அப்போது அந்த தண்ணீரைக் குடிப்பதற்காக உபயோகப்படுத்தக்கூடாதென்றுவது, மற்றவர்களை அப்படி அதை உபயோகப்படுத்தவொட்டக் கூடாதென்றுவது, அதன் சொந்தக்காரருக்காகிலும் அதைத் தம் விசாரணையில் வைத்துக்கொண்டிருக்கிற நபருக்காகிலும், உத்தரவு பண்ணலாம் ; அப்படி நோட்டீஸ் கொடுத்த பின்பு அந்தக் கிணறு-குளம் அல்லது நீர் நிலையிலிருக்கிற ஜலத்தை எவராவது குடிப்பதற்காக உபயோகப்படுத்தினால், ப்ரெஸிடென்டானவர் அதிலுள்ள ஜலம் குடிப்பதற்காக உபயோகிக்கப்படாமலிருக்கும்பொருட்டு, தாம் கட்டளையிடும் விதமாய் அப்படிப்பட்ட கிணறு-குளம்-அல்லது நீர் நிலையைக் கொஞ்ச காலத்திற்காவது அல்லது எப்போதைக்குமாவது மூடிவிடும்படியாகிலும், அந்தக் கிணறு-குளம் அல்லது நீர்நிலைக்கு அடைப்பாவது வேலியாவது போடும்படியாகிலும், அதன் சொந்தக்காரருக்காவது அல்லது அதைத் தம் விசாரணையில் வைத்துக்கொண்டிருக்கிற நபருக்காவது உத்தரவு பண்ணலாம்.

ஆனால், இந்தப் பிரிவிற்கண்ட சொந்த (ப்ரைவேட்) ஓடைகள், வாய்க்கால்கள். குளங்கள், கிணறுகள் அல்லது வேறே இடங்களின் ஜலத்தைப் பொது ஜனங்களாவது பொது ஜனங்களைச் சேர்ந்த யாதொரு வகுப்பாராவது ஸ்வதந்தரமாகக் குடிப்பதற்கு உபயோகப் படுத்திக்கொண்டு வருவார்களாகில், அப்படிப்பட்ட கிணறு, குளம் அல்லது நீர் நிலையை மூடிவிடுவதற்காவது அல்லது அதற்கு அடைப்பு அடைப்பதற்காவது பிடிக்கும் செலவை பஞ்சாயத்தினால் - கிராம பண்டிலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, ஒரு பஞ்சாயத்து, ப்ரெஸிடென்டானவர் குடிப்பதற்காக உபயோகப்பட்டு வரும் ஓடை, குளம், கிணறு முதலியவைகள் யாதொரு ப்ரைவேட் நபருடைய சுவாதீனத்திலிருக்கும்பக்ஷத்தில் அதை சரியான நிலைமையில் வைத்துக்கொள்வதற்கும், அவைகளிலுள்ள ஜலமானது குடிப்பதற்கு தகுந்ததாயிராதபக்ஷத்தில் அவைகளை உபயோகிக்கவொட்டாமலிருக்கும்படி உத்தரவுகளைச் செய்பவரும், தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கூறுவதாகும். அதற்காக அவைகளுடைய சொந்தக்காரருக்கு அல்லது அவைகளை ஸ்வாதீனம் பெற்றிருப்பவருக்குத் தகுந்தபடி நோட்டீஸ் கொடுக்கலாம். நோட்டீசுக்கு கீழ்ப்படியாவிட்டால் - அதற்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

யாதொரு நீரோடை முதலியவைகளில் ஜலம் கொண்டு போவதற்குப் பொது ஜனங்களுக்கு உரிமை சங்கிரமித்திருக்கும்பக்ஷத்தில், அவைகளை அடைப்படைப்பதற்காக செலவிடப்படும் தொகையானது பஞ்சாயத்தினால் செலவிடப்பட வேண்டும்

இப்பிரிவின் கீழ், ஒரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் யாதொரு ஓடை, கிணறு முதலியவை அசுத்தமாயிருக்கிறதென்றும், அவைகளை சுத்தம் பண்ணவேண்டுமென்றுவது அல்லது மூடிவிட வேண்டுமென்றுவது ப்ரெஸிடென்டு உத்திரவிடும்பக்ஷத்தில், ப்ரெஸிடென்டானவர் எந்தக் காரணத்தைக் கொண்டு அவ்வுத்தரவு செய்தாரோ அது சரியானதல்லவென்று ருசுப்படுத்தி அந்த உத்தரவு செல்லாதென்று கோர்ட்டில் வழ்புறுத்துவதற்கில்லை(a). ஆனால், ப்ரெஸிடென்டானவர் தக்கபடி யாதொரு காரணத்தைத் தெரிவிக்காமல் இப்பிரிவின்கீழ் யாதொரு உத்தரவையும் இடக்கூடாது.

(a) பக்தர் தாலூக்கா போர்டு vs மல்லிகார்ஜுனை நாயுடு 40 M. L. J. 91.

அசங்கியம் அல்லது சங்கடத்தை யாவது பொதுஜன சுகத்துக்கு அபாயத்தையாவது உண்டாகத்தக்க சிறு குட்டைகள் முதலியவைகளைத் தூர்த்து விடுவது.

123. (1) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர்,

(a) யாதொரு குளம், கிணறு, குட்டை, சிறு குட்டை, வடிக்கால், சகதி, சதுப்பு நிலம், கல்வெட்டும் குழி, ஜலதாரை, சாக்கடைகுழி, குழி நீர்க்கால் அல்லது யாதொரு நீர் நிலையாவது,

(b) எதன்மேல் தண்ணீர் தங்கியிருக்கக் கூடுமோ அந்த நிலமாவது, அபாயகரமாயிருக்கிறதென்றுகிலும் வெகுசாய் இருக்கக் கூடுமென்றுகிலும், கொசுக்கள் உண்டாகி விருத்தியாவதற்கான இடமாக ஏற்பட்டோ வேறே எவ்விதமாகவோ அக்கம் பக்கத்திலிருக்கிற ஜனங்களின் சுகத்துக்குக் கெடுதி உண்டாக்குகிறதென்றுகிலும் அல்லது துர்நாற்றமாயிருக்கிறதென்றுகிலும் வெகுசாய் கெடுதி உண்டாக்கக் கூடியதாகுமென்றுகிலும் அபிப்பிராயப்பட்டால், அவர் அதன் சொந்தக்காரருக்கு அல்லது அதற்கு அதிகாரமுள்ள வேறே நபருக்கு நோட்டீஸ் கொடுத்து, அந்த நோட்டீஸில் சொல்லப்படக் கூடிய மாதிரியாகவும் சாமான்களைக் கொண்டும் அதற்கு அடைப்படைக்கும்படியோ, மராமத்து செய்யும்படியோ, அதைத் தூர்த்து விடும்படியோ, மேலே மூடிவிடும்படியோ, சுத்தி செய்யும்படியோ, அதில் நிற்கும் ஜலத்தைச் சிறிது மட்டிலாகிலும் முழுவதிலுமாகிலும் வடித்து விடும்படியோ, அல்லது நோட்டீஸில் கட்டளையிடக் கூடிய படி அது விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும்படியோ உத்தரவு செய்யலாம்.

(2) எவருக்கு அப்படிப்பட்ட நோட்டீஸ் சேர்ப்பிக்கப் படுகிறதோ அந்த நபர் அதன்படி நடப்பதற்காக நிச்சயிக்கப்பட்ட காலத்துக்குள் அந்த உத்தரவின்படி நடப்பதற்குள்ள ஆட்சேபணைகளை எழுதி ப்ரெஸிடென்டினிடம் ஒப்புவித்தால், ப்ரெஸிடென்டானவர் அப்படிப்பட்ட ஆட்சேபணைகளைப்பற்றி பஞ்சாயத்துக்குத் தெரிவிக்க வேண்டியதோடுங்கூட, பஞ்சாயத்தின் அங்கீகாரத்தைப் பெற்றன்றி

மற்றப்படி ஷெ உத்தரவில் சொல்லியிருக்கிற பிரகாரம் நடக்கத் தவறினதற்காக எவ்வித பிராதும் தொடரக்கூடாது. ஆனபோதிலும், ஷெ ப்ரெஸிடென்டானவர் - பஞ்சாயத்தின் தீர்மானத்தைப் பெறுகிற வரையில், பொது ஜனங்களுக்கு உடனே அபாயம் நேருவதை யாவது பொதுஜன சுகத்துக்கு உடனே தீங்கு நேருவதையாவது தடுப்பதற்கு அவசரமானதென்றும் முக்கியமானதென்றும் தாம் அபிப்பிராயப்படக்கூடிய வேலைகளைச் செய்துமுடிக்கலாம். அப்படிப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும் பஞ்சாயத்து, செய்து முடிக்கப்பட்ட வேலைக்குப் பிடித்த செலவைச் சொந்தக்காரர் செலுத்த வேண்டுமா அல்லது போர்டார் செலுத்தவேண்டுமா அல்லது இருவரும் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமா, அப்படியானால் என்ன சங்கியாபரிமாணப்படி பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, அஞ்ரோக்கியமான குளங்கள் முதலியவைகளை அடியோடே அடைத்துவிடுவதற்கும் அல்லது தரஸ்து செய்வதற்கும் ப்ரெஸிடென்டானவர் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறுகிறது. அவசர சமயங்களில் பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர், தம்முடைய பொறுப்பிலேயே தகுந்த காரியங்களை நடத்திவிட்டு பஞ்சாயத்துக்கு தெரிவிக்க வேண்டுமென்றும், அதன் பேரில் அதஞல் நேர்ந்த செலவுகளை இன்னபடி பங்கிட வேண்டும் என்று கூறுகிறது. இதன் விஷயமாக பஞ்சாயத்தானது செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் விஷயமாக ஒரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு அல்லது பஞ்சாயத்தானது எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் தீர்க்கமாக ஆலோசனை செய்யப்பட்ட பின்னர்தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது, அப்படிச் செய்வதற்கு தகுந்த காரணங்கள் இருக்க வேண்டும்.

ஒரு ப்ரெஸிடென்டு, யாதொரு நோட்டீஸைக்கொடுத்த பிறகு, அதற்கு பிரதியாக குளம் குட்டை முதலியவைகளின் சொந்தக்காரர் தம்முடைய ஆக்ஷேபனைகளைத் தெரிவிக்கலாம். அதை பஞ்சாயத்தானது கவனித்தப் பிறகுதான் அவர் பேரில் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்பிரிவின்கீழ் விடப்படும் நோட்டீசுக்கு கீழ்ப்படியாமல்போனால் அதற்கு ஐம்பது ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

124. (1) (a) பஞ்சாயத்தானது பொது ஜனங்களுடைய சௌகரியத்தை உத்தேசித்து யாதொரு பொது நீரூற்று, குளம், கிணறு அல்லது யாதொரு பொதுவான நீரோட்டம் அல்லது அதின் பாகம் இவைகளில் பிராணிகளை கழுவு வதையும், அல்லது துணிகள் அல்லது வேறே வஸ்துக்களை அலம்புவதையும், அல்லது மீன் பிடிப்பதையும் ஒழுங்குபடுத்தலாம் அல்லது தடுக்கலாம். இன்னும் அப்படிப்பட்ட ஒரு இடத்தை குடிப்பதற்காவது அல்லது ஸ்நானம் செய்வதற்காவது அல்லது பிராணிகளை அல்லது துணிகளை கழுவு வதற்காவது அல்லது வேறே ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காவது பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கலாம்

பொதுவான குளங் கள் முதலியவைகளை சில காரியங்களுக்கென் று பிரத்தியேகப்ப டுத்தி வைக்கலா மென் பது.

(b) (a)—என்னும் உபவாக்கியத்தின்கீழ் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் யாதொரு பிரைவேட் நீரூற்று அல்லது குளம், கிணர் அல்லது நீரோட்டத்தின் விஷயமாக பஞ்சாயத்தினால் அப்படிப்பட்ட இடத்தின் சொந்தக்காருடைய சம்மதத்தைக் கொண்டு செலுத்தப் படலாம்.

(c) பஞ்சாயத்தானது, பொது ஜன ஆரோக்கியத்தை உத் தேசித்து, யாதொரு பிரைவேட் நீரூற்று, குளம், கிணர் அல்லது நீரோட்டத்தில் பொது ஜனங்கள் குடிப்பதற்காக நீர் எடுத்துக் கொண்டுபோக உரிமையுள்ள பக்ஷத்தில், அவைகளில் பிராணிகளை கழுவுவதையும் அல்லது துணிகளை அல்லது இதர வஸ்துக்களை அலப்பு வதையும் ஒழுங்கு படுத்தலாம், அல்லது தடுக்கலாம்.

(2) லோகல் போர்டாருடைய ஊழியத்திலாவது கவர்ன் மென்டாருடைய ஊழியத்திலாவது இருக்கிற யாதொரு வைத்திய உத்தியோகஸ்தர் அந்த கிராமத்திற்குள் இருப்பதாய் பொது ஜனங் கள் போகக்கூடிய யாதொரு கிணறு, குளம் அல்லது வேறே ஜலா தாரத்திலுள்ள தண்ணீர் யாதொரு அபாயகரமான வியாதியை வெகு சாய் உண்டாக்குமென்றாவது பரவச் செய்யுமென்றாவது கண்டு அனுப்புகிற ஸெர்ட்டிபிகேட்டை வரப்பெற்றுகொள்வதன்மேல், பஞ் சாயத்து ப்ரெஸிடென்டானவர் - அந்தத் தண்ணீரை உபயோகிக்கக் கூடாதென்று பஹிரங்கமான நோடீஸின் மூலமாய்த் தடுக்கலாம். இத் தகை நினம் வரையில் அந்தப்படித் தடுக்கப்படுமென்று கண்டு அந்த

நோட்டீசை ஷெரிஸ் ஜலாதாரத்துக்குச் சமீபத்தில் விளம்பரமொட்டியாவது, தண்டோரா போட்டாவது பிரசித்தப் படுத்தவேண்டும். ஷெரிஸ்டெனென்டானவர் பின்னும் ஒரு சர்ட்டிபிகேட் ஆஜர்படுத்தப் படாமலே அந்த நோட்டீஸை இன்னும் அதிக காலத்துக்கு வியாபிக்கச் செய்யலாம்; அல்லது நிருத்தலாம்.

குறிப்புகள்.

சில இடங்களில், நீரூற்றுகள், குளங்கள் அல்லது ஓடைகள் கண்டவாருக ஐந்துக்களை கழுவுவதற்கும் துணி முதலியவைகளை தோய்ப்பதற்கும், ஸ்நானம் செய்வதற்கும் குடிப்பதற்குமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்படிச் செய்வது பொதுஜன ஆரோக்கியத்திற்கு மிகவும் பாதகரமானது. இவைகளைத் தடுத்து குடிப்பதற்கு அல்லது கழுவுவதற்கு அல்லது துணி முதலியவைகளை தோய்ப்பதற்கென்று அவைகளை தனியாக ஒதுக்கி வைப்பதற்கு பஞ்சாயத்துக்கு அதிகாரம் உள்ளதாகும்.

சில குட்டைகள் அல்லது ஓடைகளிலிருந்து சிற்சில சமயங்களில் சிலருக்கு பயிர் முதலியவைகளுக்கு ஜலம் பாய்ச்சிக்கொள்ள உரிமையிருந்தபோதிலும் அதைக் கவனியாமல் லோகல் போர்டுகள் அவைகளை குடிப்பதற்கென்று ஒதுக்கிவைக்கின்றன, அப்படிச செய்யும் காலத்தில் அப்படி உரிமை பெற்றிருக்கும் நபர்களுக்கு தகுந்த ஏற்பாடுகளைச்செய்துவிட்டப் பிறகுதான் ஒதுக்கிவைக்க வேண்டுமேயொழிய, சும்மா இப்பிரிவின்கீழ் அவைகளை ஒதுக்கிவைத்துவிட்டு பிறகு யாதொரு நபர் அவைகளிலிருந்து ஜலம் இறைத்துக்கொள்ளும்படிக்கூத்தில் அவரை தண்டிப்பதற்கில்லை. (a).

அந்தப்படி பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கிற இடங்களை பிரசித்தம் செய்யப்பட்ட காரியங்களல்லாத வேறே காரியங்களுக்கு உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பது.

125. எந்த நபரும்:—

(a) பஞ்சாயத்தினுடையவது அல்லது சொந்த (ப்ரைவேட்) சொத்தின் விஷயத்தில் அதன் சொந்தக்காராலாவது குடிக்கும் அல்லது சமையல் செய்யும் காரியத்திற்காகப் பிரத்தியேகமாய் ஏற்படு

(a) கோவிந்த செட்டி vs. இந்தியா சக்ரவர்த்தி (1928) M. W. N. 812).

த்தி வைக்கப்பட்ட யாதொரு இடத்திலே ஜலத்தில் ஸ்நானம் செய்ய வாகிலும், அதை அசுத்தப்படுத்தவாகிலும் கூடாது ; அல்லது,

(b) குடிக்கும் காரியத்திற்காக மேற்கண்டபடி பிரத்தியேக மாய் ஏற்படுத்தி வைக்கப்பட்ட யாதொரு இடத்தின் உலர்ந்த அடித் தரையில் அருவருக்கத்தக்க அல்லது தீங்கு உண்டாக்கத்தக்க யா தொரு வஸ்துவைப் போட்டு வைக்கக்கூடாது ; அல்லது,

(c) குடிப்பதற்காகவோ அல்லது ஸ்நானம் செய்வதற்காக வோ-மேலே கண்டபடி பிரத்தியேகமாய் ஏற்படுத்தி வைக்கப்பட்ட யாதொரு இடத்தில் வஸ்திரத்தைத் தோய்க்கக் கூடாது ; அல் லது,

(d) குடிக்கும் காரியத்திற்கோ அல்லது ஸ்நானம் செய்வ தற்கோ அல்லது வஸ்திரம் தோய்ப்பதற்கோ மேலேகண்டபடி பிரத் தியேகமாய் ஏற்படுத்தி வைக்கப்பட்ட யாதொரு இடத்தில், யாதொரு பிராணியையாவது யாதொரு சமையல் பாத்திரத்தையாவது ஆட்டு மயிரையாவது, தோலையாவது, வேறே அசுத்தமான அல்லது அரு வறுக்கத்தக்க வஸ்துவையாவது, கழுவவாகிலும்-அருவருக்கத் தக்க அல்லது தீங்கு உண்டாக்கத்தக்க வஸ்துவைப் போட்டு வைக்கவாகி லும் கூடாது ; அல்லது,

(e) சாக்கடைக்குழி - சாக்கடைக்கால் - ஜலதாரை - என் ஜின் அல்லது கொப்பரையிலிருந்து வருகிற ஜலத்தையாவது அவ ருக்குச் சொந்தமானதாகவோ அவருடைய அல்லது அவரால் அனுப விக்கப்பட்ட யாதொரு கட்டடம் அல்லது நிலத்திலிருந்து வருகிற தாகவோ உள்ள வேறே யாதொரு அருவருக்கத் தக்க வஸ்துவை யாவது, குடிக்கும் காரியத்திற்காயினும் ஸ்நானம் செய்வதற்காயி னும் வஸ்திரம் தோய்ப்பதற்காயினும் மேலே கண்டபடி பிரத்தியேக மாய் ஏற்படுத்தி வைக்கப்பட்ட யாதொரு இடத்தில் செலவிடக் கூடாது.

குறிப்புகள்.

இப்பிரிவானது, அசுத்தமான செய்கைகளைத் தடுப்பதாகும். இப்பிரி வுக்கு விரோதமாக நடத்தும் ஒவ்வொரு நபருக்கும் 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

குடிப்பதற்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் ஓரிடத்தில், ஸ்நானம் செய்யக்கூடாது. அது ஒரு குற்றமாகும். ஒரு தாழ்ந்த வகுப்பினர் குடிப்ப

தற்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட குளத்தில், ஜலம் மொண்டு கொள்வது ஒரு குற்றமல்ல (a). ஆடு, மாடுகள் குடிப்பதற்காக ஒதுக்கிவைகக்ப்பட்டிருக்கும் ஒரு குளம், அல்லது குட்டையில் மீன் பிடித்து கலக்குவது ஒரு குற்றமாகும்.

பஞ்சாயத்துகளால் கிணறுகளும், குளங்கள் வகையறாக்களும் பாதுகாக்கப்படுவது.

126. ஒவ்வொரு பஞ்சாயத்தும்,

(i) அந்த கிராமத்தில் பிரைவேட் சொத்துக்களாக இராத எல்லா கிணறுகளையும், குளங்களையும், நீர் நிலைகளையும் சுத்தமான ஸ்திதியில் வைத்திருக்கவேண்டும். இன்னும் அப்படி அவசியமென்று தோன்றும்பக்ஷத்தில் அவைகளை நிரப்பவும் அல்லது வடிக்கவும் செய்யலாம். இன்னும்,

(ii) அந்த கிராமத்தில் பிரைவேட் சொத்துக்களல்லாததும், லோகல் கவர்ன்மென்டினுடைய உத்தரவினாலாவது, அல்லது டிஸ்டிரிக்ட் போர்டினுடைய உத்திரவினாலாவது, தனியாக நிவர்த்திக்கப்படாததும், நீர்ப்பாய்ச்சலுக்காக உள்ள வேலைகளாகவோ அல்லது அவைகளுடன் சம்பந்தப்பட்ட நீரோட்டங்களாகவோ அல்லாததுமான மற்றநீரோட்டங்களைத் தங்கள் அதிகாரத்திற்குள் வைத்திருந்து அவைகளை பரிபாலிக்கவும் பழுது பார்க்கவும் விருத்தி செய்யவும் அவைகளுக்காக வேண்டிய எல்லாவற்றையும் செய்யலாம்.

குப்பை கூளம் முதலியவை வாருவது.

சொந்த மலஜலபாதை மறைவிடங்கள் முதலியவைகளை சுத்தி செய்வது.

127. இன்ன வேளைகளில் இவ்வளவு காலத்துக்கொருதரம், யாதொரு வளவிலிருந்தாகிலும் அதைச் சேர்ந்த யாதொரு இடத்திலிருந்தாகிலும், குப்பையையாவது அசுத்தங்களையாவது குறித்த யாதொரு வகையைச் சேர்ந்த குப்பை அல்லது அசுத்தங்களையாவது அப்புறப்படுத்துவது என்பதைப் பற்றியும் இதர விஷயங்களைப் பற்றியும் யாதொரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டுக்குத் தகுதியாகத் தோற்றுகிற ஷரத்துகளின்படிக்கும்

(a) பாண்டிய மகர் விஷயமாக (1900) 12 C. I. L. R. 92.

மேற்படி ஊழியத்துக்குப் பிடிக்கும் செலவுகள் அடங்கும்படி கணக்கிட்டு பஞ்சாயத்து விதித்திருக்கக் கூடிய வீட்டுப்படி கட்டணம் செலுத்தப்படுவதன்மேலும், அப்படிப்பட்ட வளவிலிருந்தாகிலும் இடத்திலிருந்தாகிலும் மேற்படி குப்பை மூதலியவைகளை அப்புறப்படுத்துவதற்காக அந்த வளவின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரோடு மேற்படி ப்ரெஸிடென்டானவர் ஒப்பந்தம் செய்துக்கொள்ளலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் யாதொரு வீட்டிலிருந்து அல்லது அதைச் சேர்ந்த இடத்திலிருந்து குப்பைகளை வாருவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யலாமென்று கூறுகிறது ஒரு வீட்டுக்கு வெளியேயுள்ள குப்பைகளை லோகல் போர்டானது கட்டாயம் எடுத்தே தீரவேண்டும்

128. ஒரு தாலூக்கா அல்லது கிராமத்தின் ஹத்துக்குள்ளாவது அல்லது அவைகளின் அருகாமையிலாவது ஒரு பகோடி, கோவில், மடம், அல்லது வேறே மத சம்பந்தமான பிரார்த்தனை அல்லது போதனை ஸ்தலம் அல்லது சுத்தைகள் உத்ஸவங்கள் அல்லது இதைப்போன்ற மற்ற காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வரும் யாதொரு ஸ்தலமாவதிருந்து, வருஷ முழுவதிலுமாவது அல்லது சில குறித்த காலங்களிலாவது ஏராளமான நபர்கள் அதனிடம் வருவதாக இருக்கும்பக்ஷத்தில் பொதுஜன ஆரோக்கியத்திற்காவது, க்ஷேமத்திற்காவது அல்லது சௌகரியத்திற்காவது சாஸ்வதமாகவோ அல்லது தாத்காலிகமாகவோ அவசியமாக செய்யவேண்டிய பிரத்தியேக ஏற்பாடுகள், சந்தர்ப்பத்திற்கு தகுந்தாப்போல் தாலூக்கா போர்டினால் அல்லது பஞ்சாயத்தினால் செய்யப்பட வேண்டும். அந்த தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தானது, அந்த ஸ்தலத்திற்கு இநிகாரமுள்ள டிரஸ்டி அல்லது வேறே ஒரு நபரை லோகல் கவர்ன்மெண்டார் நிச்சயிக்கும் பிரகாரம் அடிக்கடி நேரக்கூடியதான அல்லது அப்படி நேரக்கூடியதல்லாத ஒரு உபகாரத் தொகையை தம்முடைய நிதிக்கு கொடுக்கும்படி கேட்கலாம்.

யாத்திரை ஸ்தலங்களின்மேல் அதிகாரமுள்ள நபர்களிடமிருந்து உபகாரத் தொகைகளை பெறுவது

129. யாதொரு வளவின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் எவரும்-யாதொரு அசுத்தங்கள் தேங்கும் குழி - சாக்கடைக்கால் - மலஜலபாதை மறைவிடம் அங்லது லாயத்திலிருந்து வருகிற தண்ணீரையாவது வேறே எவையேனும் அசுத்தங்களையாவது அப்படிப்பட்ட வளவிலிருந்து சாக்கடைக்கால் அல்லது சாக்கடைக்குழி தவிர பொதுவான யாதொரு பாட்டையின் எந்த பக்கத்திலாவது வந்துவிழும்படியாகிலும், பொதுவானயாதொரு பாட்டையின் ஒரு பாகமாயிருக்கிற சாக்கடைக்காலின் பக்கத்திலுள்ள சுவர்கள் அல்லது தரைக்குள் ௸ தண்ணீராவது அசுத்தங்களாவது ஊறுவதனாலே அசங்கியம் அல்லது சங்கடத்தை உண்டாக்கும் விதமாக ௸ வளவிலிருந்து வெளியே வந்து விழும்படியாகிலும் விடக் கூடாது.

அசுத்தங்கள் வெளியில்வந்து விழவொட்டாமல் தடுப்பது.

குறிப்புகள்.

சாக்கடைகளுக்காகவும் மற்ற கழிவு நீர்களுக்காகவும் அவைகளைப் போக்குவதற்கு பார்ட்டிகள் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஜனங்களுக்கு அனாரோக்கியமாய் இருப்பதாக தெருக்களில் ஊரும்படி செய்யக் கூடாது. இப்பிரிவின்கீழ் செய்யப்படும் குற்றத்திற்கு 20-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு

பிரைவேட் சாக்கடைகள்.

129-A. ஒரு பஞ்சாயத்து, ஒரு நோட்டீஸ் மூலமாகயாதொரு கட்டிடத்தின் சொந்தக்காரரை அல்லது அதை அனுபவிப்பவரை பிரைவேட்டாக (அவருக்கு சொந்தமாக) அந்த கட்டிடத்திற்காக சாக்கடைகளை கட்டுவதற்கும், அல்லது பிரைவேட் சாக்கடைகளை மாற்றும்படிக்கும் அல்லது எடுத்து விடும்படிக்கும் கேட்கலாம்.

பிரைவேட் சாக்கடைகளை கட்டும்படிக்கும் எடுத்து விடும்படிக்கும் கேட்பதற்கு அதிகாரம்.

குறிப்புகள்.

இப்பிரிவின்கீழ் செய்யப்படும் உத்தரவை நிராகரிப்பதற்கு 50 ரூபாய் அபராதம் உண்டு.

அபாயகரமான வியாதிகள்.

"அபாயகரமான வியாதி" என்பதன் அர்த்தம்.

130. "அபாயகரமான வியாதி" என்பது 6-வது ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கும் வியாதி என்று அர்த்தமாகும்.

சந்தேகத்துக் கிடமான இடங்களில்பிரவேசிக்க அதிகாரமும், கட்டிடங்களினின்றும் வஸ்துக்களினின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதும்.

131. (1) யாதொரு இடத்தில் அபாயகரமான எந்த வியாதியாகிலும் கண்டிருப்பதாக பிரசித்தியாய்த் தெரிந்திருந்தாலும் சந்தேகிக்கப்பட்டாலும், பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு - பகற்காலத்திலாவது இராக்காலத்திலாவது எப்போதேனும் நோட்டீஸ் கொடாமலாகிலும், தமக்கு நியாயமாகத் தோற்றும் நோடீஸ் கொடுத்த பிறகாகிலும் அந்த இடத்தைப் போய் பார்வையிடலாம்: மேலும் அந்த வியாதி அந்த இடத்துக்கப்பால் பரவுவதைத் தடுக்கும் பொருட்டுத் தமக்கு தகுதியாகத் தோற்றும் ஏற்பாடுகளை அனுசரிக்கலாம்.

(2) தொத்து வியாதியின் சம்பந்தத்தை வெகுசாய் பற்றிக் கொண்டிருக்கத்தக்க யாதொரு வளவையாவது அதன் பாகத்தையாவது அதிலுள்ள எந்த வஸ்துவையாவது சுத்தி செய்வதனாலாகிலும் அதிலிருந்து தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்குவதனாலாகிலும் அபாயகரமான யாதொரு வியாதியைப் பரவவொட்டாமலாயினும்-பின்னும் பரவ வொட்டாமலாயினும் தடுப்பதற்கு ஏதியமிருக்குமென்று ப்ரெஸிடென்ட் அபிப்பிராயப்படுவாராகில், அவர் அனுபோகதாருக்கு நோட்டீஸ் கொடுத்து, அதில் குறிப்பிட்ட விதமாகவும் காலத்துக்குள்ளும் அதைச் சுத்திசெய்ய வேண்டுமென்றுவது அதிலிருந்து தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கவேண்டுமென்றுவது உத்தரவு செய்யலாம்.

(3) ப்ரெஸிடென்டானவர் உடனே பிரவர்த்திக்க வேண்டியது அவசியமென்றுகிலும் வறுமை காரணமாகவாவது மற்றப்படியாவது தாம் கட்டளையிடுகிறபடி சரியாய் நடந்துக்கொள்ள அனுபோகதாருக்கு சாத்தியப்படவில்லையென்றுகிலும் நினைத்தால், ப்ரெஸிடென்டானவர்-நோட்டீஸ் கொடுக்காமலே அந்த இடம் அல்லது வஸ்துவை தாமே சுத்தி செய்விக்கலாம், அல்லது அதிலிருந்து

தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்குவிக்கலாம்; இது காரியத்துக் காக அப்படிப்பட்ட வஸ்துவை அந்த வளவிலிருந்து அப்புறப்படுத்து விக்கலாம்; மேலே கண்ட பிரகாரம் கட்டளையிட்டபடி சரியாய் நடந் துக்கொள்ள வேண்டி அனுபோகதாரர் வறுமை காரணமாக சக்தியற்றி ருக்கவில்லையென்று ப்ரெஸிடென்ட் அபிப்பிராயப்படுவாராகில் ப்ரெஸி டென்டுக்குப் பிடித்த செலவுகள் வேண்டி அனுபோகதாரரிடத்திலிருந்து வசூல் செய்யப்படத் தக்கவைகளாகும்.

(4) (1)-முதல் (3)-உபப் பிரிவுகளினால் ப்ரெஸிடென்டுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் டிஸ்டிரிக்ட்டு ஹெல்த் ஆபீஸராகிலும் அல்லது அவரால் உத்தரவிடப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தரா லாகிலும் செலுத்தப்படலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவின் கீழ் கொடுக்கப்படும் நோட்டீஸை நிராகரிப்பதற்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

132. பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு யாதொரு அபாயகரமான வியாதி காரணமாக தொத்து வியாதி சம்பந்தத் துக்குட்பட்ட வண்டி முதலியவைகளாயாவது வஸ்திரங்களாயாவது படுக்கைகளாயாவது இதர வஸ்துக்களாயாவது இன்ன இடங்களுக்கு அப் புறப்படுத்த வேண்டுமென்றும் இன்ன இடங்க ளில் சுத்தி செய்யவேண்டும் அல்லது அவைக ளிலிருந்து தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கு விக்க வேண்டும் அல்லது மற்றப்படி அவை களை ஒருவகை செய்யவேண்டுமென்றும் விளம்பாம் பிரசுரிக்கலாம்.

இன்ன இடங்களில் சுத்தி செய்ய வேண்டு மென்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்க வேண்டு மென் றும் ப்ரெஸிடென்ட் விளம்பாம் பிரசுரிக்க வேண்டுமென்பது.

(2) ப்ரெஸிடென்டானவர் - அந்தப்படி தொத்துவியாதி சம்பந்தத்தை வெகுசாய்ப் பற்றிக்கொண்டிருக்கத்தக்க படுக்கைகளா யாவது வஸ்திரங்களாயாவது இதரவஸ்துக்களாயாவது அழித்துவிடும் படி கட்டளையிடலாம்; மேலும், கேட்கப்படும் பட்சத்தில், அழிக்கப் பட்ட வஸ்துக்களுக்காக அவர் நஷ்ட ஈடு செய்து கொடுக்க வேண் டும்.

குறிப்புகள்.

இப்பிரிவின்கீழ் செய்யப்படும் உத்தரவுக்குமீறி நடப்பதற்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

133. ஒரு அபாயகரமான வியாதி தமக்கு கண்டிருக்கிறதாக யாதொரு நபருக்குத் தெரிந்தாலும் அந்தப்படி கண்டிருக்கிறதென்று நம்புவதற்குக் காரணம் இருந்தாலும், அவர் - அந்த வியாதி பரவக்கூடிய அபாயம் நேரிடாமல் யாதொரு தொழிலில் பிரவர்த்திக்க அல்லது யாதொரு வர்த்தகம் அல்லது வியாபாரம் நடத்தக்கூடுமானாலன்றி மற்றப்படி யாதொரு தொழிலில் பிரவர்த்திக்கவாவது யாதொரு வர்த்தகம் அல்லது வியாபாரம் நடத்தவாவது கூடாது.

தொத்துவியாதி சம்பந்தத்துக் குட்பட்ட நபர் தொழில் நடத்தக்கூடாதென்று தடுப்பது.

குறிப்புகள்.

ஒரு அபாயகரமான வியாதியுடன் இருந்துகொண்டு யாதொரு வியாபாரம் முதலியவைகளைச் செய்யும் நபருக்கு அவரால் வியாதி பரவும்படியாக இருந்தால் 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு

134. (1) அபாயகரமான யாதொரு வியாதி கண்டிருக்கிற எந்த நபரும் - அந்த வியாதி பரவாதபடி தகுந்த முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யாமல், பொதுவான வண்டி முதலியவைகளில் தம்மை ஏற்றிக்கொண்டு போகும்படி செய்யவாவது அதில் தம்மை ஏற்றிக்கொண்டு போவதற்கு சம்மதிக்கவாவது கூடாது.

அபாயகரமான வியாதிகள் கண்டிருக்கிறவர்களும் பொதுவான வண்டி முதலியவைகளும்.

(2) அபாயகரமான யாதொரு வியாதி கண்டிருக்கிற எந்த நபரும்-தமக்கு அவ்வியாதி கண்டிருக்கிறதென்று யாதொரு பொதுவான வண்டி முதலியதன் சொந்தக்காரருக்காவது அதை ஓட்டுகிறவருக்காவது அதைத் தம் வசத்தில் வைத்திருக்கிறவருக்காவது முன்னதாகத் தெரிவிக்காமலே அந்த வண்டி முதலியதில் பிரவேசிக்கக்கூடாது.

(3) பொதுவான யாதொரு வண்டி முதலியதற்குச் சொந்தக்காரராவது அதை ஓட்டுகிறவராவது அதைத் தம் வசத்தில் வைத்திருக்கிறவராவது (1) - குறிப்பிட்ட உட்பிரிவை மீறி, மேலே கண்டபடி வியாதி கண்டிருக்கிற யாதொரு நபரை அப்படிப்பட்ட வண்டி முதலியதில் தெரிந்து ஏற்றிக்கொண்டுபோகவாகிலும் ஏற்றிக்கொண்டு போகவிடவாகிலும் கூடாது.

(4) பொதுவான வண்டி முதலியவைகளைப் பற்றி அந்தந்த கழகத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற யாதொரு ஆக்டில் இதற்கு விரோதமாய் என்ன சொல்லியிருந்த போதிலும் அதற்கு பாதகமில்லாமலே, பொதுவான யாதொரு வண்டி முதலியதற்குச் சொந்தக்காராவது அதை ஓட்டுகிறவராவது அதைத் தம் வசத்தில் வைத்திருக்கிறவராவது-அப்படிப்பட்ட வண்டி முதலியதனின்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்குவதில் நேரக்கூடிய யாதொரு நஷ்டத்தையும் அதற்கு பிடிக்கக்கூடிய எவையேனும் செலவுகளையும் ஈடுகட்டிக்கொள்வதற்குப் போதுமான ஒரு தொகையை மேலே கண்டபடி வியாதி கண்டிருக்கும் யாதொரு நபர் செலுத்தினாலும் அல்லது செலுத்துவதாகக் காட்டினாலுமன்றி மற்றப்படியும் அப்படி செலுத்தும் அல்லது செலுத்துவதாகக் காட்டும் வரையிலும், அந்த நபரை ஏற்றிக்கொண்டுபோகக் கடமைப்பட்டவராகமாட்டார்.

(5) (1)-குறிப்பிட்ட உபப்பிரிவையாவது (2)-குறிப்பிட்ட உபப்பிரிவையாவது மீறி நடந்ததாக யாதொரு நபரைக் குற்றவாளியென்றும் தீர்மானிக்கும் கோர்ட்டார்-அந்த குற்றத்துக்காக இந்த ஆக்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தண்டனையுடன்கூட, வண்டி முதலியதனின்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கும்பொருட்டு சொந்தக்காரருக்கு அல்லது அதை ஓட்டுகிறவருக்கு நேரிடும் நஷ்டத்தையும் பிடிக்கும் செலவுகளையும் ஈடுகட்டிக் கொள்வதற்குப் போதுமானதென்று கோர்ட்டார் கருதுகிற ஒரு தொகைக்குச் சமமாய் அதிகப்படியான ஒரு அபராதத்தையும் விதிக்கலாம். அந்தப்படி விதிக்கப்பட்ட அதிகப்படியான யாதொரு அபராதத் தொகையைக் கோர்ட்டார்-வண்டி முதலியதன் சொந்தக்காரருக்கு அல்லது அதை ஓட்டுகிறவருக்கு கொடுக்கும்படி தீர்மானிக்க வேண்டும்.

ஆனல், அப்பீலுக்குட்பட்ட ஒரு விஷயத்தில் அப்படிப்பட்ட அதிகப்படியான அபராதம் விதிக்கப்பட்டால், அப்பீலைக்கொடுத்துக் கொள்வதற்காக ஏற்படுத்தியிருக்கும் கால அளவு கழிந்து போவதற்கு முன்னுகிலும், அப்பீல் கொடுத்துக்கொள்ளப்பட்டால், அந்த அப்பீல் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னுகிலும், அந்த தொகையைச் சொந்தக்காரருக்காவது (வண்டியை) ஓட்டுகிறவருக்காவது கொடுக்கக்கூடாது.

(6) அதே விஷயத்துக்குச் சம்பந்தமாய்ப் பின்னிட்டு நடக்கும் யாதொரு சிவில் வியாஜ்ஜியத்தில் காம்பென்சேஷன் தொகையை தீர்மானிக்கும்போது, கோர்ட்டார்-இந்தப் பிரிவின்படி வாதி பெற்றுக்கொண்டிருக்கும் யாதொரு தொகையைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவின்கீழ் உள்ள நிபந்தனைகளை மீறி நடப்பதற்கு 200-ரூபாயும், 50-ரூபாயுமாக அபராதம் உண்டென்று சொல்லப்பட்டுள்ளது. 3-வது உபப் பிரிவின்கீழ் செய்யப்படும் குற்றத்திற்கு 200-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு. மற்ற உபப் பிரிவுகளின்கீழ் செய்யப்படும் குற்றத்திற்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

135. ஒரு கிராமத்திற்குள் யாதொரு அபாயகரமான வியாதி கண்டிருக்கிற பட்சத்திலே, பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு-பொது ஜனங்கள் வேடிக்கையாய்க் கூடும் காரியத்துக்காக உபயோகிக்கப்படும் யாதொரு கட்டடம், கொட்டகை அல்லது கூடாரத்தின் சொந்தக்காரருக்காகிலும் அனுபோகதாரருக்காகிலும் நோட்டீஸ் கொடுத்து, தாம் நிஷ்கரிஷை செய்யக்கூடிய கால அளவுக்கு அதை மூடி வைக்கும்படி உத்தரவு செய்யலாம்.

பொது ஜனங்கள் வேடிக்கைக்காகக் கூடும் இடங்களை மூடி விடும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

குறிப்புகள்.

இப்பிரிவின்கீழ் செய்யப்படும் உத்தரவை மீறி நடப்பதற்கு 200-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

136. அபாயகரமான யாதொரு வியாதி கண்ட அல்லது கண்டிருக்கிற, அல்லது அந்த வியாதியின் தொத்து சம்பந்தத்துக்கு உட்பட்டிருக்கிற ஒரு மைனரின் (வயது வராதவரின்) பெற்றோராகவாவது அவரைக் காப்பாற்றுபவராகவாவது அல்லது அவரை தம் வசத்தில் வைத்திருப்பவராகவாவது உள்ள எந்த நபரும்-அந்த மைனரைப் பாடசாலைக்காகிலும் கலாசாலைக்காகிலும் அனுப்பக்கூடாதென்று பஞ்சாயத்து ப்ரெஸிடென்டினிடமிருந்து அல்லது இது விஷயமாய் அவ

அபாயகரமான வியாதி கண்டிருக்கும் மைனர் (வயது வராதவர்) பாடசாலைக்குப் போகக் கூடாதென்பது.

சால் கிரமமாய் நியமிக்கப்பட்ட யாதொரு நபரிடமிருந்து நோட்டீஸ் பெற்றபிறகு, அப்படிப்பட்ட மைனர் வெடி வியாதி இதரர்களுக்குத் தொத்தும்படியான அபாயம் இல்லாமலே பாடசாலை அல்லது கலாசாலைக்குப் போகலாமென்று தாம் அபிப்பிராயப்படுவதாகக் கண்டு ஒரு ஸெர்ட்டிபிகேட்டை அந்த ப்ரெஸிடெண்டினிடமிருந்தோ வெடி நபரிடமிருந்தோ ரெஜிஸ்டராயிருக்கும் ஒரு வைத்தியாப்பியாசியிடமிருந்தோ பெற்றிராமல், வெடி மைனர் பாடசாலை அல்லது கலாசாலைக்குப்போக அனுமதி கொடுக்கக் கூடாது.

தண்டனைகள்.

இப்பிரிவை மீறி நடப்பதற்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

வைசூரி.

137. (1) இந்த ஆக்ட் பிரயோகப்படும் யாதொரு நபர்விஷயமாகவும் விஸ்தரணத்தின் விஷயமாகவும் நிர்ணயிக்கப்படும் அளவுக்கு அம்மை குத்திக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட வேண்டும்.

அம்மை குத்திக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திப்பது.

(2) காலாக்கா போர்டும் அதன் ப்ரெஸிடெண்டும் - நிர்ணயிக்கப்படக் கூடிய மேல் விசாரணைக்குட்பட்டு, அம்மை குத்திக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்க உத்தரவாதிகளாவார்கள்.

138. யாதொரு குடியிருப்பு இடத்தில் வசிப்பவருக்கு வைசூரி கண்டால், அப்படி வசிப்பவர் எதைச் சேர்ந்தவரோ அந்த குடும்பத்தின் தலைவரும் அவர் தவறினால் அப்படிப்பட்ட இடத்தின் அனுபோகதாரர் அல்லது விசாரணை வகிக்கும் நபரும் - அதைக் குறித்து காலாக்கா போர்டு ப்ரெஸிடெண்டுக்காவது சம்பந்தப்பட்ட கிராம பெரியதனக்காருக்காவது சிறிதும் காலதாமதமில்லாமல் சங்கதி தெரிவிக்கவேண்டும்.

வைசூரியைக் குறித்து சங்கதி தெரிவிக்கக்கடமைப்பட்டிருப்பது.

தண்டனைகள்.

இப்பிரிவில் சொல்லப்பட்டிருப்பவைகளை நிராகரிக்கும் நபருக்கு ஐம்பது ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

வைசூரிக்காக மருந்து குத்திக் கொள்ளக் கூடாதென்று தடுப்பது.

139. (1) வைசூரிக்காக மருந்து குத்திக்கொள்ளக் கூடாதென்று இதனால் தடுக்கப்படுகிறது.

(2) மருந்து குத்திக்கொள்ளும் சிகிச்சை செய்யப்பெற்றிருக்கும் எந்த நபரும் - அப்படிப்பட்ட நபர் தொடுவதனாலாவது அருகில் வருவதனாலாவது வைசூரி இனி வெகுசாய்க் காணுதென்று கண்டு ஒரு ஸெர்ட்டிபிகேட்டை, அப்படிப்பட்ட ஸெர்டிபிகேட்டுகள் கொடுப்பதற்கு தாலூக்கா போர்டாரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய வகுப்பைச் சேர்ந்த வைத்தியாப்பியாசியினிடமிருந்து பெறுமல், மருந்து குத்திக்கொண்ட தேதியிலிருந்து நாற்பது தினங்கள் கழிவதற்குமுன் அவர் இருக்கும் கிராமம் அல்லது பட்டணத்தை விட்டு போகக் கூடாது.

குறிப்புகள்.

வைசூரிக்காக மருந்து குத்திக்கொண்டதிலிருந்து நாற்பது தினங்களுக்குள் டாக்டர் ஸெர்டிபிகேட் இல்லாமல் ஒரு பிரதேச விஸ்தீரணத்தை விட்டுப் போவதற்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

பிரேதங்களை ஒருவகை செய்வது.

புதைப்பதற்கும் தகனஞ் செய்வதற்குமான இடங்களை ரெஜிஸ்டர் செய்வது.

140. (1) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியிலே, பிரேதங்களைப் புதைப்பதற்காவது தகனஞ் செய்வதற்காவது வேறே விதமாய் ஒருவகை செய்வதற்காவது உபயோகிக்கப்பட்டயாதொரு இடத்தின் சொந்தக்காரர் அல்லது அதன் விசாரணை வகிக்கும் நபர் ஒவ்வொருவரும் - அந்த இடம் முன்னதாகவே ரெஜிஸ்டர் செய்யப்படாதிருக்கும் பட்சத்தில், அந்த இடத்தை ரெஜிஸ்டர் செய்வித்துக்கொள்ள பஞ்சாயத்துக்கு விண்ணப்பம் செய்துக்கொள்ள வேண்டும்.

(2) அப்படிப்பட்ட இடத்திற்குச் சொந்தக்காரராவது அதை தம் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கும் நபராவது இல்லையென்று மெ. பஞ்சாயத்துக்குத் தோற்றினால் அந்த பஞ்சாயத்து - அந்த இடத்து விசாரணையை தாங்களே வகித்துக் கொண்டு அதை ரெஜிஸ்டர் செய்யவேண்டும்; அல்லது, டிஸ்டிரிக்ட் போர்டாரின் அனுமதியின்மேல் அதை மூடிவிடலாம்.

பிரேதங்களை ஒரு வகைசெய்வதற்கான இடங்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது.

141. (1) விண்ணப்பம் செய்துக் கொள்வதன்மேல், பஞ்சாயத்திலிருந்து லைசென்ஸ் பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, பொதுவானதாயிருந்தாலும் சரி, ஒருவருக்கே உரித்தானதாயிருந்தாலும் சரி, பிரேதங்களை ஒருவகைசெய்வதற்காக நாதனமாய் எந்த இடத்தையும் ஏற்படுத்தவோ தயார் செய்யவோ கட்டவோ அல்லது உபயோகிக்கவோ கூடாது.

(2) லைசென்ஸுக்காகச் செய்துக்கொள்ளப்படும் மேல் விண்ணப்பத்தோடு, ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டிய இடம் இருக்கிற பிரதேசத்தையும், அதன் எல்லைகளையும், விஸ்தீரணத்தையும், சொந்தக்காரர் அல்லது அதில் பாத்தியதையுள்ள நபர் அல்லது வருப் பாரின் பெயரையும், அதை நிர்வகிப்பதற்கான ஏற்பாட்டையும், பஞ்சாயத்து கேட்கக்கூடிய இதர விவரங்களையும் கண்டு அந்த இடத்தின் ஒரு நக்ஷாவை அனுப்பவேண்டும்.

(3) விண்ணப்பம் செய்து கொள்ளப்படுகிற ஒரு பஞ்சாயத்தானது,

(a) ஒரு லைசென்ஸை கொடுக்கலாம் அல்லது கொடுப்பதில்லையென்று நிராகரிக்கலாம்; அல்லது,

(b) அந்த நிவேசனத்துக்குள் ஆட்சேபனைகள் நிவர்த்தியாகும் வரையிலாவது தாங்கள் கேட்கும் எவையேனும் விவரங்கள் சமர்ப்பிக்கப்படும் வரையிலாவது லைசென்ஸ் கொடுப்பதை நிறுத்திவைக்கலாம்.

(4) (3) குறிப்பிட்ட உபப் பிரிவின்படி பஞ்சாயத்தால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவை லோகல் கவர்ன்மென்டார் ரத்து செய்யலாம் அல்லது திருத்தலாம்.

குறிப்புகள்.

புதியதாக ஸ்மசானங்களை ஏற்படுத்துவதாயிருக்கும்பக்ஷத்தில் அதற்கு பஞ்சாயத்தினுடைய உத்தரவுவேண்டும். ஆனால் இந்த நிபந்தனையானது ஒரு "கிராமம்" என்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் விஸ்தீரணத்திற்குள் எதாவது ஸ்மசானம் ஏற்படுவதாலுல்தான் அனுசரிக்கப்பட வேண்டுமேயொழிய மற்ற இடங்களில் அனுசரிக்கப்படவேண்டிய அவசியமில்லை. அதாவது எந்த இடங்களில் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் உள்ளதோ அந்த இடங்களில்தான் இப்பிரிவின் நிபந்தனைகள் பிரயோகமாகும். மற்ற இடங்களுக்கு தனியாக லைசென்ஸ் என்பது அவசியமில்லை.

இப்பிரிவின் நிபந்தனைகளுக்கு மீறி நடக்கும் நபர்களுக்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

புதைப்பதற்கும் தகனம் செய்வதற்குமான இடங்களையும் பிரேதங்களைத் தகிப்பதற்கான உலைக்கூடங்களையும் ஏற்படுத்துவது.

142. பஞ்சாயத்தானது புதைக்கு மிடங்களாகவோ தகனம் செய்யு மிடங்களாகவோ பிரேதங்களை தகிப்பதற்கான உலைக்கூடங்களாகவோ உபயோகமாகும்படியான இடங்களை கிராம பண்டின் செலவில் ஏற்படுத்தலாம்; மேலும், அவர்கள்-மேலே கண்ட விஷயங்களுக்குப் போதுமான ஏற்பாடு இராவிட்டால் அவ்வேற்பாடுகளை செய்யவேண்டும்; அல்லாமலும், அவைகளை உபயோகிப்பதற்காக வாடகைகளும் கட்டணங்களும் விதித்து வாங்கலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவின்கீழ், ஒரு கிராமத்திற்கு ஸ்மசானங்களை ஏற்படுத்துவதற்காக பஞ்சாயத்திற்கு உரிமை யுண்டென்பதல்லாமல், பஞ்சாயத்தானது யாதொரு கிராமத்தில் ஸ்மசானங்கள் இல்லாவிட்டால் அவைகளுக்காக இடங்களை ஏற்பாடு செய்வதற்கு கடமைப்பட்டவராவார்கள். சில பரிக் கிரம சட்டத்தின்கீழ் நிலங்களை கட்டாயமாய்ப்பெற பஞ்சாயத்துகளுக்கு உரிமையுண்டு. 66-வது பிரிவைப்பார்க்க.

அந்தப்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டாவது லைசென்ஸ் கொடுக்கப் பட்டாவது ஏற்படுத்தப் பட்டாவது இருக்கிற இடங்களைக் குறித்து ஒரு புஸ்தகம் வைக்க வேண்டுமென்பது.

143. (1) ஒவ்வொரு பஞ்சாயத்து ஆபீஸிலும் பஞ்சாயத்து ஒரு புஸ்தகம் வைத்து, அதில் 140-முதல் 142-வரையிலுள்ள பிரிவுகளின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டாவது லைசென்ஸ் கொடுக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவதிருக்கிற இடங்களையும் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்னே ரெஜிஸ்டர் செய்யப்பட்டாவது லைஸென்ஸ் கொடுக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவதிருக்கிற அப்படிப்பட்ட சகல இடங்களையும் தாக்கல் பண்ணவேண்டும்.

(2) அப்படிப்பட்ட இடம் மேலே சொன்னபடி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்றாவது லைஸென்ஸ் கொடுக்கப் பெற்றிருக்கிறதென்றாவது ஏற்படுத்தப்பட்டிருக்கிற தென்றாவது கண்டுள்ள நோடீஸ் ஒன்றை, இங்கிலீஷ் பாஷையிலும் குறைந்தது ஒரு

சுதேச பாஷையிலும், புதைக்கும் அல்லது தகனம் செய்யுமிடை இடத்தின் அல்லது மேலே சொல்லப்பட்ட வேறே யாதொரு இடத்தின் நுழைவாயிலிலாவது அதற்குச் சமீபமாகவாவது நன்றாய்த்தெரியும்படியான ஒரு இடத்தில் ஒட்டவேண்டும்.

144. யாதொரு குடியிருப்பு வீடு அல்லது குடிக்கும் தண்ணீரிருக்கும் இடத்திலிருந்து 100-கெஜ தூரத்திற்குள்ளே, மேலேகண்டபடி ரெஜிஸ்டர் செய்யப்பட்டாவது லிஸென்ஸ் கொடுக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவ திருக்கிற யாதொரு இடமல்லாத வேறே எந்த இடத்திலாயினும் எவரும் யாதொரு பிரேதத்தைப் புதைக்கவும் கூடாது, தகனம் செய்யவுங்கூடாது, மற்றப்படி ஒருவகை செய்யவுங்கூடாது; அல்லது, புதைக்கும்படியோ தகனம் பண்ணும்படியோ அல்லது மற்றப்படி ஒருவகை பண்ணும்படியோ செய்யவும் கூடாது; அல்லது புதைக்கவாகிலும் தகனஞ் செய்யவாகிலும் மற்றப்படி ஒருவகை செய்யவாகிலும், பார்த்துக் கொண்டிருக்கவும் கூடாது.

அனுமதி கொடுக்கப்பட்டிராத இடங்களில் (பிரேதத்தைப்) புதைக்கக் கூடாதென்றுவது தகனம்செய்யக் கூடாதென்றுவது தடுப்பது.

ஆனால் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ப்ரெஸிடென்டின் அனுமதியை எழுத்து மூலமாகப் பெறாமல், இந்தப் பிரிவிற் கண்ட நிபந்தனைகளை மீறி நடப்பதற்காக எவர்மேலும் பிராது தொடரக் கூடாது.

குறிப்புகள்.

இப்பிரிவின்கீழ் செய்யப்படும் குற்றத்திற்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு. யாதொரு நபர் மற்றொருவர் பேரில் பிரைவேட்டாக தாவா செய்வதானால் அதற்கு முன் பிரஸிடென்டின் அனுமதியைப் பெற வேண்டும்.

145. பிரேதங்களை ஒருவகை செய்வதற்காக ஏற்பட்ட இடத்தை தம் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபர் - அந்த இடத்தில் பிரேதத்தைப் புதைக்கிற அல்லது தகனம் செய்கிற அல்லது மற்றப்படி ஒரு வகை செய்கிற சகல விஷயங்களைக் குறித்தும் சம்பந்தப்பட்டபஞ்சாயத்தால் இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் யாதொரு நபருக்குத் தெரிவிக்க வேண்டும்.

பிரேதங்களைப் புதைப்பது மு தலிய வைகளைப்பற்றி லோகல் போர்டாருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்பது.

குறிப்புகள்.

இப்பிரிவின்கீழ் செய்யப்படும் குற்றத்திற்கு 20-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

தேகாரோக்கியத்திற்கு அபாயகரமான அல்லது அமிதமாய்ப் பிரேதக் குழிகள் நிறைந்துள்ள புதைக்கும் இடங்களையும் தகனம் செய்யும் இடங்களையும் உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பது.

146. (1) (a) பிரேதங்களை ஒருவகை செய்வதற்காக ரெஜிஸ்டர் செய்யப்பட்ட அல்லது லிசென்ஸ் கொடுக்கப்பெற்ற யாதொரு இடமானது அதன் சமீபத்தில் வசிப்பவர்களுடைய தேகாரோக்கியத்திற்கு அபாயத்தை உண்டாக்கும் அல்லது வெகுசாய் உண்டாக்கக் கூடிய ஸ்திதியில் அல்லது ஸ்தானத்தில் இருக்கிறதென்றாகிலும்,

(b) யாதொரு புதைக்குமிடத்தில் அமிதமாய் பிரேதக்குழிகள் நிறைந்திருக்கிறதென்றாகிலும்,

யாதொரு பஞ்சாயத்துக்குத் திருப்திகரமாய்த் தெரிந்திருந்து,

பொதுவான புதைக்குமிடம் அல்லது தகனஞ்செய்யும் இடத்தின் விஷயத்திலாவது மேற்கண்ட வேறே இடத்தின் விஷயத்திலாவது பிரேதங்களை ஒருவகை செய்ய கிரமமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்ற வசதியான வேறொரு பூமி ஷெட் இடத்தைச் சாதாரணமாய் உபயோகிப்பவர்களுக்காக ஏற்கெனவே இருந்தாலும் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அவர்கள் — டிஸ்டிரிக்ட் போர்டாருடைய அனுமதியை முன்னதாய்ப் பெற்றுக்கொண்டு, இரண்டு மாதத்துக்குக் குறையாமல் நோட்டீஸிற் கண்ட ஒரு கால அளவுக்குப் பிறகு ஷெட் இடத்தில் யாதொரு பிரேதத்தைப் புதைப்பதோ அல்லது தகனம் செய்வதோ அல்லது வேறே விதமாக ஒருவகை செய்வதோ சட்ட சம்மதமாகாதென்று நோட்டீஸ் கொடுக்கலாம்.

(2) (1)—குறிப்பிட்ட உபப்பிரிவின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு நோட்டீஸையும், டிஸ்டிரிக்ட்டு கெஜட்டிலும் சம்பந்தப்பட்ட கிராமத்திலும் தண்டோரா மூலமாயும் பிரசித்தம் செய்ய வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு நோட்டீஸுக்கு விரோதமாகவும் அந்த நோட்டீஸில் குறிப்பிடப்பட்ட

கால அளவு கழிந்தபிறகும் எந்த நபரும் - அந்த இடத்தில் யாதொரு பிரேதத்தைப் புதைக்கவும் தகனம் செய்யவும் கூடாது, தகனம் செய்யவும் கூடாது, மற்றப்படி ஒருவகை செய்யவுங்கூடாது ; அல்லது அந்தப் பிரகாரம் புதைக்கும்படியோ தகனம் பண்ணும்படியோ அல்லது மற்றப்படி ஒருவகைப் பண்ணும்படியோ செய்யவுங்கூடாது, அல்லது அதற்கு அனுமதி கொடுக்கவும் கூடாது.

(4) (1)-குறிப்பிட்ட உபப் பிரிவின்படி யாதொரு பஞ்சாயத்தினால் கொடுக்கப்பட்ட எந்த நோட்டீஸையாகிலும் பிரதேச கவர்ன்மென்டார் ரத்து செய்யலாம் அல்லது திருத்தலாம்.

தண்டனைகள்.

இப்பிரிவின்கீழ் செய்யப்படும் குற்றத்திற்கு நூறு ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு. யாதொரு நபர் இப்பிரிவின்கீழ் தண்டிக்கப்படுவதற்கு முன் இப்பிரிவில் கண்டபிரகாரம் டில்டிரிக்ட்டு கெஜட்டில் நோட்டீஸ் பிரசுரம் செய்யப்பட்டதாகவும் அந்த கிராமத்தில் பஹிரங்கமாக தமுக்கு மூலமாக அறிக்கை யிடப்பட்டதாகவும் ருசு ஏற்படவேண்டும்.

9-வது அத்தியாயம்.

அபாயகரமான கட்டுக்கோப்புகளும், மரங்களும், இடங்களும்.

147. (1) ஒரு பொதுவான பாட்டைக்குப் பக்கத்திலிருக்கிற யாதொரு கட்டுக் கோப்பானது பாழடைந்த நிலைமையிலிருப்பதாகவும் அதன் பக்கமாகப் போகிறவர்களுக்கு அபாயகரமாக இருப்பதாகவும், அந்த பாட்டை எந்த லோகல் போர்டாரிடத்தில் சங்கமித்து இருக்கிறதோ அந்த லோகல் போர்டின் ப்ரெஸிடென்டுக்குத் தோற்றினால், அந்த ப்ரெஸிடென்டானவர் - அப்படிப்பட்ட கட்டுக் கோப்பினால் அபாயம் எதுவும் நேரிடாமல் தடுக்கும் பொருட்டு அதை விழாமல் தடுக்கும்படியாவது அதை அழித்துவிடும்படியாகவாவது பத்திரமாக வைக்கும்படியாகவாவது மராமத்து செய்யும்படியாகவாவது நோட்டீஸ் மூலமாக அதன் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு உத்தரவு செய்யலாம்.

அபாயகரமான கட்டுக்கோப்புகளின் விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள்.

(2) உடனே நடவடிக்கை நடத்துவது அவசியமானால் ப்ரெஸிடென்டானவர் - மேலே கண்டபடி நோட்டீஸ் கொடுப்பதற்கு முன்னிலும் அந்த நோட்டீஸ் கண்ட காலம் கழிவதற்கு முன்னிலும், தாமே மேற்படி கட்டுக்கோப்பு விழாமல் தடுக்கவாவது, அழித்துவிடவாவது, பத்திரமாய் வைக்கவாவது, மராமத்து செய்யவாவது வேண்டும்; அல்லது யாதொரு பாட்டையின் ஒரு பாகத்தை விழாமல் தடுக்க வேண்டும்; அல்லது அபாயத்தை தடுப்பதற்காகத் தமக்கு தகுதியாகத் தோற்றும் சிறிது காலத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்; மேலும், அப்படி செய்வதற்கான செலவானது - இதில் பின்னல் நிபந்தனை கண்டிருக்கிறவிதமாய் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரிடத்திலிருந்து வசூலிக்கத் தக்கதாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது லோகல்போர்டு ப்ரெஸிடென்டுகள் அபாயகரமான கட்டிடங்களைப்பற்றி முன்னெச்சரிக்கையாக இருந்து அவைகளை அடைப்படைத்து விடும்படியாகவாவது அல்லது பிரித்து விடும்படியாகவாவது பழுது பார்க்கும்படியாகவாவது நோட்டீஸ் கொடுக்கலாம் என்றுகூறுகிறது. அவசர சமயங்களில் பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் அபாயத்தை தவிர்ப்பதற்காக யாதொரு நோட்டீஸுமில்லாமல் தாமே தம்முடைய சொந்த பொறுப்பில் தகுந்த நடவடிக்கைகளைச்செய்து அதனால் நேர்ந்த செலவை, அந்தக் கட்டிடத்தின் சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்கலாம் என்றும் உள்ளது.

ப்ரெஸிடென்டுகள் இப்பிரிவின்கீழ் தமது அதிகாரத்தைச் செலுத்துவதில் மிகவும் கருத்துடனும் பிரஜைகளுக்கு வீண்கஷ்டம் கொடாமலும் செலுத்தவேண்டும். யாதொரு கட்டிடம் மிகவும் பாழடைந்ததாகவும் பாதைகளின் பக்கமாக போகிறவர்களுக்கு அபாயமாகவும் இருப்பதாக நினைப்பதற்குச் சரியான காரணங்கள் இருக்கவேண்டும். ஒரு ப்ரெஸிடென்டு தமக்குள்ள அதிகாரத்தை வேணுமென்று சுய இச்சையாகவும் யாதொரு நிதானமில்லாமலும் யாதொரு நபரை கஷ்டப்படுத்தவேண்டுமென்றும் செலுத்தி வரும்பக்ஷத்தில் அதன் விஷயமாக சிவில் கோர்ட்டில் யாதொரு தாவா செய்யப்படும்பக்ஷத்தில், சிவில் கோர்ட்டார் பரிஹாரம் கொடுக்கலாம். (a)

இப்பிரிவில் "பாட்டையின் பக்கத்திலிருக்கிற" என்னும் பதங்களினால் ஒரு பொதுவான பாட்டை அல்லது பாதைக்கு அடுத்தாப்போல் பக்கத்தில் உள்ள என்று அர்த்தமாகும்.

(a) பந்தர் தாலூக்காபோர்டு vs. மல்லிகார்ஜுன பிரசாத ராயுடு 61 I. C. 497=40 M. L. J. 91.

யாதொரு கட்டிடம் அல்லது கட்டுக்கோப்பை ரிபேர் செய்ததற்காக வாவது அல்லது இடிக்க அல்லது அடைப்படைக்கவாவது நேரிட்ட செல்வு களை வசூல் செய்யும் விஷயமாக அனுசரிக்கப்பட வேண்டிய முறையை 221-வது பிரிவின்கீழ் உள்ள குறிப்புகளைப் பார்க்க.

இப்பிரிவின்கீழ் கொடுக்கப்படும் நோட்டீலை நிராகரிப்பதற்கு 500-ரூபாய் வரையிலும் அபராதமுண்டு. ஒருதரம் தவறினால் பிறகு ஒவ்வொரு நாளுக்கும் 50-ரூபாய் அபராதம் உண்டு.

அபாயகரமான மரங்கள் விஷயத்தில் முன் னெச்சரிக்கையான ஏற்பாடுகள்.

148. (1) ஒரு பொதுவான பாட்டைக்குப் பக்கத்தி லிருக்கிற நிலத்திலுள்ள யாதொரு மரமாவது, மரத்தின் யாதொரு கிளையாவது விழும்போலிருக்கிற தென்றும் அதனால் அந்த பாட்டையை உபயோகிக்கிற யாதொரு நபருக்காவது அந்தபாட்டையின்மேலுள்ள யாதொரு கட்டுக்கோப்புக் காவது அபாயம் நேரிடும்போல் இருக்கிறதென்றும் அந்த பாட்டை ஏந்த லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்து இருக்கிறதோ அந்த லோகல் போர்டின் ப்ரெஸிடென்டுக்குத் தோற்றினால், அந்த ப்ரெஸிடென்டானவர் - ஷை மரத்தினால் எவ்வித அபாயமும் நேரிடாமல் தடுக்கும் பொருட்டு அதை பத்திரமாய் வைக்கும்படியாயினும் அதன் கிளைகளைக் கழிக்கும்படியாயினும் அதை வெட்டி விடும்படியாயினும் நோட்டீஸ் மூலமாக அந்த மரத்தின் சொந்தக்காரருக்கு உத்திரவு செய்யலாம்.

(2) உடனே நடவடிக்கை நடத்துவது அவசியமானால், ப்ரெஸிடென்டானவர் - மேலே கண்டபடி நோட்டீஸ் கொடுப்பதற்கு முன்னுவது ஷை நோட்டீஸில் கண்ட காலம் கழிவதற்கு முன்னுவது தாமே ஷை மரத்தைப் பத்திரமாய் வைக்கவாகிலும் அதன் கிளைகளைக் கழிக்கவாகிலும் அதை வெட்டிவிடவாகிலும் வேண்டும்; அல்லது, ஷை பொதுவான பாட்டையில் ஒரு பாகத்தை விழாமல் தடுக்கும் படிச் செய்யவேண்டும், அல்லது அபாயத்தைத் தடுப்பதற்காகத் தமக்குச் சரியாகத் தோற்றுகிற சிறிது காலத்துக்கான இதர ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்; மேலும், அப்படி செய்வதற்கான செலவானது இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் ஷை மரத்தின் சொந்தக்காரரிடத்திலிருந்து வசூலிக்கத் தக்கதாகும்.

குறிப்புகள்.

147-வது பிரிவானது அபாயகரமான கட்டிடங்களைப்பற்றி கூறுகையில், இப்பிரிவானது அபாயகரமான மரங்களைப்பற்றியும் அவைகளை அல்லது அவைகளின் கிளைகளை வெட்டி விடுவதைப்பற்றியும் ப்ரெஸிடென்டுகளுக்கு உள்ள அதிகாரத்தைப்பற்றி கூறுவதாகும். அபாயகரமான மரங்களை ஒரு லோகல்போர்டு ப்ரஸிடென்டானவர் தாமாகவே வெட்டிவிடும் பக்ஷத்தில் அதை 155-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் விற்பனை செய்து அதை வெட்டின செலவுகளைப் பெறவேண்டும்.

வேண்டும்.

இப்பிரிவின்கீழ்கொடுக்கப்படும் நோட்டீஸைநிராகரிப்பதற்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு. முதலாக தவறியதினத்திற்கு 50-ரூபாயும் பிறகு தவறுதல் நேரிடும் ஒவ்வொரு நாளுக்கும் 10-ரூபாயும் அபராதம் உண்டு.

149. எந்த லோகல் போர்டாரிடத்தில் யாதொரு பொதுவான பாட்டை சங்கிரமித்திருக்கிறதோ அந்த லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர் - அந்த பாட்டைக்கு அருகிலுள்ள யாதொரு கட்டடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரருக்காகிலும் அனுபோகதாரருக்காகிலும் நோட்டீஸ் கொடுத்து அதன் மூலமாக அவரை—

கட்டடங்கள் அல்லது நிலங்களுக்கு அடைப்படைத்து வைப்பதும், வேலிகளையும் மரங்களையும் தறிப்பதும்.

(a) ப்ரெஸிடென்டுக்குத் திருப்திகரமாய் அந்த கட்டிடம் அல்லது நிலத்துக்கு அடைப்படைக்கும்படியாவது,

(b) ஷை பாட்டையின் ஓரமாயிருக்கிற எந்தவேலிகளாகிலும் அடுத்துள்ள ரஸ்தாவின் மட்டத்துக்குமேல் ப்ரெஸிடென்ட் நிச்சயிக்கக்கூடிய உயரத்துக்கு மிஞ்சியிராதபடி அவைகளைத்தறிக்கும்படியாவது, அல்லது கழிக்கும்படியாவது,

(c) ஷை பாட்டையில் சாய்ந்து தொங்கிக்கொண்டு அதற்காவது போக்குவரத்தை பார்ப்பதற்காவது இடைஞ்சல் உண்டு பண்ணுவதாகவாகிலும் அதற்குச்சேதமுண்டுபண்ணுவதாக வாகிலுமிருக்கிற எவையேனும் வேலிகள் அல்லது மரங்களை வெட்டிச் சீர்ப்படுத்தும்படியாவது,

(d) அதைச் சுற்றியிருக்கும் சுவராவது அடைப்பாவது அதன் உயரம் காரணமாகவும் நிலைமை காரணமாகவும் அபாயம் விளைவிக்கும் விதமாக போக்குவரத்தைப் பார்க்கக்கூடாதபடி இடைஞ்சல் உண்டுபண்ணினால், அந்த சுவர் அல்லது அடைப்பைத் தாழ்த்தும்படியாவது.

உத்திரவு செய்யலாம்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது பொது பாதைகளுக்கு அடுத்தாப்போலுள்ள கட்டிடங்களுக்கும் நிலங்களுக்கும் அடைப்படைத்து செடிகளை தடிக்கும்படிக்கும் ப்ரெஸிடென்டு உத்தரவிடலாம் என்று கூறுகிறது. இப்பிரிவினால், ப்ரெஸிடென்டுகளுக்கு, எவ்விதமாகவாவது பொதுஜனங்களுக்கு அபாயம் நேரிடாதபடி தகுந்த உத்தரவுகளைச் செய்வதற்கு அதிகாரம் ஏற்படுவதாகும்.

இப்பிரிவின்கீழ் கொடுக்கப்படும் நோட்டீஸ்களை கிராகரிப்பதற்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

150. (1) யாதொரு குளம், குட்டை, கிணறு, குழி, ஓடை, அணை, கரை அல்லது இதர இடமானது போதுமான மராமத்து செய்யப்படாமலாவது, போதுமானபடி பாதுகாக்கப் படாமலாவது அடைப்படைக்கப்படாமலாவது இருப்பதனால் அது பொதுஜன ஆரோக்கியத்துக்காகிலும் பத்திரத்துக்காகிலும் அபாயகரமாயிருப்பதாக பஞ்சாயத்தினுடைய ப்ரெஸிடென்டுக்குத்தோற்றினால், டிஷ ப்ரெஸிடென்டானவர் - பஞ்சாயத்தினுடைய சம்மதத்தைக்கொண்டு அதனால் அபாயம் நேரிடாமல் தடுக்கும் பொருட்டு அதைத் தூர்க்கும்படியாயினும், அப்புறப்படுத்தும்படியாயினும், மராமத்து செய்யும்படியாயினும், பாதுகாக்கும்படியாயினும், அதற்கு அடைப்படைக்கும்படியாயினும் நோட்டீஸ் மூலமாக அதன்சொந்தக் காரருக்கு உத்தரவு செய்யலாம்.

அபாயகரமான குளங்கள், கிணறுகள், குழிகள் முதலியவை விஷயத்தில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள்.

(2) உடனே நடவடிக்கை நடத்துவது அவசியமானால், அவர் டிஷ நோட்டீஸ்கொடுப்பதற்கு முன்னுவது நோட்டீஸில்கண்ட கால அளவு கழிவதற்கு முன்னுவது அபாயத்தைத் தடுப்பதற்காகத் தமக்கு அவசியமாய்த் தோற்றும் சிறிது காலத்துக்கான ஏற்பாடுக

லைத் காமே செய்யவேண்டும்; மேலும், அப்படி செய்வதற்கான செலவானது, இதில் பின்னல் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய்ச் சொந்தக்காரரிடத்திலிருந்து வசூலிக்கத் தக்கதாகும்.

தபிப்புகள்.

இப்பிரிவுக்கும் 123-வது பிரிவிற்கும் அதிக வித்தியாசம் கிடையாது. யாதொரு குளம், குட்டை, கிணறு, ஓடை முதலியவை பொது ஜன ஆரோக்கியத்திற்கு மாத்திர மில்லாமல், அவர்களுடைய பத்திரத்திற்கு கெடுதி நேரிடும்போல் இருக்கும்பக்ஷத்தில், பஞ்சாயத்துப்ரெஸிடெண்டு பஞ்சாயத்தினுடைய முன் உத்தரவைக்கொண்டு அவைகளின் சொந்தக்காரருக்கு அவைகளை தூர்த்துவிடும்படியாகிலும் அப்புறப்படுத்தும்படியாகிலும் மராமத்து செய்யும்படியாகிலும் பாதுகாக்கும்படியாகிலும் நோட்டீஸ் கொடுக்கலாம். 123-வது பிரிவின்கீழ் நோட்டீஸ் கொடுக்குமிடத்துப்ரெஸிடெண்டானவர் பஞ்சாயத்தினுடைய உத்தரவை நாடாமலே செய்யலாம். ஆனால், இந்தப் பிரிவின்கீழ் யாதொரு நபருக்கு நோட்டீஸ் கொடுக்குமுன் ப்ரெஸிடெண்டானவர் பஞ்சாயத்தினுடைய முன் உத்தரவைப் பெறவேண்டும். அப்படிப் பெறுமல் கொடுக்கும் நோட்டீஸ் செல்லத்தக்கதல்ல.

இப்பிரிவின்கீழ் செய்யப்படும் யாதொரு நோட்டீசை நிராகரிக்கும் பக்ஷத்தில் அவருக்கு ஐம்பது ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

151. (1) (a) யாதொரு பொதுவான பாட்டைக்காவது லோகல் போர்டாருக்குச் சொந்தமான வேறே அசையாப் பொருளுக்காவது இருபது கெஜ தூரத்துக்குள்ளாக இருக்கும் யாதொரு இடத்திலிருந்து கல் வெட்டியெடுப்பதற்கோ கல்லாகிலும், மண்ணாகிலும் வேறே, வஸ்துவாகிலும் அப்புறப்படுத்துவதற்கோ தமக்கு அனுமதி கொடுத்து லோகல் போர்டாரிடமிருந்து லிஸென்ஸ் பெற்றுக்கொள்ளாமல் எவரும் மேற் இடத்தில் கல் வெட்டி எடுக்கவுங் கூடாது, கல் முதலியவைகளை அப்புறப்படுத்தவுங்கூடாது.

பொதுவான பாட்டைக்குச் சமீபமாய்க் கல் வெட்டியெடுப்பது முதலியவைகளுக்காக லிஸென்ஸ் பெறவேண்டுமென்பது.

(b) லோகல் போர்டார் ஒரு லிஸென்சை கொடுக்கலாம்; அல்லது லிஸென்ஸை கொடுப்பதில்லை யென்று நிராகரிக்கலாம்.

(2) யாதொரு கல்வெட்டியெடுக்கும் இடத்தில் வேலை செய்வதானது யாதொரு இடத்திலிருந்து கல்லையாகிலும், மண்ணையாகிலும், இதர வஸ்துவையாகிலும் அப்புறப்படுத்துவதாவது அதன்

அக்கம்பக்கத்தில் வசிக்கிற அல்லது அங்கு போகக்கூடியவர்களா யிருக்கிற நபர்களுக்கு அபாயம்மாயிருக்கிற தென்றுயினும், யாதொரு அசங்கியம் அல்லது சங்கடத்தை உண்டுபண்ணுகிறது அல்லது வெகுசாய் உண்டுபண்ணக் கூடுமென்றுயினும் லோகல் போர்டார் அபிப்பிராயப்பட்டால், அந்த போர்டார் - மேடை கல்வெட்டி யெடுக் கும் இடத்தில் வேலை செய்வதை நிறுத்திவிட வேண்டுமென்றுவது, மேடை இடத்திலிருந்து கல்லையாகிலும், மண்ணையாகிலும், இதர வஸ்து வையாகிலும் அப்புறப்படுத்துவதை நிறுத்திவிட வேண்டுமென்று வது, அந்த இடத்திலிருந்து உண்டாகும் அல்லது வெகுசாய் உண் டாகக் கூடிய அபாயத்தைத் தடுப்பதற்காயினும் அசங்கியம் அல் லது சங்கடத்தைக் குறைப்பதற்காயினும் தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிறபடி அந்தக் கல்வெட்டி யெடுக்குமிடம் அல்லது வேறே இடத்தின் விஷயமாய் ஒழுங்கு ஏற்படுத்த வேண்டுமென்றுவது அதன் சொந்தக்காரருக்காகிலும் அதை தம்முடைய ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டு ஆண்டுவரும் நபருக்காகிலும் உத்தரவு செய்ய லாம்.

குறிப்புகள்.

கற்களை பூமியிலிருந்து வெட்டுவது, கற்களை வெட்டு மிடங்களின் அருகாமையிலுள்ள பாதைகளுக்கு அபாயம் நேரிடுமாதலால் ஒரு லோகல் போர்டினுடைய முன்உத்தரவைப்பெற்றபிறகுதான் ஒரு நபர் பூமியிலிருந்து கல் வெட்டுவதற்கு ஆரம்பம் செய்யலாம். கல் வெட்டுவதற்காக லைசென்ஸ் கொடுப்பதற்கு, ஒரு லோகல் போர்டுக்குத் தான் அதிகாரம் உண்டு. ப்ரெஸி டென்டு தனியாக யாதொரு லைசென்ஸும் கொடுப்பதற்கில்லை. யாதொரு கல் வெட்டுமிடமானது, பொதுஜனங்களுக்கு அபாயமாக இருந்தால் அதை லோகல்போர்டானது தடுப்பதற்கு உரிமையுண்டு

ஒரு லோகல்போர்டு, யாதொரு லைசென்ஸை கொடுப்பதென்றால் - ஒரு மீட்டிங்கில் ஒரு லோகல் போர்டினுடைய அங்கத்தினர்கள், ஒரு மீட்டிங் கூடாமல் தனித்தனியாக தம் வீட்டிலிருந்தே ஒரு தீர்மானத்தை செய் வது, சட்ட விரோதமானதாகும். ஒவ்வொரு லோகல்போர்டு அங்கத்தி னரும் லோகல்போர்டினுடைய காரியங்களை நடத்தும் பகுதியில் அவை செல்லத்தக்கினதல்ல. (a)

லைசென்ஸில்லாமல் ஒரு பாதைக்கு 20 கெஜத்திற்குள் கற்களை-வெட்டு வது ஒரு குற்றமாகும். அதற்கு VIII-வது ஷெட்யூல்படி முதல் தடவைக்கு

(a) T. சிவசங்கரம்பிள்ளை vs. இந்தியா சக்ரவர்த்தி 56 M. L. J. 157= 1929 A. I R. Mad. 8—1 அகில இந்தியா லா ஜெர்னல் பக்கம் 6.

50-ரூபாய் அபராதமும் பிறகு ஒவ்வொரு நாளைக்கும் 10-ரூபாய் அபராதமும் உண்டு.

ஒரு பாட்டை அல்லது பாதைக்கு 20-கெஜத்திற்கு அப்பால் யாதொரு நபர் லைசென்சில்லாமல் கல் வெட்டுமிடத்து அது ஒரு குற்றமென கவனிக்கப்பட்டும். ஆனால், பொதுவாக எந்த இடத்திலாவது கல் வெட்டுவதானது அக்கம் பக்கத்திலுள்ள நபர்களுக்கு அபராதத்தை உண்டாக்கக்கூடியதாகவோ அல்லது தொந்திரவை விளைக்கக்கூடியதாகவோ இருக்கும்பக்ஷத்தில் அதைத்தடுத்து வெட்டவொட்டாமலிருக்கும்படியோ அல்லது கல்லை வேறே இடத்திலிருந்து வெட்டும்படியோ உத்திரவு செய்யலாம். இதற்கும் ஒரு லோகல்போர்டினுடைய அதிகாரமானது நேரில் செலுத்தப்பட வேண்டுமேயொழிய ப்ரெஸிடென்டு தன் இஷ்டப்பிரகாரம் செய்வதற்கில்லை. ஒரு நபர் யாதொரு இடத்திலிருந்து கல் வெட்டிக்கொண்டிருக்கையில், கூடாது என்று ஒரு லோகல்போர்டாரால் தடுக்கப்படலாம், அப்படி தடுக்கப்பட்டும், அவர் கற்களை வெட்டிக்கொண்டே யிருந்தால் அதற்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு. ஒரு பாதை அல்லது பாட்டைக்கு அருகில் 20-மைல்களுக்குள் லைஸென்சில்லாமல் யாதொரு நபர் கல் வெட்டிக்கொண்டிருப்பின் அதற்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு. ஒருதரம் அபராதம் போட்டும் மறுபடியும் கல்வெட்டிக் கொண்டே யிருந்தால் அதற்கு ஒவ்வொரு தினத்திற்கும் 10-ரூபாய் அபராதமும் உண்டு.

152. [இந்தப் பிரிவு எடுத்து விடப்பட்டது.]

153. (1) யாதொரு கட்டிடம் அல்லது நிலம் அசுசியான அல்லது அனாரோக்கியமான நிலைமையிலிருப்பதாகவாகிலும் தேகாரோக்கியத்துக்குக் கெடுதியாகவாவது அல்லதுபொதுஜனங்களுக்கு அபாயகரமாகவாவது அக்கம் பக்கத்திலிருப்பவர்களுக்கு அருவருப்பு உண்டாக்கத் தக்கதாகவாவது அல்லது வேறே விதமாக தொந்திரவுசெய்யக்கூடியதாகவாவதுள்ள அடர்ந்த அல்லது தீங்குண்டாக்கத்தக்க எவையேனும் சிறுசெடிகளாயினும், மரங்களாயினும், கீழிருக்கும் புல் பூண்டுகளாயினும் அதில் அமிதமாய் முளைத்திருப்பதாகவாகிலும் யாதொரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டுக்குத் தோற்றினால், அவர் - அதன் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாருக்கு நோட்டீஸ் கொடுத்து, நோட்டீசில் கண்ட காலத்திற்குள்ளும், அதில்கண்ட விதமாகவும் அந்தக்கட்டிடம் அல்லது நிலத்தைப் பரிஷ்கரிக்க வேண்டுமென்றாகிலும், சுத்தி

யூனியன் வில்தீரணங்களிலுள்ள நிலங்களிலிருந்தும் கட்டிடங்களிலிருந்தும் அசுத்தங்களை அல்லது தீங்குண்டாக்கத் தக்க புல்பூண்டுகளை அப்புறப்படுத்துவது.

செய்ய வேண்டுமென்றாலும், வேறேவிதமாய் நல்ல ஸ்திதியில் வைத்திருக்க வேண்டுமென்றாலும்- அப்படிப்பட்ட சிறுசெடிகள், மரங்கள் அல்லது புல் பூண்டுகளை பரிஷ்கரித்து அப்புறப்படுத்திவிட வேண்டுமென்றாலும் அல்லது ப்ரெஸிடென்டுக்கு யுக்தமாகத் தோன்றும் பிரகாரம் அந்த தொந்தரவை நீக்குவதற்கு வேறே செய்கைகளை செய்யும்படிக்காகிலும் உத்தரவு செய்யலாம்.

(2) சுகாதார சம்பந்தமான காரியங்களுக்காக இப்படிச் செய்வது அவசியமென்று யாதொரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டுக்குத் தோற்றும் பட்சத்தில், அவர் - யாதொரு கட்டடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாருக்கு நோட்டீஸ் கொடுத்து, அதை அந்த நோட்டீஸில் கண்ட விதமாகவாவது அதில்குறிப்பிடப்படும் காலத்துக்குள்ளாகவாவது அதற்குச் சண்ணும்பு அடிக்கும் படியாகவாவது அல்லது அதைச் சுத்தி பண்ணும்படியாகவாவது உத்தரவு செய்யலாம்.

குறிப்புகள்.

ஒரு பஞ்சாயத்தின் விஸ்தீரணத்திற்குள் உள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலமானது மிகவும் அசங்கியமாகவோ அல்லது நாகதாளி முதலியவை நிறைந்தவைகளாகவோ இருந்து அதனால் அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்களுக்கு அசௌகரியம் ஏற்படும்போலிருக்கும் பக்ஷத்தில் அதைத் தடுப்பதற்காக தருந்த நடவடிக்கைகளை அந்த பஞ்சாயத்து ப்ரஸிடென்டானவர் எடுத்துக்கொள்ளலாமென்று இப்பிரிவு கூறுகிறது. இந்தப் பிரிவின் கீழ் ஒரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் கொடுக்கும் யாதொரு நோட்டீஸை நிராகரிப்பத்திற்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

இப்பிரிவின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஒரு பஞ்சாயத்தினால் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்னும் அவசியமில்லை. அதன் ப்ரெஸிடென்டுக்கே பூரண அதிகாரமுண்டு. ஆனால், அதன் ப்ரெஸிடென்டு பஞ்சாயத்தினுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாகச் செய்வதற்கில்லை.

இப்பிரிவின் கீழ் ஒரு பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டு யாதொரு கபருக்கு நோட்டீஸ் கொடுக்கும் பக்ஷத்தில், அந்த நோட்டீஸ் அக்ரமமானதென்று அதை நிராகரித்த பிறகு அந்த நோட்டீஸை கீழ்ப்படியாததின் விஷயமாக தாக்கல் செய்யப்படும் யாதொரு கேஸில், எதிரியானவர் - அந்த நோட்டீஸ் செல்லத்தக்கினதல்ல வென்றும், ப்ரெஸிடென்டால் அக்ரமமாகக் கொடுக்கப்பட்டதென்றும், அந்த நோட்டீசுக்கு தாம் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை யென்றும் வற்புறுத்தலாமா, என்பது கேள்வி. இதே மாதிரி

யாகவுள்ள மற்ற சட்டங்களின் பிரிவுகளின்கீழ் ஹைக்கோர்ட்டுகள் ஒரு மாஜிஸ்டிரேட்டின் முன்பாக ஒரு எதிரி அம்மாதிரி வற்புறுத்துவதற்கில்லை என்றும், யாதொரு வளவு, கட்டிடம் அல்லது நிலமான்து சுசியான ஸ்திதியில் உள்ளதா, அல்லவா என்பதைப்பற்றி ப்ரெஸிடென்டானவர் தீர்மானம் செய்வதே முடிவானதாகும் என்று தீர்மானித்திருக்கின்றன. ஆனால், இப்பொழுது வரவர ஹைக்கோர்ட்டுகள் இம்மாதிரியான தாவாக்களில் எதிரியானவர் தமக்கு கொடுக்கப்பட்ட நோட்டீசானது சரியானதும், செல்லத்தக்கதுமல்லவென்று வற்புறுத்தலாமென்றும், ஒரு நோட்டீசை நிராகரிப்பதே ஒரு குற்றமாகுமென்று கோர்ட்டு முன்பாக வாதிக்க முடியாதென்றும், தீர்மானித்து வருகின்றன. ஆனால், இப்பிரிவின்கீழ் அம்மாதிரியான யாதொரு தீர்மானமும் ஸ்பஷ்டமாக ஏற்படவில்லை. இதைப்பற்றி இன்னும் விரிவாக 159-வது பிரிவின்கீழுள்ள குறிப்புகளிலும், 221-வது பிரிவின்கீழுள்ள குறிப்புகளிலும் பார்க்க.

திரிந்துகொண்டிருக்கும் பன்றிகளையும் நாய்களையும் கொன்றுவிடுவதற்கு அதிகாரம்.

154. (1) ஒரு பஞ்சாயத்து - லைஸென்ஸ் கொடுக்கப்பெறாத பன்றிகள் அல்லது நாய்கள் குறிப்பிடப்பட்ட எல்லைகளுக்குள் திரிந்துக் கொண்டிருந்தால் கொன்றுவிடப்படுமென்று பஹிரங்கமாய் நோட்டீஸ் கொடுக்கலாம்; டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் அவ்விதமாய் செய்ய வேண்டுமென்று தெரிவிக்கிறபட்சத்திலே அப்பிரகாரம் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

(2) அப்படிப்பட்ட நோட்டீஸ் கொடுக்கப்பட்ட பிறகு சந்தர்ப்பத்துக் கேற்றபடி லைஸென்ஸ் கொடுக்கப் பெறுததாயிருக்கும் யாதொரு பன்றியாவது நாயாவது ஷை எல்லைக்குள் திரிந்துகொண்டிருக்கக் கண்டால் எந்த நபராவது அதை அந்த நோட்டீஸில் கண்ட ஷரத்துகளுடன் முரண்படாத யாதொரு விதமாய்க் கொன்றுவிடலாம்.

குறிப்புகள்.

ஒரு பஞ்சாயத்தின் வில்தீரணத்திற்குள் லைஸென்ஸ் இராமல் வைக்கப்பட்டிருக்கும் பன்றிகளையாவது, நாய்களையாவது கொன்றுவிட வேண்டுமென்று ஒரு டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட்டு உத்திரவிடும்பக்ஷத்தில், ஷெஜந்துக்களை கொல்லும்படியாக பஞ்சாயத்தானது கட்டாயமாக விளம்பரம் செய்யவேண்டும். அதற்கு பிறகு எந்தநபராவது, அந்த விளம்பரத்தின் நிபந்தனைகளுக்கு அடங்கி லைசென்ஸ் பெறுத பன்றிகள், நாய்கள் இவைகளைக் கொல்லலாம். ஆனால் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட்டினுடைய வற்புறுத்துதலில்லாமலே அனுதியாகத்திரியும் நாய், பன்றி முதலியவைகளை ஒரு பஞ்சாயத்தானது கொன்றுவிடும்படிக்கு உத்திரவிடலாம்.

வெயிற்காலங்களில், உஷ்ணத்தினால் நாய்கள் பைத்தியம் பிடித்து போவதையும், பன்றிகள் வயலிலுள்ள கிழங்குகளை குத்தியெடுத்து பாழாக்கு வதையும் உத்தேசித்து அவைகளைக் கொன்றுவிடுவதற்காக இப்பிரிவின்கீழ் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அழித்து விடப்பட்ட அபாயகரமான கட்டுக்கோப்பு முதலியவைகளின் சாமான்களை உபயோகிக்க அல்லது விற்க ப்ரெஸிடென்டுக்குள்ள அதிகாரம்.

155. (1) யாதொரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டானவர் – இந்த அத்தியாயத்தின்படி தமக்குள்ள அதிகாரங்களைக் கொண்டு யாதொரு கட்டுக்கோப்பையாகிலும், அதன் யாதொரு பாகத்தையாகிலும் அழித்துவிட்டாலும், யாதொரு மரம்-வேலி அல்லது புதரையாகிலும் அதன்யாதொரு பாகத்தையாகிலும் வெட்டி விட்டாலும், ப்ரெஸிடென்டானவர் - அழித்து விடப்பட்ட, வெட்டி விடப்பட்ட அல்லது அப்புறப்படுத்தப்பட்ட சாமான்களை அல்லது வஸ்துக்களை விற்கலாம்; மேலும், அந்த விற்றமுதலை, பிடித்த செலவுக்காக முழுவதுமாகிலும் சிறிது மட்டிலாகிலும் செலுத்தும்பொருட்டு உபயோகிக்கலாம்.

(2) நியாயமான விசாரணை செய்த பிறகு இந்த அத்தியாயத்திலுள்ள எந்தப் பிரிவின்படியாவது நோட்டீஸ் கொடுக்கப்படக்கூடிய சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் எவரும் இல்லையென்று ப்ரெஸிடென்டுக்குத் தோற்றினால், அவர் - இந்தப் பிரிவில் சொல்லப்பட்ட சொத்தின் விஷயமாய் தமக்கு அவசியமாய் தோற்றக்கூடிய விதமாகத் தாமே ஏற்பாடு செய்யலாம்; மேலும் அவர் – இதற்காகப் பிடித்த செலவை (அசையாப் பொருளல்லாத) அந்த சொத்தையாவது அதன் யாதொரு பாகத்தையாவது விற்று வசூல் செய்யலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரரென்று எவரும் அகப்படாவிட்டாலும் அல்லது யாதொரு சொந்தக்காரர் 147, 148-இப்பிரிவுகளின்கீழ் கொடுக்கப்பட்டும் நோட்டீஸை நிராகரியாமல் இருக்கும் சந்தர்ப்பங்களிலும் தாம்இடித்ததற்காகவோ அல்லது வெட்டினதற்காகவோ நேர்ந்த செலவு தொகைகளை வரப்படுத்துவதற்காக இடித்ததினால் அல்லது வெட்டினதினால் அகப்படும் சாமான்களை அல்லது வஸ்துக்களை ப்ரெஸிடென்டானவர் விக்கிரயம் செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

யாதொரு கட்டிடமானது ஒரு ப்ரெஸிடென்டால் இடிக்கப்பட்டதானல் அல்லது யாதொரு மரம் முதலியவை வெட்டப்பட்டதானல் உடனே ப்ரெஸிடென்டானவர் அகற்றப்பட்ட சொத்துக்களை விற்பதற்கு உரிமையுடையவராவர். இந்தப் பிரிவில் சும்மா "விற்பனை செய்யலாம்" என்திருக்கிறதேயொழிய எம்மாதிரி விற்பனை செய்யவேண்டுமென்று சொல்லப்படவில்லை யாதலால் ப்ரெஸிடென்டானவர் அந்த சொத்துக்களை ஏல மூலமாகவாவது அல்லது வேறேவிதமான பராதீன மூலமாகவாவது விற்பனை செய்யலாம். என்று ஏற்படும் ஆனல் ப்ரெஸிடென்டானவர் இதன் விஷயமாய் கவர்ன்மென்டு செய்யும் விதிகளுக்கு இணங்கி தான் செய்யவேண்டும்.

இந்தப் பிரிவின்கீழ் ஒரு ப்ரெஸிடென்டு அசையாப்பொருளை அதாவது ஸ்தாவர சொத்தை ஏலம் போடுவதற்கில்லை. அசையும் பொருளை மாத்திரம் அதாவது அகற்றப்பட்ட சொத்துக்களையும் ஜன்னும் சிலவை வசூல் செய்வதற்காக இதர சொத்துக்களை மாத்திரம் ஏலம் போடவேண்டும்.

பிரதிபலன் விஷயமான வரையறை.

156 யாதொரு லோகல் போர்டு அதிகாரிகளால் இந்த அத்தியாயத்தின்படி தங்களுக்குள்ள அதிகாரங்களைக்கொண்டு நடத்தப்பட்ட யாதொருநடவடிக்கை காரணமாய் நேரிட்டிருக்கும் எவையேனும் கெடுதிகளுக்காக எந்த நபரும் வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி பிரதிபலன் (damages) பெற பாத்தியதையுடையவராக மாட்டார்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1X-வது அத்தியாயத்தின்கீழ் யாதொரு ப்ரெஸிடென்டு அல்லது லோகல்போர்டு தங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை செலுத்துவதனல் நேரும் யாதொரு நஷ்டத்தை வரப்படுத்துவதற்கு அன்னவர்கள்பேரில் தாவாசெய்து நஷ்டம் வசூலிப்பதற்கில்லையென்று சொல்லப்பட்டுள்ளது. இப்பிரிவானது இதே சட்டத்தின் 225-முதல் 228-வது பிரிவு வரையிலுமுள்ள பிரிவுகளுடன் கூட சேர்த்துபடிக்கப்பட்வேண்டும். பொது நன்மைக்காக பாடுபடுபவர்கள் பொது நன்மையை உத்தேசித்து ஏதாவது காரியம் செய்வார்களாகில் அவர்கள் துராக்கிருதமாக அல்லாமல் தங்கள் உத்தியோக முறைமையில் செய்யும் காரியங்களுக்காக ஜவாப்தாரிகளாக ஆகக்கூடாதுஎன்பது இப்பிரிவின் தாத்பரியம் லோகல்போர்டின்உத்தியோகஸ்தர்கள் யாதொரு பயம் முதலியது இல்லாமல் தங்கள் கடமைகளைச் செலுத்துவதற்கு இப்பிரிவானது பெரியதோர் சகாயத்தைக் கொடுக்கும்.

10-ம் அத்தியாயம்.

பொதுவான பாதைகள்.

இவ்வத்தியாயத்தில் 157 முதல் 166-வது பிரிவு வரையிலும் அடங்கியுள்ளன. இவ்வத்தியாயத்தில் 159-வது பிரிவானது மிகவும் முக்கியமான தோர் பிரிவாகும். அப்பிரிவில் நில ஆக்ரமங்களைப்பற்றியும் அவைகளை எடுத்து விடுவதற்காக நோட்டீஸ் கொடுப்பதில் ப்ரெஸிடென்டுக்கு உள்ள அதிகாரங்களைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. அடிக்கடி, கோர்ட்டுகளில் லோகல்போர்டுகளுக்கும் தனிப்பட்ட ப்ரைவேட் நபர்களுக்கும் நில ஆக்ரமிப்பைப்பற்றி விவாதம் வந்திருப்பதால் அவைகளைப்பற்றி கோர்ட்டுகள் எம்மாதிரி தீர்மானம் செய்திருக்கின்றன என்பதைப்பற்றி கவனிப்போம்.

பொதுவான பாதைகள் அல்லது பாட்டைகள் மூன்று வகைப்பட்டதாகும். முதலாவதாக, டிஸ்டிரிக்ட்டு பாதைகள் என்றுள்ள பாதைகளும் இரண்டாவதாக தாலூக்கா பாதைகள் என்று சொல்லப்பட்ட பாதைகளும் மூன்றுவதாக இதர பாதைகளும் உள்ளன. டிஸ்டிரிக்ட்டு பாதைகள், டிஸ்டிரிக்ட்டு போர்டாருடைய சுவாதீனத்திலும், தாலூக்கா பாதைகள் என்பவை தாலூக்கா போர்டாருடைய சுவாதீனத்திலும், மற்ற பாதைகள், இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் பஞ்சாயத்துகளின் சுவாதீனத்திலும் சங்கிரமிப்பதாகும். ஒரு பஞ்சாயத்தின் விஸ்தீரணத்தின் கீழுள்ள டிஸ்டிரிக்ட்டு போர்டு ரோட்டுகளை சேர்ந்தவரையிலும் அவைகளை பஞ்சாயத்தாரே சுத்தஞ்செய்து பாதுகார்த்து வரவேண்டும். ஒரு ரோட்டு அல்லது பாதை அல்லது பாட்டை என்பது அதன் இருபக்கத்திலுமுள்ள இதரநிலங்கள் அல்லது வீடுகள் வரையிலும் விஸ்தரிப்பதாகும். ஆகையால் ஒரு பாதையில் நடுவில்மாத்திரம் கிரேவல் முதலியவைகளைப் போட்டு அழுத்தப்பட்டதினாலேயே அதற்கு இருபக்கங்களிலுமுள்ள மற்ற விஸ்தீரணங்கள் அந்த ரோட்டைச் சேர்ந்ததல்லவென்று வற்புறுத்தமுடியாது.

157. இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, யாதொரு பொதுவான பாதையிலாவது பாதையின் மேலாகவாவது எவரும் யாதொரு சுவர் கட்டவுங் கூடாது, யாதொரு அடைப்பாகிலும் வேறே தடங்கலாகிலும், பிதுக்கமாகிலும் ஏற்படுத்தவுங்கூடாது, யாதொரு நில ஆக்கிரமிப்பு செய்யவுங்கூடாது.

பொதுவான பாட்டைகளிலாவது பாட்டைகளின் மேலாகவாவது தடங்கல்கள் உண்டாகக் கூடாதென்று தடுப்பது.

தூறிப்புகள்.

160-வது பிரிவில் எந்த நிபந்தனைகளின்பேரில் ஒரு நபர் யாதொரு பிதுக்கம் அல்லது சுவர் முதலியவைகளை கட்டலாமென்று சொல்லப்பட்

ள்ளது. ஆகையால் அந்தப் பிரிவின்கீழ் உள்ள நிபந்தனைகளுக்கும் இனி செய்யப்படும் அல்லது எற்கனவே செய்யப்பட்டிருக்கும் விதிகளுக்கும் இணங்காமல் யாதொரு நபர் ஒரு சுவர் அல்லது அடைப்பு அல்லது பிதுக்கத்தை ஒரு பொது பாட்டையின்மீது ஆக்கிரமித்து கட்டும் பகுதியில் அவர் முதல் முதலாக 100-ரூபாயிக்கும், அந்த பிதுக்கத்தை எடுத்துவிடும்படி நோட்டீஸ் நபருக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்தபிறகு தவறுதல் ஏற்படும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூபாய் 20-வரையிலும் அபராதம் உண்டு.

இந்த பிரிவின்கீழ், யாதொரு நபர் தண்டிக்கப்படுவதாயிருந்தால் அவர் புதியதாக அதாவது முதல் முதலாக யாதொரு சுவர் அல்லது பிதுக்கம் முதலிவைகளை ஒரு பொது பாட்டையின்மீது ஆக்கிரமிக்கும்படியாக செய்யதிருக்கவேண்டுமே யொழிய பழைய கட்டிடங்களை புதுப்பிப்பது ஒரு குற்றமாகாது. ஏனென்றால் இப்பிரிவில் "எவரும்.....ஏற்படுத்தக்கூடாது" என்றும் "ஏற்படும்படி செய்யவுங் கூடாது" என்றுமிருப்பதால் அவை புதியதாக ஏற்படுத்தப்படும் கட்டிடம் முதலியவைகளைப்பற்றிதான் குறிப்பதாக ஏற்படும்.

யாதொரு கட்டிடம் அல்லது பிதுக்கம் அல்லது சுவர் இவைகளை லோசென்ஸில்லாமலும் அல்லது 160-வது பிரிவின்கீழுள்ள நிபந்தனைகளை அனுசரியாமலும், கட்டப்பட்ட மூன்று மாதங்களுக்குள், அவைகளைப் பற்றி பிராஸிக்யூஷன் தொடரப்படவேண்டும். அப்படி சுவர் முதலியவைகள் கட்டப்பட்டபின்னர், மூன்று மாதங்கள் கழிந்துபோகும்பகுதியில் அதைப்பற்றி 159-வது பிரிவின்கீழ் நோட்டீஸ் கொடாமலே யாதொருதாவா செய்வதற்கில்லை. இதைபற்றி 159-வது 223-வது பிரிவுகளையும், அவைகளின் கீழுள்ளகுறிப்புகளையும் பார்க்க. யாதொருநபர் லைசென்ஸ் அல்லது உத்திரவு இல்லாமல் தடுக்கப்பட்ட யாதொரு காரியத்தை செய்தால், எந்த காலத்திற்குள் அவர் லைசென்ஸ் பெறவேண்டுமோ அதுவரையிலுமாவது அல்லது அப்படி யாதொருகாலமும் குறிப்பிடப்படாவிட்டால் 12-மாதங்களுக்குள் ளாவது அந்த குற்றத்தை செய்து வருவதாகவே கருதப்படுவாராதலால் 12-மாதங்கள் வரையிலும் யாதொருவிதமான நோட்டீசும் அவசியமில்லை என ஏற்படும்.

பொதுவான பாட்டை என்பது இந்த சட்டத்தில் 3-(18)-பிரிவில் மிகவும் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளது. அதைப்பார்க்க.

157-A. லோகல் போர்டுகளிடத்தில் சங்கிரமித்திருக்கிற அல்லது அவைகளால் பராமரிக்கப்பட்டு வருகிற சகல பாதைகளும் வழியாகவும் எந்த ஜாதி அல்லது மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் நபர்களும் போகலாம்.

பொதுவான பாட்டைகள் வழியாய் எல்லோரும் போகலாமென்பது.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது, 1927-ம் வருஷத்தில் புதியதாக சேர்க்கப்பட்ட தோர் பிரிவாகும். இந்தப் பிரிவானது சேர்க்கப்பட்ட காலத்தில் ஆதிதிரா விடர்கள் முதலிய தாழ்ந்த வகுப்பினரென்று கருதப்படும் நபர்கள் பொது வான பாட்டைகளில் அல்லது பாதைகளில் போவதைப்பற்றி பல ஆக்ஷே பனைகள் இளம்பி யிருந்ததால் அவைகளை நீக்குவதற்காகவும் சகல ஜாதியினரும் லோகல் போர்டுகளில் சங்கிரமித்திருக்கும் பொதுவான பாதைகளில் நிராக்ஷேபமாக நடமாடும்படிக்கும் இந்தப் பிரிவானது ஏற் படுத்தப்பட்டது. ஆகையால், பொதுவான பாட்டைகளில் எந்த ஜாதி யைச் சேர்ந்த நபர்களும் போகலாம் என்று சொல்லுமிடத்து, பாட்டை களை தங்களுடைய சௌகரியம்போல் பொது ஜனங்களுக்கு இடைஞ்ச லில்லாமல் உபயோகப்படுத்தவும் அவர்களுக்கு உரிமையுள்ளதாகும். உதா ரணமாக, மத சம்பந்தமான ஊர்வலங்களை பொது தெருவு வழியாக எந்த ஜாதியினரும் கொண்டு போகலாம். (a). யாதொரு நபர் ஒரு பொது தெருவு வழியாக ஊர்வலமாகப் போவதற்கு தமக்கு உரிமையுண்டென்று ஸ்தாபிக்க ஒரு தாவா செய்யலாம். ஆனால், பொதுவாக, யாதொரு நபர் அல்லது நபர்கள் பொதுவான பாட்டைகளை உபயோகிக்குமிடத்து இதரர் களுக்கு இடைஞ்சல் ஒன்று மில்லாமலும் சர்க்கார் அதிகாரிகள் ஏதாவது நிபந்தனைகளை ஏற்படுத்தி யிருக்கும் பக்ஷத்தில் அவைகளுக்கு உட்பட்டும் உபயோகப்படுத்த வேண்டும்.

பொதுவான பாட்டைகளில் தனியாகவோ அல்லது ஓர் கூட்டமா கவோ போவதினீன்பது ஒவ்வொரு நபருக்கும் இயற்கையாகவும் சட்டப் பூர்வகமாகவும் சங்கிரமித்திருக்கும் ஓர் உரிமையாதலால் அவ்வுரிமையை பங்கம் செய்வதாக ஏற்படுமிடத்து, அதற்காக நஷ்டம் கோரி உரிமை பங்கம் அடைந்தவர் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். அந்த தாவா வில் அவர் தாம் தன் உரிமையை செலுத்துவதனின்றும் பங்கப் படுத்தப் பட்டார் என்று, அதாவது ஒரு பொதுவான பாட்டை வழியாக போவதி லிருந்து தடுக்கப்பட்டார் என்று ருசு செய்தாலே போதுமானது. தமக்கு இவ்வளவு நஷ்டம் நேர்ந்ததென்று தனியாக ருசு செய்யவேண்டிய அவசிய மில்லை. (b)

ஒவ்வொரு நபருக்கும் பொதுவான பாட்டைகளை உபயோகிப்பதற்கு உரிமை சங்கிரமித்து இருக்கும் போதிலும் பொது ஜன அமைதியையும் க்ஷேமத்தையும் உத்தேசித்து மாஜிஸ்டிரேட்டுகள் விசேஷ காலங்களில் ஒரு

(a) சடகோபாசாரியர் vs. ராம்ராவ் 26 Mad. 376. (P. C.)

(b) வேலன் vs. சுப்பையன் 42. Mad. 371=36. M. L. J. 79.
ஆண்டியப்பன் vs. முத்துவீரரெட்டி. 29. M. L. J. 91.
விபூதப்பிரியா vs. ஈசப் சாயபு 35, Mad. 28.

குறிப்பிட்ட கால அளவு வரையிலும் குறிப்பிட்ட நபர்கள் அவைகளை உபயோகப்படுத்தக் கூடாதென்று - கட்டளை யிடுவதற்கு அதிகாரம் உண்டு. (கிரிமினல் புரோசிஜர் கோட் 144–வது பிரிவையும், சென்னை போலீஸ் ஆக்டையும் பார்க்க.)

ஆனால் மாஜிஸ்டிரேட்டுகள் அவசர சந்தர்ப்பங்களில் தான் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்த வேண்டும். மாஜிஸ்டிரேட்டுகள் தங்கள் அதிகார வரம்பை மீறி நடக்கும்பக்ஷத்தில் அவர்களுடைய உத்திரவை நீக்கி வைக்க சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம்.

ஒரு கேஸில், ஒரு இழவு ஜாதியைச் சேர்ந்த ஒரு நபர் ஒரு முனிசிபாலிட்டிக்கு சொந்தமான ரஸ்தாவில் போகவொட்டாமல் தடுக்கப்பட்டார். அவரைத் தடுத்த நபர் அப்படித் தடுத்ததற்காக கோர்ட்டில் தாவா செய்யப்பட்ட பிறகு அபராதம் போடப்பட்டார். இந்த கேஸானது ஹைக்கோர்ட்டில் வந்தபொழுது ஹைக்கோர்ட்டாரவர்கள், எல்லா ஜாதியினர்களும் யாதொரு வித்தியாசமில்லாமல் ஒரு முனிசிபாலிட்டியின் பாதையை உபயோகிக்கலாம் என்றும் ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரை அப்படி உபயோகிக்கவொட்டாமல் தடுப்பதற்கில்லை யென்றும் அப்படி தடுக்கும் பக்ஷத்தில் அபராதத்திற்கு உள்ளாக வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கின்றனர். (a)

பொதுவான பாட்டைகளில் போவதற்கு ஒவ்வொரு நபருக்கும் உரிமையுண்டு அப்படிப் போவதினால் அந்த பாட்டையில் யாதொரு தடங்கலிலிருந்து அதனால் தேகத் துன்பம் முதலியவை ஏற்பட்டிருப்பின் அதற்காக அந்த பாட்டையானது எவரிடம் சங்கிரமித்திருக்கிறதோ அவர்பேரில் தாவா செய்யலாம். உதாரணமாக,—ஒரு பஞ்சாயத்து அல்லது முனிசிபாலிட்டியின் ரஸ்தாவானது ரிப்பேரில் இருக்கையில் அதற்கு முன்னெச்சரிக்கையாக விளக்கு அடைப்பு முதலியவை மூலமாக அதை பத்திரப்படுத்தாமலிருந்து அதனால் யாதொரு நஷ்டம் அல்லது தேக துன்பம் அடையும் பக்ஷத்தில் நஷ்டமடைந்த நபர் அந்த பஞ்சாயத்து அல்லது முனிசிபாலிட்டியின் பேரில் தாவா செய்யலாம். ஆனால் அவர் கூடிய வரையிலும் தாமும் ஜாக்கிரதையாகவே இருந்து தமக்கு யாதொரு அபாயம் அல்லது நஷ்டம் ஏற்பட வொட்டாமல் நடந்து கொண்டிருக்க வேண்டும். இது பொதுவான சட்டமாகும். ஒரு ப்ரைவேட் நபர் ஒருபொது ரஸ்தா அல்லது பாட்டையானது திறந்து வைக்கப்பட வேண்டு மென்றுவது அல்லது மூடப்பட வேண்டுமென்றுவது தாவா செய்வதா யிருந்தால் தமக்கு யாதொரு நஷ்டம் ஏற்பட்டதென்று ருசு செய்தாலொழிய அந்த தாவா நிலை நிற்பதற்கில்லை. (b) ஒரு ஸ்தலமானது பொதுவான பாட்

(a) சுந்தரேஸ்வர சிரௌத்திகள் விஷயமாக 52. M.L.J. 602.
(b) ராம நாராயணன் vs. ஏகாதசி 27. Cal. 793.

டையைச் சேர்ந்ததல்லவென்றும் தமக்கு மாத்திரம் சொந்தமாக உரியதென்றும் சொல்லி ஒரு ஈபர் தாவா செய்யலாம். (a)

இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருப்பதற்கு விரோதமாக ஒரு ஈபர் பொதுவான பாட்டையில் போவதை தடுப்பதானது ஒரு குற்றமாகும். அதற்கு 100-ரூபா வரையிலும் அபராதம் உண்டு.

158. (1) எந்த லோகல் போர்டாரிடத்தில் யாதொரு பொதுவான பாட்டை சங்கிரமித்திருக்கிறதோ அந்த லோகல் போர்டு ப்ரெஸிடென்டினிடமிருந்து லைஸென்ஸ் பெறுமல், யாதொரு கதவு, கேட்டுக் கதவு, கிராதிக் கதவு, அல்லது அடித்தரை ஜன்னல் கதவையும் வெளிப்புறமாய் திறக்கும்படி தொங்க விடவும் கூடாது, அமைக்கவும் கூடாது.

கதவுகள், அடித்தரை ஜன்னல்கள், கிராதிக் கதவுகள் முதலியவைகள் வெளிப்புறமாய் திறக்கக்கூடாதென்று தடுப்பதும், அவைகளைப் பற்றி ஒழுங் கேற்படுத்துவதும்.

(2) டிஸ்ட்ரிக்ட் ப்ரெஸிடென்டானவர் - நோட்டீஸ் பிறப்பித்து அப்படிப்பட்ட கதவு-கேட்டுக் கதவு-கிராதிக்கதவு அல்லது ஜன்னல் கதவின் சொந்தக்காரருக்கு, அது திறந்திருக்கும்பொழுது அதன் எந்த பாகமும் தெருவில் பிதுங்கி வராமலிருக்கும்படி அதை மாற்ற வேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

குறிப்புகள்.

ஒரு பொதுவான பாட்டை பாதை அல்லது ரஸ்தாவை அனுபவிப்பதில் பொதுஜனங்களுக்கு யாதொரு தடங்கலும் இருக்கக்கூடாதென்பது. அப்படி ஒருதடங்கலே ஏற்படுத்திவைப்பது அவசியமென்றிருக்குமானால் அதற்கு லோகல் போர்டினுடைய அனுமதியைப் பெறவேண்டும். லோகல்போர்டினுடைய அனுமதியைப் பெறுவதானது, எதற்காக அனுமதி கேட்கப்படுகிறதோ அதன் யுக்தானுசாரத்தைப் பொருந்தினதாகும். உதாரணமாக, ஒரு அடித்தரையில் ஜன்னல் வைப்பதாக இருந்து அந்த ஜன்னலின் கதவுகள் தெருவில் ஒரு இடைஞ்சலாக இருக்குமானால் அதற்கு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு யாதொரு அனுமதியையும் கொடுக்கமாட்டார். ஆனால் பொதுஜன போக்குவரத்துக்கு இடைஞ்சல் இராமலிருக்கும்பக்ஷத்தில் ப்ரெஸிடென்டானவர் அனுமதி கொடுக்கலாம்.

இப்பிரிவானது ஒரு கதவு, கேட்டு கதவு, கிராதி கதவு அல்லது அடித்தரை ஜன்னல் இவை ஒரு பாட்டையில் திறக்கும்படியாக இருந்தால்தான்

(a) சுன்னிலால் vs. இராமகிருஷ்ணன் 15. Cal. 460.

அவைகளை உத்தரவின்றி அமைப்பதைத் தடுப்பதாகும். ஆகையால் மேலே சொல்லப்பட்ட கதவு முதலியவைகள் ஒரு ரோட்டு அல்லது பாட்டையைப் பார்த்தாப்போல் இருந்தபோதிலும் ஒரு வீட்டின் ஹத்துக்களுக்குள்ளேயே திறக்கும்படியாக அமைக்கப்படுமாயின் அதற்கு யாதொரு உத்தரவு அல்லது லேசென்ஸ் பெறவேண்டிய அவசியமில்லை.

இப்பிரிவின் பிரகாரம் ஒரு ஈபர் லேசென்ஸில்லாமல் யாதொரு கதவு தரை ஜன்னல் முதலியவைகளை அமைத்து அவைகள் பாட்டை பக்கம் பாட்டையில் திறக்கும்படியாக கட்டுவதே ஒரு குற்றமாகாது. ஆனால் அவர் அப்படி லேசென்ஸில்லாமல் கட்டியிருப்பது ஜன போக்குவரத்துக்கு இடைஞ்சலாகாதென்று அபிப்பிராயப்பட்டு ப்ரெஸிடென்டானவர் அவைகளை மாற்றி விடும்படிக்கு உத்தரவிட்டபிறகு அதற்கு கீழ்ப்படியாமற்போனால் அதற்காக முதல் தினத்திற்கு 20-ரூபாய் அபராதமும் பிறகு கீழ்ப்படியாமலிருக்கும் பிரதி தினத்திற்கும் 10-ரூபாய் அபராதமும் உண்டு.

மற்ற சட்டங்களில் இப்பிரிவைப்போன்ற பிரிவுகளின்கீழ் தீர்மானிக்கப்பட்டிருக்கும் கேஸுகளில், எதிரிகள் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவாராகில் மிகவும் சொல்பமாக அபராதம் இடப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. (a)

ஆக்கிரமிப்புகளை எடுத்து விடுவது.

159. (1) யாதொரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டானவர்-யாதொரு வளவின் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு நோட்டீஸ் கொடுத்து, அந்த வளவுக்கு நேராக அல்லது எதிரிலும் அந்த போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் யாதொரு பொதுவான பாதையில் அல்லது அதற்கு மேலாகவும் அமைக்கப்பட்டுள்ள (கதவு, கேட்டுக் கதவு, கிராதிக் கதவு அல்லது அடித்தரை ஜன்னல் கதவல்லாத வேறே) யாதொரு பிதுக்கம், ஆக்கிரமிப்பு அல்லது தடங்கலை எடுத்துவிடும்படியோ மாற்றும்படியோ உத்தரவு செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு பிதுக்கமாவது, ஆக்கிரமிப்பாவது, தடங்கலாவது கால நிர்ணயத்தைப்பற்றிய சட்டத்தின்படி யாதொரு ஈபருக்கு நீண்டகால அனுபோக பாத்தியதையைக்கொடுக்கப் போதுமான ஒரு கால அளவுக்கு இருந்திருக்கிறதென்றாகிலும், இது விஷயமாகக் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கிற யாதொரு பிரதேச அதிகார சபையின் அனுமதியின்மேல் அல்லது லேஸென்ஸின்மேல் அது அமைக்கப்பட்டது அல்லது ஏற்படுத்தப்

(a) இந்தியா மஹாராணி vs. குஜ்ரியா (1885) I. L. R. 9 Bom. 568.

பட்டதென்றும் அப்படிப்பட்ட அனுமதி அல்லது லிசென்ஸ் சட்டப் படி செலாவணியாகத் தக்க ஏதேனும் காலமானது கழிந்துபோக வில்லையென்றுமாகிலும் அந்த வளவின் சொந்தக்காரர் அல்லது அனு போகதாரர் ரூஜுப்படுத்துவாராகில், லோகல் போர்டார் - அதை எடுத்து விடுவதனாலாவது, மாற்றுவதனாலாவது நஷ்டமடைகிற ஒவ் வொரு நபருக்கும் நியாயமான பிரதி பலன் கொடுக்க வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது மிகவும் முக்கியமானதோர் பிரிவாகும். லோகல்போர்டு களின் பிரஸிடென்டுகள் அடிக்கடி இப்பிரிவின் கீழ் தமக்குள்ள அதிகா ரத்தை செலுத்தி வருவதில், அநேக வித பிழைகளுக்குள்ளாவதல்லாமல் ஒருதலைப் பக்ஷமாக இருந்து, தமக்கு வேண்டியவர்களுக்கும் வேண்டாத வர்களுக்கும் பக்ஷபாதமில்லாமல் தமது அதிகாரத்தைச் செலுத்துவதில்லை யென்று சந்தேகிக்கப்பட்டும் வருகின்றனர். இப்பிரிவின் கீழ் அநேக கேஸுகள் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை தனித்தனி அங் கங்களின்கீழ் கவனிப்போம்.

இப்பிரிவின் சாராம்சம்.

1920-ம் வருஷத்தில் அமைக்கப்பட்டிருந்த 159-வது பிரிவின் பிரகா ரம் ஒரு ப்ரெஸிடென்டு தம்முடைய லோகல் போர்டினுடைய அங்கீகாரத் தின்பேரில் யாதொரு வளவின் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதார ருக்கு நோட்டீஸ் கொடுக்கலாம் என்றிருந்தது. இப்பொழுது "தம்முடைய லோகல் போர்டின் அங்கீகாரத்தின் பேரில்" என்னும் பதங்கள் எடுத்து விடப்பட்டு ஒரு லோகல் போர்டு ப்ரஸிடென்டு லோகல் போர்டினுடைய உத்திரவு முதலியதொன்றுமில்லாமல் தாமாகவே நோட்டீஸைக் கொடுக்க லாம் என்று உள்ளது. இதனால் லோகல் போர்டுகளின் ப்ரஸிடென்டுக ளுக்கு அதிகமானதோர் பொறுப்பேறினதாக ஏற்படும். ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டானவர் யாதொரு காரியத்தைச் செய்வதற்கு முன் தம்முடைய போர்டினால் அக்காரியத்தைச் செய்யும்படி உத்தரவிடப்பட வேண்டுமென்றிருந்தால் அதனால் அவருக்கு பக்க பலமுள்ளதாகவே ஏற் படும். ஆனால் இப்பொழுதுள்ள சட்டப் பிரகாரம் ப்ரெஸிடென்டுகள் தங்கள் சொந்த பொறுப்பின்பேரிலேயே இப்பிரிவின் கீழ் தமக்குள்ள அதிகாரங் களைச்செலுத்தலாம்.

இப்பிரிவில் இரண்டு விதமான சந்தர்ப்பங்கள் கூறப்பட்டுள்ளன. 158-வது பிரிவில் உள்ளவைகள் நீங்கலாக மற்ற பிதுக்கம் ஆக்கிரமிப்பு அல் லது தடங்களை எடுத்து விடும்படி யாதொரு வளவின் சொந்தக்காரருக்கு அல்லது அதன் அனுபோகதாரருக்கு ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்

டானவர் நோட்டீஸ் கொடுக்கலாம். அந்த நோட்டீஸுக்குக் கீழ்ப்படிந்து உடனே அவைகளை எடுத்து விடுவதற்கு ஒவ்வொரு நபரும் கடமைப் பட்டவர்களாவார்கள். ஆனால் அப்படிப்பட்ட பிதுக்கம் ஆக்கிரமிப்பு அல்லது தடங்கலானது, அந்த லோகல் போர்டுக்கு விரோதமாக லிமிடேஷன் சட்டப் பிரகாரம் போதுமான ஒரு கால அளவு வரையிலும் இருந்து வந்ததென்றாவது அல்லது அவைகளுக்காக ஒரு லிஸென்ஸ் அல்லது உத்தரவு கொடுக்கப்பட்டு அந்த லிஸென்ஸ் அல்லது உத்தரவின் கால அளவானது கடந்துவிடாமலிருக்கும்பக்ஷத்திலாவது அந்த நோட்டீஸை யாதொரு நபர் உடனே கீழ்ப்படிவதினால் நேரிடும் நஷ்டத்தை லோகல் போர்டார் அவருக்கு கட்டிக் கொடுக்க வேண்டும். ஆனால் அம்மாதிரி லிமிடேஷன் கால அளவிற்கு மேலாக தாம் அனுபவித்து வந்தா ரென்றாவது அல்லது அதற்குள்ள லிஸென்ஸின் கால அளவானது முடிய வில்லை யென்றாவது அந்த நோட்டீஸினால் பாதிக்கப்பட்ட நபர் தான் ருசு செய்யவேண்டும். அப்படி செய்யாமற் போனால் அவருக்கு நஷ்டத் தொகை கிடைப்பதற்கில்லை.

பிதுங்கம், ஆக்கிரமிப்பு, தடங்கல்.

"பிதுக்கம்" என்பது ஒரு கட்டிடத்தை யொட்டினதாய் அதன் பாகமாக இருந்து தரை மட்டத்திற்கு மேலாக குறுக்காக நீண்டிருக்கும் யாதொரு முகப்பு அல்லது அதன் பாகத்தைக் குறிக்கும். "ஆக்கிர மிப்பு" என்பது தரையில் ரோட்டின் விஸ்தீரணத்தின் ஒரு பாகத்தை சொந்தமாக மடக்கி அனுபவிப்பது. ஒரு ஆக்ரமிப்பானது ஒரு கட்டிடத் தைச் சேர்ந்தாப்போலிருக்கலாம் அல்லது அதிலிருந்து சற்று விலகியும் இருக்கலாம். ஆனால் ஆக்கிரமிப்பு என்பது தரையுடன் சேர்ந்ததாயிருக்க வேண்டும். 'தடங்கல்' என்பது பொது ஜன போக்குவரத்துக்குத் தடங்க லாக இருக்கும் யாதொரு செய்கை அல்லது அமைப்பு. தடங்கல் என்பது பூமியுடன் கூடினதாகவாவது அல்லது பூமியுடன் கூடாததாகவாவது இருக் கலாம். ஒரு கட்டிடத்துடன் ஒட்டியாவது அல்லது ஒட்டாமலாவது இருக் கலாம். உதாரணமாக, யாதொரு பலகை, பெஞ்சு அல்லது வேறே ஒரு அசையும் பொருளை தெருவில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக வைப் பது.

ஒரு நபருடைய கட்டிடத்தின் பிதுக்கமானது ஒரு முனிஸிபாலிடி யால் சட்டவிரோதமாக இடித்துவிடப்படும்பக்ஷத்தில் அதற்காக அந்த பார்ட் டியானவர் நஷ்டம் கோரி தாவா செய்யவேண்டுமே பொழிய அந்த முனிஸி பாலிடி அதை இடிக்கக் கூடாதென்று ஒரு தடை உத்தரவு பெறுவதற் கில்லை. (அ). ஏனெனில் பொதுஜன சௌகரியத்தை உத்தேசித்து யாதொரு

(அ) அச்சய்யா vs. எலூர் முனிஸிபல் கௌன்சில் 19. M. L. J. 757.

பிதுக்கமானது எடுத்து விடப்படும்போது அப்பிதுக்கம் தம்முடைய கட்டிடத்திலேயே இருக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்கில்லை. (a)

ஆக்கிரமிப்பு என்பது, ஒரு தெருவில் ஒரு நபர் யாதொரு தட்டி அல்லது திடுக்கு அல்லது கட்டிடம் கட்டுவது (b). ஆக்கிரமிப்பானது ஒரு நபர் மற்றொருவருடைய அல்லது பொதுஜனத்தினுடைய பூமி ஸ்வாதீனத்தைக் கெடுத்து தம்முடைய ஸ்வாதீனத்தில் ஒப்புவித்துக்கொள்வது. ஒரு தாழ்வாரம், தெருபக்கமாக இருந்து தெருவின் இடத்தை அடைத்துக்கொள்ளுமானால் அது ஒரு ஆக்கிரமிப்பு எனப்படும். ஒரு வீட்டிற்கு எதிரில் ஓரத்தில் தெரு சாக்கிடை இருந்து அந்த சாக்கடைக்கும் வெளியே தெருவில் பூமிக்குள் ஒரு பள்ளம் தோண்டப்பட்டு ஒரு கம்பம் நடப்பட்டு அந்தக் கம்பத்தின் பேரில் ஒரு பந்தல் இறக்கப்பட்டது. இப்படி செய்திருப்பது நில ஆக்கிரமம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (c) ஒரு கடைக்குமுன்பாக கடையின் கட்டிடத்தின் மேலாக கீல்கள் போடப்பட்ட ஒரு இரும்புதகடு தொங்கவிட்டிருந்தது. அதற்கு இரண்டு பக்கமும் முட்டுபோட்டு அதைத் தூக்கினால் ஒரு பந்தல் மாதிரியாக ஆகிவிடும். முட்டுக்கொம்பு அல்லது கம்பிகளை எடுத்துவிடும்சமயத்தில் அந்த இரும்புத்தகடு தொங்கிவிடும். இப்படிச் செய்வதானது கல்கத்தா முனிசிபாலிடி ஆக்டின்பிரகாரம் ஆக்கிரமம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (d)

ஆகையால், மேலேகண்டத் தீர்மானங்களில் ஒரு பொது ரஸ்தா, பாட்டை அல்லது பாதையில் எந்த நபராவது எவ்விதமான ஆக்ரமும் செய்வதற்கில்லையென ஏற்படும். ஒரு பொது ரஸ்தாவில் உள்ள ஒவ்வொரு அணுவையும் உபயோகப்படுத்துவதற்கு பொதுஜனங்களுக்கு உரிமையுண்டு.

ஒரு நபர் ஒரு பிரைவேட்டான நிலத்தில் ஆக்கிரமிக்கும்சமயத்தில் அது இப்பிரிவின்கீழ் ஒரு ஆக்கிரமமென சொல்லப்படாது அவர் ஒரு பிரைவேட் நிலத்தின்மேல் இருக்கும்படியாக கட்டியிருந்த யாதொரு பிதுக்கம் அல்லது ஆக்கிரமத்தை எடுத்துவிடும்படி ப்ரெவிடென்டு நடவடிக்கையை எடுத்துக் கொண்டால்அதைநீக்கிவைக்க கோர்ட்டில் தாவாசெய்யலாம்(e) ஒரு நபர் தம்முடைய சொந்தஇடத்திலேயே ஒரு சுவரைக் கட்டி தன்வீட்டுக்கு மறைவாக இருக்கும்படி செய்வது நில ஆக்கிரமமென ஏற்படாது. அந்த சுவரானது ஆக்

(a) பான்குமார்சந்து vs. ஆரா முனிசிபாலிடி A. I. R. 1929 Patna 613.

(b) கருப்பண்ண நாடான் vs. மதுரை முனிஸிபாலிடி 21 Mad. 246.

(c) கல்கத்தா கார்ப்பரேஷன் vs. இமாம்துல்ஹக் 34 Cal. 844.

(d) நாராயண கிருஷ்ணசேன் vs. கல்கத்தா கார்ப்பரேஷன் 48 Cal. 602.

(e) பனர்ஜிதாஸ் vs. அபரோஹா முனிஸிபாலிடி A. I. R. 1925 All. 234.

கிரமமெனப்படுவதற்கு தெருவினுடைய வில்தீர்ணத்திலிருக்கவேண்டும்.(a) ஒரு நபர் ஒரு நிலத்தின்பேரில் வெகுநாட்களுக்குமுன் ஆக்கிரமித்திருந்து பிறகு அவ்வாக்கிரமத்தின்பேரிலுள்ள பழைய கட்டிடத்தை புதுப்பித்தால் அம்மாதிரி புதுப்பித்தது ஒரு ஆக்கிரமம்எனசொல்லமுடியாது. அப்படி புதுப்பிப்பதற்காக அவர்பேரில் தாவாசெய்வதற்கில்லை.(b) ஆனால் இப்பிரிவின்கீழ் அத்தகைய ஆக்கிரமத்தை எடுத்துவிடும்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டபிறகு அதை எடுத்துவிடாவிட்டால் அதற்கு அபராதம் உண்டு.

ஒரு நபர் ஒரு பெஞ்சு அல்லது தட்டி முதலிய சுலபமாக எடுத்துவிடும் படியானவைகளை தெருவில் இடைஞ்சலாகக் கட்டுவது ஒரு 'தடங்கல்' என்று முன்னமே சொல்லப்பட்டுள்ளது. (c). ஒரு கேஸில், 'ரோட்டு புறம்போக்கு' என்று ரிஜில்தர் செய்யப்பட்டிருக்கும் சொத்தும் டிஸ்டிரிக்ட் போர்டுக்கு சங்கிரமிப்பதாகும் என்றும் அத்தகைய சொத்தின்பேரில் போகவும் வரவும் பொதுஜனங்களுக்கு உரிமையுண்டாதலால் அதில் யாதொரு தடங்கல் அல்லது ஆக்கிரமும் செய்வதற்கில்லையென்றும் அப்படி யாதொரு நபர் ஆக்கிரமம் செய்திருந்து அதை எடுத்துவிடும்படிக்கு ஒரு நோட்டீஸ் கொடுக்கப்பட்டும் அதற்குக்கீழ்படியாமல் போகும்பக்ஷத்தில் அந்த நபர் 159-வது பிரிவின்கீழ் தண்டனைக்கு உள்ளாவார் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒருதரம் சிக்ஷை செய்யப்பட்ட பிறகும் அந்த நபர் ஆக்கிரமத்தை விட்டுவிடாமற் போனால் மறுபடியும் லோகல்போர்ட்ஸ் ஆக்டின் 159 (1)-வது பிரிவின்கீழும் 207-வது பிரிவின்கீழும் குற்றவாளியென்று தண்டிக்கப்படுவதற்கு உள்ளாகிறார். அவர் செய்திருக்கும் ஆக்கிரமத்தினால் யாதொரு இடையூறும் கிடையாது என்று சொல்வது அவர் சிக்ஷை செய்யப்படாமலிருப்பதற்கு ஒரு காரணமாகாது. (d) மற்றொரு கேஸில், ஒரு நபர் ஓரிடத்தின்பேரில் கட்டிடம் கட்டியபோது அப்படிக் கட்டக்கூடாதென்று முனிஸிபாலிடியார் ஆக்ஷேபித்தும் கட்டிடம் கட்டிவிட்டார். ஆனால் பிறகு எந்த இடத்தின்பேரில் அவர் கட்டிடம் கட்டினாரோ அந்த இடமானது ஒரு தெருவு அல்லது ரஸ்தாவைச் சேர்ந்ததென்று ருசு செய்யப்பட முடியவில்லை. இதன்பேரில் அந்த நபர் முனிஸிபாலிடியின்மீது அவர்கள் கொடுத்திருக்கும் நோட்டீஸானது சட்ட விரோதமானதென்றும் செல்லத்தக்கினதல்லவென்றும் ஸ்தாபித்து அவர்கள்தங்களுடையநோட்டீஸின்பிரகாரம்நடந்துகொள்ள

(a) முருகப்ப ஆசாரி விஷயமாக 1 Wire 796.

(b) தாகூர்லால் vs. கண்ட்வா முனிஸிபாலிடி 64 I. C. 274=22 Cr. L. J. 7564.

(c) தர்பெயில் ஆமத் vs. மகாராஜா சக்கரவர்த்தி A. I. R. 1928 All. 60.

(d) பப்ளிக் பிராஸிக்யூட்டர் vs. பழனியாண்டிநாயகன் 54 M. L. J. 261=1 அகில இந்தியா லா ஜர்னல் கேஸுகளின் குறிப்புகள் பக்கம் 83.

வொட்டாமல் தடுக்கப்பட வேண்டுமென்று ஒரு தடை உத்தரவு பெற தாவா செய்யலாமா என்னும் கேள்வி வந்தில் தாவா செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (a). ரோட்டு புறம்போக்கு என்றில்லாமல் சாதாரண புறம்போக்கில் யாதொரு நபர் ஆக்கிரமித்து வீடு கட்டும்பக்ஷத்தில் அது இப்பிரிவின்கீழ ஒரு ஆக்கிரமம் என சொல்லப்பட முடியாது. (b)

ஆக்கிரமம் முதலியவைகளுக்காக எவர் தாவாசெய்வது.

யாதொரு பொது ரஸ்தாவில் அல்லது பாட்டையில் ஒரு நபர் ஆக்ரமித்ததாக சொல்லப்படுமானால் அந்த இடமானது எந்த லோகல் போர்டினுடைய அதிகாரத்தின்கீழ் சங்கிரமித்திருக்கிறதோ அந்த லோகல் போர்டுதான் தாவா செய்யவேண்டும். அவர்கள்தான் எதிரி ஆக்ரமித்ததாக ருசு செய்யவேண்டும். ஒரு எதிரி ஒரு பொது ரஸ்தாவில் அடங்கிய ஜாகாவில் ஆக்ரமித்துவிட்டதினால் லோகல் போர்ட்ஸ் சட்டத்தின் 159-வது பிரிவின் பிரகாரம் அந்த ஆக்கிரமத்தை எடுத்து விடும்படி அவருக்கு டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டு நோட்டீஸ் கொடுத்தார். அந்த நோட்டீஸுக்கு எதிரி கீழ்ப்படியவில்லை. அதன்பேரில் டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாவா தொடர்ந்தார். அப்போது, கோர்ட்டில் அந்த ஜாகாவானது டிஸ்டிரிக்ட் போர்டைச் சேர்ந்ததல்ல வென்றும் யூனியன் போர்டைத் தான் சேர்ந்ததென்றும் எற்பட்டதினால் தாவா தள்ளிவிடப்பட்டது. பிறகு யூனியன் போர்டு பிரஸிடென்டு மே பிரிவின்கீழ் எதிரிக்கு மறுபடியும் நோட்டீஸ் கொடுத்தார். அதற்கும் எதிரி கீழ்ப்படியவில்லை. அதன்பேரில் யூனியன் போர்டு பிரஸிடென்டு எதிரியின்பேரில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாவா தொடர்ந்தார். இந்த சந்தர்ப்பங்களில், எற்கெனவே இதே விஷயமாக எதிரிபேரில் ஒரு கேஸ் நடந்திருந்ததினால் கிரிமினல் புரோஸீஜர் கோட் 403-வது பிரிவின் கீழ் எதிரிபேரில் மற்றொரு தாவா செய்யப்படுவதற்கில்லை யென்று ஒரு ஆக்ஷேபம் கிளம்பியது. அந்த ஆக்ஷேபத்தை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டார் அங்கீகாரம் செய்து எதிரியை விடுதலை செய்துவிட்டனர். பிறகு இதற்குமேலாக ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனுசெய்யப்பட்டதில், எதிரி விடுதலைசெய்யப்பட்டதானது செல்லத்தக்கினதல்லவென்றும் யூனியன்போர்டு ப்ரெஸிடென்டானவர்செய்திருக்கும் தாவாவை கோர்ட்டார் கட்டாயமாக விசாரணை செய்திருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (c)

(a) ரோடக் முனிஸிபல் கமிட்டி vs. நூர் மகம்மது A. I. R. 1930 Lahore 598.

(b) பழனித்தச்சன் விஷயமாக 1 Weir. 794.

(c) 58 M L. J. கேஸுகளின் குறிப்புகள் பக்கம். 43=II. அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை கேஸுகளின் குறிப்புகள் பக்கம் 28.

ஆக்கிரமத்தைப்பற்றி நுசு செய்வது.

யாதொரு நபர் ஒரு பொது பாட்டையில் ஆக்ரமித்தது ஷஸ்தவம் என்றும் அவர் ஆக்ரமித்திருக்கும் ஜாகாவானது லோகல் போர்டில் சங்கிரமித்திருக்கும் பாட்டையைச் சேர்ந்ததென்றும் அவ்வாக்கிரமத்தின் விஷயமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டும் அந்த நோட்டீஸுக்கு கீழ்ப்படியவில்லை யென்றும் லோகல் போர்டார் தான் முதல் முதலாக நுசு செய்ய வேண்டும் ஒவ்வோர் சமயங்களில் ஒரு நபர் யாதொரு ஜாகாவை பல நாட்களாக அனுபவித்துக்கொண்டு வரலாம். அப்படி அனுபவிப்பதற்கு லோகல் போர்டுகள் சம்மதித்தும் இருக்கலாம். அதனால் அவர்கள் தங்களுக்கு பூரண உரிமையுண்டென்று வாதிக்கவும் செய்யலாம். இத்தகை சந்தர்ப்பங்களில் முதல் முதலாவதாக தாவா செய்பவர்கள் தான் ஆக்கிரமத்தைப்பற்றி நுசு செய்யவேண்டும். ஆனால் யாதொரு ஆக்கிரமமானது லிமிடேஷன் தவணைக்கு மேலாக தம்முடைய சுவாதீனத்தில் உள்ளதென்றும் அதனால் தமக்கு நஷ்ட ஈடு வேண்டுமென்றும் யாதொரு நபர் கோரும் பக்ஷத்தில் அவரேதான் அந்தப் பிரகாரம் நுசு செய்ய வேண்டும். இப்பொழுது 1923-ம் வருஷத்தில் திருத்தப்பட்ட லிமிடேஷன் சட்டத்தின் 147-A ஆர்டிகிலில் யாதொரு நபர் ஒரு லோகல் போர்டுக்கு விரோதமாக ஒரு ஜாகாவை 30-வருஷங்களுக்கு மேலாக அனுபவித்து வந்ததாக நுசுபடுத்தினால் தான் அந்த லோகல் போர்டுக்கு விரோதமாக ஒரு தீர்ப்பு பெறலாம் என்றுள்ளது. ஆனால் ரோட்டு அல்லது ரஸ்தாக்களைச் சேர்ந்த வரையிலும் யாதொரு நபர் எத்தனை வருஷ காலமாக யாதொரு ஜாகாவை அனுபவித்து வந்தபோதிலும் அதை விட்டு விட வேண்டுமென்று சொல்லும்பக்ஷத்தில் கட்டாயம் விட்டுவிட வேண்டும். 30-வருஷங்களுக்குமேலாக ஒருநபர் ஆக்கிரமித்ததாக சொல்லப்பட்ட ஜாகாவை அனுபவித்து வந்ததாக நுசுபடுத்தினால் தான் நஷ்ட ஈடு (பிரதி பலத் தொகை) (damages) பெற உரிமை யுண்டு. இல்லாவிட்டால் யாதொரு தொகையும் கேட்க நியாயமில்லை.

நில ஆக்கிரம விஷயமாக தாவா தொடரப்படும் காலத்தில் எதிரியானவர், தாம் யாதொரு ஆக்கிரமமும் செய்யவில்லை யென்றும், தம்முடைய சொந்த ஜாகாவிலேயே தான் கட்டிடம் முதலியவைகளைக் கட்டியிருப்பதாகவும், அந்தக் காரணத்தினால் தமக்குக் கொடுக்கப்படும் நோட்டீஸுக்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை யென்றும் வாதிக்கலாமா என்னும் கேள்வி வெகு காலமாக கோர்ட்டுகளின் முன்பாக இருந்து கொண்டு வந்தது. இதற்கு பல கேஸுகளில் பலவிதமாக சென்னை ஹைக்கோர்ட்டில் தீர்மானங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. முக்கியமாக ராமசந்திரன் செர்வை vs. காரைக்குடி யூனியன் போர்டு ப்ரெஸிடெண்டு (a) என்னும் கேஸில் ஒரு

(a) 49. M. L. J. 356—A. I. R. 1925. Mad. 1015.

எதிரி நாம் யாதொரு ஆக்கிரமமும் செய்யவில்லை என்று கோர்ட்டு முன்பாக வற்புறுத்த முடியாதென்றும் லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 159-வது பிரிவின் கீழ் செய்யப்படும் தாவாக்களில் முக்கியமான கேள்வி என்னவென்றால், எதிரி தமக்கு கொடுக்கப்பட்ட நோட்டீஸை நிராகரித்தாரா அல்லவா என்பது தான் என்றும், அவர் அதை நிராகரிப்பதற்கு தகுந்தகாரணங்கள் இருந்தனவா என்பதைப்பற்றியாவது யாதொரு ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை என்பதையாவது மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் விசாரிக்க அதிகாரமுடையவர்களல்ல வென்றும் தீர்மானிக்கப்பட்டது. சென்னை ஹைக்கோர்ட்டார் இவர்கள், இப்பிரச்னையானது மற்றொரு பூர்ண பெஞ்சு கேஸில் வந்தபொழுது பின் வருமாறு தீர்மானித்திருக்கின்றனர். ஒரு லோகல் போர்டு சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 164 (1)-வது பிரிவின் கீழ் ஓர் நபர் அந்த லோகல் போர்டுக்குச் சொந்தமான நிலத்தில் ஆக்கிரமித்ததாக அவருக்கு தண்டதொகை விதித்து அந்த தண்டத்தொகையை வசூலிப்பதற்காக அதே சட்டத்தின் 221-வது பிரிவின் கீழ் ஒரு மாஜிஸ்ட்ரேட் முன்பாக மனு செய்யும்பக்ஷத்தில் அம்மனுவில் சுடக்கும்கேஸில், அபராதத்தைச் செலுத்தாதநபர் நாம் யாதொரு ஆக்கிரமமும் செய்யவில்லை பென்று மாஜிஸ்ட்ரேட் முன்பாக வற்புறுத்தலாமா என்றும், அந்த மாஜிஸ்ட்ரேட் ஆக்கிரமம், சுடந்ததாக சொல்லப்பட்டதானது வாஸ்தவமா அல்லவா என்று விசாரணை செய்யலாமா என்றும் கேள்விகள் வந்ததில், மாஜிஸ்ட்ரேட் அந்த ப்ரச்னைகளை விசாரிக்கலாமென்றும் யாதொருஆக்கிரமமும் சுடக்கவில்லையென்று அறியும் பக்ஷத்தில் அம்மனுவை தள்ளி விடலாம் என்றும் தீர்மானித்திருக்கின்றனர். (a) இதே கேஸில் ஹைக்கோர்ட்டாரவர்கள் மேற்சொல்லப்பட்ட ராமசந்திரய்யர்சேர்வை vs. காரைக்குடி யூனியன் போர்டு ப்ரெஸிடென்டு என்னும் கேஸானது செல்லத்தக்கதல்லவென்றும், மீது கோபய்யா விஷயமாக (I. L. R. 51 Mad 866=55 M. L. J. 27; என்னும் கேஸும் ராமய்யாபு விஷயமாக (I. L. R. 52 Mad 714—57 M. L. J. 317—1 அகில இந்தியா லா ஜர்னல்பத்திரிகை 197 பக்கம்) என்னும்கேஸும்தான்சரியாக தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன வென்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள். ராமய்யாபு விஷயமாக என்னும் கேஸானது ஒரு மோட்டார் பஸ்ஸுக்கு லைசென்ஸ் விடுக்கும் விஷயமான கேஸ். அதைப் பற்றி 1. அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகையில் 197-வது பக்கத்தைப் பார்க்க.

மேலே சொல்லப்பட்ட பிள்ளை ராமசாமி vs. தடே பள்ளிக்கூடம் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு என்னும் கேஸானது மற்றொரு கேஸிலும் தழுவப்பட்டிருக்கிறது; சென்னை லோகல் போர்டுகளின் சட்டத்தின்

(a) பிள்ளை ராமசாமி vs. தடே பள்ளிக்கூடம் தாலூக்கா போர்டு பிரவிடென்டு 59. M. L. J. 346—2. அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை பக்கம் 237. (F. B.)

159, 207 இத்தப் பிரிவுகளின்கீழ் யாதொரு குற்றம் நடந்ததாக சொல்லப் படும் ஒரு கிரிமினல் வியாச்சியத்தில், எதிரி செய்ததாக ருசுப்படுத்தப் பட வேண்டிய குற்றத்தின் சாராம்சம் என்னவென்றால், குற்றம் சாட்டப் பட்ட எதிரி தமக்கு கொடுக்கப்பட்ட நோட்டீஸை கீழ்படியாமல் அவமதித் தார் என்பதல்ல, எந்த விஷயமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டதோ அந்த விஷயம் வாஸ்தவமாக இருக்க வேண்டுமென்பது. அதாவது எதிரியானவர் ஒரு லோகல் போர்டு நிலத்தில் ஆக்கிரமித்ததாக சொல்லப்படும்பக்ஷத்தில் அவ்வாக்கிரமமானது வாஸ்தவமா அல்லவா என்பது. சென்னை லோகல் போர்டுகளின் சட்டத்தின் 159, 207 பிரிவுகளின்கீழ் ஒரு நபர் ஒரு லோகல் போர்டு நிலத்தில் ஆக்ரமித்தாரென்றும் அவர் செய்ததாகச் சொல்லப்படும் ஆக்கிரமிப்பை எடுத்துவிடும்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டும் அந்த நோட்டீ ஸை லக்ஷியம்செய்யவில்லை என்னும் காரணத்தினால் ஒரு கிரிமினல் கோர்ட் டில்தாவாசெய்யப்படும்பக்ஷத்தில், அத்தகாவாவில் எதிரியானவர்நோட்டீஸை நிராகரித்தாரென்று மாத்திரம் ருசு ஏற்படுவதே அவரை தண்டிப்பதற்கு போதுமான ஒரு காரணமாகாது. அவர் வாஸ்தவத்தில் ஒரு லோகல்போர்டு நிலத்தில் ஆக்ரமித்ததாகவும் ருசு ஏற்பட்டால்தான் அவரை தண்டிக்கலாம். (a). ஆகையால், ஒரு நபர், இப்பிரிவின்கீழ் தாவா தொடரப்படுமிடத்து தாம் யாதொரு பொது ரஸ்தாவில் ஆக்கிரமம் செய்யவில்லையென்று ருசுப்படுத்த லாம். இப்பிரிவின்கீழ் ஒரு ஆக்கிரமிப்பானது தண்டிக்கப்படுகிறதேயொழிய எவர் ஆக்கிரமம் செய்தாரோ அவரேதான் தண்டிக்கப்பட வேண்டுமென்ப தற்கில்லை. ஆகையால், யாதொரு நபர் ஒரு பொது ரஸ்தாவில் ஆக்கிர மித்திருந்து பிறகு அந்த ஆக்கிரமத்துடன் தன் வீட்டை மற்றொருவருக்கு விற்ற பிறகு ஆக்கிரமம் செய்ததற்காக தண்டிக்கப்படுவதற்கில்லை. ஆக் கிரமம் செய்வதே தண்டிப்பதற்கு ஆதாரமாகாது. ஆக்கிரமம் செய்த பிறகு அதை எடுத்துவிடும்படி கேட்கப்பட்டும் கீழ்ப்படியாமல் இருந்தால் தான் தண்டனை ஏற்படுவதற்கு ஹேது உண்டாகும்.

இப்பிரிவில்உள்ள "சொந்தக்காரர்" என்னும் பதத்திற்கு (3) (4)-வது பிரிவில் எந்தவளவின்விஷயமாய் நடவடிக்கைஎடுத்துக்கொள்ளப்படுகிறதோ அந்தசொத்துக்கு அந்தந்தகாலத்தில் சொந்தத்துக்காவதுவேறொருவருக்காக ஏஜெண்டு, டிரஸ்டி, கார்டியன், (சம்ரக்ஷகர்) மானேஜர் • (நிர்வாக கர்த்தர்) அல்லது ரிசிவராகவாவது அல்லது மத சம்மந்தமான அல்லது தர்ம சம்பந்த மான யாதொரு காரியத்துக்காகவாவது அந்த சொத்தின் வாடகையையாகி லும் வரும்படியையாகிலும் பெற்றுக்கொள்கிற அல்லது பெற்றுக்கொள்வ தற்கு அருகராயிருக்கிற ஒரு நபரென்பதும் அடங்கும் என்றுள்ளது. ஒரு கூட்டத்தினர் பொதுவான ஒரு சொத்துக்கு சொந்தக்காரராயிருந்து அவர்

(a) 2. அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை கேசுகளின் குறிப்புகள். பக்கம் 124. 124 முதல் 128-வரையில் பார்க்க.

களில் ஒருவர் அந்தக் கூட்டத்தினுடைய பொக்கிஷதாரராக இருந்து அந்தக் கூட்டத்திற்காக ஒரு சுற்றுச் சுவர் கட்டி நந்தவனத்தை ஏற்படுத்தினதினாலேயே 189-வது பிரிவின்கீழ் அவர் ஒரு "சொந்தக்காரர்" என்று கருதப்படமாட்டார். அவரை இப்பிரிவின்கீழ் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டுமானால், அவர் அந்த கூட்டத்தின் சொத்துக்களுக்காக மானேஜர் அல்லது ரிசீவர் அல்லது டிரஸ்டியாக இருந்ததாகவும், அவர் அந்த கட்டிடத்தைத் தமது சுவாதீனத்தில் பெற்றிருந்ததாகவும் ருசு ஏற்பட வேண்டும். (a)

ஒரு கேஸில், ஒரு நபருடைய கொரடானது மற்ற அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளைவிட ஒரு அடி தெருவின் மேலாக வெளியே வந்திருந்தது. ஆனால் அந்த தெருவில் எல்லா வீடுகளும் இருக்க வேண்டிய வரிசை இன்னதென்று ருசு இல்லாமலிருந்தது. அக்கம் பக்கத்திலிருக்கும் வீடுகளின் கொரடுகளுக்கு ஒருஅடி அதிகமாக வெளியேவந்திருப்பதினாலேயே அவர் ஆக்கிரமித்ததாக ஏற்படாதென்று அந்த கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (b).

சுமார் 40, 50 வருஷ காலமாக ஒரு திண்ணையானது ஒரு வீட்டின் பாகமாக இருந்துவரும்பக்ஷத்தில், அந்த திண்ணை வீட்டைச் சேர்ந்ததென்றுதான் சாதாரண முறையில் அனுமானிக்கப்படும். அந்த திண்ணையானது பொது தெருவைச் சேர்ந்ததென்று லோகல் போர்டாரே ருசுசெய்ய வேண்டும். (c). ஆக்கிரம விஷயமாக தருந்ததும் சரியானதுமான கணக்குகளைக் கொண்டல்லாமல் அனுபோகமுள்ள சாக்ஷிகளைக் கொண்டும் ருசுப்படுத்த வேண்டும். அனுபோகமில்லாத ஒரு உத்தியோகஸ்தர் மிகவும் பழைய கணக்குகளைக் கொண்டு ருசு செய்வதே முடிவான சாக்ஷியமாகாது,

நில ஆக்கிரம விஷயமாக ஒருதரம் நோட்டீஸ் கொடுத்தபிறகு யாதொரு நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளாமல் மறுபடியும் ஆக்கிரமத்தை எடுத்துவிடும்படி லோகல் போர்டார் நோட்டீஸ் கொடுக்கலாமா என்றும் அந்த நோட்டீஸானது செல்லத்தக்கதாவென்றும் கேள்வி வந்தில் அந்த நோட்டீஸ் செல்லத்தக்கினதாகும் என்றும் ஒரு நபர் அதற்குக் கீழ்ப்படியாமல் இருக்கும் பக்ஷத்தில் அவர்பேரில் தாவாதொடரலாம் என்றும் ஒரு கேஸில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (d)

இந்தப் பிரிவின்கீழ் ஒரு ப்ரெஸிடென்டானவர் கொடுக்கும் நோட்டீஸானது இந்தியன் பீனல்கோட் 188-வது பிரிவின்கீழ் ஒரு "உத்தரவு" என்று சொல்லப்படுமா? இதற்கு முன்பே நாம் சொல்லியிருக்கும் தீர்மா

(a) வடுகு குமார நாடார் விஷயமாக 55 M. 1. J. 206.

(b) லக்ஷ்மி நரசம்மா vs. மசூலிப் பட்டணம் முனிஸிபல் கௌன்சில் (1920) M. W. N. 430—7 1. C. 808.

(c) ஹனுமானய்யா vs. அனந்தபுரம் முனிஸிபல் சேர்மென் 8 Mad 64.

(d) ராகவாச்சாரியார் vs. திருவள்ளூர் யூனியன்போர்டு 23 L. W. 620

னங்களைப் பார்க்குமிடத்து ஒரு ப்ரெஸிடென்டு கொடுக்கும் உத்தரவை ரிகாகரித்ததற்கு ப்ரெஸிடென்டானவர் கோர்ட்டில் தாவா செய்யும்போது அந்த நோட்டீஸ் செல்லத்தக்கின தல்லவென்று எதிர்க்கலாமென்றேற்படுமாகையால் அந்தநோட்டீஸை ரிகாகரிப்பதே இந்தியன் பீனல்கோட் என்னும் சட்டத்தின் 188-வது பிரிவின்கீழ் ஒரு குற்றமெனக் கருதப்படாது.

ஒரு நபர், தம் வீட்டின் முன்பாகவோ அல்லது வேறு இடத்திலேர் ஆக்கிரமித்திருப்பதை எடுத்துவிடும்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டபிறகு, அந்த ஆக்கிரம விஷயமாக தாம் ஒரு பிரதிபலத்தொகை (நஷ்ட ஈடு அல்லது Damages) அடையக்கூடியதாயிருக்கிறதென்னும் காரணத்திலுலேயே அந்த நோட்டீஸை ரிகாகரிப்பதற்கில்லே. அந்த நோட்டீஸுக்கு கீழ்ப்படிந்து விட்டபிறகுதான் தமக்கு ஏதாவது பிரதிபலத்தொகை வேண்டியிருந்தால் அதைக் கேட்கவேண்டும். (a) இன்னும் அவர் தாம் 30-வருஷங்களுக்கு மேலாக அவ்வாக்கிரமத்தை அனுபவித்து வருவதாக ருசு செய்தபிறகுதான் பிரதிபலத் தொகை கேட்கலாம்.

சென்னே டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகளின் சட்டத்தின் 182-வது பிரிவும் இந்த சட்டத்தின் (அதாவது சென்னே லோகல் போர்ட்ஸ் ஆக்ட்) 159-வது பிரிவும் ஒன்றுதான். இவ்விரண்டு பிரிவுகளில் ஒரேமாதிரியான பதங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவில் முதல் இரண்டு மூன்று வரிசைகளில் "சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு" என்றுள்ளது. ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு ஒரு ஆக்கிரம விஷயாக நோட்டீஸ் கொடுப்பதாயிருந்தால் இவ்விரண்டுபேர்களில் ஒருவருக்கு மாத்திரம்தான் நோட்டீஸ் கொடுக்கவேண்டுமா அல்லது இவ்விரண்டுபேர்களுக்கும் நோட்டீஸ் கொடுக்க அதிகாரம் உண்டா என்பது கேள்வி. இக்கேள்வியானது சென்னே டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடி சட்டத்தின் 182-வது பிரிவின்கீழ் தீர்மானத்திற்கு வந்தபொழுது பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது. சென்னே டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்டிகளின் சட்டத்தின் 182-(1)-வது பிரிவில் உபயோகப்பட்டிருக்கும் "அல்லது" என்னும் பதத்திலுல் ஒரு முனிஸிபாலிட்டியானது ஒரு வீட்டின் சொந்தக்காரர், அதை அனுபவிப்பவர் இவர்களில் ஒருவர்பேரில் மாத்திரம்தான் அமுல் நடத்தக்கூடுமென்று ஏற்படாது. முனிஸிபாலிட்டியார் இப்பிரிவின்கீழ் இவ்விருவர்பேரிலும் அமுல் நடத்தலாம். (b)

இந்தப் பிரிவின்கீழ் கொடுக்கப்படும் நோட்டீஸை ரிகாகரிப்பதற்கு முதல் தினத்திற்கு ரூபா 200-ம் பிறகு நடக்கும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா 10-ஆக அபராதம் உண்டு.

(a) நாராயண அய்யர் vs. சுப்ரமணியம்செட்டி (1927) M. W. N 346 A. I. R. 1927 Mad 1113.

(b) 2 அகில இந்தியா லாஜர்னல் ரிப்போர்ட்டுகள் 87.

சில பிணக்கங்களுக்கும், கட்டுக்கோப்புகளுக்கும் உத்தரவு கொடுக்க அதிகாரம்.

160. (1) யாதொரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டானவர்-அந்த போர்டாரின் அங்கீகாரத்தின்பேரில், யாதொரு வளவின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு, அந்த போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் யாதொரு பொதுவான பாதையின் மேலாக பிதுக்கமாயிருக்கும்படி காய்வாரம்-மெத்தை-வீட்டின் முகப்பு-வெயிலுக்கு நிழல்-காற்றுக்கும் மழைக்கும் அடைப்பு முதலியவைகளைப்போட்டுக்கொள்ளவோ அந்த வளவுக்குப் போவதற்கு அவசியமாயுள்ள யாதொரு படிக்கட்டையாவது, சாக்கடைக்கால் மேல்முடியையாவது கட்டிக் கொள்ளவோ தமக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய நிட்டங்களுக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் உட்படுத்தி-ஒரு லிசென்ஸ் கொடுக்கலாம்.

(2) யாதொரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டானவர் - அந்த போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் யாதொரு பொதுவான பாதையிலாவது, அல்லது வேறேஎந்த பொதுவான இடமானது-அந்த போர்டாருடைய சுவாதீனத்தில் சங்கிரமித்திருக்கிறதோ அப்படிப்பட்ட இடத்திலாவது பந்தல்களையும் இதர கட்டுக் கோப்புகளையும் சிறிது காலத்துக்கு அமைத்துக் கொள்வதற்காகத் தமக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய நிட்டங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் உட்படுத்தி ஒரு லிஸென்ஸ் கொடுக்கலாம்.

(3) யாதொரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டானவர்-அந்த போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் பாதையின் பாகங்களை லோகல் போர்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய ஷரத்துகளின் படியும் நிட்டங்களின்படியும் கால அளவுக்கும் அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்கு அந்த போர்டாருடைய அங்கீகாரத்தின்பேரில் குத்தகைக்கு விட அதிகாரம் உடையவராவார்.

(4) ஆனல், சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷெ பிதுக்கத்திலாகிலும் மேலே கண்டபடி (பந்தல் முதலியவைகளை) அமைத்துக் கொள்ளுவதனலாயினும் அல்லது அடைப்பு ஏற்படுவதனலாயினும் ஆரோக்கியத்திற்கு அபாயகரமாக இருக்கும்போலிருந்தாலும் வெகு சாய்ப் பொது ஜனங்களுக்கு அசௌகரியம் உண்டாகும்போலிருந்தாலும், அந்த பாதையை அப்படியே உபயோகிப்பதற்கு வேறே விதமாய் முக்கியாம்சத்தில் இடைஞ்சல் உண்டாகும் போலிருந்தா

லும், (1)-குறிப்பிட்ட உபப்பிரிவின்படி லைஸென்ஸாவது (3)-குறிப்பிட்ட உபப் பிரிவின்படி யாதொரு குத்தகையாவது கொடுக்கப்படவுங் கூடாது, அல்லது விடப்படவுங் கூடாது.

(5) பிரதேச கவர்ன்மென்டார்-யாதொரு லோகல் போர்டாரவது யாதொரு வகுப்பைச் சேர்ந்த லோகல் போர்டுகளாவது (1), (3) குறிப்பிட்ட உபப் பிரிவுகளின்படிக்கான அதிகாரங்களை செலுத்துவதை விளம்பரமூலமாக மட்டுப்படுத்தி தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி மேல்விசாரணையின்கீழ் வைக்கலாம்.

(6) இந்தப் பிரிவின்படி, எவ்வளவு காலத்துக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் காலம் கழிந்து போவதன் மேல், ப்ரெஸிடென்டானவர் - நோட்டீஸ் கொடுக்காமலே, (1) குறிப்பிட்ட உபப்பிரிவு அல்லது (2)-குறிப்பிட்ட உபப்பிரிவின்படி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட யாதொரு பிதுக்கம் அல்லது கட்டுக் கோப்பை எடுத்து விடும்படி செய்யலாம் ; இன்னும், அப்படி செய்ததற்குப் பிடிக்கும் செலவானது - லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற நபரிடமிருந்து இதில் பின்னல் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் வசூலிக்கத்தக்கதாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் லோகல் போர்டு ப்ரெஸிடென்டுகள் தங்களுடைய யுக்தானுசாரம் லோகல் போர்டுகளில் சங்கிரமித்திருக்கும் வீதி அல்லது பாட்டை அல்லது தெருக்களின் பக்கங்களை பொதுஜன சௌகரியத்துக்கும், சௌக்கியத்துக்கும் முறண்படாதபடி அவைகளில் தாழ்வாரம், மெத்தை வீட்டின் முகப்பு, வெயிலுக்கு நிழல், காற்றுக்கும் மழைக்கும் அடைப்பு முதலியவைகளை போட்டுக்கொள்வதற்கும் அல்லது ஒரு நபர் தம்முடைய வீட்டுக்கு போகும்படியாக படிக்கட்டு சாக்கடைக்கால் மேல்மூடி முதலிய வைகளைக் கட்டுவதற்கும் லைசென்ஸ் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு லோகல் போர்டுக்குச் சேர்ந்த வீதி பக்கத்தை உபயோகிக்கும்படி லைசென்ஸ் கொடுக்கலாமே தவிர அதை அந்த லோகல் போர்டினுடைய உத்திரவில்லாமல் வேறே எவ்விதமாகவாவது பராதீனம் செய்வதற்கில்லை. அதாவது குத்தகை, விற்பனை, அடமானம் முதலியவைகளைச் செய்வதற்கில்லை. லோகல் போர்டு ப்ரெஸிடென்டுகளால் கொடுக்கப்படும் லைசென்சானது ஆறு மாதத்திற்கொருதரம் புதுப்பிக்கப்பட வேண்டும். ஒரு ப்ரெஸிடென்டால் கொடுக்கப்படும் லைசென்ஸிலுள்ள நிபந்தனைகளை அனுசரியாமற்போனால் அதற்கு தண்டனை உண்டு. லைசென்சும் ரத்து செய்யப்படலாம்.

இப்பிரிவானது 159-வது பிரிவிற்கு உட்பட்டே அர்த்தம் கொள்ளப் பட வேண்டும். அதாவது ஒரு ப்ரெஷிடென்டு யாதொரு ரோட்டின் பக்கத்தை உபயோகிக்கும்படியாக லிசென்ஸ் கொடுத்தபோதிலும் அவசியமா யிருந்தால் அதற்கு விரோதமாக அந்த லிசென்ஸை ஆதாரமாகக்கொண்டு செய்யப்பட்டிருக்கும் ஆக்கிரமத்தை எடுத்துவிடும்படிக்கு நோட்டீஸ் கொடுக்கலாம்.

இப்பிரிவினின் (1)-வது உபப் பிரிவானது சாதாரணமாக கடைத்தெருவுகளில் பந்தோபஸ்துக்காக கட்டிக்கொள்ளக் கூடிய தாழ்வாரம், மெத்தை வீடு, வீட்டின் முகப்பு முதலியவைகளைப் பற்றி சொல்லுவதாகும். (2)-வது உபப் பிரிவானது விசேஷ காலங்களில் உத்ஸவங்களுக்காகவோ அல்லது பொதுஜனகளிப்புக்காகவோ அல்லது விவாகங்களுக்காகவோ தாத்காலிகமாக போடக்கூடிய பந்தல் முதலியவைகளைப் பற்றி லிசென்ஸ் பெறுவதைக் குறிப்பதாகும். (3)-வது உபப் பிரிவில் விசேஷ காலங்களில் கிராமம் அல்லது பட்டணங்களில் அங்காடிக் கடைகள் எற்படுங் காலத்தில் அவைகள் வீதி பக்கங்களை உபயோகப்படுத்துவதற்காக எற்படுத்திக்கொள்ளும்குத்தகை முதலியவைகளைக் குறிப்பதாகும். ஆனால் மேலேசொல்லப்பட்டவைகள் உதாரணங்களாக சொல்லப்பட்டனவேயொழிய அவைகளைத் தவிற வேறே எவ்விதமான காரியத்திற்கும் ப்ரெஷிடென்டு லிசென்ஸ் கொடுக்கப்படாதென்று சொல்ல முடியாது. (4)-வது உபப் பிரிவில் எந்த சந்தர்ப்பங்களை கவனித்து லோகல் போர்டு ப்ரெஷிடென்டுகள் லிசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. (5)-வது உபப் பிரிவில் லோகல் போர்டு ப்ரெஷிடென்டுகளினுடைய அதிகாரங்களை இன்னபடி செலுத்த வேண்டுமென்பதைக் குறித்து லோகல் கவர்ன்மெண்டார் உத்திரவுகளைச் செய்யலாமென்று சொல்லப்பட்டுள்ளது. (6)-வது உபப் பிரிவில் ஒரு லிசென்ஸினுடைய கால அளவானது முடிந்த பிறகு எதற்காக லிசென்ஸ் பெறப்பட்டதோ அந்த பிதுக்கம் அல்லது கட்டடம் அகற்றப்படாவிட்டால் லோகல் போர்டு ப்ரெஷிடென்டுகளே நேராக அவைகளை எடுத்துவிட்டு அதனால் சேர்ந்த சிலவை லிசென்ஸ்தாரர்களிடமிருந்து வசூலிக்கலாம் என்றுள்ளது. (1)-வது உபப் பிரிவிலும் (3)-வது உபப் பிரிவிலும் சொல்லப்பட்டவைகளுக்கு ப்ரெஷிடென்டுகள் லோகல் போர்டுகளினுடைய உத்திரவை காடின பிறகுதான் லிசென்ஸ் முதலியவைகளைக் கொடுக்க வேண்டும். (2)-வது உபப் பிரிவில் சொல்லப்பட்டிருப்பவைகளுக்கு ப்ரெஷிடென்டுகள் தமது சொந்த பொறுப்பில் லிசென்ஸ் கொடுத்தாலே போதுமானது. (2)-வது உபப் பிரிவின்கீழ் கொடுக்கப்படும் லிசென்ஸுகளுக்கு கட்டணத்தொகை இன்னதென்று குறிப்பிடப்படவில்லையாதலால் பந்தல் முதலியவைகளுக்கு யாதொரு கட்டணத்தொகை இல்லாமலே லிசென்ஸ் கொடுக்க வசதியுண்டு.

லைசென்ஸில்லாமல் வீதிப்பக்கங்களை அங்காடி கடைகளுக்காக உபயோகப்படுத்துவது ஒரு குற்றமாகும் (a)

(5)-வது உபப்பிரிவின்கீழ் லோகல் கவர்ன்மென்டார் லோகல் போர்டுகளினுடைய ஞாபகத்திற்காக 15-4-1924ல் வீதி பக்கங்களை உபயோகிப்பதைப்பற்றி குத்தகைக்கு விடுவதைப்பற்றியும் லைஸென்ஸ் கொடுப்பதைப் பற்றியும் விதிகளைச் செய்திருக்கின்றனர். அவைகளின் சாராம்சம் பின் வருமாறு:—

G. O. No. 991. L & M. Dated. 15-4-24.

பைனான்ஷியல் ரிலேக்ஷன்ஸ் கமிட்டியானது ரோட்டுகள் பக்கத்திலுள்ள இடங்கள் சின்ன கடைகள், கிடங்குகள், வண்டி நிற்குமிடங்கள், மரங்களை நடுதல் இவைகளுக்காக இடங்களை ஏற்பாடு செய்யலாமென்று தெரிவித்திருக்கின்றனர். சாஸ்வதமாக கடைகள், கிடங்குகள் முதலியவைகளை கட்டும் பக்ஷத்தில் அவைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட இடமானது மறுபடியும் ஒரு தெருவு அல்லது ரோட்டாக உபயோகப்படவொட்டாமல் தடுக்கப்படுமாதலால் அந்த லோகல்போர்டினுடைய சுவாதீனத்திலிருந்து சாஸ்வதமாக நீக்கிவிடப்பட்டதாக ஏற்படும். ஆகையால் அப்படிப்பட்ட சாஸ்வதமான கட்டடங்களைகட்டும்படி உத்தரவு கொடுப்பதானது ஒரு லோகல்போர்டின் அதிகாரத்திற்கு அதீதமானதாகும்.

ரோட்டுகள் அல்லது தெருவுகள் மிகவும் அகலமாயிருந்து அப்படிப்பட்ட கட்டடங்கள் கட்டும்படியாகயிருந்து அவைகளுக்காக இடம்வேண்டி இருக்கும்பக்ஷத்தில் லோகல் போர்டுகள் கலெக்டருக்கு தெரிவித்து இந்த சட்டங்கள் பிரயோகப்படுத்த வொட்டாமலிருக்கும்படி அந்த நிலத்தை ரோட்டு காரியங்களுக்கல்லாமல் மற்ற காரியங்களுக்காக பராதீனம் செய்வதற்கு உத்திரவு பெறவேண்டும்.

* * * ஆனால் அந்த தெருவு வழியாக போகக்கூடிய போக்கு வரவுகளுக்காக வேண்டிய இடமானது ஆக்கிரமிக்கப்படாமல் இருக்கும்படி கவனித்து வரவேண்டும்.

ரோட்டுகளிலும், தெருக்களிலும் பக்கத்திலுள்ள இடங்களை ப்ரைவேட் நபர்கள் ஆக்கிரமித்திருந்து அவ்வாக்கிரமமானது ஆக்ஷேபிக்கத்தகுந்தாக இராமலிருக்குமானால் அவைகளுக்கு லோகல்போர்ட்ஸ்ஆக்டின் 160 (1) (2)-வது பிரிவின்கீழ் லைசென்ஸ் கொடுக்கப்படலாம். லோகல் போர்ட்ஸ் ஆக்டு 160 (3)-வது பிரிவின்கீழ் ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு அதே பிரிவின் (4) (5)-வது உபப்பிரிவுகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த லோகல் போர்டாரின் அங்கீகாரத்தை முன்னிட்டு ரோட்டுகளின் பக்கங்களை குத்தகைக்கு விடலாமென்று கண்டுள்ளது. லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 160 (1)-வது பிரிவின்கீழ் கொடுக்கப்படவேண்டிய லைசென்ஸானது 13-10-23ல்

(a) மாஹராஜா சக்கிரவர்த்தி vs கண்ணு 18 M. L. J. 329.

G.O.No 2263 L. & M. என்னும் ஆர்டரில் இன்னின்னவிதமான நிபந்தனைகளுக்கிணங்கி கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. இப்பொழுது கவர்ன்மென்டார் அந்த நிபந்தனைகள் 160 3,-வது பிரிவின்கீழும் கொடுக்கப்பட வேண்டிய குத்தகைகள் விஷயமாகவும் அனுசரிக்கப்பட வேண்டுமென்று உத்திரவிடுகிறார்கள்.

லோகல் கவர்ன்மென்டார் பின் சொல்லப்பட்ட நிபந்தனைகளை செய்திருக்கின்றனர்.

(1) ஒவ்வொரு லோகல்போர்டும், சென்னை லோகல்போர்ட்ஸ் ஆக்டின் 160-வது பிரிவின் (3)-வது உபப்பிரிவின்கீழ் குத்தகைக்காகச் செய்யப்படும் ஒவ்வொரு மனுவிலும்-எந்த காரியத்திற்காக அந்த நிலமானது உபயோகப்படுத்தப்படுமென்றும் எவ்வளவு கால அளவுவரையிலும் குத்தகைக்கு வேண்டும் என்றும் தெரிவிக்கும்படியாக கேட்கவேண்டும். அந்த நிலத்தின் பேரில் ஏதாவது கட்டிடம் கட்டுவதாக பிரேரேபிக்கப்படும்பக்ஷத்தில், எந்த சாமான்களைக்கொண்டு அந்த கட்டிடமானது கட்டப்படும் என்பதைத் தெரிவிக்கும்படி கேட்கவேண்டும்.

(2) அந்த கட்டிடமானது பனை ஓலை, தென்னை ஓலை, மூங்கில் அல்லது தட்டி அல்லது கோணி இன்னும் இவைபோன்றதும், பிரதிதினம் எடுத்து விடும்படியான சுபாவமுள்ள அங்காமியான சாமான்களைக் கொண்டு கட்டப்படுமானால், அந்த நிலமானது குத்தகைக்கு விடப்படலாம். ஒவ்வொரு குத்தகைக்கும் ஒரு கட்டளைத் தொகையானது விதிக்கப்பட்டு முன்ஜாடியாகவே வசூலிக்கப்பட வேண்டும்

(3) மேலே 2-வது பாராவில் கண்டுள்ள சாமான்களைத் தவிர மற்ற சாமான்களைக்கொண்டு செய்யப்படும் ஒரு கட்டிடத்துக்காகவாவது அல்லது 12-மாதங்களுக்கு அதிகமான ஒரு கால அளவிற்காவது, யாதொரு குத்தகையும் அந்த டில்டிரிக்ட்டின் கலெக்டருடைய முன் சம்மதமில்லாமல் ஒரு லோகல் போர்டினால் கொடுக்கப்படக்கூடாது. டில்டிரிக்ட்டு கலெக்டரானவர் அப்படி சம்மதத்தைக் கொடுக்கும் காலத்தில் எந்த நிபந்தனைகளுக் கடங்கி அந்த லோகல் போர்டானது யாதொரு குத்தகையை விடலாமோ அப்படிப்பட்ட நிபந்தனைகளை தெரிவிக்கலாம். அந்த லோகல் போர்டானது, குத்தகைச் சீட்டில் அந்த நிபந்தனைகளைக் காணவேண்டும்.ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஸ்பஷ்டமாக, அந்த குத்தகையானது, பொதுக் காரியங்களை யொட்டி அவசியமென்று எற்படும்பொழுது, யாதொரு பிரதிபலத் தொகை இல்லாமலே அந்த குத்தகைஎற்பாட்டின் காலத்திற்குள்ளேயே ரத்துசெய்யப் படலாம்என்றும், குத்தகை கட்டணமானது-குத்தகைஅமுலிலிருக்குங்காலத் திற்கு முன்ஜாடியாகவே அட்வான்ஸாக கொடுக்கப்பட வேண்டுமென்றும்

அப்படிக்கொடுக்கத் தவறும்பக்ஷத்தில் அந்த குத்தகையானது ரத்து செய்து விடப்படலாம் என்றும் கண்டிருக்கப்பட வேண்டும்.

(4) விவசாய காரியங்களுக்காக, ரோட்டின் பக்கங்களை குத்தகைக்கு விடக்கூடாது.

(5) சாதாரண சந்தர்ப்பங்களில் மூன்று வருஷங்களுக்கதிகமாக யாதொரு பூமியும் குத்தகைக்கு விடப்படக்கூடாது. ஒரு குத்தகையானது புதுப்பிக்கப்பட வேண்டுமானால், கலெக்டரினுடைய உத்தரவானது அவசியமில்லை.

ஜலதாரை, சாக்கடைக்கால் முதலியவைகளின் மேல் அனுமதியில்லாமல் கட்டடம் கட்டக்கூடாதென்று தடுப்பது.

161. (1) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டின் அல்லது அந்த ப்ரெஸிடென்டால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு நபரின் எழுத்து மூலமாக அனுமதியில்லாமலே யாதொரு ஜலதாரை அல்லது சாக்கடைக்காலின் மேலாவது, ஜலதாரை அல்லது சாக்கடைகாலின் யாதொரு பாகத்தின் மேலாவது, பாதையைப் பெருக்குவதனால் சேரும் குப்பையைக் கொண்டாகிலும் இதர குப்பைகூளத்தைக் கொண்டாகிலும் முழுவதுமோ அல்லது சிறிதுமட்டிலோ மூடப்பட்டாயினும், உயர்த்தப்பட்டாயினும், சமப்படுத்தப்பட்டாயினும் இருக்கும் யாதொரு நிலத்தின் மேலாவது எந்தக் கட்டிடத்தையும் கட்டக்கூடாது.

(2) ஷெடிப்ரெஸிடென்டாவது, அல்லது நபராவது அப்படிப்பட்ட அனுமதியில்லாமலாகிலும் அப்படிப்பட்ட அனுமதியின் ஷரத்துகளுக்கு விரோதமாகவாகிலும் அவைகளுடன் முரண்படும்படியாகிலும் கட்டடத்தை கட்டியிருக்கும் யாதொரு நபருக்கு நோட்டீஸ் கொடுத்து அந்தக் கட்டிடத்தை இடித்துவிடும்படி உத்தரவு செய்யலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, ஜலதாரை அல்லது சாக்கடைக்கால் இவைகளின் பேரில் பஞ்சாயத்து ப்ரெஸிடென்டினுடைய அனுமதியில்லாமல்யாதொரு கட்டிடத்தையும் கட்டக்கூடாதென்று சொல்லப்பட்டுள்ளது. ப்ரெஸிடென்டினிடமிருந்து லெசென்ஸ் பெற்றபிறகும், லெசென்ஸுக்கும் விரோதமாக யாதொரு கட்டிடத்தைக் கட்டும்பக்ஷத்தில், அதை இடித்துவிடும்படி நோடீஸ் கொடுக்கலாம்.

இந்தப்பிரிவின்கீழ் யாதொரு குற்றம் செய்யப்படும்பக்ஷத்தில் அதற்கு முதலில் 200-ரூபாயும், பிறகு தவறுதல் ஏற்படும் ஒவ்வொரு தினத்திற்கும் 50-ரூபாயுக்கு அபராதம் உண்டு.

162. யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர் - லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் பொதுவான பாதைக்காகிலும் வேறே நிலம், நீர் நிலைக்காகிலும் அடுத்திருக்கும் யாதொரு நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோக தாரருக்கு போர்டாருடைய அங்கீகாரத்தின் பேரில் நோட்டீஸ் கொடுத்து அந்த சொத்தின் மேல் வளர்ந்திருக்கும் இடங்களிலும், அந்த நிலத்திலிருந்து வெடி சொத்தின்மேல் பரவியிருக்கும் அளவுக்கும் - சப்பரத்துக்கள்ளி, மிலாறு, லான்டானா அல்லது தீங்கு உண்டாக்கத்தக்கவேறே பூண்டுகளை எடுத்துவிடும்படி உத்தரவு செய்யலாம்.

தீங்கு உண்டாக்கத்தக்க புல் பூண்டு முதலியவைகளை அப்புறப்படுத்துவது சம்பந்தமாய்நோட்டீஸ் கொடுப்பது.

குறிப்புகள்.

ஒவ்வொரு ப்ரெஸிடென்டும், தம்முடைய லோகல்போர்டினது அங்கீகாரமின்றி ஒரு பிரைவேட் நிலத்திலிருந்து பொது ரஸ்தாக்களுக்கு பரவும்படியான நாகதாளி முதலியவைகளை எடுத்துவிடும்படி உத்திரவு செய்வதற்கில்லை. ஒரு நபர், தன்னுடைய நிலத்திலிருந்து பொதுஜனங்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நாகதாளி முதலியவைகளை பரவும்படிக்குச் செய்வது இப்பிரிவின்கீழ் ஒரு குற்றமென கருதப்படாமலிருந்தபோதிலும், இந்தியன் பீனல்கோட் 268-வது பிரிவின்கீழ் ஒரு குற்றவாளியாகக் கருதப்பட்டு 290-வது பிரிவின்கீழ் புப்ளிக் நியூசன்சிற்காக தண்டிக்கப்படலாம். இந்த பிரிவின்கீழ் ஒரு ப்ரெஸிடென்டானவர் நாகதாளி முதலியவைகளை எடுத்துவிடும்படி நோட்டீஸ் கொடுத்தும், அந்த நோட்டீசுக்கு கீழ்ப்படியாமலிருப்பது ஒரு குற்றமென கருதப்படும். ஆனால், இந்தப் பிரிவின்கீழ் கொடுக்கப்படும் ஒரு தாவாவில் எதிரியானவர் நாகதாளியானது தன் நிலத்தின் ஹத்துக்குள்ளாகவே இருக்கிறதென்றும், நாகதாளியானது வீதியில் பரவவில்லை என்றும், எதிர்வாதம் செய்யலாம். ஒரு சொத்தை, இரண்டு அல்லது மூன்று நபர்கள் ஜாயிண்டாகப் பெற்றிருப்பின் அவர்கள் மூவரும் சட்டப்பிரகாரம் தங்களுடைய சொத்தினால் ஏற்படப்பட்ட நியூசன்சுக்கு உத்திரவாதமாக இருக்கவேண்டும். ஒரு நபருடைய நிலத்திலிருந்து பொதுஜன போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நாகதாளி முதலியவைகள் படர்ந்து இருக்கும் பக்ஷத்தில், அதற்காக அவர்பேரில் எந்த நபரும் தாவா செய்ய உரிமையுண்டு (a).

(a) மொஹப்பகௌண்டன் விஷயமாக 55. M. L. J. 715.

இந்த பிரிவின்கீழ் கொடுக்கப்படும் ஒரு நோட்டீஸுக்கு கீழ்ப்படியாமலிருப்பதற்கு முதல்தரம் ரூபாய் 50-ம், பிறகு பிரதிதினத்திற்கும் 10-ரூபாய், அபராதமுண்டு.

பொதுவான பாட்டைகளில் குழி தோண்டுவதும் தடங்கல் ஏற்படுத்துவதும் கூடாதென்றுதடுப்பது.

163. (1) யாதொரு நபர் எந்த லோகல் போர்டரிடத்தில் யாதொரு பொதுவான பாலத்தை சங்கரமித்திருக்கிறதோ அந்த லோகல் போர்டு ப்ரெஸிடென்டின் அனுமதியை முன்னதாகப் பெற்று அந்த ப்ரெஸிடென்டு ஏற்படுத்திக்கொடுக்கிற நிபந்தனைகளின்படி நடந்தாலன்றி மற்றப்படி, அவர் மேற்படி பாதையின் கீழ் தோண்டவுங்கூடாது அல்லது எவ்விதத் தடங்கல் ஏற்படுத்தவுங்கூடாது.

(2) அப்படிப்பட்ட அனுமதி கொடுக்கும்போது, அந்த நபர்-மேலே கண்ட குழியைத் தூர்த்துவிடுகிற வரையிலாவது தடங்கலை அப்புறப்படுத்துகிற வரையிலாவது அந்தக் குழி அல்லது தடங்கலுக்குத் தம்முடைய சொந்த செலவிலே போதுமான அளவுக்கு அடைப்படைத்து மூடிவைக்கும்படி செய்ய வேண்டியதோடுங்கூட, அந்தக்குழி அல்லது தடங்கலுக்கு இராக்காலத்தில் போதுமான வெளிச்சம் தெரியும்படி விளக்கு போடுவிக்கவும் வேண்டும்.

(3) எவராகிலும் இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக நடந்தால், ப்ரெஸிடென்டானவர் சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்தக் குழியைத் தூர்த்துவிட வேண்டும் அல்லது தடங்கலை அப்புறப்படுத்தவேண்டும் அல்லது அந்தக்குழி அல்லது தடங்கலுக்கு வெளிச்சம் தெரியும்படி விளக்கு போடுவிக்க வேண்டும்; இன்னும், ப்ரெஸிடென்டானவர் அந்தப்படி செய்வதற்குப் பிடிக்கும் செலவை மேலே கண்ட நபரிடத்திலிருந்து வசூல் செய்யலாம்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவும், 161-வது பிரிவும் சற்றேறக்குறைய ஒரே தன்மையை உள்ளனவாகும். இந்தப் பிரிவானது, ஒரு பொது ரஸ்தாவில் அல்லது ஒரு ரோட்டில் யாதொரு குழி அல்லது தடங்கலை, லோகல்போர்டு ப்ரெஸிடென்டின் உத்திரவில்லாமல் முறையேதோண்டுவதற்கில்லை அல்லது வைப்பதற்கு இல்லை என்று கூறுகிறது. ஒரு குழி அல்லது தடங்கலின் விஷயமாக ஒரு ப்ரெஸிடென்டானவர் உத்திரவு கொடுத்த பிறகு அதை சரியான நிலையில் வைத்துக்கொண்டிராத விஷயத்தில், ப்ரெஸிடென்டானவர் அவைகளுக்கு தகுந்த ஏற்பாடுகளை செய்விக்கலாமென்று கூறப்பட்டுள்ளது.

தடங்கல் என்பது 159-வது பிரிவின்கீழுள்ள குறிப்புகளில் மிகவும் விவரமாக விளக்கப்பட்டுள்ளது. அவைகளைப் பார்க்க.

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 163-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம், ஒரு நபர், ஒரு பந்தலைப் போடுவதற்கு முன் லைஸென்ஸுக்காக மனுசெய்து, லைசென்ஸ் பெறுமலே பந்தலைப் போடும்பக்ஷத்தில் ஒரு யூனியன்போர்டு (அதாவது பஞ்சாயத்து 212 (9), 219, இப்பிரிவுகளின்கீழ் தக்கநடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். இந்தப் பிரிவுகளின் பிரகாரம், ஒரு மாஜிஸ்ட்ரேட்டானவர், லைஸென்ஸில்லாமல் எந்த நபர் பந்தலைப் போட்டாரோ அவரை லைஸென்ஸ் பெறுததற்காக தண்டனை செய்வதுமல்லாமல் லைஸென்சுக்காக எவ்வளவு கட்டணம் கட்ட வேண்டியிருக்குமோ அந்த தொகையை அவரிடமிருந்து வசூலித்து யூனியன் போர்டுக்குக் கொடுக்கலாம். ஆனால், லைஸென்ஸில்லாமல் பந்தலைப்போட்டதற்காக, யூனியன் போர்டார் தாங்களாகவே எதிரி இவ்வளவு தண்டத் தொகை செலுத்த வேண்டுமென்று நிர்ணயிப்பதற்கு யாதொரு சட்டப் பிரமாணமும் லோகல் போர்டு ஆக்டில் கிடையாது. இன்னும், யூனியன் போர்டானது லைசென்ஸ் கொடுக்காமல் யாதொரு கட்டணத் தொகையையும் விதித்து வாங்குவதற்கில்லை. ஆகையால், ஒரு யூனியன் போர்டானது லைஸென்ஸ் கொடுக்காமல் யாதொரு கட்டணத் தொகையை விதிக்கும்பக்ஷத்தில், அந்த தொகையானது லோகல் போர்டு சட்டத்தின் 221-வது பிரிவின்கீழ் ஒரு "பாக்கி" என்று சொல்லப்படாது. அப்படிப்பட்ட தொகையை வரப்படுத்துவதற்கு யூனியன் போர்டானது மாஜிஸ்ட்ரேட்டினிடம் மனு செய்வதற்கில்லை. இன்னும் சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 221-வது பிரிவின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பணத்தைச் செலுத்தாதிருக்கும் நபர், தாம் ஒரு தவறும் செய்யவில்லையென்றும், தன்னிடமிருந்து யூனியன் போர்டுக்கு யாதொரு தொகையும் சேரவேண்டிய நியாயமில்லை என்று பிரதிவாதம் செய்யலாம். (a).

ஒரு தெருவில், கண்டபடியாக போக்குவரத்திற்கு இடைஞ்சலாக குப்பைகளை அல்லது ரப்பிஷ்களை கொட்டிவைப்பது ஒரு தடங்கலாகும். ஒரு பொது தெருவில், சட்ட விரோதமாக அதாவது உத்திரவில்லாமல் குழிகளை வெட்டுவது அல்லது தடங்கலைச் செய்வதே ஒரு குற்றமாகும். இதற்கு முதல் தடவை 50-ரூபாயும், பிறகு குழியானது மூடப்படும் வரையிலும் அல்லது தடங்கல் எடுக்கப்படும் வரையிலும், ஒவ்வொரு தினத்திற்கும் 10-ரூபாயும் அபராத முண்டு.

லைசென்ஸ் கொடுக்கப்பட்ட பிறகு, யாதொரு குழியை அடைப்பு அடைப்பது அல்லது தடங்கலை எடுத்துவிடுவது, இரவு காலத்தில் விளக்

(a) மரீது கோபய்யா விஷயமாக 55 M. L. J. 29.

கேற்றி வைப்பது இவைகளை செய்யாமலிருப்பதற்கு, முதல் தினத்திற்கு 50-ரூபாயும், பிறகு தவறுதல் ஏற்படும் பிரதி தினத்திற்கும் 10-ரூபாயும் அபராதமுண்டு.

163-A. (1) ஒரு லோகல் போர்டுக்கு சொந்தமான அல்லது அதன் சுவாதீனத்திலுள்ள யாதொரு பொது ரஸ்தா அல்லது பாதை அல்லது வேறே சொத்தில் யாதொரு நபரும் அந்த லோகல் போர்டின் ப்ரெஸிடென்டினுடைய முன் உத்திரவில்லாமலும் அந்த ப்ரெஸிடென்டு விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்படாமலும் யாதொரு மரத்தையும் நடக்கூடாது.

உத்திரவில்லாமல் பொது ரஸ்தாக்களிலுள்ள மரங்களை நடுவது அல்லது வெட்டுவதை தடுப்பது.

(2) ஒரு லோகல் போர்டுக்கு சொந்தமான அல்லது அதின் சுவாதீனத்திலுள்ளதும் யாதொரு பொது ரஸ்தா அல்லது சொத்தில் வளர்ந்து வருவதுமான யாதொரு மரத்தை அந்த லோகல் போர்டினுடைய ப்ரெஸிடென்டின் உத்திரவில்லாமலும் அந்த ப்ரெஸிடென்டு விதிக்கும் நிபந்தனைக்குட்படாமலும் வெட்டவோ அல்லது அப்புறப்படுத்தவோ அல்லது அழிக்கவோ அல்லது சிவவோ அல்லது பட்டை இலைகள் இவற்றை பறிக்கவோ அல்லது வேறே விதமாக கெடுதி செய்யவோ கூடாது.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது, 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்தச் சட்டத்தினால் புதியதாக ஏற்படுத்தப்பட்டது. யாதொரு பொது ரஸ்தாவிலாவது அல்லது ஒரு லோகல்போர்டைச் சேர்ந்த வேறொரு இடத்திலாவது அந்த லோகல்போர்டினுடைய ப்ரெஸிடென்டினிடமிருந்து யாதொரு உத்திரவில்லாமலே செடி முதலியவைகளை நடுவது கூடாது என்பது. அதே மாதிரியாக, ஒரு லோகல்போர்டைச்சேர்ந்த மரத்திலிருந்து கிளை, பட்டை முதலியவைகளை வெட்டுவதும் அல்லது உரித்தெடுப்பதும் கூடாது என்பது. இப்பிரிவின் 1-வது உபப்பிரிவிற்கு விரோதமாக மரங்களை நடுவது ஒரு குற்றமாகும். அதற்கு 100-ரூபாய் வரையிலும் அபராதமுண்டு. அதேமாதிரியாக 2-வது உபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் அம்சங்களுக்கு விரோதமாக ஒரு மரத்தை அல்லது அதன் கிளைகளை வெட்டுவது அல்லது தரிப்பதானதும் ஒரு குற்றமாகும். அதற்கு 200-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

164. (1) வேறே யாதொரு பொதுக் காரியத்துக்காக பிரத்தியேகப்படுத்திவைக்கப்பட்டதாய், யாதொரு லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்து அல்லது அவர்களுக்குச் சொந்தமாக இருக்கும் யாதொரு நிலத்தை எவராகிலும் அந்த லோகல் போர்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் அனுபவித்துக் கொண்டிருந்தால், அவர் - அந்தப்படி அனுபவித்து வருவது விஷயமாக, தண்டத்தொகையாய் லோகல் போர்டாரால் கேட்கப்படக்கூடிய தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவராவார்; இதில் பின்னுல் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் அந்தத் தொகையை வசூல் செய்யலாம்.

நிலத்தை அனுமதியில்லாமல் அனுபவித்து வரும் விஷயத்திலே தண்டத்தொகை விதிப்பதும் நஷ்ட ஈடு வசூலிப்பதும்.

(2) ப்ரெஸிடென்டானவர் - (1) குறிப்பிட்ட உபப்பிரிவின்படி யாருக்கு தண்டத்தொகை விதிக்கப்பட்டிருக்கிறதோ அல்லது விதிக்கப்படக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு நபருக்கு நோட்டீஸ் கொடுத்து அந்த நிலத்தை காலி செய்யும்படியும் அதன்மேலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது வேறே கட்டுக்கோப்பையாவது அதன் மேல் போட்டு வைத்திருக்கும் எதையாவது அப்புறப்படுத்தும்படியும் உத்திரவு செய்யலாம்.

(3) (1)-குறிப்பிட்ட உபப்பிரிவின்படி தண்டத்தொகை செலுத்த உட்பட்டிருக்கிற எந்த நிலத்தையாகிலும் அனுபவித்துக் கொண்டிருக்கும் யாதொரு நபரால் லோகல் போர்டாரின் சொத்துக்கு சேதம் ஏதாவது உண்டாயிருக்கிற பட்சத்தில் அவருக்கு விதிக்கப்படக்கூடிய அல்லது அவரிடத்திலிருந்து வசூலிக்கப்படக்கூடிய யாதொரு தண்டத்தொகையுடன் கூடவும், அது விதிக்கப்பட்டிருந்தும் பாதகமில்லாமலும் மேற்கண்ட சேதத்துக்காக அவர் லோகல் போர்ட்டாருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு உள்ளாவார்; மேலும், விவாதம் ஏற்படும் விஷயத்தில் அப்படிப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகையானது இதில் பின்னுல் நிபந்தனை கண்டிருக்கிற விதமாய் நிர்ணயித்து வசூலிக்கப்படும்.

குறிப்புகள்.

159-வது பிரிவானது, வீதி அல்லது ரஸ்தாக்களில் இருபக்கம் காலியாயுள்ள இடங்களைப்பற்றியும், அவைகள் விஷயமாக எடுத்துக்கொள்ளப்பட

வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றியும் கூறுகையில், இப்பிரிவானது பொதுவாக ஒரு லோகல் போர்டில் சங்கிரமித்திருக்கும் மற்ற இடங்களைப்பற்றி கூறுவதாகும். 159-வது பிரிவில் "பொதுவான பாதையில் • அல்லது அதற்கு மேலாகவும் அமைக்கப்பட்டுள்ள யாதொரு பிதுக்கம், ஆக்கிரமிப்பு அல்லது தடங்கலை எடுத்துவிடும்படியோ, மாற்றும்படியோ உத்திரவு செய்யலாம்" என்றிருக்க, இந்தப்பிரிவில் "யாதொரு பொது காரியத்திற்காக பிரத்தியேகப்படுத்திவைக்கப்பட்டதாய், யாதொரு லோகல்போர்டாரிடத்தில் சங்கிரமித்து அல்லது அவர்களுக்கு சொந்தமாக இருக்கும் யாதொரு நிலத்தை எவராகிலும் * * * * அனுபவித்துக்கொண்டிருந்தால்' என்றுள்ளது.

இந்தப் பிரிவின்கீழ் கேட்கப்படக்கூடிய தண்டத்தொகை (Penalty) இதில்பின்னல் நிபந்தனை கண்டிருக்கிறவிதமாய் வசூலிக்கப்படும் என்றுள்ளதற்கு IV-வது ஷெடியூலில் கண்டிருக்கிறபிரகாரம் வசூலிக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதின் விஷயமாக 221-வது பிரிவைப் பார்க்க.

யாதொரு நபர், ஒரு லோகல் போர்டைச் சேர்ந்த யாதொரு நிலத்தை அனுபவிப்பதாக சொல்லப்படுவாராகில், அவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பெனல்ட்டி (Penalty) யானது, ஒரு லோகல் போர்டினாலேயே விதிக்கப்பட வேண்டும். அதாவது அவருக்கு இவ்வளவு தொகை விதிக்கப்பட வேண்டுமென்று ஒரு லோகல் போர்டு ஒரு மீட்டிங்கில் கவனித்த பிறகு தான் தண்டத் தொகையை நிர்ணயிக்க வேண்டும். ஒரு லோகல் போர்டினால் விதிக்கப்படும் தண்டத்தொகையை செலுத்தாதபக்ஷத்தில் அதற்காக IV-வது ஷெடியூலின்கீழ் ஜப்தி முதலியவைகள் செய்யப்படலாம்.

இப்பிரிவின் (2)-வது உபப் பிரிவின்கீழ், ஒரு லோகல் போர்டானது பொது காரியத்திற்காக தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் நிலத்தில் கட்டியிருக்கும் கட்டிடம் முதலியவைகளை எடுத்துவிடும்படி உத்திரவுசெய்ய அதிகாரமுண்டு. அவ்வுத்திரவுக்கு கீழ்ப்படியாமலிருப்பதற்கு அவருக்கு விதிக்கப்படும் தண்டத்தொகையன்னியில், ஒரு மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டால் 200-ரூபாய் வரையிலும் அபராதம் செலுத்துவதற்கும் உட்பட வேண்டும்.

(1)-வது உபப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் தண்டத்தொகையன்னியில், தாம் செய்திருக்கும் நில ஆக்கிரமத்தினால் உண்டாயிருக்கும் சேதத்தை கொடுக்கும்படி கடமைப்பட்டவராவர். அந்த சேதத் தொகையானது இவ்வளவென்று தகரார் இளம்பும்பக்ஷத்தில் இந்த சட்டத்தில் கண்டிருக்கும் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டுமென்றுள்ளது.

ஒரு நபர், ஒரு லோகல் போர்டுக்குச் சேர்ந்ததாக சொல்லப்பட்ட நிலத்தை அனுபவித்ததாக சொல்லப்பட்டு அபராதம் விதிக்கப்பட்ட பிறகு, அந்த

அபராதத்தை வசூல் செய்வதற்காக மாஜிஸ்டிரேட் கோர்ட்டு முன்பாக சம்மன் செய்யப்படுவராகில் அந்த கோர்ட்டு முன்பாக ஆக்கிரமித்ததாக சொல்லப்படும் நிலமானது தன்னுடையதென்றும் தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நோட்டிஸை ஏற்படிய வேண்டிய அவசியமில்லையென்றும் அபராதமும் கட்ட வேண்டியதில்லையென்றும் விற்புறுத்தலாமா, என்னும் கேள்வி வந்ததில் பிள்ளை ராமசாமி vs. தடே பப்ளிக்கூடம் தாலூக்கா போர்டு ப்ரெஸிடேண்டு (a) என்னும் கேஸில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒரு லோகல் போர்டு சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 164 (1)-வது பிரிவின் கீழ் ஒரு நபர் அந்த லோகல் போர்டுக்குச் சொந்தமான நிலத்தில் ஆக்கிரமித்ததாக அவருக்கு அபராதத்தை விதித்து அந்த அபராதத்தை வசூலிக்க அதே சட்டத்தின் 221-வது பிரிவின் கீழ் ஒரு மாஜிஸ்ட்ரேட் முன்பாக மனு செய்யும் பக்ஷத்தில் அந்த மனு கேஸில் அபராதத்தை செலுத்தாத நபர் தாம் யாதொரு ஆக்கிரமமும் செய்யவில்லையென்று மாஜிஸ்ட்ரேட் முன்பாக விற்புறுத்தலாமா என்றும் அந்த மாஜிஸ்ட்ரேட் ஆக்கிரமம் நடந்ததாக சொல்லப்பட்டதானது வாஸ்தவமா இல்லையா என்று விசாரிக்கலாமா என்றும் கேள்விகள் வந்ததில், மாஜிஸ்ட்ரேட் அப்படி விசாரணை செய்யலாமென்றும் ஆக்கிரமம் நடக்கவில்லை யென்று அறியும்பக்ஷத்தில் அந்தமனுவை தள்ளி விடலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த கேஸ் ஒரு பூரண பெஞ்சு கேஸ். இந்த கேஸில் இதற்கு முந்தி இதற்கு விரோதமாக தீர்மானிக்கப்பட்டிருக்கும் கேஸ்-களின் முக்கியமாக ராமசந்திரன் செரீவை vs. காரைக்குடி யூனியன் போர்டு ப்ரெஸிடேண்டு (b) என்னும் கேஸ் செல்லத்தக்கன தல்லவென்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது. 221-வது பிரிவின் கீழுள்ள குறிப்புகளைப் பார்க்க.

விசேஷ போக்குவரத்தினால் விளையும் செலவுகளை வசூலிக்க லோகல் போர்டாருக்குள்ள அதிகாரம்.

165. யாதொரு பொதுவான பாதை நெடுக மிதமிஞ்சிய பாரம் ஏற்றிக்கொண்டு போனதனாலாவது அல்லது அதன்மேல் விசேஷ போக்குவரத்து ஏற்பட்டதனாலாவது உண்டான சேதம் காரணமாக அந்த பாதையை மராமத்து செய்கையில், அக்கம் பக்கத்திலுள்ள பாதைகளை மராமத்து செய்வதற்காகப் பிடிக்கும் சராசரி செலவை கவனிக்கும்போது லோகல் போர்டாருக்கு விசேஷ சிலவு பிடித்திருப்பதாக, கவர்ன்மென்டு பப்ளிக் வொர்க்ஸ் இலாக்காவில் எக்ஸிகியூடிவ் என்ஜினீயரின்

(a) 11. அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை ரிப்போர்ட்டுகள் புக்கம் 237.

(b) 49. M. L. J. 356.

அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள ஒரு உத்தியோகஸ்தரு டைய ஸெர்டிபிகேட்டினுல் சம்பந்தப்பட்ட லோகல்போர்டின் ப்ரெஸி டென்டுக்குத் தோற்றும்பொழுது, லோகல் போர்டார் - எவ்சால் அல் லது எவருடைய உத்தரவின் பலனுக மேலே கண்டபடி பாரம் ஏற் றிக்கொண்டு போகப்பட்டதோ அல்லது போக்குவரத்து ஏற்பட்ட தோ அப்படிப்பட்ட யாதொரு நபரிடமிருந்து, மேலே கண்டபடிக் கான பாரம் அல்லது போக்குவரத்தினுல் ஏற்பட்டசேதம் காரணமாக அந்த லோகல் போர்டு எவ்வளவு செலவழித்திருக்கிறதென்று விசா ரணை செய்ய அதிகாரமுள்ள சிவில்கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் எண்பிக்கக் கூடுமோ அவ்வளவு தொகையை அந்த கோர்ட்டில் வசூல் செய்யலாம் ;

ஆனல், எவரிடத்திலிருந்து இந்தப் பிரிவின்படி செலவுவசூ லிக்கப்படத்தக்கதாகிறதோ அல்லது வசூலிக்கப்படக் கூடுமோ அப்ப டிப்பட்ட யாதொரு நபர் - டிடி பாரம் அல்லது போக்குவரத்து விஷ யமாய் லோகல் போர்டாருக்கு ஒரு தொகையைச் செலுத்துவதாக அவர்களுடன் ராஜி யேற்பாட்டு உடன்படிக்கை செய்துக் கொள்ள லாம் ; அப்படி செய்துக் கொள்வதன்மேல், அந்தப்படி தொகை செலுத்தும் நபர் - இந்தப் பிரிவின்படி எவ்வித நடவடிக்கைகளுக்கும் உட்பட்டவராகமாட்டார்.

குறிப்புகள்.

இப்பிரிவானது சில குறித்த சந்தர்ப்பங்களில் மிகவும் பாரமான சுமைகளை ஏற்றிக்கொண்டு போவதினுல் ஏற்படும் சேதத்திற்காக ஒரு பிரதி பலத் தொகையை பெறுவதற்காக சாமான்களைக் கொண்டுபோன வர் பேரில் தாவா செய்யலாம், அல்லது அவரிடமிருந்து ராஜியாக ஒரு தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறுகிறது. ரஸ்தாக்களை உபயோகப்படுத்தும் வண்டிகளிடமிருந்து பெறப்படும் இதர கட்டணங்க ளன்னியில் இப்பிரிவின் கீழ் பெறப்படும் தொகை தனிப்பட்டதாகும்.

166. (1) யாதொரு நபரும் ஒரு டிஸ்டிரிக்ட்டினுள்ள யாதொரு பொது பாதை அல்லது ரஸ்தாவில் அந்த டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டி னிட மிருந்து பெற்ற லைஸென்ஸின் பேரில் அல் லாமல்—

வாடகைக்கு ஓடும் மோட்டார் வண்டிக ளுக்கும் மோட்டார் லாரிகளுக்கும் லைசென்ஸ் கொடுப்பது.

(a) யாதொரு மோட்டார் வண்டியை வாடகைக்காவது அல்லது,

(b) யாதொரு மோட்டார் லாரியையாவது,

உபயோகப்படுத்தக் கூடாது.

(2) இந்த சட்டத்திலாவது அல்லது 1920-ம் ஞெபத்திய சென்னை டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிடிகளின் சட்டத்திலாவது என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும் அவை நிமித்தியமில்லாமல், ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடெண்டு, ஒரு மோட்டார் வண்டிக்கு அதை அந்தடிஸ்டிரிக்டின் ஹத்துக்குள் கொஞ்சபாகத்திற்குள்ளும் இதற்காக லோகல் கவர்ன்மெண்டு போர்ட் செயின்ட்டு ஜார்ஜ் கெஜட்டில் (Fort-St-George Gazette) ஒரு விளம்பரமூலமாக அந்தடிஸ்டிரிக்ட்டுடன் சேர்க்கப்பட்டிருக்கும் யாதொரு முனிஸிபாலிட்டியின் ஹத்துக்குள் கொஞ்ச பாகத்திற்குள்ளும் வாடகைக்கு உபயோகப்படுத்துவதற்காக ஒரு லிஸென்ஸ் கொடுக்கலாம். அப்படிப்பட்ட லிஸென்ஸ் கொடுக்கப்பட்ட பிறகு, அந்த டிஸ்டிரிக்ட்டு போர்டானது அப்படிப்பட்ட லிஸென்ஸைக் கொடுத்ததினால் பெறப்பட்ட கட்டணத் தொகையில் எவ்வளவு பாகம் செலுத்தவேண்டுமென்று லோகல் கவர்ன்மெண்டு ஒரு பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்திரவினால் தீர்மானிக்கின்றனரோ அவ்வளவு பாகத்தை சம்பந்தப்பட்ட முனிசிபல் கௌன்சிலுக்கு செலுத்த வேண்டும்.

(3) டிஸ்டிரிக்ட்டு போர்டானது லோகல் கவர்ன்மெண்டினுடைய முன் சம்மதத்தைக்கொண்டு பிரயாணிகள் கொடுக்கவேண்டிய விகிதம் (Rates) அல்லது வாடகை தொகைகளையும் அப்படிப்பட்ட வண்டிகளில் கொண்டு போகப்படும் சாமான்களுக்குள்ள சுமைக்கூலியையும் நிச்சயிப்பதற்காக ரெகுலேஷன்களை செய்யலாம். இன்னும் மேலே (1), (2) உபப் பிரிவுகளின்கீழ் எந்த நிபந்தனைகளின் பேரில் லிஸென்ஸுகள் கொடுக்கப்படலாம் என்பதையும் அவைகளில் குறிக்கலாம்.

(4) (1) அல்லது (2) உபப்பிரிவுகளின்கீழ் கொடுக்கப்படும் ஒவ்வொரு லிஸென்ஸும் எந்த வருஷத்தில் அது கொடுக்கப்பட்டதோ அந்த வருஷத்தின் கடைசியில் முடிவுகாகும்.

(5) (a) (1) அல்லது (2) உபப்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒரு உத்திரவினால் பாதிக்கப்பட்ட யாதொரு நபர் டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கு அவ்வுத்திரவின்பேரில் அப்பில் செய்யலாம்.

(b) அப்படிப்பட்ட அப்பீலுக்கு லிமிடேஷன் கால அளவு பின்வருமாறு:—

(i) அந்த அப்பீல் லைஸென்ஸ் கொடுக்கமறுத்துவிட்டதான ஓரு உத்தரவின் பேரில் செய்யப்பட்டிருந்தால்	அந்த உத்தரவு விண்ணப்பம் செய்வோருக்கு எழுத்துமூல நகல் கிடைத்ததோ அந்த நாளம் முதல் 15-நாட்கள்.
(ii) அந்த அப்பீல் லைசென்ஸ் கொடுக்கப்பட்டதான ஓரு உத்தரவின் பேரில் செய்யப்பட்டிருந்தால்	அந்த உத்தரவு எழுத்துமூல நகல் டிஸ்டிரிக்ட் போர்டின் நோட்டீஸ் போர்டில் விளம்பரப் படுத்தப்பட்டதோ அன்று முதல் 30-நாட்கள்.

(6) (2)-வது உபப் பிரிவினால் அளிக்கப்பட்டிருக்கும் லைஸென்சுகளின் விஷயமாக லோகல் கவர்ன்மெண்டு மொத்தமாகவாவது அல்லது ஓரு குறித்த சந்தர்ப்பத்தைப்பற்றியாவது தங்களுக்கு யுக்தமென்று தோன்றும் பிரகாரம் ஓரு உத்தரவு அல்லது கட்டளையைச் செய்யலாம்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் முற்றிலும் மாற்றப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. 1920-ம் வருஷம் முதல் 10-வருஷங்களுக்குள்ளாகமோட்டார் வண்டிகளின் போக்குவரத்தானது மிகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் அவைகளை அடக்கியாளுவதற்கும் அவைகளுக்குத் தகுந்தசௌகரியங்களை கொடுப்பதற்கும் இப் பிரிவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பழைய 166-வது பிரிவிற்கும், புதிய 166-வது பிரிவிற்கும் உள்ள பேதங்களானது பின்வருமாறு:—

(1) மோட்டார் லாரிகளுக்கும் ஸ்பஷ்டமாக லைசென்ஸ் வாங்கப்பட வேண்டுமென்று புதிய சட்டத்தில் ஓரு அம்சம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னுடியாக வாடகைக்கல்லாமல் தனியாக மோட்டார் லாரியைப் பெற்றிருக்கும் நபர்களுக்கு மோட்டார் லாரிக்கென்று தனியாக லைசென்ஸ் பெறவேண்டுமென்று அவசியமில்லாமலிருந்தது. இப்பொழுதுள்ள சட்டப் பிரகாரம் ஒவ்வொரு மோட்டார் லாரிக்கும் அந்த லாரியானது வாடகைக்காக உபயோகப்படுத்தப்பட்டாலும் அல்லது வாடகைக்காக உபயோகப்படுத்தப்படாவிட்டாலும் அதற்கு லைசென்ஸ் பெறவேண்டுமென்றுள்ளது.

(2) புதிய பிரிவில், ஓரு டிஸ்டிரிக்ட்டு போர்டு ஹத்துக்குள் கொஞ்ச பாகமும், ஓரு முனிசிபாலிட்டியின் ஹத்துக்குள் கொஞ்ச பாகமும் ஸ்டேப்

படும் மோட்டார் வண்டிகளுக்காக டில்டிரிக்ட்டு போர்டு ப்ரெவிடென்டுகள் லெசென்ஸ் கொடுக்கலாமென்று ஸ்பஷ்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. பழைய பிரிவில், அம்மாதிரி யாதொரு அம்சமும் இராததால் ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டின் ரோட்டுகளிலும், ஒரு முனிசிபாலிட்டியின் ரோட்டுகளிலும் சேர்ந்து ஓட்டப்படும் வாடகை மோட்டார் வண்டிகளுக்கு இன்னார்தான் லெசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று அல்லது லெசென்ஸ் தொகை பெற வேண்டுமென்று ஸ்பஷ்டமாக காணப்படவில்லை.

(3) லெசென்ஸ் விஷயமாக டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெவிடென்டுகள் செய்யும் உத்திரவுகளின்பேரில் டிஸ்டிரிக்ட்டுபோர்டுக்கு அப்பீல்செய்வதற்கு பழைய பிரிவின்கீழ் யாதொரு அம்சமும் இல்லாமலிருந்தது. இப்போது புதிய பிரிவில் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெவிடென்டுகள் லெசென்ஸ் விஷயமாக செய்யும் உத்திரவுகளின் பேரில் டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கு அப்பீல் உண்டு என்று ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவானது பொதுவாக வாடகை மோட்டார் வண்டிகளுக்கும், லாரிகளுக்கும் டிஸ்டிரிக்ட்டுபோர்டு ப்ரெவிடென்டினிடமிருந்து லெசென்ஸ் பெறுமல் அவைகளை யாதொரு பொது ரோட்டில் உபயோகப்படுத்தக் கூடாதென்று கூறுகிறது. இப்பிரிவின் முதல் உபப் பிரிவில் எந்த நபரும் லெசென்ஸில்லாமல் எவ்விதமான மோட்டார் வண்டியை, வாடகைக்காக உபயோகப்படுத்தக் கூடாதென்றும், மோட்டார் லாரிகளை லெசென்ஸில்லாமல் உபயோகிக்கக் கூடாதென்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த உபப் பிரிவை சற்று ஆழ்ந்து கவனிக்குமிடத்து மோட்டார் லாரிகள் சொந்தமாக வைக்கப்பட்டிருந்தாலும் அல்லது வாடகைக்காக வைத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும் அதற்காக கட்டாயம் லெசென்ஸ் வாங்கப்பட வேண்டுமென்று ஏற்படும். மோட்டார் லாரி என்பது, சக்கள், கிரேவல்கள், மரசாமான்கள் முதலிய பாரமான சாமான்களை ஏற்றிக்கொண்டு போகத்தக்க ஒரு மோட்டார் வண்டியாகும். (a)-என்னும் உப வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கும் மோட்டார் வண்டியானது மனிதர்களையாவது அல்லது மனிதர்களுடன் சாமான்களையுமாவது ஏற்றிக்கொண்டு போகப்பட்ட மோட்டார் வண்டிகளைக் குறிக்கும். இதில் மோட்டார் பஸ்ஸுகளும் பிளஷர் கார் (Pleasure car) என்று சொல்லப்படும் சிறியமோட்டார் வண்டிகளும் அடங்கும். வாடகைக்கல்லாமல் சொந்தமாக வைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் சிறியமோட்டார்வண்டிகளுக்கு லெசென்ஸ் பெறும்படி இப்பிரிவின்கீழ் டில்டிரிக்ட்டு போர்டார் வற்புறுத்துவதற்கில்லையென்று ஏற்படும்.

(1)-வது உபப் பிரிவில் "உபயோகப்படுத்தக் கூடாது" என்னும் பதத்திற்கு அர்த்த மென்ன? ஒரு நபர் ஒரு டில்டிரிக்ட்டு போர்டின் அதிகார வில்லீமணத்துக்கு வெளியே யிருந்து கொண்டிருந்து ஒரு டில்டிரிக்ட்டு போர்டின் ரோட்டுகளின் வழியாக ஒருதரம் அல்லது இரண்டு தரம்

கடந்து போக நேரும் பக்கத்தில் அதற்காக முன்னுடியாகவே டில்டிரிக்ட்டு போர்ட்டினிடமிருந்து லைசென்ஸ் பெறவேண்டுமா? வாடகைக்காக உபயோகப்படுத்துவதென்பது ஒரு டில்டிரிக்ட்டு போர்ட்டின் ஹத்துக்குள் ளேயேதான் வாடகையைப்பற்றின ஒப்பந்தம் (Contract) செய்துக்கொள்ளுவதாக யிருக்க வேண்டுமா, அல்லது டில்டிரிக்ட்டு போர்டின் விஸ்தீரணத்துக்கு வெளியே வாடகைக்காக ஒப்பந்தம் செய்துக்கொள்ளும் பக்கத்திலும் வாடகைக்காக உபயோகப்படுத்தினதாக ஏற்படுமா? இந்தப் பிரச்னைகளுக்கு (1)-வது உபப் பிரிவில் யாதொரு சரியான விவரங்களைக் காணோம். இப்பிரிவின் (4)-வது உபப் பிரிவை பார்க்குமிடத்து அதில் (1)-வது அல்லது (2)-வது உபப் பிரிவுகளின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் லைசென்ஸுகள் ஒரு வருஷம் வரையிலும் உபயோகப்படுத்தப்படலாம் என்றுள்ளதால், அடிக்கடி ஒரு டில்டிரிக்ட்டு போர்டிலுள்ள பொது ரஸ்தா அல்லது பாதையில் உபயோகப்படுத்தக் கூடியதான வாடகை வண்டிகளுக்கு மாத்திரம் லைசென்ஸ் வாங்கப்பட வேண்டுமென்று தெரிவிப்பதாகும். "உபயோகப்படுத்தக் கூடாது" என்னும் பதத்திற்கு பதிலாக பழைய பிரிவில் "ஓட்டக் கூடாது" என்று இருந்தது. "ஓட்டக் கூடாது" என்பதற்கும் "உபயோகப்படுத்தக் கூடாது" என்பதற்கும் அதிக வித்தியாசம் ஒன்றும் கிடையாது. அப்படி வித்தியாசம் உள்ளதாக யாதொரு கேஸிலும் கவனிக்கப்படவில்லை. ஆகையால், மிஸ்டர் C. V. நாயுடு அவர்களுடைய இங்கிலீஷ் லோகல் போர்ட்ஸ் சட்ட புஸ்தகத்தில் 474-வது பக்கத்தில் ஓட்டக்கூடாது என்பதற்கும் உபயோகப்படுத்தக்கூடாது என்பதற்கும் பெரிய வித்தியாசம் ஏற்படுத்தப்பட்டதென்று கேசுகள் தீர்மானித்திருப்பதாக சொல்லப்பட்டிருப்பது சரியல்ல.

வாடகைக்கு ஓட்டுவதென்பது, வாடகை ஏற்பாடான ஒரு டில்டிரிக்ட்டு போர்ட்டினுடைய ரோட்டிலேயே தான் வாடகை ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமென்றும் அல்லது வாடகைக்கு ஏற்றிக் கொள்ளுவதற்கு வண்டியின் சொந்தக்காரர் அல்லது அவருடைய வேலையாள் தயாராயிருக்க வேண்டுமென்றும், அல்லது வாடகைக்கு ஏற்றிக் கொள்ளுவதற்காக பிரயாணிகளை வரவேற்க வேண்டுமென்றும், ஒரு டில்டிரிக்ட்டு போர்டு ரோட்டுக்குள் இவற்றில் யாதொன்றுவது நடவாமலிருக்கும் பக்கத்தில் அதற்காக டில்டிரிக்ட்டு போர்டானது லைசென்ஸ் பெறும்படி கேட்க நியாயமில்லை யென்று மாயவரம் லோகல் பண்டி ஓவர்சீயர் V. பக்கிரிசாமி தேவன் (a)-என்னும் கேஸில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த கேஸில் ஒரு நபர் மாயவரத்திலிருந்து சில நபர்களை வாடகைக்கு ஏற்றிக்கொண்டு போவதாக பேசிக்கொண்டு தரங்கம்பாடி என்னும்

(a) 55. M. L. J. 213.

ஊருக்கு அவர்களே தன் மோட்டார் வண்டியில் ஓட்டிக்கொண்டுபோனார். மாயவரம் ஒரு முனிசிபாலிட்டி. அவ்விடத்திலேதான் மொத்த வாடகை ஒப்பந்தமும் நடந்து பணம் வசூலிக்கப்பட்டது. டிஸ்டிரிக்ட்டு போர்டைச் சேர்ந்த ரோட்டுகளின் வழியாக அந்த மோட்டார் வண்டியானது போக வேண்டியிருந்தபோதிலும் டிஸ்டிரிக்ட்டு போர்டு ரோட்டில் யாதொரு வாடகை எற்பாடும் நடக்கவில்லை. டிஸ்டிரிக்ட்டு போர்டு ரோட்டு வழியாக லைசென்ஸில்லாமல் மோட்டார் வண்டியை ஓட்டினதற்காக அவர் பேரில் தாவா செய்யப்பட்டபொழுது மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டார் எதிரி டிஸ்டிரிக்ட்டு போர்டினிடமிருந்து யாதொரு லைஸென்சும் வாங்கவேண்டியதில்லை யென்று அவரை விடுதலை செய்துவிட்டார்கள். அதன் பேரில் ஹைக்கோர்ட்டில் ரிவிஷன் மனு செய்யப்பட்டதில், ஹைக்கோர்ட்டாரவர்கள், கீழ்கோர்ட்டினுடைய தீர்மானத்தை அங்கீகரித்து மேற்சொல்லிய சந்தர்ப்பங்களில் டிஸ்டிரிக்ட்டு போர்டாரிடமிருந்து அந்த மோட்டார் வண்டிக்காக யாதொரு லைசென்சும் வாங்க வேண்டிய அவசியமில்லையென்று தீர்மானித்திருக்கின்றனர். அந்த கேஸில், வாடகைக்காக அமர்த்தப்பட்ட ஒரு வண்டியானது ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டு ரோட்டின் பேரில் போவதற்கே லைசென்ஸ் பெறப்பட வேண்டுமென்று சொல்லப்பட்ட வாதமானது அங்கீகரிக்கப்படவில்லை. இந்த கேஸானது ஷராப் வீரப்ப vs. நவாப்ஷியேஸல் முல்க் (a) என்னும் கேஸில் தழுவப்பட்டுள்ளது. இந்த கேசும் லோகல் போர்ட்ஸ் சட்டத்தின் பழைய பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டது. பழைய பிரிவில் "பிரத்தியேகமான சத்தங்களுக்காகிலும் கட்டணங்களுக்காகிலும்" என்னும் பதங்கள் இருந்து வந்தன. அவைகளின் அர்த்தம் ஒரு வண்டிக்கென்று மொத்தமாக வாடகை பேசிக்கொள்ளப்படாமல் அதில் பிரயாணம் செய்யும் ஒவ்வொரு நபரும் தமக்கென்று தனித்தனியாக வாடகைகளைப் பேசிக்கொள்ளும் சந்தர்ப்பங்களைக் குறிப்பதாகுமென்று ஷி கேஸில் கூறப்பட்டுள்ளது. இந்த கேஸில் ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கு வெளியே ஒருவண்டிக்கென்று மொத்தமாக யாதொரு சத்தமும் பேசப்படாமல் ஒவ்வொரு நபரும் தனித்தனியாக வாடகையை ஏற்படுத்திக்கொண்டு வண்டியானது டிஸ்டிரிக்ட்டு போர்டு ரோட்டு வழியாக போகும்பகுதியில்வாடகை ஏற்பாடானது டிஸ்டிரிக்ட்டுபோர்டுக்கு வெளியேசெய்யப்பட்டிருந்தபோதிலும் அந்தமோட்டார் வண்டிக்கு கட்டாயம் லைசென்ஸ் பெறவேண்டும் என்று ஹைக்கோர்ட்டார் சொல்லியிருக்கின்றனர். மாயவரம் லோகல் பண்டு ஓவர்சியர் vs. பக்கிரிசாமி நேவன் என்னும் கேசுக்கும் இந்த கேசுக்கும் என்ன வித்தியாசம் என்றால், முதல் சொல்லப்பட்ட கேஸில் ஒரு மோட்டார் வண்டிக்காக மொத்தமாக ஒரு முனிஸிபாலிடியாகிய மாயவரத்திலேயே வாடகை

(a) 1980 M. W. N. 187—A.I.R. 1930 M. 441—31. L. W. 202-59 M. L. J. 239.

ஏற்பாடு நடந்து முடிந்துவிட்டது. பிந்தின கேஸில் கர்னூல் என்னும் முனிசிபாலிடியின் ஹத்துக்குள் தனித்தனியாக ஒவ்வொரு நபரும் கந்தியால் என்னும் பட்டணத்திற்கு போவதற்கு சத்தம் பேசி ஏற்பாடு செய்து கொண்டனர். வீரப்பா vs. நவாப்ஷியோல் முல்க் (b) என்னும் கேஸில், மாயவரம் லோகல் பண்டு ஓவர்சியர் vs. பக்கிரிசாமி தேவன் என்னும் கேஸ் மிகவும் சரியாகவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்றும் ஆனல், இவ்விரண்டு கேஸ்களுக்கும் சங்கதியம்சங்கள் வித்தியாசமுள்ளதால் ஒன்றைக்கொண்டு மற்றொன்றை தீர்மானிக்க முடியாதென்றும் கூறியிருக்கின்றனர். மில்டர் C. V. நாயுடு அவர்கள் தம்முடைய புத்தகத்தில் 477-வது பக்கத்தில் ஷராப் வீரப்ப vs. நவாப் வஜியெளல்முல்க் என்னும் கேஸில் மாயவரம் லோகல் பண்டு ஓவர்சியர் vs. பக்கிரிசாமி தேவன் என்னும் கேஸானது தழுவப்பட வில்லை யென்று சொல்லியிருப்பது பிசகு. ஷராப் வீரப்பா vs. வஜியெளல்முல்க் என்னும் கேஸிலும் ஒரு டிஸ்டிரிக்ட் போர்டினுடைய ஹத்துக்குள் அல்லாமல் ஒரு முனிஸிபாலிடியின் ஹத்துக்குள் யாதொரு மோட்டார் வண்டியானது தனித் தனியான வாடகைக்கல்லாமல் மொத்தமாக வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஓட்டப்படுமாகில் அதற்காக லெஸென்ஸ் ஒன்றும் பெறவேண்டிய அவசியமில்லை யென்று கூறியிருக்கின்றனர்

இப்பொழுது 1930-வருஷத்திய திருத்த சட்டத்தினுல் 166-வது பிரிவானது அடியோடே திருத்தப்பட்டுள்ளது. ஆனல் மேலே சொன்னபடி (1)-வது உபப் பிரிவானது விவரமாக எழுதப்படவில்லை. "தனித்தனியான வாடகைகள் அல்லது விதிதங்கள்" என்னும் பதங்கள் அடியோடே எடுபட்டு விட்டன. "இனி உபயோகப்படுத்துவது" என்னும் பதங்களின் அர்த்தம் இன்னதென்று அறிந்து கொள்ள வேண்டும் இந்தப் பதங்களுக்கு "ஓட்டுவது" என்று அர்த்தமிருக்குமானல், மேலே சொல்லப்பட்ட இரண்டு கேஸ்களும் இப்பிரிவிற்கும் பிரயோகமாகும். ஆகையால் ஒரு டிஸ்டிரிக்ட் போர்டு எல்லைக்கு வெளியே யிருந்து வாடகை ஏற்பாட்டின்பேரில் ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டின் ரோட்டு வழியாக செல்வதினுலேயே ஒரு மோட்டார் வண்டிக்கு லெசென்ஸ் பெறவேண்டுமென்பது அவசியமில்லை. ஆனல் டிஸ்டிரிக்ட் போர்டின் ஹத்துக்குள் நின்று வாடகைக்காக மனிதர்களை ஏற்றிக்கொண்டு போகும் ஒரு மோட்டார் வண்டியானது மேற்சொன்ன கேஸ்களின் பிரகாரம் டிஸ்டிரிக்ட் போர்டினிடமிருந்து சட்டாயம் லெசென்ஸ் பெறவேண்டும்.

சென்னை டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகளாக்டின் 174-A பிரிவும் இந்தப் பிரிவும் ஒரேமாதிரியான பிரிவுகள். அந்த சட்டத்தின் 174-A. பிரிவின் (5)-வது உட்பிரிவானது பின் வருமாறு உள்ளது:

174. (5). "யாதொரு மோட்டார் வண்டியைச் சிறிது மட்டில் முனிஸிபல் எல்லைகளுக்கு வெளியிலும் சிறிதுமட்டில் அப்படிப்பட்ட எல்லைகளுக்

குள்ளும் வாடகைக்கு ஓட்ட உபயோகிப்பதற்காக அந்த வண்டிக்கு 1920-வருடத்திய சென்னை லோகல் போர்டுகளாக்டின் 166-வது பிரிவைச் சேர்ந்த (2) - குறிப்பிட்ட உட்பிரிவின்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட வண்டியின் விஷயமாக (1) - குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொடுக்கப்படும் லைசென்ஸுக்காக கட்டணம் எதுவும் வாங்கக் கூடாது; மேலும், அந்த லைசென்ஸில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகள் பிரன்ஹாம முனிஸிபாலிட்டியிலுள்ள பொதுவான தெருக்களை வண்டியானது உபயோகிப்பதைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்கு மாத்திரமே சம்பந்தப்படும்."

ஆகையால் ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டானது எதாவது ஒரு மோட்டார் வண்டிக்கு லைசென்ஸ் கொடுக்கும் பக்ஷத்தில் அந்த வண்டியானது ஒரு முனிஸிபாலிட்டியின் ஹத்துக்குள் ஓட்டப்பட்டாலும் அதற்காக முனிஸிபாலிட்டியார் யாதொரு லைசென்ஸ் கட்டணமும் கேட்பதற்கில்லை யென ஏற்படும். ஆனால் ஒரு மோட்டார் வண்டியை வாடகைக்கு ஓட்டும் விஷயமாக ஒரு முனிஸிபாலிட்டியானது லைசென்ஸ் கொடுக்கும்பக்ஷத்தில் அந்த மோட்டார் வண்டியானது ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய ரோட்டிலும் வாடகைக்காக உபயோகப்படுத்தப்படுமானால் அதற்காக டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டினிடமிருந்தும் ஒரு லைஸென்ஸ் பெறவேண்டுமா என்பது முக்கியமான ஒரு கேள்வியாகும். அதற்கு இன்ன பதிலென்று நேராக சென்னை லோகல் போர்ட்ஸ் சட்டத்தில் யாதொரு ஆதாரமும் இல்லை. ஆனால் (2)-வது உப பிரிவில், "ஒரு டிஸ்டிரிக்டு போர்டு ப்ரெஸிடென்டு * * * * * * * * வாடகைக்கு உபயோகப்படுத்துவதற்காக ஒரு லைசென்ஸ் கொடுக்கலாம்" என்திருப்பதினால் ஒரு முனிஸிபாலிட்டியின் ஹத்துக்குள் கொஞ்சமும், ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்ட்டின் ஹத்துக்குள் கொஞ்சமும், வாடகைக்கு ஓட்டப்படும் மோட்டார் வண்டிகளுக்கு ஒருதரம் முனிஸிபாலிட்டியில் லைசென்ஸ் பெற்ற பிறகு டிஸ்டிரிக்ட்டுபோர்டு ப்ரெஸிடென்டினிடமிருந்து லைசென்ஸ் வாங்கவேண்டிய கட்டாயம் இல்லையென்று ஏற்படலாம். இன்னும் ஒரே டிஸ்டிரிக்ட்டுக்குள் ஒரு முனிஸிபாலிட்டியின் ஹத்துக்குள்ளிருந்து மற்றொரு முனிஸிபாலிடியின் ஹத்துக்குள் ஒரு மோட்டார் பஸ்ஸானது வாடகைக்கு ஓடும்படியாக இருக்குமாயின் அந்த மோட்டார் பஸ்ஸானது டிஸ்டிரிக்ட்டு போர்டு ரோட்டின்பேரில் ஓடுவதினால் அதற்காக டிஸ்டிரிக்ட்டு போர்ட்டினிடமிருந்து லைசென்ஸ் பெறவேண்டுமா என்பது மற்றொருகேள்வியாகும். டிஸ்டிரிக்ட்டுபோர்டு ரோட்டில் அடியோடே யாதொரு வாடகை ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு நடவாமல் இருக்குமானால், மாயவரம் லோகல் பண்டு ஓவர்சியர் vs. பக்கிரிசாமிதேவன் (a) என்னும்கேஸின்

(a) (1927) I. L. R. 51. Mad. 527=55, M. L. J. 213.

பிரகாரம் அடியோடே யாதொரு லெசென்ஸும் கேட்பதற்கு இல்லையென ஏற்படலாம்.

(2-வது உபப் பிரிவில், டில்டிரிக்ட்டு போர்டானது தங்களுடைய ஹத்துக்குள்ளும், ஒருமுனிவிபாலிட்டியின் ஹத்துக்குள்ளும் ஆகிய இரண்டு இடங்களிலும் ஓடும்படியான வாடகை மோட்டார் வண்டிகளுக்கு லெசென்ஸ் கொடுத்து அதற்காக யாதொரு தொகை பெறும் பக்ஷத்தில் அந்த தொகையானது டில்டிரிக்ட்டு போர்டுக்கும், முனிவிபாலிட்டிக்கும் கவர்ன்மென்டார் நிர்ணயிக்கும் விதிதப் பிரகாரம் பங்கிடப்பட வேண்டும் என்றுள்ளது. ஒவ்வொரு டில்டிரிக்ட்டு போர்டுக்கும் அருகாமையில் அல்லது ஒரு டில்டிரிக்ட்டுக்குள் பல முனிவிபாலிட்டிகள் இருக்கலாமாகையால் இப்பிரிவின் காரியங்களுக்காக எந்தெந்த முனிவிபாலிட்டியானது எந்தெந்த டில்டிரிக்ட்டுடன் சேர்க்கப்பட்டதாக கவனிக்கப்படுமென்று லோகல் கவர்ன்மென்டார் போர்ட்டு செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் (Fort St George Gazette) பிரசுரம் செய்யவேண்டும் என்று உள்ளது.

(3)-வது உபப் பிரிவில் ஒரு டில்டிரிக்ட்டு போர்டானது தாம் கொடுக்கும் லெசென்ஸில் இன்னின்ன விதிதப் பிரகாரம் மோட்டார்வண்டிகள் பிரயாணிகளையும் சாமான்களையும் ஏற்றவேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டுமென்றும் அப்படி நிர்ணயிப்பதை அந்த லெசென்ஸிலேயே காண வேண்டும் என்றுமுள்ளது.

(4)-வது உபப் பிரிவின்கீழ், லெஸென்ஸ் தொகையானது ஒரு வருஷத்திற்கொருதரம் வாங்கப்பட வேண்டும். ஒவ்வொரு லெசென்ஸும் ஒரு வருஷம் வரையிலும் நீடிப்பதாகும். ஒரு வருஷம் என்பது இச்சட்டத்தின் பிரகாரம் ஒரு இங்கிலீஷ் வருஷம் ஏப்ரல்மீ 1-தேதி முதல் அடுத்த வருஷம் மார்ச்சு மீ 31-வரையில் உள்ள மாதங்களைக் குறிக்கும்

(5)-வது உபப் பிரிவில், ஒரு லெஸென்ஸ் கொடுக்கப்பட்டதிலிருந்தும் லெஸென்ஸ் கொடுக்க மறுக்கப்பட்டதிலிருந்தும் டில்டிரிக்ட் போர்டுக்கு அப்பீல் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது. லெஸென்ஸ் கொடுக்க மறுக்கப்பட்டதானால் அந்த உத்தரவானது லெஸென்ஸ் கேட்ட நபருக்கு சேர்ந்த தினம் முதல் 15-தினத்திற்குள் அப்பீல் செய்யப்பட வேண்டும். யாதொரு நபருக்கு லெஸென்ஸ் கொடுக்கப்பட்ட விஷயமாக மற்றொரு நபர் அப்படி லெஸென்ஸ் கொடுத்திருக்கக் கூடாதென்று ஆக்ஷேபித்து அப்பீல் செய்ய வேண்டுமானால், டில்டிரிக்ட் போர்டில் என்றையதினம் லெஸென்ஸ் கொடுக்கப்பட்டதென்று பிரசுரப்படுத்தப்படுகிறதோ அன்று முதல் 30-நாட்களுக்குள் அப்பீல் செய்யப்பட வேண்டும்.

அப்பீல் செய்வதென்றால், டில்டிரிக்ட் போர்டு பிரஸிடென்டினுடைய உத்தரவானது சரியானதல்ல வென்றும் அப்பீல் செய்பவர் எம்மாதிரி உத்

திரவிட வேண்டுமென்று கேட்டிருந்தாரோ அதே மாதிரியாக உத்திரவிட்டிருக்க வேண்டுமென்றும் ஒரு மனு செய்வது. அந்த மனுவை டிஸ்டிரிக்ட் போர்டு ஆபீஸில் ஹெட்கிளார்க் அல்லது மானேஜரிடம் கொடுக்க வேண்டும். பிறகு அந்த மனுவானது டிஸ்டிரிக்ட்போர்டு மீட்டிங்கில் வைக்கப்பட்டு டிஸ்டிரிக்ட் போர்டு அங்கத்தினர்களால் கவனிக்கப்படும்.

ஒரு ரூபர் இந்தப் பிரிவின்கீழ் டிஸ்டிரிக்ட் போர்டுக்கு அப்பீல் செய்த பிறகும் தமக்கு கூடிவரத விட்டால் டிஸ்டிரிக்ட் போர்டு பிரவிடென்டும் டிஸ்டிரிக்ட் போர்டும் செய்திருக்கும் உத்தரவுகள் சட்ட விரோதமாக அல்லது நியாயவிரோதமாக இருந்தால் அந்த உத்தரவை ரீகி வைக்க ஒரு சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். ஒரு பிரவிடென்டு பொது ஜன சௌகரியத்திற்கு விரோதமாக லெசென்ஸ் கொடுக்கும் பக்ஷத்தில் அதை நிறுத்தி வைக்க தாவா செய்யலாம். பிரவிடென்டுகள் சரியான காரணமில்லாமல் லெலைன்ஸ்களை கொடுக்க மறுக்கக் கூடாது.

இப்பிரிவில் மோட்டார் வண்டிகள், (மோட்டார் வண்டிகள் என்பதில் பஸ்ஸ்களும் அடங்கும்) மோட்டார் லாரிகள் முதலியவைகள் லெசென்ஸ் பெறவேண்டும் என்பதைப்பற்றி கூறப்பட்டுள்ளது. மோட்டார் வண்டிகள் லெசென்ஸ் பெறுவதைத் தவிர பொதுவான பாட்டைகளில் போகும் போது சுங்கமும் (Toll) கொடுக்கவேண்டி யிருந்தது. இப்பொழுது சுங்கள் சென்னை சட்ட சபையில் 4-3-1931-ல் நடந்தேறிய மோட்டார் வண்டிகளுக்கு வரி யிடுவதற்கான சட்டத்தினுல் (Motor Vehicles Taxation Act 1931) 1-4-1931 முதல் அடியோடே எடுபட்டுப் போய் அவைகளுக்குப் பதிலாக ஒவ்வொரு மோட்டார் வண்டியும் மூன்று மாதத்திற் கொருதரம் கவர்ன்மென்டுக்கு இவ்வளவு விகிதப் பிரகாரம் வரி கட்டவேண்டுமென்று ஏற்பட்டுள்ளது. அந்த சட்டமானது இப்புஸ்தகத்தில் பின்னுல் அச்சிடப்பட்டுள்ளது. அதைப் பார்க்க,

மோட்டார் வண்டிகளுக்காக லெசென்ஸ் கொடுப்பதில் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் போர்டும் தங்களிஷ்டப்பிரகாரம் லெசென்ஸ்களுக்காக செலுத்த வேண்டிய கட்டணத் தொகைகளை விதித்திருப்பதால் விதிதங்களை சமப்படுத்தி மோட்டார் வண்டிகளைப் பெற்றிருப்பவர்களுக்கு அதிக கஷ்டத்தைக் கொடுக்காமல் இனி மோட்டார்வண்டிகள் கொடுக்கப்போகும் வரியைஉத்தேசித்துகூடியமட்டிலும் லெசென்ஸ்தொகையைகுறைக்கும்படி சென்னைகவர்ன்மென்டார் 4-3-1931 யன்றையதினம் (அதாவது இந்தியாவின் வைசிராயான இர்வின் பிரபுவுக்கும், மகாத்மா காந்திக்கும் நடந்த சம்பாஷணையினுல் இந்தியா முழுவதிலும் சமாதானமும் க்ஷேமமும் ஏற்பட்ட தினம்) வாக்குறுதி செய்திருக்கின்றனர்.

இனி மோட்டார் லாரிகளுக்கும் வரிக் கட்டணம் விதிக்கப்பட வேண்டுமென்று புதியதாக சட்டம் நடந்தேறிய போதிலும் அச்சட்டத்தின்பிரகாரம்

வியவசாயத்திற்காகத் தனியாக உபயோகப்படுத்தப்படும் மோட்டார்களுக்கு வரி கிடையாது. லேசென்ஸ் மாத்திரம் உண்டு.

இப்பிரிவின் கீழ் லேசென்ஸ் பெறுமல் அல்லது இப்பிரிவின் கீழ் கொடுக்கப்படும் லேசென்ஸ-க்கு விரோதமாக நடப்பதற்கு 200 ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு. ஒவ்வொரு லேஸென்ஸிலும் ஒரு மோட்டார் வண்டியை இன்ன தெருக்களின் வழியாக ஓட்டவேண்டும் என்றும் இன்னின்ன விதமாக அதை உபயோகப்படுத்த வேண்டும் என்றும் குறிக்கப்பட்டிருக்கும். அம்மாதிரி ஒரு லேஸென்ஸிலுள்ள நிபந்தனைகளை அனுசரியாமல்ஒருவர் மோட்டார் வண்டியை ஓட்டும்பக்ஷத்தில் இந்தப்பிரிவின் கீழ்அவர் தண்டிக்கப்படுவார். ஒரு கேஸில், ஒருவர் டிஸ்டிரிக்ட் போர்டிலிருந்து மோட்டார் வண்டிகளை வாடகைக்கு ஓட்டுவதற்காக லேஸென்ஸ் பெற்றிருந்தார். அவரால் வண்டியை ஓட்டுவதற்கு நியமிக்கப்பட்ட டிரைவர் வண்டியை ஓட்டக்கூடாத தெருவழியாக ஓட்டிவிட்டார். அதற்காக வண்டியின் சொந்தக்காரர் பேரில் கேஸ் தொடரப்பட்ட பொழுதுஅவர், தமக்கொன்றும்தெரியாது என்றும், தன்னுடைய டிரைவர் தமக்கு தெரியாமல் பஸ்ஸை ஓட்டினதாகவும் தெரிவித்தார். அந்த வாதத்தை அங்கிகரியாமல், தம்முடைய ஊழியன் அல்லது சேவகன் உத்தியோமுறைமையில் செய்யும் செயல்களுக்கு அவர்தான் உத்தரவாதமாக இருக்கவேண்டும் என்றும் ஆகையால் 166-வது பிரிவின் கீழ் அவருக்கு கொடுக்கப்பட்டுள்ள லேஸென்ஸை மீறி நடந்ததற்கு அவர் தண்டனைக்குள்ளாகவேண்டும் என்றும் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்தனர்(a). இதேமாதிரி மற்றொரு கேஸிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது(b).

11-வது அத்தியாயம்.

மார்க்கெட்டுகளும் ஆடு மாடுகளை அடிக்கும் தொட்டிகள் முதலியவைகளும்.

இந்த அத்தியாயத்தில், பொது மார்க்கெட்டுகளைப் பற்றியும் வண்டி நிற்கும் இடங்களைப் பற்றியும் ஆடு மாடுகளை வெட்டும் தொட்டிகளைப் பற்றியும் தொழிற்சாலைகளைப் பற்றியும் இவைகளுக்கு லேசென்ஸ் கொடுப்பதைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது 167-வது பிரிவு முதல் 193-பிரிவு வரையிலும் இவ்வத்தியாயத்தில் அடங்கியுள்ளன. இவ்வத்தியாயமுழுவதும் பஞ்சாயத்தினுடைய அதிகாரங்களைப்பற்றி கூறப்பட்டுள்ளது.

(a) சிவராம முதலியார் முத்தண்ணைய்யங்கார் 52 M. L. J. 561.

(b) சி. கன்னையா கம்பெனி விஷயமாக 54 M. L. J. 315.

பொது மார்க்கெட்டுகள்.

பொது மார்க்கெட்டுகள்.

167. லோகல் பண்டு தொகையிலிருந்து வாங்கப்பட்ட, அல்லது அதனால் கட்டப்பட்ட, அல்லது அதனால் மராமத்து செய்யப்பட்ட அல்லது பராமரிக்கப்பட்ட சகல மார்க்கெட்டுகளும் பொது மார்க்கெட்டுகளாக எண்ணப்படும். மேலும், அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளுக்குள் எந்த ஜாதி அல்லது மதத்தைச் சேர்ந்தவர்களா யிருக்கும் நபர்களும் போகலாம்.

குறிப்புகள்.

மார்க்கெட்டு என்பது சாமான்களை விற்கும் கடைக் கொத்துகளைக் குறிக்கும். ஒரே ஒரு கடையானது மார்க்கெட்டு என்று சொல்லப்படாது பல கடைகள் ஒன்றாக இருந்து, ஒவ்வொரு கடையும் ஒரே விதம் அல்லது விதங்களான சாமான்களை விற்கும் இடமானது மார்க்கெட்டு எனப்படும். 1884-வருஷத்திய லோகல் போர்டு சட்டத்தில் மார்க்கெட்டென்பது சாதாரணமாக கரி, மீன், பழங்கள், காய்கள், தானியங்கள், ஆடு மாடு கோழிகள் முதலியதும் இன்னும் இவைகளைப்போன்ற வஸ்துக்கள் விற்கப்படும் இடமானது மார்க்கெட்டெனப்படும் என்றிருந்தது. இச்சட்டத்தில் மார்க்கெட்டு இன்னதென்று விளக்கப்படவில்லை.

ஒவ்வொரு பொது மார்க்கெட்டிலும் எல்லா ஜாதியினர்களும் பிரவேசிக்கலாம். அவர்களில் எவரையாவது அப்படி போவதிலிருந்து தடுக்கக் கூடாது. அப்படி தடுப்பது ஒரு குற்றமாகும். அதற்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

பொதுமார்க்கெட்டுகளென்பது பொது ஜனங்களுக்குரியதான லோகல் பண்டு தொகையிலிருந்து கட்டப்பட்ட அல்லது பராமரித்து வரப்பட்ட மார்க்கெட்டுகள். இவைகளை லோகல் போர்டுகள் தான் பரிபாலித்து வரவேண்டும். மார்க்கெட்டுகள் முக்கியமாக பஞ்சாயத்துக்குள்ளே தான் இருப்பதால் அவைகளை பஞ்சாயத்துகள் தான் பார்த்து வரவேண்டும்.

பிரைவேட் மார்க்கெட்டுகள் என்பது 171-வது பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது. பிரைவேட் மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதற்கு லைசென்ஸ் வேண்டும். பொது மார்க்கெட்டுகள் பஞ்சாயத்தினாலேயே பராமரிக்கப்பட்டு வருவதால் அவைகளுக்கு லைசென்ஸ் என்பது கிடையாது.

பொது மார்க்கெட்டுகள் விஷயமாய் உள்ள அதிகாரம்.

168. (1) பஞ்சாயத்தானது - பொது மார்க்கெட்டுகளாக உபயோகமாகும் பொருட்டு இடங்களை ஏற்படுத்தலாம்.

(2) நிர்ணயிக்கப்படக்கூடிய மேல் விசாரணைக்குட்பட்டு, பஞ்சாயத்தானது - யாதொரு பொது மார்க்கெட்டில், தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய வீதங்களின்படி அடியிற்கண்ட கட்டணங்களில் யாதொன்றையாகிலும் பலவற்றையாகிலும் விதித்து வாங்கலாம், அல்லது தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய ஷரத்துகளின்படியும் நிட்டங்களுக்குட்பட்டும் அப்படிப்பட்ட கட்டணங்களை இஜாரா விடலாம் :—

(a) அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளை உபயோகிப்பதற்காக அல்லது அவைகளில் விற்பனையின் பொருட்டு வஸ்துக்களைக் காட்டி வைப்பதற்கான சுதந்தரத்துக்காக கட்டணங்கள் ;

(b) அந்த மார்க்கெட்டிலுள்ள கடைகளை அல்லது கொட்டில்களை அல்லது பட்டிகளை அல்லது நிலைகளை உபயோகிப்பதற்காக கட்டணங்கள் ;

(c) அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளில் விற்பனைக்காக சரக்குகளைக் கொண்டு வருகிற வண்டிகளின்பேரில் அல்லது பொதி ஜந்துக்களின் அல்லது மேடி சரக்குகளைத் தூக்கிக்கொண்டு வருகிற நபர்களின் பேரில் கட்டணங்கள் ;

(d) அந்த மார்க்கெட்டுகளுக்குள் விற்பனைக்காகக்கொண்டு வரப்படுகிற அல்லது அந்த மார்க்கெட்டுகளில் விற்கப்படுகிற பிராணிகளுக்காக செலுத்த வேண்டிய கட்டணங்கள் ;

(e) அந்த மார்க்கெட்டுகளில் தொழில் நடத்திக்கொண்டு வருகிற ப்ரோக்கர்களும், கமிஷன் ஏஜெண்டுகளும், வாடை போடுகிறவர்களும், அளப்பவர்களும் செலுத்தவேண்டிய லிஸென்ஸ் கட்டணங்கள்.

(3) பஞ்சாயத்தானது-டிஸ்டிரிக்ட் போர்டாருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு யாதொரு பொது மார்க்கெட்டையாவது அல்லது அதன் யாதொரு பாகத்தையாவது மூடிவிடலாம்.

குறிப்புகள்.

இந்தப்பிரிவானது பொது மார்க்கெட்டுகளை உபயோகிப்பதைப்பற்றி கூறுவதாகும்.

பொது மார்க்கெட்டுகளில் உள்ள கடைகளில், பஞ்சாயத்தானது, இப் பிரிவில் கண்ட கட்டணங்களை நேராகவாவது வசூலிக்கலாம், அல்லது

அவைகளை வசூலிக்கும் பாத்தியதையை மொத்தமாக ஏல மூலமாவது அல்லது வேறேவழியாகவாவது மற்றொரு ப்ரைவேட் நபர் அல்லதுநபர்களுக்கு குத்தகைக்கு விடலாம்.

பஞ்சாயத்துகள் பொது மார்க்கெட்டுகளை மூடிவிடுவதாக யிருந்தால் அதற்கு டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய உத்திரவைப் பெறவேண்டும்.

ஒரு மார்க்கெட்டின் கட்டணங்களை வசூல் செய்வதற்காக ஒரு பஞ்சாயத்தினிடமிருந்து குத்தகை பெற்றவர் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரென்று (Pub ic Servant) சொல்லப்படமாட்டார்.

இப்பிரிவிலுள்ள மார்க்கெட்டுகள் என்பது ஸ்திரமாகவுள்ள மார்க்கெட்டுகளைத்தான் குறிக்கும்.

ஒரு மார்க்கெட்டில் ஒரு நபர் மாத்திரம் தனியாக சாமான்களை விற்கும் படியான பாத்தியதையை பெறவேண்டுமென்றும் வேறொருவரும் அவர் விற்கும் சாமானை அந்த மார்க்கெட்டில் விற்கக்கூடாதென்றும் யாதொரு சுதந்திரம் பெறும்படியாக ஒரு பஞ்சாயத்தானது செய்வதற்கில்லை. அப்படிச் செய்வது சட்டவிரோதமாகும்.

ஒரு முனிசிபாலிட்டியானது சட்டசம்மதமல்லாத ஒரு காண்ட்ராக்டை செய்யும் பக்ஷத்தில் அந்த காண்ட்ராக்ட்டானது செல்லத்தகாது என்று ஏற்பட்ட பிறகு முனிசிபாலிட்டியார் தாங்கள் பெற்றிருக்கும் லைசென்ஸ் தொகையை கொடுத்துவிடவேண்டும் (a).

ஒரு நபர் மார்க்கெட்டின் கட்டணங்களை வசூலிப்பதற்காக குத்தகை (காண்ட்ராக்ட்டு) பெற்றிருப்பின் அந்த குத்தகையினுடைய நிபந்தனைகளுக்கு மீறி யாதொரு செய்கையும் செய்வதற்கில்லை. அப்படி செய்யும் பக்ஷத்தில் அவர் பஞ்சாயத்து விதிக்கப்படும் தண்டத்தொகைகளுக்கு உட்படவேண்டும். (b)

ஒரு மார்க்கெட்டில் மற்றவர்களுக்காக அவர்களுக்கு எதிரில் சும்மா சாமான்களை ஏலம்போடுபவர் ஒரு கமிஷன் ஏஜெண்டல்ல. ஒரு சாதாரண ஏஜெண்டு. ஆனால் ஒரு நபர் மற்றவர்களுக்காக மொத்தமாக தானியம் முதலியவைகளை விற்கும்படியாக ஏற்பாடு செய்துக்கொண்டு அதற்காக கமிஷன்பெறும்பக்ஷத்தில் அவர் ஒரு கமிஷன் ஏஜெண்டு என்றே கருதப்படுவார். ஆகையால் அவர் லைஸென்ஸ் பெறுதபக்ஷத்தில் தண்டனைக்கு உள்ளாக வேண்டும். (c)

(a) சோமு பிள்ளை vs. மாயவரம் முனிசிபல் கௌன்சில் 28 Mad. 520.

(b) குந்தபூர் தாலூக்கா போர்டு vs. லக்ஷ்மி நாராயணன் 31. Mad. 54=17. M. L. J. 537.

(c) பப்ளிக் பிராஸிக்யூடர் vs. காளிய பெருமாள் நாய்க்கர். 49 Mad. 432.

169. (1) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டின் அனுமதியில்லாமலாவது, வாடகைகளும் கட்டணங்களும் இஜாராவுக்கு விடப்பட்டிருந்தால் இஜாரீர்காரரின் அனுமதியில்லாமலாவது, எந்த நபரும் - யாதொரு பொது மார்க்கெட்டுக்குள் யாதொரு பிராணியையாவது, வஸ்துவையாவது விற்பனை செய்யவும் கூடாது, விற்பனைக்காக காட்டி வைத்திருக்கவும் கூடாது.

பொது மார்க்கெட்டுகளின்மேல் ப்ரெஸிடென்டுக்குள்ள விசாரணை அதிகாரம்.

(2) யாதொரு பொதுவான மார்க்கெட்டில், அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் எந்த உப சட்டங்களையாகிலும் மீறியதனாலே யாதொரு நபராவது அவருடைய வேலைக்காரராவது குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருப்பாராகில், அந்த நபரை ப்ரெஸிடென்டானவர் அப்படிப்பட்ட மார்க்கெட்டிலிருந்து நீக்கிவிட்டு அந்த நபரேயாவது அவருடைய வேலைக்காரர்கள் அல்லது ஏஜெண்டுகளாவது அந்த மார்க்கெட்டில் யாதொரு வர்த்தகம் அல்லது தொழிலை இனி நடத்தக் கூடாதென்றாகிலும் அதில் யாதொரு கடை - கொட்டில் அல்லது வேறே இடத்தை தம் அனுபோகத்தில் இனி வைத்திருக்கக் கூடாதென்றாகிலும் தடுத்து விடலாம் ; மேலும், அப்படிப்பட்ட யாதொரு கடை - கொட்டில் அல்லது வேறே இடத்திற்காக அந்த நபருக்குக் கிடைத்திருக்கும் யாதொரு குத்தகை அல்லது பாத்தியதையை அறுத்து செய்து விடலாம்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது பஞ்சாயத்து ப்ரெஸிடென்டினுடைய உத்திரவில்லாமல் அல்லது பொது மார்க்கெட்டின் கண்ட்ராக்டருடைய உத்திரவில்லாமல் பொது மார்க்கெட்டுகளில் யாதொன்றையும் விற்கக் கூடாதென்று கூறுகிறது. அதாவது ஒரு மார்க்கெட்டில் தம்முடைய சாமான்களை விற்பதற்கே முன்னுடியாக பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு அல்லது கண்ட்ராக்டருடைய உத்திரவை பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது. அப்படி உத்திரவில்லாமல் ஒரு மார்க்கெட்டில் சாமான்களை விற்கும் பக்ஷத்தில் அதற்கு 20 ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு. ஒரு தினம் அபராதம் போட்ட பிறகு ப்ளிக் மார்க்கெட்டில் உத்திரவு இல்லாமல் சாமான்களை விற்கும் பக்ஷத்தில் அதற்கு ஒவ்வொரு தினத்திற்கும் 10-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

ஒரு மார்க்கெட்டில் உள்ள விற்பனை நிபந்தனைகளை மீறி நடந்ததற்காக ஒரு கிரிமினல் கோர்ட்டினால் தண்டிக்கப்பட்ட நபருக்கு ப்ரெஸிடென்டானவர் அந்த மார்க்கெட்டில் யாதொரு சாமானையும் விற்கக்கூடாதென்று கட்டளை யிடுவதுமல்லாமல் அந்த மார்க்கெட்டிலிருந்தே அவரை அப்புறப் படுத்தி விடலாம். அந்த நபர் எதாவது குத்தகை அல்லது கீழ் குத்தகை பெற்றிருக்கும் பக்ஷத்தில் அதையும் ப்ரெஸிடென்டானவர் ரத்து செய்து விடலாம். இந்த அதிகாரமானது ஒரு பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டுக்கு மாத்திரம் உண்டே யொழிய கண்ட்ராக்டராவது அல்லது குத்தகைதாராவது அதை செலுத்துவதற்கில்லை.

பிரைவேட் மார்க்கெட்கள்.

170. [இந்தப் பிரிவு எடுத்து விடப்பட்டது.]

171. (1) யாதொரு நபரும் பஞ்சாயத்தினிடமிருந்து அப்படிச் செய்வதற்கு ஒரு லைசென்ஸ் பெற்று லொழிய ஒரு புதிய பிரைவேட் மார்க்கெட்டை நிறக்கவும் கூடாது ; அல்லது ஒரு பிரைவேட் மார்க்கெட்டை நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கவும் கூடாது.

பிரைவேட் மார்க்கெட்டுகளுக்கு லைசென்ஸ் கொடுப்பது.

(2) அப்படிப்பட்ட லைசென்ஸுக்கு வேண்டிய விண்ணப்பமானது, சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாப்போல் எந்த இடத்தின் விஷயமாக லைஸென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த இடத்தின் சொந்தக்காரரால் - அந்த இடமானது ஒரு மார்க்கெட்டாக நிறுத்துவைக்கப் படுவதற்கு மூன் ஆறு வாரங்களுக்கு குறையாமலும், அல்லது எந்த வருஷத்திற்காக அந்த லைசென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த வருஷம் தொடங்குவதற்கு மூன் ஆறு வாரங்களுக்குக்குறையாமலிப் ; செய்யப் படவண்டும்.

(3) , பஞ்சாயத்தானது, எற்கெனவே சட்டப் பிரகாரம் எற்படுத்தப்பட்டிருக்கும் பிரைவேட் மார்க்கட்டுகளைச் சேர்ந்த வரையிலும், மேல் பார்வைக்கும் தணிக்கைக்கும் உட்பட்டும், சுகாதாரம் சாக்கடைப் போக்கு, ஜலதாரம், கால் பாதைகளின் அகலம், உபயோகப்படுத்த வேண்டிய நிலுத்தல்லவை, அளக்தல்லவை, அந்த மார்க்கெட்டில் விநிக்கப்படவேண்டிய வாடகைகள், கட்டணங்கள் இவைகள் விஷயமாகவும் தாங்கள் எப்படி யுக்தமென்று நினைக்கிறார்களோ அதன் பிரகாரம் விநிக்கும் நெகுலேஷன்களுக்குமிணங்கி

யும், ஒரு லிசென்ஸ் கேட்கப்பட்டதானால் அந்த லிசென்ஸை கட்டாயம் கொடுக்கவேண்டும். புது பிரைவேட் மார்க்கட்டுகளின் விஷயமாக மேற்கண்ட செகுலேஷன்களுக்கு இணங்கி தங்களுடைய யுக்தானுசாரம் லிசென்ஸ் கேட்கப்பட்டதானால் பஞ்சாயத்து அவைகளைக் கொடுக்கலாம், அல்லது லிசென்ஸ் கொடுக்க மறுத்துவிடலாம். ஆனால், பஞ்சாயத்தானது - இந்த பிரிவின் கீழ் கொடுக்கப்படும் யாதொரு லிசென்ஸின் நிபந்தனைகளை மீறி எவராவது நடக்கும் பக்ஷத்தில் அவருடைய லிசென்ஸை சிலகாலம் நிறுத்தி வைக்கலாம், அல்லது மொத்தமாக அறுத்து செய்துவிடலாம். பஞ்சாயத்தானது - ஒரு லிசென்ஸிலுள்ள நிபந்தனைகளை ஒரு குறிப்பிட்ட தேதி முதல் அமுலுக்கு வரும்படி மாற்றிவைக்கலாம்.

(4) இந்த பிரிவின் கீழ் ஒரு லிசென்ஸ் கொடுக்கப்பட்டதானால் அல்லது கொடுக்க மறுக்கப்பட்டதானால் அல்லது நிறுத்தி வைக்கப்பட்டதானால் அல்லது அறுத்து செய்யப்பட்டதானால் அல்லது மாற்றப்பட்டதானால், பஞ்சாயத்தானது அப்படிப்பட்ட ஈகை, மறுப்பு, நிறுத்திவைக்கப்படுதல், அல்லது மாற்றுதல் இவைகளைப்பற்றி அந்த ஸ்தலத்தினுடைய முக்கியமான சுதேசபாஷையில் ஒரு பஹிரங்கமான இடத்திலாவது அல்லது எந்த இடத்தின் விஷயமாக லிசென்ஸ் கேட்கப்பட்டதோ அல்லது பெறப்பட்டதோ அந்த இடத்தின் வாயிலாவது அல்லது அதற்கருகிலாவது ஒரு நோட்டீஸ் ஒட்டப்படும் படி செய்யவேண்டும்.

(5) இந்தப் பிரிவின் கீழ் கொடுக்கப்படும் ஒவ்வொரு லிசென்ஸும் அது எந்த வருஷத்திற்காக கொடுக்கப்படுகிறதோ அந்த வருஷத்தில் முடிவதாகும்.

தரிப்புகள்.

இந்தப் பிரிவானது பிரைவேட் மார்க்கெட்டுகளைப்பற்றி கூறுகிறது. பிரைவேட் மார்க்கெட்டு என்பது ஒரு நபர் அல்லது நபர்கள் தம்முடைய அல்லது தங்களுடைய சொந்தமான பணத்தைக்கொண்டு ஏற்படுத்தும் மார்க்கெட்டாகும். அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளை ஸ்தாபிப்பதற்கு அல்லது நிறுத்தி வைப்பதற்கு ஒரு பஞ்சாயத்தினுடையமுன் உத்தரவு வேண்டும். பஞ்சாயத்து ப்ரெஸிடென்டுமாத்திரம் உத்தரவு கொடுத்தாலே போதுமானதல்ல. பஞ்சாயத்தி அங்கத்தினர்கள் யாவரும் மீட்டிங்கில் சேர்ந்து

உத்தரவு முதலியவைகளை செய்து ஒரு லைசென்ஸ் கொடுக்கவேண்டும். அந்த லைசென்ஸ் 1-வருஷம் வரையிலும் அமுலில் இருக்கும். அந்த லைசென்ஸை ஒவ்வொரு வருஷத்தின் ஆரம்பத்திற்கு 6-வாரங்களுக்கு முன்னுடியாகவே பெறவேண்டும்.

26—8—30-க்குப் பிறகு புதியதாக அமைக்கப்படும் மார்க்கெட்டுகளுக்கு லைசென்ஸ் கொடுப்பது பஞ்சாயத்தினுடைய இஷ்டத்தைப்பொறுத்ததாகும். ஆனால் அதற்குமுன் அமைக்கப்பட்டிருக்கும் மார்க்கெட்டுகளுக்காக அந்த மார்க்கெட்டுகளின் சொந்தக்காரர்கள் பஞ்சாயத்தினுடைய மேற்பார்வைக்கு உட்பட்டு பஞ்சாயத்தானது நிர்ணயிக்கும் ரெகுலேஷன்களுக்கும் அடங்கி லைசென்ஸ் கேட்கப்படும்பக்ஷத்தில் கட்டாயம் லைசென்ஸ் கொடுத்தே தீரவேண்டும். புதியதாக ஏற்படுத்தப்படும் பிரைவேட் மார்க்கெட்டுகளுக்கு அடியோடே லைசென்ஸ் கொடுக்காமலும் மறுத்துவிடலாம். பழைய மார்க்கெட்டுகளைச் சேர்ந்தவரையிலும் அவைகள், பஞ்சாயத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரியாமலிருக்கும் பக்ஷத்தில் அவைகளினுடைய லைசென்ஸ்களை நிறுத்திவைக்கலாம். பஞ்சாயத்தானது தமக்கு யுக்தமென்று தோன்றும்போது லைசென்ஸ்களின் நிபந்தனைகளை மாற்றிவைக்கலாம்.

லைசென்ஸ் விஷயமாய் செய்யப்படும் எல்லா உத்தரவுகளும் பைரங்கமாய் மார்க்கெட்டுகளின் முன்பாக ஒட்டப்படவேண்டும்.

'வருஷம் என்பது அரசிரை (Financial Year) வருஷமாகும். அதாவது ஒரு வருஷம் எப்ரல்மீ 1 தேதிமுதல் அடுத்த வருஷம் மார்சுமீ 31-ந்தேதிவரையிலும் உள்ள மாதங்களாகும்.

இந்தப்பிரிவின்கீழ் ஒரு பஞ்சாயத்தானது செய்யும் உத்தரவுகளுக்கு மேலாக டிஸ்டிரிக்ட் போர்டுக்கு அப்பீல் உண்டு. (151-வது பிரிவைப் பார்க்க.)

லைசென்ஸில்லாமல் ஒரு மார்க்கெட்டை ஏற்படுத்துவது அல்லது திறந்துவைப்பதற்கு முதலில் 500-ரூபாய் வரையிலும் அபராதம் போடப்பட்ட பிறகு அப்படி திறந்து வைக்கப்பட்டிருக்கும் பிரதினினத்திற்கு 100 ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

லைசென்ஸ் கட்டணங்களை வித்திப்பதில் மிகவும் நியாயமாகவும், அதிகமில்லாமலும் மார்க்கெட்டுகளை மேற்பார்வையிட்டு இன்னும் இப்பிரிவில் கண்டிருக்கிறபிரகாரம் சுத்தமான ஸ்திதியில் வைத்திருப்பதற்கு என்ன வேண்டுமோ அதற்குத் தகுந்தாப்போல் தான்வித்திக்கவேண்டும்.

172. (1) 1884-ம் வருடத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்டு செலாவணிபாகத் தொடங்குவதற்குமுன் சட்டப்படி ஸ்தாபிக்கப் பட்ட யாதொரு சொந்த மார்க்கெட்டில், 168-வது பிரிவின் 2-வது உபப்பிரிவில் குறிப்பிடப் பட்ட கல்லைபுள்ள கட்டணங்களை விதித்து வசூல் செய்ய சுதந்தரம் கொண்டாடுகிற யாதொரு நபர் - இது விஷயமாய்த் தமக்குள்ள சுதந்தரத்தை அங்கீகரிப்பதற்கான லைசிடி கேட் கொடுக்கும்படி டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கு அதன் ப்ரெஸிடென்டின் மூலமாக விண்ணப்பம் செய்துக் கொள்ள வேண்டும்.

1884-ம் ஹுத்துக் குமுன் ஸ்தாபிக்கப்ப ட்டசொந்த மார்க்கெ ட்டுகளில் கட்டணங் கள் விதித்து வாங்க சுதந்தரம் கொண்டா டும் விஷயத்தில் அ னுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறை.

(2) லைசி ப்ரெஸிடென்டானவர் - அந்த விண்ணப்பத் தைக்குறித்து ஒரு நோட்டீஸை பஞ்சாயத்துக்குச் சேர்ப்பிக்கவேண் டும்; மேலும், லைசி விண்ணப்பதாரர் அப்படிப்பட்ட கட்டணங் களை விதித்து வசூல் செய்ய பாத்தியதையுள்ளவரா என்னும் விஷயத் தைத் தீர்மானிக்கும்போது, டிஸ்டிரிக்ட்டு போர்டார் - இது விஷய மாய் பஞ்சாயத்து தெரிவித்துக் கொள்ளும் சங்கதிகளைப்பற்றி ஆலோசித்து, அதன்பிறகு அந்த லைசிடிகேட் கொடுக்கவேண்டும், அல்லது கொடுப்பதில்லை யென்று நிராகரிக்கவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி லைசிடிகேட் பெற்றிருக்கும் நபர் அதை பஞ்சாயத்தினிடத்தில் ஹாஜர்ப்படுத்தவேண்டும்; அதன் மேல், பஞ்சாயத்து 171-வது பிரிவின்படி அவருக்கு லிஸென்ஸ் கொடுக்கும்போது, அந்த லைசிடிகேட்டில் கண்ட கட்டணங்களை விதித்து வசூல் செய்ய அவருக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

குறிப்புகள்.

1884-ம் வருஷத்திய லோகல்போர்டு சட்டமானது அமுலுக்கு வருவ தற்குமுன் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு பிரைவேட் மார்க்கெட்டில், 168-வது பிரிவின் (2)-வது உபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் கட்டணங்களைப் போன்ற கட்டணங்களை வசூல் செய்வதற்கு தமக்கு உரிமையுள்ளதாகச் சொல்பவர் டிஸ்டிரிக்ட் போர்டுக்கு அதன் ப்ரெஸிடென்டுமூலமாக மனுசெய்து தம்முடைய உரிமைகளை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டும்.

இந்த பிரிவானது பிரைவேட் நபர்கள் லிஸென்ஸைப் பெற்றுக்கொண்டு தினிய கடைக்காரர்களிடமிருந்து மார்க்கெட்டு கட்டணங்களை வசூலிப் பதைக்குறித்துகூறுவதாகும்.

லெர்டிபிகேட் இல்லாமல் பிரைவேட் மார்க்கெட்டுகளில் கட்டணம் விதிப்பதற்கு ரூ. 100-வரையிலும் அபராதம் உண்டு.

173. யாதொரு லெர்டிபிகேட் கொடுப்பதில்லை யென்று டிஸ்டிரிக்ட் போர்டாரால் நிராகரித்து செய்யப் பட்டதோர் உத்தரவினல் துன்பமடைந்திருக்கும் யாதொரு நபர்-தாம் கொண்டாடும் சுதந்தரத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்காக மேலே கண்ட உத்தரவின் தேதி முதல் ஆறுமாதத்துக்குள் வியாஜ்ஜியம் தொடரலாம்; அதன்மேல் அந்த வியாஜ்ஜியத்தின் தீர்மானத்துக்கு உட்பட்டு லெ உத்தரவு முடிவானதாகும்.

கட்டணங்கள் விதித்து வசூல் செய்வதற்கான சுதந்தரத்தை ஸ்தாபித்துக் கொள்ளுவதற்காக வியாஜ்ஜியங் கொண்டுவர பாத்தியதை.

குறிப்புகள்.

172-பிரிவின் கீழ் கேட்கப்பட்ட லெர்ட்டிபிகேட்டை டிஸ்டிரிக்ட்டு போர்டானது கொடுக்க மறுத்து விடும் பக்ஷத்தில் அப்படி கொடுக்கப் பட்ட தேதி முதல் 6-மாதங்களுக்குள்ளாக தம்முடைய உரிமைகளை ஸ்தாபித்துக் கொள்ளும்படி சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். சிவில் கோர்ட்டு என்பது டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டாகும்.

174. 171-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு லெலிசென்ஸினுல் எந்தக் கட்டணங்களும் விதித்து வாங்குவதற்கு அனுமதி ஏற்படாதிருக்கும் போது, அந்த லெலிசென்ஸுக்காக கட்டணம் ஒன்றும் வாங்காமலே அதைக் கொடுக்கவேண்டும்; ஆனல், அப்படிப்பட்ட அனுமதி கொடுக்கப்படுகிற விஷயத்திலே, முந்திய வருஷத்தில் அந்த மார்க்கெட்டிலிருந்து அதன் சொந்தக்காருக்குக் கிடைத்திருக்கும் மொத்த வரும்படியில் நூற்றுக்கு பதினேந்து வீதத்துக்கு மேற்படாத ஒரு கட்டணத்தை அப்படிப்பட்ட லெலிசென்ஸுக்காக பஞ்சாயத்தானது வாங்க வேண்டும்.

லெலிசென்சுக்குக் கட்டணம்.

குறிப்புகள்.

171-வது பிரிவின்கீழ் கொடுக்கப்படும் லெசென்சுகளுக்கு யாதொரு கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று கவர்ன்மெண்டாரால் விதிக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில் பஞ்சாயத்தானது லெசென்ஸுகளுக்கு கட்டணங்களை வாங்கக் கூடாது. ஆனல் லெசென்ஸுகளுக்கு கட்டணம் விதிக்கலாம் என்று பஞ்சாயத்துகளுக்கு உத்திரவு இருக்கும் பக்ஷத்தில். அப்படி விதிக்கப்படும் கட்டணத் தொகையானது அந்த மார்க்கெட்டிலிருந்து மார்க்கெட்

டின் சொந்தக்காரருக்கு வரும்படியான மொத்த வருமானத்தில் நூற்றுக்கு 15-ரூபாய்க்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும்.

லைஸென்ஸ் கொடுக்கப்பெறாத சொந்த மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யக் கூடாதென்றுதடுப்பது.

175. லைஸென்ஸ் கொடுக்கப்பெறுத யாதொரு சொந்த மார்க்கெட்டில் யாதொரு பிராணியையோ அல்லது வஸ்துவையோ எவ ரேனும் விற்பதாகிலும், விற்பனைக்காக காட்டி வைப்பதாகிலும் சட்ட சம்மதமாகாது.

குறிப்புகள்.

லைசென்ஸ் கொடுக்கப்படாத பிரைவேட் மார்க்கெட்டுகளில் சாமான் களையாவது ஜந்துக்களையாவது விற்பனை செய்வது ஒரு குற்றமாகும். அதற்கு 20-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

ஒரு நபர் ஒரு மார்க்கெட்டிலல்லாமல் தன் சொந்த வீட்டிலேயே தனியான இடத்தில் சாமான்களை விற்கும் பக்ஷத்தில் அது ஒரு குற்றமாகாது. அப்படி விற்பதற்கு லைசென்ஸும் அவசியமில்லை. (a). ஒரு பஞ்சாயத்தானது வேண்டுமென்று சட்ட விரோதமாக ஒரு நபருக்கு ஒரு பிரைவேட் மார்க்கெட்டுக்காக லைசென்ஸ் கொடுக்காத பக்ஷத்தில் அந்த மார்க்கெட்டில் சாமான் விற்பதற்காக அவரை தண்டிப்பதற்கில்லை. (b).

சொந்த மார்க்கெட்டுகளைப்பற்றி பஞ்சாயத்துக்குள்ள அதிகாரங்கள்.

176. பஞ்சாயத்தானது யாதொரு பிரைவேட் மார்க்கெட்டின் சொந்தக்காரர், அனுபோகதாரர் அல்லது குத்தகைதாரருக்கு நோட்டீஸ் கொடுத்து,

(a) அந்த மார்க்கெட்டுக்கு வழிகளையும், நுழைவாயில்களையும், பாதைகளையும், கேட்டுகளையும், சாக்கடைக் கால்களையும், சாக்கடைக் குழிகளையும் ஏற்படுத்தி அதில் பஞ்சாயத்தானது சரியென்று எண்ணக்கூடிய விதமாயும், இடத்திலும் அவர்களுக்கு வேண்டியதென்று தோன்றும் சங்கியைவரையிலும் எண்ணக்கூடிய மலஜலபாதை மறைவிடங்களை அமைத்து வைக்கும்படிக்கும்,

(b) அதற்கு முழுமையுமாவது அல்லது அதன் யாதொரு பாகத்துக்காவது மேற் கூரைப்போட்டுத் தளவரிசையிட்டு வைக்கும்படிக்கும், அல்லது கண்ணீர் அடியில் ஊராமல் இருப்பதற்கும் சடுதியில் சுத்தப்படுத்தக்கூடியதற்கும் சௌகரியமாயிருப்பதற்கு எந்த

(a) மஹாராணி vs. ராஜய்யா, ரத்னலால் ரிபோர்ட்டு செய்யப்படாத கிரிமினல் கேஸ்-கள் 209.

(b) எல்லம்மாள் விஷயமாக 53. M. L. J. 810.

சாமான் ஏற்றதென்று பஞ்சாயத்துக்குத் தோற்றுகிறதோ அந்த சாமானைக்கொண்டு தரையின் யாதொரு பாகத்துக்குத் தளவரிசை யிட்டு வைக்கும்படிக்கும்,

(c) அதற்கு நன்றாய் காற்றுவருவதாய் ஏற்படுத்துவ தோடு ஜலசர்ப்பரா சவதரித்து வைக்கும்படிக்கும்,

(d) கொட்டில்களுக்கு மத்தியில் போதுமான அகலமுள்ள வழிகள் அமைத்து, மேற்படி மார்க்கெட்டிலுள்ள கொட்டில்களிலா வது வழிகளிலாவது, கடைகளிலாவது, கதவுகளிலாவது, அல்லது மற்றபாகங்களிலாவது பஞ்சாயத்து உத்தரவு செய்யக்கூடிய மாறுதல் களைச் செய்யும்படிக்கும்,

(e) அதைச் சுத்தமான ஸ்திதியிலும் சரியான ஸ்திதியிலும் வைத்திருந்து அதிலிருந்து சகல அசுத்தங்களையும் கழிகடைவஸ்துக் களையும் அப்புறப்படுத்துவதோடுங்கூட, அவைகளில் பஞ்சாயத்து கட்டளையிடக்கூடிய இடத்திலும் விதமாகவும் ஒருவகை செய்யும் படிக்கும்,

(f) சுகாதார சம்பந்தமாய் பஞ்சாயத்துக்கு அவசியமென்று தோற்றக்கூடிய வேறே ஏற்பாடுகளைச் செய்யும்படிக்கும்,

உத்தரவு செய்யலாம்.

குறிப்புகள்.

பழைய சட்டத்தின் பிரகாரம், பிரைவேட் மார்க்கெட்டுகளில் இப்பிரி வின்கீழ் உள்ள அதிகாரங்களை செலுத்துவதற்கு தாலூக்கா போர்டுக்கு அதிகாரமிருந்தது. இப்பொழுது அவ்வதிகாரமானது பஞ்சாயத்துக்கு சங் கிரமித்து விட்டது. ஆனால் ஒரு கிராமத்தின் வில்லீரணத்திற்குள்ள பிரை வேட் மார்க்கெட்டுகளில் மாத்திரம் தான் பஞ்சாயத்துகள் இப்பிரிவின் கீழுள்ள அதிகாரங்களைச் செலுத்தலாமே யொழிய அதற்கு வெளியிலிருக் கும் வில்லீரணத்தில் தம்முடைய அதிகாரத்தைச் செலுத்துவதற்கில்லை.

இப்பிரிவின் கீழ் உள்ள அதிகாரத்தை ஒரு பஞ்சாயத்தானது தன் னுடைய தீர்மானங்களின் மூலமாகச்செய்யவேண்டுமேயொழிய பஞ்சாயத்து பிரஸிடென்டு தனிப்பாக செலுத்த முடியாது. பஞ்சாயத்தானது உத்தரவு செய்வதென்றால் ஒரு மீட்டிங்கில் கூடி தீர்மானங்களின் மூலமாக உத்தரவு செய்வது.

இப்பிரிவின் கீழ் செய்யப்படும் உத்தரவுகளின் மீறி நடப்பதற்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

177. (1) யாதொரு நபர் தமக்கு இது விஷயத்தில் பஞ்சாயத்து நோட்டீஸ் கொடுத்த பிறகு மேடி நோட்டீஸிற்கண்ட காலத்துக்குள் அதில் குறிக்கப்பட்ட விதமாக 176-வது பிரிவிற்கண்ட வேலைகளில் எதையாவது செய்து முடிக்கத்தவறினால், பஞ்சாயத்தானது மேடி நபருடைய லிசென்ஸை சிறிது காலத்திற்கு நிறுத்திவைக்கலாம்; அல்லது, பிரஸ்தாப வேலைகளைச் செய்து முடித்தாகிற வரையில் அவருக்கு லிஸென்ஸ் கொடுப்பதில்லை யென்று நிராகரிப்பதாம்.

176-வது பிரிவின் படி கொடுக்கப்பட்ட நோட்டீஸின் பிரகாரம் நடந்து கொள்ளத் தவறினால் லிஸென்ஸை சிறிது காலத்திற்கு நிறுத்தி வைப்பது அல்லது கொடுப்பதில்லை யென்று நிராகரிப்பது.

(2) அந்தப்படி லிஸென்ஸை நிறுத்தி வைத்திருக்கிற காலத்திலாவது அல்லது அது புதுப்பிக்கப்படுகிற வரையிலாவது யாதொரு நபர் யாதொரு சொந்த மார்க்கெட்டைத்திறந்து வைத்திருப்பது சட்ட சம்மதமாகாது.

குறிப்புகள்.

176-வது பிரிவின் கீழ் பஞ்சாயத்துகள் செய்யும் உத்தரவுகளைக் கீழ்ப்படியாமல் இருப்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதுடன் அவர்களுடைய லிசென்ஸுகளும் நிறுத்திவைக்கப்படலாம். அப்படி லிசென்ஸ் நிறுத்தி வைக்கப்பட்ட பிறகும் ஒரு பிரைவேட் மார்க்கெட்டை திறந்து வைத்திருக்கும் பக்ஷத்தில் அப்படி செய்பவருக்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

178. யாதொரு சொந்த மார்க்கெட்டு அல்லது அதிலுள்ள யாதொரு கண்ட, கொட்டில், கொட்டகை அல்லது வேறேற இடத்தின் எந்த சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரராவது அதன் விசாரணை வகிக்கும் எந்த ஏஜெண்ட் அல்லது மானேஜராவது அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாகும்படி அதை வைத்துக்கொண்டிருக்கவாகிலும், அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்குகிற யாதொன்றைப் பஞ்சாயத்தார் அறிக்கை செய்கிற இடத்துக்கு உடனே அப்புறப்படுத்தும்படி செய்யத் தவறவாகிலும் கூடாது.

சொந்த மார்க்கெட்டுகளில் அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்கக் கூடாதென்று தடுப்பது.

குறிப்புகள்.

ஒரு பிரைவேட் மார்க்கெட்டாவது அல்லது அதிலுள்ள கடைகள், கொட்டாய்கள் முதலியவைகளாவது பொதுஜனங்களுடைய சௌகரியத்

திற்கு விரோதமில்லாமலும் அவர்களுக்குத் தொந்தரவைவிளைக்கும்படி செய்யாமலும் காப்பாற்றி வைப்பது பஞ்சாயத்தினுடைய கடமையாகும். ஆகையால், பஞ்சாயத்தானது அவைகளில் பொதுஜனங்களுக்கு சங்கடம் அல்லது இடைஞ்சலாக இருக்கும் யாதொரு தொந்தரவை நீக்கும்படி உத்தரவு செய்யலாம். அந்த உத்தரவை யாதொரு நபரும் மீறி நடக்கக் கூடாது. அப்படி மீறி நடந்தால் அதற்கு 20-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

சொந்த மார்க்கெட்டுகளை மூடிவிட அதிகாரம்.

179. பஞ்சாயத்தாலாகிலும் இது சம்பந்தமாக அவர்களால் கிராமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராலாகிலும்—

(a) எது விஷயமாய் லேலென்ஸுக்காக விண்ணப்பம் செய்து கொள்ளப்படவில்லையோ அப்படிப்பட்ட யாதொரு சொந்த மார்க்கெட்டையாவது,

(b) எதற்காக லேலென்ஸ் கிராகரிக்கப்பட்டிருக்கிறதோ அல்லது கொடுப்பதில்லை யென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அல்லது சிறிதுகாலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு சொந்த மார்க்கெட்டையாவது,

(c) எது, இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அல்லது நிறுத்து வைக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு சொந்த மார்க்கெட்டையாவது,

மூடிவிடலாம்.

குறிப்புகள்.

171-முதல் 178-வது பிரிவு வரையிலுள்ள பிரிவுகளில் பிரைவேட் மார்க்கெட்டுகளின் விஷயமாக அவைகளின் சொந்தக்காரர்கள் பஞ்சாயத்தினிடமிருந்து லேசென்ஸ் பெறவேண்டுமென்றும், லேசென்ஸ் பெறாமல் அவைகளை நடத்துவதற்கில்லை யென்றும், அவைகளின் விஷயமாக பஞ்சாயத்தானது செய்யும் உத்திரவுகளுக்கு உட்பட வேண்டுமென்றும் இவைகளை செய்யாமலிருக்கும்பக்ஷத்தில் அந்த நபர்களுக்கு அபராதம் உண்டு என்றும் சொல்லப்பட்டுள்ளது. இப்பிரிவில், லேசென்ஸ்பெறாத மார்க்கெட்டுகளை அல்லது லேசென்ஸுக்கு விரோதமாக நடத்தப்படும் மார்க்கெட்டுகளை தாங்களே மூடிவிடலாம் என்று கூறப்பட்டுள்ளது.

சொந்த மார்க்கெட்டுகள் வைத்துக் கொள்ள ஸர்க்காரைச் சேராத தனி நபர்களுக்குள்ள பாத்தியதைகளை எடுத்துக் கொள்வது.

180. (1) யாதொரு பஞ்சாயத்து - எந்த இடத்திலாகிலும் சொந்த மார்க்கெட்டு வைத்துக்கொள்ளவும் அதில் கட்டணங்கள் விதித்து வசூல் செய்யவும் யாதொரு நபருக்குள்ள பாத்தியதைகளை எடுத்துக் கொள்ளலாம். 1894-ம் ஞுத்து நில பரிக்கிரம சட்டத்தின்படி மேலே கண்ட பாத்தியதைகள் எடுத்துக்கொள்ளப்படுவது மல்லாமல் அந்த பாத்தியதைகள் மேடி சட்டத்தின் காரியங்களுக்காக நிலமாயிருப்பதாகவும் எண்ணப்படும்.

(2) அந்த சொத்தின் விஷயமாய் மேடி சட்டத்தின்படி நிர்மாணிக்கப்படும் பிரதிபலத் தொகையையும் அதை எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் பிடித்த வேறே யாதொரு செலவுத்தொகையையும் பஞ்சாயத்தானது செலுத்துவதன்மேல், சொந்த மார்க்கெட்டு வைத்துக்கொள்ளவும் அதில் கட்டணங்கள் விதித்து வசூல் செய்யவும் மேடி நபருக்குள்ள பாத்தியதைகள் பஞ்சாயத்தாரிடத்தில் சங்கிமிக்கும்.

குறிப்புகள்.

இந்தப்பிரிவானது ப்ரைவேட் மார்க்கெட்டுகளில் உள்ள பாத்தியதைகளை பஞ்சாயத்துகளானது லாண்டு அக்விஷிஷன் ஆக்ட்டி (Land Acquisition Act) ன்கீழ் பரிக்கிரமிக்கலாம் என்று கூறுகிறது. 1894-ம் ஞுத்திய லாண்ட் அக்விஷிஷன் ஆக்டின்பிரகாரம் ஜில்லா கலெக்டர் மூலமாய் பொது காரியங்களுக்காக யாதொரு பொதுக்கூட்டம் அல்லது ஒரு ப்ரைவேட் நபர் அவைகளின் சொந்தக்காரரிடமிருந்து நிலங்களை கட்டாயமாக எடுத்துக்கொள்ளலாம் என்றும் அதற்காக வேண்டிய பிரதிபலத் தொகையை கொடுத்துவிடவேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. ஒரு மார்க்கெட்டில் கட்டணங்களை வாங்கும் உரிமையானது ஒரு நிலமென்றே கருதப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் அவ்வுரிமைகளுக்காகவும் கலெக்டரானவர் பிரதிபலத்தொகையை இன்னதென்று நிர்ணயித்து சம்பந்தப்பட்ட நபர்களுக்குகொடுக்கவேண்டும். லாண்ட் அக்விஷிஷன் ஆக்டின் சாராம்சமானது இச்சட்டத்தின் 66-வது பிரிவின்கீழுள்ள குறிப்புகளில் மிகவும் விவரமாக காணப்பட்டுள்ளது. 220-ம் பக்கம் முதல் 225-ம் பக்கம் வரையிலும் பார்க்க.

181. 171-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உபப்பிரிவின்படி பஞ்சாயத்தானது செய்தஉத்தரவினால் துன்பமடைந்த யாதொரு நபர் அந்த உத்தரவின்மேல் டிஸ்டிரிக்ட்டு போர்டாருக்கு அப்பீல் செய்துக்கொள்ளலாம்; அந்த அப்பீல் பைசலாகிற வரையிலே, டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றினால், எந்த உத்தரவின்மேல் அப்பீல் செய்யப்படுகிறதோ அந்த உத்தரவை நிறைவேற்றுமல் நிறுத்தி வைக்கலாம்.

171-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவுகளின் மேல் அப்பீல்.

குறிப்புகள்.

171-வது பிரிவின்கீழ் ப்ரைவேட் மார்க்கெட்டுகளின் விஷயமாக பஞ்சாயத்தானது செய்யும் தீர்மானத்திற்கு விரோதமாக டிஸ்டிரிக்ட்டுபோர்டுக்கு அப்பீல் உண்டு என்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பிரிவில் எந்த காலத்திற்குள் அப்பீல் செய்துக்கொள்ள வேண்டும் என்று யாதொரு கால அளவும் குறிப்பிடப்படவில்லை, 213-வது பிரிவில் லைசென்ஸ் விஷயமாக செய்யப்பட்ட உத்தரவுகளின் பேரில் அப்பீல் செய்வதற்கு ஒரு மாத தவணையுண்டு என்றுள்ளது. 171, 213 இப்பிரிவுகளின் கீழுள்ள குறிப்புகளைப்பார்க்க.

182. யாதொரு மார்க்கெட்டை தம்முடைய ஆதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபர், குஷ்டரோகமாவது அல்லது யாதொரு தொத்து அல்லது ஒட்டுவியாதியாவது கண்டிருக்கிற எந்த நபரையும் அந்த மார்க்கெட்டுக்குள் வராதபடி தடுக்க வேண்டும், அல்லது, அங்கிருந்து துரத்தவேண்டும்; மேலும், அவர் மார்க்கெட்டில் சச்சரவு உண்டாக்கிக் கொண்டிருக்கிற யாதொரு நபரை அதிலிருந்து துரத்திவிடலாம்.

குஷ்ட ரோகிகள் முதலியவர்களை மார்க்கெட்டுக ளிலிருந்து துரத்திவிட கடமைப் பட்டிருப்பதும், சச்சரவு உண்டாக்குகிறவர்களை துரத்திவிட அதிகாரமும்.

குறிப்புகள்.

மார்க்கெட்டுகளை தங்களுடைய வசத்தில் வைத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு நபரும் குஷ்டரோகம்முதலிய தொத்தும்படியான அல்லதுபரவும் படியான வியாதிகளையுடைய நபர்களை வரவொட்டாமல் தடுக்கலாமென்றும், மார்க்கெட்டுகளில் பொது அமைதியைக் கெடுக்கும் நபர்களை அப்புறப் படுத்தலாமென்றும் இப்பிரிவானது கூறுகிறது. அப்படி அப்புறப்படுத்துவதற்கு பஞ்சாயத்தினுடைய முன் உத்திரவு வேண்டியதில்லை. இப்பிரிவில் "துரத்திவிடலாம்" என்று உபயோகிக்கப்பட்டிருப்பதால் பலாத்காரமாக

வும் அப்புறப்படுத்தலாமென்றும் ஏற்படும். தம்மால் முடியாமற்போனால் போலீஸாருடைய உதவியை நாடலாம்.

183. யாதொரு பஞ்சாயத்தினுடைய அனுமதியின்பேரில் அந்த பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டானவர் யாதொரு பொதுவான பாதையிலாவது, அந்தப் பாதையில் யாதொரு இடத்திலாவது, பாகத்திலாவது அதன்மேலாவது எந்த பிராணி அல்லது வஸ்துக்களையேனும் விற்பனை செய்யக் கூடாதென்றாகிலும், விற்பனைக்காக காட்டி வைத்திருக்கக் கூடாதென்றாகிலும் பஹிரங்கமான நோட்டீஸ் மூலமாய்த் தடுக்கலாம்; அல்லது, அந்தப்படி விற்பனைசெய்வதற்கோ, விற்பனைக்காக காட்டிவைத்திருப்பதற்கோ லிஸென்ஸ் கொடுக்கலாம்; அல்லது, அதைக்குறித்து ஒழுங்கு செய்படுத்தலாம்.

பொதுவான பாதைகளில் வஸ்துக்களை விற்கக் கூடாதென்று தடுப்பது.

குறிப்புகள்.

யாதொரு பொது ரஸ்தாவில் அல்லது இடத்தில் சந்தைகூடியாவது அல்லது வேறே விதமாகவாவது ஜந்துக்களையும், இதர சாமான்களையும் விற்பனைக்கு காட்டி வைப்பதின் விஷயமாக பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் பஞ்சாயத்தினுடைய முன் உத்திரவைக் கேட்டுக்கொண்டு தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாமென்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

லைசென்ஸில்லாமலும் அல்லது ஒரு பஞ்சாயத்து அல்லது அதன் ப்ரெஸிடென்டானவர் செய்யும் ரெகுலேஷன்களுக்கு மீறியும் விற்பனை செய்பவர்களுக்கு 10-ரூபா வரையிலும் அபராதம் உண்டு.

183-A. 168-வது பிரிவு முதல் 183-வது பிரிவு வரையிலுமுள்ள பிரிவுகளின் கீழ் ஒரு பஞ்சாயத்தும் அதன் ப்ரெஸிடென்டும் செலுத்தக்கூடிய அதிகாரங்கள், V-வது ஷெட்யூல் 3-வது விதியின் கீழ் தாலூக்கா மார்க்கெட்டுகளென்று வகுக்கப்படும் மார்க்கெட்டுகளின் விஷயமாக முறையே தாலூக்கா போர்டாலும் அதன் ப்ரெஸிடென்டாலும் செலுத்தப்பட வேண்டும்.

தாலூக்கா மார்க்கெட்டுகள் விஷயமாக அதிகாரத்தைச் செலுத்துவது.

குறிப்புகள்.

தாலூக்கா மார்க்கெட்டுகளென்று வகுக்கப்பட்டிருக்கும் மார்க்கெட்டுகளின் விஷயமாக தாலூக்க போர்டுகள் அதிகாரம் செலுத்துவதைப் பற்றி

இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது. V-வது ஷெடியூல் (3)-வது விதியில் தாலூக்கா போர்டுகள் டில்டிரிக்ட்டு போர்டினுடைய முன் உத்திரவைப் பெற்று சிலமார்க்கெட்டுகளை தாலூக்கா மார்க்கெட்டுகளென்று ஏற்படுத் தலாமென்று சொல்லப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளில் 168-முதல் 183-வது பிரிவு வரையிலும் பஞ்சாயத்துகளுக்கு எவ்விதமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவ்வித அதிகாரங்களை தாலூக்கா போர்டார் செலுத்துவதற்கு உரிமை யுள்ளவராவர் என்று சொல்லப்பட் டுள்ளது.

இவைகளைப்பற்றி விவரமாக V-வது ஷெடியூலில் உள்ள குறிப்புகளில் காண்க.

183-B. யாதொரு இடமானது மார்க்கெட்டா அல்லவா என்பதைப் பற்றின தகராறுகளை தீர்மானிப்பது.

உணவுக்கு அல்லது உடைக்கு வேண்டிய சாமான்களை அல்லது உயிருள்ள பிராணிகளை, அல்லது பக்ஷிகளை அல்லது பருத்தி, நிலக்கடலை அல்லது வேறே கைத்தொழிலுக்கு வேண்டிய பயிர் மாரூல்களை அல்லது வேறே செப்பனிடப் படாத அல்லது கைத்தொழிலினால் பூர்த்தி செய்யப்பட்ட சாமான்களை - விற்பனை செய்வதற்காகவோ அல்லது வாங்குவதற்காகவோ மனிதர்கள் ஒன்று கூடும் யாதொரு இடமானது ஒரு மார்க்கெட்டா அல்லவா என்பதைப்பற்றி யாதொரு ப்ரச்னை கிளம்பும் பக்ஷத்தில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது தாலூக்கா போர்டானது லோகல் கவர்ன்மென்டுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்தப் பிரச்னை விஷயமாக லோகல் கவர்ன்மென்டானது செய்யும் தீர்மானமானது முடிவானதாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் ஜந்து முதலியவைகளை விற்பனைக் காக காட்டிவைக்கும் இடமானது ஒரு மார்க்கெட்டா அல்லவா என்று சந்தேகம் கிளம்பும்பக்ஷத்தில் அதற்காக லோகல் கவர்ன்மென்டார் செய்யும் தீர்மானமானது முடிவானதாகும் என்று சொல்லப்பட்டிருப்பதினாலேயே லோகல் கவர்ன்மென்டானது நியாய விரோதமாக யாதொரு தீர்மானத்தை செய்யும்பக்ஷத்தில் அது செல்லத்தக்கதல்லவென்று சிவில் கோர்ட்டில் தாவா செய்வதற்கு எப்பொழுதும் ஒரு உரிமையுண்டு. அவ்வுரிமையானது ஸ்பஷ்டமாக இச்சட்டத்தினால் எடுத்துவிடப்படாமல் இருக்கும்வரையிலும் அதை செலுத்துவதற்கு யாதொரு தடையும் இருக்கக்கூடாது.

பாரவண்டி நிற்கும் இடங்கள்.

184. (1) பஞ்சாயத்தானது-பொதுவான இறங்கும் இடங்களையும், தங்குமிடங்களையும், பாரவண்டி நிற்கும் இடங்களையும் கட்டி அல்லது ஏற்படுத்தி பராமரிக்கலாம்; மேலும், அவர்கள் - அவைகளை உபயோகிப்பதற்காக கட்டணங்களையும் விதித்துவாங்கலாம்.

பொதுவான பாரவண்டி நிற்கும் இடங்களை ஏற்படுத்துவது.

(2) அப்படிப்பட்ட இடத்தை உபயோகிப்பதற்காக பஞ்சாயத்தாரால் நிர்ணயிக்கப்படும் எவையேனும் கட்டணங்களைக் குறித்த ஒரு ஸ்டேட்மென்டை அந்தந்த இடத்தின் முக்கிய சுதேச பாஷையிலும் வே. கட்டணங்கள் விதித்து வசூலிக்கக் கூடியதாயிருக்கும் ஒவ்வொரு இடத்திலும், அனைவருக்கும் தெரியும்படியான பாகத்தில் காட்டிவைக்கவேண்டும்.

விவரணம்.:—ஒரு பாரவண்டி நிற்கும் இடம் என்பது இந்த சட்டத்தின் காரியங்களுக்காக சாதாரண வண்டிகளும் பிராணிகளும் நிற்கும் இடத்தையும் குறிக்கும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது வண்டிநிற்குமிடங்கள், இறங்குமிடங்கள், வண்டிதங்குமிடங்கள் இவைகளை பஞ்சாயத்தானது ஏற்படுத்தி அவைகளை உபயோகிப்பதற்காக கட்டணங்களை விதித்து வாங்கலாம் என்று கூறுகிறது. இப்பிரிவில் உள்ள விவரணமானது 1930-ம் வுத்திய சென்னை லோகல்போர்டு திருத்த சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டது. இந்த விவரணமானது ஏற்படுத்தப்படுமுன், சென்னை ஹைகோர்ட்டில் ஒரு கேஸில், "பாரவண்டி" என்பது என்னவென்றும், ஒரு மோட்டார் பஸ்ஸானது ஒரு பாரவண்டியா அல்லவா என்றும் கேள்வி வந்ததில், ஹைக்கோர்ட்டாரவர்கள் லோகல்போர்ட்டஸ் ஆக்டின் 184-வது பிரிவின் பிரகாரம் ஒரு மோட்டார்பஸ் என்பது ஒரு பாரவண்டி (Cart) என்று கருதப்படாது என்றும், ஒரு மோட்டார் பஸ்ஸை ஓரிடத்தில் சில நிமிஷங்கள் வரையிலும் நிறுத்திவைத்திருப்பதினாலேயே அவ்விடமானது 184-வது பிரிவின்கீழ் ஒரு தங்குமிடமென்று சொல்லப்படாதென்றும் அப்படி சில நிமிஷம் தங்குவதினாலேயே அதற்கு லைசென்ஸ் விதிப்பதற்கில்லையென்றும் தீர்மானித்திருக்கின்றனர். (a)

பாரவண்டி முதலியவைகளுக்கும், மோட்டார்பஸ் முதலியவைகளுக்கும் பஞ்சாயத்தானது தனித்தனியாக நிற்பதற்கென்றே அல்லது தங்குவதற்கென்றே இடங்களை ஏற்பாடு செய்து அவைகளை பதிவிரங்கப்படுத்தவேண்டும்.

(a) 1 அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிக்கை பக்கம் 197.

இந்தப் பிரிவில், பொதுவான, அதாவது ஒரு பஞ்சாயத்தினால் ஏற்படுத்தக் கூடிய பார வண்டிகளைப்பற்றி கூறுவதாகும். 187-வது பிரிவில் ப்ரைவேட்டாக பாரவண்டிகளைப் பற்றியும் அவைகளுக்கு லைசென்ஸ் பெறவேண்டியதைப்பற்றியும் கூறப்பட்டுள்ளது.

வண்டி நிற்கும் இடம் இன்னதென்று மிகவும் நிதானமாக கவனிக்கப்படவேண்டும். வண்டிகள் ஓரிடத்தில் சில நிமிஷங்கள் தங்கிப் போவதினாலேயே அது வண்டி நிற்கும் இடமென்று கவனிக்கப்படக்கூடாது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உள்ள சங்கதியம்சங்கள் நிதானமாக கவனிக்கப்பட வேண்டும். அதாவது, அடிக்கடி வண்டிகள் வந்து நிற்கின்றனவா? அல்லது சிலகாலம் வரையிலும் மாத்திரம் வந்து தங்குகின்றனவா? வண்டிகள் எவரெவர்களுக்கு சொந்தமானவை, அவைகளுக்காக ஏதாவது கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதா? ஒவ்வொரு தரமும் எவ்வளவு நேரம் வரையிலும் வண்டிகள் வந்து நிற்கின்றன? அந்த வண்டிகளில் ஏற்றிக் கொண்டு போகப்படும் சாமான்கள் விற்பனைக்காக உள்ளனவா? அல்லது அந்தவண்டிகள் கூலிக்காக ஓட்டப்படுகின்றனவா? ஆகிய இவ்விஷயங்கள் யாவும் கவனிக்கப்பட வேண்டும். (a) வண்டிகள் அடிக்கடி ஏராளமாக வந்து தங்குவதாகயிருந்து அவை கூலிக்காகவாவது அல்லது வியாபாரத்திற்காகவாவது உபயோகப்படுத்தப்பட்டாலொழிய அவைகளிலிருந்து யாதொரு கட்டணமும் வசூல் செய்யக் கூடாது.

185. யாதொரு பொதுவான இறங்கும் இடத்தையாவது தங்கும் இடத்தையாவது பாரவண்டி நிற்கும் இடத்தையாவது பஞ்சாயத்தானது ஏற்படுத்தியிருந்தால், ப்ரெஸிடென்டானவர்-பஞ்சாயத்தினுடைய அனுமதியின் பேரில், அதிலிருந்து நிர்ணயிக்கப்படக் கூடிய தூரத்துக்குள்ளாகவுள்ள யாதொரு பொதுவான இடத்தையாகிலும் யாதொரு பொதுவான பாதையின் பக்கங்களையாகிலும் எவரும் அதே காரியத்துக்காக உபயோகிக்கக்கூடாதென்று தடுக்கலாம்.

பொதுவான இடத்தையாவது பொதுவான பாட்டையின் பக்கங்களையாவது பாரவண்டி நிற்கும் இடம் முதலியவைகளாக உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பது.

குறிப்புகள்.

இப்பிரிவானது 184-வது பிரிவை யொட்டினதாகும். யாதொரு இடத்தை பொதுவான வண்டி நிற்குமிடமென்றாவது அல்லது வண்டி தங்குமிடமென்றாவது ஒரு பஞ்சாயத்தானது ஏற்பாடு செய்து விட்டபிறகு அதற்கருகாமையிலுள்ள யாதொரு பொது இடத்தை வண்டி நிற்

(a) மஹாராணி vs. அய்யாகண்ணு முதலி 21 Mad. 293.

பதற்காக அல்லது தங்குவதற்காக உபயோகப்படுத்துவது நியாயமல்ல. அப்படி உபயோகப்படுத்துவதானது பொதுவான வண்டி நிற்கு மிடங்களுக்காக விதிக்கப்படும் கட்டணங்களே தவிர்ப்பதுபோலாகும். ஆகையால், அப்படிப்பட்ட பொதுவான தங்குமிடங்களிலல்லாமல் இப்பிரிவினால் தடுக்கப்பட்ட தூரத்திற்குள் யாதொரு பொதுவான இடத்தையாவது பாட்டையின் பக்கத்தையாவது இறங்கும் இடமாகவாகிலும் நிற்கும் இடமாகவாகிலும் மற்றப்படியாகிலும் உபயோகிப்பதற்கு 50-ரூபா வரையிலும் அபராதம் உண்டு.

186. 184-வது பிரிவின் 1-வது உபப்பிரிவின் கீழ் விதிக்கத்தகுந்த கட்டணத் தொகையானது கேட்ட பொழுது கொடுக்கப்படாவிட்டால் அந்த கட்டணத் தொகையானது 107-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் கொடுக்கப்படாத ஒரு சுங்கவரியாக பாவிக்கப்பட்டு கைப்பற்றத்தக்கதாகும்.

பாரவண்டிகள் நிற்கும் இடத்திற்குள்ள கட்டணத்தை கைப்பற்றுவது.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வுத்திய லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில், 184-வது பிரிவின் கீழ் விதிக்கப்படும் கட்டணங்கள் செலுத்தப்படாவிடில் 107-வது பிரிவின் கீழ் சொல்லப்பட்டிருக்கும் விதமாக வசூலிக்கப்பட வேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பொழுது சுங்கங்கள் அதாவது டோல்கேட்டுகள் அடியோடே எடுத்து விடப்பட்டுள்ளன. எனினும் 107-வது பிரிவில் அவைகளே வசூலிக்கப்பட வேண்டிய விதமானது கூறப்பட்டுள்ளதால் 289-வது பக்கத்தில் உள்ள 107-வது பிரிவைப் பார்க்க.

187. (1) யாதொரு நபரும் பஞ்சாயத்தினிடமிருந்து அப்படி செய்வதற்கு ஒரு லிசென்ஸ் பெற்று வொழிய ஒரு புதிய பிரைவேட் வண்டி நிற்கும் இடத்தை நிறக்கவாவது அல்லது ஒரு பிரைவேட் வண்டி நிற்கும் இடத்தை நிறுத்தி வைக்கவாவது கூடாது.

பிரைவேட் பாரவண்டி நிற்கும் இடத்திற்கு லிசென்ஸ் கொடுப்பது.

(2) அப்படிப்பட்ட லிசென்ஸுக்காக செய்யப்படும் ஒரு விண்ணப்பமானது, எந்த இடத்தின் விஷயமாக லிசென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த இடத்தின் சொந்தக்காரரால் அப்படிப்பட்ட இடமானது ஒரு வண்டி நிற்கும் இடமாக நிறக்கப்படுவதற்கு ஆறு

புதிய செக்ஷன்.

186. 184-வது பிரிவின் (1)-வது உபப் பிரிவின்கீழ் யாதொரு வண்டி அல்லது பிராணியின் பேரில் விதிக்கக் கருதுங் கட்டணத் தொகையானது கேட்கப்பட்டபோது கொடுக்கப்படாவிட்டால் அதை வசூல் செய்வதற்கு அதிகாரப்படுத்தப் பட்டிருக்கும் அப்படிப்பட்ட வண்டி அல்லது பிராணி அல்லது அதன் சுமையில் யாதொரு பாகமும் இவைகளை கைப்பற்றி தம்முடைய சுவாதீனத்தில் வைத்துக் கொள்ளலாம்.

பாரவண்டிகள் நிற்குமிடத்துக் குள்ள கட்டணத்தை கைப்பற்றுவது.

(2) அப்படிப்பட்ட கட்டணமானது கைப்பற்றப்பட்டதினாலும் சுவாதீனப்படுத்திக் கொள்ளப்பட்டதினாலும் நேரிட்டிருக்கும் செலவு தொகைகளுடன் 12-மணி நேரங்களுக்குள் செலுத்தப்படாமலிருக்கும் பக்ஷத்தில் மேலே சொல்லப்பட்டபடி கிரமமாக அதிகாரப் படுத்தப்பட்டிருக்கும் நபர் கைப்பற்றப்பட்ட வண்டி பிராணி அல்லது வேறே ஒரு சொத்தை மேலே சொல்லப்பட்ட பிரகாரம் கைப்பற்றின நபர் சென்னை 1836-ம் வருஷத்திய சென்ட் அண்டு ரெவினியூ சேல்ஸ் ஆக்ட் என்னும் சட்டத்தின் கீழ் ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்வதற்கு அதிகாரமுள்ள மிகவும் அருகாமையிலுள்ள ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும்.

(3) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் உடனே கைப்பற்றப் பட்ட சொத்தின் சொந்தக்காரருக்கு அல்லது அதன் சொந்தக்காரர் இன்னாரென்று தெரியாவிட்டால் அல்லது அவர் அருகாமையில் வாசஞ் செய்பவராக இராவிட்டால் அது கைப்பற்றப்பட்ட காலத்தில் எவருடைய வசமிருந்ததோ அந்த நபருக்காவது அல்லது அவரும் அகப்படாவிட்டால் கருதுக்கு முலமாகவாவது என்றையதினம் நோட்டீஸ் சேர்க்கப்படுகிறதோ அன்று முதல் ஒரு ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக இரண்டு நாட்களுக்கு மேற்பட்டு அவர் அந்த சொத்தை அந்த

நோட்டீசில் காணப்பட்டிருக்கும் ஒரு தேதியில் ஏலம் போடப்போவ தாக உடனே ஒரு நோட்டீஸ் தெரிவிக்கவேண்டும்.

(4) அந்த விக்கிரயத்திற்கு முன்பு எப்போதாவது எவரிடம் நோட்டிஸ் கொடுக்கப்பட்டதோ அந்த நபராவது அல்லது கைப் பற்றப்பட்ட சொத்தின் சொந்தக்காராவது அந்த உத்தியோகஸ்தருக் கு கட்டணத் தொகையையும் அதை செலுத்தாதலால் நேரிட்டிருக் கும் எல்லாதொகையையும் கைப்பற்றப்பட்டதற்கும்வாதீனப்படுத்தி வைக்கப்பட்டதற்கும் நேர்ந்த செலவு தொகைகளையும் செலுத்தும் பக்ஷத்தில் கைப்பற்றப்பட்ட சொத்தானது உடனே ஜப்தியிலிருந்து நீக்கப்படவேண்டும்.

(5) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருக்கு யாதொரு தொகை யும் செலுத்தப்படாவிட்டால் அவர் அந்த சொத்தையாவது அல் லது அதில் வேண்டியதேதார் பாகத்தையாவது ஏலம் போட்டு ஏலத் தொகையை கட்டணத் தொகைகளுக்காகவும் கைப்பற்றப்பட்டதற் கும், நிறுத்தி வைக்கப்பட்டதற்கும் விற்பனை செய்யப்பட்டதற்கும் நேரிட்ட செலவுகளுக்காக முஜாரா வைத்துக்கொண்டு அந்த ஏலம் நடந்த பிறகு ஏதாவது சொத்து அல்லது தொகை மிகுதியாக இருக் கும் பக்ஷத்தில் அதை அந்த சொத்தானது எவரிடமிருந்து கைப் பற்றப்பட்டதோ அவரிடம் கொடுத்து விடவேண்டும்.

குறிப்புகள்.

இந்தப்பிரிவானது 1931-ம் ஜூத்திய 3-வது ஆக்டாகிய சென்னை மோட்டார்வண்டிகளுக்கு வரியிடுவதற்கான சட்டத்தினால்சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டில் புதியதாக நுழைக்கப்பட்டுள்ளது. அந்த சட்டத்தினால் பழய லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 104-முதல்-109-வது வரையிலுள்ள பிரிவுகள் எடுத்து விடப்பட்டன. அந்த பிரிவுகள் சுங்க வரியானது எம் மாதிரியாக வசூலிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. அந்த பிரிவுகள் எடுத்துவிடப்பட்டதால் இப்பொழுது பார வண்டிகள் நிற்கும் இடத்திலுள்ள சட்டணங்களை எம்மாதிரி வசூலிக்கப்பட வேண்டுமென்று இந்த பிரிவிலேயே விளக்கப்பட்டுள்ளது.

வாரங்களுக்கு குறையாமல் அதற்கு முந்தின ஒரு தேதியிலும், அல்லது எந்த வருஷத்திற்காக லிசென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த வருஷம் ஆரம்பிப்பதற்கு ஆறு வாரங்களுக்கு குறையாமல் அதற்கு முந்தினஒரு தேதியிலும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாப்போல் செய்யப்பட வேண்டும்.

(3) பஞ்சாயத்தானது ஏற்கெனவே சட்டப் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிரைவேட் வண்டி நிற்கும் இடங்களைச் சேர்ந்தவரையிலும், மேல் பார்வைக்கும் தணிக்கைக்கும் இன்னும் பஞ்சாயத்து தமக்கு யுக்தமென்று நினைத்து குப்பை வாரும் விஷயமாக செய்யும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, கேட்கப்பட்ட லிசென்ஸை கொடுக்கவேண்டும். புதிய பிரைவேட் வண்டி நிற்கும் இடங்களின் விஷயமாக மேற்கண்ட செகுலேஷன் முதலிய நிபந்தனைகளுக்கு இணங்கி தங்களுடைய யுக்தானுசாரம் கேட்கப்பட்ட லிசென்ஸைக் கொடுக்கலாம்; அல்லது பஞ்சாயத்து யாதொரு புதிய பிரைவேட் வண்டிகள் நிற்குமிடத்திற்கு லிசென்ஸ் கொடுக்க மறுத்து விடலாம். ஆனால், பஞ்சாயத்தானது இந்தப்பிரிவின் கீழ் கொடுக்கப் படும் யாதொரு லிசென்ஸின் நிபந்தனைகளை மீறி எவராவது நடக்கும் பக்ஷத்தில் அவருடைய லிசென்ஸை சிலகாலம் நிறுத்தி வைக்கலாம், அல்லது மொத்தமாக அறுத்து செய்து விடலாம். பஞ்சாயத்தானது ஒரு லிசென்ஸிலுள்ள நிபந்தனைகளை ஒரு குறிப்பிட்ட தேதி முதல் அமுலுக்கு வரும்படி மாற்றி வைக்கலாம்.

(4) இந்தப் பிரிவின் கீழ் ஒரு லிசென்ஸ் கொடுக்கப்பட்டதானால் அல்லது நிறுத்திவைக்கப்பட்டதானால் அல்லது ரத்து செய்யப்பட்டதானால் அல்லது மாற்றப்பட்டதானால் பஞ்சாயத்தானது அப்படிப்பட்ட ஈகை, மறுப்பு, நிறுத்திவைக்கப்படுதல், அல்லது மாற்றுதல், இவைகளைப்பற்றி அந்த ஸ்தலத்தினுடைய முக்கியமான சுதேச பாஷையில் ஒரு பகிரங்கமான இடத்திலாவது அல்லது எந்த இடத்தின் விஷயமாக லிசென்ஸ் கேட்கப்பட்டதோ அல்லது பெறப் பட்டதோ அந்த இடத்தின் வாயிலிலாவது அல்லது அதற்கருகிலாவது ஒரு நோட்டீஸ் ஒட்டப்படும்படி செய்யவேண்டும்.

(5) பஞ்சாயத்தானது இந்தப் பிரிவின் கீழ் கொடுக்கப் பட்ட ஒவ்வொரு லிசென்ஸின் பேரிலும் வருஷம் 1-க்கு ரூபா. 200-க்கு அதிகப்படாமலும் ஒரு கட்டணத்தை விதித்து வாங்கலாம்.

(6) இந்தப்பிரிவின் கீழ் கொடுக்கப்படும் ஒவ்வொரு லைசென்ஸும் எந்த வருஷத்திற்காக கொடுக்கப்படுகிறதோ அந்த வருஷத்தில் முடிவதாகும்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது, 1930-ம் ஜூத்திய சென்னை லோகல் போர்டு திருத்த சட்டத்தினுல் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பழைய லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 186-வது பிரிவின்கீழ் யாதொரு நபரும் புதியதாக ஒரு பிரைவேட்டான வண்டி நிற்கும் இடத்தை திறந்து வைக்கக் கூடாதென்றும் 187-வது பிரிவின் கீழ் பழைய வண்டி நிற்கும் இடங்களுக்காக தாலூக்கா போர்டினிடமிருந்து லைசென்ஸ் பெற்றுலன்றி அவைகளை திறந்து வைக்கக் கூடாதென்றும் இருந்தது. இப்பொழுது இப்பிரிவின் பிரகாரம் பஞ்சாயத்தினிடமிருந்து லைசென்ஸ் பெற்று புதியதாக ஒரு பிரைவேட் வண்டி நிற்கும் இடத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம், அல்லது திறந்து வைக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

இப்பிரிவானது, பிரைவேட் மார்க்கெட்டுகளின் விஷயமாக 171-வது பிரிவின் கீழ் எவ்வாருன நிபந்தனைகள் உள்ளனவோ அதே மாதிரியான நிபந்தனைகளை உடையதாக ஏற்படும். ஆகையால், இந்த சட்டமானது அமுலுக்கு வந்த காலம்முதல் புதியதாக ஏற்படுத்தப்படும். வண்டி நிற்கும் இடங்களுக்காக லைசென்ஸ் கொடுப்பது பஞ்சாயத்தினுடைய யுக்தானுசாரமாகும். பழைய வண்டி நிற்கும் இடங்களுக்காக அவை பஞ்சாயத்தினுல் ஏற்படுத்தப்படும்நிபந்தனைகளை அனுசரிக்கும் பக்ஷத்தில்கட்டாயம் லைசென்ஸ் கொடுத்தே தீரவேண்டும். லைசென்ஸினுடைய நிபந்தனைகளை மாற்றுவதற்கு எப்பொழுதும் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

"வருஷம்" என்பது, அரசிறை வருஷத்தைக் குறிக்கும். அரசிறை வருஷம் என்பது ஒவ்வொரு இங்கிலீஷ் வருஷத்திலும் ஏப்ரல்மீ 1உ முதல் அடுத்த வருஷம் மார்ச்சுமீ 31உ வரையிலும் உள்ள மாதங்களைக் குறிக்கும்.

ரெயில்வே நிர்வாகங்கள் பராமரித்து வரும் வண்டி நிற்கும் இடங்களுக்காக ரெயில்வே சொந்தக்காரர்கள் யாதொரு லைசென்ஸும் வாங்கவேண்டியதில்லை யென்றும் அவைகளுக்காக லோகல் போர்டுகள் யாதொரு கட்டணமும் வீதிப்பதற்கில்லை யென்றும் 1925-ம் ஜூத்திய G. O. No. 602 L & Mல் 19-2-1925-ல் கவர்ன்மென்டார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

188. [இந்தப் பிரிவு எடுத்து விடப்பட்டது.]

ஆடு மாடு முதலியவைகளை அடிக்கும் தொட்டிகள்.

ஆடு மாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளை ஏற்படுத்துவது.

189. (1) ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஆடு - மாடு முதலியவைகளை அடிக்கும் பொதுவான தொட்டிகளாக உபயோகமாகும்படி போதுமான வரையில் இடங்களை ஏற்படுத்தி வைக்கவேண்டும்.

(2) பஞ்சாயத்து ஆடு - மாடு முதலியவை அடிக்கும் பொதுவான தொட்டிகளை உபயோகிப்பதற்காக வாடகைகளையும் கட்டணங்களையும் விதித்து வாங்கலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன் கிராமத்தில் ஆடு, மாடுகளை வெட்டுவதற்காக கட்டாயமாய் தொட்டிகளை ஏற்படுத்த வேண்டும் என்று கூறுகிறது. அப்படி ஏற்படுத்தாமல் இருக்கும் வரையிலும் ஆடு, மாடுகளை சொந்த இடங்களில் வெட்டுவது ஒரு குற்றமாகாது.

பஞ்சாயத்தானது, ஒரு தொட்டியை ஏற்படுத்தி விட்டபிறகு அதில் எல்லா நபர்களும் போய் சேர்ந்து ஆடு-மாடுகளை வெட்டலாம்.

ஆடு-மாடுகளை வெட்டும் தொட்டிகளில் கட்டணங்களை வசூலிக்கும் பாத்தியதையை பஞ்சாயத்துகள் ஏலத்தில் அல்லது குத்தகைக்கு விடக்கூடாதென்று ஸ்பஷ்டமாக யாதொரு அம்சமும் இல்லாதிருந்த போதிலும், சென்னை வியு முனிவிபாலிடி சட்டத்தின் கீழும் சென்னை டிஸ்டிரிக்ட் முனிவி பாலிடிகளாக்டின் கீழும் தீர்மானிக்கப்பட்டிருக்கும் கேஸுகளில் அம்மாதிரி பாத்தியதைகளை குத்தகைக்கு விடுவதற்கில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (a).

பொதுவான ஆடு-மாடுகளை வெட்டும் தொட்டிகளை சாஸ்விதமாகவோ அல்லது தாத்காலிகமாகவோ உபயோகப்படுத்துவதற்கு பஞ்சாயத்தானது கொடக்கூலி அல்லது கட்டணங்களை விதிக்கலாம்.

ஆடுமாடு முதலியவைகளை அடிக்கும் பொதுவான தொட்டிகளல்லாத வேறே இடங்களில் கால் நடைகளைக்கொல்வது முதலியது கூடாதென்று லோகல் போர்டார் தடுக்கலாமென்பது.

190. பஞ்சாயத்தானது தாலூக்கா போர்டினுடைய அனுமதியின் பேரில்,

(a) சென்னை கார்ப்பொரேஷன் vs. மஸ்தான் சாயபு 21. M.L.J 788.

(a) யாதொரு கிராமத்தில் அல்லது அதில் குறிக்கப்பட்ட யாதொரு விஸ்தரணத்தில் பஞ்சாயத்தினால் ஏற்படுத்தி வைக்கப்பட்ட ஆடு,மாடு,பன்றி முதலியவைகளை அடிக்கும் பொதுவானதொட்டியல்லாத வேறே எந்த இடத்திலாவது, யாதொரு நபர் ப்ரெஸிடென்டின் அனுமதியை எழுத்து மூலமாகப் பெற்றன்றி அல்லது எழுத்து மூலமாகப் பெற்ற அனுமதிக்கு விரோதமாக மற்றப்படி, யாதொரு மாட்டையாகிலும், குதிரையையாகிலும், செம்மறியாட்டையாகிலும், வெள்ளாட்டையாகிலும், அல்லது பன்றியையாகிலும் கொல்லக் கூடாதென்றாயினும், கொல்லுவதற்கு அனுமதி கொடுக்கக் கூடாதென்றாயினும், தூண்டுபோடக் கூடாதென்றாயினும், தோலை உரிக்கக்கூடாதென்றாயினும், தூண்டுபோடுவதற்கோ, தோலை உரிப்பதற்கோ அனுமதி கொடுக்கக் கூடாதென்றாயினும், பிரசித்தம் செய்யலாம்;

ஆனால் மத சம்பந்தமான சடங்குகளை வழக்கமாய்ச் செய்கிற இடங்களில் அப்படிப்பட்ட சடங்குகளைச் செய்யும்போதாவது, அல்லது விற்பனைக்கல்லாமல் சொந்த உபயோகத்திற்காகவாவது பிராணிகளைக்கொல்வதற்கு இந்தப் பிரிவிலுள்ள யாதொன்றும் தடை செய்வதாக அர்த்தப்படக்கூடாது.

இன்னும் அப்படிப்பட்ட பிரகரமானது அது விளம்பரம் செய்யப்பட்ட அறுபது (60) தினங்கள் வரையிலும் யாதொரு அமுலும் பெறக்கூடாது;

(b) ப்ரெஸிடென்டினிடமிருந்து லைசென்ஸ் பெற்றாலன்றி அல்லது பெற்ற லைசென்ஸில் உள்ளபடி அல்லாமல் மற்றப்படி பொது ஜனங்களுக்கு விற்பனை செய்யும் காரியங்களுக்காக யாதொரு மாட்டையாகிலும், குதிரையையாகிலும், செம்மறியாட்டையாகிலும், வெள்ளாட்டையாகிலும், பன்றியையாகிலும் யாதொரு நபர் கொல்லவுங்கூடாது; அல்லது கொல்வதற்கு அனுமதி கொடுக்கப்படவும் கூடாது.

குறிப்புகள்.

189-வது பிரிவின் கீழ் பொதுவான ஆடு மாடுகளை வெட்டும் தொட்டிகளை ஏற்பாடு செய்துவிட்ட பிறகுதான் பஞ்சாயத்தானது இப்பிரிவின்கீழ் தாலூக்கா போர்ட்டினுடைய அனுமதியை நாடலாம். அப்படி யாதொரு தொட்டியை ஏற்படுத்தாமலும் ஜனங்களுக்கு வேறு விதமாக ஆடு-மாடுகளை வெட்டுவதற்கு வசதி கொடுக்காமலும் அவர்கள் ஆடு-மாடுகளை வெட்டக் கூடாதென்று சொல்லுவதற்கில்லை.

189-வது பிரிவின்கீழ், ஒரு பொதுவான தொட்டியை ஏற்பாடு செய்து விட்ட பிறகு அந்த தொட்டி அல்லது அப்படிப்பட்ட தொட்டிகளில்லாமல் அவைகளுக்கு வெளியே மாடு, குதிரை, செம்மறியாடு, பன்றி முதலியவைகளை பஞ்சாயத்து ப்ரெஸிடென்டினுடைய உத்திரவில்லாமல் வெட்டக் கூடாதென்று அறிக்கையிடலாம். ஆனால் அவ்வறிக்கையானது உத்ஸவகாலங்களில் பலி முதலியவைகளுக்காக ஆடு மாடுகள் வெட்டுவதைப் பற்றியாவது அல்லது விற்பனைக்கல்லாமல் சொந்த சிலவிற்காக ஆடு மாடுகளை வெட்டுவதைப்பற்றியாவது யாதொரு உத்தரவும் கேட்கவேண்டிய அவசியமில்லை.

ஒரு ஆடு மாடுகளை வெட்டும் தொட்டிக்கு வெளியே அவைகளை வெட்டக் கூடாதென்று வெளியிடப்படும் அறிக்கையானது 60-நாட்கள் கழிந்த பிறகுதான் அமுலுக்கு வரவேண்டும்.

மாம்சாதிகளை விற்பனை செய்வதற்காக லைசென்ஸ் பெறும் ஒவ்வொரு வரும் அந்த லைசென்ஸில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாக ஆடு-மாடுகளை வெட்டக்கூடாது. அப்படி வெட்டும் பக்ஷத்தில் அவர் அபராதத்திற்கு உட்பட வேண்டும்.

ஒரு பொதுவான ஆடு-மாடுகளை வெட்டும் தொட்டியில்லாமல் பஞ்சாயத்தானது இடப்படும் அறிக்கைக்கு விரோதமாகப்ரெஸிடென்டினுடைய உத்திரவில்லாமல் வெளியே ஆடு-மாடு முதலியவைகளை வெட்டுவதானது ஒரு குற்றமாகும். அதற்கு 200-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

ஒருவர் லைசென்ஸில்லாமல் அல்லது தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் லைசென்ஸிற்கு விரோதமாக ஆடு-மாடு முதலியவைகளை வெட்டும் பக்ஷத்தில் ஒவ்வொரு வெட்டப்பட்ட பிராணிக்காக 20-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

191. பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் உத்ஸவ காலங்களிலும் அல்லது பண்டிகை காலங்களிலும் அல்லது மாவது விசேஷ ஏற்பாடாகவாவது ஷி. கிராமத்திற்குள் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற இடங்களில் யாதொரு பிராணியைக் கொல்வதற்கு அனுமதி கொடுக்கலாம்.

உத்ஸவ காலங்களிலும் பண்டிகைகாலங்களிலும் பிராணிகளை கொல்வது.

குறிப்புகள்.

உத்ஸவ காலங்களில் ஒரு கிராமத்திற்குள் சில குறித்த இடங்களில் லைசென்ஸில்லாமலே ஆடு-மாடு முதலியவைகளை வெட்டுவதற்காக ப்ரெஸிடென்டானவர் உத்திரவு கொடுக்கலாம்.

192. 189-வது, 190-வது பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் - மீடி பிரிவுகளில் கண்ட காரியங்களுக்காக கவர்ன்மெண்டாரால் உபயோகிக்கப்படும் இடங்களுக்குப் பிரயோகப்படமாட்டா.

கவர்ன்மெண்டாரால் உபயோகிக்கப் படும் இடங்கள் நிவாரணையாவது.

குறிப்புகள்.

இப்பிரிவானது, கவர்ன்மெண்டார் பகுமாக, அவர்கள் ஆடு-மாடுகளை வெட்டுவதற்காக வைத்திருக்கும் இடங்களுக்கு லைசென்ஸ் பெறவேண்டிய அவசியமில்லை யென்று கூறுவதாகும். கவர்ன்மெண்டு என்பது சென்னை கவர்ன்மெண்டு அல்லது இந்தியா கவர்ன்மெண்டைக் குறிக்கும். கவர்ன்மெண்டார் முக்கியமாக ராணுவ சேனைகளின் ஆகாரத்திற்காக ஆடு-மாடுகளை கொல்லுவதற்கு தொட்டிகளை கட்டி வைத்திருக்கிறார்கள். அந்த தொட்டிகளுக்கு அவர்கள் லைசென்ஸ் பெறவேண்டிய அவசியமில்லையென்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. காரணம் என்னவென்றால், அவர்கள் அந்த இடங்களை சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பார்கள் என்பது. இன்னும் கவர்ன்மெண்டானது லோகல் போர்டுகளிலிருந்து லைசென்ஸ் பெற வேண்டுமென்றால் அப்படிச் செய்வது அவர்களுக்கு தொந்தரவை யுண்டாக்கக் கூடியதாகும்.

தொழில்களும் தொழிற்சாலைகளும்.

193. (1) பஞ்சாயத்து-கிராமத்தினுடைய எல்லைகளுக்குள் இருக்கும் யாதொரு இடமானது பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டினிடமிருந்து லைஸென்ஸில் லாமலும், அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிட்டங்களின்படிக்கன்றி மற்றப்படியும், அந்த இடத்தில் VII-வதுஷெட்யூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்களிலே யாதொன்றுக்காகவாகிலும், பலவற்றிற்காகவாகிலும் உபயோகிக்கக் கூடாதென்று விளம்பரம் செய்யலாம்.

இன்ன காரியங்களுக்கு லைஸென்ஸ் இல்லாமல் இடங்களை உபயோகிக்கக்கூடாதென்பது.

ஆனால் அப்படிப்பட்ட விளம்பரம் எதுவும் பிரசுரிக்கப்பட்ட தேதி முதல் 60-தினம் வரையில் செலாவணியாகத் தொடங்கக்கூடாது.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு இடத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரும் - மீடி விளம்பரம் செய்யப்பட்ட

நிலிருந்து 30-தினத்திற்குள்ளாக, அப்படிப்பட்ட காரியத்துக்காக அந்த இடத்தை உபயோகிக்கும் பொருட்டு லிஸென்ஸ் வேண்டுமென்று பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டுக்கு விண்ணப்பம் செய்துக் கொள்ளவேண்டும்.

(3) ப்ரெஸிடெண்டானவர் - ஒரு உத்தரவு மூலமாகவும் தமக்குத் தகுந்பாகத் தோற்றுகிற நிர்ப்பந்தங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டும், அப்படிப்பட்ட லிஸென்ஸைக் கொடுக்கலாம் அல்லது கொடுக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

(4) ஷெ லிஸென்ஸ் ஒவ்வொன்றும் - விசேஷ காரணங்களினால் அது ஒரு வருஷம் முடிவதற்கு முன்னமே காலம் கடந்து போகவேண்டுமென்று ப்ரெஸிடெண்டு நினைத்தாலன்றி மற்றப்படி அந்த வருஷ முடிவில் காலம் கடந்து போகும்; மேலே கண்டபடி ப்ரெஸிடெண்டு நினைக்கும் பட்சத்தில் அந்த லிஸென்ஸில் குறிப்பிடப் படக்கூடிய முந்திய தேதியிலேயே அதுகாலம் கடந்துபோகும்.

(5) அப்படிப்பட்ட லிஸென்ஸுகளைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் - ஒவ்வொரு வருஷமும் முடிவதற்கு 30-தினங்களுக்கு குறையாமல் முன்னதாக செய்து கொள்ளப்பட வேண்டும்; மேலும், தாதனமாய் ஏற்படுத்தப் போகும் இடங்களுக்காக லிஸென்சுகளுக்கான விண்ணப்பங்கள் - அவைகளை ஏற்படுத்துவதற்கு 30-தினங்களுக்குக் குறையாமல் முன்னதாக செய்து கொள்ளப்பட வேண்டும்.

குறிப்புகள்.

இந்த பிரிவானது, ஒரு பஞ்சாயத்தின் ஹத்துக்குள் ஏற்படுத்துவதற்காக உத்தேசித்திருக்கும் தொழிற்சாலை முதலியவைகளை, பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டினுடைய உத்தரவில்லாமலும், அவரால் கொடுக்கப்படும் லிஸென்ஸில்லாமலும், உபயோகப்படுத்தக் கூடாதென்று கூறுவதாகும். VII-வது ஷெடியூலில் எந்தெந்த காரியங்களுக்காக இடங்களை உபயோகப்படுத்தக் கூடாதோ அந்த காரியங்கள் இன்னதென்று சொல்லப்பட்டுள்ளது.

1930-ம் வருஷத்திய லோகல் போர்டு திருத்த சட்டமானது, அமுலுக்கு வருவதற்குமுன், தொழிற்சாலைகளைப்பற்றி லிஸென்ஸ் கொடுப்பது யூனியன் போர்டு ஹத்துக்குள்ளிருக்கும் வளவுகளின் விஷயமாக யூனியன் போர்டு ப்ரெஸிடெண்டினிடமிருந்தும், மற்ற இடங்களில், அதாவது

ஒரு யூனியன் போர்டு ஹத்துக்கு வெளியே அமைக்கப்படும் தொழிற்சாலை யின் விஷயமாக தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டினிடமிருந்தும் லைசென்ஸ் பெறவேண்டும் என்றிருந்தது.

இப்பொழுது புதியதாக திருத்தப்பட்டிருக்கும் இப்பிரிவில், தாலூக்கா போர்டு பிரஸிடென்டுகள் லைசென்ஸ் கொடுப்பதைப்பற்றி அடியோடே யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஆனால், பொதுவாக பஞ்சாயத்துகள் தங்கள் கிராமத்தின் வில்தீரணத்திற்குள்ளும், தாலூக்கா போர்டுகள், கிரா மத்தைத்தவிர தங்களுடைய வில்தீரணத்திற்குள்ளும், தங்கள் அதிகாரத்தை செலுத்தலாமாகையால் பஞ்சாயத்துக்கு வெளிபிலுள்ள வில்தீரணங்களில் தாலூக்கா போர்டானது, தங்கள் அதிகாரத்தை செலுத்தலாம். ஆனால், இப்பிரிவிலாவது வேறெந்த பிரிவிலாவது, தாலூக்கா போர்டுகள் தொழிற் சாலைகளைப்பற்றி யாதொரு அறிக்கை முதலியவைகளை செய்யலாமென்று இராததால், தாலூக்கா போர்டுகள், தொழிற்சாலைகளைப்பற்றி யாதொரு அதிகாரத்தையும் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்படாதென்று சட்ட சபையானது நினைத்ததுபோலும்.

ஒரு பஞ்சாயத்தானது, லைசென்ஸ் இல்லாமல் VII-வெஷடியூலில் குறிப் பிட்ட காரியங்களை செய்யக்கூடாதென்று விவரமாக அறிக்கையிடும் வரையி லும் அப்படிப்பட்ட காரியங்களுக்காக லைசென்ஸ் பெறவேண்டிய அவசிய மில்லை. ஆகையால் யாதொரு நபர், ஒரு கிராமத்தில் VII-வது வெஷடியூலில் கண்ட காரியங்களுக்காக யாதொருதொழிற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்று அல்லது அந்த காரியங்களை செய்யவேண்டுமென்று விரும்பும்பக்ஷத்தில் அந்த நபர் முன்னமேயே பஞ்சாயத்தினுடைய ஆபீசில் பஞ்சாயத்தானது அம் மாதிரி ஏதாவது அறிக்கையிட்டிருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அறிக்கை ஒன்றும் இல்லாதபக்ஷத்தில் லைசென்ஸ் பெறவேண்டிய அவசியமில்லை. பஞ்சாயத்தானது ஆலோசனை செய்யாமல் VII-வது வெஷட்யூ லில் உள்ள எல்லா காரியங்களும் லைஸென்ஸில்லாமல் செய்யப்படக் கூடா தென்று தடுப்பது உசிதமன்று.

இப்பிரிவின் (1)-வது உபப்பிரிவில் ஒரு விலக்கு நிபந்தனையுள்ளது. அதாவது, ஒரு பஞ்சாயத்தானது இப்பிரிவில் கண்ட பிரகாரம் அறிக்கை யிட்டது முதல் 60-நாட்கள் வரையிலும் அவ்வறிக்கையானது அமலுக்கு வருவதற்கில்லை.

VII-வது வெஷடியூலில் கண்ட காரியங்களை செய்வதற்கு எந்த இடத் திற்கு லைசென்ஸ் வேண்டுமோ அதற்காக பஞ்சாயத்தானது அறிக்கை யிடப்பட்ட 30-நாட்களுக்குள் (2)-வது உபப் பிரிவின் கீழ் மனு செய்துக் கொள்ள வேண்டும். ஆனால், ஒரு நபர் அப்படி அறிக்கையிட்ட தினம் முதற் கொண்டு 30-நாள் கழிந்தபிறகு லைசென்ஸுக்காக மனு செய்யும் பக்ஷத்தில் அதை ப்ரெஸிடென்டானவர் தள்ளி விடுவதற்கில்லை. இப்பிரிவில் 30-நாட்

களுக்குள்ளேயே லிசென்ஸுக்காக விண்ணப்பம்செய்துக் கொள்ள வேண்டு மென்பதை ஒரு காலதோஷ நிர்ணய சட்ட அம்சமாக கவனிக்கக் கூடாது. அப்படி 30-தினங்களுக்கு பிறகாவது அல்லது இப்பிரிவின் (5)-வது உப்பிரிவின்கீழ் ஒரு வருஷம் முடிவதற்கு 30 - தினங்களுக்குள்ளே யாவது லிசென்ஸுகளை புதுப்பிப்பதற்காகவிண்ணப்பம் செய்துக்கொள்ளும் பக்ஷத்தில், ப்ரெஸிடென்டானவர் அந்த விண்ணப்பத்தை அங்கீகரிப்பதில் யாதொரு தோஷமுமில்லை. முனிஸிபல் சட்டங்கள் எப்பொழுதும் பொது ஜனங்களுக்கு அனுகூலமாகவே கவனிக்கப்பட வேண்டும்(1). (லோகல் போர்டு ஆக்டும் ஒரு முனிஸிபல் சட்டமாகும்).

மிஸ்டர் C. V. நாயுடு அவர்களுடைய புஸ்தகத்தில், ஒரு கபர், ஒரு வருஷம் முடிவதற்கு 30-நாட்களுக்கு முன்பாக ஒரு லிசென்ஸை புதுப்பிப்பதற்காக மனு செய்யாமலிருப்பது ஒரு குற்றமாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு யாதொரு சட்டப்பிரமாணமும் கிடையாது. பஞ்சாயத்து ப்ரெஸிடென்டுகள் அதைக்கடைப்பிடித்து ஒரு வருஷம் முடிவதற்கு 30-நாட்களுக்கு முன்பாக லிசென்ஸை புதுப்பிக்காதவர்களை கோர்ட்டுக்கு இழுப்பது உசிதமன்று. இதைப்பற்றி 212-வது பிரிவின் கீழ் குறிப்புகளைப் பார்க்க.

லிசென்ஸ் கொடுப்பதற்கும் மறுப்பதற்கும் ப்ரெஸிடென்டுகளுக்கு அதிகாரமுண்டு. லிசென்ஸ் கொடுக்கப்பட்ட உத்தரவின் மேலாவது அல்லது மறுக்கப்பட்ட உத்தரவின்மேலாவது ஓர் மாதம் வரையிலும் அப்பீல் உண்டு. இதைப் பற்றி 213-வது பிரிவையும்அதன்கீழுள்ள குறிப்புகளையும் காண்க.

இந்த பிரிவில், பொதுவாக தொழிற்சாலைகளை நடத்துவதற்காக பஞ்சாயத்து ப்ரெஸிடென்டுகளிடமிருந்து லிசென்ஸ் பெறவேண்டுமென்றும் ஒவ்வொரு லிசென்ஸும் வருஷத்திற்கு ஒருதரம் புதுப்பிக்கவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. 194-வது பிரிவில் தொழிற்சாலைகள் முதல் முதலாக அமைக்கப்படுவதற்காக பஞ்சாயத்துக்கு மனுசெய்து பஞ்சாயத்தினிடமிருந்து உத்திரவு பெறவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. ஆகையால், இந்த பிரிவுக்கும் 194-வது பிரிவுக்கும் யாதொரு தொடர்புமில்லை. 194-வது பிரிவின்கீழ் உத்தரவு பெற்ற பிறகு ஒரு கபர் யாதொரு தொழிற்சாலையை நடத்திக்கொண்டிவரும் பக்ஷத்தில் அந்த தொழிற்சாலைக்காக வருஷப் பிரதி வருஷம் லிசென்ஸ் பெறவேண்டும். அப்படி லிசென்ஸ் பெறாமல் தொழிற்சாலையை நடத்தும்பக்ஷத்தில் அவர் 100-ரூபாய் வரையிலும் விதிக்கப்படும் அபராதத்திற்கு உட்பட வேண்டும். 194-வது பிரிவின்கீழ் ஓர் உத்திரவு பெற்றதினாலேயே 193-வது பிரிவின்

(1) சிதம்பரம் முனிஸிபல் கவுன்ஸில் vs. சுப்பிரமணிய அய்யர் 55, M. L. J. 495.

கீழ் லைசென்ஸ் பெறவேண்டிய அவசியமில்லை யென்று சொல்லுவதற்கில்லை(a).

இந்த பிரிவில், "இடமென்பது" ஒரு தொழிற்சாலை என்று மட்டுமல்லாமல் எல்லாவித இடத்தையும் குறிக்குமென்று சென்னைஹைக்கோர்ட்டார் - முத்துபாலு செட்டி vs. மதுரை முனிசிபாலிடி - (a) என்னும் கேஸில் கூறியிருக்கின்றனர். இடமென்பது, யாதொரு வீடு, கட்டிடம், கொட்டகை, முதலியவைகளையும் குறிக்கும். இந்த பிரிவில் லைசென்ஸ் பெறவேண்டியது ஒரு இடமேயொழிய, ஒரு காரியம் அல்லது தொழிலல்ல. ஆகையால், ஓர் சபர் பொதுவாக ஒரு காரியத்திற்காக லைசென்ஸ் பெற்றுக்கொண்டு தனக்கிஷ்டமான இடத்தில் அந்த காரியத்தைச் செய்வதற்கில்லை. லைசென்ஸ் பெற்றிருக்கும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றால் அந்த இடத்திற்காகவும் லைஸென்ஸ் பெறவேண்டும். (b).

VII-வது ஷெடியூலில் உள்ள காரியங்களுக்காக யாதொரு இடத்தை உபயோகப்படுத்துவதற்காக கட்டாயம் பஞ்சாயத்து ப்ரெஸிடென்டினுடைய முன் உத்தரவு வேண்டும் என்பதில்லை. அவைகளுக்காக இடங்களை உபயோகிப்பதற்காக லைசென்ஸ் பெற்றாலே போதுமானது. ஆனால், 194-வது பிரிவில் கண்டிருக்கும் காரியங்கள் மிகவும் பெரியவைகளாகவும், ஜனங்களுக்கு அபாயகரமானவையுமாக இருக்குமாதலால் அவைகளுக்காக கட்டாயம் பஞ்சாயத்தினுடைய முன் உத்திரவு வேண்டும். VII-வது ஷெட்யூலில்காணப்பட்டிருக்கும் காரியங்களுக்காக 194-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நீராவி சக்தி, ஜல சக்தி அல்லது இயந்திர சக்தி அல்லது மின்சார சக்தி இவைகளாவது அல்லது இவைகளைக் கொண்ட இயந்திரங்களையாவது உபயோகப்படுத்த வேண்டியிருப்பின் அதற்காக 194-பிரிவின்கீழ் பஞ்சாயத்தினுடைய முன் உத்தரவு வேண்டும்.

VII-வது ஷெட்யூலில் கண்டிருக்கும் காரியங்களை பஞ்சாயத்து வில்நிரணத்திற்குள் ஓரிடத்தில் செய்தால்தான் பஞ்சாயத்தினிடமிருந்து லைஸென்ஸ் பெறவேண்டும். அந்தக் காரியம் வெளியே நடந்து பஞ்சாயத்தின் வில்நிரணத்திற்குள் பூர்த்தியான சாமான்கள் விற்பனைக்கு வரும் பக்ஷத்தில் அவைகளுக்காக லைசென்சு பெறவேண்டிய அவசியமில்லை. (c).

(a) முத்துபாலு செட்டி vs. மதுரை முனிசிபாலிடி 51 M. L. J. 490 இந்த கேஸில் மதுரை முனிசிபாலிட்டி vs. முத்துபால்செட்டி 50 M. L. J. 384 என்னும் கேஸானது நிராகரிக்கப்பட்டது. 53. M. L. J. 633.

(b) இந்தியா சக்ரவர்த்தி vs. மாயாண்டி கோனன் 83. Mad 220=17. M. L. J. 371.

(c) பஞ்சேரி vs. பெங்கால் பெயிண்ட், வார்னிஷ் கம்பெனி, A. I. R. 1928 Cal. 531.

ஓரிடமானது, VII-வது ஷெட்யூலில் குறிக்கப்பட்டிருக்கும் காரியங்களில் பல காரியங்களுக்காக உபயோகிக்கப்படும்பக்ஷத்தில் ஒவ்வொரு காரியத்திற்கும் எவ்வளவு லெசென்ஸ் தொகை கட்டவேண்டியிருக்குமோ அவை எல்லா வற்றிற்கும் சேர்த்து ப்ரெஸிடென்டானவர் லெஸென்ஸ் கட்டணம் விதிக்கலாமா, அல்லது ஒரேகாரியத்திற்காகவுள்ள லெஸென்ஸ் கட்டணத்தை மாத்திரம்தான் விதிக்கலாமா, என்பது கேள்வி. அப்படி ஒவ்வொரு காரியத்திற்கும் தனித்தனியாக லெசென்ஸ் விதித்து மொத்தமாக அவைகளின் கட்டணங்களை வாங்குவது சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்கும் லோகல் கவர்ன்மெண்டுக்கும் சம்மதமாக இருக்கும்பக்ஷத்தில், ப்ரெஸிடென்டு அம்மாதிரி கட்டணத்தை விதித்துவாங்கலாம் (a). லெசென்ஸில்லாமல் ஓரிடத்தை உபயோகிப்பது ஒருகுற்றமாகும். அதற்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

நீராவி அல்லது இதர சக்தியை உபயோகிக்கப்போகிற தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலை செய்யும் இடத்தைக் கட்டுவதற்காவது ஸ்தாபிப்பதற்காவது அதில் யந்திர உபகரணங்களை ஏற்படுத்துவதற்காவது செய்துகொள்ளப்பட வேண்டிய விண்ணப்பம்.

194. (1) (a) நீராவி சக்தி, ஜலசக்தி அல்லது இயந்திர சக்தியையாவது மின்சார சக்தியையாவது உபயோகிக்கக் உத்தேசித்திருக்கும் யாதொரு தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலை செய்யும் இடத்தைக்கட்டவாவது ஸ்தாபிக்கவாவது,

(b) யாதொரு வளவில், மேலே சொல்லப்பட்டபடி நீராவி சக்தி, ஜல சக்தி, அல்லது இதர சக்தியைக் கொண்டு இயக்கப்படும் யந்திரங்கள் அல்லது வஸ்துக்களைச் செய்வதற்கான தளவாடங்களை ஏற்படுத்தவாவது,

உத்தேசிக்கும் ஒவ்வொரு நபரும்,

அந்தப்படி கட்டவாகிலும், ஸ்தாபிக்கவாகிலும் ஏற்படுத்தவாகிலும், ஆரம்பிப்பதற்கு முன், உத்தேசித்த வேலையைச்செய்வதற்கு அனுமதிக்காக பஞ்சாயத்துக்கு எழுத்துமூலமாக விண்ணப்பம் செய்துக் கொள்ளவேண்டும்.

(a) நயினா மகம்மது லாய்டு 8 I. C. 574—1 M. W. N. 71.

(2) அந்த விண்ணப்பமானது :—

(i) அந்த தொழிற்சாலை அல்லது ஒர்க்ஷாப்பு (Workshop) அல்லது வேலை செய்யப்படும் இடம் அல்லது இடத்தினுடைய ஒரு பிளானுனது (Plan) இதற்காக லோகல் கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் விதிகளால் நிர்ணயிக்கப்படும் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, இன்னும்,

(ii) இதற்காக டிஸ்டிரிக்ட் போர்டாரால் செய்யப்படும் சகாய சட்டங்களைக்கொண்டு பஞ்சாயத்தானது, இயந்திர சக்தி, இயந்திரங்கள், இயந்திரக் கட்டிடங்கள் அல்லது இடங்களின் விஷயமாக என்னென்ன விவரங்கள் வேண்டுமென்று கேட்கிறதோ, அவைகளுடனும்,

கொடுக்கப்பட வேண்டும்.

(3) பஞ்சாயத்து கூடி விண்ணப்பத்தை வரப் பெற்றுக் கொண்ட பிறகு கூடிய சீக்கிரத்தில்,

(a) விண்ணப்பத்தில் கேட்டிருக்கும் அனுமதியை அனுமதியாகவோ அல்லது அவர்கள் யுக்தமென்று நினைத்து விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டோ கொடுக்கலாம், அல்லது,

(b) அந்தப்படி கட்டுவது, ஸ்தாபிப்பது அல்லது ஏற்படுத்துவதானது அக்கம்பக்கத்தில் ஜனம் நெருக்கமாயிருப்பது காரணமாக ஆரோக்கியகரமாயிருக்கிறதென்றாகிலும், அதனால் அசங்கியம் அல்லது சங்கடம் வெகுசாய் உண்டாகுமென்றாகிலும் அவர்கள் அபிப்பிராயப்பட்டால், அனுமதியை கொடுக்காமல் நிராகரிக்கலாம்,

(4) (3)-வது உபப் பிரிவின் கீழ் உத்தரவை கொடுப்பதற்கு முன் பஞ்சாயத்தானது,

(a) (i) காற்றோட்டத்திற்கும் வெளிச்சத்துக்குமுள்ள ஏற்பாடு போதுமா என்பதின் விஷயமாகவும்,

(ii) அறைகளினுடையவும், கதவுகளினுடையவும் உயரமும் மற்ற விஸ்தீரணங்களும் போதுமா என்பதின் விஷயமாகவும்,

(iii) ஜீவிதத்து நேரிடும் காலத்தில் வெளியே போகும் வழிகளின் அமைப்புகள் சரியாயிருக்கின்றனவா அல்லவா என்பதின் விஷயமாகவும், இன்னும்,

(iv) லோகல் கவர்ன்மெண்டாரால் செய்யப்படும் விதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இதர விஷயங்களாகவும்,

அந்த தொழிற்சாலை (Factory) ஓர்க்ஷாப்பு அல்லது வேலை செய்யும் இடம் அல்லது ஸ்தலம் இவைகளின் பிளானைக் குறித்து 1911-ம் வருஷத்திய இந்தியன் பாக்டரிகளின் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருந்து அந்த கிராமத்தில் அதிகாரமுள்ள ஒரு பாக்டெரிகளின் இன்ஸ்பெக்டருடைய சம்மதத்தைப் பெறவேண்டும்; அல்லது அப்படிப்பட்ட இனிஸ்பெக்டர்களில் ஒன்றுக்கு அதிகமான இன்ஸ்பெக்டர்களிருக்கும் பக்ஷத்தில், இதற்காகவென்று ஒரு பொது உத்தரவு மூலமாகவோ அல்லது தனியான உத்தரவு மூலமாகவோ லோகல் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படும் ஒரு இன்ஸ்பெக்டருடைய உத்தரவையாவது பெறவேண்டும்.

(b) இன்னும் டிஸ்டிரிக்ட்டு போர்டானது ஒரு ஹெல்த் ஆபீசரை நியமித்திருக்கும் பக்ஷத்தில், அவரையும் மற்ற சந்தர்ப்பங்களில் டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசரையும் அந்த தொழில்சாலை, ஓர்க்ஷாப், வேலைசெய்யப்படுமிடம், அல்லது ஸ்தலம் இவைகளின் சன்னிவேசமானது அந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியத்திற்காக தகுந்ததா என்பதைப்பற்றி ஆலோசனைசெய்து அவருடைய அபிப்பிராயத்திற்கு தகுந்த மதிப்பு வைக்கவேண்டும்.

குறிப்புகள்.

ஒரு பஞ்சாயத்தின் அதிகார வில்லீரணத்திற்குள் ஸ்ரீவிசக்தி, ஜல சக்தி, இயந்திரசக்தி, மின்சாரசக்தி ஆகிய இவைகளைக்கொண்டு கட்டப்படும் தொழிற்சாலைகளுக்காக பஞ்சாயத்தினிடமிருந்து உத்திரவு பெறவேண்டும். அதாவது எழுத்துமூலமாக ஒரு மனு செய்து அம்மனுவில் இப்பிரிவில் (2)-வது உபப்பிரிவில் காணப்பட்டிருக்கும் விவரங்களையும் தெரிவித்து எழுத்துமூலமாக பெறவேண்டும். பஞ்சாயத்தானது அதற்கர்க தங்களுடைய சம்மதத்தை கொடுப்பதற்குமுன் இப்பிரிவில் (4)-வது உபப்பிரிவில் கண்டிருக்கிறபிறகாரம் நடந்துகொள்ளவேண்டும்.

(4)-வது உபப்பிரிவானது 1930-ம் ஜூத்திய சென்னை லோகல்போர்டு திருத்த சட்டத்தினுல் முற்றிலும் மாற்றப்பட்டு புதியதாக சில அம்சங்களுடன் சேர்த்து கோர்க்கப்பட்டுள்ளது. இப்பொழுது மேல்நாட்டு நாகரீகத்தினுலும், வியாபார சேர்க்கையினுலும், ஸ்ரீவி மின்சாரம் முதலியவைகளால் இயந்திரங்கள் ஓட்டப்படுவதால் அப்படிப்பட்ட இயந்திரங்களையுடைய தொழிற்சாலைகளில் போதுமான வெளிச்சம், காற்றோட்டம் முதலியவைகளும் இன்னும் தொழிலாளிகளுக்கு வேண்டிய சுகாதாரங்களும் அமைத்திருக்கும்படி கவனிக்கவேண்டும். இன்னும், தொழிற்சாலைகள் அமைக்கப்படும்

இடமானது தொழிலாளிகளுக்கு அசௌகரியத்தை விளைக்கக்கூடாதபடி அவ் விடமானது அந்த தொழிலுக்கு தகுந்ததென்று டில்டிரிக்ட்டு சுகாதார ஆபீசருடைய அபிப்பிராயத்தையும் பஞ்சாயத்தானது பெறவேண்டும்.

ஒவ்வொரு பஞ்சாயத்தும் தொழிற்சாலைகளின் விஷயமாக இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா நிபந்தனைகளையும் அனுசரித்தால் பொது ஜனத்திற்கு சௌகரியம் ஏற்படும். புதிய தொழிற்சாலை கட்டிடங்களை கட்டு வதற்கு அனுமதி கொடுப்பதிலாவது அல்லது அனுமதி கொடுக்க மறுப்பதி லாவது பஞ்சாயத்துகள் தங்களுக்குள் ஒரேவிதமான நிர்ணய ஏற்பாடுகளை நிர்மானித்துக்கொண்டு பக்ஷபாதமில்லாமல் அவைகளை அனுசரிக்கவேண் டும்.

இப்பிரிவின் கீழ் உத்தரவு (Permission) பெறுவதற்கும் 193-வது பிரிவின் கீழ் லைசென்ஸ் பெறுவதற்கும் அடியோடே யாதொரு சம்பந்த மும் கிடையாது. ஒரு தொழிற்சாலையை கட்டுவதற்குமுன் ஒரு நபர் பஞ்சாயத்தினிடமிருந்து உத்தரவு பெறும்பக்ஷத்தில் அவ்வுத்தரவானது 195-வது பிரிவின் கீழாவது அல்லது வேறே இச்சட்டத்தின்கீழ் லைசென் ஸாகத் தகுந்த ஒரு அதிகாரத்தை யொட்டியாவது பஞ்சாயத்தினால் ரத்து செய்யப்பட்டா லொழிய மறுபடியும் அவ்வுத்தரவை புதுப்பிக்க வேண்டிய அவசியமில்லை. அதாவது, ஒருதரம் உத்தரவு பெற்றாலே போது மானது. ஆனால், 193-வது பிரிவின் கீழ் லைசென்ஸ பெறவேண்டிய விஷ யத்தில் ஒவ்வொரு வருஷமும் லைசென்ஸானது புதுப்பிக்கப்பட வேண்டும். இந்தப் பிரிவின்கீழ் கட்டப்படும் யாதொரு தொழிற்சாலையானது VII-வது ஷெடியூலில் கண்ட காரியங்களில் எவற்றிற்காவது உபயோகப்படுத் தப்படுமானால், முதலில் பெற்ற உத்தரவைத் தவிர ஒவ்வொரு வருஷ மும் லைசென்ஸ் பெறவேண்டும். அப்படி பெறுமல் முதலில் பெற்றிருக் கும் உத்தரவை மாத்திரம் கொண்டு ஒரு நபர் யாதொரு தொழிற்சாலையை நடத்துவாராயின் அதற்காக அவர் அபராதம் விதிக்கப்படத்தக்கவராவர். (a). இப்பிரிவின்கீழ் கெல்லைக் குத்துவதற்காக மிஷன்களுக்கும், மாவு முத லியவைகளை அரைப்பதற்காக மிஷன்களுக்கும் மரக்களை அறுப்பதற்காகவோ வெட்டுவதற்காகவோ உள்ள மிஷன்களுக்கும் உத்தரவு பெறவேண்டும். அதாவது பொதுவாக இயந்திரங்களினால் ஜனங்களுக்கு அபாயம் விளைவிப் பதைக் கூடுமானவரையிலும் தடுப்பதற்கு வேண்டிய நிர்தோபஸ்துகள் ஏற் படவேண்டுமென்பது.

" கட்டுவது " என்பது புதியதாக கட்டுவதைப்பற்றித் தான் குறிக் குமே யொழிய பழைய கட்டணங்களை புதுப்பிப்பதை அணைக்காது. ஆகை யால் ஒரு நபர் லைசென்ஸில்லாமல் அல்லது உத்தரவில்லாமல் 7, 8 வருஷ

(a) முத்தியாலு செட்டி vs. மதுரை முனிசிபாலிட்டி 53. M. L. J. 633—A. I. R. 1927. Mad. 961—M. L. W. 239.

காலமாக ஒரு கட்டிடத்தைக் கட்டி அதில் யாதொரு தொழிற்சாலையை நடத்திக்கொண்டு வரும் பக்ஷத்தில் அந்த கட்டிடத்தைக் கட்டின மூன்று மாதங்களுக்குள் கிரிமினல் கோர்ட்டில் தாவா தொடரப்படாமலிருக்கும் பக்ஷத்தில், அந்த மூன்று மாதங்கள் கழிந்த பிறகு செய்யப்படும் ஒரு கிரிமினல் கோர்ட்டு தாவாவில் எதிரி லைசென்ஸில்லாமல் கட்டிடத்தை உபயோகப்படுத்தி வருவதற்காக தண்டிக்கப்படுவதற்கில்லை(a).

யாதொரு மிஷன் அல்லது இயந்திரம் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் கட்டிடமானது அதிலுள்ள இயந்திரம் மாற்றப்படாமலே புதுப்பிக்கப்படும் பக்ஷத்தில் அது ஒரு குற்றமாகாது. (b).

ஒரு கட்டிடத்தில் ஓரிடத்திலிருந்த இயந்திரமானது அந்த கட்டிடத்துக்குள்ளேயே மற்றோர் இடத்துக்கு மாற்றிவைக்கப்படுமானால், அதற்காக தனியான ஒரு உத்தரவை பெறவேண்டும். (c).

ஒரு இயந்திரமான்து, "கட்டப்படுவது அல்லது ஸ்தாபிக்கப்படுவது அக்கம்பக்கத்தில் ஜன நெருக்கமாய் இருப்பது காரணமாக ஆக்ஷேபகரமாயிருக்கிறதென்றாலும் அதனால் அசங்கியம் அல்லது சங்கடம் வெகுசாய் உண்டாகுமென்றாலும் அவர்கள் அபிப்பிராயப்பட்டால்" என்திருப்பதினாலேயே உத்திரவு அல்லது லைசென்ஸ் பெறுவதானது, அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தையொட்டினதாகும் என்று சொல்லமுடியாது. அப்படிப்பட்ட இடங்களுக்கு கட்டாயம் லைசென்ஸ் வாங்கியே தீரவேண்டும்.(d).

195. (1) நீராவிசக்தி, ஜலசக்தி அல்லது இதர யந்திரசக்தி அல்லது மின்சாரசக்தியாவது உபயோகிக்கப்படும் யாதொரு தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலைச்செய்யும் இடத்தில், அங்கே உபயோகிக்கப்படும் குறித்த வகையைச் சேர்ந்த எரிகரும்பு(விரகு)காரணமாகவோ உண்டாகும் சப்தம் அல்லது அதிர்ச்சி காரணமாகவோ அசங்கியங்கள் அல்லது சங்கடங்கள் ஏற்படுகிற பட்சத்திலே, பஞ்சாயத்தானது - இது விஷயமாய்க் குறிப்பிடப்படும் நியாயமான ஒரு காலத்துக்குள் மேற்படி அசங்கியங்கள் அல்லது சங்கடங்களைக் குறைக்கும்படியாக தங்களுக்குத் தகுதியாகத்தோற்றுகிற கட்டளைகளை இடலாம்.

நீராவி அல்லது இதர சக்தியினாலேற் படும் அசங்கியங்கள் அல்லது சங்கடங்களைக் குறைக்கும்படி லோகல் போர்டார் உத்தரவு பிறப்பிக்கலாமென்பது.

(a) M. A. ராஜாக் விஷயமாக 52. M. L. J. 620.
(b) சத்தியநாராயண விஷயமாக A. I. R. 1923. Mad. 375—17 L. W. 249.
(c) A. E. ஸ்மித் விஷயமாக 44. M. L. J. 731.
(d) P. நடேச முதலியார் விஷயமாக 51. M. L. J. 704.

(2) வேண்டுமென்று ஷெடியூல் கட்டளைகளின்படி நடத்திக் கொள்ளத்தவறினாலும் (மேற்படி அசங்கியங்கள் அல்லது சங்கடங்களைக்) குறைப்பது சாத்தியமாகுமென்று தெரியவந்தாலும், பஞ்சாயத்தானது—

(a) (அங்கே) உபயோகிக்கப்படும் குறித்த வகையைச் சேர்ந்த எரிசும்பை உபயோகிக்கக்கூடாதென்று தடுக்கலாம், அல்லது,

(b) இரவு 9½-மணி முதல் காலை 5½-மணி வரையில் ஷெடியூல் தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலைசெய்யும் இடத்தில் வேலை செய்யக் கூடாதென்று தடுத்து சப்தம் அல்லது அதிர்ச்சியை மட்டுப்படுத்தலாம்.

குறிப்புகள்.

194-வது பிரிவில், தொழிற்சாலை, ஓர்க்ஷாப் முதலியவைகளில் நீராவி சக்தி முதலிய சக்திகளை கொண்டு இயந்திரங்களை உபயோகிப்பதாயிருந்தால் அந்த தொழிற்சாலை முதலியவைகளை அமைப்பதற்கு பஞ்சாயத்தினுடைய உத்தரவு பெறவேண்டுமென்றுள்ளது. அப்படி உத்தரவு கொடுத்தபிறகு பஞ்சாயத்தானது அவைகளின்பேரில் யாதொரு அதிகாரம் செலுத்தக்கூடாதென்று சொல்வதற்கில்லை. அவைகளின் உபயோகிக்கப்படும் எரிசும்பு (அதாவது விறகு, எண்ணை, கரி, காஸ் முதலியவைகள்) அக்கம்பக்கத்தில் குடியிருக்கும் ஜனங்களுக்கு அனுரோகியமாயிருக்கிறதென்ற காரணத்தைக் கொண்டாகிலும் அல்லது அவைகளினால் ஏற்படும் சப்தமானது அல்லது அதிர்ச்சியானது அசௌக்கியத்தை விளைவிக்கும்என்னும் காரணத்தைக் கொண்டாகிலும் அவைகளை நிறுத்தும்படியான ஏற்பாடுகளைச் செய்வதற்கு பஞ்சாயத்திற்கு அதிகாரம் உண்டு என்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இப்பிரிவில் (2)-வது உபப்பிரிவில் உள்ள அம்சங்களைப் பார்க்குமிடத்து பஞ்சாயத்தினுடைய அதிகாரங்கள் மிகவும் மட்டுப்பட்டுள்ளதாகத் தோன்றும். அதாவது, ஒரு பஞ்சாயத்தானது, அடியோடே தொழிற்சாலை முதலியவைகளில் ஒரு குறித்த கால அளவு வரையிலாவது அல்லது சாஸ்விதமாகவாவது வேலை நடத்திவருவதை நிறுத்துவதற்கில்லை. அந்த தொழிற்சாலையில் உபயோகப்படுத்தப்பட்டுவரும் எரிசும்பை உபயோகிக்கக்கூடாதென்றுவது அல்லது இரவு 9–30-மணி முதல் மறுநாள் காலை 5–30-மணி வரையிலும் வேலை நடத்தப்படக்கூடாதென்றுவது உத்தரவிடலாம். ஆகையால் பஞ்சாயத்தினால் தடுக்கப்பட்ட எரிசும்பை உபயோகிக்காமலிருந்து இரவு 9-30 மணிக்கு மேலாக யாதொரு வேலையையும் நடத்தாமலிருக்கும் பக்ஷத்தில் பஞ்சாயத்தானது இப்பிரிவின்கீழ் அந்த தொழிற்சாலை விஷயமாக வேறொரு நடவடிக்கையையும் எடுத்துக்கொள்வதற்கில்லை.

(1)-வது உபப்பிரிவின்கீழ் பஞ்சாயத்தினால் செய்யப்படும் உத்தரவானது (2)-வது உபப்பிரிவின்கீழ் செய்யப்படக் கூடிய உத்தரவைக் காட்டிலும் குணதோஷ சுபாவமுள்ள உத்தரவாகத்தான் இருக்கவேண்டும். அதாவது இப்பிரிவின் அமைப்பை கவனிக்குமிடத்து பஞ்சாயத்தானது (2)-வது உபப்பிரிவின் கீழ் செய்யப்படக்கூடிய உத்தரவைக்காட்டிலும் அதிகமான நிபந்தனைகளுடைய உத்தரவைச் செய்வதற்கில்லையென ஏற்படும். அப்படிப்பட்ட யாதொரு உத்தரவைச் செய்யும்பக்ஷத்தில் அவ்வுத்திரவானது பஞ்சாயத்துக்கு வரம்புகடந்த உத்திரவாகும். அத்தகைய உத்தரவை மீறி நடப்பதானது இப்பிரிவின் கீழ் ஒரு குற்றமெனக் கருதப்படுவதற்கில்லை.

ஒரு பஞ்சாயத்தானது தமது வரம்பிற்குள் செய்யும் உத்தரவையாதொரு நபர் மீறி நடக்கும்பக்ஷத்தில் அது ஒரு குற்றமாகும். அதற்கு 100-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

இந்தப் பிரிவிலாவது அல்லது 194-வது பிரிவிலாவது அல்லது 212-வது பிரிவிலாவது, ஒரு பஞ்சாயத்தானது 194-வது பிரிவின்கீழ் கொடுத்திருக்கும் அனுமதியை (Permission) யாதொரு காரணத்தைக்கொண்டாவது ரத்து செய்யலாம் என்று சொல்லப்படவில்லை. VIII-வது ஷெடியூலிலும் 194-வதுபிரிவின்கீழ் அனுமதிபெறுமல் தொழிற்சாலை முதலியவைகளை நடத்துவதற்கு அபராதம் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய அவ்வனுமதிக்கு விரோதமாக நடக்கும்பக்ஷத்தில் அபராதம்உண்டு என்று சொல்லப்படவில்லை. ஒரு பஞ்சாயத்தானது தாம் கொடுத்திருக்கும் அனுமதியை ரத்து செய்யலாம் என்றாவது ஸ்பஷ்டமாக வேறெங்கும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், 212-வது பிரிவின் 1-வது உபப்பிரிவில் பஞ்சாயத்தானது லைசென்ஸ் அல்லது அனுமதியைக் கொடுக்கும் காலத்தில் சில நிபந்தனைகளை நிர்ணயிக்கலாமாகையால், அந்த கேர்ட்பாடுகளை மீறி நடக்கும் பக்ஷத்தில் அப்படி நடப்பவர்களுக்கு கொடுத்திருக்கும் அனுமதியை ரத்து செய்யும்படி அந்த நிபந்தனைகளிலேயே காணலாம். ஆனால் அப்படிக் காணுமலிருக்கும்வரையிலும் லைஸென்ஸ் அல்லது அனுமதியானது ரத்து செய்யப்படுவதற்கில்லை. ஒவ்வொரு கேஸும் அதன் தனியான சங்கதி யம்சங்களைக்குறித்து தீர்மானிக்கப்படவேண்டும்.

(2)-வது உபப் பிரிவில் "அல்லது" என்னும் பதமானது உபயோகப்படுத்தப்பட்டிருப்பதினாலேயே பஞ்சாயத்தானது இரண்டு விதங்களில் ஒன்றில் மாத்திரம்தான் தமது அதிகாரத்தை பிரயோகிக்கலாம் என்பதில்லை. ஒரு பஞ்சாயத்துக்கு இரண்டு விதமாகவும் உத்தரவு செய்ய அதிகாரம் உள்ளதாகவனிக்கப்பட வேண்டும்.

196. லோகல் கவர்ன்மென்டார்-194-வது பிரிவின்படியாகிலும் 195-வது பிரிவின்படியாகிலும் யாதொரு நடவடிக்கை சம்பந்தமாய் அல்லது நடத்தத் தவறிய நடவடிக்கை சம்பந்தமாய் பொதுவாக வாவது குறித்த யாதொரு விஷயத்திலாவது, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தரவைப்பிறப்பிக்கலாம் அல்லது கட்டளையிடலாம்.

லோகல் போர்டாருக்கு உத்தரவு பிறப்பிக்கவோ கட்டளையிடவோ லோகல் கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

குறிப்புகள்.

இப்பிரிவானது லெசென்ஸுகளின் விஷயமாகவும் அனுமதிகளின் விஷயமாகவும், 194, 195-பிரிவுகளின்கீழ் பஞ்சாயத்துகள் எடுத்துக்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சரியாயில்லாவிட்டால் லோகல் கவர்ன்மென்டானது தக்கபடி உத்தரவு செய்யலாம் என்று கூறுகிறது. ஆகையால், ஒரு பஞ்சாயத்தானது ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ள தவறும்பக்ஷத்தில் அதன்பேரில் சிவில் கோர்ட்டில் தாவாசெய்யாமலே லோகல் கவர்ன்மென்டுக்கு மனு செய்யலாம். இப்பிரிவில் லோகல் கவர்ன்மென்டானது எக்காரணத்தைக் கொண்டு அல்லது எதை ஆதாரமாகக்கொண்டு உத்தரவுகளைச் செய்யலாம் என்று இல்லாதிருஞல், ஒரு கிராமத்தில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் தகுந்த காரணங்களைக் கொண்டு கவர்ன்மென்டுக்கு மனு செய்ய உரிமையுள்ளதாக ஏற்படும்.

194, 195-பிரிவுகளில் உள்ள நிபந்தனைகளை சரிவர கவனிப்பதற்காக லோகல் கவர்ன்மென்டார் பஞ்சாயத்துகளுக்கு நினைவு மூட்டுவதற்காக இப்பிரிவு ஏற்பட்டுள்ளது.

யாதொரு தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலை செய்யும்இடத்துக்குள்ளே ப்ரவிடென்டு பிரவேசிக்கலாமென்பது.

197. (1) யாதொரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டாவது இது விஷயத்தில் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது—

(a) சூரியோதய முதல் சூரியாஸ்தமனத்துக்கு இடையில் எந்த வேளையிலும் அல்லது,

(b) யாதொரு தொழில் நடந்து கொண்டிருக்கும்போது எந்த வேளையிலும்,

(c) 194-வது அல்லது 195-வது பிரிவிற்குமாறாக யாதொரு குற்றம் செய்யப்பட்டு வருகிறதென்று அவர் நம்புவதற்குக்காரணம் இருந்தால், பகலிலாயினும் இரவிலாயினும் எந்த வேளையிலும்,

யாதொரு தொழிற்சாலை, வேலைச்சாலை அல்லது வேலை செய்யும் இடத்துக்குள்ளே பிரவேசிக்கலாம்.

(2) இந்தப்பிரிவின்படிக்கான அதிகாரங்களைச் செலுத்துவதனாலாவது இந்தப் பிரிவின்படி யாதொரு இடத்தில் பிரவேசிக்கும் பொருட்டு அவசியமான யாதொரு பலவந்தத்தை உபயோகிப்பதனாலாவது அவசியமாய் நேரிடும் யாதொரு சேதம் அல்லது அசௌகரியத்துக்காக எவர் பேரிலும் எந்த தாவாவும் நிற்காது.

குறிப்புகள்.

ஒரு பஞ்சாயத்து பிரஸிடென்டானவர் தொழிற்சாலை முதலியவற்றிற்குள் இரவில் நுழைவது நியாயமன்று. ஆனால் யாதொரு நபர், அனுமதியில்லாமலாவது, அல்லது லைஸென்ஸில்லாமலாவது, அல்லது யாதொரு எரிசரும்பை உபயோகப்படுத்தக் கூடாதென்றுவது அல்லது இரவில் 9-30 மணிக்கு மேலாக தொழிற்சாலையை நடத்தக் கூடாதென்றுவது உத்திரவிடப்பட்ட பிறகும் தொழிற்சாலை முதலியவைகளை நடத்துவதாகவோ அல்லது 194, 195-வது பிரிவுகளின் கீழ் வேறே விதமாக யாதொரு குற்றம் செய்வதாகவோ அனுமானிப்பாராகில் இரவிலும் அப்படிப்பட்ட இடங்களில் நுழைவதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு. ஒரு பஞ்சாயத்து பிரஸிடென்டானவர் இந்தப் பிரிவின் கீழ் தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையைக் கைக்கொண்டு ஒரு தொழிற்சாலையில் நுழையும்பக்ஷத்தில் அவரை தடுப்பதற்கில்லை அவரை தடுப்பதானது ஒரு குற்றமாகும். அதற்கு இந்தியன் பீனல்கோட் 341-பிரிவின் கீழ் சிக்ஷையுண்டு. (இச்சட்டத்தின் 210-வது பிரிவையும் பார்க்க.) இம்மாதிரி நுழையும்போது பிரஸிடென்டானவர் பலாத்காரத்தைக் கைக்கொள்ளும் பக்ஷத்தில் அதற்காக அவர்பேரில் யாதொரு வித தாவாவும் செய்யப்படுவதற்கில்லை.

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களை குறித்து ஆக்ட் பிரயோகப்படுவது

ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களைக் குறித்த 1888-ம் ஹுத்து ஆக்ட் பிரதேச விஸ்தீரணங்களில் பிரயோகப்படும் படி செய்வது.

198. ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களைக் குறித்து 1888-ம்ஹுத்து ஆக்ட் யாதொரு லோகல் போர்டு விஸ்தீரணத்துக்குப் பிரயோகப்படும்படி லோகல் கவர்ன்மென்டு உத்தரவு செய்யும் பட்சத்தில், அந்த ஆக்டில் இதற்கு விரோதமாய் என்ன நிபந்தனைகள் கண்டிருந்த போதிலும் அவை நிமித்தியமில்லாமலே,—

(a) லிஸென்ஸ் வேண்டுமென்று யாருக்கு விண்ணப்பம் செய்துக்கொள்ள வேண்டுமோ, அவர், அல்லது எந்த ஆக்டின்படி லிஸென்ஸ் கொடுக்கலாமோ அல்லது கொடுப்பதில்லையென்று மறுக்கலாமோ அந்த அதிகாரியானவர்-பஞ்சாயத்து ப்ரெஸிடென்டாவார்.

(b) அந்த ஆக்டின்படி யாதொரு லிஸென்ஸ் கொடுப்பதாகவோ அல்லது கொடுப்பதில்லையென்று மறுத்தோ அல்லது அதை ரத்து செய்தோ அல்லது செலாவணியாக வொட்டாமல் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைத்தோ ப்ரெஸிடென்டு செய்திருக்கும் உத்தரவின் மேல் செய்யப்படும் அப்பீலானது பஞ்சாயத்துக்கு செய்யப்படவேண்டும்; மேலும்,

(c) அந்த ஆக்டின்படி கொடுக்கப்படும் லிஸென்ஸுகளுக்கு இன்ன கட்டணம் விதித்து வாங்கவேண்டுமென்றும், அந்த லிஸென்ஸுகளில் இன்ன நிபந்தங்கள் காணப்படவேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து நிர்ணயிக்க வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவினால் 1888-ம் வருஷத்திய ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களைக் குறித்த ஆக்டானது லோகல் போர்டுகளின் விஸ்தீரணங்களிலும் பிரயோகிக்கப்படலாமென்று கூறுவதாகும். அதாவது லோகல் கவர்ன்மென்டானது யாதொரு குறித்த லோகல் போர்டு விஸ்தீரணத்தில் பிரயோகிக்கப்படுமென்று ஒரு உத்தரவைச் செய்யும் பக்ஷத்தில் அன்று முதல் அவ்வாக்டானது பிரயோகிக்கப்படும். இதன் விஷயமாக 1888-ம் வருஷத்தில் ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களைக் குறித்த ஆக்டையும் அதன்கீழ் கவர்ன்மென்டார் செய்திருக்கும் விதிகளையும் அடியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

MADRAS ACT NO. II OF 1888.

சென்னைப்பட்டணம் 1888-ம் வருஷத்து 2-வது ஆக்ட்டு.

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களையும் விநோதமாய்க் காலங் கழிக்கும் இடங்களையும் மேற்பார்வையிடுவதற்கும் அவைகளுக்கு லிஸென்சு கொடுப்பதற்குமான ஆக்ட்டு.

பீடிகை. ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களையும் விநோதமாய்க் காலங் கழிக்கும் இடங்களையும் மேற்பார்வையிடுவதற்கும் தகுந்த அதிகாரியைக் கொண்டு அவைகளுக்கு லிஸென்சு கொடுப்பிக்க வேண்டி

டியதற்கும் நிபந்தனைகள் ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால் இதனால் விதிக்கப்படுகிறதென்னவெனில்:—

சுருக்கமான பெயர்.

1. (1) இந்த ஆக்ட்டை ஜனங்கள் வழுக்கமாய்க் கூடும் இடங்களைக் குறித்த 1888-ம் ஹுத்திய ஆக்ட்டென்று சொல்லலாம்.

வழங்கத் தொடங்குவது.

(2) இது சட்டமாக ஜாரி செய்யப்படுவது முதற்கொண்டு வழங்கத் தொடங்க வேண்டியது.

வியாபிக்குமிடம்.

(3) சென்னப்பட்டணம் 1884-ம்ஹு 4-வது ஆக்டின்படிக்காவது அந்தந்த காலத்தில் செலாவணியாகிற அதே மாதிரியான வேறு ஆக்டின்படிக்காவது சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியில் முனிஸிபாலிடிகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அல்லது இனிமேல் நிர்ணயிக்கப்படுகிற எல்லாப் பட்டணங்களிலும் இது வியாபிக்கின்றது; மேலும், ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக்கப்போது போர்ட்டு செயின்டு ஜார்ஜ் கெஜட்டில் விளம்பரமூலமாய், அந்த விளம்பரத்தில் கண்ட தேதி முதற்கொண்டு எப்பொழுதும் நிலையாகவாவது கொஞ்ச காலத்திற்காவது குறித்த சந்தர்ப்பங்களில் மாத்திரமாவது சென்னப்பட்டணம் முனிஸிபாலிட்டி எல்லைக்கப்பாலுள்ள போர்ட்டு செயின்டு ஜார்ஜ-ப் ப்ரெஸிடென்ஸியைச் சேர்ந்த வேறு எந்த பிரதேச விஸ்தீரணத்திலாகிலும் இந்த ஆக்டை வியாபிக்கச் செய்யலாம், மேலும் அப்படிப்பட்ட யாதொரு விளம்பரத்தை ரத்து செய்யலாம் அல்லது திருத்தலாம்.

நிவாரணை.

(4) இந்த ஆக்டிலுள்ள தெதுவும் யாதொரு (கிருஸ்தவ) கோவிலுக்காவது - (ஹிந்து) ஆலயத்திற்காவது- (முஸுலி) பள்ளிவாசலுக்காவது - அல்லது ஜனங்கள் ஆராதனை நடத்தும் வேறு எந்த இடத்திற்காவது சம்பந்தப்படமாட்டாது.

அர்த்தம்.

2. இந்த ஆக்டில் சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது வேறாகமொன்றுமில்லாவிட்டால்—

முனிஸிபல் சங்கத்தின் அக்கிராசனாதிபதி என்பது—சென்னைப்பட்டணம் 1884-ம் ஹுத்து 4-வது ஆக்டின்படிக்காவது போர்ட்டு செயின்டு ஜார்ஜ-ல பிரஸிடென்ஸியிலுள்ள டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்டிகளைக் குறித்து அந்தந்த காலத்தில் வழங்கி வருகிற வேறு ஆக்டின்படிக்காவது நியமிக்கப்பட்ட யாதொரு முனிஸிபல் சங்கத்தின் அக்கிராசனாதிபதியென்று அர்த்தமாகும்—

மாஜிஸ்திரேட்டு என்பது—கிரிமினல் புரோசீஜர் கோடின் படி நேமிக்கப்பட்ட மாஜிஸ்திரேட்டென்று அர்த்தமாகும்.

கட்டிடமென்பது—யாதொரு வீடு - குடிசை - பந்தல் அல்லது மேற் கூரையிட்ட அடைப்பிடம் என்று அர்த்தமாகும்.

500 சதுர அடி கொண்ட யாதொரு அடைப்பிடத்தையாவது கட்டிடத்தையாவது லிசென்ஸில்லாமல் ஜனங்கள்வழக்கமாய்க்கூடுவதற்கு உபயோகிக்கக் கூடாதென்பது.

3. இந்த ஆக்ட்டு வழங்கிவருகிற எந்த விஸ்தீர்ணத்திலும் 500 அல்லது அதற்கு மேற்பட்ட சதுர அடி கொண்ட நிலையான அல்லது கொஞ்ச காலத்திற்கு ஏற்படுத்தப்பட்ட யாதொரு அடைப்பிடத்தையாவது கட்டிடத்தையாவது - இதில் பின்னால் சொல்லியிருக்கிறவிதமாய் மூன்னதாகவே ஒரு லிசென்சு பெற்றுக்கொண்டிருந்தாலன்றி, ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்கு அல்லது விநோதமாய்க் காலங்கழிப்பதற்கு உபயோகப்படுத்தக்கூடாது.

லிசென்சுக்காக செய்துகொள்ள வேண்டிய மனு: அதில் என்ன அடங்கியிருக்கவேண்டிய தென்பது.

4. ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடமாகவாவது விநோதமாய் காலங்கழிக்கும்இடமாகவாவது யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டிடத்தை உபயோகிக்கவாகிலும் யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டிடத்தை அப்படிப்பட்ட காரியத்திற்காக கட்டவாகிலும் லிசென்சு பெற்றுக்கொள்ள எவனுக்காவது விருப்பமிருக்கிற பட்சத்தில், அந்த இடம் அல்லது கட்டிடத்திற்கு சொந்தக்காரன் இன்னனென்பதையும், அது இன்ன இடத்திலிருக்கிறதென்பதையும் இன்ன பரிமாணமுள்ளதென்பதையும், இன்னமாதிரியான தென்பதையும் அந்த அடைப்பிடம் அல்லது கட்டிடம் இன்ன வஸ்து வைத்கொண்டு செய்யப்பட்டிருக்கிறது அல்லது செய்வதாக உத்

தேசிக்கப்பட்டிருக்கிற தென்பதையும் அது நிலையாய் எப்போதும் இருப்பதற்காவது கொஞ்சகாலம் வரையில் இருப்பதற்காவது போடப்படுகிறதா அல்லது போடும்படி உத்தேசிக்கப்படுகிறதாவென் பதையும் அது எதற்காக உபயோகப்படுத்த உத்தேசிக்கப்படுகிறதோ அதையுங்கண்டு 5-வது பிரிவில் கண்டிருக்கிற அதிகாரிக்கு ஒரு மனு செய்துக்கொள்ளவேண்டியது.

இன்ன அதிகாரிக்கு மனு செய்துகொள்ள வேண்டியதென்பது.

5. அப்படிப்பட்ட மனுவை - அந்த அடைப்பிடம் அல்லது கட்டிடம் யாதொரு முனிஸிபல் பட்டணத்தி லிருக்கும் பட்சத்தில் அந்த முனிஸிபல் சங்கத்தின் அக்கிராசனாதிபதிக்கும், மற்றப்படி ஒவ் வொரு விஷயத்திலும், அந்த இடம் அல்லது கட்டிடம் கட்டப்பட்டிருக்கிற பிரதேச விஸ்தீரணத்தில் அதிகார முடைய யாதொரு மாஜிஸ்ட்ரேட்டுக்கும் செய்துக் கொள்ளவேண்டி யது.

இடம் அல்லது கட்டிடத்தை அதிகாரி பார்வையிட வேண்டும், மூன்னிருத்தோடு சேர்த்துக் கட்ட வேண்டிய தென்றுவது அதில் மாறுதல் செய்ய வேண்டிய தென்றுவது உத்தரவும் செய்யலாம்.

6. அப்படிப்பட்ட யாதொரு மனுவை வசப்பெற்றுக்கொள் வதின் பேரில், அந்த மனு எந்த அதிகாரிக்கு செய்துகொள்ளப்பட்டதோ அந்த அதிகாரி எதற்காக ஜெனன்சு வேண்டியதாயிருக்கிறதோ அப்படிப்பட்ட இடம் அல்லது கட்டிட த்தை பார்வையிடவேண்டியது ; மேலும் அந்த அடைப்பிடம் அல்லது கட்டிடம் எந்த வஸ் துவைக் கொண்டு கட்டப்பட்டிருக்கிறதோ அதிலாவது, எந்த ஏற்பாட்டின்படி அமைக் கப்பட்டிருக்கிறதோ அதிலாவது, அதில் கூடும்படியான ஜனங்களுடைய பத்தோபஸ் துக்காக என்னென்ன முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதோ அவைகளிலாவது, யாதொரு மாறுதலோயாகிலும் பின்னும் சேர்க்கையாக யாதொன்றையாகிலும் செய்யும்படி அந்த மனுதாருக்கு எழுத்து மூலமாய் அறிக்கை செய்து உத்தரவுபண்ணலாம், மேலும் அப்படிப்பட்ட மாறுதலோ யாவது சேர்க்கையான யாதொன்றையாவது செய்து முடிக்கிற வரையில் ஜெனன்சு கொடுக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

7. (a) அடைப்பிடம் அல்லது கட்டிடம் எப்படி உத்தேச மோ அப்படி ஜனங்கள் வழக்கமாய்க் கூடவர வது விநோதாய்க் காலங் கழிக்கவாவீது அதை யாருக்குங் கெடுதி நேரிடாமல் உபயோகப் படுத்தலாமென்றும்,

இன்னபடிக்கானால் அதிகாரி லைசென்சு கொடுக்க வா மென் பது.

(b) அது அமைந்திருக்கும் இடத்தின் விஷயமாக வாவது அதின் உரிமைச் சுதந்தரத்தின் விஷயமாகவாவது உத்தேசிக்கப்பட்ட காரியத்தின் விஷயமாகவாவது யாதொரு ஆட்சேபனையு மில்லையென்றும்,

அந்த அதிகாரிக்குத் திருப்திகரமாய்த் தோற்றுகிற பட்சத்தில் அவர் லைசென்சு எழுதித் தன் கையெழுத்து போட்டு மனுதாரனுக்குக் கொடுக்க வேண்டியது. அந்த லைசென்சில் அந்த அடைப்பிடம் அல்லது கட்டிடத்தையும் அது எந்த காரியத்திற்கு உபயோகப்படுத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் காரியத்தையும் காணவேண்டியது. அப்படிப்பட்ட லைசென்சானது ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக்கப்போது விதி ஏற்படுத்தி உத்தரவு பண்ணுகிற நமூனாப்படிக்கும் கட்டணத்திற்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டுமிருக்கவேண்டியது.

அந்த அதிகாரிக்கு மேற்கண்டபடி திருப்திகரமாய்த் தோற்றாத பட்சத்தில், தான் எந்த ஹேதுக்களைக்கொண்டு நிராகரிக்க வேண்டியிருக்கிறதோ அந்த ஹேதுக்களைக் கண்டெழுதி லைசென்சு கொடுக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

8. இந்த ஆக்டின்படி கொடுக்கப்படுகிற ஒவ்வொரு லைசென்சிலும் அது இத்தனை நாள் செலாவணியாகிக் கொண்டுவருமென்று காண வேண்டியது, அந்த காலம் முடிந்த பிறகு அது செலாவணியாகாமல் ரத்தாய்ப்போகும்.

லைசென்சு இத்தனை நாள் செலாவணியாக வேண்டியதென்று அதில் காணவேண்டியது.

9. இந்த ஆக்ட்டின்படி லைசென்சு கொடுக்கிற எந்த அதிகாரியாவது—

லைசென்ஸை ரத்து செய்வது அல்லது கொஞ்சகாலம் செலாவணியாக வொட்டாமல் பண்ணுவது.

(a) லீசென்ஸ் மோசடியாகப் பெற்றுக் கொள்ளப் பட்டதென்றும்,

(b) அடைப்பிடம் அல்லது கட்டிடம்-ஜனங்கள் வழக் கமாய்க் கூடுகிற அல்லது வினோதமாய்க் காலம் கழிக்கிற காரியங்க ளில் எந்த காரியத்திற்காக லீசென்சு கொடுக்கப்பட்டதோ அது தவிர வேறே காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டதென்றும்,

(c) எந்த காரியத்திற்கு லீசென்சு கொடுக்கப்பட்ட தோ அந்த காரியத்திற்கு அந்த இடம் அல்லது கட்டிடத்தை பய மில்லாமல் இனி உபயோகப்படுத்தக் கூடாதென்றும்,

நம்புவதற்கு தனக்கு ஹேதுவிருந்தால், அந்த ஹேதுக்களை எழுதி அந்த லீசென்ஸை ரத்து செய்யலாம், அல்லது கொஞ்சகாலம் செலாவணியாக வொட்டாமல் பண்ணலாம்.

(10) (1) இந்த ஆக்டின்படி லீசென்சு கொடுக்கவேணு மென்று மனு செய்துக்கொள்ளுகிறவன்-இதில் 6-வது பிரிவின்படிக்காவது 7-வது பிரிவின் படிக்காவது 9-வது பிரிவின்படிக்காவது செய் யப்படும் எந்த உத்தரவும் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டி ரேட்டினால் செய்யப்பட்டதாயிருந்தா லொழிய மற்றப்படி அந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்துக்கொள்ளலாம்.

6-வது 7-வது அல் லது 9-வது பிரிவின் படி செய்யப்படுகிற உத்தரவின் பேரில் அப்பீல்.

(2) எந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்துகொள்ளப் படுகிறதோ அந்த உத்தரவை மனுதாரன் பெற்றுக்கொண்ட தேதி முதல் 30-நாளைக்குள் அப்பீல் செய்ய வேண்டியது.

(3) யாதொரு முனிஸிபல் பட்டணத்தில் அந்த முனிஸி பல் கௌன்சிலும், மற்ற ஒவ்வொரு பிரதேச ஸ்தாபனத்திலும் சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டுக்கு அல்லது பிரதம உத்தரவு ஒரு சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டினால் செய்யப்பட்டிருந்தால் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட்டுக்கும் அப்பீல் செய்துக்கொள்ளவேண்டியதாகும்.

(4) 5-வது பிரிவின்படி எந்த அதிகாரிக்கு மனுசெய்து கொள்ளப்பட்டதோ அந்த அதிகாரியைப்போலவே அப்பீல் அதி காரிக்கும் அடைப்பிடம் அல்லது கட்டிடத்தை பார்வையிடவும்

அதில் மாறுதல் செய்யவேண்டியதென்றாலும் முன்னிருந்ததோடு சேர்த்துக் கட்டவேண்டியதென்றாலும் உத்தரவு செய்யவும் அதிகாரமுண்டு; மேலும் அவர் லிசென்சு கொடுக்கலாம், கொடுக்காமல் நிறுத்திவிடலாம், அல்லது அவருக்கு யுக்தமாகத் தோற்றுகிற படி வேறு உத்தரவு செய்யலாம்.

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடத்தில் பிரவேசிக்கவும் லிசென்சைப் பார்வையிடவும் இனி உபயோகிக்க வொட்டாமல் தடுக்கவும். அதிகாரம்

11. எந்த அடைப்பிடம் அல்லது கட்டிடத்திற்கு இந்த ஆக்டின்படி லிசென்சு வேண்டியிருக்கிறதோ அந்த அடைப்பிடம் அல்லது கட்டிடத்திற்குள் எப்போதாகிலும் பிரவேசிப்பதற்கும், லிசென்சு கொடுக்கப்பட்டிருந்தால் அதைப் பார்வையிடுவதற்கும், லிசென்சு இல்லாதபட்சத்திலாவது லிசென்சில் கண்ட நிட்டங்கள் அனுசரிக்கப்படாத பட்சத்திலாவது, உடனே ஜனங்களுக்குப் பெருத்த அபாயம் நேரிடுமென்று பயப்படதனக்கு முகாந்தரமிருக்குமாகில், அப்படிப்பட்ட அடைப்பிடம் அல்லது கட்டிடத்தை ஜனங்கள் வழக்கமாய்க்கூடும் இடமாகவாவது விநோதமாய்க் காலங்கழிக்கும் இடமாகவாவது இனி உபயோகிக்காதபடி தடுப்பதற்கும் யாதொரு மாஜிஸ்டிரேட்டுக்காவது ஸ்டேஷன் விசாரணையுள்ள அல்லது ஹோட் கான்ஸ்டேபில் அந்தஸ்துக்கு மேற்பட்டுள்ள போலீஸ் உத்தியோகஸ்தருக்காவது அதிகாரமுண்டு.

இந்த ஆக்டின் படி நடத்தப்படும் எவ்வித நடவடிக்கைகளையும் பற்றி டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட்டு புனராலோசனை செய்யலாம்.

12. டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட்டு-இந்த ஆக்ட்டின்படி நடத்தப்பட்ட எந்த நடவடிக்கையைச் சேர்ந்த கொர்ட்டையும் வரவழைத்துப் பரிசோதிக்கலாம், அதற்குச் சம்பந்தமான எவ்வித ரிபோர்ட்டையும் வரவழைக்கலாம், பின்னும் எவ்வித விசாரணையையும் செய்யலாம் அல்லது செய்விக்கலாம், மேலும் அந்த நடவடிக்கை நடத்திய அதிகாரி என்ன உத்தரவு செய்திருக்கலாமோ அவ்விதமான உத்தரவையும் செய்யலாம்.

தெண்டனைகள்.

13 யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டிடத்தை தன்னுடைய நேர் விசாரணையில் வைத்துக்கொண்டிருக்கிற எவனாவது லிசென்சு பெறாமல் ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்கு அல்லது விநோத

மாய்க் காலங்கழிப்பதற்கு உபயோகிக்கவொட்டினாலும், இந்த ஆக்டின்படி லைசென்சு பெற்றுக்கொண்ட அப்படிப்பட்ட லைசென்சில் கண்ட நிபந்தனைகளில் எதற்காவது விரோதமாய் அப்படி உபயோகிக்கவொட்டினாலும், அப்படிப்பட்ட ஒவ்வொருவனும் யாதொரு மாஜிஸ்டிரேட்டுக்கு முன்பாக குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதின்பேரில் ஐந்நூறு ரூபாய்க் கதிகப்படாமல் அபராதத்திற்குள்ளாவான்.

விதிகள் செய்ய அதிகாரம்.

14. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-இந்த ஆக்ட்டு ஜாரியான பிறகு எந்தக் காலத்திலாவது அப்போதைக்கப்போதாவது இந்த ஆக்ட்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்கு இந்த ஆக்ட்டுக்கு ஒற்றுமையான விதிகளைச் செய்யலாம் மேலும் அந்த விதிகளைத் திருத்தலாம் அல்லது ரத்து செய்யலாம், அப்படிப்பட்ட எல்லா விதிகளும் போர்ட்டு செயிண்டு ஜார்ஜு கெஜட்டில் பிரசுரமாகி அந்தப்படிப் பிரசுரஞ் செய்யப்படுகிற தேதியிலாவது அவைகளைப் பிரசுரஞ் செய்கிற விளம்பரத்தில் குறிக்கப்படுகிற பிந்திய தேதியிலாவது வழங்கத் தொடங்குவதாகும்.

3வது சட்டத்தின்கீழ் சென்னை கவர்ன்மெண்டார் செய்திருக்கும் விதிகள்.

(1-10-1909-முதல் அடியில்கண்ட விதிகள் அமுலுக்கு வந்திருக்கின்றன.)

I. வருஷாந்திர லைசென்ஸுகளும், தாத்காலிகமான லைசென்ஸுகளும்.

1888-ம் ஜூத்திய ஜனங்கள் வழக்கமாய்க்கூடும் இடங்களைப்பற்றின சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களுக்கும், விநோதமாய்க் காலம் கழிக்கும் இடங்களுக்கும் கொடுக்கப்படக்கூடிய லைசென்ஸுகள் இரண்டுவிதமாகும். அதாவது (1) வருஷாந்திர லைசென்ஸ் (2) தாத்காலிகமான லைசென்ஸ். தாத்காலிகமான லைசென்ஸுகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மூன்றுமாத கால அளவுக்கு மேற்படாமல் உள்ள கால அளவுகளுக்கு கொடுக்கப்படும். வருஷாந்திர லைசென்ஸ்கள் சுலபமாய்ப்பற்ற முடியாத சாமான்களைக்கொண்டு கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களுக்கு மாத்திரந்தான் கொடுக்கப்படும். ஆனால் அப்படிப்பட்ட கட்டிடங்களின் விஷயமாக அவைகளில் ஏதாவது ஒருகாலத்தில் ஜனங்கள் கூடும்படியான அல்லது விநோதமாய்க் காலங்கழிக்கும்படியான இடங்களாக உப

யோகிப்பதற்கு தேவையாயிருக்கும்பக்ஷத்தில் அவைகளுக்கு தாத்காலிகமான லைசென்ஸ்களையும் கொடுக்கலாம். பந்தலிடப்பட்ட கட்டிடங்களுக்காவது அல்லது மரம், பாய்கள் அல்லது வேறே சுலபமாய் தீப்பற்றும்படியான சாமான்களைக்கொண்டு கட்டப்பட்ட கட்டிடங்களுக்கும், கூடாரங்களுக்கும் தாத்காலிகமான லைசென்ஸ்தான் கொடுக்கப்படவேண்டும். திறந்தவெளியான சுவரால் அடைப்படைக்கப்பட்ட இடங்களை உபயோகப்படுத்துவதற்கு இரண்டுவிதமாகவும் லைசென்ஸுகள் கொடுக்கப்படலாம். ஆனால்; அந்த இடங்களுக்கு மேற்கூரை அல்லது கட்டிடம் யாதொன்றும் இருக்கக் கூடாது. ஒருதரம் கொடுக்கப்பட்ட லைசென்ஸானது, அப்படி அதைக் கொடுப்பதற்கு யோக்கியதையுள்ள அதிகாரியால் அவருடைய யுக்தானுசாரம் புதுப்பிக்கப்படலாம்.

11. கட்டணங்களின் தொகை.

மேலே 1-வது விதியில் விவரிக்கப்பட்டிருக்கும் யாதொரு லைசென்ஸானது கொடுக்கப்படும்பொழுது அல்லது புதுப்பிக்கப்படும்பொழுது அடியில்கண்டபிரகாரம் கட்டணம் விதிக்கப்படவேண்டும் :—

1. வருஷாந்திர லைசென்ஸுக்கு.	1000 சதுர அடியுள்ள அல்லது அதற்கு குறைவான ஒரு விஸ்தீரணத்திற்கு 5 ரூபாய்; அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 500 சதுர அடியுள்ள அல்லது அதற்கு குறைவாயுள்ள விஸ்தீரணத்திற்கு 2-8-0 ரூ வீதம் சேர்த்து கொடுக்கப்படவேண்டும்.
2. பந்தலிடப்பட்ட அல்லது மரத்தினால் அல்லது பாய்களினால் அல்லது வேறே சுலபத்தில் தீப்பற்றக்கூடிய சாமான்களினால் கட்டப்பட்ட ஓர்கட்டிடத்திற்கு அல்லது ஓர்கூடாரத்திற்கு 3-மாதங்களுக்கு அதிகப்படாமல் உள்ள ஒரு கால அளவிற்காக தாத்காலிகமான லைசென்ஸுக்கு.	1000-சதுர அடியுள்ள அல்லது அதற்கு குறைந்த விஸ்தீரணமுள்ள ஒரு இடத்திற்கு மாதம்ஒன்றுக்குஅல்லது அதன் பாகத்திற்கு 5-ரூபாய்; 1000-சதுர அடிக்கு மேற்பட்டுள்ள ஒவ்வொரு 500-சதுர அடி அல்லது அதற்கு குறைந்த ஒரு விஸ்தீரணத்திற்கு மாதம் ஒன்றுக்கு அல்லது அதன் பாகத்திற்கு 2-8-0 ரூபாய் வீதம் சேர்த்து கொடுக்கப்பட வேண்டும்.
3 பந்தலிடப்படாத அல்லது சுலபத்தில் தீப்பற்றக்கூடியசாமான்	1000-சதுர அடியுள்ள அல்லது அதற்கு குறைந்த விஸ்தீரணமுள்ள

களினுலல்லாமல் வேறு சாமான்களி னுல் கட்டப்பட்டிருக்கும் ஒரு கட்டி டத்திற்கு அந்த கட்டிடமானது ஏதோ ஒரு சமயத்தில் ஜனங்கள் கூடும்படியான அல்லது விஷேத மாய் காலங் கழிக்கும்படியான இட மாக உபயோகப்படுத்தப்படும் பக்ஷத் தில் மூன்று மாத கால அளவுக்கு தாத்காலிகமான லைசென்ஸுக்கு.

ஒரு இடத்திற்கு மாதம் ஒன்றுக்கு அல்லது அதன் பாகத்திற்கு 1 ரூபாய்; 2000-சதுர அடிக்கு மேற்பட்டுள்ள ஒவ்வொரு 500-சதுர அடி அல்லது அதற்கு குறைந்த ஒரு விஸ்தீரணத் திற்கு மாதம்ஒன்றுக்கு அல்லதுஅதன் பாகத்திற்கு 0-8-0 ரூபாய் வீதம் சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும்

4. மேற்கூரை அல்லது மேல் கட்டிடம் இல்லாமல் அடைப்படைத் துள்ள ஓரிடத்திற்கு வருஷாந்திர லைசென்ஸுக்கு.

2000-சதுர அடி அல்லது அதற்கு குறைந்த ஒரு விஸ்தீரணத்திற்கு 2-ரூபாய்; 2000-சதுர அடிக்கு மேல் உள்ள ஒவ்வொரு 1000-சதுர அடி அல்லது அதற்கு குறைந்த விஸ்தீர ணத்திற்கு 1-ரூபாய் விதம் சேர்த் துக் கொடுக்கப்பட வேண்டும்.

5. மேற்கூரைஅல்லது மேல்கட் டிடம் ஒன்றுமில்லாத (திறந்தவெளி யான அடைப்புள்ள ஓரிடத்திற்கு தற்காலிகமான லைசென்ஸுக்கு

2000-சதுர அடி அல்லது அதற்கு குறைந்த ஒரு விஸ்தீரணத்திற்கு மாதம் ஒன்றுக்கு அல்லது அதற்கு குறைந்த கால அளவிற்கு ஒரு ரூபாய் 2000-சதுர அடிக்கு மேலாக உள்ள ஒவ்வொரு 1000-சதுர அடிக்கு அல் லது அதன் பாகத்திற்கு ஒரு மாதம் அல்லது அதன் பாகத்திற்கு 0-8-0 அணு விதம் சேர்த்துக் கொடுக்கப் படவேண்டும்.

கட்டிடங்கள் அல்லது அடைப்பு அடைத்த இடங்கள் விளக்குகள் இல் லாமல் பகலில் மாத்திரம் உபயோகப்படுத்தப்படும்பக்ஷத்தில் தாத்காலிக மான லைசென்ஸுகளுக்கு உள்ள கட்டணங்கள் மேலே சொல்லப்பட்ட விதி தங்களுக்கு பாதியாக விதிக்கப்படவேண்டும்.

விவரணம்.—இந்த விதிகளின் காரியங்களுக்காக எந்த கட்டிடங்களுக் காக லைசென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த கட்டிடங்கள் கொஞ்சபாகம் சுலப மாக தீப்பற்றக்கூடிய சாமான்களைக்கொண்டும் கொஞ்சபாகம் சுலபமாக தீப்பற்றமுடியாத சாமான்களைக்கொண்டும் கட்டப்படும்பக்ஷத்தில் மொத்த கட்டிடமும் சுலபமாக தீப்பற்றக்கூடிய கட்டிடமாகவே கவனிக்கப்படும். ஓர் இடமானது கொஞ்சபாகம் கட்டிடமாகவும் கொஞ்சபாகம் மேற்கூரை

யில்லாத அடைப்படைக்கப்பட்ட இடமாகவும் இருக்கும்பக்ஷத்தில் கட்டிட மாகவுள்ள இடத்தின் விஸ்தீரணத்திற்குமாத்திரந்தான் செலுத்தவேண்டிய கட்டணத்தொகையை கணக்கிடவேண்டும்.

III. அந்த இடம் அல்லது கட்டிடத்தின் அமைப்பு.

டிஸ்டிரிக்ட்டுமாஜிஸ்டிரேட் அல்லது சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்இவர் களுடைய தனியான அனுமதி (Special Permission) இல்லாமல் யாதொரு பத்தலிட்ட கட்டிடம் அல்லது மரம், பாய் அல்லது வேறே சுலபத்தில் தீப் பற்றக்கூடியதான சாமான்களைக்கொண்டு கட்டப்பட்ட கட்டிடம், கூடாரம் இவைகள் ஒரு திறந்தவெளியான இடத்தில் அமைக்கப்பட்டாலொழிய லைசென்ஸ் கொடுக்கப்படக்கூடாது. அப்படிப்பட்ட கட்டிடத்தின் யாதொரு பாகமும் அதற்கு அடுத்தாப்போல் அருகாமையில் உள்ள கட்டிடத்திற்கு 50-கெஜங்களுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.

IV. வெளியே போதும் வாயில்களின் சங்கியையும், பரிமாணமும் இதர விவரங்களும்.

டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட் அல்லது சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டி னுடைய தனியான அனுமதி (Special Permission) யில்லாமல் யாதொரு ஜனங்கள் வழக்கமாய் கூடும்படியான இடம் அடியில்கண்ட அம்சங்களுக்கு ஒத்தாப்போல் இருந்தாலொழிய லைசென்ஸ் கொடுக்கப்படக்கூடாது. அதா வது:—

(a) அந்த இடமானது குறைந்த பக்ஷம் 10-அடிக்கு குறையாமல் அகலமுள்ள இரண்டு முக்கியமான வெளியே போவதற்கான வாயில் யுடையதாய் இருக்கவேண்டும். கதவுகள் வெளிப்பக்கம் திறக்கும்படியாக இருக்கவேண்டும். இந்த பெரிய வெளியே போகும்படியான வாயில்கள் சுலப மாக திறக்கும்படியாகவும் உள்ளேயிருந்து உடனே திறக்கும்படியாகவும் அமைக்கப்படவேண்டும்.

(b) ஒரு கட்டிடத்தின் விஸ்தீரணமானது 1000-சதுர அடிக்கு அதிகப் படும்பக்ஷத்தில் அதிகமாயுள்ள ஒவ்வொரு 500-சதுர அடிக்கும் தனியாக ஒரு வெளியே போகும்படியான வழியானது அமைக்கப்படவேண்டும். அந்த வழியானது 8-அடி அகலத்திற்கு குறையாமல் இருப்பதுமல்லாமல் அந்தக் கட்டிடம் அல்லது அடைப்படைக்கப்பட்ட இடத்தின் வெளி சுவர்களில் தருந்தபடியான தூரத்திற்கு ஒருதரம் வெளியேபோகும் வழியானது அமைக் கப்படவேண்டும். அப்படிப்பட்ட தனியான வாயில்கள் அந்த கட்டிடம் அல் லது அடைப்படைக்கப்பட்ட இடமானது பொதுஜனங்கள் கூடும்படியான ஓர் இடமாக உபயோகப்படுத்தப்படுங்காலத்தில் மூடிவைக்கப்படலாம். ஆனல்

அவசர சமயங்களில்அவைகளை உபயோகப்படுத்தும்படியான மார்க்கமானது லெசென்ஸின் 4-வது கலத்தில் விவரிக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட மார்க்கங்கள் போதுமா அல்லவா என்பது லெசென்ஸ் கொடுக்கும் அதிகாரியால் தீர்மானிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒவ்வொரு தனியான வாயிலும் "வெளியே போகும் வழி" என்னும் பதங்களுள்ள ஒரு பலகையினால் காட்டப்படவேண்டும். அந்த பதங்கள் அந்த பலகைகளின்மேல் இங்கிலீஷ் பாஷையிலும் அதற்கு சரியான சுதேச பாஷையிலும் பெரிய எழுத்துக்களில் சுலபமாய் புரியும்படியாக அச்சிடப்படவேண்டும்.

V. தீப்பற்ற வொட்டாமல் தடுப்பதும், தீயை அணைப்பதும்.

லெசென்ஸ் கொடுக்கப்படும் இடங்களுக்குள் அல்லது இடங்களின் மேல் நேரக்கூடியதீயானது வரவொட்டாமல் தடுப்பதற்கும், அணைப்பதற்கு மாக, லெசென்ஸ் கொடுக்கும் அதிகாரியின் அபிப்பிராயத்தில் போதுமான தாகத் தோன்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டாலொழிய யாதொரு இடத்திற்கும் இந்த சட்டத்தின்கீழ் லெசென்ஸ் கொடுக்கப்படக் கூடாது. எந்தெந்த மாதிரியாக முன் ஜாக்கிரதைகள் செய்யப்பட வேண்டுமென்று அவசியமாயிருக்குமோ அவை லெசென்ஸின் 8-வது கலத்தில் விவரிக்கப்பட வேண்டும். சுலபமாக தீப்பற்ற கூடியதல்லவென்று கருதப்படும் சாமான்களைக்கொண்டு கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களின் விஷயமாக 100-சதுர அடிக்கு 5-காலன்கள் விகிதத்திற்கு குறையாமல் ஜலம் சர்ப்பரா செய்யும் படியாக கட்டாயப்படுத்தப்பட வேண்டும் இந்த ஜலமானது லெசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கும் பொது ஜனங்கள் கூடும்படியான இடத்தின் சுவர்களைச் சேர்ந்தாப்போல் தயாராக இருக்கும்படி தொட்டிகளில் (Buckets) வைக்கப்பட்டிருக்க வேண்டும். பந்தலிட்ட கட்டிடங்களின், அல்லது, மரம் அல்லது பாய்கள் அல்லது வேறே சுலபமாக தீப்பற்றக் கூடிய வஸ்துக்களால் கட்டப்பட்ட கட்டிடங்களின் விஷயத்தில் 100 சதுர அடிக்கு 15-காலனுக்கு குறையாமல் ஜலமானது தயாராக இருக்க வேண்டும். அவைகள் தொட்டி (Buckets) களில் பாதி அந்தக் கட்டிடத்தின் வெளி சுவருக்கு வெளியேயும் பாதி உள்ளேயுமாக வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனல், டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டானவர், யாதொரு கட்டிடத்தின் அமைப்பு அல்லது சன்னிவேசத்தையும், அதன் உபயோக விதமும் இன்னும் மற்ற காரணங்களையும் உத்தேசித்து அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது அடைப்படைக்கப் பட்டுள்ள இடம் இவைகளுக்கு மேலே சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கு தகுந்த மாற்றுதல்களுடன் ஜலம் சர்ப்பரா செய்வதெப்படி என்பதைப் பற்றியும் போதுமானதும் தக்கதுமான குறைந்த பக்ஷம் இருக்க வேண்டிய ஜலத்தின் அளவு இவ்வளவென்று நிர்ணயித்து ஒரு லெசென்ஸ்

கொடுக்கும்படி லைசென்ஸ் கொடுக்கக் கூடிய அதிகாரியை அதிகாரப்படுத்தலாம்.

VI. நழனுக்களும், லைசென்ஸுகளின் நிபந்தனைகளும்.

இந்த ஆக்டின் 7-வது பிரிவின்கீழ் கொடுக்கப்படும் ஒவ்வொரு லைசென்ஸும் இதன்பின்னால் தெரிவிக்கப்பட்டிருக்கும் நமூனாப் பிரகாரம் நிபந்தனைகளுக்கு அடங்கியும் கொடுக்கப்பட வேண்டும். இன்னும் அந்த நிபந்தனைகள் அந்த லைசென்ஸின் கீழேயே அச்சிடப்பட்டிருக்க வேண்டும். அதாவது:—

இந்த லைசென்ஸ் அடியில் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்:—

(1) எந்த விதமான சந்தர்ப்பத்திலும் லைசென்ஸ் கொடுக்கப்பட்ட வளவுக்குள் தீ அல்லது பர்தோபஸ்துடனில்லாத வீளக்கானது இருக்கக் கூடாது.

(2) தொங்கவிடப்பட்ட விளக்குகள் உலோகக் கம்பி அல்லது கழியினால் தொங்கவிடப்பட வேண்டும்.

(3) லைசென்ஸ் கொடுக்கப்பட்ட இடத்திற்குள் அல்லது இடத்தில் ஒருநாளைக்கு வேண்டிய அளவுக்கு மேலாக, சுலபத்தில் தீப்பற்றக் கூடிய அல்லது வெடிக்கச் கூடிய சாமான்கள், உதாரணமாக, பெட்ரோலியம், திரோவின் ஆயில், பாணவேடிக்கை சாமான்கள், வெடி மருந்து முதலியவைகள் வைத்துக்கொள்ளப்படக் கூடாது.

(4) இந்த லைசென்ஸில் 4-வது கலத்தில் சொல்லப்பட்டிருக்கும் முதன்மையாக அமைக்கப்படும் வாயில்கள், பொது ஜனங்கள் லைசென்ஸ் கொடுக்கப்பட்ட வளவை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கும்போது எப்பொழுதும் தாழ்ப்பாளிடாமலும் அடைப்பாயிராமலும் திறக்கப்பட்டிருக்க வேண்டும்.

(5) லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரிகளின் எழுத்துமூலமாக உள்ள அனுமதியில்லாமல் இப்பொழுது லைசென்ஸ் கொடுக்கப்பட்ட இடத்தில் யாதொரு பெரியதோர் கட்டிட அமைப்பின் மாறுதல் ஏற்படக்கூடாது.

(6) லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியினிடமிருந்து தனியான அனுமதியன்றி அந்த வளவானது இரவு 8-மணிக்கு மேலாக திறந்து வைக்கப்படக்கூடாது.

(7) இந்தச் சட்டத்தின் 1-வது பிரிவின்கீழ், கேட்கப்பட்டபோது லைசென்ஸ்தாரர் லைஸென்ஸைக் காட்டவேண்டும்.

(8) லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியின் அனுமதியின்றி இந்த லைசென்ஸானது மாற்றப்படக்கூடாது.

(9) லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியும், இதற்காக அவரால் கிரமமாக அதிகாரப்படுத்தப்பட்ட அவருக்குக் கீழ்ப்பட்ட யாதொரு நபரும், லைசென்ஸ் கொடுக்கப்பட்ட வளவில் விநோதக்காக்ஷி நடக்கும் காலத்தில் அமைதியைக் காப்பாற்றும்படி தனியாக அனுப்பப்பட்டிருக்கும் யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தரும், லைசென்வினுடைய நிபந்தனைகள் சரியாக அனுசரிக்கப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்கு அந்த இடத்திற்கு எக்காலத்திலும் நுழையும்படியாக இருக்கவேண்டும்.

லைசென்ஸ் கொடுத்தல் அதிகாரி.

தறிப்பு :—லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியானவர், பொதுஜன சௌக்கியம், சௌகரியம் பற்றோபஸ்து இவைகளை உத்தேசித்து லைசென்வில், தமக்கு யுக்தமாகத் தோன்றும் வேறே நிபந்தனைகளையும் சேர்க்கலாம்.

VII. சுலபமாக தீப்பற்றக்கூடிய சாமான்களினால் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களுக்கும் கூடாரங்களுக்கும், மின்னும் அதிகமான நிபந்தனைகள்.

பந்தலிட்ட கட்டிடம் அல்லது மரம், பாய்கள் அல்லது வேறே சுலபமாக தீப்பற்றக்கூடிய சாமான்களைக்கொண்டு கட்டப்பட்ட ஒரு கட்டிடம் அல்லது ஒரு கூடாரம் (Tent) இவைகளின் விஷயமாக அடியில்கண்ட மின்னுமுள்ள நிபந்தனைகளும் லைசென்ஸ் நமூனாவில் அச்சிடப்பட்டு செலாவணி யாக்கப்படவேண்டும் :—

(10) இதனால் லைசென்ஸ் கொடுக்கப்பட்ட கட்டிடம் அல்லது அடைப்பிடத்தின் சுவர்களின் பக்கத்திலாவது அல்லது கம்பங்களிலாவது யாதொரு விளக்கும் வைக்கப்படக்கூடாது அந்த சுவர் அல்லது கூரையிலிருந்து 5-அடிகளுக்குள்ளாக வைக்கப்படவுங்கூடாது.

(11) லைசென்ஸ் கொடுக்கப்பட்ட வளவின் வெளி சுவர்களின் எந்த பாகத்திலிருந்தாவது நூறு கெஜங்களுக்குள் லைசென்ஸ்தாரராலாவது அல்லது அவருடைய வேலைக்காரர்களாலாவது யாதொரு பாண்வேடிக்கையும் கொளுத்தப்படக்கூடாது.

(12) லைசென்ஸ் கொடுக்கப்பட்ட வளவுக்குள் புகைச் சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கக் கூடாது.

VIII. லைசென்ஸ் ரத்து செய்யப்படுவதும் நிறுத்தி வைக்கப்படுவதும்.

மேலே சொல்லப்பட்ட VI-வது, VII-வது பிரிவுகளின்கீழ் கொடுக்கப்படும் லைசென்ஸுகளில் உள்ள நிபந்தனைகளுக்கு அடியில் இந்த ஆக்டின் 9-வது பிரிவும் அச்சிடப்பட வேண்டும்.

5-ம் பாகம்.

சகாயகரமான சட்ட நிபந்தனைகளும், தண்டனைகளும்.

இந்த பாகத்தில் இரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன 12-வது அத்தியாயத்தில் லோகல் கவர்ன்மென்டாரும், டில்டிரிக்ட்டு போர்டும், தாலூக்கா போர்டு, பஞ்சாயத்து இவர்களும் இந்த சட்டத்தை யொட்டி தங்களுக்கு தகுதியெனத் தோற்றும் விதிகளையும், சகாயச் சட்டங்களையும் செய்யலாமென்று கூறப்பட்டுள்ளது. இன்னும் அந்த விதிகளையும், சகாயச் சட்டங்களையும் எவ்வாறு செலாவணியாக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. 13-வது அத்தியாயத்தில் இந்த சட்டத்தின் அம்சங்களை மீறி நடப்பவர்களுக்கு அபராதம் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது. எந்தெந்த மாதிரியாக மீறி நடப்பதானது ஒருகுற்றமாகுமென்று 13-வது அத்தியாயத்திலுள்ள பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ளது.

12-ம் அத்தியாயம்.

சகாயகரமான சட்ட நிபந்தனைகள்.

விதிகளும், ஷெட்யூல்களும்.

விதிகள் செய்ய லோகல் கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

199. (1) லோகல் கவர்ன்மென்டானது-இந்த ஆக்டுக்கு மூரண்படாமலிருக்கும்படி அதிற் கண்ட சகல காரியங்களையுமாவது அவைகளில் எவையாவது நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்வதுமல்லாமல், எந்தநடவடிக்கைக் குறிப்புக்காக நமூனா ஏற்படுத்த வேண்டுமென்று தாங்கள் அபிப்பிராயப்படுகிறார்களோ அந்த நடவடிக்கை குறிப்புக்காக நமூனாக்களையும் நிர்ணயிக்கலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு பாதகம் இல்லாமலும்—

(a) இந்த ஆக்டின்படி வெளிப்படையாய் நிர்ணயிக்கப்படவேண்டியிருக்கிற அல்லது நிர்ணயிக்கப்படுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற சகல விஷயங்களைக் குறித்து,

(b) எலெக்ஷன்களில் அங்கத்தினர் ஸ்தானங்களுக்கு நிற்கும் அபேக்ஷகர்களால் செய்யப்படவேண்டிய டிபாசிட் தொகைகள்

உள்படவும் அப்படிப்பட்ட டிபாசிட்டுகள் எந்தெந்த நிபந்தனைகளின் கீழ் பறிமுதல் செய்யப்படலாமென்பது உள்படவும் ப்ரெஸிடென்டுகள், வைஸ் ப்ரெஸிடென்டுகள், லோகல் போர்டு அங்கத்தினர்கள் இவர்களுடைய எலெக்ஷன் சம்பந்தமாகயிருந்து ஆனால், இந்த சட்டத்தில் ஸ்பஷ்டமாக ஏற்பட்டிராத எல்லா விஷயங்களைக் குறித்தும்,

ஆனால், ஒரு டிஸ்ட்ரிக்ட்டு அல்லது தாலூக்கா போர்டுக்கு எலெக்ஷனுக்காக நிற்கும் அபேக்ஷகர்களின் விஷயத்தில் கேட்கப்பட்ட டிபாசிட் தொகையானது 100 ரூபாய்க்கு அதிகப்படக் கூடாது.

ஆனால், இன்னும் யாதொரு லோகல் போர்டுக்கு எலெக்ஷனுக்காக நிற்கும் ஒரு ஆதித் திராவிட அபேக்ஷகரிடமிருந்தாவது அல்லது ஒரு பஞ்சாயத்துக்கு எலெக்ஷனுக்காக நிற்கும் யாதொரு அபேக்ஷகரிடமிருந்தாவது யாதொரு டிபாசிட் தொகையும் கேட்கப்படக் கூடாது.

(c) எலெக்ஷன்களின் சம்பந்தமாய் விசாரணைகள் நடத்துவதைக் குறித்தும் விவாதங்களைத் தீர்மானிப்பதைக் குறித்தும்,

(d) இன்ன நிட்டங்களின்பேரில் லோகல் போர்டார் சொத்தை எடுத்துக்கொள்ளலாம் அல்லது அப்படிப்பட்ட போர்டுகளுக்குச் சங்கிரமித்தாவது சொந்தமாகவாவது இருக்கிற சொத்தை இன்ன நிட்டங்களின்பேரில் விற்பனை மூலமாகவாகிலும் அடமானம் (பந்தகம்) மூலமாகவாகிலும் குத்தகைக்கு விடுவது மூலமாகவாகிலும் பரிவர்த்தனை மூலமாகவாகிலும் மற்றப்படியாகிலும் டிரான்ஸ்பர் செய்யலாமென்பதைக் குறித்தும்,

(e) ப்ராவிடென்ட் பண்ட் என்னும் எதிர்கால சகாயநிதி ஸ்தாபனங்களை நடத்துவதைக் குறித்தும்,

(f) வைத்திய சிகிச்சை சம்பந்தமான காரியங்களுக்காக இன்ன நிட்டங்களின்பேரில் லோகல் பண்டிலிருந்து கிராண்ட் இன் எய்ட் என்னும் திரவிய சகாயம் செய்யவேண்டுமென்பதைக் குறித்தும், கோவாபரேடிவ் பில்டிங் சொஸைடீஸ் என்னும் கட்டிட சம்பந்தமான கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிராண்டுகளும் (சகாயத் தொகைகளும்) கடன்களும் இன்ன நிட்டங்களின்மேல் கொடுக்கலாமென்பதைக் குறித்தும்,

(g) லோகல் போர்டுகளுக்கும் லோகல் கவர்ன்மெண்டார் அல்லது அவர்களுடைய உத்தியோகஸ்தர்களுக்கும் நடக்கும் கடிதப் போக்குவரத்து இடையிலுள்ள எவையேனும் ஆபீசுகள் மூலமாய் நடக்கவேண்டி யிருந்தால் அவைகளைக் குறித்தும்,

(h) சிறுமட்டிலாவது முழுமையுமாவது லோகல் போர்டுகளின் செலவிலே கட்டப்போகிற கட்டிட முதலிய வேலைகளுக்கு நக்ஷாக்களையும் எஸ்டிமேட்டுகளையும் தயார் செய்வதைக் குறித்தும், எஸ்டிமேட்டுகளுக்கு தொழில் முறையான அல்லது பரிபாலன சம்பந்தமான அனுமதி கொடுக்க லோகல் போர்டுகள் அல்லது கவர்ன்மென்டு உத்தியோகஸ்தர்கள் இவர்களின் அதிகாரத்தைக் குறித்தும்,

(i) லோகல் போர்டுகள் வைக்க வேண்டிய கணக்குகள், அந்தக் கணக்குகளைத் தணிக்கை செய்து பிரசுரஞ் செய்வது ஆகிய இவைகளைக் குறித்தும், இன்ன திட்டங்களின்மேல் வரி செலுத்து பவர்கள் ஆடிட்டர்களுக்குமுன் ஹாஜராகி, புஸ்தகங்களையும் வவுச்சர்களையும் (ஆதாரச் சீட்டுகளையும்) பார்வையிட்டு, அவைகளில் பதியப்பட்டுள்ள அல்லது விட்டுப்போயுள்ள பாபத்துகளுக்கு ஆட்சேபிக்கலாமென்பதைக் குறித்தும்,

(j) லோகல் போர்டுகள் அனுப்ப வேண்டிய வரவு செலவு சம்பந்தமான எஸ்டிமேட்டுகளைக் குறித்தும் ரிடர்ன் என்னும் விவரக் கணக்குகளைக் குறித்தும் ஸ்டேட்மெண்டுகளைக் குறித்தும் ரிபோர்ட்டுகளைக் குறித்தும்,

(k) இந்த ஆக்டிலுள்ள காரியங்களை நிறைவேற்றுவதில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் லோகல் போர்டுகளுக்கு இன்ன விதமாய் யோசனை சொல்லி உதவி செய்ய வேண்டுமென்பதைக் குறித்தும்,

(l) லோகல்போர்டின் மெம்பர்கள் ப்ரெஸிடென்டைக்கேள்விக் கேட்பதைக் குறித்தும்,

(m) லோகல் போர்டின் மீட்டிங்குகளில் தீர்மானங்களைப் ப்ரேரேபணை செய்வதைக் குறித்தும்,

(n) லோகல் போர்டுகளாலாவது அல்லது லோகல் போர்டுகளின் சார்பிலாவது ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படும் விதத்தைக் குறித்தும், நிபந்தனைகளைக் குறித்தும்,

(o) பாபத்துக்களை ஒப்புக் கொள்ளாமல் தள்ளிவிடவும், அலவன்களுக்காக பொறுப்பு ஏற்கும்படி செய்யவும் ஆடிட்டர்களுக்குள்ள அதிகாரங்களைக் குறித்தும், அந்தப்படி தள்ளி விடப்பட்ட அல்லது பொறுப்பு ஏற்கும்படி செய்யப்பட்ட தொகைகளை வசூல் செய்வதைக் குறித்தும்,

(p) யாதொரு லோகல் போர்டுக்கு ஜாரியா யிருக்கும் பட்ஜெட்டில் இனவாரியாய்ப் பிரித்து ஏற்படுத்தியுள்ள தொகைகளை ஒரு தலைப்பிலிருந்து இன்னொரு தலைப்புக்கு மாற்றுவதைக் குறித்தும்,

(q) ஆடிட்டர்களுக்கும் பரிசோதனை செய்வதற்கும் மேல் விசாரணை செய்வதற்குமான உத்தியோகஸ்தர்களுக்கும் எலெக்ஷன் சம்பந்தமான விசாரணைகள் நடத்த அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் விசாரணைகள் நடத்தவும் சாட்சிகளை சம்மன் அனுப்பி வரவழைத்து விசாரிக்கவும் தஸ்தாவேஜுகளை ஹாஜர்ப்படுத்தும்படி கட்டாயப்படுத்தவும் ஏற்பட்டுள்ள அதிகாரங்களைக் குறித்தும், (கணக்குகளை) தணிக்கை செய்வது சம்மந்தமாகவும் பரிசோதனை செய்வது சம்பந்தமாகவும் மேல் விசாரணை செய்வது சம்பந்தமாகவுமுள்ள மற்ற சகல விஷயங்களைக் குறித்தும்,

(r) இந்த சட்டத்தின் கீழாவது அல்லது வேறே ஒரு சட்டத்தின் கீழாவது விதித்து வாங்கப்படும் அல்லது பெறப்படும் தொழில்வரி, சுங்கம், இதர வரிகள் அல்லது வருமானம் இவைகளின் தொகையை சென்னை மாகாணத்திற்குள் உள்ள பிரதேச அதிகாரிகளுக்குள் பிரிவிடப்படவேண்டிய பாகத்தை ஒழுங்கு படுத்துவதைக் குறித்தும் ; இன்னும்,

(s) இந்த சட்டத்தின் நிபந்தனைகளை மறுத்து செய்யப்படும் குற்றங்கள் எந்தவகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளால் விசாரிக்கப்படவேண்டுமென்பதைக் குறித்தும்,

விதிகளைச் செய்ய அதிகாரமுடையவர்களாவார்கள்.

(3) யாதொரு விதியைச் செய்கையில், அதை ஒருவர் மீறி நடப்பதற்கு, நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படுவாரென்று லோகல் கவர்ன்மென்டார் அதிலேயே நிபந்தனை காணலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவில் லோகல் கவர்ன்மென்டார் லோகல் போர்ட்ஸ் ஆக்டின் அம்சங்களை செலாவணி யாக்குவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக தகுந்த விதிகளைச் செய்யலாமென்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அவ் விதிகளானவை லோகல் போர்ட்ஸ் ஆக்டுக்கு எவ்விதத்திலும் முறண்பா டாக இருக்கக் கூடாது.

இந்தப் பிரிவில் லோகல் கவர்ன்மென்டார் எந்தெந்த விஷயங்களைக் குறித்து விதிகளைச் செய்யலாமென்று பொதுவாக விவரிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, இந்த சட்டத்தில் "நிர்ணயிக்கப்பட்ட" என்று சொல்லப் பட்டிருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் லோகல் கவர்ன்மென்டார் செய் யும் விதிகளைக் குறிப்பதாகும். உதாரணமாக :—5-வது பிரிவில் "கவர்ன் மென்டார் விதிகளில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம்" என்றும், 9-வது பிரிவில் "கவர்ன்மென்டார் ஒரு அறிக்கை மூலமாக நிர்ணயிக்கலாம்" என் றும், 19-வது பிரிவில் "நிர்ணயிக்கப்பட்ட விதமாய்" என்றும், 31-வது பிரிவில் "பிரதேச கவர்ன்மென்டாரால் செய்யப்பட்ட விதிகளுக்காவது" என்றும், 37-வது பிரிவில் "இனி நிர்ணயிக்கப்படும் விதிகளுக்கு இணங்கி" என்றும், 77-வது பிரிவின் (2)-வது உபப் பிரிவில் "லோகல் கவர்ன்மென் டார் உத்திரவிடுவதான யாதொரு அறிக்கையானது" என்றும் உள்ளன. இவைகள் லோகல் கவர்ன்மென்டார் இப்பிரிவின்கீழ் செய்யும் விதிகளைக் குறிப்பதாகும். லோகல் கவர்ன்மென்டார் தாங்கள் இப்பிரிவின் கீழ் செய் யும் விதிகளிலேயே அந்த விதிகளை மீறி நடப்பவருக்கு 100-ரூபா வரை யிலும் அபராதம் உண்டு என்றும் ஏற்படுத்தலாம்.

இந்த விதிகளை அமுலுக்கு கொண்டுவரும் விதமானது 201, 201-A பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ளது. இந்த விதிகள் சென்னை போர்டு செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரப்படுத்தப்பட்டபிறகுதான் அமுலுக்கு வரவேண்டும்.

லோகல்கவர்ன்மென்டாரால்இப்பிரிவின்கீழ்செய்யப்படும்விதிகளானது சட்ட சதிர்சமானதாகும். ஆகையால் லோகல்போர்டு சட்டத்திற்குள்ள கௌரவமும் மதிப்பும் இவ்விதிகளுக்கும் உண்டு.

கவர்ன்மென்டார் இந்த பிரிவின்கீழ் செய்யும் விதிகளை அவை சரியான தல்லவென்று கோர்ட்டார் சொல்வதற்கில்லை. அவைகளினுடைய வாஸ்தவ மான அர்த்தம் என்னவென்று கவர்ன்மென்டாரேதான் தெரிவிக்க வேண்டு மென்று டில்டிரிட்டி முனிசிபாலிட்டிகளாக்டின்கீழ் செய்யப்பட்டிருக்கும் ஒரு தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ளது. (a). ஆனால் இந்த சட்டத்தில் லோகல் கவர்ன்மென்டார் செய்யும் விதிகளுக்கு இன்னதுதான் அர்த்தம்

(a) அப்பாதுரை முதலியார் vs. மங்கள கவுண்டர் 53 M. L. J. 735.

என்று சிவில் கோர்ட்டார் சொல்லுவதற்கில்லையென்று சொல்லப்படவில்லை. 200-வது பிரிவில் லோகல் கவர்ன்மென்டார் செய்யும் விதிகளானது இந்த சட்டத்திலேயே செய்யப்பட்ட விதிகளைப்போல் செலாவணியாகத்தக்கதாகும் என்றிருப்பதால், லோகல் கவர்ன்மென்டார் செய்யும் விதிகளின் அர்த்தமானது இன்னதென்று கோர்ட்டுகளுக்குமுன் பிரச்னை கிளம்பும் பக்ஷத்தில் அவைகளைப்பற்றியும் கோர்ட்டுகள் தீர்மானிக்கப்படலாம் என்று ஏற்படும்.

லோகல் கவர்ன்மென்டானது இந்தப்பிரிவின்கீழ் தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைமீறி விதிகளைச் செய்யும்பக்ஷத்தில் அவ்விதிகள் செல்லத்தக்கனதல்லவென்று சிவில் கோர்ட்டுகளில் தாவா செய்யலாம்.

விதிகளைச் செய்வதற்கான நடவடிக்கை முறைகள்.

200. 199-வது பிரிவின்படி விதிகள் செய்வதற்கான அதிகாரமானது அடியிற் கண்ட நிபந்தங்களுக்கு உட்பட்டதாகும்.

(a) விதிகளின் மசோதாவை போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரிக்க வேண்டும்.

(b) அப்படிப்பட்ட மசோதாவை மேலே கண்டபடி பிரசுரித்த பிறகு ஆறுவாரம் வரையிலாவது அதற்கப்பால் லோகல் கவர்ன்மென்டார் ஏற்படுத்தக்கூடிய யாதொரு தேதி வரையிலாவது அந்த மசோதாவைப்பற்றிப் பின்னும் நடவடிக்கை நடத்தக்கூடாது.

(c) 199-வது பிரிவின்படி செய்யப்பட்ட சகல விதிகளையும் போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரிக்கவேண்டும்; அந்தப்படி பிரசுரிக்கப்படுவதன்மேல், அவை இந்த ஆக்டில் ஏற்படுத்தப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் லோகல் கவர்ன்மென்டார் செய்யும் விதிகளை இம்மாதிரியாக பிரசுரப்படுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. முதல் முதலாவதாக லோகல் கவர்ன்மென்டார் தாங்கள் பிரேரேபிக்கும் விதிகளின் மசோதா ஒன்றை பொதுஜனங்களுடைய அறிவிப்பிற்காக போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரித்து பிறகு ஆறு (6) வாரங்கள் வரையிலும் ஜனங்களுடைய ஆக்ஷேபனைக்காக காத்துக்கொண்டிருக்கவேண்டும். போர்டு செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் கவர்ன்மென்டார் பிரசுரிக்கும் விதிகளின் மசோதா

வுக்கு அந்த விதிகளினுல் பாதிக்கப்பட்ட எவனெருவனும் ஆக்ஷேபனை செய்யலாம். அப்படி பிரசுரிக்கப்பட்ட ஆறுவார்க்கள் கழிந்தபிறகு யுக்தப்படி கவர்ன்மெண்டார் அந்த விதிகளை மாற்றியாவது அல்லது அப்படியேயாவது அமுலுக்கு கொண்டுவரலாம். லோகல் கவர்ன்மென்டார் விதிகளை பிரசுரிக்கும்போது அவை மசோதா விதிகளா, அல்லது பூரணமாக அமுலுக்குவரும் விதிகளா என்று தெரிவிக்கவேண்டும்.

ஷெட்யூல்களைத் திருத்தவும் அவைகளுடன்யாதொன்றை சேர்க்கவும் அவைகளை ரத்துசெய்யவும் பிரதேசகவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரமும் அதற்கு நடவடிக்கை முறையும்.

201. (1) லோகல் கவர்ன்மென்டார் I-வது VIII-வீது, IX-வது ஷெட்யூல்களைத் தவிர இந்த ஆக்டின் ஷெட்யூல்களில் ஏதை யாகிலும் மாற்றியாவது, அதனுடன் யாதொன்றைச் சேர்த்தாவது, அதை ரத்து செய்தாவது விதிகள் செய்யலாம்.

(2) மேலேகண்ட ஷெட்யூல்களில் எதுவாவது இந்த ஆக்டில் உதகரிக்கப்பட்டிருக்கும் இடங்களில் அவ்விதகாரணங்களையெல்லாம் (1) குறிப்பிட்ட உபப்பிரிவினுல் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக்கொண்டு அந்தந்த காலத்தில் திருத்தப்பட்டபடியுள்ள ஷெட்யூல்களை உதகரிப்பதாக அர்த்தம்பண்ணவேண்டும்.

74-A பிரிவின் (2)-வது உபப்பிரிவின் கீழாவது அல்லது 201-வது பிரிவின்கீழாவது செய்யப்படவேண்டியதாக பிரேரேபிக்கப்படும் விதிகளின்ஒரு மசோதா நகலானது லெஜிஸ்லேடிவ் கௌன்சில் என்னும் சட்டசபை முன்பாக வைக்கப்படவேண்டும். அந்த விதிகளை லெஜிஸ்லேடிவ் கௌன்சில் மாறுதல்கள் சேர்க்

201-A. 74-A பிரிவின் (2)வது உபப்பிரிவின் கீழும் 201-வது பிரிவின் கீழும் விதிகளைச் செய்வதற்காக நடவடிக்கை முறை.

கைகள் இவைகளுடனாவது அல்லது இவை இல்லாமலாவது ஆமோதிக்காலொழிய அவைகள் செய்யப்படக்கூடாது; அப்படி லெஜிஸ்லேடிவ் கௌன்சில் சம்மதித்தபிறகு, அந்த விதிகள் எந்த மாதிரியாக அங்கீகரிக்கப்பட்டதோ அதே மாதிரி செய்யப்பட்டு, அம்மாதிரி செய்யப்பட்ட பிறகு விளம்பரப் படுத்தப்படவேண்டும். அதற்கு பிறகு அவைகள் பூரணமாக அமுல் செய்வதற்கான யோக்கியதை பெற்றிருக்கும்.

குறிப்புகள்.

லோகல் கவர்ன்மென்டார் I, VIII, IX இந்த ஷெடியூல்களிலுள்ள விதிகளைத் தவிர மற்ற விதிகளை மாற்றுவதற்காவது அல்லது ரத்து செய்வதற்காவது விதிகளைச் செய்யலாம். ஆனல் லோகல் கவர்ன்மென்டார் 74-A பிரிவின் கீழ் லோகல் போர்டுகளுடைய ஊழியத்திலுள்ள உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர்களை பிரதேச ஊழியத்தில் சேர்ப்பதற்காக செய்யும் விதிகளையும், மேலே 201-வது பிரிவின்கீழ் செய்யும் விதிகளையும், லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் முன்பாக வைக்கவேண்டும். லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் அங்கத்தினர்கள் யாவரும் ஒன்று கூடி, திருத்தங்களுடனும் அல்லது திருத்தங்களில்லாமலோ அந்த விதிகளை அங்கீகரித்த பிறகு போர்ட் செயிண்டு ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரப்படுத்தப்பட வேண்டும். அப்படி பிரசுரப்படுத்தும் வரையிலும் அந்த விதிகளுக்கு யாதொரு வீரியமும் கிடையாது.

மேலே 200, 201, 201-A. இத்தப் பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் அம்சங்களைக் கவனிக்குமிடத்து லோகல் கவர்ன்மென்டார் செய்யும் விதிகளை பரிசோதிப்பதற்கும், திருத்துவதற்கும், திருத்தங்களை எடுத்துக் காட்டுவதற்கும் பொது ஜன பிரதிநிதிகளுக்கும் வசதியுள்ளதாக ஏற்படும். இதனல் அடிக்கடி போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் இன்னின்னது பிரசுரிக்கப்படுகிறதென்று கவனித்து வருவது பொது ஜனங்களின் கடமையாகும். அப்படி கவனித்து வருவதில் அவர்களுக்கு நன்மையும் உண்டு.

சகாயச் சட்டங்கள்.

202. டிஸ்டிரிக்ட்போர்டானது-இந்த ஆக்டுக்காவது வேறே யாதொரு சட்டத்துக்காவது மூரண்படாதபடி அடியிற்கண்ட விஷயங்களுக்காக நிபந்தனை ஏற்படுத்தும் பொருட்டு சகாயச்சட்டங்களைச் செய்யலாம் அதாவது :—

சகாயச் சட்டங்கள் செய்ய டிஸ்டிரிக்ட் போர்டாருக்கு அதிகாரம்.

(1) இந்த சட்டத்தினல் சகாயசட்டங்களில் ஏற்பட வேண்டுமென்று ஸ்பஷ்டமாக உத்தரவிடப்பட்டிருக்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்டிருக்கும் எல்லா விஷயங்களுக்காக,

(1-A) லோகல் போர்டுகளின் சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் தங்களுக்கு ஏற்பட்ட அதிவல்களைக் கிரமமாய் நிறைவேற்றுவதற்காக ;

(2) இந்த ஆக்டின்படி வரிகளையும் தீர்வைகளையும் சுங்கங்களையும் வசூலிக்கும் காலத்தைக்குறித்தும் விதத்தைக் குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காக ;

(3) (a) ஜலசர்ப்பராவுக்காக பொதுவான குளங்களையும் கிணறுகளையும் நீர்க்கால்களையும் இதர இடங்கள் அல்லது கட்டுவேலைகளையும் உபயோகிப்பதற்காக;

(b) பொது ஜனங்கள் ஸ்நானம் செய்வது துணி தோய்ப்பது முதலியவை விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காக;

(4) மலஜலபாதை மறைவிடங்கள், மண்ணைக் தூவுவதனால் நாற்றம் போக்கப்படும் கக்குசுகள், (ஆஸ்பிட்) சாம்பற்குழிகள், சாக்கடை குழிகள் ஆகிய இவைகளை சுத்தஞ் செய்வதற்காக;

(5) (a) பொதுவான பாதைகளை உபயோகிப்பதைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும், அவைகளையாவது அவைகளின் பாகங்களையாவது மூடிவிடுவதற்காக;

(b) பொதுவான பாட்டைகளில் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்துவதற்காக, அல்லது அவைகளில் குறித்த வகைகளைச் சேர்ந்த போக்குவரத்து மாத்திரமே செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்வதற்காக;

(c) லோகல் போர்டுகளால் வைக்கப்பட்டாவது அவைகளுக்குச் சொந்தமாகவாவது துள்ளவையாய், பொதுவான பாதைகளிலுள்ள சாலைமரங்களையும், மரங்களையும், புல்லையும் அந்த பாட்டைகளைச்சேர்ந்த இதர வஸ்துக்களையும் காப்பாற்றுவதற்காக;

(6) நந்தவனங்களையும் (பார்க்குகளையும்) தோட்டங்களையும் இதர பொதுவான அல்லது லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கிற இடங்களையும் உபயோகிப்பதைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக;

(7) ஹோட்டல்களையும், தங்குவதற்கான இடங்களையும், போர்டிங் ஹௌஸ் என்னும் போஜன விடுதிகளையும், சத்திரங்களையும், இளைப்பாறும் இடங்களையும், எமிக்ரேஷன் டெப்போக்களையும், சிற்றுண்டிச்சாலைகளையும், சாப்பாடு வீடுகளையும், கேவ் என்னும் சிற்றுண்டிச்சாலைகளையும், சிற்றுண்டியும் போஜனமும் வழங்கப்படும் இடங்களையும், காபி ஹோட்டல்களையும், தங்கியிருப்பதற்காவது யாதொரு ஆகாரம் அல்லது பானத்தை உட்கொள்வதற்காவது பொது ஜனங்களுக்கு இடம் கொடுக்கப்படுகிற யாதொரு வளவையும் ஒழுங்குப்படுத்துவதற்காக;

(8) 7-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்ட காரியங்களில் எதற்காவது உபயோகிக்கப்படும் இடங்களையும் அவைகளில் நடத்தப்படும் யாதொரு வர்த்தகம் அல்லது வஸ்துக்கள் தயார்செய்யும் வேலையையும் சுகாதாரசம்பந்தமாய் மேல்விசாரணை செய்வதற்காகவும் மேற்பார்வையிடுவதற்காக ;

(9) (a) ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளையும் அவைகளைத் தோலுரிப்பதற்காகவும், துண்டுபோடுவதற்காகவும் உபயோகிக்கப்படும் இடங்களையும் மேல் விசாரணை செய்வதற்காகவும் மேற்பார்வையிடுவதற்குமாக ;

(b) (பிராணிகளைக்) கொல்லும் முறைகளைக்குறித்து மேல் விசாரணைசெய்வதற்காகவும் மேற்பார்வையிடுவதற்குமாக ;

(c) லோகல் போர்டாரால் ஏற்படுத்தப்பட்ட அல்லது லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற யாதொரு ஆடு மாடு முதலியவை அடிக்கும் கொட்டியில் தொழில் நடத்திக் கொண்டுவரும் கசாப்புகாரர்களை மேல் விசாரணை செய்வதற்காகவும் ;

(10) (a) பொதுவான மார்க்கெட்டுகள், சொந்த மார்க்கெட்டுகள், அவைகளிலுள்ள கடைகள், இதர இடங்கள் ஆகிய இவைகளைப் பார்வையிடுவதற்காக ;

(b) அவைகளை உபயோகிப்பதைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும், அவைகளின் சுகாதார ஸ்திதியைப்பற்றி மேல் விசாரணை செய்வதற்காகவும் ;

(c) முகத்தலளவையினாலாவது, எடுத்தலளவையினாலாவது ஒவ்வொன்றாக எண்ணியாவது துண்டு துண்டாகவாவது வஸ்துக்களை விற்கும் விதத்தை நிர்ணயிப்பதற்காக ;

(d) நிஷ்கரிஷையான எடுத்தலளவைக் கருவிகளையும், தராசுக்களையும், முகத்தலளவைக் கருவிகளையும் நிர்ணயிப்பதற்காகவும், ஏற்படுத்துவதற்காகவும், வேறே எவையேனும் கருவிகளை உபயோகிப்பதைத் தடுப்பதற்காகவும் ;

(e) மார்க்கெட்டுகளில் தொழில் நடத்திவரும் தரகுக்காரர்கள் கமிஷன் ஏஜெண்டுகள் பாரங்களை நிறுக்கிறவர்கள், அளக்கிறவர்கள் இவர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதற்காகவும் இவர்களை அடக்கியாளுவதற்காகவும் ;

(f) அழுகக்கியமான, மாமிசம், மீன் அல்லது ஆகார வஸ்துக்களை விற்கவொட்டாதபடியாவது, விற்பனைக்குக் காட்டிவைக்க வொட்டாதபடியாவது தடுப்பதற்காகவும், மனிதர்களின் ஆகாரத்துக்காக உத்தேசிக்கப்பட்ட வஸ்துக்கள் வைக்கப்படும் அல்லது விற்கப்படும் கடைகளை நன்றாய் மேற்பார்வையிடுவிப்பதற்காகவும் அவைகளில் சுகாதார ஒழுங்கு ஏற்படுத்துவிப்பதற்காகவும் ;

(11) புதைக்குமிடங்களைக்குறித்தும், சுகனஞ் செய்யுமிடங்களைக் குறித்தும் பிரேதங்களை ஒருவகைச் செய்வதற்காவ இதர இடங்களைக் குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காக ;

(12) மனிதர்களுக்காவது, பிராணிகளுக்காவது அபாயகரமான வியாதிகள் காணுவதைத் தடுப்பதற்காக ;

(13) கட்டாயமாய் அம்மை குத்தும்படி நிற்பந்திப்பதற்காக ;

(14) தீ பிடிப்பதைத் தடுப்பதற்காக ;

(15) பொதுவான பாதைகளிலாவது சுத்வனங்களிலாவது விளம்பரங்கள் ஒட்டக் கூடாதென்று தடுப்பதற்காகவும் அவைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும் ;

(16) பொதுவாக சுத்தமாயும் பத்தியமாயும் ஒழுங்காயும் இருக்கும்படி பார்ப்பதற்காகவும் இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற யாதொரு விஸ்தீரணத்தின் பரிபாலனம் நன்றாயிருக்கும்படி பார்ப்பதற்காகவும், அது க்ஷேமமாயிருக்கும்படி செய்வதற்காகவும், இந்த ஆக்டின் சகல காரியங்களையும் நிறைவேற்றுவதற்காகவும்,

சகாய சட்டங்களை செய்யலாம்.

தூறிப்புகள்.

இந்தப் பிரிவானது, டிஸ்டிரிக்ட்டுபோர்டுகள் தமக்காகவும், தங்களுடைய டிஸ்டிரிக்டிலுள்ள தாலூக்காபோர்டுகள், பஞ்சாயத்துகள் இவைகளுக்காகவும் சென்னை லோகல்போர்ட்ஸ் சட்டத்திற்கு முரணன்படாமலிருக்கும் படியான சகாயச் சட்டங்களை செய்யலாம் என்று கூறுகிறது. சகாயச்சட்டம் என்பது, ஏற்கெனவே ஒரு சட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பிரிவுகளில் ஸ்பஷ்டமாக இராதபக்ஷத்தில் அவைகளை விஸ்தாரப்படுத்தி அவைகளின் கொள்கைகளை அனுசரிக்கும்படி செய்யப்படும் சட்ட நிபந்தனைகளாகும். இந்த நிபந்தனைகள் யாவும் மூல சட்டமானது பிரேரேபிக்கும்பொழுதே

செய்யப்படுவதற்கு இயலாதாகையால் அந்த சட்டமானது அமுலுக்கு வந்த பிறகு அவைகளில் குறிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளால் சந்தர்ப்பந்திற் கேற்றபடி அவ்வப்பொழுது சகாயச் சட்டங்களாக செய்யப்படலாம்.

இப்பிரிவில், 14-அங்கங்களின்கீழ் டில்டிரிக்ட்டு போர்டாரால் செய்யப் படக்கூடிய சகாயசட்டங்கள் இன்னவையென்று காட்டப்பட்டுள்ளன. உதா ரணமாக—(6)–வது உபப்பிரிவை கவனிக்குமிடத்து ஒரு நந்தவனம் அல்லது தோட்டத்தில் இன்னகாலம் முதல் இன்னகாலம் வரையிலுந்தான் பொது ஜனங்கள் அவைகளில் பிரவேசிக்கலாமென்றும், அவைகளில் அசுத்தம் அல் லது அசங்கியம் செய்யக்கூடாதென்றும் இன்னும் அவைகளை உபயோகப் படுத்துவதில் கவனிக்கவேண்டிய நிபந்தனைகளும் ஏற்பாடு செய்யப்படலாம். இந்த நிபந்தனைகள், ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு மாதிரியாக இருக் கலாமாதலால் எல்லா ஜில்லாக்களுக்கும் ஒரேமாதிரியான விதிகளை அல்லது சகாய சட்டங்களை செய்வதற்கில்லை. டிஸ்டிரிக்ட்டு போர்டினால் செய்யப் பட்ட சகாய சட்டங்களை கீழ்ப்படியாமல் இருப்பதற்கு இவ்வளவு வரையி லும் அபராதம் உண்டு என்று டில்டிரிக்ட்டு போர்டாரே ஏற்படுத்தலாம். (203-வது பிரிவைப் பார்க்க.)

டில்டிரிக்ட்டு போர்டுகள் எம்மாதிரி சகாய சட்டங்களை பிரேரேபித்து அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்பது 204, 205-பிரிவுகளில் சொல்லப் பட்டுள்ளது.

1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்த சட்டமானது அமுலுக்கு வருவதற்கு முன் இந்த ஆக்டின்கீழ் சகாய சட்டங்களைச் செய்வ தற்கு ஒரு டில்டிரிக்ட்டு போர்டுக்கு மாத்திரந்தான் அதிகாரமிருந்தது. இப் பொழுது 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் புதியதாக சேர்க்கப் பட்ட 203-A பிரிவினால் தாலூக்கா போர்டுகளுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் சகாய சட்டங்களைச் செய்யும் உரிமையானது சங்கிரமித்துவிட்டிருக்கிறது. ஆனால் ஒரேவிஷயத்தைக் குறித்து டில்டிரிக்ட்டுபோர்டும், பஞ்சாயத்து, அல்லது தாலூக்காபோர்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடான விதிகளைச் செய்வதற்கில்லை. ஒரு டில்டிரிக்ட்டு போர்டானது ஒரு பஞ்சாயத்திற்காக யாதொரு குறிப்பிட்ட விஷயமாக ஒரு சகாய சட்டத்தை செய்திருப்பின் அதே விஷயத்தைக்குறித்து அதற்கு விரோதமான ஒரு சகாயசட்டத்தை பஞ்சாயத்தானது செய்வதற்கில்லை. (203-A பிரிவைப் பார்க்க.)

199-வது பிரிவானது பொதுவாக லோகல்போர்டுகளின் நடவடிக்கை முறைகளைப்பற்றியும் அவைகளின் நிர்வாகமுறைமையைப்பற்றியும் லோகல் கவர்ன்மெண்டு விதிகளைச் செய்யலாமென்று கூறுகையில், இந்தப் பிரி வானது, ஒரு டில்டிரிக்ட்டு போர்டு தங்களுடையவும் அந்த டில்டிரிக்டில் உள்ள தாலூக்கா போர்டுகள் பஞ்சாயத்துகள் இவைகளுடையவும் நிர்வாக

விவரங்களைப் பற்றியும், தங்களுடைய நிர்வாகத்தை செலாவணியாக்கும் முறைகளைப்பற்றியும் இன்னின்ன விதமாக சகாயச் சட்டங்களை செய்யலாமென்று கூறுகிறது. ஆகையால் 199-வது பிரிவின் கீழ் லோகல் கவர்ன்மெண்டார் செய்யும் விதிகளுக்கும் இத்தப் பிரிவின் கீழ் டிஸ்டிரிக்ட்டு போர்டானது செய்துக்கொள்ளும் சகாயச் சட்டங்களுக்கும் யாதொரு முறண்பாடு இருக்கவேண்டிய நியாயமாவது அவசியமாவது இல்லை.

ஒரு டிஸ்டிரிக்ட்டுபோர்டானது சகாயச்சட்டங்களை செய்யுமிடத்து அந்த சகாயச்சட்டங்கள் சாதாரணமாக 205-வது பிரிவின்கீழ் லோகல் கவர்ன்மெண்டாரால் அங்கீகாரம் செய்யப்பட்டு ஊர்ஜிதப்படுத்தப்பட்டாலொழிய அவை அமுலுக்கு வருவதற்கில்லையாகையால் டிஸ்டிரிக்ட்டு போர்ட்டினால் செய்யப்படும் சகாயச்சட்டங்கள் மிகவும் சரியாக செய்யப்பட்டதென்றே அனுமானம் கொள்ளப்படும் அவைகளின் விஷயமாக கோர்ட்டுகளில் ப்ரச்னை கிளம்பும்பக்ஷத்தில் யாதொரு நபர் அவை டிஸ்டிரிக்ட்டு போர்டினால் தங்களுடைய அதிகார வரம்பிற்கு மீறி செய்யப்பட்டதென்று சொல்வாராகில் அவரே தான் அதை ருசுப்படுத்தவேண்டும்.

டிஸ்டிரிக்ட்டு போர்டானது செய்யும் யாதொரு சகாயச்சட்டமானது லோகல் போர்ட்ஸ் ஆக்டிற்கு விரோதமாக இராமலிருந்தபோதிலும் வேறே யாதொரு சட்டத்திற்கு விரோதமாக இருப்பின் அவை செலாவணியாகத் தகுந்ததல்லவென்று இப்பிரிவினால் அர்த்தம் ஏற்படுகிறது.

சகாயச் சட்டங்களை மீறினால் தண்டனை.

203. யாதொரு சகாயச் சட்டத்தை ஏற்படுத்துகையிலே, அதை மீறி நடந்தால்—

(a) ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமும், அப்படி மீறி நடந்துகொண்டே போகும் விஷயத்தில் முதல் தடவை மீறி நடந்ததற்காக குற்றஸ்தாபனையானபிறகு அப்படி நடந்து கொண்டேபோகிற நாள் ஒன்றுக்குப் பதினைந்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமாவதும்,

(b) அப்படி மீறிநடப்பதை நிறுத்தவேண்டுமென்று யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டினிடத்திலிருந்து நோட்டீஸ் வந்த பிறகும் அது நடந்துக்கொண்டேயிருக்குமானால், அப்படி அது நடக்கும் ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமாவதும்,

விதிக்கப்படத்தக்கதாகுமென்று டிஸ்டிரிக்ட் போர்டார் நிபந்தனை ஏற்படுத்தலாம்.

203-A. (1) ஒரு தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தானது - அந்த போர்டு அல்லது பஞ்சாயத்தானது எந்த காரியங்களுக்காக அமைக்கப்பட்டதோ அவைகளே நிறைவேற்றுவதற்காக, இதற்கென்று லோகல் கவர்ன்மென்டானது செய்யும் விதிகளுக்குட்பட்டு சகாயசட்டங்களைச்செய்யலாம்.

தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்துக்கு உப சட்டங்களை செய்ய அதிகாரம்.

(2) அப்படிப்பட்ட சகாயச்சட்டங்கள் இந்த ஆக்ட்டுக்காவது அல்லது வேறே சட்டத்திற்காவது அல்லது 202-வது பிரிவின் கீழ் டிஸ்டிரிக்ட் போர்டாரால் செய்யப்படும் யாதொரு சகாய சட்டத்திற்காவது முரண்பாடாக இருக்கக்கூடாது.

(3) ஒரு சகாயசட்டத்தைச்செய்வதில் தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தானது, அந்த சகாயசட்டத்தை மீறி நடக்கும் யாதொரு நபர், பதினைந்து ரூபாய்க்கு அதிகப்படாமல் தாங்கள் நிர்ணயித்திருக்கும் யாதொரு தொகையை செலுத்தும்படிக்கும், அல்லது அப்படி மீறி நடப்பதானது அடுத்தடுத்து இருக்கும் பசலித்தில் முதலில் மீறி நடந்ததற்காக குற்ற ஸ்தாபனையான பிறகு அப்படி மீறி நடத்தப்படும் ஒவ்வொரு தினத்திற்கும் ஐந்து ரூபாய்க்கு அதிகப்படாமல் ஒரு தொகையை அபராதமாக செலுத்தும்படிக்கும் ஏற்படுத்தலாம்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்தச்சட்டத்தினுல் புதியதாக சேர்க்கப்பட்டது. நன்கு கவனிக்குமிடத்து 202, 203-இந்தப் பிரிவுகளில் டிஸ்டிரிக்ட்டு போர்டுகளின் விஷயமாக சொல்லப்பட்டுள்ளவைகளே தாலூக்காபோர்டுகள், பஞ்சாயத்துகள் இவைகள் விஷயமாகவும் சொல்லப்பட்டுள்ளதென ஏற்படும். இந்தப்பிரிவினுல் புதிதாக தாலூக்கா போர்டுகளும், பஞ்சாயத்துகளும் தங்கள் நிர்வாக விஷயமாக யுக்தமாகத் தோன்றும் சகாயச்சட்டங்களை செய்யலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

204. சகாயச் சட்டங்களைச் செய்வதற்காவது மாற்றுவதற்காவது முன்னே டிஸ்டிரிக்ட் போர்டார் அல்லது தாலூக்கா போர்டார் அல்லது பஞ்சாயத்தானது செய்ய உத்தேசித்திருக்கும் சகாயச் சட்டங்களுக்கும் மாறுதல்களுக்கும் ஒரு மாசோ

சகாயச் சட்டங்கள் செய்வதற்கான நடவடிக்கை.

தாவை, இன்ன தேதியிலாவது அதற்குப் பிறகாவது அந்த மசோதாவைப்பற்றி ஆலோசனை செய்யப்படுமென்று குறிப்பிட்டு ஒரு நோட்டீஸ் சுதந்தரமாய் பிரசித்தம் செய்யவேண்டும்; மேலும், அவர்கள் - அந்த சகாயச் சட்டங்களையாவது மாறுதல்களையாவது செய்வதற்கு முன்னே, அப்படிப்பட்ட மசோதா விஷயமாய் அதில் அக்கரையுள்ள யாதொரு நபர் மேலே கண்டபடி குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன் செய்யக்கூடிய யாதொரு ஆட்சேபணை அல்லது சொல்லக்கூடிய யாதொரு ஆலோசனையை வரப்பெற்றுக்கொண்டு அதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது 202, 203, 203-A இந்தப்பிரிவுகளின்கீழ் முறையே டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தானது சகாயச் சட்டங்களை செய்யுமிடத்து அல்லது திருத்துமிடத்து அப்படி திருத்தப்பட்ட விதிகளின் மசோதா ஒன்றை பிரசுரப்படுத்தப்படுத்தவேண்டுமென்று கூறுகிறது. ஆனால் இன்னதன் மூலமாக அதை பிரசுரப்படுத்த வேண்டுமென்று இல்லாததால் டிஸ்டிரிக்ட்டு கெஜட்டிலேயே பிரசுரப்படுத்தவேண்டும். அப்படி பிரசுரப்படுத்தும்போது ஒரு குறித்த தேதியில் அல்லது தேதிக்கு பிறகு அந்த மசோதாவானது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும் தெரிவிக்கவேண்டும். பொது ஜனங்கள் அல்லது அந்த சகாய சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்கள் அந்த தேதிக்குள் தங்களுக்குள்ள ஆக்ஷேபணைகளையாவது அல்லது தங்களுக்கு தோன்றும் திருத்தங்களையாவது தெரிவிக்கவேண்டும். மேலே குறிப்பிட்ட தேதியில் அல்லது அதற்கு பிறகாவது ஒரு குறிப்பிட்ட தினத்தில் சம்பந்தப்பட்ட லோகல்போர்டினால் பிரசுரப்படுத்தப்பட்ட மசோதாவும் அதின் திருத்த பிரேரேபணைகளும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

இந்தப்பிரிவின் கடைசியில் "சொல்லக்கூடிய யாதொரு ஆலோசனையை வரப்பெற்றுக்கொண்டு அதைப்பற்றி யோசிக்கவேண்டும்" என்றுள்ளதினால், சகல மசோதாக்களும், பிரேரேபணைகளும் சம்பந்தப்பட்ட லோகல் போர்டினால் கூட்டப்படும் ஒரு மீட்டிங்கில் சுவனிக்கப்படவேண்டும் என்று ஏற்படும். ஒரு மீட்டிங்கில் அல்லாமல் வேறுவிதமாக யோசிக்கப்படுவதற்கில்லை.

லோகல்போர்டுகளினால் செய்யப்படும் விதிகள் பிரேரேபணைகள், அறிக்கைகள் பொதுவாக இங்கிலீஷ் பாஷையிலும், அந்தந்த டிஸ்டிரிக்ட்டில் உள்ள சுதேசபாஷையிலும் டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில் பிரசுரப்படுத்தப்பட வேண்டுமென்று 215-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

205. ஒரு டிஸ்டிரிக்ட் போர்டு அல்லது காலாக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தினால் செய்யப்பட்ட யாதொரு சகாயசட்டமானது அல்லது ஒரு சகாயசட்டம் ரத்து செய்யப்பட்டதானது அல்லது மாற்றப்பட்டதானது லோகல் கவர்ன்மெண்டினால் ஆமோதிக்கப்பட்டு ஊர்ஜிதப்படுத்தப்பட்டாலொழிய அமுலுக்கு வரும்படியாக இருக்கக்கூடாது.

சகாய சட்டங்களை லோகல்கவர்ன்மென்டார் ஊர்ஜிதப்படுத்வது.

குறிப்புகள்.

சகாய சட்டங்கள் அமுலுக்கு வருவதின் விஷயமாக, லோகல் கவர்ன்மென்டாருடைய முடிவான அனுமதியிருந்தாலன்றி அவை ஒரு லோகல் போர்டினால் செய்யப்பட்டிருந்தபோதிலும் பயனற்றதாகும். அரசாங்க நிர்வாக பாஷையில் இப்பிரிவின்கீழ் லோகல் கவர்ன்மென்டாருக்கு மீதியிவைக்கப்பட்டிருக்கும் அதிகாரமானது Residual Powers என்று சொல்லப்படும். அதாவது ஒரு லோகல்போர்டு அல்லது பிரதேச அதிகாரிக்கு எவ்விதமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் கடைசியாக அவ்வதிகாரமானது பூர்த்தியாக செலாவணிபாக்குவதற்குரிய உரிமை லோகல் கவர்ன்மென்டாருடைய வசத்திலேயே இருக்கவேண்டுமென்பது.

205 A. (1) ஒரு டிஸ்டிரிக்ட் அல்லது காலாக்கா போர்டினால் செய்யப்பட்ட யாதொரு சகாயச்சட்டமானது அல்லது யாதொரு சகாயச்சட்டம் ரத்து செய்யப்பட்டதானது அல்லது மாற்றப்பட்டதானது (கவர்ன்மென்டினால்) ஊர்ஜிதப்படுத்தப்பட்ட பிறகு இங்கிலீஷ் பாஷையில் டிஸ்டிரிக்ட் கெஜட்டில் பிரசுரப்படுத்தப்பட வேண்டும்.

சகாயச்சட்டங்களைச் செய்வதற்கும் விளம்பரப்படுத்துவதற்கும் நடவடிக்கை முறை.

(2) ஒரு பஞ்சாயத்தினால் செய்யப்பட்ட அல்லது ஒரு டிஸ்டிரிக்ட் போர்டினால் ஒரு கிராமத்தின் விஷயமாக செய்யப்பட்ட யாதொரு சகாயசட்டமானது, அல்லது ஒரு சகாயசட்டம் ரத்துசெய்யப்பட்டதானது அல்லது மாற்றப்பட்டதானது கிரமமாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட பிறகு இந்த சட்டத்தின் வேறே மாதிரியாக குறிக்கப்பட்டாலொழிய அந்த இடத்தினுடைய முக்கியமான சுதேச பாஷையில் எழுதப்பட்டு அல்லது மொழி பெயர்க்கப்பட்டு அந்த பஞ்சாயத்து ஆபீஸில் பகிரப்படுத்தப்பட வேண்டும். அதனுடைய நகலானது அப்படிப்பட்ட ஆபீஸில் ஒரு முக்கியமான ஸ்தானத்திலும் இன்னும் அந்த பஞ்சாயத்தானது உத்தரவிடும் மற்ற இடங்க

ளீலும் ஒட்டப்படவேண்டும். இன்னும் கிராம முழுவதிலும் பைசங்க மாக கண்டோராமூலமாகவோ அல்லதுவேறுவிதமாகவோ, அப்படிப் பட்ட ஒரு நகல் அம்மாதிரி ஒட்டப்பட்டிருக்கிறதென்றும், அதன் அசலானது பஞ்சாயத்து ஆபீஸில் பரிசோதிக்கப்படுவதற்கு தயாரா யிருக்கிறதென்றும், விளம்பரம் செய்யப்பட வேண்டும்.

(3) ஒரு டிஸ்டிரிக்ட் போர்டு, தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தினால் செய்யப்பட்ட யாதொரு சகாயசட்டமானது அல்லது ஒரு சகாயசட்டம் ரத்து செய்யப்பட்டதானது அல்லது மாற்றப்பட்டதானது சந்தர்ப்பத்துக்கு தகுந்தாப்போல் (1) அல்லது (2) உபப்பிரிவின் கீழ் அவைகளில் சொல்லப்பட்டிருக்கிறபிரகாரம் விளம் பரப்படுத்தப்பட்டதற்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு அமுலுக்கு வரவேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, 1930-ம் வருஷத்திய சென்னைலோகல்போர்டு திருத்த சட்டத்தினால் புதியதாக கோர்த்து அமைக்கப்பட்டுள்ளது. இந்தப்பிரிவில் ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டு அல்லது தாலூக்கா போர்டினால் செய்யப்படும் சகாயச் சட்டங்களானது, லோகல் கவர்ன்மென்டினால் ஊர்ஜிதப்படுத் தப்பட்ட பிறகு-இங்கிலீஷ் பாஷையில் டிஸ்டிரிக்டு கெஜட்டில் சட்டா யம் பிரசுரப்படுத்தப்படவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால், ஒரு கிராமத்தைப்பற்றி செய்யப்படும் யாதொரு சகாயச்சட்டம் அல்லது சகாயச் சட்டரத்து, அல்லது சகாயச்சட்ட திருத்தலானது, அந்த கிராமத்தின் சுதேச பாஷையில் எழுதப்பட்டு பஞ்சாயத்தினுடைய ஆபீஸில் ஒரு பகிரங்கமான இடத்தில் ஒட்டப்படுவதுமல்லாமல் அந்த ஆபீஸின் நிக்கார்டு களில் வைக்கவேண்டும் மே கிராமத்தில் தண்டோரா மூலமாகவும் தெரி விக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது.

இப்பிரிவின் (3)-வது உபப்பிரிவில் கவர்ன்மென்டினால் 205-வது பிரி வின்கீழ் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட சகாயச்சட்டங்கள், டிஸ்டிரிக்ட்டு கெஜட் டில் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து மூன்றுமாதங்கள் கழிந்த பிறகுதான் அமுலுக்கு வரவேண்டும் என்றுள்ளது.

ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டு அல்லது தாலூக்கா போர்டினுடைய சகாய சட்டங்கள், இங்கிலீஷ்பாஷையில் மாத்திரம் அல்லாமல் மற்றசுதேசபாஷை யிலும் பிரசுரப்படுத்துவதைப்பற்றி சொல்லப்படவில்லை. ஆயினும் அந்தந்த சுதேச பாஷையில் பிரசுரப்படுத்தப்படுவது நலமாயிருக்கும்.

(3)-வது உபப்பிரிவில், மாதங்கள் என்பது மூப்பது நாட்களையுடைய மாதங்கள் மாத்திரமல்ல. பிரிட்டிஷ் காலண்டர் பிரகாரம் உள்ள மாதங் களை குறிக்கும்.

டிஸ்டிரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டைப் பிரயோகப்படும்படி செய்வது.

டிஸ்டிரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டையும் அந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளையும் கிராமங்களுக்காவது லோகல் போர்டின் விசாரணை அதிகாரத்துக்குட்பட்ட இதர வில்தீரணங்களுக்காவது பிரயோகப்படும் படி செய்வது.

206. லோகல் கவர்ன்மென்டார் - சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தும், டிஸ்டிரிக்ட் போர்டாரும் கேட்டுக் கொள்வதன்மேல் போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், 1920-ம்வரு இந்திய சென்னப்பட்டணத்து டிஸ்டிரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின் எந்த நிபந்தனைகளையாவது அல்லது அதன்படி செய்யப்பட்ட எந்த விதிகளையாவது, யாதொரு கிராமத்திற்காகிலும் அதற்குள் இருக்கும் யாதொரு வில்தீரணத்துக்காகிலும் விசாரணை அதிகாரத்துக்குட்பட்டயாதொருகுறிப்பிட்டவில்தீரணத்துக்காகிலும் பிரயோகப்படும்படி செய்வதுடன், தங்களுக்கு தகுதியாகத் தோற்றுகிற எவையேனும் நிர்ப்பந்தங்களுக்கும் திருத்தங்களுக்கும் உட்பட்டு அதைப் பிரயோகப்படுத்த வேண்டுமென்றும் பிரசித்தம் செய்யலாம்.

குறிப்புகள்.

சென்னை டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்டிகளின்சட்டமானது, லோகல் போர்ட்ஸ் சட்டத்தைப்போன்ற ஒரு சட்டமாகும். லோகல் போர்ட்ஸ் சட்டமானது, சென்னப்பட்டணத்திற்கு வெளியிலுள்ள ஜில்லாக்கள் டிஸ்டிரிக்ட்டு போர்டுகளாகவும், தாலூக்கா போர்டுகளாகவும், பஞ்சாயத்துகளாகவும் பிரிவிடப்பட்டு அவைகளில் பிரயோகப்பட்டுவருகையில் அதே வில்தீரணத்தில் தனியாக அமைக்கப்பட்டு, பட்டணங்களாகவும் வளர்ந்து வியாபித்திருக்கும் இடங்களுக்கு டிஸ்டிரிக்டு முனிஸிபாலிட்டிகள் ஆக்டானது பிரயோகமாகும். லோகல்போர்ட்ஸ் ஆக்ட்டில் உள்ள நிபந்தனைகளைவிட டிஸ்டிரிக்டு முனிஸிபாலிடிகளாக்டிலுள்ள நிபந்தனைகள் மிகவும் விரிவாகவும் தீவிரமாகவும் இருக்கும். அத்தகைய விதிகளை அல்லது நிபந்தனைகளை லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் உள்ள வில்தீரணங்களிலும் லோகல் கவர்ன்மென்டார் பிரயோகப்படுத்தும்படி செய்யலாமென்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. டிஸ்டிரிக்ட்டு போர்டுகளின் வில்தீரணத்திற்குள் உள்ள ஒரு முனிஸிபாலிட்டியில் வியாபாரம் செய்வது அல்லது தொழில் நடத்துவது செலவு அதிகரிப்பதாகுமென்று, சிலர் முனிஸிபாலிட்டியின் ஹத்துக்கு வெளியே பஞ்சாயத்தின் அதிகார வில்தீரணத்துக்குள் வாசஞ்செய்து கொண்டு எல்லாதொழில் முதலியவைகளையும் டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்

டியின் ஹத்துக்குள்ளே நடத்திவரலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் டிஸ்டிரிக்ட்டு முனிசிபாலிட்டிகளின் ஹத்துக்கு வெளியேயுள்ள கிராமங்களிலும் டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்டிகளாக்டானது பிரயோகப்படும்படி, உத்திரவிடப்படலாம். அப்படி உத்திரவிடப்படுவதில் டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்டிகளின் ஆக்டிலுள்ள நிபந்தனைகள் சற்று மாற்றவும்படலாம்.

டிஸ்டிரிக்ட்டு முனிசிபாலிட்டிகளின்ஆக்டானது, ஒரு கிராமத்திலாவது அல்லது அதைச்சேர்ந்த யாதொரு இடத்திலாவது பிரயோகிக்கப்படும்படி வேண்டிக்கொள்வதில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தும், டிஸ்டிரிக்ட்டு போர்டும் சேர்ந்து லோகல் கவர்ன்மெண்டாருக்கு மனு செய்துக்கொள்ளவேண்டும். அவைகளில் ஒரு லோகல் போர்டு மாத்திரம் மனு செய்தால் அது போதுமானதல்ல. இந்த விஷயத்தில் ஒரு தாலூக்கா போர்டின் விஸ்தீரணமானது பாதிக்கப்படாததால், தாலூக்கா போர்டுகளைப்பற்றி இப்பிரிவில் யாதொன்றும் சொல்லப்படவில்லை.

இந்தப் பிரிவானது முக்கியமாக முனிசிபாலிட்டிகளுக்கு பக்கத்திலிருக்கும் கிராமங்களைப்பற்றிதான். அவைகளில் முனிசிபாலிட்டிகளாக்டின்சட்டமானது பிரயோகிக்கப்படவேண்டுமென்று கூறுவதாகும்.

13-வது அத்தியாயம்.

தண்டனைகள்.

இந்த அத்தியாயத்தில் தண்டனைகளைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. 207-வது பிரிவில், பொதுவாக, எந்த நபராவது VIII-வது ஷெடியூலில் காணப்பட்டிருக்கும் பிரிவுகளில் உள்ள நிபந்தனைகளையாவது அல்லது அவைகளின்கீழ் செய்யப்படும் யாதொரு உத்திரவையாவதுமீறி நடப்பாராகில் அவருக்கு அபராதம் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. 208-வது பிரிவில் லோகல் போர்டுகளின் அங்கத்தினர்கள் முதலியோர் தங்களுக்கு உத்தியோகம் வகிக்க அர்கத்வமில்லாதிருக்கையில் உத்தியோகம் வகிப்பது குற்றமாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. 209-வது பிரிவில் லோகல் போர்டுகளின் ஊழியர்கள் அல்லது உத்தியோகஸ்தர்கள், லோகல் போர்டுகளின் வேலைகளில் யாதொரு பாத்தியதையும் பெற்றிருக்க கூடாதென்றும், அப்படி பெற்றிருப்பது ஒரு குற்றமாகுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. ஒரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர் அந்த லோகல் போர்டினுடைய நிர்வாகத்திற்கு ஜவாப்தாரியானதால் அவருடைய உத்தியோக அலுவலின் சம்பந்தமான செய்கைகளையாவது அல்லது அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட ஒரு நபரின் உத்தியோக அலுவல் சம்பந்தமான செய்கைகளில் தடுப்பதானது ஒரு குற்றமாகுமென்று 210-வது பிரிவில் சொல்லப்

பட்டுள்ளது. லோகல் போர்டுகளுக்கு தங்கள் நிர்வாகங்களை செலுத்துவதற்கு அடிக்கடி தங்கள் வில்தீர்ணத்திற்குள் உள்ள மனிதர்களைப்பற்றியோ அல்லது நடவடிக்கைகளைப்பற்றியோ சங்கதி தெரிந்துக்கொள்வது அவசிய மாயிருக்குமாதலால் அப்படிப்பட்ட சங்கதிகளைத்தெரிவிக்கும்படிக்கேட்டும் வேண்டுமென்று தெரிவிக்காத நபர் தண்டிக்கப்படவேண்டும். அதைப்பற்றி 211-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

லோகல் போர்டுகள் ஆக்டின்கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்கள் மேலே சொல்லப்பட்ட ஐந்து பிரிவுகளுக்குள்ளேயே அடங்கி யிருப்பதாக சொல்லப்படுவதற்கில்லை. ஆயினும் சகாயச்சட்டங்களை மீறி நடப்பதும் ஒரு குற்றமென்று, லோகல்போர்டுகள் விதிகளைச் செய்யலாம். அத்தகைய குற்றங்களைப்பற்றி இந்தஅத்தியாயத்தில் சொல்லப்படவில்லை.

ஷெட்யூல் களில் குறிப்பிடப் பட்ட தண்டனைகளைக் குறித்த பொதுவான நிபந்தனைகள்.

"207. (1) எவராவது—

(a) VIII-வது ஷெட்யூலின் முதல்கலத்தில் குறிப்பிட்டுள்ள எவையேனும் பிரிவுகளிற்கண்ட யாதொரு நிபந்தனைகளை மீறினாலும்,

(b) அதில் குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் எதன்படியாவது செய்யப்படும் யாதொரு விதி அல்லது உத்தரவை மீறினாலும்,

(c) ஷெபிரிவுகளில் எதன்படியாவது அல்லது அதை அனுசரித்தாவது சட்டப்பிரகாரம் தமக்குக் கொடுக்கப்படும் யாதொரு கட்டளையின்படியாவது செய்யப்படும் யாதொரு உத்தரவின்படியாவது நடக்கத்தவறினாலும்,

அவர் குற்றவாளியென்று நிர்மானிக்கப்படுவதன்மேல், ஷெடி ஷெட்யூலின் நான்காவதுகலத்தில் இது விஷயமாக கண்டதொகைக்கு மேற்படாமல் அவருக்கு அபராதம் விதிக்கப்படும்.

(2) எவராவது—

(a) IX-வது ஷெட்யூலின் முதல் கலத்தில் குறிப்பிட்டுள்ள பிரிவுகளிற்கண்ட யாதொரு நிபந்தனையை மீறினதற்காகவாகிலும்,

(b) அதில் குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் எதன்படியாவது செய்யப்படும் யாதொரு விதி அல்லது உத்தரவை மீறினதற்காக வாகிலும்,

(c) ஷெடி பிரிவுகளில் எதன்படியாவது அல்லது அதை அனுசரித்தாவது சட்டப்பிரகாரம் தமக்குக்கொடுக்கப்படும் யாதொரு கட்டளையின்படியாயினும், செய்யப்படும் யாதொரு உத்தரவின்படியாயினும் நடக்கத் தவறினதற்காகவாகிலும்,

குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு, சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷெடி நிபந்தனையை மீறிக்கொண்டே வந்தாலும் ஷெடி கட்டளை அல்லது உத்தரவின்படி நடக்காமல் அசட்டைசெய்துகொண்டே வந்தாலும், குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், இதற்கு முன் அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு அந்தப்படி அவர் நடந்துகொண்டுவரும் ஒவ்வொரு தினத்திற்கும் ஷெடி ஷெட்யூலின் நான்காவது கலத்தில் அது விஷயமாகக் கண்டிருக்கும் தொகைக்கு மேற்படாமல் அவருக்கு அபராதம் விதிக்கப்படும்.

விவரணம்.—VIII-வது ஷெட்யூலிலும் IX-வது ஷெட்யூலிலும் "விஷயம்" என்னும் தலைப்புள்ள மூன்றாவது கலத்திலிருக்கும் பதிவுகள் - முதலாவது, இரண்டாவது கலங்களிற்கண்ட பிரிவுகள், உபப்பிரிவுகள் அல்லது பகுதிகளில் விவரித்திருக்கும் குற்றங்களின் அர்த்தமாகவாவது, ஷெடி பிரிவுகள், உபப்பிரிவுகள் அல்லது பகுதிகளின் பொழிப்பாகவாவதுகூட இருக்கவேண்டுமென்று உத்தேசிக்கப்படவில்லை; ஆனால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த பிரிவுகள்-உபப்பிரிவுகள் அல்லது பகுதிகளின் விஷயத்தை உதகரிப்பதற்காக மாத்திரம் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

குறிப்புகள்.

இப்பிரிவில் VIII-வது ஷெடியூலில் குறிக்கப்பட்டிருக்கும் பிரிவுகளின் நிபந்தனைகளையாவது, அவைகளின்கீழ் லோகல் போர்டுகள் அல்லது ப்ரெஸிடென்டுகள் செய்யும் யாதொரு விதியையாவது அல்லது அவைகளின் நிபந்தனைகளையொட்டி கொடுக்கும் யாதொரு கட்டளையையாவது மீறி நடப்பதற்கு அபராதம் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது.

அபராதம் மாத்திரம் உண்டு என்று சொல்லப்பட்டதினாலேயே அபராதத்தை செலுத்தாவிடில், சிறைக்காவல் தண்டனை விதிக்கக் கூடாதென்பது இல்லை. இந்தியன் பீனல்கோட் என்னும் சட்டத்தின் 68-வது பிரிவின் பிரகாரமும், சென்னை ஜெனரல் கிளாஸெஸ் ஆக்டின் 19-வது பிரிவின் பிரகாரமும் ஒரு மாஜிஸ்டிரேட் அபராதம் விதிக்கும் காலத்தில் அதை செலுத்தாவிடில், எதிரியானவர் சிறைக்காவல் தண்டனைக்கும் உட்பட வேண்டுமென்றும் உள்ளது.

இப்பிரிவில் மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டிய பதம் என்ன வென்றால் 453-வது பக்கத்தில் (1)-வது உபப்பிரிவில் (c) என்னும்வாக்கியத்தில் "சட்டப்பிரகாரம்" என்னும் பதங்கள் தான். ஒரு மெம்பர், ஒரு லோகல் போர்டு அல்லது அதின் உத்தியோகஸ்தர் கொடுக்கும் நோட்டீஸானது சட்டப்பிரகாரம் உள்ளதா, அல்லவா என்பதைப் பற்றி கவனிப்பதில் யாதொரு தவறும் இல்லை. இதைப்பற்றி அடியில் இன்னும் விவரமாக கவனிப்போம்.

இந்தப் பிரிவின் (1)-வது உபப் பிரிவில், குற்றங்கள் மூன்றுவிதமாக வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, முதல் முதலாவதாக, VIII-வது ஷெடியூலில் சொல்லப்பட்டிருக்கும் பிரிவுகளின் அம்சங்களையே மீறி நடப்பது ஒரு குற்றமாகுமென்பது. அதாவது, அந்தப் பிரிவுகளிலேயே இன்னின்ன விதமாக யாதொரு மெம்பரும்செய்யக்கூடாது என்றிருக்க வேண்டும். இரண்டாவதாக-அந்தப் பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் யாதொரு விதி அல்லது உத்திரவு செய்யப்பட்டிருக்கும்பக்ஷத்தில் அவைகளை மீறி நடப்பது ஒரு குற்றமென்பது. அதாவது அந்த குற்றத்தின் சாராம்சமானது இச்சட்டத்திலுள்ள பிரிவுகளில் காணப்படாமல் அவைகளையொட்டி செய்யப்படும் விதிகளில் காணுவதாகும். மூன்றுவதாக-மேலே VIII-வது ஷெடியூலில் சொல்லப்பட்ட பிரிவுகளில் தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு ப்ரெஸிடென்டுகள் நோட்டீஸ் கொடுத்தும் அந்த நோட்டீஸை நிராகரிப்பது ஒரு குற்றமாகுமென்பது.

VIII-வது ஷெடியூலில் 61-பிரிவுகள் காணப்பட்டுள்ளன. அவைகளில் சில பிரிவுகளில்தான், அந்த பிரிவுகளில் உள்ள அம்சங்களை மீறி நடப்பது குற்றமாகுமென்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது 102(1), 109, 125, 129, 133, 134, 136, 139(2), 141(1), 144, 146, 151(1), 157, 157-A, 158, 161(1), 163(1), 163-A, 166(1), 167, 169(1), 171, 172(1), 175, 177(2), 178, 183, 185, 187(1), 190, 193, 194, 195, 229, 230 இந்த பிரிவுகளிலேயே இன்னின்னபடிக்கு செய்யக்கூடாதென்று சொல்லப்பட்டுள்ளது. மற்ற பிரிவுகளில் அதாவது 97, 122, 123, 124(2), 129-A, 131(2), 132, 135, 138, 140(1), 145, 147, 148 149, 150, 151(2), 153(2), 159(1), 161(2), 163(2), 164(2), 176, 212(8), 231, 232 இந்த பிரிவுகளின்கீழ் ஒரு லோகல்போர்டு அல்லது அதன் ப்ரெஸிடென்டு செய்யும் உத்திரவு அல்லது கட்டளையை மீறி நடப்பது ஒரு குற்றமாகும் என்றுள்ளது. இந்தப் பிரிவுகளின்கீழ் நோட்டீஸை நிராகரிப்பதுதான் குற்றமேயொழிய வேறெதன்றும் குற்றமல்ல இதற்கு முன்னே சொல்லப்பட்ட பிரிவுகளை மீறி நடப்பதே குற்றமாகும்.

பொதுவாக மேலே இரண்டாவதாக சொல்லப்பட்ட பிரிவுகளின்கீழ் கொடுக்கப்படும் நோட்டீஸானது சரியானதும் செல்லத்தக்கினதுமானதா என்னும்ப்ரச்னையை, அவைகளின்கீழ் நடந்ததாகசொல்லப்படும் குற்றங்களை

விசாரிக்கும் மாஜிஸ்டிரேட்டானவர் கவனிக்கலாமா என்றும், எதிரிகள் தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நோட்டீஸானது சரியானதும் செல்லத் தக்கதுமல்லவென்று எதிர்வாதம் செய்யலாமா என்றும், சென்னை ஹைக்கோர்ட்டு முன்பாக பல கேசுகளில் கேள்விகள் கிளம்பி பின்வருமாறு அவைகளில் தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

சென்னை லோகல் போர்டுகளின் சட்டத்தின் 159, 207 இந்தப் பிரிவுகளின்கீழ் யாதொரு குற்றம் நடந்ததாக சொல்லப்படும் ஒரு கிரிமினல் வியாஜ்ஜியத்தில், எதிரி செய்ததாக ருசுப்படுத்தப்படவேண்டிய குற்றத்தின் சாராம்சம் என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்ட எதிரி தமக்குக் கொடுக்கப்பட்ட நோட்டீஸை கீழ்ப்படியாமல் அவமதித்தார் என்பதல்ல. எந்த விஷயமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டதோ அந்த விஷயம் வாஸ்தவமாக இருக்க வேண்டுமென்பது. அதாவது எதிரியானவர் ஒரு லோகல்போர்டு நிலத்தில் ஆக்ரமித்ததாக சொல்லப்படும்பக்ஷத்தில் அவ்வாக்கிரமமானது வாஸ்தவமா அல்லவா என்பது. சென்னை லோகல் போர்டுகளின் சட்டத்தின் 159, 207-பிரிவுகளின்கீழ் ஒரு நபர் ஒரு லோகல்போர்டு நிலத்தில் ஆக்ரமித்தாரென்றும் அவர் செய்ததாகச் சொல்லப்படும் ஆக்கிரமிப்பை எடுத்துவிடும்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டும் அந்த நோட்டீஸை லக்ஷியம் செய்யவில்லை என்றும் காரணத்தினால் ஒரு கிரிமினல் கோர்ட்டில் தாவா செய்யப்படும்பக்ஷத்தில், அந்த தாவாவில் எதிரியானவர் நோட்டீஸை நிராகரித்தாரென்றுமாத்திரம் ருசு ஏற்படுவதே, அவரை தண்டிப்பதற்கு போதுமான ஒரு காரணமாகாது. அவர் வாஸ்தவத்தில் ஒரு லோகல் போர்டு நிலத்தில் ஆக்ரமித்ததாகவும் ருசு ஏற்பட்டால்தான் அவரை தண்டிக்கலாம். (a) ஆகையால், ஒரு நபர், இப்பிரிவின்கீழ் தாவா தொடரப்படுமிடத்து தாம் யாதொரு பொது ரஸ்தாவில் ஆக்கிரமம் செய்யவில்லையென்று ருசுப்படுத்தலாம். இப்பிரிவின்கீழ் ஒருஆக்கிரமிப்பானது தண்டிக்கப்படுகிறதேயொழிய, எவர் ஆக்கிரமம் செய்தாரோ அவரேதான் தண்டிக்கப்படவேண்டுமென்பதற்கில்லை. ஆகையால், யாதொருநபர் ஒரு பொது ரஸ்தாவில் ஆக்கிரமித்திருந்து பிறகு அந்த ஆக்கிரமத்துடன் தன் வீட்டை மற்றொருவருக்கு விற்றபிறகு ஆக்கிரமத்திற்காக தாவா செய்யப்படுவதற்கில்லை. ஆக்கிரமம் செய்வதே தண்டிப்பதற்கு ஆதாரமாகாது. ஆக்கிரமம் செய்தபிறகு அதை எடுத்துவிடும்படி கேட்கப்பட்டும் கீழ்ப்படியாமல் இருந்தால்தான் தண்டனை ஏற்படுவதற்கு ஹேது உண்டாகும்.

லோகல் போர்ட்ஸ் ஆக்டின் ஒரு பிரிவின்கீழ் யாதொரு நபர் குற்றம் செய்ததாக சாட்டப்படுவாராயின் அவரை விசாரிக்கும் கோர்ட்டானது, கிரிமினல் புரோஸீஜர் கோட் என்னும் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள

(a) 2 அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை கேஸுகளின் குறிப்புகள் பக்கம் 124 முதல் 128 வரையில் பக்கம் பார்க்க.

மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டுகளாகத்தான் இருக்க வேண்டுமேயொழிய, கிராம கோர்ட்டுகள் அவைகளை விசாரிப்பதற்கில்லை இது விஷயமாக கிரிமினல் புரோஸீஜர் கோட் என்னும் சட்டத்திலேயே சொல்லப்பட்டுள்ளது. இன்னும் கிரிமினல் கோர்ட்டுகளிலும் அதாவது ஹானரரி பெஞ்சுமாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளல்லாமல் சம்பளம் பெற்ற மாஜிஸ்ட்ரேட்டுகள்தான் விசாரிக்க வேண்டுமென்றும், காரணம் என்னவென்றால், சட்டத்தில் அதிக பயிர்ச்சியில்லாத ஹானரரி மாஜிஸ்டிரேட்டுகள் சட்ட சிக்குள்ள கேசுகளை விசாரிப்பது உசிதமல்லவென்றும், அநேக கேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (a).

ஒரு கிரிமினல் கோர்ட்டில், லோகல் போர்ட்ஸ் ஆக்டின் கீழ் ஒரு கேஸ் நடந்துகொண்டிருக்கையில், அதைப் பற்றி ஒரு சிவில் கோர்ட்டில் தாவா செய்து, கிரிமினல் கோர்ட்டானது ஷை கேஸை விசாரிப்பதற்கு முன், சிவில் கோர்ட்டின் தீர்மானத்தை எதிர்பார்க்க வேண்டுமென சிவில் கோர்ட்டிலிருந்து ஒரு தடைஉத்தரவு பெறலாமா என்னும் கேள்விவந்ததில், ஹைக்கோர்ட்டாரவர்கள் அம்மாதிரி யாதொரு உத்திரவும் பெறமுடியாதென்றும் - ஒவ்வொரு கோர்ட்டும் தங்களுடைய உரிமைப் பிரகாரம் கேசுகளை தங்கள் முன்புள்ள சங்கதியம்சங்களின்பேரில் தீர்மானம் செய்யவேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். (b).

ஒரு கேஸில், ஒரு நபர் நாகதாளி புதர்களை பொது ரஸ்தாவில் படரும்படி வளரவிட்டதற்காக ஒரு லோகல் போர்டு ஓவர்சியர் இந்தியன் பீனல்கோட் என்னும் சட்டத்தின் கீழ் அவர் பேரில் கிரிமினல் கோர்ட்டில் தாவா செய்தார். அந்த தாவாவில் லோகல் போர்ட்ஸ் ஆக்டிலேயே நாகதாளிப் புதர்கள் எடுக்கப்படுவதற்காக தக்க நிபந்தனைகள் ஏற்பட்டிருக்க அவைகளை நிராகரித்து விட்டு இந்தியன் பீனல் கோட் என்னும் சட்டத்தின் கீழ் தாவா செய்யப்படுவது சட்ட சம்மதமானதல்லவென்று வாதிக்கப்பட்டது. ஹைக்கோர்ட்டாரவர்கள், இந்த வாதத்தை அங்கீகரியாமல் ஒரே செய்கையானது இரண்டு சட்டங்களின் கீழ் குற்றமெனக் கருதப்படுமானால் அவற்றில் எந்த சட்டத்தின்கீழாவது குற்றம் செய்தவர்பேரில் தாவா தொடரப்படலாம் என்று தீர்மானித்திருக்கின்றனர். (c) ஆனால், ஒரே குற்ற விஷயமாக ஒருதரம் தண்டனையான பிறகு

(a) பப்ளிக் பிராஸிகியூட்டர் vs. வரதராஜுலு நாயுடு. A. I. R. 1925 Mad 61—47 M. L. J. 470.

(b) ராமய்யா vs. ராமய்யா 50 Mad 839—53 M. L, J. 265 ராம அய்யர் vs. மதுரை முனிசிபல் கௌன்சில் A. I. R. 1928 Mad. 315.

(c) மொளயப்ப கௌண்டன் vs. இந்தியா சக்ரவர்த்தி 55 M.L J. 715.

அல்லது ஒருதரம் கேஸ் நடந்தபிறகு அதைப்பற்றி மறுபடியும் அதே எதிரி பேரில் அதே விஷயமாக மற்றொரு கிரிமினல் கேஸ் தொடரப்படுவதற்கில்லை. (கிரிமினல் புரோவிஜர் கோட் 403-வது பிரிவைப் பார்க்க. சென்னை ஜெனரல் கிளாஸஸ் ஆக்டின் 20-வது பிரிவையும்பார்க்க. லோகல் போர்ட்ஸ் புதியசட்டமானது அமுலுக்கு வரும்காலத்தில் பழையசட்டத்தின் கீழ் யாதொருதாவா செய்யப்பட்டிருப்பின், அதனால் பழைய சட்டத்தின்கீழ் எந்த தரப்பினருக்காவது ஏற்கெனவே சங்கிரமித்திருக்கும் உரிமைகள் போய்விடாது. ஆனால், புதிய சட்டத்தின் கீழ் ஏதாவது ஓர் உரிமையாவது அல்லது அனுகூலமாவது ஏற்படுவதாயிருந்தால் அதையும் கைக்கொள்ளலாம். (மாறுதல் காலத்தில் ஏற்பட்டுள்ள விதிகளில் அதாவது 10-வது ஷெட்யூல் 5-வது விதியைப்பார்க்க).

இப்பிரிவின் கீழ் ஒரு நபர் ஒரு காரியத்தைச் செய்யும்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்ட பிறகு, அந்தக் காரியத்தைச் செய்யாததினால் அவர் பேரில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாவா தொடரப்படும் பக்ஷத்தில், அந்த நடவடிக்கையில் எதிரியானவர் தமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நோட்டீஸானது, ப்ரெஸிடென்டினுடைய அதிகார வரம்பிற்கு மீறி கொடுக்கப்பட்டதென்றும் அதை நிராகரிப்பதற்கு தமக்கு உரிமையுண்டென்றும்எதிர்வாதம் செய்யலாமா? சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 221-வது பிரிவின் கீழும் இன்னும் இப்பிரிவைப்போன்ற இதர சட்டங்களிலுள்ள பிரிவின் கீழும் தீர்மானிக்கப்பட்டிருக்கும் கேஸுகளைக் கவனிக்குமிடத்து அம்மாதிரி எதிர்வாதம் செய்யலாம் என்றே ஏற்படும். (a).

சிதம்பரத்தில் திருநாராயண அய்யங்கார் என்பவர் ஒரு காபி ஹோட்டலை வைத்துக்கொண்டு நடத்தி வந்தார். அவர் அதற்காக ஒரு சரியான லைஸென்ஸ் பெற்றிருந்தார். அவர் தண்ணீர் வரி செலுத்தவில்லை என்னும் காரணத்தினால் முனிஸிபாலிடி ப்ரெஸிடென்டானவர் அவருடையலைஸென்ஸை ரத்துசெய்து விட்டார். அவருக்கு கொடுக்கப்பட்ட லைஸென்ஸில் தண்ணீர் வரி கட்டாததினால் லைஸென்ஸ் ரத்துசெய்யப்படலாமென்று யாதொரு நிபந்தனையுமில்லை. ஆகையால், லைஸென்ஸில் உள்ள நிபந்தனைகளிலல்லாதும் அவைகளுக்குச் சம்பந்தமில்லாததுமான ஒரு காரணத்தைக் கொண்டு லைஸென்ஸ் ரத்துசெய்யப்பட்டது. ஆனால், திருநாராயண் அய்யங்கார் என்பவர் லைஸென்ஸ் ரத்து செய்யப்பட்டதையும் லக்ஷியம் செய்யாமல் காபி ஹோட்டலை நடத்தி வந்தார். அவர் புதிய வருஷத்திற்காக லைஸென்ஸ் கேட்

(a) ரஹீம் சாயபு விஷயமாக I அகில இந்தியா லா ஜர்னல் ரிப்போர்ட்டுகள் 197-வது பக்கம்.

(a) பிள்ள ராமசாமி vs. தடே பள்ளிக்கூடம் தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டு 11. அகில இந்தியா லா ஜர்னல் ரிப்போர்ட்டுகள் 237-வது பக்கம்.

தும் லெவென்ஸ் கொடுக்க மறுக்கப்பட்டிருந்தது. பிறகு, ப்ரெஸிடென்டான வர் லெவென்ஸ் பெருமல் காபி ஹோட்டலை நடத்தினதற்காக அவர் பேரில் கிரிமினல் கோர்ட்டில் தாவா செய்தார். அந்த தாவாவில் திருநாராயண அய்யங்கார் என்பவர், முனிஸிபாலிடி சேர்மென் வேண்டுமென்று அக் கிரமமாய் லெவென்ஸை ரத்து செய்து அதை மறுபடியும் புதுப்பிக்க மறுத்துவிட்டாரென்றும், அவர் மறுத்துவிட்டிருப்பது அவருடைய அதிகார வரம்பிற்கு மீறினதாகு மென்றும், அதனால் முனிஸிபாலிடிகளாக்டின் 338வது பிரிவின்கீழ் தாம் யாதொரு குற்றமும் செய்யவில்லையென்றும், தமது பேரில் கிரிமினல் தாவா தொடருவதற்கே நியாயமில்லை யென் றும் எதிர்வாதம் செய்தார். அதை கீழ் கோர்ட்டார் அங்கீகாரம் செய்து அவரை விடுதலை செய்துவிட்டனர். இக்கேஸானது சென்னை ஹைக்கோர்ட் டில் தீர்மானத்திற்கு வந்தபொழுது, ஹைக்கோர்ட்டார்வர்கள், கீழ்க்கோர்ட் டினுடைய தீர்மானம் சரியானதென்றும், ஒரு முனிஸிபல் சேர்மென், யாதொருநபர் லெவென்ஸினுடைய நிபந்தனைகளை மீறி நடந்த காரணத் தைத்தவிற, வேறே யாதொரு காரணத்தைக்கொண்டும் அந்த லெவென்ஸை ரத்துசெய்யவாவது அல்லது புதுப்பிக்க மறுக்கவாவது கூடாதென்று தீர்மா னித்திருக்கின்றனர்(a). ஆனால் ஒரு சேர்மென் அல்லது ப்ரெஸிடென்டினு டைய உத்தரவானது அவருடைய அதிகார வரம்பிற்குள் செய்யப்படும்பக்கத் தில், அதற்கு ஏதாவது நியாயம் இருந்ததா அல்லவா என்பதைப்பற்றியாவது அல்லது அவ்வுத்திரவானது சரியானஉத்தரவாகவும் அதற்கு அவசரம் ஏதா வது இருந்ததா என்பதைப்பற்றியாவது கிரிமினல் கோர்ட்டார் தீர்மானம் செய்வதற்கில்லையென்று சிதம்பரம் முனிஸிபல் கௌன்சில் சேர்மென் vs. திருநாராயண அய்யங்கார் (a) என்னும் கேஸிலேயே தீர்மானிக்கப்பட்டி ருக்கிறது.

லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ், ஒருநபர் தண்டிக்கப்படுவாராஞல் அவ ருக்கு கட்டாயம் அபராதம்தான் விதிக்க வேண்டுமேயொழிய அவருக்கு புத்திமதி சொல்லி அவரை விடுவதற்கில்லை(b). லோகல் போர்டுகளாக்டின் கீழ் செய்யப்படும் தாவாக்களில் வருலான அபராதத் தொகைகள் சம்பந்தப் பட்டலோகல் போர்டுகளுக்குத்தான் சேருவதாகும் (V-வது ஷெட்யூலை யும் 224-வது பிரிவையும் பார்க்க).

ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு, ஒரு தொழிலுக்காக லைசென்ஸ் பெறும்படி அதை நடத்திவரும் நபரைக் கேட்டும் அவர் அதைப் பெறுமலே அத்தொழிலை நடத்திவரும்பக்கத்தில், அந்த நோட்டீஸை நிராகரிப்பதற்காக

(a) சிதம்பரம் முனிஸிபல் கௌன்சில் சேர்மென் vs. திருநாராயண அய்யங்கார் 55 M. L. J. 566.

(b) மேர்வஞ்சி மேஸ்திரி vs. இந்தியா சக்ரவர்த்தி 52 Bom. 251.

வும், லைசென்ஸில்லாமல் தொழில் நடத்துவதற்கும், ப்ரெஸிடென்டாளைவர் 207-வது பிரிவின்கீழ் தாவா செய்யவேண்டுமேயொழிய அதற்காக தனியாக கட்டணம் கட்ட வேண்டுமென்று விதிப்பதற்கில்லை (a).

ஒரு நபர், லைஸென்ஸில்லாமல் ஒரு தொழிலை நடத்துவதற்காக அபராதம் அல்லது தண்டத்தொகை விதிப்பதற்கு ஒரு லோகல்போர்டுக்கு அதிகாரமில்லை. அப்படிப்பட்ட தொகையை வசூலிப்பதற்காக மாஜிஸ்ரேட் கோர்ட்டில் 221-வது பிரிவின்கீழ் மனு செய்வதற்கில்லை (b).

இப்பிரிவின்கீழ் மாஜிஸ்ட்ரேட்டுகள் செய்யும் அபராததண்டனைக்கு விரோதமாக அப்பீல் உண்டு. அப்படிப்பட்ட அப்பீலில் அப்பீல் மாஜிஸ்ட்டிரேட்டுகள் செய்யும் உத்தரவின்பேரிலும், ஹைக்கோர்ட்டுக்கு ரிவிஷன் மனு செய்யலாம்.

203, 203-A, 207-(2) இப்பிரிவுகளில், ஒரு நபர் குற்ற ஸ்தாபனையான பிறகு அதே குற்றத்தைச்செய்து வருவாராகில், அப்படி குற்றம் நடந்து வரும் பிரதிதினத்திற்கும் அபராதம் உண்டு என்று சொல்லப்பட்டிருப்பதிலேயே, ஒரு மாஜிஸ்ட்ரேட்டானவர் முதற்குற்றத்திற்காக தண்டிக்கும் பொழுது, எதிரியானவர், இனிமேல் குற்றம் செய்துவரும் பிரதிதினத்திற்கும் இவ்வளவு ரூபாய் அபராதம் உண்டு என்று எதிர்கால நிகழ்வைக் குறித்து ஒரு தீர்மானம் செய்வதற்கில்லை. ஒருதரம் தண்டனையானபிறகும், ஒரு எதிரியானவர், அதே குற்றத்தைச்செய்து வருவாராகில் அதற்காக மறுபடியும் அவர்பேரில் தாவா செய்யப்படவேண்டும் (c). இனி நடக்கப்போகும் ஒரு குற்றத்திற்காக, மாஜிஸ்ட்ரேட்டானவர் முன்ஜாக்கிரதையாகவேதண்டனையிடுவதற்கில்லை என பல கேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இப்பிரிவின் விவரணம் முக்கியமானது. VIII-வது IX-வது ஷெட்யூல்களில் குற்றத்தைப்பற்றிய விவரம் கண்டுள்ளது. அந்த விவரங்கள், பூர்த்தியான விவரங்களல்லவென்றும், அவைகளிலுள்ள பிரிவுகளின் விவரங்களைப் பற்றி லோகல் போர்டுகளாக்டின் சட்டத்திலுள்ள பிரிவுகளையே கவனிக்க வேண்டுமென்றும்சொல்லப்பட்டுள்ளது. ஆகையால், ஒரு நபர், அவைகளின் பிரகாரம் தாம் யாதொரு குற்றமும் செய்யவில்லை யென்று வாதிக்க முடியாது.

(a) பரமக்குடி யூனியன்போர்டு ப்ரெஸிடென்டு vs. செல்லசாமிதேவர் A. I. R. 1926 Mad, 1068—1926 M. W. N. 676.

(b) மீது கோபய்யா விஷயமாக 51 Mad. 866—55 M. L. J. 27.

(c) இந்தியா மஹாராணி vs. வீரம்மாள் 16 Mad. 230.
அமீர் ஹாலண்கான் vs. இந்தியா சக்ரவர்த்தி 40 All. 869.

208. (1) யாவரொருவர், இந்தச்சட்டத்தின் கீழாவது அல்லது இதன் கீழ் செய்யப்பட்டிருக்கும் விதிகளின் கீழாவது தாம் உத்தியோகம் வகிக்க உரிமையற்றவரென்றுவது, அல்லது அப்படிப்பட்ட உத்தியோகத்தை வகிக்கும் உரிமையுள்ளவராக இருப்பதிலிருந்து நீங்கிவிட்டாரென்றுவது தெரிந்திருந்தும் ஒரு லோகல் போர்டு அங்கத்தினராக பிரவர்த்திக்கிறாரோ அவர் குற்றவாளி என்று தீர்மானிக்கப்படுவதின்மேல் அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்கும் இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படுவார்.

போக்கியதையற்றிருக்கும்போது ஒரு லோகல் போர்டின் அங்கத்தினராகவாவது அல்லது வைஸ்ப்ரெஸிடென்டாகவாவது பிரவர்த்திப்பதற்கு தண்டனை.

(2) யாவரொருவர் இந்த சட்டத்தின் கீழாவது அல்லது இதன் கீழ் செய்யப்பட்டிருக்கும் விதிகளின் கீழாவது அப்படிப்பட்ட உத்தியோகம் வகிக்க உரிமையற்றவரென்றுவது அப்படிப்பட்ட உத்தியோகத்தை வகிக்கும் உரிமையைப் பெற்றிருப்பதிலிருந்து நீங்கிவிட்டாரென்றுவது அல்லது அப்படிப்பட்ட அலுவல்களை செய்வதிலிருந்து நின்றுவிட்டாரென்றுவது தெரிந்திருந்தும் ஒரு லோகல் போர்டு ப்ரஸிடென்டு அல்லது தாத்காலிகமான ப்ரெஸிடென்டு அல்லது வைஸ்ப்ரெஸிடென்டு இவர்களாக பிரவர்த்திப்தாலும் அல்லது இவர்களுடைய அலுவல்களை நடத்தினாலும் அவர் குற்றவாளி என்று தீர்மானிக்கப்படுவதன்மேல் அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்கும், 1,000 ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படுவார்.

(3) ஒரு லோகல் போர்டினுடைய ப்ரெஸிடென்டு அல்லது தாத்காலிக ப்ரெஸிடென்டு அல்லது வைஸ்ப்ரெஸிடென்டு, அந்த லோகல் போர்டுக்குச்சொந்தமான அல்லது அந்த லோகல் போர்டினுடையஸ்வாதீனத்திலுள்ளதும் அல்லது தம்முடைய ஸ்வாதீனத்திற்கு வந்திருந்து அதனுல் தம்முடைய அதிபத்தியத்திலுமிருக்கும் ஏதேனும் பத்திரங்கள் தொகைகள் அல்லது வேறே சொத்துக்களை அவர் ப்ரெஸிடென்டாகவோ அல்லது தாத்காலிக ப்ரெஸிடென்டாகவோ அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகவோ இருந்த உத்தியோகத்தின் கால அளவானது முடிந்ததான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த உத்தியோகத்தில் தமக்கு பின் வந்திருந்தவருக்காவது அல்லது வேறே

நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நபருக்காவது அல்லது அந்த நபர் ஒரு வைஸ் ப்ரெஸிடென்டாக இருந்தால் ப்ரெஸிடென்டு கேட்டவுடனே யாவது கொடுக்கத்தவறும்பக்ஷத்தில், அப்படிப்பட்ட ப்ரெஸிடென்டு, தாத்காலிக ப்ரெஸிடென்டு அல்லது வைஸ்ப்ரெஸிடென்டு, குற்ற வாளி என்று நிர்மானிக்கப்படுவதின் பேரில் அப்படிப்பட்ட ஒவ் வொரு குற்றத்திற்கும் 1000-ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படுவார்.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம்வருஷத்திய திருத்த சட்டத்தினால் முற்றிலும் மாற்றப்பட்டு புதியதாக அமைக்கப்பட்டது. லோகல் போர்டு ப்ரெஸி டென்டுகளும் வைஸ் ப்ரெஸிடென்டுகளும் தங்களுடைய ஸ்தானங்களி லிருந்து நீங்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டும்-நீங்காமல் பல ஆக்ஷே பனைகளைத் தெரிவித்துக்கொண்டே இருப்பதற்கு பழைய பிரிவின்கீழ் வசதி யிருந்தது. பழைய பிரிவில், ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸி டென்டு தன்னுடைய உத்தியோகத்தை இழந்தபிறகும் அதை தனக்கு பின் வருபவருக்கு ஒப்புவியாமல் தாமே அவைகளைக் வைத்துக்கொண்டு வரும் பக்ஷத்தில் அதற்காக யாதொரு தண்டனையும் இராமல் இருந்தது. இப் பொழுது இப்பிரிவினால், லோகல் போர்டு ப்ரெஸிடென்டுகளும் வைஸ் ப்ரெஸிடென்டுகளும் தங்களுடைய பதவியினின்றும் நீங்கிவிட வேண்டு மென்றிருந்தும் நீங்காமல் அதை தாமே வகித்து அதிகாரத்தைச் செலுத்தும் பக்ஷத்தில் அதற்கு அபராதம் உண்டு என்று ஏற்பட்டுள்ளது.

இப்பிரிவானது ஜாக்கிரதையாக அர்த்தப்படுத்திக்கொள்ளப்படவேண் டும். இப்பிரிவில் மூன்று அம்சங்கள் உள்ளன. முதல் அம்சமானது லோகல் போர்டு அங்கத்தினர்களைப்பற்றியும், இரண்டாவது அம்சமானது லோகல் போர்டு ப்ரெஸிடென்டு, தாத்காலிக ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு இவர்கள் தாங்கள் உத்தியோகப்பதவியை வகிக்கக்கூடா தென்று தெரிந்திருந்தும் உத்தியோகம் வகிப்பது கூடாதென்பதைப்பற்றி யும், மூன்றாவது அம்சமானது ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு, தாத் காலிக ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு இவர்களுடைய உத்தியோக காலமானது முடியும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமக்குப் பின் னால் அவ்வுத்தியோகத்தை வகிக்கும் நபர்களுக்கு தம்மிடமுள்ள லோகல் போர்டைச் சேர்ந்த சொத்துக்களெல்லாவற்றையும் ஒப்புவிக்க வேண்டு தைப்பற்றி கூறுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் 54-முதல் 59-வரையிலுமுள்ள பிரிவுகளின் அம்சங்களைக் கவனிக்கவேண்டும். 1-வது உபப்பிரிவில், " யாவரொருவர்..... ஒரு லோகல் போர்டு அங்கத்தினராக பிரவர்த்திக்கிறரோ " என்றிருப்பதை

நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். ஒரு லோகல் போர்டு அங்கத்தினர் தம் உத்தியோகத்தை வகிக்கும் உரிமையானது அற்றபிறகு தம்முடைய பதவியை ராஜிநாமா செய்யவேண்டுமென்றுவது அல்லது வேறுவிதமாக தாம் நீங்கிவிட்டதாக தெரிவிக்கவேண்டும் என்றுவது யாதொரு நிபந்தனையும் கிடையாது. அவர் அந்த லோகல் போர்டின் மீட்டிங்குகளுக்குப் போகாமலும், அதன் கமிட்டியின் மீட்டிங்குகளில் சேராமலும் இருந்தாலே அவர் தம்முடைய பதவியைவிட்டு நீங்கினதாக ஏற்படும். மீட்டிங்கு முதலியவைகளில் சேர்ந்து பேசுவது முதலியவைதான் "பிரவர்த்திப்பதென" ஏற்படும். இன்னும், அவர் தமக்குள்ள ஒருலோகல் போர்டு அங்கத்தினரின் உரிமை போய்விட்டது என்று அறியாத பக்ஷத்தில் அவர் அந்த லோகல் போர்டில் ஒரு அங்கத்தினராக பிரவர்த்தித்தாலும் அது ஒரு குற்றமாகாதென்று இப் பிரிவிலேயே ஏற்படும். 51-வது பிரிவில் லோகல் போர்டு அங்கத்தினர்களுடைய யோக்கியதைக் குறைவுகளானது இன்னதென்று விவரிக்கப்பட்டுள்ளது. ஒரு அங்கத்தினர் அப்பிரிவில், (1)-வது உபப்பிரிவின், (a) முதல் (g) வரையிலுமுள்ள யோக்கியதைக் குறைவுகளை அடைந்திருப்பின் அவை தமக்கு தெரிந்தவையென்றே அனுமானிக்கப்படவேண்டும்.

(1)-வது உபப்பிரிவில் "இதன்கீழ் செய்யப்பட்டிருக்கும் விதிகளின் கீழாவது" என்றிருப்பதானது லோகல்கவர்ன்மென்டார் எலெக்ஷன்களைப் பற்றி செய்யும் விதிகளையும் அவைகளின்கீழ் கோர்ட்டுகள் தீர்மானம் செய்வதையும் குறிக்கும். லோகல் கவர்ன்மென்டார் செய்திருக்கும் விதிகளின் கீழ் நடக்கும் விசாரணையில், கோர்ட்டார் ஒரு நபர் அங்கத்தினரின் உத்தியோகத்தை வகிக்க உரிமையற்றவர் என்று தீர்மானிக்கும்பக்ஷத்தில், அவர் உடனே அந்த உத்தியோகத்தினின்றும் நீங்கினவராக கருதப்படுவார். 57-வது பிரிவின்கீழ் செய்யப்படும் ஒரு மனுவில், டிஸ்டிரிக்ட் ஜட்ஜானவர், ஒரு அங்கத்தினர் உத்தியோகம் வகிக்க உரிமையற்றவர் என்றும் தீர்மானிக்கும்பக்ஷத்தில் அந்த நபர் உடனே தம் ஸ்தானத்தினின்றும் விலகினவராகக் கருதப்படுவார். இத்தகைய சந்தர்ப்பங்களில், அந்தஅங்கத்தினர் லோகல் போர்டு மீட்டிங்குகளில் கலந்துகொள்ளக்கூடாது. அப்படிக் கலந்துகொள்வது ஒரு குற்றமாகும்.

லோகல் போர்டு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ்ப்ரெஸிடென்டு ஆகிய இவர்களுக்கு அங்கத்தினர்களைவிட அதிகமான பொறுப்பும் தண்டனையும் உண்டு. 44-வது பிரிவின்கீழ் ஒரு லோகல் போர்டானது தமது ப்ரெஸிடென்டு வைஸ்ப்ரெஸிடென்டு முதலியவர்களின்மீது ஒருநம்பிக்கைக்குறைவு பிரேரேபணையை செய்து நடத்தேற்றும்பக்ஷத்தில், ப்ரெஸிடென்டு முதலியவர்கள் உடனே தங்கள் பதவினின்றும் நீங்கிவிடவேண்டும். லோகல்போர்டு ப்ரெஸிடென்டு வைஸ்ப்ரெஸிடென்டு முதலியவர்கள் தங்களுடைய கடமை இன்னதென்று அறிந்தவராகவே பாவிக்கப்படுவாராகையால் அவர்களின் விஷயத்தில் அதிக அபராதம் உண்டு.

ப்ரெஸிடென்டு, வைஸ் ப்ரெஸிடென்டு முதலியவர்கள் தங்களுடைய உத்தியோகத்தை இழந்தபிறகு அல்லது அதினின்றும் நீங்கினபிறகு அல்லது நீக்கிவிடப்பட்ட பிறகு உடனே தம் வசத்திலுள்ள சகல லோகல் போர்டு சாமான்களையும் தமக்குப்பின் அந்த உத்தியோகத்தை வகிப்பவரிடம் கொடுத்துவிடவேண்டும். "உத்தியோக கால அளவானது முடிந்ததாலாவது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்" என்பதனால், ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தம்முடைய பதவியினின்று நீங்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் குறிப்பதாகும். அதாவது, (1) 43-வது பிரிவின்கீழ் கவர்ன்மென்டாரால் நீக்கப்படுவது, (2) 44-வது பிரிவின்கீழ் ஒரு நம்பிக்கைக்குறைவு பிரேரணையால் உத்தியோகத்தினின்றும் நீக்கப்படுவது, (3) 56-வது பிரிவின் கீழ் யோக்கியதைகுறைவு உள்ளவராகப்போய்விடுவது, (4) 57-வது பிரிவின் கீழ் யோக்கியதையற்றவரென்று டில்டிரிக்ட்டு ஜட்ஜினால் தீர்மானிக்கப்படுவது, ஆகிய இவ்வளவு சந்தர்ப்பங்களையும் குறிக்கும்.

ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு சரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ப்ரெஸிடென்டல்ல வென்று ஒரு எலெக்ஷன் கோர்ட்டினால் தீர்மானிக்கப்படுவாராகில், அவர் உடனே தம்முடைய பதவியை அவருக்குப் பதிலாக அக்கோர்ட்டினாலேயே ப்ரெஸிடென்டென்று தீர்மானிக்கப்பட்ட நபருக்கு, சில் முதலிய சகல தஸ்தாவேஜுகளுடன் ஒப்புவிக்கவேண்டும். அப்படிச் செய்யத்தவறுவது இப்பிரிவின்கீழ் ஒரு குற்றமாகும்.

"உத்தியோக கால அளவு" என்பது எவ்வளவு காலம் வரையிலும் ப்ரெஸிடென்டு முதலியவர்கள் உத்தியோகம் வகிக்கும்படி ஏற்படுகிறதோ அந்த கால அளவாகும் மேலே சொல்லப்பட்ட 4-வழிகளில் எவ்வழியிலாவது ப்ரெஸிடென்டு முதலானவர்கள் உத்தியோகத்தினின்றும் நீக்கப்படலாம்.

ஒரு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு தம்முடைய உத்தியோக பதவியிலிருந்து நீக்கிவிடப்பட்ட பிறகு உத்தியோகதோரணையில் ஏதாவது ஒரு செய்கையைச் செய்தாலும், தம்முடைய உத்தியோகத்தைதமக்குப்பின் வருபவருக்கு சார்ஜ் ஒப்புவிக்காமல் இருக்கும்பக்ஷத்திலும். இப்பிரிவில் (2) அல்லது (3)-வது உபப் பிரிவுகளில் எதன்கீழாவது தண்டிக்கப்படுவதற்கு ஹேது ஏற்படலாம்.

209. லோகல்போர்டின் யாதொரு உத்தியோகஸ்தராவது, ஊழியக்காராவது தாமாகவேயாகிலும், கூட்டுபாகஸ்தர் மூலமாகவாகிலும் வேலைக்கு வைத்துக்கொண்டிருப்பவர் அல்லது ஊழியக்காரர் மூலமாகவாகிலும் நேராகவேனும் மற்றப்படியேனும் லோகல் போர்டாரோடாவது அவர்களாலாவது அவர்கள் சார்பிலாவது செய்துக் கொள்ளப்பட்ட யாதொரு ஒப்பந்தத்திலோ

ஒப்பந்தம் அல்லது வேலையில் யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காராவது சுயப் பிரயோசனம் அடைந்தால் தண்டனை.

அல்லது ஏற்படுத்தப்பட்ட யாதொரு உத்தியோகத்திலோ யாதொரு சுயப் பிரயோசனத்தையேனும் சுயப் பிரயோசன சம்பந்தமான பங்கையேனும் தெரிந்திருந்த அடைவாராகில், அவர் - இந்தியன் பினல் கோட் 168 வது பிரிவின்படிக்கான குற்றம் செய்தவராக எண்ணப்படுவார்:

ஆனல், யாதொரு கம்பெனியில் பங்குக்காரராகவாவது மெம்பராகவாவது இருக்கும் காரணத்தினல், எந்த நபரும் - அவர் அந்த கம்பெனியின் டைரெக்டரா யிருந்தாலொழிய, அப்படிப்பட்ட கம்பெனிக்கும் லோகல் போர்டாருக்கும் ஏற்பட்டிருக்கும் யாதொரு ஒப்பந்தத்தில் பற்றுள்ளவராக எண்ணப்படமாட்டார்.

ஆனல், இன்னும், இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் யாதொன்றும், ஒரு லோகல் போர்டினல் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கும் ஒரு உபாத்தியாயர், லோகல் கவர்ன்மென்டினுடைய உத்திரவை (Sanction) கொண்டு அந்த லோகல் போர்டினுடன் ஒரு பள்ளிக்கூடத்திற்காக தமக்குச் சொந்தமான அல்லது தமக்கு ஒரு பங்கு அல்லது பாத்தியதையுள்ள யாதொரு நிலம் அல்லது கட்டிடத்தை உபயோகப்படுத்துவதின் விஷயமாக ஒரு கான்ட்ராக்ட் அல்லது ஒப்பந்தம் ஏற்பாடு செய்துக் கொள்வதைப்பற்றி பிரயோகப்படுத்தப் படக்கூடாது.

குறிப்புகள்.

இப்பிரிவில் உள்ள 'உத்தியோகஸ்தர்' அல்லது 'ஊழியன்' என்பது ஒரு லோகல் போர்டின் நிரந்தர உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் நபரைக்குறிக்கும். ஒரு ப்ரெஸிடெண்டு, வைஸ் ப்ரெஸிடெண்டு, அல்லது அங்கத்தினர் ஒரு லோகல் போர்டின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரல்ல(a). ஒரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டு, வைஸ் ப்ரெஸிடெண்டு அல்லது அங்கத்தினர் ஒரு லோகல் போர்டாரோடு செய்துகொள்ளப்படும் யாதொரு ஒப்பந்தத்தில் யாதொரு சுயப்பிரயோசனம் அல்லது பாத்தியதை பெறுவாராயின்- அவர் உடனே தம்முடைய ஸ்தானத்தை இழந்தவராக ஆகிவிடுகிறார். இது விஷயமாக 55 56-பிரிவுகளையும் அவைகளின்கீழ் உள்ள குறிப்புகளையும் பார்க்க.

லோகல் போர்டுகளினுடைய ஊழியமானது மாசற்றதாகவும் சுயநலப் பிரியர்களுக்கு ஒரு அடைக்கலமாகவும் இராமலிருக்கும்படிக்கு இப்பிரிவில் உள்ள நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டது.

(a) பழனியப்ப செட்டியார் v. கிருஷ்ணப்பசெட்டியார் 48 M. L. J. 696 A. I. R. 1925 Mad. 877.

இப்பிரிவிலுள்ள முதல் விலக்கு நிபந்தனையில் இன்னின்ன சந்தர்ப்பங்களில்ஒருநபர் சுயலப்பிரயோசனம் பெற்றிருப்பதாக கருதப்படுவதற்கில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது விலக்கு நிபந்தனையானது மிகவும் முக்கியமானது. லோகல் போர்டுகளால் அமர்த்தப்படும் உபாத்தியாயர்களுக்கு சில நன்மைகளைத் தருவதாகும். ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சியின் முக்கிய நோக்கம் கிராமாந்தரங்களில் கல்விப்பயிர்ச்சியானது பரவவேண்டுமென்பது. கிராமாந்தரங்களில் பள்ளிக்கூடங்களுக்காக வீடுகள் அகப்படுவது கஷ்டம். ஒவ்வொரு கிராமத்திலும் லோகல் போர்டுகள் வீடுகளைக் கட்டி முடிப்பது கஷ்டசாத்தியம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் உபாத்தியாயர்களுக்குச் சொந்தமான இடத்திலேயே பள்ளிக்கூடம் இருக்கும்படி லோகல்போர்டு அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்யலாம். அப்படி ஒரு ஏற்பாட்டைச்செய்துகொள்வதில் ஒரு உபாத்தியாயர் ஒரு குற்றவாளியாகக் கருதப்படமாட்டார். கிராமாந்திரங்களில் உள்ள உபாத்தியாயர்கள் தங்களுக்கு சொந்தமான வீடுகளிலேயே பள்ளிக்கூடங்களை நடத்திவரலாம் என்றும் அதற்காக அவர்கள் லோகல்போர்டுகளிடமிருந்து குடிக்கூலி வாங்கலாம் என்று அனுமதிகொடுக்கப்படுவது முக்கியமாதலால் இப்பிரிவில் ஸ்பஷ்டமாக அவ்வம்சம் சேர்க்கப்பட்டது.

210. லோகல் போர்டின் ப்ரெஸிடென்டையாவது அல்லது எவருக்கு ப்ரெஸிடென்டு யாதொரு நிலம் அல்லது கட்டிடத்துக்குள்ளாகிலும் அதன் மேலாகிலும் பிரவேசிப்பதற்கு தமக்குள்ள அதிகாரத்தைச் சட்டப்படி கொடுத்திருக்கிறாரோ அப்படிப்பட்ட யாதொரு நபரையாவது அதற்குள்ளாயினும் அதன்மேலாயினும் பிரவேசிப்பதற்கு அவருக்கு சட்டப்படிக்குள்ள அதிகாரத்தைச் செலுத்தவொட்டாமல் தடுக்கும் ஒவ்வொரு நபரும் - இந்தியன் பீனல்கோட் 341-வது பிரிவின்படி குற்றம் செய்தவராக எண்ணப்படுவார்.

ப்ரெவிடென்டையாவது அவரால் அதிகாரம் கொடுக்கப் பெற்றவரையாவது அக்கிரமமாய்த் தடுப்பது.

குறிப்புகள்.

ஒரு லோகல் போர்டு ப்ரெவிடென்டானவர், இச்சட்டத்தின்கீழாவது அல்லது இச்சட்டத்திற்கு சம்பந்தப்பட்ட வேறே ஒரு சட்டத்தின்கீழாவது யாதொருவர் சொந்தமாக (ப்ரைவேட்டாக) வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் சொத்துக்களில், அதாவது யாதொரு நிலம் அல்லது கட்டிடம் இவைகளில் நோட்டீஸ் கொடுத்தோ அல்லது நோட்டீஸ் இல்லாமலோ பிரவேசிப்பதற்

குன்ன அதிகாரத்தை-செலுத்தவொட்டாமல்செய்யும்ஒருநபருக்கு தண்டனை உண்டு. அதற்கு ஒரு மாதம் வரையிலும் சிறைவாச தண்டனையும், 500-ரூபா வரையில் அபராதமும் விதிக்கப்படலாம். லோகல்போர்டுப்ரெஸிடென்டுகளை மாத்திரமல்லாமல் அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட நபர்களையும் அவ்வதி காரத்தை செலுத்தவொட்டாமல் தடுப்பது ஒரு குற்றமாகும்.

ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டுக்கு 131-வது பிரிவின்கீழ் வியாதி கள் பரவவொட்டாமல் இருக்கும்படி செய்வதற்கு ஒரு இடத்தில்பிரவேசிக்க அதிகாரம் உண்டு. (313-வது பக்கத்தைப் பார்க்க). 147-வது பிரிவின்கீழ் அபாயகரமான கட்டுக்கோப்புகளில் நுழைந்து அபாயத்தைத் தடுப்பதற்காக, தகுந்த ஏற்பாடுகளை செய்யலாம். (329-வது பக்கத்தைப்பார்க்க). 148-வது பிரிவின்கீழ் அபாயகரமான மரங்களை கழிப்பதற்கு அதிகாரம் உண்டு. (331-வது பக்கம் பார்க்க). 150-வது பிரிவின்கீழ் அபாயகரமான கிணறு கள், குளங்கள் முதலியவைகளில் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்யலாம். அதற்காக அவைகளில் நுழைந்து அபாயத்தை தடுப்பதற்காக தமக்கு அவசியமாகத் தோற்றும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். (333-வது பக்கம்பார்க்க). 163-வது பிரிவின்கீழ் பொதுவானபாட்டையிலுள்ள அல்லது தோண்டப்பட்ட குழி முதலியவைகளை ஒரு ப்ரெஸிடென்டே தூர்த்துவிடு வதற்கு அதிகாரம் உண்டு. (364-வது பக்கம் பார்க்க). 179-வது பிரிவின் கீழ் சொந்த மார்க்கெட்டுகளில் பிரவேசித்து அவைகளை மூடிவிடுவதற்குஅதி காரம் உண்டு. (393-வது பக்கம் பார்க்க). 197-வது பிரிவின்கீழ் சந்தேக மான சந்தர்ப்பங்களில் தொழிற்சாலை முதலியவைகளில் பிரவேசித்து குற் றம் ஏதாவது செய்யப்பட்டுவருகிறதா என்பதைப்பற்றி கவனிக்க அதிகாரம் உண்டு. (412-வது பக்கம் பார்க்க.) ஜனங்கள் வழக்கமாய்கூடும் இடங்களைப் பற்றின சட்டத்தின் 11-வது பிரிவின்கீழ் யாதொரு நாடக கொட்டாய் அல் லது வேடிக்கை இடம்முதலிய இடங்களில் பிரவேசிப்பதற்கு உரிமையுண்டு. (426-வது பக்கம் பார்க்க). இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ப்ரெஸிடென்டு கள் தங்கள் உத்தியோக அலுவலின் சம்பந்தமாக கட்டிடம் அல்லது நிலம் இவைகளில் நுழைவதை தடுப்பது ஒரு குற்றமாகும்.

இப்பிரிவில் "தடுக்கும்" என்னும் பதத்திற்கு என்ன அர்த்தமென்று நாம் கவனிக்கவேண்டும் இந்தியன் பீனல் கோட் 339-வது பிரிவில் "எவனொருவன் யாதொரு நபரை அந்த நபர் எந்த திசைவழியாக போவ தற்கு தமக்கு உரிமையுண்டோ அந்த வழியாக போகவொட்டாமல் தடுப்ப தற்காக, வேண்டுமென்று மறியல் செய்கிறாரோ அவர் அந்த நபரை அக்கிரம மாய் தடுப்பதாக சொல்லப்படுவாரென்றும், அதே சட்டத்தின் 341-வது பிரி வில் எவரொருவர் மற்றொரு நபரை அக்கிரமமாக தடுக்கிறாரோ அவர் ஒரு மாதம்வரையிலும் விதிக்கப்படும் சிறைவாச தண்டனைக்கும், 500-ரூபாய் வரையிலும் விதிக்கப்படும் அபராத தண்டனைக்கும்; அல்லது இவ்விரண்டிற்

கும் உள்ளாவார் என்று உள்ளது இப்பிரிவில் "லோகல் போர்டின் ப்ரெஸி டென்டையாவது அல்லது எவருக்கு ப்ரெஸிடென்டு * * * * அதிகாரத்தை * * * * கொடுத்திருக்கிறாரோ அப்படிப்பட்ட யாதொரு நபரையாவது * * * * நடுக்கும் ஒவ்வொரு நபரும்" என்றுள்ளதால் இந்தியன் பீனல்கோட் சட்டத்தைவிட சற்று விரிவான அர்த்தமுள்ள ஒரு பதமானது பிரயோகிக்கப்பட்டதாக ஏற்படும். இந்தியன் பீனல்கோட் சட்டத்தின் கீழ் மதியல் செய்வதென்பது பலாத்காரமான அல்லது சரீரப்பிரயோகமுள்ள ஒரு ஆக்ஷபனையாயிருக்கவேண்டுமென்றும், வெறும் வாய்மொழியாக பயமுறுத்துவதே ஒரு மதியல் செய்வதாக ஏற்படாதென்றும் சிலகேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த தீர்மானங்கள் இப்பிரிவின்கீழ் செலாவணியாக்கத் தக்கதாகுனை கவனிக்கப்பட முடியாதென்று வாதிக்கப்படலாம். ஏனென்றால், இந்தியன் பீனல்கோட் என்னும் சட்டத்தின்கீழ் 339, 341 பிரிவுகளிலுள்ள பதப்பிரயோகமும், இப்பிரிவிலுள்ள பதப்பிரயோகமும் வித்தியாசமாக இருக்கின்றன. வாய்மொழியாக, ஒரு கட்டிடம் முதலியவைகளில் பிரவேசிக்கவொட்டாமல் ஒரு ப்ரெஸிடென்டு முதலியவர்களை தடுப்பதே இப்பிரிவின்கீழ் ஒரு குற்றமென கவனிக்கப்படலாம். மிஸ்டர் C. V. நாயுடு அவர்கள் தம்முடைய லோகல் போர்டு சட்ட புஸ்தகத்தில் இவ்வித்தியாசத்தை எடுத்துக்காட்டவில்லை. அவர் இந்தியன் பீனல் கோட் 341-வது பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டிருக்கும் கேசுகளை மாத்திரம் எடுத்துக்காட்டியிருக்கிறார். அப்படி காட்டியிருக்கும் தீர்மானங்களை ஆதாரமாகக்கொண்டு ஒரு நபர், ப்ரெஸிடென்டு முதலியவர்களை யாதொரு கட்டிடம், நிலம் இவைகளில் பிரவேசிக்கவொட்டாமல் பயமுறுத்துவாவது அல்லது தேகபலப் பிரயோகத்தை தவிர, வேறே யாதொரு தொந்திரவு செய்யவாவது கூடாது. ஒரு வேளை அப்படி செய்யும்பக்ஷத்தில், கோர்ட்டுகளால் இப்பிரிவின் கீழ் குற்றவாளியெனவும் தண்டிக்கப்படலாம்.

211. இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படிக்காவது இந்த ஆக்டின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு நோட்டீஸ் அல்லது வேறே கட்டளையின்படிக் காவது யாதொரு சங்கதி சவதரிக்க வேண்டிய எந்த நபராகிலும்—

சங்கதி தெரிவிக் காவிட்டாலும் பொய்யான சங்கதி தெரிவித்தாலும் அதற்கு தண்டனை.

(a) அதை சவதரிக்காவிட்டாலும்,

(b) தெரிந்திருந்து பொய்யான சங்கதி சவதரித்தாலும், அப்படிப்பட்ட நபர் 100-ரூபாய்க்கதிகப்படாமல் அபராதத்திற்குள்ளாவார்.

குறிப்புகள்.

இப்பிரிவானது முக்கியமான உரிமைகளைப்பற்றியும், கடமைகளைப் பற்றியும் கூறுவதால், இதை மிகவும் சரியாக கவனிக்க வேண்டும். இந்த சட்டத்தின் கீழ் லோகல் போர்டு உத்தியோகஸ்தர்கள் உள்பட எல்லா பொது ஜனங்களும் ஒருவருக்கொருவர் வேண்டும்போது தகவல்களை கொடுக்க பத்தப்பட்டவராக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்யாத பக்ஷத்தில் அபராதத்திற்கு உள்ளாவார்கள்.

கடமை என்று ஒரு பக்கத்திலிருக்குமானால், அதற்கு நேரிடையாக உரிமை என்று இருக்க வேண்டும். அதாவது, ஒரு நபர்-யாதொரு தகவலை ஒரு ப்ரெஸிடென்டுக்கு தெரிவிக்க வேண்டியிருக்குமானால் அந்த தகவலை பெறுவதற்கு ப்ரெஸிடென்டுக்கு உரிமை யுண்டு. ப்ரெஸிடென்டானவர் யாதொரு நபரை தகவல் கொடுக்கும்படி கேட்கும் பக்ஷத்தில் அந்த நபர் கட்டாயம் தகவல்களை கொடுக்க வேண்டும். ஆனால் ப்ரெஸிடென்டானவர் அப்படி கேட்கும்போது சட்டப் பிரகாரம் தமக்கு என்னென்ன உரிமைகள் உண்டோ அவ்வுரிமைகளுக்கு அதிகமாக கேட்பதற்கில்லை.

உதாரணமாக :—ப்ரெஸிடென்டானவர் 97-வது பிரிவின்கீழ் வரிக்குள்ளானவர்களைக் குறித்து ஒரு ஜாபிதா அனுப்பும்படி ஒரு கட்டிடத்தின் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு நோட்டீஸ் கொடுக்கலாம். அந்த சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் அந்த நோட்டீசுக்கு கீழ்ப்படிய வேண்டும். 231-வது பிரிவின்கீழ் ஸ்டேட்மெண்டுகள் அல்லது விவரக் கணக்குகளை சவதரிக்க வேண்டுமென்று ப்ரெஸிடென்டானவர் கர்ணம்களுக்கு உத்திரவு செய்யலாம். அதற்கு கர்ணம்கள் கீழ்ப்படிய வேண்டும். அதே மாதிரியாக 26-வது பிரிவின்கீழ் ஒவ்வொரு லோகல் போர்டு அங்கத்தினரும், ப்ரெஸிடென்டுகளை தமக்கு தாங்கள் கேட்கும் தகவல்களை கொடுக்கும்படி தெரிவிக்கலாம். ப்ரெஸிடென்டுகள் கட்டாயம் அந்த தகவல்களை கொடுத்தே தீரவேண்டும்.

இதே மாதிரியாக இந்த சட்டத்தின் கீழாவது அல்லது இவைகளின் கீழ் செய்யப்படும் விதிகளின் கீழாவது கேட்கப்படும் தகவல்களை கொடுக்க வேண்டியிருந்து கொடுக்காத பக்ஷத்திலாவது அல்லது தவறான தகவல்களை கொடுக்கும் பக்ஷத்திலாவது அப்படி செய்வதற்கு அபராதம் உண்டு.

ஒரு ப்ரெஸிடென்டின் பேரில் இப்பிரிவின்கீழ் அவர் குற்றம் செய்ததாக தாவா செய்யப்படவேண்டுமானால் அதற்காக 227-A பிரிவின்கீழ் கவர்ன்மென்டாருடைய முன் அனுமதியை (Previous Sanction) பெற வேண்டும்.

6-ம் பாகம்.

14-ம் அத்தியாயம்.

நடவடிக்கை முறையும் பலவகைப்பட்டவைகளும்.

லிஸென்சுகளும் அனுமதிகளும்.

லிசென்சுகளையும் அனுமதிகளையும் குறித்த பொதுவான நிபந்தனைகள்.

212. (1) இந்த ஆக்டின்படியாவது இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாவது கொடுக்கப்பட்ட பிரதி லிஸென்ஸிலும் அனுமதியிலும், அது ஏதேதும் கால அளவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அதையும் எந்தநிர்ப்பந்தங்களுக்கும் வரையறைகளுக்கும் நிட்டங்களுக்கும் உட்பட்டு அது கொடுக்கப்படுகிறதோ அவைகளையும் காணவேண்டும். மேலும், அதில் சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெஸிடென்டாவது இது விஷயமாய் அவரால் நியமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது கையெழுத்துப் போடவேண்டும்.

(2) இந்த ஆக்டில் வெளிப்படையாய் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலும் அல்லது இந்த ஆக்டின் பிரகாரம் நிர்ணயிக்கப்படக்கூடியபடியுமன்றி மற்றப்படி அப்படிப்பட்ட பிரதி லிசென்ஸ் அல்லது அனுமதிக்காகவும் லோகல் போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய வீதப்படி அப்படிப்பட்ட பிரதி லிசென்ஸின்பேரில் கட்டணங்கள் விதித்து வாங்கலாம்.

(3) லோகல் போர்டார்—ஏக் காலத்தில் மூன்று வருஷத்துக்கு மேற்படாத யாதொரு கால அளவுக்கு அப்படிப்பட்ட கட்டணங்களை வசூல் செய்வதை தங்களுக்கு சௌகரியமாகத் தோற்றுகிற நிட்டங்களின்பேரில் இஜாரா விடலாம்.

(4) யாதொரு லிஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்காமல் நிராகரிக்கிறோ அல்லது அதைச் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைத்திருக்கிறோ அல்லது ரத்து செய்கிறோ அல்லது திருத்தியோ உத்தரவு பிறப்பிக்க இந்த ஆக்டின் கீழாவது அல்லது இதன்கீழ் செய்யப்பட்ட ஒரு சகாயச் சட்டம் அல்லது விதி இவைகளின்கீழ் ஒரு உத்தரவைச் செய்ய யோக்கியதையுள்ள அதிகாரி செய்யும் ஒவ்வொரு

உத்தரவும் எழுத்துமூலமா யிருக்கவேண்டியதுமல்லாமல், அதில் எந்த ஆதாரங்களின்மேல் அது செய்யப்படுகிறதோ அவைகளையும் காண வேண்டும்.

(5) இந்த ஆக்டின்படியோ அல்லது இதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியோ லைஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப்பெற்றிருப்பவர் அந்த லைஸென்ஸ் அல்லது அனுமதியில் கண்ட நிர்ப்பந்தங்கள், வரையறைகள் அல்லது நிட்டங்களில் எதன்படியாவது நடக்காமல் தப்பித்துக் கொண்டாலும், எதையாவது மீறி நடந்தாலும், அப்படிப்பட்ட யாதொரு நபர் மீது லைஸென்ஸ் அல்லது அனுமதிக்குச் சம்பந்தப்பட்டுள்ள யாதொரு விஷயத்திலே இந்த ஆக்டின் நிபந்தனைகளில் எதற்காவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம் அல்லது ரெகுலேஷனிலுள்ள நிபந்தனைகளில் எதற்காவது விரோதமாக நடந்ததன்மேல் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாலும், அப்படிப்பட்ட யாதொரு நபர் அந்த லைஸென்ஸ் அல்லது அனுமதியை தப்பான சமாசாரம் தெரிவித்காவது மோசம் செய்காவது பெற்றிருந்தாலும், 11-ம் அத்தியாயத்தில் சொந்த மார்க் கெட்டுகளைக் குறித்து உள்ள விசேஷ நிபந்தனைகளுக்குட்பட்டும் லைஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்க முடியாதென்று நிராகரிக்கும் விஷயத்தில் மீது லைஸென்ஸ் அல்லது அனுமதியை சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெஸிடென்டு எப்போதாவது சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கலாம், அல்லது ரத்துசெய்யலாம். யாதொரு லைஸென்ஸைச் சிறிது காலத்துக்கு நிறுத்திவைத்தோ அல்லது ரத்து செய்தோ இந்தப் பிரிவின்படி ப்ரெஸிடென்டு செய்யும் யாதொரு உத்தரவின்மேல் சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்கு அப்பீல் செய்துக்கொள்ளலாகும்.

(6) எவைகளின் விஷயமாய் இந்த ஆக்டினாலாவது அல்லது இதன்படியாவது லைஸென்ஸ் அல்லது அனுமதிவேண்டியிருக்கிறதோ அந்த இடங்களைப் பார்வையிடுவது ப்ரெஸிடென்டின் கடமையாகும்; மேலும் அவர் - அப்படிப்பட்ட யாதொரு இடத்தில் சூரியோதயத்துக்கும் சூரியாஸ்தமனத்துக்கும் இடையிலும், சூரியாஸ்தமனத்துக்கும் சூரியோதயத்துக்கும் இடையில் அது பொது ஜனங்களுக்குத் திறந்திருந்தாலும் அந்த காலத்தில், அதில் யாதொரு தொழில்

நடந்து கொண்டிருந்தாலும் அப்பொழுதுங்கூட பிரவேசிக்கலாம்; அல்லாமலும், இந்த ஆக்டினுலாவது அதன்படியாவது லைஸென்ஸ் அல்லது அனுமதி வேண்டியிருக்கிற யாதொரு இடத்தில் அப்படிப்பட்ட லைஸென்ஸ் அல்லது அனுமதியில்லாமலாகிலும் அதை அனுசரித்தன்றி மற்றப்படியாகிலும் யாதொரு காரியம் செய்யப்படுகிறதென்று அவர் நம்புவதற்கு முகாந்தரம் இருந்தால், அவர் - சட்டத்தைச் சேர்ந்த யாதொரு நிபந்தனையையாயினும் எவையேனும் விதிகளையாயினும் சகாயச் சட்டங்களையாயினும் ரெகுலேஷன்களையாயினும் லைசென்ஸ் அல்லது அனுமதியின் யாதொரு நிட்டத்தையாயினும் சட்டப்படிக்கான உத்தரவையாயினும் தடையையாயினும் மீறி எதேனும் செய்யப்படுகிறதா என்று தாம் தெரிந்து திருப்தியடையும் பொருட்டு அப்படிப்பட்ட இடத்தில் நோட்டீஸில்லாமலே பகலிலாவது, இரவிலாவது எப்போதாகிலும் பிரவேசிக்கலாம்; மேலும், ப்ரெஸிடென்டாவது அல்லது எவருக்கு, அவர் தம்முடைய அதிகாரங்களைச் சட்டப்படி கொடுத்திருக்கிறாரோ அந்த நபராவது இந்த உபப் பிரிவின்படி பிரவேசிப்பதற்கு அவசியமான யாதொரு பலவந்தத்தை உபயோகிப்பதனுலாகிலும் அவசியமாய் உண்டாகிற யாதொரு சேதம் அல்லது அசௌகரியத்துக்காக எந்த நபரின் மேலும் தாவா எதுவும் நிற்காது.

(7) யாதொரு லைஸென்ஸ் அல்லது அனுமதி சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டாலும், ரத்து செய்யப்பட்டாலும், அது எந்தக் கால அளவுக்காக கொடுக்கப்பட்டதோ அந்தக் கால அளவாவது அல்லது எதற்குள் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் செய்துக்கொள்ள வேண்டுமோ அந்தக் கால அளவாவது, இதில் எதபின்னிட்டு கழிகிறதோ அது கழிந்து போய்விட்டாலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி, அந்த லைஸென்ஸ் அல்லது அனுமதியைச் சிறிது காலத்துக்கு நிறுத்திவைத்தோ ரத்து செய்தோ செய்யப்பட்டிருக்கும் உத்தரவு ரத்து செய்யப்படுகிற வரையிலாவது, (11) குறிப்பிட்ட உபப் பிரிவுக்கு உட்பட்டு அந்த லைஸென்ஸ் அல்லது அனுமதி புதுப்பிக்கப்படுகிற வரையிலாவது, அதைக் கொடுக்கப் பெற்றிருப்பவர் - இந்த ஆக்டின் அல்லது இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்திற் கண்ட சகல காரியங்களுக்காகவும், ஷை லைஸென்ஸ் அல்லது அனுமதி பெற்றிராதவராகவே பாவிக்கப்படுவார்.

(8) யாதொரு லிஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப் பெற்றிருக்கும் ஒவ்வொருவரும் - அது செலாவணியாய்க் கொண்டிருக்கையிலே ப்ரெஸிடெண்டு கேட்டால் நியாயமான சகல காலங்களிலும் அதைக் கொண்டுவந்து காட்டவேண்டும்.

(9) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளிலைலாவது இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தினாலாவது வேண்டியிருக்கிற லிஸென்ஸ் அல்லது அனுமதியைப் பெற்றுக்கொள்ளத் தவறுகிற விஷயத்தில் குற்றஞ் செய்தவராக யாதொரு நபர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படும்போதெல்லாம், மாஜிஸ்ட்ரேட்டானவர் - விதிக்கத்தக்க யாதொரு அபராதத்தோடுகூட, லிஸென்ஸுக்காகவாகிலும் அனுமதிக்காகவாகிலும் விதித்து வாங்கத்தக்க கட்டணம் எவ்வளவோ அதையும் சுருக்க வகையாய் வசூல் செய்து லோகல் போர்டாருக்குச் செலுத்தவேண்டும். இன்னும் அவர் தம்முடைய யுக்தானுசாரம், அந்த கேஸில் ப்ராஸிக்யூஷன் தரப்பில் இருந்து கேசை நடத்தினதற்காக நேரிட்ட சிலவுகளுக்காக தாம் நிர்ணயிக்கும் தொகையை வசூலித்து அந்த லோகல்போர்டுக்குக் கொடுக்கலாம்.

(10) அத்தப்படி (9)-குறிப்பிட்ட உபப் பிரிவின் பிரகாரம் கட்டணத்தை வசூலிப்பதனால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட நபருக்கு மேற்சொன்னபடி லிஸென்ஸ் அல்லது அனுமதியைப்பெற பாத்தியதை உண்டாகமாட்டாது.

(11) லிஸென்ஸ் அல்லது அனுமதிக்காக கட்டணத்தை முன்னதாகவே செலுத்துவதை லோகல்போர்டார் தங்கள் சார்பாக ஒப்புக் கொள்வதனால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த லிஸென்ஸ் அல்லது அனுமதியைப் பெறுவதற்கு அப்படி கட்டணத்தை முன்னதாகச் செலுத்தும் நபருக்கு பாத்தியதை உண்டாகாது; ஆனால், லிஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்காமல் நிராகரிக்கப்படும் விஷயத்தில் அந்த கட்டணத்தைத் திருப்பி பெறுவதற்கு மாத்திரம் பாத்தியதை உண்டாகும்; ஆயினும், லிஸென்ஸ் அல்லது அனுமதியை புதிப்பிக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துக்கொள்ளுகிறவர் - தம்முடைய விண்ணப்பத்தின்மேல் உத்தரவு வரப்பெறுகிற வரையில் லிஸென்ஸ் அல்லது அனுமதி புதுப்பிக்கப்பட்டிருந்தாற் போலவே பிரவர்த்திக்க பாத்தியதை உடையவராவார்; மேலும், இந்த ஆக்டில்

வேறே விதமாகப் பிரத்தியேகமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, லிஸென்ஸ் அல்லது அனுமதிக்காக செய்துகொள்ளப்படும் விண்ணப்பத்தின்மேல் உத்தரவுகள் அந்த விண்ணப்பம் ப்ரெஸி டென்டால் வாப்பெற்றுக்கொள்ளப்பட்ட பிறகு மூப்பது தினங் களுக்குள் விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படாவிட்டால், அந்த வருஷத்துக்காவது அல்லது விண்ணப்பத்தில் சொல்லப்பட்டிருக்கிற அதற்குக்குறைந்த காலத்துக்காவது சட்டத்துக்கும் விதிகளுக்கும், சகாயச் சட்டங்களுக்கும், ரெகுலேஷன்களுக்கும், சாதாரணமாய் விதிக்கப்படும் சகல நிட்டங்களுக்கும் உட்பட்டு அந்த விண்ணப்பம் ஜாரி செய்யப்பட்டதாக எண்ணப்படும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் லிசென்ஸுகளைப்பற்றியும், பர்மிஷன்களைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக, ஒரு லிசென்ஸுக்கும்-பர்மிஷனுக் கும் என்ன வித்தியாசமென்றால், லிசென்ஸென்பது ஒரு வருஷத்துக்கு ஒருதரமாவது அல்லது அதற்கு குறைந்த கால அளவுக்கு ஒருதரமாவது புதுப்பிக்கப்பட வேண்டும். லிசென்ஸுகளின் விஷயத்தில் சாதாரணமாக லோகல் போர்ட்டுகள் அல்லது அதன் ப்ரெஸிடென்டுகள், ஒரு நபர் தனக் குக் கொடுக்கப்பட்ட லிசென்ஸின் நிபந்தனைகளுக்கு உட்படும்பக்ஷத் தில் திரும்பவும் அதை புதுப்பிக்கவாவது அல்லது புதியதாகக் கொடுக்க வாவது மறுப்பதற்கில்லை. பர்மிஷன் என்பது ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக அதன் சந்தர்ப்பங்களை உத்தேசித்து கொடுக்கும் அனு மதியாகும். பர்மிஷன் என்பது ஒருதரம் கொடுக்கப்பட்ட பிறகு மறுபடி யும் புதுப்பிக்கப்பட வேண்டுமென்பது அவசியமில்லை. ஒரு லோகல் போர்டினிடமிருந்து லிசென்ஸ் பெறவேண்டியதைப்பற்றி பின் குறிக் கப்பட்ட பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ளது. 141-வது பிரிவு (பிரேதங் களை ஒருவகை செய்வதற்கான இடங்களுக்கு லிசென்ஸ் கொடுப்பது.) 151-வது பிரிவு (பொதுவான பாட்டைக்குச் சமீபமாய்க் கல்வெட்டிவெடுப் பது முதலியவைகளுக்காக, லிசென்ஸ் பெறவேண்டு மென்பது.) 160-வது பிரிவு (சில பிதுக்கங்களுக்கும், கட்டு கோப்புகளுக்கும் உத்திரவு கொடுக்க அதிகாரம்.) 166-வது பிரிவு (வாடகைக்கு ஓடும் மோட்டார் வண்டிகளுக்கும், மோட்டார் லாரிகளுக்கும் லிசென்ஸ் கொடுப்பது). 171-வது பிரிவு (பிரைவேட் மார்க்கெட்டுகளுக்கு லிசென்ஸ் கொடுப்பது). 177-வது பிரிவு, (176-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட நோட்டீஸின் பிரகாரம் நடந்துக்கொள்ளத் தவறினால், லிசென்ஸை சிறிது காலத்திற்கு நிறுத்தி வைப்பது அல்லது கொடுப்பதில்லை யென்று நிராகரிப்பது). 187-வது பிரிவு (பிரைவேட் பார வண்டி நிற்கும் இடத்திற்கு லிசென்ஸ்

இல்லாமல் இடங்களை உபயோகிக்கக் கூடாதென்பது). 198-வது பிரிவு (பப்ளிக் ரிஸார்ட்ஸ் ஆக்டின்கீழ் லைசென்ஸ் கொடுப்பது.) ஆகிய இப்பிரிவுகளில் ஏற்றெந்த காரியங்களுக்காக லைசென்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று அல்லது வாங்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. 161-வது பிரிவு, - (ஜலதாரை சாக்கடைக்கால் முதலியவைகளின்மேல் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டக்கூடாதென்று தடுப்பது). 163-வது பிரிவு. (பொதுவான பாட்டைகளில் குழி தோண்டுவதும் தடங்கல் ஏற்படுத்துவதும் கூடாதென்று தடுப்பது). 163-A. பிரிவு (உத்திரவில்லாமல் பொது ரஸ்தாக்களிலுள்ள மரங்களை நடுவது அல்லது வெட்டுவதை தடுப்பது). 164-வது பிரிவு (நிலத்தை அனுமதியில்லாமல் அனுபவித்து வரும் விஷயத்திலே தண்டத்தொகை விதிப்பதும் நஷ்ட மீடு வசூலிப்பதும்). 169-வது பிரிவு (பொது மார்க்கெட்டுகளின்மேல் ப்ரெஸிடென்டுக்குள்ள விசாரணை அதிகாரம்) 172-வது பிரிவு (1884-ம் ஜூத்துக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட சொந்த மார்க்கெட்டுகளில் கட்டணங்கள் விதித்து வாங்க சுதந்திரம் கொண்டாடும் விஷயத்தில் அனுசரிக்க வேண்டிய நடவடிக்கை முறைகள்). 174-வது பிரிவு (லைசென்ஸுக்கு கட்டணம்). 190-வது பிரிவு (ஆடு-மாடு முதலியவைகளை அடிக்கும் பொதுவான தொட்டிகளல்லாத வேறே இடங்களில் கால் நடைகளைக் கொல்வது முதலியது கூடாதென்று லோகல் போர்டார் தடுக்கலாமென்பது). 191-வது பிரிவு (உத்ஸவ காலங்களிலும், பண்டிகை காலங்களிலும் பிராணிகளைக் கொல்வது). 194-வது பிரிவு (ரோவி அல்லது இதர சக்தியை உபயோகிக்கப்போகிற தொழிற்சாலை, வேலைச் சாலை அல்லது வேலை செய்யும் இடத்தைக் கட்டுவதற்காவது ஸ்தாபிப்பதற்காவது அதில் யந்திர உபகரணங்களை ஏற்படுத்துவதற்காவது, செய்து கொள்ளப்பட வேண்டிய விண்ணப்பம்). இத்தப்பிரிவுகளில் என்னென்ன விஷயத்திற்காக பர்மிஷன் கேட்கப்பட வேண்டுமென்று உள்ளது.

இப்பிரிவில், லைசென்ஸுகளும், பர்மிஷன்களும் கொடுக்கப்பட வேண்டிய விதமும், நிபந்தனைகளும் அவைகளிலேயே காணப்பட வேண்டுமென்று உள்ளது. (1)-வது உபப் பிரிவில் அதன்கீழ் கொடுக்கப்படும் லைசென்ஸிலேயே வேண்டிய நிபந்தனைகள் காணப்பட வேண்டுமென்றும், (2)-வது உபப் பிரிவில் லைசென்ஸில் காணப்படும் ஒவ்வொரு விஷயத்திற்கும் லோகல் போர்டார் கட்டணம் விதிக்க அதிகாரம் உண்டு என்றும், (3)-வது உபப் பிரிவில் - லைசென்ஸுக்காக கட்டப்படும் கட்டணங்களை வசூலிக்கும் உரிமையை லோகல் போர்டுகள் இதரர்களுக்கு குத்தகைக்கு விடலாம் என்றும், (4)-வது உபப் பிரிவில், லைசென்ஸுகள் கொடுக்க மறுக்கப்பட்டாலும் நிறுத்தி வைத்தாலும் மாற்றப்பட்டாலும் அதற்காக காரணங்களை எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டுமென்றும் உள்ளது. (5)-வது உபப்

பிரிவிலும் (6)-வது உபப்பிரிவிலும் லோகல் போர்டுகளின் ப்ரெஸிடென்டு களுடைய உரிமை இன்னதென்று சொல்லப்பட்டுள்ளது. (7), (8) உபப் பிரிவுகளில் லேசென்ஸ்தாரர்களுடைய கடமை என்னவென்று சொல்லப் பட்டுள்ளது. (11)-வது உபப் பிரிவில் லேசென்ஸ் பெறுவதைப்பற்றியுள்ள உரிமைகளென்னவென்று விளக்கப்பட்டுள்ளது.

லேசென்ஸைக் கொடுப்பதில் ப்ரெஸிடென்டுகள் தங்களிஷ்டப் பிர காரம் செய்வதற்கில்லை. லேசென்ஸ் பெறுவதற்காக உள்ள நிபந்தனைகளை ஒருவர் அனுசரிக்கும்பக்ஷத்தில் அவருக்கு கட்டாயம் லேசென்ஸ் கொடுத்தே தீரவேண்டும். லேசென்ஸ் கொடுக்க மறுத்துவிடும்பக்ஷத்தில், அதற்காக தகுந்த காரணங்களை தெரிவிக்க வேண்டும். ஒரு ப்ரெஸிடென்டு லேசென் ஸைக் கொடுக்க மறுத்து விடுவாராஞல், லேசென்ஸ் கொடுக்க வேணு மென்று கட்டாயப்படுத்த தாவா செய்யலாம். (a). ஒரு ப்ரெஸிடென்டு ஒரு நபருக்கு சரியானபடி லேசென்ஸ் கொடுத்த பிறகு, அந்த லேசென்ஸி லுள்ள நிபந்தனைகளை நிராகரித்த ஓர் காரணத்தைக் கொண்டல்லாமல், அன்னியதான ஓர் காரணத்தைக்கொண்டு அந்த லேசென்ஸை நிறுத்திவிடு வதற்கில்லை. அல்லது ரத்து செய்வதற்கில்லை. உதாரணமாக:—ஒரு நப ருக்கு காப்பிஹோட்டலுக்காக ப்ரெஸிடென்டானவர் லேசென்ஸ்கொடுத்து விட்டு பிறகு லேசென்ஸ் சம்பந்தமில்லாத, அதாவது லேசென்ஸிலுள்ள நிபந்தனைகளிலல்லாத, வேறே ஒரு காரணத்தைக் கொண்டு அதை ரத்து செய்துவிட்டார். அந்தகாரணம் என்னவென்றால், லேசென்ஸ்தார் தண்ணீர் வரி செலுத்தவில்லை என்பது. இந்த கேஸானது ஹைகோர்ட்டு முன்பாக வந்ததில் ஹைக்கோர்ட்டாரவர்கள் ப்ரெஸிடென்டு செய்த காரியமானது தவறு என்றும், லேசென்ஸை ரத்து செய்வதற்கு போதுமான காரணம் இல்லையென்றும் தீர்மானித்திருக்கின்றனர். (b).

லேசென்ஸ்களுக்காக கட்டணம் விதிக்கும் விஷயத்திலும் லோகல் போர்டுகள் அல்லது முனிசிபாலிட்டிகள் மிதமாக விதிக்கவேண்டும். லேசென்ஸ் கொடுப்பதற்காகவும், லேசென்ஸ் கொடுக்கப்பட்டுள்ள இடத்தை மேற்பார்வை செய்து வருவதற்கும் நேரும்செலவு தொகைகளைவிட அதிகமா யிருக்கக்கூடாது. ஒரு முனிசிபல் கௌன்ஸிலில், ஒருவருக்கு ஓரிடத்தில் கடலேக்காய்களை சேர்த்துவைப்பதற்காக லேசென்ஸ் கொடுப்பதற்கு 100-ரூபாய் கட்டவேண்டுமென்று ஒரு கட்டணத்தை விதித்தனர். அப்படி விதிக் கப்பட்டதில் அந்த தொகையானது, அந்த முனிசிபாலிட்டிக்கு லேசென்ஸ் கொடுப்பதற்கும், அந்த இடத்தை மேற்பார்வை செய்வதற்கும் நேரும் செலவு தொகைகளைவிட மிகவும் அதிகமாய் இருந்ததாக ஏற்பட்டது.

(a) சோமுபிள்ளை vs. மாயவரம் முனிசிபல் கௌன்ஸில் 28. Mad 520.

(b) சிதம்பரம் முனிசிபல் கௌன்ஸில் சேர்மென் vs. திருநாராயண அய்யங்கார் 51 Mad. 876—55 M. L. J. 566.

இந்த சந்தர்ப்பங்களில் அம்மாதிரி ஒருவரி விதிக்கப்பட்டதானது முனிசிபாலிட்டியின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டதாவென்றும், சட்ட சம்மதமானதாவென்றும் கேள்விகள் வந்தகாலத்தில் சட்ட சம்மதமானதல்ல வென்றும் அப்படி செய்வதானது முனிசிபாலிட்டியின் அதிகார வரம்பிற்கு மீறின தாகுமென்றும், தீர்மானிக்கப்பட்டது. (c)

இன்னும், அப்படி வரி விதிக்கப்பட்டதானது செல்லாதென்றுல்தாபிதம்பெற ஒரு தாவா செய்யப்படுமாவென்றும், அப்படி ஒரு தாவா செய்வதற்கு சென்னை டில்டிரிக்ட்டு முனிசிபாலிட்டிகளின் சட்டம் 354-வது பிரிவானது ஒரு தடையாக ஏற்படாதாவென்றும் கேள்விகள் வந்ததில், சென்னை ஹைக்கோர்ட்டாரவர்கள், அப்படியும் தாவா செய்யலாமென்றும் டிலடிரிக்ட்டு முனிசிபாலிட்டிகளின் சட்டம் 354-வது பிரிவானது அதற்கு ஒரு தடையாக ஏற்படாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (d).

ஒரு லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டதானுல் அப்படி ரத்து செய்யப்பட்டதானது ப்ரெஸிடென்டினுடைய அதிகாரவரம்பிற்கு உட்பட்டதா அல்லவா என்பதைப்பற்றி ஒரு கிரிமினல் கோர்ட்டானது தீர்மானிக்க அதிகாரம் உண்டு. (d).

லைசென்ஸ் பெறும் நபர்கள் தங்களுடைய தொழிலுல் பொது ஜனங்களுக்கு அபாயம் நேரிட வொட்டாம லிருக்கும்படி மேற்பார்வை யிடுவதற்காகத்தான் லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரம் ஏற்பட்டுள்ளது. ஆகையால், லைசென்ஸ் கட்டணங்களையே வரும்படிக்கு ஒரு ஆதாரமாக லோகல் போர்டுகள் கவனிப்பது நியாயமல்ல. கூடுமானவரையிலும் லைசென்ஸுகளுக்கு அதிக கட்டணம் விதிக்கக்கூடாது. இதுவிஷயமாக சென்னை கார்ப்பரேஷன் vs. ஸ்பென்சர் & Co., (e) என்னும் கேசைப்பார்க்க.

லைசென்ஸுகளுக்காக விதிக்கப்படும் கட்டணங்களை குறைப்பதற்கும், அல்லது அடியோடே எடுத்துவிடுவதற்கும், லோகல் போர்டுகளுக்கு அதிகாரம் உண்டு. ஆனுல் அவ்வதிகாரத்தை மிகவும் ஜாக்கிரதையாகச் செலுத்த வேண்டும். அப்படி லைசென்ஸ் தொகையானது குறைக்கப்படுவதில் பட்ஜெட் எற்பாடுகள் மாறுபடுவதாக இருந்தால் அதற்காக லோகல் கவர்ன்மென்டாருடைய முன் உத்திரவு வேண்டுமென்று அடியில் கண்ட உத்திரவு செய்திருக்கின்றனர். (Gazette No. 137, Page 65, Dated 8—2—1925, Fort St. George 23—1—25 (G. O. Mis. No. 207. P.H.) என்னும் உத்திரவைப்பார்க்க. மற்றொரு உத்திரவில் (Fort St. George

(c) 2 அகிலஇந்தியா லா ஜர்னல் கேஸுகளின் குறிப்புகள் பக்கம் 119.

(d) திதம்பரம் முனிசிபல் கௌன்ஸில் யசர்மென் v.. திருநாராயணஐயங்கார் 51 Mad. 876—55 M. L. J. 566.

(e) 57 M. L. J. 71.

Gazette P. No. 307. 22—7—1924 Fort St. George July 1924 (G.O. No 1007 P. H. என்னும் உத்திரவு) கல்விச் சாலைகளில் கல்விக்காக அமைக்கப்படும் இயந்திரங்களுக்கு லைசென்ஸ் கட்டணம் வாங்கப்படக் கூடாதென்று சொல்லியிருக்கின்றனர்.

லைசென்ஸ் கட்டணங்களை வசூல் செய்யும் பாத்தியதையை லோகல் போர்டு ப்ரெஸிடென்டுகள் குத்தகைக்கு விடுவதில், மூன்று வருஷகால தவணைவரையிலும் குத்தகைக்குவிடலாம் என்திருத்தபோதிலும் ஒருவருஷத்திற்கு மேல் அப்படி குத்தகைக்கு விடுவது உசிதமன்று. லைசென்ஸ் கட்டணங்களை வசூல் செய்வதற்காக குத்தகைக்கு பெறும் நபரானவர் அவ்வுரிமைக்கு அனுகுணமாக மற்ற அதிகாரங்களையும் ப்ரெஸிடென்டிடமிருந்து பெறவேண்டும். அதாவது, உதாரணமாக:—யாதொரு நபர் ஒரு பாரவண்டி நிற்கும் இடத்தின் கட்டணங்களையாவது அல்லது அங்காமி மார்க்கெட்டு முதலியவைகளிலுள்ள கடைகளின் கட்டணங்களையாவது வசூல் செய்வதில் ஆக்ஷேபனை அல்லது தடை முதலியவை ஏற்படுமானாலும் ஒரு வண்டி நிற்கும் இடத்திற்கு 100-கெஜத்திற்குள் ஒரு நபர் வண்டியை நிறுத்தும் பக்ஷத்திலும் அதற்காக அவர் பேரில் தாவா செய்வதற்காக சகல அதிகாரங்களையும் ப்ரெஸிடென்டினிடமிருந்து எழுத்து மூலமானதோர் உத்திரவை பெறவேண்டும். தாவா முதலியவைகளைச் செய்வதற்கு ப்ரெஸிடென்டினிடமிருந்து அதிகாரத்தைப் பெறுமல் தாவா செய்வதற்கில்லையென்று 223-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் குத்தகைதாரர்கள் மூன் ஜாக்கிரதையாகயிருந்து தக்க ஏற்பாடுகளை செய்துக்கொள்ளவேண்டும்.

லைசென்லென்பது, ஒரு தொழிலை லோகல் போர்டானது மேற்பார்வையிடுவதற்கான அதிகாரத்தை குறிக்கும். அதற்கும் சாதாரண வரிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. வரி என்பது ஒரு சொத்தின் மதிப்பை யொட்டியாவது அல்லது ஒரு தொழிலின் வருமானத்தை யொட்டியாவது விதிக்கப்படும் கட்டணமாகும். ஆகையால், ஒரே நபர் ஒரு தொழிலுக்காக லைசென்ஸ் கட்டணத்தை கட்டவேண்டியது மல்லாமல், அதின் மூலமாக பெறும் வருமானத்திற்கும் தொழில் வரி கட்டவேண்டியதாகவும் ஏற்படலாம். இன்னும் லைசென்ஸ் மாத்திரமல்லாமல் யாதொரு தொழிற் சாலைக்காக 194—வது பிரிவின் கீழ், ஒரு நபர் லோகல் போர்டினுடைய அனுமதியில்லாமல் தொழிற்சாலை முதலியவைகளை கட்டுவதற்கில்லை யாதலால், அவ்வனுமதி பெறவேண்டுமென்றுவது அல்லது எதாவது பணம் செலுத்தவேண்டுமென்றுவது இருந்தபோதிலும் அதையும் செய்யவேண்டும்.

இதற்கு முன்னமேயே லைசென்ஸிற்கும் பர்மிஷனுக்கும் உள்ள வித்தியாசமானது இன்னதென்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு நபர் ஒரு தரம் ஒரு தொழிற்சாலைக்காக பர்மிஷன் பெற்ற பிறகு வருஷப்பிரதி வருஷம்

லைசென்ஸ் பெறவேண்டியதில்லை யென்று வற்புறுத்தமுடியாது. அதற்காக லைசென்ஸ் பெறவேண்டுமென்று இருப்பின் கட்டாயம் பெற்றே தீர வேண்டும். அப்படி பெறாமல் இருப்பது ஒரு குற்றமாகும் (f).

லைசென்ஸ் கொடுப்பதில், ஒரே நபர்தான் ஒரு தொழில் அல்லது வியாபாரத்தை நடத்தும்படி செய்வதானது சட்டவிரோதமானது. பொது ஜனங்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதில் ப்ரெஷிடென்டுகள் தாராளமாகவே இருக்கவேண்டும்

லைசென்ஸ் கொடுப்பது என்பது ஒரு குறித்த இடத்திற்கே யொழிய ஒரு குறிப்பிட்ட காரியத்துக்கு அல்ல. ஆகையால், ஒரு நபர் ஓரிடத்திற் காக லைசென்ஸ் பெற்றுவிட்டு மற்றொரு இடத்தில், வேறு தொழிலையே லைசென்ஸ் இல்லாமல் நடத்துவதற்கில்லை. (g).

VII-வது ஷெட்யூலில் இன்னின்ன காரியங்களுக்காக லைசென்ஸ் வாங் கப்படாமல் வளவுகளை உபயோகிப்பதற்கில்லை யென்று சொல்லப்பட்டுள் ளது. அதில் குறிக்கப்பட்டுள்ளவைகளில் இரண்டு அல்லது அதற்குமேலாக உள்ள காரியங்களை ஓர் நபர் நடத்திவரும்பக்ஷத்தில் ஒவ்வொரு காரியத்திற் கும் தனியாக லைசென்ஸ் பெறவேண்டும். ஒரு சட்டத்தின் கீழ் லைசென்ஸ் பெற்றிருந்தபோதிலும் மற்றொரு சட்டத்தின்கீழ் லைசென்ஸ் பெற வேண்டு மென்று இருக்கும் பக்ஷத்தில் இரண்டு சட்டங்களின் கீழும் கட்டாயம் லைசென்ஸ் பெறவேண்டும். உதாரணமாக:—ஒரு நபர் பெட்ரோலியம் ஆக் டின்கீழ் பெட்ரோல் என்னும் எண்ணெயை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாக வைத்துக்கொண்டிருப்பதற்கு டில்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட்டினு டைய அனுமதிவேண்டும் என்றுள்ளது. லோகல்போர்ட்ஸ் ஆக்டின் VII-வது ஷெட்யூலின் (v) என்னும் தலைமையின்கீழுள்ள வஸ்துவை சேமித்துவைப்ப தற்கு லைசென்ஸ் பெறவேண்டும் என்றுள்ளதால், ஓர் நபர் ஒரு யூனியன் போர்டு அல்லது பஞ்சாயத்தின் ஹத்துக்குள் லைசென்ஸ் இல்லாமல் பெட் ரோலியத்தை வைத்துக்கொள்வதற்கில்லை. இது விஷயமாக பப்ளிக் ப்ராசி கியூட்டர் vs. கோவிந்த பிள்ளை (h) என்னும் கேஸைப் பார்க்க.

லைசென்ஸ் கட்டணங்களை வசூல்செய்யும் பாத்தியதையை குத்தகைக்கு விட்டபிறகு, லோகல் போர்டு ப்ரெஷிடென்டுகளும் குத்தகைதாரர்களும் தங்களுக்குள் ஏற்படுத்திருக்கும் காண்ட்ராக்டின் நிபந்தனைகளை அனுசரிக்க வேண்டும். ஒருதரம் சரியாக ஏலத்தில் விட்டபிறகு சரியான காரணங்க ளைக்கொண்டல்லாமல் அந்த ஏல ஏற்பாட்டை ரத்து செய்வதற்கில்லை. அதாவது ஏலதாரர் (3)-வது உபப் பிரிவின்கீழ் ப்ரெஷிடென்டுகள் செய்

(f) முத்துபாலு செட்டியார் vs. மதுரை முனிசிபல் சேர்மென். 53 M. L. J. 633=A. I. R. 1927 Mad 261.
(g) நெல்லூர் முனிசிபல் கௌன்சில் சேர்மென் vr. சுப்பய்யா 1 Wei. 737.
(h) 1 Wier 740.

திருக்கும்நிபந்தனைகளை மீறிநடந்தார்என்றல்லாமல் வேறேஒருகாரணத்தைக் கொண்டு ஏலம் ஸ்திரப்படுத்தப்பட்ட பிறகு லைசென்ஸ்கட்டணங்களை வசூல் செய்யும் உரிமையை ரத்துசெய்வதற்கில்லை. அப்படி ரத்து செய்வதானது நியாய விரோதமாகும். அதற்காக (Damage) நஷ்டத் தொகையைபெற ப்ரெஸிடென்டுகள்பேரில் தாவா செய்வதற்கு ஹேதுக்கள் ஏற்படலாம்.

உதாரணமாக:—ஒரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு, மார்க்கெட்டுகளில் கட்டணங்களை வசூல் செய்யும் பாத்தியதையை ஏலத்திற்கு விடுவதாக வைத்துக்கொள்வோம். ஒருதரம் சரியாக நடந்த ஏலத்தில் ஒருவர் ஏலமெடுத்த பிறகு மற்றொருவர் தாம் அதிக பணம் செலுத்துவதாகவும் அந்த ஏலத்தை ரத்துசெய்து மறு ஏலத்திற்கு கொண்டுவர வேண்டுமென்று கேட்கும்பக்ஷத்தில் ப்ரெஸிடென்டு அவருடைய வார்த்தைகளுக்கு இணங்கக்கூடாது. ஆனால், ஏலதாரர் தாம் ஏற்பாடு செய்துக்கொண்டிருக்கும் நிபந்தனைகளில் ஏதாவதாவது அனுசரியாவிடில் அவர் ஏலத்தில் எடுத்திருக்கும் பாத்தியதையை மறு ஏலத்திற்கு கொண்டுவரலாம். அகாரணமாக முதல் ஏலத்தை ரத்துசெய்யும்பக்ஷத்தில் அதற்காக எவ்வளவு நஷ்டம் சேர்ந்ததோ அவ்வளவு நஷ்டத் தொகையும் தமக்கு சேரவேண்டுமென்று ஏலம் எடுத்தவர் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம்.

அநேக பஞ்சாயத்து அல்லது யூனியன் போர்டுகளில் சாதாரணமாக ப்ரெஸிடென்டுகள் அங்காமி கடைகளின் கட்டணங்களை வசூல் செய்யும் பாத்தியதைகளை ஏலம்போட்டு ஏலதாரரிடமிருந்து காண்ட்ராக்டு செய்துக் கொள்வதுண்டு. அந்த காண்ட்ராக்டில் பிரதி மாதமும் ஒரு குறித்த தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும், அப்படி செலுத்தாவிட்டால் காண்ட்ராக்ட் ரத்து செய்யப்பட்டு அவ்வரிசை மறுதரம் ஏலம் போடப்பட்டு அதனால் நேரும் நஷ்டத் தொகையையும் வசூலிக்கப்படுமென்று, நிபந்தனைகள் ஏற்படுவது வழக்கமுண்டு. ஆனால், ப்ரெஸிடென்டுகள் அந்த நிபந்தனைகளை அனுசரியாமல் ஓர் ஏலதாரர் பணம் கொடுக்கத் தவறினபோதிலும் சும்மா யிருந்துவிட்டு பலநாட்களுக்குப்பிறகு அதைவரப்படுத்த 221-வது பிரிவின்கீழ் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகளில் தாவா செய்வது வழக்கமுண்டு. இதனால் அநேகவிதமான தகராறுகளும் வீண் வியாஜ்ஜியங்களும் ஏற்படுகின்றன. மாதாமாதம் லைசென்ஸ் தொகையை செலுத்தத் தவறினபிறகு முதல் முதலாக எப்பொழுது தவறுதல் ஏற்பட்டதோ அன்றேயாவது அல்லது காண்ட்ராக்டிலுள்ள நிபந்தனையின்படிக்காவது மறு ஏலத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது யுக்தமாகும்.

ஒரு நபர் லைசென்ஸ் பெறுமல் ஒரு காரியத்தை நடத்தினதற்காக, ஒரு லோகல் போர்டானது தங்களை அபராதம் விதிப்பதற்கில்லை. அப்படி ஒரு அபராதம் விதித்து அதை வசூல் செய்வது சட்ட சம்மதமாகாது. (i).

(i) மீது கோபய்யா விஷயமாக 51 Mad. 866—55. M. L. J. 27. A. I. R. 1927 Mad. 682.

இப்பிரிவின் (6)-வது உபப்பிரிவானது 197, 210-இப்பிரிவுகளில் உள்ள விஷயத்தைப்பற்றியே சற்று விரிவாக கூறுகிறது. அப்பிரிவுகளின் கீழுள்ள குறிப்புகளைப்பார்க்க.

ஒரு அனுமதி, அல்லது லைசென்ஸுக்காக ஓர் கட்டணத்தை பெற்றுக் கொண்டதினாலேயே அந்த லைசென்ஸை லோகல் போர்டானது கொடுக்க கடமைப்பட்டதாகுமென்று சொல்லுவதற்கில்லை. லைசென்ஸ் கொடுக்க மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் அந்த தொகையை வாபீஸ் பெறுவதற்கு அதைக்கட்டினவருக்கு உரிமையுண்டு. ஒரு லைசென்ஸ் விஷயமாக மனு செய்யப்பட்டபிறகு லோகல் போர்டானது 30-நாட்களுக்குள்ளாக யாதொரு உத்திரவும் அனுப்பாதபக்ஷத்தில் லைசென்ஸ் கொடுப்பதற்கு சம்பதப்பட்ட தாகவே அனுமானிக்கப்படும். இவ்விஷயமானது 11-வது உபப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

ஒருவர் யாதொரு குறிப்பிட்ட விஷயமாக லைசென்ஸ் பெறும் விஷயத்தில், அந்த லைசென்ஸைமீறி நடப்பதற்கு தண்டிக்கப்படுவார். அதே தொழிலின் விஷயமாக அந்த நபருடைய வேலையாள் அல்லது ஊழியர் லைசென்ஸுக்கு விரோதமாக ஒரு காரியத்தை செய்வாராகில் அதற்காக லைசென்ஸ் தாரரும் - ஜவாப்தாரராகவேண்டும் தமக்கொன்றும் தெரியாதென்றுவது லைசென்ஸை மீறினது தமக்கு தெரியாமல் நடந்ததென்றுவது, சொல்லுவதற்கில்லை. (j).

லைசென்ஸ் கொடுக்கும் விஷயத்திலாவது அல்லது மறுக்கும் விஷயத்திலாவது ஒரு லோகல் போர்டு தங்களுடைய அதிகார வரம்பிற்குள் யாதொரு உத்திரவை செய்யும்பக்ஷத்தில் அந்த உத்திரவை நீக்கிவைக்கும்படி சிவில் கோர்ட்டுகளில் பரிகாரம் தேடுவதற்கில்லை. ஆனால், ஒரு லோகல் போர்டானது மிகவும் நியாயவிரோதமாக யாதொரு உத்திரவை செய்திருப்பின் அந்த உத்திரவை நீக்கி சரியான உத்திரவு பெறுவதற்காக தாவா செய்யலாம் (k).

ஒரு லைசென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப்பட்டதாலும் அதன் சம்பந்தமாக ப்ரொஸிடென்டுகள் செய்யும் இதர உத்திரவுகளை அனுசரிப்பதும் அப்பீல் செய்வதுமாக உள்ள சகல பரிகாரங்களையும் தேடிவிட்ட பிறகுதான் சிவில் கோர்ட்டுக்கு போகவேண்டுமே யொழிய அதற்கு முன்பாக சிவில்கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடருவதற்கில்லை, (l). ஆனால்ஒருசட்டத்தில்

(j) சிவராம முதலியார் vs. முத்தண்ண அய்யங்கார் 50 Mad. 930 A. I. R. 1927 Mad. 612.

(k) ஹாஜி இஸ்மேல் சேட் vs. பம்பாய் முனிசிபல் கமிஷனர் 28 Bom. 253.

(l) சகாராம் vs. கலியான் முனிசிபாலிட்டி சேர்மென் 1-Bombay High Court Reports 33.

அப்பீல் செய்து தீரவேண்டுமென்று யாதொரு அம்சமும் இராவிடில் மேலே சொல்லப்பட்ட பரிஹாரங்களை அடைவதற்கு பிரயத்தனப்படாமலே சிவில் கோர்ட்டுகளில் தாவா செய்யலாம்.(m). ஒரு கேவில் ஒரு பிரதேச அதிகாரி செய்திருக்கும் தீர்மானமானது நியாமானதா அல்லவா என்பதைப் பற்றி ஒரு சிவில் கோர்ட்டானது விசாரிக்கக்கூடாதென்று யாதொரு நியாயமும் கிடையாது. (n).

அப்பீலுக்கு கால நிர்ணயம்.

213. வேறே விதமாய் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலும் அல்லது வேறே விதமாய் நிர்ணயிக்கப்படக்கூடியபடியுமன்றி மற்றப்படி இந்த ஆக்டின்படி செய்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு அப்பீலும் 1908-ம் வருஷத்திய இந்து தேசத்துக்கால நிர்ணயச் சட்டத்தின் (Limitation Act) 5-வது பிரிவில் கண்டிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு,

(a) அந்த அப்பீலானது ஒரு லெசென்ஸை கொடுத்ததான அல்லது அனுமதி கொடுத்ததான ஒரு உத்தரவுக்கு விரோதமாக இருக்கும்பக்ஷத்தில் அந்த உத்தரவானது அந்த லோகல் போர்டினுடைய நோட்டீஸ்போர்டில் விளம்பரப்படுத்தப்பட்ட தேதிக்குப் பிறகு 30-நாட்களுக்குள்ளேயும்;

(b) மற்ற சந்தர்ப்பங்களில், எந்த உத்திரவு அல்லது நடவடிக்கையின்பேரில் அப்பீல் செய்யப்படுகிறதோ அந்த உத்திரவு அல்லது நடவடிக்கையின் தேதிக்குப் பிறகு 30-நாட்களுக்குள்ளும், செய்யப்பட வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, அப்பீல்களைப்பற்றி கூறுவதாகும். லோகல் போர்டு ப்ரெஸிடென்டுகள் செய்யும் உத்திரவுகளின் பேரில் அந்த லோகல் போர்டுக்கு அப்பீல் என்பது உண்டு. லிமிடேஷன் ஆக்டின் 5-வது பிரிவில், யாதொரு அப்பீலானது அதற்குள்ள கால தவணைக்குள் செய்யப்படாமல் இருந்தபோதிலும் அப்பீல்செய்பவர் அப்படி இருந்ததற்காக தக்கசமாதானங்களை தெரிவிக்கும்பக்ஷத்தில் அந்த அப்பீலை ஏற்றுக்கொள்ளலாமென்று சொல்லப்பட்டுள்ளது. அதே மாதிரியாக இப்பிரிவில் அப்பீல் செய்வதற்காக

(m) வாசுதேவாசாரியா vs. ஷோலாப்பூர் முனிசிபாலிட்டி சேர்மென் 22 Bom. 384.

(n) ரங்கூன் முனிசிபாலிட்டி vs. சூரதி பாரா பஜார் கம்பெனி 5 Ran. 212=A. I. R. 1927 Ran 183.

30-நாட்கள் தவணை என்று சொல்லப்பட்டிருந்தபோதிலும், தகுந்தகாரணங்கள் இருக்கும்பக்ஷத்தில் 30-நாட்கள் கழிந்தபிறகு செய்யப்படும் ஒரு அப்பீலை லோகல்போர்டானது அங்கீகரிக்கலாம். அப்பீல்களை கவனிக்கும் விஷயத்தில் லோகல் போர்டுகள் தங்களுடைய மீட்டிங்கில்தான் கவனிக்கவேண்டும்.

86-வது பிரிவில் கலெக்டர்கள் செய்யும் தீர்மானங்களிலிருந்து ரெவினியூ போர்டுக்கு அப்பீல் உண்டு என்றும், அவ்வப்பீலுக்கு 6-வாரம் தவணை உண்டு என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதனால் தான் இப்பிரிவில் வேறே விதமாய் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலும் என்று சொல்லப்பட்டுள்ளது.

214. (1) சந்தர்ப்பத்துக் கேற்றபடி இந்த ஆக்டின் நிபந்தனைகளின் பிரகாரம் கொடுக்கப்படுகிற அல்லது பிறப்பிக்கப்படுகிற சகல லிசென்ஸுகளும் நோட்டீஸுகளும் அல்லது கொடுக்கப்படுகிற சகல அனுமதிகளும் எழுத்து மூலமாக இருக்க வேண்டும்.

லிசென்ஸுகள், நோட்டீசுகள், அனுமதிகள் ஆகிய இவைகளின் நமூனு.

(2). இந்த ஆக்டின்படியாவது இதன்படி செய்யப்பட்டயாதொரு விதி, சகாயச்சட்டம் அல்லது ரெகுலேஷன்படியாவது லோகல்போர்டின் ப்ரெஸிடெண்டினுடைய அல்லது அதன் யாதொரு உத்தியோகஸ்தருடைய கையெழுத்து வேண்டியதாயிருக்கிற பிரதி லிசென்ஸ், அனுமதி, நோட்டீஸ், பில், ஸம்மன் அல்லது வேறே தஸ்தாவேஜானது-சந்தர்ப்பத்துக்கேற்றபடி ப்ரெஸிடெண்டினுடைய அல்லது அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருடைய கையெழுத்தைப் போன்ற பிரதி ரூபம் அதில் அழுத்தப்பட்டிருக்கும்பக்ஷத்தில் அது சரியாய் கையெழுத்து செய்யப்பட்டதாக எண்ணப்படும்.

(3). (2) குறிப்பிட்ட உபப்பிரிவில் சொல்லியிருப்பதெதுவும், லோகல் பண்டிலிருந்து பணம் வாங்கவேண்டியதற்காக எழுதப்படும் செக்குக்காவது, லோகல் போர்டார் எழுதும் யாதொரு பத்திரத்துக்காவது, செய்துக்கொள்ளும் யாதொரு ஒப்பந்தத்திக்காவது பிரயோகப்படுவதாக எண்ணக்கூடாது.

குறிப்புகள்.

இப்பிரிவில் எழுத்து மூலமாய் என்பதற்கு கையெழுத்து மூலமாய் என்று மாத்திரம் அர்த்தமல்ல. அச்சு அல்லது வேறே விதமான எழுத்துகள் அடங்கியிருந்தாலும் எழுத்தெனப்படும். வாசகமாக லிசென்ஸ் முதலியவை கொடுக்கப்படக் கூடாதென்பது.

இரண்டாவது உபப்பிரிவில் ஒவ்வொரு லெசென்ஸ் பர்மிஷன் நோட்டீஸ் இவைகளில் ப்ரெஸிடென்டு அல்லது அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட நபருடைய கையெழுத்து வேண்டும் என்று உள்ளது கையெழுத்து செய்வதற்கு தெரியாவிட்டால் கைக்குறியை அழுத்தலாம். ஜெனரல் ரூளஸ் ஆக்ட் 3-(29) பிரிவைப்பார்க்க.

லெசென்ஸ் பில், பர்மிஷன், முதலியவைகளில் அவை எப்பொழுது கொடுக்கப்பட்டதோ அந்த காலத்தில் உத்தியோகம் வகித்துவரும் நபருடைய கையெழுத்து வேண்டுமேயொழிய பழைய ப்ரெஸிடென்டின் கையெழுத்து உதவாது. ஒருதேவில் ஒருநபர் வரிசெலுத்தாததினால் அவருடையசொத்தை ஜப்தி செய்வதற்காக ஒரு வாரண்டு பிறப்பிக்கப்பட்டு வீட்டின் சொந்தக் காரருக்கு காட்டப்பட்டது. அந்த வாரண்டில் புதிய சேர்மெனினுடைய கையெழுத்து அல்லது அல்லது கைகுறியில்லாமல் பழைய சேர்மெனினுடைய கையெழுத்து முத்திரை ஸ்டாம்பு இருந்தது. அந்த ஜப்தி வாரண்டைக்கொண்டு நிறைவேற்றினதில் வீட்டின் சொந்தக்காரர் ஜப்தி செய்யவொட்டாமல் ஆக்ஷேபித்துவிட்டார். பிறகு இதன் விஷயமாக ஹைகோர்ட்டில் கேஸ் தொடரப்பட்டதில் பழைய சேர்மெனினுடைய கையெழுத்து ஸ்டாம்பைக்கொண்டு ஜப்தி செய்தது செல்லாதென்றும் அத்தகைய ஜப்திக்கு யாதொரு நபர் ஆக்ஷேபனை செய்தபோதிலும் அது நியாயமானதாகும் என்றும் தீர்மானித்திருக்கின்றனர். (a).

சாதரணமாக, லெசென்ஸ் பில் முதலியவைகளில் ஒரு ப்ரெஸிடென்டினுடைய கையெழுத்து ஸ்டாம்பே போதுமானது என்திருந்தபோதிலும் ப்ரெஸிடென்டுகள் ஒரு செக்கு எழுதி பணம் தருவிப்பதாயிருந்தாலும் அல்லது ஒருகாண்ட்ராக்ட் செய்வதாயிருந்தாலும் அவைகளில் நேராகவேதான் கையெழுத்து செய்யவேண்டும்.

215. வேறேமாதிரி ஏற்படுத்தப்பட்டிருந்தாலொழிய லோகல் கவர்ன்மெண்டினால் வெளியிடப்பட்ட அறிக்கை தவிர ஒவ்வொரு அறிக்கையையும், அது சம்பந்தப்படுகிறடிஸ்டிரிக்ட்டிலுள்ள ஸர்க்கார் கெஜட்டிலே இங்கிலீஷிலும் அந்த டிஸ்டிரிக்டில் வழங்கும் சுதேச பாஷையிலும் பிரசித்தஞ் செய்யவேண்டும்.

இந்த ஆக்டின்படிக்கான விளம்பரங்களைப் பிரசித்தஞ் செய்வது.

குறிப்புகள்.

லோகல் போர்டுகளினால் செய்யப்படும் அறிக்கைகள் டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில் சுதேச பாஷையிலும், இங்கிலீஷிலும் இருக்கவேண்டுமென்று

(a) D. மதார் சாயபு விஷயமாக 11 அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை ரிப்போர்ட்டு பக்கம் 32.

இப்பிரிவினால் சட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. 205-A பிரிவில் சகாயச் சட்டங்களைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. இத்தப்பிரிவில் பொதுவாக எல்லாவித அறிக்கைகளைப்பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. அறிக்கைகள் என்றைபதினம் டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில் பிரசுரப்படுத்தப்படுகின்றனவோ அது முதற்கொண்டாவது அல்லது இச்சட்டத்தில் 199, 200, 204, 205-இந்தப் பிரிவுகளின்கீழ் குறிக்கப்படும் கால அளவுக்குப் பிறகாவது அமுலுக்கு வரலாமேயொழிய அதற்கு முன்னடி இருக்கும் ஒரு தேதியிலிருந்து அமுலுக்கு வருவதற்கில்லை.

லோகல் போர்டுகள் தங்களால் செய்யப்படும் தீர்மானங்களை டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில் பிரசுரப்படுத்தாமல் அவைகளை அமுலுக்கு கொண்டு வருவதற்கில்லை. அப்படி அமுலுக்கு கொண்டுவரும்பக்ஷத்தில் அவை செல்லாதென்று வாதிக்கலாம். (a).

தடுக்கப்பட்ட வைகளைப்பற்றியும் அல்லது ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்களைப் பற்றியும், நோட்டீஸ்

215-A. ஒரு லோகல் போர்டானது யாதொரு இடத்தை யாதொரு காரியத்திற்காக ஒதுக்கிவைக்கும் போதும், அல்லது யாதொரு இடத்தில் யாதொன்றையும் செய்வதை தடுக்கும்போதும் அதன் ப்ரெஸிடென்டானவர் உடனே அந்த இடத்தின் முக்கியமான சுதேச பாஷையில் எந்த காரியத்திற்காக அப்படிப்பட்ட இடமானது ஒதுக்கிவைக்கப்பட்டது என்பதைப்பற்றியும் அல்லது அப்படிப்பட்ட இடத்தில் எந்த செய்கையானது தடுக்கப்பட்டது என்பதைப் பற்றியும் ஒரு நோட்டீஸை ஓட்டி தெரிவிக்கவேண்டும்.

குறிப்புகள்.

124-வது பிரிவின்கீழ் ஒரு பஞ்சாயத்தானது சில காரியங்களுக்காக பொதுவான கசம், குளம், கிணறு முதலியவைகளில் பிராணிகளை கழுவவாவது அல்லது துணிகளை தோய்க்கவாவது கூடாது என்று தடுக்கலாம் என்றுள்ளது. 193-வது பிரிவின்கீழ் இன்னின்ன காரியங்களுக்கு லைசென்ஸில்லாமல் இடங்களை உபயோகிக்கக்கூடாதென்று தடுக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவைகளைப்பற்றி சுதேசபாஷையில் பஹிரங்கமாக அந்தந்த இடங்களில் நோட்டீஸ் தெரிவிக்கவேண்டுமென்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. 124-வது பிரிவின்கீழ் யாதொரு கிணறு முதலியவைகளை ஒதுக்கி வைப்பதின் விஷயமாக டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில் நோட்டீஸ் தெரிவிக்கப்படவேண்டுமென்று அவசியமில்லையாயினும் அதின் விஷயமாக டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில் பிரசுரிப்பது உத்தமமாகும்.

(a) லால்ஜிங் vs. ஆராமுணிசிபாலிட்டி 110 I. C. 788—A. I. R. 1928 Patna. 506.

216. (1) இந்த ஆக்டின்படியாவது அதன்படி செய்யப் பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம், செகுலேஷன் அல்லது உத்திரவின்படியாவது யாதொரு நோட்டீஸ் அல்லது வேறே தஸ்தா வேஜை யாதொரு நபருக்குச் சேர்ப்பிக்கவேண் டியதாகவோ அல்லது அனுப்ப வேண்டியதாகவோ இருந்தால், அதைச் சேர்ப்பிப்பது அல்லது அனுப்புவது எப்படியென்றால்—

தஸ்தாவேஜுகளைச் சேர்ப்பிக்கும் விதம்.

(a) அப்படிப்பட்ட தஸ்தாவேஜை வெ நபரிடத்தில் கொடுக்கலாம் அல்லது கொடுப்பதற்காகக் காட்டலாம்; அல்லது,

(b) அந்த நபர் அகப்படாவிட்டால், கடைசியாக அவர் வாசஞ்செய்வதாகவோ அல்லது தொழில் நடத்தியதாகவோ தெரிய வரும் இடத்தில் அந்த தஸ்தாவேஜைக் கொடுத்துவைக்கலாம்; அல் லது அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த எவரிடத்திலா வது அல்லது வேலைக்காரரிடத்திலாவது அதைக் கொடுக்கலாம் அல் லது கொடுப்பதற்காக காட்டலாம்; அல்லது,

(c) அந்த நபர், தங்கள் பிரதேசவிஸ்தீரணத்தில் வாசஞ்செய் யாமலிருந்து அவருடைய விலாசம் வேறே இடத்தில் உள்ளதாக ப்ரெஸிடென்டுக்குத் தெரிந்திருக்கிற பட்சத்திலே, அதை அவருக்குத் தபாலில் ரெஜிஸ்டர் செய்து அனுப்பலாம்; அல்லது,

(d) மேலே சொன்ன முகாந்தரங்களில் எதுவும் உதவாவிட் டால், வெ வாசஸ்தலத்திலாவது தொழில் நடத்திய இடத்திலாவது நன்றாய்த் தெரியும்படியான ஒரு பாகத்திலே அதை ஒட்டிவைக்க லாம்.

(2) அந்த நபர் யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாராயிருக்கும்பொழுது அந்த சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரின் பெயரை அந்த தஸ்தா வேஜில் எழுதுவது அவசியமில்லை; மேலும், கூட்டுச் சொந்தக்காரர் கள் அல்லது அனுபோகதாரர்களின் விஷயத்தில், அப்படிப்பட்ட சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களில் ஒருவரிடத்தில் இதைச் சேர்ப்பிப்பதோ அல்லது ஒருவருக்கு அதை அனுப்புவதோ போதுமானதாகும்.

(3) இந்த ஆக்டின்படி சேர்ப்பிக்கப்படும் அல்லது அனு ப்பப்படும் யாதொரு பில், நோட்டீஸ் அல்லது நமூனா அல்லதுமேறே

தஸ்தாவேஜில் இன்ன கால அளவுக்கு யாதொரு வரி அல்லது இசை கொகையைச் செலுத்தவேண்டுமென்றுவது, யாதொரு வேலையைச் செய்துமுடிக்க வேண்டுமென்றுவது ஏதாவது ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றுவது நிஷ்கரிஷை செய்திருக்கும் போதெல்லாம் அந்தக்கால அளவானது-இந்த ஆக்டில் அதற்கு விரோதமாய் ஸ்பஷ்டமான யாதொரு நிபந்தனை கண்டிராத வரையில், அந்தப்படி சேர்ப்பிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட தேதியிலிருந்து கணக் கிடப்படவேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவில் நோட்டீஸ் முதலியவைகளை எம்மாதிரி சேர்ப்பிக்க வேண்டு மென்பதைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. (1)-வது உபப் பிரிவில் (a) முதல் (d) வரையிலுமுள்ள உபவாக்கியங்களில் எந்தெந்தவிதமாக நோட் டீஸ் முதலிய தஸ்தாவேஜுகள் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லப் பட்டுள்ளது. லோகல்போர்டுகள் அவ்வாக்கியங்களை ஒன்றன்பின் ஒன்றாக அனுசரிக்கவேண்டும்.

(2)-வது உபப்பிரிவில் யாதொரு நபர் யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரராக இருக்கும்பக்ஷத்தில் அவருடைய பெயரை அவ ருக்குக் கொடுக்கப்படும் நோட்டீஸில் குறிக்கப்படவேண்டுமென்று அவசிய மில்லை என்றுள்ளது அந்த இடம் அல்லது கட்டிடமானது சரியாக குறிக் கப்பட்டாலே போதுமானது. ஒரு சொத்துக்கு பல சொந்தக்காரர்கள் இருக் கும்பக்ஷத்தில் அவர்களில் ஒருவருக்குமாத்திரம் நோட்டீஸ், பில் முதலியவை கொடுத்தால் போதுமானது.

(3)-வது உபப்பிரிவில் நோட்டீஸ் முதலியவைகளில் காட்டப்படவேண் டிய காலதவணை இன்னதென்று சொல்லப்பட்டுள்ளது. நேரில் நோட்டீஸ் கொடுக்கும்பக்ஷத்தில் அது முதற்கொண்டும் தபால் மூலமாக நோட்டீஸ் அனுப்பப்படும்பக்ஷத்தில் அது முதற்கொண்டும் அந்த காலதவணையானது கணக்கிடப்படவேண்டும்.

பிரவேசிக்கவும் பார்வையிடவும் ப்ரேலிடேன்டுக்குள்ள அதிகாரம்.

217. யாதொரு விசாரணை செய்யும் பொருட்டாவது பார்வை யிடும் பொருட்டாவது பரீக்ஷிக்கும் பொருட் டாவது பரிசீலனை செய்யும் பொருட்டாவது ஸர்வே செய்யும் பொருட்டாவது அளக்கும் பொருட்டாவது மதிப்பிடும் பொருட்டாவது இந்த ஆக்டின் நிபந்தனைகளின்படியாயினும் அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகா யச் சட்டம், செகுலேஷன் அல்லதுஉத்தரவின்

வேலையைப் பார் வையிடவோ ஸர்வே செய்யவோ அல்லது செய்து முடிக்கவோ பிரவேசிக்க அதிகா ரம்.

நிபந்தனைகளின்படி யாயினும் அனுமதி கொடுக்கப்பெற்றதாக வாகிலும், இந்த ஆக்டின் காரியங்களில் ஏதற்காகவாயினும் மேற்படி நிபந்தனைகளில் ஏதன்படியாயினும் செய்யவேண்டியதாகவோ அல்லது செய்துமுடிக்க வேண்டியதாகவோ அவசியமாயிருக்கிறதாக வாகிலுமுள்ள வேறே யாதொரு வேலையைச் செய்து முடிக்கும் பொருட்டாவது, உதவியாட்கள் அல்லது வேலையாட்களோடாகிலும் அவர்களில்லாமலாகிலும் லோகல் போர்டு ப்ரெஸிடென்டு அல்லது இது விஷயத்தில் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபர் யாதொரு கட்டிடம் அல்லது நிலத்துக்குள்ளாயினும் அதன் மேலாயினும் பிரவேசிக்கலாம்:

ஆனால்,

(a). வேறே விதமாய் வெளிப்படையாக இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, சூரியாஸ்தமனத்திற்கும் சூரியோதயத்திற்கும் மத்தியில் மேலே கண்டபடி பிரவேசிப்பது கூடாது;

(b). வேறே விதமாய் வெளிப்படையாக இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, குடியிருப்பு வீட்டிலும் குடியிருப்பு இடமாக உபயோகமாகும் பொதுவான கட்டிடத்தின் யாதொருபாகத்திலும் பிரவேசிக்க உத்தேசிப்பதை குறித்துக்குறைந்த பக்ஷம் ஆறுமணி நேரத்துக்கு முன்னதாக அதன் அனுபோகதாரர் நோட்டீஸ் பெற்றிருந்தாலொழிய, ஷை அனுபோகதாரருடைய சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அதில் பிரவேசிப்பது கூடாது;

(c). நோட்டீஸ் கொடாமலே யாதொரு வளவுக்குள் மற்றப்படி பிரவேசிக்கக் கூடியதா யிருந்தபோதிலும், ஸ்திரீகளுக்கென்றே பிரத்தியேகமாய் ஏற்படுத்தியிருக்கும் யாதொரு அறையிலுள்ளவர்கள் தங்களுடைய அந்தரங்க வாழ்க்கைக்குக் கெடுதி நேரிடாதபடி அந்த வளவின் வேறேரிடத்திற்குப் போய்விடக் கூடியவர்களா யிருக்கும்படி ஒவ்வொரு விஷயத்திலும் போதுமான நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

(d). எந்த காரியத்திற்காகப் பிரவேசிக்க வேண்டியதாயிருக்கிறதோ அந்தக் காரியத்தின் அவசியத்திற்கு ஏற்றப்படி, அந்தவளவிலுள்ளவர்களுடைய ஜனசாரங்களையும் மதாசாரங்களையும் தகுந்தபடி கவனித்துப் பிரவர்த்திக்க வேண்டும்.

குறிப்புகள்.

197-வது பிரிவின்கீழ், ஒரு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் யாதொரு தொழிற்சாலை முதலியவைகளில் பிரவேசித்து லைசென்ஸுகளின் நிபந்தனைகள் சரியாக அனுசரிக்கப்பட்டு வருகின்றனவா அல்லவா என்பதைப்பற்றி பரிசோதனை செய்யலாமென்றுள்ளது. 213-வது பிரிவில் பொதுவாக ப்ரெஸிடென்டுகள் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கும் எந்த இடத்திலும் நுழைந்து பரிசோதனை செய்யலாமென்றுள்ளது. இந்தப்பிரிவில் ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடென்டு தம்முடைய லோகல் போர்டினால் செய்யப்படவேண்டிய யாதொரு காரியத்தின் சம்பந்தமாக கட்டிடங்கள் முதலியவைகளில் நுழைந்து விசாரணை முதலியவைகளை செய்யலாமென்றுள்ளது. இப்பிரிவின் விலக்கு நிபந்தனையில் எந்தெந்த விதமாக ப்ரெஸிடென்டுகள் அவ்வதிகாரத்தை செலுத்தவேண்டுமென்பது சொல்லப்பட்டுள்ளது. வீடுகளில் நுழையும் விஷயத்தில் அவ்வீட்டுகளிலுள்ள நபர்கள் வெளியே போவதற்காவது அல்லது தனியே மறைவாக போவதற்காவது ப்ரெஸிடென்டுகள் தகுந்த வசதி கொடுக்கவேண்டும். பொதுஜனங்களின் மத ஆசார வழக்கத்தையும் சரியாக அனுசரிக்க வேண்டும்.

ஒரு ப்ரெஸிடென்டு இப்பிரிவின் கீழ், தமது அதிகாரத்தை செலுத்துவதை தடுப்பது ஒரு குற்றமாகும். (210-வது பிரிவின்கீழுள்ள குறிப்புகளைப் பார்க்க).

எடுத்தலளவைக் கருவிகளையும் முகத்தலளவைக் கருவிகளையும் பார்வையிடுவதும் அவைகளுக்கு முத்திரை போடுவதும்.

218. யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டாவது அல்லது இது விஷயத்தில் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது இந்திய பீனல் கோட் 13-ம் அத்தியாயத்தின்படி எடுத்தலளவைக் கருவிகளுக்கும் முகத்தலளவைக் கருவிகளுக்கும் சம்பந்தமான குற்றங்களைத் தடுப்பதற்காகவும் அவைகளுக்காக தண்டனை விதிப்பதற்காகவும், சம்பந்தப்பட்ட லோகல் போர்டு லிஸ்திரணத்திலுள்ள மார்க்கெட்டுகளிலும், கடைகளிலும் உபயோகிக்கும் எடுத்தலளவைக் கருவிகளையும் முகத்தலளவைக் கருவிகளையும் பார்வையிட்டு பரீக்ஷிக்கலாம்.

குறிப்புகள்.

பொது மார்க்கெட்டுகளிலும், கடைகளிலும் தப்பான நிறுத்தலளவைகளையும் முகத்தலளவைகளையும் தராசுகளையும் வைத்துக்கொண்டிருப்பதை கண்டுபிடித்து அவர்களை சிக்ஷை செய்வதற்காக இப்பிரிவில் லோகல்போர்டு

ப்ரெஸிடென்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியன் பீனல் கோட் என்னும் சட்டத்தின் 13-வது அத்தியாயத்தின் 264-வது பிரிவில் நிறுப்பதற்காக உள்ள,மோசவிதமாய் தப்பான கருவிகளை உபயோகப்படுத்துபவர் ஒரு வருஷம் வரையிலும் சிறைவாச தண்டனைக்கு உள்ளாக வேண்டுமென்றும், 265-வது பிரிவில் தப்பான நிறுத்தல்குண்டுகளையாவது அல்லது அளத்தல் கருவிகளையாவது மோசவிதமாக உபயோகப்படுத்தும் நபர் ஒரு வருஷம் வரையிலும் சிறைவாச தண்டனைக்குள்ளாக வேண்டுமென்றும், 265-வது பிரிவில் தப்பான நிறுத்தல் அல்லது அளவு கருவிகளை மோச விதமாக உபயோகப்படுத்துவதற்காக தம்முடைய வசத்தில் வைத்துக் கொண்டிருக்கும் நபர் ஒருவருஷம் வரையிலும் காவல்தண்டனைக்கு உள்ளாகவேண்டுமென்றும், 267-வது பிரிவில் தப்பான நிறுத்தல் அல்லது அளவு கருவிகளை அதாவது தராசு முதலியவைகளை உற்பத்தி செய்வது ஒரு குற்றமாகுமென்றும், அதற்கும் ஒரு வருஷம் வரையிலும் சிறைவாசதண்டனை உண்டென்று சொல்லப்பட்டுள்ளது. மேலே சொல்லப்பட்டுள்ள பிரிவுகளின் கீழ் குற்றம் செய்யும் நபர்களின்பேரில் தாவா செய்வதற்கு ப்ரெஸிடென்டுகளுக்கு உரிமையுண்டென்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

லைசென்ஸ் கொடுப்பதற்கான நிபந்தனைகளை உத்தரவு முதலியவைகளை அழலுக்கு கொண்டுவருவதற்கான அதிகாரம்.

219. இந்த ஆக்டின்படியாவது அல்லது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷன்படியாவது யாதொரு காரியத்தைச் செய்வதற்கு லோகல் போர்டின் அல்லது அதன் ப்ரெஸிடென்டின் லைஸென்ஸாகிலும் அனுமதியாகிலும் அவசியமாயிருந்து, அப்படிப்பட்ட காரியம் மேடி லைஸென்ஸ் அல்லது அனுமதியில்லாமலாவது அப்படிப்பட்ட யாதொரு லைஸென்ஸ் அல்லது அனுமதியின் ஷரத்துக்களுக்கு விரோதமான விதமாகவாவது செய்யப்பட்டால், அப்போது—

லைசென்ஸ் முதலானவைகளைப் பெற்றுக் கொள்ளத் தவறினாலும் அவைகளுக்கு விரோதமாக நடந்தாலும் இன்னது விளையுமென்பது.

(a). ப்ரெஸிடென்டானவர்—அப்படிப்பட்ட காரியத்தை அந்தப்படி செய்யும் நபருக்கு நோட்டீஸ் கொடுத்து அதன் மூலமாக, அந்த நோட்டீஸில் குறிப்பிட்ட காலத்துக்குள், மேடி காரியத்தினால் பாதிக்கப்படும் யாதொரு சொத்து அசையாப்பொருளாயிருந்தாலுஞ் சரி, அசையும் பொருளாயிருந்தாலுஞ் சரி, பொதுவானதாயிருந்தாலுஞ் சரி, ஒருவருக்கே யுரியதாயிருந்தாலுஞ் சரி, அது முழுவதையு

மாவது அதன் யாதொரு பாகத்தையாவது அப்புறப்படுத்தவாகிலும் சாத்தியமான வரையில் அதன் முந்திய ஸ்திதியிலிருக்கும்படி செய்யவாகிலும் வேண்டுமென்று உத்தரவு செய்யலாம்; இதுவுமல்லாமல்,

(b). அப்படிப்பட்ட காரியத்தை அந்தப்படி செய்வதற்கு யாதொரு கண்டனையும் இந்த ஆக்டில் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப் படாமலிருந்தால், அதை அந்தப்படி செய்கிற நபர் யாதொரு மாஜிஸ்டிரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்கும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

குறிப்புகள்.

இந்த ஆக்டின் VII-வது ஷெட்யூலில் எந்தெந்த காரியங்களுக்காக லெசென்ஸ் பெறவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. 8,9,10,11, இந்த அத்தியாயங்களில் லெசென்ஸ்களைப்பற்றியும், லோகல்போர்டு ப்ரெஸிடென்டுகள் அல்லது லோகல்போர்டுகள் உத்திரவுகளை கொடுப்பதைப்பற்றியும், சொல்லப்பட்டுள்ளது. இன்னும் லோகல் போர்டுகள் இந்த சட்டத்தையொட்டி விதிகளையும், சகாயச் சட்டங்களையும், ரெகுலேஷன்களையும் செய்யலாம். அப்படிப்பட்ட விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷன் இவைகளின் கீழும் சில காரியங்களுக்காக லெசென்ஸ் அல்லது அனுமதி வேண்டுமென்று இருக்கலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் லெசென்ஸ் அல்லது அனுமதி பெறாமல் ஒரு நபர் யாதொரு காரியத்தை செய்யும் பக்ஷத்தில் அதனால் நேரிட்டிருக்கும் கெடுதியை நீக்குமாறு அல்லது அந்த செய்கையினால் நிலஸ்திதியிலாவது அல்லது சந்தர்ப்ப ஸ்திதியிலாவது யாதொரு மாறுதல் ஏற்பட்டிருப்பின் அம்மாறுதலை நீக்கி பூர்வ ஸ்திதியில் உள்ளது போல் இருக்கும்படி ப்ரெஸிடென்டானவர் நோட்டீஸ் கொடுக்கலாம். அந்த நோட்டீஸை யாதொரு நபர் நிராகரிக்கும் பக்ஷத்தில் அவர்பேரில் 207-வது பிரிவின் கீழ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாவா செய்யலாம். இது தவிர லெசென்ஸ் அல்லது அனுமதி யில்லாமல் செய்யும் ஒரு காரியமானது இச் சட்டத்தில் வேறே யாதொரு பிரிவின்கீழ் தண்டிக்கப்படக் கூடியதாக இராமலிருக்கும் பக்ஷத்தில் அதைச் செய்பவர் இந்தப் பிரிவின்கீழ் 50-ரூபாய் வரையிலும் விதிக்கப்படும் ஒரு தண்டனைக்குள்ளாக வேண்டும். இதுதான் இப்பிரிவின் சாராம்சமாகும்.

இப்பிரிவின் கீழ், ஒரு ப்ரெஸிடென்டானவர் கொடுக்கும் நோட்டீஸானது அவருடைய அதிகார வரம்பிற்குள் கொடுக்கப்பட்டதாக இருக்க

வேண்டும். அதிகார வரம்பைமீறி செய்யும் ஒரு உத்திரவை கீழ்ப்படியாமல் இருப்பது ஒரு குற்றமாகாது. (a).

ப்ரெவிடென்டுகள் லைசென்ஸைக் கொடுப்பதிலாவது அல்லது ரத்து செய்வதிலாவது தமக்குள்ள அதிகாரத்தைக் கவனித்து செய்யவேண்டும். யாதொரு லைசென்ஸ் கொடுக்கப்படுமாகில் அந்த லைசென்ஸின் நிபந்தனைகளை மீறினதற்காகவாவது அல்லது அவைகளுக்கு விரோதமாக நடந்ததற்காகவாவது லைசென்ஸுகள் ரத்து செய்யப்படலாமே யொழிய வேறே காரணத்தைக்கொண்டு ரத்து செய்யப்படுவதற்கில்லை.

இப்பிரிவிற்கும் 207-வது பிரிவிற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், 207-வது பிரிவானது சில குறிப்பிட்ட பிரிவுகளின் நிபந்தனைகளை மீறியாவது அல்லது அவைகளை யொட்டி செய்யப்பட்ட விதிகளை அல்லது உத்திரவுகளை மீறியாவது அல்லது அவைகளின்கீழ் கொடுக்கப்படும் ஒரு நோட்டீஸை மீறியாவது நடக்கும் ஒவ்வொரு நபரும் அபராதத்திற்குள்ளாவார் என்று கூறுகிறது இந்தப் பிரிவில் பொதுவாக இந்த சட்டத்தின் யாதொரு பிரிவின் கீழாவது அல்லது இந்த சட்டத்தை யொட்டி செய்யப்படும் யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷன் இவைகளின் கீழ் யாதொரு லைசென்ஸ் அல்லது பர்மிஷன் தேவையாயிருந்து அவைகளை பெறுமல் காரியங்களைச் செய்வதே குற்றமாகுமென்று சொல்லப்பட்டுள்ளது.

220. (1) இந்த ஆக்டின்படியாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷன்படியாவது பிறப் பிக்கப்படும் யாதொரு நோட்டீஸானது, உத்தரவின் பிரகாரம் யாதொரு வேலையை செய்து முடிக்கும்படியாகிலும் எவ்வித ஏற்பாடுகளையேனும் அனுசரிக்கும்படியாகிலும் யாதொரு காரியத்தைச் செய்யும்படியாகிலும் யாதொரு நபருக்குத் நிட்டம் செய்யுமாகில், இன்னகாலத்திற்குள்ளாக

நோட்டீஸ் உத்தரவுமுதலியவைகளின்படி நடப்பதற்குவாய்தாவும், அந்தப்படி நடந்துகொள்ளாவிட்டால் அவைகளை அமலுக்குக் கொண்டுவர அதிகாரமும்.

கூடி வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்றாவது ஏற்பாடுகளை அனுசரிக்க வேண்டுமென்றாவது காரியத்தைச் செய்ய வேண்டுமென்றாவது கூடி நோட்டீஸ், கட்டளை அல்லது உத்திரவில் நியாயமான காலத்தைக் காணவேண்டும்.

(a). சிதம்பரம் முனிசிபல் கௌன்சில் vs. திருநாராயண அய்யங்கார் 55. M. L. J. 566—51 Mad. 876. இந்த கேஸைப்பற்றி 459-வது பக்கத்தில் விவரமாக சொல்லப்பட்டிருப்பதை காண்க.

(2) மேற்கண்ட காலத்துக்குள் நோட்டீஸ், கட்டளை, அல்லது உத்தரவின் பிரகாரம் நடந்துகொள்ளாவிட்டால், சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர் - அந்த வேலையை முடிப்பிக்கலாம், அல்லது மேலே கண்டபடி நோட்டீஸ், கட்டளை, அல்லது உத்தரவைச் சரியாய் அமுலுக்கு கொண்டுவருவதற்கு அவசியமென்று தாம் அபிப்பிராயப்படுகிற எவ்விதஏற்பாடுகளையும் அனுசரிக்கலாம் அல்லது யாதொரு காரியத்தைச் செய்யலாம்; இதுவுமல்லாமல்,

(3) அப்படிப்பட்ட நோட்டீஸின்படி செய்யத்தவறினால் அதற்கு யாதொரு தண்டனையும் இந்த ஆக்டில் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்படாமலிருக்கும் பட்சத்தில், நோட்டீஸ் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல் அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்கும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவின்கீழ் கொடுக்கப்படும் நோட்டீஸானது ஒரு லோகல் போர்டு அல்லது ப்ரெஸிடென்டின் அதிகார வரம்பிற்குள் இருக்க வேண்டும். ஒரு நோட்டீஸானது கொஞ்சபாகம் வரையிலும் ஒரு லோகல் போர்டினுடைய அதிகார வரம்பிற்கு மீறியும் கொஞ்ச பாகம் வரையிலும் அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்டும் இருக்கும் பக்ஷத்தில் மொத்த நோட்டீஸும் செல்லத்தக்கதல்ல. ஆகையால் அப்படிப்பட்ட நோட்டீஸை கீழ்ப்படியாமல் இருந்ததற்காக தாவா செய்யப்படுவதற்கில்லை.(a).

இந்தப் பிரிவின் கீழ் கொடுக்கப்படும் ஒரு நோட்டீஸானது எந்த வேலை விஷயமாக அது கொடுக்கப்படுகிறதோ அந்த வேலையானது செய்யப்படுவதற்கு வேண்டிய போதுமான கால தவணை அந்த நோட்டீஸிலேயே காட்டப்படவேண்டும். அந்த கால அளவானது அப்படிப்பட்ட வேலையைச் செய்து முடிப்பதற்குப் போதுமானதாக இராவிடில் நோட்டீஸில் கொடுக்கப்பட்ட கால அளவுக்குள் அந்த வேலையைச் செய்து முடிக்காததற்காக அபராதம் போடுவதற்கில்லை. (b) நோட்டீஸ் கொடுக்கப்படுவதில் ஒரே ஒரு நோட்டீஸ் தான் கொடுக்கப்படவேண்டும் என்பது இடையாது. முதலில் கொடுக்கப்பட்ட ஒரு நோட்டீஸின் விஷயமாக ஒரு லோகல் போர்டானது யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் இருந்ததினாலேயே அந்த லோகல்

(a) மதராஸ் ரெயில்வே கம்பெனி விஷயமாக 1 Weir 79.
(b) சென்னை கார்ப்பரேஷன் vs அப்பாசாமி பிள்ளை 1919M. W. N, 712=56 I. C 247.

போர்டானது மறுபடியும் ஒரு நோட்டீஸ் கொடுத்து தமக்கு வேண்டிய காரியங்களைச் செய்யும்படி சொல்லக்கூடாது என்பதில்லை. இரண்டாவ தாக கொடுக்கப்பட்ட ஒரு நோட்டீஸை நிராகரித்ததற்காக ஒரு மெம்பர் மேல் லோகல் போர்டானது தாவா செய்யலாம். (c).

ஒரு கட்டிடத்தை இடித்து விடுவதின் விஷயமாக ஒரு நபருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அந்த நபர் அந்த நோட்டீஸுக்கு, தமக்குள்ள ஆக்ஷேபனைகளை தமக்கு நோட்டீஸ் கொடுத்த முனிஸிபாலிட்டிக்கு தெரி வித்தார். பிறகு முனிஸிபாலிட்டியார் அந்த ஆக்ஷேபனைகளைப்பற்றி ஒரு மீட்டிங்கில் ஆலோசனை செய்து அவைகளை நிராகரித்து விட்டனர். அதற்கு பிறகு அந்தநபருக்கு மறுபடியும் நோட்டீஸ் கொடுக்காமலே முனிஸிபாலிட்டி யார் கிரிமினல் கோர்ட்டில் தாவா செய்தனர். இதன் விஷயமாக ஹைக் கோர்ட்டார்கள் முனிஸிபாலிட்டியார் மற்றொரு நோட்டீஸ் கொடுக்காமலே தாவா செய்தது சட்டவிரோதமானது என்று தீர்மானித்தனர். (d).

ஒரு எதிரி தமக்கு நோட்டீஸ் வந்ததாகவும், அதை தாம் நிராகரித்தது வாஸ்தவமென்றும் ஒப்புக்கொண்டதினாலேயே அவருக்கு அபராதம் விதிக்க வேண்டியது என்பதில்லை அந்த எதிரி தமக்குக் கொடுக்கப்பட்ட நோட்டீ ஸானது சட்டப்பிரகாரம் கொடுக்கப்படவில்லையென்றும், அதனால் தாம் யாதொரு குற்றம் செய்ததாக கவனிக்கப்படக் கூடாதென்றும் வாதிக்க லாம். (e).

லோகல் போர்டு ப்ரெஸிடென்டுகள் 37-D பிரிவின் கீழ் தாங்கள் ஆஜர்ப்படுத்த வேண்டிய ரிக்கார்ட்டுகளை கொடுக்கவாவது அல்லது கேட் கப்படும் தகவல்களை கொடுக்கவாவது தவறினால் இப்பிரிவின் (3)-வது உபப்பிரிவின் கீழ் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகளில் தாவா தொடரப்பட லாம் (f).

லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 159-வது பிரிவானது, ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு, ஒரு ஆக்கிரமிப்பை அல்லது தடங்கலை எடுத்து விடும்படி உத்திரவிடும் விஷயத்தில், சுயேச்சையானதோர் அதிகாரத்தைக் கொடுப்பதாகும். அவர், அப்பிரிவின்கீழ் யாதொரு நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளாவிட்டால், லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 41-வது பிரிவின் கீழ் அவர் ஒரு "தவறுதலை"ச் செய்ததாக சொல்லப்பட முடியாது. ஒரு

(c) ராகவசாரியார் vs. திருவள்ளூர் யூனியன் போர்டு ப்ரெஸிடென்டு 23 L. W. 620=A. I. R. Mad 805.

(d) ராம் பிரதாப்லால் vs. பாரா முனிஸிபாலிட்டி 66 I. C. 417.

(e) ராம்சாரன் vs லக்னோ இம்புரூமென்ட் டிரஸ்டு A. I. R. 1925 Oudh. 546.

(f) G. O No. 3719 L. & M. 25th August 1926, Guzetta. P. 331 Dated 31-8-1926.

நபருடைய சுயேச்சையில் விடப்பட்டிருக்கும் விஷயங்கள் அவரால் அவசியம் கீழ்ப்படியப்பட வேண்டுமென்று சொல்லுவதற்கு முடியாது ஆகையால், ஒரு யூனியன் போர்டு ப்ரெஸிடென்டு, யூனியன் போர்டைச் சேர்ந்த ஒரு பொது ரஸ்தா அல்லது பாதையில் ஒரு நபர் செய்திருக்கும் தடங்கலை எடுத்துவிடும்படி யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமலிருக்க, அதைப் பற்றி டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டு அவரை தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி சொல்வியும் அவர் கேளாமலிருந்தபோதிலும், டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டானவர் லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 42-வது பிரிவின்கீழ் தாமே யூனியன் போர்டு ப்ரெஸிடென்டினுடைய அதிகாரத்தை மேற்கொண்டு தடங்கலை வைத்தவர் பேரில் அல்லது ஆக்ரமித்தவர் பேரில் யாதொரு தாவாவையும் தொடருவதற்கதிகாரமில்லை. அதன் விஷயமாக டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டு யாதொரு நோட்டீஸை விடுவதற்கு அதிகாரஸ்தரல்ல. அப்படிப்பட்ட நோட்டீஸை கீழ்ப்படியாமலிருந்ததாக ஒரு நபர் தண்டிக்கப்படுவதற்கில்லை. (a).

வரிகளாக பாக்கியயிருக்கும் தொகைகளை கைப்பற்றுவது.

221. இந்த சட்டத்தின் கீழாவது அல்லது வேறே சட்டத்தின் கீழாவது அல்லது அவைகளின் கீழ் செய்யப்படும் விதிகள் அல்லது சகாயச்சட்டங்களின் கீழாவது, ஒரு லோகல் போர்டுக்கு யாதொரு நபரால் பாக்கியாயிருக்கும் எல்லா செலவு தொகைகளும் டாமேஜென்று இருக்கும் தொகைகளும் காம்பென்சேஷன் என்று சொல்லப்படும் நஷ்ட ஈடு தொகைகளும், அபராத தொகைகளும் தண்டத்தொகைகளும் (பள்ளிக்கூட கட்டண தொகைகள் தவிர) வேறே கட்டண தொகைகளும் பட்டுபடி செலவு தொகைகளும், லோகல் போர்டினுல் விடப்பட்டிருக்கும் நிலங்கள் கட்டிடங்கள் இவைகளுக்காக சேரவேண்டிய வாடகை தொகைகள் தவிர மற்ற வாடகை தொகைகளும் உபகாரத்தொகைகளும் இன்னும் மற்றதொகைகளும் அவைகளைக்கைப்பற்றுவதற்காக இந்தசட்டத்தில் வேறே தனிமையான ஏற்பாடு இராமலிருக்கும் பக்ஷத்தில் VI-வது ஷெட்யூலிலுள்ள விதிகளின் பிரகாரம் ஒரு பட்டி (Bill) மூலமாக கொடுக்கும்படியாக கேட்கப்பட்டு அந்த ஷெட்யூலில் சொல்லியிருக்கப்பட்டிருக்கிற பிரகாரம் கைப்பற்றப்படவேண்டும்.

(a) சேஷ்கியப்ப நாடார் vs. மதுரை டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸிடென்டு 60 M. L. J. 495.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் முற்றிலும் மாற்றப்பட்டு புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. பழைய 221-வது பிரிவிற்கும் புதிய 221-வது பிரிவிற்கும் அடியோடே யாதொரு சதிர்சமும் கிடையாது. பழைய லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 221-வதுபிரிவு பின் வருமாறு:—

221. (1) இந்த ஆக்டின்படியாவது அதை அனுசரித்தாவது யாதொரு லோகல் போர்டாருக்குச் சேரவேண்டியதாயிருக்கிற யாதொரு கட்டணமும், சுங்கம், செலவுகள், பிரதி பலன், நஷ்ட ஈட்டுத்தொகைகள், தண்டத் தொகைகள் பட்டுபடி செலவு தொகைகள் அல்லது இதர தொகைகள் செலுத்தபடாமற் போகும் பட்சத்தில், அவற்றை மாஜிஸ்ட்ரேட் தீர்மானிக்கக்கூடிய பின்னும் எவையேனும் செலவுகளுடன்கூட மாஜிஸ்ட்ரேட்டின் வாரண்டைக் கொண்டு வசூலிக்கலாம்.

லோகல் போர்டாருக்குச் சேரவேண்டியதாயிருக்கிற கட்டணம், சுங்கம் முதலியவற்றை இன்னவிதமாய் வசூலிக்கவேண்டுமென்பது.

அப்படிப்பட்ட யாதொரு தொகை இவ்வளவென்பதைக் குறித்தாகிலும் அதைப் பங்கீடு செய்வதைக் குறித்தாகிலும் விவாதம் எற்படும் விஷயத்தில், அதை ஷை மாஜிஸ்ட்ரேட் நிச்சயத்துத் தீர்மானிக்கவேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படி மாஜிஸ்ட்ரேட்டினிடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்படுகிற யாதொரு விஷயத்திலே, உபயகட்சிக்காரர்களில் எவராவது விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல் மாஜிஸ்ட்ரேட்டானவர் மற்றொரு கட்சிக்காரருக்கு லம்மனனுப்பி அந்த லம்மனில் கண்ட காலத்திலும் இடத்திலும் தமக்கு முன்பாக ஹாஜராக வேண்டுமென்று தெரிவிக்க வேண்டும்.

(3) கட்சிகாரர்கள் ஹாஜராவதன்மேலாவது, அவர்கள் எவராவது வாதபட்சத்தில் லம்மன் சரியாய்ச் சேர்ப்பிக்கப்பட்டதென்று ருஜுவாவதன் மேலாவது, மாஜிஸ்ட்ரேட் - பிரஸ்தாப விஷயத்தை விசாரித்துத் தீர்மானிக்கலாம்; அதன் பொருட்டு ஷை கட்சிக்காரர்களையும் அல்லது அவர்களில் எவரேனும் ஒருவரையும் அவர்களுடைய சாகூஷிகளையும் பிரமாணம் அல்லது உறுதி மொழியின்மேல் விமரிசை பண்ணலாம்.

(4) அப்படிப்பட்ட ஒவ்வொரு விசாரணையிலும் அதற்காகப் பிடித்த செலவை மாஜிஸ்ட்ரேட் தீர்மானித்து அதை இன்ன கட்சிக்காரர் செலுத்தவேண்டுமென்று கட்டளையிடவேண்டும்.

புதிய 221-வது பிரிவில், பொதுவாக ஒரு லோகல் போர்டுக்குச் சேரவேண்டிய தொகைகளின் விஷயமாக ஒரு பட்டி (Bill) யைத்தயார் செய்து

எந்த நபர் அவைகளைக்கொடுக்க வேண்டியிருக்கிறதோ அவருக்கு காண்பிக்க வேண்டுமென்றும் அந்த அத்தொகையைசெலுத்தாவிட்டால் உடனே IV-வது ஷெட்யூலில் காணப்பட்டிருக்கிற பிரகாரம் ஜப்தி செய்து, அதை வசூலிக்கலாம் என்றுமுள்ளது. பழையபிரிவில் இத்தகைய தொகைகளைவசூலிப்பதற்கு மாஜிஸ்ட்ரேட்டுகளிடம் மனு கொடுத்து அவர்களுடைய உத்தரவை ஆதாரமாகக்கொண்டு ஜப்தி செய்வித்து வசூலிக்க வேண்டும் என்றிருந்தது.

பழைய பிரிவானது அமுலில் இருந்த காலத்தில் அதன் அர்த்தத்தைப் பற்றியும் பிரயோகத்தைப் பற்றியும் சென்னை ஹைகோர்ட்டில் பலவிதமாக பிரச்னைகள் நிளம்பின. முக்கியமாக, ஒரு லோகல்போர்டானது ஒரு நபர் லைசென்ஸ் வாங்காததற்காக தாங்களே தண்டத் தொகையை விதித்து அதை 221-வது பிரிவின் கீழ் வசூல் செய்வதற்கு மாஜிஸ்ட்ரேட்டுகளினிடம் மனுகொடுக்கலாமா என்பது ஒரு முதற்கேள்வியாகும். இதைப்பற்றி மரீது கோபய்யா விஷயமாக(a)என்னும் கேவில், அப்படி ஒரு லோகல்போர்டாரே லைசென்ஸ் வாங்கப்படாததற்காக தண்டத் தொகை விதிப்பதற்கில்லையென்றும் அத்தகைய தொகைகளை மாஜிஸ்ட்ரேட்டுகள் வசூல்செய்து கொடுப்பதற்கில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்னும், மற்றொரு கேவில், ஒருநபர் ஒரு லோகல் போர்டினால் 221-வது பிரிவின்கீழ் ஒருமாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாவா தொடரப்படும்பக்ஷத்தில், தாம் அடியோடே யாதொரு தொகையும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றும் லோகல் போர்டாருடைய செய்கையே தவருனது என்றும் எதிர்வாதம் செய்யலாமா என்னும் பிரச்னையானது விசாரணைக்குவர, சென்னை ஹைக்கோர்ட்டார் அவர்கள், இப்படிப்பட்ட கேஸுகளில் மாஜிஸ்ட்ரேட்டுகள் எதிரிகளால் ஏதாவது பாக்கி சேரவேண்டியதாக இருக்குமா அல்லது அவர்கள் அடியோடேயாதொரு தொகையையும் கொடுக்கவேண்டிய அவசியமில்லையா என்பதைப்பற்றிவிசாரிக்கலாம் என்று தீர்மானித்திருக்கின்றனர்.b) இதேமாதிரியாக மற்றொரு கேவில் ஒரு லோகல்போர்டு சென்னை லோகல்போர்ட்ஸ் ஆக்டின் 164 (1) பிரிவின்கீழ் ஓர் நபர் அந்த லோகல்போர்டுக்குச் சொந்தமான நிலத்தில் ஆக்கிரமித்ததாக அவருக்கு அபராதத்தை விதித்து அந்த அபராதத்தை வசூலிக்க அதே சட்டத்தின் 221-வது பிரிவின்கீழ் ஒரு மாஜிஸ்ட்ரேட் முன்பாக மனு செய்யும்பக்ஷத்தில் அந்த மனு கேவில் அபராதத்தைச்செலுத்தாத நபர் தாம் யாதொரு ஆக்கிரமமும் செய்யவில்லையென்று மாஜிஸ்ட்ரேட் முன்பாக வற்புறுத்தலாமா என்றும், அந்த மாஜிஸ்ட்ரேட், ஆக்கிரமம் நடந்ததாக சொல்லப்பட்டதானது வாஸ்தவமா இல்லையா என்றும் விசாரிக்கலாமா என்று கேள்விகள் வந்ததில், மாஜிஸ்ட்ரேட் அப்படி விசாரிக்கலாமென்

(a). 51 Mad. 865=55 M. L. J. 22.

(b) ரஹீம் சாயபு விஷயமாக, 1 அகிலஇந்தியா லாஜர்னல் ரிப்போர்ட்டுகள் 197 பக்கம்.

றும் ஆக்கிரமம் நடக்கவில்லையென்று அறியும்பக்ஷத்தில் அந்த மனுவை தள்ளிவிடலாமென்றும் தீர்மானித்திருக்கின்றனர்(c).

இப்பொழுது புதிய 221-வது பிரிவின் பிரகாரம் லோகல்போர்டுகள் தமக்குச் சேரவேண்டிய பாக்கிகளை தாங்களே நோட்டீஸ், பில், ஜப்தி இவைகளின் மூலமாக வசூல்செய்யலாம் என்றிருக்கிறது. இப்படிப்பட்ட தொகைகளைப்பற்றி விவாதம் ஏற்படும்பக்ஷத்தில் அதை மாஜிஸ்ட்ரேட்டுகள் தீர்மானிக்க வேண்டுமென்றும் அதற்காக ஒரு விசாரணை நடத்தி எதிரியினிடமிருந்து சமாதானங்களைப்பெற்று பிறகு தீர்மானிக்க வேண்டுமென்று இருக்கிறது.

இப்பொழுது இன்னின்ன காரணங்களைக்கொண்டுபழைய பிரிவை சட்ட சபையானது அடியோடே தூக்கிவிட்டிருக்கிறதென்பது புலப்படவில்லை. இனி இப்பிரிவின்கீழ் ஒரு லோகல்போர்டானது தனக்குச் சேரவேண்டிய தொகைகளை தாங்களே நிச்சயித்து தாங்களே வசூல்செய்யலாம் என்று ஏற்படும். அப்படி யிருக்குமானால் இப்பிரிவினால் ஒரு லோகல்போர்டுக்கு மிகவும் பெரியதோர் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதுபோலாகும் இனி இப்பிரிவின்கீழ் பாக்கியாயிருக்கும் தொகைகளை ஒரு லோகல்போர்டானது வசூல்செய்கையில், அந்த பாக்கி எவ்வாறு ஏற்பட்டது, அதை ஒரு நபர் கொடுக்க பத்தப்பட்டவரா என்பதைப்பற்றி அந்த லோகல்போர்டு தவிர வேறே ஒரு கோர்ட்டும் நிர்ணயிப்பதற்கில்லை. ஒரு லோகல்போர்டு அக்கிரமமாக யாதொருதொகையை வசூல்செய்யும்பக்ஷத்தில் அதன்பேரில் 225-வது பிரிவின்கீழ் சிவில்கோர்ட்டில் தாவாசெய்வதுதவிர வேறே பரிஹாரம் இல்லை.

ஆனால் இப்பிரிவை சற்று ஆழ்ந்து கவனிக்குமிடத்து, இதன்கீழ் பாக்கியாக ஏற்பட்டிருக்கும் தொகைகள் யாதொரு சந்தேகம் அல்லது தகராறு இல்லாமலே ஒரு லோகல்போர்டினால் நிர்ணயிக்கப்படக்கூடிய தொகைகளாகுமென்று ஏற்படும். அதாவது, செலவுதொகைகள், டாமேஜ் தொகைகள், அபராத தொகைகள் தண்டத்தொகைகள் முதலியதொகைகளை ஒரு லோகல் போர்டானது தங்களுடைய இஷ்டப்பிரகாரம் விதிக்காமல் அதற்காக ஏற்பட்டிருக்கும் சில விதிகளைக்கொண்டு இடப்படத்தக்கதாகும். எனென்றால், யாதொரு பாக்கி தொகை விஷயமாக ஒரு லோகல்போர்டு அந்த பாக்கி ஏற்பட்ட 3-வருஷத்திற்குள் ஒருசிவில்கோர்ட்டில், தாவாதொடரவேண்டுமென்று 222-வது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதால், சந்தேகத்திற்கிடமுள்ள சந்தர்ப்பங்களில் ஒரு லோகல்போர்டு தமக்குச் சேரவேண்டிய தொகைகளை சிவில் கோர்ட்டு தாவாரா வசூல் செய்யவேண்டும் என்று ஏற்படும். எவ்விதமான

(c) பிள்ள ராமசாமி vs. தடே பள்ளிக்கூடம் தாலூக்காபோர்டு ப்ரெஸிடென்டு 11 அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை ரிப்போர்ட்டுகள் பக்கம் 237.

பாக்கியையும் சிவில்கோர்ட்டினுடைய உதவியன்றியில் ஒரு லோகல்போர்டானது வசூல்செய்யலாம் என்றுதான் இப்பிரிவின் அர்த்தம் என்று சொல்லப்படுமானால் 222-வது பிரிவிற்கு யாதொரு அவசியமும் இல்லை. ஆகையால், லோகல் போர்டுகள் இப்பிரிவின்கீழ் பாக்கி தொகைகளை வசூலிப்பதில், சந்தேகத்துக்கிடமில்லாமலும் ஸ்பஷ்டமாகவும் உள்ள பாக்கிகளைத்தான் IV-வது ஷெட்யூலில்கண்ட சுருக்கு வழியாக வசூலிக்கலாம். மற்ற பாக்கிகளை 222-வது பிரிவின்கீழ் தாவா செய்துதான் வசூலிக்கவேண்டும்.

ஒரு லோகல் போர்டானது இப்பிரிவின் கீழ் யாதொரு சொத்தை அக்கிரமமாக ஜப்தி செய்து ஏலம் போடும் பட்சத்தில் அதற்காக நஷ்ட ஈடுபெற சிவில் கோர்ட்டில் தாவா செய்வதற்காக நஷ்டமடைந்த நபருக்கு எப்பொழுதும்உரிமையுண்டு.ஆனால் இது விஷயத்தில் அந்த நபர் 225-வது பிரிவின் கீழுள்ள நிபந்தனைகளை அனுசரிக்கவேண்டும். ஜப்தி செய்யவரும் பட்சத்தில் அதை வளரவொட்டாமல் கேட்கப்பட்ட தொகையை ஆக்ஷேபத்தின் பேரில் கொடுத்துவிட்டு பிறகு அந்த தொகையை வரப்படுத்த சிவில் கோர்ட்டில் தாவாசெய்வது நலம்.

இப்பிரிவானது பலவீன் வியாஜ்ஜியங்களுக்கு இடம் தருவதுபோல் காணப்படுகிறது.

சேர வேண்டிய தொகைகளை வசூலிப்பதற்குக் கால நிர்ணயம்.

222. இந்த ஆக்டின்படி லோகல் போர்டுக்குச் சேரவேண்டியிருக்கிற யாதொரு தொகை விஷயமாக, சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ஜப்தியானது எப்போது முதலில் செய்யப்பட்டிருக்கலாமோ அந்தத் தேதி முதற்கொண்டாவது, எப்போது முதலில் வியாஜ்ஜியம் கொண்டுவரப் பட்டிருக்கலாமோ அந்தத் தேதி முதற்கொண்டாவது, முதலில் எந்தத் தேதியிலே பிராது தொடரப்பட்டிருக்கலாமோ அந்தத் தேதி முதற்கொண்டாவது மூன்று வருஷமாலமான பிறகு, அந்தத்தொகைக்காக யாதொரு ஜப்தியும் செய்யவுங்கூடாது, வியாஜ்ஜியம் கொண்டுவரவும் கூடாது.

குறிப்புகள்.

இப்பிரிவானது பொதுவாக ஒரு லோகல் போர்டுக்குச் சேரவேண்டிய தொகைகளை ஒரு தாவா மூலமாக வசூல் செய்வதில் அல்லது ஜப்தி செய்வதில், எப்பொழுது வியாஜ்ஜிய மூலமானது தொடங்கினதோ அது முதல் 3-வருஷங்களுக்குள் செய்யப்பட வேண்டுமோயொழிய அதற்கு மேலாக செய்வதற்கில்லை யென்று கூறுகிறது. இப்பிரிவில் "எந்தத்தேதியில் பிராது தொடரப்பட்டிருக்கலாமோ அந்தத்தேதி முதற்கொண்டாவது" என்றுள்ளது. எம்மாதிரியான. பிராது என்று விளக்கப்படவில்லை. சிவில் கோர்ட்டில்

பிராதா அல்லது கிரிமினல் கோர்ட்டில் பிராதா என்றும் தெரியவில்லை. சாதாரணமாக கிரிமினல் கோர்ட்டில் ஒரு பிராது செய்யப்பட வேண்டுமானால், ஒரு குற்றம் நடந்தபிறகு இன்னகாலம் கழித்தபிறகுதான் தாவா தொடப்படவேண்டும் என்றுவது அல்லது இன்ன காலத்திற்குள் தாவா செய்யப்பட வேண்டுமென்றுவது யாதொரு நிர்ணயமும் கிடையாது.

ஒரு குற்றம் நடந்ததாகயிருக்குமானால் அதற்குப் பிறகு எவ்வளவு காலம் வரையிலும் தாவா செய்யப்படலாம். என்பதைப்பற்றி கிரிமனல் சட்டத்தில் யாதொரு காலநிர்ணய ஏற்பாடும்கிடையாது: உதாரணமாக கலவு, கொலை முதலிய குற்றங்கள் நடந்த பல வருஷங்களுக்குப் பிறகும் எதிரிகளின் பேரில் தாவா தொடரப்பட்டு வருகின்றன. இது பொது சட்டமாகும். ஆனால் லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 223-வது பிரிவில், லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் செய்யப்படும் குற்றங்களுக்காக தாவா செய்வதில், குற்றம் நடந்த தினம் முதல் 3-மாதங்களுக்குள்ளும், அல்லது லேசென்ஸ் பெற வேண்டியிருந்து பெறுமலிருந்தால் என்றையதினம் முதல் லேசென்ஸில்லாமல் தொழில் முதலியவை நடத்தப்படுகிறதோ அன்று முதற்கொண்டு 3-மாதங்களுக்குள்ளும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாவா தொடரப்பட வேண்டுமென்றுள்ளது ஆகையால், இப்பிரிவைக் கவனிக்குமிடத்து இப்பிரிவிலுள்ள பிராது என்பதானது ஒரு கிரிமினல் பிராது அல்ல வென்றே ஏற்படும். இல்லாவிடில் 223-வது பிரிவிற்கும் இப்பிரிவிற்கும் விரோதம் ஏற்படும். ஒரே விஷயமாக பொதுவான ஒரு விதியும் ஸ்பஷ்டமான ஒரு விதியும் இருக்கும்பக்ஷத்தில் ஸ்பஷ்டமான விதியையே அனுசரிக்க வேண்டும்.

பிராது தொடர அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கும் நபர்கள்.

223. இந்த ஆக்டில் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி போலீஸாராவது லோகல் போர்டின் ப்ரெஸிடென்டாவது, லோகல் போர்டாரால் அல்லது அதன் ப்ரெஸிடென்டால் இது விஷயத்தில் வெளிப்படையாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது சும்மன் செய்யப்பட்டதிலிருந்து மூன்று மாதத்துக்குள்ளாக பிராது கொடுத்தாலொழிய, இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளுக்காகிலும் அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்திலுள்ள நிபந்தனைகளுக்காகிலும் விரோதமாய்ச் செய்யப்பட்ட யாதொரு குற்றத்திற்காக வந்த நபரையும் பரிசீலனை செய்யக்கூடாது. ஆனால், வசப்பெற்றுக்கொள்ள சங்கதியினுலாவது தங்களுக்கே தெரிய வந்த சங்கதியினுலாவது அனுமானத்தினுலாவது குற்றங்களைப் பிடித்துப் பரிசீலனை செய்யச் சில மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குள்ள அதிகாரத்

தைப்பற்றி 1898-ம் வருஷத்திய கிரிமினல் புரோஸீஜர் கோடில் நிபந்தனைகளுக்கு இதிலுள்ளதெதனாலும் பாதகமுண்டாகமாட்டாது.

ஆனால், இந்த ஆக்டின்படி லீஸென்ஸ் வாங்கிக்கொள்ளவோ அனுமதிபெறவோ தவறுவது-எந்தகால அளவுக்கு லீஸென்ஸ் அல்லது அனுமதி வேண்டியிருக்கிறதோ அப்படிப்பட்ட கால அளவு எதுவாகிலும் இருந்தால் அது கடந்துபோகிற வரையிலே, இந்தப் பிரிவின் காரியங்களுக்காக நடந்துகொண்டே யிருக்கும் குற்றபா யிருப்பதாக எண்ணப்படும்; மேலும் எந்தக்கால அளவும் குறிப்பிடப் பட்டிராவிட்டால், குற்றம் நடக்க ஆரம்பமானதிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் எப்போதாகிலும் பிராது எடுத்துக்கொள்ளலாம்.

குறிப்புகள்.

222-வது பிரிவிற்கும் இப்பிரிவிற்கும் உள்ள வித்தியாசமானது இன்னதென்று 223-வது பிரிவின்கீழ் உள்ள குறிப்புகளிலேயே சொல்லப்பட்டுள்ளது. லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் அல்லது அதையொட்டின விதி, சகாயச் சட்டம், இவைகளின்கீழ் ஒரு குற்றம் செய்யப்பட்டதானால், அந்தக் குற்றம் நடந்ததேதி முதல் 3-மாதங்களுக்குள் ஒரு போலீஸ் அல்லது லோகல் போர்டு ப்ரெஸிடெண்டு, அல்லது லோகல் போர்டினால் அல்லது அதன் ப்ரெஸிடெண்டினால் ஸ்பஷ்டமாக அல்லது வெளிப்படையாக அதிகாரப்படுத்தப் பட்ட ஒரு நபர், ஆகிய இவர்களால் தாவா செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால் அந்த தாவா செல்லாது. உதாரணமாக, ஒரு நில ஆக்கிரமத்தை எடுத்துவிடும்படி ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடெண்டு ஒரு நபருக்கு நோட்டீஸ் கொடுப்பாராகில் என்றையதினம் நோட்டீஸ் நிராகரிக்கப்பட்டதோ அன்று முதல் 3-மாதங்களுக்குள் அந்த நோட்டீஸை கீழ்ப்படியாததற்காக தாவா தொடரப்பட வேண்டும். ஆனால் ஒரு தரம் நோட்டீஸ் கொடுத்த பிறகு அதை நிராகரித்த காலம் முதல் 3-மாதங்களுக்குள் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமற்போனாலும் மறுபடியும் அதே விஷயமாக மற்றொரு நோட்டீஸ் கொடுத்து அந்த நோட்டீஸை அவமதித்ததற்காக அப்படி அவமதித்தது முதல் 3-மாதங்களுக்குள் தாவா தொடரப்படலாம்(a). அதே மாதிரியாக இந்த சட்டத்தின் எந்த பிரிவின் கீழாவது யாதொரு குற்றம் செய்யப்படும்பக்ஷத்தில் அது நடந்த மூன்று மாதங்களுக்குள் தாவா தொடரப்பட வேண்டும். ஆனால் லஸென்ஸுகளைப் பற்றின வரையிலும் லீஸென்ஸ் பெறுமல் தொழில் நடத்தப்படும் ஒவ்வொரு தினமும் குற்றம் நடந்து வருவதாகவே கவனிக்கப்பட்டு அந்த தினம் முதல் ஒரு வருஷம்

(a) ராமசந்திர செட்டி விஷயமாக A. I. R. 1926 Mad. 763—50 M. L. J. 557.

வரையிலும் அப்படி லெவென்ல் பெறுதவர் பேரில் தாவா தொடருவதற்கு வசதியுண்டு. ஆகையால் ஒரு நபர் லெசென்ல் பெறுமல் தொழிலே நடத்தி வரும் காலத்தின் பிரதிதினம் முதற்கொண்டு 12-மாதங்கள் வரையிலும் தண்டனைக்குள்ளாக வேண்டியிருக்கும். இதனால் என்ன ஏற்படுமென்றால், ஒரு நபர் லெசென்ல் பெறுமல் ஒரு தொழிலே நடத்திவந்து நின்றுவிட்ட பிறகு 12-மாதங்கள் கழித்து கிரிமினல் கோர்ட்டில் தாவா தொடரப்படுவ தற்கில்லே. இதை ப்ரெவிடென்டுகள் நன்கறிய வேண்டும்.

ப்ரெவிடென்டுகள் அல்லது லோகல் போர்டுகள் இவைகளால் அதிகா ரப்படுத்தப்படுவதில், இன்ன காரியத்திற்காக அதிகாரம் கொடுக்கப்பட்ட தென்று விவரமாக அதிகாரப் பத்திரத்திலேயே எழுதப்பட வேண்டும். அதி காரப் பத்திரத்திலுள்ள நிபந்தனைக்கு மீறி நடப்பது சட்ட சம்மதமாகாது. (b) ஒரு நபர் யாதொரு தாவாவைச் செய்வதற்காக அதிகாரப்படுத்தப்பட வேண்டுமானால் அது மிகவும் ஸ்பஷ்டமா யிருக்க வேண்டும்

இப்பிரிவின்கீழ் தொடரப்படும் தாவாக்களில், மாஜிஸ்டிரேட்டுகள், ஒரு லோகல் போர்டு ப்ரெவிடென்டு லெவென்லை ரத்து செய்தது சட்ட சம் மதமானதா அல்லவா என்பதைப்பற்றி விசாரிக்க அதிகாரமுள்ளவராவர்கள்.

லோகல் போர்ட்ஸ் ஆக்டின் கீழ்தொடரப்படும் தாவாக்கள் சிக்குள்ள வைகளாகவும் சட்டப் பிரயோகத்தைப் பொறுத்ததாகவும் இருப்பதால் அவைகளே ஹானரரி பெஞ்சு மாஜிஸ்ட்ரேட்டுகள் விசாரிப்பது உசிதமன்று என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது (c).

லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் செய்யப்படும் தாவாக்களின் விசாரணே முறையானது கிரிமினல் புரோஸீஜர் கோட் என்னும் சட்டத்தையொட்டின தாகும்

போலீஸார், தாங்களே நேரில் கேசுகளேப் பிடித்து விசாரிக்க உரிமை யுள்ளவர்கள். அதே மாதிரி மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு சந்தேகம் ஏற்படும் பக்ஷத்தில் தாங்களே கேஸை ஒருவருடைய பிராது இல்லாமலே விசாரிக்க அதிகாரமுண்டு. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் யாதொரு பிராது (complaint) இருக்க வேண்டுமென்று அவசியமில்லே. (கிரிமினல் புரோ ஸீஜர் கோட் 190-வது பிரிவைப் பார்க்க.)

(b) கள்ளப்பெருமாள் காயுடு விஷயமாக 11 L. W. 120—55 I. C. 599—21 Cr. L. J. 377.

(c) பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் vs. வரதராஜுலு காயுடு 1924 M. W. N 880—47 M. L. J. 716.

224. இந்த சட்டத்தின்கீழாவது அல்லது இதன்கீழ் செய்யப்பட்டிருக்கும் யாதொரு விதி சகாயசட்டத்தின் கீழாவது ஒரு மாஜிஸ்டிரேட்டிஞல் விதிக்கப்படும் அல்லது இடப்படும் யாதொரு அபராதத் தொகை, செலவுத் தொகை, வரித் தொகை அல்லது வேறே தொகையானது, அந்தத் தொகை 1898-ம் வருஷத்திய கிரிமினல் புரோஸீஜர் கோட் என்னும் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட ஒரு அபராதத் தொகையைப்போல் அப்படிப்பட்ட மாஜிஸ்டிரேட்டிஞல் கைப்பற்றப்பட வேண்டும். அந்தத் தொகையானது கைப்பற்றப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்கு இந்த சட்டத்தின் கீழுள்ள காரியங்களுக்காக உபயோகப்படுத்துவதற்கு கொடுக்கப்பட வேண்டும்.

அபராதத் தொகைகள், செலவுத் தொகைகள் முதலியவைகளை கைப்பற்றுவது.

குறிப்புகள்.

லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் தொடரப்படும் கிரிமினல் கேஸுகளில் விதிக்கப்படும் அபராதம் செலவு தொகைகள் முதலியவை, எந்த லோகல் போர்டின் சார்பாக விதிக்கப்படுகிறதோ அந்த லோகல் போர்டுக்குச் சேருவதாகும். ஒரு பஞ்சாயத்தானது செய்யும் தாவாக்களில் வசூல் செய்யப்படும் அபராதம் பஞ்சாயத்துக்கும், இதே மாதிரியாக மற்ற லோகல் போர்டுகளால் செய்யப்படும் தாவாக்களில் வசூலாகும் தொகைகள் அவைகளுக்கும் சேருவதாகும். V-வது ஷெட்யூலின் 5-வது விதி 15-வது உப விதியில் "தாஸுக்கா போர்டு" என்னும் தலைமையின்கீழும் 10-வது உபவிதியில் 'டிஸ்டிரிக்ட் போர்டு' என்னும் தலைமையின்கீழும் (11)–வது உப விதியையும் பார்க்க.

225. (1) இந்த ஆக்டையாவது அல்லது இந்த ஆக்டின் கீழ் செய்யப்படும் யாதொரு விதி, சகாயச் சட்டம், செகுலேஷன் அல்லது உத்தரவையாவது அனுசரித்து அல்லது அனுசரிக்க உத்தேசித்து செய்யப்பட்ட அல்லது செய்வதாக எண்ணம் கொள்ளப்பட்ட யாதொரு செய்கையின் விஷயமாக, அல்லது இந்த ஆக்டையாவது அல்லது மேலே சொல்லப்பட்ட விதி, சகாயச் சட்டம், செகுலேஷன் அல்லது உத்தரவையாவது நிறைவேற்றுவதில் யாதொரு அஜாக்கிரதை அல்லது தவறுதல் நேரிட்டதாகச் சொல்லப்படும் விஷயமாகவாவது யாதொரு லோகல் போர்டு, அல்லது அதனுடைய ப்ரெஸிடென்டு, அங்கத்தினர், உத்தியோகஸ்தர், அல்லது ஊழியர் இவர்கள் பேரிலாவது அல்லது அப்படிப்பட்ட

லோகல் போர்டின் மேல் வியாஜ்ஜியம் கொண்டு வருவதற்கு நோட்டீஸ்.

போர்டின் ப்ரெஸிடென்டு, அங்கத்தினர், உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் இவர்களுடைய உத்தரவின்கீழ் நடந்துகொள்ளும் யாதொரு நபர்களின் பேரிலாவது தொடரப்படும் யாதொரு காவீ அல்லது வேறே சட்ட நடவடிக்கையானது, அதன் விஷயமாக எழுத்து மூலமாக வியாஜ்ஜிய மூலத்தையும், கேட்கப்படும் பரிகாரத்தின் சுபாவத்தையும் சுதந்தரித்துக் கேட்கப்படும் பிரதிபலத் தொகையையும் குறிக்கப்பட்டு ஒரு நோட்டீஸ் கொடுத்த பிறகும், வாதியாக வர உத்தேசித்திருக்கும் நபருடைய பெயரும் வசிக்குமிடமும் அந்த லோகல் போர்டினுடைய ஆபீஸில் கொடுக்கப்பட்டும், அந்த நடவடிக்கையானது அப்படிப்பட்ட யாதொரு ப்ரெஸிடென்டு, அங்கத்தினர், உத்தியோகஸ்தர், ஊழியர் அல்லது நபர் இவர்களின் பேரிலேயே தொடரப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு நேரிலாவது அல்லது அவர்களினுடைய வாசஸ்தலத்திலாவது கொடுக்கப்பட்டும் இரண்டு மாதங்கள் கழிந்தாலொழிய, கொண்டுவரப்படக் கூடாது. அப்படிப்பட்ட நோட்டீஸ் கொடுக்கப்பட்டதாக ருசுவானலொழிய கோர்ட்டார் பிரதிவாதி பட்சமே தீர்ப்புச் செய்யவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையும்-அந்த நடவடிக்கையானது அசையாப் பொருள்களை கைப்பற்றுவதற்காகவோ அல்லது அவைகளின் விஷயமாகவுள்ள உரிமையை ஸ்தாபிதம் செய்வதற்காகவோ கொண்டு வரப்படும் நடவடிக்கையாயிருந்தாலொழிய எந்த தேதியில் வியாஜ்ஜியமூலம் கிளம்பினதோ அந்த தேதி முதல் ஆறுமாதத்திற்குள்ளாகவும், அல்லது பரிகாரம் கோரப்பட்ட கெடுதி அல்லது நஷ்டமானது இடைவிடாமல் நேர்ந்துகொண்டிருக்கும் பக்ஷத்தில் அப்படி நேர்ந்துகொண்டிருக்கும் காலத்திலும் அல்லது அவை நின்றுவிட்டதானால் அது முதல் ஆறு மாதங்களுக்குள்ளாகவும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(3) (1)-வது உபப்பிரிவின்கீழ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு போர்டு, அல்லது நபர், அந்த நடவடிக்கையானது ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னமே, வாதிக்கு அவர் அங்கீகரிக்கும்படி ஏடுகாட்டியிருந்து, பிறகு அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தில் வாதியானவர் எவ்வளவு தொகை (பிரதிவாதியின் சார்பாக) ஆஜர்படுத்தப்படுகிறதோ அதைவிட அதிகமாக பெறுகபக்ஷத்தில் அப்படி

ஆஜர்ப்படுத்தப்பட்ட பிறகு அவர் செய்த யாதொரு செலவுகளையும் பெறக்கூடாது. வாதி அப்படி ஆஜர்ப்படுத்தப்பட்ட பிறகு பிரதிவாதிக்கு ஏற்பட்ட எல்லா செலவுகளையும் கொடுக்க வேண்டும்.

(4) ஒரு லோகல் போர்டினுடைய ப்ரெஸிடெண்டு அல்லது அங்கத்தினர் அல்லது உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் இவர்களின் பேரிலாவது அல்லது ஒரு லோகல் போர்டினுடைய அல்லது அப்படிப்பட்ட ப்ரெஸிடெண்டு, அங்கத்தினர், உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் இவர்களுடைய உத்தரவின்கீழ் நடந்துகொள்ளும் யாதொரு நபரின் பேரிலாவது இந்த ஆக்டையாவது அல்லது இந்த ஆக்டின்கீழ் செய்யப்படும் யாதொரு விதி, சகாயச்சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவையாவது அனுசரித்து அல்லது அனுசரிக்க உத்தேசித்து செய்யப்பட்ட அல்லது செய்வதாக எண்ணங்கொள்ளப்பட்ட யாதொரு செய்கையின் விஷயமாகவாவது அல்லது இந்த ஆக்டையாவது அல்லது மேலேசொல்லப்பட்டவிதி சகாயச்சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவையாவது நிறைவேற்றுவதில் யாதொரு அஜாக்ரதை அல்லது தவறுதல் நேரிட்டதாகச் சொல்லப்படும் விஷயமாகவாவது அப்படிப்பட்ட செய்கையானது அல்லது அஜாக்ரதை அல்லது தவறு நல்ல எண்ணத்துடனே செய்யப்பட்டாலும் அல்லது நேரிட்டாலும் அதன் விஷயமாக யாதொரு தாவா அல்லது வேறே சட்ட நடவடிக்கை கொண்டு வரப்படக்கூடாது ;

ஆனால், அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கையானது ஒரு கோர்ட்டில் ஸ்தாபிக்கத்தக்கதாக இருக்குமானால் அந்த நடவடிக்கையானது 227-வது பிரிவின்கீழ் கொண்டுவரப்படும் தாவாக்களைத்தவிர மற்றப்படி அந்த லோகல் போர்டின்மேல் தான் கொண்டுவரப்பட வேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவின் நோக்கம்.

இப்பிரிவானது மிகவும் முக்கியமானதோர் பிரிவாகும். லோகல் போர்டுகளின்மீது தாவா செய்வதாக இருந்தால் அந்த தாவா எம்மாதிரி தொடரப்படவேண்டும் என்பதைப்பற்றிதான் இப்பிரிவு கூறுகிறது: ஆனால், எந்தெந்த சந்தர்ப்பங்களில் தாவா செய்யலாம் என்று இப்பிரிவில் யாதொன்றும் இராமலிருந்த போதிலும் எந்தெந்த சந்தர்ப்பத்தில் தாவா தொடருவதற்கில்லை

என்று இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது. ஒரு லோகல் போர்டின் பேரில் தாவா செய்வதாயிருந்தால் இப்பிரிவின் நிபந்தனைகளை கட்டாயம் அனுசரிக்க வேண்டும். அப்படி அனுசரிக்காமல் செய்யும் தாவா செல்லத்தக்கதல்ல.

இப்பிரிவானது, 1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் மிகவும் மாற்றப்பட்டு புதியதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பிரிவானது ஒரு லோகல் போர்டுமீது செய்யப்படக்கூடிய தாவாக்களில் சிலவற்றைப்பற்றி மாத்திரம் கூறுகிறதேயொழிய எல்லா விதமான தாவாக்களைப்பற்றி கூறவில்லை. பொதுவாக, இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ள தாவாக்கள், ஒரு லோகல் போர்டானது ஏற்கெனவே செய்திருக்கும் யாதொரு செய்கையினால், ஒரு நபருக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டிருப்பின் அந்த நஷ்டத்தொகையை வரப்பெறுவதற்கு செய்யப்படக்கூடிய தாவாக்களாகும். லோகல் போர்டுகளும் அவைகளின் உத்தியோகஸ்தர்களும் பொது ஜனங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாலும் அவர்களால் நியமிக்கப்பட்டவர்களாலும் நிர்வாகம் செய்யப்பட்டு வருவதாலும் அவை பொதுஜன நன்மைக்கும் க்ஷேமத்திற்கும் ஏற்பட்டிருப்பதாலும் அவைகள் அல்லது அவர்கள் தங்கள் உத்தியோகமுறைமையில் செய்யும் காரியங்களைப்பற்றி தாவாக்களைக் கொண்டு வருவதற்கில்லை யென்றும், அப்படி ஏதாவது தாவா கொண்டுவரப்படுமானால் அதைப்பற்றின விவரமானது பூரணமாக சம்பந்தப்பட்ட லோகல் போர்டுக்குத் தெரிவிக்கவேண்டுமென்பது. சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், ஜட்ஜுகளும் தங்கள் உத்தியோகமுறைமையில் செய்யும் செய்கையால் அயலார்களுக்கு யாதொரு நஷ்டம் அல்லது கெடுதி ஏற்படும் பக்ஷத்தில் அதனால் அந்த உத்தியோகஸ்தர்களும் ஜட்ஜுகளும் யாதொரு கிரிமினல் குற்றத்திற்காவது அல்லது நஷ்ட ஈடு தாவாவுக்காவது ஆளாகக் கூடாதென்பது பொதுவான நியாயமாகும். அதே மாதிரியாக லோகல் போர்டுகள் தாமாகவாவது தங்கள் ஊழியர்கள் அல்லது உத்தியோகஸ்தர்களின் துவாராவாவது செய்யும் செய்கைகளுக்கு ஒருவிதமான பாதுகாப்பு இருக்க வேண்டும். அதற்காகவே இப்பிரிவானது அமைக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவின் சாராம்சம்.

சுருக்கமாக சொல்லுமிடத்து, இப்பிரிவில், பொதுவாக ஒரு லோகல் போர்டின் நிர்வாகத்தை நடத்துவதில், அதன் ப்ரெஸிடெண்டு, உத்தியோகஸ்தர், ஊழியர், முதலியவர்களுடைய செய்கையினால் ஏதாவது கெடுதி அல்லது நஷ்டம் நேரும் பக்ஷத்தில் அப்படி நஷ்டமடைந்த நபர், தமக்கு இம்மாதிரி நஷ்டம் ஏற்பட்டதென்றும் தமக்கு இவ்வளவு தொகை நஷ்ட ஈடு வேண்டுமென்றும் ஒரு நோட்டீஸ் தெரிவித்து இரண்டு மாதம் வரையிலும் அந்த நோட்டீஸுக்கு ஏதாவது பதில் வருகிறதா அல்லது அந்த நோட்டீஸை எவ்வளவு வரையில் லோகல் போர்டானது அல்லது அதன் உத்தியோகஸ்தர்

கள் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும். இரண்டு மாதம் வரையிலும் கார்த்துக்கொண்டிருந்தபிறகு தாவாவை தாக்கல்செய்யண்டும். அந்த நோட்டீலில், வாதியினுடைய அட்ரஸ் மிகவும் ஸ்பஷ்டமாக தெரிவிக்கப்படவேண்டும். அந்த நோட்டீலானது லோகல் போர்டினுடைய ஆபீலில் நேரில் கொடுக்கப்படவேண்டும். அந்த நோட்டீலானது, லோகல் போர்டு ப்ரெலிடென்டு உத்தியோகஸ்தர்-ஊழியர் இவர்கள் பேரில் நேராக யாதொரு டாமேஜ் தொகை கேட்டிருக்குமானால், அந்த ப்ரெலிடென்டு அல்லது உத்தியோகஸ்தர்-ஊழியர் இவர்களுடைய வீட்டிலும் நேராக கொடுக்கப்பட வேண்டும். இம்மாதிரி ஒரு நோட்டீஸ் கொடுக்கப்பட்டாலன்றி அந்த தாவா அடியோடே செல்லத்தக்கினதல்லவாகும்.

அப்படிப்பட்ட தாவாவுக்கு என்றையதினம் வியாஜ்ஜிய மூலம் தொடங்குகிறதோ அன்று முதல் 6-மாதத்திற்குள்ளேயே தாவா தொடரப்பட வேண்டும். அந்த காலத்தில் அதாவது நோட்டீஸ் கொடுத்த இரண்டு மாதத்திற்குப் பிறகு வியாஜ்ஜியமூலம் தொடங்கிய காலத்திலிருந்து 6-மாதத்திற்குள் தாவா செய்யப்படாவிட்டால் தாவா செல்லத்தக்கினதல்ல.

ஒரு லோகல் போர்டு அல்லது நோட்டீஸ் விடப்பட்ட நபர், வாதிக்கு ஏதாவது ஈடு காட்டும் பக்ஷத்தில் அதை வாதியானவர் அங்கீகரிக்கவேண்டும். அதை அங்கீகரியாமல் தாவா செய்து அந்த தாவாவில் அந்த ஈட்டுத்தொகையைவிட அதிகமான தொகையை பெறுத பக்ஷத்தில் அவருக்கு கோர்ட்டு சிலவு முதலிய சகல சிலவுகளும் கிடைக்காது. அப்படி அவர் கோர்ட்டில் தாவா தொடருவதினால் லோகல் போர்டுக்கு நேரும் சிலவு தொகைகளைச் செலுத்தவேண்டும். ஆனால், வாதியானவர் தாம் செய்யும் தாவாவில் தாம் எவ்வளவு தொகை கேட்கிறாரோ, அந்த தொகையாவது அல்லது லோகல் போர்டினால் ஆஜர்ப்படுத்தப்படும் தொகையையாவது இவைகளைவிட அதிகமான தொகையை டிக்ரி மூலமாகப்பெறும் பக்ஷத்தில் அவருக்கு கோர்ட்டு சிலவு முதலிய சிலவுகள் கிடைக்கலாம்.

யாதொரு லோகல் போர்டு அங்கத்தினர், ப்ரெலிடென்டு முதலியவர்கள் தங்கள் உத்தியோகமுறைமையில் செய்யவேண்டிய காரியத்தைச் செய்கையில், யாதொரு கெட்ட எண்ணமுமில்லாமல் (அதாவது மற்றொரு நபருக்கு கெடுதி அல்லது நஷ்டம் ஏற்படவேண்டுமென்று யாதொரு எண்ணமுமில்லாமல்) நிஷ்கபடமாக தம்முடைய உத்தியோக கடமையையே காரணமாகக் கொண்டு செய்யும் யாதொரு செய்கையினால், யாதொரு நஷ்டம் முதலியவை ஏற்பட்டாலும் அதற்காக யாதொரு தாவாவும்செய்வதற்கில்லை. அப்படி செய்யக்கூடிய யாதொரு தாவாவானது, அந்த லோகல் போர்டின் பேரிலேயே தொடரப்படவேண்டுமே யொழிய அந்தந்த நபர்களின்பேரில் தொடருவதற்கில்லை. அதாவது, கேட்கப்படும் பரிஹாரமானது லோகல்

போர்டுகளின் பேரிலேயேதான் கேட்கப்பட வேண்டுமேயொழிய தனிப் பட்ட நபர்களின் பேரில் கேட்பதற்கில்லை.

இப்பிரிவில் சொல்லப்பட்ட தாவாக்கள்.

இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ள தாவாக்கள் நஷ்ட ஈடு தாவாக்களே யொழிய வேறே தாவாக்களல்ல. அதாவது ஒரு லோகல் போர்டானது நிர்வாக முறைமையில் செய்யும் யாதொரு காரியத்தினால் இதரர்களுக்கு நஷ்டம்சேர்ந்தும் இவ்வளவு நஷ்டம்சேர்த்ததென்றுவது அல்லது தம்முடைய செய்கையானது நஷ்டம் விளைவிக்கக்கூடியதென்றுவது தெரிந்த சந்தர்ப் பங்களில், நஷ்டமடைந்தவர் கேட்கும் பரிஹாரத்தைப் பற்றினதாகும். இத்தகைய தாவாக்களுக்கு இங்கிலீஷில், Action in Torts என்றுசொல்வது வழக்கம். நஷ்டத்தொகையானது Damages (டாமேஜஸ்) என்றுசொல்வது வழக்கம். ஈடாகக் கேட்கப்படும் நஷ்டமானது, யாதொரு லோகல் போர்டு அல்லது அதன் உத்தியோகஸ்தர்கள் தங்கள் உத்தியோகமுறைமை யில் அல்லது நிர்வாக முறைமையில் செய்யும் காரியங்களினால் ஏற்கெனவே ஏற்பட்டிருக்க வேண்டும். அதாவது தாவா தொடரப்படும் காலத்திலேயே நஷ்டம் ஏற்பட்டிருக்கவேண்டும். இனி ஏற்படக்கூடியதாக இருக்கக்கூடாது.

தாவாக்களில் பலவிதங்களுண்டு. உதாரணமாக, பணம் வரப்பெறு வதற்கான தாவாக்கள், உரிமைகளைப் பெறுவதற்கான தாவாக்கள், நிலம் அல்லது யாதொரு ஸ்திர ஆஸ்தி இவைகளைப்பெறுவதற்கான தாவாக்கள், யாதொரு பாத்தியதையைப்பெற செய்யும் தாவாக்கள், ஸ்தாபிதம் பெற செய்யும் தாவாக்கள். இந்த தாவாக்களில் கேவலம் பணத்தை பெறுவது குச் செய்யும் தாவாக்களைப்பற்றி மாத்திரம் இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது. அவைகளிலும் யாதொருசெய்கையின் காரணமாகநஷ்டமாயிற்றெனகோரும் தாவாக்களைப்பற்றிதான் இப்பிரிவு கூறுவதாகும். ஆகையால் யாதொரு லோகல் போர்டினால் ஒரு நபருக்கு பணம் சேரவேண்டியிருப்பின் அதை வரப்பெறுவதற்காகச் செய்யும் ஒரு தாவாவும், யாதொரு நபருடைய சொத் தானது ஒரு லோகல் போர்டினுடைய சுவாதீனத்தில் இருப்பின் அதைப் பெறுவதற்காக செய்யப்படும் தாவாவும், யாதொரு லோகல் போர்டானது ஒரு நபருக்கு லைசென்ஸ் கொடுக்க மறுக்கும் பக்ஷத்தில் லைசென்ஸ் பெறும் பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளச் செய்யும் தாவாவும், ஒரு லோகல் போர்டாரானது அக்கிரமமாய் ஒரு செய்கையை தமது அதிகார வரம்பிற்கு மீறி செய்யும் பக்ஷத்தில் அதை தடுப்பதற்காக செய்யும் Injunction தாவா வும், எலெக்ஷன் சம்பந்தமாக செய்யப்படும் தாவாக்களும் இப்பிரிவின் கீழ்வராது. ஆகையால் அத்தகைய தாவாக்களுக்காக யாதொரு நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டிய அவசியமுமில்லை. இப்பிரிவில் சொல்லப்பட்டிரு க்கும் காலதோஷமும் அவைகளுக்கு பிரயோகப்படுத்தப்படமாட்டாது.

இனி எந்தெந்தவித தாவாக்களைக் குறித்து அவை இப்பிரிவின் கீழ் செய்யப்படும் தாவாக்களாக கவனிக்கப்படுவதற்கில்லை என்று கோர்ட்டுகள் தீர்மானித்திருக்கின்றனவென்பதைக் கவனிப்போம்.

இன்ஜங்ஷன் (தடை உத்தரவு) பெறுவதற்கு செய்யப்படும் தாவாக்களுக்கு இப்பிரிவின்கீழ்யாதொரு நோட்டீஸ்-ம் கொடுக்கப்படவேண்டிய அவசியமில்லை(a). இதன் காரணம் என்னவென்றால், இன்ஜங்ஷனுக்காக செய்யப்படும் தாவாக்களின் விஷயமானது இனி ஒரு லோகல் போர்டு செய்யப்போதும் காரியமாகுமே யொழிய ஏற்கெனவே அதனால் செய்யப்பட்டதல்ல வென்பது. ஒரு நபர் தன் சொந்த ஹத்துக்குள் வரப்பு முதலிய வைகளை எழுப்பிப் பக்கத்திலுள்ள பாதைகளிலிருந்து ஜலம் வரவொட்டாமல் தடுத்துவிடலாம். ஒரு லோகல் போர்டு அல்லது முனிஸிபாலிடியானது அதை அக்கிரமமாய் இடிக்கும்பக்ஷத்தில் அதைத்தடுப்பதற்கு அந்த லோகல் போர்டின் பேரில் ஒரு தடை உத்தரவு பெறுவதற்கு தாவா செய்யலாம்(b). ஒரு முனிஸிபாலிடி ஒரு கட்டிடத்தை அல்லது கட்டுக்கோப்பை இடித்து விடாமலிருக்கும்படி தாவா செய்வதற்கு நோட்டீஸ் வேண்டியதில்லை(c).

ஒரு ப்ரெஸிடென்டு ஒரு நபர்பேரில் அக்கிரமமாய் கெட்டஎண்ணத்துடன் தாவா தொடரும் பக்ஷத்தில், அந்த நபர்தாவாவிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பிறகு, ப்ரெஸிடென்டின் பேரில் அவர்கெட்ட எண்ணத்துடன் அதாவது குரோதத்துடன் தாவா செய்ததற்காக (Malicious prosecution) அவர் பேரிலேயே டாமேஜ் பெறுவதற்கு தாவா தொடரலாம். அந்த ப்ரெஸிடென்டேதான் தமக்கு லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் கொடுக்கப்பட்டிருக்கும்அதிகாரத்திற்கடங்கியேபுகார்சொல்லப்பட்டசெய்கையைச்செய்ததாகருசு செய்யவேண்டும்(d). இப்படிச் சொல்வதானது இப்பிரிவிற்கு சற்று பேதமாகவே உள்ளது. இப்பிரிவின் 4-வது உபப்பிரிவில் ஒவ்வொரு கேஸிலும், ஒரு லோகல் போர்டே பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டு அதன் பேரிலேயே பரிஹாரம் கேட்கப்படவேண்டுமென்று உள்ளது. ஆகையால் இத்தகைய சந்தர்ப்பங்களில் முதலில் நோட்டீஸ் கொடுத்து இரண்டு மாதம் வரையிலும் பொறுத்திருந்து பிறகு லோகல் போர்டின் பேரிலும் ப்ரெஸிடென்டின் பேரிலும் தாவா செய்வது நலம்.

(a) கோவிந்தப்பிள்ளை vs. கும்பகோணம் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு 32 Mad 361—19 M. L. J. 633.

சிவகங்கை தாலூக்கா போர்டு vs. நாராயணன் 16 Mad. 317.

(b) ரங்காச்சாரியார் vs கும்பகோணம் முனிஸிபாலிடி 27 Mad. 539

(c) பஞ்சந்து vs. அஹமதாபாத் முனிஸிபாலிடி. 22 Bom. 230

(d) அண்ணுழி vs. சுப்ரமணியன் 13 Mad. 442.
புச்சையா vs. இந்தியா செக்ரிடரி ஆப்ஸ்டேட் 28 Mad. 551.

ஒரு லோகல் போர்டின்மீது ஸ்தாவர சொத்துக்களைப்பற்றி ஒரு தாவா தொடரப்படுவதற்கு முன் அந்த லோகல் போர்டுக்கு இப்பிரிவின் கீழ் ஒரு நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும் என்று அவசியமில்லை(e).ஒரு லோகல் போர்டானது ஒரு கேஸில் ஒப்புக்காக பார்ட்டியாகசேர்க்கப்படுமானால் அதற்காக அந்த லோகல் போர்டுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டிய அவசியம் இல்லை(f)

ஒரு நபரிடமிருந்து சட்ட விரோதமாக வரி வசூலிக்கப்படுமானால் அந்த வரியை வரப்படுத்துவதற்கு செய்யும் ஒரு தாவாவுக்கு இப்பிரிவின்கீழ் யாதொரு நோட்டீசும் கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை(g).

ஒரு உரிமை அல்லது பாத்தியதையை ஸ்தாபித்துக் கொள்வதற்காக செய்யப்படும் தாவாக்களுக்காக முன்னுடியாக நோட்டீஸ் கொடுக்கவேண்டிய அவசியமில்லை(h).

ஒரு லோகல் போர்டின் செய்கையானது அதன் அதிகாரவரம்பு கடந்ததானது என்று ஒரு ஸ்தாபிதம் பெறுவதற்கு செய்யும் தாவாவுக்கு முன்னுடியாக நோட்டீஸ் கொடுக்கவேண்டிய அவசியமில்லை(i).

இப்பிரிவின் இரண்டாவது உபப்பிரிவில் அசையாப் பொருளைப்பற்றின தாவாக்களும் அவைகளைக் குறித்து ஸ்தாபிதம் பெறுவதற்காக செய்யப்படும் தாவாக்களும் ஸ்பஷ்டமாக விலக்கப்பட்டுள்ளது. லிமிடேஷன் சட்டத்தின் கீழ் சாதாரணமாக அத்தகையதாவாக்களுக்கு 12 வருஷதவணையுண்டு.ஆகையால் இப்பிரிவின்கீழ் வியாஜ்ஜியமூலம் தொடங்கின 6 மாதத்திற்குள் தாவா செய்யப்படவேண்டுமென்பது அசையாப்பொருள்களைப் பற்றினதல்ல.

லோகல் போர்டுகளின் உத்தியோகஸ்தர்களும் அங்கத்தினர்களும் அடிக்கடி மாறுவதற்கு ஹேது இருப்பதால் ஒரு லோகல் போர்டின்மீது செய்யப்படும் தாவா வியாஜ்ஜிய மூலம் தொடங்கின 6 மாதத்திற்குள் செய்யப்படவேண்டுமென்றுள்ளது.

(e) கொச்சி முனிஸிபல் கௌன்சில் vs. பாபு தேவுஸ்ஸி 22 M. L. W. 671=A. I. R. 1926 Mad. 235.

(f) ராமராவ் vs. மார்த்தா செக்வாரி 42 Mad. 796=37 M. L. J. 224.

(g) அம்பிகசரண் மஜும்தார் vs. சதீஷ்சந்திரசேன் 2 C. W. N. 689.

(h) திருப்பதி மகந்து vs. ரிலீஜஸ் எண்டௌமெண்ட்ஸ் போர்டு A. I. R. 1929 Mad. 927.

(i) கர்னூல் முனிஸிபல் கௌன்சில் vs. சுப்பண்ண செட்டி 13 M. L. J. 426.

நல்லஎண்ணம்.

லோகல் போர்டுகளும் அதன் உத்தியோஸ்தர்களும் தங்களுடைய இஷ்டப்பிரகாரம் தமது அதிகாரத்தைச் செலுத்துவதற்கில்லை. அவர்கள் பொது ஜனங்களுடையடிரஸ்டிகளாதலால்பொதுஜனக்ஷேமத்தைத்குறித்தே நடந்து கொள்ளவேண்டும். தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்துவதில் பொதுஜனங்களுக்கு யாதொரு கெடுதியும் இராமல் நடந்து கொள்ளவேண்டும். அவர்கள் ஜாக்கிரதையாகவும் நிதானமாகவும் தங்கள் காரியங்களைச் செய்து வரவேண்டும். அவர்களுடைய அஜாக்கிரதையினல் எவருக்காவது ஏதாவது கெடுதி நேரிட்டிருக்கும் பக்ஷத்தில் அதற்காக அந்த நபருக்கு தாவா செய்ய உரிமையுண்டு. உதாரணமாக ஒரு லோகல் போர்டானது, ஒரு பாதையை ரிப்பேர்செய்வதில் அல்லது சாக்கடைமுதலிவைகளை கட்டுவதில் யாதொரு அஜாக்கிரதையினல் யாதொரு நபர் அதில் விழுந்து தீரேக துன்பம் முதலிய நஷ்டங்களை அடையும்பக்ஷத்தில் அதற்காக அவர் தாவா செய்யலாம். ஆனல் அந்த தாவா லோகல் போர்டின் பேரிலேயே தொடரப்பட வேண்டும்.

இந்த பிரிவில், எக்காரணத்தைக் கொண்டும் ஒரு லோகல் போர்டின் மீது தாவா தொடரப்படுவதற்கில்லை என்று சொல்லப்படவில்லை. ஒரு ப்ரெவிடென்டு அல்லது யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் இவர்கள் செய்திருக்கும் யாதொரு காரியத்தினல் நஷ்டமடைந்தவர் ஏதாவது தாவா தொடருவதாயிருந்தால் லோகல் போர்டின்மீதுதான் அந்த தாவா தொடரப்படவேண்டுமேயொழிய அந்த நபரின் பேரில் தாவா செய்யக்கூடாதென்று சொல்லப்பட்டுள்ளது. காரணம் என்னவென்றால், ஒரு லோகல் போர்டின் உத்தியோகஸ்தர் இம்மாதிரி அடிக்கடி தாவா தொடரப்படுவாராஞல் அவருக்கு யாதொரு பத்திரமும் தைரியமும் இருக்காது என்பது. தங்கள் ஊழியர்கள் உத்தியோகஸ்தர்கள் இவர்கள் செய்திருக்கும் செய்கைகளுக்கு லோகல் போர்டுகள் உட்படவேண்டுமென்பது இப்பிரிவின் தாத்பரியம்.

ஒரு நபர் தாம் ஒரு லோகல் போர்டின் உத்தியோஸ்தர் என்னும் ஹோதாவில் தம்முடைய இஷ்டப்பிரகாரம் எந்தக் காரியத்தையும் செய்வதற்கில்லை. தாம் செய்யும் காரியத்திற்காக இப்பிரிவின் கீழ் காப்பாற்றப்படவேண்டுமாஞல் அவர் தம்முடைய உத்தியோக முறைமையில் எவ்வளவு வரையிலும் யாதொரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்வதற்கு வரையறுப்பு உண்டோ, அவ்வளவோடு நிற்கவேண்டும்(j).

(j) ராஜாராவ் vs. ராமசாமி 50. M. 754—52 M. L. J. 649.

தாவாக்களின் அமைப்பும் விவரமும்.

இப்பிரிவின் கீழ்செய்யப்படும் தாவாக்கள் முதலில் நோட்டீஸ் கொடுக்கப் பட்டபிறகு இரண்டு மாதம் கழிந்த பின்னர்தான் தொடங்கப்படவேண்டும். நோட்டீஸில்,நோட்டில் கொடுக்கும் நபர், தாம் நஷ்டமடைந்தவிதமும் எப் பொழுது வியாஜ்ஜிய மூலம் தொடங்கினது என்றும் தமக்கு என்னென்ன காரணத்தைக் கொண்டு எவ்வளவு ஈட்டு தொகைவேண்டும் என்றும் இவை களை மிகவும்விஸ்தரமாகதெரிவிக்கவேண்டும்.அந்த நோட்டிஸானது லோகல் போர்டின் ஆபீஸில் கொடுக்கப்படவேண்டும். இப்பிரிவில் "அப்படிப்பட்ட நோட்டில் கொடுக்கப்பட்டதாக ருஜு செய்யப்பட்டாலொழிய" என்றிருப்ப தால் நோட்டில் விவரமாக இராவிட்டால் தாவா விசாரணை செய்யப்படா மலே தள்ளிவிடப்படுவதற்கு ஹேதுக்கள் ஏற்படலாம்.

நோட்டில் கொடுக்கப்பட்ட பிறகு, தாவா தொடங்குவதற்கு முன், சம் பந்தப்பட்ட லோகல் போர்டானது தகுந்தவாறு நஷ்ட ஈட்டு தொகையை கொடுக்க ஒப்புக்கொண்டால் அதை அங்கீகரியாமலும் அந்த தொகைக்கு அதிகமாக கோர்ட்டில் யாதொரு தொகையையும் டிக்ரி மூலமாக பெறும லும் இருக்கும் பக்ஷத்தில் அந்த நபருக்கு கோர்ட்டு செலவு கிடைப்பதற்கில்லை. இப்பிரிவின் (2)-வது உபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் "நடவடிக்கை தொடங்குவது" என்பதற்கு என்றையதினம் கோர்ட்டில் பிராது தாக்கல் செய்யப்படுகிறதோ அன்று முதற்கொண்டு என்று அர்த்தமாகும்.

இப்பிரிவின் கீழ் செய்யப்படும் தாவாக்களில் கவர்ன்மெண்டார் பார் ட்டியாகச் சேர்க்கப்படுவதற்கில்லை. ஏனென்றால், நஷ்ட ஈட்டுத்தொகைக் காக கோரப்படும் பரிஹாரமானது லோகல் போர்டை மாத்திரம் சேர்ந்ததே யொழிய லோகல் கவர்ன்மெண்டுக்கு யாதொரு சம்பந்தமும்கிடையாது.அப் படி கவர்ன்மெண்டாரை அக்கிரமமாகச் சேர்க்கும் பக்ஷத்தில் அதற்காக கோர்ட்டு செலவைக்கட்டிக் கொடுக்க நேரிடும். ஆனால் பொதுவாக, ரோட்டு கள் முதலிய பொது சொத்துக்களைக் குறித்து அவைகளின் உரிமை விஷய மாக யாதொரு தாவா செய்யப்படுமானால் அதில் கவர்ன்மெண்டாரையும் பார்ட்டியாக சேர்ப்பது நலம் என்று கவர்ன்மெண்டார் 28—7—1920-ல் G. O. No. 1789 Revenue என்னும் ஆர்டரில் உத்தரவிட்டிருக்கின்றனர்.

ஒரு லோகல் போர்டானது ஒரு காரியத்தைச் செய்யவேண்டியிருந்து அந்த காரியத்தை செய்யாமலிருந்ததினாலேயே அந்த லோகல் போர்டின் மீது டாமேஜ் நஷ்ட ஈடு தொகை பெறுவதற்காக தாவா செய்வதற்கில்லை யென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (k). ஆனால் ஒரு காரியத்தை நியாய மாக கிரம நீதியில் செய்யவேண்டியிருந்து அதை சரிவர செய்யாமற்போனா

(k) கிருஷ்ணமூர்த்தி vs. அய்யர் மாயவரம் தாலூக்கா போர்டு 42 Mad. 33—36 M. L. J. 372.

லும் அல்லது தன்னுடைய அதிகார வரம்பிற்கு மீறி அக்காரியத்தைச் செய்தாலும் அதனால் நஷ்டமடைந்த நபர் தாவா செய்யலாம்.

"வியாஜ்ஜிய மூலம்" என்பது வியாஜ்ஜியத்திற்கு ஆதாரமான காரணமாகும். அதாவது யாதொரு செய்கையினால் நஷ்டம் ஏற்படுமானால் என்றைபதினம் நஷ்டம் ஏற்படுகிறதோ அல்லது நஷ்டம் ஏற்பட்டதாக முடிவாகத் தெரிகிறதோ அன்றையதினம் முதல் வியாஜ்ஜிய மூலம் ஆரம்பமாகும்.

ஒரு நபரிடமிருந்து அக்கிரமமாயும் கெட்ட எண்ணத்துடனும் முனிசிபாலிட்டியார் தொழில்வரி (profession tax) வசூல் செய்தால் தாம் மறுத்தும் பிறகு கொடுத்தவரியை வரப்படுத்த அவர் சிவில்கோர்ட்டில் தாவா செய்யலாம். சிவில் கோர்ட்டாரும் சரியான ருசு ஏற்பட்டால், அவ்வித தாவாவை அங்கீகரிக்கலாம் (l).

ஒரு வரி,சட்ட விரோதமாக வசூல் செய்யப்பட்டது என்னும் காரணத்தைக்கொண்டு வரித்தொகையை வரப்படுத்த செய்யும் தாவாவானது லைசன்சிலாக பெற்றுக் கொண்ட தொகையை வரப்படுத்த செய்யும் தாவாவிற்கு எவ்வளவு காலக்கிரணமுண்டோ அவ்வளவு காலத்திற்குள்செய்யப்படலாம். ஆகையால் பணம் செலுத்தின 6-மாதங்களுக்கு மேலாக ஒரு தினத்தில் தாவா செய்தாலும் அதற்குள்ள மூன்று வருஷங்களுக்குள் தாவா செய்யப்பட்டால் அதற்கு லிமிட்டேஷன் தோஷம் கிடையாது. அவ்வித தாவாவிற்கு வியாஜ்ஜியமூலம் எம்மாதிரியாக ஏற்படுமென்றால், பணம் கொடுத்தவருக்கும் - பெற்றுக்கொண்டவருக்குமுள்ள வியவஹார நியாயமென்னவோ அதேமாதிரியாகத்தான் ஏற்படும். இன்னும் அந்த வியாஜ்ஜியத்தை பார்ட்டிகளுக்குள் ஒரு காண்ட்ராக்ட்டு ஏற்பட்டு அதற்கு விரோதமாக ஒருவர்க்கொருவர் நடந்து கொண்டதாகவாவது அல்லது ஒருவரை மற்றொருவர் நஷ்டப்படுத்திபதாகவாவது பாவிக்கப்படக் கூடாது (m).

ஒரு வாதி, ஒரு சர்வே உத்தியோகஸ்தர் பொது ரஸ்தாக்களை அளந்து கணக்கிட்டுக் கொண்டிருந்ததில், அவர் பொது ரஸ்தாவைச் சேர்ந்ததென்று அளவிட்டிருந்த ஒரு நிலத் துண்டானது தம்மைச் சேர்ந்ததென்று, அந்த பொது ரஸ்தாவிற்கு பாத்தியப்பட்டுள்ள லோகல்போர்டானது, தாம் அந்த நிலத்தை அனுபவிப்பதில் எவ்வித தடங்கலும் செய்ய வொட்டாமலிருக்க ஒரு தடை உத்திரவுபெறுவதற்கு செய்திருக்கும் ஒரு தாவாவானது "சர்வே அண்டு பௌண்டரீஸ் ஆக்டென்னும்" சட்டத்தின் 13-வது பிரிவின்கீழ் சர்வே உத்தியோகஸ்தர் செய்திருக்கும் உத்திரவை ரீகி வைப்பதற்காக செய்யப்படும் ஒரு தாவாவென்று பாவிக்கப்படுமாகையால், அம்மாதிரியான

(l) (1929) 1 அகில இந்தியா லாஜர்னல் கேசுகளின் குறிப்புகள் பக்கம் 94.
(m) 1929) 1 அகில இந்தியா லாஜர்னல் கேசுகளின் குறிப்புகள் பக்கம் 60.

ஒரு தாவாவிற்கு லோகல்போர்ட்ஸ் ஆக்டின் 225-வது பிரிவின்கீழ் யாதொரு நோட்டீசும் கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை (a).

குற்றங்களின் விஷயமாய் ராஜிசெய்துக் கொள்வது.

226. இந்த ஆக்டின்படிக்கான யாதொரு குற்றத்தின் விஷயமாய் ராஜிசெய்துக் கொள்ளலாமென்று பிரதேச கவர்ன்மென்டாரால் செய்யப்பட்ட விதிகளினுல் நிர்ணயிக்கப்படக் கூடுமானுல், அப்படிப்பட்ட குற்றத்தின் விஷயமாய் லோகல் போர்டு ப்ரெஸிடெண்டு ராஜிசெய்துக் கொள்ளலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, லோகல் போர்டுகளினுல் மாஜில்ட்ரேட் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்படும் தாவாக்கள் ராஜிசெய்யப்படுவதைக்குறித்து கூறுவதாகும். லோகல்கவர்ன்மெண்டானது சிலகுற்றங்களைக்குறித்து லோகல்போர்டுகள் எதிரிகளோடு ராஜிசெய்து கொள்ளலாமென்று விதிகளினுல் ஏற்படுத்தலாம். அத்தகைய கேசுகளை மாத்திரம் லோகல் போர்டுகள் ராஜிசெய்துக் கொள்ளலாமேயொழிய மற்ற கேசுகளை ராஜிசெய்துக் கொள்வதற்கில்லை. "ராஜி" என்பது ஒரு மாஜில்ட்ரேட் கோர்ட்டில் ஒரு எதிரியானவர், யாதொரு குற்றம் சாட்டப்பட்டிருப்பின், அந்தக் குற்றத்தைப் பற்றி மாஜில்ட்ரேட் விசாரணை செய்யாமலே பிராதியான லோகல் போர்டும், எதிரியும் சமாதானமாகப்போவது. சாதாரணமாக, கிரிமினல் கோர்ட்டுகளில் தாவாக்களை தாக்கல் செய்வது லோகல் போர்டுகளின் ப்ரெஸிடெண்டுகளாதலால் அவர்கள் லோகல் போர்டுக்கு அனுகூலமாகவே ராஜிசெய்து கொள்ளவேண்டும். இதன் விஷயமாக லோகல் போர்டு ப்ரெஸிடெண்டுகள் லோகல் போர்டின் மீட்டிங்கில் ஆலோசனைக்கு வைத்துப் பிறகு ராஜி முதலியவைகளைச் செய்துகொள்வது நலம். ஒரு தரம் ராஜிசெய்துக்கொண்டு எதிரியானவர் அதன் காரணமாக விடுதலையான பிறகு, ராஜிநாமா பகூபாதமானது என்னும் காரணத்தைக் கொண்டு எதிரிபேரில் மறுபடியும் அதே விஷயத்தைக் குறித்து தாவா தொடருவதற்கில்லை. அல்லது ராஜிநாமா மோசவிதமாக ஏற்பட்டதென்று சொல்லி ராஜிநாமாவை ரீகிவைப்பதற்கில்லை. (b). கிரிமினல் புரோஸீஜர் கோட் 403-வது பிரிவையும் பார்க்க.

(a) (1930) II அகில இந்தியா லாஜர்னல், கேசுகளின் குறிப்புகள் பக்கம் 15.
(b) II (1930) அகில இந்தியா லா ஜர்னல் கேசுகளின் குறிப்புகள் பக்கம் 68.

227. (1) லோகல் போர்டாருக்குச் சொந்தமான அல்லது அவர்களிடத்தில் சங்கரமித்திருக்கும் ஏதேனும் பணமாவது வேறே சொத்தாவது இழந்து விடப்பட்டாலும் பாழ்பண்ணப்பட்டாலும் தூர் வினியோகம் செய்யப்பட்டாலும், அது ஒரு லோகல் போர்டு அங்கத்தினருடைய அஜாக்கிரதையினலாவது தூர் நடத்தையினலாவது நேராய்ச்சம்பவித்ததாயிருக்கிற பட்சத்தில், அப்படிப்பட்ட ஒவ்வொரு லோகல்போர்டு அங்கத்தினரும் அதற்கு உத்தரவாதியாவார்; அதற்கு ஈடு பண்ணும் பொருட்டு லோகல் கவர்ன்மென்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்று லோகல் போர்டாராவது ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரியவர்களாவது தகுந்த அதிகாரமுள்ள யாதொரு கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவரலாம்.

அங்கத்தினர்கள் சொத்தை இழந்துவிட்டாலும் பாழ் பண்ணினலும் தூர்வினியோகம் செய்தாலும் அவர்கள் உத்தரவாதிகளாவது.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு வியாஜ்ஜியத்தையும் வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்ட தேதிக்குப் பிறகு மூன்று வருஷத்துக்குள் தொடங்கவேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, லோகல் போர்டு மெம்பர்களின் அஜாக்கிரதையினல் அல்லது தவருன நடத்தையினல் லோகல் போர்டுக்கு நேரும் நஷ்டங்களுக்காக டாமேஜாக தொகை வரப்படுத்துவதற்கு, லோகல் போர்டுகளுக்கும்-லோகல் கவர்ன்மெண்டுக்கும் அதிகாரத்தைத் தருவதாகும். லோகல் போர்டு மெம்பர்கள் தங்களுடைய கடமைகள் இன்னதென்றும் - அதிகார வரம்பு இன்னதென்றும் கட்டாயமாக அறிய வேண்டும். அவர்கள் தங்களால் லோகல் போர்டுகளுக்கு யாதொரு நஷ்டமும் வரவொட்டாமல் காப்பாற்ற வேண்டும். லோகல் போர்டு மெம்பர்கள் தங்களுடைய உத்தியோக பதவியின் ஹோதாவிலோ அல்லது அந்த போர்டின் ஒரு கமிட்டி அங்கத்தினரின் ஹோதாவிலோ செய்யும் காரியங்களைப் பற்றி இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது.

இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் தாவாவானது, சிவில் தாவாக்கள், இத்தகைய தாவாக்கள் சிவில் கோர்ட்டுகளில் முக்கியமாக முன்சீப் கோர்ட்டுகளில் செய்யப்படத்தக்கவை.

லோகல் போர்டு அங்கத்தினர்களின் பேரில் அவர்களால் நேர்ந்திருக்கும் நஷ்டத்திற்காக தாவா செய்வதற்கு இரண்டு விதமான நபர்களுக்கு உரிமை

உண்டு. அதாவது சம்பந்தப்பட்ட லோகல் போர்டு, இந்தியா செக்ரிடரி ஆப் ஸ்டேட் ஆகிய இரண்டு பேர்கள் தாவர் தொடரலாம்; லோகல் போர்டானது தாவா செய்வதானால் அதற்கு லோகல் கவர்ன்மெண்டாருடைய முன் உத்தரவு வேண்டும். ஆனால் செக்ரிடரி ஆப்ஸ்டேட் தாவா செய்வதானால் அதற்கு லோகல் கவர்ன்மெண்டாருடைய முன் உத்தரவு வேண்டியதில்லை. ஏனென்றால் செக்ரிடரி ஆப்ஸ்டேட் அவர்களே லோகல் கவர்ன்மெண்டின் பிரதிநிதியாக கருதப்படுவார்.

லோகல் போர்டுகளின் கணக்குகள் ஒவ்வொரு வருஷமும் தணிக்கை செய்யப்படுவதுண்டு. அதற்கு ஆடிட் என்று பெயர். ஆடிட் செய்வது லோகல் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட ஒரு நபர் தணிக்கை செய்வதாகும். (120-வது பிரிவைப்பார்க்க). ஆடிட் செய்யப்படும் காலத்தில், தணிக்கை செய்பவர், வரவு சிலவு கணக்குகள் சரியாக எழுதப்பட்டுள்ளதாவென்றும், செலவுகள் சரியாக அதாவது சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் அதிகார வரம்பிற்குள் அடங்கி செலவிடப்பட்டதாவென்றும் கவனிப்பார். யாதொரு தொகையானது லோகல் போர்ட்ஸ் சட்டத்தின் கீழ் லோகல் போர்டின் அபிவிருத்திக்காக செலவிடப்படவில்லை என்று தணிக்கை செய்பவருக்குத் தோன்றும் பக்ஷத்தில், அந்த தொகையின் சிலவை அங்கீகரிக்க மறுத்துவிடலாம். இது தான் ஆடிட் அப்ஜக்ஷன் எனப்படும். யாதொரு தொகையானது, ஒரு லோகல் போர்டின் அதிகாரவரம்பிற்கு மீறி செய்யப்படுமானால் அந்த தொகை அதை செலவிடுவதற்கு சம்மதித்தவர்களால் கொடுக்கப்பட வேண்டுமென்று தணிக்கை செய்பவர் உத்தரவு செய்யலாம். இதுவே லோகல் கவர்ன்மெண்டாரால் ஒப்புக்கொள்ளப்படலாம். இதுதான் சர்சார்ஜ் என்பது. சர் சார்ஜ் செய்யப்பட்ட தொகையை வசூலிப்பதற்கு மெம்பர்களின் பேரில் தாவா செய்யப்படவேண்டும்.

இப்பிரிவின்கீழ் செய்யப்படும் தாவாக்கள் வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்ட மூன்று வருஷங்களுக்குள் தொடங்கப்படவேண்டும்.

ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு அல்லது அங்கத்தினரை ப்ராஸிகியூஷன் செய்வதற்காக உத்தரவு.

227-A. ஒரு லோகல் போர்டினுடைய ப்ரெஸிடென்டு அல்லது யாதொரு அங்கத்தினர், தன்னுடைய உத்தியோக அலுவலில் நிறைவேற்றிக்கொண்டிருக்கையில் அல்லது நிறைவேற்றுவதாக எண்ணங் கொண்டிருக்கையில் அவரால் செய்யப்பட்டதென்று யாதொரு குற்றவிஷயமாக குற்றம் சாட்டப்பட்டாராஞல் யாதொரு கோர்ட்டும் லோகல் கவர்ன்மென்டினுடைய முன் உத்தரவு (Sanction) இல்லாமல் அப்படிப்பட்ட குற்றத்தைப்பற்றி பிடித்து எடுத்து விசாரிக்கக்கூடாது.

குறிப்புகள்.

இப்பிரிவானது 1930-ம் வருஷத்திய லோகல்போர்டு திருத்தச்சட்டத்தினுல் புதியதாக ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவானது ஏற்படுத்தப் படுமுன் லோகல்போர்டு அங்கத்தினர்களுக்கு யாதொரு பத்திரம் அல்லது பாதுகாப்பு இராமலிருந்தது. இப்பொழுது லோகல்போர்டு அங்கத்தினர் யாவரும் தங்கள் உத்தியோக முறைமையில் செய்யும் காரியங்களுக்காக வீணாக கிரிமினல் கோர்ட்டுகளில் இழுக்கப்படாமல் இருக்க வேண்டுமென்று இப்பிரிவினுல் ஏற்படுத்தப் பட்டது.

இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ள குற்றமானது கிரிமினல்தண்டனைக்கு உட்படும்படியான குற்றமாகும். யாதொரு லோகல்போர்டு அங்கத்தினர் தம் உத்தியோக அலுவலின் விஷயமாக அதை நடத்துவதில் ஏதாவது குற்றம் செய்ததாக அவர்பேரில் தாவா தொடரப்படுவதற்கு முன் அதற்காக லோகல் கவர்ன்மெண்டினுடைய முன் உத்தரவு வேண்டும். லோகல் கவர்ன்மெண்டார் (அதாவது சென்னை நிர்வாக சபை) உத்தரவு கொடுக்கா விட்டால் அடியோடே தாவா செய்வதற்கில்லை. லோகல் கவர்ன்மெண்டார் கேட்கப்பட்ட உத்தரவை கொடுப்பதற்கு முன் அதனுல் உண்டாகும் சாதக பாதகங்களைக் கவனித்துத்தான் செய்வார்கள்.

இப்பிரிவும், கிரிமினல் புரோஸீஜர் கோட் 195, 197, 476-இத்தப்பிரிவுகளும் ஒரே மாதிரியான தாத்பரியம் உள்ளவை. பொதுவாக, பொதுஜன நன்மைக்காக பாடுபடும் நபர்கள் பிரைவேட் நபர்களால் அடிக்கடி தொந்தரவுக்கு உட்படாமலிருந்து நிர்ப்பயமாய் தங்கள் உத்தியோகத்தை நடத்தவேண்டுமென்பது. ஆனுல், உத்தியோக முறைமையென்று வியாஜம் கொண்டு தன்னிஷ்டப்பிரகாரம் செய்வது நியாயமன்று. ஒரு நபர் வேண்டுமென்று வரம்புகடந்து செய்யும்பக்ஷத்தில் அவர் தண்டனைக்குள்ளாகும்படி நேரிடும்.

228. (1) இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியமாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், (a) யாதொரு நபருடைய பெயர் வாசஸ்தலம் வியாபாரஸ்தலம் அல்லது தொழில் விஷயமாகவாவது, (b) யாதொரு சொத்து அல்லது வஸ்துவின் விவர விஷயமாகவாவது (c) போடப்பட்டோ அல்லது கேட்கப்பட்டோ அல்லது விற்கப்பட்டோ இருக்கிற தொகை விஷயமாகவாவது நேரிட்ட யாதொரு எழுத்துப்பிழை காரணமாகவாகிலும் யாதொரு பிசகு காரணமாகவாகிலும், இந்த ஆக்டினுல் ஏற்படும் அதிகாரத்தைக்கொண்டுபோடப்

விளிவிதிப்பு முதலானவைகளைக் குறித்து தோஷம் சொல்லக் கூடாது.

பட்ட வரியைக் குறித்தோ அல்லது செய்யப்பட்ட டிமாண்டைக் குறித்தோ விதிக்கப்பட்ட கட்டணத்தைக் குறித்தோ தோஷம் சொல்லவும் கூடாது, அப்படிப்பட்டதற்கு பாதக முண்டாக்கமாட்டாது. மேலும், இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட எந்த நடவடிக்கைகளும் முறைமை விஷயத்தில் யாதொரு குறைவு இருந்த காரணத்தினாலேயே நீதி செலுத்தும் யாதொரு கோர்ட்டாரால் ரத்து செய்யப்படவுமாட்டாது, கள்ளிவிடப்படவுமாட்டாது.

(2) இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில், இந்த ஆக்டினால் ஏற்படும் அதிகாரத்தைக்கொண்டு வசூல் செய்யப்படும் யாதொரு தொகையை வரப்பற்றுவதற்காகவாகிலும், மேற்படி அதிகாரத்தைக் கொண்டு செய்யப்பட்டயாதொரு வரிவிதிப்பு அல்லது தொகை வசூலின் காரணமாக நேரிடும் நஷ்டத்திற்காகப் பிரதிபலன் வரப்பற்றுவதற்காகவாகிலும் யாதொரு கோர்ட்டிலே வியாஜ்ஜியம் எதுவும் நடத்தக்கூடாது.

(3) இந்த ஆக்டிலும் விதிகளிலும் சகாய சட்டங்களிலும் உள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருந்தால், பில்லிலாவது, நோட்டீஸிலாவது, நோட்டீஸிலாவது நமூனாவிலாவது, ஸம்மனிலாவது, டிமாண்ட் நோட்டீஸிலாவது, ஜப்தி வாரண்டிலாவது, சாமான் ஜாதிகாவிலாவது இதற்குச் சம்பந்தப்பட்ட வேறே நடவடிக்கையிலாவது யாதொரு பிழையாகிலும் ஒழுங்குக் குறைவு அல்லது கிரமப் பிசகாகிலும் இருப்பது காரணமாக, இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட ஜப்தியாவது - விற்பனையாவது சட்ட விரோதமாயிருப்பதாக எண்ணப்படவுமாட்டாது. ஜப்தி அல்லது விற்பனை செய்கிற யாதொரு நபர் அதிக்கிரமமாய் நடந்தவராக எண்ணப்படவுமாட்டார். ஆனால், யாதொரு ஒழுங்கீனத்தினாலே அநியாயமடைந்த பிரதி நபரும் தாம் அடைந்திருக்கிற குறித்த யாதொரு சேதத்திற்காகப் பரிகாரம் பெறலாம்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவும் 225-வது பிரிவும் லோகல் போர்டுகளின்மீது செய்யப்படக்கூடிய தாவாக்களைப்பற்றி கூறுகின்றன. 225-வது பிரிவில் லோகல் போர்டுகளினுடைய உத்தியோகஸ்தர் முதலியவர்களின் செய்கையில் நேர்ந்

திருக்கும் நஷ்டத்தை வரப்படுத்துவதற்கான தாவாக்களைப்பற்றி சொல்லப் பட்டுள்ளது. இப்பிரிவில், லோக்கல்போர்டுகள் விதித்திருக்கும் வரிகளை இப் பிரிவில் தண்ட காரணங்களைக் கொண்டு எதிர்ப்பதற்கில்லை அல்லது ஆக்ஷேபிப்பதற்கில்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

லோகல் போர்டுகளினால் இடப்படும் வரிகள்,

(1) யாதொரு நபருடையபெயர், அல்லது வாஸஸ்தலம் அல்லது வியாபாரஸ்தலம் அல்லது தொழில், இவைகளின் விஷயமாகவாவது அல்லது,

(2) யாதொரு சொத்து அல்லது வஸ்துவின் விஷயமாகவாவது,

(3) யாதொரு நபருக்கு போடப்பட்ட அல்லது கேட்கப்பட்ட தொகை விஷயமாகவாவது,

நோட்டிருக்கும் யாதொரு எழுத்துப்பிழை அல்லது பிசகின் காரண மாக செலுத்தப்படுவதற்கில்லை யென்று ஆக்ஷேபனை செய்யப்படக் கூடாது.

யாதொரு வரி வசூலிக்கப்பட்டிருப்பின் அவைகளை வரப்படுத்துவத தற்காக தாவா செய்யவும் கூடாது.

இந்த சட்டத்தின்கீழ் ஒரு லோகல்போர்டுக்குச் சேரவேண்டிய தொகை களை வரப்படுத்துவதற்காக அவைகளை செலுத்தத் தவறும் நபருடைய அசை யும் பொருள்களை ஜப்தி செய்யலாம். அதன் விவரம் : 221-வது பிரிவிலும், IV-வெஷட்யூலிலும் சொல்லப்பட்டுள்ளது.

அப்படி ஜப்தி செய்வதில் அல்லது ஜப்திசெய்யப்பட்ட சொத்தை ஏலம் போடுவதில்,

(1) யாதொரு பட்டி (bill) யிலாவது அல்லது, (2) நோட்டீவி லாவது அல்லது, (3) வெஷட்யூலிலாவது அல்லது, (4) நமூனாவிலாவது அல்லது, (5) சம்மனிலாவது அல்லது, (6) டிமாண்டு நோட்டீசிலாவது அல்லது, (7) ஜப்தி வாரண்டிலாவது அல்லது, (8) சாமான் ஜாபிதா விலாவது,

யாதொரு பிழை, ஒழுங்குக் குறைவு, கிரமப் பிசகு

இவை, இருந்ததினாலேயே ஜப்தி அல்லது ஏல விற்பனையானது செல்லமாட்டாதென்று சொல்லக் கூடாது. அதனாலேயே அப்படி ஜப்தி முதலியவைகளைச் செய்தவர் கிரமத்திற்கு அதிகமாக நடந்ததாக கவனிக்கப் பட மாட்டார்.

ஆனால், யாதொரு ஒழுங்கீனத்தினால் அநியாயம் அடைந்த ஒரு நபர் அதனால் பிரத்தியேகமாக யாதொரு சேதம் அல்லது நஷ்டம் அடைந் திருப்பின் அதை வரப்பெற தாவா செய்யலாம்.

இதுதான் இப்பிரிவின் சாராம்சம், இப்பிரிவு ஏற்படுவதற்குள்ள காரணங்களை நாம் சுலபத்தில் அறியலாம். லோகல்போர்டுகள் பொது

ஜனங்களால் அமைக்கப்படக்கூடிய கூட்டங்களாகும். அவைகளுக்கு அநேக விக உத்தியோகஸ்தர்களும்-ஊழியர்களும் இருப்பார்கள். அவர்கள் தங்கள் உத்தியோக முறைமையில் ஏதாவது கைபிசகு செய்யக்கூடும். ஆதலுலேயே அவர்களுடைய நடவடிக்கைகள் செல்லத்தகாதென்று கவனிக்கப்படுமாயின் அல்லது கோர்ட்டுகள் அல்லது தீர்மானிக்கும்பக்ஷத்தில் இதனால் பெருங் கெடுதி நேரிடக்கூடும். லோகல் போர்டுகள் தங்கள் நிர்வாகத்தை நடத்த முடியாது. இத்தக்காரணங்களை உத்தேசித்தே இப்பிரிவின் அம்சங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இப்பிரிவின் மூன்று உபப் பிரிவுகளிலும் ஒரு முக்கியமான வாக்கியம் உள்ளது. அதை நாம் நன்றாக கவனிக்க வேண்டும். அவ்வாக்கியம், "இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில்" என்பது இதன் அர்த்தமென்னவென்றால், இவ்வாக்கின் நோக்கமும் விதிகளும் சரியாக அர்த்தங் கொள்ளப்பட வேண்டுமென்பது. இவ்வாக்கில் வரி விதிக்கும் விஷயமாகவோ அல்லது ஜப்தி முதலியவைகளின் விஷயமாகவோ விபரீதமான அர்த்தங்களைக் கொண்டு ஒரு லோகல்போர்டின் உத்தியோகஸ்தர்கள் வரம்புகடந்து அல்லது நியாயம் கடந்து நடந்து கொள்ளும்பக்ஷத்தில் அதை நேராகவோ அல்லது கோர்ட்டின் மூலமாகவோ தாக்குவதற்கு ஒவ்வொரு நபருக்கும் உரிமையுண்டு. உதாரணமாக, ஒரு முனிஸிபாலிட்டி அல்லதுலோகல் போர்டு தணிக்கை செய்ததற்கு வேண்டிய சிலவு முதலியவைகள் எவ்வளவோ அதற்கு மிகவும் அதிகமாக ஒரு வரியை விதித்தால் அதுசெல்லத்தக்கினதல்ல வென்று ஆக்ஷேபிக்கலாம். இனி இந்த பிரிவில் உள்ள அம்சங்களின் விஷயமாக இளம்பி யிருக்கும் பிரச்னைகளுக்கு கோர்ட்டுகள் எம்மாதிரி உத்தரம் சொல்லி யிருக்கின்றனர் என்பதைப் பற்றி கவனிப்போம்.

ஒரு வாதி, தாம் வட்டிக்கு பணம் கொடுத்து அதனால் பணம் சம்பாதிக்கும் தொழிலை நடத்தியதாக தாலூக்கா போர்டாரால் தொழில்வரி விதிக்கப் பட்டார். அவர், தாம் பணம் வட்டிக்கு கொடுக்கும் வியாபாரம் செய்யவில்லையென்றும், தாம்செலுத்திய வரி வாபீஸ்செய்யப்பட வேண்டுமென்றும் தாவா செய்தார். இத்தகைய தாவாவை கோர்ட்டார் அங்கீகரிக்கலாமா என்னும் கேள்வி வந்ததில், அந்த வாதி லேவாதேவி வியாபாரம் நடத்தினாரா இல்லையா என்னும் விஷயம் கேவலம் சங்கதி அம்சமானதினால் சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின்கீழ் இம்மாதிரியான தாவா செய்வதற்கிடமில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது (a). ஆனால் லோகல் போர்டுக்கே அதன் விஷயமாக அப்பீல் செய்யலாம்.

சென்னை லோகல்போர்ட்ஸ் ஆக்டின் 93-து பிரிவில்உள்ள "வருமானம்" என்பது, ஒரு வியாபாரிக்கு வரும் வருமானத்தில் சிலவுபோக மீரும் லாபத்தைத்தான் குறிக்குமே யொழிய மொத்த வருமானத்தைக் குறிக்காது.

(a) 1 அகில இந்தியா லா ஜர்னல் கேசுகளின் குறிப்புகள் பக்கம் 46.

ஒரு லேவாதேவி வியாபாரம் செய்பவர், சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 93-வது பிரிவின்கீழ் தொழில் வரி இடப்பட்டார். அப்படி வரியிடப்பட்டதில், யூனியன் போர்டார் அவ்வியாபாரிக்கு வரிக்கென்று கணக்கிடப்பட்ட வருஷத்தில் எவ்வளவு மொத்த வருமானம் வந்ததோ அதையொட்டி வரியிட்டனர் வரியிடப்பட்டவர், யூனியன் போர்டார் தன் வியாபாரத்தில் சிலவு போக வந்த லாபத்தையொட்டிதான் தனக்குத் வரியிட்டிருக்க வேண்டுமென்றும் மொத்த வருமானத்தையும் ஒட்டி வரியிட்டிருப்பது செல்லத்தக்கினதல்லவென்றும் கோரி, மொத்த வருமானத்திற்கும் தமக்கு வந்த லாபத்துக்குமுள்ள வித்தியாசத் தொகையின் பேரிலுள்ள வரியை வாபீஸ் பெறுவதற்கு தாவா செய்தார். அப்படிப்பட்ட தாவா செய்யப்படுமா என்னும் கேள்வி வந்ததில், ஹைக்கோர்ட்டார் அவர்கள், இந்த சந்தர்ப்பமாயுள்ள சகல கேசுகளையும் சட்டங்களையும் கவனித்து சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 228-வது பிரிவின் பிரகாரம் இத்தகைய தாவா செய்யப்படலாமென்றும் யூனியன் போர்டார் தாங்கள் வரியிட்டதில், லோகல் போர்ட்ஸ் ஆக்டின் நிபந்தனைகளை முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கவில்லையென்றும், அதனால் ஷெ பிரிவானது இத்தகைய ஒரு தாவா செய்யப்படுவதற்கு தடையாக ஏற்படாது என்றும் தீர்மானித்தனர். (b).

இன்னும், ஒரு நபர் பேரில் வரியிடப்பட்டதானது அடியோடே ஆதாரமில்லாமலோ அல்லது தப்பு ஆதாரத்தையொட்டியோ செய்யப்பட்டதென்னும் காரணத்தைக்கொண்டு அம்மாதிரி வரியிடப்பட்டதை ரீக்வி வைக்க ஒரு சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். அதற்கு லோகல்போர்ட்ஸ் சட்டத்தின் 228-வது பிரிவானது ஒரு தடையாகாது (c)

ஒரு முனிசிபல் கௌன்சில் ஒருவருக்கு ஓரிடத்தில் கடலைக்காய்களை சேர்த்து வைப்பதற்காக லைசென்ஸ் கொடுப்பதற்கு 100-ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டுமென்று விதித்தனர். அப்படி விதிக்கப்பட்டதில் அத்தத் தொகையானது லைசென்ஸ் கொடுப்பதற்கும் அந்த இடத்தை மேற்பார்வையிடுவதற்கும் முனிஸிபாலிடிக்கு நேரும் சிலவு தொகைகளைவிட மிகவும் அதிகமாக இருந்ததாக ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பங்களில் அம்மாதிரி ஒரு வரி விதிக்கப்பட்டதானது முனிஸிபாலிடியினுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டதா என்றும் சட்ட சம்மதமானதாவென்றும் கேள்விகள் வந்ததில்;

(b) I அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை கேசுகளின் குறிப்புகள் பக்கம் 84.

(c) I (1929) அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை கேசுகளின் குறிப்புகள் பக்கம் 85.

சட்ட சம்மதமானதல்லவென்றும், அப்படி வரியிடுவதானது முனிசிபாலிடியின் அதிகார வரம்பிற்கு மீறினதாகுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (d).

சென்னை டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடிகளின் சட்டத்தின்கீழ் ஒரு வாரண்டு (ஜப்தி வாரண்டு) விடப்படுமானால், அந்த வாரண்டில் முனிசிபல் சேர்மென்னுடைய கையெழுத்து இருக்க வேண்டும். அவர் படிப்பு தெரியாதவராகயிருந்தால் அவருடைய கைரேகையை உபயோகப்படுத்தலாம்(e).

சென்னை டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகளின் சட்டத்தின்கீழ் ஒரு வாரண்டு விடப்பட்டு அந்த வாரண்டில் முனிஸிபல் சேவகர்கள் பழைய சேர்மென்னுடைய கையெழுத்து முத்திரையை உபயோகப்படுத்தும்பக்ஷத்தில் அந்த வாரண்டு செல்லத்தக்கதல்ல. (e).

சென்னை டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகளின் சட்டத்தின்கீழ் விடப்பட்ட ஒரு வாரண்டை நிறைவேற்றுபவர் ஒரு வீட்டினுடைய தெருக்கதவை பிடுங்கி ஜப்தி செய்வதற்கில்லை. எனெனில் அப்படிச் செய்யும்பக்ஷத்தில் அந்த வீடானது மிகவும் பத்திரக் குறைவாகப் போய்விடும். ஆகையால் அப்படிப்பட்ட ஒரு ஜப்தியை அமுல் நடத்தப்படுவதை அவ்வீட்டில் குடியிருப்பவர் தடுக்கும்பட்சத்தில், அவர் தமது சொத்துக்களைப் பாதுகாப்பதற்குள்ள உரிமைக்குள் தமது நியாயத்தைச் செலுத்துவதால் யாதொரு குற்றம் செய்ததாக கவனிக்கப்படமாட்டார். (e).

வரியிடும் விஷயமாக லோகல்போர்டு சட்டமானது சரியாக அனுசரிக்கப்படாவிட்டால் அதற்காக நேர்ந்த நஷ்டத்திற்கு தாவாசெய்ய ஒவ்வொரு நபருக்கும் உரிமையுண்டு (f). அக்ரமமாய் வசூலிக்கப்பட்ட வரித் தொகையை வரப்படுத்த ஸ்மால்காஸ் கோர்ட்டில் தாவா செய்யலாம்(f).

நாம் இப்பிரிவின் (1) (2) உபப் பிரிவுகளுக்கும் 3-வது உபப்பிரிவுக்கும் உள்ள வித்தியாசத்தை அறியவேண்டும். (1), (2)-வது உபப்பிரிவுகளில் "இவ்வாக்டிலுள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும்....." என்றிருக்க, (3)-வது உபப்பிரிவில் "இந்த ஆக்டிலும் விதிகளிலும் சகாயச்சட்டங்களிலும் உள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும்....." என்றிருக்கிறது. இதனால் வரி முதலியவைகளை விதிக்கும் விஷயமாக இவ்வாக்டிலுள்ள பிரிவுகளே முக்கியமாகும். ஆனால், ஜப்தி முதலியவைகளுக்கு இவ்வாக்டின் கீழ் செய்யப்படும் விதிகள், சகாயச்சட்டங்கள் இவைகளும் அனுசரிக்கப்பட வேண்டும் என்று ஏற்படும்.

(d) 11 (1930) அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை கேசுகளின் குறிப்புகள் பக்கம் 119.

(e) 11 (1930) அகில இந்தியா லாஜர்னல் ரிப்போர்ட்டுகள் பக்கம் 33.

(e) 11 (1930) அகில இந்தியா லா ஜர்னல் ரிப்போர்ட்டுகள் பக்கம் 33.

(f) கடலூர் முனிசிபல்கௌன்சில் vs.கிருஷ்ண நம்பியார் 50 Mad 987—26 L. W. 39.

ஒரு லோகல்போர்டு ப்ரெஸிடெண்டு ஒரு நபருக்கு வரி யிடுவதில், நிஷ்கபடமாக யாதொரு தவறிழைக்கும்பக்ஷத்தில் அதற்காக தனியாக தாவாசெய்வதற்கில்லை.லோகல்போர்டுக்கு அப்பீல்தான் செய்யவேண்டும்(g).

IV -வதுஷெட்யூலின்கீழ் வரியிடப் படுவதில் லோகல்போர்டு ப்ரெஸிடெண்டு பலவகைகளாக வரி செலுத்துவோர்களைப் பிரிக்கலாம். ஒரு நபர் தம்மை ஒரு குறிப்பிட்ட வகுப்பில் சேர்க்கக் கூடாதென்றும் மற்றொரு வகுப்பில்தான் சேர்க்கவேண்டுமென்றும் சொல்லி தாவா செய்ய அவருக்கு உரிமையுண்டு (h).

ஒரு நபர் தமக்கு இடப்படும் வரி விஷயமாக ஒப்புக்கொண்டதாக யாதொரு கடிதம் எழுதியிருந்தபோதிலும் பிறகு அப்படி வரி யிடப்பட்டதானது செல்லத்தக்கதல்ல வென்றும் சட்ட விரோதமானதென்றும் சொல்லி தாவா செய்வதற்கு யாதொரு தடைகிடையாது (i).

அக்கிரமமாய் வசூலிக்கப்பட்ட வரியை வசூலுக்குவதற்கு லிமிட்டேஷன் தவணையானது 3-வருஷம். (அதாவது வரிவ சூலிக்கப்பட்ட தேதியிலிருந்து 3-வருஷம் உண்டு).

புதியதாக ஒரு வரி ஏற்படுத்தப்பட்டதானால் அதற்கு லோகல்போர்ட்ஸ் ஆக்டின்கீழ் சரியானபடி அறிக்கையிடப்பட வேண்டும். அப்படி சரியான அறிக்கையில்லாமல் வசூலிக்கப்பட்ட வரியை வசூலுக்குத்த தாவா செய்யலாம் (j).

ஜப்தி செய்வதற்கு முன் பில்லையாவது அல்லது டிமாண்டு நோட்டீசையாவது காண்பிக்காமலிருப்பது சட்ட விரோதமென்று சொல்ல முடியாது. ஆகையால் அதற்காக ஜப்தியே செல்லாதென்று சொல்லுவதற்கில்லை (k).

(g) விருதுப்பட்டி முனிசிபல் சேர்மென் vs சரவண பிள்ளை 10 L. W. 592—54 I. C. 454.

யமுனாதேவி vs சிகாகுளம் தாலூக்கா போர்டு 113 I. C. 560.

(h) பெனுகில் முனிசிபல் கௌன்சில் vs நரசிங்கதத்பாண்டே A. I. R. 1930. All 222.

(i) பம்பாய் கம்பெனி vs திண்டுக்கல் முனிசிபல் கௌன்சில் 27 L. W. 213—A. I. R. 1926 Mad 146.

(j) ராஜமஹேந்திரவரம் முனிசிபல் கௌன்சில் vs பிரசாத ராயடு 50 M. L. J. 556.

(k) பீபின்சந்திராபிஸ்வாஸ் vs கல்கத்தா கார்ப்பரேஷன் 31 Cal 452.

229. லோகல் போர்டாரையாவது அதன் ப்ரெஸிடென்டையாவது அதன் அங்கத்தினரையாவது லோகல் போர்டாரால் வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்ட யாதொரு நபரையாவது லோகல் போர்டுக்காக ப்ரெஸிடென்டு யாரோடு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறாரோ அந்த நபரையாவது அவர்கள் தங்களுடைய வேலையை செய்யும்போதாகிலும், இந்த ஆக்டை அனுசரித்தாயினும் இதன்படி செய்யப்பட்ட யாதொரு சகாயச் சட்டம், விதி, ரெகுலேஷன், அல்லது உத்தரவை அனுசரித்தாயினும் இவைகள் காரணமாகவாயினும் அவர்கள் செய்ய அதிகாரம் கொடுக்கப்பெற்ற அல்லது அவர்களால் செய்யப்பட வேண்டிய யாதொரு காரியத்தைச் செய்யும்போதாகிலும் எவரும் தடுக்கவுங்கூடாது, தொந்தரவு செய்யவுங்கூடாது.

லோகல் போர்டுகளின் ஊழியக்காரர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் தடுப்பது கூடாதென்பது.

குறிப்புகள்.

இப்பிரிவில், லோகல் போர்டு ப்ரெஸிடென்டுகள், அங்கத்தினர் முதலியவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களென கவனிக்கப்படுவார்கள் என்னும் ஒரு ஐதீகத்தைக் கொண்டு அவர்கள் யாதொரு காரியத்தைச் செய்யும்போது தடுக்கப்படக்கூடாதென்று சொல்லப்பட்டுள்ளது. இப்பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய் செய்பவர் 50-ரூபாய் வரையிலும் விதிக்கக்கூடிய அபராதத்திற்குள்ளாவார்.

230. ஒரு லோகல் போர்டின் அல்லது அதன் ப்ரெஸிடென்டாலாவது அவர்களுடைய உத்தரவின்படியாவது காட்டி வைக்கப்படும் யாதொரு நோட்டீஸை அல்லது நிறுத்திவைக்கப்படும் யாதொரு அடையாளம் அல்லது குறிப்பை எவரும் அது விஷயமாய் அதிகாரம் பெற்றுக்கொள்ளாமல் எடுத்து விடவும் கூடாது, அழித்துவிடவும் கூடாது, கெடுத்துவிடவும் கூடாது அல்லது மற்றப்படி கலைத்துவிடவும் கூடாது.

நோட்டீஸை எடுத்து விடுவது அல்லது கலைத்து விடுவதைத் தடுப்பது.

குறிப்புகள்.

லோகல் போர்டுகள் தெருக்களிலும் ரஸ்தாக்களிலும் இன்னும் பல பொது இடங்களிலும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் நோட்டீஸுகளை அழிக்கக் கூடாது அல்லது கெடுதி செய்யக்கூடாதென்று இப்பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

இப்பிரிவிற்கு விரோதமாகச் செய்பவருக்கு 50-ரூபாய் வரையிலும் அபராதம் உண்டு.

ஸ்டேட்மெண்டுகள் அல்லது விவரக்கணக்குகள் சவதரிக்க வேண்டுமென்று கர்ணங்களையும் பெரியதனக் காரர்களையும் கேட்க ப்ரெஸிடெண்டுக்குள்ள அதிகாரம்.

231. (1) யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர் அந்த லோகல்போர்டைச் சேர்ந்த விஸ்தீரணத்துக்குள் அடங்கியிருக்கும் யாதொரு ரெவின்யூ கிராமத்தின் கர்ணத்தையாவது பெரியதனக்காரரையாவது இவர்கள் இருவரையுமாவது அந்த ரெவினியூ கிராமத்தின் விஷயமாய் இந்த ஆக்டின் காரியங்களுக்காக வேண்டியிருக்கும் யாதொரு ஸ்டேட்மெண்டு, கணக்கு அல்லது ரிடர்ணை (விவரக் கணக்கை) நியாயமான ஒரு காலத்துக்குள் சவதரிக்க வேண்டுமென்று கலெக்டரின் அனுமதியுடனும் எழுத்து மூலமான உத்தரவைக் கொண்டும் கேட்கலாம்.

(2) எந்த கிராம உத்தியோகஸ்தரும் - (1) குறிப்பிட்ட உபப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவின் பிரகாரம் நியாயமான காரணமில்லாமல் நடக்காமலிருக்கக்கூடாது.

குறிப்புகள்.

ஒரு ப்ரெஸிடெண்டு கேட்கும் தகவல்களைக் கொடுக்கத் தவறும் கர்ணம் அல்லது பெரியதனக்காரர் 50-ரூபாய்க்கு மேற்படாமல் விதிக்கப்படும் ஒரு அபராதத்திற்குள்ளாவார்.

கட்சிக்காரர்களுக்கு சம்மன் அனுப்ப அதிகாரம்.

232. யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டானவர் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி வரி விதிப்பதற்காவது யாதொரு லைஸென்ஸ் அல்லது அனுமதி கொடுப்பதற்காவது சம்பந்தப்படுகிற யாதொரு கேள்வி விஷயமாய் தமக்கு முன் ஹாஜ்ராகி சந்தர்ப்பத்துக்கேற்றபடி சாட்சியம் சொல்லும்படியோ அல்லது தஸ்தாவேஜுகளைக் காட்டும்படியோ யாதொரு நபருக்கு சம்மன் அனுப்பலாம்.

குறிப்புகள்.

இப்பிரிவானது லோகல் போர்டு ப்ரெஸிடெண்டுகளுக்கு எந்த நபரையும் சம்மன் செய்வதற்கு அதிகாரத்தைக் கொடுப்பதாகும். லோகல் போர்டு நிர்வாக உரிமைகளில் இவ்வுரிமையானது ஒன்றாகும்.

இப்பிரிவின்கீழ் கொடுக்கப்படும் சம்மனை நிராகரிக்கும் நபருக்கு 50-ரூபாய் வரையிலும் ஒரு அபராதம் விதிக்கப்படும்.

தங்களுடைய அதிகாரங்களை வேறொருவருக்கு கொடுக்கவும் மத்தியஸ்தம் செய்யவும் லோகல் கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரங்கள்.

லோகல் கவர்ன்மெண்டார் தங்கள் அதிகாரங்களை வேறொருவருக்கு கொடுப்பது.

233. லோகல் கவர்ன்மெண்டார்-விதிகளைச் செய்யவாவது ஷெட்யூல்களை மாற்ற அல்லது ரத்துபண்ண வாவதுள்ள அல்லது 128-வது பிரிவின்கிழ் செலுத்தப்படவேண்டிய உபகாரத்தொகையை நிர்ணயிப்பதற்கான அல்லது 227-A பிரிவின் கிழ் பிராஸிகியூஷன் செய்யப்படும்படி உத்தரவு செய்வதற்கான அதிகாரத்தைத்தவிர, வேறே இந்த ஆக்டின்படி தங்களிடத்தில் சங்கிரமித்திருக்கிற அதிகாரங்களில் யாதொன்றையாவது பலவற்றையாவது யாதொரு பிரதேச விஸ்தீரணத்தில் அந்த விஸ்தீரணத்திலுள்ள யாதொரு லோகல்போர்டு அல்லது யாதொரு வகுப்பில் அடங்கிய லோகல்போர்டுகள் அல்லது எல்லா லோகல் போர்டுகளின் விஷயமாகவும் செலுத்துவதற்கு விளம்பரமூலமாய் எந்த நபருக்காகிலும் அதிகாரம் கொடுக்கலாம்; இன்னும் அப்படிப்பட்ட அதிகாரத்தை அப்பிரகாரமே எடுத்துவிடலாம்.

குறிப்புகள்.

லோகல் போர்டுகளின் விஷயமாக லோகல் கவர்ன்மெண்டார் அநேக விதமான அதிகாரங்களைச் செலுத்த உரிமையுண்டு. இச்சட்டத்தில் "குறிப்பிடப்பட்ட அதிகாரி" என்னும் "லோகல் கவர்ன்மெண்டால் அதிகாரப்படுத்தப்பட்ட" என்றும் பல பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. லோகல் கவர்ன்மெண்டானது ஒவ்வொரு டிஸ்டிரிக்டில் உள்ள கலெக்டர், டிப்டி கலெக்டர் இவர்களுக்கு தங்களுக்குள்ள அதிகாரத்தைக் கொடுத்து வைக்கலாம்.

லோகல் போர்டுகளின் மொத்த நிர்வாக விஷயமாக லோகல் கவர்ன்மெண்டார், சென்னையில் பஞ்சாயத்துகளின் ரிஜிஸ்ட்ராரும் லோகல் போர்டுகள், முனிஸிபாலிடிகள் இவைகளின் இன்ஸ்பெக்டருமான ஒரு உத்தியோகஸ்தரை தங்கள் பிரதிநிதியாக நியமித்திருக்கின்றனர். 1931–ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் ஸ்ரீமான் ராவ்பஹதூர் N. கோபால ஸ்வாமி அய்யங்கார் அவர்கள் B. A. B. L. பஞ்சாயத்துகளின் ரிஜிஸ்ட்ராராகவும் லோகல் போர்டுகளின் இன்ஸ்பெக்டராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஏற்கெனவே ஸ்ரீமான் கோபாலசாமி அய்யங்கார் அவர்கள் இவ்வுயர்ந்த பதவியினைப் பெற்றிருந்தபோது லோகல் போர்டுகளில் பலவித சீர்திருத்தங்களைச்செய்திருக்கிறார். இனியும் புதிய லோகல் போர்டு சட்டமானது அமுலுக்கு வருகையில் அவைகளை நன்முக ஒழுங்குபடுத்தி நன்மைசெய்ய கடவுள் அவருக்கு ஆயுளைக் கொடுப்பாரென்று பிரார்த்திக்கப்படுகிறது.

234. (1) ஒரு லோகல் போர்டுக்கும் மற்றொன்று அல்லது அதற்கு அதிகப்பட்ட பிரதேச அதிகாரி அல்லது அதிகாரிகளுக்கும் இந்த சட்டத்தின் கீழாவது அல்லது வேறே சட்டத்தின் கீழாவது கிளம்பும் யாதொரு விஷயத்தைப்பற்றி விவாதம் இருந்து வந்து லோகல் கவர்ன்மென்டாரும் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரிகள் அதை அவர்கள் தங்களுக்குள்ளாகவே சமாதானமாக தீர்த்துக் கொள்வதற்கு முடியாதவர்களாக இருக்கிறார்களென்று அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் லோகல் கவர்ன்மென்டானது அந்த விவாதத்தை தாங்களே விசாரணைக்காக எடுத்துக்கொண்டு,

பிரதேசஅதிகாரசபைகளுக்குள் ஏற்படும் விவாதங்களை தீர்மானிப்பது.

(a) தாங்களாவது அதை தீர்மானிக்கலாம், அல்லது,

(b) இதற்காக 30-வது பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு மத்தியஸ்தக்கூட்டம் அல்லது ஒரு ஜாயின்ட்டுக் கமிட்டி இவர்களிடம் விசாரணைக்காகவும் ரிப்போர்ட்டு செய்யப்படுவதற்காகவும் அனுப்பலாம்.

(2) (1)-வது உபப்பிரிவின் (b) என்னும் வாக்கியத்தில் குறிக்கப்பட்டிருக்கும் ரிப்போர்ட்டானது லோகல் கவர்ன்மென்ட்டிற்கு அனுப்பப்படவேண்டும். லோகல் கவர்ன்மென்டு அந்த விவாதத்தை தங்களுக்குத்தோன்றும் யுக்தப்பிரகாரம் தீர்மானிக்கவேண்டும்.

(3) (1)-வது உபப்பிரிவின் (a) என்னும் வாக்கியத்தின் கீழாவது அல்லது (2)-வது உபப்பிரிவின் கீழாவது லோகல் கவர்ன்மென்டானது செய்யும் தீர்மானமானது முடிவானதாயும் வாதம் செய்யும் பிரதேச அதிகாரிகளின் ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்துவதாயும் இருக்கும்.

235. (1) 1884-ம்வருத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்டின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு லோகல் போர்டாருக்குச் சொந்தமாயிருக்கும் அல்லது அவர்களிடத்தில் சங்கிரமித்திருக்கும் அல்லது அவர்களாலாவது அவர்களுக்காகவாவது டிரஸ்டில் வைத்துக்கொள்

புதிதாய் அமைக்கப்பட்ட லோகல் போர்டுக்கு சொத்தும் உரிமைகளும் மாறுவது.

ளப்பட்டிருக்கும் சகல சொத்தும், உபயோகப்படும் அல்லது அனுபவிக்கப்படும் அல்லது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உரிமைகள் எவ்வகைச்சேர்ந்தவையாயினும் சரி, அப்படிப்பட்ட சகல உரிமைகளும் சகல பாத்தியதைகளும் மேற் போர்டாரின்மேல் சட்டப்படி ஏற்பட்டிருக்கும் சகல பொறுப்புகளும் இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்படும் அதே லோகல் போர்டாருக்கு மாறவேண்டும்.

(2) இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும்போது யாதொரு லோகல் போர்டாருக்குச் சேரவேண்டியதாயிருக்கும் சகல வரி பாக்கிகளையும் அல்லது ஒரு வரிக்காக ராஜி ஏற்பாட்டின்படி செலுத்தவேண்டிய இதர தொகைகளும் அல்லது செலவுகளுக்காக வாகிலும் பிரதிபலனுக்காகவாகிலும் மற்றப்படியாகிலும் செலுத்த வேண்டியிருக்கும் இதர தொகைகளையும் அவை இந்த ஆக்டின்படி பாக்கியாய் ஏற்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே வசூல் செய்யலாம்.

ரயில்வே செஸ் என்னும் வரியிலிருந்து சேமிக்கப்பட்ட தொகைகளை உபயோகப்படுத்திக்கொள்வது.

236. இந்த ஆக்டானது அமுலுக்குவர ஆரம்பித்தது முதல் 1884-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 57-வது பிரிவின் (ii)-வது வாக்கியத்தின் கீழ் விதித்து வாங்கப்பட்ட யாதொரு வரி தொகையிலிருந்து சேமித்து வைக்கப்பட்ட அல்லது அப்படிப்பட்ட தொகைகளை வட்டிக்கு கொடுத்ததினால் ஏற்பட்டிருக்கும் யாதொரு தொகைகள் 113-வது பிரிவின் (3)-வது உபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு—

(a) 113-வதுபிரிவின் (1)-வது உபப்பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லா காரியங்களுக்காக அல்லது யாதொரு காரியத்திற்காக இந்தியா கவர்ன்மெண்டினுடைய முன் உத்தரவுடனும்; அல்லது,

(b) (i) 113-வது பிரிவின் (2)-வதுஉப் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லா காரியங்களுக்காக அல்லது யாதொரு காரியத்திற்காக; அல்லது,

(ii) வேறே சாஸ்வீதமாக உபயோகப்படும் வேலைக்குக் கென்று மூலதன செலவுக்காக, (ஆனல் புது பாதைகள் (Roads) வாராவதிகள், ஆற்றுப் பாதைகள் (Causeways) மூடிய வாய்க்கால்

கள் (Culverts) இவைகளை கட்டுவதானது மற்ற எல்லா வேலைகளுக்கும் முன்பாக கவனிக்கப்படும்.)

லோகல் கவர்ன்மெண்டினுடைய முன் உத்தரவைக்கொண்டும், உபயோகப்படுத்தலாம்.

237. (1) இந்த ஆக்டானது - சென்னை ராஜதானிப்பட்டணத்தையும் 1920-ம் வருத்திய சென்னைப்பட்டணத்து டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகள் ஆக்ட் பிரயோகப்படுகிற முனிஸிபாலிடிகளையும் தவிர சென்னைப்பட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுமைக்கும் வியாபிக்கிறது.

இந்த ஆக்டின் வியாபிப்பும் இது வழங்கத் தொடங்குவதும்.

(2) இது-லோகல் கவர்ன்மெண்டார் விளம்பர மூலமாய் ஏற்படுத்தக்கூடிய தேதி அல்லது தேதிகளில் செலாவணியாகத் தொடங்க வேண்டும்; மேலும், இந்த ஆக்டின் வெவ்வேறு நிபந்தனைகளுக்காகவும் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த லோகல் போர்டுகளுக்காகவும் ப்ரெஸிடென்ஸியின் வெவ்வேறு பாகங்களுக்காகவும் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்;

ஆனால், விதிகளையும் சகாயச் சட்டங்களையும் ரெகுலேஷன்களையும் செய்யவாவது அங்கீகரிக்கவாவதுள்ள அதிகாரத்தை 1915-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட் 81-வது பிரிவின்படி கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியைப் பிரசித்தஞ் செய்த பிறகு எப்போதாகிலும் செலுத்தலாம்;

மேலும் லோகல் கவர்ன்மெண்டார் - விளம்பர மூலமாய் இந்த ஆக்டின் யாதொரு பிரிவையாவது அப்படிப்பட்ட பிரிவின் யாதொரு பாகத்தையாவது இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி செய்யப்பட்ட யாதொரு விதியையாவது தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய நிர்ப்பந்தங்கள் அல்லது திருத்தங்களுடன் 1874-ம் வருஷத்து ஷெட்யூல்டு டிஸ்டிரிக்டுகளாக்டில் அர்த்தப் சொல்லப்பட்டபடிக்குள்ள யாதொரு ஷெட்யூல்டு டிஸ்டிரிக்டுக்குப் பிரயோகப்படுத்தலாம் அல்லது பொருந்திக்கொள்ளலாம்.

238. [இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]

239. [இந்தப் பிரிவு எடுத்துவிடப்பட்டது.]

புதியதாக ஏற்படுத்தப்படும் லோகல் போர்டுகளைப் பற்றியும் மறுபடியும் கூட்டப்படும் லோகல் போர்டுகளைப் பற்றியும் தனிமையான ஏற்பாடுகள்.

240. (1) இந்த சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும் அவைகளுக்கு நிமித்தியமில்லாமல், ஒரு லோகல் போர்டானது புதியதாக முதல் முதலாக அமைக்கப்படும் பக்ஷத்தில் லோகல் கவர்ன்மெண்டானது, அந்த லோகல் போர்டு, அதன் ப்ரெஸிடெண்டு இவர்களின் அதிகாரங்களை செலுத்தவும் கடமைகளை தீர்க்கவும் காரியங்களைப் பார்க்கவும் ஒரு ஸ்பெஷல் உத்தியோகஸ்தரை நியமிக்கலாம்.

(2) அந்த ஸ்பெஷல் உத்தியோகஸ்தரானவர், ஒரு ரெஜினியூ டிஸ்டிரிக்ட்டாவது அல்லது ரெஜினியூ தாலூக்காவாவது அமைக்கப்பட்ட தேதி முதற்கொண்டாவது அல்லது 4-வது அல்லது 5-வது பிரிவின்கீழ் ஒரு அறிக்கையானது விளம்பரப்படுத்தப்பட்ட தேதி முதற்கொண்டாவது 6-மாதங்களுக்குள் ஒரு தினத்தில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் தமது உத்தியோகங்களை வகிக்கும்படி எலெக்ஷனுக்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(3) அந்த ஸ்பெஷல் உத்தியோகஸ்தரானவர், அந்த போர்டானது அமைக்கப்படும் வரையிலும் அந்த லோகல் போர்டினுடைய அதிகாரங்களைச் செலுத்தியும் கடமைகளை தீர்த்தும் அலுவல்களைப் பார்த்தும் வரவேண்டும். இன்னும், அந்த போர்டிலுள் ஒரு ப்ரெஸிடெண்டு தேர்ந்தெடுக்கப்படும் வரையிலும் அந்த ப்ரெஸிடெண்டினுடைய அதிகாரங்களை செலுத்தியும் கடமைகளை தீர்த்தும் காரியங்களை செய்தும் வரவேண்டும்.

(4) அந்த போர்டானது அமைக்கப்பட்ட பிறகு, கூடுமான சீக்கிரத்தில், அந்த ஸ்பெஷல் உத்தியோகஸ்தரால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தினத்தில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில், அதன் ப்ரெஸிடெண்டை தேர்ந்தெடுப்பதற்காக ஒரு மீட்டிங்கு கூட்டப்படவேண்டும். அப்படி மீட்டிங்கில் யாதொரு ப்ரெஸிடெண்டும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அந்த ஸ்பெஷல் உத்தியோகஸ்தரால் நிர்ணயிக்கப்படும் மற்றொருதினத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு புதிய எலெக்ஷன் நடத்தப்பட வேண்டும்.

(5) அந்த அங்கத்தினர்களுடைய உத்தியோக கால அளவானது, அல்லது அவர்களுடைய ஸ்தானத்தில் தற்செயலாக நேர்ந்த

காலியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுடைய உத்தியோகத் தின் கால அளவானது, (2)-வது உபப்பிரிவில் சொல்லப்பட்ட தினமானது நவம்பர் மாதம் முதல் தேதியாக இருக்குமானால் அதுமுதல் மூன்று வருஷங்கள் முடிந்த பிறகும், மற்ற சந்தர்ப்பங்களில் அந்த தினத்திற்கு அடுத்தாப்போல் முன்னடியாக உள்ள நவம்பர் மாதம் முதல்தேதி முதல் மூன்று வருஷங்கள் கழிந்த பிறகும்முடிவடையும்.

(6) இந்த ஆக்டில் வேறே விதமாக ஏற்படுத்தப்பட்டிருந் தாலொழிய (1) முதல் (5) வரையிலுள்ள உபப்பிரிவுகளில் சொல்லப் பட்டிருப்பவைகள் கூடுமான வரையிலும் லோகல் போர்டுகள் (கலைக் கப்பட்டு) மறுபடியும் கூட்டப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பிர யோகிக்கப்படுவதாகும்.

(7) 10-வது பிரிவின்கீழ் விளம்பரப்படுத்தப்படும் அறிக் கையினாலாவது அல்லது அதன் காரணத்தினாலாவது, ஒரு லோகல் போர்டிலுள்ள ஸ்தானங்களின் சங்கியையானது அதிகப்படுத்தப் பட்டதானால், அந்த அதிக ஸ்தானங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் அல்லது தற்செயலான காலி ஸ்தானங்களில், பதி லாக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள், மற்ற பூர்வஸ்தானங் களுக்கு சாதாரண எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் கள் எப்பொழுது தங்களுடைய உத்தியோகத்தினின்று நீங்குகிறார் களோ அதுவரையிலும் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

(8) (a) லோகல் கவர்ன்மென்டானது, எடுத்துவிடப்பட்ட ஒரு லோகல் போர்டினுடைய சுவாதீனத்திலிருந்த சொத்தைவிநியோ கப்படுத்தும் விஷயமாகவும் ஒரு லோகல் போர்டினுடைய சுவாதீனத் திலிருந்து ஆனல் எந்த விஸ்தீரணத்தில் அந்த லோகல் போர்டானது அதிகாரம் செலுத்திவந்ததோ அந்த விஸ்தீரணத்தில், அந்த லோகல் போர்டு அதிகாரம் செலுத்துவதிலிருந்து நின்றுவிடும் பக்ஷத்தில் அந்த விஸ்தீரணத்திலுள்ள சொத்தின் விஷயமாகவும் தமக்குத் தோன்றும் யுக்தப்படி தகுந்த உத்தரவுகளைச் செய்யலாம்.

(b) 4-வது அல்லது 5-வது பிரிவின் கீழ் யாதொரு பிரதேச விஸ்தீரணம் ஒரு தாலூக்கா அல்லது கிராமம் என்று ஸ்தாபிக்கப் பட்டதான யாதொரு அறிக்கையானது ரத்து செய்யப்பட்டதானால் சந்தர்ப்பத்திற்குத்தகுந்தாப்போல் அந்த தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்து இவைகளின் ஸ்வாதீனத்திலுள்ள சொத்துக்களை விநி யோகப்படுத்தும் விஷயமாக தமக்குத்தோன்றும் யுக்தப்படி தகுந்த உத்தரவுகளைச் செய்யலாம்.

ஷெட்யூல்கள்.

1-வது ஷெட்யூல்.

ரத்து செய்யப்பட்ட சட்ட திட்டங்கள்.

(2-வது பிரிவைப் பார்க்கவும்).

வருஷம்.	நெம்பர்.	சுருக்கமான பெயர்.	இவ்வளவு மட்டில் ரத்து.
1890	III	சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளையும் குத்தகைத் தொகையை வசூல் செய்வதையும் குறித்த (திருத்துவதற்கான) 1890-ம் ஹுத்து ஆக்ட்.	அதில் ஏற்கெனவே எவ்வளவு ரத்தாகாம லிருக்கிறதோ அவ்வளவு.
1900	VI	சென்னப்பட்டணத்துலோகல் போர்டுகளாக்டைத் (திருத்துவதற்கான) 1890-ம் ஹுத்து ஆக்ட்.	முழுவதும்.
1901	XI	ரத்து செய்வதற்கும்திருத்துவதற்குமான 1901-ம் ஹுத்து (இந்தியா) ஆக்ட்.	இரண்டாவது ஷெட்யூலில் 1884-ம் ஹுத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்டுக்கு எவ்வளவு மட்டில் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு.
1913	III	1913-ம்ஹுத்தியசென்னப்பட்டணத்துடில்டிரிக்ட்முனிசிபாலிடிகளையும்லோகல்போர்டுகளையும்குறித்த (திருத்துவதற்கான) ஆக்ட்.	அதில் எற்கனவே எவ்வளவு ரத்தாகாம லிருக்கிறதோ அவ்வளவு.
1914	VIII	1914-ம் ஹுத்திய சென்னப்பட்டணத்து அதிகாரப் பிரிவினை ஆக்ட்.	ஷெட்யூலில் 1884-ம் ஹுத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுக ளாக்டுக்கு எவ்வளவு மட்டில் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு.

வருஷம்.	நெம்பர்.	சுருக்கமான பெயர்.	இவ்வளவு மட்டில் ரத்து.
1920	XIV	சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட்.	1884-ம் ஜூத்திய V-வது சட்டம் மொத்தமும்.
1922	II	சென்னை டிஸ்டிரிக்டு முனிசிபாலிடிகளும், லோகல்போர்டுகளும் திருத்துவதற்கான ஆக்ட்.	லோகல் போர்டு அங்கத்தினர்களுடைய உத்தியோகம், உத்தியோக கால அளவு இவைகளைப்பற்றின வரையிலும் திருத்தம்.
1925	IV	சென்னை டிஸ்டிரிக்டுமுனிசிபாலிடிகளும், லோகல் போர்டுகளும் திருத்துவதற்கான ஆக்ட்.	1920-ம் ஜூத்திய சென்னை லோகல் போர்டு ஆக்டு திருத்தப்பட்டது.
1925	V	சென்னை லோகல் போர்ட்ஸ் திருத்துவதற்கான ஆக்ட்.	236-வது பிரிவு திருத்தப்பட்டது.
1930	XI	சென்னை லோகல் போர்ட்ஸ் திருத்துவதற்கான ஆக்ட்.	சென்னை லோகல்போர்டு ஆக்டானது பல முக்கியாம்சங்களில் திருத்தப் பட்டது.

2-வது ஷெட்யூல்.

ஷெட்யூல்களும் லோகல் போர்ட்ஸ் ஆக்டைச்சேர்ந்ததாகும். ஆகையால் ஷெட்யூல்களில் சொல்லப்பட்டிருப்பதை மீறினாலும் ஆக்டுக்கு விரோதமாகவே நடந்ததாக பாவிக்கப்படும். இந்த ஷெட்யூலில் லோகல் போர்டுகள் தங்கள் மீட்டிங்குகளை எவ்வாறு நடத்துவது என்பதைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது.

இந்த ஷெட்யூலில் 13 பிரிவுகள் உள்ளன. அவைகள் விதிகள் என்று சொல்லப்பட்டுள்ளன. இந்த ஷெட்யூலில் பொதுவாக மீட்டிங்குகள் எவ்வாறு நடத்தப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, மீட்டிங்குகளில் மெம்பர்களும் அக்கிராசனரும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்படவில்லை. மீட்டிங்குகளில் அங்கத்தினர்கள் நடந்துகொள்ளும் விதமானது அந்தந்த சந்தர்ப்பத்தைப் பொருத்ததாகும்.

ஆனால் பொதுவாக ப்ரெஸிடென்டுகள் அல்லது மீட்டிங்குகளில் அக்கிராசனம் வகிப்பவர்கள்தான் மீட்டிங்கின் அமைதியையும் நல்லொழுக்கத்தையும் பாதுகாத்து வரவேண்டும். அதாவது, மீட்டிங்குகளில் மெம்பர்கள் தங்களிஷ்டப்பிரகாரம் பேச வொட்டாமல் ஒவ்வொருவருக்கும் தகுந்தபடி சமயம் பார்த்து பேசுவதற்கு வசதி கொடுக்கவேண்டும். ஒருவர் பேசும் போது மற்றொருவர் பேசக்கூடாது. அவரை தடுக்கவும்கூடாது.

மீட்டிங்குகள் தொடங்கியபிறகு அந்த மீட்டிங்கில் ஆலோசனைக்கு வர வேண்டிய விஷயங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ப்ரெஸிடென்டினால் எடுத்துரைக்கப்பட்டு அதன்பிறகு அங்கத்தினர்களால் கவனிக்கப்படவேண்டும். ஒரு மீட்டிங்கில் ஆலோசிக்கப்படவேண்டிய விஷயங்கள் ஒரு பட்டியில் காணப்படும். அது Agenda (எஜெண்டா) என்று சொல்லப்படும். அதைப்பற்றி முன்னடியாகவே மெம்பர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கும். இந்த எஜெண்டாவில் உள்ள விஷயங்களை ஒன்றன்பின் ஒன்றாக ப்ரெஸிடென்டு எடுத்து சொல்லுங்காலத்தில் அதைப்பற்றி மெம்பர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பார்கள். ப்ரெஸிடென்டு இன்னார் இன்னார் அதைப்பற்றி பேசலாம் என்று ஒருவர் சொல்லிய பிறகு மற்றொருவரைச் சுட்டிக் காட்ட வேண்டும். அப்படி அவர்களை பேசும்படி உத்திரவிடுவதில், ப்ரெஸிடென்டானவர், பக்ஷபாதமில்லாமலும், கக்ஷிகள் இருக்கும்பக்ஷத்தில் ஒவ்வொரு கக்ஷிக்கும் சமமான வசதிகளைக் கொடுத்தும் பேசவிடவேண்டும். ஒவ்வொரு நபரும் இவ்வளவு நேரம்தான் பேசலாமென்று ப்ரெஸிடென்டு நிர்ணயிக்க உரிமையுண்டு. அப்படி ப்ரெஸிடென்டானவர் நிர்ணயிப்பதை அங்கத்தினர்கள் கீழ்ப்படிய வேண்டும். ப்ரெஸிடென்டினுடைய உத்திரவை வேண்டுமென்று கீழ்ப்படியாமல் இருக்கும் நபரை ப்ரெஸிடென்டு மீட்டிங்கிலிருந்து அப்புறப்படுத்தலாம். மீட்டிங்கு நடக்கும்போது மெம்பர்களில் ஒருவரை மற்றொருவர் கண்டித்தாவது அல்லது உதாஸினமாகவாவது அல்லது குரூரமாகவாவது பேசக்கூடாது. ஆனால் அபிப்பிராய பேதங்களை தெரிவித்து எதிரியின் அபிப்பிராயமானது சரியானதல்ல வென்று எடுத்துக் காட்டலாம். அப்படிச்செய்வதில் அங்கத்தினர்களின்பேரில் நேராக தாக்கும்படியாதொரு சொல்லையும் சொல்லக்கூடாது. அபிப்பிராயங்களை மாத்திரம் தாக்கலாம்.

ஒரு மீட்டிங்கு நடக்கும்போது யாதொரு நிருத்தப் பிரேரேபணையை ஒரு அங்கத்தினர் கொண்டுவரும்பக்ஷத்தில் அதற்காக முன்னடியாக நோட்டீஸ் தெரிவித்திருக்க வேண்டுவதல்லாமல் ப்ரெஸிடென்டினுடைய உத்தரவைக் கேட்கவேண்டும். பிரேரேபணைசெய்யுங்காலத்தில் ஒவ்வொரு பிரேரேபணையையும் ஒருவராவது ஆமோதிக்க வேண்டும். ஆமோதனையில்லாத பிரேரேபணைகள் அடியோடே மீட்டிங்கில் விவாதிக்கப்படுவதற்கில்லை. ஆமோதனையென்பது Seconding என்று இங்கிலீஷில் சொல்லப்படும். யாதொரு பிரேரேபணையானது ஆலோசிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் அதன்விஷயமாக உள்ளசம்வாதத்தை நிறுத்தும்படி ஒருநபர் ஒரு பிரேரேபணையைச் செய்யலாம். அதற்கு Closure motion என்று சொல்லப்படும். அந்த பிரேரேபணையைப்பற்றி ப்ரெஸிடென்டானவர் மீட்டிங்கினுடைய அனுமதி உண்டா இல்லையா என்பதை மெம்பர்களின் ஓட்டுகளால் அறிந்து மெம்பர்கள் உத்தரவு கொடுக்கும்பக்ஷத்தில் அல்லது அந்த பிரேரேபணையானது மீட்டிங்கினால் நடக்கத்தகும்பக்ஷத்தில், ப்ரெஸிடென்டானவர் உடனே

சம்வாதத்தை நிறுத்திவிட்டு பிரதம தீர்மானத்தின்பேரில் ஓட்டு எடுக்க வேண்டும்.

மீட்டிங்குகளில் அங்கத்தினர்களுக்கு சிற்சில விஷயங்களைக்குறித்து கேள்விகளைக் கேட்க உரிமையுண்டு. (26–வது பிரிவையும் அதன்கீழ் உள்ள குறிப்புகளையும் பார்க்க). ஆனால் ப்ரெஸிடென்டானவர்ஒரு மீட்டிங்கு நடக்கும்போது இன்னின்ன காலங்களில்தான் மெம்பர்கள் கேள்விகளைக் கேட்கலாம் என்று நிர்ணயிக்கவேண்டும். அப்படி கேள்வி கேட்கும் விஷயமாக மெம்பர்கள் முன்னுடியாகவே ப்ரெஸிடென்டுக்கு நோட்டீஸ்கொடுக்க வேண்டும். அப்படி நோட்டீஸ் கொடுத்தால்தான் ப்ரெஸிடென்டானவர் தம் முடைய ஆபீஸிலிருந்து தகவல்களை தேடி எடுக்க சௌகரியம் ஏற்படும். இதன் விஷயமாக 26 முதல் 34 வரையிலுமுள்ள பிரிவுகளையும் அவைகளின் கீழ் உள்ள குறிப்புகளையும் பார்க்க.

யாதொரு நபர் ஒரு பிரேரேபணையைப்பற்றி பேசிக்கொண்டிருக் கையில் அந்த நபர் ஆலோசனையிலிருக்கும் பிரேரேபணை சம்பந்தமாகப் பேச வில்லையென்று யாதொரு ஆக்ஷேபனைக்குறியை (Point of Order) தெரிவிக் கும் பக்ஷத்தில், ப்ரெஸிடென்டானவர் அதைப்பற்றி உடனே தம்முடைய தீர்மானத்தைத் தெரிவிக்கவேண்டும்.

ஒரு மீட்டிங்கில் ப்ரெஸிடென்டினுடைய கடமை என்னவென்றால், மீட்டிங்கு சரிவர நடக்கும் கவலையை மேற் கொள்ளவேண்டும். அப்படிமேற் கொள்ளாமலிருப்பது அவர் அஜாக்கிரதையாகவே இருப்பதாக கவனிக்கப் படும்.

நம்பிக்கைக்குறைவு பிரேரேபணைகளைப் பற்றின சம்வாதமா னது எக்காரணத்தைக் கொண்டும் மூன்றுமணி நேரத்திற்கு அதிகமாக நடப்பதற்கில்லை. (44 வது பிரிவையும் அதன்கீழ் உள்ள குறிப்புகளையும் பார்க்க.)

---

1. ஒவ்வொரு லோகல் போர்டும் லோகல் கவர்ன்மென்டால் குறிக்கப்படும் யாதொரு இடத்தில் ஒரு ஆபீஸை ஏற்படுத்த வேண் டும்.

குறிப்புகள்.

ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் இன்ன ஊரில் ஒரு ஆபீஸ் இரு க்க வேண்டும் என்று கவர்ன்மென்டார் நிர்ணயிப்பார்கள் அல்லது ஏற் கெனவே நிர்ணயித்திருப்பார்கள். அப்படிப்பட்ட ஊரில் அந்த லோகல் போர்டானது தமது ஆபீஸை வைத்திருக்கவேண்டும்.

ஆபீஸ் என்பது எந்த இடத்தில் சம்பந்தப்பட்ட லோகல் போர்டானது தமது காரியங்களையும் வர்த்தமானங்களையும் நடத்தி வருகிறதோ அந்த இடமாகும் ஒரு ஊரைவிட்டு மற்றொரு ஊருக்கு ஆபீஸை மாற்ற வேண்டுமென்றால் அதற்காக லோகல் கவர்ன்மென்டாருடைய முன் உத்தரவு வேண்டும். ஆனால் ஒரே ஊரில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு யாதொரு முன் உத்தரவும் வேண்டியதில்லை.

2 தம்முடைய காரியங்களை நடத்துவதற்காக தாம் எற்பாடு செய்யும் இடத்திலும் காலங்களிலும் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்காபோர்டும் குறைந்தபக்ஷம் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது (மீட்டிங்கை) கூட்ட வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒவ்வொரு மாதத்திலும் குறைந்தபக்ஷம் ஒரு தடவையாவது (மீட்டிங்கை) கூட்ட வேண்டும். இன்னும் ப்ரெஸிடென்டானவர் எவ்வெப் பொழுது கூடவேண்டுமென்று உத்திரவு இடுகிறாரோ அந்தந்த காலத்திலும் ஒரு மீட்டிங்கு கூடவேண்டும்.

குறிப்புகள்.

டிஸ்டிரிக்ட் போர்டுகளும் தாலூக்கா போர்டுகளும் இரண்டு மாதத்திற்கொரு தடவையாவது மீட்டிங்கு கூடவேண்டும் பஞ்சாயத்துகள் ஒரு மாதத்திற் கொருதரமாவது மீட்டிங்கு கூடவேண்டும். ஆனால் ப்ரெஸிடென்டானவர் அவசியமாயிருக்கும்போது அடிக்கடி அதாவது ஒரு மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவை மீட்டிங்கைக் கூட்டலாம்.

இந்த விதியில் சொல்லப்பட்ட மீட்டிங்கானது சாதாரண மீட்டிங்கு (Ordinary Meeting) என்று சொல்லப்படும். 4-வது விதியில் சொல்லப்பட்டுள்ள மீட்டிங்கானது ஸ்பெஷல் மீட்டிங்கு (Special Meeting) என்று சொல்லப்படும். லோகல் போர்டுகள் கிரமமாக கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில்தான் (அதாவது மீட்டிங்கில்தான்) தமது காரியத்தை நடத்தலாமேயொழிய ஒவ்வொரு அங்கத்தினரும் தமது வீட்டுக்குள்ளிருந்து கொண்டே மீட்டிங்கை நடத்துவதற்கில்லை. (a).

ஒரு மீட்டிங்கு கிரமமாக கூட்டப்பட்ட பிறகு அதை தன்னிஷ்டமாக ப்ரெஸிடென்டானவர் கலைத்து விடுவதற்கில்லை அவர் அந்த மீட்டிங்கில் பிரசன்னமாயிருக்கும் அங்கத்தினர்களுடன் கலந்துகொண்டுதான் அதைக் கலைக்க வேண்டும். (b). ஒரு மீட்டிங்கானது கூடின பிறகு ப்ரெஸிடென்டானவர் தன்னிஷ்டப் பிரகாரம் அதைக் கலைத்து விடுவதாக ஏதா

(a) சிவசங்கரம் பிள்ளை vs. இந்தியா சக்கிரவர்த்தி—1 (1929) அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை ரிப்போர்ட்டுகள் பக்கம் 6.

(b) காளிதாஸ் vs. தகோர் டௌன் முனிசிபாலிடி 7 Bom. 399.

வது உத்திரவிடும்பக்ஷத்தில் அந்த மீட்டிங்கில் கூடியிருக்கும் மற்ற அங்கத்தினர்கள் தங்களுக்குள் ஒருவரை அக்கிராசனாதிபதியாக நியமித்து மீட்டிங்கை நடத்தி வைப்பதற்கு உரிமையுள்ளவர்களாவார்கள். அப்படி நடத்தின மீட்டிங்கானது மிகவும் சரியான மீட்டிங்காகும். இப்படி இங்கிலாந்தில் 1894-ம் வருஷத்தில் நாஷனல் ட்வேல்லிங்ஸ் கோசைடி vs. ஸைக்ஸ் என்னும் கேசில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு மீட்டிங்குக்காக நியமிக்கப்பட்ட தினத்தில் மீட்டிங்கு கூடவேண்டிய க்வோரம் (வேண்டிய நபர்கள்) இல்லாதபக்ஷத்தில் அப்படி கூடியிருக்கும் நபர்கள் மாத்திரம் ஒரு மீட்டிங்காகச் சேர்த்து அந்த மீட்டிங்கை ஒதுக்கி வைப்பதற்கில்லை. ஆனால் ஒரு க்வோரத்திற்கு வேண்டிய நபர்கள் சேர்ந்திருக்கும்பக்ஷத்தில் அவர்கள் அந்த மீட்டிங்கை மற்றொரு தினம் ஒதுக்கிவைக்கலாம். ஒரு லோகல் போர்டின் மீட்டிங்கானது ஒரு குறிப்பிட்ட தினத்தில்தான் நடத்தப்பட வேண்டுமென்று விதிகளில் யாதொரு நிர்ணயமும் கிடையாது. (a).

ஒரு மீட்டிங்கு நடத்துகொண்டிருக்கையில் ஒருவரை ஒருவர் சற்று வித்தியாசமாகப் பேசினதாக ஏற்படுமானாலும் அதைப் பற்றி அவர் புகார் சொல்லி சிவில் கோர்ட்டுகளில் பரிஹாரம் தேடுவதற்கில்லை ஆனால் மீட்டிங்குக்கு வெளியே வந்து ஒருவரை ஒருவர் திட்டி அவதூறு செய்யும் பக்ஷத்தில் அதைக் குறித்து ஒருவர்க்கொருவர் பரிஹாரம் தேடலாம். (b).

ஒரு மீட்டிங்கில் ப்ரெஸிடென்டானவர் சரியாக நடத்துகொள்ளாமலும் காரியங்களைச்சரிவர நடத்தாமலும் இருக்கும்பக்ஷத்தில் யாதொரு அங்கத்தினர் அதைக் குறித்து கோர்ட்டில் பரிஹாரம் தேடலாம் (c).

3. (1) பஞ்சாயத்துகளாக யிருந்தால் அந்த மீட்டிங்கு கூடும் தினத்திற்கு முன்பாக மூன்று முழுநாட்களுக்கு முன்பாகவும், டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா போர்டுகளாயிருந்தால் அந்த மீட்டிங்கு கூடும் தினத்திற்கு பத்து முழுநாட்களுக்கு முன்பாகவும், எந்த தினத்தில் எந்த காலத்தில் அந்த மீட்டிங்கு நடத்தப்படும் என்பதைப் பற்றியும், அந்த மீட்டிங்கில் செய்யப்பட வேண்டிய காரியங்கள் என்னென்னவென்பதைப் பற்றியும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டாலொழிய யாதொரு மீட்டிங்கும் கூட்டப்படக் கூடாது.

(a) ராஜாபாதர் முதலியார் vs. வில்வநாத செட்டி 57 M. L. J. 431.

(b) சுப்பராயடு vs. ஸ்ரீநிவாலாசாரியலு 52 M.L.J. 87—A I.R.1927 Mad 329.

(c) தணிகாசலம் செட்டியார் விஷயமாக 20 L. W. 589—A. I. R. 1924 Mad. 868.

(2) அவசர சந்தர்ப்பங்களில் ப்ரெஸிடென்டானவர் (1)-வது உப விதியில் காணப்பட்டிருக்கும் நோட்டீஸின் கால அளவைவிட குறைந்த ஒரு கால அளவிற்கு நோட்டீஸ் கொடுத்து ஒரு மீட்டிங்கைக் கூட்டலாம்.

குறிப்புகள்.

ஒரு மீட்டிங்கில் இன்னின்ன விஷயம் யோசிக்கப்படுமென்று ப்ரெஸிடென்டானவர் மெம்பர்களுக்கு முன்னமேயே தெரிவிக்க வேண்டும். அப்படி தெரிவிக்கப்படும் நோட்டீஸில் சகல விவரங்களும் இருக்க வேண்டும். அந்த நோட்டீஸில் காணப்படாத விஷயங்களை மீட்டிங்கில் வைத்து ஆலோசிப்பதற்கில்லை. நோட்டீசானது எல்லா மெம்பர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். எல்லா மெம்பர்களுக்கும் நோட்டீஸ் சேராமலிருக்கையில் அல்லது கொடுப்பதற்கு தகுந்த பிரயத்தனம் எடுத்துக் கொள்ளப்படாமலிருக்கையில் நடத்தப்பட்ட ஒரு மீட்டிங்கானது அடியோடே செல்லாது (a) நோட்டீஸ் கொடுக்கப்படும்விதம் இன்னதென்றும் எப்படி கொடுத்தால் நோட்டீஸ் சேர்ப்பிக்கப்பட்டதாகவே பாவிக்கப்படுமென்றும் 216-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. அதைப் பார்க்க.

நோட்டீஸ் சரியாக கொடுக்கப்படாமற்போனாலும் ஒரு மீட்டிங்கில் எல்லா லோகல் போர்டு அங்கத்தினர்களும் பிரசன்னமாயிருக்கும்பக்ஷத்தில் அந்த மீட்டிங்குசெல்லாதென்று சொல்வதற்கில்லையென்ற சமையில் நடந்த(மல்கிரேவ் vs.நெவின்சன்)என்னும்கேசில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு மெம்பர் தன்னுல் மீட்டிங்குக்கு வரமுடியாதென்று சொன்னலும் அவருக்கு கட்டாயம்நோட்டீஸ் கொடுக்கவேண்டும்(b).நோட்டீசுகள் கொடுக்கப்படுவதில் அவைகள் வெளிப்படையாகவும் ஸ்பஷ்டமாகவும், மறைவிடமாயில்லாமலும் பூரணமாகவும் இருக்க வேண்டும்

ஒரு மீட்டிங்கைப் பற்றி ப்ரெஸிடென்டானவர் நோட்டீஸ் கொடுக்கும்போது ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக நோட்டீஸ் கொடுக்க வேண்டுமேயொழிய பொதுவாக அந்த லோகல் போர்டின் மெம்பர்களுக்கு ஒரு நோட்டீஸ் கொடுப்பதாக இருக்கக்கூடாது. யாதொரு நோட்டீசும் இல்லாமலே எல்லா நபர்களும் சேர்ந்து பிரசன்னமாயிருக்கும்பக்ஷத்தில் அந்த மீட்டிங்கு செல்லத்தகுந்ததல்லவென்று சொல்லுவதற்கில்லை.

நோட்டீஸ் கொடுக்கும் விஷயமாக யாதொரு சந்தேகம் கிளம்பும்பக்ஷத்தில் லோகல் போர்டானது வேண்டிய சாங்கியங்களை செய்யும்பக்ஷத்தில் லோகல் போர்டே சரியாக நடந்துகொண்டதாக ஒரு அனுமானம் ஏற்படும்.

(a) கோபால் நாராயணன் vs. ஷண்முகப்பா A.I.R.1927 Bom.603.
(b) அரசர் vs. லாங்ஹார்ன் (18 6) 7 N & M. 203.

இந்த விதியில் மூன்று முழுநாட்களென்றும், பத்து முழுநாட்களென்றும் உள்ளதின் அர்த்தம் என்னவென்றால், நோட்டீஸில் கொடுக்கப்பட்ட தினத்திற்கும் மீட்டிங்கு கூடுவதற்கு நிர்ணயிக்கப்பட்டதினத்திற்கும் இடையில் மூன்று அல்லது பத்து முழுநாட்கள் இருக்கவேண்டுமென்பது-ஒருநாள் என்பதற்கு காலை 6-மணி முதல் மருநாள் காலை 6-மணி வரையிலும் உள்ள 24-மணி நேரங்கொண்ட ஒரு நாள் என்று அர்த்தமேயொழிய காலை 6-மணி முதல் சாயந்திரம் 6-மணி வரையிலுள்ள நேரமானது ஒரு நாளென்று சொல்லப்படாது. (a).

இந்த விதியில் அவசர சந்தர்ப்பங்களில் மேலே சொல்லப்பட்ட மூன்று அல்லது 10-நாட்கள் நோட்டீஸ் இல்லாமலே ஒரு ப்ரெஸிடென்டானவர் ஒரு மீட்டிங்கை கூட்டலாமென்று சொல்லப்பட்டுள்ளது. அவசர சந்தர்ப்பம் என்பதற்கு அர்த்தமென்னவென்றால் இந்த விதியில் சொல்லப்பட்டுள்ள பிரகாரம் நோட்டீஸ் கொடுக்கப்படும்பக்ஷத்தில் எதற்காக அந்த மீட்டிங்கு கூட்டப்படுகிறதோ அந்த காரியமானது பயனற்றதாக போகக் கூடியதா யிருக்க வேண்டும்.

4. (1) ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு அந்த போர்டிலுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமலுள்ள அங்கத்தினர்களால் எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்ட வேண்டுகோளின்பேரில் அந்த போர்டின் ஒரு மீட்டிங்கைக் கூட்டலாம். ஆனால், அந்த வேண்டுகோளில், எந்த தினத்தில் என்ன காரியத்திற்காக அந்த மீட்டிங்கு நடக்கவேணுமென்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அந்த வேண்டுகோளானது, பஞ்சாயத்துகளின் விஷயத்தில் அந்த மீட்டிங்கு கூடப்பட வேண்டிய தினத்திற்கு பத்து முழுநாட்களுக்கு முன்பாகவும், டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா போர்டுகளாயிருந்தால் அந்த மீட்டிங்கு கூடப்பட வேண்டிய தினத்திற்குப் பதினைந்து முழுநாட்களுக்கு முன்பாகவும் அந்த லோகல் போர்டினுடைய ஆபீஸில், ஆபீஸ் நடக்கும் காலத்தில், ப்ரெஸிடென்டு செக்ரிடெரி, மானேஜர் அல்லது அந்த ஆபீஸை நடத்திவரும் யாதொரு நபரிடத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

(2) ப்ரெஸிடென்டானவர் அந்த வேண்டுகோள் கொடுக்கப்பட்ட நாற்பத்தெட்டுமணி நேர காலத்திற்குள் அந்த வேண்டுகோளில் குறிப்பிடப்பட்ட தினத்திலாவது அல்லது அதன் பிறகு

(a) கடலூர் முனிசிபல் கௌன்சில் vs. சுப்பிரமணிய அய்யர் 29 Mad 329—16 M. L. J. 101.

மூன்று நாட்களுக்குள்ளாவது ஒரு மீட்டிங்கை கூட்டக் தவறி விட்டால் அந்த வேண்டுகோளில் கையெழுத்து செய்யப்பட் டிருக்கும் நபர்களால் அந்த மீட்டிங்கு கூட்டப்படலாம். ஆனால், மேலே 3-வது விதியின் (1)-உபவிதியில் சொல்லப்பட்டிருக்கும் நோட் டீசை அந்த போர்டு-னுடைய இதர அங்கத்தினர்களுக்குக் கொடுக் கப்பட்டு அந்த மீட்டிங்கு கூட்டப்பட வேண்டும்.

(3) (1)-வது உபவிதியின்கீழாவது அல்லது (2)-வது உபவித யின் கீழாவது கூட்டப்படும் யாதொரு மீட்டிங்கும் அந்த போர்டின் ஆபீஸானது எவ்விடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத் தைத் தவிர வேறே யாதொரு இடத்தில் கூட்டப்படக்கூடாது.

குறிப்புகள்.

இந்த விதியானது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் புதியதாக அமைக்கப்பட்டது. இந்த விதியின் அம் சங்கள் இவ்விதியிலேயே மிகவும் ஸ்பஷ்டமாக விளக்கப்பட்டுள்ளன. இவ் விதியில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பின்வருமாறு;—

(1) இவ்விதியானது ஒரு ஸ்பெஷல் மீட்டிங்கைப் பற்றினது.

(2) ஒரு லோகல் போர்டில் எத்தனை அங்கத்தினர் உள்ளனரோ அத் தனை அங்கத்தினரில் 3-ல் ஒரு பங்குள்ள அங்கத்தினரால் எழுத்து மூலமாக ஒரு குறிப்பிட்ட தினத்தில் மீட்டிங்கு கூடவேண்டுமென்று ஒரு வேண்டு கோள் கொடுக்கப்படும்பக்ஷத்தில் ப்ரெஸிடென்டு அப்படி கொடுக்கப்பட்ட நேரம் முதல் 48-மணி நேரத்துக்குள் எந்த தினம் மீட்டிங்கு கூட்டப்பட வேண்டுமென்று நோட்டீசு செய்யப்பட்டதோ அன்றையதினமாவது அல்லது அது முதல் 3-தினத்திற்குள்ளாவது ஒரு மீட்டிங்கு கூடவேண்டுமென்று நோட் டீஸ் தெரிவிக்க வேண்டும்.

(3) ஆனால் அப்படி கொடுக்கப்படும் வேண்டுகோளானது, என்றைய தினம் மீட்டிங்கு கூடவேண்டுமென்றுசொல்லப்படுகிறதோ அன்றையதினத் திற்கு, பஞ்சாயத்துகளா யிருந்தால் 10-முழுநாட்கள் முன்பாகவும் டௌ ன்க்கா அல்லது டிஸ்டிரிக்ட் போர்டுகளாயிருந்தால் 15-முழுநாட்கள் முன்ன தாகவும் கொடுக்கப்பட வேண்டும். வேண்டுகோளில் என்றையதினம் மீட் டிங்கு கூட்டப்படவேண்டுமென்றுசொல்லப்படுகிறதோ அதற்கு முறையே 10-அல்லது 15-நாட்களுக்கு முன்னடியாக கொடுக்கப்படாவிட்டால் நோட் டீஸ் அடியோடே செல்லாது. அதை ப்ரெஸிடென்டு அங்கீகரிக்க வேண் டிய அவசியம் ஏற்படாது.

(3) வேண்டுகோளைப் பெற்றுக்கொண்ட 48-மணி நேரத்திற்குள் ப்ரெஸிடென்டானவர் மீட்டிங்கைக் கூட்டுவதாக ஒரு நோட்டீஸ் தெரிவிக்

காவிட்டால் அங்கத்தினர்களே 3-வது விதியில் கண்டுள்ள பிரகாரம் ஒரு மீட்டிங்கைக் கூட்டலாம். அதாவது அவர்கள் ப்ரெஸிடென்டின் கடமையைத் தாங்களே வகித்து மீட்டிங்கைக் கூட்டலாம்.

(5) இம்மாதிரியாக கூட்டப்பட்ட மீட்டிங்குகள் அந்த லோகல் போர்டானது எவ்விடத்தில் உள்ளதோ அவ்விடத்திலேயே கூட்டப்பட வேண்டும்.

ஒரு ப்ரெஸிடென்டு அகாரணமாக வேண்டுமென்று ஒரு மீட்டிங்கைக் கூட்ட மறுக்கும்பக்ஷத்தில் அவர் 43-வது பிரிவின்கீழ் இந்த ஆக்டின் அம்சங்களை மிறி நடப்பதாகவே கவனிக்கப்படுவார். ஆகையால் ப்ரெஸிடென்டின் நடத்தையைக் குறித்து லோகல் போர்டு மெம்பர்கள் லோகல் கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்கலாம்.

ஒரு ப்ரெஸிடென்டானவர், தம்மிடம் கொடுக்கப்பட்ட வேண்டுகோளில் என்றையதினம் மீட்டிங்கு கூடவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளதோ அன்றையதினமேதான் கட்டாயமாக மீட்டிங்கைக் கூட்டவேண்டும் என்று யாதொரு நிர்ப்பந்தம் கிடையாது அங்கத்தினரால் குறிப்பிடப்பட்ட தினத்தில் மீட்டிங்கைக் கூட்டுவதற்கு அநேக விதமான தடங்கல்கள் இருக்கலாம். அல்லது அன்றையதினம் ப்ரெஸிடென்டுக்கு பல முக்கியமான அலுவல்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆகையால் அன்று முதல் 3-நாட்களுக்குள் எந்த தினத்திலாவது ஒரு மீட்டிங்கைக் கூட்டலாம் என்றும் அவ்வளவு வரையிலும் ஒரு ப்ரெஸிடென்டானவர் தனது சுயேச்சையைச் செலுத்தலாமென்றுமுள்ளது. ஆனால் ப்ரெஸிடென்டுகள் வேண்டுமென்று தம்மிடம் வேண்டுகோளைக் கொடுத்த அங்கத்தினர்களை அவமானப்படுத்த வேண்டி அவர்கள் குறிப்பிட்டதினத்தைத்தவிர வேறுதினத்தில் மீட்டிங்கை வைக்கும்படி செய்யக்கூடாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் ப்ரெஸிடென்டுகள் கூடிய வரையிலும் தாங்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்குத் தகுந்த காரணத்தைத் தெரிவிப்பது நலமாகும்.

இந்த விதியில், (1)-வது உப விதியில் "அந்த போர்டிலுள்ள அங்கத்தினர்களில்" என்றுள்ளதை நாம் கவனிக்கவேண்டும். சாதாரணமாக, ஒரு குறிப்பிட்ட லோகல் போர்டில் 24 அங்கத்தினர்கள் இருக்கலாம் என்று கவர்ன்மெண்டு ஏற்படுத்தியிருப்பதாக வைத்துக்கொள்வோம். ஆனால் அந்த போர்டில் 3-ஸ்தானங்கள் காலியாயிருந்தன. இந்த சந்தர்ப்பத்தில் ஒரு ஸ்பெஷல் மீட்டிங்கு கூட வேண்டுமென்று வேண்டுகோள் செய்பவர்கள் 8-பேருக்குக் குறையாமல் இருக்கவேண்டுமா அல்லது 7-பேர்களுக்குக் குறையாமல் இருந்தால்போதுமா என்பது முக்கியமான கேள்வியாகும். "அந்த போர்டிலுள்ள" என்பதினால் அந்த போர்டில் தற்காலத்தில் எவ்வளவு அங்கத்தினர்கள் உள்ளனரோ அதில் 3-ல் ஒரு பங்கு என்றுதான்

அர்த்தமாகும். அதாவது 7-நபர்கள் இருந்தாலே போதுமானது. இல்லாவிட்டால் சட்டசபையார், "அந்த போர்டிலுள்ள" என்றில்லாமல் "அந்த போர்டில் இருக்கவேண்டிய" என்று ஸ்பஷ்டமாக கூறியிருப்பார்கள்.

"ஆபீஸ் நடக்கும் காலத்தில்" என்பதினால் சாதாரணமாக லோகல் போர்டு ஆபீசுகள் காலை 11-மணி முதல் சாயங்காலம் 5-மணி வரையில் நடப்பதால் அதற்குள்ளாக வேண்டுகோள்கள் லோகல் போர்டு ஆபீசுகளில் கொடுக்கப்பட வேண்டுமென்பது. சிற்சில இடங்களில் ஆபீஸ் நடக்கும் காலமானது மாற்றப்படலாம். ஒவ்வொரு லோகல் போர்டுக்கும் அதன் ஆபீஸ் நடக்கும் காலம் என்னவென்று அறிவது முக்கியமாகும்.

இந்த விதியின் கீழ் அங்கத்தினர்களால் கூட்டப்பட்ட மீட்டிங்கானது ஒரு லோகல் போர்டு ஆபீஸிலேயே நடக்க வேண்டுமென்று உள்ளதால் அத்தகைய மீட்டிங்கை ப்ரெஸிடென்டானவர் நடக்கவொட்டாமல் தடுப்பதற்கில்லை. அப்படி தடுப்பது ஒரு குற்றமாகும்.

ஆனால் ப்ரெஸிடென்டானவர் அந்த மீட்டிங்கில் பிரசன்னமாகும் பக்ஷத்தில் அவரேதான் அதில் அக்ராசனம் வகிக்கவேண்டும். ப்ரெஸிடென்டில்லாவிட்டால் வைஸ் ப்ரெஸிடென்டும் அவரும் இல்லாவிட்டால் அங்கத்தினர்களுக்குள்ளேயே தேர்ந்தெடுக்கப்படும் ஒரு அங்கத்தினரும் அக்ராசனம் வகிக்கலாம்.

5. லோகல் போர்டாரின் மீட்டிங்குகள் எல்லாவற்றிலும் பொது ஜனங்கள் வந்திருப்பது சாத்தியமாயிருக்க வேண்டும்; ஆனால் அக்ராசனம் வகிக்கும் அங்கத்தினர் குறித்த யாதொரு விஷயத்தில், சாதாரணமாய் பொது ஜனங்களாவது குறித்த யாதொரு நபராவது வெளியே போகவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

குறிப்புகள்.

லோகல் போர்டுகள் நடத்தும் மீட்டிங்கின் நடவடிக்கைகளை கவனிப்பதற்கு எல்லா பொது ஜனங்களுக்கும் உரிமை உண்டு ஆனால் அந்த மீட்டிங்கில் அக்ராசனம் வகிப்பவர் ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் ஒரு நபர் அல்லது பொதுஜனங்கள் அந்த மீட்டிங்கில் இருப்பதற்கில்லையென்று உத்தரவிடும்பக்ஷத்தில் அவர்கள் வெளியே போகவேண்டும். இம்மாதிரி ப்ரெஸிடென்டுகள் உத்தரவிடுவதில் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். சாதாரணமாக லோகல் போர்டுகளின் நடவடிக்கைகளில் யாதொரு ரகசியம் அல்லது மறைவே இருப்பதற்கில்லையாதலால் எல்லா பொது ஜனங்களும் அந்த மீட்டிங்கில் இருந்து அதைக் கவனிக்க உரிமையுள்ளவர்களாவார்கள். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ப்ரெஸிடென்டானவர், யாதொரு சம்வாதம் நடக்கும் காலத்திலாவது அல்லது ஆலோசனை

நடக்கும் காலத்திலாவது பொது ஜனங்களாவது அல்லது ஒரு குறிப்பிட்ட நபராவது அதை கவனிப்பதிலுல் கலகம் அல்லது அமைதி பங்கம் இவை ஏற்படுமென்றாவது அல்லது இதைப்போன்ற தகுந்த காரணத்தைக்கொண்டாவது மீட்டிங்கு ரகசியமாக நடக்கவேண்டுமென்று உத்தரவிடலாம்.

6. யாதொரு மீட்டிங்கில் லோகல் போர்டாருக்கு முன் வரக்கூடிய விஷயங்களெல்லாம், அந்த மீட்டிங்குக்கு வந்திருந்து ஓட்டு கொடுக்கும் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்பட வேண்டும்; மேலும், ஓட்டுகள் சமமாக வேறுபடுகிற விஷயத்தில் அக்ராசனம் வகிக்கும் மெம்பர் இரண்டாவது அல்லது முடிவுக்கும் காஸ்டிங் (Casting) ஓட்டைப்பெற்று அதைக் கொடுக்கத் தக்கவராவார்.

குறிப்புகள்.

இந்த விதியில் "அதைக்கொடுக்கத்தக்கவராவார்" என்னும் பதங்கள் புதியதாக 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினுல் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணம் பின் வருமாறு:—

ஒரு லோகல் போர்டில் நடக்கும் தீர்மான விஷயமாக மீட்டிங்கில் பிரசன்னமாயிருக்கும் நபர்கள் சரிபாதியாக பிரிந்திருப்பார்களானில், ப்ரெஸிடென்டானவர் தமக்குள்ள காஸ்டிங் ஓட்டை கொடுக்காத பக்ஷத்தில் அந்த தீர்மானத்தின் கதி இன்னவென்று தெரியாதாதலால் அந்த ஓட்டை கட்டாயம் கொடுத்தே தீரவேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டது.

ஒரு லோகல் போர்டின் முன்பாக விசாரணைக்கு வரவேண்டிய விஷயங்கள் தீர்மானங்களின் ரூபமாகவே தோன்றும். லோகல் போர்டுகளும் ப்ரெஸிடென்டுகளும் தீர்மானங்களை நடத்தேற்றுவதில் மிகவும் ஜாக்ரதையாயிருக்க வேண்டும். ஒரு லோகல் போர்டு மீட்டிங்கில் யாதொரு தீர்மானமானது பிரேரேபிக்கப்படுமானுல் அது முடிவாக நடந்தேறுவதற்குள் அதற்குப் பலவிதமான இடையூறுகள் ஏற்படலாம். உதாரணமாக, அந்தத் தீர்மானத்தை ஒரு நபர் பிரேரேபித்து மற்றொரு நபர் ஆமோதித்த பிறகு ஒரு அங்கத்தினர். அதற்கு திருத்தப் பிரேரேபணையொன்றைக் கொண்டு வரலாம். அந்த திருத்தப் பிரேரேபணையானது ஆமோதிக்கப்பட்டதானுல் அது அங்கீகரிக்கப்பட்டோ அல்லது நிராகரிக்கப்பட்டோ ஒருவாறு முடிந்த பிறகுதான் மூல பிரேரேபணையானது விசாரிக்கப்பட வேண்டும். ஒரு வேளை ஒரு அங்கத்தினரின் திருத்தப்பிரேரேபணைக்கும் ஒரு திருத்தப்பிரேரேபணை கொண்டுவரப்படலாம். அப்படியானுல் ப்ரெஸிடென்டானவர் அந்தப்பிரேரேபணையை எல்லாவற்றிற்கும்முன்பாக எடுத்து விசாரிக்கும்படி செய்யவேண்டும். யாதொரு பிரேரேபணையானது விசாரணையிலிருக்கையில், அவ்விசாரணையைப் பற்றிய சம்வாதமானது மற்றொருதினம் ஒதுக்கிவைக்கப்பட வேண்டு

மென்று ஒரு நபர் பிரேரேபணையைக்கொண்டுவரலாம் அதற்கு Motion for Adjournment என்று சொல்லுவார்கள். ப்ரெஸிடென்டானவர் அப்படி ஒரு பிரேரேபணை கொண்டுவரப்படுமானால் உடனே அதைப் பற்றி மீட்டிங்கின் அபிப்பிராயத்தை அறிய அந்த பிரேரேபணையை ஓட்டுக்கு விடவேண்டும். ஒரு சம்வாதமானது பாதி நடந்துகொண்டிருக்கையில் சம்வாதம் முடிய வேண்டுமென்று ஒரு நபர் ஒரு பிரேரேபணைக் கொண்டு வரலாம். இதற்கு Closure Motion என்று பெயர். இதைப்பற்றியும் உடனே ப்ரெஸிடென்டானவர் மீட்டிங்கினுடைய அபிப்பிராயத்தை அறிவதற்காக ஓட்டுக்கு விடவேண்டும். Closure Motion ஆனது, மீட்டிங்கினால் அங்கீகரிக்கப்பட்டதானால் உடனே ப்ரெஸிடென்டானவர் சம்வாதத்தை நிறுத்திவிட்டு அசல் பிரேரேபணையின் பேரில் ஓட்டு எடுக்க வேண்டும். ஒரு பிரேரேபணையைப் பற்றின விசாரணையானது சம்வாதத்தில் இருக்கையில் ஒரு அங்கத்தினர் பேசும் விஷயங்கள் பிரேரேபணைக்கு சம்பந்தப்பட்டதல்லவென்றும் அவர் அனுவதியமான சமாசாரங்களை எடுத்து பேசக்கூடாது என்றும் ஒரு அங்கத்தினர் ஆக்ஷேபிக்கலாம். அதற்கு Point of Order என்று பெயர். அதைப்பற்றி ப்ரெஸிடென்டேதான் உடனே தமது தீர்மானத்தைத் தெரிவிக்க வேண்டும். மீட்டிங்கில் ஆலோசனை செய்வதற்கு விடுவதற்கில்லை. இவ்வளவு தடைகளையும் கிரமப் பிரகாரம் நிதானமாக கவனித்த பிறகுதான் அதன் பிரேரேபணையின் முடிவு இன்னதென்று விளங்கும்.

ஒரு தீர்மானத்தின் விஷயமாக ஓட்டுகளை எடுப்பதில் எந்தெந்த நபர்கள் அந்த தீர்மானம் நடந்தேற வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்களோ அவர்கள் கைகளைத் தூக்க வேண்டும் என்று ப்ரெஸிடென்டு சொல்லவேண்டும் அதன் பேரில் ப்ரெஸிடென்டானவர் எண்ணி தீர்மானம் நடந்தேறியதா இல்லையா என்பதைத் தெரிவிக்க வேண்டும். பிரசன்னமாயிருக்கும் நபர்களில் பாதிக்குமேல் ஓட்டு கொடுக்கும்பக்ஷத்தில் அதாவது கையைத்தூக்கும்பக்ஷத்தில் தீர்மானம் நடந்தேறிவிட்டதாக கவனிக்கப்படும். ப்ரெஸிடென்டு எண்ணின விஷயமாக தீர்மானத்தை பிரேரேபித்த நபருக்கு சந்தேகம் இருக்கும்பக்ஷத்தில் அவர் எவரெவர்கள் ஓட்டு செய்தார் என்றும் எவரெவர்கள் ஓட்டு செய்யவில்லையென்றும் விவரம் கேட்கலாம். இதற்கு Demanding Poll என்று சொல்லுவதுண்டு.

ஒரு தீர்மானத்தின் விஷயமாக கொடுக்கப்படும் ஓட்டுகள் சமமாக இருக்கும்பக்ஷத்தில் ப்ரெஸிடென்டானவர் தமக்குள்ள இரண்டாவது ஓட்டு அதாவது Casting Vote-ஐ செய்து தீர்மானத்தை ஒரு வழியாக நடந்தேற்ற வேண்டும். அவர் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த ஓட்டை கட்டாயம் செலுத்தியே தீரவேண்டும்.

ப்ரெஸிடென்டும் ஒரு அங்கத்தினராதலால் சாதாரணமாக தீர்மானங்களின் விஷயமாக அவருக்கும் ஒரு சாதாரண ஓட்டு உண்டு. மேலே சொன்ன கரஸ்டிங் ஓட்டு என்பது விசேஷ ஓட்டாகும். இந்த ஓட்டை மேலே சொல்லப்பட்ட விதமாகத்தான் உபயோகப்படுத்தலாம்.

பிரேரேபணைகள் கடைசியாக ஓட்டுக்கு விடப்படுவதற்குமுன் எந்தக் காலத்திலாவது பிரேரேபணையைச் செய்தவர் அவைகளை வாபீஸ் பெற்றுக் கொள்ளலாம். அதற்காக அவர் மீட்டிங்கினுடைய உத்தரவைப் பெற வேண்டும்.

7. யாதொரு லோகல் போர்டின் மீட்டிங்குக்கு அப்போது லோகல் போர்டிலிருக்கும் அங்கத்தினர்களில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்களாவது வந்திருந்தாலன்றி மற்றப்படி அம்மீட்டிங்கில் எந்த வேலையையும் நடத்தக்கூடாது.

குறிப்புகள்.

ஒரு லோகல் போர்டில் யாதொரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு அங்கத்தினர்கள் உள்ளனரோ அவர்களில் மூன்றில் ஒரு பங்காவது ஒரு மீட்டிங்கில் பிரசன்னமாயிருந்தாலொழிய அந்த மீட்டிங்கு நடப்பதற்கில்லை. ஒரு மீட்டிங்கு நடப்பதற்கு வேண்டிய அங்கத்தினர்களின் சங்கியையானது Quorum என்று சொல்லப்படும்.

8. யாதொரு மீட்டிங்கு கூடுவதற்கு நியமிக்கப்பட்ட காலத்துக்குப் பிறகு அரைமணி நேரத்துக்குள் வேண்டிய நபர்கள் க்வோரம் (Quorum) எற்படாவிட்டால், வந்திருக்கும் அங்கத்தினர்களெல்லாம் அதற்கப்புறமும் கார்த்திருக்கச் சம்மதித்தாலன்றி மற்றப்படி அந்த மீட்டிங்கை கலைத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்புகள்.

மீட்டிங்கு கூடுவதற்காக நியமிக்கப்பட்ட தினத்தில் குறிக்கப்பட்ட நேரத்திற்குப் பிறகு ½-மணி நேரத்திற்குள் வேண்டிய Quorum சேராவிட்டால் மீட்டிங்கு மற்றொரு தினம் நடக்கும்படியாக ஒத்திவைக்கப்படும். அந்த தினம் மீட்டிங்கு நடப்பதற்காக மற்றொரு தரம் எல்லா அங்கத்தினர்களுக்கும் நோட்டீஸில் தெரிவிக்கப்பட வேண்டும். மறுதினமே யாதொரு நோட்டீசும் இல்லாமல் மீட்டிங்கு நடப்பதற்கில்லை. (a).

9. யாதொரு லோகல் போர்டின் தீர்மானம் எதையும், அது விஷயமாகப் பிரத்தியேகமாய் கூட்டப்பட்ட யாதொரு மீட்டிங்கிலும்

(a) துவாரகாசசாரியலு vs. கோட்டப்பல்லி ஸ்ரீ கிருஷ்ணன் A. I. R. 1925 Mad 1152.

அங்கத்தினர்களில் ஜாரி செய்யப்பட்ட சங்கியையில் பாதிக்குக் குறையாதவர்களால் ஆகரிக்கப்பட்டதாயுள்ள அந்த போர்டின் யாதொரு தீர்மானித்தினுலுமன்றி மற்றப்படி, அது செய்யப்பட்ட பிறகு மூன்று மாதங்களுக்குள் திருத்தவும் கூடாது; ரத்து செய்யவும் கூடாது.

குறிப்புகள்.

ஒரு லோகல் போர்டானது கிரமமாய் யாதொரு தீர்மானத்தைச் செய்திருக்குமானுல், அந்த தீர்மானம் நடந்த தினம் முதல் 3-மாதங்களுக்குள் யாதொரு சாதாரண மீட்டிங்கிலும் அந்த தீர்மானமானது ரத்துசெய்யப்படுவதற்கில்லை. அந்த தீர்மானமானது மூன்று மாதங்களுக்குள் ரத்து செய்யப்பட வேண்டுமானுல் அதற்காகவென்று 4-வது விதியின்கீழ் கூட்டப்படும் ஒரு ஸ்பெஷல் மீட்டிங்கில்தான் ரத்து செய்யப்பட வேண்டும். அந்த மீட்டிங்கிலும் அந்த போர்டுக்கு இருக்க வேண்டிய சங்கியையில் பாதிக்குக் குறையாமல் உள்ள நபர்களால் அத்தீர்மானம் நடந்தேறப்பட்டால்தான் முந்திய தீர்மானம் ரத்து செய்யப்படலாம். இல்லாவிட்டால் ரத்துசெய்யப்படுவதற்கில்லை. ஆனுல் மூன்று மாதங்கள் கழிந்தபிறகு ஒரு சாதாரண மீட்டிங்கிலேயே மூந்தின தீர்மானமானது ரத்து செய்யப்படலாம்.

ஒரு லோகல் போர்டு தங்களில் ஒருவரை ப்ரெஸிடென்டாகவோ அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகவோ அல்லது வேறே ஒரு உத்தியோகஸ்தராகவோ தேர்ந்தெடுப்பதும் ஒரு தீர்மானமாகுமென்று கோர்ட்டுகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விதியானது மேலே 38-வது பிரிவின் கீழ் லோகல் கவர்ன்மென்டாருக்குள்ள உரிமைகளை எவ்விதத்திலும் தாக்கவில்லை. ஆகையால் அத்தகையை உரிமைகள் எக்காலத்திலும் செலுத்தப்படலாம்.

10. லோகல் போர்டின் ஒவ்வொரு மீட்டிங்கிலும் நடத்தப்படும் நடவடிக்கை குறிப்புகளை எழுதி, அது காரியத்துக்காக வைத்து வரப்படும் புஸ்தகத்தில் பதிவு செய்யவேண்டியது முல்லாமல், மெடி மீட்டிங்கில் அக்கிராசனம் வகித்த அங்கத்தினராவது அவரில்லாவிட்டால் அந்த மீட்டிங்குக்கு வந்திருந்த அங்கத்தினர்களில் எவரேனும் ஒருவராவது அதில் கையெழுத்து பண்ணவும் வேண்டும்; மேலும், இந்த ஆக்டின்படி யாதொரு வரி செலுத்தும் எந்த நபராகிலும் நியாயமான எல்லாக் காலங்களிலும் கட்டணம் இல்லாமலும் மெடி குறிப்புகளை லோகல் போர்டின் ஆபீஸிலே பார்வையிடுவது சாத்தியமாயிருக்க வேண்டும்.

குறிப்புகள்.

ஒரு மீட்டிங்கில் நடக்கும் நடவடிக்கைகளைப்பற்றி ஒரு குறிப்பு புஸ்தகம் வைக்கப்படவேண்டும். அந்தப்புஸ்தகத்தில், மீட்டிங்கில் செய்யப்படும் தீர்மானங்களும் ஆக்ஷேபனைக் குறிப்புகளும் சம்வாதங்களின் சாராம்சமும் எழுதப்படவேண்டும். இந்தப் புஸ்தகத்திற்கு Minutes Book என்று பெயர். இதன் காரணம் என்னவென்றால் யாதொரு குறிப்பிடப்பட்ட பிரேரேபணையின் விஷயமாக லோகல் போர்டு மெம்பர்கள் எவ்வாறு அபிப்பிராயப்பட்டனரென்று தெரியவேண்டும். யாதொருகுறிப்பிட்ட தீர்மானத்தின் விஷயமாக ஒரு அங்கத்தினர் தம்முடைய அபிப்பிராயபேதத்தைத் தெரிவித்து அதை எழுதிக்கொள்ளும்படி கேட்பின் அதை ப்ரெவிடென்டு அல்லது மீட்டிங்கை நடத்துபவர் கட்டாயம் எழுதிக்கொள்ள வேண்டும். இதுதான் முக்கியமானது. இது அவருடைய கடமையாகும்.

மீட்டிங்கின் நடவடிக்கைகளைப்பற்றின குறிப்புகள் வரி செலுத்துவோர்களால் பார்வையிடப்படும்படி எப்பொழுதும் தயாரிலேயே இருக்க வேண்டும். எவராவது அந்த குறிப்புகளை பார்க்கவேண்டுமென்று அபிப்பிராயப்படும்பக்ஷத்தில் லோகல் போர்டு உத்தியோகஸ்தர்கள் தடையில்லாமல் காட்டவேண்டும்.

11. (1) ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் அல்லது தாலூக்கா போர்டின் மீட்டிங்கில் நடந்த நடவடிக்கைக் குறிப்புகளின் நகல் ஒன்று டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில் சந்தர்ப்பத்திற்கு தகுந்தாப்போல் டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா பண்டின் செலவிலே பிரசுரிப்பதற்காக நிர்ணயிக்கப்படக்கூடிய நபருக்கும் காலத்துக்குள்ளும் அனுப்பப்படவேண்டும்.

(2) ஒரு பஞ்சாயத்தில் நடக்கும் ஒவ்வொரு மீட்டிங்கினுடைய நடவடிக்கைகளைப் பற்றின குறிப்புகளின் நகலானது அந்த மீட்டிங்கு நடந்த மூன்று தினங்களுக்குள் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டுக்கு அனுப்பப்படவேண்டும்.

(3) மேலே (2)-வது உப விதியில் சொல்லப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் விஷயமாக, அந்த மீட்டிங்கு நடந்த நாற்பத்தெட்டு (48)-மணி நேரங்களுக்குள் அந்த மீட்டிங்கில் பிரசன்னமாயிருந்த யாதொரு நபரிடமிருந்து ஏதாவது பேதக் குறிப்பானது வரப்பெற்றுக்கொள்ளப்பட்டால் அந்தக் குறிப்பும், அந்தஉபப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நடவடிக்கைக் குறிப்புகளின் நகலோடு அனுப்பப்பட வேண்டும்.

(4) மேலே (2), (3) இந்த உப விதிகளில் சொல்லப்பட்டிருக்கும் குறிப்புகளின் நகலானது இனி நிர்ணயிக்கப்படும் விதமாகவும், காலத்திற்குள்ளும் அளவு வரையிலும் டிஸ்டிரிக்ட்டு • கலெக்டருக்கு அனுப்பப்படவேண்டும்.

12. ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டானவர் போர்டினுடையவும் அதன் கமிட்டியினுடையவும் நடவடிக்கைக் குறிப்புகளையும் செக்காரடுகளையும் தம் வசத்தில் வைத்துக்கொண்டிருக்க வேண்டியதுமல்லாமல், டிஸ்டிரிக்ட்டு போர்டார் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய் நிச்சயிக்கக்கூடிய கட்டணங்களைச் செலுத்துவதன்மேல் அப்படிப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளுக்கும் செக்காரடுகளுக்கும் நகல்களைக்கொடுக்கலாம். மேடி நகல்களை 1872-ம் வருஷத்திய ஹிந்து தேசசத்து சாட்சிய ஆக்ட்டு 76-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி ஸெர்டிபை செய்ய வேண்டும்; மேலும் அந்தப்படி சர்ட்டிபை செய்யப்பட்ட நகல்களை மேடி ஆக்டின் 78-வது பிரிவைச் சேர்ந்த (5)-வது உபபிரிவில் குறிப்பிட்ட பிரகாரம் ஒரு முனிஸிபல் கூட்டத்தின் நடவடிக்கைகளை வெளிதமாக ருசுப்படுத்த உபயோகப்படுத்தலாமோ அதே விதமாக அந்த லோகல் போர்டாருடைய அல்லது அதன் கமிட்டியினுடைய நடவடிக்கைகளையும், செக்காரடுகளை ருஜுப்படுத்தவும் உபயோகிக்கலாம்.

குறிப்புகள்

லோகல் போர்டுகளின் ரிகார்டுகள் சர்க்காரைச் சேர்ந்த ரிக்கார்டுகளையொத்ததாகும். அவைகள் Public Documents எனப்படும். அவைகளின் நகல்கள் அசல் காபிகளைப்போலவே செலாவணியாக்கத் தக்கதாகும் a). ஒரு லோகல் போர்டுக்கும் மற்றொரு லோகல் போர்டுக்கும் நடக்கும் வர்த்தமானக் கடிதங்கள் பொதுவான (Public Documents) பத்திரங்கள் எனப்படும் (b). லோகல் போர்டு ரிகார்டுகளினுலும் பிளான் முதலியவைகளினுலும் குறிப்பிட்ட சொத்து முதலியவைகளின் ஸ்திதி என்னவென்று தெரியலாமேயொழிய அவைகளினுலேயே ஒரு நபருடைய பாத்தியா பாத்தியதை தீர்மானமாக ஏற்பட்டு விடாது. அவைகளைப்பற்றி கிரமமாகசோர்ட்டுகளில் தாவாசெய்து கொள்ள வேண்டும் (c).

(a) 17 All 293.
(b) பிரிதிவிசிங் vs. கோர்ட்டு ஆப் வார்ட்ஸ் 23 W. R. 272
(c) 31 M. L. J. கேசுகளின் குறிப்புகள் பக்கம் 7.

இந்து தேசத்து சாக்ஷிய ஆக்டின் 76, 78 பிரிவுகள் பின்வருமாறு:—

சர்க்கார் தஸ்தாவேஜுகளுக்கு சர்ட்டிபை செய்யப்பட்ட நகல்கள்

"**76**. ஏதைப் பார்வையிட எவனுக்காவது சுதந்தரமுண்டாயிருக்கிறதோ அப்படிப்பட்ட சர்க்கார் தஸ்தாவேஜை தன் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிற பிரதி சர்க்கார் உத்தியோகஸ்தரும், நகலுக்காக சட்டப்படிக்குண்டான கட்டணம் செலுத்திக் கேட்கப்படுவதன்மேல், அதற்கு நகல் தயார்செய்து, சங்கதிக்குத்தக்கபடி அப்படிப்பட்ட தஸ்தாவேஜு அல்லது தஸ்தாவேஜின் பாகத்திற்குச் சரியான நகலென்று அதினடியில் சர்ட்டிபிகேட் எழுதி தேதிபோட்டு அந்த உத்தியோகஸ்தர் தன்பெயராலும் உத்தியோகப் பெயராலும் கையெழுத்துப்பண்ணியும், முத்திரைபோடுவதற்குச் சட்டத்தினாலே அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருக்கு அதிகாரமுண்டாயிருந்தால் அந்தப்படியே முத்திரைபோட்டும், அந்த மளிதனுக்கு நகல் கொடுக்கவேண்டியது; அப்படி சர்ட்டிபை செய்யப்பட்ட அந்த நகல்கள் சர்ட்டிபை செய்யப்பட்ட நகல்களென்று சொல்லப்படும்.

விவரணம்—உத்தியோக அலுவலை சாதாரணமாய் நடத்துகிற தோரணையில் அப்படிப்பட்ட நகல்கள் கொடுக்க அதிகாரம் பெற்றிருக்கிறயாதொரு உத்தியோகஸ்தர் இந்தப்பிரிவின் தாத்பரியப்படி அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகளைத் தன் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிறவராக எண்ணப்படுவார்".

மற்ற சர்க்கார் தஸ்தாவேஜுகளுக்கு ருஜு.

78. "அடியில் கண்டிருக்கிற சர்க்கார் தஸ்தாவேஜுகளை எப்படி ருஜுப்படுத்தலாமென்றால்:—

(1) ப்ரிடிஷ் இந்தியாவில் துரைத்தனஞ்செய்கிற கவர்ன்மென்டாரால் அந்த கவர்ன்மென்ட் இலாகாக்களிலெதிலாவது பிறப்பிக்கப்பட்டாகிலும், அவ்வவ்விடத்திய யாதொரு கவர்ன்மென்டாராலாவது அந்த கவர்ன்மென்டின் யாதொரு இலாகாவிலாவது பிறப்பிக்கப்பட்டாகிலுமிருக்கிற ஆக்ட்டுகள் உத்தரவுகள் அல்லது விளம்பரங்களை,—

அந்தந்த இலாகாவின் தலைவரால் சர்ட்டிபை செய்யப்பட்டிருக்கிற அந்தந்த இலாகா ரிகார்ட்டினாலாவது,

அப்படிப்பட்ட யாதொரு கவர்ன்மென்டு உத்தரவினால் அச்சிடப்பட்டதாகப் பொருள்படுகிற யாதொரு தஸ்தாவேஜினாலாவது,

ருஜுப்படுத்தலாம்:

(2) சட்டநிர்மாண சபையாருடைய ப்ரொசீடிங்க்ஸை,—

அந்தந்த சபையாருடைய நடவடிக்கை வரலாற்றினுலாவது, பிரசித்தஞ் செய்யப்பட்ட ஆக்ட்டுகள் அல்லது சங்கிரக்கங்களாலாவது, கவர்ன்மென்ட் உத்தரவினுல் அச்சிடப்பட்டதாகப் பொருள்படுகிற நகல்களாலாவது,

ருஜுப்படுத்தலாம் :

(3) மகாராணியவர்களாலாவது ப்ரீவிகௌன்சில் என்னும்சபையாராலாவது மகாராணியவர்களுடைய கவர்ன்மென்டைச்சேர்ந்த யாதொரு டிபார்ட்மென்டாராலாவது பிறப்பிக்கப்பட்ட விளம்பரங்கள், உத்தரவுகள் அல்லது சட்டதிட்டங்களே;—

லண்டன் கெஜெட்டிலுள்ள நகல்கள் அல்லது எக்ஸ்ட்ராக்ட்டுகளினுலாகிலும், மகாராணியவர்களுடைய அச்சுக்காரனுல் அச்சிடப்பட்டதாகப் பொருள்படுகிற நகல்கள் அல்லது எக்ஸ்ட்ராக்ட்டுகளினுலாகிலும்,

ருஜுப்படுத்தலாம் :

(4) அந்நியதேசத்து துரைத்தனத்தாருடைய ஆக்ட்டுகளேயாவது சட்ட நிர்மாண சபையாருடைய ப்ரொஸீடிங்ஸையாவது,—

அவர்களுடைய அதிகாரத்தினுலே பிரசுரஞ்செய்யப்பட்ட நடவடிக்கை வரலாற்றினுலாகிலும், அப்படிப்பட்டதாக அந்தத்தேசத்தில் சாதாரணமாய் வரப்பற்றிக்கொள்ளப்பட்ட வரலாற்றாலாகிலும், அந்தத்தேசம் அல்லது அரசின் முத்திரை போட்டு லெர்டிபை செய்யப்பட்ட நகலினுலாகிலும், ஆலோசனை சபையிலுள்ள இந்தியா கவர்னர் ஜனரலவர்களால் செய்யப்பட்ட ஏதாவது சர்க்கார் ஆக்ட்டிலே அதை மஞ்சூர்செய்திருப்பதனுலாகிலும்,

ருஜுப்படுத்தலாம்.

(5) ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள முனிசிபல் சங்கத்தாருடைய ப்ரொசீடிங்ஸை,—

அப்படிப்பட்ட ப்ரொசீடிங்ஸுக்கு-அதைசட்டப்படி வைத்துக்கொண்டிருக்கிறவரால் சர்ட்டிபை செய்யப்பட்ட நகலாலாவது; அப்படிப்பட்ட சங்கத்தாருடைய உத்தரவினுலே பிரசுரஞ் செய்யப்பட்டதாகப் பொருள்படுகிற அச்சு புஸ்தகத்தினுலாவது,

(6) அந்நியதேசத்திலுள்ள வேறே எவ்வகையான சர்க்கார்தஸ்தவேஜுகளேயும்,—

அசலினுலாவது சட்டப்படி அசலைத் தன்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிற உத்தியோகஸ்தரால் கிரமமாய் நகல் லெர்டிபைசெய்யப்பட்டிருக்கிறதென்று நோட்டரிபப்ளிக் அல்லது ப்ரிடிஷ் கான்ஸல் அல்லது-தத்துவக் கட்டளைபெற்ற எஜெண்ட் என்னும் அதிகாரியினுடைய முத்திரைபோட்டிருக்கிற சர்டிபிகேட்டு சகிதமாயும், அந்த அந்நிய தேசத்துச் சட்டப்படி அந்த

தல்தவேஜு இப்படிப்பட்டதென்கிற ருஜுவின்மேலும், அந்த தஸ்தவேஜை சட்டப்படி வைத்துக்கொண்டிருக்கிறவரால் சர்ட்டிபைசெய்யப்பட்ட நகலிலாவது,

ருஜுப்படுத்தலாம்.

13. ஒரு லோகல் போர்டினால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு கமிட்டியின் நடவடிக்கைகளானது எழுத்து மூலமாக பதிவு செய்யப்பட்டு அந்த போர்டுக்கு அனுப்பப்பட வேண்டும்.

3-வது ஷெட்யூல்.

தேர்ந்தெடுப்பவர்களுக்குரிய யோக்கியதாம்சங்கள்.

(52— C) பிரிவைப் பார்க்கவும்)

லோகல் போர்டு அங்கத்தினர்களை தேர்ந்தெடுப்பவர்கள்.

1. யாதொரு நபர்;—

(a) யாதொரு வருஷத்திற்கு முந்தின வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டுக்காவது ப்ரதேச கவர்ன்மெண்டுக்காவது அல்லது சென்னை மாஹாணத்திற்குள் யாதொரு ப்ரதேச அதிகாரிக்காவது செலுத்தக்கூடிய யாதொரு வரி இடப்பட்டிருந்தாலும்; அல்லது,

(b) சந்தர்ப்பத்துக்கு தகுந்தாப்போல் அந்த டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா அல்லது கிராமத்தில் உள்ள நிலத்திற்கு ஒரு ரயத்வாரி பட்டாதாரராகவாவது அல்லது ஒரு இனாம்தாரராகவாவது ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருந்தாலும்; அல்லது,

(c) அந்த டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா அல்லது கிராமத்தில் ஒரு ரயத்வாரி பட்டாதாரரிடமாவது அல்லது ஒரு இனாம்தாரரிடமாவது அல்லது அப்படிப்பட்ட பட்டாதாரர் அல்லது இனாம்தாரரின்கீழ் உள்ள ஒரு பாயக்காரியினிடமாவது எழுத்து மூலமாக வுள்ள ஒரு குத்தகை அல்லது சுவாதீனபத்திரம் மூலமாக நிலத்தை சுவாதீனம் கொண்டிருந்தாலும்; அல்லது,

(d) அந்த டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா அல்லது கிராமத்தில் 1895-ம் வுருத்திய மலபார் லாண்ட் ரெஜிஸ்டிரேஷன் ஆக்டு என்னும் சட்டத்தின் 14-வது பிரிவின்கீழ் நிலத்தின் சொந்தக்காரரோடு

ஜாயிண்டாக அதை அனுபவிப்பவரென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலும்; அல்லது,

(e) அந்த டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா அல்லது கிராமத்தில் 1908-ம் வருடத்திய சென்னை எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டில் விளக்கப்பட்டிருக்கிற பிரகாரம் ஒரு நில ஸ்வான்தாராக ஒரு ஆஸ்தியைப் பெற்றிருந்தாலும்; அல்லது,

(f) அந்த டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா அல்லது கிராமத்தில் 1908-ம் வருடத்திய சென்னை எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டில் விளக்கப்பட்டிருக்கிற பிரகாரம் ஒரு நிலஸ்வான்தாரின்கீழ் ஒரு ராயத்தாகவோ அல்லது பாயக்காரியாகவோ நிலத்தை தன் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருந்தாலும்; அல்லது,

(g) மஹாராஜா சங்கரவர்த்தி அவர்களுடைய செகுலர் (கிரமமான) சேனையிலிருந்து விலகிக்கொண்ட உத்தியோகஸ்தராயிருந்தாலும், பென்ஷன் பெற்ற உத்தியோகஸ்தராயிருந்தாலும், விடுதலை பெற்ற (டிஸ்சார்ஜ்) உத்தியோகஸ்தராயிருந்தாலும், வேறு சேனையைச் சேர்ந்த கமிஷன் பெற்ற நான்கமிஷண்ட் (Non-Commissioned) உத்தியோகஸ்தராயிருந்தாலும் போர்வீரர் (ஸோல்ஜர்) யிருந்தாலும்,

ஒரு டிஸ்டிரிக்ட் போர்டு அல்லது தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்தில் அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்க யோக்கியதை உள்ளவராவர்.

குறிப்புகள்.

இந்த விதியானது 1930-ம் வருஷத்திய திருத்தச் சட்டத்தினால் தருந்த வாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. புதிய ஆக்டினால் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள் பின்வருமாறு:—

(1) பழைய சட்டத்தில், ஒரு நபர் நிலத்தைக் குத்தகைக்கு பெற்றிருந்து அதனால் ஓட்டு உரிமை கிடைக்க வேண்டுமானால் அந்த குத்தகைப் பத்திரமானது ரிஜிஸ்தர் செய்யப்பட வேண்டுமென்றும் குத்தகை நிலத்தின் வருஷாந்திர வாடகை மதிப்பானது 10-ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்றும் இருந்தது. இப்பொழுது அந்த நிபந்தனைகள் எடுபட்டு குத்தகைப் பத்திரமானது எழுத்து மூலமாக இருந்தாலே போதுமானதென்றும் அந்த குத்தகை நிலத்தின் வாடகை மதிப்பு இவ்வளவென்றிருக்க வேண்டிய அவசியமில்லையென்றும் உள்ளது.

(2) பழைய சட்டத்தில் யூனியன் போர்டுகளுக்கும் தாலூக்கா போர்டு களுக்குமுள்ள ஓட்டர்களுக்கு இன்னின்ன விதமான யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டுமென்று தனியாகக் கண்டிருந்தது. இப்பொழுது புதிய சட்டப் பிரகாரம் டிஸ்டிரிக்ட் போர்டுக்கு நேராக தேர்தல் நடக்கப்போகிறபடியாலும் டிஸ்டிரிக்ட் போர்டு தாலூக்கா போர்டு பஞ்சாயத்து இவைகளுக்கு நடக்கும் எலெக்ஷன்களில் எல்லா ஓட்டர்களுக்கும் ஓட்டு கொடுக்குமாறு ஒரே மாதிரியான யோக்கியதாம்சங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு நபர் இந்த விதியில் கண்டிருக்கும் யோக்கியதாம்சங்களைப் பெற்றிருப்பின் அவர் டிஸ்டிரிக்ட் போர்டு தாலூக்கா போர்டு பஞ்சாயத்து முதலியவைகளில் நடக்கும் ஒவ்வொரு எலெக்ஷனிலும் ஓட்டு கொடுக்க உரிமையுள்ளவராவர்.

ஒரு நபர் ஓட்டராகப் பதிவு செய்துக்கொள்ள வேண்டுமானால் இந்த விதியில் காணப்பட்டிருக்கும் யோக்கியதாம்சங்களில் ஒன்றையாவது பெற்றிருக்க வேண்டும். வரி செலுத்தும் உரிமையை மாத்திரம் ஒருவர் பெற்றிருப்பின் அவர் ஓட்டராக பதிவு செய்யப்படுவதற்கு முன் வரியைச்செலுத்தியிருக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் கிடையாது. வரியிடப்பட்டிருந்தாலே போதுமானது.

வரியென்பது நேராகச் செலுத்தும் வரியாகும். அதாவது இன்கம்டாக்ஸ், வீட்டுவரி, நிலவரி, தொழில்வரி முதலிய வரிகளாகும் லெவெல்ஸ் கொடுப்பது வரியென்று கவனிக்கப்படாது.

2. [இந்த விதி எடுத்துவிடப்பட்டது.]

3. ஒரு கம்பெனி, அல்லது கூட்டம், அல்லது ஒன்றுக சேர்ந்திருக்கும் ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்கள், அல்லது ஜாயிண்டு பட்டாதாரர்கள் இவர்களுடைய கைப்பற்றில் யாதொரு சொத்தானது இருக்குமானால் அல்லது இவர்கள் யாதொரு வரி விதிக்கப்பட்டால் அப்படிப்பட்ட கம்பெனி கூட்டம் அல்லது ஒன்றுக சேர்ந்திருக்கும் யாதொரு குடும்பத்தின் நபர்கள் அல்லது ஜாயிண்டு பட்டாதாரர்கள் இந்த யோக்கியதை பெற்றிருப்பதாக கருதப்படுவார்கள். அந்த கம்பெனி அல்லது கூட்டத்தினுடைய காரியகரிசி (Secretary) யாவது அல்லது இதற்கென்று கிரமப் பிரகாரம் அதிகாரப்படுத்தப்பட்ட யாதொரு நபராவது அல்லது அந்த குடும்பத்தில் உள்ள மெஜாரிடி (Majority) அங்கத்தினர்களால் அல்லது ஜாயிண்டு பட்டாதார்களில் மெஜாரிட்டி அங்கத்தினர்களால் அதிகாரப்படுத்தப்பட்ட ஒரு அங்கத்தினராவது அல்லது ஒரு ஜாயிண்டு ஹிந்து குடும்பமாயிருக்கும்பக்ஷத்தில் மேலே சொல்லப்பட்ட பிரகாரம் அதிகாரப்படுத்தப்

பட்ட ஒரு அங்கத்தினராவது அல்லது அப்படி யாதொரு அதிகாரப் பதிக்கலும் இல்லாமலிருக்கும் பக்ஷத்தில் அதன் மானேஜராவது தேர்ந்தெடுப்பவரின் ஜாபிதாவில் ஒரு ஓட்டராக பதிவு செய்துகொள்வதற்கு உரிமையுள்ளவராவர்.

4. யாதொரு நபர்-தம்முடைய சொந்த ஹோதாவிலாவது அவிபக்த குடும்பத்தின் அல்லது ஒருகம்பெனி அல்லது அசோசியேஷனின் அல்லது கூட்டுப் பட்டாதாரர்களின் பிரதிநிதி யென்னும் ஹோதாவிலாவது (தேர்ந்தெடுப்பதற்கு) யோக்கியதை யுள்ளவராயிருக்கக் கூடுமே யொழிய இவ்விரண்டு ஹோதாக்களிலும் அந்தப் படி யோக்கியதையுள்ளவராகமாட்டார்.

5. 3-வது விதியில் நிபந்தனை கண்டபடிக்கன்றி மற்றப்படி, யாதொரு நபர் தம்முடைய சொந்தஹோதாவிலே நிர்ணயிக்கப்பட்ட யோக்கியதாம்சங்கள் உடையவராயிருந்தாலன்றி மற்றப்படி, அவர்-தெரிந்தெடுப்பவருக்குரிய யோக்கியதை யுள்ளவராக மாட்டார்.

குறிப்புகள்.

1-வது விதியில், தனிப்படையாகவுள்ள நபர்கள் ஓட்டுரிமையை அடைவதைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. 3-வது விதியில் ஒரு கூட்டமாயுள்ள ஒரு கம்பெனி, ஜாயிண்டு குடும்பம், அஸோஸியேஷன், ஜாயிண்டு பட்டாதாரர்கள், முதலியவர்களுக்கு தனியாக ஓட்டுரிமை உண்டென்று சொல்லப்பட்டுள்ளது. அந்தக் கம்பெனி, அல்லது அஸோஸியேஷன் அல்லது ஹிந்து குடும்பம் இவைகளுக்கு பிரதிநிதியாக ஒருவர் இருக்கலாமென்றும் அதன் செக்ரிடரி, அல்லது அதன் நிர்வாகங்களை நடத்திவர அதிகாரப்படுத்தப்பட்டிருக்கும் நபர் இவராவது ஜாயிண்டு ஹிந்து குடும்பமாயிருந்தால் அதன் மானேஜராவது முறையே கம்பெனி அஸோஸியேஷன், அல்லது ஜாயிண்டு குடும்பம் இவைகளுக்கு பிரதிநிதியாகக் கருதப்படுவரென்றும் உள்ளது. ஒரு கம்பெனி அல்லது அஸோஸியேஷன் அல்லது ஹிந்து குடும்பமானது ஓட்டுரிமையைப் பெறவேண்டுமென்றால் ஓட்டர்களைப் பதிவு செய்யும் அதிகாரிக்கு தங்களுடைய பிரதிநிதி இன்னார் என்று முன்னடியாகவே தெரிவிக்க வேண்டும். அப்படி ஒரு கம்பெனி அல்லது அஸோஸியேஷன் தெரிவித்தும் ஓட்டர்களை பதிவு செய்யும் உத்தியோகஸ்தர் வேண்டுமென்று அவருடைய மனுவை தள்ளிவிட்டால் அதன் விஷயமாக தாவா தொடங்கப்பட்டதால் அவரேதான் தாம் நல்லெண்ணத்துடன் நடந்துகொண்டதாக ருசு செய்ய வேண்டும். சரியான காரணமில்லாமல் தமக்குக் கொடுக்கப்பட்ட மனுவைத் தள்ளிவிடும்பக்ஷத்தில் அவர் நஷ்டஈடு தாவாவுக்கு உள்ளாக வேண்டும். (a).

(a) நிரவ்யம்பிள்ளை vs. குரும்ஸ் பொர்ஞண்டல் 31 I. C. 622—29 M. L. J. 704.

ஜாயிண்டு குடும்பமானது இந்த விதியின் பிரகாரம் இரண்டு வகைப் பட்டதாகும். அதாவது (1) சாதாரண ஜாயிண்டு குடும்பம். (2) ஹிந்து ஜாயிண்டு குடும்பம். சாதாரண ஜாயிண்டு குடும்பமானால் அந்த குடும்பத்தினால் ஓட்டுரிமை பெறுவதற்காக ஒரு மெம்பர் அதிகாரப்படுத்தப்பட வேண்டும். ஹிந்து ஜாயிண்டு குடும்பமாயிருந்தால் அம்மாதிரி ஸ்பஷ்டமாக யாதொரு அதிகாரப்படுத்துவதற்கு அவசியமில்லை. அந்த குடும்ப மானேஜரே பதிவு செய்துக் கொள்ளப்படுவதற்கு உரிமையுள்ளவராவர்.

ஒரே மெம்பர் இரண்டு விதமாகவும் ஓட்டுரிமை பெறுவதற்கில்லை. இது ஓட்டுரிமை விஷயமாக முக்கியமானதோர் அஸ்திவாரமாகும். ஆகையால் ஒரு மெம்பர் பலவிதமாக ஓட்டுரிமைகளைப் பெற்றிருக்க வசதியிருந்தாலும் ஒரே தரம்தான் ஓட்டு கொடுக்க உரிமையுள்ளவராவர்.

4-வது ஷெட்யூல்.

வரி விதிப்பதைக்குறித்த விதிகள்.

(92, 93, 95, 98, 104-வது விதிகளைப் பார்க்கவும்.)

இந்த ஷெட்யூலில் வரிவிதிப்பு விஷயமாக உள்ள விதிகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்த ஷெட்யூலானது மிகவும் முக்கியமானதாகும். 1920-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டு திருத்தச் சட்டப் பிரகாரம் இப்பொழுது வரிவிதிப்பு விஷயமாகவும் வசூல் விஷயமாகவும் லோகல்போர்டுகளுக்கு அதிகமானது கொடுக்கப்பட்டது. இன்னும் பழைய 231-வது பிரிவானது அடியோடே எடுத்துவிடப்பட்டு புதியதாக அமைக்கப்பட்டிருக்கிற மாதிரியைக் கவனிக்குமிடத்து, லோகல் போர்டுகள் தங்களுக்குச் சேரவேண்டிய சகலவித பாக்கிகளையும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குப் போகாமலே ஜப்தி மூலமாக வசூல்செய்யலாம் என்றுள்ளது. ஆனால் ப்ரெஸிடெண்டுகளும் அவர்களால் அதிகாரப் படுத்தப் பட்டவர்களும் வரிவசூல் விஷயமாக தங்கள் அதிகார வரம்பைக் கடவாமலும் கூடியவரையிலும் பொதுஜனங்களுக்கு கஷ்டத்தை கொடுக்காமலும் வரிகளை வசூல்செய்வது அவர்களுடைய பொறுப்பாகும்.

1-ம் பாகம்:—லாண்டு ஸெஸ் என்னும் வரி.

1. லாண்ட் ஸெஸ் என்னும் வரியை விதிப்பதற்கும் வசூல் செய்வதற்கும் டிஸ்டிரிக்ட் கலெக்டர் உத்தரவாதிபாவார்.

2. [இந்த விதி எடுத்துவிடப்பட்டது.]

3. டிஸ்டிரிக்ட்டு கலெக்டரானவர் - இந்த ஆக்டின்படி தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு வசூலிக்கப்படும் லாண்ட் ஸெஸ் என்னும் வரியிலிருந்து கிடைக்கும் நிகரவருமானத்தை

சம்பந்தப்பட்ட லோகல்பண்டு நிதிக்குக் கொடுத்துவிடச் செய்ய வேண்டும்.

4. டிஸ்டிரிக்ட்டு கலெக்டரானவர்-இந்த ஆக்டின்படி தப்பால் வசூலிக்கப்படப்போகும் லாண்ட் செஸ் என்னும் வரியிலிருந்து வெகுசாய் கிடைக்கக்கூடிய மொத்த வரவையும் அதை வசூலிப்பதற்கு பிடிக்கக்கூடிய செலவுகளையும் கண்டு ஒரு மதிப்புக் கணக்கை பிசநி வருஷமும் லோகல் கவர்ன்மெண்டார் ஒரு பொது உத்தரவின் மூலமாகவோ அல்லது தனியான உத்தரவு மூலமாகவோ உத்தரவிடும் காலங்களில் சம்பந்தப்பட்ட லோகல் போர்டாரிடத்தில் கொடுக்க வேண்டும்.

குறிப்புகள்.

லோகல் போர்டுகளுக்குள்ள வரும்படிகளில் லாண்டு செஸ் என்பது முக்கியமானதோர் வரும்படியாகும். அந்த வரியை வசூல் செய்யும் நபர் ரெவின்யூ அதிகாரியான டிஸ்டிரிக்ட் கலெக்டர். இவர் தமது ஜில்லாவி லுள்ள எல்லா பட்டாதாரர்களிடமிருந்தும் ஒரு ரூபாய்க்கு 0—1—6 வீதம் செஸ் வரி வசூல் செய்து லோகல் பண்டில் சேர்த்துவிட வேண்டும்.

3-வது விதியில் "நிகர வருமானம்" என்றிருப்பதால் லாண்டு செஸ் தொகை வசூல் செய்யும் செலவுகள் போக மீதியுள்ள வருமானம் என்றர்த்தமாகும்.

ஒரு டிஸ்டிரிக்டில் வசூலாகும் லாண்டு செஸ் தொகையை 5 பாகமாகப்பிரித்து 5-வது ஷெட்யூலில் கண்டிருக்கிற பிரகாரம் அவைகளை முறையே டிஸ்டிரிக்ட் பண்டுக்கும் தாலூக்கா பண்டுக்கும் பஞ்சாயத்து பண்டுக்கும் டிஸ்டிரிக்ட் கலெக்டரானவர் செலுத்த வேண்டும்.

2-ம் பாகம்.—இதர வரிகள்.

மற்ற வரிகளின் விஷயமாக உள்ள பொதுவான விதிகள்.

5. (1) ஒரு பஞ்சாயத்துப்செலிடென்டி - தொழில்வரி, வீட்டு வரி, ஆகிய இவைகள் விதிக்கப்படுவதற்குள்ளான நபர்களைக் காட்டும் பிரத்தியேகமான வரிவிதிப்பு புஸ்தகங்களைத் தயார்செய்து வைத்திருக்கவேண்டும்.

(2) வரிவிதிப்பு புஸ்தகங்களையும் அவ்வரிவிதிப்பு விஷயமாக விவரமான அம்சங்கள் தனியான நிக்கார்டுகளில் இருக்கும்பக்ஷத்தில் அந்த விவரங்கள் அடங்கிய பாகங்களும் பஞ்சாயத்துக்கு வரி

செலுத்தும் எந்த நபராகிலும் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜண்டராகிலும் நியாயமான எல்லாக்காலங்களிலும் கட்டணமில்லாமலும் பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும். இன்னும், அப்படிப்பட்ட நபராவது அல்லது அவருடைய ஏஜென்டாவது மேற்சொல்லப்பட்ட புஸ்தகங்களிலிருந்தும் ரிக்கார்டுகளிலிருந்தும் யாதொரு கட்டணங்களில்லாமல் நகல்களை எடுத்துக்கொள்ள உரிமையுள்ளவராயிருக்கவேண்டும்.

(3) லோகல் போர்டாருடைய கணக்கு புஸ்தகங்களை அந்த லோகல் போர்டுக்கு வரி செலுத்தும் யாதொரு நபர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற ஏஜென்டு பார்வையிட வேண்டுமானால், ஒவ்வொரு மாதத்திலும் லோகல் போர்டார் நிஷ்கரிஷை செய்யும் தினத்திலாவது அல்லது தினங்களிலாவது கட்டணமில்லாமலே பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

(4) (a) பஞ்சாயத்துக்கு, யாதொரு கம்பெனி அல்லது நபர் அல்லது யாதொரு சொத்தானது குறைவாக வரியிடப்பட்டிருக்கிறதென்றாவது அல்லது அந்த கம்பெனி அல்லது நபர் அல்லது சொத்தானது தெரியாமலோ அல்லது இமப் பிசகாகவோ வரி விதிப்பு சம்பந்தமான புஸ்தகங்களிலிருந்து விட்டுவிடப்பட்டிருக்கிறதென்றாகிலும் அல்லது அப்படிப்பட்ட புஸ்தகங்களில் யாதொரு எழுத்துப்பிழை அல்லது கணக்குப்பிழை இருப்பதாகவாவது தெரியவருமாகில், அந்த பஞ்சாயத்தானது அந்த புஸ்தகங்களைத் தங்களுக்கு எப்படி நியாயம் அல்லது அவசியமென்று தோன்றுகிறதோ அந்த மாதிரியாக திருத்தும்படி கட்டளையிடலாம்.

ஆனால், அப்படிப்பட்ட யாதொரு கட்டளையும், அந்த கட்டளையானது வரி விதிப்பை அதிகப்படுத்துவதாயிருந்தால் அதில் சம்பந்தப்பட்ட கம்பெனி அல்லது நபர்-வரிவிதிப்பு புஸ்தகங்கள் ஏன் தாங்கள் பிரேரேபிக்கும் பிரகாரம் திருத்தப்படக்கூடாது என்பதின் விஷயமாக சமாதானம் தெரிவிக்கும்படியாக தகுந்த வசதி கொடுக்கப்பட்டாலொழிய செய்யப்படக் கூடாது.

(b) அப்படிப்பட்ட திருத்தமானது நடக்கும் அரைவருஷத்திலாவது அல்லது அதற்கடுத்தாப்போல் மூன்றினி இரண்டு அரைவருஷங்களிலாவது எந்த தேதியில் அது ஏற்படுவதற்கு யுக்தமான சந்

தர்ப்பங்கள் முதல் முதலாக இருந்தனவோ அந்த தேதி முதற் கொண்டே அமுலுக்கு வருவதாகக் கருதப்படும்.

குறிப்புகள்.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தொழில் வரிக்காக ஒரு வரி விதிப்பு புஸ்தகமும் வீட்டு வரிக்காக ஒரு வரி விதிப்பு புஸ்தகமும் ஆக இரண்டு விதமாக வரிவிதிப்பு புஸ்தகங்கள் வைக்கப்படவேண்டும். அத்தகைய வரி விதிப்பு புஸ்தகங்களை எல்லாகாலங்களிலும்பார்வையிடுவதற்குப்ரெஸிடென்டானவர் வரி செலுத்துவோர்களுக்கு வசதி கொடுக்கவேண்டும். லோகல் போர்டுகளின் கணக்கு புஸ்தகங்களையும் பார்வையிடுவதற்கு ஒவ்வொரு வரி செலுத்துவோருக்கும் உரிமையுண்டு. ஆனால் இந்த புஸ்தகங்களை ஒரு மாதத்தில் சில குறிப்பிட்ட நாட்களில்தான் பார்வையிடலாம் அந்த தினங்கள் இன்னதென்று லோகல் போர்டானது நிர்ணயிக்கவேண்டும். வரி விதிப்பு புஸ்தகங்களையாவது அல்லது கணக்கு புஸ்தகங்களையாவது பார்வையிடுவதற்கு யாதொரு கட்டணமும் கேட்கப்படக்கூடாது.

ஒருதரம் இடப்பட்டிருக்கும் வரியானது தவறுகவோ அல்லது அநாக்கிறதையாகவோ அல்லது பிசகினாலாவது கொஞ்சமாக இடப்பட்டது என்றுவது அல்லது அதில் ஏதாவது கணக்குப்பிசகு உள்ளது என்றுவது பஞ்சாயத்துக்கு தெரியவருமானால் ப்ரெஸிடென்டுக்கு அதைத் திருத்தும்படி பஞ்சாயத்தானது ஒரு தீர்மானமூலமாய் உத்தரவிடலாம். அவர் அப்படிச் செய்வதில் வரியானது உயர்த்தப்படுமானால், அதனால் பாதிக்கப்படும் நபருக்கு தகுந்த சமாதானத்தைத் தெரிவிக்கும்படி வசதி கொடுக்கப்படவேண்டும்.

ஒருதரம் இடப்பட்ட வரியானது இம்மாதிரி திருத்தப்படுமானால், எப்பொழுது முதலில் வரி யிடப்பட்டதோ அன்று முதற்கொண்டே திருத்தமும் அமுலுக்கு வரும்.

சமாதானத்தைத் தெரிவிப்பதற்கு வசதி கொடுப்பதில் குறைந்தபக்ஷம் 15-தினங்களாவது கொடுக்கப்படவேண்டும் (213-வது பிரிவைப் பார்க்க).

இந்த விதியினால், ஒரு தரம் வரி விதிக்கப்பட்டதானது எந்த அரை வருஷத்தில் அது திருத்தப்படுகிறதோ அதற்குமுன் உள்ள இரண்டு அரை வருஷங்களிலும் அமுலுக்கு வரும்படி கவனிக்கப்படவேண்டும் என்று ஏற்படுகிறது. 32 வது விதியில் யாதொரு வரி விஷயமாக எந்த அரை வருஷத்திற்கு அவ்வரியானது பாக்கியாக யிருக்கிறதோ அந்த அரை வருஷத்திலாவது அல்லது அதற்கு அடுத்த அரை வருஷத்திலாவது நோட்டீஸ் கொடுக்கப்பட்டாலொழிய செலுத்தப்பட வேண்டிய அவசியமில்லை யென்று சொல்லப்பட்டுள்ளது. அந்த விதிக்கு இவ்விதியானது ஒரு விலக்காகும். இதைப்பற்றி 32-வது விதியின்கீழ் உள்ள குறிப்புகளைப் பார்க்க.

6. இந்த சட்டத்தில் வேறே மாதிரி ஏற்படுத்தப்பட்டா லொழிய ப்ரெஸிடென்டானவர் ஒவ்வொரு கம்பெனி அல்லது நபர் அல்லது சொத்தானது விதிக்கப்படக் கூடிய வரியை நிச்சயிக்க வேண்டும்;

ஆனால், ப்ரெஸிடென்டால் செலுத்தப்படவேண்டிய வரிகளின் விஷயத்தில் அந்த வரிகள் அந்த பஞ்சாயத்தினுலேயே ஏற்படுத்தப் பட வேண்டும்.

7. (1) ப்ரெஸிடென்டானவர் யாதொரு வரியைச் செலுத்தும் பிரதி நபருக்கும் அதற்காக தாமாவது இது விஷயத்தில் தம்மால் நியமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஒரு நபராவது கையெழுத்து பண்ணி ரசீது ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

(2) ஷெ ரசீதில்—

(a) அது கொடுக்கப்படும் தேதியையும்,

(b) அது யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அந்த நபரின் பெயரையும்,

(c) எந்த வரியின் விஷயமாய்க் கொகை செலுத்தப்பட் டதோ அந்த வரியையும்,

(d) எந்த கால அளவுக்கு தொகை செலுத்தப்பட்டதோ அந்தக்கால அளவையும்,

(e) செலுத்தப்பட்ட தொகையையும்,

கண்டெழுத வேண்டும்.

8. [இந்தவிதி எடுத்துவிடப்பட்டது.]

தொழில்வரி இடப்படுவது.

9. (1) தொழில்வரி இடப்படும் காரியங்களுக்காக கம்பெனி களும், நபர்களும் வகுப்புகளாகப் பிரிக்கப்படுவதும், ஒவ்வொரு வகுப்பிற்கும் இடப்படக்கூடிய உச்ச அளவு வருஷ வரியும் பின்வரு மாறு இருக்கவேண்டும்:—

வகுப்பு.	அரை வருஷ வருமானம்.			உச்ச அரை வருஷ வரி.
	ரூபா.		ரூபா.	ரூ. அ.
I	21,000	க்கு மேலான	... ...	275 0
II	18,000	தொகைக்கு ஐவிட அதிகமாக இருந்து ஆனால்.	21,000 க்கு அதிகப்படாத தொகைக்கு	225 0
III	12,000	,, ,,	18,000 ,,	150 0
IV	9,000	,, ,,	12,000 ,,	85 0
V	6,000	,, ,,	9,000 ,,	55 0
VI	4,200	,, ,,	6,000 ,,	28 0
VII	3,000	,, ,,	4,200 ,,	20 0
VIII	1,800	,, ,,	3,000 ,,	10 0
XI	1,200	,, ,,	1,800 ,,	6 0
X	600	,, ,,	1,200 ,,	3 0
XI	300	,, ,,	600 ,,	1 8
XII	150	,, ,,	300 ,,	0 8

(2) டிஸ்டிரிக்ட்டு போர்டானது (1)-வது உபவிதியில் குறிக்கப்பட்டிருக்கும் உச்சத் தொகைக்கு உட்பட்டு ஒவ்வொரு வகுப்பிற்கும் இடப்படக்கூடிய வரியை நிச்சயிக்க வேண்டும்.

ஆனால், யாதொரு வகுப்பின் குறைந்த வருமானத்திற்கும் அந்த வகுப்பிற்கு இடப்படும் வரிக்குமுள்ள தாரதம்மியமானது, அதைவிட குறைந்த வகுப்பிற்கு இடப்படும் வரியானது அப்படிப்பட்ட வகுப்பிற்கு இடப்படக் கூடிய குறைந்த வருமானத்திற்கு எவ்வளவு தாரதம்மியமுள்ளதோ அதைவிட சிறியதாக இருக்கக்கூடாது.

(3) டிஸ்டிரிக்ட்டு போர்டானது (1)-வது உப விதியில் சொல்லப்பட்டிருக்கும் வகுப்புகளில் ஒன்று அல்லது அதற்கு அதிகப்பட்ட வகுப்புகளை தொழில்வரி இடப்படுவதிலிருந்து நீக்கலாம்; ஆனால், யாதொரு வகுப்பும், அதற்கு கீழ்ப்பட்ட வகுப்பானது வரிக்குட்படுத்தப்பட்டிருக்கும்போது வரிக்குட்படுவதிலிருந்து நீக்கப்படக் கூடாது.

குறிப்புகள்.

இந்த விதியானது 1930-ம் வருஷத்திய திருத்தச்சட்டத்தினால் புதியதாக திருத்தப்பட்டு அமைக்கப்பட்டது. பழைய 10-வது விதியின் பிரகாரம் 10-வகுப்புகள் தானிருந்தன. இப்பொழுது பன்னிரண்டு வகுப்புகளாக்கப்பட்டு உள்ளன. 1-முதல் 7-வகுப்புகள் வரையிலும் மாற்றப்பட்டு இரண்டு வகுப்புகள் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த விதியின் (2)-வது உபவிதியின் அர்த்த விளக்கம் பின் வருமாறு:- ஒரு நபர் 8-வது வகுப்பின்கீழ் சேர்க்கப்பட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த நபர் மிகவும் அதிகமாக வரியிடப்பட்டாலும் ஒரு அரை வருஷத்திற்கு 10-ரூபாய்க்கு மேல் வரியிடப்படுவதற்கில்லை. ஒரு பஞ்சாயத்தானது அவருக்கு 6-ரூபாய் வரியிட்டதாக வைத்துக் கொள்வோம். அவருடைய குறைந்த வருமானம் 1800-ரூபாய். அவருடைய குறைந்த வருமானத்தில் 6/1800 பங்கு தொழில் வரியாகும். அதாவது 1/300 பாகம் வரியாகும். இப்பொழுது 7-வது வகுப்பை எடுத்துக் கொள்வோம். அவ் வகுப்பில் உள்ளவருக்கு மிகவும் அதிகமாக விதிக்கக் கூடிய வரி 20-ரூபாயாகும். பஞ்சாயத்தானது அவருக்கு 10-ரூபாயைவிட குறைவாக வரியிடுவதற்கில்லை. 10-ரூபாய் விதிக்கும்பக்ஷத்தில் அதற்கும் அவருடைய குறைந்த வருமானத்திற்கும் உள்ள பின்னும்சம் 10/3000. அதாவது 1/300 அவருக்கு 8-ரூபாயாக விதிக்கும்பக்ஷத்தில் 8/3000 அதாவது 1/375 யாகிவிடும். இந்த பின்னமானது அந்த வகுப்புக்குக் கீழ்ப்பட்டதான 8-வது வகுப்புக்குள்ள பின்னமாகிய 1/300-ஐவிட குறைந்ததால் அம்மாதிரி வரியிடப்படுவதற்கில்லை. ஆனால் 10-ரூபாயைவிட அதிகமான வரியை விதிக்கலாம்.

வரி விதிப்பு விஷயமாய் கவர்ன்மெண்டார் Fort-St-George Gazette No. 298, 15—7—1924-ல் செய்துள்ள பிரசுரத்தைப் பார்க்க.

10. ஒரு கம்பெனி அல்லது நபர் யாதொரு பிரதேச விஸ்தீரணத்திற்குள் ஒரு ஆபீஸ் (உத்தியோகஸ்தலம்) அல்லது வேலையில் அமர்த்தப்படும் இடம் இவைகளிலைவைத்துக்கொண்டிருக்கும்பக்ஷத்தில் அந்த பிரதேச விஸ்தீரணத்தில் வியாபாரம் நடத்தினதாகவோ அல்லது தொழில், கைத்தொழில் அல்லது ஜீவனத்தை நடத்தினதாகவோ அல்லது ஒரு உத்தியோகம் வகித்ததாகவோ கருதப்படும் அல்லது கருதப்படுவார்.

குறிப்புகள்.

இந்த விதியானது 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. யாதொரு கம்பெனி ஒரு கிராமத்தில் ஒரு ஆபீஸ் அல்லது உத்தியோகஸ்தலத்தைப் பெற்றிருக்கும்பக்ஷத்தில் அந்தக் கிராமத்தில் வியாபாரம் நடத்தியதாகவோ அல்லது தொழில் நடத்திவருவதாகவோ கவனிக்கப்படும். இதன் விஷயமாக 93-வது பிரிவின்கீழுள்ள குறிப்புகளைப் பார்க்க.

11. (1) ஒரு கம்பெனி அல்லது நபரானது யாதொரு அரை வருஷத்தில் ஒரு லோகல் போர்டினுடைய விஸ்தீரணத்துக்

குள்ளே மாத்திரம் தனியாக வியாபாரம் செய்துக்கொண்டு வந்தால் அப்படிப்பட்ட வியாபாரத்திலிருந்து அந்த கம்பெனி அல்லது நபருக்கு எற்படும் வருமானமானது அதே அரை வருஷத்தில் இந்த சட்டத்தின் கீழ் தொழில்வரி இடப்படும் காரியங்களுக்காக பின்வரு மாறு கருதப்படும். அதாவது—

(a) அப்படிப்பட்ட கம்பெனி அல்லது நபருக்கு 1922-ம் வருஷத்திய இந்தியா இன்கம்டாக்ஸ் சட்டத்தின் கீழ் அந்த அரை வருஷம் அடங்கிய ஒரு வருஷத்திற்காக வருமான வரியிடப்பட்டிருந்தால், இன்கம்டாக்ஸ் சட்டத்தின் 10-வது பிரிவின்கீழ் வருமானவரி விதிக்கப்படுவதற்காக அப்படிப்பட்ட வியாபாரத்தினுடைய லாப ஆதாயமென்று கணக்கிடப்பட்ட தொகையின் பாதி தொகை :

(b) அப்படிப்பட்ட லாப ஆதாயங்களின் தொகை இவ்வளவென்று அறிய முடியாமற் போனாலாவது, அல்லது அப்படிப்பட்ட கம்பெனி அல்லது நபர் யாதொரு வருமான வரி விதிக்கப்படாமலிருந்தாலாவது லோகல் கவர்ன்மென்டானது லெஜிஸ்லேடிவ் கௌன்சிலினுடைய சம்மதத்திற்குட்பட்டு அந்த வியாபாரத்தில் அந்த லோகல் போர்டினுடைய பிரதேச விஸ்தீரணத்திற்குள் அந்த அரை வருஷத்தில் பொட்டப்படுகிற் தொகை எவ்வளவோ அதில் நூற்றில் எவ்வளவு விதிதம் விதிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கிறதோ அந்த தொகையாவது அல்லது அந்த தொகையும் இவ்வளவென்று அறிய முடியாமற்போனால் முன் வருஷத்தில் அதே அரை வருஷத்திற்கு எவ்வளவு பொட்டு தொகை என்று நிர்ணயிக்கப்படுகிறதோ அந்த தொகை.

(2) ஒரு கம்பெனி அல்லது நபர் ஒரு லோகல் போர்டின் விஸ்தீரணத்தில் கொஞ்ச பாகத்திலும் அதற்கு வெளியே கொஞ்ச பாகத்திலும் வியாபாரம் செய்துகொண்டுவரும் பக்ஷத்தில், அந்த லோகல் போர்டு விஸ்தீரணத்தில் நடக்கும் வியாபாரத்தில் அந்த கம்பெனி அல்லது நபருடைய வருமானமானது இந்த சட்டத்தின் கீழ் தொழில் வரியிடப்படுவதற்காக அந்த அரை வருஷத்திலாவது அல்லது அதற்கு முந்தின வருஷத்தில் அதற்கீடான காலத்திலாவது சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாப்போல் அந்த விஸ்தீரணத்திற்குள் அவ் வியாபாரத்தின் பெரட்டுத் தொகையில் மேலே (1)-வது உபவிதி

யின் (b)-என்னும் வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நூற்றின் விகிதக்கணக்காகும்.

(3) (1)-வது உப விதியின் (b)-உப வாக்கியத்தின் காரியங்களுக்காகவும் (2)-வது உப விதியின் காரியங்களுக்காகவும், யாதொரு பிரதேச விஸ்தீரணத்தில் நடக்கும் வியாபாரத்தின் பெரட்டுத் தொகையென்பதானது அப்படிப்பட்ட பிரதேச விஸ்தீரணத்தில் உள்ள உற்பத்தி செய்யப்பட்ட அல்லது கைத்தொழிலினல் செய்யப் பட்ட அல்லது வாங்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட சாமான்களின் நாணய மதிப்பு மொத்தத்தொகை அல்லது அந்த பிர தேச விஸ்தீரணத்தில் நடத்தப்பட்ட வேறே ஒரு வியாபாரத்தின் நாணய மதிப்புத் தொகை என்றர்த்தமாகும்.

விவரணம்;—இந்த உப விதியின் கீழ் ஒரு வியாபாரத்தின் பெரட்டுத் தொகை இவ்வளவென்று நிச்சயிப்பதில்—

(a) யாதொரு கம்பெனி அல்லது நபர் யாதொரு சொத்தை வாங்கின காரணத்தினலும் அதே கம்பெனி அல்லது நபரினல் யாதொரு சொத்துவிற்பனை செய்யப்பட்ட காரணத்தினலும் இவ் விரண்டும் சென்னை மாகாணத்திற்குள் நடக்கும்பக்ஷத்தில், இரண்டா வதாக சொல்லப்பட்ட பேரத்தை மாத்திரம் கணக்கிடப்பட வேண்டும்;

(b). யாதொரு கம்பெனி அல்லது நபர் யாதொரு சொத்தை வாங்கினதானது சென்னை மாகாணத்திற்குவெளியே நடந்து-சாமான் களும் வெளியே இறக்குமதி செய்யப்பட்டிருக்குமானலும் அதே கம்பெனி அல்லது நபரினல் செய்யப்படும் யாதொரு சொத்து விற் பனையினல் அந்தச் சொத்தானது சென்னை மாகாணத்திற்குள் ஓரிடத் தில் இறக்குமதி செய்யப்பட்டிருக்குமானல் இரண்டாவதாக சொல் லப்பட்ட பேரமானது கணக்கிடப்பட வேண்டும்;

(c) யாதொரு கம்பெனி அல்லது நபர் யாதொரு சொத்தை வாங்கினதினல் அந்த சொத்தானது சென்னை மாகாணத்திற்குள் ஓரிடத்தில் இறக்குமதி செய்யப்பட்டால் அதே கம்பெனி அல்லது நபரினல் செய்யப்படும் யாதொரு சொத்து விற்பனையினல் அந்த சொத்தானது சென்னை மாகாணத்திற்கு வெளியே யாதோரிடத்தில் இறக்குமதி செய்யப்பட்டதானலும் முதலாவதாக சொல்லப்பட்ட பேரமானது கணக்கிடப்பட வேண்டும்.

11—A. (1) பஞ்சாயத்து ப்ரெஸிடென்டினுடைய அபிப்பிராயத்தில் யாதொரு அசைவருஷத்திற்காக யாதொரு கம்பெனி அல்லது நபரிடமிருந்து தொழில்வரி சேரவேண்டுமென்று இருக்குமானால், அவர் அப்படிப்பட்ட கம்பெனி அல்லது நபருக்கு அந்த அசைவருஷத்திலாவது அல்லது அதற்கு அடுத்த அசைவருஷத்திலாவது, அந்த கம்பெனி அல்லது நபர் அந்த நோட்டீஸில் 30-நாட்களுக்கு குறையாமலாக குறிக்கப்பட்ட ஒரு காலத்திற்குள், நிர்ணயிக்கப்படும் நமூனாவின் பிரகாரம், பிரசிடென்ஸியிலுள்ள அசைவருஷத்திற்கு அவர்கள் அல்லது அவர் தாங்கள் எந்த வருமானத்தை ஆதாரமாகக்கொண்டு வருமான வரியிடப்படலாம் என்று சொல்லுகிறார்களோ அல்லது சொல்லுகிறாரோ அந்த வருஷத்திற்காக ஒரு கணக்கை காட்டும்படி ஒரு நோட்டீஸ் தெரிவிக்கலாம். அதன்பேரில் அந்த கம்பெனி அல்லது நபரானவர் தன்னுல் அல்லது தம்மால் எந்த அசைவருஷத்திற்காக தொழில்வரி கேட்கப்படுகிறதோ அந்த அசைவருஷத்திலாவது அல்லது அதற்கு முந்தின வருஷத்தில் அந்தகாலத்திற்கிடான அசைவருஷத்திலாவது எவ்வளவு வருமானம் அடைந்தார் என்பதை காட்டுவதற்காக ஒரு கணக்கை ஆஜர்ப்படுத்த வசதி ஏற்படவேண்டும். இன்னும் அந்தக் கம்பெனி அல்லது நபர் எந்த சாக்ஷியத்தை ஆதாரமாகக் கொண்டு கணக்கை தெரிவித்தார்களோ அதையும் ஆஜர்ப்படுத்த வசதி ஏற்படவேண்டும்.

(2) (1)-வது உபவிதியின்கீழ் கேட்கப்பட்டபிரகாரம் ஒரு கணக்கு அனுப்பப்பட்டுப்ரெஸிடென்டும் அது பூர்த்தியானதென்றும் சரியானதென்றும் திருப்தியடையுமானஷத்தில், அப்படிப்பட்ட கம்பெனி அல்லது நபருக்கு அந்த கணக்கின்பேரில் வரியிடவேண்டும்.

விவரணம்:—11-வது விதியின் (1)-வது உபவிதியின் (b) என்னும் வாக்கியத்தின்கீழாவது அல்லது அதேவிதியின் (2)-வது உபவிதியின்கீழாவது வாதசந்தர்ப்பங்களில், அந்த கம்பெனி அல்லது நபரானவர் தமக்கு அல்லது தனக்கு பிரசிடென்ஸியிலுள்ள அசைவருஷம் அடங்கிய ஒரு வருஷத்திற்காக 1922-ம் வருஷத்திய இன்கம்டாக்ஸ் சட்டத்தின் 29-வது பிரிவின்கீழ் வருமானவரியிடப்படுவதற்காக கொடுக்கப்பட்ட டிமாண்டு நோட்டீஸை ஆஜர்ப்படுத்தும் பக்ஷத்தில், ப்ரெஸிடென்டானவர், அந்த டிமாண்டு நோட்டீஸில் காணப்பட்ட தொகையில் பாதிதொகையை இந்த சட்டத்தின்கீழ்

எந்த ஆதாரங்களுக்காக தொழில்வரி யிடக்கூடுமோ அந்த தொகை யென்றும் மேலே சொல்லப்பட்ட ஆதாரங்களின்மூலமாக தொழில் வரியிடப்படுவதற்காக ஏற்பட்ட தொகையென்றும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

(3) (1)-வது உபப்பிரிவின்கீழ் கேட்கப்பட்ட பிரகாரம் யாதொரு கணக்கும் அனுப்பப்படாமலிருக்குமானால் அல்லது அப்படி அனுப்பப்பட்ட கணக்கானது குறைவுள்ளது அல்லது சரியான தல்லவென்று திருப்தியடையும்பக்ஷத்தில், ப்ரெஸிடென்டானவர் அந்த அரைவருஷத்தில் அவர்களுடைய வருமானமென்று எம்மாதிரி தோராயமாக மதிப்பிடுகிறாரோ அதற்கு தகுந்தபடியான ஒரு வகுப்பில் அந்தக் கம்பெனி அல்லது நபரை தாக்கல் செய்யவேண்டும்.

(4) ப்ரெஸிடென்டானவர் அப்படி யாதொரு கம்பெனி அல்லது நபரை (3)-வது உபவிதியின்கீழ் வகுப்புகளில் சேர்க்கையில் பொதுவாக, நடத்தப்பட்ட வியாபாரத்தின் சுபாவத்தையும் கருதப்பட்டுவரும் மதிப்பையும், வாஸஸ்தலம் வியாபாரஸ்தலம் இவைகளின் குடிக்கூலியையும் வியாபாரத்திலடங்கிய சாமான்களின் அளவு சங்கிலை இவைகளையும் வேலையில் அமர்த்தப்பட்ட மனிதர்களின் சங்கியையும் கவர்ன்மென்டுக்கு செலுத்தப்படும் வருமானவரியையும் கவனித்துச் செய்யலாம்.

(5) ப்ரெஸிடென்டானவர் யாதொரு கம்பெனி அல்லது நபருடைய கணக்குகளை கட்டாயம் ஆஜர்ப்படுத்தும்படி கேட்க அதிகாரஸ்தராகமாட்டார்.

குறிப்புகள்.

இந்த விதியானது 1930-ம் வருஷத்திய திருத்த சட்டத்தினால் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது 9-வது விதியில் இன்ன வருமானத்திற்கு இவ்வளவு வரி விதிக்கப்படலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. 11-வது விதியில் வருமானத்தை எவ்வாறு நிச்சயிப்பது என்னும் விஷயமானது சொல்லப்பட்டுள்ளது 93-வது பிரிவில் எவரெவர்கள் தொழில் வரிக்குள்ளாவார்களென்று சொல்லப்பட்டுள்ளது. எந்தெந்த சந்தர்ப்பங்களில் தொழில் வரி யிடப்படலாம் என்றும் மற்றுமுள்ள குறிப்புகளைப் பற்றியும் இப்புத்தகத்தில் 265-முதல் 270-வரையில் உள்ள பக்கங்களைப் பார்க்க.

ஒரு நபர் அல்லது கம்பெனி இன்கம்டாக்ஸ் என்னும் வருமான வரி விதிக்கப்பட்டிருந்தால், இன்கம்டாக்ஸ் சட்டத்தின் 10-வது பிரிவின்கீழ் அவருடைய வியாபார வருமானமென்று எவ்வளவுத் தொகை நிர்ணயிக்கப்

படுகிறதோ அந்த தொகையில் பாதி தொகையை தொழில் வரிக்காக ஆதார மாகக் கொள்ள வேண்டும்.

ஒரு நபர் வருமான வரி யிடப்படாமலிருந்தால் யாதொரு அரை வருஷத்தில் அவருடைய வியாபார பெரட்டுத்தொகை எவ்வளவோ அதில் நூற்றில் எவ்வளவு பங்கு லாபத்தொகை யென்று லோகல் கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கிறார்களோ அவ்வளவு பங்கின் பேரில் தொழில் வரி யிடப் படத்தக்கதாகும். (பெரட்டுத் தொகை என்பது அந்த லோகல் போர்டின் வில்தீரணத்தில் பெரட்டப்படும் தொகையாகும்.) ஒரு அரை வருஷத்தில் இவ்வளவு தொகையென்று தெரியாமற் போனால் அதற்கு முந்தின அரை வருஷத்தில் பெரட்டப்பட்ட தொகையை ஆதாரமாகக் கொள்ளலாம்.

11-A விதியானது 1930-ம் வருஷத்திய லோகல்போர்டு திருத்தச் சட்டத்தினால் புதியதாக அமைக்கப்பட்டு உள்ளது. அந்த விதியில் பஞ் சாயத்து ப்ரெஸிடென்டானவர் தொழில்வரியை எவ்வாறு கேட்க வேண்டு மென்றும் தொழில் வரியிடுவதில் எந்த கோட்பாடுகளை அனுசரிக்கவேண்டு மென்றும் சொல்லப்பட்டுள்ளது. 11-A விதியின் (4)-வது உப விதியில், ப்ரெஸிடென்டானவர் யாதொரு கம்பெனி அல்லது நபரை வரி செலுத் தும் வகுப்புகளில் சேர்க்கையில், பொதுவாக, நடத்தப்பட்ட வியாபாரத் தின் சுபாவத்தையும், கருதப்பட்டு வரும் மதிப்பையும் வாஸஸ்தலம் வியாபாரஸ்தலம் இவைகளின் குடிக்கூலி, வியாபாரத்தில் அடங்கிய சாமான் களின் அளவு முதலியவைகளையும் கவர்ன்மெண்டுக்குச் செலுத்தும் வரு மான வரியையும் கவனித்துச் செய்யலாம் என்று உள்ளது. இந்த உப விதிக்கும் 11-வது விதியின் (1)-(b) உப விதிக்கும் ஒன்றுக்கொன்று முரண் படும் போலுள்ளது. 11-வது விதியில் (1)-(b) யாவது அனுசரிக்கப்பட வேண்டும், அல்லது 11-A விதியின் (4)-வது உபவிதியானது அனுசரிக்கப் படவேண்டும். இரண்டையும் அனுசரிக்கப் படுமாயின் பல ஆக்ஷேபங்கள் கிளம்பலாம்.

11-A விதியில் (2)-வது உப விதியின் விவரணம் பின் வருமாறு :— ஒரு நபர் ஒரு லோகல்போர்டின் வில்தீரணத்திற்குள் தொழில் நடத்தி வந்து அல்லது வியாபாரம் முதலியவை நடத்திவந்து கொண்டிருக்கையில் இன்கம்டாக்ஸ் செலுத்துவதற்காக யாதொரு நோட்டீஸ் கொடுக்கப்பட்டி ருந்தால் அந்த நோட்டீஸானது சரியானதென்று ஒப்புக்கொண்டு அதை ப்ரெஸிடென்டிடமிடம் ஆஜர்ப்படுத்தினால் ப்ரெஸிடென்டு அந்த நோட் டீஸில் கண்ட தொகையில் பாதியை தொழில் வரி யிடுவதற்காக வருமா னத் தொகை யென்று கருதி அதன்பேரில்தான் வரி யிடவேண்டும்.

ஒரு நபர், ப்ரெஸிடென்டினால் கேட்கப்பட்ட பிறகு தன்னுடைய வருமானத்தைத் தெரிவிப்பதற்காக வேண்டிய தகவல்களையாவது அல்லது

கணக்கு களையாவது ஆஜர்ப்படுத்தத் தவறினாலும் அல்லது அவருக்கு இன்கம்டாக்ஸிற்காக எதாவது நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த நோட்டீஸை ஆஜர்ப்படுத்தத் தவறினாலும் ப்ரெஸிடென்டு தம்முடைய யுக்தப் பிரகாரம் அவருக்கு எவ்வளவு வருமானம் உள்ளது என்று தாம் ஊகிக்கிறாரோ அதன் பேரில் நூற்றில் ஒரு குறிப்பிட்ட கணக்குப் பிரகாரம் விதிக்கலாம். ஒரு வியாபாரத்தின் பெரட்டுத் தொகையை இன்னதென்று நிச்சயிப்பதில் ப்ரெஸிடென்டானவர் 11-A விதியின் (4)-வது உபவிதியில் உள்ளவைகளை அனுசரிக்கலாம்.

ப்ரெஸிடென்டுகள் யாதொரு கம்பெனி அல்லது நபருக்கு அவர்கள் தம்முடைய கணக்குகளை கட்டாயம் ஹாஜர்ப்படுத்தவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவதற்கில்லை. ஆனால் அவர்களை ஹாஜர்ப்படுத்தும்பக்ஷத்தில் அவைகளைப் பார்வையிடலாம்.

வீட்டு வரி விதிப்பது.

12. பஞ்சாயத்தானது வீட்டுவரி விதிக்கும் காரியங்களுக்காக வீடுகளின் மூலதனமதிப்பின் பேரிலாவது அவைகளின் வருஷவாரி வாடகை மதிப்பின் மேலாவது அவைகளை மதிப்பிடத் தீர்மானிக்கலாம்; ஆனால், அவர்கள்வேறே எந்த கோட்பாட்டின்படிக்கும் வீடுகளை மதிப்பிடக்கூடாது.

குறிப்புகள்.

இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் மூலதன மதிப்பு என்பது, ஒரு வீடு கட்டுவதற்கு என்ன செலவு பிடிக்குமோ அந்த செலவு என்றர்த்தமாகும். வருஷாந்திர மதிப்பு என்பது ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு வாடகை வருமானமுண்டோ அந்த வருமானமேயாகும். ஒரு வீட்டின் மூலதனத்தைக்கொண்டு மதிப்பிடுவதில் அதைகட்டுவதற்குரிய செலவில் 10 - போக மீதி தொகைதான் மதிப்பாக கருதப்படும். மேலே சொல்லப்பட்ட இரண்டு விதமாகத் தவிர வேறே விதமாக ஒரு வீட்டை மதிப்பிடுவதற்கில்லை. உதாரணமாக அந்த வீட்டின் இடம், சௌகரியம் அல்லது அசௌகரியம், வீட்டில் நற்பெயர் (அதாவது குடிவளமான வீடா அல்லவா என்பது) இவைகளை ஆதாரமாகக்கொண்டு வரியை இடுவதற்கில்லை என்றர்த்தமாகும்.

ஒரு கிராமத்தில் வீட்டு வரி யிடுவதா இல்லையா என்னும் விஷயமானது டிஸ்டிரிக்ட்போர்டு அல்லது கவர்ன்மென்டினால் தீர்மானிக்கப்படவேண்டும். இவ்வளவு விதிதப்பிரகாரம் அவையிடப்படவேண்டுமென்றும் அவர்களே தீர்மானிக்க வேண்டும், ஆனால் பஞ்சாயத்துக்கு என்ன அதிகாரமுண்டென்றால், இன்ன கோட்பாட்டின் கீழ் வரியை விதிக்கலாம் என்று ஒரு தீர்மான ரூபமாக சிபார்சு செய்யலாம் அவ்வளவு வரையிலும்தான் பஞ்சாயத்துக்கு

அதிகாரமுண்டு. பஞ்சாயத்தானது தங்கள் சொந்த பொறுப்பிலேயே விதிக்கப்பட்டிருக்கும் வீட்டு வரியின் விகிதத்தை அதிகப்படுத்துவதற்கில்லை. டிஸ்டிரிக்ட் போர்டுதான் அதைச் செய்யவேண்டும்.

இந்த வித்தியானது வரி விதிப்பு விஷயமாக பஞ்சாயத்துக்கு சில அதிகாரங்களைக் கொடுப்பதாகும். புதிய சட்டத்திலுல் இப்பொழுது பஞ்சாயத்துகள் மிகவும் அதிகரித்துவிட்டிருக்கின்றன. கிராமாந்திரங்களே முக்கியமாக பஞ்சாயத்துகளாக ஏற்பட்டிருக்கின்றன. கிராமாந்திரங்களில் முக்கியமாக செட்டி நாட்டு கிராமங்களில், முன் பின் பாராமல் கிராம வாசிகள் ஏராளமாக பணம் செலவழித்து வீடுகளைக் கட்டி விடுகின்றனர். அந்த வீடுகளை குடிக்கூலிக்கு விடுவதும் வழக்கமில்லை. குடிக்கூலிக்கு விட்டாலும் யாதொரு சரியான குடிக்கூலியும் வராது. அத்தகைய வீடுகளுக்கு அவைகளைக் கட்டுவதற்கு பிடித்த தொகையை ஆதாரமாகக் கொண்டு வரி யிடுவதாயிருந்தால் மிகவும் அதிகமானதோர் வரியிட நேரிடும். இந்த சந்தர்ப்பங்களில் சுமாராக அவைகளின் வாடகை மதிப்பை யொட்டியே வீட்டு வரியிடுவதானது உத்தமமாகும். இதற்காகத்தான் பஞ்சாயத்தானது தன்னுடைய கிராமத்தில் உள்ள சந்தர்ப்பங்களை உத்தேசித்து எந்தெந்த கோட்பாடுகளின் கீழ் வீட்டு வரி யிடப்படவேண்டும் என்று நிச்சயிக்கலாம் என்றுள்ளது.

13. 75, 77-வது பிரிவுகளின்கீழ் வரி விகிதங்களை நிஷ்கரிஷை செய்கையில் டிஸ்டிரிக்ட் போர்டார் அல்லது லோகல் கவர்ன்மெண்டு சந்தர்ப்பத்துக் கேற்றபடி மூலதன மதிப்பின்மேலாவது வருஷ வாரி வாடகை மதிப்பின்மேலாவது அந்த விகிதங்களை நிஷ்கரிஷை செய்ய வேண்டும். இந்தப்படி நிஷ்கரிஷை செய்வதானது-வெவ்வேறு கிராமத்தின் விஷயத்தில், ஒவ்வொரு பஞ்சாயத்தும் அனுசரிக்கத் தீர்மானித்திருக்கிற தீர்வை மதிப்பிடும் முறையின் பிரகாரம் இருக்க வேண்டும்.

குறிப்புகள்.

தென்னிந்தியாவில் எல்லா கிராமங்களிலும் ஒரே மாதிரியான சௌகரியம் கிடைப்பதில்லை. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு விதமான கஷ்டங்களும் சௌகரியங்களும் இருக்கலாம். ஒரு டிஸ்டிரிக்டில் உள்ள எல்லா கிராமங்களிலும் ஒரே மாதிரியான வீட்டு வரி யிடப்படுவது சரியானதல்ல. ஒவ்வொரு பஞ்சாயத்தும் தம்முடைய கிராமவாசிகளின் சௌகரியத்திற்கு தகுந்தபடி வரி எம்மாதிரியாக விதிக்கவேண்டுமென்று பிரார்சு செய்தபிறகு அதேமாதிரியாக டிஸ்டிரிக்ட் போர்டு அல்லது லோகல் கவர்ன்மெண்டானது நடந்துகொள்ள வேண்டும்.

14. டிஸ்டிரிக்ட் போர்டாரால் அல்லது லோகல் கவர்ன்மென்டால நிஷ்கரிஷை செய்யப்படும் வீதங்கள்—ஒவ்வொரு வீட்டின் மதிப்புங்குத் தக்கபடி இருக்கலாம்; அதாவது, வீட்டின்மதிப்பு அதிகமாய்க் கொண்டேபோனால் மெடி வீதங்களும் ஒரு ஒழுங்காய் அதிகமாய்க் கொண்டே போகலாம்; ஆனால் அவை எந்த விஷயத்திலும் வீட்டின் மதிப்பு அதிகமாய்க் கொண்டே போகையில் வீதங்கள் குறைந்து கொண்டே போகக்கூடாது.

தறிப்புகள்.

வீட்டுவரியானது, வீட்டின் மதிப்பு உயர உயர அதிகரிக்க வேண்டுமே யொழிய குறையக் கூடாது என்பதுதான் இந்த விதியின் தாத்பரியம். வீட்டுவரியின் பரிமாணமானது ஒரே மாதிரியாக இருக்கவேண்டும்.

15. டிஸ்டிரிக்ட்டு போர்டினாலாவது அல்லது லோகல் கவர்ன்மென்டினாலாவது ஒரு தாரதம்மிய விகிதமானது அனுசரிக்கப்படும் பக்ஷத்தில் பஞ்சாயத்தானது அந்த கிராமத்திலுள்ள வீடுகளை, வரி கணக்கிடுவதை சுலபப்படுத்துவதற்காகவும், வரி வசூலிப்பதை சுலபப் படுத்துவதற்காகவும் வகுப்புகளாக சேர்த்து வைக்கலாம். டிஸ்டிரிக்டு போர்டினாலாவது அல்லது லோகல் கவர்ன்மென்டினாலாவது ஒரு படிப்படியான விகிதம் அனுசரிக்கப்படுமானால் அந்த போர்டு அல்லது லோகல் கவர்ன்மென்டானது எந்தெந்த கோட்பாடுகளின் பேரில் வகுப்புகள் ஏற்பட வேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டும்.

(உதாரணமாக, வரியிடப்படுவதிலிருந்து நீக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட தொகையானது ஒவ்வொரு வீட்டின் மதிப்பிலிருந்து கழிக்கப்பட வேண்டுமென்றாவது அல்லது அப்படி படிப்படியாக ஏற்படுத்தப்படும் விகிதமானது மிகவும் குறைந்தபக்ஷம் ஒரு குறிப்பிட்ட வகுப்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு மற்றொரு வகுப்பிற்கு கணக்குபடி இடப்பட வேண்டுமென்பது).

ஆனால், ஒவ்வொரு வகுப்பிற்கும் இவ்வளவு தொகை அல்லது அளவு இருக்க வேண்டும் என்பதை பஞ்சாயத்தே தீர்மானம் செய்யும்படியாக விட்டுவிட வேண்டும். பஞ்சாயத்தானது இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும், அதாவது டிஸ்டிரிக்ட்டு போர்டினாலும், லோகல் கவர்ன்மென்டினாலும் தாரதம்மியமாகவோ அல்லது படிப்படியாகவோ வரியிடப்படுவதில் அனுசரிக்கப்பட்ட கோட்பாடுகளை மிகவும் பாதிக்கும்படியாக வகுப்புகளை ஏற்பாடு செய்யக்கூடாது.

அவர்கள் ஏற்படுத்தும் வகுப்புகளானது எக்காரணத்தைக்கொண்டும் ஆறு வகுப்புகளுக்கு குறையக்கூடாது.

குறிப்புகள்.

1-வது விதியில் தொழில் யிடப்படுவதில் தொழில்வரி செலுத்துபவர்கள் 12-வகுப்புகளாக பிரிக்கப்படலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. அதன் காரணம் என்னவென்றால் யாதொரு நபருக்கு ஒரு குறிப்பிட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறாரென்று தெரியுமானால் அவர் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதையும் உடனே அறிய முடியும். இது மிகவும் சௌகரியமாயிருக்கும். அதே மாதிரியாக பஞ்சாயத்தானது வீடுகளை பல வகுப்புகளாகப் பிரித்து ஒவ்வொரு வகுப்பிற்கும் உச்ச மதிப்பு அல்லது குறைந்த மதிப்பு என்ன வென்பதையும் எத்தனை வகுப்புகள் இருக்க வேண்டுமென்பதையும் நிர்ணயிக்க வேண்டும். இம்மாதிரி வகுப்பிடுவதில், ஜில்லா போர்டார் அல்லது கவர்ன்மென்டானது ஏற்படுத்தியிருக்கும் கோட்பாடுகள் தவறக்கூடாது.

16. பஞ்சாயத்தானது ஒரு தீர்மானத்தினால்—

(i) ஒரு வீட்டினுடைய மதிப்பானது அந்தத் தீர்மானத்தில் குறிக்கப்பட்டிருக்கிற ஒரு தொகைக்கு அதிகமாக இல்லாமலும், அப்படிப்பட்ட தொகை அந்த வரியானது அந்த வீட்டின் விற்பனை மதிப்பின்பேரில் இடப்பட்டிருந்தால் இருநூற்று நாற்பது ரூபாய்க்கு அதிகப்படாமலும் அல்லது அந்த வரியானது வருஷாந்திர வாடகை மதிப்பின் பேரில் இடப்பட்டிருந்தால் பன்னிரண்டு ரூபாயிக்கு அதிகப்படாமலும் இருக்கும்படிக்கும்,

(ii) (a) அந்த வீட்டின் சொந்தக்காரர் அந்த கிராமத்தில் வேறே யாதொரு வீட்டை சொந்தமாகப் பெற்றிராவிட்டாலும் அல்லது,

(b) அவரால் சொந்தத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் எல்லாவீடுகளுடைய விற்பனை மதிப்புத் தொகையானது அல்லது வருஷாந்திர வாடகை மதிப்புத்தொகையானது சந்தர்ப்பத்துக்குத்தகுந்தாப்போல் முறையே இருநூற்று நாற்பது ரூபாய் அல்லது பன்னிரண்டு ரூபாய்க்கு அதிகப்படாமலும் இருக்குமானால்,

அப்படிப்பட்ட வீட்டை வீட்டு வரியிலிருந்து நிவர்த்திக்கலாம்.

குறிப்புகள்.

இந்த விதியில் இரண்டு விஷயங்கள் உள்ளன. அதாவது ஒரு வீட்டின் மூலதன மதிப்பானது 240-ரூபாயிக்கு மேற்படாமலிருக்குமானால் அல்

லது அதன் வாடகை மதிப்பானது வருஷத்திற்கு 12-ரூபாயிக்கு மேற்ப டாமலிருக்குமானால் அத்தகைய வீடுகளை வரியிடுவதிலிருந்தும் நிவர்த்தி செய்வதற்கு பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு. இன்னும் ஒரு நபருக்கு ஒரு கிராமத்தில் ஒரு வீட்டுக்கு அதிகமான வீடு இருக்கக் கூடாது. அப் படி யிருந்த போதிலும் அந்த வீடுகளின் மொத்த மூலதன மதிப்பானது 240-ரூபாயிக்கு மேலாக இருக்கக் கூடாது. உதாரணமாக ஒரு நபருக்கு ஒவ்வொன்றும் 200-ரூபாய் தாளத்தகுந்த இரண்டு வீடுகள் உள்ளதாக வைத்துக் கொள்வோம். அவைகளின் மொத்த மூலதன மதிப்பானது 400-ரூபாய் ஆகும். ஆகையால் அவருக்கு வீட்டு வரியிடப்படாமலிருக்கக் கூடாது. ஆனால் அவருக்கு ஒரே வீடு இருக்குமானால் அவருக்கு வீட்டுவரி கிடையாது. ஒரு நபருக்கு 10-வீடுகள் இருந்தாலும் அவைகளின் மொத்த மதிப்பு 240-ரூபாயிக்கு மேலாக இராமலிருக்குமானால் அவருக்கு வீட்டு வரி கிடையாது.

17. வருஷவாரி வாடகை மதிப்பின்மேல் வரி விதிக்கப்படும் பக்ஷத்தில், அந்த மதிப்புத்தொகையானது-வீட்டை மாதாபாதபாவது வருஷாவருஷமாவது குடிக்கூலிக்கு விட்டால் நியாயமாய் ஒரு வரு ஷத்திற்கு மொத்தத்தில் எவ்வளவு வாடகை வருமென்று எதிர்ப்பார்க் கக்கூடுமோ அந்த வாடகைத்தொகையிலிருந்து அதில் நூற்றுக்கு பத்துவீதம் கழித்தபிறகு நிற்கும்தொகையாக கருதப்படும்; அந்தப் படி கழிக்கப்படும் தொகையானது-மராமத்துக்காகவாகிலும் வேறே எவ்விதக் காரணத்துக்காகவாகிலும் தள்ளிக்கொடுப்பதற்கு பர்த்தி யாகக் கழிக்கப் படுவதாகும்.

18. (1) (i) கவர்ன்மெண்டு அல்லது ரெயில்வே கட்டிடத்தின் விஷயத்திலும்,

(ii) சாதாரணமாக குடிக்கூலிக்கு விடப்படாததும் பஞ்சா யத்து ப்ரெஸிடெண்டினுடைய அபிப்பிராயத்தில் அதன் வருஷாந் தரக் குடிக்கூலி இன்னவென்று நிச்சயிக்க முடியாததுமான யாதொரு வகுப்பைச் சேர்ந்த கட்டிட விஷயத்திலும்,

அந்த கட்டிடத்தின் விற்பனை மதிப்பானது, அதன் அடி நிலத்தின் தாளிக்கையான மதிப்பும் அந்த கட்டிடத்திற்கு வரியிடும் காலத்தில் கட்டுவதற்கு ஏற்பட்டக்கூடிய செலவு தொகையும் சேர்ந்த கூட்டுத்தொகையில் அந்தக் கட்டிடத்தின் மதிப்பு குறைந்துபோகும் விஷயமாய் நியாயமானதோர்தொகை கழிக்கப்பட்டபிறகு ஏற்படக் கூடிய தொகையாக கருதப்படும். அப்படி கழிக்கப்படும் தொகையா

னது எந்த சந்தர்ப்பத்திலும் நூற்றுக்கு பத்துரூபாய்க்கு குறையக் கூடாது. அந்த கட்டிடத்தின் வருஷாந்திர மதிப்பானது அப்படி கணக்கிடப்பட்ட மொத்த தொகையில் நூற்றுக்கு ஆறுரூபாயாக கருதப்படும்.

(2) இயந்திர சாமான்களும் உபயோகப்படுத்தப்படும் மராமத்து சாமான்களும் (1)-வது உபப்பிரிவின்கீழ் மதிப்பிடப்படுவதிலிருந்து நிவர்த்திக்கப்படவேண்டும்.

19. யாதொரு கிராமமுழுவதற்குமாகிலும் அதன் யாதொரு பாகத்துக்காகிலும் ஜல சர்ப்பரா ஏற்பாடு அல்லது ஜலதாரை ஏற்பாடு செய்வதைப்போன்ற யாதொரு பொது சௌகரியங்களுக்காக ஒரு நிதி ஏற்படுத்தும்பொருட்டு இந்த விதிகளின் பிரகாரம் உடன் சேர்க்கையான ஒரு வரி விதிக்கப்படலாம். அப்படிப்பட்ட ஒவ்வொரு நிதியின் வரவுகளுக்கும் அதிலிருந்துசெய்யும் செலவுகளுக்கும் பிரத்தியேகமான கணக்குவைத்து வரவேண்டும்.

20. ஒரு கிராமத்தில் அடங்கியிருக்கிற யாதொரு விஸ்தீரணத்தின்பேரில் ஆதிக்கியம் உள்ள கர்ணமானவர், பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டியுடைய வேண்டுகோளின் பேரில், அந்த விஸ்தீரணத்திற்குள் உள்ள எல்லா வீடுகளினுடைய ஜாபிதாவை தயார் செய்து கொடுக்க வேண்டும். அந்த ஜாபிதாவில், அப்படிப்பட்ட வீட்டின் சொந்தக்காரர், அனுபோகதாரர் இவர்களுடைய பெயர்களை பதிவு செய்திருக்க வேண்டும்.

21. மேலே கர்ணமானவர், அப்படிப்பட்ட ஜாபிதாவைத் தயார் செய்வதற்காக, பஞ்சாயத்தானது லோகல் கவர்ன்மெண்டாரால் செய்திருக்கும் விதிகளுக்குட்பட்டு நிஷ்கரிஷை செய்யக்கூடிய (ஏதேனும்) பிரதிபலனைப்பெற அர்ஹராவார்.

22. அடுத்த முந்திய விதியில்கண்ட ஜாபிதாக்களை வரப்பெற்றுக் கொள்வதன்மேல், பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டானவர் - வரிப் புஸ்தகங்களைத் தயார் செய்விக்கவேண்டும். அந்த வரிப் புஸ்தகங்களில் தனித்தனியான கலங்களிலே, ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரர், அனுபோகதாரர் ஆகிய இவர்களின் பெயர்களையும் ஏதேனும் யாதொரு வகுப்பின்கீழ் அந்த வீட்டுக்கு வரி விதிக்கப்பட்டிருந்தால் அந்த வகுப்பையும், பாக்கியாயிருக்கும் வரித் தொகையையும், அந்த வரி செலுத்தப்பட வேண்டிய தேதியையும் கண்டிருக்க வேண்டும்.

23. வரிப் புஸ்தகங்கள் தயார் செய்யப்பட்டவுடனே பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் அதைக் குறித்தும், அந்தப் புஸ்தகங்களைப் பார்வையிடக்கூடிய இடம் அல்லது இடங்களைக் குறித்தும் கிராமத்தில் தண்டோரா மூலமாக பகிரங்கமாய் அறிக்கை செய்ய வேண்டும்.

24. (1) ப்ரெஸிடென்டானவர் வரிப் புஸ்தகங்களை எந்த சமயத்திலாவது, யாதொரு சொத்தை அதில் புதியதாக நுழைப்பதோ அல்லது அதிலிருந்து நீக்குவதோ அல்லது யாதொரு சொத்தானது வகுக்கப்பட்டிருப்பதை மாற்றுவதோ அல்லது அதன் விஷயமாக செலுத்தப்பட வேண்டிய வரி தொகையை மாற்றுவதோ இவைகளுக்காக திருத்தங்களைச் செய்யலாம். அப்படிப்பட்ட ஒவ்வொரு திருத்தத்தைப் பற்றியும் அதில் பாதிக்கப்பட்ட நபர் அல்லது நபர்களுக்கு நோட்டீஸ் தெரிவிக்க வேண்டும்.

(2) அப்படிப்பட்ட திருத்தமானது எந்த அரை வருஷத்தில் அது செய்யப்பட்டதோ அவ்வரை வருஷத்தின் முதல் தினமுதற்கொண்டு அமுலுக்கு வருவதாகக் கருதப்படும்.

ஆனால் அந்த திருத்தமானது, யாதொரு அரை வருஷத்தில் அந்த அரை வருஷத்திற்காக டிமாண்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்ட பிறகு செய்யப்படுமானால், அதற்கு பின்னடியாகவுள்ள அரை வருஷ முதற்கொண்டுதான் அமுலுக்கு வரும்.

குறிப்புகள்.

இந்த விதியானது 5-வது விதியின் அம்சங்களைப்போன்ற அம்சங்களையுடையது. ஒரு ப்ரெஸிடென்டானவர் வீட்டு வரி புஸ்தகங்களைத் திருத்தப்படுவதைப் பற்றி ஒரு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று இந்த விதியில் சொல்லப்பட்டுள்ளது. அந்த நோட்டீஸானது திருத்தப்படுவதற்கு முன் உத்தேசத்தைத் தெரிவிப்பதற்காக கொடுக்கப்படுவதா அல்லது திருத்தப்பட்ட பிறகு அறிக்கைக்காக கொடுக்கப்படுவதா என்பதைப் பற்றி இந்த விதியில் விவரமாக யாதொரு அம்சமும் காணேம். ஆனால், ப்ரெஸிடென்டுகள் வரி புஸ்தகங்களில் ஏதாவது மாறுதலை அல்லது திருத்தத்தைச் செய்வதாயிருந்தால் அதன் விஷயமாக அதனால் பாதிக்கப்படும் நபருக்கு கட்டாயம் முன்னடியாகவே நோட்டீஸ் தெரிவிப்பது நலமாகும். அப்படியாதொரு நோட்டீஸ் தெரிவிக்கும்பக்ஷத்தில் அவர் தக்கபடி ஆக்ஷேபனைகளைத் தெரிவிக்கலாம்.

எத்தகைய வரியையும் கணக்கிடுவதற்கு ஒரு அரை வருஷம் அதாவது ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலுமாவது அல்லது அக்டோபர் மாதம் முதல் மார்ச்சு மாதம் வரையிலுமாவது உள்ள 6 மாதங்களே ஆதாரமாகக் கொள்ளப்பட்டிருப்பதால் ஒரு அரை வருஷத்தின் நடுவில் வரியானது திருத்தப்பட்டாலும் அந்த அரை வருஷம் ஆரம்ப முதற் கொண்டே அது அமுலுக்கு வரவேண்டியிருக்குமென்று சொல்லப்பட்டது. இதனால் வரியைக் குறைத்துக் கொடுக்கச் சொல்வதற்கும் இன்னும் இதரசிக்கலும் இளம்பாமலிருக்கலாம். யாதொரு அரை வருஷத்திற்காக டிமாண்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த அரை வருஷம் முதல் வரி திருத்தமானது அமுலுக்கு வருவதற்கில்லை. அதற்கு அடுத்த அரை வருஷம் முதற்கொண்டேதான் அமுலுக்கு வரவேண்டும்.

ப்ரெஸிடென்டானவர் இந்த விதியின்கீழ் செய்யும் உத்தரவுகளுக்கு மேலாக அந்த லோகல் போர்டுக்கே அப்பீல் உண்டு. அப்பீல் செய்யாமல் வரி விதிப்பு விஷயமாக சிவில் கோர்ட்டுகளில் பரிஹாரம் தேடுவதற்கில்லை.

பழைய சட்டத்தின் பிரகாரம் வரி திருத்தப்பட்டதானது எந்த அரை வருஷத்தில் அது திருத்தப்பட்டதோ அன்று முதல் மூன்று வருஷங்கள் வரையிலும் பின்னுக்கமாக பிரயோகம் உண்டென்று ரும்பகோணம் முனிசிபல் கௌன்சில் vs. தென் இந்தியா ரயில்வே கம்பெனி (a) என்னும் கேஸில் தீர்மானிக்கப்பட்டது. இப்பொழுது இந்த விதியின் (2)-வது உபவிதியின் பிரகாரம் எந்த அரை வருஷத்தில் திருத்தமானது ஏற்பட்டதோ அந்த அரை வருஷம் முதல் கொண்டுதான் அதற்கு வீரியம் உண்டென்று ஸ்பஷ்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நோட்டீஸ் கொடுக்காமல் உரிமையை உயர்த்துவது அல்லது வருப்பை மாற்றுவது இவை சரியானதல்ல. ப்ரெஸிடென்டுகள் இம்மாதிரி செய்யும் பக்ஷத்தில் அவர்கள் இந்த ஆக்டையே சரியாக அனுசரிக்கவில்லையென்றே தீர்மானிக்க வேண்டியிருக்கும். நோட்டீஸ் கொடுக்காமல் வரியை உயர்த்தி அதை வசூல் செய்யும் பக்ஷத்தில் அதற்காக வரி செலுத்தினவர் நோட்டீஸ் கொடுக்காமலேயே அதிகமாக வசூல் செய்யப்பட்ட வரியை வரப்படுத்த சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம் (b).

(a) 57. M. L. J. 251.

(b) ஷம்சுதீன் அலீம் சாயப் vs. திருவாலூர் முனிஷிபல் கௌன்சில் A. I. R. 1928 Mad. 348. ஹல்கார் vs. ரங்கூன் கார்ப்பொரேஷன் 5 Rang. 38 என்னும் கேஸிலும், தஞ்சாவூர் முனிசிபல் கௌன்சில் vs. உமாம்பாய் 23 Mad. 523 என்னும் கேஸிலும் இதேமாதிரி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

24-A யாதொரு நபர் ஒரு அரை வருஷத்திலே கடைசி முப் பது நாட்களுக்குள்ளல்லாமல் எந்த காலத்திலாவது, எந்த வீட்டின் பேரில் வரி விடப்பட்டிருக்கிறதோ அந்த வீட்டின் விற்பனை மறிப் பாவது அல்லது வருஷாந்திர மறிப்பாவது அப்படிப்பட்ட மறிப்பு எப்பொழுது கடைசியாக செய்யப்பட்டதோ அல்லது மாற்றப் பட்டதோ அந்தக் காலத்திற்குப் பிறகு குறைந்துவிட்டதென்னும் காரணத்தைக்கொண்டு தாம் அடுத்த அரை வருஷத்திற்கு செலுத்த வேண்டிய வரியை குறைத்து விடும்படி ப்ரெஸிடென்டுக்கு ஒரு ரிவி ஷன்மனு செய்யலாம்.

25. பஞ்சாயத்து ப்ரெஸிடென்டானவர் ஒவ்வொரு அறை வருஷத்திலும் புதிய ஜாபிதாக்களையாவது வரிப் புஸ்தகங்களையாவது தயார் செய்விக்கக்கடமைப்பட்டவரல்ல; ஆனால், அவர் முந்திய அரை வருஷத்து ஜாபிதாக்கள் அல்லது வரி புஸ்தகங்களில் தமக்கு அவசிய மாகத் தோற்றக்கூடிய திருத்தங்களை செய்து அவைகளையே வைத் துக்கொள்ளலாம்; ஆயினும், ஐந்து வருஷத்துக்கு ஒரு முறைக்குக் குறையாமல் பொதுவாக புதிதாய் வரி விதித்து வரவேண்டும். அதில் செய்யப்படும் திருத்தங்களைக் குறித்து 23-வது விதியில் நிபந்தனை கண்டிருக்கிற விதமாக பகிரங்கமாய் அறிக்கையிட வேண்டும்.

26. [இந்த விதி எடுத்துவிடப்பட்டது.]

அப்பீல்கள்.

27. அடியில் காணப்பட்டிருக்கும் வரிகளை விதிப்பதும், விதித்து வாங்கப்படுவதும் விஷயமாக பஞ்சாயத்துக்கு ஒரு அப்பீல் உண்டு. மற்ற வரிகள் விஷயமாக அப்பீல் கிடையாது. அதாவது,

(a) 11-A, 22, 24, 25 இந்த விதிகளின்கீழ் ப்ரெஸிடென் டின் நடவடிக்கைகள்,

(b) 24-A விதியின் கீழ் செய்யப்பட்டிருக்கும் ஒரு ரிவி ஷன் மனுவின்பேரில் ப்ரெஸிடென்டு செய்திருக்கும் உத்தரவு.

குறிப்புகள்.

இந்த விதியானது அப்பீல்களைப் பற்றி கூறியுள்ளது. இந்த விதியா னது 1930-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்ட்ஸ் திருத்த சட்டத்தி னால் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஷெட்யூலில் 11-A-விதியில், ப்ரெஸிடென்டானவர் ஒருவருடைய வருமானத்தை நிர்ணயிப்பதைப்பற்றி

யும் 22-வது விதியில் வீட்டு வரி இவ்வளவென்று நிர்ணயிப்பதைப் பற்றி யும் 24-வது விதியில் வீட்டு வரிகளைத் திருத்துவதைப் பற்றியும் 25-வது விதியில் வரி புஸ்தகங்களையும் ஜாபிதாக்களையும் அவ்வப்பொழுது மாற்று வதைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. 24-A-பிரிவில் ஒரு கபர் இனி வரப்போகும் அரை வருஷத்திற்கு அவ்வளவு அதிக வரி செலுத்தவேண் டியதில்லையென்று ஒரு ரிவிஷன் மனு செய்யலாம். இவைகளின்கீழ் ப்ரெஸிடென்டுகள் செய்யும் உத்தரவின் பேரில் பஞ்சாயத்துக்கே அப்பீல் செய்யலாமென்றுள்ளது. பஞ்சாயத்துக்கு செய்யும் அப்பீலானது பஞ்சாய த்தினுடைய ஆபீஸில் கொடுக்கப்பட வேண்டும். அந்த அப்பீலானது பஞ்சாயத்தினால் மீட்டிங்கில் கவனிக்கப்படும்.

இந்த விதியானது ப்ரெஸிடென்டினால் இடப்படும் வரியைப்பற்றி மாத்திரம் கூறுகிறதே யொழிய லேலென்ஸுகளைப்பற்றி ஒன்றும் சொல்ல வில்லை. மோட்டார்கள், மார்க்கெட்டுகள், விநோதக்காகஸி இடங்கள், தொழிற் சாலைகள் இவைகள் விஷயமாக லேலென்ஸ் கொடுப்பதைப் பற்றியும் அவைகளைப்பற்றிய அப்பீல்களைப் பற்றியும் இச்சட்டத்தின் 166-171-181-198-213-இந்தப் பிரிவுகளில் சொல்லப் பட்டிருக்கின்றன. லேலென்ஸுகள் பஞ்சாயத்தினாலேயே கொடுக்கப்படுவதால் அவைகளைப் பற்றின அப்பீலானது ஜில்லாபோர்டுகளுக்குத்தான் உண்டென்று அப்பி ரிவுகளில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஒரு ப்ரெஸிடென்டானவர் லோகல்போர்டு சட்டத்தை யொட்டி அதன் நிபந்தனைகளுக்கு கொஞ்சமும் தவறாமல் வரி முதலியவைகளை யிடும் பகுதியில் அவைகளைப்பற்றி அந்த போர்டுக்கே அப்பீல் செய்யவேண்டுமே யொழிய சிவில் கோர்ட்டில் தாவா செய்வதற்கில்லை. அப்படி செய்யும் பகுதியில் தாவாவை அடியோடே கோர்ட்டார் அங்கீகரிக்கமாட்டார்கள்(a). ஆனால் ப்ரெஸிடென்டு தமது அதிகாரத்தை மீறி செய்யும்பகுதியில் அதன் விஷயமாக வரி விதிப்பானது செல்லத் தக்கதல்ல வென்று சிவில் கோர் ட்டில் தாவா செய்யலாம்.

இந்த விதியானது ப்ரெஸிடென்டினால் தம்முடைய நிர்வாக ஹோதா வில் விதிக்கப்படும் வரிகளைப்பற்றி கூறுகிறதே யொழிய பஞ்சாயத்துகள் வரி விதிப்பு விஷயமாக தங்கள் மீட்டிங்குகளில் செய்யும் தீர்மானத்தைப் பற்றி கூறவில்லை வரி விதிப்பு விஷயமாக ப்ரெஸிடென்டுகள் செய்யும் தவறுகளை திருத்துவதற்காக அப்பீல் செய்யலாம். ஆனால், ஒரு ப்ரெஸி டென்டால் விதிக்கப்பட்டிருக்கும் வரியானது சட்ட விரோதமாயிருந்தால் அதைப்பற்றி சிவில் கோர்ட்டில் பரிஹாரம் தேடலாம் கிரமமாக அப்பீல் செய்யவேண்டியிருந்து யாதொரு அப்பீலும் செய்யாமல் ஜப்தி நடவடிக்கை

(a) யமுனுதேவி vs. ஸ்ரீகாகுளம் தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு 113 I. C. 560.

எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தாம் யாதொருவரியும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை யென்று வரி யிடப்பட்டவர் வற்புறுத்த முடியாது (a). அப்பீல் செய்த பிறகு அப்பீல் தீர்மானம் சரியானதல்ல வென்றும் சட்ட விரோதமானதென்றும் கூறி ஒரு ரபர் தாவா செய்யலாம் (b). 228-வது பிரிவின்கீழுள்ள குறிப்புகளைப் பார்க்க.

இந்த விதியின் கீழ் அப்பீல் செய்வதற்கு ஒவ்வொரு வரியிடப்படுபவருக்கும் உரிமையுண்டாதலால் அப்பீலை பஞ்சாயத்தானது கட்டாயம் கவனித்தே தீரவேண்டும்.

அப்பீல் செய்வதற்கு யாதொரு கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பும் ஒட்ட வேண்டிய அவசியமில்லை.

28. பஞ்சாயத்துக்குச் செய்துகொள்ளப்படும் எந்த அப்பீலைப் பற்றியும் —

(i) எந்த வரி விஷயமாய்க் குறை கூறப்படுகிறதோ அது கேட்கப்பட்ட பிறகு முப்பது தினங்களுக்குள் பஞ்சாயத்தினுடைய ஆபீஸில் அந்த அப்பீலானது வந்து சேர்ந்தாலன்றி மற்றப்படியும்,

(ii) (i)-வது வாக்கியத்தின்கீழ் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் எந்த வரி விஷயமாக ஒரு அப்பீல் தாக்கல்செய்யப்படுகிறதோ அந்த வரியானது (ப்ரெஸிடென்டானவர் ஏழ்மை என்னும் ஒரு காரணத்தைக்கொண்டு வேறே விதமாக உத்தரவு செய்தாலன்றி) பஞ்சாயத்தினுடைய ஆபீஸில் செலுத்தப்பட்டாலொழிய அல்லது டிபாஸிட் செய்யப்பட்டாலொழிய, விசாரணை செய்யப்படமாட்டாது.

குறிப்புகள்.

இந்த விதியானது, அப்பீல் செய்வதற்குமுன் அப்பீல் செய்பவர் எவைகளை அனுசரிக்க வேண்டும் என்று கூறுகிறது. கேட்கப்பட்டதினம் முதல் 30-நாட்களுக்குள் கேட்கப்பட்ட பணத்தைச் செலுத்திவிட்டு பிறகு அப்பீல் செய்யவேண்டும். இது முக்கியமானதாகும்

ஒரு பஞ்சாயத்தானது தம்மிடம் செய்யப்பட்ட அப்பீலை மீட்டிங்கில் கவனித்தப் பிறகு அதன் விஷயமாக ஒரு தீர்மான ரூபமாக தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டும். தாம் அம்மாதிரி தெரிவித்த பிறகு மறுபடியும் அதைப்பற்றி யோசிப்பதற்காவது அல்லது அந்த தீர்மானத்தை ரத்துசெய்வதற்காவது அல்லது மாற்றுவதற்காவது பஞ்சாயத்துக்கு அதிகாரம் கிடையாது. அப்படி மாற்றும் பக்ஷத்தில் மாற்றுவதாகச்

(a) வீரராகவலு விஷயமாக 20 M. L. J. 773.

(b) பிஷர் vs. ட்விச். 21 Mad. 367.

செய்த தீர்மானம் செல்லத்தக்கதல்ல. சட்ட விரோதமானது. அப்படிசெய்யும் ஒரு தீர்மானத்தினால் முந்தின தீர்மானத்தினால் விதிக்கப்பட்டிருக்கும் வரியை குறைக்கும்பக்ஷத்தில் அதனால் சேர்ந்த நஷ்டத்தை அந்த தீர்மானத்திற்கு காரணமாயிருந்த அங்கத்தினர்களே தம் சொந்த செலவில் கொடுக்க வேண்டும். இதற்கு (Surcharge) லர்சார்ஜ் என்று சொல்லப்படும். அந்த தீர்மானத்தை ரத்து செய்ததாக கவர்ன்மெண்டார் 38-வது பிரிவின்கீழ் யாதொரு உத்தரவைச்செய்வதும் அனுவசியமாகும்.

ஒரு அப்பீலானது காலங்கடந்து செய்யப்பட்டாலும், அல்லது கேட்கப்பட்ட வரியைச் செலுத்தாமல் செய்யப்பட்டாலும் அதை பஞ்சாயத்தானது தமது மீட்டிங்கில் கவனிப்பதற்கில்லை. அப்படி கவனித்து வரியைக்குறைக்கும் பக்ஷத்தில் அது சட்ட விரோதமானது. அதனால் பஞ்சாயத்துக்கு நேரிட்டிருக்கும் நஷ்டத்தை அந்தத் தீர்மானத்திற்குக் காரணமாயிருந்த அங்கத்தினர்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

29. வரியைக் குறைத்தோ அல்லது வஜா செய்தோ ப்ரெஸிடென்டால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவை பஞ்சாயத்தானது தாங்களாகவேயாவது மற்றப்படியாவது ரத்து பண்ணலாம் அல்லது நிருத்தலாம்.

குறிப்புகள்.

ப்ரெஸிடென்டானவர் யாதொரு வரியைக்குறைக்கும் பக்ஷத்தில் அல்லது அடியோடே மன்னித்து விடும்பக்ஷத்தில் அவருடைய செய்கையைக் கண்டிக்கவேண்டியது அவசியம் என்று தோன்றினால் பஞ்சாயத்தானது தாங்களாகவே அதைக்கவனித்து ப்ரெஸிடென்டின் உத்திரவை மாற்றிவிடலாம். ப்ரெஸிடென்டானவர் வரியைக்குறைக்கும்படி உத்தரவு செய்யும்பக்ஷத்தில்தான் பஞ்சாயத்தானது இப்பிரிவின்கீழ் தீர்மானங்களைச் செய்யலாமேயொழிய அவர் வரியை அதிகப் படுத்தும்பக்ஷத்தில் அதைக்குறித்து தாங்களாகவே, யாதொரு தீர்மானமும் செய்வதற்கில்லை வேண்டுமானால் அதனால் பாதிக்கப்பட்டவர் அப்பீல் செய்யலாம்.

30. அப்பீலின்மேல் பஞ்சாயத்து பிறப்பிக்கப்படும் எவையேனும் உத்தரவுகளின்படி, வரி விதிப்பு புஸ்தகங்களைத் திருத்தவேண்டும்; யாதொரு வரித்தொகையானது லோகல் போர்டாரால் குறைக்கப்பட்டாலும் வஜா செய்யப்பட்டாலும், ப்ரெஸிடென்டானவர் அப்பிரகாரமே அதை வாபீஸ் பண்ணவேண்டும்.

குறிப்புகள்.

இவ்விதியினால் பஞ்சாயத்தானது அப்பீல் விஷயமாக செய்யும் தீர்மானங்களை ப்ரெஸிடென்டானவர் அங்கீகாரம் செய்து அவர்களுடைய உத்தரவு பிரகாரம் நடத்துகொள்ள வேண்டும் என்று ஏற்படும்.

31. இதில் முன்னமே நிபந்தனைகளில் கண்டிருக்கிறபடியும் விஷயமாயும் அப்பீல் செய்துகொள்ளப்பட்டிராவிட்டாலும் அல்லது அப்பீல் செய்து கொள்ளப்பட்டிருந்தாலும் யாதொரு வரிவிதிப்பு அல்லது வரியைக் கேட்பது விஷயமாய் அசலிலும் அப்பீலிலும் பஞ்சாயத்து செய்கிற தீர்மானம் முடிவானதாகும்

ஆனால், யாதொரு வரிவிதிப்பு அல்லது டிமாண்டானது வரி விதிப்பு புஸ்தகங்களில் உள்ள பிரகாரம் இராமலிருக்குமானால், அவைகளின் பிரகாரம் புதியதாக ஒரு வரி விதிப்பதையாவது அல்லது டிமாண்டையாவது செய்வதை இந்த விதியில் கண்டிருக்கப்பட்டிருக்கும் யாதொன்றும் தடுப்பதாக ஏற்படாது.

குறிப்புகள்.

பஞ்சாயத்தானது செய்யும் தீர்மானமானது முடிவானதாகுமென்றால் அதைப்பற்றி பஞ்சாயத்தானது மறுபடியும் கவனிப்பதற்கில்லை என்று அர்த்தமாகும். ஆனால் பஞ்சாயத்தானது தமது தீர்மானத்தை சட்ட விரோதமாகச்செய்யும் பக்ஷத்தில் அதைப்பற்றி தகுந்த பரிஹாரத்தை சிவில் கோர்ட்டுகளில் தேடலாம். இதன் விஷயமாக 28-வது விதியின்கீழ் உள்ள குறிப்புகளைப்பார்க்க.

வரிகளை வசூல் பண்ணுவது.

32. (1) எந்த வரி விஷயமாக 96-வது பிரிவின்கீழ் நோட்டீஸ்கொடுக்கப்படவேண்டுமோ அப்படிப்பட்ட வரியல்லாத யாதொரு வரியானது யாதொரு நபரால் பாக்கியாயிருக்குமானால் லோகல் போர்டு ப்ரெஸிடென்டு அப்படிப்பட்ட நபருக்கு, சாம் 33-வது விதியிலுள்ள ஏற்பாடுகளை செலாவணியாக்குவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவதற்கு முன் அவரால் சேரவேண்டிய தொகைக்கான ஒரு பட்டியை (Bill) க் கொடுக்க வேண்டும்.

(2) 96-வது பிரிவின்கீழ் கொடுக்கப்படும் நோட்டீசும் 32-வது விதியின் (1)-வது உப விதியின்கீழ் கொடுக்கப்படும் பட்டியும் ப்ரெஸிடென்டினாலாவது அல்லது அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட யாதொரு நபராலாவது கையெழுத்து செய்யப்பட்டிருக்க வேண்டும். அவைகளில் பின் சொல்லப்பட்டிருப்பவைகளும் அடங்கியிருக்க வேண்டும்:—

(a) எந்த காலஅளவு வரையிலும் வரி விதிக்கப்பட்டதோ அதுவும், எந்த தொழிலுக்காக அல்லது சொத்துக்காக அல்லது வஸ்துக்காக வரியிடப்படுகிறதோ அதுவும், அடங்கிய ஒரு விவசிப் பத்திரிகை;

(b) வரியைக் கொடுக்கத் தவறினால் உட்பட வேண்டிய பொறுப்பைப்பற்றின நோட்டீஸ்.

(3) யாதொரு அரைவருஷத்திற்கு செலுத்தப்படவேண்டிய யாதொருவரியும், எவருக்கு வரியிடப்படுகிறதோ அந்த நபருக்கு அந்த அரைவருஷத்திற்குள்ளாவது அல்லது அதற்குப் பிந்தின அரைவருஷத்திலாவது நோட்டீஸ் அல்லது பட்டி (Bill) கொடுக்கப் பட்டாலொழிய அவர் யாதொரு வரியையும் செலுத்தும்படி ஏற் படாது;

ஆனால், வரி விதிப்பு புஸ்தகங்கள் 5-வது விதியின் (4)-வது உப விதியின் கீழ் திருத்தப்பட்டதானால் சந்தர்ப்பத்திற்கு தகுந்தாப் போல் அந்த நோட்டீஸ் அல்லது பட்டியானது எந்த அரை வருஷத் தில் திருத்தம் செய்யப்பட்டதோ அந்த அரை வருஷத்திலாவது அல் லது அதற்கு அடுத்த அரை வருஷத்திலாவது கொடுக்கப்படலாம்.

குறிப்புகள்.

தொழில் வரியானது வசூலிக்கப்படுமுன் அதன் விஷயமாக ஒரு நோட்டீஸ் கொடுக்கப்படவேண்டும். நோட்டீஸ் இல்லாமல் தொழில் வரி யானது வசூலிக்கப்படுவதற்கில்லை. காரணம் என்னவென்றால் நோட் டீஸைப் பெற்றுக்கொண்ட பிறகு தொழில் வரி விடப்பட்டவர் அப்பீல் செய்யலாம். அவ்வப்பீலில் வரித் தொகையானது குறைக்கப்படலாம். அப்பீல் செய்வதற்குமுன் கேட்கப்பட்ட வரி செலுத்தப்பட வேண்டு மாதலால் அதற்காக யாதொரு ஜப்தியும் செய்யவேண்டிய அவசியமிருக் காது

நோட்டீஸ் என்பது கேட்கப்படும் வரியை இன்ன தினத்திற்குள் செலுத்த வேண்டும் என்று கேட்பது. Bill என்பது பாக்கியை கேட்கும் ஜாப்தாவாகும்.

33. (1) யாதொரு வரி விஷயமாக பாக்கியாயிருக்கிற தொகையானது நோட்டீஸ் அல்லது பட்டி (Bill) சேர்ப்பிக்கப்பட்டது முதற்கொண்டு பதினைந்து தினங்களுக்குள் செலுத்தப்படாமலிருந்து, அந்த வரியைச்செலுத்த வேண்டிய நபர் அதை வன் செலுத்தக்

கூடாதென்பதைக் குறித்து, ப்ரெஸிடென்டுக்குத் திருப்திகரமாகக் காரணம் தெரிவித்திராத பட்சத்தில், ப்ரெஸிடென்டானவர் – தம்மால் பிறப்பிக்கப்படும் வாரன்டைக்கொண்டு (வரி செலுத்தத்) தவறினவருடைய அசையும் பொருளை ஜப்தி பண்ணி விற்பனைசெய்து அந்த வரிக்காகச் சேரவேண்டிய தொகையையும், வாரன்ட் கட்டணத்தையும் ஜப்தி கட்டணத்தையும், அந்தப்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்தை மறியல் பண்ணி விற்பனை செய்வது சம்பந்தமாய் உத்தேசமாகப் பிடிக்கும் செலவுக்கு சரிக்கட்டி போகக்கூடிய மற்ற தொகையையும், வசூல் பண்ணலாம் ;

ஆனல் எப்போதும், 1908-ம் வருடத்திய ஸிவில் ப்ரோஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 60-வது பிரிவைச்சேர்ந்த விலக்கு நிபந்தனையில் விவரித்திருக்கும் அசையும் பொருள் ஜப்தி செய்யப்படுவதற்கு உள்ளாகாது.

(2) (வரி செலுத்தத்) தவறினவருடைய சொத்தை ஜப்தி யாவது அல்லது போதுமான வரையில் ஜப்தியாவது செய்வது யாதொரு காரணத்தினலே சாத்தியமாயிராவிட்டால், ப்ரெஸிடென்டானவர் - அப்படி தவறிப்போனவர் பேரில் பிராது கொடுத்து மாஜிஸ்ட்ரேட் முன்பாக தாவா தொடரலாம்.

(3) இந்த ஆக்டின்படி லோகல் போர்டாருக்குச் சேரவேண்டிய யாதொரு வரிக்காக ஸிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடருவதற்கு இந்த விதியிற் கண்டதெதனலும் தடை ஏற்பட மாட்டாது.

(4) (1)-வது உப விதியின்படிக்கான வாரன்ட் இந்த விதிகளுடன் சேர்ந்திருக்கும் A. அனுபந்தத்திலுள்ள நமூனப்படியாவது அதைப்போன்ற ஒரு நமூனப்படியாவதிருக்க வேண்டும்; மேலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு வாரன்ட்டுக்கும் இரண்டணு கட்டணம் விதித்து வாங்கவேண்டும்.

(5) ப்ரெஸிடென்டின் எழுத்து மூலமாயுள்ள பிரத்தியேகமான ஒரு உத்தரவின்படி, ஜப்தி வாரன்டை நிறைவேற்றும் பொறுப்பு ஏற்படுத்தப்பெற்றிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தர் யாதொரு கட்டிடத்தில் கைப்பற்றப்படத்தக்க சொத்து இருக்கிறதென்று நம்புதற்கு நியாயமான காரணம் இருக்கிற பட்சத்திலும், தம்முடைய

அதிகாரத்தையும் தம்முடைய காரியத்தையும் தெரிவித்து உள்ளே பிரவேசிக்க விடும்படி கிரமமாய்க்கேட்ட பிறகு தாம் வேறே விதமாய் உள்ளே பிரவேசிக்க முடியாதிருக்கிற பட்சத்திலும், ஜப்தி செய்யும் பொருட்டு அந்தக் கட்டிடத்தின் யாதொரு வெளிக்கதவையாவது உட்கதவையாவது ஜன்னலையாவது சூரியோதயமுதல் சூரியாஸ்த மனத்துக்குள்ளாக உடைத்துத் திறக்கலாம்;

ஆனால், மெ. உத்தியோகஸ்தர் - ஸ்திரீகளுக்கே உரிய யாதொரு அறையில் பிரவேசிக்கப் போவதாகவாவது அதன் கதவை உடைத்து திறக்கப் போவதாகவாவது தான் உத்தேசித்திருப்பதாக மூன்று மணி நேர நோட்டீஸ் கொடுத்து, அந்த ஸ்திரீகள் மெ. அறையை விட்டு நீங்கப்போக அவர்களுக்கு அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்கிற வரையிலே மெ. அறைக்குள் அவர் பிரவேசிக்கவும் கூடாது, அதன் கதவை உடைத்துத் திறக்கவும் கூடாது.

குறிப்புகள்.

சிவில் புரோஸீஜர் கோட் என்னும் சட்டத்தில் 60-வது பிரிவின் கீழ் பின்வருமாறு விலக்கு நிபந்தனைகள்ளது;—

ஆனால், அடியில் விவரித்திருக்கிறவைகள் அப்படிப்பட்ட ஜப்திக்காகிலும் விற்பனைக்காகிலும் உள்ளாகமாட்டா. அவைகள் எவையென்றால்:—

(a) தீர்ப்பான கடனாளியும் அவருடைய மனைவியும் மக்களும் உடுத்திக்கொள்ளுகிற அவசியமான உடுப்புகளும் சமையல் செய்வதற்கான பாத்திரங்களும், படுக்கைகளும் படுக்கைசாமான்களும், மதாசாரப்படி யாதொரு ஸ்திரீ தேகத்தினின்றும் அப்புறப்படுத்தக்கூடாத நகைகளும்;

(b) கைத்தொழிலாளிகளின் ஆயுதங்களும், தீர்ப்பான கடனாளி விவசாயக்காரராயிருந்தால் அவருடைய விவசாயசாமான்களும் அவர் விவசாயக்காரராகத் தம்முடைய ஜீவனத்துக்குச் சம்பாத்தியம் செய்துகொள்ளக்கூடியதற்கு அவசியமாய் வேண்டியிருப்பதாகக் கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிற கால்நடைகளும் விதைத்தானியமும், விவசாய மாசூலின் அல்லது யாதொரு வகையைச்சேர்ந்த விவசாய மாசூலின் எந்தப்பாகமானது அடித்துவருகிற பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி பொறுப்பினின்றும் நிவாரணையாயிருப்பதாக நிர்ணயிக்கப்பட்டிருக்குமோ அந்தப்பாகமும்;

(c) யாதொரு விவசாயக்காரரைச் சேர்ந்ததாகவும் அவருடைய அனுபோகத்திலும் இருக்கிற வீடுகளும் இதர கட்டிடங்களும் (அவைகளின் சாமான்கள்-நிவேசனங்கள்-அவைகளுக்கு அடித்தாற்போல அவைகளைச் சேர்ந்திருப்பதாய் அவைகளின் அனுபோகத்திற்கு அவசியமாயிருக்கிற ஆதிய இவைகள் சகிதமாக;)

இத்தகைய சொத்துக்களை ப்ரெஸிடென்டானவர் ஜப்தி செய்வதற்கில்லை.

34. (1) யாதொரு வாரண்டை நிறைவேற்றும்படி உத்தரவு கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்தர் - ஜப்தி செய்வதற்கு முன்னே

சேரவேண்டிய வரியையும் வாரண்ட் கட்டணத்தையும் செலுத்தும்படி கேட்கவேண்டும். வரி வரியும் கட்டணமும் செலுத்தப்பட்டால் ஜப்தி செய்யக்கூடாது; ஆனல், அந்த வரி அல்லது கட்டணமானது செலுத்தப்படாவிட்டால் மேற் உத்தியோகஸ்தர் —

(a) (வரிசெலுத்தத்) தவறினவருடையதாய் தமக்கு அவ சியமாகத் தோற்றும் அசையும் பொருளைக் கைப்பற்ற வேண்டும்.

(b) கைப்பற்றின சொத்துக்கு ஜாபிதா ஒன்று எழுதிக் கொள்ள வேண்டும்; மேலும்,

(c) கைப்பற்றிய காலத்தில் கைப்பற்றின சொத்தை ஸ்வா தினத்தில் வைத்துக்கொண்டிருந்த நபருக்கு, இந்த விதிகளுடன் சேர்ந்திருக்கும் B-அனுபந்தத்திலுள்ள நமூனுப்படியாவது அதைப் போன்ற ஒரு நமூனுப்படியாவது (கைப்பற்றின சொத்தின்) ஜாபிதா வுக்கு ஒரு நகலையும் விற்பனை நோட்டீஸையும் கொடுக்கவேண்டும்.

ஆனல் பாக்கியா யிருக்கும் தொகைகளை கொடுத்து பறிக் கப்பட்ட சொத்தை மீட்பதற்கு ஏழுநாள் காலம் கொடுக்கப்பட வேண்டும்.

(2) ஜப்தி செய்யப்பட்ட சொத்தானது அளவுக்கு மிஞ்சி யிருக்கக் கூடாது; அதாவது ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் மதிப் பானது (வரி செலுத்தத்) தவறினவர் கொடுக்க வேண்டிய தொகை யும், வாரண்ட் ஜப்தி-மறியல்-விற்பனை ஆகிய இவைகளுக்குறிய சகல செலவுகளும் சேர்ந்து எவ்வளவாகிறதோ அந்தத் தொகையின் மதிப் புக்கு கூடியமட்டில் சரியாக இருக்கவேண்டும்.

குறிப்புகள்.

ஜப்தி செய்வதில் மேலே 33-வது பிரிவின்கீழுள்ள குறிப்புகளில் சொல்லப்பட்டிருக்கும் சொத்துக்களைத்தவிர வேறே அசையாப்பொருள் களை ஜப்தி செய்யலாம். வீட்டுத்தெருக்கதவை ஜப்தி செய்யக்கூடாது. அப்படி ஜப்தி செய்வதை தடுப்பதினல் யாதொரு குற்றம் நேடையாது (a).

ஜப்தி செய்வதற்குமுன் ஜப்தி செய்யும் உத்தியோகஸ்தர் பணத்தைச் செலுத்தும்படி கட்டாயமாக கேட்கவேண்டும். அப் படிக் கேட்காமல் ஜப்தி செய்வது சட்ட விரோதமாகும். அதனல்தான் இந்த விதியில் 'கேட்கவேண்டும்' என்று சொல்லப்பட்டுள்ளது.

(1) மதார் சாயப் விஷயமாக 11 (1930) அகில இந்தியா லாஜர்னல் ரிப்போர்ட்டுகள் 32-வது பக்கம்.

35. (1) வரிக்காகவும் வாரண்ட் கட்டணத்திற்காகவும் ஜப்தி கட்டணத்திற்காகவும் சொத்தை மறியல் செய்தது சம்பந்தமாகப் பிடித்த செலவுக்காகவும் (வரி செலுத்தத்) தவறினவர் செலுத்த வேண்டிய தொகையானது 34-வது விதியின்படி கொடுக்கப்பட்ட நோட்டீஸில் கண்ட ஏழு தினங்களுக்குள் செலுத்தப்படாமலிருந்து ஜப்தி வாரண்டை ப்ரெஸிடென்ட் நிறுத்தி வைக்காதிருக்கிற பட்சத்திலே, கைப்பற்றப்பட்ட சொத்தையாவது அதில் போதுமான பாகத்தையாவது ப்ரெஸிடென்டின் உத்தரவின்மேல் பஹிரங்கமான ஏலத்தில் விற்கவேண்டும்; விற்று வந்த பணத்தை வரிக்காகவும் வாரண்ட் கட்டணத்துக்காகவும் ஜப்தி கட்டணத்துக்காகவும் சொத்தை மறியல் செய்து விற்றது சம்பந்தமாகப் பிடித்த செலவுக்காகவும் சேரவேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு ப்ரெஸிடென்டு உபயோகிக்க வேண்டும்; மேலும் சொத்தை கைப்பற்றியகாலத்தில் அது யாருடைய் வசத்திலிருந்ததோ அவருக்கு விற்பனைக்குப் பிறகும் மேலே கண்டபடி விற்று முதலை உபயோகித்ததற்குப் பிறகும் மிகுந்திருக்கக் கூடிய யாதொரு சொத்தையாவது தொகையையாவது வாபிஸ் செய்துவிட வேண்டும். வரிக்காகவும் வாரண்ட் கட்டணத்திற்காகவும் ஜப்தி கட்டணத்திற்காகவும் சொத்தை மறியல் செய்து விற்றது சம்பந்தமாகப் பிடித்த செலவுக்காகவும் சேரவேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு அந்த விற்று முதலானது போதுமானதாயிராவிட்டால், செலுத்தப்படாமல் பாக்கியாயிருக்கிற தொகைக்காக 33-வது விதியின்படி ப்ரெஸிடென்டு மறுபடியும் நடவடிக்கை நடத்தலாம்.

(2) கைப்பற்றப்பட்ட சொத்து தன் சுபாவத்தினால் சிக்கிரத்தில் அழிந்துபோகக் கூடியதாயிருந்தால், ப்ரெஸிடென்டானவர் பாக்கியாயிருக்கிற தொகை மேற்கண்ட ஏழு தின கால் அளவு கடந்து போவதற்கு முன்னே அது விற்கப்படுமுன் செலுத்தப்பட்டாலன்றி மற்றபடி, அந்தப்படி கடந்து போவதற்கு முன் எப்போதாவது மேடி சொத்தை விற்றுவிடலாம்.

(3) ப்ரெஸிடென்டானவர் - யாதொரு சொத்தின் ஜப்தியைக் குறித்து மேடி ஏழு தின கால அளவுக்குள் ஏதாவது ஆக்ஷேபனை செய்யப்பட்டிருந்தால் அவைகளைப்பற்றி கவனிக்க வேண்டும்; அது விஷயமாய் செய்யப்படும் பரிசீலனை முடிவாகிற வரையில் அவர் விற்பனையை நிறுத்தி வைக்கலாம். ஜப்தி செய்யப்பட்ட சொத்தானது

ஜப்தி செய்யப்படத் தக்கதல்லவென்று ப்ரெஸிடென்டு தீர்மானிப்பாராகில், அவர் அதைப் பெற்றுக்கொள்ள அர்ஹரென்று தோற்றுகிற நபருக்கு, அதைபாவது, அல்லது அப்படி தீர்மானிப்பதற்கு முன்னமே விற்பனை செய்யப்பட்டிருந்தால் அதன் விற்று முதலியாவது வரபீஸ் செய்துவிட வேண்டியது. பிறகு 33-வது விதியின்படி மறு படியும் நடவடிக்கையும் நடத்தலாம். அது ஜப்திக்குள்ளாகத் தக்கதல்லவென்று தெரிந்திருந்தும் அந்த சொத்தை (வரி செலுத்தத்) தவறினவர் வேண்டுமென்று ஜப்தி செய்யும்படி விட்டாரென்பதாக ப்ரெஸிடென்டுக்குத் தோற்றுமாகில், முதல் ஜப்திக்கும் விற்பனைக்கும் சம்பந்தப்பட்ட சகல கட்டணங்களும் செலவுகளும் அப்படி தவறினவரிடத்திலிருந்து வசூல் செய்யப்படத் தக்கவைகளாகும்.

36. (1) இந்த விதிகளுடன் சேர்த்திருக்கும் C. அனுபந்தத்தில் கண்டிருக்கிற வீதங்களுக்கு அதிகப்படாமல் லோகல்போர்டாரால் நிச்சயிக்கப்படக்கூடிய வீதங்களின் பிரகாரம் ஜப்தி கட்டணங்கள் செலுத்தப்படத் தக்கவையாகும்.

(2) அப்படிப்பட்ட கட்டணங்களில் இந்த ஆக்டின்படி ஜப்தி செய்யப்பட்ட யாதொரு சொத்தை மறியல் செய்து வைப்பது சம்பந்தமாகப் பிடித்த செலவுகள் சேருவதாக எண்ணக் கூடாது.

37. 33-வது விதியின் (1)-வது உப விதியின்படி (வரி செலுத்தத்) தவறியிருக்கும் யாதொரு நபருடைய சொத்து லோகல் போர்டு விஸ்தீரணத்துக்குள் எங்கே அகப்பட்டாலும் அதை ஜப்தி செய்யலாம்.

38. யாதொரு கட்டிடத்திற்காகச் சேவேண்டியதாயிருக்கும் வரியானது 33-வது விதியின் (1)-வது உப பிரிவில் கண்ட கால அளவின் முடிவில் மொத்தமாகவாவது அல்லது கொஞ்சபாகமாவாவது செலுத்தப்படாதிருந்தால் ப்ரெஸிடென்டானவர் - வீடி வரி பன்னிரண்டு மாதத்திற்குமேற்பட்டு செலுத்தப்படாமலிருந்தாதபட்சத்தில் 15-தினங்களுக்குக் குறையாமல் குறித்த ஒரு கால அளவுக்குள் அந்த தொகையைச் செலுத்தவேண்டுமென்று அப்படிப்பட்ட கட்டிடத்தை அந்தந்த காலத்தில் அனுபவிக்கிறவருக்கு உத்தரவு செய்யலாம்; மேலும், அனுபோகதாரர் அப்படிப்பட்ட உத்தரவின்படி நடக்கத் தவறுவாராகில், ப்ரெஸிடென்டானவர் - வீடி கட்டிடத்தில்

அகப்படுகிற யாதொரு அசையும் பொருளை ஜப்திசெய்து விற்கலாம் மேலும், முன்னிய விதிகளிலுள்ள நிபந்தனைகள் இந்த விதியின்படி செய்யப்பட்ட சகல ஜப்திகளுக்கும் விற்பனைகளுக்கும் அவசியமான மாறுதலுடன் உபயோகப்பட வேண்டும்; ஆனால், ஜப்தி அல்லது போதுமானவரையில் ஜப்தி செய்வதை அனுபோகதாரர் வேண்டுமென்று தடுத்திருந்தாலன்றி மற்றப்படி, இந்த பிரிவின் பிரகாரம் அவரிடத்திலிருந்து வசூலிக்கத்தக்க யாதொரு தொகைக்காக அந்த அனுபோகதாரர் - தம்மேல் பிராது தொடரப்படுவதற்காகிலும் விசில் வியாஜ்ஜியம் செய்யப்படுவதற்காகிலும் உள்ளாகமாட்டார்.

குறிப்புகள்.

இந்த விதியில் ஒரு கட்டிட விஷயமாக செலுத்தப்படவேண்டிய வரியைப்பற்றியும் அந்த வரியானது 12 - மாதங்கள் வரையில் சேர்ந்தாப் போல் செலுத்தப்படாவிட்டால் அதற்காக என்னசெய்வது என்பதைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது.

ஒரு கட்டிடத்தைப்பற்றின வரியானது 12 மாதங்களாக செலுத்தப்படாவிட்டால் அதன்பேரில் ப்ரெஸிடென்டானவர் அந்தக்கட்டிடத்தில் இருந்து வாசம் செய்துவரும் நபரை செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தும்படி கேட்கலாம். அவரும் செலுத்தாவிட்டால் அவ்விடத்திலுள்ள அசையும் பொருளை ஜப்தி செய்து வசூல் செய்யலாம். அந்த கட்டிடத்தை அனுபவிப்பவர் ஜப்தி செய்வதை தடுக்கக்கூடாது. ஜப்தி செய்யப்பட்ட சொத்தில் யாதொன்றும் கிடைக்காவிட்டால், அந்தக் கட்டிடத்தை அனுபவிப்பவர்பேரில் ப்ரெஸிடென்டு யாதொரு அமுலும் நடத்துவதற்கில்லை.

ஜப்தி செய்யப்பட்ட சொத்தானது அந்த கட்டிடத்தை அனுபவிக்கும் நபரைச்சேர்ந்த பகுதியில் அவர் வரியைச்செலுத்திவிட்டு பிறகு அதை வீட்டின் சொந்தக்காரரிடமிருந்து வசூல் செய்யலாம்.

39. (1) 33-வது விதியின் (2)-வது உப விதியின்படி எவர் பேரில் பிராது தொடரப்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் அவர் செலுத்தவேண்டிய தொகையை வேண்டுமென்று செலுத்தத் தவறினாலென்றாகிலும், ஜப்தி அல்லது போதுமான வரையில் ஜப்தி செய்வதை வேண்டுமென்று தடை செய்தாரென்றாகிலும் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் திருப்திகரமாக ருஜுவாவதன்மேல்—

(a) வரிக்காகவும் வாரண்ட் கட்டணம் ஏதாவதிருந்தால் அதற்காகவும்,

(b) ஜப்தி செய்யப்பட்டிருந்தால் ஜப்தி கட்டணத்திற்காக வும், அவர் செலுத்தவேண்டியதாயிருக்கும் தொகைக்கு இரண்டத் தனைக்கு அதிகப்படாமல் அபராதம் செலுத்துவதற்குள்ளாவார ;

(2) (1)-வது உப விதியின்கீழ் ஒரு குற்றத்திற்காக யாதொரு நபர் தண்டிக்கப்படும் பக்ஷத்தில் மாஜிஸ்ட்ரேட்டானவர், அந்த நபருக்கு விதிக்கப்படும் யாதொரு அபராதத்தோடு கூட, (1)-வது உபவிதியின் (a) (b)-உபவாக்கியங்களில் குறிக்கப்பட்ட கீழ்மையின் கீழ் லோகல் போர்டுக்குச் சேரவேண்டியதாயிருக்கும் யாதொரு தொகையை சுருக்குவழியாக கைப்பற்றி லோகல் போர்டுக்குச் செலுத்த வேண்டும். இன்னும் தம்முடைய யுக்தாநுசாரம், அந்த கேஸை நடத்தினதற்காக (பிராஸிகியூஷன் செய்ததற்காக) எவ்வளவு தொகை யை நிர்ணயித்திருக்கிறாரோ அந்த தொகையை சுருக்குவழியாக கைப் பற்றி அந்த லோல் போர்டுக்கு கொடுக்கலாம்.

குறிப்புகள்.

15—10—1925-ல் G. O. Mis No. 3770-ல் லோகல் கவர்ன்மென் டார் பின் வருமாறு உத்தரவைச்செய்திருக்கின்றனர் வரிசெலுத்த வேண்டியவருக்கு ஜப்தி செய்யும்படி யாதொரு அசையாப்பொருள் இராம லிருந்தால் அல்லது ஜப்தி செய்வது சாத்தியமானதல்லவென்று இருந் தால்தான் அப்படி செலுத்தத்தவறியவர்களை மாஜிஸ்ட்ரேட்டுகளின் முன்பாக பிராஸிக்யூஷன் செய்யலாம். இன்னும் ஒரு நபர் சாதாரணமாக அதாவது, கஷ்டத்தினால் வரி செலுத்த தவறினதினாலேயே பிராஸிக்யூஷன் செய்வதற்கு போதுமான காரணம் இருக்காது. அவர் வேண்டுமென்று வரித்தொகையை செலுத்தத் தவறினதாக இருக்கவேண்டும்.

39-A. மேலே சொல்லப்பட்ட விதிகளின் பிரகாரம் ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்கள் ஏலம்போடப்படுவதில் யாதொரு சொத் தையும், இந்த லோகல் போர்டினுடைய ப்ரெஸிடென்டாவது அல்லது வேறே ஒரு உத்தியோகஸ்தராவது அல்லது ஊழியராவது நேராகவா வது அல்லது மறைவாகவாவது கிரயம் பெறக்கூடாது.

40. இந்த ஆக்டின்படி விதிக்கப்படத்தக்க கட்டணங்களை வசூலிப்பதை குத்தகைக்கு விட்டிருந்தால், குத் தகைதாரர் குத்தகைச் சீட்டில் குறிப்பிடப்பட்ட எவையேனும் ஷரத் துகளை மீறி நடக்கும் பட்சத்தில், குத்தகைக்கு விட்டிருப்பவர், அதா வது சம்பந்தப்பட்ட லோகல் போர்டின் ப்ரெஸிடென்டானவர்-குத்த கைக்கு விட்டிருப்பதில் மறுபடியும் பிரவேசித்து குத்தகைதாரருடைய

பொறுப்பின்மேல் அதை மறுபடியும் குத்தகைக்கு விடலாம் அல்லது மறுபடியும் ஏற்பனை செய்யலாம் என்று அந்த குத்தகைச் சீட்டில் நிபந்தனை கண்டிருக்கலாம்; அப்படி மறுபடியும் நுழைத்தநின்போில் பிரதம குத்தகைச் சீட்டின் கால அளவு முடிந்து போனதாகும்.

A. அனுபந்தம்.

ஜப்தி வாரண்ட்டு.

(32 (4) விதியைப் பார்க்க.)

வாரண்ட் நெ.

(வாரண்டை நிறைவேற்றும்படி கட்டளையிடப்பட்ட உத்தியோகஸ்தரின் பெயர்.)

(பாக்கியாயிருக்கும் வரி அல்லது வரிகளையும் எந்த இடத்தின் அல்லது வளவின் விஷயமாக வரி அல்லது வரிகள் பாக்கி என்பதையும் காண்க.

19 -ம்வரு மீ உயோடு முடிவாகிற க்கு மேலேகண்ட வரி அல்லது வரிகள் விஷயமாய்ச் செலுத்த வேண்டிய ரூ. அ. பை தொகையை ல் இருக்கும் இடமிருந்து கிரமமாய்க் கேட்டிருந்தும் அப்படி கேட்ட பிறகு பதினைந்து தினங்கள் ஆயிருந்தும், ஷை தொகையை ஷை செலுத்தாதபடியாலும் அதைச் செலுத்தாமலிருந்ததற்காகப் போதுமான காரணம் தெரிவிக்காத படியாலும், உமக்கு இதனால் கட்டளையிடுகிறதென்னவென்றால் : வாரண்ட் கட்டணத்துக்காக இரண்டரை சதிதமாய் ஷை ரூ. அ. பை. உள்ள தொகையைச் செலுத்தும்படி கேட்க வேண்டும்; அது செலுத்தப்படாத பட்சத்தில், ஷை தொகை ரூ அ பை யும், வாரண்ட் கட்டணத்துக்காகவும் ஜப்திகட்டணத்துக்காகவும் ரூ. அ. பை யும் சேர்த்துமொத்தம் ரூ. அ. பை. க்கும் ஜப்தி சொத்தை வைத்திருக்கவும் விற்கவும் பிடிக்கிற செலவுகளுக்குப் போதுமானதா யிருக்கக் கூடிய பின்னும் ஒரு தொகைக்கும் ஷை டைய தட்டு முட்டு சாமான் வகையறுக்களை (அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றபடி, பிரஸ்தாப வளவில் அகப்படும் எந்த தட்டு முட்டு சாமான்களையும்) கீர் ஜப்தி செய்ய வேண்டும்; அப்படி ஜப்தி செய்த பிறகு அடுத்த ஏழு தினங்களுக்குள் ஷை வரி அல்லது வரிகளுக்காகவும் கட்டணங்களுக்காகவும் செலுத்தவேண்டிய தொகையையும், மேற்

கண்டபடி ஜப்தி சொத்தை வைத்திருப்பதற்காக பிடிக்கும் செலவுகளுக்கும் போதுமானதாயிருக்கக்கூடிய பின்னும் ஒரு தொகையையும் செலுத்தாவிட்டால், இனிமேல் நான் பிறப்பிக்கும் உத்தரவுகளின்படி ஷை தட்டு முட்டு சாமான்களை விற்பனை செய்து, ஜப்தி சொத்தின் விற்று முதலை போர்டு ஆபீசுக்கு இரிசால் செய்ய வேண்டும்; ஷை வரி அல்லது வரிகளுக்காகவும் கட்டணங்களுக்காகவும் சேரவேண்டியதாயிருக்கிற தொகையையும், எனவே, ரூ. அ. பை. யும், ஷை ஜப்தி சொத்தை வைத்திருப்பதற்கும் பிடித்த செலவுகளையும் விற்று முதலிலிருந்து கழித்து நிதிக்கு வரவாக வைக்க வேண்டும்; மிகுதி ஏதாவதிருந்தால் அதை ஜப்தி செய்யப்பட்ட தட்டு முட்டு சாமான்களின் சொந்தக்காரரிடத்தில் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ஷை டைய தட்டு முட்டு சாமான்களை ஜப்தி செய்ய அகப்படாவிட்டாலும் அல்லது அவைகளில் ஜப்தி செய்ய தற்குப் போதுமான அளவு அகப்படாவிட்டாலும், அது விஷயத்தைக் குறித்து இந்த வாரண்ட் சகிதமாக நீர் எனக்கு உறுதிமொழி எழுதியனுப்ப வேண்டும்.

இடம்.
தேதி, 19 -ம் ஹு மீ வ } (ப்ரெஸிடென்ட் அல்லது வேறே உத்தியோகஸ்தரின் கையெழுத்து.)

B. அனுபந்தம்.

சாமான் ஜாபிதாவுக்கும் நோடீசுக்கும் நமூனா.

(34-வது விதி (c) உப்விதியைப் பார்க்க)

(கைப்பற்றப்பட்ட சாமான்களின் விவரத்தை எழுதவும்.)

ஓரத்தில் கண்டிருக்கிற 19 யோடு முடிகிற க்குச் சேரவேண்டிய வரி அல்லது வரிகள் ரூபாய் அ. பை. க்காக ஷை சாமான் ஜாபிதாவில் கண்ட தட்டு முட்டு சாமான்களை நான் இன்றையதினம் கைப்பற்றி யிருக்கிறேனென்றும், சேரவேண்டிய தொகையையும் வாரண்ட் கட்டணத்தையும் ஜப்தி கட்டணத்தையும் ஷை தட்டு முட்டு சாமான்களை வைத்திருந்ததற்காக பிடித்த செலவையும் இந்த நோட்டீஸ் தேதி முதல் ஏழு நாளைக்குள்ளாக ன் போர்டு ஆபீஸில் நீர் செலுத்தாவிட்டால், ஷை தட்டு முட்டு சாமான்கள் போர்டு ஆபீஸிலாவது ப்ரெஸிடென்ட் உத்தரவு செய்யக்கூடிய வேறே இடத்திலாவது 19 -ம் ஹு மீ வயில்

விற்றுவிடப்படுமென்றும், அந்த தட்டு முட்டு சாமான்கள் சீக்கிரத்தில் இயற்கையாய்க் கெட்டுப்போகக் கூடியவைகளாயிருந்தால் அவை அதற்கு முன்னமே யாதொரு தேதியில் விற்பனை செய்யப்படலாமென்றும் அறியவும்.

(ஜப்தி வாரண்டை நிறைவேற்றுகிற உத்தியோகஸ்தரின் கையெழுத்து)

இடம்.

தேதி, 19 -ம் ஹு மீ டை

C. அனுபந்தம்.

ஜப்தி செய்வதன்மேல் உயர்ந்தது எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமோ அதைக் குறித்த ஜாபிதா.

(36 (1) விதியைப் பார்க்க.)

இவ்வளவு தொகைக்காக ஜப்தி செய்யப்பட்டதென்பது

கட்டணங்கள்.

			ரூ.	அ.	ப.
1 ரூபாய்க்கு உட்பட்ட தொகைக்கு	...	...	0	4	0
1 ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 5 ரூபாய்க்குப்பட்ட தொகைக்கு			0	8	0
5 ரூபாய்க்கு மேற்பட்டும் ஆனால் 10	,, ,,	...	1	0	0
10 ,, 15	,, ,,	...	1	8	0
15 ,, 20	,, ,,	...	2	0	0
20 ,, 25	,, ,,	...	2	8	0
25 ,, 30	,, ,,	...	3	0	0
30 ,, 35	,, ,,	...	3	8	0
35 ,, 40	,, ,,	...	4	0	0
40 ,, 45	,, ,,	...	4	8	0
45 ,, 50	,, ,,	...	5	0	0
50 ,, 60	,, ,,	...	6	0	0
60 ,, 80	,, ,,	...	7	8	0
80 ,, 100	,, ,,	...	9	0	0
100 ம் ,, அதற்கு மேற்பட்ட தொகைக்கு		...	10	0	0

மேற்படி கட்டணத்தில் எல்லாச் செலவுகளும் அடங்கும்; ஆனால், ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்குச் சேவகர்கள் காவல் வைக்கப்பட்டால், நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் மூன்று அணா கொடுக்க வேண்டும்.

5-வது ஷெட்யூல்.

திரவிய சம்பந்தமான விதிகள்.

(112-வது, 115-வது, 121-வது பிரிவுகளைப் பார்க்கவும்).

செலவுகள்.

1 (a) ஒவ்வொரு லோகல்போர்டும்:—

(i) அதனால் ஒப்பந்தம் கொள்ளப்பட்ட ஏவையேனும் கடன்களின் பேரில் பாக்கியா யிருக்கும் தொகைகளையும்,

(ii) அதனுடைய உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள் இவர்களுடைய சம்பளத்தொகைகள் வர்த்தனைகள் இவைகளையும்,

கொடுப்பதற்குத்தகுந்த ஏற்பாடுகளை செய்ய கடமைப்பட்டதாகும்.

(b) ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டும் தன்னுடைய உத்தியோகஸ்தர்களுடையவும், ஊழியர்களுடையவும், தன்னுடைய அதிகார விஸ்தரணத்திற்குள்ளிருக்கும் ஒவ்வொரு தாலூக்கா போர்டு, பஞ்சாயத்து இவைகளின் உத்தியோகஸ்தர்களுடையவும், ஊழியர்களுடையவும், பென்ஷன்களையும், பென்ஷனப்போன்ற உபகாரத் தொகைகளையும், ப்ராவிடண்டு பண்டு உபகாரத் தொகைகளையும் கொடுப்பதற்காக ஏற்பாடுகளைச் செய்வதற்கு கடமைப்பட்டதாகும்.

பஞ்சாயத்தினுடைய செலவுகள்.

1-A. (1) ஒரு பஞ்சாயத்தானது தம்முடைய கிராமத்திற்கு வேண்டிய சௌகரியங்களை நடத்திக் கொள்வதற்காக தமக்கு எப்படியுக்தமென்று தோன்றுகிறதோ அந்தப் பிரகாரம் அடியில்கண்ட விஷயங்களைப் பற்றி தகுந்த ஏற்பாடுகளை செய்வதற்கு அதிகாரம் உள்ளதாகும். அதாவது :—

(a) தங்களுடைய கிராமத்தின் ஹத்துக்குள் உள்ள டிஸ்டிரிக்ட்டு பாதைகள் அல்லது தாலூக்கா பாதைகள் தவிர மற்றெல்லா பொது பாதைகளை ஏற்படுத்தி காப்பாற்றுவதும், அப்படிப்பட்ட எல்லா பாதைகளிலுமுள்ள வாராவதிகள், மூடிய வாய்க்கால்கள் பாதை அணைகள் ஆற்றுப்பாதைகள் முதலியவைகளை கட்டி அவைகளை பாதுகாப்பதும்;

(b) தன்னுடைய கிராமத்தின் ஹத்துக்குள் டிஸ்டிரிக்ட்டு சத்திரங்கள் அல்லது தாலூக்கா சத்திரங்கள் என்று வகுக்கப்பட்டிராத சத்திரங்களை ஸ்தாபித்து அவைகளை பரிபாலித்து வருவதும்:

(c) அந்த கிராமத்தின் ஹத்துக்குள் எல்லா பொது பாதைகளிலும், பொது இடங்களிலும் விளக்கேற்றுவதும்;

(d) அந்த கிராமத்தைவிட அதிகமானதோர் விஸ்தீரணத்தினுடைய சௌகரியங்களுக்காக ஏற்பட்டிருக்கும் தாலூக்கா லேப்ரொசிகள் என்று வகுப்பிடப்பட்ட லேப்ரொசிகளைத் தவிர மற்ற லேப்ரொசிகளை ஏற்படுத்தி அவைகளை நடத்தி வருவதும்;

(e) சாக்கடைகளைக் கட்டுவதும், சாக்கடை ஜலங்களையும், அழுக்குகளையும் வெளியில் எடுத்துவிடுவதும்;

(f) தெருக்களை சுத்தப்படுத்துவதும் குப்பைகுவியல்களை அகற்றிக் கொண்டு போவதும், காட்டு வளர்த்திகளையும் நாகதாளிகளையும் எடுத்துவிடுவதும், பாழடைந்து போன கிணறுகளையும், அருவோக்கியமான குட்டைகள், நீர் தேக்கங்கள், பள்ளங்கள், குழிகள் அல்லது குவளைகள் இவைகளைத் தூர்த்துவிடுவதும், இன்னும் அந்த கிராமத்தின் தேகாரோக்கியத்திற்கு வேண்டிய மற்ற உயர் நேர்த்திகளை செய்வதும்;

(g) பொது கக்கூசுகளை ஏற்படுத்துவதும், பொது கக்கூஸ்களையும் பிரைவேட் கக்கூஸ்களையும் சுத்தம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதும்;

(h) பிரேதங்களைப் புதைப்பதற்கும், தகனம் செய்வதற்கும் இடங்களை ஏற்படுத்தி அவைகளை காப்பாற்றி வருவதும்;

(i) கிணறுகளை தோண்டுவதும், பழுது பார்ப்பதும், குடிப்பதற்காகவும், கழுவதற்காகவும் ஸ்நானம் செய்வதற்காகவும், வேண்டிய ஜலத்திற்காக குட்டைகளை அல்லது குளங்களை வெட்டுவதும் பழுது பார்த்தும், காப்பாற்றுவதும், ஸ்நான கட்டங்களைக் கட்டுவதும்;

(j) பொதுவான ஆடுமாடுகளை வெட்டும் இடங்களை ஏற்படுத்தி காப்பாற்றி வருவதும் ;

(k) தாலூக்கா மார்க்கெட்டுகள் என்று வகுக்கப்பட்டிருக்கும் மார்க்கெட்டுகளைத் தவிர வேறே பொது மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதும் காப்பாற்றுவதும் ;

(l) ஒரு கிராமத்தைவிட அதிகமான விஸ்தீரணத்தினுடைய சௌகரியங்களுக்காக ஏற்பட்டிருக்கும் தாலூக்கா சந்தைகளென்றும், தாலூக்கா உத்சவங்களென்றும் வகுக்கப்பட்டிருக்கும் உத்சவங்களைவிட வேறே சந்தைகளையும் உத்சவங்களையும் அடக்கி ஆள்வதும் ;

(m) தேக அபிவிர்த்தி அப்பியாசத்திற்கு வேண்டிய இடங்களை ஏற்படுத்தி அவைகளை பரிபாலித்து வருவதும் ;

(n) நந்தவனங்களை ஏற்படுத்தி அவைகளை காப்பாற்றி வருவதும் ;

(2) லோகல் கவர்ன்மெண்டார் செய்யும் விதிகளுக்கு உட்பட்டு பஞ்சாயத்தானது தமக்கு எப்படி யுக்தமென தோன்றுகிறதோ அந்தப்பிரகாரம் அந்த கிராமத்திற்கு வேண்டிய சௌகரியங்களை நடத்திக் கொள்வதற்காக அடியில் கண்ட விஷயங்களைப் பற்றியும், தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு அதிகார முள்ளதாகும், அதாவது :—

(a) டிஸ்டிரிக்ட் பாதை அல்லது தாலூக்கா பாதை அல்லாத அந்த கிராமத்திலுள்ள எல்லா பொது பாதைகளில் நிழலுக்காக மரங்களை நடுவதும் அவைகளைக் காப்பாற்றுவதும் ;

(b) பொதுவாக இறங்கும் ஸ்தலங்களையும் நிற்கும் ஸ்தலங்களையும், வண்டி நிற்கும் இடங்களையும் ஏற்படுத்தி அவைகளைக் காப்பாற்றுவது ;

(c) கிராமத்தாரால் பொதுவில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் களமேடுகள், தோப்புகள், மற்ற புறம்போக்குகள் இவைகளை அடக்கி ஆள்வது ;

(d) கிராமத்தார்களுக்கு பொதுவாக இருக்கும் கிராம கட்டிடங்களையும், இதர சொத்துக்களையும் அடக்கி ஆள்வது ;

(e) கிராம நத்தத்தை அதிகப்படுத்துவதும், கட்டிடங்கள் கட்டுவதை ஒழுங்கு படுத்துவது ;

(f) ஜனன மரணங்களை ரிஜிஸ்தர் செய்வது ;

(g) பௌண்டுகளை அடக்கி ஆள்வது ;

(h) கிராம பாதுகாப்பு ;

(i) விவசாயத்தையும், விவசாயத்திற்கு உபயோகப் படும் ஆடு மாடுகளை விர்த்தி செய்வது ;

(j) கிராம கைத்தொழில்களை ஏற்படுத்தி அபிவிர்த்தி செய்வது ;

(k) ஆரம்ப பாடசாலைகளை ஏற்படுத்தி பரிபாலித்து வருவது ;

(l) கிராம வைத்தியசாலைகளை ஸ்தாபித்து அவைகளை காப்பாற்றி வருவது ;

(m) தம்முடைய உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் கண்காடை கொடுப்பது ;

(n) இன்னும் அந்த கிராமவாசிகளுக்கு சேஷமம் ஆரோக்கியம் சௌக்கியம் அல்லது சௌகரியம் இவைகளைக் கொடுக்கத் தகுந்ததும் 1-B, 1-C வாக்கியங்களில் ஸ்பஷ்டமாக சேர்க்கப்படாததுமான மற்ற எல்லா பொது காரியங்களைச் செய்வது.

தாலூக்கா போர்டினுடைய செலவுகள்.

1-B. (1) ஒரு தாலூக்கா போர்டானது அந்த தாலூக்காவிற்கு வேண்டிய சௌகரியங்களை நடத்திக் கொள்வதற்காக தமக்கு எப்படி யுக்தமென்று தோன்றுகிறதோ அந்தப்பிரகாரம் அடியில் கண்ட விஷயங்களைப்பற்றித் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு அதிகாரமுள்ளதாகும். அதாவது ;

(a) தாலூக்கா பாதைகளை ஏற்படுத்துவதும், அவைகளை பாதுகாப்பதும், அப்படிப்பட்ட பாதைகளிலுள்ள வாராவதிகள், மூடிய வாய்க்கால்கள், பாதையணைகள், ஆற்றுப் பாதைகள், இவைகளைக் கட்டுவதும் காப்பாற்றுவதும் ;

(b) அந்த சர்க்கிலில் தாலூக்கா சத்திரங்கள் என்று வகுப்பிடப்பட்ட சத்திரங்களை ஸ்தாபித்து அவைகளை பரிபாலித்து வருவதும் ;

(c) 5-A. விதியின் (11) வாக்கியத்தில் சொல்லப்பட்ட உபகாரத் தொகை அந்த தாலூக்காபோர்டினால் கொடுக்கப்படும் கிரா

மங்களில் தவிர மற்ற இடங்களில் ஆரம்ப பாடசாலைகளை ஏற்படுத்தி அவைகளைப் பரிபாலித்து வருவதும் ;

(d) தாலூக்கா லைப்ரரிகள் என்று வகுப்பிடப்பட்டிருக்கும் வாசக சாலைகளை ஏற்படுத்தி அவைகளை பரிபாலித்து வருவது ;

(e) டிஸ்டிரிக்ட்டு ஆஸ்பத்திரிகள் அல்லது வைத்தியசாலைகள் அல்லது தாமாந்தர வைத்தியசாலைகள் என்று வகுப்பிடப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளையும், வைத்தியசாலைகளையும் தவிர வேறே ஆஸ்பத்திரிகளையும், வைத்தியசாலைகளையும் ஸ்தாபித்து பரிபாலித்து வருவது ;

(f) 1-C விதியின் (1)-வது உபவிதியில் (f), (g) வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அளவு வரையிலும் தவிர மற்றப்படி அம்மை குத்துவது ;

(g) தாலூக்கா மார்க்கெட்டுகளென்று வகுப்பிடப்பட்டிருக்கும் பொது மார்க்கெட்டுகளை ஏற்படுத்தி அவைகளைப்பரிபாலித்து வருவது ;

(h) தாலூக்கா சந்தைகள், உத்சவங்களென்று வகுப்பிடப்பட்டிருக்கும் சந்தைகளையும், உத்சவங்களையும் அடக்கி ஆள்வது ;

(i) அந்த தாலூக்காவிலுள்ள பஞ்சாயத்துகளை மேல் பார்வை இடுவது ;

(2) லோகல் கவர்மென்டார் செய்யும் விதிகளுக்குட்பட்டு ஒரு தாலூக்கா போர்டானது தமக்கு எப்படியுக்தமென்று தோன்றுகிறதோ அந்தப் பிரகாரம் அந்த தாலூக்காவிற்கு வேண்டிய சௌகரியங்களை நடத்திக்கொள்வதற்காக அடியில் கண்ட விஷயங்களைப் பற்றித் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு அதிகாரம் உள்ளதாகும். அதாவது :—

(a) தாலூக்கா பாதைகளில் நிழலுக்காக செடிகளை நடுவதும், அவைகளைக் காப்பாற்றுவதும் ;

(b) தம்முடைய உத்தியோகஸ்தர்களுக்கும், ஊழியர்களுக்கும், நன் கொடை கொடுப்பது ;

(c) 1-A, 1-C, இந்த விதிகளில் யாதொரு வாக்கியத்திலாவது ஸ்பஷ்டமாக குறிக்கப்பட்டிராததும், அந்த தாலூக்காவாசிகளுக்கு சேஷமம், ஆரோக்கியம், சௌக்கியம் அல்லது சௌகரியம்

இவைகளை கொடுக்கத் தகுந்ததுமான மற்ற எல்லா பொது காரியங்களைச் செய்வது ;

(d) (1)-வது உப விதியில் சொல்லப்பட்டிருக்கும் கார்யங்களைப்போன்ற இதர காரியங்களுக்கும், இந்த உப விதியில் (a)-முதல் (c) - வரையிலுமுள்ள வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களைப்போன்ற இதர காரியங்களைச் செய்வதற்கு சகாயமாக இதர லோகல் போர்டுகளுக்கும் முனிசிபல் கௌன்சில்களுக்கும், பிரைவேட் நபர்கள் அல்லது கூட்டங்களுக்கும் உபகாரத் தொகைகளைக் கொடுப்பது.

டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய செலவுகள்.

1-C. (1) ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டானது அந்த டிஸ்டிரிக்ட்டுக்கு வேண்டிய சௌகரியங்களை நடத்திக் கொள்வதற்காக தமக்கு எப்படியுக்தமென்று தோற்றுகிறதோ அந்தப் பிரகாரம் அடியில் கண்ட விஷயங்களைப்பற்றித் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு அதிகாரமுள்ளதாகும். அதாவது:—

(a) எல்லா டிஸ்டிரிக்ட்டு பாதைகளை ஏற்படுத்துவதும், அவைகளை பாதுகாப்பதும் அப்படிப்பட்ட பாதைகளிலுள்ள வாராவதிகள் மூடிய வாய்க்கால்கள் பாதையணைகள் ஆற்றுப் பாதைகள் இவைகளைக் கட்டுவதும், காப்பாற்றுவதும் ;

(b) அந்த ஜில்லாவில் எல்லா பொது டஸ்காக்களில் இளைப்பாறுவதற்குள்ள வீடுகளையும், பிரயாணிகளுக்கு சௌகரியமான பங்களாக்களையும் கட்டுவதும், அவைகளைக் காப்பாற்றுவதும் ;

(c) அந்த ஜில்லாவில் டிஸ்டிரிக்ட்டு சத்திரங்கள் என்று வகுப்பிடப்பட்டிருக்கும் சத்திரங்களை ஸ்தாபித்துக் காப்பாற்றி வருவது ;

(d) மத்தியதர பள்ளிக்கூடங்களையும், செகண்டரி பள்ளிக்கூடங்களையும், வேலைகளை அல்லது கைத்தொழில்களைக் கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களையும், மாணவர்களுக்கு ஹாஸ்டல்களையும் ஏற்படுத்தி அவைகளைப் பரிபாலித்து வருவதும் ;

(e) டிஸ்டிரிக்ட்டு சுகாதார ஆபீஸர், அவருடைய உத்தியோக சிப்பந்திகள் ;

(f) அந்த ஜில்லா முழுவதுக்கும் வேண்டிய சௌகரியங் களைச்செய்வதற்காக அவசர சமயங்களுக்காக தனியாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வைத்திய உத்தியோகஸ்தர்களும், சிகிச்சை செய்யும் ஸ்திரிகளும் (Nurses) காலத்தில் உதவி செய்யும் ஸ்திரீ களும் (Midwives) அம்மை குத்துகிறவர்களும் உள்பட எல்லா பொதுவான சுகாதார சிப்பந்திகள் ;

(g) சிகிச்சை செய்யும் ஸ்திரீகள், பிரஸவ காலத்தில் உதவி செய்யும் ஸ்திரீகள், தாதிகள், அம்மை குத்துகிறவர்கள் இவர்களை தயார் செய்வது ;

(h) அந்த டிஸ்டிரிக்டில் டிஸ்டிரிக்ட்டு ஆஸ்பத்திரிகளென்றும், வைத்திய சாலைகளென்றும் வகுப்பிடப்பட்ட ஆஸ்பத்திரிகளையும், வைத்தியசாலைகளையும் ஸ்தாபித்து பரிபாலிப்பதும், காலுக்காபோர் டினல் கொடுக்கப்படாத எல்லாவிதமான வைத்திய உதவிகள் ;

(i) பரவும் வியாதிகளைத் தடுப்பதற்காகவும் நீக்குவதற்காகவும் எடுத்துக்கொள்ளப்பட்ட காரியங்கள் :

(j) அந்த டிஸ்டிரிக்ட்டில் மிருக ஆஸ்பத்திரிகளையும் வைத்திய சாலைகளையும் ஸ்தாபித்து அவைகளைக் காப்பாற்றுவது ;

(k) சுத்தப்படுத்தப்பட்ட குடிக்கும் ஜலத்தைக் கருவிப்பது.

(2) லோகல் கவர்ன்மெண்டார் செய்யும் விதிகளுக்கு உட் பட்டு ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டானது தமக்கு எப்படி யுக்தமென்று தோன்றுகிறதோ அந்தப்பிரகாரம் அந்த டிஸ்டிரிக்ட்டுக்கு வேண்டிய சௌகரியங்களை நடத்திக் கொள்வதற்காக அடியில்கண்ட விஷயங் களைப்பற்றி தகுந்த ஏற்பாடுகளை செய்வதற்கு அதிகாரம் உள்ளதாகும். அதாவது :—

(a) எல்லா டிஸ்டிரிக்ட்டு பாதைகளில் நிழலுக்காக செடிகளை நடுவதும், அவைகளைக் காப்பாற்றுவதும் ;

(b) ரெயில் பாதைகளையும், ட்ராம் பாதைகளையும், கயறு பாதைகளையும் கட்டுவதும் - மோட்டார் பஸ்கள் இன்னும் மற்ற சாமான்களை ஏற்றிக்கொண்டுபோகும் வியாபாரங்களை நடத்துவதும்;

(c) தம்முடைய உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்கொடை கொடுப்பது :

(d) 1-A, 1-B இந்த விதிகளில் யாதொரு வாக்கியத்திலாவது ஸ்பஷ்டமாக குறிக்கப்பட்டிராததும் அந்த டிஸ்டிரிக்ட்டினுடைய வாசிகளுக்கு க்ஷேமம், ஆரோக்கியம், சௌக்கியம் அல்லது சௌகரியம் இவைகளைக் கொடுக்கத் தகுந்ததுமான மற்ற எல்லா பொது காரியங்களை செய்வது ;

(e) 1-வது உபவிதியிலும் இந்த உபவிதியின் (a)-முதல் (d) வரையிலுமுள்ள வாக்கியங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களைப் போன்ற இதர காரியங்களைச் செய்வதற்கு சகாயமாக இதர லோகல்போர்டுகளுக்கும் முனிசிபல் கௌன்சில்களுக்கும் பிரைவேட் நபர் அல்லது கூட்டங்களுக்கும் உபகாரத் தொகைகளைக்கொடுப்பது.

1 D. (1) ஒரு லோகல் போர்டானது,

(a) தங்களுடைய வேலைகளை நடத்துவதற்காக உள்ள ஊழியர்களுக்காகவும் மற்ற சிப்பந்திகளுக்காகவும்,

(b) ப்ரெஸிடென்டுப், வைஸ் ப்ரெஸிடென்டும் தங்களுடைய உத்தியோக முறைமையில் கடமைகளைச் செலுத்துவதற்காக பிரயாணச் செலவு விஷயமாகவும்,

மிகவும் அதிகமாக எவ்வளவு தொகைகளை செலவிடலாம் என்பதைப்பற்றி விதிகளைச் செய்வதற்கு,

லோகல் கவர்ன்மென்டாருக்கு அதிகாரம் உள்ளதாகும்.

(2) (1)-வது உபவிதியின்கீழ் செய்யப்பட்டிருக்கும் விதிகளுக்கு உட்பட்டு ஒரு லோகல் போர்டானது தன்னுடைய நிர்வாகத்திற்காக வேண்டிய அல்லது சம்பந்தமான யாதொரு செலவையும் செய்யலாம்.

2. மேலே சொல்லப்பட்டவைகள் அல்லாத வேறே சகல செலவுகளும் பஞ்சாயத்துகள், தாலூக்கா போர்டுகள் அல்லது டிஸ்டிரிக்ட்டு போர்டுகள் ஆகிய இவைகளில் எவற்றின் நன்மையை உத்தேசித்து செய்யப்பட்டிருக்கிறதோ அதை அனுசரித்து அவை முறையே பஞ்சாயத்து, தாலூக்கா அல்லது டிஸ்டிரிக்ட்டு பண்டுகளின் செலவுகளாக எழுதப்படவேண்டும்.

3 (1) பாதைகளை அல்லது ரஸ்தாக்களை டிஸ்டிரிக்ட்டு ரஸ்தாக்களென்றும், தாலூக்கா ரஸ்தாக்களென்றும், சத்திரங்களை டிஸ்

டிரிக்ட்டு சத்திரங்களென்றும், தாலூக்கா சத்திரங்களென்றும், ஆஸ்பத்திரிகளையும் வைத்தியசாலைகளையும் டிஸ்டிரிக்ட்டு ஆஸ்பத்திரிகளென்றும், டிஸ்டிரிக்ட்டு வைத்தியசாலைகளென்றும், கிராமாந்தர வைத்திய சாலைகளென்றும் வகுக்கப்படுவதற்காக வேண்டிய பிரேரேபணைகள் ஒரு கமிட்டியால் செய்யப்பட வேண்டும். அந்த கமிட்டியில் டிஸ்டிரிக்ட்டு போர்டுகளும், தாலூக்கா போர்டுகளும் இனி நிர்ணயிக்கப்படும் பிரகாரம் தகுந்தாப்போல் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பியிருக்கவேண்டும். அந்த பிரேரேபணைகள் ஒவ்வொரு தாலூக்காபோர்டும் அவைகளின்பேரில் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வசதி கொடுக்கப்பட்ட பிறகு டிஸ்டிரிக்ட்டு போர்டினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(2) லேப்ரொகளை - தாலூக்கா லேப்ரொகளென்றும், மார்க்கெட்டுகளை தாலூக்கா மார்க்கெட்டுகளென்றும், சந்தைகளையும்-உத்சவங்களையும் தாலூக்கா சந்தைகள் தாலூக்கா உத்சவங்க ளென்றும் வகுக்கப் படுவதற்காக உள்ள பிரேரேபணைகள் தாலூக்காபோர்டினால் செய்யப்படவேண்டும்.

(3) லோகல் கவர்ன்மென்ட்டுக்கு,(1)-வது,(2)-வது உபவிதிகளின்கீழ் டிஸ்டிரிக்ட்டு போர்டார் உத்திரவிட்டிருக்கும் யாதொரு வகுப்பிட்டதை மாற்றுவதற்கு அதிகார முள்ளதாகும்.

4. லோகல் கவர்ன்மென்டாரின் அனுமதியைப் பெற்று யாதொரு லோகல் போர்டானது:—

(1) தங்களுடைய விசாரணை அதிகாரத்துக்குட்பட்ட பிரதேச விஸ்தீரணத்தில் நடக்கும் யாதொரு பொதுஜன காட்சிக்காவது சடங்குக்காவது கொண்டாட்டத்துக்காவது பொருளுதவி செய்யலாம்;

(2) யாதொரு தர்மநிதிக்காகிலும் ஏழைகளுக்கு சகாயம் செய்வதற்காகவாவது வியாதிஸ்தர்கள் அல்லது பலஹீனர்களுக்குச் சிகிச்சை செய்வதற்காகவாவது வியாதிஸ்தர்களையோ பலஹீனர்களையோ வரவேற்றி ஆதரிப்பதற்காகவாவது வியாதியின் காரணங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவாவது ஏற்படுத்தப்பட்டுள்ள யாதொரு ஸ்தாபனத்தின் நிதிக்காகிலும் பொருளுதவி செய்யலாம்;மேலும்,

(3) வேறே எவையேனும் விசேஷமான் செலவுகளைச் செய்யலாம்.

5. இந்த சட்டத்தின்கீழ் முறையே கிராமம், தாலூக்கா டிஸ்டிரிக்ட்டு பண்டுகளுக்கு வரவு வைக்கப்படும் வருமானங்கள் அடியிற்கண்டவைகளாகும்:—

A. கிராம பண்டுகள் :—வரும்படிகள்.

(1) அந்த கிராமத்தில் 78-வது பிரிவின்கீழ் விதித்து வாங்கப் படும் நில செஸ்வரியின் 6-ல் ஒரு பங்கு.

(2) அந்த கிராமத்தில் 93-வது பிரிவின்படி விதித்து வாங்கப் படும் தொழில் வரி.

(3) அந்த கிராமத்தில் 98-வது பிரிவின்கீழ் விதித்து வாங்கப் படும் வீட்டு வரி.

(4) அந்த கிராமத்தில் 75-(2) பிரிவின்கீழ் விதித்து வாங்கப் படும் வரி அல்லது வரிகள்.

(5) அந்த கிராமத்தில் 110-வது பிரிவின்படி விதித்து வாங்கப் படும் யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரி. (பில்கிரிம் டாக்ஸ்) ஆனால், எந்த உத்ஸவத்திற்காக யாத்திரை செய்யப்படுகிற்தோ அந்த உத்சவம் ஒரு தாலூக்கா உத்ஸவமென்று வகுக்கப்பட்டிருக்குமானால் அந்தக்காலத்தில் வரும் யாத்திரைக்காரர்களுக்கு விதிக்கப்படும் வரியானது நீங்கலாகும்.

(6) இந்த சட்டத்தின்படி பஞ்சாயத்தினால் பிறப்பிக்கப்படும் ஜென்சுகளுக்கும் கொடுக்கப்படும் அனுமதிகளுக்கும் கட்டணங்கள்.

(7) அந்த கிராமத்தில் தாலூக்கா மார்க்கெட்டுகளென்று வகுக்கப்பட்டிராத பொது மார்க்கெட்டுகளில் விதித்து வாங்கப்படும் கட்டணங்கள்.

(8) அந்த கிராமத்தில் தாலூக்கா மார்க்கெட்டுகளென்று வகுப்பிடப்பட்டிருக்கும் மார்க்கட்டுகளின் விஷயமாக லோகல் கவர்ன்மென்டினால் நிர்ணயிக்கப் பட்டிருக்கும் படிப்படியான வீதப்பிரகாரம் தாலூக்கா போர்டினால் கொடுக்கப்படும் உபகாரத் தொகைகள்

(9) கிராமபண்டுகளிலிருந்து ஏற்படுத்தப் பட்டிருக்கும் அல்லது பாமரிக்கப்பட்டு வரும் பொதுவான இறங்குமிடங்கள், (ஓடத்

துறைகள்) நிற்குமிடங்கள், ஆடு-மாடு முதலியவைகளை அடிக்கும் தொட்டிகள், இவைகளை உபயோகப்படுத்துவதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள் ; டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா சத்திரங்களென்று வகுப்பிடப்பட்டிருக்கும் சத்திரங்களைத் தவிர இதர சத்திரங்களை உபயோகப்படுத்துவதற்காக கட்டணங்களும், கிராம நத்தங்கள், பாதைகள், பிரேதங்களை புதைப்பதற்கும் தகனம் செய்வதற்குமான இடங்கள், இன்னும் அந்த கிராமத்தில் இவைகளைப்போன்ற இதர பொது இடங்கள் அல்லது அவைகளின் பாகங்கள் ஆகிய இவைகளைச் சிறிது காலத்துக்கு அனுபவிப்பதற்காக பெறப்படும் கட்டணங்களும்.

(10) அந்த பஞ்சாயத்தினால் காப்பாற்றப்பட்டுவரும் பள்ளிக் கூடங்களுக்காக கிராண்ட் இன் எயிட் (Grant-in-aid) என்னும் உபகாரத் தொகைகள் உள்பட அவைகளிலிருந்து கிடைக்கும் வரும்படி.

(11) அந்த கிராமத்தில் ஆரம்ப பாடசாலைகளை நிறுத்து வைக்கவும் காப்பாற்றி வைப்பதற்குமாக லோகல் கவர்ன்மெண்டினால் நிர்ணயிக்கப்படும்படியான வீதப்பிரகாரம் தாலூக்கா போர்டினால் எதாவது உபகாரத் தொகைகள் கொடுக்கப்படும்பக்ஷத்தில் அந்த தொகைகள்.

(12) பஞ்சாயத்தினுடைய நிர்வாகத்தின் பேரிலிருந்து வரும் இனங்களிலிருந்தும் டிரஸ்ட்டுகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(13) கிராம பண்டுகளிலிருந்து நடத்தப்பட்டு வரும் அல்லது நிர்வியசகாயம் செய்யப்பட்டு வரும் ஸ்தாபனங்கள் அல்லது ஊழியங்கள் எவைகளாவது இருப்பின் அவைகளுக்கு உதவியாக கவர்ன்மெண்டார், இதர லோகல்போர்டுகள் முனிஸிபாலிட்டிகள், இதர பிரதேச அதிகார சபைகள், தனி நபர்கள் ஆகிய இவர்கள் கொடுக்கும் சகாய்த் தொகைகள்.

(14) ஜனங்கள் வழக்கமாய்க்கூடும் இடங்களைக் குறித்த 1888-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து "பப்ளிக் பிளார்ட்ஸ்" ஆக்ட்டுக்கு விரோதமாக பஞ்சாயத்து எல்லைகளுக்குள் அசங்கியம் அல்லது சங்கடங்களும் குற்றங்களும் செய்யப்படும்பக்ஷத்தில் அவைகளுக்காக விதிக்கப்படும் அபராதங்கள்.

(15) இந்த ஆக்ட்டின்படி பஞ்சாயத்தினாலாவது அவர்கள் சொல்லுவதன்மேலாவது அல்லது அவர்களுக்காகவாவது விதிக்கப்படும் அபராதங்களும் தண்டத் தொகைகளும்.

(16) பெருங்கிச் சேர்க்கப்படும் குப்பை, சாமான்களும் பூமியில் அழுத்தப்பட்டிருக்கும் கட்டிடங்களும், பழைய சாமான்களும் வஸ்துக்களும், மரங்களும் பஞ்சாயத்திலுள்ள டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா பாதைகளல்லாத மற்ற சாலை மரங்களின் உற்பத்தி ஆகிய இவைகளின் விற்றுமுதல்.

(17) கிராமத்திலுள்ள ஓடத்துறைகளிலிருந்தும் மீன்பிடிக்கும் துறைகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(18) கடன்களுக்கும் பத்திரங்களுக்கும் வட்டி.

(19) தீர்வை பாக்கிக்கு வட்டி.

(20) பஞ்சாபத்தைச் சேர்ந்த கட்டிடங்களிலிருந்தும் நிலங்களிலிருந்தும் இதர சொத்திலிருந்தும் அவைகளை விற்பனை செய்வதிலும் கிடைக்கும் வரும்படி.

(21) வாபீஸ் பெறப்படாத டிப்பாசிட்டு தொகைகளும் பரிமுதல் செய்யப்பட்டவைகளும்.

B-வது தாலூக்கா பண்டுகள்:—வரும்படிகள்.

(1) 78-வது பிரிவின்கீழ் அந்த தாலூக்காவில் விதித்து வாங்கப்படும் நில செஸ்வரியில் மூன்றில் ஒரு பங்கு.

(2) அந்த தாலுக்காவிலுள்ள யாதொரு கிராமத்தில் யாத்திரைக்கு ஆஸ்பதமான உத்ஸவமானது தாலூக்கா உத்ஸவமென்று வகுப்பிடப்பட்டிருந்தால் அந்த கிராமத்தில் விதித்து வாங்கப்படும் யாத்திரைக்காரர்களுக்கு வரி.

(3) இந்த சட்டத்தின்கீழ் தாலூக்காபோர்டினால் பிறப்பிக்கப்படும் லிஸென்ஸுகளுக்கும், கொடுக்கப்படும் அனுமதிகளுக்கும் கட்டணங்கள்.

(4) 5-A விதியின் (8)-வது வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கும் உபகாரத் தொகைகள் கழிக்கப்பட்ட பிறகு அந்த தாலூக்காவில் தாலூக்கா மார்க்கெட்டுகளென்று வகுப்பிடப்பட்டிருக்கும் பொது மார்க்கட்டுகளில் விதித்து வாங்கப்படும் கட்டணங்கள்.

(5) அந்த தாலூக்காவில், தாலூக்கா சத்திரங்களென்று வகுப்பிடப் பட்டிருக்கும் சத்திரங்களை உபயோகப்படுத்துவதற்காக இடப்படும் கட்டணங்கள்.

(6) கிராண்ட்-இன்-எயிட் (Grant-in-aid) என்று சொல்லப் படும் உபகாரத் தொகைகள் உட்பட தாலூக்கா போர்டினால் காப் பாற்றப்பட்டுவரும் பள்ளிக்கூடங்களிலிருந்து கிடைக்கும் வரும்படி.

(7) அந்த தாலூக்காவில் டிஸ்டிரிக்ட்டு ஆஸ்பத்திரிகளென் றும், டிஸ்டிரிக்ட்டு வைத்தியசாலைகளென்றும் வகுப்பிடப்பட்டிருக் கும் ஆஸ்பத்திரிகள், வைத்தியசாலைகள் இவைகளுக்கதிர மற்ற ஆஸ்பத்திரிகள், வைத்தியசாலைகள் இவைகளிலிருந்து கிடைக்கும் வரும்படி.

(8) தாலூக்கா போர்டினுடைய நிர்வாகத்தின்கீழ் இருந்து வரும் இனாம்களிலிருந்தும் டிரஸ்ட்டுகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(9) தாலூக்கா பண்டுகளிலிருந்து நடத்தப்பட்டு வரும் அல் லது நிரவிய சகாயம் செய்யப்பட்டு வரும் ஸ்தாபனங்கள் அல்லது ஊழியங்கள் எவைகளாவது இருப்பின் அவைகளுக்கு உதவியாக கவர்ன்மென்டார், இதர லோகல் போர்டுகள், மூனிஸிபாலிட்டிகள், இதர ப்ரதேச அதிகார சபைகள், தனி நபர்கள் ஆகிய இவர்கள் கொடுக்கும் சகாயத் தொகைகள்.

(10) இந்த ஆக்டின்படி தாலூக்கா போர்டினாலாவது அவர் கள் சொல்லுவதன்மேலாவது அல்லது அவர்களுக்காகவாவது விதிக் கப்படும் அபராதங்களும் தண்டத் தொகைகளும்.

(11) பெருக்கிச் சேர்க்கப்படும் குப்பைகள், சாமான்களும் பூமியில் அழுத்தப்பட்டிருக்கும் கட்டிடங்களும், பழயசாமான்களும், வஸ்துக்களும், மரங்களும் இன்னும் எல்லா தாலூக்கா பாதைகளைச் சேர்ந்த சாஸ்திரங்களின் உற்பத்தி ஆகிய இவைகளின் விற்று முதல்.

(12) தாலூக்கா போர்டைச் சேர்ந்த ஓடத்துறைகளிலிருந்து கிடைக்கும் வரும்படி.

(13) கடன்களுக்கும் பத்திரங்களுக்கும் வட்டி.

(14) தீர்வை பாக்கிக்கு வட்டி.

(15) தாலூக்கா போர்டைச் சேர்ந்த கட்டிடங்களிலிருந்தும் நிலங்களிலிருந்தும் இதர சொத்திலிருந்தும் அவைகளை விற்பனை செய் வதினாலும் கிடைக்கும் வரும்படி.

(16) வாபீஸ் பெறப்படாத டிப்பாஸிட்டு தொகைகளும் பரி முதல் செய்யப்பட்டவைகளும்.

C-வது டிஸ்டிரிக்ட்டு பண்டுகள்:—வருமாறு.

(1) 78-வது பிரிவின்கீழ் அந்த டிஸ்டிரிக்ட்டில் விதித்து வாங் கப்படும் லாண்ட் செஸ் என்னும் நில வரியின் மூன்றில் ஒரு பங்கு.

(2) [இந்த ஆகாரம் எடுத்துவிடப்பட்டது.]

(3) இந்த சட்டத்தின்படி டிஸ்டிரிக்ட்டு போர்டினால் பிறப்பிக் கப்படும் லீஸென்ஸுகளுக்கும், கொடுக்கப்படும் அனுமதிகளுக்கும் கட்டணங்கள்.

(4) அந்த டிஸ்டிரிக்ட்டில் உள்ள பிரயாணிகள் தங்குவதற் கான பங்களாக்களையும், பிரயாணிகள் தங்கும் இடங்களையும், உப யோகித்துக்கொள்வதற்காக கட்டணங்கள்.

(5) அந்த டிஸ்டிரிக்ட்டில், டிஸ்டிரிக்ட்டு சத்திரங்களென்று வகுக்கப்பட்டிருக்கும் சத்திரங்களை உபயோகிப்பதற்காக கட்ட ணங்கள்.

(6) கிராண்ட்-இன்-எயிட் (Grant-in-aid) என்று சொல் ப்லபடும் உபகாரத்தொகைகள் உள்பட டிஸ்டிரிக்டு போர்ட்டினால் காப்பாற்றப்பட்டுவரும் பள்ளிக்கூடங்களிலிருந்து கிடைக்கும் வரும்படி.

(7) டிஸ்டிரிக்ட்டு ஆஸ்பத்திரிகள், டிஸ்டிரிக்ட்டு வைத்தியசாலை கள் என்று வகுப்பிடப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரிகளிலிருந்தும் வைத்தியசாலைகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(8) டிஸ்டிரிக்ட்டு போர்டினால் காப்பாற்றப்பட்டுவரும் மிருக ஆஸ்பத்திரிகளிலிருந்தும் வைத்தியசாலைகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(9) டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய நிர்வாகத்தின் கீழ் இருந் துவரும் இனங்களிலிருந்தும் டிரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(10) டிஸ்டிரிக்ட்டு பண்டுகளிலிருந்து நடத்தப்பட்டு வரும் அல்லது நிருவியசகாயம் செய்யப்பட்டு வரும் ஸ்தாபனங்கள் அல் லது ஊழியங்கள். எவைகளாவது இருப்பின் அவைகளுக்கு உதவி

யாக கவர்ன்மென்டார், இதர லோகல் போர்டுகள், முனிஸிபாலிட்டிகள், இதர பிரதேச அதிகாரசபைகள், தனிநபர்கள் ஆகிய இவர்கள் கோடுக்கும் சகாயத்தொகைகள்.

(11) இந்த ஆக்டின்படி டிஸ்டிரிக்ட்டு போர்ட்டினாலாவது அவர்கள் சொல்லுவதன் மேலாவது அல்லது அவர்களுக்காகவாவது விதிக்கப்படும் அபராதங்களும் தண்டத்தொகைகளும்.

(12) பெருக்கிச் சேர்க்கப்படும் குப்பைகள், சாமான்களும் பூமியில் அழுத்தப்பட்டிருக்கும் கட்டிடங்களும் பழைய சாமான்களும், வஸ்துக்களும், மரங்களும் இன்னும் எல்லா டிஸ்டிரிக்ட்டு பாதைகளிலிருந்து சேர்ந்த சாலை மரங்களின் உற்பத்தி, ஆகிய இவைகளின் விற்றமுதல்.

(13) டிஸ்டிரிக்ட்டு போர்டைச் சேர்ந்த ஓடத்துறைகளிலிருந்து கிடைக்கும் வரும்படி.

(14) டிஸ்டிரிக்ட்டு போர்டினால் காப்பாற்றப்பட்ட ரயில் பாதைகளிலிருந்தும், டிராம் பாதைகளிலிருந்தும், கயறு பாதைகளிலிருந்தும், மோட்டார் பஸ்களிலிருந்தும் இன்னும் மற்ற சாமான் களைத் தூக்கிச் செல்லும் ஊழிய வகைகளிலிருந்தும் கிடைக்கும் வரும்படி.

(15) கடன்களுக்கும் பத்திரங்களுக்கும் வட்டி.

(16) தீர்வை பாக்கிக்கு வட்டி.

(17) டிஸ்டிரிக்ட்டு போர்டைச் சேர்ந்த கட்டிடங்களிலிருந்தும், நிலங்களிலிருந்தும் இதர சொத்திலிருந்தும் அவைகளை விற்பனை செய்வதனாலும் கிடைக்கும் வரும்படி.

(18) லோகல் பண்டு பென்ஷன்களுக்காக கொடுக்கப்படும் உபகாரத் தொகைகள்.

(19) வாபீஸ் பெறப்படாத டிபாஸிட்டு தொகைகளும் பரிமுதல் செய்யப்பட்டவைகளும்.

6. மேலே சொல்லப்பட்டவைகளல்லாத வேறே சகல வரவுகளும், கிராமம், தாலூக்கா, அல்லது டிஸ்டிரிக்ட் போர்டுகள் பார்த்துவரும் ஊழியங்களிலிருந்து கிடைத்திருந்தாலும் அல்லது அவைகளுக்கு செலவு செய்வதற்காக வரப்பெற்றுக் கொள்ளப்பட்

டிருந்தாலும் அதை அனுசரித்து அவைகளை முறையே கிராமம், தாலூக்கா அல்லது டிஸ்டிரிக்ட்பண்டுகளுக்கு வரவுவைக்கவேண்டும்.

7. லோகல் கவர்ன்மென்டார்:—

(a) டிஸ்டிரிக்டுகளில் வசூலிக்கப்படும் கலால் வருமானத்தில் ஒரு பாகத்தை வருஷா வருஷம் டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கு டிரான்ஸ்பர் செய்யலாம் ; மேலும்,

(b) சகல லோகல் போர்டுகளையுமாவது அல்லது அவைகளில் எதையாவது சேர்ந்த நிதிகளுக்குச் சகாயமாக தங்களுக்குத் தகுதியாகத்தோற்றுகிறபடி குறித்த காலங்களுக்கு ஒரு முறையாகவாவது ஒரே தடவையாகவாவது இதர சகாயத் தொகைகளைக் கொடுக்கலாம்.

8. (1) ஒரு டிஸ்டிரிக்டு அல்லது தாலூக்கா போர்டு பெறும் எல்லா தொகைகளும் மிகவும் அருகாமையிலுள்ள கவர்ன்மென்டு கஜானாவில் வைக்கப்பட வேண்டும். ஒரு பஞ்சாயத்தானது பெறும் எல்லா தொகைகளும் மிகவும் அருகாமையிலுள்ள கவர்ன்மென்டு கஜானாவிலாவது அல்லது மிகவும் அருகாமையிலுள்ள போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியிலாவது வைக்கப்பட வேண்டும்.

(2) (a) ஒரு டிஸ்டிரிக்ட்டு அல்லது தாலூக்கா போர்டானது லோகல் கவர்ன்மென்டினுடைய உத்தரவைக்கொண்டும், ஒரு பஞ்சாயத்தானது டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய உத்தரவைக் கொண்டும்,

(i) ஒரு பாங்கியிலாவது அல்லது ஒரு கோவாப்பரேடிவ் சொஸைட்டியிலாவது தன்னுடைய தொகைகளை வைக்கலாம் ;

(ii) உடனே உபயோகத்திற்கு அவசியமில்லாத யாதொரு தொகைகளை லோகல் கவர்ன்மென்டார் ஒரு பொது உத்தரவினாலாவது அல்லது ஒரு தனியான உத்தரவினாலாவது அங்கீகரிக்கும் யாதொரு விதமாயாவது வட்டிக்காகவாவது அல்லது வேறே விதமாகவாவது உபயோகப்படுத்தலாம்.

(b) ஒரு பஞ்சாயத்தானது டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய உத்தரவைக்கொண்டும், ஜாமீனைப் பற்றியோ அல்லது வேறு விஷயங்களைப் பற்றியோ டிஸ்டிரிக்ட்டு போர்டார் ஏற்படுத்தும் விதிகளுக்கும்

இணங்கி தன்னுடைய தொகைகளை ப்ரெஸிடென்டினுடைய ஸ்வாதீனத்திலாவது அல்லது வேறே ஒரு கௌரவமுள்ள நபருடைய ஸ்வாதீனத்திலாவது இருக்கும்படிச் செய்யலாம்.

9. (1) ஒரு லோகல் பண்டின் பேரில் கொடுக்கப்படும் எல்லா உத்திரவுகளுக்கும், செக்கு (cheques)களுக்கும்,

(a) அதன் ப்ரெஸிடென்டினாலாவது அல்லது,

(b) (i) டிஸ்டிரிக்ட்டு போர்டுகள், தாலூக்கா போர்டுகளாயிருக்கும்பக்ஷத்தில் இதற்கென்று ப்ரெஸிடென்டால் அதிகாரப்படுத்தப்பட்ட யாதொரு நபரினாலாவது,

(ii) பஞ்சாயத்துகளாக இருக்கும்பக்ஷத்தில் மேலே சொல்லப்பட்டபடி அதிகாரப்படுத்தப்பட்ட ஒரு பஞ்சாயத்துதாராலாவது,

கையெழுத்து செய்யப்பட வேண்டும்.

(2) எந்த இடத்தில் அல்லது நபரிடத்தில் லோகல் பண்டு தொகையானது பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருக்கிறதோ அந்த கஜானா, பாங்கு, கோவாபரேடிவ் சொஸைட்டி இவைகளும், அல்லது நபரும், அந்த லோகல் போர்டினுடைய சார்பாக வைக்கப்பட்டுள்ள தொகைகளிலிருந்து கொடுக்கப்படக்கூடிய வரையிலும் அந்த பண்டின் பேரில் உத்தரவிடப்படும் எல்லா உத்திரவுகளுக்கும், செக்குகளுக்கும் (1)-உபவிதியின்கீழ் இருக்கவேண்டியபடி அவைகள் கையெழுத்து செய்யப்பட்டிருந்தால் அவைகளுக்காக கொடுக்க வேண்டிய தொகைகளை கொடுக்க வேண்டும்.

(3) அந்த லோகல் போர்டானது எழுத்து மூலமாக முன்னடியாகவே உத்திரவு கொடுத்திருக்கும்பக்ஷத்தில் அப்படிப்பட்ட கஜானாவாவது பாங்காவது கோவாப்பரேடிவ் சொஸைட்டியாவது அல்லது நபராவது அப்படிப்பட்ட யாதொரு உத்திரவு அல்லது செக்கில்லாமல் லோகல் கவர்ன்மென்டார் அந்த போர்டின் சார்பாக செலவழித்திருக்கும் யாதொரு செலவுத் தொகையை உடனே அந்த லோகல் போர்டு பண்டிலிருந்து கொடுத்துவிட வேண்டும்.

6-வது ஷெட்யூல்.

அபாயகரமான வியாதிகளின் ஜாபிதா.

(130-வது பிரிவைப் பார்க்கவும்).

மிகவும் கெருக்கடியான இன்புளூயென்சல் நியுமோனியா என்னும் கபசுரம்.

ஆன்த்ராக்ஸ் என்னும் அடைப்பான்.
சின்னம்மை.
வாந்திபேதி.
(டிப்தீரியா) கண்டக்கரப்பான் என்னும் தொத்துவியாதி.
என்டெரிக் என்னும் குடல் சம்பந்தமான சுரம்.
சிரகோளங்கள் சம்பந்தமாய்க் குதிரைகளுக்குக் காணும் வியாதி.
குஷ்டம்.
(ப்ளேக்) மஹாமாரி.
வைசூரி.
க்ஷயம்.

7-வது ஷெட்யூல்.

எந்தக்காரியங்களுக்காக வளவை லைஸென்ஸில்லாமல் உபயோகிக்கக்கூடாதா அந்தக் காரியங்கள்.

(192-வது பிரிவைப் பார்க்கவும்.)

(a) கர்ப்பூரத்தை வேகவைப்பது ;

(b) மாட்டுக்கொழுப்பு அல்லது கந்தகத்தை உருக்குவது ;

(c) கழிகடை வஸ்துக்கள், இரத்தம், எலும்பு, மாடு முதலியவைகளின் தோல், மீன் அல்லது ஆடு முதலியவைகளின் தோல்களைச் சேர்த்து வைப்பது அல்லது அவைகள் விஷயமாய் வேறே விதமாகப் பிரவர்த்திப்பது ;

(d) மாடு முதலியவைகளின் தோலையும் ஆடுமாடு முதலியவைகளின் தோலையும் பதப்படுத்துவது ;

(e) கம்பளி நூல் அல்லது மயிரைக் கூத்தஞ் செய்வது அல்லது உலர்த்துவது ;

(f) மீன் எண்ணெய் செய்வது ;

(g) சவர்க்காரம் செய்வது ;

(h) சவ்வரிசை உற்பத்தி செய்வது அல்லது காய்ச்சி வடிப்பது ; செயற்கை எரு சுயார் செய்வது ; சர்க்கரை செய்வது அல்லது அதைச் சுத்திகரிப்பு செய்வது ; கற்கண்டு செய்வது ;

(i) வெடிமருந்து அல்லது பாணவேடிக்கை வஸ்துக்கள் செய்வது ;

(j) செங்கல் அல்லது ஓடு அல்லது மண்பாண்டம் அல்லது சுண்ணாம்பை சுடுவது ;

(k) யாதொரு ஹோட்டல், சிற்றுண்டிச்சாலை, சிற்றுண்டியும் போஜனமும் வழங்கப்படும் இடம், காபி ஹோட்டல், போர்டிங் ஹௌஸ் என்னும் போஜன விடுதி அல்லது (பொது ஜனங்களின் அல்லது அதிகாரிகளால் அங்கீகாரமான மேல் விசாரணையின் கீழுள்ள மாணாக்கர்களுக்கான ஹாஸ்டலல்லாத வேறே) தங்குவதற்கான இடத்தை வைத்திருப்பது ;

(l) பனிக்கட்டியாவது காற்று புகட்டிய பான வகைகளாவது செய்வது ;

(m) வெட்டுமரத்தை விற்பது அல்லது அதை விற்பனைக்காகச் சேர்த்து வைப்பது ;

(n) வெடிக்கக்கூடிய அல்லது தீப்பற்றக்கூடிய வஸ்துக்களை சேமிப்பது ;

(o) சகிக்க முடியாத அல்லது துர்நாற்றமுள்ள வாசனை கிளப்பும் எதையாவது செய்வது ;

(p) கைத்தொழில் காரியத்திற்காக யாதொரு விரகு அல்லது இயந்திரங்களை உபயோகப்படுத்துவது ;

(q) பொதுவாக யாதொரு கைத்தொழில் செய்கையில் மனித உயிர்களுக்கும் ஆரோக்கியத்திற்கும் சொத்துக்கும் விரோதமான அல்லது அபாயகரமான யாதொன்றையும் செய்வது ;

ஆனால், மர சாமான்களையாவது அல்லது விரகு கட்டைகளையாவது, அல்லது பந்தல் போடும் சாமான்களையாவது, வைக்கோல், புல் நார் அல்லது நிலக்கரி இவைகளையாவது சேமித்து வைப்பதற்கும்

நெல்லை வேக வைப்பதற்கும் அப்படி சேமித்து வைப்பது அல்லது வேகவைப்பது சொந்த உபயோகத்திற்காக இருந்தால் அவை விஷய மாக யாதொன்றும்மே கட்டப்படக்கூடாது.

குறிப்புகள்.

இந்த ஷெட்யூலில், லிசென்ஸில்லாமல் யாதொரு வளவையும் இந்த ஷெட்யூலில் குறித்திருக்கும் காரியங்களுக்காக உபயோகப்படுத்த கூடா தென்று சொல்லப்பட்டுள்ளது

இந்த ஷெட்யூலில் (c) என்னும் தலைமையின்கீழ் சேர்த்துவைப்பது என்பதற்கு விற்பனை செய்வதற்காக சேர்த்துவைப்பதும் அடங்கும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (a). கிடங்குகளின் சாமான்களை எற்று திக்காக சேர்த்து வைப்பதற்கும் லிசென்ஸ் வேண்டும் (b).

தோல் முதலியவைகளை பதப்படுத்துவதற்கு சுண்ணும்பு வேண்டும். ஆனல் அதற்காக ஒரு நபர் சுண்ணும்பையும் சுடுவதற்காக ஒரு களவாய் எற்படுத்திக்கொள்வதானல் அதற்காகவும் அவர் தனியாக இந்த ஷெட் யூலின்கீழ் ஒரு லிசென்ஸ் பெறவேண்டும் ஒன்றுக்கு மாத்திரமே அதாவது தோல்முதலியவைகளை பதப்படுத்துவதற்கு மாத்திரமே லிசென் ஸ் பெற்றிருப்பது போதாது (c)

லிசென்ஸ் பெறுவதில் ஒரு சட்டத்தின்கீழ் ஒரு வஸ்துவை வைத் துக்கொண்டிருப்பதற்காக லிசென்ஸ் வேண்டும் என்றிருக்க, அதன்கீழ் மாத்திரம் லிசென்ஸ் பெற்றாலே போதுமானதல்ல. வேறே ஒரு ஆக்டின் கீழும் அதற்காக லிசென்ஸ் பெறவேண்டும் என்றிருக்குமானல் கட்டாயம் லிசென்ஸ் பெற்றே தீரவேண்டும் (d).

ஆனல், இந்தியன் பெட்ரோலியம் ஆக்டின்கீழ் இந்தியா கவர்னர் ஜெ னரல் G. O. No.49 of 1922-க்கு 1922-ம்வருஷம் ஜூலை மாதம் 27-ந் தேதி ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறார். அது "போர்ட்செயின்ட்ஜார்ஜ் கெஜட்டில் 8—9—1922-ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அதாவது ஒரு நபர் யாதொரு லோகல்போர்டு அல்லது முனிஸிபாலிட்டியின் எல்லைக்குள் 500-காலன்களு க்குக் குறைந்த பெட்ரோலை வைத்துக்கொண்டிருக்கும் பட்சத்தில் அதற்

(a) சேஷாசலம் செட்டி vs. இந்தியா சக்ரவர்த்தி 18 I. C. 663.
(b) பப்ளிக்ப்ராஸிக்யூட்டர் vs. சைய்த் ஆதிகுட்டி - 50 Mad 752. 52 M. L. J. 559.
(c) பப்ளிக்ப்ராஸிக்யூட்டர் vs. பாச்சாமியான் சாயபு. 1 Weir. 737.
(d) பப்ளிக்ப்ராஸிக்யூட்டர் vs. கோஷிந்தப்பிள்ளை. 1 Weir. 740.

காக அவர் கவர்ன்மெண்டினிடமிருந்து லைஸென்ஸ் பெற்றாலே போதுமானது. சம்பந்தப்பட்ட லோகல்போர்டு அல்லது முனிஸிபாலிட்டியினிடமிருந்து லீஸென்ஸ் பெறவேண்டிய அவசியம் இல்லை. அப்படி லைசென்ஸ் வாங்காததற்காக அவர் பேரில் கேஸ் தொடரப்படுவதற்கு இல்லை. ஆனால் 500-காலன்களுக்கு அதிகமாக பெட்ரோலியத்தை சேகரித்துவைத்திருக்கும் பட்சத்தில் அதற்காக கட்டாயம் கவர்ன்மெண்டினிடமிருந்தும் சம்பந்தப்பட்ட லோகல்போர்டு அல்லது முனிஸிபாலிட்டியினிடமிருந்தும் லைசென்ஸ் வாங்க வேண்டும். அப்படி லைஸென்ஸ் பெறாதது ஒரு குற்றமாகும்.

ரயில்வே ஹோட்டல்களுக்கு ரயில்வேகாரர்கள் லைசென்ஸ் பெற வேண்டிய அவசியமில்லையென்று கவர்ன்மெண்டார் 17—2—25-ல் உத்தரவிட்டிருக்கின்றனர்.

ஹோட்டல், அல்லது ரெஸ்டாரன்ட் என்பவை ஒரு கட்டிடத்திற்குள் உள்ளதாக இருக்கவேண்டுமேயொழிய ஒரு சிறிய பந்தலேப்போட்டு வெளியே அங்காமிக்கடைபோல ஒரு சிறிய கடையில் காபி, தின்பண்டங்கள் இவைகளை விற்பதற்கு லைசென்ஸ் வாங்க வேண்டிய அவசியமில்லை என்று ஒரு கேஸில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (e).

ஐஸ் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்வர் லைசென்ஸ் பெறவேண்டிய அவசியம் இல்லை. (f)

கைத்தரிகளுக்கு லைசென்ஸ் பெறவேண்டிய அவசியம் கிடையாது. (g)

இரும்புகளைச் சேர்த்துவைப்பதற்கு லைசென்ஸ் வேண்டிய அவசியமில்லை. (h)

அரிசி முதலியவைகளைச் சேர்த்துவைப்பதற்கும் லைசென்ஸ் வேண்டியதில்லை. (i)

(e) 51 M. L. J. கேசுகளின் குறிப்புகள் பக்கம். 95.

(f) கேசவலு நாயகர் vs. சென்னை கார்ப்பொரேஷன் A. I. R. 1928 Mad. 381 250 M. L. J. 301.

(g) கண்ணனூர் முனிஸிபல் கௌன்சில் vs. புத்திய வலப்பில் குனியல் ஆனந்தன் 1 (1929) அஇல இந்தியா லாஜர்னல் ரிப்போர்டுகள் பக்கம். 192

(h) ஆறுமுகசெட்டி vs. சென்னை கார்ப்பொரேஷன் ப்ரெஸிடெண்டு 4 M. L. T. 321.

(i) தூத்துக்குடி முனிஸிபல் கௌன்சில் vs. ஷண்முகமூப்பனர் A. I. R. 1926. Mad. 251-49 Mad. 219.

8-வது ஷெட்யூல்.

சாதாரண அபராதங்கள்.

(207-வது பிரிவைப் பார்க்கவும்.)

பிரிவு.	உட் பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்.
97		தொழில், கைவினை முதலியவை செய்பவரின் ஜாபிதா சவதரிக்கும்படிச் செய்த உத்தரவின் பிரகாரம் சொத்தக்காரர் அல்லது அனுபோகதாரர் நடக்கத் தவறுவது.	நூறு ரூபாய்
102	1	கட்டடம் கட்டுவது முதலியது முடிந்த பிறகு ப்ரெஸிடென்டுக்கு நோட்டீஸ் அனுப்பத் தவறுவது.	ஐம்பது ரூ.
109	...	சுங்கம் செலுத்தாமல் தப்பித்துக் கொள்வது அல்லது செலுத்த மறுப்பது.	ஷை
122	...	யாதொரு நீரோடை முதலியதை சுத்தி செய்யும்படியாவது கிணறு, குளம் அல்லது நீர் நிலையை மூடிவிடும்படியாவது அதற்கு அடைப்பு போடும்படியாவது வேலி போடும்படியாவது செய்த உத்தரவின்பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷை
123	1	குளம், கிணறு முதலியவைகளுக்கு வேலி போடுவது மராமத்து செய்வது அவைகளைத் தூர்த்துவிடுவது முதலியவைகள் விஷயமாய்ச் செய்த உத்தரவின்படி நடக்கத் தவறுவது.	ஷை
124	2	பொது ஜனங்கள் உபயோகிக்கக் கூடிய ஜலத்தை உபயோகிக்கக் கூடாதென்று தடுத்து வெளியிடப்பட்ட நோட்டீசை நீறி நடப்பது.	ஷை
125	a	குடிக்கும் காரியங்களுக்காகப் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் ஸ்நானம் செய்வது முதலியது.	ஷை
125	b	குடிக்கும் காரியங்களுக்காகப் பிரத்தியேகப்படுத்தி வைக்கப் பட்டிருக்கும் இடங்களில் அருவருப்பான யாதொரு வஸ்து முதலியதைப் போட்டு ஓவ்வப்பது	ஷை
125	c	குடிப்பதற்காவது ஸ்நானம் செய்வதற்காவது பிரத்தியேகப் படுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் வஸ்திரங்கள் தோய்ப்பது.	ஷை
125	d	இதர காரியங்களுக்காக பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் பிராணி முதலியதைக் கழுவுவது.	ஷை
125	e	யாதொரு குழி ஜலதாரை முதலியவைகளிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதற்காவது, ஸ்நானம் செய்வதற்காவது வஸ்திரங்கள் தோய்ப்பதற்காவது	

பிரிவு.	உட் பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்.
		பிரத்தியேகப் படுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குள் பாய விடுவது.	இருபது ரூ.
129	...	அசுத்தங்களைப் பொதுவான பாட்டைகளில் போகும்படி செய்வது முதலியவை.	ஐம்பது ரூ
129a	...	சாக்கடைகளைக் கட்ட அல்லது மாற்றஅல்லது எடுத்துவிடத் தவறுவது.	ஷை.
131	2	வளவுகளையாவது வஸ்துக்களையாவது சுத்தி செய்யும்படியாகிலும் அவைகளினின்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷை.
132	1	வண்டி முதலியவைகளையும் வஸ்திரங்கள் முதலியவைகளையும் பிரசித்தஞ் செய்யப்பட்ட இடத்திற்கு கொண்டுபோகத் தவறுவது.	ஷை.
133	...	தொத்து வியாதி சம்பந்தத்திற்கு உட்பட்ட நபர் தொழில் நடத்துவது.	ஷை.
134	1	வியாதி பரவுவதை தடுப்பதற்குத் தகுந்த முன் எச்சரிக்கையான யேற்பாடுகள் செய்யாமல் தொத்து வியாதி சம்பந்தத்துக்கு உட்பட்டவர் பொதுவான வண்டி முதலியவைகளில் பிரயாணம் செய்வது.	ஷை.
134	2	தொத்து வியாதி சம்பந்தத்துக்குட்பட்ட நபர் தொத்துவியாதி சம்பந்தத்துக்கு உட்பட்டிருப்பதை தெரிவிக்காமலே பொதுவான வண்டி முதலியவைகளில் பிரவேசிப்பது.	ஷை.
134	3	தொத்து வியாதி சம்பந்தத்துக்கு உட்பட்ட வரை பொதுவான வண்டி முதலியவைகளில் ஏற்றிக்கொண்டு போவது.	இருநூறுரூ.
135	...	பொது ஜனங்கள் வேடிக்கைக்காகக் கூடும் இடங்களை மூடிவிடத் தவறுவது.	ஷை.
136	...	தொத்து வியாதி சம்பந்தத்துக்கு உட்பட்ட குழந்தையைப் பாடசாலைக்கு அனுப்புவது.	ஐம்பது ரூ.
138	...	வைசூரி கண்டிருக்கிறதென்று சங்கித்தெரிவிக்கத் தவறுவது.	ஷை.
139	2	வைசூரிக்காக மருந்து குத்திக் கொண்டதிலிருந்து நாற்பது தினங்களுக்குள்ளாக லெர்டிபிகேட்டு இல்லாமல் ப்ரதேச வில்தீரணத்தைவிட்டு போவது	நூறு ரூ.
140	1	ப்ரேதங்களை ஒரு வகை செய்வதற்கானயாதொரு இடத்தை ரெஜிஸ்டர் செய்யத் தவறுவது.	ஷை.
141	1	ப்ரேதங்களை ஒருவகைசெய்வதற்கான யாதொரு இடத்தை லைசென்ஸ் இல்லாமலே யேற்படுத்துவது முதலியது அல்லது உபயோகப் படுத்துவது.	ஷை.

பிரிவு.	உட் பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்.
144	...	குடியிருக்கும் இடத்துக்காவது குடிக்கும் ஜலம் சர்ப்பரா எந்த ஆதாரத்திலிருந்து செய்யப்படுகிறதோ அதற்காவது 100-கஜ தூரத்துக்குள் ப்ரேதங்களைப் புதைப்பது தகனஞ் செய்வது முதலியவை.	நூறு ரூ.
145	...	புதைப்பதற்கான அல்லது தகனஞ் செய்வதற்கான இடத்தில் (ப்ரேதக்களைப் புதைப்பதைப்பற்றியாவது தகனஞ் செய்வதைப் பற்றியாவது சங்கதி தெரிவிக்கத் தவறுவது.	ஷே.
146	3	யாதொரு இடத்தில் ப்ரேதத்தைப் புதைக்கவாவது, தகனஞ் செய்யவாவது, மற்றப்படி ஒரு வகை செய்யவாவது கூடாதென்று தடுத்திருந்தால் அங்கே ப்ரேதத்தைப் புதைப்பது தகனஞ் செய்வது அல்லது மற்றப்படி ஒரு வகை செய்வது.	இருபது ரூ
147	1	அபாயகரமானக் கட்டுக்கோப்புக்கு அடைப்படைக்கும்படியாகிலும் அதை எடுத்துவிடும்படியாகிலும், பத்திரப்படுத்தும்படியாகிலும் மாமத்து செய்யும்படியாகிலும் செய்த உத்திரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	நூறு ரூ.
148	1	அபாயகரமான மரங்களைப் பத்திரப்படுத்தும்படியாவது அதன் கிளைகளைக் கழிக்கும்படியாவது அதை வெட்டிவிடும்படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஐந்நூறு ரூ.
149	...	கட்டிடம் அல்லது நிலத்துக்கு அடைப்பு அடைத்து வைக்கும்படியாவது வேலிகளையும் மரங்களையும் தறிக்கும்படி அல்லது கழிக்கும்படி அல்லது வெட்டும்படியாவது சுற்றியிருக்கும் ஒரு சுவரை தாழ்த்தும்படியாவது செய்த உத்தரவின்பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஐம்பது ரூ.
150	1	பொ ஜன தேகாரோக்கியத்துக்காவது க்ஷேமத்துக்காவது அபாயகரமாயுள்ள குளம் அல்லது இதரவிடத்தைத் தூர்த்துவிடுவது முதலியவை விஷயமாய்ச் செய்த உத்திரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷே.
151	1	லசென்ஸ் இல்லாமல் பொதுவான பாட்டைக்குச் சமீபத்தில் கல்வெட்டி எடுப்பது முதலியவை.	ஷே.
151	2	அபாயகரமாகக் கல்வெட்டியெடுப்பதை நிறுத்தத் தவறுவது.	நூறு ரூ.
153	1	அசியான ஸ்திதியிலாவது அனுரோக்கியமான புல் பூண்டுகள் அமிதமாய் முளைத்தாவிருக்கிற கட்டிடம் அல்லது நிலத்தை பரிஷ்கரிக்கும் படியாகிலும் சுத்தி முதலியது செய்யும்படியாகிலும் செய்த	

பிரிவு.	உட் பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்.
		உத்தரவின் பிரகாரம் நடக்கத்தவறுவது.	ஐம்பதுரூ.
153	2	யாதொரு கட்டடத்துக்குச் சுண்ணாம்பு அடிக்கும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷை
157	...	யாதொரு பொதுவான பாட்டையிலாவது அதன்மேலாவது சட்டத்துக்கு விரோதமாய்ச் சுவர் கட்டுவது அல்லது வேலி அமைப்பது முதலியது.	நூறு ரூ.
157a	...	பாட்டைகளை உபயோகிக்கையில் யாதொரு நபரை தடுப்பது.	ஷை
158	...	கதவுகள், அடித்தள ஜன்னல்கள் முதலியவைகளை லேலென்ஸ் இல்லாமலாவது நோட்டீசுக்கு விரோதமாகவாவது வெளிப்புறமாய்த் திறக்கும்படி விடுவது.	இருபது ரூ
159	1	ஆக்கிரமிப்பை எடுத்து விடவாவது மாற்றவர்வது தவறுவது.	இருநூறுரூ.
161	1	சாக்கடைக்காலின் மேலாவது குப்பை கூளம் முதலியவைகளால் மட்டம் முதலியவை செய்யப்பட்ட நிலத்தின் மேலாவது சட்டத்துக்கு விரோதமாய்க் கட்டடம் கட்டுவது.	ஷை
161	2	அனுமதி யில்லாமலாவது அனுமதியிற் கண்ட ஷரத்துக்களுக்கு விரோதமாகவாவது கட்டப்பட்ட கட்டடத்தை இடித்து விடும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷை
162	...	பொதுவான பாட்டை முதலியவைகளுக்கு அடுத்து இருக்கும் நிலத்திலிருந்து சப்பாத்து கள்ளி மில்லாறு, லாண்டாரு முதலியவைகளை எடுத்துவிடும்படி செய்த உத்திரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஐம்பது ரூ.
163	1	பொதுவான பாட்டையில் சட்டத்துக்கு விரோதமாய் சுழி தோண்டுவது அல்லது தடையாக இருக்கிற வஸ்துவைப் போட்டு வைப்பது.	ஷை
163	2	சுழி அல்லது தடையாயிருக்கும் வஸ்துவுக்கு வேலி போடுவது அடைப்பு ஏற்படுத்துவது முதலியவை செய்யத் தவறுவது.	ஷை
163a	1	யாதொரு பொது ரஸ்தாவில் அல்லது ஒரு லோகல் போர்டுக்குச் சொந்தமான சொத்தில் உத்தரவில்லாமல் செடிகளை நடுவது.	இருநூறுரூ.
163	2	யாதொரு பொது ரஸ்தாவில் அல்லது ஒரு லோகல் போர்டுக்குச் சொந்தமான சொத்தில் வளர்ந்துவரும் மரங்களை உத்தரவில்லாமல் வெட்டுவது.	ஷை

பிரிவு.	உட் பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்.
164	2	லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் நிலத்தின் மீதுள்ள யாதொரு கட்டிடம் முதலியவற்றை அப்புறப்படுத்தத் தவறுவது.	இருநூறு ரூ.
166	1	லைலென்ஸில்லாமல் மோட்டார் வண்டியை வாடகைக்கு ஓட்டுவது அல்லது ஒரு மோட்டார் லாரியை லைசென்ஸில்லாமல் அல்லது லைசென்சுக்கு விரோதமாய் உபயோகப்படுத்துவது.	ஷை
167	..	பொது மார்க்கெட்டுகளை உபயோகிக்கையில் யாதொரு நபரை தடுப்பது.	நூறு ரூ.
169	1	அனுமதியில்லாமல் பொது வாண மார்க்கெட்டில் பிராணியையாவது வஸ்துவையாவது விற்பனைக்காக காட்டி வைப்பது.	இருபது ரூ.
171	...	லைலென்ஸில்லாமலாவது லைலென்சுக்கு விரோதமாகவாவது சொந்தமார்க்கெட்டைத் திறந்து வைப்பது அல்லது ஒரு சொந்த மார்க்கட்டை திறந்து வைத்துக் கொண்டிருப்பது.	ஐந்நூறு ரூ.
172	1	லெர்ட்டிபிகேட் இல்லாமல் சொந்தமார்க்கெட்டில் கட்டணங்கள் விதிப்பது.	நூறு ரூ.
175	...	லைசென்ஸ் கொடுக்கப்பெறாத சொந்தமார்க்கெட்டில் பிராணியையாவது வஸ்துவையாவது விற்பனை செய்வது அல்லது விற்பனைக்குக் காட்டிவைப்பது.	இருபது ரூ.
176	...	யாதொரு சொந்தமார்க்கெட்டுக்குவழிகள் முதலியவைகளை ஏற்படுத்தும்படியாகிலும் அதற்கு கூறை முதலியவை போடும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	நூறு ரூ.
177	2	வேலைகள் செய்து முடிக்கத் தவறினதற்காக லைசென்சை சிறிது காலத்திற்கு நிறுத்தி வைத்தப் பிறகாவது லைலென்ஸ் கொடுப்பதில்லை என்று நிராகரித்தப் பிறகாவது சொந்த மார்க்கெட்டைத் திறந்து வைத்திருப்பது	ஐம்பது ரூ
178	...	சொந்த மார்க்கெட்டுகளில் அசங்கியங்கள் அல்லது சக்கடங்கள் செய்வது.	இருபது ரூ.
183	...	பொதுவான பாட்டை முதலியவைகளில் பொருள்களை விற்பனை முதலியவை செய்யக்கூடாதென்று தடுத்த பிரகாவது லைலென்ஸ்லாமலாவது ரெகுலேஷன்களுக்கு விரோதமாகவாவது அந்தப்படியே செய்வது.	பத்து ரூ.
185	...	தடுக்கப்பட்ட தூரத்துக்குள் யாதொரு பொது வான இடத்தையாவது பாட்டையின் பாகத்தையாவது இறக்கும் இடமாக வாகிலும் நிற்கும் இடமாக	

பிரிவு.	உட் பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்
		வாகிலும் மற்றப்படிக்காகிலும் உபயோகிப்பது.	ஐம்பது ரூ.
187	1	பாரவண்டிகள் நிற்பதற்கான சொந்த இடத்தை லிலென்சில்லாமல் அல்லது லிலென்சுக்கு விரோதமாக நிறுத்து வைத்துக் கொண்டிருப்பது.	இருநூறுரூ.
190	a	ஆடுமாடு முதலியவை அடிக்கும் பொதுவான தொட்டிக்கு வெளியே ஆடுமாடு முதலியவைகளை அடிப்பது அல்லது அவைகளைத் துண்டு போடுவது அல்லது அவைகளின் தோலை உரிப்பது முதலியவை.	ஷி
190	b	லிலென்ஸில்லாமல் எவையேனும் கால்நடை முதலியவைகளை அடிப்பது முதலியவை.	பிராணி 1-க்கு 20 ரூ.
193	...	லிலென்ஸில்லாமல் யாதொரு இடத்தை அருவருப்பான அல்லது அபாயகரமான வர்த்தகத்திற்கு உபயோகிப்பது.	நூறு ரூ.
194	...	சட்டத்துக்கு விரோதமாய் தொழிற்சாலை வேலைச்சாலை முதலியவைகளை அமைப்பது.	ஆயிரம் ரூ
195	...	அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்குவதைக் குறைப்பது முதலியவை சம்பந்தமான உத்தரவை மீறி நடப்பது.	நூறு ரூ.
212	8	கேட்கும்போது லிலென்சைக் காட்டத் தவறுவது.	ஐந்து ரூ.
229	....	லோகல் போர்டார் முதலியவர்களை தடுப்பது அல்லது தொந்தரவு செய்வது.	ஐம்பது ரூ.
230	...	லோகல் போர்டாராவது அவர்களுடைய உத்தரவின்படியாவது காட்டி வைக்கப்பட்ட நோட்டீசை அப்புறப்படுத்துவது	ஷி
231	...	ஸ்டேட்மென்ட் முதலியவைகளைச் சவதரிக்கும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷி
232	...	லம்மன்படி நடக்கத் தவறுவது.	ஷி

9—வது ஷெட்யூல்:

தொடர்ச்சியாய்த் தும்பும் நடந்துகொண்டே வந்தால் அதற்கு அபராதங்கள்.

(207-வது பிரிவைப் பார்க்கவும்.)

பிரிவு.	உட் பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்.
122	...	யாதொரு கோடை முதலியதைசுத்தி செய்யும்படியாவது, கிணறுகுளம் அல்லது நீர் நிலையைமூடிவிடும்படியாவது அதற்கு அடைப்பு ஏற்படுத்தும்படியாவது, வேலிபோடும்படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது	பத்து ரூ.
123	1	குளம், கிணறு முதலியவைகளுக்கு வேலிபோடுவது மராமத்து செய்வது அவைகளை தூர்த்துவிடுவது முதலியவைகள் விஷயமாய்ச் செய்த உத்தரவின்படி நடக்கத் தவறுவது.	ஷை
124	2	பொது ஜனங்கள் உபயோகிக்கக்கூடிய ஜலத்தை உபயோகிக்க கூடாதென்று தடுத்துவெளியிடப்பட்ட நோட்டீஸை மீறி நடப்பது.	ஷை
125	e	யாதொரு குழி, ஜலதாரை முதலியவைகளிலிருந்துவரும் தண்ணீரைக்குடிப்பதற்காவது ஸ்நானம் செய்வதற்காவது வஸ்திரங்கள் தோய்ப்பதற்காவது பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் பாயவிடுவது.	ஷை.
129	...	அசுத்தங்களைப் பொதுவான பாட்டைகளில் போகும்படி செய்வது முதலியவை	ஷை
129a	...	சாக்கடைகளைக்கட்ட அல்லது மாற்ற அல்லது எடுத்துவிட தவறுவது.	ஷை
131	2	வளவுகளையாவது வஸ்துக்களையாவது சுத்தி செய்யும்படியாகிலும் அவைகளினின்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷை
133	...	தொத்து வியாதி சம்பந்தத்திற்குட்பட்ட நபர் தொழில் நடத்துவது.	ஷை
135	...	பொது ஜனங்கள் வேடிக்கைக்காகக் கூடும் இடங்களை மூடிவிடத் தவறுவது.	நூறு ரூ.
141	1	பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான இடத்தை லைஸென்ஸ் இல்லாமலே உபயோகப்படுத்துவது.	ஒவ்வொரு தடவைக்கு இருபது ரூ.
147	1	அபாயகரமானகட்டுக்கோப்புக்கு அடைப்படைக்கும்படியாகிலும் அதைஎடுத்துவிடும்படியாகிலும் பத்திரப்படுத்தும்படியாகிலும்மராமத்துசெய்யும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத்தவறுவது.	ஐம்பது ரூ.

பிரிவு.	பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்.
148	1	அபாயகரமான மரங்களைப் பத்திரப் படுத்தும் படியாவது அதன் கிளைகளை கழிக்கும்படியாவது அதை வெட்டிவிடும் படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத்தவறுவது	பத்து ரூ.
149	...	கட்டிடம் அல்லது நிலத்துக்கு அடைப் படைத்து வைக்கும்படியாவது வேலிகளையும் மரங்களையும் தறிக்கும்படி அல்லது கழிக்கும்படி அல்லது வெட்டும்படியாவது அல்லது சுற்றி யிருக்கும் ஒரு சுவரைத்தாழ்த்தும்படியாவது செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷை.
150	1	பொதுஜன தேகாரோக்கியத்துக்காவது கேடு மத்துக்காவது அபாயகரமாயுள்ள குளம் அல்லது இதர இடத்தைத் தூர்த்துவிவது முதலியவை விஷயமாய் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத்தவறுவது.	ஷை.
151	1	லேவெல்ஸ் இல்லாமல் பொதுவான பாட்டைக்கு சமீபத்தில் கல்வெட்டி யெடுப்பது.	ஷை.
151	2	அபாயகரமாய் கல்வெட்டி யெடுப்பதை நிறுத்தத் தவறுவது.	ஷை.
153	1	அசுசியான ஸ்திதியிலாவது அனாரோக்கியமான புல் பூண்டுகள் அமிதமாய் முளைத்தாவதிருக்கிற கட்டிடம் அல்லது நிலத்தைப் பரிஷ்காரிக்கும் படியாகிலும்சுத்தி முதலியது செய்யும்படிக்காகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷை.
153	2	யாதொரு கட்டிடத்துக்குச் சுண்ணாம்பு அடிக்கும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷை.
157	...	யாதொரு பொதுவான பாட்டையிலாவது அதன் மேலாவது சட்டத்துக்கு விரோதமாய் சுவர் கட்டுவது அல்லது வேலி அமைப்பது முதலியது.	இருபது ரூ.
158	...	கதவுகள், அடி தரை ஜன்னல்கள் முதலியவைகளை லேவெல்லில்லாமலாவது நோட்டீசுக்கு விரோதமாகவாவது வெளிப்புறமாய்த் திறக்கும்படி விடுவது.	பத்து ரூ.
159	1	ஆக்கிரமிப்பை எடுத்து விடவாவது மாற்றவாவது தவறுவது.	ஷை.
161	1	சாக்கடைக்காலின் மேலாவது குப்பை கூள முதலியவைகளால் மட்டம்முதலியவை செய்யப்பட்ட நிலத்திலாவது சட்டத்துக்கு விரோதமாய்க் கட்டிடம் கட்டுவது.	ஐம்பது ரூ.

பிரிவு.	உட்பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்.
161	2	அனுமதியில்லாமலாவது அனுமதியிற்கண்ட நேரத்துகளுக்கு விரோதமாகவாவது கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்து விடும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஐம்பது ரூ.
162	...	பொதுவான பாட்டை முதலியவைகளுக்கு அடுத்திருக்கும் நிலத்திலிருந்து சப்பாத்துக்கள்ளி, மிலாறு லான்டானு முதலியவைகளை எடுத்து விடும்படி செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத்தவறுவது.	பத்து ரூ.
163	1	பொதுவான பாட்டையில் சட்டத்துக்கு விரோதமாய்க் குழி தோண்டுவது அல்லது தடையாயிருக்கிற வஸ்துவைப் போட்டு வைப்பது.	ஷை.
164	2	லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் நிலத்தின்மீதுள்ள யாதொரு கட்டிடம் முதலியவைகளை அப்புறப்படுத்தத் தவறுவது.	ஐம்பது ரூ.
166	1	லைலென்வில்லாமல் மோட்டார் வண்டியை வாடகைக்கு ஓட்டுவது அல்லது ஒரு மோட்டார் லாரியை லைலென்வில்லாமல் அல்லது லைலென்சுக்கு விரோதமாக உபயோகப்படுத்துவது.	ஷை.
169	1	அனுமதியில்லாமல் பொதுவான மார்க்கெட்டில் பிராணியையாவது வஸ்துவையாவது விற்பனை செய்வது அல்லது விற்பனைக்குக் காட்டி வைப்பது.	பத்து ரூ.
171	...	லைலென்வில்லாமலாவது லைலென்ஸுக்கு விரோதமாகவாவது சொந்தமார்க்கெட்டைத் திறந்து வைத்திருப்பது.	நூறு ரூ.
172	1	லைட்டிகேட்டில்லாமல் சொந்தமார்க்கெட்டில் கட்டணங்கள் விதிப்பது.	ஐம்பது ரூ.
175	...	லைலென்ஸ் கொடுக்கப்பெறாத சொந்த மார்க்கெட்டில் பிராணியையாவது வஸ்துவையாவது விற்பனை செய்வது அல்லது விற்பனைக்குக் காட்டி வைப்பது.	பத்து ரூ.
176	...	யாதொரு சொந்த மார்க்கெட்டுக்கு வழிகள் முதலியவைகளை ஏற்படுத்தும்படியாகிலும் அதற்குக் கூரைமுதலியவை போடும்படியாகிலும் செய்த உத்தரவின் பிரகாரம் நடக்கத் தவறுவது.	ஷை.
177	3	வேலைகளைச் செய்து முடிக்கத் தவறினதற்காக லைலென்ஸைச் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைத்த பிறகாவது லைலென்ஸ் கொடுப்பதில்லையென்று நிராகரித்தப் பிறகாவது சொந்த மார்க்கெட்டைத் திறந்து வைத்திருப்பது.	இருபது ரூ.

பிரிவு.	உட்பிரிவு.	விஷயம்.	விதிக்கத் தக்க அபராதம்.
178	...	சொந்த மார்க்கெட்டுகளில் அசங்கியங்கள் அல்லது சங்கடங்கள்.	பத்து ரூ.
187	1	பார வண்டிகள் நிற்பதற்கான சொந்த இடத்தை லேலென்வில்லாமல் அல்லது லேலென்சுக்கு விரோதமாக திறந்து வைத்திருப்பது.	இருபது ரூ.
193	..	லேலென்வில்லாமல் யாதொரு இடத்தை அருவருப்பான அல்லது அபாயகரமான வர்த்தகத்துக்கு உபயோகிப்பது.	ஷை
194	...	சட்டத்துக்கு விரோதமாய்த் தொழிற்சாலை, வேலைச் சாலை முதலியவைகளை அமைப்பது.	நூறு ரூ.
195	...	அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்குவதைக் குறைப்பது சம்பந்தமான உத்தரவை மீறி நடப்பது.	ஐம்பது ரூ.

10-வது ஷெட்யூல்.

1930-ஆவது இந்திய லோகல் போர்டு திருத்த சட்டத்தினால் சென்னை லோகல் போர்டு ஆக்டினுடைய நிபந்தனைகளை அமுலுக்கு கொண்டு வருவதில் அதினுடைய நிபந்தனைகளை அடியில் இந்த ஷெட்யூலில் கண்ட விதிகளுக்குட்பட்டே செலாவணியாக்க வேண்டும். அதாவது:—

மாறுதல் காலத்துக்கான நிபந்தனைகள்.

1. பழைய ஆக்டின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டும் இந்த ஆக்டினால் திருத்தப்பட்ட அந்த ஆக்டின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு டிஸ்டிரிக்ட்டு போர்டு என்று கருதப்படவேண்டும்.

2. பழைய ஆக்டின்கீழ் அமைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு தாலூக்கா போர்டும் இந்த ஆக்டினால் திருத்தப்பட்ட அந்த ஆக்டின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு தாலூக்கா போர்டு என்று கருதப்படவேண்டும்.

3. (1) இந்த ஆக்டானது வழங்கத் தொடங்கும் காலத்தில் பழைய ஆக்டின் கீழ் ஒரு யூனியனென்று இருக்கும் ஒவ்வொரு

பிரதேச விஸ்தீரணமும் 1920-ம் ஹுத்திய சென்னை கிராம பஞ்சாயத்து ஆக்டின் கீழ் ஒரு கிராமமென்று இருக்கும் ஒவ்வொரு பிரதேச விஸ்தீரணமும் இந்த ஆக்டினல் திருத்தப்பட்ட அந்த ஆக்டின் கீழ் கிராமமென்று நிர்ணயிக்கப்பட்டதாக கருதப்படவேண்டும்.

(2) பழைய ஆக்டின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு யூனியன் போர்டும் 1920-ம் ஹுத்திய சென்னை கிராம பஞ்சாயத்து ஆக்டின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பஞ்சாயத்தும் இந்த ஆக்டினல் திருத்தப்பட்ட பழைய ஆக்டின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்து போர்டாக கருதப்படவேண்டும்.

4. இந்த ஆக்டானது வழங்கத் தொடங்கும் காலத்தில் ஒவ்வொரு லோகல் போர்டிலும் அல்லது பஞ்சாயத்திலும் உள்ள உள்ள அங்கத்தினர்களின் சங்கியையானது இந்த ஆக்டினல் திருத்தப்பட்ட பழைய ஆக்டின் 10-வது பிரிவின்கீழ் ஒரு அறிக்கையினல் பிரகடிக்கப்பட்ட ஒரு அங்கத்தினர்களின் சங்கியை என்று கருதப்படவேண்டும்;

ஆனல் ஒரு யூனியன் போர்டு அல்லது பஞ்சாயத்தினுடைய சங்கியையானது ஏழு என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கும் பக்ஷத்தில் அந்த போர்டு அல்லது பஞ்சாயத்துக்கு இந்த ஆக்டு வழங்கத்தொடங்கினவுடன் கூடிய சீக்கிரத்தில் 8-வது அங்கத்தினராக ஒருவரை நியமிக்க வேண்டும்.

5. (1) பழைய ஆக்டின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் யாதொரு டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலூக்கா போர்டு அல்லது யூனியன் போர்டு அல்லது 1920-ம் ஹுத்திய சென்னை கிராம பஞ்சாயத்து ஆக்டின்கீழ் அமைக்கப்பட்டிருக்கும் யாதொரு பஞ்சாயத்து போர்டும் உபயோகப்படுத்திவந்த அல்லது அனுபவித்துவந்த அல்லது சுவாதினப்படுத்திக்கொண்டு வந்த எல்லா சொத்துக்களும் எல்லா விதமான உரிமைகளும் அப்படிப்பட்ட டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலூக்கா போர்டு அல்லது யூனியன் போர்டினல் சொந்தப் படுத்திக்கொண்டு வந்த அல்லது அவைகளில் சங்கிரமித்துள்ள அல்லது அவைகளால் டிரஸ்டாக பாதுகார்க்கப்பட்டு வந்த அல்லது அவைகளுக்காக டிரஸ்டாக பாதுகார்க்கப்பட்டு வந்த எல்லா பாத்தியதைகளும் அவை

எவ்விதமாக இருந்தபோதிலும், அப்படிப்பட்ட போர்டு அல்லது பஞ்சாயத்துக்கு விரோதமாக சட்டப்படிக்கு செலாவணியாகிக் கொண்டிருக்கும் எல்லாகடமைகளும் இந்த ஆக்டானது ஆரம்பிக்கும் தேதி அன்றையதினமும் அதுமுதற்கொண்டும் லோகல் கவர்ன்மென்டார் இதற்கென்றே ஒரு தனியான உத்தரவு மூலமாகவோ கொடுக்கும் கட்டளைகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலூக்காபோர்டு அல்லது பஞ்சாயத்து போர்டுக்குச் சேருவதாகும்.

(2) அப்படிப்பட்ட டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலூக்கா போர்டு அல்லது யூனியன்போர்டு இவைகளினுல் பழைய சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கும் எல்லா நடவடிக்கைகளும் அல்லது 1920-ம் வருஷத்திய சென்னை கிராம பஞ்சாயத்து ஆக்டின் கீழ் பஞ்சாயத்தானது எடுத்து கொண்டிருக்கும் எல்லா நடவடிக்கைகளும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தார்ப்போல் அவைகள் இந்த ஆக்டினுல் திருத்தப்பட்ட பழையஆக்டின் நிபந்தனைகளுக்கு முரண்பாடாக இராமலிருக்கும் வரையிலும் அப்படி திருத்தப்பட்ட பழைய ஆக்டின் கீழ் சம்பந்தப்பட்ட டிஸ்ரிக்ட்டு போர்டு, தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்து போர்டினுல் நடத்தப்படலாம்.

(3) பழைய ஆக்டின்படிக்காவது அல்லது 1920–ம் வருடத்திய சென்னை கிராம பஞ்சாயத்து ஆக்டின்படிக்காவது எடுத்து கொள்ளப்பட்டு இந்த ஆக்ட்டு வழங்கத் தொடங்கும் காலத்தில் பைசலாகாமல் விசாரணைக்கு கார்த்திக் கொண்டிருக்கும் நடவடிக்கை விஷயமாக, ஒரு மனு, தாவா, அல்லது அப்பீல் மூலமாக பெறவிருக்கும் யாதொரு பரிஹாரமும், அந்த பரிஹார விஷயமாக எடுத்துக் கொள்ளப்பட்ட அந்த நடவடிக்கைகள் இந்த ஆக்ட்டு வழங்கத் தொடங்கின பின்பு காக்கல் செய்யப்பட்டது போலவே, இந்த ஆக்டினுல் திருத்தப்பட்ட பழைய ஆக்டினுள்ள பிரகாரமே கிடைக்கும் படி. இருக்கவேண்டும்.

(4) (1)-வது உபப்பிரிவின்கீழ் யாதொரு சொத்து, உரிமை, பாத்தியதை அல்லது கடமையை எந்த லோகல் போர்டு அடைய வேண்டுமென்பதைப் பற்றியாவது அல்லது (2)–வது உபப்பிரிவின்கீழ் எந்த லோகல்போர்டு யாதொரு நடவடிக்கையை நடத்திக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றியாவது, அல்லது, (3)-வது உபப்பிரிவின்

கீழ் எந்த லோகல்போர்டுக்கு அல்லது எந்த லோகல் போர்டின்பேரில் யாதொரு பரிகாரம் சேரவேண்டும் அல்லது அடையப்பட வேண்டு மென்பதைப்பற்றியாவது ஏதாவது தகராறு கிளம்பும் பக்ஷத்தில், அந்த ப்ரச்னையானது லோகல் கவர்ன்மெண்ட்டுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இதன் விஷயமாக லோகல் கவர்ன்மெண்டாருடைய தீர்மானமானது முடிவானதாகும்.

6. (1) பழைய ஆக்டிலாவது அல்லது இந்த ஆக்டிலாவது என்ன கண்டிருந்தபோதிலும் அதற்கு நிமித்தியமில்லாமல்—

(a) (i) இந்த ஆக்டானது வழங்குவதற்கு தொடங்கும் தேதியில் உத்தியோகம் வகித்துக்கொண்டுவரும் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டின் அங்கத்தினர்களும், தாலூக்கா போர்டின் அங்கத்தினர்களும் இந்த ஆக்டினால் திருத்தப்பட்ட பழைய ஆக்டின் கீழ் அமைக்கப்பட்ட டிஸ்டிரிக்ட்டு போர்டு அல்லது தாலூக்கா போர்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாக கருதப்படுவார்கள். அவர்களுடைய உத்தியோகத்தின் கால அளவானது இந்த ஆக்டினால் திருத்தப்பட்ட பழைய ஆக்டின் 54-வது பிரிவின் (2)-வது உபப்பிரிவிலும் 56, 57, 59 இந்தப் பிரிவுகளிலும் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு லோகல் கவர்ன்மெண்டார் எந்த தேதி வரையிலும் நீடிக்கவேண்டு மென்று அல்லது எந்த தேதியில் முடியவேண்டுமென்று நிர்ணயிக்கிறார்களோ அன்றையதினம் வரையிலும் நீடிப்பதாகும் அல்லது முடிவதாகும். லோகல் கவர்ன்மெண்டானது, டிஸ்டிரிக்ட்டு போர்டு அல்லது தாலூக்கா போர்டுகளின் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் எந்த தேதியில் பழைய அங்கத்தினர்கள் விலகவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அன்றையதினமே உத்தியோகம் வகிக்கும்படியாக எலெக்ஷன்கள் நடக்கும்படி செய்யவேண்டும்; இன்னும்,

(ii) இந்த ஆக்டானது வழங்குவதற்குத் தொடங்கும் தேதியில் உத்தியோகம் வகித்துக்கொண்டு வரும் ஒவ்வொரு யூனியன் போர்டு அங்கத்தினரும் பஞ்சாயத்து அங்கத்தினர்களும் இந்த ஆக்டினால் திருத்தப்பட்ட பழைய ஆக்டின் கீழ் அமைக்கப்பட்ட யூனியன்போர்டு அல்லது பஞ்சாயத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாக கருதப்படுவார்கள். அவர்களுடைய உத்தியோகத்தின் கால அளவானது இந்த

ஆக்டினால் திருத்தப்பட்ட புழைய ஆக்டின் 54-வதுபிரிவின் (2)-வது உபப்பிரிவிலும் 56, 57, 59-இந்தப்பிரிவுகளிலும் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு லோகல் கவர்ன்மெண்டார் எந்ததேதி வரையிலும் நீடிக்க வேண்டுமென்று அல்லது எந்த தேதியில் முடிய வேண்டுமென்று நிர்ணயிக்கிறார்களோ அன்றையதினம் வரையிலும் நீடிப்பதாகும் அல்லது முடிவதாகும். லோகல் கவர்ன்மெண்டானது பஞ்சாயத்தின் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் எந்த தேதியில் பழைய அங்கத்தினர்கள் விலகவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அன்றையதினமே உத்தியோகம்வகிக்கும்படியாக எலெக்ஷன்கள் நடக்கும்படி செய்ய வேண்டும்; இன்னும்,

(b) லோகல் கவர்ன்மெண்டானது அடிக்கடி (a)-வது வாக்கியத்தின்கீழ் தங்களால்நிர்ணயிக்கப்பட்ட யாதொருதேதியை மாற்றி வைத்து அதற்குப் பதிலாக மற்றொரு தேதியை நிர்ணயிக்கலாம்;

(c) இந்த சட்டமானது வழங்கத்தொடங்கும் தேதியில் உத்தியோகம் வகித்து வரும் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டு, வைஸ்ப்ரெஸிடென்ட்டு, தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு, வைஸ் ப்ரெஸிடென்டு யூனியன் போர்டு ப்ரெஸிடென்டு அல்லது பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு, இவர்கள் இந்த சட்டத்தினால் திருத்தப்பட்ட பழைய சட்டத்தின் 15-வது பிரிவின் (1), (2)-வது உபப்பிரிவுகளின் நிபந்தனைகளுக்குட்பட்டும் 43, 44, இந்த பிரிவுகளுக்கு உட்பட்டும் முறையே டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டு அல்லது தாலூக்கா போர்டு ப்ரெஸிடென்டு அல்லது தாலூக்காபோர்டு வைஸ் ப்ரெஸிடென்டு அல்லதுபஞ்சாயத்து ப்ரெஸிடென்டு ஆகிய இவர்களாக சந்தர்ப்பத்திற்கு தக்கபடி (a)-வது (b)-வது வாக்கியங்களின்கீழ் நிர்ணயிக்கப்படும் தேதி வரையிலும் உத்தியோகம் வகிக்க வேண்டும் அல்லது அப்படிப்பட்ட தேதியில் உத்தியோகத்தை காலி செய்துவிடவேண்டும்;

(d) மேலே சொல்லப்பட்ட தேதி யன்றையதினமாவது அல்லது அதற்குப் பிறகு கூடிய சீக்கிரத்தில், லோகல் கவர்ன்மெண்டினாலாவது அல்லது அவர்களால் இதற்கென்று அதிகாரப்படுத்தப்பட்ட வேறே யாதொரு அதிகாரியினாலாவது நிர்ணயிக்கப்பட்ட ஒரு தினத்திலும் காலத்திலும் அந்த லோகல் போர்டி

னுடைய ப்ரெஸிடென்டு, வைஸ் ப்ரெஸிடென்டு இவர்களை தேர்ந் தெடுப்பதற்காக டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்து போர்டு இவைகளின் புதியதாக தேர்ந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்களுடைய மீட்டிங்கு ஒன்று கூடவேண்டும்;

(e) டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்து இவைகளில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுடைய உத்தியோகத்தின் கால அளவானது அல்லது தற்செயலான காலிகளில் அவர்களுடைய ஸ்தானங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் உத்தியோக கால அளவானது மேலே (a)-வது அல்லது (b)-வது வாக்கியங்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தேதியானது நவம்பர்மீ முதல் தேதியாயிருக்கும் பக்ஷத்தில் மூன்று வருஷங்கள் கழிந்த பிறகும் மற்ற சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட தேதிக்கு அடுத்தாப்போலுள்ள முந்தின நவம்பர் மாதம் முதல் தேதி முதற்கொண்டு மூன்று வருஷங்கள் கழிந்த பிறகும் முடிவதாகும்; இன்னும்,

(f) (a)-வது அல்லது (b)-வது உபவாக்கியங்களின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட யாதொரு தேதியானது இந்த சட்டம் வழங்குவதற்கு தொடங்கியிருக்கும் தேதி முதல் ஒரு வருஷத்திற்குள்ளேயே இருக்க வேண்டும்.

(2) (a) இந்த சட்டமானது தொடங்கும் தேதியிலிருக்கும் ஒரு லோகல் போர்டு ப்ரெஸிடென்டு அல்லது வைஸ் ப்ரெஸிடென்டினுடைய உத்தியோகத்திலுள்ள காலியாவது அல்லது (1)-வது உபவிதியின் (a) அல்லது (b) வாக்கியங்களின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்பாக நிகழும் காலியாவது அந்த லோகல் போர்டினால் ஒரு எலெக்ஷன் மூலமாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(b) ஒரு லோகல் போர்டின் (கவர்ன்மெண்டினால்) நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தினருடைய உத்தியோகத்தில் நிகழும் அப்படிப்பட்ட காலியானது லோகல் கவர்ன்மெண்டினால் நியமக மூலமாக பூர்த்திசெய்ய வேண்டும். ஒரு லோகல் போர்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அங்கத்தினரின் உத்தியோகத்தில் அப்படிப்பட்ட யாதொரு காலி நிகழும் பக்ஷத்தில் அந்த காலியானது இந்த ஆக்டின் 47, 48, 50, 51-பிரிவுகளினால் நிருத்தப்பட்டிருக்கும்பிரகாரம் பழைய ஆக்டின் கோட்பாடுகளின் கீழாவது அல்லது 1920-ம் வருஷத்திய

சென்னை கிராம பஞ்சாயத்து சட்டத்தின் கீழாவது எலெக்ஷன் மூல மாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(c) இந்த உபவிதியின் (a) அல்லது (b) உபவாக்கியங்க ளின் கீழ் ஒரு லோகல் போர்டின் ப்ரெஸிடென்டாகவோ அல்லது வைஸ் ப்ரெஸிடென்டாகவோ அல்லது ஒரு அங்கத்தினராகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட யாதொரு நபர் (1)-வது உபவிதியின் (a) அல்லது (b)-வது வாக்கியத்தின்கீழ் நிர்ணயிக் கப்படும் தேதி வரையிலும் மாத்திரந்தான் உத்தியோகம் வகிக்க வேண்டும்.

விவரணம்:—இந்த சட்டமானது தொடங்குவதற்கு முன் எந் தக் காலத்திலாவது ஒரு லோகல் போர்டில், இந்த சட்டத்தினால் ஏற் படுத்தப்பட்ட ஒரு பஞ்சாயத்து வைஸ் ப்ரெஸிடென்டு உள்பட ஒரு ப்ரெஸிடென்டு, வைஸ் ப்ரெஸிடென்டு அல்லது அங்கத்தினருடைய உத்தியோக ஸ்தானத்திற்கு யாதொரு நபரும் தேர்ந்தெடுக்கப்பட் டிராவிட்டால் அல்லது நியமிக்கப்பட்டிராவிட்டால் அந்த ஸ்தானமா னது இந்த சட்டம் தொடங்கும் தேதியில் காலியாக யிருந்ததாகவே இந்த உபவிதியின்கீழ் அர்த்தப்படும்படியாக கருதப்பட வேண்டும்.

குறிப்புகள்.

இந்த விதிகளின் பிரயோக அர்த்தத்தைப் பற்றியும் நோக்கத்தையும் சமீபத்தில் சென்னை ஹைக்கோர்ட்டில் ஒரு கேவில் ஒரு தீர்மானம் ஏற்பட் டுள்ளது. அந்த கேவில் 54 (2) பிரிவின் நோக்கத்தைப் பற்றியும் ஆலோ சனைசெய்யப்பட்டது. அந்த கேவின் சாராம்சம் பின்வருமாறு:—

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு போர்டில் A. T. பன்னீர்செல்வம் என்ப வர் ப்ரெஸிடென்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த காலத்தில் அவர் ஒரு கவர்ன்மெண்டு ப்ளீடரும் பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவுமாக இருந்தார். பழைய லோகல்போர்டு சட்டத்தின் 54(2)-பிரிவின் பிரகாரம், ஒரு கவர்ன் மெண்டு ப்ளீடர் அல்லது பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரா அல்லவா என்பதைப் பற்றி பலவிதமான அபிப்பிராயங் கள் இருந்து வந்தன. ஆனால், புதிய சட்டத்தின் 54(2)-பிரிவின் பிரகா ரமும் அந்தப் பிரிவின் விலக்கு நிபந்தனையின் பிரகாரமும் ஒரு கவர்ன்மெ ண்டு ப்ளீடர் அல்லது பப்ளிக் பிராஸிக்யூடர் ஒரு கவர்ன்மெண்டு உத்தியோ கஸ்தரென கருதப்படமாட்டார் என்று உள்ளது. வீரைய்ய வாண்டையார் என்பவர், புதிய சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே அதாவது பழைய சட்டத்தின் கீழ் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டாக தேர்ந்தெடுக்கப் பட்ட பன்னீர்செல்வம் என்பவர் ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரென

கருதப்படுவாராகையால் அவருடைய எலெக்ஷன் செல்லாது என்று ஸபார்டினேட் ஜட்ஜ் முன்பாக ஒரு எலெக்ஷன் மனு செய்தார். அந்த மனுவில் மேலே சொல்லப்பட்ட ப்ரச்னேயானது விசாரணைக்கு வந்து அவ்விசாரணையில் பழைய லோகல்போர்டுகளின் சட்டத்தின் 54-வது பிரிவும், புதிய 54-வது பிரிவின் விலக்கு நிபந்தனையினால் மாறுதல் என்னவென்றும் புதிய சட்டத்தின் பிரயோகமும் அதாவது புதிய சட்டமானது அது அமுலுக்கு வருவதற்கு முன் நடந்திருக்கும் விஷயங்களுக்கும் பிரயோகிக்கப்படுமா என்றும் மேலே சொல்லப்பட்ட மாறுதல் காலத்திற்கு அனுசரிக்கப்பட வேண்டிய விதிகளின் பிரயோகம் என்னவென்றும் கேள்விகள் வந்ததில் பின்வரும் தீர்மானிக்கப்பட்டது.

(1) யாதொரு சட்டத்தில் ஸ்பஷ்டமாகவாவது அல்லது ஸ்பஷ்டமாக அர்த்தப்படும்படியாகவாவது விவரமாக, அது பிரசுரப்படுத்தப்பட்ட காலத்திற்கு வெகு காலம் முன்பாக முதற்கொண்டு அமுலுக்கு வருவதாக கவனிக்கப்பட வேண்டுமென்று இருந்தாலொழிய அல்லது அந்த சட்டத்திலேயே தெரிவிக்கப்பட்டாலொழிய, அது நடவடிக்கை முறையைப் பற்றின சட்டமாயிருந்தாலன்றி அது பின்னேக்கமுடைய (அதாவது பிரசுரிக்கப்பட்ட காலத்திற்கு முன் ஒரு கால முதற்கொண்டே அமுலுக்கு வருவதாக) தென்று கருதப்படக் கூடாது. புதிய லோகல்போர்டு சட்டமானது நடவடிக்கை முறையைப் பற்றின ஒரு சட்டமல்ல. உரிமைகளைப்பற்றின ஒரு சட்டமாகும்.

(2) சாதாரணமாக, உரிமைகளை இன்னதென்று விளக்கும் ஸ்தாபித சட்டங்களாவது அல்லது அம்மாதிரியான ஸ்தாபித அம்சமுள்ள சட்டங்களாவது ஒரு வேளை பின்னேக்கும் குண முடையனவாக இருக்கலாம். ஆனால், 1930-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டுகள் திருத்த சட்டமானது பழைய சட்டத்தை வெகுசாய் திருத்தியிருப்பதால் அது ஒரு ஸ்தாபித சட்டமென சொல்லப்பட முடியாது. புதிய திருத்த சட்டத்தினுல் 54-வது பிரிவானது இரண்டு விதமாக மிகவும் முக்கியமான மாறுதல்களை அடைந்திருக்கிறது. அதாவது (i) புதிய சட்டப்பிரகாரம், திருத்தச் சட்டத்தினுல் விளக்கப்பட்டிருக்கும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரானவர் எலெக்ஷனுக்கு நிற்க யோக்கியதை யற்றவர் என்பதல்லாமல் அவர் உத்தியோகம் வகித்திருக்கவும் யோக்கியதை யற்றவராவர். (ii) அப்பிரிவிலுள்ள விலக்கு நிபந்தனையினுல் கவர்ன்மெண்டினிடமிருந்து சம்பளம்பெறும் எல்லா உத்தியோகஸ்தர்களும் விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்றிராமல் தமது ஊழியகால முழுவதையும் கவர்ன்மெண்டு உத்தியோகத்தில் செலுத்தும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள்தான் லோகல்போர்டு எலெக்ஷன் களிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றனர்.

(3) ஷை 54-வது பிரிவின் இரண்டாவது விலக்குநிபந்தனையானது இனி கிளம்பும் சந்தேகங்களைப்பற்றினதே யொழிய ஒரு கோர்ட்டு முன்பாக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் இருக்கும் ஒரு கேசின் விஷயமாக அதன் நடவடிக்கை முறையை பாதிப்பதாக கவனிக்கப்படாது.

(4) திருத்தச்சட்டத்தில் கண்டிருக்கும் ஷெட்யூலில் உள்ளதான மாறுதல் காலத்திற்கு அனுசரிக்கப்பட வேண்டிய விதிகளில் 5-வது விதியின் 3-வது உப விதியானது, புதிய சட்டமானது அமுலுக்கு வரும் காலத்தில் விசாரணையிலுள்ள கேசுகளுக்கு அல்லது நடவடிக்கைகளுக்கு புதியசட்டத்தினுல் கிடைக்கக் கூடிய பரிஹாரங்கள் உதவும்படியாக செய்கிறதே யொழிய, அந்த நடவடிக்கைகள் தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் கிடைக்கக் கூடியதாக யிருந்த பரிஹாரங்கள் அடியோடே போய்விடுமென்று சொல்லவுமில்லை, அப்படி சொல்வதாக நாம் அர்த்தம் கொள்ளவும் கூடாது. ஆனால், அந்த விதியின் அன்வயத்தை கவனிக்குமிடத்து அந்த விதியானது ஒரு லோகல்போர்டினுல் தாக்கல் செய்யப்பட்ட கேசுகளைப் பற்றி கூறுவதாக ஏற்படுமே யொழிய இரண்டு கட்சிகளுக்குள் நடக்கும் வியாஜ்ஜியத்தைப் பற்றி கூறுவதாக ஏற்படாது.

(5) அதே விதிகளின் 6 (i) (c) விதியானது, புதிய சட்டமானது அமுலுக்கும் வரும் காலத்தில் உத்தியோகம் வகித்து வரும் ப்ரெஸிடெண்டும், வைஸ் ப்ரெஸிடெண்டும், லோகல் கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கும் தேதி வரையிலும் உத்தியோகம் வகிக்க வேண்டும் என்று சொல்வதன் அனுமானம் என்னவென்றால், அப்படிப்பட்ட ப்ரெஸிடெண்டு அல்லது வைஸ் ப்ரெஸிடெண்டு, எலெக்ஷனுக்கு நிற்கவொட்டாமலிருக்கும்படியான யோக்கியதைக் குறைவுகளில்லாமல் சரியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது. அவர்கள் யோக்கியதைக் குறைவுகளுடன் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால் அவர்களுடைய யோக்கியதைக் குறைவுகளை மன்னிக்கவாவது அல்லது அவைகளைப்பற்றி விசாரணை செய்வதை தடுக்கவாவது அதன் கருத்தல்ல. 57-வது பிரிவின் (3)-வது உபப் பிரிவில் உள்ள அம்சங்களினுலேயே அப்படிப்பட்ட ஒரு அபேக்ஷகர் "உத்தியோகம் வகிப்பதாக" கருதவும் படாது. (a).

7. இந்த சட்டம் தொடங்குவதற்குமுன் இந்த சட்டத்தினுல் திருத்தப்பட்ட பழைய சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் புதிய அதிகாரிகளால் செய்யக் கருதத்தோர் நடவடிக்கையானது யாதொரு அதிகாரிகளால் கையாளப்பட்டு வருமாகில், அப்படிப்பட்ட நடவடிக்

(a) 11 அகில இந்தியா லா ஜர்னல் கேசுகளின் குறிப்புகள் பக்கம் 148.

கையானது இந்த சட்டத்தினால் திருத்தப்பட்ட பழைய சட்டத்திற்கு முரண்பாடாக யிருந்தாலொழிய அல்லது அப்படிப்பட்ட புதிய அதிகாரிகளாலேயே அவர்களுடைய செய்கையால் நிராகரிக்கப்பட்டாலொழிய அவர்கள் அப்படி செய்யும் வரையிலும் அவர்களாலேயே எடுத்துக்கொள்ளப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

8. இந்த சட்டத்தினால் திருத்தப்பட்ட பழைய சட்டத்தின் 7-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, லோகல் கவர்ன்மெண்டானது, குறிக்கப்பட்டிருக்கும் விதமாக ஒரு அறிக்கையை விளம்பரப்படுத்தி அதனால் இந்த சட்டத்தினால் திருத்தப்பட்ட பழைய சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டிருக்கும்யாதொரு டிஸ்டிரிக்ட் போர்டு, தாலூக்கா போர்டு அல்லது பஞ்சாயத்து போர்டினுடைய சங்கையானது இவ்வளவென்று தங்களுக்கு எப்படி யுக்தமென்று தோன்றுகிறதோ அந்தப் பிரகாரம் 6-வது விதியின் (1)-வது உபவிதியின் (a) அல்லது (b) உபவாக்கியங்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் தேதி முதல் அமுலுக்கு வரும்படியாக நிர்ணயம் செய்ய வேண்டும்.

9. இந்த சட்டத்தினால் திருத்தப்பட்ட பழைய சட்டத்தின் 78-வது பிரிவின்கீழ் இந்த சட்டமானது எந்த பசலியில் அமுலுக்கு கொண்டு யாப்படுகிறதோ அந்த பசலிக்கு விதிக்கப்படும் லாண்ட் செஸ் (Land cess) என்னும் வரியானது லோகல் கவர்ன்மெண்டார் ஒரு பொது உத்தரவு மூலமாகவோ அல்லது தனியான ஒரு உத்தரவு மூலமாகவோ கட்டளையிடப்படும் பிரகாரம் டிஸ்டிரிக்ட் போர்டுகளுக்கும், தாலூக்கா போர்டுகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் இந்த சட்டத்தினால் திருத்தப்பட்ட பழைய சட்டத்தின் 114-A பிரிவின்கீழ் அமைக்கப்படும் கமிட்டிகளுக்கும், பங்கிடப்பட வேண்டும்.

10. இந்த சட்டமானது வழங்குவதற்கு தொடங்கும் தேதியில் 1920-ம் வருஷத்திய சென்னை கிராம பஞ்சாயத்து சட்டத்தின் 26-வது பிரிவின் (1)-வது உபப் பிரிவின் (a) அல்லது (b) வாக்கியத்தின்கீழ் ஒரு பஞ்சாயத்தினால் விதிக்கப்பட்டு வந்த யாதொரு வரியானது இந்த சட்டம் எந்த வருஷத்தில் அமுலுக்கு கொண்டு வரப்படுகிறதோ அந்த வருஷத்திற்கும், இன்னும் லோகல் கவர்ன்மெண்டார் ஒரு பொது உத்தரவு மூலமாகவோ அல்லது தனியான உத்தரவு மூல

மாகவோ அவசியமென்று தெரிவிக்கும் யாதொரு அதிகமானதோர் கால அள்விற்கும் விதித்து வாங்கப்பட வேண்டும். இன்னும் அந்த வரியானது இந்த சட்டத்தினால் நிருத்தப்பட்ட பழைய சட்டத்தின் IV-வது ஷெட்யூலில் காணப்பட்டிருக்கும் விதிகளில் வரிகளை கைப் பற்றும் விஷயமாக ஏற்படுத்தியிருக்கும் விதமாக வசூலிக்கப்படலாம்.

11. (1) (இந்த சட்டத்தினால் நிருத்தப்பட்ட பழைய சட்டத்தின் V-வது ஷெடியூலின் 3-வது விதியில் என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும் அதற்கு நிமித்தியமில்லாமல், லோகல் கவர்ன்மெண்டானது இந்த சட்டம் நடந்தேறப்பட்ட கூடிய சீக்கிரத்தில் ஷெடி 3-வது விதியில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் பாதைகளையும், சத்திரங்களையும், ஆஸ்பத்திரிகளையும், வைத்தியசாலைகளையும், லூப்பொரிகளையும், மார்க்கெட்டுகளையும், சந்தைகளையும்,உத்ஸவங்களையும் வகுப்பிடவேண்டும். அப்படிப்பட்ட வகுப்பிடுவதானது இந்த சட்டமானது வழங்கத் தொடங்கும் தேதி முதல் அழலுக்கு வரவேண்டும்.

(2) இந்த விதியின்கீழ் செய்யப்படும் யாதொரு வகுப்பு பிரிவினையும் இந்த சட்டமானது வழங்கத் தொடங்கின பிறகு மேல் சொல்லப்பட்ட 3-வது விதியின்கீழ் மாற்றப்படலாம்.

குறிப்புகள்.

சென்னை லோகல் கவர்ன்மெண்டார் இந்த விதியின்கீழ் 21-8-30-ல் G. O. No. 3961 L. & M. ல் பின் வருமாறு உத்திரவிட்டிருக்கின்றனர்.

5-வது ஷெட்யூலில் 3-வது விதியில் சொல்லப்பட்டிருக்கும் கமிட்டிகள் ஏற்பட்டு அவர்கள் புதிதாக ஏற்பாடு செய்யும் வரையிலும் பொதுவான பாதைகள், சத்திரங்கள், மார்க்கட்டுகள் இவைகளை வகுப்பிடும் விஷயமாக பின் சொல்லப்பட்ட விதிகள் அனுசரிக்கப்பட வேண்டும்.

பாதைகள் :— ஒரு டிஸ்டிரிக்ட்டுக்குள் டிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய பண்டிலிருந்து முழுவதுமாக பராமரிக்கப்பட்டு வரும் எல்லா பாதைகளும் டிஸ்டிக்ட்டு பாதைகளென்று வகுப்பிடப்பட வேண்டும். ஒரு டிஸ்டிரிக்ட்டிலுள்ள கிராமபாதைகள் உள்பட மற்ற எல்லா லோகல்பண்டு பொதுவான பாதைகளும் தாலூக்கா பாதைகள் என்று வகுப்பிட வேண்டும்.

சத்திரங்கள் :— ஒரு டிஸ்டிரிக்டிலுள்ள எல்லா லோகல்பண்டு சத்திரங்களும் டிஸ்டிரிக்ட்டு சத்திரங்களென்று வகுப்பிடப்பட வேண்டும்.

மார்க்கட்டுகள் :—

சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டின் 167-வது பிரிவில் விவரித்திருக்கிற பிரகாரம் ஒரு டிஸ்டிரிக்ட்டிலுள்ள எல்லா பொது மார்க்கட்டுகள் தாலூக்கா மார்க்கட்டுகள் என்று வகுப்பிடப்பட வேண்டும்

12. இந்த சட்டமானது வழங்கத் தொடங்கின பிறகு யாதொரு லோகல்போர்டானது முதல்முதலாக அமைக்கப்படுவதிலாவது அல்லது திருப்பி கூட்டப்படுவதிலாவது அல்லது இந்த சட்டத்தின் எற்பாடுகளை செலாவணியாக்குவதிலாவது அல்லது இந்த சட்டத்தினால் திருத்தப்பட்ட பழைய சட்டத்தின் அம்சங்களை செலாவணியாக்குவதிலாவது எது முன்பாக நடத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றியாவது யாதொரு சந்தேகம் கிளம்புமானால் லோகல் கவர்ன்மென்டானது சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி அந்த சந்தேகத்தை நிவர்த்திப்பதற்காக எம்மாதிரியான உத்தரவுகளைச் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறதோ அவைகளைச் செய்யலாம்.

லோகல் போர்ட்ஸ் ஆக்ட் முற்றிற்று.

THE MADRAS LOCAL BOARDS AMENDMENT ACT. 1920.

ACT NO. II OF 1922,

1920-ம் ஞெத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளாக்ட்டை திருத்துவதற்கான சட்டம்.

1922-ம் ஞெத்து II-வது ஆக்ட்.

லோகல் போர்டு மெம்பர்கள் பிரமாணம் செய்வதற்கான சட்டம்.

1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல்போர்டுகளாக்டை .... திருத்துவது யுக்தமாயிருக்கிற படியால், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால் :—

சென்னப்பட்டணத்து 1920-ம் ஞெத்து 14-வது ஆக்ட்டு.

1. இந்த ஆக்ட்டை சென்னப்பட்டணத்து லோகல்போர்டுகளைக் குறித்த 1921-ம் வருஷத்து (திறுத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

சுருக்கமான பெயர்.

2. ... ...

3. ....

4. (1) யாதொரு லோகல் போர்டின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டாவது, நியமிக்கப்பட்டாவது இருக்கிற, அல்லது யாதொரு லோகல் போர்டில் உத்தியோக முறைமையில் மெம்பராகிற ஒவ்வொரு நபரும் - தம்முடையஸ்தானத்தை வகிப்பதற்கு முன்னே, மஹாராஜா சக்ரவர்த்தி அவர்களிடத்தில் தாம் ராஜபக்தியுள்ளவராயிருப்பதாக அந்த போர்டின் மீட்டிங்கில் அடியில்கண்ட நமூனாப்படி பிரமாணம் செய்ய வேண்டும், அல்லது உறுதி மொழி கூறப்பட வேண்டும்; அதாவது :—

லோகல் போர்டுகளின் புதியமெம்பர்கள்செய்யவேண்டிய பிரமாணம்.

".....யாகிய நான் அந்த போர்டில் ஒரு மெம்பராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறபடியால், இந்தியா சக்ரவர்த்தி அவர்களாகிய மாட்சிமை தங்கிய மஹாராஜா அவர்களிடத்திலும், அவருடைய வாரிசுகளிடத்திலும் அவருக்குப்பின் பட்டத்துக்கு வருபவர்களிடத்திலும் விசுவாசம் உள்ளவனாயிருப்பேனென்றும் உண்மையான ராஜபக்தியுடன் நடந்து கொள்வேனென்றும், நான்செய்ய ஏற்றுக் கொள்ளப் போகும் கடமையை உண்மையாய் நிறைவேற்று வேனென்றும் பயபக்தியுடன் பிரமாணம் செய்கிறேன் (அல்லது உறுதி கூறுகிறேன்).

(2) யாதொரு நபர் ஒரு லோகல் போர்டில் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டாவது நியமிக்கப்பட்டாவதிருந்து, அல்லது ஒரு லோகல்போர்டில் உத்தியோக முறைமையிலே மெம்பராயிருந்து, தம்முடைய உத்தியோக கால அளவு ஆரம்பிக்கும் தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள்ளாக அல்லது அந்த தேதிக்குப் பிறகு நடக்கும் முதல் மூன்று மீட்டிங்குகளில் யாதொன்றிலாவது (1)-வது உபப் பிரிவில் கண்டபடி பிரமாணம் செய்யவோ அல்லது உறுதி மொழி கூறவோ தவறிப்போனால், அவர் தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதின்றும் நீங்கினவராவார்; அதன்மேல், அவருடையஸ்தானம் காலியாய் விட்டதாக எண்ணப்படும்.

5. 1920-ம் வருஷத்திய * * * சென்னை லோகல்போர்டுகளாக்டிலாவது அல்லது தற்காலத்தில் அமுலில் இருக்கும் வேறே யாதொரு சட்டத்திலாவது என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும் அதற்கு நிமித்தியமில்லாமல், ஒரு * * * லோகல்போர்டு மெம்பராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் யாதொரு நபராவது அல்லது ஒரு லோகல்போர்டில் உத்தியோக முறைமையில் மெம்பராயிருக்கும் யாதொரு நபராவது இந்த ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறபிரகாரம் பிரமாணம் செய்தாலொழிய அல்லது உறுதிமொழி செய்தாலொழிய அந்த * * * லோகல்போர்டு மீட்டிங்கில் ஸ்தானம் வகிக்கவாவது அல்லது ஒரு மெம்பர் ஹோதாவில் யாதொரு காரியத்தைச் செய்யவாவது கூடாது.

பிரமாணம்செய்வதற்குமுன் யாதொரு மெம்பரும் போர்டில் உட்காரக்கூடாதென்பது.

5-A. 5-வது பிரிவில் என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும் அதற்குநிமித்தியமில்லாமல் ஒரு..... லோகல் போர்டு ப்ரெஸிடென்டு அந்த லோகல் போர்டின் ஒரு மெம்பருடைய ஹோதாவில் * * * பிரமாணம் செய்திராவிட்டாலும் ப்ரெஸிடென்டாக உத்தியோகம் வகித்துவருவதற்கு உரிமையுள்ளவராவார்.

ப்ரெஸிடென்டுகளின் விஷயத்தில் சிலவிலக்குகள்.

ஆனால், அவர், காம், சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாப்போல் ஒரு ப்ரெஸிடென்டாக தேர்ந்தெடுக்கப்பட்டபிறகு அல்லது நியமிக்கப்பட்டபிறகு அல்லது ப்ரெஸிடென்டின் அலுவல்களை நடத்த உரிமை பெற்ற பிறகு இரண்டு மாதத்திற்குள் நடக்கும் அந்த போர்டின் முதல் மீட்டிங்கில் பிரமாணம் செய்து அல்லது உறுதிமொழி கொடுத்து ஸ்தானம் வகிக்க வேண்டும்.

விவரணம்:— இந்தப் பிரிவின் காரியங்களுக்காக,

(i) ... ...

(ii) "ப்ரெஸிடென்டு" என்னும் பதமானது,

(i) 1920-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்டுகளின் சட்டத்தின் 18-வது பிரிவின் (1)-வது உபப் பிரிவின்கீழ் ஒரு டிஸ்டி

ரிக்ட்டு போர்டு அல்லது காலூக்கா போர்டினுடைய ப்ரெஸிடென்டின் அதிகாரங்களை நடத்திவரும் வைஸ் ப்ரெஸிடென்டையும்,

(b) அதே பிரிவின் (2)-வது உபப்பிரிவின்கீழ் டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டினுடைய அதிகாரங்களை நடத்தி வரும் ஹெட் க்வார்ட்டர்ஸ் தாலூக்கா போர்டு (டிஸ்டிரிக்ட்டு போர்டு) ப்ரெஸிடென்டையும்,

(c) அதே பிரிவின் (3)-வது (4)-வது உபப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு தாலூக்கா போர்டு அல்லது யூனியன் போர்டினுடைய தாத்காலிக ப்ரெஸிடென்டையும்.

அனைக்கும்.

இந்தியன் ஓத்ஸ் ஆக்ட் (பிரமாணங்களைப் பற்றின சட்டம்) தவிர்ப்பு.

6. இந்தியன் ஓத்ஸ் ஆக்ட்டில் (பிரமாணங்களைப் பற்றின சட்டம்) என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும் இந்த சட்டத்தின் நிபந்தனைகள்தான் பிரயோகப் படுத்தப்பட வேண்டும்.

பிரமாணம் செய்வதற்கான ஆக்ட்

மூற்றிற்று.

THE MADRAS LOCAL AUTHORITIES ENTERTAINMENTS TAX ACT.

ACT V OF 1927.

பிரதேச அதிகார சபைகள் வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த சென்னப்பட்டணத்து ஆக்ட்.

An Act to enable Local Authorities to impose a Tax on Amusements and other Entertainments.

விநோதங்களுக்கும் இதர வேடிக்கைகளுக்கும் பிரதேச அதிகார சபைகள் வரி விதிப்பது சாத்தியமாயிருக்கும்படிச் செய்வதற்கான ஆக்ட்.

விநோதங்களுக்கும் இதர வேடிக்கைகளுக்கும் வரி விதிக்க பிரதேச அதிகார சபைகளுக்கு அதிகாரம் கொடுப்பது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்குக் கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

பீடிகை.

1. (1) இந்த ஆக்டை, பிரதேச அதிகார சபைகள் வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1926-ம் வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்ட் என்று சொல்லலாம்.

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

(2) இது சென்னை ராஜதானி பட்டணத்துக்கும், 1920-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து டிஸ்டிரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டின்படியாவது அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்திட்டத்தின்படியாவது மியுனிஸிபாலிடிகளென்று பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிறவையாகவோ அல்லது இனிமேல் பிரசித்தம் செய்யப்படக் கூடியவையாகவோ சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள சகல பட்டணங்களுக்கும் வியாபிக்கிறது; மேலும், யாதொரு டிஸ்டிரிக்ட் போர்டார் கேட்டுக்கொள்வதன்மேல், பிரதேச கவர்ன்மென்டார்—அப்போதைக்கப்போது போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாக நிரந்தரமாகவாகிலும் யாதொரு காலத்துக்காகிலும் குறிப்பிட்ட சில சமயங்களுக்காகிலும் மேடி விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய தேதியிலிருந்து சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள வேறே யாதொரு காலத்துக்காகிலும் குறிப்பிட்ட சில சமயங்களுக்காகிலும் மேடி விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய தேதியிலிருந்து சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலுள்ள வேறே யாதொரு பிரதேச விஸ்தரணத்துக்கு அதை வியாபிக்கும்படிச் செய்யலாம்; அல்லாமலும், அவர்கள்-அப்படிப்பட்ட யாதொரு விளம்பரத்தை ரத்துசெய்யலாம் அல்லது திருத்தலாம்:

சென்னபட்டணம் 1920-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

ஆனால், அப்படிப்பட்ட விளம்பரம் எதையும், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதா

கப் பெறுமல், யாதொரு கன்டோன்மென்டில் அடங்கியுள்ள எந்த விஸ்தீரணம் சம்பந்தமாகவும் வெளியிடக்கூடாது.

அர்த்தம்.

2. இந்த ஆக்டில் சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதம் ஒன்றும் இல்லாவிட்டால்,—

(1) 'பிரவேசிக்க விடுவது' என்பதில், பார்ப்பவராகவோ கேட்பவர்களில் ஒருவராகவோ பிரவேசிக்க விடுவது என்பதும், யாதொரு வேடிக்கையில் கலந்துகொண்டு உல்லாசமாயிருக்கும் பொருட்டுப் பிரவேசிக்க விடுவது என்பதும் அடங்கும்;

(2) 'யாதொரு வேடிக்கையில் பிரவேசிக்க விடுவது' என்பதில், வேடிக்கை நடத்தப்படும் யாதொரு இடத்தில் பிரவேசிக்க விடுவது என்பதும் அடங்கும்;

(3) 'விவசாயம்' என்பதில், தோட்ட வேலை என்பதும், ஒவ்வொரு வகையையும் சேர்ந்த பிராணிகளை உற்பத்திசெய்து வளர்ப்பது என்பதும் அடங்கும்;

(4) 'வேடிக்கை' என்பதில், பணம் கொடுத்தால் ஜனங்களைப் பிரவேசிக்கவிடும் யாதொரு பொருட்காட்சி, நாடக முதலியவை விநோதம், ஆட்டம் அல்லது விளையாட்டு என்பதும் அடங்கும்;

(5) 'கெஜட்' என்பது-சென்னை நகர விசாரணைச் சங்கத்துக்குச் சம்பந்தப்பட்ட மட்டில் போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் என்றும், இதர பிரதேச அதிகார சபைகளுக்குச் சம்பந்தப்பட்டமட்டில் ஜில்லா கெஜெட் என்றும் அர்த்தமாகும்;

(6) 'ப்ரதேசச் அதிகார சபை' என்பது-சென்னை நகர் விசாரணைச் சங்கம் என்றுவது, அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் யாதொரு சட்ட திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸில் அல்லது லோகல் போர்டு என்றுவது அர்த்தமாகும்;

(7) 'பிரவேசிக்க விடுவதற்காகக் கொடுக்கும் தொகை' என்பதில், வேடிக்கை நடக்கும் இடத்தின் ஒரு பாகத்தில் யாதொரு நபரை பிரவேசிக்க விட்டிருந்து, பிற்பட்டு அவரை அந்த இடத்தில் வேறே எந்த பாகத்தில் பிரவேசிக்க விட்டால் வரியாவது உயர்

ந்த வரி விதமாவது செலுத்தவேண்டியிருக்குமோ அந்த பாகத்தில் பிரவேசிக்க விட்டால், அவர் கொடுக்கும் யாதொரு தொகை என்பதும் அடங்கும்; மேலும், வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தில் ஆசனங்களுக்காகவாவது வேறே வசதி இடத்திற்காகவாவது கொடுக்கும் யாதொரு தொகை யென்பதும் அதில் அடங்கும்;

(8) யாதொரு வேடிக்கைக்குச் சம்பந்தப்பட்ட மட்டில் 'சொந்தக்காரர்' என்பதில், அதன் நிவாகத்திற்கு உத்தரவாதியாயிருக்கும் யாதொரு நபர் என்பதும் அடங்கும்;

(9) 'சபை' என்பதில், யாதொரு கம்பெனி ஸ்தாபனம், க்ளப் அல்லது எந்தப் பெயர் வழங்கி வந்தாலுஞ் சரி ஜனங்களின் வேறு வகையான யாதொரு கூட்டம் என்பதும் அடங்கும்.

வரி விதிப்பதைப் பற்றியும் வரி விதத்தைம் பற்றியும் பொது நிபந்தனைகள்.

3. (1) எந்த ப்ரதேச அதிகார சபையாரின் ப்ரதேச விஸ்தீரணத்தில் இந்த ஆக்ட்டு செலாவணியாகிக் கொண்டிருக்கிறதோ அந்த ப்ரதேச அதிகார சபையார் - யாதொரு வேடிக்கைக்குப் பிரவேசிக்க விடுவதற்காகக் கொடுக்கும் சகலதொகைகளின் மேலும் நூற்றுக்குப் பத்துக்குக் குறையாமலும் நூற்றுக்கு இருபத்தைந்துக்கு மேற்படாமலுமுள்ள ஒரு விதத்தின்படி (இதில் பின்னல் வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி என்று குறிப்பிடப்படும்) வரி விதிக்கலாம்.

(2) பிரவேசிக்க விடுவதற்காகக் கொடுக்கும் தொகை நாலணாவுக்கு மேற்படாதிருக்கும் பட்சத்தில், வேடிக்கைகளுக்கு வரி விதித்து வசூலிக்கக் கூடாது.

(3) ப்ரதேச கவர்ன்மெண்டார் இந்த உட் பிரிவைப் பிரயோகிக்கக் கூடிய யாதொரு நாடக சாலை, சினிமாடொக்ராப், பொருட்காட்சி அல்லது ஸர்க்கஸிலாவது வேறே யாதொரு வகையைச் சேர்ந்த வேடிக்கைகளிலாவது பிரவேசிக்க விடுவதற்காகக் கொடுக்கும் தொகைகளின் விஷயத்தில் வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி விதமானது அடியிற் கண்டவிதத்திர்ணயத்துக்கு மேற்படக்கூடாது:

வரித் தொகை நீங்கலாகக் கொடுக்கும் தொகையானது—

(i) இரண்டணாவுக்கு மேற்பட்டு ஆறணாவுக்குக் குறைவாயிருந்தால் ... அரை அணா.

(ii) ஆறணுவாகவாவது அதற்கு மேற்பட்டு பன்னிரண்டு அணுவுக்குக் குறைவாகவாவதிருந்தால் ... ஒரு அணு.

(iii) பன்னிரண்டு அணுவாகவாவது அதற்கு மேற்பட்டு ஒரு ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாக வாவதிருந்தால் ... இரண்டணு.

(iv) ஒரு ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு இரண்டு ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாக வாவதிருந்தால் ... நாலணு.

(v) இரண்டு ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு மூன்று ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாகவாவதிருந்தால் எட்டணு

(vi) மூன்று ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு நாலு ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாக வாவதிருந்தால் ... பன்னிரண்டு அணு.

(vii) நாலு ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு ஆறு ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாக வாவதிருந்தால் ... ஒரு ரூபாய்.

(viii) ஆறு ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு ஒன்பது ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாகவாவதிருந்தால் ... ஒரு ரூபாய் எட்டணு.

(ix) ஒன்பது ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு பத்து ரூபாய்க்குக் குறைவாக வாவதிருந்தால் ... இரண்டு ரூ.

(x) பத்து ரூபாயாகவாவது மேற்பட்டாவதிருந்தால்—முதல் பத்து ரூபாய்க்காகவும் பத்து ரூபாய்க்குமேற்பட்டு ஒவ்வொருபத்து ரூபாய் அல்லது அதன் பாகத்துக்காவும். இரண்டு ரூ.

(4) யாதொரு வேடிக்கையின் சொந்தக்காரர் விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல், ப்ரதேச அதிகார சபையார் - இது விஷயமாய் ஏற்படுத்தப்படக்கூடிய பொது விதிகளுக்கு உட்பட்டு, ஷை. வேடிக்கை சம்பந்தமாக செலுத்தப்படக் கூடிய வரி விஷயத்தில் மொத்தமாய்ச் சேர்த்து ஒரு தொகை செலுத்தும்படி ராஜி ஏற்பாடு செய்துக் கொள்ளலாம்.

(5) வேடிக்கை நடக்கும் இடமானது ஒரு ப்ரதேச அதிகார சபையாரின் ப்ரதேச விஸ்தீரணத்தில் இருந்தும், இந்த ஆக்ட் செலாவணியாய்க் கொண்டிருக்கும் வேறொரு ப்ரதேச அதிகார சபையாரின் ப்ரதேச விஸ்தீரணத்திற்கு ஐந்து மைலுக்குள் இருந்தால் ப்ரதேச கவர்ன்மென்டார்-பின்னே சொல்லப்பட்ட சபையார் விண்ணப்பம் செய்து கொள்வதன் மேலும், மேற்படி வருமானத்தில் முக்கியமான பாகம் அந்த சபையாருடைய ப்ரதேச விஸ்தீரணத்திலிருந்து கிடைக்கிறதென்று தெரிந்து திருப்தியடைவதன் மேலும், வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரியை ஷை. அதிகார சபைகளில் எந்த சபையாராவது வசூலிக்க வேண்டுமென்றும், அந்தப்படி வசூல் செய்வதனால் கிடைக்கும் தொகையைப் பொதுவான அல்லது விசேஷமான உத்தரவு மூலமாகவாவது இது விஷயமாய்ச் செய்யப்பட்ட விதிகளைக் கொண்டாவது பிரதேச கவர்ன்மென்டார் நிச்சயிக்கக்கூடிய வீதாசாரப்படி அவர்களுக்குள் பங்கீடு செய்துகொள்ள வேண்டுமென்றும் கட்டளையிடலாம் :

ஆனால், வேடிக்கை நடக்கும் இடம் இருக்கிற பிரதேச விஸ்தீரணத்தில் பிரஸ்தாப ஆக்ட் செலாவணியாய்க் கொண்டிராவிட்டால், மேற்படி வரியை வசூலிக்கும்படி அந்த விஸ்தீரணத்துக்குச் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைக்குக் கட்டளையிடக்கூடாது.

வரி செலுத்துவதற்குட்பட்டு நபர்களை வேடிக்கைகளில் பிரவேசிக்க விடுவது.

4. (1) யாதொரு வேடிக்கையின் விஷயத்தில் (பிரவேசிப்பதற்காக) கொடுக்கும் தொகையானது வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி செலுத்துவதற்கு உட்பட்டதாயிருந்தால், எந்த நபரையும்—

(a) பிரதேச கவர்ன்மென்டாரால் வெளியிடப்பட்டு (இதற்கு முன் உபயோகிக்கப்படாமல்) உபுக்கலாகக் காட்டும்படி அழுத்தப்

பட்ட முத்திரை அல்லது பசை முத்திரை உடையதாயும் அந்த டிக்கெட்டுக்குள்ள சரியான கட்டணத்தைக் காட்டுவதாயுமுள்ள ஒரு டிக்கெட்டேனன்றி மற்றப்படியும்,

(b) விசேஷ விஷயங்களில் பிரதேச அதிகார சபையாரின் அங்கீகாரத்தைப் பெற்று, பிரவேசிக்கவிடப்படும் கபர்களின் சங்கியையைத் தானுகவே ரெஜிஸ்டர் செய்யும் ஒரு பாரியர் என்னும் கடை மூலமாகவன்றி மற்றப்படியும் அல்லது அப்படிப்பட்ட ஒரு யந்திர ஏற்பாட்டைக் கொண்டன்றி மற்றப்படியும்,

தொகை பெற்றுக்கொண்டு அந்த வேடிக்கையில் பிரவேசிக்கவிடக் கூடாது: ஆனால், மேற்படி வேடிக்கையில் பிரவேசிக்க விடுவதற்காகக் கொடுக்கப்படும் தொகைகளைக் குறித்த ரிடர்ன் என்னும் விவரக் கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்காக பிரதேச அதிகார சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளை அந்த வேடிக்கையின் சொந்தக்காரர் செய்திருந்து, வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி செலுத்துவதற்காகப் பிரதேச அதிகார சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட ஜாமீன் கொடுத்திருந்தால், மேலே கண்ட நிபந்தனைகள் அனுசரிக்கப்பட வேண்டியதில்லை.

(2) வேறே யாதொரு விஷயத்தில் வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி செலுத்தப்படுவதற்காக யாதொரு வேடிக்கையின் சொந்தக்காரரை ஜாமீன் கொடுக்கும்படி கேட்பதனின்றும் பிரதேச அதிகார சபையார் (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருப்பதைதனும் தடுக்கப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

வரி செலுத்தும் விதம்.

5. (1) தொகை கொடுப்பதன்மேல் பிரவேசிக்கவிடப்படும் ஒவ்வொரு நபரின் விஷயத்திலும் வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி வாங்கப்படும்: மேலும், முத்திரை போட்ட டிக்கெட் மூலமாய்ப் பிரவேசிக்க விடப்படும் விஷயத்தில் மேற்படி வரி டிக்கெட்டின்மேலுள்ள முத்திரை மூலமாகச் செலுத்தப்படும்; அல்லாமலும், முத்திரை போட்ட டிக்கெட்டின் மூலமாகவன்றி மற்றப்படி பிரவேசிக்கவிடப்படும் விஷயத்தில், அது-பிரவேசிக்கவிடப்படுபவர்களின் சங்கியைபைக் கணக்கட்டுச் செலுத்தப்பட வேண்டும்.

(2) யாதொரு வேடிக்கையில் பிரவேசிக்க விடுவதற்காகக் கொடுக்கப்படும் தொகையானது எந்த சபைக்காகிலும் சந்தா தொகை

யாகவோ சகாயத் தொகையாகவோ, ஒரு லீஜன் (பருவ முழுவ துக்குமான) டிக்கெட்டுக்காகவோ, தொடர்ச்சியாய் நடக்கும் வேடிக் கைகளிலாவது ஏதேனும் ஒரு காலத்தில் நடக்கும் எந்த வேடிக்கையி லாவது பிரவேசிக்க விடப்படும் உரிமைக்காகவோ ஒரு மொத்தத் தொகைபாகக் கொடுக்கப்பட்டால், வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி யை அந்த மொத்தத் தொகையின் அளவை அனுசரித்துச் செலுத்த வேண்டும்; ஆனால், யாதொரு மொத்த தொகையாவது டிக்கெட்டுக் காகக் கொடுக்கப்படும் யாதொரு தொகையாவது யாதொரு வேடிக் கையில் பிரவேசிக்க விடுவதற்கு மாத்திரமேயல்லாமல் இதர சுதந்த ரங்கள், உரிமைகள் அல்லது காரியங்களுக்காகவும் கொடுக்கப்படும் தொகையாகுமென்றாகிலும், பிரஸ்தாப வரி வாங்கப்பட்டிராத யா தொரு கால அளவில் வேடிக்கையில் பிரவேசிக்க விடுவதற்காகவும் கொடுக்கப்பட்டதென்றாகிலும் பிரதேச அதிகார சபையார் அபிப்பிரா யப்பட்டால், எந்த வேடிக்கைகளின் விஷயத்தில் வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி செலுத்தப்படத்தக்கதாகுமோ அந்த வேடிக்கைகளில் பிரவேசிக்கவிடப்படும் உரிமைக்காகச் செலுத்தப்பட்டதென்று பிர தேச அதிகார சபையாருக்குத் தோற்றும் தொகையின்மேல் மேற்படி வரி வாங்கப்படும்.

வரி செலுத்தாவிட் டால் தண்டனை.

6. வேடிக்கை நடக்கும் எந்த இடத்திலாகிலும் யாதொரு நப ரைத் தொகை கொடுப்பதன்மேல் பிரவேசிக்க விட்டிருந்து 4-வது பிரிவிற்கண்ட நிபந்தனை கள் அனுசரிக்கப்பட்டிராவிட்டால், அந்த நபர் எந்த வேடிக்கையில் பிரவேசிக்கவிடப்படுகிறாரோ அந்த வேடிக்கை யின் சொந்தக்காரர்-யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்தின் விஷயமாகவும் இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக் கப்படுவதற்கு உள்ளாவதுமல்லாமல், செலுத்தப்பட்டிருக்க வேண் டிய யாதொரு வரியைச் செலுத்துவதற்குங்கூட உள்ளாவார்.

வரி செலுத்துவத னின்றும் நிவாரணை செய்யப்பட்ட வேடிக் கைகள்.

7. (1) (a) யாதொரு வேடிக்கையா யானது முழுவதும் வித்தியா விஷயத்தைப் பற் றியதாயிருந்தாலும்,

(b) அது லாபத்துக்காக நடத்தப்படாத அல்லது ஸ்தாபிக் கப்படாத யாதொரு சபையாரால் சிறிது மட்டில் வித்தியா சம்பந்த

மான் அல்லது சாஸ்திரீய சம்பந்தமான காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டதாயிருந்தாலும்,

(c) அது பொதுஜன தேகாரோக்கியத்தையாவது விவசாயத்தின் நன்மையாவது சாமான்கள் செய்யும் யாதொரு கைத்தொழிலின் நன்மையையாவது விருத்தி செய்யும் காரியத்துக்காக வென்றே ஸ்தாபிக்கப்பட்டதாயும் லாபத்திற்காக நடத்தப்படாததாயுமுள்ள யாதொரு சபையாரால் ஏற்படுத்தப்பட்டிருந்து, அந்த வேடிக்கையானது பொதுஜன தேகாரோக்கியத்தைக் குறித்த அல்லது விவசாயத்தைக் குறித்த பிரச்னைகள் சம்பந்தமாக முக்கியமாய்க் கவனிக்கப்படக்கூடியவைகளாயிருக்கிற வஸ்துக்களையாகிலும், எந்தக் கைத்தொழிலின் நன்மையை விருத்தி செய்வதற்காக மெ. சபை ஏற்பட்டிருக்கிறதோ அந்தக் கைத்தொழிலின் உற்பத்திப் பொருள்களையாகிலும், அந்தப் பொருள்களை உற்பத்தி செய்கையில் உபயோகிக்கப்படும் சாமான்கள், யந்திரங்கள், உபகரணங்கள் அல்லது உணவு பொருள்களையாகிலும் காட்டி வைக்கும் பொருட்காட்சியாக மாத்திரமாயிருந்தாலும்,

(d) அநிலிருந்து கிடைக்கும் நிகரத்தொகை முழுவதும் லோகோபகாரமான காரியங்களுக்காகவாவது மத சம்பந்தமான காரியங்களுக்காகவாவது தரும சம்பந்தமான காரியங்களுக்காகவாவது உபயோகிக்கப் பட்டாலும்,

அந்த வேடிக்கையில் பிரவேசிக்க விடுவதற்காகக் கொடுக்கப்படும் தொகைகளின்மேல் வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி வாங்கப்படமாட்டாது.

(2) யாதொரு வேடிக்கையானது (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட பகுதிகளில் எதிலாகிலும் சொல்லியிருக்கும் தன்மையுடையதா என்பதைக் குறித்து ஏற்படும் யாதொரு விவாதத்தைப் ப்ரதேச கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்துக்கு அனுப்ப வேண்டும்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

(3) ப்ரதேச கவர்ன்மெண்டார் - பொதுவான உத்தரவு மூலமாய் யாதொரு வகையைச் சேர்ந்த வேடிக்கையை வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரிசெலுத்தும் பொறுப்பினின்றும் விலக்கு செய்யலாம்; மேலும், அவர்கள் - சம்பந்தப்பட்ட ப்ரதேச அதிகார சபையாருடன் கலந்து ஆலோசித்து, குறித்த யாதொரு வேடிக்கையை மெ. வரி செலுத்தும் பொறுப்பினின்றும் விசேஷ உத்தரவு மூலமாய்

நிவாரணை செய்யலாம். ப்ரதேச கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப் படுவதற்கு உட்பட்டு ப்ரதேச அதிகார சபையார் வேறே எந்த விஷயத்திலாகிலும் நிவாரணை செய்துகொடுக்கவும் அதிகார முடையவர்களாவார்கள்.

ஆக்டின்படி வரியையும் அபராதங்களையும் வசூலிக்கும் விதம்.

8. (1) வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரியினிமித்தம் சேரவேண்டியிருக்கும் யாதொரு தொகையானது பிரதேச அதிகார சபையாருக்குச் செலுத்தப்படத்தக்க தொழில் வரி எம்மாதிரி வசூலிக்கப்படலாமோ அம்மாதிரியே அந்த அதிகார சபையாரால் வசூலிக்கப்படலாம்.

(2) இந்த ஆக்டின்படியாகிலும் அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது சகாயச் சட்டங்களின்படியாகிலும் விதிக்கப்படும் யாதொரு அபராதமானது - அபராதங்களை வசூலிப்பதற்காக க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தில் நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாய் வசூலிக்கப்படும்; மேலும் அது - வசூலிக்கப்படுவதன்மேல், சம்பந்தப்பட்ட ப்ரதேச அதிகார சபையாரின் பொதுக் காரியங்களுக்கு உபயோகிக்கப்படுவதற்காக அந்த அதிகார சபையாரிடம் கொடுத்து விடப்படும்.

பிரதேச அதிகார சபையார் பார்வையிடுவது

9. (1) சம்பந்தப்பட்ட ப்ரதேச அதிகார சபையாரால் இது விஷயமாய் அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தர் - இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளாவது அதன்படி செய்யப்பட்ட எந்த விதிகளாவது அனுசரிக்கப்பட்டு வருகின்றனவா என்று பார்க்கும் பொருட்டு, வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தில் வேடிக்கை நடந்துகொண்டிருக்கும்போதும், வேடிக்கை நடத்தும் இடமாக சாதாரணமாய் உபயோகிக்கப்படும் யாதொரு இடத்தில் நியாயமான யாதொரு காலத்திலும் பிரவேசிக்கலாம்.

(2) எந்த நபராவது அந்தப்படி அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தரைப் பிரவேசிக்க விடாமல் தடுத்தாலும் பிரவேசிப்பதற்கு தடை ஏற்படுத்தினாலும், அவர் - அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் யாதொரு சட்ட

த்தின்படி தாம் உள்ளாக்கக் கூடிய வேறே யாதொரு சட்டத்தின்படி தாம் உள்ளாக்கக் கூடிய வேறே யாதொரு தண்டனையோடுகூட, மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன் மேல் இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படுவதற்கும் உள்ளாவார்.

(3) இந்தப் பிரிவின்படி அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கும் ஒவ்வொரு உத்தியோகதரும் - இந்தியன் பீனல் கோட் 21-வது பிரிவின் தாத்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தராகக் கருதப்படுவார். 1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

10. ப்ரதேச கவர்ன்மெண்டார் - விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாக, இந்த ஆக்டின்படி தங்களிடத்தில் சங்கிரமித்திருக்கும் அதிகாரங்களில் யாதொன்றையாவது பலவற்றையாவது செலுத்த எந்த நபராகிலும் அதிகாரம் கொடுக்கலாம்; மேலும், அவர்கள் – அப்படிப்பட்ட அதிகாரத்தை அதே மாதிரியாக ரத்து செய்து விடலாம்.

பிரதேச கவர்ன்மெண்டார் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பது.

11. (1) ப்ரதேச கவர்ன்மெண்டார் - இந்த ஆக்டில் கண்ட சகல காரியங்களையுமாவது அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காக அதனுடன் பொருத்த மற்றவைகளாயிராத விதிகள் செய்யலாம்.

விதிகள் செய்ய பிரதேசகவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரங்கள்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்குப் பாதகமில்லாமலும், அவர்கள்—

(a) முத்திரைகளையாவது முத்திரை போட்ட அல்லது உபுக்கலாய்க் காட்டும்படி முத்திரை அழுத்தப்பட்ட டிக்கெட்டுகளையாவது சரிப்பார்த்து செய்வதற்காகவும் உபயோகிப்பதற்காகவும், அல்லது முத்திரை போடவோ உபுக்கலாய்க் காட்டும்படி முத்திரை அழுத்தவோ, அனுப்பப்பட்ட டிக்கெட்டுகளுக்கு முத்திரை போடுவதற்காகவும் அல்லது உபுக்கலாய்க் காட்டும்படி முத்திரை அழுத்துவதற்காகவும், முத்திரைகள் உபயோகிக்கப்படும்போது அவைகளை விகாரப்படுத்தும்படி பார்த்துக் கொள்வதற்காகவும்,

(b) பல நபர்களைப் பிரவேசிக்க விடுவதற்கான டிக்கெட்டுகளை உபயோகிப்பதற்காகவும் அவைகளின்மேல் வரியைக் கணக்கிடுவதற்காகவும், வேடிக்கை நடக்கும் இடத்தின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு மாற்றப்படுவதன் மேலும், ஆசனங்களுக்காகவாவது வேறே வசதி இடத்துக்காகவாவது தொகை கொடுக்கப்படுவதன்மேலும் வரி செலுத்தப்படுவதற்காகவும்,

(c) (வெவ்வேறான தொகைகள் கொடுக்கும்போது ஒரே பாரியர் என்னும் தடை அல்லது யந்திர ஏற்பாட்டை உபயோகிக்காமலும் தடுப்பது உட்பட) பாரியர்களை அல்லது யந்திர ஏற்பாடுகளை உபயோகிப்பது விஷயமாய் மேல்விசாரணை செய்வதற்காகவும், பாரியர்கள் அல்லது யந்திர ஏற்பாடுகள் மூலமாய்ப் பிரவேசிக்க விடுவதைக் குறித்துச் சரியான சேகார்டுகள் கிடைக்கும்படி பார்த்துக்கொள்வதற்காகவும்,

(d) பிரவேசிக்க விடப்படுபவர்கள் விஷயமாய்த் தணிக்கை செய்வது, கணக்குகள் வைத்துவருவது, 3-வது பிரிவைச் சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகிக்கப்படுகிற வேடிக்கைகளின் சொந்தக்காரர்களாவது எந்த வேடிக்கைகளின் விஷயத்தில் ரிடர்ன்கள் சவதரிப்பதற்காக பிரதேச அதிகார சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் 4-வது பிரிவின்படி செய்யப்படுகின்றனவோ அந்த வேடிக்கைகளின் சொந்தக்காரர்களாவது ரிடர்ன்கள் சவதரிப்பது ஆகிய இவைகளுக்காகவும்,

(e) சேதமான அல்லது கெட்டுப்போன முத்திரைகளைப் புதுப்பிப்பதற்காகவும்,

(f) இந்த ஆக்டின்படி உபயோகிக்கப்படும் சகல முத்திரைகளைக்குறித்தும் கணக்கிகள் வைத்துவருவதற்காகவும்,

(g) வேடிக்கைகளுக்கு விதிக்கும் வரி செலுத்துவதனின்றும் நிவாரணையாவதற்காக விண்ணப்பங்கள் கொடுத்துக் கொள்ளப்படுவதற்காகவும் அவைகளைப் பைசல் செய்வதற்காகவும்,

(h) பிரதேச அதிகார சபைகளுக்குள் வரித்தொகையைப் பங்கீடு செய்வதற்காகவும்

விதிகள் செய்யலாம்.

(3) யாதொரு விதியைச் செய்கையில், பிரதேச கவர்ன்மென்டார் - அதை மீறி நடந்தால் நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படுமென்று நிபந்தனை ஏற்படுத்தலாம்.

சகாயச் சட்டங்கள் செய்ய பிரதேச அதிகார சபைக்கு அதிகாரம்.

12. (1) யாதொரு பிரதேச அதிகார சபையார் இந்த ஆக்டுக்காவது அதன்படி செய்யப்பட்ட எந்த விதிகளுக்காவது பொருத்தமற்றவையாயிராமல்,—

(a) யாதொரு வேடிக்கை நடத்துவதற்கான காலம், இடம் ஆகிய இவைகளின் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும் அதை மேற்பார்வையிடுவதற்காகவும்,

(b) இந்த ஆக்டின்படி வரி வசூலிப்பதற்கான காலம், விதம் ஆகிய இவைகளின் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

பொதுவாய் இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்காகவும் சகாயச்சட்டங்கள் செய்யலாம்.

(2) யாதொரு சகாயச்சட்டம் செய்கையில் பிரதேச அதிகார சபையார் - அதை மீறி நடப்பவர்களுக்கு ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படுமென்றும், அந்தப்படி மீறி நடந்துகொண்டேயிருக்கும் விஷயத்தில், முதல் தடவை மீறி நடந்ததற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு மீறி நடந்துகொண்டேவரும் ஒவ்வொரு தினத்துக்காகவும் பதினைந்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படுமென்றும் நிபந்தனை ஏற்படுத்தலாம்.

(3) அப்படிப்பட்ட சகல சகாயச்சட்டங்களும் - பிரதேச கவர்ன்மென்டாரால் அங்கீகரித்து ஊர்ஜிதம் செய்யப்பட்டும் கெஜெட்டில் பிரசுரிக்கப்பட்டுமான பிறகு செலாவணியாகத் தொடங்கும்.

வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த ஆக்ட்.

முற்றிற்று.

நமகச் சீட்டு.

1. வார்டின் பெயர் அல்லது நெம்பர்.
2. அபேக்ஷகரின் முழுபெயர்.
3. எலெக்டொரல் ரோலில் அபேக்ஷகரின் நெ.
4. தகப்பன், காரணவன், அல்லது கணவன் பெயர்.
5. வயது.
6. ஆண் அல்லது பெண்.
7. ஜாதி.
8. தொழிலும் விலாசமும்.
9. பிரேரேபிப்பவரின் முழுபெயர்
10. எலெக்டொரல்ரோலில்பிரேரேபிப்பவரின்நெ.
11. பிரேரேபிப்பவரின் கையெழுத்து.
12. ஆமோதிப்பவரின் முழுபெயர்.
13. எலெக்டொரல்ரோலில்ஆமோதிப்பவரின் நெ.
14. ஆமோதிப்பவரின் கையெழுத்து.

அபேக்ஷகரின் உறுதிமொழி.

நான் ஒரு பிரிட்டிஷ் பிரஜை இந்தியாவில் ஒரு சமஸ்தான பிரஜையென்றும் தேர்தலுக்கு நிற்க சம்மதப்பட்டிருக்கிறேன் என்றும் உறுதியாய்க் கூறுகிறேன்.

அபேக்ஷகரின் கையெழுத்து.

எலெக்ஷன் ஆபீஸரின் எண்டார்சுமெண்டு:

வரிசை நெ.....இந்த நமகச்சீட்டு என்னிடம்.....
.....ரால்.....தேதி.....மணிக்கு கொடுக்கப்பட்டது.

எலெக்ஷன் ஆபீஸர் அல்லது அவரால் அதிகாரப் படுத்தப்பட்ட நபரின் கையெழுத்து.

குறிப்புகள்.

வது மணிக்குப் பின் எலெக்ஷன் ஆபீஸரிடம் கொடுக்கப்படாத நமகச் சீட்டுகளை பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சென்னை மோட்டார் வண்டிகளுக்கு வரியிடும் படிக்கான சட்டம்.

(Madras Motor Vehicles Taxation Act, 1931).

சென்ற 4—3—31-ல் சென்னை சட்ட சபையானது மேற்சொல்லப்பட்ட சட்டத்தை நடத்தேற்றியது. இந்த சட்டத்திற்கு சென்னை கவர்னர் அவர்கள் தம் சம்மதத்தை கொடுத்து விட்டனர். 1-4-31 முதல் இந்த சட்டமானது அமுலுக்கு வருவதாகும்.

இந்த சட்டம் நடத்தேறுவதற்கு முன், சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டின் கீழும் மோட்டார் வெஹிகில்ஸ் ஆக்ட்டின்கீழும் மோட்டார் வண்டிகளுக்கு லிஸென்ஸ் மாத்திரம் வாங்கப்பட்டு வந்தது. இப்பொழுது இச்சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு மோட்டார் வண்டிக்கும் வரியுண்டு. இச்சட்டத்தினுல், சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 104-வது பிரிவு முதல் 109—வரையிலுமுள்ள பிரிவுகள் அடியோடே எடுத்துவிடப்பட்டன. அப்பிரிவுகள் சுங்கங்களைப் பற்றி கூறுவதாகும். இனி தென்னிந்தியாவில். சென்னை மாஹாணத்தில் சுங்க வாயில்கள் (டோல்கேட்டுகள்) என்பது அடியோடே கிடையாது. சுங்க வாயில்களால் வாங்கக்கூடிய வரும்படியானது மோட்டார் வண்டிகளின்மீது வரி விதிப்பதனல் வசூலிக்கக் கூடிய தொகையினுல் பூர்த்தி செய்யப்படும்.

இது வரையிலும், டோல் கேட்டுகளினுல் வசூலாகிக் கொண்டிருந்த தொகைகள் நேராக டிஸ்டிரிக்ட்டு போர்டுக்குச் சேர்ந்திருந்தன. இப்பொழுது மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் பிரகாரம் சென்னை கவர்ன்மெண்டாரே நேராக மோட்டார் வண்டிகளுக்கு வரி விதித்து டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கு தொகைகளை கொடுக்கும்படி ஏற்பட்டுள்ளது.

இனி, டிஸ்டிரிக்ட்டு போர்டு ரோட்டுகளில் போகும் எந்தவித மான வண்டிகளுக்கும் டோல்கேட்டு பணம் வசூல் செய்யப்படு மென்பது கிடையாது. ஆனல், கிராமாந்தரங்களிலுள்ள ஒற்றை மாட்டு வண்டிகள் இரட்டை மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் முதலிய வண்டிகளுக்கு ஒரு கிராமத்திற்கு அதிகாமுள்ள பஞ்சா

யத்தினுல் வரி விதிக்கப்படலாம். ஆனல், பஞ்சாயத்தானது ஏதாவது புதிதானதோர் வரியை விதிக்க வேண்டுமென்று உத்தேசிக்கும் பட்சத்தில் அதற்காக சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் 75-வது பிரிவின்கீழ் லோகல் கவர்ன்மெண்டாருடைய முன் உத்தரவைப் பெற வேண்டும். அப்படிப்பட்ட ஒரு உத்தரவைப் பெறும் வரையிலும் பஞ்சாயத்தானது வண்டிகளுக்காவது அல்லது மாடுகளுக்காவது யாதொரு வரியையும் விதிப்பதற்கில்லை.

சென்னை மோட்டார் வெஹிகில்ஸ் ஆக்ட் என்னும் சட்டத்தின் சாராம்சம் பின் வருமாறு:—

(a) இப்பொழுதுள்ள எல்லா சுங்க வாயில்கள் அடியோடே எடுபட்டு விட்டன. இனி சென்னை மாகாணத்திற்குள் யாதொரு வண்டியின் மீதாவது அல்லது பிராணியின்மீதாவது அல்லது நபரின் மீதாவது யாதொரு சுங்க வரியும் இடுவதற்கில்லை. ஆனல், 1-4-31-க்கு பிறகு கவர்ன்மெண்டார் கட்டும் அல்லது ஏற்படுத்தும் புதிய வாராவதிகளுக்கும் ரோட்டுகளுக்கும் சுங்க வரிகள் இடப்படலாம். அப்படிப்பட்ட வரியானது அந்த வேலைக்காகச் செலவழிந்திருக்கும் தொகையில் யாதொரு பாகம் வசூலாகும் வரையிலும் மாத்திரம்தான் விதிக்கத்தக்கதாகும். எவ்வளவு பாகம் வரையிலும் வசூலாக வேண்டுமென்று லோகல் கவர்ன்மெண்டாரே நிர்ணயிக்க வேண்டும். அப்படிப்பட்ட சுங்கங்கள் தாத்காலிகமானவை. அவை சில குறிப்பிட்ட வேலைகளுக்காக வசூலிக்கப்படக் கூடியவை. அவைகளை ஒன்று அல்லது இரண்டு இடங்களில் மாத்திரம்தான் விதிக்கலாம். அவைகளை விதிப்பதற்கு கவர்ன்மெண்டாருக்கு மாத்திரம்தான் அதிகாரம் உண்டு.

(b) இனி சென்னை கார்ப்பரேஷனுவது அல்லது வேறே முனிஸிபாலிடிகளாவது எவ்விதமான மோட்டார் வண்டிகளின் மீதும் யாதொரு விதமான வரியையும் இடுவதற்கில்லை.

(c) அடியில் குறிப்பிட்டிருக்கும் சில சந்தர்ப்பங்களில் தவிர சென்னை மாஹாணத்திற்குள் ஒரு மோட்டார் வண்டியை வைத்திருக்கும் அல்லது உபயோகப்படுத்தும் ஒவ்வொரு நபரும் இனிமேல் கவர்ன்மெண்டுக்கு அதன்மீதுள்ள வரி செலுத்த வேண்டும். அவருடைய மோட்டார் வண்டியானது வாஸ்தவத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அது சும்மா வைத்துக்

கொள்ளப்பட்டிருந்தாலும் வரி கொடுத்தே தீரவேண்டும். கேவலம் விவசாயத்துக்கு மாத்திரம் உபயோகப்படுத்தப்பட்டுவரும் மோட்டார் வண்டிகளைத் தவிர மற்ற மோட்டார் வண்டிகள் அவைகள் வரி செலுத்துவதிலிருந்து நீக்கப்பட்டாலும் நீக்கப்படாவிட்டாலும் கட்டாயம் ஒரு லிசென்சைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அந்த வண்டியானது வரி செலுத்துவதினின்று நீக்கப்பட்டிருந்தால் லிசென்ஸானது யாதொரு கட்டணமில்லாமலே கொடுக்கப்படும். மோட்டார் வண்டிகளில் வியாபாரம் செய்துவரும் ஒருவருக்கு, தனியாகப் பொது லிசென்சுகள் கொடுக்கப்படும். எவர், தனது வண்டிக்காக வரிசெலுத்த வேண்டியதில்லையென்று சொல்லுகிறாரோ அவர், தான் லிசென்ஸ் கேட்கும் காலத்தில் தம்முடைய வண்டியானது வரியிடப்படக் கூடியதல்லவென்று ருசுசெய்ய வேண்டும். அடியில்கண்ட நிவாரணங்களின்கீழ்தான் வரி வசூல் செய்யாமலிருக்கப்படும்.

(1) மூன்று மாத கால அளவு மொத்தமும் மோட்டார் வண்டிகளில் வியாபாரம் செய்யும் அல்லது மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்யும் ஒரு நபருடைய அளவில் விற்பனைக்காக அல்லது ரிப்பேருக்காக வைக்கப்பட்ட மோட்டார் வண்டிகள்.

(2) விவசாயத்திற்கு மாத்திரம் உபயோகப்படுத்தப்படும் மோட்டார் வண்டிகள் (ஆனால், விவசாயத்தினால் உற்பத்தி செய்யப்பட்டவைகளை (தான்யம் வைக்கோல் முதலியவைகளை) ஒரு இடத்திலிருந்து மற்றுமுள்ள ஒரு இடத்திற்கு கொண்டு போவதற்காக ஒரு மோட்டார் வண்டி உபயோகப்படுத்தப்படும் பக்ஷத்தில் அது இந்த நிலைமையின்கீழ் வராது).

(3) மோட்டார் ஸைக்கில் சைன்னியம் அல்லது மோட்டார் சைக்கில் ப்ளெட்டூன் இவைகளில் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், படை வீரர்கள், இவர்களுடைய மோட்டார் சைக்கில்கள்.

ஒரு மோட்டார் வண்டி சென்னை மாஹாணத்திற்குள் ஒரு க்வார்ட்டரி (3-மாதம்)-ன் கடைசி 14-நாட்கள் மாத்திரமாவது அல்லது அந்த கால அளவில் யாதொரு பாகத்திற்கு மாத்திரமாவது உபயோகப்படுத்தப்பட்டிருப்பின் அல்லது வைத்துக் கொள்ளப்பட்டிருப்பின் அதற்காக யாதொரு வரியையும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. இன்னும், ஒரே க்வார்ட்டருக்காக, ஒரு மோட்டார் வண்டியின்

சொந்தக்காரர் அல்லது வேறே ஒரு நபர் வரிசெலுத்தி யிருக்கும் பக்ஷத்தில் மறுபடியும் வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை.

(d) மோட்டார் வண்டிகளைத் தவிர இவ்வண்டிகளின் பேரி லும் ஜெந்துக்களின் பேரிலும் சென்னை கார்ப்பரேஷனில் வரியிடப் பட்டிருப்பதானது எவ்விதத்திலும் இச்சட்டத்தினால் பாதிக்கப்பட வில்லை. ஒரு முனிசிபாலிட்டி அல்லது சென்னை கார்ப்பரேஷனுக்கு வெளியேயுள்ள பாரவண்டி முதலியவைகளுக்கு வரி கிடையாது. டிஸ்டிரிக்ட்டு போர்டுகளாலும் முனிசிபல் கௌன்சில்களாலும் வாட கைக்காக ஓட்டப்படும் வண்டிகளின்மீதும், மோட்டார் லாரிகளின் மீதும் இடப்பட்டிருக்கும் லிசென்ஸ் கட்டணத்தைப்பற்றி இவ்வாக் டானது யாதொரு மாறுதலையும் செய்யவில்லை. இந்த லிசென்ஸ் கட்டணங்கள் கட்டாயம் செலுத்தப்பட வேண்டும்.

புதிய சட்டப் பிரகாரம் ஐந்து விதமான மோட்டார் வண்டிகள் வரிக்குட்படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது:—

(1) மோட்டார் சைக்கில்கள்.

(2) வியாதியஸ்தர்களுக்கு உபயோகப்படும் வண்டிகள் (Ambulence cars).

(3) சாமான்களைத் தூக்குவதற்கும் ஓரிடத்திலிருந்து மற் றோரிடத்திற்கு எடுத்துக்கொண்டு போவதற்கும் உபயோகப்படும் மோட்டார் வண்டிகள்.

(4) வாடகைக்காகவும், பிரயாணிகளை வாடகைக்கு ஏற்றிக் கொண்டு போவதற்கும் உபயோகப்படும் மோட்டார் வண்டிகள்.

(5) இதர மோட்டார் வண்டிகள்

சொந்தமாக சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள் ளப்பட்டிருக்கும் வண்டிகள் (5)-வது தலைமையின்கீழ் அடங்கும்.

(1) குறிப்பிட்ட வண்டிகளுக்கு மூன்று மாதத்திற்கு ஒருதரம் ரூ. 7—8—0 வரியும், பக்க வண்டியிருந்தால் ரூ. 10—0—0 வரியுமாக விதிக்கப்படும். (3), (5) குறிப்பிட்ட வண்டிகள், அவை எவ்வளவு கனமோ அதற்குத் தகுந்தாப்போல் வரி செலுத்த வேண் டும். அதாவது, வியாபாரத்திற்காக உபயோகப்படுவதாயிருந்தால் அவைகளின் வரி பின்வருமாறு:—

		3-மாதத்திற்கு ஒருதரம் உச்ச வரி ரூ. அ. பை.
பாரம் ஏற்றப்படாமல்	15-அந்தர்களுக்கு மேற்படாமல் உள்ள வண்டிக்கு	75-0-0
,,	15-அந்தர்களுக்குமேல் 30-அந்தர்களுக்கு அதிகப்படாத வண்டிகளுக்கு	125-0-0
,,	30-அந்தர்களுக்குமேல் 50-அந்தர்களுக்கு அதிகப்படாத வண்டிகளுக்கு	200-0-0
,,	50-அந்தர்களுக்கு அதிகப்பட்டு 70-அந்தர்களுக்கு அதிகப்படாத வண்டிகளுக்கு	225-0-0
,,	70-அந்தர்களுக்குமேல் 100-அந்தர்களுக்கு அதிகப்படாத வண்டிகளுக்கு	250-0-0
,,	100-அந்தர்களுக்கு மேல் உள்ள வண்டிக்கு	275-0-0

இந்த வண்டிகளுக்கு தொடர் வண்டிகள் இருக்கும் பக்ஷத்தில் 1-தொடர் வண்டி 1-டன்னுக்கு அதிகப்படாம லிருக்கும்பக்ஷத்தில் 60-0-0

1-டன்னுக்கு அதிகப்படுமானால் ... 125-0-0

வாடகைக்காக பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போகும் வண்டிகளுக்கு.

(a) சென்னை மோட்டார் வெஹிகில்ஸ் ரூல்ஸ் என்னும் விதிகளின்கீழ் 4-பேர்களுக்குமேல் அல்லாத நபர்களை ஏற்றிக்கொண்டுபோக லைசென்ஸ் கொடுக்கப்பட்ட வண்டிகளுக்கு, ... 40-0-0

(b) சென்னை மோட்டார் வெஹிகில்ஸ் ரூல்ஸ் என்னும் விதிகளின்கீழ் நான்கு பேர்களுக்கு மேல் நபர்களை ஏற்றிக்கொண்டு போக லைசென்ஸ் கொடுக்கப்பட்ட வண்டிகளுக்கு,

அந்த வண்டி எத்தனை நபர்களை ஏற்றிக்கொண்டு போக லைசென்ஸ் கொடுக்கப்பட்டதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபருக்காகவும் 10-0-0

பிரைவேட் வண்டிகளுக்கு விதிக்கப்படும் வரி பின் வருமாறு:—

பாரம் ஏற்றப்படாமல் 15-அந்தர்களுக்கு குறைந்த வண்டிகளுக்கு 17-8-0

பாரம் ஏற்றப்படாமல் 15-அந்தர்களுக்குமேல் 30-அந்தர்களுக்கு குறைந்த வண்டிகளுக்கு 25-0-0

		ரூ.
,,	30-அந்தர்களுக்குமேல் 45-அந்தர்களுக்கு குறைந்த வண்டிகளுக்கு	32-8-0
,,	45-அந்தர்களுக்குமேல் 60-அந்தர்களுக்கு குறைந்த வண்டிகளுக்கு	40-0-0
,,	60-அந்தர்களுக்குமேல் உள்ள வண்டிக்கு	50-0-0

இந்த வண்டிகளுக்கு தொடர் வண்டிகள் இருக்கும் பக்ஷத்தில் 1-தொடர் வண்டி 1-டன்னுக்கு அதிகப்படாமல் இருக்கும் பக்ஷத்தில் 10-0-0

1-டன்னுக்கு அதிகப்படுமானால் 20-0-0

முதல் வகுப்பு வண்டிகள் ஒரே மாதிரியான விகிதத்தை செலுத்துகின்றன. 3-வது வகுப்பிலும் 5-வது வகுப்பிலுமுள்ள வண்டிகள் பாரம் ஏற்றப்படாமலிருந்தால் எவ்வளவு கனமுள்ளனவாக இருக்கின்றனவோ அதற்குக்குக்காப்பால் கொடுப்பதற்கு உரியனவாகும். ஒவ்வொரு வண்டியும் இவ்வளவு கனம் என்று அந்த வண்டியைச் செய்பவராலேதெரியும். அவைகளைப்பற்றி லைசென்ஸ்கொடுக்கும் அதிகாரியும் தன்னிடம் ஒரு ஜாபிதாவை வைத்துக்கொண்டிருப்பார். பிளாவேட் வண்டிகள் 5-வது வகுப்பின் கீழ்வரும், அதாவது அவை 15-முதல் 30-வரையிலும் அந்தர்கள் உள்ளனவாகும். மூன்று மாதங்களுக்கொருதரம் 25-ரூபாய் செலுத்த வேண்டிவரும். உதாரணமாக, ஆஸ்டின், ஷெவ்ரொலெட், கிரிஸ்லர், சிட்ரோயின், டாட்ஜ், எர்ஸ்கின், எஸ்ஸெக்ஸ், பயட், போர்டு, கிரஹாம்பேஜ், ஹில்மன், மார்க்கெட், மாரிஸ்கௌலி, மாரிஸ் ஆக்ஸ் போர்டு, ஓவர்லண்டு, ஸ்டுடிபேகர் (8-ஸிலிண்டர் வண்டிகளைத் தவிர) வில்லிஸ் நைட், உல்லி இவை போன்ற வண்டிகளுக்கு 3-மாதத்துக்கொருதரம் 25-ரூபாய் கட்ட வேண்டிவரும்.

4-வது வகுப்பில் உள்ள வண்டிகள், மோட்டார் வெஹிகில்ஸ் ரூல்ஸின் கீழ் ஒவ்வொரு வண்டியும் எவ்வளவு தபர்களை ஏற்றலாம் என்று அனுமதி கொடுக்கப்படுகிறதோ அந்த சங்கியையின் பேரில் வரி செலுத்தவுதாகும். 1931—1932-வருஷத்திற்கு மாத்திரம் இத்தகைய வண்டிகள் ஒரு தபருக்கு ரூ. 7-8-0 விகிதம் செலுத்தும்படி வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

புதிய சட்டத்தின்கீழ் நடந்துகொள்ளும் விதம்.

ஒவ்வொரு க்வார்ட்டரிலும் (அதாவது 3-மாத கால அளவிலும்) அந்த காலம் ஆரம்பித்த 14-நாட்களுக்குள் வரி செலுத்தப்பட்டு லைசென்ஸ் பெறப்பட வேண்டும். குறைந்தபக்ஷம் 3-மாதத்திற் கொருதரம் லைசென்ஸ் பெறவேண்டும் என்பதேயொழிய ஒரு அரசிறை வருஷ முழுவதற்கும் லைசென்ஸ் பெறலாம். அதாவது ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் மார்ச்சு மாதம் 31-ந் தேதி வரையிலுமுள்ள

கால அளவிற்கு லிசென்ஸைப் பெறலாம். ஏப்ரல்மீ 1-ந் தேதி முதற் கொண்டு 14-நாட்களுக்குள்ளும் ஜூலைமீ 1-ந் தேதி முதற்கொண்டு 14-நாட்களுக்குள்ளும் அக்டோபர்மீ 1-ந் தேதி முதற்கொண்டு 14-நாட்களுக்குள்ளும் ஜனவரிமீ 1-ந் தேதி முதற்கொண்டு 14-நாட்களுக்குள்ளும் லிசென்ஸ் தொகையை செலுத்த வேண்டும்.

சென்னையில் போலீஸ் கமிஷனரிடத்திலும், வெளி ஜில்லாக்களில் தாலூக்கா ஹெட் அக்கௌண்டெண்டினிட மிருந்தும் லிசென்ஸ் பெறலாம். ஒரே குறிப்பிட்ட லிசென்ஸ் கொடுக்கும் உத்தியோகஸ்தரிடமிருந்துதான் லிசென்ஸ்பெறவேண்டும் என்று நிர்ணயம் கிடையாது. தங்களிஷ்டம்போல் எந்த இடத்திலாவது லிசென்ஸ்ஸைப் பெறலாம்.

மோட்டார் வரியைச் செலுத்தி லிசென்ஸ் பெறவேண்டுமென்று விரும்புபவர், தமக்கு மிகவும் அருகாமையிலுள்ள லிசென்ஸ் கொடுக்கும் உத்தியோகஸ்தரிடம் நேரிலாவது போகவேண்டும் அல்லது நம்பிக்கையான ஒரு ஆசாமியை அனுப்ப வேண்டும். அந்தக் காலத்தில் எந்த வண்டிக்காக லிசென்ஸ் கேட்கப்படுகிறதோ அந்த வண்டிக்கு மோட்டார் வெஹிகில்ஸ் ஆக்டின் கீழ் கொடுக்கப்பட்ட ரிஜிஸ்டிரேஷன் சர்டிபிகேட்டை ஆஜர்ப்படுத்த வேண்டும் இந்த சர்ட்டிபிகேட் தொலைந்துபோய் விட்டிருந்தால் உடனே டிஸ்டிரிட் போலீஸ் சூபரின்டெண்டினிட மிருந்து ஒரு நகலைப்பெறவேண்டும். அந்த சர்ட்டிபிகேட்டின் நகலானது முதல் முதலாவதாக எந்த ஜில்லாவில் அது கொடுக்கப்பட்டதோ அதிலேதான் கிடைக்கும். அப்படிப்பட்ட காபியானது முதல் கட்டணத் தொகையான 16-ரூபாயில் பாதி அதாவது 8-ரூபாயைக் கொடுக்கும்பக்ஷத்தில் உடனே கிடைக்கும். அந்த சர்ட்டிபிகேட் இருக்க வேண்டியதின் அவசியம் என்னவென்றால், அதைப் பார்த்துவிட்டே லிசென்ஸில் வேண்டிய விவரங்களை எழுதிக் கொள்ள சௌகரியமாயிருக்கும். இல்லாவிட்டால் மோட்டார் வண்டியையே கொண்டு நிறுத்தும்படி நேரிடும். லிசென்ஸ் கொடுக்கும் உத்தியோகஸ்தர் அந்த சர்ட்டிபிகேட்டில், "வரி செலுத்தியாய் விட்டது" என்றாவது "வரி பாக்கியில்லை" என்றாவது எழுதவேண்டிய கடமைப்பட்டிருக்கிறாராகலால் அதை கட்டாயம் ஆஜர்ப்படுத்த வேண்டும். அதுதான் வரி செலுத்தப்பட்டதற்கு சரியான அத்தாக்ஷியாகும்.

லிசென்ஸ் கொடுக்கும் உத்தியோகஸ்தரிடம் லிசென்ஸ் வேண்டுமென்று ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிகேட்டுடன் மனு செய்யும்பக்ஷத்தில் லிசென்ஸை பூர்த்தி செய்து கட்டாயம் அவர் கொடுக்க வேண்டும். அந்த லிசென்ஸானது மோட்டார் வண்டியில் வெளிப்படையான ஓரிடத்தில் காட்டி வைக்கப்பட வேண்டும். அந்த லிசென்

வில் வட்டமான பாகத்தை மாத்திரம் காண்பித்தால் போதுமானது. ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் லேசென்ஸைப் பார்ப்பதற்கென்றே ஓடிக்கொண்டிருக்கும் ஒரு மோட்டார் வண்டியை நிறுத்துவதற்கில்லை. ஆனால் வண்டியானது நின்று கொண்டிருக்கும் பொழுது லேசென்ஸைப் பார்க்க வேண்டுமென்று கேட்கலாம்.

வரி செலுத்தப்படாவிட்டால் அந்த வண்டியின் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சொந்தக்காரர் அல்லது அந்த வண்டியை தம் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருப்பவர் 50-ரூபாய் வரையிலும் விதிக்கப்படும் அபராதத்திற்கு உள்ளாவார். இல்லாவிட்டால் அந்த வண்டியானது பறிமுதல் செய்யப்பட்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டபிறகு ஏலம் போடப்பட்டு வரிக்காகவும் செலவுக்காகவும் ஏலத்தொகையை முஜாரா வைத்துக் கொள்ளலாம். இன்னும் அந்த வரியானது ஒரு வாண்டு செவின்யூ பாக்கியைப் போலவே வசூல் செய்யப்படலாம்.

தென் இந்தியாவில் லேசென்ஸ் கொடுக்கப்படும் இடங்கள்.

செங்கல்பட்டு ஜில்லா :— செங்கல்பட்டு, சைதாப்பேட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம்.

வட ஆர்காடு ஜில்லா :— திருப்பத்தூர், வேலூர், வாலாஜாபேட்டை, செய்யார், திருவண்ணாமலை.

தென்னார்க்காடு ஜில்லா :— சிண்டிவனம், சிதம்பரம், திருக்கோவிலூர், கடலூர்.

தஞ்சாவூர் ஜில்லா :— தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், மன்னார்குடி, நாகப்பட்டணம், பட்டுக்கோட்டை.

திருச்சினாப்பள்ளி ஜில்லா :— திருச்சினாப்பள்ளி, கரூர், முசிரி, அரியலூர்.

மதுரை ஜில்லா :— திண்டுக்கல், பெரிய குளம், திருமங்கலம், மேலூர், மதுரை, கொடைக்கானல்.

ராமநாதபுரம் ஜில்லா :— சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகெங்கை, திருப்பத்தூர், ராமநாதபுரம், அறுப்புக்கோட்டை.

திருநெல்வேலி ஜில்லா :— அம்பா சமுத்திரம், ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கோவில்பட்டி, தென்காசி.

கோயமுத்தூர் ஜில்லா :— பொள்ளாச்சி, ஈரோட், கோபிசெட்டி பாளையம், கொள்ளேகால், கோயமுத்தூர், அவனுட்சி, தாராபுரம், மேட்டூர்.

நீலகிரி ஜில்லா .— உதக மண்டலம், கூடலூர், கூனூர்.

சேலம் ஜில்லா .— ஹோசூர், தர்மபுரி, திருச்செங்கோடு, சேலம், நாமக்கல், ஏற்காடு.

மலையாளம் ஜில்லா :— தெலிச்சேரி, (கோட்டயம்) பாலக்காடு, கொச்சி, கள்ளிக்கோட்டை, மாஞ்சேரி, (எராகாடு) பெரின்தலைமன்னு, (வள்ளுவநாடு) வாயித்திரி, மானந்தோடி, கண்ணனூர் (சிரக்கால்).

முற்றிற்று.

அகராதி

விஷயம். பக்கம்.

அங்கத்தினர்கள்.

டிஸ்டிரிக்ட்டு போர்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் ... 164
தாலூக்கா போர்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ... 170
பஞ்சாயத்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ... 171
அங்கத்தினரின் யோக்கியதாம்சங்கள். 186-187-191-192
அங்கத்தினரின் யோக்கியதைக் குறைவுகள். ... 194
அதன் விஷயமாக டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜுக்குள்ள அதிகாரம் ... 202
அங்கத்தினர்களுக்குள்ளஉரிமைகள். ... 118
மீட்டிங்குகளில் கேள்விகளே கேட்கும் அதிகாரம். ... 115
ப்ரெஸிடென்டுகளுக்கு குற்றமே எடுத்துச் சொல்ல அதிகாரம் ... 115
அங்கத்தினர்களின் பொறுப்பு
அங்கத்தவர்களின் பேரில் தாவா செய்யக் கூடாது என்பது. ... 505
அங்கத்தவர்கள் சொத்துக்களுக்காக உத்திரவாதம் ... 515
அங்கத்தவர்களின் பேரில் பிராவிஷியூஷன் ... 516
மீட்டிங்குகள் கூடுவது ... 536
ல்பெஷல் மீட்டிங்குக்காக விண்ணப்பம் செய்வது ... 539
ஓட்டுகள் கொடுப்பது ... 543

விஷயம். பக்கம்.

மீட்டிங்குகளில் இன்ன அங்கத்தினர் கலந்துகொள்ளக் கூடாதென்பது .. 129
அங்கத்தினர்கள் லோகல் போர்டு விஷயங்களில் பற்று இருக்கக் கூடாதென்பது ... 190
அங்கத்தினர்கள் நியமகமூலமாக வரக்கூடாதென்பது 154

அசங்கியம்.

அசங்கியங்களே மீக்குவதற்கு அல்லது உண்டாகாமல் செய்வதற்கு பஞ்சாயத்து ப்ரெஸிடென்டின் கடமை 310
குளங்கள், குட்டைகள் முதலியவைகளே அசங்கியத்துக்குட்படாமலிருக்கும்படி பாதுகாப்பது. ... 312
அசுத்தங்கள் வெளியில் வந்து விழாமல் பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு தடுக்கவேண்டுமென்பது ... 317
சொந்த மார்க்கெட்டுகளில் அசங்கியமில்லாமல் இருப்பதற்கு ப்ரெஸிடென்டு கடைசெய்ய அதிகாரம் ... 392
தெருவிலிருக்கும் குப்பை கூளம் முதலிய அசங்கியங்களே வாருவதற்கு பஞ்சாயத்தின் கடமை ... 316
சந்தேகத்திற்கிடமான இடங்களில் அசங்கியம் பெற வொட்டாமல் ப்ரெஸிடென்டு தடுக்கவேண்டுமென்பது. ... 318

விஷயம் பக்கம்.

தேகாரோக்கியத்திற்கு அபாயகரமான இடங்களை பிரேதங்கள் புதைக்கவொட்டாமல் உபயோகிக்கும்படி செய்ய ப்ரெவிடென்டுக்குள்ள அதிகாரம் ... 328

அதிகாரம்.

லோகல் போர்டு ப்ரெவிடென்டின் மேல்விசாரணை அதிகாரம் ... 116
(ப்ரெவிடென்டு என்னும் தலைப்பின்கீழ் பார்க்க)
ப்ரெவிடென்டின் நிர்வாக அதிகாரம் ... 103
லோகல் போர்டு அங்கத்தினர்களின் அதிகாரம் ... 115
லோகல் போர்டுகளை பரிசிலனைசெய்யும் உத்தியோகஸ்தர்கள் கட்டிடங்களில் நுழைய அதிகாரம் ... 137
கவர்ன்மெண்டுக்கு லோகல் போர்டுகளிலிருந்து ரிப்போர்ட்டுகளைக் கேட்க அதிகாரம் ... 138
டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெவிடென்டுகளுக்கும், தாலூக்கா போர்டு ப்ரெவிடென்டுகளுக்கும் பஞ்சாயத்துகளின்பேரில் உள்ள அதிகாரம் ... 139
லோகல் கவர்ன்மெண்டுக்கு லோகல்போர்டுகளின் தீர்மானங்களை ரிறுத்திவைக்க அல்லது ரத்திசெய்ய அதிகாரம் ... 139
டிஸ்டிரிக்ட்டு கலெக்டருக்கு உள்ள விசேஷ அதிகாரங்கள் ... 142
லோகல் போர்டுகள் அல்லது ப்ரெவிடென்டுகள் தவறிப்போகும் விஷயங்களில் லோகல் கவர்ன்மெண்டுக்கு உள்ள அதிகாரம் ... 143
அதே மாதிரியாக டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், தாலூக்கா போர்டுகளுக்கும் அதிகாரம் ... 145
லோகல் போர்டு ப்ரெவிடென்டை நீக்கிவிடுவதற்குக் கவர்ன்மெண்டுக்குள்ள அதிகாரம் ... 146
லோகல் போர்டுகளை கலைத்துவிடுவதற்கும் அமைப்பதற்கும் கவர்ன்மெண்டுக்குள்ள அதிகாரம் ... 156
பஞ்சாயத்துகளை நீக்கிவைக்க அதிகாரம் ... 159
லோகல் போர்டுகள் தவருவதன்மேல் அவைகளில் பிரவர்த்திக்கிற உத்தியோகஸ்தர்களின் அதிகாரம் ... 162
லோகல் போர்டு அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவைப் பற்றி தீர்மானிக்க டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜுக்குள்ள அதிகாரம் ... 202
கிராம காடுகளை பஞ்சாயத்துக்கு மாற்றிவிட கவர்ன்மெண்டுக்குள்ள அதிகாரம் ... 218
பஞ்சாயத்துகளுக்கு ஜலாசான் விஷயமாகவுள்ள அலுவல்களை மாற்றிவிட அதிகாரம் ... 219
லோகல் போர்டுகளினுடைய அலுவல்களை அதிகரிக்கச் செய்வதற்கு கவர்ன்மெண்டினுடைய அதிகாரம் ... 219
லோகல் போர்டுகளுடைய ஊழிய சம்பந்தமானரெகுலேஷன்களை ஏற்படுத்த டிஸ்டிரிக்ட்டு போர்டாருக்குள்ள அதிகாரம் ... 233

விஷயம்.	பக்கம்.
லோகல் போர்டு உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியர்களை கண்டிக்க அதிகாரம் ...	234
லோகல் போர்டு உத்தியோகஸ்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் ரஜா கொடுக்க அதிகாரம் ...	237
கலெக்டருக்கு நிலவ்வான் தார்கள் ஜாபிதாக்களை அனுப்பும்படி கேட்க அதிகாரம் ...	255
டிஸ்டிரிக்ட்டு கலெக்டருக்கு நபர்களை சம்மன் அனுப்பி வர வழைக்க அதிகாரம் ...	256
நிலவ்வான் தாரருக்குள்ள அதிகாரங்கள் ...	261
கலெக்டருக்கு லாண்ட்செஸ் என்னும் வரியை விதிக்க அதிகாரம் ...	249
பஞ்சாயத்துகளுக்கு தொழில் வரி விதிக்க அதிகாரம் ...	264
வரிக்குள்ளானவர்களைக் குறித்து ஜாபிதா அனுப்பும்படி கேட்க அதிகாரம் ...	275
வீட்டுவரி வசூல் செய்வதற்கு பஞ்சாயத்துக்கு அதிகாரம் ...	275
வரிகள் செலுத்துவதினின்றும் நிவாரணம்செய்ய அதிகாரம் ...	295
வரிகளை வசூல் செய்யாமல் விட்டு வீடுவதற்கு பஞ்சாயத்துக்குள்ள அதிகாரம் ...	295
கணக்குகளை தணிக்கை செய்வதற்கு லோகல் கவர்மெண்டுக்குள்ள அதிகாரம் ...	306
லோகல் கவர்மெண்டார் தாங்கள் கொடுத்திருக்கும் கடன்களையும், அட்வான்சுகளையும் வசூல் செய்ய அதிகாரம்	307

விஷயம்.	பக்கம்.
லோகல் கவர்ன்மெண்டார் லோகல் போர்டுகளின் சம்பந்தமான விதிகளைச் செய்வதற்குள்ள அதிகாரம் ..	434
வெட்டியல்களைத் திருத்தவும் ரத்து செய்யவும் கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம் ...	440
டிஸ்டிரிக்ட்டு போர்டுக்கு சகாயச் சட்டங்களை செய்ய அதிகாரம் ...	441
தாலூக்கா போர்டு, பஞ்சாயத்துகளுக்கு சகாயச் சட்டங்களை செய்ய அதிகாரம் ...	447
அம்மை குத்திக்கொள்ள நிர்ப்பந்திக்க அதிகாரம் ...	323
லெசென்ஸ் கொடுக்க அதிகாரம் (லெசென்ஸ் என்னும் தலைமையின் கீழ் பார்க்க) ...	385
பிரவேசிக்கவும், பார்வையிடவும் ப்ரெவிடென்டுக்குள்ள அதிகாரம் ...	492
பிராது தொடர அதிகாரம்...	500
ராஜி செய்துக்கொள்ள அதிகாரம் ...	514
கட்சிக்காரர்களுக்கு சம்மன் அனுப்ப அதிகாரம் ...	525
ஜப்திசெய்ய அதிகாரம் ...	495
585-முதல்	587
லோகல் கவர்ன்மெண்டார் தங்கள் அதிகாரங்களை வேறொருவருக்கு கொடுப்பது ...	526
பிரதேச அதிகாரிகளுக்குள் உள்ள விவாதங்களை தீர்க்க லோகல் கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம் ...	527
ல்டேட்டெண்டுகளை சவதரிக்கும்படி காரணங்களையும் பெரிய தனக்காரர்களையும் கேட்கும்படி ப்ரெவிடென்டுக்குள்ள அதிகாரம் ...	525

விஷயம். பக்கம்

லோகல் கவர்ன்மெண்டுக்கு பாதைகளையும், சத்திரங் களையும் வகுப்பிட அதி காரம் ... 631

அதிகார எல்லை.

லோகல் போர்டுகளின் அதி கார லிமிட்தீரணம் ... 79
ப்ரெஸிடென்டின் அதிகார எல்லை ... 459
டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜியினுடை ய அதிகார எல்லை ... 202-205
அங்கத்தினர் அதிகார எல்லை யை விட்டு வெளியேபோ வதினுல் அர்ஹமின்மை அடைதல் ... 185
ஜாயண்டு கமிட்டிகளின் அதி காரஎல்லை ... 172-173
யாத்திரை வரி விதிப்பதற் குள்ள அதிகார எல்லை ... 292

அர்கத்துவம் அர்கமின்மை

எலெக்ஷன் செய்யப்படுவத ற்கு வேண்டிய அர்கத்தி வம் ... 183
எலெக்ஷன் செய்யப்படுவத ற்கு அர்கமின்மை ... 186-முதல் ... 191
அர்கமின்மையைப் பற்றின பிரச்னை ... 202
அர்கமில்லாதவராக இருக் கையில் ப்ரெஸிடெண்டா கவோ அல்லது அங்கத்தி னராகவோ நடந்துகொள் ளக் கூடாதென்பது ... 461

ஆக்கிரமம்.

பொதுவான பாதைகளில் ஆக்கிரமம் செய்யக்கூடா தென்பது ... 311

விஷயம் பக்கம்.

ஆக்கிரமம் செய்வதனுல் ஆக் கிரமத்தை எடுத்துவிடும் படி நோட்டீஸ் கொடுப் பது 341-முதல் 356
நோட்டீசுக்குக் கீழ்ப்படியாமல் போனுல் அதற்கு ஏற்படும் தண்டனை 453-முதல் 460
சில ஆக்கிரமங்களுக்காகப்ரெ ஸிடென்டு அனுமதி கொடு ப்பது 357-முதல் 362
பொது பாதைகளில் புல்பூண்டு முதலியவைகள் ஆக்கிரமிக்க வொட்டாமல் தடுப்பது ... 363
அனுமதி யில்லாமல் ஆக்கிர மித்து வந்ததற்காக தண் டத் தொகையை வசூலிப் பது ... 367
ஆக்கிரம விஷயங்களுக்காக எவர் நோட்டீஸ் கொடுப் பது ... 495
ஆக்கிரமங்களுக்காக டாமேஜ் தொகையை வசூலிப்பது 495

ஆங்கிலஇந்தியன்.

ஆங்கில இந்தியன் என்பதன் அர்த்தம் ... 66
ஆங்கில இந்தியர்களுக்குசில ஸ்தானங்களை ஒதுக்கி வைப் பது ... 85

ஆடு மாடு அடிக்தும்தொட்டிகள்.

பஞ்சாயத்து ஆடு மாடு தொட் டிகளை ஏற்படுத்த வேண்டு மென்பது ... 403
ஆடு, மாடு முதலியவைகளை அடிக்கும் பொதுவான தொட்டிகள் அல்லாதவே றே இடங்களில்கல்நடை களைக் கொல்வது முதலியன கூடாதென்று லோகல்போர்டு

விஷயம். பக்கம்.

கூர் தடுக்கலா மென்பது ... 403
கவர்ன்மெண்டாரால் உபயோகிக்கப்படும் இடங்களுக்கு கட்டணங்கள் மூதலியவை வசூலிக்கக் கூடாதென்பது ... 406

ஆதிதிராவிடர்.

இதன் அர்த்தம் ... 66
பொதுவான பாதைகள் ஆதிதிராவிடர்கள் உள்பட எல்லாரும் உபயோகிக்கும்படி இருக்க வேண்டுமென்பது ... 343-344
ஆதி திராவிடர்களுக்கு சில ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட வேண்டு மென்பது ... 85
ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்காக நிலம் பரிக்கிரமிப்பது ஒரு பொது காரியமாகுமென்பது ... 225

ஆரோக்கியம்.

பஞ்சாயத்துகள் ஜனங்களுக்கு ஆரோக்கியத்தை செய்ய வேண்டிய கடமை ... 594
பொதுஜன தேகாரோக்கியத்திற்காக கிணறு மூதலியவைகளை சுத்தி செய்வது அல்லது மூடி விடுவது ... 308
தேகாரோக்கியத்திற்கு இடைஞ்சலான கிணறுகள், குட்டைகள் இவைகளை தூர்த்து விடுவது ... 310
ஆரோக்யத்தை உத்தேசித்து பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டரானவர் இடங்களை சுத்தி செய்வதற்காக விளம்பரம் பிசுரஞ் செய்வது ... 319

இயந்திரசாலை

இயந்திரசாலை அமைக்கப்படுமுன் பஞ்சாயத்தினுடைய உத்திரவு கேட்கப்படவேண்டுமென்பது 411-412
இயந்திரசாலைகளினுல் ஏற்படும் அசங்கியங்களை குறைக்கும்படி பஞ்சாயத்தானது உத்திரவு பிறப்பிக்கலாமென்பது ... 415
இயந்திரசாலைகளில் நுழையப்ரெஸிடெண்டுக் குள்ள அதிகாரம் ... 418

உரிமைகள்.

அங்கத்தினர்களின் உரிமைகள் ... 115
ஓட் உரிமை ... 167
ஒவ்வொரு வார்டும் அல்லது சர்க்கிலும் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்றிருப்பது 170-172
ஒவ்வொரு நபரும் ஒரு ஓட்டராக பதிவுசெய்து கொள்வதற்குரிய உரிமை ... 179
அங்கத்தினர்கள் மீட்டிங்குகளில் ப்ரெஸிடெண்டை கேள்வி கேட்க உரிமை ... 115
ஒரு அங்கத்தினர் யோக்கியதைக் குறைவின் விஷயமாக டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் தீர்மானிக்கும் வரையிலும் லோகல்போர்டு மீட்டிங்குகளில் கலந்துகொள்ள உரிமை 202-முதல் 206
பொதுஜனங்கள் மீட்டிங்குகளிலிருந்து அவைகளின்

விஷயம். பக்கம்.

நடவடிக்கைகளை சுவனிக்க உரிமை ... 542
159-வது பிரிவின்கீழ் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள உரிமை 494-495
லைசென்ஸ் பெற்றுக்கொள்ளும் உரிமை 456-460
ப்ரெஸிடென்டின் உரிமைகள் "ப்ரெஸிடென்டு என்னும் தலைமையின்கீழ் பார்க்க". 455

எலெக்ஷன்.

எலெக்ஷன் என்னவென்பது 163
தற்செயலான எலெக்ஷன்... 67
லோகல் போர்டுகளின் அங்கத்தினர்கள்எலெக்ஷனால் வரவேண்டுமென்பது ... 84
லோகல்போர்டு மெம்பர்களினுடைய எலெக்ஷன் ... 90
காலிகளை எலெக்ஷன் மூலமாக பூர்த்தி செய்வது ... 92
எலெக்ஷனைப் பற்றினவிதிகள் ... 93
எலெக்ஷனில் யாதொருநபரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால்இன்னதுசெய்வதென்பது ... 94
லோகல்போர்டு ப்ரெஸிடென்டு வைஸ்ப்ரெஸிடென்டு இவர்களுடைய எலெக்ஷன் 95-96
ப்ரசித்தப்படுத்துவது ... 101
டிஸ்ட்ரிக்ட்டு போர்டுஅங்கத்தினரின் எலெக்ஷன் 164-முதல் 170
தாலுக்காபோர்டு அங்கத்தினரின்எலெக்ஷன் ... 170
பஞ்சாயத்து அங்கத்தினர்களின் எலெக்ஷன் ... 171
தெரிந்தெடுப்பவரின் ஜாபிதா ப்ரசுரப்படுத்துவது ... 174

விஷயம். பக்கம்.

எலெக்ஷனில் ஓட்டுகொடுக்கும் யோக்கியதாம்சங்கள் ... 179
எலெக்ஷனில் நிற்பதற்குள்ள யோக்கியதாம்சங்கள் ... 183
அபேக்ஷகர்களின் யோக்கியதை குறைவுகள் ... 185
எலெக்ஷன் விஷயமாகவுள்ள ப்ரச்னைகளை ப்ரெஸிடென்டு டிஸ்டிரிக்ட்டு கெஜட்டில்தீர்மானிப்பது203-முதல்206
எலெக்ஷன் சம்பந்தமான இரகசியத்தை வெளியிடக்கூடாது ... 207
எலெக்ஷன் சம்பந்தமான குற்றத்தில் சம்பந்தப்பட்டவருடைய யோக்கியதை குறைவுகள் ... 208
எலெக்ஷன் ரகசியத்தைவெளியிடுவது குற்றமென்பது ... 207
எலெக்ஷன் சம்பந்தமான குற்றங்களில் குற்றவாளி என்று தீர்மானிக்கப்படுபவர் ஓட்டு கொடுக்கவும், அபேக்ஷகராக நிற்கவும் அருகரல்ல வென்பது ... 208

ஓட்டு.

ஓட்டு என்பது யாது 167,168
ஓட்டு உரிமையின் அவசியம் ... 163
ஓட்டு கொடுப்பவர்களின் ஜாபிதா ... 174
ஓட்டு கொடுப்பவர்களுக்குள்ள யோக்கியதாம்சங்கள் 551-552
மீட்டிங்குகளில் ஓட்டு எடுப்பது இன்னதென்பது 534-535 ... 543
எலெக்ஷன் விஷயமாக குற்றம் செய்பவர்கள் ஓட்டு கொடுப்பவர்களாக பதிவு செய்யக்கூடாதென்பது ... 208

விஷயம். பக்கம்.

கதவுகள்.

கதவுகள் வெளித்தரையில் திறக்கும்படி இருக்கக்கூடாதென்பது ... 346
தொழிற்சாலைகளின் கதவுகளின் அமைப்பு 411-முதல் 413
ஜனங்கள் வழக்கமாய்க்கூடும் இடங்களில் கதவுகளின் அமைப்பு 423-430
கதவுகளை லோகல் போர்டு அதிகாரிகள் ஜப்தி செய்யக் கூடாதென்பது ... 583

கட்டிடம்.

கட்டிடங்களை மதிப்பிடுவது 570
571-572
கட்டிடங்களுக்கு வரியிடுவது 567
கட்டிடங்கள் கட்டுவதைப்பற்றியும் புதுப்பிக்கப்படுவதைப்பற்றியும் அல்லது இடித்துவிடுவதைப் பற்றியும் சொந்தக்காரர் நோட்டீஸ் கொடுக்க வேண்டிய கடமை ... 282
வரிக்கு உள்ளானவர்களைக் குறித்து ஜாபிதா அனுப்பும்படி கட்டிடத்தின் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு நோட்டீஸ். ... 275
சந்தேகத்துக்கிடமான கட்டிடங்களில் பிரவேசிக்கவும் அவைகளில் இருந்து தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவது ... 318
அபாயகரமான கட்டிடங்களின் விஷயமாக முன் எச்சரிக்கை ... 329
கட்டிடங்களுக்கு அடைப்பு அடைத்துவைப்பது ... 332

விஷயம். பக்கம்.

கட்டிடங்களிலிருந்து அசுத்தங்களையும் தீங்குண்டாக்கத்தக்க புல் பூண்டுகளையும் அப்புறப்படுத்துவது 336
அழித்துவிடப்பட்ட கட்டிடங்களிலிருந்து சாமான்களை விற்க ப்ரெவிடென்டின் அதிகாரம் ... 339
ஜலதாரைச் சாக்கடைக்கால் முதலியவைகளின் பேரில் அனுமதியில்லாமல் கட்டிடம் கட்டக்கூடாதென்பது ... 362
கட்டிடங்களிலுள்ள புல் பூண்டுகளை எடுத்துவிடுவதற்கு நோட்டீஸ் ... 363
இன்ன காரியத்திற்கு லைசென்ஸில்லாமல் கட்டிடங்களை உபயோகிக்கக் கூடாதென்பது ... 406
நீராவி அல்லது இதர சக்தியை உபயோகிக்கும் கட்டிடங்களை கட்டுவதற்கு உத்திரவு வேண்டுமென்பது ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களையும் விநோதமாய் காலம் கழிக்கும் இடங்களையும் சரியாய் பார்வையிட வேண்டுமென்பது ... 423
மேற்படி கட்டிடத்தின் அமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்பது ... 430
வரியிடப்படுவதிலிருந்து நீக்கப்பட வேண்டிய கட்டிடங்கள் ... 277

காலி.

தற்செயலான காலி ... 67
காலிஸ்தானங்கள் பூர்த்தி செய்வது ... 100
காலி வீடுகளுக்கு வரிவஜா ... 279

விஷயம். பக்கம்.

காடு.

காடுகளை பஞ்சாயத்தின் அதிகாரத்துக்கு உட்படுத்துவது ... 218
காடு என்பது என்ன ... 69

கிராமம்.

கிராமம் என்பது என்ன ... 75
கவர்ன்மெண்டாருக்கு கிராமங்களை ஏற்படுத்த அதிகாரம் ... 477
ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து ஏற்பட வேண்டுமென்பது ... 79
டிஸ்டிரிக்ட்டு முனிசிபாலிடி ஆக்டின் திபந்தனைகளை கிராமத்திற்கு பிரயோகிப்பது ... 451
கிராம பாதுகாப்பு ... 593
கிராமத்திற்கு வேண்டிய சௌகரியங்களை பஞ்சாயத்தார் செய்வது 592,593,594
கிராமத்தில் ஜலாசான் விஷயமாகவுள்ள அலுவல்களை பஞ்சாயத்தானது பார்த்து வருவது ... 219

கிராம அபிவிருத்தி.

கிராம அபிவிருத்திநிதி ... 301
லோகல் பண்டுகளை கிராம அபிவிருத்திக்காக உபயோகப்படுத்த வேண்டுமென்பது 297-298

குளம், குட்டைகள்.

குளங்களையும், குட்டைகளையும் பஞ்சாயத்து ப்ரெஸிடெண்டு சரியான நிலைமையில் வைத்திருக்க வேண்டுமென்பது 308-309-315-592
அசங்கியம் அல்லது சங்கடத்தை உண்டாக்கத்தக்க குளம், குட்டைகளை தூர்த்துவிடுவது ... 312
குளம், குட்டைகளை பிரத்தியேகப்படுத்திவைப்பது ... 313

குற்றங்கள்.

லோகல் போர்ட்டல் ஆக்டின் கீழுள்ளகுற்றங்கள்612-முதல்621
குற்றங்கள் விஷயமாக ராஜி செய்துக்கொள்வது ... 514
குற்றங்களுக்காக கேஸ் தொடருவதற்கு கால நிர்ணயம் 500
லோகல் போர்டு ப்ரெஸிடெண்டுகள், அங்கத்தினர்கள் குற்றஞ்செய்தால் அவர்கள் பேரில் கேஸ் தொடருவதற்கு சாங்கிஷன் பெறவேண்டுமென்பது ... 516
சகாயச் சட்டங்களின்கீழுள்ள குற்றம் 441, 447
குற்றங்கள் லோகல் போர்டு அபேக்ஷகராக நியமிக்கப்படுவதற்கு தடையாகுமென்பது ... 186
குற்றத்திற்காக தண்டனை செய்யப்பட்டதினால் அங்கத்தினர்களுக்கு யேற்கிய தைக் குறைவு ஏற்படுமென்பது ... 194

துஷ்டரோகிகள்.

குஷ்ட ரோகிகள் லோகல் போர்டு எலெக்ஷனில் ஓட்டு கொடுக்கக் கூடாதென்பது ... 181

விஷயம். பக்கம்.

குஷ்ட ரோகிகள் அபேக்ஷக ராக பிரேரேபிக்கப் படக் கூடா தென்பது ... 186
குஷ்டரோக முள்ளவர்களை மார்க்கட்டுகளிலிருந்து துரத்தி விடுவதற்குப் ப்ரெஸிடென்டின் கடமை ... 395
தொத்து வியாதி சம்பந்தப் பட்ட நபர் தொழில் நடத்தக் கூடா தென்பது ... 320
தொத்து வியாதி சம்பந்தப் பட்ட நபர்களை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு போகக் கூடாதென்பது 320-321

க்ஷோரம்.

க்ஷோரம் என்பதுயாது ... 545
அதன் அவசியம் ... 515

சகாயச் சட்டங்கள்.

சகாயச் சட்டங்களைச் செய்வ வற்கு டில்டிரிக்ட்டு போர்டின் அதிகாரம் ... 441
சகாயச் சட்டங்களைச் செய்வ தற்கு தாலூக்கா போர்டு, பஞ்சாயத்து இவைகளின் அதிகாரம் ... 447
சகாயச் சட்டங்களை மீறுவ தற்கு தண்டனை ... 446
சகாயச் சட்டங்கள் செய்வத தற்கான நட வடிக்கை ... 447
சகாயச் சட்டங்களை லோகல் கவர்ன்மென்டார் ஊர்ஜித ப்படுத்துவது ... 449
சகாயச் சட்டங்களை செய்வத தற்கும், விளம்பரப்படுத்து வதற்கும் நடவடிக்கை முறை ... 449

விஷயம். பக்கம்.

சொந்துங்கள்.

லோகல் போர்டுகளினுடைய சொத்துக்கள் 209-முதல் 220
பொதுவான பரட்டைகள் லோகல் போர்டாரிடத்தில் சங்கிரமிப்பது ... 209
சொத்துக்களை நிலைமெடுத்துக் கொள்வதற்கான ஆக்டின்படி கட்டாயமாக பெறுவதற்குள்ள அதிகாரம் ... 220
சொத்துக்களின் மதிப்பின் பேரில் வரியிடுவ தென்பது 562-564
தொழில் வரி இடப்படக் கூடிய சொத்துக்கள் இன்னதென்பது ... 265
வரிக்காக கட்டிடங்களை மதிப்பிடுவது 571-572

சொந்தக்காரர்.

திணறு, ஓடை, வாய்க்கால், குளம் முதலியவைகளின் சொந்தக்காரருக்கு அவைகளை உபயோகப் படுத்த வொட்டாமலிருக்க நோட்டீஸ் கொடுப்பது ... 308
ஒரு வீட்டின் சொந்தக்காரருக்கு அந்த வீட்டில், வாசஞ்செய்யும் வரிக்குள்ளான வர்களைக் குறித்து ஜாபிதா அனுப்பும்படி நோட்டீஸ் கொடுப்பது ... 275
குளம், குட்டை முதலியவைகளை தூர்த்து விடும்படி சொந்தக்காரருக்கு நோட்டீஸ் ... 310
ஒரு வீட்டின் சொந்தக்காரர் வீடு பராதீனம்செய்யப்படும் விஷயமாக பஞ்சாயத்

விஷயம். பக்கம்.

ஆக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டிய கடமை ... 280
கட்டிடம் கட்டப்படுவதைப் பற்றியும் இடித்து விடுவதைப் பற்றியும், புதுப்பிக்கப் படுவதைப் பற்றியும் சொந்தக்காரர் நோட்டீஸ் கொடுக்க வேண்டிய கடமை ... 282
ஒரு வேலைக்காரன் செய்த குற்றத்திற்காக முதலாளியான சொந்தக்காரரும் உட்பட வேண்டு மென்பது ... 380

டிஸ்டிரிக்ட் முனிஸிபாலிடிகள் ஆக்ட்

டிஸ்டிரிக்ட்டு முனிஸிபாலிட்டி ஆக்டின் நிபந்தனைகளையும், விதிகளையும் லோகல் போர்டு வில்தீரணத்தில் பிரயோகிப்பது ... 4-1

டிஸ்டிரிக்ட் ஜட்ஜி.

லோகல் போர்டு அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவுகளைப்பற்றி டிஸ்டிரிக்ட்டு ஜட்ஜ் தீர்மானிப்பது ... 202

டிஸ்டிரிக்ட் கலெக்டர்.

டிஸ்டிரிக்ட்டு கலெக்டருக்கு உள்ள விசேஷ அதிகாரங்கள் ... 142
டிஸ்டிரிக்ட்டு கலெக்டருக்கு வாண்டு செஸ் என்னும் வரியை வசூலிக்க அதிகாரம் 243,249

விஷயம். பக்கம்.

நிலஸ்வான்தாரர்கள் தங்கள் பைப்பத்திலுள்ள நிலங்களைப் பற்றி டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கு ஜாபிதா அனுப்பும்படி கேட்க அதிகாரம் ... 252
அந்த ஜாபிதாப்படி டிஸ்டிரிக்ட்டு கலெக்டர் வரி விதிப்பது ... 254
ஜாபிதாக்களை அனுப்பாமல் போனால் அதற்காக அபராதம் விதிக்கடிஸ்டிரிக்ட் கலெக்டருக்குள்ள அதிகாரம் ... 255
டிஸ்டிரிக்ட்டு கலெக்டர் ஜாபிதாக்களைத் திருத்துவது ... 257
டிஸ்டிரிக்ட் கலெக்டரதுஉத்திரவு பேரில் ரெவின்யூ போர்டுக்கு அப்பீல் ... 258
டிஸ்டிரிக்ட்டு கலெக்டர் பார்ட்டிகளுக்கு சம்மன் அனுப்பி வரவழைப்பது ... 256

தடங்கல்கள்.

பொதுவான பாட்டைகளின் பேரில் தடங்கலே உண்டாக்கக்கூடாதென்பது ... 341.
கதவுகள், அடித்தரை ஜன்னல்கள் தடங்கலாக இருக்கக்கூடாதென்பது ... 345.
தடங்கல் முதலியவைகளை எடுத்துவிடும்படி நோட்டீஸ் ... 346
தடங்கலுக்கும், பிரதிக்கம், ஆக்கிரமிப்புக்குமுள்ள வித்தியாசம் ... 348
பொதுவான பாட்டைகளில் தடங்கல்கள் ஏற்படுத்தக் கூடாதென்பது ... 364

விஷயம். பக்கம்.

தண்டனைகள்.

லோகல் போர்டு ஆக்டின்கீழ் செய்யப்படும் குற்றங்களுக்கு தண்டனைகள் 453-முதல் 468

தாலூக்கா.

தாலூக்கா என்பது என்ன ... 74
தாலூக்காக்கள் ... 75
தாலூக்காக்கள் சர்க்கில்களாக பிரிக்கப்படுவது ... 170

தாவாக்கள்.

லோகல் போர்டுகளின்மீது கொண்டுவரப்படும் தாவாக்களுக்கு நோட்டீஸ் வேண்டுமென்பது ... 503
லோகல் போர்டுகளின்மீது கொண்டுவரப்படும் தாவாக்கள் இன்ன சுபாவமுள்ளதென்பது 508-509
எந்த தாவாக்களுக்கு நோட்டீஸ் வேண்டியதில்லை என்பது ... 510
தாவாக்களின் அமைப்பும் விவரமும் 512-513
கிரிமினல் தாவாக்கள் ராஜி செய்துகொள்வது ... 514
லோகல் போர்டு அங்கத்தினர்கள்மீது தாவா ... 515
வரி விதிப்பு விஷயமாக தாவா தொடரக்கூடிய சந்தர்ப்பங்கள் 520-முதல் 523
லோகல் போர்டானது தொகைகளை வசூலிக்கச் செய்யும் தாவாக்களும் அவைகளின் கால அளவும் ... 499

விஷயம். பக்கம்.

தொழிற்சாலைகள்.

தொழிற்சாலைகளுக்கு உத்திரவும் லைசென்சும் பெறவேண்டுமென்பது 406-முதல் 414
தொழிற்சாலைகளில் பஞ்சாயத்து ப்ரெஷிடென்டுபிரவேசிக்க அதிகாரம் ... 418

நியமகம்.

நியமகம் என்பதன் அர்த்தம்... 66
லோகல் போர்டுகளில் கவர்ன்மெண்டாரால் அங்கத்தினர்கள் நியமிக்கப்படுவதென்பது நீக்கிவிடப்படுதல் ... 164
அபேக்ஷகராக நியமிக்கப்படுவது ... 186
ப்ரெஷிடெண்டு தன்னுடைய அதிகாரத்தை மற்றொருவர் வகிக்கும்படி நியமிப்பது... 110
லோகல் கவர்ன்மெண்டார் தங்களுடைய அதிகாரங்களை வேறொருவருக்குக் கொடுத்து நியமிப்பது ... 526

நிலசுவான்தார்.

நிலசுவான்தார்கள் தங்களின் கீழ்நிலத்தைப் பெற்றிருப்பவர்களின் ஜாபிதாவை கலெக்டருக்கு அனுப்புவது 252
நிலஸ்வான்தார்கள் ஜாபிதாக்களை அனுப்பாமற்போனால் அவர்களுக்கு அபராதம் ... 255
நிலஸ்வான்தார்கள் லாண்ட் செஸ்வரி செலுத்துவது... 258
நில ஸ்வான்தார்களுடைய அதிகாரங்கள் ... 261

விஷயம். பக்கம்.

பட்ஜெட்.

பட்ஜெட் என்பது என்ன ... 304
பட்ஜெட்டுகளை தயார்செய்வ
தும், ஜாரி செய்வதும் ... 304
டிஸ்டிரிக்ட்டு போர்டு ஒன்றுய்
சேர்க்கப்பட்ட பட்ஜெட்டை
கவர்ன்மெண்டுக்கு
அனுப்புவது ... 305
பட்ஜெட்டுகளுக்கு தேதிகளை
நிஷ்கரிஷை செய்வது ... 306
பட்ஜெட்டுகளை திருத்தும்படி
லோகல் கவர்ன்மெண்டார்
உத்திரவு செய்வது ... 306
பட்ஜெட்டுகளை லோகல் கவர்
ன்மெண்டார் பரிசீலனை
செய்வது ... 306

பப்ளிக் வொர்க்ஸ் ஆக்டு.

பப்ளிக் வொர்க்ஸ் ஆக்டு 420-முதல்
427
அதின்கீழ் செய்யப்பட்டிருக்
கும் விதிகள் 427-முதல் 433

பள்ளிக்கூடம்.

பள்ளிக்கூடங்களை ஏற்படுத்து
வதற்கு பஞ்சாயத்து போர்
டுகளின் கடமை ... 594
தாலூக்கா போர்டுகளின் கட
மை ... 595
டிஸ்டிரிக்ட்டு போர்டுகளின்
கடமை ... 596
பள்ளிக்கூட உபாத்தியாயர்
கள் தங்கள் சொந்த இடங்
களை பள்ளிக்கூடத்திற்காக
உபயோகப்படுத்திக் கொள்
வதற்கு காண்டிராக்டு செய்
துக்கொள்வது குற்றமாகா
தென்பது 465-466

விஷயம். பக்கம்

பாதைகள்.

பாதைகள் லோகல் போர்டா
ரிடத்தில் சங்கிரமிப்பது ... 209
அதைக்குறித்தகவர்ன்மெண்டு
ஆர்டர் 28,631
பாதைகளிலுள்ள தளவரிசை
கள் பாதைகளைச் சேர்ந்த
தென்பது ... 210
பாதைகளில்ஆக்கிரமம் 346-முதல்
356
பாதைகளில் விற்பனைக்காக
சாமான்களை வைக்கக்கூடா
தென்பது ... 396
பாதைகள் எவரெவர்களிடத்
தில் சங்கிரமிக்க வேண்டு
மென்று கவர்ன்மெண்டார்
உத்திரவு செய்வது ... 631
பாதைகளை வகுப்பிடுவதற்காக
ஏற்படுத்தப்படும் கமிட்டி
கள் 598-599
பாதைகளை லோகல் போர்டு
கள் பராமரித்து வருவது 592
594-597
பாதைகளிலுள்ள மரங்கள்
வகையருக்கள் லோகல்
போர்டாரை சேர்ந்த தென்
பது 210,211
பாதைகளுக்கு அருகாமையிலு
ள்ள கற்களை வெட்டி எடு
க்க லைசென்ஸ் ... 334
பொதுவான பாதைகளில் தட
ங்கல் ஒன்றும் வைக்கக்
கூடாதென்பது ... 341
லோகல் போர்டுகளில் சங்கிர
மித்திருக்கிற பாதைகள்
யாவருக்கும் பொதுவென்
பது 342—முதல்
... 344
பாதைகளின்பேரில் பிதுக்க
ங்களுக்கும், கட்டுக்கோப்பு
களுக்கும் உத்திரவுகொடு

விஷயம்.	பக்கம்.
...க்க ப்ரெஸிடென்டுக்குள்ள அதிகாரம்	357-முதல் ... 360
பொதுவான பாட்டைகளில் குழி தோண்டக்கூடாதென்பது ...	364
லோகல் போர்டினுடைய உத்திர வில்லாமல் பொது பாதைகளிலுள்ள மரங்களை வெட்டக்கூடாது அல்லது மரங்களை நடக்கூடாதென்பது ...	366
பொது பாதைகளில் விசேஷ போக்கு வரத்தினால் விளையும் செலவுகளை வசூலிக்க லோகல் போர்டாருக்கு அதிகாரம்	...369
பொது பாதைகளில் ஓடும் மோட்டார்களுக்கு லைசென்ஸ்	370-முதல் ... 380

பாரவண்டி.

பாரவண்டி என்பது என்ன	67
பாரவண்டி நிற்குமிடங்களை பஞ்சாயத்தானது ஏற்படுத்துவது ...	398
ப்ரைவேட் பாரவண்டி நிற்குமிடங்களுக்கு லைசென்ஸ்	400
பப்ளிக் பாரவண்டி நிற்கும் இடங்களுக்கு கட்டணத்தை கைப்பற்றுவது ...	400
பாரவண்டிகள் பொதுவான பாட்டையின் பக்கங்களை ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குள் நிற்க வைக்கக் கூடாதென்பது ...	399

பிதுக்கம்.

பிதுக்கம் என்பது என்ன ...	348
பிதுக்கங்களை எடுத்து விடும்படி நோட்டீஸ் கொடுப்பது ...	34[illegible]
பிதுக்கம், ஆக்கிரமிப்பு, தடங்கல் இவைகளுக்கு வித்தியாசம் —	348

பிரசுரம்.

ஓட்டர்களின் ஜாபிதாவை பிரசுரிப்பது ...	174
வரிகளை விதிக்கும் விஷயமாக டிஸ்டிரிக்ட்டு போர்டு தங்கள் தீர்மானங்களை பிரசுரிப்பது ...	247
பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்ட இடங்களை சிலகுறிப்பிட்ட காரியங்களைத் தவிற மற்ற காரியங்களுக்கு உபயோகிக்கக் கூடாதென்று பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு பிரசுரிப்பது ...	313
இன்ன இடங்களில் சுத்திசெய்ய வேண்டுமென்றும், தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கவேணுமென்றும் ப்ரெஸிடென்டு விளம்பரம் பிரசுரிக்க வேண்டுமென்பது ...	319
பொதுவான பாதைகளில் வஸ்துக்களை விற்கக் கூடாதென்று ப்ரெஸிடென்டு பிரசுரிப்பது ...	396
விதிகளை செய்வதற்கு கவர்ன்மெண்டார் போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரிப்பது	439-440
சகாயச் சட்டங்களை பிரசுரிக்கும் முறை ...	449
லோகல் போர்டு ஆக்டின்படிக்கான விளம்பரங்களை பிரசுரிக்கும் முறை ...	484
லோகல் போர்டு பிரசுரங்களை எடுத்துவிடுவது அல்லது கலைத்துவிடுவது குற்றமென்பது ...	524

விஷயம். பக்கம்.

பொதுஜன உத்தியோகஸ்தர்.

ஒரு லோகல் போர்டு ப்ரெஸி டென்டுபொதுஜன உத்தி யோகஸ்தரென்று கருதப் படுவார் என்பது ... 96
பொதுஜன உத்தியோகஸ்தர் பேரில் கவர்ன்மெண்டினு டைய உத்திரவில்லாமல் தாவா செய்யக்கூடாதென் பது ... 96

ப்ரெஸிடென்ஸீ.

ப்ரெஸிடென்டு தேர்ந்தெடுக் கப்பட வேண்டும் ... 95
லோகல் போர்டு மீட்டிங்குக ளில் அக்கிராசனம் வகிக்க வேண்டும் ... 125
நிர்வாக காரியங்களை நிறை வேற்றுவது ... 103
ப்ரெஸிடென்டு எலெக்ஷன் பிரவித்தம் செய்யப்படு வது ... 101
அவசர சந்தர்ப்பங்களில் ப்ரெ ஸிடென்டுக்குள்ள அதிகா ரங்கள் ... 104
ப்ரெஸிடென்டு ஸ்தானம் கா லியாயிருந்தால் வைஸ்ப்ரெ ஸிடென்டு அலுவல்களைக் கவனித்து வருவது 106,107
மற்றொருவரை அதிகாரப்படுத் துவது 110,111
ப்ரெஸிடென்டின்மேல்விசா ரணை அதிகாரம் ... 116
லோகல்போர்டு கேட்டபோது ரெக்கார்டுகளை ஆஜர்ப்படுத் துவது ... 118
தமக்கு பற்றுள்ள விஷயங்க ளைப்பற்றி ஆலோசனைக ளில், ப்ரெஸிடென்டு கலந் துக்கொள்ளக் கூடாதென் பது ... 130
டிஸ்டிரிக்ட் போர்டு ப்ரெஸி டெண்டுக்கு தாலூக்கா போர்டுகளின் பேரிலும், பஞ்சாயத்துகளின் பேரி லும் உள்ள அதிகாரம் ... 139
ப்ரெஸிடென்டு தவறிப்போ கும் விஷயங்களில் லோகல் கவர்ன்மெண்டார் பிரவேசி ப்பது ... 143
லோகல் போர்டு ப்ரெஸிடென் டுகளை நீக்குவதற்கு கவர்ன் மெண்டின் அதிகாரம் ... 146
ப்ரெஸிடென்டுகளின் பேரில் நம்பிக்கைக் குறைவு ப்ரே ரேபணை 147-முதல் 156
ப்ரெஸிடென்டு அங்கத்தின ருடைய யோக்கியதைக் குறைவைப்பற்றி டிஸ்டிரி க்ட்டு ஜட்ஜிக்குத் தெரிவிப் பது ... 202
சுகாதாரவிஷயமாக பஞ்சா யத்து ப்ரெஸிடென்டுக் குள்ள அதிகாரம் 17-முதல் 19-308
அசங்கியம் அல்லது சங்கட த்தை நிவர்த்திக்க நோட் டீஸ் கொடுக்கஅதிகாரம் 310,315
தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்க விளம்பரம் செய்வது. 319
ஆக்கிரமங்களைப்பற்றி ப்ரெ ஸிடென்டுக்கு நோட்டீஸ் கொடுக்க அதிகாரம் ... 346
பொதுமார்க்கட்டுகளில் ப்ரெ ஸிடென்டுக்கு நுழைய அதி காரம் ... 384
தொழிற்சாலைகளில் நுழைய ப்ரெஸிடென்டுக்குள்ள அதி காரம் ... 418
ப்ரெஸிடென்டு லைசென்ஸ் கொடுப்பது ... 385

விஷயம். பக்கம்.

ஜெசென்ஸை ரத்து செய்வது 386
பொதுவான பாதைகளில் வஸ்துக்களோ விற்கக் கூடாதென்று தடுப்பது ... 396
உத்சவ காலங்களில் பிராணிகளைக் கொல்வதற்கு அதிகாரம் கொடுப்பது ... 405
தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுப்பது ... 406
டிஸ்டிரிக்ட்டு போர்டு ப்ரெஸிடென்டு மோட்டார் பல்களுக்கும். வாரிகளுக்கும் லைசென்ஸ் கொடுப்பது லைசென்ஸை ரத்துசெய்வது ... 370
ப்ரெஸிடென்டுக்கு பிராது கொடுக்க அதிகாரம் ... 500
ப்ரெஸிடென்டு குற்றங்களின் விஷயமாக ராஜிசெய்துக் கொள்வது ... 514
ப்ரெஸிடென்டுக்கு சம்மன்செய்ய அதிகாரம் ... 525
ப்ரெஸிடென்டின்பேரில் பிராசிக்யூஷன் ... 516
மீட்டிங்குகளை கூட்டுவது ... 536
ப்ரெஸிடென்டு தவறும்பக்ஷத்தில் அங்கத்தினர்கள் மீட்டிங்கை கூடுவது ... 539
காஸ்டிங் ஓட்டு ... 543
ப்ரெஸிடென்டின் உரிமைகள் 544
வரிவிதிப்புபுஸ்தகங்களை தயார் செய்வது ... 536
கம்பெனிகளுக்கு தொழில்வரியிடுவது ... 564,565
பஞ்சாயத்து ப்ரெஸிடென்டு வரி புஸ்தகங்களில் திருத்தங்களைச் செய்வது ... 5,5

ப்ராஸிக்யூஷன்.

ப்ராஸிக்யூஷன்களின் விவரம் 24-முதல் 28

விஷயம். பக்கம்.

ப்ராஸிக்யூஷன் எவரால் செய்யப்படுவதென்பது ... 500
ப்ராஸிக்யூஷன்களுக்கு கால அளவு ... 510
ப்ராஸிக்யூஷன்கள் எந்த மாஜிஸ்திரேட் முன்பாக செய்யப்பட வேண்டுமென்பது 502
ப்ரெஸிடென்டு அல்லது அங்கத்தினர் பேரில் ப்ராஸிக்யூஷன் செய்வதற்கு முன் உத்திரவு வேண்டுமென்பது 516-517

மார்க்கட்டுகள்.

மார்க்கெட்டுகள் இருவகைப்பட்டதாகுமென்பது 381-385
பொது மார்க்கட்டுகள் ... 381
அவைகளின் விஷயமாகவுள்ள அதிகாரம் ... 381
பொது மார்க்கட்டுகளின் மேல் ப்ரெஸிடென்டுக்குள்ள விசாரணை அதிகாரம் ... 384
ப்ரைவேட் மார்க்கட்டுகளுக்கு லைசென்ஸ் கொடுப்பது ... 385
லைசென்ஸ் கொடுக்கப்பெறுகை சொந்த மார்க்கட்டுகளில் விற்பனை செய்யக்கூடாதென்பது ... 390
சொந்த மார்க்கெட்டுகளைப் பற்றி பஞ்சாயத்துக்குள்ள அதிகாரங்கள் ... 390
சொந்த மார்க்கட்டுகளில் அசங்கியம் முதலியவை செய்யக்கூடாதென்பது ... 392
சொந்த மார்க்கட்டுகளை மூடிவிட அதிகாரம் ... 393
சொந்த மார்க்கட்டுகளை வைத்துக்கொள்ளும் பாத்தியதையை எடுத்துக்கொள்வது 394

விஷயம். பக்கம்.

மார்க்கட்டுகளில் குஷ்டரோகி முதலியவர்கள் போகக் கூடாதென்பது ... 395
தாலூக்கா மார்க்கட்டுகளின் விஷயமாக அதிகாரத்தைச் செலுத்துவது ... 396

மீட்டிங்குகள்.

லோகல்போர்டுகளின் மீட்டிங்குகள் 533-534
டில்டிரிக்ட்டு போர்டுதாலூக்கா போர்டு மீட்டிங்குகள் 536
பஞ்சாயத்து மீட்டிங்குகள் 536
மீட்டிங்குகளுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படுவது ... 537
ஸ்பெஷல் மீட்டிங்குகள் ... 539

மீட்டிங்குகளில் பொது ஜனங்கள் வந்திருக்க வசதி ... 542
மீட்டிங்குகளுக்குக் கோரம்... 545
மீட்டிங்குகளில் நடந்தேறும் மீட்டிங்குகளில் லோகல் போர்டுகளினுடையகாரியங்கள் மீட்டிங்குகளிலேயேதான் நடக்கவேண்டுமென்பது ...82 96-335-365
தீர்மானம் ... 545
மீட்டிங்குகளின் குறிப்புகளை எழுதிக்கொள்வது ... 549
மீட்டிங்குகளின் விவரம் கெஜட்டுகளில் பிரசுரிக்க வேண்டுமென்பது ... 547
மீட்டிங்குகளில் நடந்துக்கொள்ளவேண்டியவிதம் ... 534
ப்ரெஸிடெண்டுகளின் கடமை 128 535,541,543
மீட்டிங்குகளில் அக்ராசனம் வகிப்பது 125,127,128
மீட்டிங்குகளில் எப்பொழுது அங்கத்தினர்கள் கலந்துக்கொள்ளக் கூடாதென்பது 129

விஷயம். பக்கம்.

மோட்டார் வண்டி.

மோட்டார் வண்டிக்கு லைசென்ஸ் ... 370
மோட்டார் வண்டிகளுக்கு வரி யிடுவதற்கான சட்டம் ... 619

லைசென்ஸுகள்.

லைஸென்ஸில்லாமல் இடங்களை உபயோகிக்கக் கூடாத காரியங்கள் — 608
லைசென்ஸுக்குக் கட்டணம் 389
லைஸென்ஸில்லாமல் மார்க்கட்டுகளில் விற்பனை செய்யக் கூடாதென்பது — 390
லைசென்ஸுக்கும் உத்திரவுக்கும் (Permission) உள்ள வித்தியாசம் — 414

ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களுக்காக லைசென்ஸ் 422
லைசென்ஸ் ஒரு வருஷத்திற்குத்தான் உபயோகமாகும் 386
லைசென்ஸை ப்ரெஸிடெண்டு நிறுத்தி வைப்பது அல்லது நிராகரிப்பது — 392
லைசென்ஸில்லாமல் அல்லது லைசென்ஸுக்கு விரோதமாக காரியங்களைச் செய்வதற்காக ப்ராஸிக்யூஷன் 453
அபராதங்கள் — 616
லைசென்ஸை அக்ரமமாக கொடுக்கமறுப்பது, அதன் சம்பவம் — 459
லைசென்ஸில்லாமல் தொழிலை லைசென்ஸுகளைப் பற்றியுள்ள பொதுவான நிபந்தனைகள் — 470
லைசென்ஸ் கொடுக்கப்பட்ட இடங்களை பார்வையிடுவது

விஷயம்.	பக்கம்.
ற்கு ப்ரெஸிடென்டிற்கு அதிகாரம் ...	471
லேசென்ஸில்லாமல் தொழிலை நடத்துவதற்கு எவர் அபராதமிடுவது ...	460
பிரைவேட்டு மார்க்கட்டுகளுக்கு லேசென்ஸ் ...	385
லேசென்ஸுக்காக பணம் செலுத்துவதினாலேயே லேசென்ஸ் பெற யோக்கியதை உண்டாகாதென்பது ...	473
லேசென்ஸில் அடங்கி இருக்க வேண்டிய விஷயங்கள் 470,	475
லேசென்ஸ் ரத்து செய்யப்படுவதைக் குறித்து விசாரிக்க கிரிமினல் கோர்ட்டாரின் அதிகாரம் ...	477
லேசென்ஸுக்கும் வரிக்கு முள்ள வித்தியாசம் ...	478
லேசென்ஸ் கட்டணங்களை வசூலிக்கும் பாத்தியதை ...	479
அதை ஏலத்தில் விடுவது, அதன் விஷயமாக வுள்ள உரிமைகள் ...	480
லேசென்ஸ் விஷயமாக நடந்து கொள்ள வேண்டிய நடவடிக்கை முறை ...	481

லோகல் போர்டுகள்.

லோகல் போர்டுகள் இன்னதென்பது	1,70
அவைகளை அமைப்பது ...	79
டிஸ்டிரிக்ட்டு போர்டு ...	68
தாலூக்கா போர்டு ...	74
பஞ்சாயத்து ...	71
லோகல் போர்டுகளின் சங்கியை ...	84
லோகல் போர்டுகளின் ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பது ...	85
சங்கியை நிச்சயிப்பது ...	89
அங்கத்தினர்களின் செக்ஷன்	90
அங்கத்தினர்களின் காலஅளவு	90
ப்ரெஸிடென்டு ...	95
வைஸ் ப்ரெஸிடென்டு ...	95
அங்கத்தினர்களும் ப்ரெஸிடென்டும், வைஸ் ப்ரெஸிடென்டும் ராஜினாமாசெய்வது ...	98
லோகல் போர்டுகளில் கமிட்டிகள் ஏற்படுவது ...	119
ஜாயண்டு கமிட்டிகள் ...	121
லோகல் போர்டுகள் செகுலேஷன்களைச் செய்வது ...	124
லோகல் போர்டுகள் தவறும் விஷயத்தில் கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம் ...	143
லோகல் போர்டுகளை கலைத்து விடுவது ...	156
பஞ்சாயத்துகளை சீக்கிரவைப்பது ...	159
லோகல் போர்டுகளின் கடமைகள் ...	3
	17,18,19,20,21,296,297,298
	591-முதல் 598
லோகல் போர்டின் வரும்படிகள்	600-முதல் 606
லோகல் போர்டுகளின் அந்தஸ்து ...	80

லோகல் போர்ட்ஸ் ஆக்டு.

லோகல் போர்ட்ஸ் ஆக்டிலுள்ள கடின மொழிகள் ...	2
லோகல் போர்ட்ஸ் ஆக்டின் அமைப்பு ...	68

வண்டி நிற்குமிடம்.

வண்டி நிற்குமிடங்களை பஞ்சாயத்து ஏற்படுத்த வேண்டுமென்பது ...	398
ப்ரைவேட் வண்டி நிற்குமிடங்கள் லேசென்ஸ் பெறவேண்டுமென்பது ...	400
பொதுவான இடங்களையும் பாட்டை ஓரங்களையும் வண்டி	

விஷயம். பக்கம்.

நிற்குமிடங்களாக உபயோகிக்கக் கூடாதென்பது ... 399
வண்டி நிற்குமிடங்களுக்குக் கட்டணம் ... 400
வண்டி நிற்குமிடங்களில் கட்டணத்தை வசூலிக்க கன்ட்ராக்ட்தாரர்களின் உரிமை 479,480
வண்டி நிற்குமிடங்களின் விஷயமாக கட்டணம் செலுத்தாததைப் பற்றி தாவா செய்வதற்குள்ள உரிமை ... 478
வண்டி நிற்குமிடங்களுக்காக உள்ள கட்டணங்கள் பஞ்சாயத்துக்கு சேரவேண்டுமென்பது ... 601
வரிகள்.
வாண்டுசெஸ் வரி ... 243
வாண்டுசெஸ் வரியின் விகிதம் ... 249
வரிகளை ஏற்படுத்தடிஸ்டிரிக்ட்டு போர்டினுடைய அதிகாரம் ... 243
யாத்திரைக்காரர்களுக்குவரி— 246
292, 293, 294
வாண்டுசெஸ்ஸை வசூலிக்கும் விதம் 252- முதல் 263
தொழில் வரி ... 264
தொழில் வரியை நிர்ணயிக்கும் விதம் ... 564
பரம்களுக்கும், அலோஷியேஷன்களுக்கும் தொழில்வரி 272
தொழில்வரி கிராமத்தைச் சேருவது ... 273
ஊழியர்கள், எஜண்டுகள் தொழில்வரிக்குள்ளாவது 272
வீட்டுவரி ... 275
வரியிடப்படுவதிலிருந்து நிவர்த்திக்கப்படக் கூடியவைகள் ... 277
வரி வஜா 279-280-284
வருமை காரணமாக வரி நிவாரணை ... 286
வரி வசூலிக்கும் விதம் ... 495

விஷயம். பக்கம்.

வரிக்குள்ளானவர்களைக் குறித்து ஜாபிதாவைக் கேட்கப்ரெசிடென்டுக்குள்ள அதிகாரம் ... 275
பஞ்சாயத்துகளுக்குப் புதிய வரிகளை ஏற்படுத்த உரிமை 244
245
வரி விதிப்பு விஷயமாக அனுசரிக்கப்பட வேண்டியவைகள் ... 247
வீட்டுவரி ஒரு அரை வருஷத்திற்கு ஒருதரம் விதிக்கப்பட வேண்டுமென்பது ... 278

வீடுகளை பராதீனம் செய்பவர் ப்ரெசிடென்டுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டிய கடமைதவறினால் வரிக்குள்ளாவது ... 280
வரிக்காக ஜப்தி செய்யும் விதம் 579-முதல் 588
வரிவிதிப்பு புஸ்தகங்கள் தயாரிப்பது ... 556

தொழில் வரியின் விதிதம் ... 560
வீட்டுவரி விதிக்கும் விதம் ... 567
வரி புஸ்தகங்கள் தயாரிக்கப்படுவதைப் பற்றி தண்டோரா 573
வரி விதிப்பு விஷயமாக அப்பீல் 575-முதல் 578

வாய்க்கால்கள்.

வாய்க்கால்களை சுத்தி பண்ணுவது 308-309
அபாயகரமான வாய்க்கால்களை தூர்த்து விடுவது ... 310
வாய்க்கால்களில் பிராணி மூதலியவைகளை கழுவக்கூடாதென்பது ... 312
வாய்க்கால்களை பாதுகாப்பது 592, 594, 596

விஷயம். பக்கம்.

வாராவதிகள்.

வாராவதிகள் லோகல்போர்டு களில் சங்காமிக்க வேண்டு மென்பது ... 210
வாராவதிகள் ரிப்பேர் செய் வது அல்லது கட்டுவது 523
வாராவதிகளின் பராமரிப்பு 592
594,596

வியாபாரம்.

வியாபாரத்திற்கு தொழில்வரி யிடுவது ... 265
வியாபாரம் செய்துவரும் ஸ்த லத்தை நிர்ணயிப்பது ... 266
வியாபாரம் என்பதன் அர்த் தம் 269,563
வியாபாரத்தை மதிப்பிடுவது 564
... 565
வியாபாரமானது வரியிடப் படும் விஸ்தீரணம் ... 561

விஷயம். பக்கம்.

விதிகள்.

விதிகளைச் செய்ய லோகல் கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம் ... 431
விதிகளைச் செய்வதற்கான கட வடிக்கை முறைகள் 430-404

ஜன்னல்கள்.

ஜன்னல்களை எடுத்து விடுவ தற்கு உத்திரவு செய்ய ப்ரெஸிடென்டுக்கு அதிகா ரம் ... 346
இயந்திரசாலைகளில் ஜன்னல் களின் அமைப்புகள் ... 412

ஜாயிண்டு ஹிந்து குடும்பம்.

ஜாயண்டு ஹிந்து குடும்பங் களில் எவர் ஓட்டராக பதிவு செய்துக்கொள்வதற் கு அர்ஹராவர் என்பது 553
... 554

மான்யூவல் முற்றிற்று.

மான்யூவல் வாங்குபவர்களுக்கு 2-வது
வால்யூம் (எலெக்ஷன் ரூல்ஸ்
முதலியவைகளுடன்) விலை ரூபா ... 2 0 0

மேடி. புத்தகம் வாங்காதவர்களுக்கு 2-வது
வால்யூம் விலை ரூபா 3 0 0

எமது லோகல் போர்டு ஆக்ட் புஸ்தகத்தைப் பற்றின அபிப்பிராயங்கள்.

சென்னை " சுதேசமித்திரன் " பத்திரிகை எழுதுவதாவது:—

முதற் பதிப்பு.

ஸ்தல சுயஆட்சி சட்டத்தின்படி இப்பொழுது நமக்குள்ள உரிமைகள் இன்னின்னவை, இன்னும் அடைய வேண்டிய உரிமைகள் இன்னவை யென்று அவர்கள் நன்குணர வேண்டிய தவசியமாதலாலும், எல்லோரும் சுலபமாய் இவ்விஷயங் களை நன்கறிந்துக்கொள்ள அனுகூலமாக இருக்கும்படி சென்னை லோகல் போர்டு சட்டத்தையும், அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதி களையும், ஒன்றுக ஆசிரியர் தொகுத்து, தமிழில் புத்தக ரூபமாக வெளியிட்டிருப்பதை நாம் பாராட்டுகிறோம்.

இரண்டாம் பதிப்பு.

1920-ம் வருஷத்திய சென்னை லோகல்போர்ட்ஸ் ஆக்ட்டை இது வரையுள்ள திருத்தங்களுடன் வக்கீலும் அகில இந்தியா லாஜர்னல் பத்திராதிபருமாகிய ஸ்ரீமான் எம். எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் மொழி பெயர்த்து இருக்கிறார். இப்போது நம்முன்னுள்ள புத்தகம் இந்த ஆக்டின் இரண்டாம் பதிப்பாகும். இதில் விவரமாக விஷய சூசிகையும், பொருளடக்கமும் காணப்படும். மொழி பெயர்ப்புத்தமிழ் சுலுவாக எளிதில் சாதாரணமாக எவருக்கும் விளங்கும்படி இருக்கி றது. இதை ஆனந்தா பிரின்டிங் ஒர்க்ஸ், திருவல்லூர். என்ற விலா சத்திற்கு எழுதிப் பெறலாம்.

சென்னை " தமிழ்நாடு " பத்திரிகை எழுதுவதாவது:—

முதற் பதிப்பு.

இதைப் படிப்பதினால் உலக விஷயம் ஒன்று விளங்கும். ஊர் ஆட்சியின் மர்மத்தைக் கண்டவனுக்கு உலகாட்சி எம்மாட்டும் ? ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

இரண்டாம் பதிப்பு.

1920-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்ட் ஒன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. ஸ்தலஸ்தாபன நிர்வாகத்தில் ஜனங்கள் இப்பொழுது அதிக ஊக்கங்காட்டி வருகிறார்களென்பது பிரத்தியக்ஷம். தாலூக்கா, ஜில்லா போர்டுகளுக்கு அங்கத்தினர் தேர்தல் விதிகள், நிபந்தன விதிகள், ஸ்தல ஸ்தாபனங்களின் வேலை

கள், அதிகாரங்கள், மேற்பார்வை, ஸ்தல ஸ்தாபனங்கள், ஸ்தல ஸ்தாபன நடை முறைகள் முதலிய யாவும் இப்புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன. மேலும் ஸ்தல ஸ்தாபன ஆட்சி சட்டம் அமுலுக்கு வந்து சென்ற 10-வருஷங்களாக சட்டத்தில் அப்போதைக்கப்போது ஏற்பட்ட மாறுதல்களையும் மற்ற விவரங்களையும் இப்புத்தகத்தில் பிரசுரித்திருப்பதால் தமிழர்களுக்கு அதிக பயன்படுமென்பதில் சந்தேகமில்லை. இப்புத்தகத்தை மீண்டும் திருத்தி தமிழில் வெளியிட்ட ஸ்ரீமான் சி. எ. சிவபூஷண முதலியாரின் நன்முயற்சியைப் பாராட்டுகிறோம்.

சென்னை "நவசக்தி" பத்திரிகை எழுதுவதாவது:—

முதற் பதிப்பு.

இந்நூல் இக்காலத்துக்குச் 'சமயசஞ்சீவி' என்று கூறலாம். ஸ்தல ஸ்தாபனத்தேர்தல், நிர்வாகம் முதலிய விஷயங்களில் இது போழ்து நாடெங்கும் மக்கள் பெரிதும் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஸ்தல ஸ்தாபன சம்பந்தமாய் சென்னை அரசாங்கத்தாரால் அவ்வப்போது ஆக்கப்பட்டிருக்கும் சட்டங்களெல்லாம் தொகுக்கப் பட்டு இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. தாலுக்கா ஜில்லா போர்டுகளுக்கு அங்கத்தினர் தேர்தல் விதிகள், நியமன விதிகள், ஸ்தல ஸ்தாபனங்களின் வேலைகள், அதிகாரங்கள், மேற்பார்வை, ஸ்தல ஸ்தாபன வரிகள், ஸ்தல ஸ்தாபன நடை முறை முதலிய எல்லா விவரங்களையும் இப்புத்தகத்தில் காணலாம். பொதுவாகத் தமிழ் மக்களுக்கும் சிறப்பாக ஸ்தல ஸ்தாபனத் தேர்தல், நடைமுறை இவைகளில் ஈடுபடுவோருக்கும் இப்புத்தகம் பெரிதும் பயன்படும்.

இரண்டாம் பதிப்பு.

1920-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டின் (1930-ம் வருஷம் வரையுற்ற திருத்தங்களுடன் கூடியது). தமிழ் மொழி பெயர்ப்பு நூல் எமது பார்வைக்கு வந்தது. ஸ்தல ஸ்தாபனங்களின் சட்ட வரம்புகள் பொது மக்களுக்குத் தெரிய வேண்டுவதன் அவசியத்தை விரித்துக் கூற வேணடுவதில்லை. சுயராஜ்ஜியத்தின் அடிப்படை ஸ்தல ஸ்தாபனம் என்பது நேயர்கட்குத் தெரியும். ஸ்தல ஸ்தாபனங்களின் விதிகள், அமைப்பு முறைகள், தேர்தல் விவரங்கள் முதலியவற்றை எவ்வளவுக் கெவ்வளவு பொது மக்கள் விளங்கிக் கொள்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு ஸ்தல ஸ்தாபனங்கள் ஒழுங்குற நடை பெறுதற்கு வழி உண்டாகும். இதற்கு ஸ்தல ஸ்தாபன சட்டங்கள் தாய் மொழியில் இன்றியமையாது வேண்டற் பாலன்.

எமது புஸ்தகத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள்.

1924-ம் ஆண்டு ஸ்ரீமான் சி. எ. சிவபூஷண முதலியார் அவர்கள் ஸ்தல ஸ்தாபன விதிகளைத் தமிழில் பெயர்த்துத் தமிழ் நாட்டினுக்குதவினமையால் தமிழ் நாட்டு வாக்காளர்கள் பெற்ற நலன்கள் பல அந்நூலுடன் 1930-ம் வருஷம் வரையுற்ற திருத்தங்களையும் சேர்த்து ஸ்ரீமான் எம். எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள் B.A.,B.L., வெளியிட்டுள்ள நூல் போற்றற் குரியதே. மொழி பெயர்ப்பு நன்னடையில் அமைந்திருக்கிறது. இந்நூல் ஸ்தல ஸ்தாபன அங்கத்தவர்களுக்கும் அவர்களை தெரிந்தெடுக்கும் வாக்காளர்களுக்கும் மற்றவர்களுக்கும் பல வழியிலும் பயன்படு மென்பதில் அய்யமில்லை. தமிழ் நாட்டார் இந்நூலை ஆதரிப்பாராக.

சென்னை 'ஜஸ்டிஸ்' பத்திரிகை எழுதுவதாவது:—

இரண்டாம் பதிப்பு.

சென்னை 1920-ம் வருஷம் லோகல் போர்டு ஆக்டை முற்றும் திருத்தியமைக்கப்பெற்று இவ்வருஷம் அதாவது 1930-ம் வருஷத்திய ஆக்டு ஆங்கிலமறியா சர்வ அங்கத்தினர்க்கும் அதிவிமரிசையாக விளங்க வெழுதப்பட்டுள்ளது. இம்மாதிரியாக முன்னமேயே பல சட்ட சம்பந்தமான புத்தகங்களை மிகவும் ஊக்கமுடன் வெளியிட்டு உதவியருள இப்புத்தக விளம்பரத்தாரது முயற்சி போற்றற்குரியதே! சட்ட சம்பந்தமான பல விஷயங்களையும் இன்னும் அறிந்து கொள்ளாது கஷ்டப்படும் பல அங்கத்தினர்களும் இனி கஷ்டமின்றி தெள்ளிதில் ஏனையவற்றையெல்லாம் சிரமமின்றி அறிந்து பயன்படப் பரிவுடன் பலவித உதாரணங்களையும் வியாக்யானங்களையும் கூட்டி இப்புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆதலின் இது பல்லோர்க்குப் பற்பல விதங்களிலும் பயன்படுமென்பதற்கோர் ஐயமில்லையாம்!

சென்னை "திராவிடன்" பத்திரிகை எழுதுவதாவது:—

முதற் பதிப்பு.

இப்புத்தகத்தில் தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு, பஞ்சாயத் போர்டு முதலியவைகளைப் பற்றிய எல்லா விவரங்களும் அடங்கி யுள்ளன. இஃது ஒவ்வொருவர் மாட்டும் இன்றிமையாதிருக்க வேண்டுவதாகும். இப்புத்தகம் தமிழில் வெளியிட்ட திரு. சி. எ. சிவபூஷண முதலியார் பெரு முயற்சி பாராட்டற் பாலதாகும்.

சென்னை 'ஹிந்து' பத்திரிகை எழுதுவதாவது:—

இரண்டாம் பதிப்பு.

1930-ம் வருஷத்தில் புதிதாக 1920-ம் வருஷத்திய சென்னை லோகல் போர்ட்ஸ் ஆக்டு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதனை

எமது புஸ்தகத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள்.

அகில இந்தியா லா ஜர்னலின் பதிப்பாசிரியராகிய ஸ்ரீமான் M. S. பார்த்தசாரதி அய்யங்கார் B.A , B.L., அவர்கள் இவ்வருடம் எளிய நடையில் தமிழில் சகலவித சாராம்சங்கள், குறிப்புகள், உதாரணங்கள் முதலியவைகளுடன் மொழிபெயர்த்து எழுதியுள்ளார். ஆகலால் பிற்காலத்தில் லோகல் போர்டில் சம்பந்தப்பட்ட எல்லா அங்கத்தினருக்கும் பயன்படவும் முக்கியமாக ஆங்கிலமறியார்க்கு விசேஷமாக நன்கு விளக்கமுறவும் எழுதியுள்ளதென்பது பார்ப்போர்க்குப் பல விதங்களிலும் தெள்ளிதில் விளங்கும்.

"குடிஅரசு" பத்திரிகை எழுதுவதாவது:—

இரண்டாம் பதிப்பு.

மேற்குறிப்பிட்ட புஸ்தகம் திருவள்ளூர் எம். எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் பி. எ., பி. எல்., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு சி. எ. சிவபூஷணம் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்ட புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்துள்ளது. இது சென்னை லோகல் போர்டு ஆக்ட் XIV of 1920.

1930-ம் வருஷத்திய ஆக்டின் பிரகாரம் அதிய திருத்தங்களுடன் கூடியது. சென்ற 10-வருஷங்களில் ஏற்பட்ட அனுபவத்தினால் லோக்கல் போர்டுகளின் நடவடிக்கைகளையும், சட்டங்களையும் திருத்தி யமைக்க வேண்டிச் சென்ற சட்ட சபையில் இது திருத்தி பல மாறுதல்களோடு சட்டமாக்கப்பட்டதை யாவரும் அறிவார்கள். அவைகளின் முழு விபரங்களும் இதில் காணப்படுவதோடு, ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகம் தேர்தல், உத்தியோகஸ்தர்களுடைய அதிகாரம் மேல் பார்வை முதலியவைகள் வெகு தெளிவாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பொதுவாகத் தமிழருக்கும், சிறப்பாக ஆங்கிலம் அறிந்தவர்களும், அறியாதவர்களுக்கும் மிக்க உபயோகமானதென்றே எண்ணுகிறோம். ஸ்தலஸ்தாபன சம்பந்தமான சகல நடமுறைகளும், விதிகளும் இதில் நிறைந்திருப்பதால் ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளிடமும், அங்கத்தினர் களிடமும், ஒன்று இருக்க வேண்டுவது அவசியமென்றாலும் மிகையாகாது புத்தகம் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டு நல்ல முறையில் செய்யப்பட்டிருக்கிறது ; இத்தகைய பிரதியை வெளியிட்ட சி. சிவபூஷணம் கம்பெனியாரது முயற்சி பாராட்டற்குரியதாகும்.

Printed at the "Andhra Printing Works", Tiruvallur.